ISSUED 13—7—1971]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY, 26th FEBRUARY 1970

**Volume LXXXIII—No. 1**

©
GOVERNMENT OF TAMIL NADU
1971

Legislative Council Department
Madras-9

PRICE 35 *Paise*]

44/RH
V2:11, 32 N70
N71-83
63001

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

THIRTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

26TH AND 28TH FEBRUARY AND 2ND TO 7TH, 9TH, 25TH, 26TH, 28TH AND 30TH MARCH 1970.

*Volume LXXXIII (Nos. 1 to 13).*

TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i–ii |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | iii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... ... | iv–vi |
| *Thursday, 26th February* 1970. | |
| I. Obituary Reference to— | |
| (i) Thiru D. S. Authimoolam, a sitting Member of the Legislative Assembly ... ... ... | 1 |
| (ii) Thiru R. Ranganatha Mudaliar, a former Member of the Legislative Council ... ... | 1 |
| II. Questions and Answers ... ... ... ... | 2–17 |
| III. Announcement *re* decision of the Business Advisory Committee ... ... ... ... ... ... | 17 |
| IV. Presentation of the Budget for 1970–71 ... ... | 18–23 |
| V. Papers laid on the table of the House ... ... | 23–26 |
| *Saturday, 28th February* 1970. | |
| I. Questions and Answers ... ... ... ... | 143–159 |
| II. Adjournment motion *re* alleged brutal attack of the Police inside the Congress Office Building at Cuddalore and injuries caused to some persons ... | 159–161 |

PAGES

*Saturday, 28th February* 1970—cont.

III. Privilege Issue *re* mis-statement made by the Hon. Thiru P. U. Shanmugham, Minister for Food and Commercial Taxes on 24th January 1970 ... ... ... ... ... ... 162

IV. Calling attention to non-disposal of cases under the Tamil Nadu Cultivating Tenants' Protection Act in Thanjavur District ... ... ... 163–164

V. General discussion on the Budget for the year 1970–71 ... ... ... ... ... ... 164–194

VI. Papers laid on the table of the House ... ... 194–195

*Monday, 2nd March* 1970.

I. Questions and Answers ... ... ... ... 209–215

II. Calling attention to non-renewal of Ration Cards issued to Orphanages and other Public Institutions consequent on change in Government Policy ... ... ... ... ... ... 215–216

III. General discussion on the Budget for the year 1970–71—*cont.* ... ... ... ... ... 216–255

IV. Papers laid on the table of the House ... ... 255

*Tuesday, 3rd March* 1970.

I. Obituary reference to Thiru K. T. M. Ahmed Ibrahim, a former Member of the Council ... 263

II. Questions and Answers ... ... ... ... 263–278

III. General discussion on the Budget for the year 1970-71—*cont.* ... ... ... ... 278–309

*Wednesday, 4th March* 1970.

I. Questions and Answers ... ... ... ... 311–318

II. General discussion on the Budget for the year 1970–71—*cont.* ... ... ... ... ... 318–355

III. Papers laid on the table of the House ... ... 355



PAGES

*Thursday, 5th March* 1970.

I. Questions and Answers ... ... ... ... 359–381

II. Calling attention to integration of services of Teachers and Headmasters of Ex-Board High Schools ... ... ... ... ... ... 381

III. General discussion on the Budget for the year 1970–71—*cont.* ... ... ... ... ... 382–412

*Friday, 6th March* 1970.

I. Questions and Answers ... ... ... ... 413–427

II. Presentation of the Report of the Select Committee on the Rules of Procedure of the Council 427

III. General discussion on the Budget for the year 1970–71—*cont.* ... ... ... ... ... 427–452

IV. Papers laid on the table of the House ... ... 452

*Saturday, 7th March* 1970.

I. Questions and Answers ... ... ... ... 455–473

II. Announcement *re* decision of the Business Advisory Committee ... ... ... ... ... 473–474

III. General discussion on the Budget for the year 1970-71—*cont.* ... ... ... ... ... 474–504

IV. Papers laid on the table of the House ... ... 504

*Monday, 9th March* 1970.

I. Questions and Answers ... ... ... ... 509–528

II. Announcements—

(1) Message from the Governor ... ... ... 528

(2) Message from the Assembly ... ... ... 528

III. Government Motions—

(1) Election of nine members to the Committee of Privileges ... ... ... ... 528–529

(2) Election of six members to the House Committee ... ... ... ... ... 529–530

IV. General discussion on the Budget for the year 1970–71—*cont.* ... ... ... ... ... 530–552

PAGES

*Monday, 9th March* 1970—cont.

V. Government Bills—

(1) The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1970 (L.A. Bill No. 4 of 1970) ... ... ... ... ... 552

(2) The Tamil Nadu Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 5 of 1970) ... ... ... ... 552–565

VI. Papers laid on the table of the House ... ... 565

*Wednesday, 25th March* 1970.

I. Obituray reference to Thiru S. Ramanathan, former Minister of Madras State ... ... 573

II. Questions and Answers ... ... ... ... 573–584

III. Adjournment motion *re* hardship caused to peasants due to enhanced rate for Power and agitation by the peasants ... ... ... ... ... 584–587

IV. Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1969-70 ... ... 587–589

V. Papers laid on the table of the House ... ... 589–591

*Thursday, 26th March* 1970.

I. Questions and Answers ... ... ... 593–611

II. Adjournment motion *re* statement of the Chief Minister in the Assembly *re* abolition of the Upper House (Legislative Council) ... ... 611–613

III. Calling attention to fast by Thiru S. Neelakantan to focus attention on administrative irregularities of Manapparai Municipal Council ... ... 614

IV. Discussion on the Final Supplementary Statement of Expenditure for 1969-70 ... ... ... 614–643

V. Papers laid on the table of the House ... ... 643–644

*Saturday, 28th March* 1970.

I. Questions and Answers ... ... ... ... 647–662

II. Statement *re* correction of answer to supplementary question under Starred Question 218 ... 663



PAGES

*Saturday, 28th March* 1970—cont.

III. Non-Official Business—

(i) Bills.

(1) The Code of Criminal Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969 ... ... 663

(2) The Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969 ... ... ... ... ... 663

(3) The Madras University (Amendment) Bill, 1969 ... ... ... ... ... ... 664–678

(ii) Resolution.

Medium of Instruction in Colleges ... ... 678–696

IV. Papers laid on the table of the House ... ... 696–697

*Monday, 30th March* 1970.

I. Questions and Answers ... ... ... ... 701–717

II. Announcements—

(1) Election of Members to the Privileges Committee ... ... ... ... ... 717

(2) Election of Members to the House Committee 717–718

(3) Message from the Governor ... ... 718

(4) Message from the Assembly ... ... ... 718

III. Government Bill—

The Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1970 (L.A. Bill No. 9 of 1970) ... ... 718–723

IV. Papers laid on the table of the House ... ... 723

Index ... ... ... ... ... ... ... 725–787

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU

### SARDAR UJJAL SINGH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. THIRU M. KARUNANIDHI, Chief Minister in charge of Public, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers and Deputy Collectors, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Food Production, Passports and Newsprint Control and Prices and Supplies of Goods Act.

2. The HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN (Minister in charge of Education including Technical Education, Official Language, Public Health and Medicine and Legislature.

3. THE HON. THIRU K. A. MATHIALAGAN, Minister in charge of Finance, Planning, Revenue, Board of Revenue, District Revenue Establishments, Indian Overseas, Refugees and Evacuees.

4. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in charge of Agriculture, Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries and Tourism.

5. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in charge of Backward Classes, Registration, Stationery and Printing and Government Press.

6. THE HON. THIRU P. U. SHANMUGHAM, Minister in charge of Food, Commercial Taxes, Animal Husbandry and Milk.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Project Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU M. MUTHUSWAMY, Minister in charge of Municipal Administration, Community Development, Panchayats, Bhoodan and Gramdan, Khadi and Village Industries Project, Ex-servicemen and Prosperity Brigade.

10. THE HON. THIRU SI. PA. ADITANAR, Minister in charge of Co-operation, Transport, Nationalised Transport and Motor Vehicles Tax, Agricultural Refinance and Ports.

11. THE HON. THIRU K. V. SUBBIAH, Minister in charge of Religious Endowments, Housing, Accommodation Control, Approved Schools and Vigilance Services.

12. THE HON. THIRU O. P. RAMAN, Minister in charge of Electricity, Legislation on Money Lending (Rural Indebtedness), Legislation on Chits, Forest and Cinchona.

13. THE HON. THIRU K. VEZHAVENDAN, Minister in charge of Labour, Legislation on Weights and Measures and Statistics Beggars and Orphanages.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCI

## Principal Officers.

*Chairman.*

THE HON. THIRU M. A. MANICKAVELU.

*Deputy Chairman.*

THIRU G. KRISHNAMOORTHY.

*Panel of Vice-Chairmen.*

THIRU N. WILSON APOLLOS.
THIRU A. R. DAMODARAN.
THIRU A. P. JANARDHANAM.
THIRU G. SWAMINATHAN.

*Secretary to the Council*

THIRU G. M. ALAGARSWAMY, B.A., B.L.

## LIST OF MEMBERS OF THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL WITH THEIR CONSTITUENCIES.

| Serial number and name of Member. (1) | Name and class of constituency. (2) |
|---|---|
| 1 Abdul Wahab, K. S. .. .. | State Legislative Assembly. |
| 2 Adityan, S. T., B.A., B.L. .. | Tirunelveli Local Authorities. |
| 3 Aiyaswamy, M. .. .. | Nominated. |
| 4 Alamelu Appadurai .. .. | State Legislative Assembly. |
| 5 Arivazhagan, K., M.A .. .. | Madras-Chingleput Teachers. |
| 6 Arunachalam, T. S. .. | State Legislative Assembly. |
| 7 Chidambara Mudaliar, A. .. | Madurai Local Authorities. |
| 8 Chitrarasu, C. P. (Government whip.) .. .. | State Legislative Assembly. |
| 9 Clubwala Jadhav, Mary C. .. | Nominated. |
| 10 Deivasigamani Arunachala Desikar | Nominated. |
| 11 Damodaran, A. R., B.SC. (Hons.) | Madras North Graduates. |
| 12 Damodaran, G. R., B. SC. (Engg.), C. Eng., F.I.E.E. (Lond.) M.I.NUC.E. (Lond.), M.I.E. India. | Salem-Coimbatore-Nilgiris Teachers. |
| 13 Devaraja Mudaliar, T. V. .. | North Arcot Local Authorities. |
| 14 Doraiswamamy Naidu, K. .. | Coimbatore-Nilgiris Local Authorities. |
| 15 Ethirajulu, M. .. .. | State Legislative Assembly. |
| 16 Ganesan, Saw. .. .. | Do. |
| 17 Isvarmurti, V., M.A. (Visva Bharathi), M.A. (Oxon.) | Madras West Central Graduates. |
| 18 Janardhanam, A. P., M.A. | Nominated. |
| 19 Jayarama Reddiar, S., B.A. .. | Ramanathapuram Local Authorities. |
| 20 Kaliyannan, T. M., M.A., B.COM. | Salem-Dharmapuri Local Authorities. |
| 21 Kothandaraman, K.K. .. | Coimbatore-Nilgiris Local Authorities. |
| 22 Krishnamoorthy, G. (Deputy Chairman) .. .. | Thanjavur-Tiruchirappalli Teachers. |
| 23 Krishnaswamy Naidu, R. .. | State Legislative Assembly. |
| 24 Lakshmanan, S. V., B.A. .. | Do. |
| 25 Lakshmanaswamy Mudaliar, Dr. A., B.A., M.D., LLD., D. SC. D. C. L. F.R.C.O.G., F.A.C.I. | Madras District Graduates. |



| Serial number and name of Member. (1) | Name and class of constituency. (2) |
|---|---|
| 26 Lakshmi Krishnamurthy .. | State Legislative Assembly. |
| 27 Mani, K. S. .. .. | Thanjavur Local Authorities. |
| 28 Manickavelu, M. A., B.A.B.L. Chairman). | State Legislative Assembly. |
| 29 Manjubhashini, S. .. .. | Nominated. |
| 30 Mohanal Metha .. .. | State Legislative Assembly. |
| 31 Muthiah Chettiar, Dr. M. A. B.A., D.LITT. | Nominated. |
| 32 Muthu, S. .. .. .. | State Legislative Assembly. |
| 33 Muthu, P.T. .. .. .. | Salem-Dharmapuri Local Authorities. |
| 34 Natarajan, N. V. (Minister for Backward Classes). | State Legislative Assembly |
| 35 Narayanaswamy, D. V. .. | Nominated. |
| 36 Parangusam, G. .. .. | State Legislative Assembly. |
| 37 Ponnappa Naidu, A. .. .. | Do. |
| 38 Ponnuvelu, T. K., B.A. .. .. | Do. |
| 39 Raghavanandam, S. .. .. | Do. |
| 40 Rajagopal, C. V. .. .. | Do. |
| 41 Rajah Iyer, M., M.A., L.T. .. | Madurai-Ramanathapuram Teachers. |
| 42 Rajaram, K. | Madurai Local Authorities. |
| 43 Ramakrishna Achari, K. .. | State Legislative Assembly. |
| 44 Raman Nair, R. .. .. | Do. |
| 45 Ramasamy Padayatchi, S. S. .. | South Arcot Local Authorities. |
| 46 Ramaswamy Mudaliar, V. K. | Chingleput Local Authorities. |
| 47 Rani Annadurai .. .. | Madras Local Authorities. |
| 48 Sambasivam, R. .. .. | South Arcot Local Authorities |
| 49 Sankaralingam Pillai, M., M.A. | Tirunelveli-Kanyakumari Teachers. |
| 50 Santosham, D., M.A., B.L. .. | Madras South Graduates. |
| 51 Saraswathi Pandurangam .. | Nominated. |
| 52 Shanmugham, P. U. (Minister for Food and Commercial Taxes). | North Arcot Local Authorities. |
| 53 Shanmugam, T. K. .. .. | Nominated. |
| 54 Sivasubramanya Pandian, M. | Tirunelveli Local Authorities. |
| 55 Srinivasam Pillai, T. S. .. | Tiruchirappalli Local Authorities. |
| 56 Subbiah, T. K. .. .. | Do. |

| Serial number and name of member. (1) | Name and class of Constituency. (2) |
|---|---|
| 57 Sundaresa Thevar, N. .. .. | Thanjavur Local Authorities. |
| 58 Swaminathan, G., B. PHARM. .. | Madras East Central Graduates. |
| 59 Thanga Pandian, V., B.A., B.T. | State Legislative Assembly. |
| 60 Thirugnansambandam, P. .. | Ramanathapuram Local Authorities. |
| 61 Vasantha Pai, G. .. .. | Madras District Graduates. |
| 62 Wilson Apollos, N. .. . | Kanyakumari Local Authorities. |
| 63 Vacant .. .. .. | North Arcot-South Arcot Teachers. |

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

THIRTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

## Thursday, the 26th February 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (The Hon. THIRU M.A. MANICKAVELU) in the Chair.

### I. OBITUARY REFERENCE to

(i) Thiru D. S. Authimoolam, a sitting Member of the Legislative Assembly ; and

(ii) Thiru G. Ranganatha Mudaliar, a former Member of the Legislative Council.

MR. CHAIRMAN : I am sorry to inform the House of the sudden demise of Thiru D. S. Authimoolam, a sitting Member of the Tamil Nadu Legislative Assembly, representing the Cheranmahadevi Constituency.

He was a Member of the Tamil Nadu Legislative Assembly during 1957-62 and from 1967 onwards.

He was a Member of the Tirunelveli District Board during 1940-43. He was a Member of the Tamil Nadu Congress from 1946 to 1949 and President, Tirunelveli District Board, 1949-53. He was the Deputy Leader of the Swatantra Party in the Legislative Assembly till his death. He was plain and outspoken with a touch of humour, individual to himself. He endeared himself to one and all by his simplicity and affability.

I am also sorry to inform the House of the demise of Thiru G. Ranganatha Mudaliar, a former Member of the old Legislative Council.

He was an elected Member of the old Madras Legislative Council during 1930-37, representing the Thanjavur Non-Muhammadan Rural Constituency.

He occupied various important positions in public life. He was a Member of the Thanjavur District Board and was associated with many charitable and educational institutions.

On behalf of this House, I shall convey our deep sense of sorrow to the members of the bereaved families.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

Accordinlgy, all hon. Members stood in silence for a minute as a mark of respect to the deceased.

[26th February 1970

## II. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Explosives.*

ª*23 Q.—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 219 on 26th March 1969 ;

(*a*) whether any representation has been made to the Tamil Nadu Government by the Agricultural societies and agriculturists that there was acute shortage of explosives used for digging wells ; and

(*b*) If so, the action taken to make available the explosives in each district ?

**வெடி மருந்துகள்.**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் 219-ஆம் வினாவிற்கு 26—3—1969-ஆம் தேதி அன்று அளித்த விடையை யொட்டி கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிணறு தோண்டுவதற்கு உபயோகப்படுத்தும் வெடி மருந்துகள் கிடைப்பது அரிதாக இருக்கின்றது என விவசாய சங்கங்களும், விவசாயிகளும் தமிழ்நாடு அரசுக்கு முறையீடு செய்துள்ளார்களா ?

(இ) ஆமெனில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெடி மருந்து கிடைக்க எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) ஒவ்வொரு மாவட்டத்திலும் வெடி மருந்துக் கிடங்கு கட்டும் பணியை வேளாண்மைத்துறை மேற்கொண்டுள்ளது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்வோம் என்று சொன்னார்கள். இன்று கூட ராமனாதபுரம் ஜில்லா ஸ்ரீவில்லிப்புத்தூரிலிருந்து வெடி மருந்து வாங்கிக் கொண்டு போவதற்காக சென்னைக்கு மூன்று பேர்கள் வந்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு விவசாயிகளிடையே வெடி மருந்தை தங்கள் இடத்திற்குக் கொண்டு போவதில் அதிக சிரமம் இருக்கிறது. எனவே அந்தந்த மாவட்டத்திலேயே வெடி மருந்து சீக்கிரமாக கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** திருநெல்வேலி, ராமனாதபுரம், திருச்சி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் வெடி மருந்து கிடங்குகள் கட்டுவதைப்பற்றி வேளாண்மைத் துறை இயக்குநரிடமிருந்து ஒரு செயற்குறிப்பு அரசாங்கத்திற்கு வந்து, அது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது. வேளாண்மை உதவிப் பொறியாளர் வெடி மருந்து வினியோகம் பற்றி ஒரு குறிப்பு அனுப்பியுள்ளார். சிவகாசி தீப்பெட்டி தொழிற்சாலையில் வெடி மருந்து வினியோகம் செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களும் இந்த மாவட்டத்திற்கு வழங்குவதாக உறுதி அளித்துள்ளார்கள்.

ª Postponed from the list of questions for 24th January 1970.



26th February 1970]

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சில மாவட்டங்களில் அரசாங்கக் கிடங்குகளில் இந்த வெடி மருந்துகள் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகத் தெரிகிறது. எந்த அடிப்படையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது ? தஞ்சை போன்ற மாவட்டங்களில் இதைப் போன்ற ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கான காரணத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக இதைப் போன்ற வெடிமருந்துகள் தேவைப்படுவதில்லை என்றுதான் கூறப்படுகிறது. காரணம் தஞ்சை மாவட்டத்தில் நீர் நிலத்திற்கு சிறிது ஆழத்திலேயே கிடைக்கிறது. அந்த மாவட்டத்தில் கிணறுகளை ஆழப்படுத்த பாறை உடைக்கும் சாதனங்கள் தேவையில்லை. இருந்தாலும் சில இடங்களில் தேவையைப் பூர்த்தி செய்ய வெடி மருந்து பி.டி.ஓ. மூலமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. டி. சந்தோஷம் :** சமீப காலத்தில் குறைபாடு ஏற்பட்டதற்கான காரணம் என்னவோ ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதைத் தயாரிக்கிற தனியார் கம்பெனிகள் ஒப்புதல் கொடுத்த அளவில் தேவையான வெடி மருந்தைக் கொடுக்க முன் வராததால், அரசாங்கமே அதைத் தயாரிக்க முன் வந்திருக்கிறது.

*Storing of Fertilisers*

‡*38 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :—

(*a*) the assistance rendered by the Central Government for storing fertilisers ;

(*b*) the restrictions imposed by the Central Government for the import of phosphatic fertilisers ; and

(*c*) the additional expenditure to be incurred by the State Government due to imposition of ad valorem duty on fertilisers in the Budget for 1969–70 ?

**உரங்களை சேகரித்து வைத்தல்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உரங்களைச் சேகரித்து வைக்க மத்திய அரசு அளித்துள்ள உதவித் தொகை எவ்வளவு ?

(இ) பாஸ்பேட் உரங்களை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் யாவை ?

(உ) 1969–70-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் உரத்தின் மீது மதிப்பீட்டு வரி விதிப்பினால் மாநில அரசு செய்ய வேண்டிவரும் கூடுதல் செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ), (இ) & (உ) : மேலவை முன் விவர அறிக்கைª ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் உரங்களை வினியோகிப்பதற்கும் ஸ்டாக் செய்து வைப்பதற்கும் மற்ற இனங்களுக்கும் உதவித்தொகை அளிப்பதாகத் தெரிகிறது.

ª Printed as Apendix I on pages 28-29.

‡ Postponed from the list of questions for 24th January 1970.

ஸ்ரீ வில்லிப்புத்தூர் தாலுகா கோவாப்பரேடிவ் மார்க்கெட்டிங் சொசைடி கோடவுனில் அரசாங்கம் தற்போது கூட ஸ்டாக் வைத்திருக்கிறார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளாக அங்கே உள்ள உரத்தில் ஓரளவு தான் செலவாகியிருக்கிறது. அதிகமான உரம் இருக்கிறது. சாக்குகள் கூட கெட்டு பல்வேறு உரங்களும் ஒன்றாகக் கலந்து போகின்ற அளவில் வைத்திருக்கிறார்கள். மார்க்கெட்டிங் சொஸைட்டியிலிருந்து இவ்வாறு உரங்கள் கெட்டு விடுவதைப்பற்றி எடுத்துக் கூறி வேறு சாக்குகளில் அவைகளை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொண்டும் கூட, இதுவரை ஒன்றும் செய்யவில்லை. ஆகவே இப்படிக் கெட்டுப்போவதன் மூலமாக ஏற்படும் எடை குறைவிற்கு மத்திய அரசாங்கம் மானியம் அளிக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உரங்களுக்கு, தற்போது மத்திய சர்க்கார் துறைமுகங்களிலிருந்து ரயில்வே மூலமாக குறிப்பிட்ட சில நிலையங்களுக்கு உரத்தை எடுத்துப்போகும் போக்குவரத்துச் செலவை மட்டும்தான் ஏற்றுக்கொள்ளுகிறது. இடைக்காலத்தில் ஏற்பட்ட தாமதத்திற்கு காரணம் சமீபத்தில் ஏற்பட்ட வறட்சி காரணமாக உரம் அதிகமாகச் செலவழிக்கப்படவில்லை. ஆங்காங்கே தேக்கம் ஏற்பட்டது. அதுவுமின்றி மத்திய சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தில் இறக்குமதித் தீர்வையையும் ஆயத் தீர்வையையும் அதிகரித்ததன் விளைவாக ஏற்கனவே கொடுத்த உரத்திற்கு கூட அதிகமான விலை நிர்ணயித்து விட்டார்கள். அந்த விலை சரியல்ல என்று மத்திய அரசாங்கத்திற்கு மாநில அரசாங்கம் எழுதியிருக்கிறது. இன்னும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால்தான் உரம் அங்கங்கே தேங்கியிருக்கிறது. இப்போது வறட்சி நிலைமை மாறி, விவசாயிகள் நல்ல முறையில் நிறைய உரம் வாங்குவதால், விவசாயிகளின் ஒத்துழைப்போடு இதைத் தீர்க்க முடியும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஸ்டாக் செய்யப்பட்ட இடங்களில் மூட்டைகள் சரிந்துவிடுவதால் அதிலிருந்து உரம் சிந்தி குறைந்து விடுகிற காரணத்தால், அந்த மூட்டைகளைக் கொண்டுபோய் வினியோகிக்கிற இடங்களில் கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளோ, மற்றவர்களோ, விவசாயிகளோ அந்த மூட்டைகளை வாங்க மறுக்கிறார்கள். இவ்வாறு குறைவதற்காகும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள எந்த அதிகாரியும் தயாராக இருப்பதில்லை. தாலுகா, ஜில்லா, அதிகாரிகள் மட்டத்திலிருந்து ரெவின்யூ போர்டு அதிகாரிகள் வரையில் மூட்டைகளின் விற்பனையைத்தான் கவனிக்கிறார்களே தவிர, விவசாயிகள் குறைகளைக் கவனிப்பதில்லை. இந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்க அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதற்காகத்தான் இந்த நஷ்டத்தை மாநில அரசாங்கம் ஏற்றுக்கொண்டு விவசாயிகளுக்கு பழைய விலையிலேயே வினியோகித்து வருகிறோம். அடுத்த பயிருக்காவது உரத்தை வாங்கி ஸ்டாக் செய்து வைத்துக்கொள்ளுங்கள் என்று நாக்கீறுகள் விவசாயிகளுக்கு அனுப்பி வருகிறோம். அதற்காகத்தான் தவணை முறையை அரசாங்கம் அமுல் படுத்தி வருகிறது.

**திரு. வி. கே. ராமசாமி முதலியார் :** ரயிலில் வந்து சேரும் அநேக மூட்டைகளில் ஓட்டை ஏற்பட்டு உரம் 50 கிலோ என்றால் 25 கிலோ இருக்கும் அளவுக்குக் குறைந்திருக்கிறது. கோணிகள் கிழிந்து வருகின்றன. டெவலப்மெண்ட் கவுன்சிலில் கேட்டால், மாவட்ட கலெக்டர் அதை மறுக்கிறார். என்ன எடை மூட்டைகளில் மார்க் செய்யப்பட்டு வந்திருக்கிறதோ அந்த எடைப்படிதான் விலை கொடுக்க வேண்டும் என்று கலெக்டர் சொல்கிறார். இந்த நிலையைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதற்குரிய நடவடிக்கையை சர்க்கார் எடுத்துக்கொள்ளும்.



**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** இந்த வருஷம் நன்றாக மழை பெய்து சில குறிப்பிட்ட இடங்கள் தவிர, மற்ற இடங்களில் உர வினியோகம் செய்யப்பட்டாலும் கூட, குறிப்பாக என்.பி.எக்ஸ் காம்ப்ளெக்ஸ் என்ற உரம் அனேகமாக விவசாயிகளால் வாங்கப்படாமல் தேங்கியிருக்கிறது. யூரியா, நைட்ரேட் மாதிரியான உரங்கள் விற்பனையாகின்றன. திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஸ்ரீவில்லிப்புத்தூர் மார்க்கெட்டிங் சொஸைட்டிக்குத் தலைவராக இருப்பதைப் போல , நான் விருதுநகர் சொஸைட்டிக்குத் தலைவர். சென்ற வருஷம் 5 லட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள என்.பி.எக்ஸ் காம்ப்ளெக்ஸ் உரம் விற்காமல் கிட்டத்தட்ட அப்படியே தேங்கியிருக்கிறது. அது விற்பனையாவதற்கு ஏதாவது வழிவகை செய்ய சர்க்கார் முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஏற்கனவே டை. அமோனியம் பாஸ்பேட், அமோனியம் பாஸ்பேட், பொடாசிய மூரியேட் ஆகிய வகைகளை உத்தரபிரதேசத்திற்கு அனுப்பி அங்கே விற்றுவிடலாம் என்று அந்த அரசோடு தொடர்பு கொண்டு கடிதப் போக்குவரத்து நடந்துவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல, அமோனியம் நைட்ரேட், யூரியா போன்ற உரங்களை விவசாயிகள் விரும்பி வாங்குகிறார்கள். 1—12—1969 முதல் புதிய விலைப்பட்டியல் படி விற்கிறோம். விவசாயிகள் வாங்க விரும்பாத உர வகையைத்தான் பழைய விலையில் கொடுக்கிறோம். இதைத் தவிர வேறு வகையிலும் அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

**திரு. சி. வி. ராசகோபால் :** கூட்டுறவு நிலையங்களில் சர்க்கரை குத்தியைப் போட்டு நிறைய உரத்தை எடுத்து விடுகிறார்களே, அதைத் தடுக்க அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறார்கள் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட புகார்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

**திரு. கே. எஸ். மணி:** நெல் வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்யும்போது, அரசாங்கம் காய்ச்சல் இல்லை, தரம் இல்லை என்று சொல்லி அந்த வகையில் நஷ்டத்தை ஈடுகட்ட விலையைக் குறைக்கிறார்கள். அதைப்போல உர வகைகளைக் கொள்முதல் செய்யும்போது அந்தக் கம்பெனியாரிடமிருந்து அவைகளின் தரக்குறைவு, எடைக் குறைவு ஆகியவற்றிற்கு அவர்களே பொறுப்பேற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** உள்நாட்டில் தயாராகும் உரங்களைப்பற்றி எந்தவிதமான குறையும் சொல்வதற்கில்லை. காலாகாலத்தில் கிடைக்கிறது. தேவையான அளவுக்குக் கிடைக்கிறது. ஆனால் வெளிநாட்டிலிருந்து வருகிற உரங்களில்தான் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. அதைப் பார்த்துத்தான் அரசாங்கம் இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுகிறது.

### *Directorate of Vigilance and Anti-Corruption*

[a]*56 Q.—**Thiru V. ISVARMURTI :** Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether any case has been registered by the Directorate of Vigilance and Anti-Corruption regarding an alleged attempt by two persons to bribe the Hon. Minister for Education and Health ; and

(*b*) if so, the action taken thereon ?

[a] Postponed from the list of questions for 27th January 1970.

**ஒழுக்கக் கண்காணிப்பு-லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகங்கள்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சருக்குக் கையூட்டு கொடுப்பதற்கு இருவர் முயற்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருப்பது குறித்து ஒழுக்கக் கண்காணிப்பு லஞ்ச இயக்குநர் அலுவலகம் வழக்கு ஏதேனும் பதிவு செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) சென்னை சிறப்பு நீதிபதி நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்ட திரு. நடராஜன் என்னும் ஆடலழகன், திரு. வி. நாகராஜன் ஆகிய இரு குற்றவாளிகளுக்கும் 28—11—1969 அன்று ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனையும், ரூ. 2,000 அபராதத் தண்டனையும் விதிக்கப்பட்டன. அபராதத் தொகை செலுத்தத் தவறினால் மேலும் ஆறு திங்கள் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது. உயர்நீதி மன்றத்தில் அவர்கள் மேல் முறையீடு செய்துள்ளனர்.

THIRU G. VASANTHA PAI : In view of the attempts being made, will the Government consider the abolition of the interview system as well as the submission of marks to the Government ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தக் கேள்வியில் இது இடம் பெறவில்லை.

*Sale of liquor containing poison*

*57 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that three persons died near Aranthangi in May 1969 after imbibing liquor containing poison ;

(*b*) if so, from whom and how they got this liquor ; and

(*c*) whether action was taken against those who sold the liquor ?

**நஞ்சு கலந்த கள்ளச் சாராய விற்பனை**

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) 1969 மே மாதம் அறந்தாங்கியருகே நஞ்சு கலந்த சாராயம் அருந்தி மூவர் இறந்து போனார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், சாராயம் யாரிடமிருந்து எப்படிப் பெற்றனர் ?

(உ) சாராயம் விற்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) அறந்தாங்கி வட்டம், அரசர்குளம் கிராமத்தைச் சேர்ந்த (1) சுப்பன் என்பவரின் மகன் பெரியதம்பி, (2) அடைக்கன் என்பவரின் மகன் சின்னையா, (3) முத்துச்சாமி என்பவரின் மகன் அப்பையா ஆகிய மூவரும் சின்னையா என்பவரால் கள்ளத்தனமாகக் காய்ச்சப்பட்ட சாராயத்தை உட்கொண்டதால் 1969 மே திங்களில் இறந்துபோனார்கள். நச்சுப் பொருள்களாகிய மெத்தில் ஆல்கஹால் (Methyl Alcohol) எண்ட்ரின் (Endrin) முதலியவை அடங்கிய சாராயத்தை உட்கொண்டதன் காரணமாக மேற்சொன்ன மூவரும் இறந்தனர் என்று இரசாயன ஆய்வு அறிக்கையிலிருந்து தற்போது தெரியவந்தது.

* Postponed from the list of questions for 27th January 1970.





(இ) & (உ) புலனாய்வு செய்ததில் இறந்தவர்களில் ஒருவரும் அடைக்கன் என்பவரின் மகனுமாகிய சின்னையா என்பவன் ஏற்கெனவே கள்ளச் சாராயம் காய்ச்சித் தண்டிக்கப்பட்டவன் என்று தெரிகிறது. அவன் தான் காய்ச்சிய கள்ளச்சாராயம் தூய்மையானதல்ல என்று தெரிந்திருந்த போதும் குடி வெறியினால் மற்ற இருவருடன் அச்சாராயத்தை உட்கொண்டான். அவர்கள் இறந்ததற்கு இதுவே காரணமாகும். இறந்துவிட்ட சின்னையா (என்பவனது வைப்பாட்டி) மனைவி மீது தமிழ் நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4 (1) (எ) பிரிவின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. அவருக்கு ரூ. 75 அபராதத் தொகை விதிக்கப்பட்டது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, பழரசம் என்னும் ஒரு வகை பானம் சோடா கலர் விற்பதைப்போல எங்கும் பரவலாக எல்லாக் கடைகளிலும் விற்கப்படுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு வியாபாரி ஒரு வருஷத்தில் நல்ல தொழில் செய்து ரூ. 30 ஆயிரம் சம்பாதித்தார். இந்தப் பழ ரசம் அருந்த ஆரம்பித்தார். தொழிலும் கெட்டது. 5 மாதத்திற்குள் அவரும் இறந்துபோனார். இப்படி சிலரைப்பற்றி என் அனுபவத்தில் தெரிந்திருக்கிறேன். இதைச் சாப்பிட்ட ஓரிரு நிமிஷங்களிலேயே ஆட்டம் போட ஆரம்பித்துவிடுகிறார்கள். எனவே இப்படி மக்களுக்குக் கெடுதி விளைவிக்கக் கூடிய இந்தப் பழரச விற்பனையைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** இதைத் தடுப்பதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் இப்படிப்பட்ட குற்றவாளிகள் பிடிபடுகிறார்கள். அந்த எண்ணிக்கை உயர்ந்துகொண்டு தான் இருக்கிறது. இதைத் தடுப்பதற்குக் காவல் துறையினர் மட்டுமின்றி பொதுமக்களின் ஒத்துழைப்பும் அரசுக்கு நிரம்பத் தேவைப்படுகிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** பழ ரசம் தயாரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்டம் கொண்டுவர முடியாதா ?. இதைப்போன்ற போதை தரும் வஸ்துக்களைக் கொண்ட பானங்களைத் தயாரிப்பதைப் பற்றி அரசாங்கம் கட்டுப்பாடு கொண்டுவர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மருந்து தயாரிப்பதற்கான சட்டம் மாநில அரசைப் பொருத்ததல்ல. மருந்தைத் தயாரிப்பது என்ற அந்த முறைக்குள்ளே இன்றைய தினம் அவர்கள் மறைந்துகொண்டு இப்படிப்பட்ட போதைப் பொருள்களைத் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைத் தடுப்பதற்கு நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், எந்த விதமான சட்டமும் இன்றைய நிலையில் இல்லை.

**திரு. சா. கணேசன் :** இத்தகைய மருந்துகளைத் தயாரிப்பதைத் தடுப்பதற்கு சட்ட விதிமுறை இல்லாவிட்டாலும், ஊர் முழுவதும் கிட்டத்தட்ட தெருவுக்குத் தெரு அரிஷ்டம் அல்லது ஆயுர்வேத வைத்திய சாலை என்ற பெயர் போர்டோடு இந்த பானம் தவிர வேறு எதுவும் விற்கப்படுவதில்லை என்பதால், இனியாவது அரசாங்கம் தக்க விதி முறையை ஏற்படுத்தி, இதைத் தடுக்க முன்வருமா ? தற்போது ஆயுர்வேத வைத்தியசாலை என்று போர்டு போட்டிருக்கிற இடத்தில் அரிஷ்டம், பழரசம் என்பதைத் தவிர சுக்கு திப்பிலி கூட விற்பதில்லை. மக்கள் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் இதுபோன்ற வியாபாரத்தை தக்க விதிகள் செய்து கட்டுப்படுத்த அல்லது நீக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட விதிகளையெல்லாம் நம்முடைய அரசாங்கமே செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் அந்த அதிகாரங்களைப் பெற மூவர் கொண்ட குழு ஒன்றை இந்த அரசு அமைத்து ஆராய்ந்துகொண்டிருக்கிறது.

**திரு கே.. ராஜாராம் :** திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில், "எங்களுக்கு அதிகாரம் இல்லை. இந்த அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருக்

இறது. ஆகையால் அதைத் தடுப்பதற்கு முடியாமல் இருக்கிறது" என்று சொல்லியிருப்பது நாக்கு நன்மை பயப்பதை விட மிகுந்த தீமையைப் பயக்கும் என்று அஞ்சுவதால், மத்திய அரசுக்கு எழுதி யாவது அந்த மாதிரி விஷயங்களில் நாம் தலையிட்டு திருட்டுத்தனமாக பழரசம் என்று சொல்லி, போதை வஸ்து தயாரிக்கும் தொழிலைத் தடுக்க முதலமைச்சரும் அரசும் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நம்முடைய நாயுடு அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, அந்த மருந்தை சாப்பிட்டு தெருவில் ஆடிக் கொண்டுபோகிறவர்களைக் காவல்துறையினர் கைது செய்து நீதி மன்றத் திற்குக் கொண்டுபோனால், சட்டம் வேறுவிதமாகப் பேச ஆரம்பித்து விடுகிறது. மருந்துதான் சாப்பிட்டார்கள், போதைப் பொருளை அல்ல என்று சொல்லிவிடுகிறார்கள். அந்த மருந்து தான் அவர்களுடைய நரம்புகளை முறுக்கியிருக்கிறது என்று வழக்கறிஞர்களின் வாதம் பயன் படுத்தப்பட்டு குற்றவாளிகள் தப்பித்துக்கொள்கிறார்கள். இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மத்திய அரசுக்கு இதைப்பற்றி நாங்கள் செல்கிற ஒவ்வொரு நேரத்திலும் எடுத்துச் சொல்லி வருகிறோம். அதை எழுத்து மூலமாகத் தெரிவிப்பதில் இந்த அரசுக்கு எந்தத் தடையுமில்லை.

THIRU G. SWAMINATHAN : There is a Central Act called the Medicinal and Toilet Preparations Act. According to the same, some Ayurvedic and Allopathic Medicines have been classified as restricted preparations. The State Government who have a right can refer the matter of Ayurvedic medicines being widely misused to the Central Government and the latter will bring them under the category of restricted preparations. Hence, under this very Act, these preparations can be made not to be sold in the market. May I know whether the Government are aware of the particular Act and also rule 60 (3) ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப்பற்றி ஆராய்ந்து ஏற்ற முடிவு எடுக்கலாம்.

**திரு. பி. திருஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, இந்த மாதிரி கஷாயம் அருந்தியவர்கள் ரோடிலே ஆட்டம் போட்டால், அவர்களைப் பிடித்து, கோர்ட்டுக்குக் கொண்டுபோனால், தண்டிக்கப்படுகிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பழரசம் குடித்ததற்கான பில்லை காட்டினால், அவர்கள் தப்பித்துக் கொள்ள ஏதுவாக இருக்கிறது. அதைத் தடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த சங்கடத்தைத்தான் நான் இங்கே சொன்னேன்.

*64 *Q.*—MR. CHAIRMAN : This question is postponed.

*Food Production Department*

*65 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) when the new Department for Food Production was created;

(*b*) the amount spent on this establishment, since it started functioning ;

(*c*) the special measures evolved by this department to increase food production ; and

(*d*) the additional food production during 1968-69 because of these special measures ?

* Postponed from the list of questions for 27th January 1970



**உணவு உற்பத்தித் துறை**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) உணவு உற்பத்திக்கான புதிய துறை எப்பொழுது துவக்கப் பட்டது ?

(இ) இத்துறை செயல்படத் தொடங்கியதிலிருந்து செலவிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) உணவு உற்பத்தியை அதிகரிக்க இத்துறையினால் உருவாக்கப் பட்ட சிறப்பு நடவடிக்கைகள் யாவை ?

(எ) இச்சிறப்பு நடவடிக்கைகளின் பயனாக 1968-69-ல் கிடைக்கப் பெற்ற கூடுதல் உணவு உற்பத்தி எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அறிக்கை* ஒன்று மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

*Jute Cultivation*

‡*66. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) the number of acres in which jute is cultivated in our State :

(*b*) the quantity of production ; and

(*c*) whether there is any scheme to extend the area of jute cultivation ?

**சணல் பயிர்.**

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது மாநிலத்தில் சணல் எத்தனை எக்கர் நிலங்களில் பயிராகின்றது ?

(இ) உற்பத்தியின் அளவு என்ன ?

(உ) பயிர் செய்யப்படும் நிலத்தினை விரிவுபடுத்தும் திட்டமேதேனும் உண்டா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) தமிழ்நாட்டில் சணல் தற்போது பயிரிடப்படவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) 1970-71-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 500 எக்கர் பரப் பளவில் சணல் பயிரிடுவதென வேளாண்மைத் துறை இயக்குநரிட மிருந்து பெறப்பட்ட செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

*Sculptures and epigraphs.*

*91 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether there is any separate department to look after specially the artistic sculptures and the epigraphs of historical importance in the temples of Tamil Nadu ; and

(*b*) the number of temples which have published special publications regarding them for the pilgrims of other States and foreign countries ?

* Printed as Appendix II on page 29.

‡ Postponed from the list of questions for 27th January 1970.

[26th February 1970

**சிற்பங்கள், கல்வெட்டுகள்.**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டுக் கோயில்களில் உள்ள கலை அம்சம் பொருந்திய சிற்பங்கள், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுக்கள் இவற்றைத் தனியாக கவனிக்க தனியாக துறை ஏதேனும் உள்ளதா ?

(இ) எத்தனை கோயில்களில் இவை பற்றித் தனியான வெளியீடுகள் வெளி மாநில, வெளி நாட்டு யாத்ரீகர்களுக்காக வெளியிடப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) ஆம். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கோயில்கள் அல்லாத கோயில்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் ஆகியவை உட்பட, பண்டைய நினைவுச் சின்னங்கள், வரலாற்றுச் சின்னங்கள் இவற்றைப் பேணுதலும் பாதுகாத்தலும், மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பொறுப்பில் உள்ளன.

(இ) கோயில் கலை, சிற்பம், கல்வெட்டுக்கள் ஆகியவை குறித்து எந்தச் சிறப்பு வெளியீடுகளையும் கோயில்கள் வெளியிடவில்லை. ஆனால் ஸ்தல புராணம் மற்றும் திருக்கோவில்கள் பற்றிய வெளியீடுகளை சில கோயில்கள் வெளியிட்டுள்ளன.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தஞ்சைக் கலைக் கூடத்திலிருந்து சில சிலைகள் அண்மையில் இந்தியக் கண்காட்சிக்காக அமெரிக்காவில் உள்ள வாஷிங் டனுக்குச் சென்று வந்துள்ளது. அந்தச் சிலைகளின் மதிப்பு சுமார் 5 கோடி ரூபாயாகும். அந்தச் சிலைகளை இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் சிலர் திருட முயற்சி செய்தபோது, காவல் துறையினர் பிடித் தார்கள். இதைப்போன்ற நிகழ்ச்சிகள் நடைபெருமல் இருக்க வேண்டு மென்பதற்காக ஒரு வழக்கில் தீர்ப்பளித்த உயர்நீதிமன்ற நீதிபதி திரு. நாராயணசாமி முதலியார் அவர்கள் சிலைகளைப் பாதுகாப்பதற்கென்றே தனி காவல் துறை ஒன்றை அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதைப் பற்றி அரசிற்குத் தெரியுமா ? அவ்விஷயத்தில் ஏதாவது அர சாங்கம் செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் கேட்கப்பட்டிருக்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லாவிட்டாலும், அதற்கான தக்க நடவடிக்கையை இப்போது அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் அதுபற்றி ஆராய்ந்து வருகிறார்கள். அதன் காரணமாக பல இடங்களில் திருட்டுப்போன சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு, குற்றவாளிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்குமன்றத்தில் கடுமையாகத் தண்டிக்கப்படுகிறார்கள் என் பதைச் செய்தித் தாள்களிலிருந்து அறிய முடிகிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** சிறந்த சிலைகளைப் பற்றிய வெளியீடு களைக் கோயில்கள் தனியாக வெளியிடுவதில்லை என்று அமைச்சர் பதில் சொன்னார்கள். சில கோயில்களின் பொருளாதார நிலைமை நன்றாக இல்லாமல் இருக்கலாம். மாநில அளவில் எல்லாக் கோயில்களிலும் சிறப்பு வாய்ந்த அம்சங்களைச் சேகரித்து வெளியிடும் முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபடுமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கோயில்களில் அப்படிப்பட்ட கல்வெட்டுகள்பற்றிய, வரலாற்றுக் கருத்துக்கள் பற்றிய நூல்கள் வெளியிடாவிட்டாலும், அவற்றைப்பற்றித் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் சில வெளியீடுகள் வெளியிடுகிறார்கள். குறிப்பாக மாமல்லபுரம் மாமல்லை என்று தமிழிலும், மகாபலிபுரம் என்று ஆங்கிலத்திலும் கைலாசநாதர்கோவில் காஞ்சிபுரம் பற்றி ஆங்கிலத்திலும், நாமக்கல் குகை பற்றி ஆங்கிலத்திலும் வெளியீடு வெளியிடப்பட்டிருக்கிறது.



26th February 1970]

திருவண்ணுமலை, தாராசுரம், திருநெல்வேலி, கொடும்பாளூர், திருப் போரூர், பூஞ்சை ஆகிய கோயில்களைப் பற்றிய வெளியீடுகளை வெளியிடும் முயற்சி தொல் பொருள் ஆராய்ச்சித் துறை சார்பாக மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. தொல் பொருள் ஆராய்ச்சித் துறையில் ஒரு அச்சகம் நிறுவப்பெற்று அதன் மூலமாக இந்தப் புத்தகங்கள் வெளியிட முயற்சி கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக வரலாற்றுச் சார்பான செய்தி களை வெளியிடுவதற்கான முயற்சி கூட எடுக்கப்பட்டு வருகிறது.

*Panchayat Union Dispensary at Kamuthi.*

*92 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(*a*) whether Kamuthi Panchayat Union has passed and sent a resolution to the Government requesting it to take over the Panchayat Union Hospital at Kamuthi Township, Ramanathapuram district ; and

(*b*) if so, the action taken thereon ?

**ஊராட்சி ஒன்றிய மருத்துவமனை, கமுதி.**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கமுதி பேரூராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையை, அரசாங்கமே எடுத்து நடத்தும்படி கமுதி ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) and (இ) : கமுதி யிலுள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையையும் பிற ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகள் சிலவற்றையும் அரசு ஏற்று நடத்தலாம் என்று சுகாதாரப் பணி குடும்பக்கட்டுப்பாடு இயக்குனர் அனுப்பிய செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டது. ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை அரசு ஏற்று நடத்துவதென்ருல் அதற்கு தொடரும் செலவினத்திற்காக ஏராளமான பணம் தேவைப்படுகிறது. அதனுல் தற்சமயம் தொடராச் செலவினம் முழுவதையும் ஏற்றுக் கொள்வதற்கு பொது மக்களிட மிருந்து உதவித் தொகை கிடைக்கும் வாய்ப்புள்ள ஊராட்சி ஒன்றிய மருத்துவமனைகளை, அவற்றின் தொடர்பான தொடர் செலவினங்களைக் கருத்தில் கொண்டு அரசு ஏற்று நடத்தலாம் என்று முடிவு எடுக்கப் பட்டுள்ளது. கமுதியைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட தொடர் செலவினம் ஏற்றுக்கொள்வதற்கான சூழ்நிலைகள் ஏற்படவில்லை.

*Government Hospital, Karaikudi.*

*93 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—.

(*a*) whether the Municipality has provided a building for Karaikudi Government Hospital ; and

(*b*) if so, the reason why the Hospital has not been shifted to that building ?

**காரைக்குடி அரசினர் மருத்துவமனை.**

**திரு. பி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்— ,

(அ) காரைக்குடி அரசினர் மருத்துவமனைக்கு நகரசபை கட்டிடம் வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தக் கட்டிடத்திற்கு மருத்துவமனை மாற்றப் படாத காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) and (இ) ஆம், 20-9-1969-லிருந்து காரைக்குடி மருத்துவமனை நகரசபையால் வழங்கப்பட்ட காந்தி மாளிகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

**திரு. ஏ. கணேசன் :** இப்போது அங்கு டாக்டர் இருந்து பணி செய்து வந்தாலும், படுக்கை வசதிகள், மருத்துவ உதவியாளர்கள், டாக்டர்கள் ஆகியோர் தேவையான அளவிற்கு இல்லாததால், மக்கள் தேவையின் ஒரு பகுதியைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையிலிருப்பதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு அதை முழு நிறைவு உள்ளதாக ஆக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவ அதிகாரிகள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற குறைபாடுகள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வரும்போது, அரசு தக்க முடிவுகளை எடுத்து நிறைவேற்றலாம்.

### *Tourist Bungalows.*

*94 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to complaints made by foreign tourists about lack of attention to lodgers in the Tourist Bungalow at Ootacamund ; and

(*b*) if so, the action taken thereon ?

### சுற்றுலா மாளிகைகள்.

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உதகமண்டலத்தில் உள்ள சுற்றுலா மாளிகையில் தங்குபவர்களின் வசதிகள் குறித்து நாட்டம் செலுத்தப்படுவதில்லை என்று வெளிநாட்டு சுற்றுப்பயணிகளால் கூறப்பட்ட புகார்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளனவா ?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம், ஐயா.

(இ) மாவட்ட அதிகாரியை இரகசிய விசாரணை நடத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டது. அவருடைய அறிக்கையிலிருந்து புகார் பொருட்படுத்தக் கூடியதாக இல்லை. வசூலிக்கும் கட்டணத்திலிருந்து குறை கூறுபவர்கள் விரும்பும் அளவு பெரும் வசதிகள் செய்து தருவதற்கு தற்போது இயலவில்லை.

*95 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state the new amenities provided in the Government Tourist Bungalows in Tamil Nadu to accommodate visitors from foreign countries and other States ?

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ் நாட்டிலுள்ள அரசினர் சுற்றுலா மாளிகைகளில் அயல் நாட்டினரும் அண்டை மாநிலத்தினரும் தங்கும் வகையில் என்ன புதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** புதிய வசதிகள் எதும் செய்யப்படவில்லை.





**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசாங்கத்தால் நடத்தப்படும் சுற்றுலா மாளிகையில் புதிய வசதிகள் எதுவும் செய்யாமல் இரண்டு திங்களுக்கு முன்னால் அவைகளுக்கான கட்டண விகிதம் உயர்த்தப்பட்டதா ? அப்படி உயர்த்தப்பட்டிருந்தால், கட்டண உயர்வு கூடாது என்று பொதுமக்கள் சார்பாக அரசினற்குக் கோரிக்கை எதுவும் வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் அரசிற்கு வரவில்லை.

**திரு. வி. தங்கபாண்டியன் :** புதிய வசதிகள் செய்யாமல் அரசாங்கத்தின் சுற்றுலா மாளிகையில் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதனால் மேற்கொண்டு வசதி செய்துகொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தற்போது தேவையான எல்லா வசதிகளும் செய்து தரப்படுகின்றன. மதுரையில், திருச்சியில், உதகையில், இப்படிப்பட்ட சுற்றுலா மாளிகையில் எல்லாம் நாகரிகமான முறையில் அவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளும் செய்யப்பட்டு வருகின்றன. அயல்நாட்டுப் பிரயாணிகள் வந்து தங்கினும், அவர்களுக்குத் தேவையானதை வாங்கித் தருவோம். மேல்நாட்டு நாகரிகத்திற்கு ஏற்ற வகையில் சுகாதார வசதிகள் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கின்றன. அதற்குரிய கட்டணத்தைத்தான் உயர்த்தியிருக்கிறார்களே தவிர, அதை அதிகம் என்று கருதுவதற்கில்லை.

THIRU G. VASANTHA PAI : Will the Hon. Minister be pleased to consider whether it will be possible to give the existing amenities theselves and to see that they are maintained properly instead of these persons being put to inconvenience by the existing Tourist Bungalows being in a very bad state of disrepair ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** உதகையைப் பொறுத்த வரையில், சொல்லப்பட்ட புகாரை ஏற்றுக்கொள்வதாக இல்லை. அங்கு வந்து தங்கியிருந்த அயல்நாட்டினர் ஒருவர் இரவு பத்து மணிக்கு மேல் எங்கேயோ சென்று சுற்றிவிட்டு வந்தபோது, வீதியில் அவரை வரவேற்று உபசரிக்க ஆள் இல்லை என்று குறை கூறியிருக்கிறார். சோப்பு, டவல் இவைகளைப் புதிதாக வைத்திருக்கவில்லை என்று குறை கூறியிருக்கிறார். இப்போதிருக்கிற விலைவாசியில் அவைகள் கட்டுப்படியாகாதது என்பதால் இலவசமாக இவைகளை வைக்கவில்லை. இவைகளையெல்லாம் பொருட்படுத்தக் கூடிய குறைகளாக அரசாங்கம் கருதவில்லை.

THIRU G. VASANTHA PAI: I refer to the maintenance of the existing Tourist Bungalows in a state of good repair because the linen, bathrooms, furniture and everything connected with the Tourist Bungalows are in an abslutely bad state of disrepair.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அரசாங்கம் அதைக் கவனிக்கும்.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, I think the Hon. Minister may be aware and, if not, I would like to bring to the notice of the Hon. Minister that in some Tourist Homes the same person is in occupation of the rooms for months together, probably some of them for years together, by simply giving different names of their friends, and that is particularly done by some politicians. Would the Hon. Minister take steps to prevent this kind of abuse ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதுவரையிலும் அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை. இனி அதைப் பற்றி அரசாங்கம் விசாரிக்கும்.

**திரு. ஜீ. சுவாமிநாதன் :** மதுரை போன்ற இடங்களில் உள்ள அரசினர் சுற்றுலா மாளிகையில் இடம் வேண்டுமென்று உறுப்பினர்கள் கடிதம் எழுதினாலே பதில் வருவதில்லை. இதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** மதுரையில் உள்ள அரசினர் சுற்றுலா மாளிகை மூன்று அடுக்கு மாடியைக் கொண்டிருக்கிறது. அதில் ஒரே ஒரு "போன்" தான் இருக்கிறது. ஒவ்வொரு மாடியிலும் ஒவ்வொரு "போன்" வைக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதுபோன்ற செயற்குறிப்பு இப்போது இல்லை என்றாலும், பின்னால் ஆராய்ந்து அவசியப்பட்டால் செய்யலாம்.

*96 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state the income derived annually from the Tourist Bungalows in Tamil Nadu ?

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா மாளிகைகள் (Tourist Bungalows) மூலம் ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கக் கூடிய வருமானம் எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மதுரை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம் ஆகிய இடங்களிலுள்ள மூன்று சுற்றுலா மாளிகைகள் மூலம் 1968–69-ம் ஆண்டில் கிடைத்த வருடாந்திர வருமானம் பின் வருமாறு :

| | |
|---|---|
| மதுரை .. .. .. .. .. | ரூ. 64,027·05 |
| திருச்சிராப்பள்ளி .. .. | ரூ. 39,210·91 |
| உதகமண்டலம் .. .. | ரூ. 1,43,099·25 |

*Fort St. George Gazette.*

*97 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state whether all parts of the Fort St. George Gazette are published both in Tamil and English ?

**தமிழக அரசிதழ்.**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

தமிழக அரசிதழின் எல்லா பகுதியும் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராச்ன் :** தமிழக அரசிதழ் ஆங்கிலத்தில் வெளியிடப்படுகிறது. ஆயினும் தேவையான சந்தர்ப்பங்களில், பொது மக்கள் நலனைப் பற்றிய அறிவிப்புகள், மசோதாக்கள், அவசரச் சட்டங்கள் முதலியன தமிழில் வெளியிடப்படுகின்றன.



**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** இந்தப் பிரசுரத்தை ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும் வெளியிடும் உத்தேசம் அரசிற்கு உண்டா ? அவ்வாறானால், தமிழில் முழுவதும் வெளியிடுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் ஆகும் ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதைப்பற்றி விரைவில் பரிசீலனை செய்து ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த அரசாங்க கெஜட், "ஃபோர்ட் செய்ண்ட் ஜார்ஜ் கெஜட்" என்று ஆங்கிலத்தில் இருப்பதை மாற்றி தமிழாக்கம் செய்து தமிழில் வெளியிட அரசிற்கு உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, அதைப் பற்றி முடிவு செய்து விரைவில் அதைப்போல வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

*Sub-Magistrates and Additional First Class Magistrates.*

*98 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the High Court had recommended increased scales of pay for the Sub-Magistrates and Additional First Class Magistrates;

(*b*) when this recommendation was made ; and

(*c*) if so, the action taken thereon ?

**குற்ற விசாரணைத் துணை நீதிபதிகள்.**

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) குற்ற விசாரணைத் துணை நீதிபதிகளுக்கும், கூடுதல் முதல் வகுப்பு குற்ற விசாரணை நீதிபதிகளுக்கும், உயர்ந்த சம்பள வீதம் கொடுக்கப்பட வேண்டுமென உயர்நீதி மன்றத்தால் பரிந்துரைக்கப் பட்டுள்ளதா ?

(இ) இந்தப் பரிந்துரை எப்போது செய்யப்பட்டது ?

(உ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** (அ) & (இ) & (உ) குற்ற விசாரணைத் துணை நீதிபதிகள் குற்ற விசாரணைக் கோட்டத் துணை நீதிபதிகள் (மாவட்ட முன்சீப்புகள்) ஆகிய பதவிகளை ஒரே தரத்திலுள்ள பதவிகளாக ஒருங்கிணைத்து, அப்பதவியின் சம்பள வீதங்களை உயர்த்துவது குறித்த செயற்குறிப்புகள் அண்மையில் அமைக்கப்பட்ட சம்பள ஆணைக் குழுவிற்கு அனுப்பப்படலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது. இதற்கிணங்க, இச்செயற்குறிப்புகள் சம்பள ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

THIRU D. SANTOSHAM : Is the Hon. Minister aware that even before this Pay Commission was appointed, certain concrete proposals had been received from theHighCourt with regard to raisingof thesalaries of some of these judicial officers? By referring this matter to the Pay Commission what would have been advantageous tothese judicial officers has been lost. They have actually sustained a loss because of the appointment of the Pay Commission. But for the appointment of the Pay Commission and referring of the matter to the Pay Commission, they would have already got a rise in their salaries, if my information is correct. Will the Hon. Minister state whether my assumption is correct and if so, would he try to see that they do not actually suffer a loss on account of the appointment of the Pay Commission ?

[26th February 1970

THE HON. THIRU S. MADHAVAN : The question of revising the scales of pay of Sub-Magistrates and A.F.C.Ms. was considered by the Government for a long time. We referred the matter to the High Court. The High Court replied forwarding some proposals. The Government were considering these proposals. In the meantime, the Pay Commission was constituted. So, we thought it was better to refer this matter also to the Pay Commission.

THIRU D. SANTOSHAM : But for this matter being referred to the Pay Commission, the proposals of the High Court should have had a very good chance of being accepted by this benign Government. Only by the matter being referred to the Pay Commission what would have been advantageous now is being lost. Will this not be taken into consideration by giving them some form of relief to the extent of making good this loss which they have sustained, not through any fault of theirs?

THE HON. THIRU S. MADHAVAN : The High Court has not taken any initiative. We ourselves took the initiative to consult the High Court about the revision of scales of pay. In some States, for example, Andhra Pradesh, they integrated the post of District Munsif with the post of Sub-Magistrate, that is, D.M. cum S.M. That suggestion was also mooted by the Government. In the meantime, the Pay Commission has come into existence. We cannot avoid the Pay Commission.

## UNSTARRED QUESTIONS.

### *National Art Gallery at Madras.*

14. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the amount spent on the maintenance of the National Art Gallery in Madras during 1967–68 ; and

(*b*) the names of the members who recommend the pictures to be bought for the Gallery ?

*A.*—(*a*) Rs. 26,600

(*b*) (1) Thiru M. Ananthanarayanan, Retired Chief Justice, Madras High Court. — Chairman.

(2) Thirumathi Rukmini Devi, Kalakshetra, Madras. — Member.

(3) Principal, College of Arts and Crafts, Madras — Member ex-officio.

(4) Instructor in Painting, College of Arts and Crafts, Madras. — Member ex-officio.

(5) Director of Museums, Madras .. Convener ex-officio.

### தஞ்சை சரஸ்வதி மஹால

15 கே.—திரு. எம். எத்திராஜுலு : மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சை சரஸ்வதி மஹாலில் உள்ள பழைய நூல்களில் இதுவரை எவ்வளவு நூல்கள் பரிசீலனை செய்யப்பட்டு இருக்கிறது ?

(இ) இதைப் பரிசீலனை செய்தவர்கள் யார் ?

(உ) எத்தனை நூல்கள் இன்னும் பரிசீலிக்கவேண்டியவைகள் ?



26th February 1970]

ப.—(அ) இதுவரை 20,500 சுவடிகள் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

(இ) தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தின் பணியாற்றும் பண்டிதர் சம்பந்தப்பட்ட மொழிகளில் தேர்ச்சிபெற்ற சில வெளியோரும் அவ்வேலையைச் செய்தனர்.

(உ) ஏறத்தாழ 12,000 சுவடிகள் இன்னும் பரிசீலிக்கப்படவிருக்கின்றன.

### *Rural Manpower Programmes*

16. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) the work turned out by the Rural Manpower Programme in the Block Development areas in Tamil Nadu during 1967–68 and 1968–69;

(*b*) the amount spent during the same period ; and

(*c*) the value of the assets created by the Programme during the same period ?

*A.*—(*a*), (*b*) and (*c*) : A (a) statement is placed on the table of the House.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III. ANNOUNCEMENT *re* DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN : I have to announce to the House that at a meeting of the Business Advisory Committee held at 3–15 p.m. to-day the following programme of business has been decided :—

| | |
|---|---|
| 26th February 1970 .. .. | Presentation of the Budget for 1970–71. |
| 27th February 1970 .. .. | No meeting. |
| 28th February 1970 .. .. | General discussion on the Budget. |
| 1st March 1970 .. .. .. | Holiday. |
| 2nd to 7th March 1970 .. .. | General discussion on the Budget. |
| 8th March 1970 .. .. .. | Holiday. |
| 9th March 1970 .. .. .. | Reply to the debate on the Budget. Consideration of Appropriation (Vote on Account) Bill, 1970, and other Official Bills. |
| 10th March 1970 .. .. .. | Official Business, if any. |

The Council will meet from 4 p.m. to 7 p.m. daily and the further programme will be announced later.

* Printed as Appendix III on page 30

## IV. PRESENTATION OF THE BUDGET FOR 1970–71.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மேலவைத் தலைவர் அவர்களே, 1970–71-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தை மேலவை முன் வைக்க நான் உங்கள் முன் எழுந்துள்ளேன். வரவு-செலவுத் திட்டத்தில் விளக்கப்பட்டுள்ள கொள்கைகளையும் திட்டங்களையும் ஓரளவுக்கு விரிவாக எடுத்துரைத்து இன்று காலையில் நான் ஆற்றிய எனது உரையின்* படியொன்று மாண்புமிகு மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, கூறியது கூறாமல் வரவு-செலவுத் திட்டத்தின் சில முக்கிய கூறுகளைப் பற்றி மட்டும் இம் மன்றத்தினரின் நாட்டத்தை ஈர்ப்பதோடு அமைகிறேன்.

2. கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை நான் உங்கள் முன் வைத்தபோது மொத்தத்தில் 19.52 கோடி ரூபாய் துண்டு விழுமென நாம் எதிர்பார்த்தோம். நிதி ஆணைக் குழுவினால் சரிக்கட்டப்படுமென எதிர்பார்த்த இத்துண்டின் பெரும் பகுதி வருவாய்க் கணக்கின் பாற்பட்டதாகும். ஆனால், வருவாய் இனத்தில் விழும் 16.64 கோடி ரூபாய் துண்டுடன் இந்த ஆண்டுக் கணக்குகள் முடிவடையும் என்று இப்போது நமக்குத் தெரிகிறது. நிதி ஆணைக் குழு நமக்குப் பாதகமாக அளித்துள்ள தீர்ப்பையும், வறட்சியின் விளைவுகளையும் இந்த ஆண்டிற்கான திட்ட முதலீட்டில் ஏற்படடுள்ள தவிர்க்க முடியாத உயர்வுகளையும் கருத்திற்கொண்டு இத்துண்டினை நாம் காண வேண்டும். நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பின் விளைவாக இம் மாநில நிதிவாயில்கள் மீது ஏற்பட்டுள்ள விளைவுகளைப் பற்றி நான் இதற்கு முன் விரிவான அறிக்கை ஒன்றை இம் மன்றத்தின் முன் வைத்தேன். நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பின் பலனாக நமக்குக் கிட்டும் உதவியின் அளவு பெருகுமென்று நாம் எதிர்பார்த்ததற்கு மாறாக, பகிர்ந்துக்கொள்ளக்கூடிய தொகுப்பிலிருந்து இம் மாநில அரசுக்குக் கிட்டும் உதவித் தொகையின் அளவு 7.2 சதவீதத்திலிருந்து 6.9 சதவீதத்திற்கு குறைந்திருப்பது நமக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. வருமான வரியில், நம் பங்கு 8.34 சதவீதத்திலிருந்து 8.18 சதவீதத்திற்கும் ஆயத் தீர்வைகளில் நமது பங்கு 7.18 சதவீதத்திலிருந்து 6.5 சதவீதத்திற்கும் கூடுதல் ஆயத்தீர்வைகளில் 11 சதவீதத்திலிருந்து 9.6 சதவீதத்திற்கும் குறைந்துள்ளது. 1969–74 ஆம் ஆண்டுக்குரிய நமது மொத்தப் பற்றுக்குறை மானியமும் 34 கோடி ரூபாயிலிருந்து 23 கோடி ரூபாய்க்குக் குறைக்கப்பட்டுள்ளது. நாம் அமைக்கவிருக்கும் சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளால் ஏற்படும் பொறுப்புக்களைக் கணக்கில் கொள்ள வேண்டும் என்ற நமது நேரிய வேண்டுகோளையும் நிதி ஆணைக்குழு புறக்கணித்துள்ளது. இவ்வாறு நிதி ஆணைக்குழுவின் தீர்ப்பின் வாயிலாக நமக்குப் பல வகைகளிலும் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, கடந்த ஆண்டில் நாம் எதிர்பார்த்த 16.71 கோடி ரூபாய் வருவாய் இனத்தில் ஏற்பட்ட துண்டு சரிக்கட்டுவதற்குப் பதிலாக, தொடர்ந்து நீடித்திருப்பதில் வியப்பு எதுவுமில்லை.

3. எதிர்பார்த்த திட்ட முதலீடு 87 கோடி ரூபாயிலிருந்து 93 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளதே வருவாய் இனத்தில் இத் துண்டு விழுவதற்கு ஓரளவு காரணமாகும். திட்ட முதலீடு இவ்வாறு உயர்ந்தது தவிர்க்க முடியாததாகும். இதில் பெரும் பகுதி மின்சாரம், பாசனம், பின் தங்கிய வகுப்பினர் நலன் போன்ற தலைப்புகளின் பாற்பட்டது. மேலும் மத்திய அரசு, திட்டச் செலவிற்கான தனது உதவியை 36 கோடி ரூபாயிலிருந்து 40 கோடி ரூபாய்க்கு உயர்த்துமென்றும் நாம் எண்ணியிருந்தோம். ஆனால், இதுவும் நாம் எண்ணியாங்கு நடக்கவில்லை.

4. நிதி ஆணைக்குழுவின் தீர்ப்பின் விளைவாக இம் மாநிலத்திற்கு ஏற்பட்டுள்ள நிதிவகையிலான இடர்ப்பாடுகள் இம் மாநிலம் செலுத்த வேண்டிய கடன்கள் குறித்து இந்திய அரசு கொண்டுள்ள மனப்பான்மையினால் மேலும் மோசமடைந்துள்ளன. நமது கடன் தவணைத் தொகைகளை

* Printed as Appendix IV on pages 31–76



மாற்றியமைக்கும்படி நாம் அவ்வப்போது இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம் என்பதை இம் மன்றத்தினர் அறிவர். நான்காம் திட்டக் கால அளவில் மத்திய அரசு, இம்மாநிலத்துக்கு 140 கோடி ரூபாய் அளவுக்குக் கடன்கள் வழங்க முன்வந்துள்ளது என்பதையும், அதே கால அளவில் நாம் மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் 160 கோடி ரூபாய் அளவில் இருக்குமென்பதையும் இத் தருணத்தில் குறிப்பிடுவது மிகவும் சுவையாக இருக்கும். மத்திய அரசு; மாநிலங்களுக்கு எந்த அளவுக்குக் கடுமையான நிபந்தனைகளுடன் கடன்கள் வழங்குகிறது என்பதை இந்த ஏறுமாறான நிலைமை எதிரொலிக்கின்றது. உலக நிறுவனங்கள் மத்திய அரசுக்கு எளிய நிபந்தனைகளில் பெரும்பாலும் கடனுதவி அளிக்கிறது என்பதையும் அதே கடனுதவியை மத்திய அரசு, மாநிலங்களுக்கு எந்த நிபந்தனைகளின் கீழ்க் கடன்களாக அளிக்கிறதோ அவை மிகக் கடுமையாக அமைகின்றன என்பதையும் நாம் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம். இவை தவிர, மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் கடன்கள் நீண்ட காலங்கழித்துப் பலனளிக்கும் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் மத்திய அரசு, இக்கடன்களும் 10 ஆண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்படவேண்டுமென்று எதிர்பார்க்கிறது. மத்திய அரசிற்குச் சேரவேண்டிய மாநில அரசுக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவது குறித்து நடைமுறையில் ஏற்படும் சில முக்கியமான சிக்கல்கள் இவை. மத்திய அரசு, இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்குத் தாற்காலிகமான சில முடிவுகளை எடுத்து வந்துள்ளது. மத்திய அரசினால் எந்த நிபந்தனைகளின் மீது மாநிலங்களுக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன, மாநிலங்கள் மீது எந்த அளவுக்குப் பெருஞ்சுமை விழுகின்றது என்பன போன்றவற்றை முழுமையாக ஆய்வு செய்வதற்காகக் கூட்டுக் கடன் ஆணைக் குழு ( Federal Debt Commission ) ஒன்றை அமைப்பது நடைமுறைக்கு ஏற்றதாகவும், பயன் தரும் நடவடிக்கையாகவும் இருக்குமென்று நாம் கருதுகிறோம். இவ்வாறு கடன் தவணைகளை மறு ஆய்வு செய்து தவணை முறைகளை மாற்றியமைப்பதால் நமக்கு மேலும் நிதி வாயில்கள் கிட்டுவதற்கு வாய்ப்பு அளிப்பதுடன், மத்திய, மாநில அரசுகளின் நிதி உறவுகளை மேலும் நியாயமான, சீரான அடிப்படையில் நிறுவுவதற்கும் வாய்ப்பு ஏற்படுமென்று நான் கருதுகின்றேன்.

5. இம் மாநிலத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பெற்ற நான்காம் திட்ட முதலீடு 624 கோடி ரூபாயாக இருக்க வேண்டுமென்கிற நமது வேண்டுகோளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். திட்ட ஆணைக் குழு 502 கோடி ரூபாய் திட்ட முதலீட்டிற்காக மட்டுமே பரிந்துரை வழங்கியுள்ளது. நமது மாநில வளர்ச்சி அமைப்புகளை மேலும் செப்பமுற நிர்மாணிப்பதற்குக் குறைந்த அளவிலான திட்ட முதலீடு நமக்கு உதவியளிக்காது என நாம் கருதுகின்றோம். பற்பல துறைகளின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, இம் மாநிலத்திற்கு 575 கோடி ரூபாய் அளவிற்காவது திட்ட முதலீட்டை ஏற்கவேண்டுமென மத்திய அரசுக்கும் திட்ட ஆணைக் குழுவுக்கும் நாம் கருத்துத் தெரிவித்து வந்துள்ளோம். 575 கோடி ரூபாய் அளவிலான இத் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதலை நாம் இதுவரை பெற இயலவில்லை. மத்திய அரசு 70 கோடி ரூபாய் முதல் 80 கோடி ரூபாய் வரையிலான ஆண்டுத் திட்ட முதலீடுகள் என்கிற அடிப்படையிலேயே செயல்பட முற்பட்டுள்ளது. ஆனால் 1968–69-ஆம் ஆண்டில் கூட இம் மாநிலத்தின் முதலீடு 93 கோடி ரூபாயாக அமைந்திருந்தது. மற்றும், இதற்கிடையில் இம் மாநில மக்களின் அவாவினையும் தேவைகளையும் கட்டுப்படுத்தி நிறுத்தும் நிலையில் நாம் இல்லை. இந்த ஆண்டில்கூட, 93 கோடி ரூபாய் அளவிலான ஒரு திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். ஆகவே, அடுத்த ஆண்டுத் திட்ட முதலீடு இந்த ஆண்டின் முதலீட்டைக் காட்டிலும் 10 முதல் 15 சதவீத அளவுக்காவது உயர்ந்திருப்பதுதான் நியாயமாகும். எனவே தான், 1970–71-ஆம் ஆண்டுக்காக 106 கோடி ரூபாய் திட்டத்திற்கு நாம் இவ் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்துள்ளோம். நம்முடைய கருத்தில் இதுவும் போதுமானதல்ல என்றுதான் தோன்றுகிறது. குறைந்த அளவிலான இத் திட்டம் மத்திய உதவியைக் கொண்டும்

[திரு. கே. எ. மதியழகன்] [26th February 1970

நமது சொந்த நிதிவாயில்களைக் கொண்டும் செயல்படுத்தப்படுவதற்கு வாய்ப்புள்ளதாக அமைய வேண்டுமென நாம் எண்ணுகின்றோம். இது வரை குறைந்த அளவிலேயே வழங்கிவந்துள்ள மத்திய உதவியின் அளவை உயர்த்த வேண்டும் என்கிற இம் மாநில அரசின் நியாயமான வேண்டுகோளை மத்திய அரசு ஏற்குமென்கிற நம்பிக்கையில் 45 கோடி ரூபாய் மத்திய உதவி பெறுவதற்கு இவ் வரவு-செலவுத் திட்டத்தில் நாம் வகை செய்துள்ளோம். 23 கோடி ரூபாய் அளவுக்குப் பொதுக் கடன் ஒன்றைத் திரட்டப்போவதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளோம். நிதி ஆணைக் குழு ன் பாதகமான முடிவினால் 1970-71-ல் நமக்கு 8.94 கோடி ரூபாய் வருவாய் இனத்தில் துண்டு விழும். இன்று
4-40 p.m. நம் பணியாளர்களுக்கு அறிவித்த சலுகைகளின் காரணமாக இத் துண்டு மேலும் அதிகரிக்கும். இத் துண்டினை ஓரளவுக்குக் கூடுதல் வரி விதிப்புகளின் வாயிலாகச் சரிக்கட்டக் கருதியுள்ளோம். இவ் வரி விதிப்புகளுக்கான செயற்குறிப்புகள் ஏற்கனவே இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன.

6. 1970-71-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் சில சிறப்புக் கூறுகளை இப்போது உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். இவ் வரவு-செலவுத் திட்டம் பல துறைகளில் முக்கிய முன்னேற்ற அடிச்சுவடுகளைக் குறிக்கின்றது. வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கும், மலைத் தோட்ட வளர்ச்சிக் கழகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கும் இசைவு வேண்டப்பட்டுள்ளதன் மூலம், வேளாண்மைத் துறையில் நாம் மேற்கொள்ளவிருக்கும் புதிய திட்டங்களை இது சுட்டுகிறது. கால்நடை வளர்ப்பையும் பாற்பண்ணைத் திட்டங்களையும் மேம்பாடு செய்வதற்கு இந்த அரசு காட்டும் அக்கறை கால்நடை வளர்ப்புத் துறையைப் புதிய முறையில் சீரமைத்துள்ளதன் மூலமும், சென்னை மாநகரில் பால் வழங்கலைப் பெருக்க இந்திய அரசு தொடங்கியிருக்கும் பால் வளமுனைப்புத் திட்டத்தில் (Operation Flood) பங்கு கொள்வதற்கான புதிய திட்டத்தின் வாயிலாகவும் எதிரொலிக்கின்றது. இம் மாநிலத்திலுள்ள தொழில் முனைவர்களுக்குப் புதியதோர் ஆக்கம் அளிப்பதற்கான திட்டங்களில் அரசு காட்டி வந்துள்ள உற்சாகத்தைப் பற்றியும் இந்த மன்றத்தினரின் நாட்டத்தை ஈர்க்க விரும்புகிறேன். கூட்டுத் துறை (Joint Sector) என்கிற கோட்பாட்டினை வரவேற்றும் இடர்பாடுகளில் உழன்று வந்த சிறு தொழில் நிறுவனங்களுக்கு உதவியளித்தும் இடர் நிறைந்த ஆண்டுகளில் தொழிலுக்கு உறுதுணையாக நின்றுள்ளோம்.

7. இம்மாநிலம் முழுவதற்கும், மையமாகச் செயல்படும் சென்னை மாநகரததின் பிரச்சனைகளை பற்றி இவ் வரவு-செலவுத் திட்டம் நமது நாட்டத்தை ஈர்க்கிறது. இதன் சிக்கல்களைத் தீர்க்கத் தவறினால், பாமர மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மேலும் தேய்வடைந்து மோசமாகிவிடும் என்று அரசு நம்புகிறது. இவற்றைப் பகுத்து ஆராய்ந்து துணிவுடன் அவற்றை எதிர் நோக்க வேண்டும் என்பதை அரசு உணர்கிறது. மாநகரில் நகர்ப்புற வசதிகளை மேம்பாடு செய்து, மாநகருக்கு அருகில் துணை நகரங்களைத் தோற்றுவிப்பதன் வாயிலாக, பெருநகர்ப்பகுதி முழுமையிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு 80 கோடி ரூபாய் முதல் 100 கோடி ரூபாய் வரையில் பெருமளவில் முதலீடு செய்யவேண்டியிருக்கும் என்பதையும் நாம்உணர்கிறோம். நமது நாட்டிலுள்ள கடன் வழங்கும் நிறுவனங்களையும் உலகக் கடன் வழங்கு நிறுவனங்களையும் அணுகுவதற்கு ஓர் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இச் சூழலில்தான் ஏழாண்டு கால அளவுக்குள் குடிசைகளை அகற்றும் படிப்படியான நமது திட்டத்தை இம் மன்றம் கண்ணுற வேண்டும். வருமாண்டுகளில் அதிகப்படுத்தப்படும் என்ற நம்பிக்கையுடன் தற்போதைய ஆண்டிற்குரிய உயர்த்தப்பட்டுள்ள முதலீடான ரூபாய் ஒரு கோடி, நமது மாநகரின் வாழ்வுச் சூழலை வாட்டிடும் குடிசைகள் பற்றிய பிணியைப் போக்கும் பெரு முயற்சியாக விளங்கும்.

8. புதிய சமூக-பொருளாதார அமைப்பொன்றின் வளர்ச்சி வரலாற்றில் இவ்வரவு செலவுத் திட்டம் ஒரு எல்லைக்கல்லாக அமைந்துள்ளது. நில உச்சவரம்பினை 30 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 15 ஸ்டாண்டர்டு



26th February 1970] [திரு. கே. எ. மதியழகன்]

ஏக்கர் அளவுக்குக் குறைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். நமது வேளாண்மைப் பொருளாதாரத்தில் மிக நீண்ட காலமாகத் தேவையாயிருந்த அமைப்பு மாற்றத்தை இது உருவாக்கும் என்று நம்புகிறேன்.

9. சமூகத்தில் மிகவும் குறைந்த வசதிகள் உள்ள பிரிவினருக்கு வரவு-செலவுத் திட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள கணிசமான சலுகைகளைப் பற்றி நான் இம்மன்றத்தின் நாட்டத்தை ஈர்க்க விரும்புகிறேன். இவற்றுள், அரிசனங்கள்-பின்தங்கிய வகுப்பினர்களின் நலன் குறித்து உயர்த்தப்பட்டுள்ள நிதி ஒதுக்கமும், ஓய்வுபெற்ற அரசுப் பணியாளர்களுக்கு உரிய குறைந்த அளவு ஓய்வூதியத்தை உயர்த்தியிருப்பதும் பெருமைப்படுவதற்குரிய நிகழ்ச்சிகளாகும். நமது நிதி வாயில்கள் மிகக் குறைந்த அளவிலிருப்பினும், அரசுப் பணியாளர்கள், அரசுதவி பெறும் பள்ளி (Aided Schools) ஆசிரியர்கள், உள்ளூராட்சிப் பணியாளர்கள் ஆகியோருக்கு கணிசமான அளவில் சலுகைகள் வழங்கியுள்ளோம்.

10. நமது நிதி வாயில்களை அதிகரிப்பதற்கு நாம் இசைந்தாலொழிய வளர்ச்சிப் பணிகளில் நாம் அதிகமாகச் செலவிடும் அதே நேரத்தில், அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சிப் பணியாளர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் சலுகைகளினால் ஏற்படும் அதிகச் செலவையும் ஈடுகட்ட இயலாது. இங்கே நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளவாறு இரு தலைக்கொள்ளி எறும்புபோல் தவிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. நாம் வரி விதித்தால், அவ்வரி விதிப்பினால் கிட்டும் வருமானங்களைக் கணக்கிற்கொண்டு நிதி ஆணைக் குழு நம்மைத் தண்டனைக்குள்ளாக்குகிறது. இடை நடுவே நாம் வரி விதிக்காமலிருந்தால் நம்முடைய வளர்ச்சிப் பணிகள் தேக்கமடைந்து நலிந்து போகும். இதனுடைய சார்பு எதிர்ப்புக்களைச் சாலச் சீர் தூக்கிப் பார்த்து, அரசு மேலும் உயர்ந்த அளவு வளர்ச்சிப் பணிக்கு வேண்டிய நிதி வாயில்களை அதிகரிக்க முடிவு செய்துள்ளது. வரி கொடுக்க இயலும் வகுப்பினர் மீது 6 கோடி ரூபாய் அளவிற்கு வரி விதிப்புகள் செய்யப்பட்டுள்ளன.

11. ஒரு முனை வரிக்குட்பட்ட பொருள்களின் மீதான விற்பனை வரி வீதத்தை மாற்றியமைத்துள்ளோம். ஆடம்பரப் பொருள்களின் மீதான விற்பனை வரியையும் உயர்த்த முடிவு செய்துள்ளோம். இம் மாற்றங்களின் வாயிலாக ரு. 2·3 கோடியளவிற்குக் கூடுதல் வருமானம் கிட்டுமென்று எதிர்பார்க்கிறோம். ரு. 5 லட்சத்திற்கும் அதிகமாக வாணிபம் செய்யும் வணிகர்களின் மீதான விற்பனை வரி மீது கூடுதல் வரி விதிப்பொன்றையும் செயலுக்குக் கொண்டுவர நாம் கருதியுள்ளோம். மோட்டார் வண்டி வரிச் சட்டத்தின்கீழ் பயணிகள் வண்டிகள் (Stage Carriages) மீதான மோட்டார் வண்டி வரி வீத மாற்றங்களும், பெட்ரோல், விமான எரிபொருள் எண்ணெய், டீசல் தவிர்த்த பிற மோட்டார் எண்ணெய்கள் ஆகியவற்றின் மீதான வரி வீதங்களில் உயர்வும் நாம் கருத்திற்கொண்டுள்ள பிற நடவடிக்கைகளாகும். திரைப்பட மாளிகைகளின் மீது காட்சி வரி (Show Tax) உயர்வைக் கொணரவும் கருத்துடையோம். மாநில வரிகளின் வாயிலாக வரி விதிப்புகளைச் செய்வதன் மூலம் கூடுதல் நிதி திரட்ட நாம் ஆயத்தமாக இருப்பதை எடுத்துக் காட்டியுள்ளோம். எனவே திட்டங்களுக்காக மத்திய அரசு அதிக உதவியளிக்க வேண்டுமென்ற வேண்டுகோள் விருப்புடனும், பரிவுடனும் ஏற்கப்படும் என்று மாநில அரசு நம்புகிறது.

ஐயா, இவை சொல்லி 1970-71-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை மன்றம் ஏற்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவர் அவர்களே, இங்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மாநில வரவு செலவுத் திட்டத்தில் புதிதாகப் போடப்பட்டிருக்கும் வரி இனங்களில் ஒன்று "டர்ன் ஓவர் டாக்ஸ்", அதாவது வியாபாரிகள் ஐந்து லட்சத்திற்கு மேல் விற்பனை செய்தால வரி, இதைச் சேர்த்து கன்ஸ்யூமரிடம் வாங்காதவர்களிடம் வாங்கலாமா, அவர்களுடைய சொந்த நிதியிலிருந்து, லாபத்திலிருந்து வசூலிப்பதாகப் போடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி டர்ன் ஓவருக்கு அவர்களுக்குக் கிடைக்கும் லாபத்திலிருந்து

[திரு. கே. ராஜாராம்] [26th February 1970

வரி வசூலிப்பதற்கு முன்னால், மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்ட அயிட்டங் களில் எங்கும் இடம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த சந்தேகத்தை வரவு செலவு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால் விளக்கிக் கொண்டால், நல்லது. அட்வகேட்-ஜெனரலைத் தருவித்து, இந்த சந்தே கத்தைத் தீர்த்துக்கொள்வது நலம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, இங்கு புதிய வரியாக இருந்தாலும் போடலாமா என்று சட்டத் துறை ஆராய்ந் தது. கேரள மாநிலத்திலே இது போன்ற ஒரு வரி போடப்பட்டு நீண்ட நாட்களாக இருக்கிற காரணத்தினால், நமக்குப் போடுவதற்கு அதிகாரம் உண்டு என்ற முடிவை அரசாங்கம் எடுத்தது. விற்பனை வரியைப் பொறுத்த அளவிற்குப் பொதுவாக அதிகாரம் மாநிலங்களுக்குக் கொடுக் கப்பட்டிருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். அந்த அடிப்படை யில் உருவாக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் எல்லைக்குள்ளாக வராது என்று சட்டநிபுணர்கள் கருத்தினைப் பெற்றதற்குப் பின்னால், இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது. இதிலே எந்த விதமான தவறும் இல்லை என்று கருதுகிறேன். கேரள மாநிலத்திலே 1963-ம் ஆண்டு கொண்டுவந்த சட்டத்தில் கீழ்க்கண்டவாறு இருக்கிறது :

" *Levy of surcharge on sales and purchase taxes.*—The tax payable under the Kerala General Sales Tax Act, 1963, shall, in the case of a dealer whose turnover exceeds thirty thousand rupees in a year, be increased by a surcharge at the rate of five per centum of the tax payable for that year and the provisions of the Kerala General Sales Tax Act, 1963 shall, as the case may be, apply in relation to the said surcharge as they apply in relation to the tax payable under the said Act."

இது போன்ற ஒரு கருத்தினை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினால், நம்முடைய மாநிலமும் ஏற்றுக்கொள்வதில் தவறு இல்லை என்று முடிவு செய்தோம். இதற்கு அட்வகேட்-ஜெனரல் வர வேண்டாம் என்று கருதுகிறேன். நம்முடைய எதிர்க் கட்சித் தலைவருக்கு வேறு ஏதாவது குறிப்பு இருக்குமானால், நாம் இதைப் " பாஸ் " செய்வதற்கு முன்னாலே, மறுபடியும் பரிசீலிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, இந்த விஷயம் நன்றாக சிந்தித்துப் பார்த்துச் செய்யப்பட வேண்டிய விஷயம். " ரிட்ராஸ் பெக்டிவ் எபெக்ட் " எல்லாம் கொடுத்து வருகிறபோது ஐந்து வருஷத்திற்கு நாலு வருஷத்திற்கு ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்தால், ஐந்து லட்சத்திற்கு மேலே " டர்ன் ஓவர் " இருக்கிறது என்று சொல்லுகிறவர்கள் பெரிய கம்பெனிகள் பல கோடிகளுக்கு வியாபாரம் செய்து, தங்களுடைய வியாபார லாபத்தைப் பங்கு தாரர்களுககுப் பிரித்துக் கொடுத்த பிறகு ஏற்கனவே நடத்திய வாணிபத்திற்கு 7 சத விதம் கூடப் போடு என்று சொன்னால், அந்தக் கம்பெனிகள் 1969-70 அஸெஸ்மெண்டுக்கு கட்ட வேண்டுமென்று சொன்னால்............

**மிஸ்டர் சேர்மேன் :** சட்டம் தயவு பண்ணவில்லை.

**திரு. சா. கணேசன் :** அப்படியானால், இதை அட்வகேட்-ஜெனர
4-50 p.m. லோடு கலந்து தெரிந்து இதனாலே பாதகம் இல்லையா என்று முடிவு செய்துகொள்வது நல , இன்னொன்று கேரளாவிலே இதற்கு எதிர்ப்பு இருந்ததா என்பதுபற்றி நமக்கு கேள்வி இல்லை அங்கு யாரும் " ரிட் " பெடிஷனோடு கோர்ட்டுக்குச் செல்லாமல் இருந்ததினாலே அங்கு நடைபெற்று இருக்கலாம். இங்கே ஒருவர் " ரிட் " எடுத்துக் கொண்டு ஹைகோர்ட்டுக்குப் போனால் இந்தச் சட்டம் நிற்குமா, இவற்றை யெல்லாம் சிந்திக்க வேண்டும். ஆகவே, அட்வகேட்-ஜெனரல் நியாயப் படியும், சட்டப்படியும், இங்கு வந்து சபைக்கும் அரசுக்கும் ஆலோசனை சொல்லத் தக்கவர். அவரை அழைத்து ஆலோசனை பெறுவதில் குறைவு இல்லை. இதைச் செய்ய அரசு முன்வருவது பயனுடையதாக இருக்கும் என்று மட்டும் புலப்படுத்திக்கொள்ள முன்வருகிறேன்.



26th February 1970]

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்டைப் பொறுத்த அளவிற்கு, சட்டமன்றங்கள் சட்டங்கள் போடும்போது, விற்பனை வரி போடுகிற சட்டத்தில், ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கலாம் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. " ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்" கொடுக்கவே முடியாது என்பது வாதம் அல்ல. இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிற்கு இது சாதாரண விற்பனை வரி, மக்களிடமிருந்து பெற்றுக் கொடுப்பது அல்ல. மக்களிடமிருந்து வாங்கவில்லையே என்பது பிரச்னையாக இல்லாமல், அவர்களுடைய மொத்த விற்பனை ஐந்து லட்சத் திற்கு மீறுமானால், அதிலே ஒரு வரி போடலாம் என்று செய்திருக்கிறோம். கேரளச் சட்டம் செல்லுமா, செல்லாதா என்பதற்கு உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா என்று சுதந்திரா கட்சித் தலைவர் கேட்டார் கள். இதைப் பற்றிச் சொல்ல விரும்பவில்லை. அவர் சொன்ன கருத்துப் படியும், எதிர்க் கட்சித் தலைவர் சொன்னபடியும், சட்டம் உருவாகும் போது, முன்னெச்சரிக்கையோடு தகுந்த சட்ட நிபுணர்களைக் கலந்ததற்குப் பின்னாலே கொண்டு வருவோம் என்ற உறுதியை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அட்வகேட்-ஜெனரல் வர வேண்டாம். கேட்கச் சொல்லியிருக்கிறோம். சட்டம் உருவாகும்போது, எந்த செக்ஷனை எப் படிப் போடுவது என்பதை நிச்சயம் அட்வகேட்-ஜெனரலைக் கலந்து கொண்டு செய்வோம் என்று அவருக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

MR. CHAIRMAN : I think we have gone rather too far into details of the case. Rule 151 (2) of the Council Rules says : ' There shall be no discussion on the Budget in the Council on the day on which it is presented to it '.

Now, what the hon. the Leader of the Opposition wanted was a clarification of the position by the Advocate-General. What was stated by the Hon. Minister was :

" வணிகர்களின் மீதான விற்பனை வரி மீது கூடுதல் வரி விதிப் பொன்றையும் செயலுக்குக் கொண்டுவர நாம் கருதியுள்ளோம். இந்தக் கட்டத்தில் தான் இருக்கிறது ".

When the House is actually seized of the matter, I think it is open to it, if it so desires, to have the Advocate-General for clarification. There has been a precedent when the Advocate-General was called in. But the issue does not arise now.

The House will now adjourn and meet again at 4 p.m. on the 28th instant.

The House then adjourned.

## V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. STATUTORY RULES AND ORDERS.

* 136. Notification issued with G.O. Ms. No. 586, Social Welfare, dated the 23rd August 1969 in regard to an amendment to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957 published at pages 79 to 104 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 30th January 1957. [*Laid on the Table of the House under section* 10 (3) *of the Tamil Nadu Cinemas (Regulation) Act*, 1955 (*Tamil Nadu Act IX of* 1955).]

***137. Notification issued with Memorandum No: 23998-T1/69-10, Revenue, dated the 30th August 1969 in regard to certain amendments to the Revenue Department Notification II-1 No. 863 of 1965 at pages 353-354 of Part II-Section 1 of the *Fort St. George Gazette, dated* the 24th**

February 1965. [*Laid on the Table of the House under section* 48 (5) *of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act*, 1963 (*Tamil Nadu Act* 30 *of* 1963).]

*138. Notification issued with G.O. Ms. No. 2017, Revenue, dated the 20th September 1969 in regard to appointment of Thiru T. Lakshmanaperumal, Presiding Officer, Labour Court, Coimbatore to be the Chairman of the Sales Tax Appellate Tribunal, Madras. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959).]

*139. Notification issued with G.O. Ms. No. 1804, Home, dated the 17th July 1969 in regard to certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary dated the 30th March 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act, IV of* 1939).]

*140. Notification issued with R. Dis. No. 213609/68-F1, dated the 8th April 1969 in regard to exclusion of Ponnampoondi revenue village in Tindivanam taluk of South Arcot district from Korakeni village Panchayat. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

*141. Notification issued with R. Dis. No. 142657/68, dated the 13th June 1969 in regard to alteration of the name of 'Sullerumbu' Panchayat in the Dindigul Taluk of Madurai District as 'Murunellikottai'. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act* 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

*142. Notification issued with G.O. Ms. No. 773, Education, dated the 21st May 1968 in regard to approval of list of Parks in the area within the jurisdiction of the Tambaram Municipality. (*Laid on the Table of the House under section* 14 (3) *of the Tamil Nadu Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act* 1959 (*Tamil Nadu Act* 26 *of* 1959).]

143. Notification issued with G.O. Ms. No. 2256, Home, dated the 8th September 1969 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940 published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary dated the 30th March 1940. [*Laid on the Table of the House under section* 133 (3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).]

144. Notification issued with G.O. Ms. No. 2410, Revenue, dated the 21st October 1969 in regard to empowering of officers of Local Authorities under section 12-A of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939). [*Laid on the Table of the House under section* 16 (4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939).]

145. Notification issued with G.O. Rt. No. 1463, Revenue, dated the 19th November 1969 in regard to exemption from liability to entertainments tax, the benefit film shows conducted in the City of Madras and in the districts in connection with the Flag Day Celebrations during the period up to the 30th June 1970. [*Laid on the Table of the House under section* 16 (4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939).]



146. Notification issued with G.O. Ms. No. 1373, Local Administration, dated the 2nd August 1969 in regard to an amendment relating to appointment of members of Kodaikanal Township Committee, published at page 2 of Part II—Section 2 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th September 1966. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

147. Notification issued with G.O. R. No. 2676, Revenue, dated the 13th November 1969 in regard to exemption from liability to entertainments tax of all the Cinema shows of 8 m.m. and 10 m.m. dimension upto 8th September 1971. [*Laid on the Table of the House under section* 16(4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939).]

148. Notification issued with G.O. Ms. No. 2065, Home, dated the 19th August 1969 exempting on and from the 13th June 1969 from payment of the tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931, the Jeep MDB 9840 belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to the Medical Officer, Primary Health Centre, Sundakkamuthur, Coimbatore district. [*Laid on the Table of the House under section* 11 (3) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1931 (*Tamil Nadu Act III of* 1931).]

149. Notification issued with Rc. No. 20364/69-E3, dated the 19th May 1969 declaring that the provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920, specified in the schedule and the rules framed thereunder shall be extended to and be in force in the entire area of Kambainallur Town Panchayat. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).

150. Notification issued with G.O. Ms. No. 2356, Home, dated the 22nd September 1969 exempting from payment of the tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931, of the Willys Jeep bearing registration number MSR 9139 belonging to the Victoria Hospital, Manapad, Tirunelveli district, on and from the 1st October 1969, subject to the condition that the said vehicle is solely used for charitable purposes. [*Laid on the Table of the House under section* 11 (3) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1931 (*Tamil Nadu Act III of* 1931).]

151. Notification issued with G.O. Ms. No. 1106, Home, dated the 9th May 1969 notifying that, with effect on and from the date of publication of this notification in the *Fort St. George Gazette*, the provisions of the said Act except sub-section (2) of section 3, shall apply to the Ganapathi Panchayat area in the Coimbatore district. [*Laid on the Table of the House under section* 34 (4) *of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act*, 1960 (*Tamil Nadu Act* 18 *of* 1960).]

*B. Reports, Notifications and other Papers.*

***34. Report of the Committee on Estimates on the problems of destitutes and vagrants.**

[26th February 1970

35. Notification issued with G.O. Ms. No. 2849, Agriculture, dated the 18th September 1969 in regard to an amendment to the Nilgiris Fishing Rules 1966 published with Agriculture Department Notification S.R.O. No. A. 420 of 1966 at pages 391 to 402 of Part V of the *Fort St. George Gazette*, dated the 11th May 1966.

36. Notification issued with G.O. P. No. 2613, Revenue, dated the 5th November 1969 in regard to exemption from liability to tax under the Central Sales Tax Act, 1956 (Central Act 74 of 1956) on the Sales made to the United Nations Offices and specialised Agencies in India for their official use.

37. Notification issued with G.O. Ms.No. 2226, Local Administration dated the 13th November 1969 in regard to errata to the Notification made under the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), published at page 289 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 23rd June 1965 in respect of certain local areas included within the limits of the Kodaikanal Township.

38. Notification issued with G.O. Ms. No. 2299, Revenue, dated the 2nd December 1968 exempting from the payment of Stamp duty on the draft deed—Key village Centre Chenimalai Building donated by Key Village Livestock Improvement Association to the Animal Husbandry Department at Coimbatore District.

a39. Return of assets submitted to the House by the Hon. Speaker, Hon. Chief Minister, 9 ministers and 134 members of the Legislative Assembly.

40. Answers to Unstarred Questions Nos. 14 to 16.

41. Speech made by the Hon. Minister for Finance in the Council on 26th February 1970.

* Sent by post to all M.L.Cs. on 14th February 1970.

a Placed on the table of the House on 28th January 1970.

# APPENDICES

## APPENDIX I.

[*Vide* answer to Starred Question No. 38 on page 3]

(அ) ஒவ்வொரு வகை ரசாயன உரத்திற்கும் அதன் தொகுப்பு விலைக்குக் கூடுதலாக "பங்கீட்டுக் கூடுதல் தொகை" ஒன்றை (distribution margin) இந்திய அரசு அனுமதிக்கிறது. ஒரு மெட்ரிக் டன்னுக்கு மாதம் ஒன்றுக்கு 80 காசு வீதம் ஆறு மாதங்களுக்கு ஆகும் கிடங்கு வாடகைத் தொகைக்குரிய செலவிற்கு இந்தத் தொகை வகை செய்கிறது.

இதைத் தவிர, பருவமல்லாத குறிப்பிட்ட மாதங்களில் விற்பனைக்குக் கொண்டுவரப்படுகிற இருப்புகள் குறித்து பல்வேறு வகை உரங்களுக்காக வெவ்வேறு விதங்களில் பருவமில்லாக் காலத்துக்குரிய தள்ளுபடித் தொகைகளை இந்திய அரசு அனுமதிக்கிறது. அந்தத் தள்ளுபடித் தொகை பயனடைவோர்க்கு, அதாவது, இருப்பு வைத்திருப்பவர்களுக்கும் மொத்த விற்பனை வியாபாரிகளுக்கும் கொண்டு செல்லப்படுகிறது. உரமிடும் பருவத்திற்கு முன்னதாக எடுக்கப்பட்டு உரிய காலத்தில் பயன்படுத்துவதற்கென உழவர்களுக்கு வழங்கும் பொருட்டு, சேமித்து வைக்கப்பட்டிருக்கும் இராசயன உரங்களின் இருப்புகள் குறித்து செலுத்தத் தக்க கிடங்கு வாடகைக்கு இந்தத் தள்ளுபடித் தொகை ஓரளவு வகை செய்கிறது.

1968-69-ம் ஆண்டு தொடக்கத்தில் பெருமளவிலான உர இருப்புகள் பல்வேறு மாவட்டங்களில் உர இருப்பு வைத்திருப்பவர்களிடம் தேக்கமடைந்து விட்டன. பருவ நிலைமைகள் பாதகமாக இருந்ததால் உரங்கள் குறைவாக விற்பனைக்கு எடுக்கப்பட்டதே அதற்குக் காரணமாகும். இந்த உரங்களின் இருப்புகளைச் சேமித்து வைப்பது பெருஞ் சிக்கலாயிருந்தது. குறுகிய கால அறிவிப்பின் பேரில் துறைமுகங்களில் ஏற்பட்டிருக்கும் நெரிசலை நீக்கும்பொருட்டு, தொகுப்பு ஏற்பாடுகளின் கீழ் சென்னையிலுள்ள, தெற்கு வட்டாரத்தின் வட்டார இயக்குநருடைய (உணவு), உதவிக்கு விரைய வேண்டிய நிலை மாநில அரசுக்கு ஏற்பட்டது. தென் மாநிலங்களுக்கு உர வகைகளை வழங்கும் பொறுப்பை அவர் அப்போது ஏற்றிருந்தார். அளவுக்கு அதிகப்படியாக வந்து சேர்ந்த இருப்புகள் மத்திய கிடங்குக் கழகம், மாநிலக் கிடங்குக் கழகம் ஆகியவற்றின் கிடங்குகளிலும், இருப்புகள் வைத்திருப்பதாக இந்திய அரசு ஏற்பளித்துள்ள ரயில் நிலையங்களுக்கருகில் (Rail head Centres) வாடகைக்கு எடுக்கப்பட்ட தனியார் கிடங்குகளிலும் சேமித்து வைக்கப்பட்டன. சாதாரணமாக அந்த ரயில் நிலையங்கள் வரை ஆகும் போக்கு வரத்துச் செலவுகளை மட்டுமே இந்திய அரசு ஏற்கிறது. இந்த அரசுக்கு ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகள் காரணமாக, உரங்களின் இருப்புக்களை மத்திய கிடங்குக் கழகத்துக்கு மாநிலக் கிடங்குக் கழகத்துக்கு தனியார் கிடங்குக்கு எடுத்துச் செல்வதற்கும், இந்தக் கிடங்குகளிலிருந்து உரங்களைப் பெற்றுக்கொள்ளும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் ஆகும் போக்கு வரத்துச் செலவையும் இந்தக் கிடங்குகளில் சேமித்து வைப்பதால் ஏற்படும் கூடுதல் கிடங்கு வாடகைக்கு ஆகும் செலவுத் தொகையையும் திருப்பிக் கொடுக்க இந்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

(இ) மத்திய உரத் தொகுப்பு ஏற்பாட்டுகளின் கீழ் நைட்ரஜன் உரங்கள் மட்டுமே கையாளப்படுகின்றன. பாஸ்பேட், பொட்டாசிய உரங்கள் கட்டுப்பாடற்ற வணிக முறையின் கீழ் வழங்கப்படுகின்றன. எனினும், உள்நாட்டில் இந்த உரங்களின் உற்பத்திக் குறைவை ஈடு செய்யும் பொருட்டும், அரசு வாணிகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நைட்ரஜன் உரங்களுடன் உழவர்கள் பாஸ்பேட், பொட்டாஷ் உரங்கள் பெறுவதை உறுதிப்படுத்தும் பொருட்டும், மத்திய உரத் தொகுப்பு மூலம் உழவர்களுக்கு நேரடியாக விற்பனைக்கு வழங்குவதற்காக நைட்ரஜன்—பாஸ்பேட்—பொட்டாசியக் கலவை உரம், டை-அம்மோனியம் பாஸ்பேட், அம்மோனியம் பாஸ்பேட், பொடாசிய மூரியேட் போன்ற உரங்களையும் இந்திய அரசு



ஒதுக்கீடு செய்து வருகிறது. நம் நாட்டில் உள்ள உழவர்களின் பாஸ்பேட், பொட்டாசிய உரத் தேவைகளை உள்நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் பூர்த்தி செய்வதால் இவ்வகை உரங்கள் இறக்குமதி செய்வது பெருமளவு குறைக்கப்பட்டுள்ளது.

(உ) இந்திய அரசுடன் இது குறித்து கடிதத் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

## APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 65 on page 8]

1951-ஆம் ஆண்டுக்குப் பிறகு வெளி நாட்டிலிருந்து உணவு தானியங்கள் இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு இந்திய அரசு தீர்மானித்ததை யொட்டி, 1949-ஆம் ஆண்டு தொடக்கத்தில். மாநில அரசு உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் அதன் உணவு உற்பத்தித் திட்டத்தை மாற்றியமைக்கவும், நிர்வாக அமைப்பைச் சீரமைக்கவும் முடிவு செய்தது. மாநிலத்தில் பெரும் பண்ணைகள் ( Estates ) நீக்கப்பட்ட பிறகு அரசினால் மேற்கொள்ளப்பட்ட எஸ்டேட்டுகளிலுள்ள ஏராளமான ஏரிகளைத் தூறுவாரி பயன்படத் தக்க வகையில் கொண்டுவர வேண்டிவந்தது. உணவு உற்பத்தித் திட்டங்களுக்கும், சிறப்பாகப் பயனற்றுப் போன தரக் குறைவான ஏரிகளை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்குக் கவனம் செலுத்துவதன் பொருட்டும், புதுக் கிணறு வெட்டுவதற்காக உதவித் தொகை வழங்கும் திட்டம், உடனடி பயன்தரத் தக்க ஏரி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்துவதன் பொருட்டும் 1949-ல் வருவாய்த் துறை வாரியம் (உணவு உற்பத்தித் துறை) தோற்றுவிக்கப்பட்டது. வேளாண்மைத் துறை இயக்குநரால் கவனித்துவரப்பட்ட ரசாயன உர வழங்கலும் வருவாய்த் துறை வாரியத்தின் (உணவு உற்பத்தி) ஆளுகையின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. பின்னர், உணவு உற்பத்திக்கு நேரடித் தொடர்புள்ள எல்லாப் பணிகளும் அவற்றை மேற்பார்வையிடுதல், கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவருதல் ஆகியவையும் உணவு உற்பத்தி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

2. துறை தொடங்கப்பட்டதிலிருந்து 1968-69-ஆம் ஆண்டு வரை ரூ. 41,75,674 செலவு செய்யப்பட்டுள்ளது.

3. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வகுத்துள்ள பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகிற வேளாண்மைத் துறை, உணவுத் துறை, வருவாய்த் துறை, பொதுப்பணித் துறை, கூட்டுறவுத் துறை, ஆகிய பல்வேறு துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணி உணவு உற்பத்தி ஆணையாளரிடம் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளது.

4. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வகுக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுவதன் மூலம் உணவு உற்பத்தியை உயர்த்த உணவு உற்பத்தித்துறை மேற்கொண்ட மும்முர நடவடிக்கைகள் காரணமாக, 1965-66, 1968-69 போன்ற "பாதகமான பருவ நிலை" நிலவிய ஆண்டுகளைத் தவிர ஏனைய எல்லா ஆண்டுகளிலும், பயிர் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டது. உணவு உற்பத்தித் துறை தொடங்கப்பட்டதன் விளைவாக எந்த ஓர் ஆண்டிலேனும் எய்தப்பட்ட கூடுதல் உணவு உற்பத்தியை குறிப்பாகவும், தனியாகவும் மதிப்பிடுவதற்கு இயலாது. துறை செயலாற்றத் தொடங்கிய பொழுது 1950-51-ம் ஆண்டில் உணவு தானியங்களின் உற்பத்தி 32,13,000 டன்களாக இருந்தது. 25,75,000 டன்கள் அல்லது 80.1 சத வீத அதிகரிப்புடன் 1962-63-ல் உணவு தானிய உற்பத்தியின் உச்சக்கட்ட அளவாகிய 57,88,000 டன் அளவை இத்துறை எய்தியது. 1968-69-ம் ஆண்டில் பருவ மழை தவறியதாலும், வரட்சி நிலைமைகளாலும் மொத்த உற்பத்தி 53.53 லட்சம் டன்களாகவே இருந்தது.

[26th February 1970

## APPENDIX III.]

[*Vide* answer to Unstarred question No. 16 on page.]

| | Unit. | *Achieemeent during the year.* 1967–68. | 1968–69. |
|---|---|---|---|
| 1 Man-days Generated .. | Number of Man days. | 15,71,788 | 18,48,136 |
| 2 (*a*) Area contour bunded .. | Hectare. | 563 | 250 |
| (*b*) Area terraced .. .. | Do. | 84 | .. |
| 3 Gross additional area likely to be irrigated by Minor Irrigation Works, such as tanks, bunds, channels, kuhls, Bhandaras and Anaicuts .. .. .. | ,, | 2,038 | 3,146 |
| 4 Area protected from Floods Water log (through Kacha dams, bunds, embankments, drainage, etc.) .. .. | ,, | 502 | 211 |
| 5 Area covered by Community Orchards .. .. .. | ,, | 20 | 215 |
| *Pisciculture tanks.* | | | |
| 6 (*a*) Number of new tanks constructed .. .. | Number. | 22 | 23 |
| (*b*) Area of new tanks constructed .. .. .. | Hectare. | 189 | 15 |
| (*c*) Number of old tanks improved .. .. | Number. | 142 | 122 |
| (*d*) Area of old tanks improved. | Hectare. | 1,224 | 1,249 |
| 7 New Katcha roads constructed .. .. .. .. | K.M. | 475 | 518 |
| 8 Existing katcha roads improved | K.M. | 395 | 631 |
| 9 New semi-pucca roads constructed .. .. .. | K.M. | 28 | 15 |
| 10 Semi-pucca roads improved. | K.M. | 79 | 60 |
| 11 Pucca roads constructed .. | K.M. | 67 | 50 |
| 12 Pucca roads improved .. | K.M. | 101 | 47 |
| 13 Culverts constructed .. | Number. | 382 | 320 |
| 14 Culverts repaired .. .. | ,, | 17 | 1 |
| 15 Area reclaimed .. .. | Hectare. | 816 | 9 |
| 171 (*b*) .. .. | Rs. | 52,48,201 | 59,17,170 |
| 171(*c*) .. .. | Rs. | 52,48,201 | 59,17,170 |



26th February 1970]

## APPENDIX IV.

[Vide item IV on page 17].

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப் பேரவையின் கண் வைக்க நான் முன் வந்துள்ளேன். இத்துடன் 1969–70 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும் 1968–69 ஆம் ஆண்டிற்கான கணக்குகளும் மன்றத்தின் முன்னர் வைக்கப்பட்டுள்ளன. 1969–70 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளுக்கும் 1969–70 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளுக்கும் இடையேயுள்ள மாறுதல்களின் விரிவான சிறப்புக் கூறுகளையும், 1968–69 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளுக்கும் 1968–69 ஆம் ஆண்டிற்கான கணக்குகளுக்கும் இடையேயுள்ள மாறுதல்களின் விரிவான தனிக் கூறுகளையும் இவ் வரவு-செலவு திட்ட விளக்கக் குறிப்பு விளக்குகிறது.

2. வரவு-செலவுத் திட்டத்தை இம்மன்னறத்தின் முன் வைக்கும் காலையில், இதற்கு முந்தைய ஆண்டுகளில் அரசின் பொருளாதார சாதனைகளைக் குறித்து மறு ஆய்வு செய்வதற்கும், அதன் வருங்காலக் கொள்கைகளுக்கு இசைவளிப்பதற்கும் ஏற்ற ஒரு வாய்ப்பு கிட்டுகிறது. எனவே, வரவு-செலவுத் திட்டம் என்பது நிதிக் கணக்குகளின் பட்டியல் அல்லது நிதி ஒதுக்கங்களின் சுருக்கம மட்டும் அல்ல. மக்கள் நலனைப் பெருக்குவதில் அரசு தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ளுவதற்கான ஒரு வாய்ப்பு என்றுதான் இதனைக் கருதவேண்டும். இப் பின்னணியில்தான் கடந்த மூன்றுண்டுகளில் இவ்வரசின் சாதனைகளை மறு ஆய்வு செய்யவும், வரும் ஆண்டுகளுக்காக, நாம் வகுத்துள்ள வேலைத் திட்டத்தின் சில முக்கிய விவரங்களை இங்கு விளக்கவும் நான் முன்வருகிறேன்.

### மத்திய-மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்கள் பிரிவினை பற்றிய பெரும் ஏற்றத்தாழ்வுகளும் அதன் விளைவுகளும்

3. பொருளாதாரக் கொள்கை குறித்த பெரும் முடிவுகளில் பெரும்பாலனவை, இம் மாநிலத்திற்கு வெளியே, அதாவது புது டில்லியிலும் பம்பாயிலும் மேற்கொள்ளப்படுவதால், வளர்ச்சி பணியில் மாநில அரசின் முயற்சிகள் பெரிதும் தடைபடுகின்றனவென்பதை நான் முதற்கண் அழுத்தமாகக் கூற விரும்புகிறேன். 1967–இல் நடந்த பொதுத் தேர்தல்கள் இந்திய ஆட்சி அமைப்பில் எல்லைக்கோடு ஒன்று உருவாகி உள்ளதை எடுத்துக் காட்டியுள்ளன. மத்தியிலுள்ள அரசு எந்த அரசியல் கட்சியைச் சார்ந்ததோ அதனின்றும் வேறுபட்ட அரசியல் கட்சிகளைச் சார்ந்த அரசுகள் பல மாநிலங்களில் அமைந்துள்ளன. இதன் விளைவாக, அரசியல் சட்டத்தின் கட்டுக்கோப்பு, பலவிதமான நெருக்கடிகளுக்கும் அழுத்தங்களுக்கும் ஆளாகி உள்ளது. குறிப்பாக, அண்மை மாதங்களில், தற்போதைய ஏற்பாட்டில் கலந்துநின்ற பலவீனம் புறத்தே தலைகாட்டியது. நிதி வாயில்களைத் திரட்டும் அதிகாரம் பெருமளவில் மத்திய அரசிடம் நிலைத்துள்ளது. மாநிலங்களுக்கிடையே வெவ்வேறு திட்டங்களுக்கான நிதி வாயில்களை ஒதுக்குவது குறித்து முடிவுகள் மேற்கொள்ளும் அதிகாரத்தையும் மத்திய அரசே இதுகாறும் வைத்து வந்துள்ளது. இன்றைய சமுதாயத்தில் ஒரு மாநிலத்தில் உள்ள உற்பத்தி அமைப்பின் இயக்கத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரக் கொள்கைகளை முடிவு செய்யும் கருவிகளான வங்கிகள், நாணயச் செலாவணி, நிதிக் கொள்கை ஆகிய அனைத்தும் இந்திய அரசினாலேயே கட்டுப்படுத்தப் படுகின்றன. முக்கிய வரிகளை விதிப்பதற்கும் வட்டி வீதங்களை மாற்றுவதற்கும் நாட்டின் நாணயச் செலவாணி மதிப்பைச் சரிகட்டுவதற்கும் உரிய அதிகாரங்கள் அனைத்தும் இந்திய அரசிடமே ஒருங்கு குவிந்துள்ளன. எனவேதான் மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளின் துரதிர்ஷ்டவசமான விளைவுகளை மாநில அரசு அடிக்கடி

எதிர் நோக்கி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதிகாரமும் பொறுப்பும் இவ்வாறு பிரிந்து நிற்கும் நிலை, நமது கூட்டாட்சி முறையில்—பொருளாதார முறையிலும் அரசியல் முறையிலும் ஏற்பட்டுள்ள கேட்டிற்குக் கருவாக அமைந்துள்ளது. நாட்டில் அண்மையில் பொருளாதார மந்த நிலை ஏற்பட்டதற்கு மத்திய அரசின் பணக் கொள்கைகளும் நிதிக் கொள்கைகளும் ஓரளவு காரணமாகும். இதன் காரணமாக நாட்டில் வாங்கும் சக்தி பெரிதும் குறைந்து ஒரு தொழிலிற்குப்பின் பிறிதொன்ருக நின்று போகும் ஒரு நச்சு வட்டம் தோன்றியது. உணவு உற்பத்திப் பெருக்கத்தின் அடிப்படையில் நாடு முன்னேறியிருக்கவேண்டிய நேரத்தில் நாட்டின் பொருளாதார நிலை உண்மையாகவே அசைவற்று நின்று விட்டதை நாம் கண்டறிந்தோம். பஞ்சாலைத் தொழில் முடங்கிவிட்டது. பொறியியல் தொழிலின் உற்பத்திப் பொருள்களை வாங்குவோரின்மையால் அது பெரிதும் மெலிந்தது. ஐந்தாண்டுத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டதால், அரசு முதலீடு செய்யும் அளவு குறைந்து நிலைமை மேலும் சீர்கேடடைந்தது. மேற்சொன்ன நிலைமைக்குக் காரணமான இந்த முக்கிய முடிவுகள் குறித்து மாநில அரசுகளைக் கலந்து ஆலோசிக்கவில்லை. மற்றும், விலைவாசிக் கொள்கைகள் பற்றியவரை, மத்திய அரசு மேற்கொள்ளும் முடிவுகளில் பெரும்பாலனவை, பற்பல மாநிலங்களில் நிலவிவரும் சூழல்களைக் கருத்தில் கொள்ளாமலே மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் நிலவும் விலைவாசி நிலை மொத்தத் தேவையையும் வழங்கலையும் (Demand and Supply) பெரும்பாலும் எதிரொலிக்கின்றது. வாங்கும் சக்தியை நிர்ணயிப்பதில் மத்திய அரசின் நிதிக் கொள்கைக்கு முக்கிய இடம் உண்டு. வழங்கல் நிலையைப் பொறுத்த மட்டில் உருக்கு, பருத்தி, நெட்டிழை (Staple fibre) போன்ற முக்கியமான மூலப்பொருள்களை உரிய காலத்தில் இறக்குமதி செய்வதற்கு வகைசெய்யும் வகையில் மத்திய அரசு கொள்கை முடிவெடுத்திருந்தால், வாணிகத் துறையில் சூதாட்டப் போக்குகளைத் தடுத்திருக்கலாம். மத்திய அரசு, அவ்வப்போது மேற்கொள்ளும் கொள்கைகளின் சீரமைப்புப்பற்றி மாநில அரசுக்கு ஏதும் தெரிவதில்லை.

4. இத்தகைய சூழ்நிலையில்தான் தேசீய, பொருளாதாரக்கொள்கைகளை நிர்ணயிப்பதிலும் அவற்றை நடைமுறையில் கொண்டுவருவதிலும் மத்திய அரசுடன் மாநில அரசுகள் மேலும் நெருக்கமான இணக்கம் கொண்டு இயங்க வேண்டுமென்று இம் மாநில அரசு வேண்டுகோள் விடுத்து வருகின்றது. இவ்வாறு கூறுவதன்மூலம், தேசீய வளர்ச்சி மன்றம் எப்போதோ ஒரு முறை கூடி இரண்டொரு நாள் பற்பல விவாதங்களுகளுக்குப் பிறகு கலைவதைப்பற்றி நாம் குறிப்பிடவில்லை. கூட்டமைப்புப் பொருளாதாரத் திட்ட மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அவை வங்கிகள், நிதிக் கொள்கைகள், வாணிபம் போன்றவற்றைக் கவனிக்கவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். இத்தகைய மன்றங்களை அமைப்பது குறித்து அரசியலமைப்பின் 263-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. நாம் நியமித்துள்ள மத்திய, மாநில அரசு உறவுகள்பற்றிய ஆணைக்குழு தற்போதைய ஆட்சி அமைப்பில் காணப்படும் இப் பெரும் பள்ளத்தைத் தூர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து பொருளாதாரத்தைச் சீரான அடிப்படையில் நிர்வகித்துச் சீரமைப்பதற்கான பரிந்துரைகளைச் செய்யுமென நாம் நம்புகிறோம்.

**பொருளாதார முடிவு பற்றிய அதிகாரக் குவியல்**

5. பொருளாதார முடிவுகளை மேற்கொள்ளுதல், அவற்றை மையப்படுத்துதல் ஆகிய பொதுவான இச் சிக்கலைப்பற்றி இப்போது சில சொல் கூற விழைகின்றேன். அண்மையில் வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதால், கருதா விளைவுகள் சில ஏற்பட்டுள்ளன. பொருளாதார அதிகாரங்கள் குவிக்கப்படும் நடைமுறைக்கு மேலும் ஆக்கமேற்பட்டுள்ளது. ஆதிக்கமற்ற சமுதாயத்தை உருவாக்கும் ஒரு நடவடிக்கையாக வங்கிகளை நாட்டுடைமையாக்கும் ஏற்பாட்டை மாநில அரசு என்ற முறையில் நாங்கள் வரவேற்றாலும், நாட்டுடைமையாக்கப்பட்ட





வங்கிகள் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்திற்கும் அதிகாரங்கள் குவிக்கப்படுவதற்கும் இடம் கொடுக்காமல் தடுப்பதற்கு வேண்டிய எச்சரிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் எடுத்துக் கூறியிருந்தோம். சில வங்கிகளின் நிர்வாகிகளால் காட்டப்பட்ட ஆக்கமும், ஊக்கமும் வரம்பு மீறிய அதிகாரக் குவியலால் நெரிக்கப்பட்டு விடும் என்று நாங்கள் அஞ்சினோம். இத்தகைய அச்சங்கள் உண்மையானவை என்பதை நாங்கள் உணர்ந்து வருகிறோம். சமூகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளூர்த் தேவைகளுக்கேற்ப ஓரளவு வளைந்தும் இசைந்தும் நெகிழும் வகையில் இருந்த முறை, நாட்டுடைமையின்கீழ் வலுப்படுத்தப்பட வேண்டும். வங்கி நிர்வாகம், உள்ளூர் மக்களின் விருப்பங்களையும், பற்பல பகுதிகளில் தோன்றும் பல வகையான நலன்களையும் எதிரொலிக்க வேண்டுமென்று இந்த அரசு இதற்குமுன் தெரிவித்துள்ள கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த சிக்கல்களை அதிகாரவர்க்க முறையிலோ கண்டிப்பான ஒரே மாதிரியான முறையிலோ பார்க்கக் கூடாது. உள்ளூர் மக்களின் ஆர்வத்திற்கும் நலனுக்கும் ஆக்கம் அளிப்பதால் புதிய சோசலிஸ வங்கி முறை ஒன்று உருவாவதற்கு வழிகோலப்படும். நாட்டுடைமையாக்கப்பட்ட பற்பல வங்கிகளின் வட்டார வாரியங்களில், மாநில அரசுகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப் பட்டால், வங்கி நிர்வாகத்தினருக்கும், அவ் வங்கிகள் செயல்படும் பகுதிகளின் தேவைகளுக்கும் இடையே நிலவ வேண்டிய தொடர்பு, பயனுடையதாக விளங்கும் என்பது உறுதி. வேளாண்மை உற்பத்தியை விரைவு படுத்துவதற்கும் உள்ளூர்த் தொழில்களை வளர்ப்பதற்குமான புதிய முறைகளைப் புனைவதற்கு வங்கி நிர்வாகத்தினருக்கு முழு உரிமையளிப்பதும் இன்றியமையாததாகும்.

6. மத்திய அரசின் தற்போதைய தொழிற் கொள்கை குறித்து மாநில அரசின் கருத்துக்களை நான் இங்கு குறிப்பிட விழைகிறேன. தொழிற் கொள்கையைக் குறித்து எடுக்கப்படும் முடிவுகளை மேற்கொள்வதற்கு முன் மாநில அரசைக் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்பது இம் மாநில அரசின் கருத்து ஆகும். உரிமைகள் வழங்குவதில் மேற்கொள்ளப்படும் நடை முறை தளர்த்தப்பட வேண்டும் என்றும் நாங்கள் வற்புறுத்தி வந்துள்ளோம். அண்மையில் இந்த நடை முறைகளில் மத்திய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் வரவேற்கத் தக்கவையே. உரிமங்கள் வழங்குவதில் இன்னமும் சிக்கலான நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகிறது எனும் உண்மையை நாங்கள் அனுபவத்தில் கண்டுள்ளோம். தடை செய்யப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ள தொழில்களாய் இருந்தாலும் பற்பல சிறிய அனுமதிகளும் ஒப்புதல்களும் பெற வேண்டியிருக்கின்ற நிலைமையின் காரணமாக, தொழில் முனைவர்களின் வழியில் சிக்கல்கள் பல எழுப்பப்படுகின்றன. இத்தகைய அதிகாரங்களில் சிலவற்றைப் பிரித்து, தொழில் முனைவர்களின் மனுக்களைச் சரிபார்த்து, பொதுவாக ஒப்புதல் அளிக்கும் அதிகாரங்களை மாநில அரசுகளிடம் ஒப்புவிப்பது குறித்து மத்திய அரசு வழிவகைகளை வகுக்குமென்று நான் நம்புகிறேன். மாநில நிதி வழங்கும் நிறுவனங்களிடமோ, மாநில அரசுகளிடமோ அந்நியச் செலவாணி குறித்துச் சிறுதொகைகளை ஒதுக்குவதன் மூலம் இத்துறையில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்க்க வகை செய்ய முடியும். பல்வேறு தொழில்களின் தேவைகளுக்கேற்ப முடிவுகளை விரைந்து எடுக்கும் வகையில் அதிகாரங்களைப் பரவலாக்கி தற்போதைய ஏற்பாட்டினை முழுமையாகச் சீரமைப்பதற்குக் காலம் வந்துவிட்டதென மாநில அரசு கருதுகின்றது. தொழில் துறையில் மத்திய அரசிடம் உரிமங்கள், ஒப்புதல்கள் முதலியன பெறுவதில் கடும் தாமதம் ஏற்படுகின்ற காரணத்தால் பொதுவாக, மன நிறைவற்ற நிலைமை நிலவி வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தொழில் முனைவர்களுக்குப் புதிய தொழில்களில் முதலீடு செய்வதில் அக்கறை குறைந்துவருவது மாநில அரசுக்குக் கவலைக்கிடம் அளிப்பதாய் உள்ளது.

## மத்திய மாநில நிதி உறவு

7. இந்தியப் பொருளாதார அமைப்பில் இன்று முதன்மையாக விளங்கும் மத்திய, மாநில அரசுகளின் நிதி உறவுகளின் சில முக்கிய கூறுகளைப் பற்றி நான் எடுத்துக் கூற விழைகின்றேன். ஐந்தாவது நிதி ஆணைக் குழுவின் அறிக்கை வெளியிடப் பட்டது நடப்பு ஆண்டில் இத் துறையிலேற்பட்டுள்ள மிக முக்கிய நிகழ்ச்சியாகும். வெளிப்படையாகவே நியாயமற்றதெனத் தோன்றும் அந்த அறிக்கையைப்பற்றி மாநில அரசின் கலக்கத்தையும் அதிருப்தியையும் இம் மன்றத்தின்கண் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். தேசிய வரவின் வாயில்களின் மொத்தத் தொகுப்பில் இம் மாநிலத்தின் பங்கு, இதற்கு முன்பிருந்த 7·2 சதவீதத்திலிருந்து 6·9 சதவீதத்துக்குக் குறைந்துள்ளது. பின்தங்கியவை என்று சொல்லப்படும் மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கோட்பாடுகளுக்குத் தனி முக்கியத்துவம் தரும் காரணமாகவே இது இங்ஙனம் குறைந்துள்ளது. வருமான வரிப் பங்கும் 8·34 சத வீதத்துலிருந்து 8·18 சதவீதத்துக்குக் குறைந்துள்ளது. ஆயத் தீர்வையைப் பொறுத்த வரையில் 7·18 சதவீதத்திலிருந்து 6·5 சதவீதத்துக்குக் குறைந்துள்ளது. கூடுதல் ஆயத் தீர்வைகளைப் பொறுத்த மட்டில் 11 சதவீதத்திலிருந்து 9·63 சதவீதத்துக்குக் குறைந்துள்ளன. இவற்றிற்கெல்லாம் சிகரமாக 1969 முதல் 1974 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கான பற்றுக்குறை மானியம் 34 கோடி ரூபாயிலிருந்து 23 கோடி ரூபாய்க்குக் குறைக்கப்பட்டுள்ளது. பீஹார், உத்தரப் பிரதேசம், குஜராத், பஞ்சாப், ஹரியானா, மத்தியப்பிரதேசம், மகாராட்டிரம் போன்ற மாநிலங்களுக்கு, சுமார் 1,300 கோடி ரூபாய் அளவிற்கு வரவின மிகுதி வரும் வகையில் நிதி ஆணைக் குழு தாராளமாக மானியங்கள் அளித்திருப்பதைப் பார்க்குமிடத்து, இது பன்மடங்கு வியப்பாக உள்ளது. தியாகி அறிக்கையை நாம் படிப்போமானால், அந்த அறிக்கை நமது பணியாளர்களின் ஊதியங்களை மேம்பாடு செய்வது குறித்து நமக்குள்ள உண்மையான பொறுப்பினை ஈடுசெய்ய வேண்டுமென்கிற நியாயமான கோரிக்கையை ஏற்கவில்லை யென்பது தெரியும். ஒரு புறம், மாநில அரசு தனது நிதி வசதிகளை விவேகத்துடன் சிக்கனமாக நிர்வகித்து வந்திருப்பது, நமது செலவின மதிப்பீடுகளை உண்மைக்கு மாறான மிகக் குறைந்த அளவில் நிதி ஆணைக் குழு மதிப்பிடுவதற்கு வழி வகுத்துள்ளது. மறுபுறம், இம் மாநிலத்தின் வரி திரட்டும் முயற்சிகளை அடிப்படையாகப் பயன் படுத்தி நமது வரவினங்களை உண்மை நிலைக்கு மாறாக மிக அதிக அளவில் மதிப்பீடு செய்துள்ளது. இவ்வாறு நாம் இருவித இடையூறுகளுக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறோம். இதைப்பற்றி நாம் மத்திய அரசுக்கு இடைவிடாமல் முறையீடு செய்து வந்துள்ளோம். குறிப்பிட்ட சில மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி வாயில்கள் சேருவதற்குத் தொடர்ந்து அனுமதியளிக்கப்பட்டு அதற்கு நிகரான நிதிவாயில் அதிகரிப்பு தமிழ் நாடு போன்ற மாநிலங்களுக்கு அளிக்கப் படவில்லை யென்றால், அநீதியும், சமனற்ற நிலையும் தொடர்ந்து நிலவிவரும் என்பதை நாம் மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளோம்.

## மத்திய அரசுக்கு மாநில அரசு கொடுக்கவேண்டிய கடன் சுமை

8. மாநிலங்கள் மத்திய அரசுக்குக் கொடுக்க வேண்டிய கடன், சுமை, மத்திய—மாநில உறவுகளின் அடிப்படைக்கு ஒரு அறிகுறியாக விளங்குகிறது. நான்காம் திட்டக் காலத்தில் இம் மாநிலத்திற்கு மத்திய அரசு வழங்க முன் வந்துள்ள கடன் தொகைகள் 140 கோடி ரூபாயாகும். இதற்கு மாறாக, அக் கால அளவில் இம் மாநிலம் மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் 160 கோடி ரூபாயாகும். நமது வேண்டுகோள் நியாயமானதா என்பதை எடுத்து விளக்குவதற்கு இப் புள்ளி விவரங்களே போதிய சான்றாகும். மத்திய அரசுக்குச் சோ வேண்டிய நமது கடன் தவணைத் தொகைகளை மாற்றியமைக்கும்படி நாம் இடைவிடாமல் இந்திய அரசை வேண்டியுள்ளோம். சில மாநிலங்களின் கடன் தவணைகளை 800 கோடி ரூபாய் அளவுக்கு மாற்றியமைக்க மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. மத்திய உதவியைப் பகிர்ந்து அளிப்பது குறித்துத் தற்போதுள்ள நமக்குச் சாதகமாயிராத கோட்பாட்டின் கீழ்கூட இத் தொகையை பகிர்ந்து கொடுத்தால் தமிழ்நாட்டிற்கு 50 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி வாயில்கள் கிடைத்திருக்கும். ஆகவே கடன் தவணைகளைத் தளர்த்திக் கொடுக்கும் வாயிலாக இவ்வளவில் கணிசமான உதவியை நாம் எதிர்பார்ப்பது நியாயமான நிலைமைதான். கடன் தவணைகளை மாற்றியமைப்பது குறித்து நாம் மத்திய அரசுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் அத் தொகைகளை எந்தெந்தத் துறைகளில் பயன்படுத்தினோமோ அந்தந்தத் துறைகளின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு தவணை முறையையும் தளர்த்த வேண்டுமென்பதுதான். இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் நாம் பெற்றுக் கொண்ட கடன்களில் சில நீண்ட காலம்கழித்துப் பயனளிக்கும் பாசன, மின்சாரத் திட்டங்களுக்காகவே செலவழிக்கப்பட்டன. இக் கடன்கள் 10 ஆண்டுக் காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை என்ற இப்போதுள்ள தவணை முறையை மாற்றி அவைகளை 20, 25 ஆண்டளவில் திருப்பி அளிப்பதற்கு ஒப்புதல் அளிக்குமாறு நாம் வேண்டியிருக்கிறோம்.

## அனைத்து மாநிலக் கடன் ஆணைக் குழு ஒன்றை நிறுவுதல்

9. மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்குக் கிட்டும் நிதி வாயில்கள், திட்டத்திற்கு ஓரளவிற்கே நிதி உதவியளிக்கப் பயன்படுகின்றன என்பதை இதற்கு முன் இம் மன்றத்திலும், மேலவையிலும் நான் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். மாநிலங்களுக்கு அளிக்கப்படும் நிதி வாயில்களில் கணிசமான பகுதி, அம் மாநிலங்கள் தத்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கே பயன்படுகின்றன. இச் சிக்கலைத் தாற்காலிகமாக அணுகுவதற்குப் பதிலாக பற்பல மாநிலங்களின் கடன் நிலையை மறு ஆய்வு செய்து, சீரான அடிப்படையில் கடன் தவணைகளை மாற்றி யமைக்கும் வழிவகை ஒன்றினை முடிவு செய்வதற்கு உயர் அதிகாரக் குழு தேவையென நான் கருத்துத் தெரிவித்திருந்தேன். மாநிலங்கள் மூலதனச் செலவுகளை ஏற்பதற்காகப் பொதுமக்களிடமிருந்தும், மத்திய அரசிடமிருந்தும் கடன்களைத் திரட்டுகின்றன. இக் கடன்களில் சிலவற்றை மத்திய அரசு, உலக வங்கியிடமிருந்து பெயரளவிலான வட்டி வீதங்களில் 40 முதல் 50 ஆண்டுத் தவணைக் காலங்களில் திருப்பிச் செலுத்தும் வசதிகளுடன் பெறப்பட்ட கடன்களைக் கொண்டு மீண்டும் கடன்களாக வழங்குகிறது. இக் கடன்கள் எந்த நடைமுறையின்படி அதிக வட்டி வீதத்திற்கும் குறைந்த கால அளவில் திருப்பிச் செலுத்தும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு மாநிலங்களுக்கு மீண்டும் கடனாக அளிக்கப்படுகின்றனவோ அந்த நடைமுறை எவ்வாற்றானும் நியாயமான அடிப்படையில் செய்துகொண்ட ஏற்பாடாக அமையாது. மற்றும், இக் கடன்கள் எந்த நோக்கங்களுக்காகச் செலவழிக்கப்படுகின்றனவோ அந்த நோக்கங்களைப் பொறுத்து அவற்றைத் திருப்பிச் செலுத்தும் முறையை வகுப்பதும் இன்றியமையாததாகும். திட்டக் காலங்களில் உதாரணமாக, அடிப்படைத் தேவைகளின் அமைப்புகளுக்காகக் கடன்கள் வகை செய்யப்பட்டிருந்தால், அக் கடன்களைக் குறுகிய கால அளவுகளுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்துவது விவேகமான முறையல்ல. எனவே, கடன் வழங்கு முறைகளையும், திருப்பிச் செலுத்தும் முறைகளையும் சீரமைக்கும் நோக்கத்துடன் இச் சிக்கல் முழுவதையும் ஆய்வு செய்வதற்கென அனைத்து மாநிலக் கடன்கள் ஆணைக் குழு ஒன்றை நியமிக்க மத்திய அரசுக்கு ஏற்ற தருணம் இதுவேயென்று நான் மீண்டும் வற்புறுத்திக் கூறுவேன்.

[26th February 1970

## தமிழ்நாட்டில் நான்காம் ஐந்தாண்டுத் திட்ட முதலீடுகள்

**10.** நமது மாநிலத் திட்டத்தின் அளவைக் கருதிப் பார்க்கும்போது சில சிறப்புக் கூறுகளை நாம் உள்ளத்திற்கொள்ள வேண்டியிருக்கிறது. மாநில, மத்திய, தனியார் துறை ஆகிய இம் மூன்று துறைகளுக்காக நாடு முழுமைக்குமான திட்டம் ஏறக்குறைய 24,000 கோடி ரூபாய் அளவில் உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலத்திற்கே உரிய திட்டத்திற்காக நாம், திட்ட ஆணைக் குழுவைக் கேட்டுள்ள 624 கோடி ரூபாய் முதலீடு மாநிலத்தின் நேரடிப் பொறுப்பிலுள்ள திட்டங்களையே குறிக்கின்றது. சேலம் உருக்காலைத் திட்டத்தை மத்திய அரசுத் துறையில் சேர்க்கும்படி இந்திய அரசை நாம் வற்புறுத்தி வந்துள்ளோம். மற்றும், சேதுசமுத்திரத் திட்டம், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் திட்டம், கல்பாக்கம் இரண்டாம் நிலையத் திட்டம் ஆகிய திட்டங்களை மத்திய திட்டத்தில் சேர்க்க வேண்டுமென நாம் கேட்டுள்ளோம். முப்பது கோடி ரூபாய் செலவிலான சேதுசமுத்திரத் திட்டத்தின் வாயிலாக, கரையோர நீராவிக் கப்பல்கள், இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைக்குப் பயணம் செய்யவேண்டிய தொலைவைக் குறிப்பாகக் குறைக்கக்கூடும் என்பதை இம்மன்றத்தினர் அறிவர். மற்றும் தூத்துக்குடி துறைமுகத்தை, நவீன வசதிகளுடன் கூடிய துறைமுகமாக்கும் பணிகள் விரைந்து செயல்பட வழி ஏற்படும். வளர்ச்சி குன்றிய ஒரு வட்டாரத்தில் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், புதிய வாழ்வு தழைத்தோங்கவும் இது வாய்ப்பளிக்கும். மிக முக்கியமான இந்தத் திட்டத்தின் பற்பல விவரங்கள் பற்றி நான் அதிகமாய் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியைப் பொறுத்த வரையில், சுரங்கம் வெட்டும் பணி செயல்படுத்தப்படுவதற்கு நான்கு முதல் ஐந்து ஆண்டுகள் ஆகும் என்பதை நான் குறிப்பிட வேண்டும். நெய்வேலியில் தற்போது நிறுவப்பட்டுள்ள உற்பத்தித் திறன் அளவு 5·5 மில்லியன் டன் பழுப்பு நிலக்கரியாகும். தற்போதைய தேவைகளுக்குக் கூட இது போதவில்லை. எனவே, இரண்டாம் சுரங்கப் பணி உடனடியாகத் தொடங்கப்பட வேண்டுமென்பது மிக அவசியமானதாகும். கல்பாக்கத்தைப் பொறுத்தவரையில் இதன் உற்பத்தி அளவினை 400 மெகவாட்டுக்கு உயர்த்தினாலொழிய, நான்காம் திட்டத்தின் இறுதியில் நமது மாநிலம் கடும் மின்சாரப் பற்றுக்குறையை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை நான் திரும்பச் சொல்ல வேண்டியதில்லை.

## சேலம் உருக்காலைத் திட்டம்

**11.** கடந்த பத்தாண்டுகளாகவே சேலம் உருக்காலைத் திட்டத்தைத் தொடங்க அனுமதியளிக்குமாறு இந்திய அரசை வற்புறுத்தி வந்துள்ளோம். இந்த வேலைத் திட்டம் குறித்து ஒரு முடிவெடுக்கும்படி இன்னும் மத்திய அரசை நாம் கேட்டுக்கொண்டிருக்கும் நிலை வரலாற்றில் வேடிக்கை மிக்க நிகழ்ச்சியாகும். இத் திட்டத்தை வெளிநாட்டு வல்லுநர்கள் பலரும் இந்திய வல்லுநர்கள் பல்ரும் முழுமையாக ஆய்வு செய்து, இது தன்னிறைவானதென்றும் ஓர் ஏற்புடைய திட்டம் என்றும், சான்று கூறியுள்ளனர். இந்திய அரசு கேட்டுள்ள விரிவான திட்ட அறிக்கையும் கிடைத்துள்ளது. விரிவான தொடக்கப் பணிகள் முடிவுற்ற நிலையில், உருக்கு உற்பத்திக்குத் தயாராகவுள்ள திட்டம் ஏதேனும் இருக்குமானால், அது சேலம் உருக்காலைத் திட்டம்தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இத் திட்டத்தைச் செயல்படுத்த இந்த அரசு மேற்கொண்டுள்ள சிறப்பான முயற்சிகளை இக் கணத்தில் எடுத்துக்கூற நான் விழைகின்றேன். மறைந்த மதிப்பிற்குரிய முதலமைச்சர் அண்ணா அவர்களின் காலத்திலிருந்து, இந்திய அரசிடம் பல முறையீடுகள் தொடர்ந்து செய்யப்பட்டு வந்துள்ளன. இத் திட்டத்தின் பல்வேறு கூறுகள் குறித்து விவாதிக்க முன்னாள் மத்திய உருக்கு-கனரகப் பொறியியல் அமைச்சர் திரு பூனச்சா அவர்களும் சென்னைக்கு வந்தார். நமது முதலமைச்சரும் இது குறித்துப் பன்முறை தலைமையமைச்சருக்குத் தெரிவித்தார். சென்ற வாரங்கூட, புதுடில்லிக்குச் சென்றபோது, அங்கு நடத்திய உரையாடல்களில் இதுபற்றி வலியுறுத்



26th February 1970]

திக் குறிப்பிட்டார். இவற்றின் விளைவாக, இத் திட்டம் குறித்து நடவடிக்கை மேற்கொள்ள இந்திய அரசு சாதகமான ஒரு முடிவை விரைவில் அறிவிக்கும் என்று நான் நம்புகின்றேன்.

## மாநில நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு

**12.** மாநில அரசுத் துறைத் திட்டத்தைப் பொறுத்தவரை, நமது நிலையை இந்திய அரசுக்கும் திட்ட ஆணைக் குழுவுக்கும் தெள்ளத்தெளிய எடுத்துக் கூறியுள்ளோம். 1966-ல் ஆலோசனையில் இருந்து வந்த நான்காம் திட்ட வரைவில்கூட தமிழ் நாட்டிற்கு 564 கோடி ரூபாயுள்ள ஒரு திட்டம் ஒதுக்கப்பட்டிருந்தது. இன்று நாம் 1970-ல் உள்ளோம். திட்ட ஆணைக் குழு 1969–74-க்காக தமிழ் நாட்டுக்கென்று தனது வரைவுத் திட்டத்தில் தெரிவித்திருந்த 502 கோடி ரூபாய் திட்டத்தைக் கொண்டு நாம் ஆறுதல் அடைந்துவிட முடியாது. எனவே, 575 கோடி ரூபாய் அளவுக்குக் குறைந்த அளவுத் திட்டம் ஒன்றை ஏற்கவேண்டுமென நாம் வற்புறுத்தியுள்ளோம். இது ஏற்கப்படாவிடின், மேற்கொண்டு தமிழ் நாட்டின் வளர்ச்சி மிகக் கடுமையாகப் பாதிக்கப்படும். முந்தைய நான்காவது திட்டத்திற்கென இம் மாநிலத்திற்கு அளிக்கப்பட்ட ரூ. 250 கோடி மத்திய உதவி புதிய நான்காவது திட்டத்தில் ரூ. 202 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை நான் ஈண்டுக் குறிப்பிட வேண்டியுள்ளது. புள்ளி விவர அடிப்படையைக் காரணமாகக் கொண்டே முன்பு வழங்கப்பட்ட மத்திய உதவியைக் குறைப்பது நியாயமற்றதாகுமென்று நாம் தலைமையமைச்சருக்கு எடுத்துக் கூறியுள்ளோம். காலப்போக்கில் நமது நிதிவாயில்களுக்கான தேவைகள் அதிகரித்து உள்ளன. எனவே, மத்திய உதவியை ரூ. 250 கோடியிலிருந்து ரூ. 202 கோடியாகக் குறைத்தது மிகவும் அநீதியான செயலென்பதை மீண்டும் வலியுறுத்திக் கூற வேண்டிய தேவையில்லை.

## எய்திய முன்னேற்றமும் கருதியுள்ள வேலைத் திட்டங்களும் குறித்த ஆய்வு

**13.** கடந்த மூன்றுண்டுகளில், நாம் எய்திய முன்னேற்றத்தையும், நடப்பு ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் நாம் நிறைவேற்றக் கருதியுள்ள பணித் திட்டங்களையும் ஈண்டு விரிவாக எடுத்துக் கூற எண்ணுகின்றேன். வேளாண்மைத் துறையில் இம் மாநிலம், கடந்த இரண்டாண்டுகளாகக் கடும் வறட்சியை எதிர்நோக்க வேண்டி இருந்தது. இதன் விளைவாக, பற்பல பகுதிகளில் உற்பத்தி குறைந்ததோடு, வேலை வாய்ப்புகளும் குறைந்தன. தொடர்ந்து இரண்டாண்டுகளாக, இம் மாநிலத்தின் மழை அளவு இயல்பான அளவிற்கும் மிகக் குன்றி நின்றது. இம் மாநிலத்தின் இயல்பான மழை அளவு 920 மி.மீ. அளவு ஆகும். ஆனால் 1968-ல் பெய்த மழையின் அளவு 742 மி. மீட்டரேயாகும். பெய்யா வானம் 1969-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலும் பெயல் மறந்ததால் உழவுத் தொழிலைத் தொடங்குவதில் தொடர்ந்து இடையூறுகள் நேரிட்டன. 1969-ஆம் ஆண்டின் முற்பாதியிலும் மழை வளம் கரந்தது. 1970 ஜனவரித் திங்களில் ஆளுநர் அவர்கள் உரையில் சீர்கேடான பருவ நிலைகள் காரணமாக எதிர்நோக்க வேண்டியிருந்த பெருத்த அறைகூவலைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தார். வறட்சியால் நேர்ந்த இடையூற்றினையும் மக்களுக்கு நலம் பயக்கும் வகையில் அதனை மாற்றும் வண்ணம் தொண்டாற்றக் கிடைத்த ஒரு வாய்ப்பாகக் கருதி இந்த அரசு துணிவுடனும் விழிப்புடனும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் அதன் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்றாகும். இக் கால அளவில் ஆடவர் பெண்டிர் உட்பட எட்டு லட்சம் பேருக்கு நாம் வேலை வாய்ப்பு அளித்தோம். 13,400 சிறு பாசனப் பணிகளில் சிறிய, பெரிய ஏரிகளிலும், கால்வாய்களிலும் தூர் அகற்றினோம். 5,500 சாலைப் பணிகளையும், 683 மண்வளப் பாதுகாப்புப் பணிகளையும் மேற்கொண்டோம். வறட்சித் துயர் தணிப்புத் திட்டங்கள் உச்ச நிலையை அடைந்த ஒரு சமயத்தில் நமது மாநிலம் முழுவதிலுமாக 40,600 பணிகள் நிறைவேற்றப்பட்டு வந்தன. வறட்சியால் தாக்குண்ட பகுதிகளில் குடிநீர் வழங்கல் திட்டங்களை விரைவுபடுத்த நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் இன்னும் சிறப்பானவை

யாகும். இவற்றின் விளைவாக, 5·88 கோடி ரூபாய் செலவில் 34,265 கிணறுகள் தோண்டப்பட்டன. கடந்த மாதம் ஆளுநர் பேருரையின் பேரிலான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் இந்த விவரங்களைக் குறித்து முழுமையாக எடுத்துக்கூறியிருப்பதால் நான் மேலும் இவற்றைப்பற்றிக் குறிப்பிடுவது தேவையில்லை எனக் கருதுகிறேன். இம்மாநிலத்தைத் தாக்கிய வறட்சி இந்த அரசின் நிர்வாக, அரசியல் துணிவிற்கும் விவேகத்திற்கும் ஓர் அறைகூவலாக எழுந்தது என்பதை மட்டும் நான் இங்குக் குறிப்பிடுவது தேவையென நினைக்கிறேன். இந்த அறைகூவலை நாம் வெற்றியுடன் சமாளித்தோம் என்பதையும் கூறிக்கொள்ள விழைகின்றேன். வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு இம் மாநில அரசுக்கு அளிக்க முன்வந்துள்ள உதவியைக் குறித்து ஒரு தப்பான கருத்தை அரசியல் நோக்கத்துடன் சில வட்டாரங்களில் சொல்லி வருகிறார்கள். இந்தக் கருத்தைத் திருத்துவது மிக அவசியமாக இருக்கிறது. நமது மாண்புமிகு முதலமைச்சர் ஆளுநர் உரைமீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளிக்கையில் இதைக் குறிப்பிட்டார். மத்திய அரசின் வல்லுநர் குழு வறட்சி நிலைமைகளை ஆய்ந்தாராய்ந்த பிறகு கொடுத்த பரிந்துரைகளின்மீது கொடுக்கப்பட்டது தான் நமக்குக் கிடைத்த உதவி. நம் மாநிலத்துக்காகச் தனிச் சலுகை காட்டப்பட்டுள்ளது என்றோ வடக்கேயுள்ள சில மாநிலங்களுக்குக் கொடுக்காமல் நமக்குக் கொடுக்கப்பட்டது என்றோ சொல்லப்படுவது நம் மாநிலத்துக்குக் கெடுதலாக அமையும் என்று சுட்டிக்காட்ட நான் கடமைப் பட்டுள்ளேன்.

14. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி முதலிய மாநிலத்தின் சில பகுதிகளில் மழை பெய்யாது போனமை குறித்த சில அறிக்கைகளை இந்த நிலையில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும் என நான் கருதுகிறேன். வறட்சி நிலைமைகளைச் சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

### வேளாண்மை

15. அண்மை ஆண்டுகளில் வறட்சியின் காரணமாக வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டது. எனினும், கடந்த மூன்றாண்டுகளில் உணவு தானிய மொத்த உற்பத்தி 1966–67-ல் 57·9 லட்சம் டன்னாக இருந்ததற்கு மாறாக 1969–70-ல் 63 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. தற்போதைய அரசு செயல்படுத்திவரும் பசுமைப் புரட்சி வேளாண்மைத் துறையில் புதுமைத் தொழில் நுட்பங்களுக்கும் இம் மாநிலம் வழிவழியாகக் கையாண்டு வரும் வேளாண்மை முறைகளுக்குமிடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டம் மன நிறைவளிக்கிற வகையில் செயல்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான நமது முயற்சிகளின் முக்கிய அடிப்படையாயுள்ள மிகு பயன் தரும் பயிர் வகைகள் திட்டத்தின் கீழ் 1966–67-ல் 5·27 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டதற்கு மாறாக, 1968–69-ல் ஏறத்தாழ 17·08 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் சுமார் 24 லட்சம் ஏக்கர் நிலங்கள் இத் திட்டத்தின் கீழ் பயிரிடப்படுமென நாம் எதிர்பார்க்கிறோம். அடுத்த ஆண்டில் மிகு பயன் தரும் பயிர் வகைத் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்தில் நெற்பயிர் விளைவிக்கப்படும் பரப்பளவில் பாதியளவைக் கொணர இயலும் என எதிர்பார்க்கிறோம். ஐ.ஆர். 8-ன் கீழ் நடப்பு ஆண்டில் 7 லட்சம் ஏக்கர் பரப்பளவைக் கொணர இயலும் என நம்புகின்றோம். 1966–67-ல் எந்தப் பரப்பளவிலும் இவ்வகைப் பயிர் பயிரிடப்படவில்லை. சுவர்ணவாரி, குறுவைப் பருவங்களில் ஐ.ஆர். 8, அதன் துணை வகைகள் ஆகியவற்றின்கீழ் பெரும் பரப்பளவுகளைக் கொண்டு வர இயலும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். 1970–71 வரவு-செலவுத் திட்டம் வேளாண்மைப் பகுதி மும்முரத் திட்டத்தை திருச்சி மாவட்டத்திற்கு நீட்டிக்க வகை செய்கிறது. நமது வேளாண்மைத் துறை, விதைகளைத் தரக்கட்டுப்பாடு செய்யும் திட்டத்தைச் செயல்படுத்தி, விதைகளுக்குச் சான்றளிக்கும் திட்டத்தை இப்போது தொடங்கியுள்ளது. அடுத்த ஆண்டில் குடுமியாமலையிலும், சாக்கோட்டையிலும் விதை பக்குவப்படுத்தும் பிரிவுகள் நிறுவப்படும். மதுரையில் விதைப் பரிசோதனை



ஆய்வுக்கூடம் ஒன்று துவக்கப்படும். பரமக்குடியிலும், திருச்சியிலும் மண் வளப் பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் 1970–71-ல் செயல்படத் தொடங்கும். நைட்ரஜன் உர வகைகளைப் பயன்படுத்தும் அளவு 1966–67-ல் 85,000 டன்னாக இருந்ததற்கு மாறாக, 1969–70-ல் 1,33,000 டன் அளவிற்கு உயர்ந்துள்ளது. மிகு பயன்தரும் பயிர் வகைகள் திட்டத்தின் காரணமாகப் பூச்சிக்கொல்லிகள், மருந்து தெளிப்பான்கள் இவற்றைப் பயன்படுத்தும் அளவும் உயர்ந்துள்ளதென ஒப்புக்கொள்ளப்படுகிறது. 1966–67-ல் விமானம் மூலம் 28,000 ஏக்கர் நிலங்கள் மருந்து தெளிக்கப்பட்டதற்கு மாறாக, நடப்பு ஆண்டில் சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு விமானம் மூலம் மருந்து தெளிக்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கிறோம். 1970–71-ல் 10 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு இம் முறையில் மருந்து தெளிக்க நாம் திட்டமிட்டுள்ளோம். உணவு தானிய உற்பத்தி குறித்துப் பெருமளவு நாம் வலியுறுத்தும் அதே நேரத்தில், இம் மாநிலத்தில் பல்வகைப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டாலொழிய தனியொருவரின் வேளாண்மை வருமானத்தைப் பெருக்குவதென்பது இயலாது. எனவே, இம் மாநிலத்தில் வாணிபப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, பல வேலைத் திட்டங்களை நாம் மேற்கொண்டுள்ளோம். பருத்தி விளைவின்கீழ் உள்ள பரப்பளவு 1966–67-ல் 7·73 லட்சம் ஏக்கராவிலிருந்து அடுத்த ஆண்டில் 9·5 லட்சம் ஏக்கராவாக உயரும் என்றும், கரும்புப் பயிரின்கீழ் உள்ள பரப்பளவு 1966–67-ல் 2·22 லட்சம் ஏக்கர் என்பதிலிருந்து, நடப்பு ஆண்டில் 2·51 லட்சம் ஏக்கராக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆம்பலூர், பிரம்மபுரம் ஆகிய இடங்களில் இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளை நிறுவ நாம் முடிவு செய்துள்ளோம் என்பதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமென நான் நினைக்கிறேன்.

### கோவையில் வேளாண்மைக் பல்கலைக்கழகம்.

16. விஞ்ஞானத்தின் அடிப்படையில் வேளாண்மை நடத்துவதுதான் நம் உழவர் பெருமக்களின் வருமானத்தைப் பெருக்குவதற்குரிய வழியாகும். புதிய முறைகளை ஆராய்ச்சி செய்வதிலும் ஆராய்ச்சியின் வாயிலாகக் கிட்டியுள்ள தகவல்களைக் குடியானவர்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்வதிலும் நமது வல்லுநர்கள் தங்கள் கவனத்தைச செலுத்த வேண்டும். ஆராய்ச்சியும், ஆராய்ச்சியின் பலன்களை விரிவாக்குவதும் வேளாண்மைப் பல்கலைக் கழகமொன்றை நிறுவுவதால்தான் நன்கு முன்னேற முடியும் என்று அரசு கருதுகிறது. ஆகவே வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றைக் கோவையில் நிறுவுவதற்கு இம் மதிப்பீடுகளில் அடையாளத் தொகை ஒதுக்கியுள்ளோம்.

### மலைத்தோட்ட மேம்பாட்டுக் கழகம்.

17. அரசின் மற்றொரு முக்கியமான முடிவு, மலைத்தோட்ட மேம்பாட்டுக் கழகமொன்றை நிறுவுவதாகும். இக் கழகம் 10 கோடி ரூபாய் மூலதனத்துடன், கூடலூரில் உள்ள நிலங்களை மேம்படுத்தி இலங்கை அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்க உதவி செய்யும். இக் கழகம் பற்றிய விவரங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அடையாள நிதி ஒதுக்கம் மூலம் இதற்குச் சட்டமன்ற ஒப்புதலை நாம் வேண்டியுள்ளோம்.

### வேளாண்மைக் கடன் உதவி.

18. வேளாண்மைக்குப் போதிய நிதி உதவி கிடைக்காதது நமது வேளாண்மைப் பண்ணைகளைப் புதுப்பிப்பதில் இருந்த இடையூறுகளில் ஒன்றாகும். நாம் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ளுகிறவரை மாநில அரசிடம் உள்ள குறைந்த நிதிவாயில்களைக் கொண்டு நிலைமையைச் சரிக்கட்டுவதிலேயே நாட்டம் செலுத்தப்பட்டது. நமது வேளாண்மைப் பெருமக்களின் தேவைகளுக்காக நிறுவனக் கடன் உதவியைப் பெறுவதற்கான பல ஏற்பாடுகளை நாங்கள் செய்துள்ளோம். கூட்டுறவுக் கடன் துறையில் மட்டும் 1966–67-ல் குறுகிய காலக் கடனாகவும் நடுத்தரக் காலக் கடனாகவும் வழங்கப்பட்ட 31·44 கோடி ரூபாய் கடன் தொகை, 1968–69-ல் 44·12 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. நடப்பு ஆண்டில் அது 62·50 கோடி ரூபாயாக மேலும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசின்

[26th February 1970

அயரா முயற்சியால் இந்த ஆண்டு நிலவள வங்கிகளின் எண்ணிக்கை 105-லிருந்து 166 ஆக உயர்ந்துள்ளது. 1966–67-ல் வழங்கியுள்ள நீண்ட காலக் கடன்கள் 4·27 கோடி ரூபாயிலிருந்து 1968–69-ல் 14·67 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. 1970–71-ல் இது ரூபாய் 16 கோடிக்கும் அதிகமான அளவுக்கு மேலும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றிற்குமேல், வேளாண்மைக் கடன் உதவித் துறையில் வணிக வங்கிகளும் பங்கேற்கும்படிச் செய்யப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் இம் மாநிலத்தின் பற்பல மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் காரணமாக, மாநில அரசு அளிக்கும் உத்தர வாதப்படி இவ்வங்கிகள் உழவர்களுக்கு ஏறக்குறைய 80 லட்சம் ரூபாய் அளவுக்குச் கடன் வழ்ங்க முன்வந்துள்ளன. நாங்கள் பயன் படுத்திக் கொண்டுள்ள மூன்றாவது வகை நிறுவனக் கடன் உதவி, வேளாண்மை சார்ந்த தொழில்கள் கழகத்தின் மூலம் அளிக்கப்படுபவையாகும். இக் கழகத்தின் வாயிலாக விசையேற்றங்களையும் டிராக்டர்களையும் தவணைக் கொள்முதல் திட்டப்படி வாங்குவதற்கு 1968–69-ல் 121 லட்சம் ரூபாய் அளவுக்கும், நடப்பு ஆண்டில் 127 லட்சம் ரூபாய் அளவுக்கும் நாங்கள் கடன் வழங்கியுள்ளோம். 1966–67-ல் 209 டிராக்டர்கள் வழங்கப் பட்டதற்கு மாறாக, கடந்த மூன்றாண்டுகளில் இம் மாநில முன்னேற்ற நோக்குள்ள உழவர் பெருமக்களுக்கு 1,368 டிராக்டர்களை நாங்கள் வழங்கியுள்ளோம். கிராமங்களில், முந்தைய மூன்று திட்டக் கால அளவுகளில், அதாவது 15 ஆண்டுகளில், 2·9 லட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டுமே கிராமங்களில் மின் இணைப்பு வழங்கப்பட்ட விசையேற்றங்களின் மொத்த எண்ணிக்கை 1·7 லட்சம் ஆகும். மற்றும் மொத்தம் 72 கோடி ரூபாய் செலவில் 25,500 கிணறுகள், 13,200 குழாய்க் கிணறுகள், 15,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டுவதற்கும், 34,600 விசையேற்றங்களை நிறுவுவதற்கும், 3,000 டிராக்டர்களை வழங்குவதற்குமான திட்டத்தைப் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இவற்றுக்காக நாங்கள் தயாரித்துள்ள திட்ட அறிக்கையை வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் ஆய்வு செய்து வருகிறது. இத் திட்டத்தினால் இம் மாநிலத்தின் உணவு தானிய மொத்த உற்பத்தி 3·89 லட்சம் டன் அளவுக்கும், ரொக்கப் பயிர்களின் (Cash Crop) மொத்த உற்பத்தி 2·58 லட்சம் டன் அளவிற்கும் உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்திற்காக வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் தனது இசைவை விரைந்து அளிக்குமென நாங்கள் நம்புகிறோம். நிலவள வங்கிகள் இதற்காக வெளியிடவிருக்கும் கடன் ஈட்டு ஆவணங்களுக்குத் தேவையான அளவுக்கு மாநில அரசு நிதி அளிக்க வகை செய்யும்.

## உணவுக் கொள்கை.

19. 1967 மார்ச்சு மாதம் நாங்கள் பதவியேற்ற காலத்தில் இம் மாநிலத்தை எதிர்நோக்கியிருந்த கடுமைமிக்க உணவு நிலையைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். அரசின் கைவசமிருந்த இருப்புகள் குறைந்து குறிப்பாக சென்னை மாநகரில் பொதுப் பங்கீட்டு முறை பெரும்பாலும் அறவே செயலற்றுப் போய்விட்டது. மாநகரில் அப்பொழுது ஒரு சில நாட்களுக்குப் போதுமான அளவே அரிசி இருப்பு இருந்தது. அப்போது நிலவிய சூழல்களைக் கருதி, கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து நீடிக்கவும் இம் மாநிலத்தில் திறமையான பொதுப்பங்கீட்டு முறையை உருவாக்கவும் நாங்கள் முடிவு செய்தோம். கடந்த 3 ஆண்டுகளில் 24 லட்சம் டன் அரிசிக்கு மேல் எங்களால் கொள்முதல் செய்ய முடிந்தது. அவ்வாறு கொள்முதல் செய்த இருப்புக்களைக் கொண்டு, சென்னை மாநகரிலும், கோவையிலும் செயல்படுத்தப்பட்ட படி அரிசித் திட்டத்தின் தேவைகளுக்காக மட்டுமின்றி, மரபிலாப் பங்கீட்டு முறையின் (Informal Rationing) கீழ் அடங்கும் பற்பல பகுதிகளுக்கும் நாங்கள் உணவு தானியங்களைத் திறம்பட வழங்க முடிந்தது. ஆனால் நாங்கள் பதவியேற்ற காலத்திலேயே கட்டுப்பாடுகள் இனிமேல் தேவையில்லையென்று எங்களுக்குத் தெளிவாகத் தோன்றிய உடனே அவற்றை நீக்குவதற்குத் தயங்கமாட்டோம் என்பதையும் தெரிவித்திருந்தோம். இதற்கிணங்க கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென்கிற துணிவான முடிவைக் கடந்த திங்களில் எங்களால் எடுக்க முடிந்தது. அதே சமயத்தில் சமுதாயத்தின் எளிய பிரிவினருக்கு ரூபாய்க்கு ஒரு படி அரிசி அளிக்கும் சீர் நல்கும் திட்டத்தையும் நாங்கள் தொடர்ந்து நீடித்துள்ளோம். உணவு உற்பத்தி முனையில் நாம் ஆற்றியுள்ள சாதனையின் காரணமாகவே கட்டுப்பாடுகளை நீக்க முடிந்தது என்பதை நாம் உணர வேண்டும்.



26th February 1970]

## கால்நடை வளர்ப்புத் துறை.

20. கால்நடை வளர்ப்புத் துறையில் நடப்பு ஆண்டுவரை வெவ்வேறு செயற்கூறுகளுக்குத் தனித்தனி அதிகாரிகள் இருந்து வந்தார்கள். வட்டார அடிப்படையில் இல்லாமல் செயல் கூறுகளடிப்படையில் இத்துறை இயங்கி வந்தது. இந்த முறையை மாற்றியமைத்து வட்டார வாரியாக, பல பிரிவுகளையும் சீரமைத்து ஒரு புதிய ஏற்பாட்டை அரசு செய்துள்ளது. இவ்வேற்பாட்டின்படி கால்நடை வளர்ப்புத் துறையின் பற்பல பிரிவுகளிலும் அதன் பணிகளிலும் மேலும் அதிக அளவுக்கு அதிகாரங்களைப் பரவலாக்கவும் ஒழுங்கை ஏற்படுத்தும் பொருட்டும் இத்துறை இவ்வாறு சீரமைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, கால்நடை மருத்துவப் பணிகளின் பலன்கள் மேலும் சீரான வகையில் அனைத்துக் கிராமங்களுக்கும் கிட்டும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளன. சிக்கனமாக, பொருளாதார முறையில் உருப்பெற முடியாத கால்நடைப் பிரிவுகளை மூடவும் எஞ்சிய பிரிவுகள் சிக்கனமாகச் செயலாற்றுவதற்கான எளிய நடைமுறைகளை வகுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வளர்ச்சித் திட்டங்களும் கால்நடைக் கல்வித்துறைக்கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ள துறைத் தலைவர் ஒருவரின் மேற்பார்வையில் செயல்படும் வகையில் தனித் துறை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளமையும் கால்நடை பற்றிய கல்வி, ஆராய்ச்சி, வளர்ச்சி ஆகியவை வருங்காலத்தில் இத்துறை மேனிலையும் மேம்பாடும் அடைவதற்கான நல்ல அறிகுறிகளாகும்.

## பாற்பண்ணைத் திட்டம்.

21. பாற்பண்ணைத் திட்ட மேம்பாட்டைப் பொறுத்தவரையில், சென்னைப் பாற்பண்ணை—பால் வழங்கு திட்டம் செவ்விய முறையில் தொடர்ந்து பணியாற்றி வருகிறது என்பதை ஈண்டு நான் குறிப்பிட்ட விழைகிறேன். சென்னை மாநகரில் பால் பெருக்கத்திற்கும் அதனை வழங்குவதற்கும் உள்ள தேவையை ஈடு செய்யும் பொருட்டு தென் சென்னையில், கிண்டியின் அருகே, இரண்டாவது பால் பண்ணை ஒன்றை நிறுவ நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். பால் மிகுதியாகக் கிடைக்கும் காலத்தில் உபரிப் பாலை, பொடியாக மாற்றுவதற்காக மதுரையில் பாற்பொடித் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஆயினும், கிராமங்களிலிருந்து கிடைக்கும் பாலை வைத்துக்கொண்டு சென்னை மாநகரின் தேவைகள் முழுவதையும் ஈடுசெய்ய இயலாது. எனவே, பால்பண்ணை மேம்பாட்டுத் தேசிய வாரியத்தைக் கலந்து ஆலோசித்து சென்னையிலும், சென்னை மாநகரைச் சுற்றிலும் பால் விற்பனையையும் பால்பண்ணை மேம்பாட்டையும் ஊக்குவிக்க வகை செய்யும் திட்டம் ஒன்றை வகுக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது. உலக உணவுத் திட்டத்தின் மூலமாக பல்வேறு நாடுகள் நம் நாட்டிற்கு நன்கொடையாக வழங்கவிருக்கும் ஆடை எடுக்கப்பட்ட பாற்பொடியும், தூய வெண்ணையும் (butter oil) சென்னை மாநகர மக்களுக்கு வழங்கப்படும். இதிலிருந்து தயாரிக்கப்படும் பால், சென்னை பாற்பண்ணைத் திட்டங்கள் மூலம் வழங்கப்படும். பாற்பொடி விற்பனையிலிருந்து கிடைக்கும் தொகையைக் கொண்டு சூழல் நிதி ஒன்று அமைக்கப்பட்டு, அதில் நமக்கு ஒரு பங்கு கிடைக்கும். இம்மாநிலத்தின் பால் வளத்தைப் பெருக்கும் நோக்குடன், மாநிலத்தில் உள்ள கால்நடைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த நிதி பயன்படுத்தப்படும்.

**மீனளம்.**

22. மீன்வளத் திட்டங்களின் கீழ் நாம் இது வரையில் கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலம் முழுவதிலும் 382 விசைப் படகுகளை வழங்கியுள்ளோம். வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவிபெற்று மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பின் வாயிலாக 275 விசைப் படகுகளை வழங்கவும் நாம் கருதியுள்ளோம். விசைப்படகுகளை வழங்கும் திட்டத்தைப் பெருமளவில் நாம் செயல்படுத்தி வருவதால் படகுகளைக் கரை சேர்ப்பதற்கான வசதிகளையும், படகுகளை நிறுத்தி வைப்பதற்கான வசதிகளையும் நாம் மேம்பாடு செய்யவேண்டியுள்ளது. இந்தக் கருத்துடன் ராயபுரத்திலும், தூத்துக்குடியிலும் மீன்பிடித் துறைமுகங்களைக் கட்டுவதற்கான பணி இப்போது விரைவாக நடந்து வருகிறது. இவ்விரு திட்டங்களும் 1971–72-க்குள் முடிவடையக்கூடும்.

**பாசனம்.**

23. இம் மாநிலத்தின் பாசனத் திட்டங்கள் செம்மையாக மறு ஆய்வு செய்யப்பட்டுள்ளன. தற்போதைய பாசன ஏற்பாடுகளில் கிட்டும் நீர் வசதியைப் பெரும்பாலான உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் அந்த ஏற்பாடுகளைப் புதுப்பிக்கும் பணிகளுக்கு மிகச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் காவிரி கழி முகத்தில் உள்ள கால்வாய்களையும், வடிகால்களையும் மேம்பாடு செய்யும் பணி முதலிடம் பெறுகின்றது. நாற்பத்தைந்து கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு உலக வங்கி அனுப்பிய சிறப்புக் குழு ஒன்றினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கு விரைவில் இசைவு அளிக்கப்படுமென நாம் நம்புகிறோம். பழைய காவிரி கழிமுகப் பகுதியில் பாசன ஏற்பாடுகள் மிகத் தொன்மையானவை என்பதை இம் மன்றத்தினர் உணர்வர். கால்வாய்களுக்குக் காரை பூசுதல், மதகுகளையும், பொறி மதகுகளையும் கட்டுதல், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகளின் வாயிலாக நில அடிமட்ட நீர் வளங்களை முற்றிலும் பயன்படுத்துதல் போன்ற திட்டங்கள் நாம் தயாரித்துள்ள திட்ட அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. கழனிகளில் வடிகால் வசதிகளை அறிவியல் முறையில் வகுத்து உழவர் பெருமக்களுக்கு உதவி அளிக்கக் கருதப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கழனிகள் அவ்வப்போது வெள்ளப் பெருக்கினால் சேதமடையாமல் இருக்க புதிய வெள்ளத் தடுப்பு முறைகள் பின்பற்றப்படும். இத் திட்டத்தின்கீழ் கல்லணைக்கும் கீழணைக்கும் செய்யப்படவேண்டிய மிகத் தேவையான மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொள்ளும் கருத்துள்ளது. பண்ணைகளையும் முக்கிய அங்காடி நிலையங்களையும் இணைக்கும் சாலைகளையும் பாலங்களையும் அமைக்கவும் புதுமுறைச் சேமிப்புக் கிடங்குகளைக் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. இம் மேம்பாட்டுப் பணிகளுடன் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களுக்குக் கடன் வசதிகள் போதிய அளவிற்கு உயர்த்தப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. கடைகோடிப் பகுதிகளில் வடிகால் வசதிகளை மேம்பாடு செய்வதனால் அப்பகுதியில் நெல் விளைச்சலும் வாணிகப் பயிர் அறுவடையும் பெருகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருபோகம் விளைவிக்கும் பரப்பளவைக் கணிசமான அளவில் பெருக்கும் வண்ணம் தற்போதுள்ள நீர் வசதியை இயன்ற அளவு மேலும் திறம்படப் பயன்படுத்துவதுதான் இத் திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

24. பரம்பிக்குளம்-ஆழியாறு போன்ற திட்டங்களில் பெரும் பாசன வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவதும் முக்கியமான தேவையாகும். நாங்கள் பதவி ஏற்ற பின்னர் இது குறித்து நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்துடன் இசைவான திட்டம் ஒன்றை வகுக்கும் முயற்சியைப் புதுப்பித்து உரமூட்டியுள்ளோம். கேரள, தமிழ் நாடு முதலமைச்சர்கள் இருவரும் சந்தித்து ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள் என்பதை இம் மன்றம் அறியும். இதற்கான விவரங்கள் அலுவலர்களால் இப்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதன்மீது விரைவில் இறுதியான, நட்புச்சூழ்நிலையிலான ஒரு ஏற்பாடு உருவாகுமென நான் எதிர்பார்க்கிறேன். அடுத்த ஆண்டு வரவு-செலவுத்திட்டத்தில் நமது மாநிலப் பெரும் பாசனத் திட்டங்களுக்காக ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் நாம் ஒதுக்கியுள்ளோம். இதில் 2·7 கோடி ரூபாய் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்துக்கு உரியதாகும். சித்தார்-பட்டணங்கால் (Chittar-Pattanamkal) திட்டம், மணிமுத்தா நதித் திட்டம் ஆகிய இவ்விரு முக்கிய திட்டங்களும் அடுத்த ஆண்டில் நிறைவேறுமென எதிர்பார்க்கப்படுகின்றன. இவை தவிர, நான்காம் திட்டத்தில் நாம் சேர்த்துள்ள புதிய பாசனத் திட்டங்களைத் தொடங்கிவைக்கும் வகையில் 50 லட்சம் ரூபாய்க்கு மேல் ஒதுக்கியுள்ளோம்.



**மின் சக்தித் திட்டங்கள்.**

25. மின்சாரத் திட்டங்களின் வளர்ச்சியைக் காண்போமாயின், கடந்த இரு ஆண்டுகளில் 6,705 கிராமங்களுக்கு மின் வசதி அளித்துள்ளோம். 1970 மார்ச் திங்களுக்குள் மேலும் 4,160 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்க முடியுமென எதிர்பார்க்கிறோம். 1967–68-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 25,022 கிராமங்களுக்கு மட்டுமே மின்வசதி அளிக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, 1970–71 இறுதிக்குள் 42,387 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்வசதி அளித்துவிடுவோம். இம் மாநிலத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் இயன்றவரை குறுகிய கால அளவிற்குள் மின்வசதியை ஏற்படுத்த நாம் திட்டமிட்டு வருகிறோம். நம்முடைய இந்த முடிவு 1970–71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கிராம மின்வசதித் திட்டத்திற்காகப் பெருமளவில் 21·5 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்திருப்பதன் வாயிலாக எதிரொலிக்கின்றது. ஆனால், 1966–67-ஆம் ஆண்டில் இத் திட்டங்களுக்காக நமது செலவினம் 8·26 கோடி ரூபாய் அளவிலேயே நின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நடப்பு ஆண்டில் 5,857 கிராமங்களில் தெரு மின் விளக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும். அடுத்த ஆண்டில் 8,514 கிராமங்களில் இத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதற்கும் மின்சாரம் வழங்குவது எவ்வாறு முக்கியமானதோ அவ்வாறே நமது மின் இணைப்பில் போதிய மின் உற்பத்தித் திறனை அமைப்பதும் முக்கியமானதாகும். நெய்வேலி உட்பட தற்போது நிறுவியுள்ள நமது மின் உற்பத்தித் திறன் 1,570 மெ. வா. ஆகும். நடப்பு ஆண்டின் இறுதிக்குள் இதை 1,720 மெ.வா. ஆக உயர்த்தவும், 1970–71 இறுதிக்குள் 2,295 மெ. வா. ஆக உயர்த்தவும் நாம் எதிர்பார்க்கிறோம். நடப்பு ஆண்டில் ஆழியாறு மின்நிலையம் (60 மெ. வா.) சென்னை மின்நிலைய விரிவு நான்காம் நிலை (30 மெ.வா.) எண்ணூர் (60 மெ. வா.) ஆகிய இந்த மின்சார உற்பத்தித் திட்டங்களின் மூலம் நமது மின் இணைப்பில் கூடுதல் உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டுள்ளது. 1970–71-ல் சோலையாறு முதல் மின் நிலையம் (70 மெ. வா.), சோலையாறு இரண்டாம் மின் நிலையம் (25 மெ. வா.), கோதையாறு முதல் மின் நிலையம் (60 மெ. வா), கோதையாறு இரண்டாம் மின் நிலையம் (40 மெ. வா.), நெய்வேலி (100 மெ. வா) எண்ணூர் (280 மெ.வா.) ஆகிய திட்டங்களின் வாயிலாகக் கூடுதல் உற்பத்தித் திறன் கிட்டும்.

**தொழில் வளர்ச்சி.**

26. கடந்த மூன்றாண்டுகளில் இந்தியப் பொருளாதாரத்தில் நிலவி வந்த பொது மந்த நிலை காரணமாக இந்நாடு முழுவதிலும் உள்ள தொழில் முனைவர்கள் புதிய தொழில்களைத் தொடங்கப் பெரிதும் விருப்பமில்லாமல் இருந்தனர். எனினும், இம் மாநிலத்தில் உள்ள ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் பலரைப் புதிய திட்டங்களைத் தொடங்கும் வண்ணம் நம்மால் ஊக்கப்படுத்த முடிந்தது. இம் மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் 1966 இறுதியில் 6,993-ஆக இருந்ததற்கு மாறாக 1968 இறுதியில் 7,394-ஆக அதிகரித்துள்ளது. தூத்துக்குடியில் 52 கோடி ரூபாய் செலவில் கூட்டுத்துறை (Joint Sector) உரத்திட்டம் ஒன்றிற்கான பணிகளைத் தொடங்கியுள்ளோம். நாக்பால் பெட்ரோ கெமிக்கல் ரிஃபைனிங் லிமிடெட் (Nagpal Petro-Chemical Refining Project என்கிற 5 கோடி ரூபாய் அளவிலான

மற்றொரு திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் நடப்பு ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியுள்ள சென்னை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலையின் (Madras Oil Refineries) பொருள்களைப் பயன்படுத்தும். சென்னை உரத் தொழிற்சாலை மீதான பணிகள் விரைந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. தனியார் துறையில் பிளாஸ்டிக் பொருள்கள் ரெசின்கள், ரசாயனப் பொருள்கள் இவற்றை உற்பத்தி செய்வதற்கான புதிய திட்டப்பணி ஒன்று தூத்துக்குடியில் நிறுவப்பட்டு வருகிறது.

27. இவை தவிர சென்னையில் பெட்ரோ-கெமிக்கல் பல்வகைப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ இயலுமா என்பதைப் பற்றியும் அரசு ஆய்வு அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது. இத் திட்டம் இயன்ற விரைவில் நிறைவேற்றப்படுவதற்கு உறுதி அளிக்கும் வகையில் இந்திய அரசுடன் நாம் விவாதங்களை மேற்கொண்டுள்ளோம். ஏராளமான படித்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் இதனால் வேலை வாய்ப்பு கிடைக்கும். இத் திட்டத்தை விரைவாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி நாம் இந்திய அரசிடம் வற்புறுத்தியுள்ளோம். இத் திட்டத்திற்கு ரூ. 90 கோடி முதல் ரூ. 100 கோடி வரையில் முதலீடு செய்ய வேண்டியிருக்கும். இது குறித்து இறுதியான முடிவு எடுக்கும் வரையில் நைலான் தொழிற்சாலை, ரப்பர் வட்டைச் சரடு ( Tyre cord plant) தொழிற்சாலை, கார்பன்-பிளாக் என்று சொல்லப்படும் ரசாயனப் பொருள் தயாரிப்பதற்கான தொழிற்சாலை போன்ற நடுத்தரத் தொழிற் பிரிவுகளை பெட்ரோ-கெமிக்கல் தொழிலில் தொடங்குவதற்கு இந்திய அரசு அதிகாரமளிக்குமென நாம் நம்புகிறோம்.

28. சேலம் உருக்காலைத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் முதல் நிலைப் பணியாக, கஞ்சமலையில் முதல் சுரங்கத்தை வெட்டும் பணியை தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளும். இக் கழகம் அரக்கோணத்தில் கன்காஸ்ட் தொழிற்சாலையையும் (Concast plant), ஆலங்குளத்தில் சிமிட்டித் தொழிற்சாலையையும் நிறுவி வருகிறது. மற்றும் இக் கழகம் இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை, துணுக்கு இரும்புத் தொழிற்சாலை (Sponge iron plant), சோடியம் ஹைட்ரோ சல்பேட், சோடா காரம் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை, அம்மோனியம் குளோரைடு தொழிற்சாலை ஆகியவற்றை நிறுவுவதற்கான செயற் குறிப்புகளை விரைந்து மேற்கொண்டு வருகிறது.

29. பல்வேறு அடிப்படைத் தொழில்களை நிறுவுவதற்கு இசைவளிக்குமாறு இந்திய அரசினை நாம் வலியுறுத்தி வந்துள்ளோம். இவற்றில், கூட்டுத்துறையில், தொடங்கப்படவிருக்கிற துருப்பிடிக்காத உருக்கு உற்பத்தித் தொழிற்சாலை, அரக்கோணத்தில் தொடங்கப்படவிருக்கிற விளிம்பற்ற உருக்குக் குழாய்கள் உற்பத்தித் தொழிற்சாலை, பிலிப்ஸ் நிறுவனத்தின் உடனுழைப்புடன் மின் கருவிகள் உற்பத்தித் திட்டம் ஆகியவை அடங்கும். இத்தொழிற் திட்டங்களைத் தொடங்குவது குறித்து இந்திய அரசு விரைவாகத் தனது முடிவை அறிவிக்குமென நம்புகிறோம்.

30. அம்பத்தூர்-கிண்டி தொழிற்பேட்டையில் உள்ள தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும் 1970–71 வரவுசெலவுத் திட்டம் வகை செய்கிறது. சரிகை உற்பத்தி செய்வதற்காகக் காஞ்சீபுரத்தில் தொழிற்சாலை ஒன்றை ரூ. 25 லட்சம் செலவில் நிறுவத் திட்டமிட்டுள்ளோம். மாநிலத் துறையில் நிறுவப்படவிருக்கும் தொழில்களுள் இது முக்கியமான ஒன்றாகும். கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில், கைத்தறித்துணி விற்பனைக்குக் கழிவுத் தொகை வழங்கும் திட்டத்தின் வாயிலாக அத் துறைக்கு அரசு தொடர்ந்து உதவியளித்து வரும். 1970–71-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்கென 90 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது.

### பஞ்சாலைத் தொழில்.

31. நான் இதற்கு முன்னர் குறிப்பிட்டிருந்ததைப் போல 1966 முதல் 1968 வரையுள்ள ஆண்டுகளில் இந்தியப் பொருளாதாரம் மிகக் கடுமையான மந்த நிலையைக் காணநேரிட்டது. தமிழ் நாட்டைப் பொறுத்த





வரையில் பஞ்சாலைகள் மூடப்பட்டது இதன் உடனடி விளைவாகும். முக்கியமாக வடபுல மாநிலங்களில்தான் நம்முடைய நூல் விற்கப்படுகின்றது. இங்கு நம் நூலுக்கான தேவை பெரிதும் குறைந்ததே மேற்குறிப்பிட்ட ஆலைகள் மூடப்பட்டதற்குக் காரணமாகும். மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு மாநில அரசு தொடர்ச்சியாகப் பல ஏற்பாடுகளை மேற்கொண்டது. நொடித்த பல ஆலைகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு உதவி அளிக்கும் வகையில் 222 லட்சம் அளவிற்கு நாம் உத்தரவாதங்கள் அளித்துள்ளோம். இதற்குமுன் நூல் துணிகள்மீது விதிக்கப்பட்டு வந்த உயரிய ஆயத் தீர்வைகளைத் தளர்த்தும்படி இந்திய அரசின் நிதி அமைச்சகத்தை வற்புறுத்தி இதில் நாம் வெற்றி கண்டோம். நம்மைப் பொறுத்தவரையில், நூலின் மீதான விற்பனை வரியில் 50 சத வீதத் தொகையை ஐந்தாண்டுகளுக்கு வட்டியில்லாக் கடனாகப் பயன்படுத்திக் கொள்ள நொடித்த துணி ஆலைகளுக்கு நாம் அனுமதி அளித்துள்ளோம். மேலும், துணி ஆலைகள் அனைத்துக்கும் மின்சக்தி பயன்படுத்துவதற்கான வரியை 40 சத வீதத்திலிருந்து 30 சத வீதமாகக் குறைத்துள்ளோம். தமிழ் நாடு பஞ்சாலைக் கழகம் ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளோம். இக் கழகம் நான்கு ஆலைகளை எடுத்து நடத்தி வருகிறது. தமிழ் நாடு அரசு மேற்கொண்ட இந்த ஏற்பாடுகளின் விளைவாக, இதற்கு முன் மூடிக்கிடந்த 27 ஆலைகளில் 13 ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டன. 1969-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் வேலையற்று இருந்த பஞ்சாலைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், இத்தகைய தொழிலாளரின் மொத்த எண்ணிக்கையைக் கணிசமான அளவில் நாம் குறைத்துள்ளோம்.

32. நமது பஞ்சாலைகளைக் குறித்து மற்றொன்றும் சொல்ல விழைகின்றேன். இப்பொழுதுதான் இவ்வாலைகள் மத்திய அரசு வரி விதிப்புகளின் பெருஞ் சுமையிலிருந்து விடுபட்டு இயங்கத் தொடங்கியுள்ளன. அண்மையில் பஞ்சு முதலிய மூலப்பொருள்களின் மீது கொடுக்கப்படும் கடன்களைக், கட்டுப்படுத்தி மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. இதன் உள் நோக்கம் விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவது என்பது உண்மையேயானாலும், பஞ்சாலைகளை, சிறப்பாக மூடிக்கிடந்து தற்போதுதான் திறந்துள்ள பஞ்சாலைகளை—இக்கட்டுப்பாடுகள் பாதிக்குமோ என இவ்வரசு அஞ்சுகிறது. வங்கிகளிலிருந்து வாங்கும் கடன் வசதிகள்தான் பஞ்சாலைகளின் அன்றாடரொக்கத்தேவைகளுக்குப் பயன்படுபவை. இவ்வண்ணம் நிலைமை இருப்பதால் தற்போதைய கடன் கட்டுப்பாடுகளின் விளைவாக ஆலைகள் திரும்பவும் மூடப்படாமலிருக்க மத்திய அரசு ஆவன செய்ய வேண்டும். மூலப் பொருள்களைப் பொறுத்தவரையில் தேவைகளைக் கணக்கிலெடுத்து அதிகப் படியாக பஞ்சு முதலியன இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்வதால் வாணிகச் சூதாட்டங்களை தடுத்து விலை வாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று இவ்வரசு கருதுகிறது. இந்த ஏற்பாட்டினால் பொதுமக்களின் அன்றாடத் தேவைப் பொருளான துணி வகைகளின் விலைகளை நிலைக்கச் செய்ய முடியும்.

### சாலைகள்.

33. இம்மாநிலச் சாலைகளை அமைக்கவும் மேனிலைப் படுத்தவும் உரிய திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட்டு வந்துள்ளது. சாலை பேணுதல் பணிக்கான செலவு 1966–67-ல் 581 லட்ச ரூபாயாக இருந்ததற்கு மாறாக, 1970–71-ல் 719 லட்ச ரூபாய்க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, சாலை பேணுதல் மானியத்தைப் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்குவது குறித்து சாலைகளின் மைல் நீள அடிப்படையில் மேலும் சீரான ஒரு ஏற்பாட்டைக் கடைபிடிக்க நாம் வகை செய்துள்ளோம். நகராட்சிகளின் அதிகார வரம்புக்குள் உள்ள சாலைப் பணிகளுக்கு முதல் முறையாக நிதி உதவி அளிக்கக் கருதியுள்ளோம். இதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்திருக்கிறோம். 1966–67-ஆம் ஆண்டில் சாலைகளுக்கான முதலீடு 124 லட்சம் ரூபாயாக இருந்ததற்கு மாறாக, 1970–71-ஆம் ஆண்டில் இம் முதலீடு ரூ. 161 லட்சமாக அதிகரித்துள்ளதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் நாட்டத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

### சமூகப் பணிகள்.

34. நிதிவாயில்கள் கிட்டும் நிலை மிகக் கடுமையாக இருந்தபோதிலும் நாங்கள் பதவியிலிருந்துவரும் ஆண்டுகளில் சமூகப் பணிகளுக்கான செலவினத்தைக் கணிசமான அளவுக்கு உயர்த்த வகை செய்துள்ளோம். கல்விக்கான செலவினம் 1966–67-ல் 43·86 கோடி ரூபாயாக இருந்ததற்கு மாருக, 1970–71-ல் 66·83 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. வருங்கால மக்களுக்கு இன்றியமையாத இந்த முதலீட்டில் மாநில அரசு எந்த அளவுக்குப் பொறுப்பேற்றுள்ளது என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். 6—11 வயதுத் தொகுதி மாணவர்களுக்காக 2,720 ஆசிரியர்களையும், 11—14 வயதுத் தொகுதி மாணவர்களுக்காக 1,930 ஆசிரியர்களையும், 14—17 வயதுத் தொகுதி மாணவர்களுக்காக 1,320 பி.டி. ஆசிரியர்களையும் நியமிக்க 1970—71 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள பல்வேறு பள்ளிகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு வகை செய்வதே இதன் நோக்கமாகும். கல்வி வசதிகளை விரிவு படுத்துவதற்காக போதிய அளவுக்கு வகை செய்துள்ள அதே சமயத்தில் கல்வியின் தரத்தைப் பேணி வருவதற்கும், மேம்படுத்துவதற்கும், குறிப்பாகப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்துவதற்கும் நாம் சிறப்பிடம் அளிக்க வேண்டியுள்ளது.

35. கடந்த பல ஆண்டுகளாக நிதிப்பற்றுக்குறை காரணமாக சுகாதாரப் பணிகளை நிறைவேற்றுவதில் கட்டுப்பாடுகள் இருந்தன. நமக்குள்ள நிதி நிலை வரம்புக்குள் நாம் இந்த வரையறைகளைத் தளர்த்தி 1967–70-ஆம் ஆண்டுக்கால அளவில் 113 தொடக்கச் சுகாதார நிலையங்களைத் தொடங்கியுள்ளோம். பல்லடம், கள்ளக்குறிச்சி, ஓமலூர், பண்ணுருட்டி, ஜலகண்டபுரம், பட்டுக்கோட்டை, பண்ணைக்குளம், ஜல்லிப்பட்டி, மாயூரம், கன்னியாகுமரி, வத்திராயிருப்பு, ஆலங்குடி, வளவனூர், பழனி போன்ற பற்பல இடங்களில் புதிய வார்டுகளைத் திறப்பதன் வாயிலாக மருத்துவ வசதிகளை விரிவுபடுத்திவதற்கு அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்துள்ளோம் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கவனித்திருக்கலாம். திருவண்ணாமலை, நாமக்கல், திருவாரூர், ஆகிய இடங்களில் உள்ள மருத்துவ மனைகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டும் திட்டத்தையும் நாம் மேற்கொண்டுள்ளோம். ஈரோடு, விழுப்புரம், ஆகிய இடங்களில் மார்பு சிகிச்சை மருத்துவ மனைகள் திறக்கப்படும். ஆத்தூர், அரியலூர், சிவகங்கை, ஆகிய இடங்களில் எக்ஸ்-ரே தொகுதிகள் அமைக்கப்படும். கண்விழி விறைப்பு நோய் மருத்துவமனை (Glaucoma unit) ஒன்று மதுரையில் நிறுவப்படும். இம்மாநிலத்தில் தொழுநோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் இரண்டு நிறுவப்படும். இம்மாநிலததிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு பற்பல மேம்பாடுகள் செய்வதற்காகவும் வகை செய்துள்ளோம். இக்காரியத்திற்காக 1970–71-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மொத்தம் ரூ. 35 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டம்.

36. உழைக்கும் மக்களின் நலனுக்கான தொழிலாளர் நல ஈட்டுறுதி திட்டத்தை செயல்படுத்துவதில் நாம் பெருமளவு முன்னேறியுள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். இத் திட்டத்தில் மேன்மேலும் பல தொழிலாளர்களைச் சேர்த்துக் கொள்வதன்மூலம் மருத்துவ வசதிகளை மேம்பாடு செய்துள்ளோம். மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்துவதன் வாயிலாக அகப்பிணியாளர்களுக்கு (In-patient) மேலும் வசதிகளைச் செய்து கொடுத்துள்ளோம். இத்திட்டம் பிற தரங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்குப் பயன்படும்படியும் அதனை விரிவாக்கியுள்ளோம். ஆனல், தொழிலாளர் நல ஈட்டுறுதிக் கழகம் நமக்கு ஏமாற்றமளிக்கும் வகையில் செலவைப் பகிர்ந்து கொள்வதில், ஒரு தொழிலாளிக்கு 50 ரூபாய் என்று உச்ச வரம்பு கட்டியுள்ளது. இது அக்கழகம் தன்னிச்சையாக மேற்கொண்டுள்ள உண்மைக்கு மாருன ஒரு நிலையாகும். இதன் காரணமாக நடப்புச்



செலவின அளவிலும் மாநில அரசு இதற்கென ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 70 லட்சம் ரூபாய் கூடுதல் பொறுப்பை ஏற்க வேண்டி வரும். இப்புதிய வரையறை, கழகமும், மாநில அரசுகளும் செய்து கொண்ட ஏற்பாட்டின் மெய்க் கருத்துக்கு மாருக உள்ளது. இது குறித்து இந்திய அரசுடன் தனியாகக் கலந்து ஆலோசிக்கலாமென நாங்கள் கருதுகிறோம்.

### பின்தங்கிய வகுப்பினர் நலன்

37. சமூகத்தில் வசதி குறைந்த பிரிவினர்களின் நலன் அரசின் சிறப்பான நாட்டத்தைத் தொடர்ந்து ஈர்த்து வந்துள்ளது. கடந்த மூன்ருண்டுகளில் பின் தங்கிய வகுப்பினர்களின் நலனுக்கான முதலீடுகளை 1966–67-இல் ஒதுக்கியிருந்த 184 லட்சம் ரூபாயிலிருந்து 1969–70-இல் 314 லட்சம் ரூபாயாக அரசு உயர்த்தியுள்ளது. பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வழங்கப்படும் படிப்பு உதவிச் சம்பளங்களுக்கான தொகை 1966–67-இல் 94 லட்சம் ரூபாயிலிருந்து 1969–70-இல் 246 லட்சம் ரூபாய்க்கும், 1970–71-இல் 260 லட்சம் ரூபாய்க்கும் உயர்த்தப்பட்டுள்ளது. பின் தங்கிய வகுப்பினர்களின் நலனுக்காக, நீண்டகாலத்திட்டங்களை உருவாக்கும் தேவையை உணர்ந்து பின் தங்கிய வகுப்பினர் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதை இம் மன்றத்தினர் அறிவர். அரிசன நலனுக்கான முதலீடும் 1966–67-இல் 405 லட்சம் ரூபாய்க்கு வகை செய்யப்பட்டிருந்ததற்கு மாருக, 1970–71-இல் 519 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 1970–71-ஆம் ஆண்டில் புதிதாக 22 அரசு மாணவர் இல்லங்களைத் திறக்கவும், தற்போது தனியார் துறையினுல் நடத்தப்பட்டுவரும் மானியம் பெறும் 20 மாணவர் இல்லங்களை எடுத்துக் கொள்ளவும் நாங்கள் கருதியுள்ளோம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

38. இது குறித்து ஒரு முக்கிய கருத்தை இம்மன்றத்தினரின் நாட்டத்துக்குக் கொண்டுவர எண்ணுகின்றேன். அரிசன நலனுக்கான முதலீட்டில் பெரும்பகுதி இந்திய அரசிடமிருந்து பெறப்படுகிறதென்றும் இந்த அரசு இத் திட்டங்களுக்காகப் பெருமளவில் உதவி அளிப்பதில்லையென்றும் சிலநேரங்களில் சொல்லப்படுகிறது. நடப்பு ஆண்டில் அரிசன நல, படிப்பு உதவிச் சம்பளங்களுக்காக 143 லட்சம் ரூபாய் முதலீடு செய்திருப்பதில், படிப்பு உதவிச் சம்பளங்களுக்குக்காக இந்திய அரசு ஒதுக்கியுள்ள உதவித் தொகை 5 லட்சம் ரூபாய் மட்டுமே என்பதை நான் இங்கு திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். 1970–71-ஆம் ஆண்டிலும் அரிசன நல, படிப்புதவித் தொகைகளுக்கான செலவு ரூ. 148 லட்சத்தில் மத்திய உதவி நடப்பாண்டின் அளவிலேயே இருக்கக்கூடும். அரிசன நலத் திட்டத்தை மொத்தமாக எடுத்துக்கொண்டால், 1969–70-ஆம் ஆண்டில் ரூ. 519 லட்சம் செலவிடப்படவிருக்க, மத்திய அரசிடமிருந்து ரூ. 25 லட்சமே உதவியாகக் கிடைக்கும். இத் திட்டத்திற்காக 1970–71-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 539 லட்சம் ஒதுக்கியுள்ளபோதிலும், மத்திய அரசிடமிருந்து நடப்பாண்டு அளவைவிடக் கணிசமாக உயர்ந்த உதவியேதும் கிட்டவாய்ப்பில்லை. அரிசன நலனுக்காக இந்திய அரசு ஒதுக்கிய உதவித் தொகையின் அளவு கணிசமாகக் குறைந்துள்ள போதிலும் இம் மாநிலம் தனது சமூகக் கொள்கைக்கு இணங்க இத் திட்டங்களுக்காக முதலீடுகளைத் தொடர்ந்து வகை செய்து வந்துள்ளதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்வார்களெனக் கருதுகின்றேன்.

### கிராமங்களில் வேலையின்மையை நீக்கும் சமூக நலத்திட்டம்.

39. கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு வசதிகள் பெருகவேண்டுமென்ற நோக்கத்துடன் புதியதொரு திட்டத்தை இம் மதிப்பீடுகளில் சேர்த்துள்ளோம். இத் திட்டத்தின்கீழ் இணைப்புச்சாலைகள் அமைத்தல், மகப்பேறு நிலையங்கள், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், நீர்வழங்கல் பணியை விரிவுபடுத்துதல் ஆகியவற்றிற்கென 1970–71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கியுள்ளோம். இப் பணிகள் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் நிலவிவரும் பொருளாதார சூழ்நிலையைப் பொறுத்து,

பற்பல பணிகளுக்காகும் செலவில் 35 முதல் 50 சதவீதம் வரையில் வெவ்வேறு வீதங்களில் உதவித்தொகை அளிப்பதற்காக இத்தொகை பயன்படுத்திக்கொள்ளப்படும். இப் பணிகளுக்காகும் எஞ்சிய செலவு, உள்ளூர் மக்களின் நன்கொடைகள்மூலம் சரிக்கட்டப்படும். ஒதுக்கப்பட்டுள்ள ஒரு கோடி ரூபாயில், ரூபாய் 25 லட்சம் குறிப்பாக அரிசனக் குடியிருப்புகளில் மேம்பாட்டுப்பணிகளை நிறைவேற்றுவதற்காகச் செலவிடப்படும். இப்பணிகளுக்கான செலவு முழுவதையும் அரசு ஏற்கும். சமூகத்தின் தடைகளால் அவதிப்பட்டுவரும் அரிசனங்களின் குறைபாடுகளைக் களைவதற்குப் படிப்படியான திட்டம் ஒன்றை மேற்கொள்ளவேண்டுமென்று அரசு உணர்ந்துள்ளது. இம் மாநிலம் முழுவதிலும், அரிசனங்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இணைப்புச் சாலைகள், தூயநீர்வழங்கல், வீட்டு மனைகள் ஆகியவற்றிற்கு வகை செய்வதற்காக கால எல்லை வரையறுக்கப்பட்ட இணைந்த திட்டமொன்றை வகுக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. அரிசன-நல-கிராம வளர்ச்சித் துறைகளுக்கான முறையான வரவு-செலவுத் திட்டங்களில் இப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகைகளைக் கருத்தில் கொண்டோமாயின், 1970-71ஆம் ஆண்டில் மேலே குறிப்பிடப்பட்ட ரூபாய் 25 லட்சத்தையும் சேர்த்து மொத்தம் ரூபாய் 100 லட்சத்திற்குமேல் இத் திட்டங்களில் செலவு செய்யப்படும் என்பதைக் காணலாம். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் இம் மாநிலம் முழுவதிலுமுள்ள அரிசனக் குடியிருப்புகள் அனைத்திலும் இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துவதற்கும், தூய நீர் வழங்கல் போன்ற வசதிகள் அளிப்பதற்கும் ஏற்ற வகையில் இத் திட்டத்தை விரைவுபடுத்த நாம் திட்டமிட்டுள்ளோம்.

## குடிசைப் பகுதிகள்.

40. சென்னை மாநகரில் உள்ள குடிசை வாழ் மக்களின் பிரச்சினை அரசின் நாட்டத்தை ஈர்த்து வந்துள்ள மற்றொரு சிக்கலாகும். சென்னை மாநகரின் மக்கள் தொகையில், ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதியினர் இத்தகைய குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முந்திய மூன்று திட்டங்களின் கால அளவில் மொத்தம் 2,302 குடியிருப்புகள் மட்டுமே கட்டிக்கொடுக்கப்பட்டிருக்க, 1967 முதல் 1970 வரையுள்ள கால அளவில் 5,828 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டும் ஒரு திட்டத்தையும் நாம் மேற்கொண்டு இதுகாறும் 3,895 வீடுகள் கட்டப்பட்டு விட்டன. இவ்வாறு இருப்பினும், இச்சிக்கலின் விளிம்பையே இதுவரை தொட்டுள்ளோம் என்பதை நாம் அறிகிறோம். சென்னை மாநகரில் குடிசைக் குடியிருப்புகள் அச்சுறுத்தும் வகையில் வளர்ந்து வருவதைத் தடுப்பதற்குத் துணிவான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வது அவசியமாகும். இந்த கருத்துடன் சென்னை மாநகரில் குடிசைகளை அகற்றுவதற்கான படிப்படியான திட்டம் ஒன்றை அடுத்த ஏழு ஆண்டுகளுக்குள் மேற்கொள்ள வேண்டுமென்கிற கொள்கை முடிவை நாம் எடுத்துள்ளோம். 1970-71-இல் குடிசை மாற்றத் திட்டத்திற்காக ஒரு கோடி ரூபாய் வகை செய்துள்ளோம். ஈண்டு நாம் செய்யவிருக்கும் முதலீடுகளிலிருந்து இன்னும் அதிக அளவில் நலம் பெறும் பொருட்டு, இத் துறையில் நாம் நிறைவேற்றி வந்துள்ள பற்பல திட்டங்களைச் சீரமைப்பது அவசியமாகும். சென்னை மாநகரில் தற்போது இருக்கும் குடிசை வாழ் மக்களின் வாழ்க்கைச் சூழ்நிலையை மாற்றியமைப்பதோடு, புதிய குடிசைகள் தோன்றுமல் இருக்க ஆவன செய்வதும் இன்றியமையாததாகும்.

## தலை நகர வளர்ச்சி.

41. குடிசைவாழ் மக்களின் பிரச்சினையைத் தலைநகர் வளர்ச்சியின் ஒரு பகுதியாகத்தான் அணுகவேண்டும். தலைநகரச் சிக்கல்கள் பற்றிய திட்ட அறிக்கை யொன்றை உலக வங்கிக்கு அனுப்பும் நோக்கத்துடன் அரசு தீட்டிவருகிறது. திருவள்ளூர், செங்கற்பட்டு, கும்மிடிபூண்டி ஆகிய இடங்களில் சிறு நகரங்களை வளர்ப்பதும், எண்ணூர், அரக்கோணம், ஆவடி



ஆலந்தூர், பல்லாவரம், பூவிருந்தவல்லி, தாம்பரம் போன்ற இடங்களில் வளர்ச்சி வட்டாரங்களை (Growth Centres) மேம்பாடு செய்வதும் இந்தத் திட்ட அறிக்கையில் ஆலோசிக்கப்பட்டுள்ள முக்கிய முறைகளாகும். அடுத்த சில மாதங்களில் திட்ட அறிக்கை தயாராகிவிடுமென நாம் எதிர்பார்க்கிறோம். வீட்டு வசதித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுவரும் 20 முதல் 40 கோடி ரூபாய் அளவிலான சுழல் நிதியை (Revolving Fund) நலம் பயக்கும் வகையில் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும் நாம் நம்புகிறோம். சென்னை மாநகரில் நில மேம்பாடு, வீட்டு வசதிச் சிக்கல்களை ஒருமுகமாக எதிர்த்துப் போராடுவதற்கு இது வகை செய்யுமென்றும் நாம் எதிர்பார்க்கிறோம். சென்னை மாநகராட்சி, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நடப்பாண்டில் மூன்று கோடி ரூபாய் அளவிற்கு உதவி பெற்றுள்ளது. அடுத்த ஆண்டிலும் இந்த அளவு உதவி கிட்டக்கூடும். இதன் துணைகொண்டு மாநகராட்சி தனது மூலதனத் திட்டங்களின் மீதான முதலீடுகளைப் பெருமளவில் உயர்த்திடக் கூடும்.

## நீர்வழங்கல் வடிகால் திட்டம்.

42. இம் மாநிலத்தில் பற்பல பகுதிகளுக்குத் தூய நீர் வழங்கும் திட்டங்களுக்காக நாம் முதன்மையிடம் அளித்து வந்துள்ளோம். வீராணம் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். 1970-71-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில், இத் திட்டத்திற்கென 734 லட்சம் ரூபாய் அளவுக்குப் பெருமளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. கேரள மாநில நீரினைப் பகிர்ந்து கொள்வது குறித்து அந்த மாநிலத்துடன் ஏற்பட்ட இணக்கமான முடிவின் விளைவாக சிறுவாணி நீர் வழங்குத் திட்டத்தினை மேற்கொள்ளும் நிலையில் நாம் இருப்போம். இந்தத் திட்டத்திற்காக ஏறக்குறைய 5 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படும். இத் திட்டம் கோயம்புத்தூருக்கு மட்டுமின்றி வழியிலுள்ள 9 கிராமங்களுக்கும், கோயம்புத்தூரின் புற எல்லையிலுள்ள பல கிராமங்களுக்கும் பயன்படும். ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உதவியுடன் நகர நீர் வழங்குத் திட்டங்களுக்காகவும் வடிகால் திட்டங்களுக்காகவும் கணிசமான முதலீடுகளை நம்மால் பெற முடிந்துள்ளது. 1966-67-இல் 214 லட்சம் ரூபாய் மட்டுமே ஆண்டு முதலீடாக ஒதுக்கப்பட்டிருந்ததற்கு மாறாக, நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும் முதலீடு 362 லட்சமாக உள்ளது. இதில், ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் நமக்கு வழங்கியுள்ள 192 லட்சம் ரூபாயும் அடங்கும். இதுவரை நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் நீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்கென மொத்தம் 14 கோடி ரூபாய் அளவிலான திட்டம் ஒன்றுக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து நாம் கடனுதவிக்கு ஒப்புதல் பெற்றுள்ளோம். அத்தகைய திட்டங்களுக்காக 1970-71-ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 396 லட்சம் ரூபாய் முதலீடு செய்ய வகை செய்துள்ளோம். மற்றும் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்துக்கு நாம் விரைவில் அனுப்பிவைக்கவிருக்கும் பல புதிய திட்டங்களுக்காக அக்கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று இந்த முதலீட்டை மேலும் உயர்த்த முடியுமென நாம் எதிர்ப்பார்க்கிறோம். கிராமப்புற நீர் வழங்கல் திட்டங்களின் கீழும், 1966-67-இல் வகை செய்திருந்த 74 லட்சம் ரூபாய் முதலீடுகளிலிருந்து நடப்பாண்டில் 140 லட்சம் ரூபாய் அளவுக்கு அந்த முதலீட்டை நாம் உயர்த்தியுள்ளோம். நீர்வழங்கல்-வடிகால் துறைகளில் பற்பல பணிகளை ஒருமுகப்படுத்துவதற்காக நடப்பாண்டில் நாம் மேற் கொண்டுள்ள முக்கிய முடிவு நீர்வழங்கல்-வடிகால் வாரியம் ஒன்றை அமைப்பது குறித்ததாகும். விரைவில் சட்டப்படி அமைக்கப்படவிருக்கும் இவ்வாரியம் மேலும் நிதி வாயில்களைத் திரட்டி ஒவ்வொரு கிராமத்திற்கும் படிப்படியான ஒரு திட்டத்தின்கீழ் போதிய நீர் வழங்கல் வசதியை ஏற்படுத்த வேண்டுமென்கிற நமது நோக்கம் ஈடேறும் வகையில் தனது பணிகளை நிறைவேற்றும்.

## 1970-71 ஆண்டுத் திட்டத்தின் சிறப்புக் கூறுகள்.

**திரு. ஆர். கிருஷ்ணசமி நாயுடு :** நம்முடைய மாநிலத்தில் எந்தெந்த மொழிகளில் இஷ்டப் பாடம் எடுத்துப் படிக்க வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இங்கே அதுபற்றிய குறிப்பு இல்லை. பல மொழிகளுக்கு வாய்ப்பளிக்கப் பட்டிருக்கிறது. தமிழ், ஆங்கிலம் இரண்டும் கட்டாயப் பாடமாக ஆக்கப் பட்டிருக்கிறது. மற்றப் பள்ளிகளில் முழுவதும் தாய்மொழியாகக் கொண்டிருக்கிறவர்களுக்கு அந்தந்த மொழிகளுக்கு இடம் ஒதுக்கி வசதி செய்திருக்கிறோம். எந்தெந்த மொழிகளுக்கு என்ற தகவல் இல்லை.

### *Examination system in the High Schools.*

*102 *Q.*—THIRU G. VASANTHA PAI (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) the steps taken to reform the examination system in the High Schools after 1967 ; and

(*b*) the amount allotted for the specific purpose of improving the quality of teaching and evaluation of the performance of students at the High Schools ?

### உயர்நிலைப் பள்ளிகளில் தேர்வு முறை

**திரு. ஜி. வசந்த பாய்** (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) **:** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1967-க்குப் பிறகு உயர்நிலைப் பள்ளிகளில் தேர்வு முறையைச் சீரமைப்பது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) உயர்நிலைப் பள்ளிகளில் பாடங்கள் கற்பிப்பதன் தரத்தை உயர்த்துவதற்கும், மாணவர்களின் திறமையை அறிவதற்கும் ஒதுக்கப் பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) பள்ளித் தேர்வு சீர்த்திருத்தத்தின் முதல் நடவடிக்கையாக, புது டில்லி, கல்வி ஆராய்ச்சி, பயிற்சித் தேசியக்குழுவின் ஆதரவில், தேர்ந்தெடுக்கப்பட்ட வினாத்தாள் தயாரிப்பவர்களுக்காகவும், நேடுதல் செய்யும் அதிகாரிகளுக்காகவும் மூன்று பணிக்களரிகள் நடத்தப்பட்டுள்ளன.





(இ) கீழ்க்காணும் திட்டங்களுக்காக நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 50·38 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது :—

| | ரூபாய் லட்சத்தில். |
|---|---|
| (1) அறிவியல் பாடங்கள் பயிலும் முறையின் மேம்பாட்டுக்காக .. .. .. .. .. | 39·32 |
| (2) நூலகங்கள் மேம்பாட்டுக்காக .. .. .. | 3·00 |
| (3) ஆசிரியர்கள் பணி இருப்புப் பயிற்சி .. .. | 7·49 |
| (4) இயக்குநர் அலுவலகத்தில் தேர்வுப் பிரிவில் பணியாளரை அதிகரித்தல் .. .. .. | 0·06 |
| (5) மாநிலக் கல்வி நிறுவன வளர்ச்சி .. .. | 0·51 |

**திரு. ஜி. சுவாமிநாதன் ;** தலைவர் அவர்களே, பள்ளி இறுதித் தேர்வில் கிட்டத்தட்ட பாதி மாணவர்களுக்கு மேல் எப்போதுமே தோல்வி அடைகிறார்கள். ஆகவே, இந்தப் பள்ளி இறுதித் தேர்வு எழுதுகிற மாணவர்கள் எந்தெந்தப் பாடங்களில் தேர்வு அடைகிறார்களோ, அவற்றைத் தவிர மற்றப் பாடங்களுக்கு மட்டும் தேர்வு நடத்தி, அவர்கள் வெற்றி அடைந்ததாக அறிவித்தால் நல்லது என்ற கருத்து கூறப் பட்டிருக்கிறது. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதன்பேரில் நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** அப்படி மற்றப்பாடங்களை எடுத்து எழுதுகிற மாணவர்களே முடித்தவர்களே ஆவார்கள் தவிர, தேர்ச்சி பெற்றவர்களாக மாட்டார்கள். இப்போது அப்படிப்பட்ட யோசனையில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணாமி நாயுடு :** சில வருஷங்களுக்கு முன்னால் டாக்டர் மு. வரதராஜனார் இந்தப் பள்ளி இறுதித் தேர்வு முறையை எப்படி நடத்தலாம் என்பதைப்பற்றி ஒரு யோசனையை எழுதியிருந்தார்கள். அதை அரசாங்கத்திற்கும் அனுப்பியிருக்கிறார். அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. அப்படி ஏதாவது குறிப்பு இருந்தால் பரிசீலனை செய்யலாம். தேர்வு முறையை எப்படி வைத்து தேர்வுள்ளதாக ஆக்கலாம் என்ற யோசனை பல்வேறு வகையில் எடுத்துச் சொல்லப் பட்டது. "இன்டர்னல் சிஸ்டம்" என்று ஒன்றைச் சொல்கிறார்கள். அது ஆராயப்படுகிறது. இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இதைப் பற்றித் தக்க ஆலோசனைக்குப் பிறகு ஆராயப்படும்.

THIRU D. SANTOSHAM : The question that I wanted to ask has been partly answered by the Hon. Minister. I wanted to know whether the system of internal assessment was in vogue in all the High Schools with regard to promotion from lower classes to higher classes. If not, will the Government try it in some of the Government High Schools ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி, அந்த முறையும் ஆராயப்பட்டு வருகிறது. எந்த அளவுக்கு அதை நடைமுறைப்படுத்தலாம் என்பதைப் பற்றியும், எந்த அளவுக்கு அதனால் ஏற்படுகிற கஷ்டங்களை வேறு பல நிலைமைகளால் தீர்க்கலாம் என்பதும் ஆராய்ச்சிக் கட்டத்தில் இருக்கின்றன.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, தற்காலத் தேர்வு முறையில் இருக்கிற குறைபாடு, சம்பிரதாயமாக மாணவர்களின் நினைவை மாத்திரம் சோதிப்பதாக அது இருக்கிறது என்று கூறுகிறார்கள். கீழ் வகுப்புகளில் தேர்வு என்பது " மெமரி டெஸ்டிங் " என்ற முறையில் இருப்பதால், வினாத்தாள்களின் மாதிரியை மாற்றி அமைத்தால் ஒழிய, இந்தக் குறைபாடு இருந்துகொண்டுதான் இருக்கும் என்ற கருத்து அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு வகுப்பிலிருந்து மேல் வகுப்பிற்குச் செல்வதற்கு ஆண்டு முழுவதும் வினாக்களுக்கு எப்படி

[28th February 1970

விடையளிக்கிறார்கள் என்பதைப் பார்த்துத்தான் தமிழ்நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிகளிலும் தேர்வளிக்கும் முறையைக் கடைப்பிடிக்கிறார்கள். அது அரசாங்கத்திற்கும் தெரியும் என்று நினைக்கிறேன். ஆகையால் இந்தத் தேர்வு முறையில் புரட்சிகரமான ஒரு மாறுதலை ஏற்படுத்தி, மாணவர்களின் நினைவாற்றலை மாத்திரம் சோதனை செய்வது என்பதோடு, அவர்கள் அறிவையும் சோதிக்கும் அளவில் மாற்றியமைக்க அரசாங்கம் என்ன வழிவகை செய்ய உத்தேசித்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** கல்வி ஆராய்ச்சி பற்றிய தேசியப் பயிற்சிக் குழு சார்பாக வினாத்தாள் எப்படியிருக்க வேண்டுமென்று பரிசீலிக்கப்பட்டது. "வொர்க் ஷாப்" மாடலில் யோசனை சொல்லப்பட்டது. ஆண்டின் இறுதியில் வினாக்களைத் தந்து மாணவர்களை நினைவாற்றல் அடிப்படையில் தேர்ந்தெடுக்கும் முறையை விட ஆண்டு முழுவதும் அவர்களின் அறிவுத்திறன், ஆற்றல் திறன் ஆகியவற்றைக் கண்டறிந்து அந்த வகையிலே பரிசீலிக்கலாம் என்ற கருத்து இருக்கிறது. அது பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தலாம் என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு, நடவடிக்கை எடுக்கலாம்.

*Government Headquarters Hospital at Coimbatore.*

*103 *Q.*—THIRU G. VASANTHA PAI (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether there is any proposal to shift the Government Headquarters Hospital at Coimbatore to another place ; and

(*b*) if so, the names of places examined for this purpose ?

**அரசு தலைமை மருத்துவமனை, கோயம்புத்தூர்**

**திரு. ஜி. வசந்த பாய்** (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கோயம்புத்தூரிலுள்ள அரசு தலைமையிட மருத்துவமனையை வேறோரிடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், இக்காரியத்திற்காக ஆய்வு செய்யப்பட்ட இடங்களின் பெயர்கள் யாவை?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஜி. சாமிநாதன் :** மாவட்ட அரசு மருத்துவ மனை மாவட்டங்களின் நடுவில் இல்லாமல் மிகவும் ஓரமாகத் தள்ளப்படுகிறது. உதாரணமாக, தஞ்சையைப் பொறுத்தவரை, நாகப்பட்டிணத்தில் அரசு மருத்துவ மனை வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் மாவட்ட மக்களுக்குப் பெரும் அசௌகரியம் ஏற்படுகிறது என்பதை மனதில் கொண்டு மாவட்ட அரசு மருத்துவ மனைகளை அமைக்கும்போது, மாவட்டத்திற்கு நடுவில் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாவட்டத்தில் மிக முக்கியமான இடத்தில் மருத்துவக் கல்லூரி அமைகிற காரணத்தால், மருத்துவ மனைகள் வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லப்படும் நிலைமை ஏற்படுகிறது. அப்போது அடுத்துப் பெரிதாக இருக்கிற மருத்துவ மனை எது என்று கண்டறிந்து, கல்லூரிக்குப் பக்கத்தில் இல்லாமல், கொஞ்சம் தொலைவில் இருக்கவேண்டுமென்பதால், இருக்கிற மருத்துவமனை பெரியதாக இருக்கவேண்டுமென்பதால், அப்படிச் செய்யப்படுகிறது. தஞ்சையைப் பொறுத்தவரையில் நாகப்பட்டிணம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது, கோவையைப் பொறுத்தவரையில், ஈரோடா, திருப்பூரா என்று பரிசீலனையில் இருக்கிறது. நான்கு நகரங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்புகள் வந்தபிறகு, தக்க முடிவுகளை அதைப் பற்றி எடுக்கலாம்.



28th February 1970]

**திரு. சா. கணேசன் :** அதேபோல ராமனுதபுரம் மாவட்டத்தின்-தென் கடைசியில் இருக்கிற ராமனுதபுரத்தில்—மாவட்ட மருத்துவ மனை இருக்க அதற்கு வடக்கே தான் ராமனுதபுரம் முழுவதும் அடங்கியிருக்கிறது என்று சொல்கிற அளவுக்கு ஜில்லா அமைப்பு இருப்பதால், ஏதாவது ஒரு நடு பகுதியில் அமைத்து எல்லோருக்கும் பயன்படுமாறு செய்கிற முறையை அரசு மேற்கொண்டு அதுபோலவே பல்வேறு ஜில்லாக்களையும் கணித்து, தக்க மத்திய இடங்களில் மாவட்ட மருத்துவ மனைகளை அமைக்க வழிவகையை ஏற்பாடு செய்திருக்கிறதா அல்லது செய்ய முன் வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன். :** ராமனுதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெயர்தான் ராமனுதபுரம் என்று இருக்கிறதே தவிர, தலைமையிடம் மதுரையில் தான் இருக்கிறது. வேறு முக்கிய பகுதிகள் அந்த ஜில்லாவில் இருக்கும். மருத்துவ மனை ராமனுதபுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பெரிய மருத்துவ மனையாகக் கட்டப்பட்டு அங்கே கொண்டுபோகப்பட்டிருக்கிறது. ராமனுதபுரம் தலைமையிடத்தை அங்கேயே கொண்டுவந்து சேர்க்க வேண்டுமென்று போராடிக் கொண்டிருக்கும் நேரத்தில், இப்போதிருக்கிற ஒன்றை எடுத்து வேறு இடத்தில் கொண்டுபோக முடியாமல் இருக்கிறது. அது பொருந்திவராது. ராமனுதபுரத்தைப் பொறுத்தவரையில், அங்கேயே மாவட்ட மருத்துவ மனை இருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து, பெரிய செலவில் கட்டிடம் கட்டப்பட்டிருப்பதால், இப்போது அதை மாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படாது என்று கருதுகிறேன்.

*Post-Graduate Centre in Coimbatore.*

*104 *Q.*—THIRU G. VASANTHA PAI (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the amount allotted by the University Grants Commission for the establishment of the Madras University Post-Graduate Centre in Coimbatore ; and

(*b*) the progress of the proposed centre on date ?

**கோயம்புத்தூருக்கு பட்ட மேற்படிப்பு நிலையம்.**

**திரு. ஜி. வசந்தபாய்** (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கோயம்புத்தூரில் சென்னை பல்கலைக் கழகப் பட்ட மேற்படிப்பு நிலையம் ஒன்றை நிறுவுவதற்காக, பல்கலைக் கழக மானியக் குழுவினால் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) இந்நாள் வரை பல்கலைக்கழகப் பட்ட மேற்படிப்பு நிலையம் ஒன்றை நிறுவுவது பற்றிய செயற்குறிப்பு எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** கோயம்புத்தூரில் ஒரு பட்ட மேற்படிப்பு மையம் நிறுவுவதற்கான திட்டத்திற்கு இன்னும் பல்கலைக் கழக மானியக் குழு ஒப்புதல் அளிக்கவில்லை.

*Thanjavur Medical College Hospital.*

*105 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that visitors who come to see patients in Thanjavur Medical College Hospital are put to hardship for want of a waiting room ; and

(*b*) if so, the action taken thereon ?

[28th February 1970

**தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் உள்ள நோயாளிகளைப் பார்க்க வருபவர்களுக்குத் தங்கும் அறை ஒன்று இன்மையால் அவர்கள் இடர்ப்பாடு அடைகின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) எழாது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், நோயாளிகளைப் பார்க்க வருகிறவர்கள் அதிகம் பேர். அது மட்டுமல்லாமல் பகல் நேரங்களில் அறுவை சிகிச்சை நடக்கும்போது, நூற்றுக் கணக்கான உறவினர்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் வந்து வெட்ட வெளியில் துர்பாக்கியமான நிலையில் வெயிலிலும் மழையிலும் நிற்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பார்க்க வருகிறவர்கள் தங்குவதற்குக் குறைந்த செலவிலேனும் ஒரு கட்டிடத்தைக் கட்டினால், பார்க்க வருகின்ற உறவினர்களுக்கும் நிம்மதியாக இருக்கும். சிகிச்சை பெறும் நோயாளிக்கு என்ன ஆகிறதோ என்ற மனக் கஷ்டத்தோடு பார்க்க வருகிறவர்களுக்கும் உறவினர்களுக்கும் இது போன்ற அசௌகரியம் ஏற்படாமல் இருக்கும். தஞ்சை மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்பதினால் அதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** மருத்துவக் கல்லூரி இயக்குனர் அவர்கள் பார்வையாளர்கள் தங்குவதற்கு ஏற்ப ரூ. 25 ஆயிரம் செலவில் ஓய்வுக் கூடம் கட்ட வேண்டுமென்ற வரைவுத் திட்டத்தை அனுப்பியிருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் அதுபற்றி முடிவு எடுக்கலாம்.

*Sangeetha Mahal at Thanjavur.*

*106 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the Sangeetha Mahal at Thanjavur is not maintained properly ; and

(*b*) if so, the action taken by the Government in this regard ?

**சங்கீத மஹால், தஞ்சாவூர்.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) தஞ்சாவூரிலுள்ள சங்கீத மஹால் சரிவரப் பேணப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :—**

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.



28th February 1970]

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தஞ்சையில் இருக்கிற சங்கீத மகால் மிகப் பழைய நாளில் அரசர்களால் கட்டப்பட்டுள்ள மாளிகை. கிட்டத்தட்ட 8 பத்து ஆண்டு முன் வரை அந்த இடம் நெல்லை அடைத்து வைக்கிற கோடவுனாகப் பயன்படுத்தப்பட்டது. பிறகுதான் அது சீராக்கப்பட்டு அரசுக் கூட்டங்கள், கலாசாரக் கூட்டங்கள், சங்கீத நிகழ்ச்சிகள் நடக்கும் முறையில் மாவட்ட ஆட்சியாளர் ஏற்பாடு செய்தார். இன்று அது மோசமான நிலையில் சரியாக பராமரிக்காமல் இருக்கிறது. அதற்கு அரசு உடனடியாக ஏற்பாடு செய்து சீரமைக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பொறியாளர் அவர்கள் கொடுத்திருக்கிற தகவல்படி, அந்தக் கட்டிடம் நன்றாகவே இருக்கிறது. சிறுசிறு பணிகள், ஜன்னல்கள், கதவுகள், தரை போன்றவை பழுது பார்க்க ரூ. 11 ஆயிரத்திற்கு வரைவுத் திட்டம் போட்டு அனுப்பியிருக்கிறார் பொறியாளர். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. பழுது பார்க்கப்பட்டுவிட்டால், அந்த மண்டபம் நல்ல முறையில் பயன்படுத்தப்படலாம். உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போல, நாற்காலிகள், பெஞ்சுகள் வாங்க வேண்டுமென்றால், தனியாகத் திட்டம் போட வேண்டும். நாளடைவில் அரசாங்கம் அதைக் கவனித்து தக்க முடிவு எடுக்கலாம்.

*Primary Health Centre.*

*107 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state —

(*a*) whether the construction of a Primary Health Centre for Mudukulathur Panchayat Union has been sanctioned ;

(*b*) if so, when it was sanctioned ; and

(*c*) the reasons for not taking up the construction work till now ?

**ஆரம்ப சுகாதார நிலையம்.**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்பட்டது ?

(உ) இன்னும் கட்டிட வேலைகள் துவக்கப்படாமல் இருப்பதற்கான காரணமென்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:**

(அ) & (இ) இல்லை.

(உ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

*Police Personnel.*

*99 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the Daily Allowance paid to (1) Inspectors, (2) Sub-Inspectors and (3) Constables of the Police Department ;

(*b*) when it was fixed ; and

c) whether there is any proposal to revise their Daily Allowance ?

[28th February 1970

**காவல் துறையைச் சேர்ந்த அலுவலர்கள்.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) காவல் துறையைச் சேர்ந்த (1) நேடுநர்கள் (Inspectors) (2) துணை நேடுநர்கள் (Sub-Inspectors), (3) காவலர்கள் ஆகியவர்களுக்கு வழங்கப்படும் நாட்படி எவ்வளவு ?

(இ) அது எப்போது முடிவு செய்யப்பட்டது ?

(உ) அவர்களது நாட்படியைத் திருத்தியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** (அ), (இ) & (உ) மேலவை முன் விவர அறிக்கை a ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

Thiru D. SANTOSHAM : May I know, Sir, how this rate compares with the rates given to some employees in other Departments ? For example, how does the daily allowance given to Sub-Inspector compare with the D.A. given to the Deputy Tahsildar and the amount given to the Circle Inspector with the Tahsildar ? May I know, Sir, whether it is higher or lower ?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** அவைகளையெல்லாம் ஒப்பிட்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத்தான் போலீஸ் கமிஷன் இப்போது போடப்பட்டிருக்கிறது.

**திரு எஸ். ராகவானந்தம் :** காவல் துறையிலுள்ள சாதாரணமான காவலர்களுக்கு ஒரு நாளைக்கு $1\frac{1}{4}$ ரூபாய் படி கிடைக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர்கள் ஒரு நாளைக்கு ரூ. $2\frac{1}{4}$ பெறுகிறார்கள். சர்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு ரூ. $4\frac{1}{2}$ கிடைக்கிறது. ஒரு இடத்தில் தங்கி உணவுக்கு செலவிடவே ரூ. 3, 4 ஆகிவிடும். தங்குவதற்கு வேறு செலவாகும். குற்றவாளிகளைப் பிடிப்பதற்காகப் பல இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலைமையில் மிகுந்த சிரமப்படுகிறார்கள் என்பதை கருத்தில் கொண்டு அந்தக் குழுவின் அறிக்கை வருவதற்கு முன் இடைக்காலத்தில் ஏதாவது அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** எல்லாவற்றிலுமே இடைக்கால நிவாரணம் என்று போனல், பிறகு நிதி நிலைமை மிகுந்த தொந்தரவுக்கு உள்ளாகும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பிரச்னையை இப்போது அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு எழுப்பாமல் இருப்பது நல்லது. போலீசாருக்கு அளிக்கப்படும் தினப்படி மிகுந்த குறைவாக இருக்கிறது என்பதை இந்த அரசு நன்ருக உணர்ந்திருக்கிறது. எதிர்க் கட்சியில் இருந்தபோதே, அதைச் சுட்டிக்காட்டியிருக்கிரேம். அப்படிச் சுட்டிக்காட்டிய நாங்கள் ஆளவந்திருக்கிற நேரத்தில், நிச்சயமாக அவர்களைக் கைவிட்டுவிடமாட்டோம் என்ற உறுதியை நான் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### *Misconduct of a Sub-Inspector and Constables*

***100 *Q.*—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—**

**(*a*) whether the Government have received any complaint from the public that one Sub-Inspector and two constables assaulted an accused and put him to shame in the middle of the street in Muthukulathur ; and**

**(*b*) if so, the action taken thereon ?**

a Printed as Appendix I.



28th February 1970]

**துணை நேடுநர், இரு காவலர்கள் முறையின்றி நடந்த நிகழ்ச்சி.**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) முதுகுளத்தூரில் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், இரு காவலர்களும் குற்றவாளி ஒருவரை நடுத்தெருவில் மானபங்கம் செய்து கொடுமை செய்ததாக அரசுக்கு பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி** (அ) ஆம்.

(இ) குற்றம்சாட்டப்பட்ட குமரய்யா எனபவர் 24-5-1969 அன்று காவலில் வைக்கப்பட்டிருந்தபோது இலஞ்சம்பூர், முதுகுளத்தூர் துணை நேடுநர்கள் இருவரும் குமரய்யாவை அழைத்துச் சென்ற இரண்டு காவலர்களும் சேர்ந்து அவரை அவமானப்படுத்தி தவருக நடந்ததற்காக தமிழ்நாடு காவல்துறை சார்நிலைப் பணியாளர் ஒழுக்கம் மேல்முறையீடு விதிகளின் 3 (அ) பிரிவின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (துணை நேடுநர்களிருவரும்) வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டனர். 2478-ம் எண்ணுள்ள காவலரும் 614-ம் எண்ணுள்ள காவலரும் முறையே ராஜபாளையத்திற்கும் சிவகாசிக்கும் மாற்றப்பட்டனர்.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, ஒருவர் குற்றம் புரிந்தார் என்ருல் அவரை அதற்காக வேறு இடத்திற்கு மாற்றுவது என்பது தண்டனையாகுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி :** இதிலே குமரய்யா என்பவரும் அவரது மனைவியும் சாராய விற்பனையில் ஈடுபட்டபோது போலீசார் அதில் தலையிட்டு அவர்களைக் கைது செய்யப்போனபோது, குமரய்யா இவர்களை கத்தி கொண்டு தாக்கினர். அப்படித் தாக்கியதன் காரணமாக, அவர்கள் ஓடி வந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட நேரத்தில், அவர்களை அவமானப்படுத்துகிற நோக்கத்தோடு போலீஸ்காரர்கள் அழைத்துச் சென்றிருக்கிருர்கள். ஆகவே அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு அது விசாரணையில் இருக்கிறது. அந்த விசாரணை முடிவதற்குள் அவர்கள் வேறு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிருர்கள்.

### *Drought Relief Funds.*

b *64 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of cases of embezzlement and misappropriation of drought relief funds brought to the notice of the Directorate of Vigilance and Anti-Corruption for the period ending 31st August 1969 ;

(*b*) the amount involved in these cases ; and

(*c*) the amount recovered, if any ?

**திரு. வி. ஈஸ்வர மூர்த்தி:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 31-8-1969-ம் ஆண்டு முடிய வறட்சி துயர் தணிப்பு நிதியைக் கையாடல் செய்தது, பணமோசடி செய்தது, பற்றி ஒழுக்கக் கண்காணிப்பு—லஞ்ச ஊழல் இயக்குநரின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை எத்தனை?

(இ) இந்நேர்வுகளில் கையாடப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) தொகை ஏதேனும் வசூலிக்கப்பட்டிருப்பின், அத்தொகை யாது ?

b Postponed from the list for 26th February 1970.

[28th February 1970

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) 12.
(இ) ரூபாய் 94,000.
(உ) இல்லை.

*Pre-Examination Training Centre for All-India Services, Madras.*

*108 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) the number of Scheduled Castes and Scheduled Tribes candidates admitted year-wise in the Pre-Examination Training Centre for All India services, Madras, so far; and

(b) among them, the number that come out successful in the examination.

**அனைத்திந்தியப் பணிகளுக்கென தேர்வுக்கு முன் பயிற்சி தரும் கல்வி நிலையம்.**

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னையில் உள்ள அனைத்திந்தியப் பணிகளுக்கென "தேர்வுக்கு முன் பயிற்சி தரும்" கல்வி நிலையத்தில் (Pre-examination centre) ஆண்டு வாரியாக இதுவரை சேர்க்கப்பட்ட அரிசனங்கள், பழங்குடி மக்கள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுள் தேர்வில் தேறியவர்கள் எத்தனை பேர் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) இப்பயிற்சி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கையும் அவர்களில் தேறினவர்கள் விவரமும் வருமாறு :—

| | சேர்த்துக் கொள்ளப் பட்டவர்கள். | | | தேறியவர்கள். | | |
|---|---|---|---|---|---|---|
| | அரிசனங்கள். | பழங்குடி மக்கள் | மொத்தம் | அரிசனங்கள். | பழங்குடி மக்கள் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 1966-67 (15-11-1966 முதல் 31—10—1967 வரை) | 37 | 5 | 42 | .. | .. | .. |
| 2 1967-68 (15-11-1967 முதல் 31-10-1968 வரை). | 36 | 2 | 38 | .. | 1 (மத்திய அரசைச் சார்ந்த 1, 2-ஆம் வகுப்புப் பணிகளுக்கு தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்.) | .. |
| 3 1968-69 (15-11-1968 முதல் 31-10-1969 வரை). | 24 | 4 | 28 | 1969 அக்டோபர் நவம்பர் திங்களில் தேர்வு எழுதியுள்ளார். | | |



28th February 1970]

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, 42 பேர் பயிற்சி பெற்று ஒருவரும் தேறவில்லை என்ற நிலைமை இருப்பதால், இதற்கு என்ன காரணம் என்று ஆராயப்பட்டதா ? அவர்களுக்கு வேண்டிய பல்வேறு பிரிவுகளுக்குத் தகுந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குப் போதனை கொடுக்கிறார்களா ? சேர்க்கப்படுகிறவர்களுக்குக் குறைந்த தகுதி என்ன ? 42 பேர்களில் ஒருவருமே தேறவில்லை. 38 பேர்களுக்கு ஒருவர்தான் தேறினார் என்றால், ஆசிரியர்கள் குறைவாக இருந்தால் கூட, ஆசிரியர்களை நியமித்து நல்ல போதனை அளித்து அதிகமானவர்கள் தேறுவதற்கு ஏற்பாடு செய்ய வழி வகை செய்வார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 42 பேர்களில் எழுத்து மூலமாகத் தேறி திறமையான 16 மாணவர்கள் நேர்முகத் தேர்வுக்குச் சென்றனர். ஆனால் நேர்முகத் தேர்வுக்கு அனுப்பப்படும்போது, அதில் யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஒருவர்தான் இரண்டாவது ஆண்டு மறுபடியும் சென்று தேறினார். மலைச்சாமி, நீலகண்டராஜ் என்பவர்கள் இரண்டாவது ஆண்டு மீண்டும் தேர்வுக்குச் சென்று தேர்ச்சி பெற்றார்கள். அதேபோல இரண்டாவது ஆண்டில் 34 பேர்களில் 9 பேர் நேர்முகத் தேர்வுக்கு அனுப்பப்பட்டார்கள். அதிலும் 3 பேரில் முதலில் ஒருவர் பிறகு இருவர் என்று தனித்தனியாக நேர்முகத் தேர்வுக்குச் சென்று இந்தியப் பொருளாதாரப் பட்டத் தேர்வில் இரண்டு பேர், ஐ.பி.எஸ். ஒருவர் என்றும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அது குறித்து மத்திய அரசாங்கத்திற்கு எழுதினோம். பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் அடிக்கடி கேள்வி கேட்பதால் தகவல் அறிகிறோம். நாம் தருகிற பயிற்சி மூலம் எழுத்துத் தேர்வில் வெற்றி பெறுகிறார்கள். நேர்முகத் தேர்வில் பிற மாநில மாணவர்கள் மத்தியில், குறிப்பாக தமிழகத்திலிருந்து செல்கிறவர்கள் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை என்ற குறைபாடு அனைவர் உள்ளத்திலும் இருந்து அது சுட்டிக்காட்டப்படுகிறது. நேர்முகத் தேர்வில் அவர்கள் கேட்கிற கேள்விகளுக்குச் சரியாகப் பதில் சொல்லவில்லையா, ஏன் அதில் தோல்வி அடைகிறார்கள் என்று பரிசீலனை செய்து, எப்படி அங்கே பதில் அளிப்பது, என்னென்ன கேள்விகள் கேட்பார்கள் என்பதைச் சொல்லிக்கொடுக்க தனியாகப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று அக்கறை காட்டி இதில் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, அனைத்து இந்தியப் பணிகளுக்கு அரிஜனங்களுக்குத் தரப்படுகிற இந்தச் சலுகை "எக்ஸ் கிரிமினல் டிரைப்"கள் என்று சொல்லும் குற்றப் பரம்பரையினருக்கு அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** பழங்குடிமக்கள் என்றால் ஆதிவாசிகளுக்கும் அரிஜனங்களுக்கும்தான் இந்தச் சலுகை கொடுக்கப்படுகிறது. "டீ-நோட்டிஃபைட் ட்ரைப்" என்பவர்களுக்கு இந்தச் சலுகை இல்லை.

*Sugarcane*

*109 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state —

(*a*) whether it is true that the Sugarcane Mill owners of Thanjavur district are not following the agreement reached in the presence of the Hon. Minister for Agriculture regarding the prices to be paid for sugarcane growers ;

(*b*) whether any agitation has been launched by the sugarcane growers belonging to all parties against this ; and

(*c*) if so, the action taken by the Government to prevent this ?

## கரும்பு

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்ட கரும்பு ஆலை அதிபர்கள் கரும்பு உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கும் விலை பற்றி வேளாண்மை அமைச்சர் முன் ஒப்புக்கொண்டதற்கு மாருக நடந்து வருகிறார்கள் என்பது உண்மையா ?

(இ) இதனை எதிர்த்து சர்வ கட்சிகளையும் சார்ந்த உற்பத்தியாளர்கள் போராட்டம் ஆரம்பித்திருக்கின்றனரா?

(உ) ஆம் எனில், அதனைத் தவிர்க்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம். வடபாதிமங்கலம் திரு. ஆரூரான் சர்க்கரை ஆலையினர், காலஞ்சென்ற வேளாண்மை அமைச்சரின் முன்னிலையில் ஆலையினரும் கரும்பு உற்பத்தியாளர்களும் ஒப்புக்கொண்டபடி டன் ஒன்றுக்கு ரூ. 80 முதல் ரூ. 85 என்ற உயரிய விலையை கரும்பு பயிரிடுபவர்களுக்கு 1968–69-க்கு முன்பு செலுத்தி வந்தபோதிலும், 1968–69-ம் ஆண்டில் இந்திய அரசு முடிவு செய்த கரும்பின் குறைந்த அளவு சட்டபூர்வமான விலையாகிய டன் ஒன்றுக்கு ரூ. 73·70 மட்டுமே செலுத்துவார்களென அந்த ஆலையினர் கரும்பு பயிரிடுபவர்களுக்கு 1969 எப்ரல் திங்களில் தெரிவித்தனர்.

(இ) ஆம், திரு. ஆரூரான் சர்க்கரை ஆலைப்பகுதியில் உள்ள கரும்பு உற்பத்தியாளர்களில் சிலர் 15-7-1969 முதல் 20-7-1969 வரை உண்ணா நோன்பு மேற்கொண்டனர்.

(உ) செலுத்தப்படத்தக்க விலை குறித்து முடிவு எடுப்பதற்காக, முன்னாள் உணவு வேளாண்மை அமைச்சர் சர்க்கரை ஆலைகள், கரும்பு பயிரிடுபவர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளுடன் 3—5—69, 11—6—69, 12-6-1969 ஆகிய நாட்களில் உரையாடல் நிகழ்த்தினார். இவ்வுரையாடல்களின் விளைவாக உடன்பாடு எதும் எற்படவில்லை. இந்திய அரசினால் முடிவு செய்யப்பட்ட குறைந்த அளவு விலையாகிய டன் ஒன்றுக்கு ரூ. 73·30-க்கு மேற்பட்டு கூடுதல் விலை செலுத்தும்படி விதிக்க இந்த அரசுக்கு எந்தவித சட்டபூர்வமான அதிகாரமும் இல்லை. எனவே அந்தந்த சர்க்கரை ஆலைகளும் அவர்களது பகுதியிலுள்ள கரும்பு பயிரிடுபவர்களும் தங்களுக்குள் தீர்வுகண்டுகொள்ள விடப்பட்டது.

**திரு. வி. கே. ராமசாமி முதலியார்:** கரும்பு விலையை சென்ற ஆண்டு நிர்ணயித்திருந்ததை விட இப்போது குறைத்துவிட்டிருக்கிறார்கள். சென்ற பசலியில் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு ஆலைச் சொந்தக்காரர்கள் அதிக விலை கொடுத்துவிட்டதாகக் கூறி இந்த வருஷம் அந்த விலை வித்தியாசத்தை வசூல் செய்துகொள்ளலாம் என்று அரசு உத்திரவு போட்டிருக்கிறதே, அதற்கு என்ன காரணம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம் :** தலைவர் அவர்களே, அரசாங்கத்திலிருந்து அத்தகைய உத்திரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. ஆனால் தனியார் துறையில் நடத்தப்படும் கரும்பாலைகளின் சொந்தக்காரர்கள் சென்ற ஆண்டு அதிகமாக விலை கொடுத்துவிட்டோம், அதை இந்த வருஷம் உற்பத்தியாளர்களிடமிருந்து பிடித்துக் கொள்வோம் என்று சொன்னார்கள். நாங்கள் எவ்வளவோ சொல்லியும் ஆலைச் சொந்தக்காரர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து பிடிக்கக் கூடாது என்பதை எற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். இப்படி ஆலைச் சொந்தக்காரர்கள் மறுத்துவிட்ட காரணத்தால், அரசாங்கம் இதில் ஒன்றும் செய்வதற்கில்லை என்ற நிலைமை எற்பட்டுவிட்டது. எனவே இது ஆலைச் சொந்தக்காரர்களுக்கும் கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் இடையில் இருக்கிற பிரச்னையே தவிர, இதில் அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.



**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் கூட பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்திருக்கிறது. கரும்பிற்கு டன்னுக்கு குறைந்தது 10 ரூபாயாவது கொடுக்க வேண்டும். தமிழ் நாட்டில் 10 ரூபாய்க்கும் குறைவாகவே கொடுத்துவருகிறார்கள். அது என் என்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டு, அதற்குப் பதிலளிக்கும் போது, மத்திய அமைச்சர் அவர்கள் அப்படி 10 ரூபாய்க்குக் குறைந்து தமிழ்நாட்டில் கொடுத்தால், அது குற்றமாகும், தற்போது இருக்கிற சட்டத்திற்கு விரோதமாகும், அப்படிக் கொடுக்கக் கூடாது என்றுகூறி இருக்கிறார்களே ; அது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கரும்பிற்கான விலையே மத்திய அரசால் தான் குறிப்பிடப்படுகிறது. மாநில அரசாங்கத்திற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. இந்தச் செய்தியை நாங்கள் அதிகார பூர்வமாக எற்றுக்கொள்ளவில்லை. இன்றைய நிலையில் மத்திய அரசாங்கம் தான் கரும்பு விலையை நிர்ணயிக்கிறது.

## *Government Presses.*

*110 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state —

(*a*) the number of places where there are Government presses ;

(*b*) the places where they are situated ;

(*c*) the number of Government Presses functioning in rental buildings ; and

(*d*) the amount paid as rent every year ?

## அரசாங்க அச்சுக்கூடங்கள்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசாங்க அச்சுக்கூடங்கள் எத்தனை இடங்களில் உள்ளன ?

(இ) அவைகள் எந்த எந்த ஊரில் உள்ளன ?

(உ) சர்க்கார் அச்சகங்கள் எத்தனை வாடகைக் கட்டிடங்களில் வைக்கப்பட்டுள்ளன ?

(எ) ஆண்டுதோறும் வாடகையாக அளிக்கப்படும் தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) சென்னையில் உள்ள மத்திய அச்சகமும் அதன் கிளைகளும் தவிர அரசினர் அச்சகங்கள் நான்கு இடங்களில் உள்ளன.

(இ) அரசினர் கிளை அச்சகம்—புதுக்கோட்டை.
அரசினர் மண்டல அச்சகம்—திருச்சிராப்பள்ளி.
அரசினர் மண்டல அச்சகம்—சேலம்.
அரசினர் மண்டல அச்சகம்—விருத்தாசலம்.
சென்னையில் உள்ள அச்சகங்கள் பின்வரும் இடங்களில் அமைந்துள்ளன.

(1) அரசினர் அச்சகம்—தங்கசாலை வீதி.

(2) அரசினர் அச்சகம்—(பாடப்புத்தகம் பிரிவு), மலைச்சாலை.

(3) மத்திய சிறைச்சாலை அச்சகம்—சென்னை மத்திய சிறைச்சாலை.

(4) வழக்குப் பட்டியல் (Cause list) அச்சகம்—உயர்நீதி மன்றக் கட்டிடம்.

[28th February 1970

(உ) திருச்சிராப்பள்ளி, சேலம், விருத்தாசலம் ஆகிய ஊர்களில் உள்ள மண்டல அச்சகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன.

(எ) மண்டல அச்சகம், திருச்சிராப்பள்ளி, ஆண்டு வாடகை ரூ. 17,736.

மண்டல அச்சகம், சேலம், ஆண்டுக்கு வாடகை ரூ. 5,400.

மண்டல அச்சகம், விருத்தாசலம், ஆண்டுக்கு வாடகை ரூ. 14,700.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, அரசாங்க அச்சுக் கூடங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு சட்ட மன்ற நடவடிக்கைகளின் அறிக்கைப் படிகள் கூட காலதாமதமாகவே கிடைக்கின்றன. அதைத் தவிர, மதுரை போன்ற இடங்களில் அரசாங்க அச்சுக்கூடம் இல்லாத காரணத்தால் தனியார் அச்சுக்கூடங்களில் அச்சிடுவதற்கு நிறையப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனால் அரசாங்கத்திற்கும் நிறைய நஷ்டம் ஏற்படுகிறது. இதை மனதில் கொண்டு மதுரை போன்ற இடங்களில் அரசாங்க அச்சுக்கூடத்தை ஏற்படுத்தினால், இந்த நிலையைத் தவிர்க்கலாம் என்பதோடு கூட, பெரும்பாலான அரசாங்க அச்சுக்கூடங்கள் தற்போது வாடகைக் கட்டிடங்களில் இருப்பதால், அதன் மூலம் வருஷத்திற்கு ரூபாய் 17,000 அல்லது 20,000 என்ற அளவுக்கு அரசாங்கம் கட்டணம் கொடுக்க வேண்டியிருப்பதால், அரசாங்கம் சொந்தக் கட்டிடங்களைக் கட்டிக்கொண்டால், அதனால் அரசாங்கத்திற்குச் செலவு மிச்சமாகும் என்பதால், அரசு இந்த வகையில் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, மதுரையில் அரசாங்க அச்சகம் அமைக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. அடுத்து, தென்னாற்காடு மாவட்டத்து வருவாய்த் துறை அதிகாரிக்கு தண்டர்குப்பம் கிராமத்தில் உள்ள சர்வே நெம்பர் 168 உள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்து, எழுத்து அச்சுப் பொருள் அதிகாரியிடம் ஒப்படைக்கும்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சேலத்தில் உள்ள தொழிற்பேட்டையில் ஒரு ஏக்கர் நிலத்தில் சேலம் மண்டல அச்சகத்திற்கு அரசாங்கக் கட்டிடம் கட்ட திட்டம் ஒன்று அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. சா. கணேசன் :** சட்ட மன்ற வெளியீடுகளை வெளியிடுவதில் ஏற்படுகிற காலதாமதத்தை முன்னிட்டு, பல ஆண்டுகளாகவே இந்தக் கோட்டைக்குள்ளேயே சட்ட மன்றத் துறைக்கு என்றே ஒரு தனி அரசாங்க அச்சுக்கூடக் கிளையை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தப் பட்டிருக்கிறது. பல எஸ்டிமேட் கமிட்டிகளில்கூட இது வற்புறுத்தப்பட்டு வந்திருப்பது அரசாங்கத்திற்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இந்த நிலையில் இதனுடைய இன்றியமையாத தன்மையைக் கருத்தில் கொண்டு விரைவில் கோட்டைக்குள்ளே ஒரு அரசாங்க அச்சகக் கிளையை சட்டமன்றத் துறைக்கு என்றே அமைக்க அரசாங்கம் செயல்குறிப்பு எதையேனும் வைத்திருக்கிறதா, அல்லது இனியாவது அப்படிச் செயல்பட வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, கோட்டைக்கும் தங்கசாலைக்குமிடையே அதிக தூரம் இல்லை என்பது அரசாங்கத்தின் கருத்து. ஆனால் அது அவசியப்பட்டால், அரசாங்கம் அதற்கான ஆலோசனை செய்து ஆவன செய்யும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** அரசாங்க அச்சுக்கூடங்கள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் வைப்பதற்கான அரசு செயற்குறிப்பு ஏதேனும உண்டா ? தற்போது மாவட்டங்களில் எல்லா அரசு அலுவலகங்களிலிருந்தும் அச்சிடும் வேலையை தனியார் அச்சகங்களுக்குக் கொடுத்து வருவதை நிறுத்தி, அரசு அச்சகங்களை ஏற்படுத்தி, அவைகளிலேயே அந்த வேலைகளைக் கொடுத்தால், அரசாங்கத்திற்குச் செலவும் சிக்கனமாகும். அப்படி அமைப்பதன் மூலம் தனியார் அச்சகங்களிலும் அச்சிடுவதற்கான கட்டணம் குறையும் என்ற நிலை இருப்பதால், மாவட்டந் தோறும் ஒரு அரசு அச்சுக்கூடத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



28th February 1970]

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அரசாங்க அச்சுக்கூடங்கள் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் அமைய வேண்டும் என்பது தான் இந்த அரசாங்கத்தின் எண்ணமாகும். ஆகவே அதைப் பற்றித் தக்க பரிசீலனை செய்து அதற்கான பரிந்துரைகளை அனுப்பிவைக்குமாறு டி.எஸ்.பி அவர்கள் அரசாங்க அச்சுத் துறை அதிகாரி அவர்களை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். பொதுவாக தனியார் அச்சகங்களுக்கு அரசாங்க வேலைகள் கொடுக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும் என்பது தான் இந்த அரசாங்கத்தின் திட்டவட்டமான எண்ணமாகும். எனவே உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கிணங்க, அந்தத் திட்டத்தை அரசாங்கம் விரைவில் நிறைவேற்ற தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, அரசாங்க பஸ் போக்குவரத்திற்கான டிக்கட்டுகள் தற்போது அரசாங்க அச்சகத்திலேயே அச்சடிக்கப்படுகின்றனவா அல்லது தனியார் அச்சகங்களில் அச்சடிக்கப்படுகின்றனவா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அவைகள் அரசாங்க அச்சகத்தில் தான் அச்சடிக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** தலைவர் அவர்களே, ஒரு திருத்தம். அரசாங்க போக்குவரத்திற்கான டிக்கட்டுகள் தனியார் அச்சகத்தில் தான் அச்சடிக்கப்படுகின்றன.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அரசாங்க அச்சுக்கூடங்களை அதிகப்படுத்தினால் அந்த அளவுக்கு அரசாங்கத்திற்கு அதிகமான நஷ்டமும் ஏற்படும் என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அது நஷ்டமில்லாமல் லாபத்தில் செய்துகாட்ட முடியும் என்ற உறுதி எங்களுக்கு இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*Sales Tax Advisory Committee's Report.*

*111 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(*a*) whether the three-man committee appointed by the previous Ministry to go into the question of simplification of sales tax had submitted its report ;

(*b*) whether the report was published ; and

(*c*) if so, the action taken thereon ?

*விற்பனை வரி ஆலோசனைக் குழுவின் அறிக்கை.*

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு உணவு-வணிக வரி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விற்பனை வரி வசூல் குறித்த நடைமுறையை எளிதாக்குவது குறித்து முன்னாள் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட மூவர் குழு தன்னுடைய அறிக்கையைப் பணிந்தனுப்பியதா ?

(இ) அந்த அறிக்கை வெளியிடப்பட்டதா ?

(உ) ஆம் எனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

[28th February 1970

**மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) விற்பனை வரி. ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த துணைக்குழு வழங்கிய பரிவுரைகள் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைக் காட்டும் விவர அறிக்கை°.

THIRU D. SANTOSHAM : Sir, I find that even the Chamber of Commerce and other responsible representatives of the Commercial Communities are unaware of the recommendations of the Sales Tax Advisory Committee and the action taken thereon. I find the Government have accepted many of the recommendations. Will it not be desirable to communicate the recommendations as well as the action taken thereon by the Government to the responsible commercial bodies, so that they may know what action the Government have taken on the recommendations ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : I shall try to circulate it.

THIRU A. R. DAMODARAN : In the last Session the Hon. Minister was pleased to state that the State Advisory Committee had not met so far since 1967. Since it is a useful subject, may I suggest, Sir, that it may be placed before the Committee at its next meeting and also may I know whether such meetings will be called for after the present session is over?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : During the second week of next month, the meeting will be convened.

*Societies Registration Act, 1860.*

*112 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to enact a new Societies Registration Act for Tamil Nadu in the place of the Societies Registration Act, 1860 ?

**1860-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டம்.**

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1860-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்திற்குப் பதிலாக, தமிழ் நாட்டிற்கென சங்கங்கள் பதிவுச் சட்டம் ஒன்றைப் புதிதாய் இயற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** ஆம்.

1860-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தை ரத்து செய்வதெனவும், அடங்கல் சட்டம் ஒன்றை இயற்றுவதெனவும் அரசு முடிவெடுத்துள்ளது. தொடர்பான சங்கங்கள் பதிவு மசோதா சட்டமன்றத்தில் விரைவில் முகவுரைக்கப்படும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, இந்த மாநில அரசு, இதற்கு என்று ஒரு சட்டம் கொண்டுவரும்போது, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் இருக்க வேண்டும் என்ற கருத்தை மனதில் கொண்டு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவர் அவர்களே, இந்த சொசைடி ஆக்டின்படி பதிவு செய்யப்படும் சங்கங்கள் தொடர்ந்து சரியாகச் செயல்படுகின்றனவா; அதன் நிர்வாகஸ்தர்கள் எல்லாம் முறையாகச் செயல்பட்டு வருகின்றார்களா என்பவையெல்லாம் அரசாங்கத்தால் கண்காணிக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இந்த சங்கங்களின் பதிவு பற்றிய சட்டம் 1860-ல் கொண்டுவரப்பட்டது. அதைத் தற்போதைக்கு ஏற்றவாறு திருத்தம் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் நீண்டகாலமாகவே பரிசீலனை செய்து, இதற்கு என்று ஒரு கன்சாலிடேட்ட் லெஜிஸ்லேஷன் கொண்டுவரலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

° Printed as Appendix II.



28th February 1960]

*Cauvery Delta.*

*113 *Q.*—THIRU G. VASANTHA PAI (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether there is any proposal to constitute a High Power Board or Corporation with an I.A.S. Officer as its Chairman and leading ryots as its Members for the development of the Cauvery Delta ; and

(*b*) if so, the details thereof ?

**காவிரி கயவாய்ப் பகுதி**

**திரு. ஜி. வசந்த பாய் :** (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காவிரி கயவாய்ப் பகுதியின் மேம்பாட்டிற்காக இந்திய ஆட்சிப் பணி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரி ஒருவரைத் தலைவராகவும், முக்கிய உழவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர் அதிகார வாரியம் அல்லது கழகம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

MR. CHAIRMAN : Questions are over.

**[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

II Adjournment Motion *re* alleged brutal attack of the Police inside congress office building at Cuddalore and injuries caused to some persons

MR. CHAIRMAN The hon. the Leader of the Opposition may kindly enlighten me on how the matter is one of urgent public importance and how this motion will come under the rules.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, இது மிகவும் அண்மையில் நடந்த ஒரு சம்பவம். மேலும் இந்தச் சபையின் அங்கத்தினர் ஒருவர் சம்பந்தப்பட்ட விஷயம். இந்த மாதம் முதல் தேதியன்று கடலூரில் பொதுக் கூட்டம் ஒன்று நடந்துகொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் ஏதோ குழப்பம் ஏற்பட்டதாக போலீசார் அங்கே தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள். அந்தச் சம்பவம் அதோடு நின்றிருந்தால் யாரும் அதைப்பற்றிப் புகார் கூற முன்வந்திருக்க மாட்டார்கள். கூட்டம் நடந்த இடத்திலிருந்து இரண்டு பர்லாங்கு தூரம் வரை தெருக்களில் போவோர் வருவோரை எல்லாம் போலீசார் தடிகொண்டு தாக்கியதல்லாமல், ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சிக் காரியாலயத்திற்குச் சென்று அங்கே உள்ளவர்களையும் தாக்கியிருக்கிறார்கள். அங்கே மாண்புமிகு அங்கத்தினர் திரு. எத்திராஜுலு அவர்களும் இன்னும் சிலரும் இருந்திருக்கிறார்கள். போலீசார் உள்ளே நுழைந்து, "நீ தான் எம்.எல்.சி.யா?" என்று சொல்லிக் கொண்டே அடித்திருக்கிறார்கள். அதனால் கையிலும் முதுகிலும் காலிலும் அடிப்பட்டு திரு. எத்திராஜுலு அவர்கள் இன்னும் வேதனையோடு இருக்கிறார்கள். சட்டசபை அங்கத்தினர்களை மட்டுமல்லாமல், பொதுமக்களையும் பாதுகாக்க வேண்டிய கரங்கள் இம்மாதிரி பாதகமான காரியத்தைச் செய்தது விரும்பத்தகாதது மட்டுமல்ல. செய்யக்கூடாததுமாகும். இந்த மாதிரியான சம்பவம் இப்போது நடந்தது பெரிய தவறு

கும். இனிமேலாவது இம்மாதிரியான சம்பவங்கள் நடக்காமல் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். போலீஸ் அதிகாரிகள், குறிப்பாக எஸ்.பி. அவர்களும் ஜில்லா கலெக்டர் அவர்களும் இந்தச் சம்பவம் நடந்ததை அறிந்தவுடனே, அன்றே மாண்புமிகு அங்கத்தினரை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்து அவர்களுக்கு வேண்டிய சமாதானம் சொல்லி, "இதைப் பற்றி உடனே கவனிக்கிறோம் விசாரிக்கிறோம் தக்க நடவடிக்கை எடுக்கிறோம்என்றெல்லாம் சொல்லிவிட்டுப்போய் அதன் பிறகு அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது மட்டுமல்ல, இப்போது மாண்புமிகு அங்கத்தினர் மீதே நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடு நடந்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிற காரணத்தால், நான் இது குறித்து மிகவும் வருத்தப்படுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப் பற்றித் தீர விசாரித்து இதில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும், சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனவே இந்த விஷயம் குறித்து விவாதிக்க இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒரு மணி நேரத்திற்கு ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த ஒத்திவைப்புப் பிரேரணையின் மீது சில தகவல்களை இங்கே எடுத்துக் கூறுவது பொருத்தம் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய அன்புக்குரிய நண்பர் திரு. எத்திராஜு அவர்கள் தாக்கப்பட்டார் என்பது உள்ளபடியே வருந்தத் தக்க செய்தி தான் என்றாலும், ஏன் அந்தச் சூழ்நிலை உருவாயிற்று என்பதற்கு எனக்கு வந்துள்ள தகவல்களை இங்கே இந்தத் தீர்மானத்தின் மீது எடுத்துக் கூறுவது என்னுடைய கடமையாகிறது. 1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி அன்று திருவாளர்கள் சி. சுப்பிரமணியம் அவர்களும் எம். பக்தவத்சலம் அவர்களும், கே. டி. கோசல்ராம் அவர்களும் மற்றும் சிலரும் கடலூரில் காங்கிரஸ் காரியாலயம் திறப்பதற்கும் தொண்டர்களுடைய கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும், பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காகவும் வருவதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அன்று காலை 10 மணி அளவில் திரு. சி. சுப்பிரமணியம் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கஸ்ட் ஹவுசிலிருந்து வாசவி விகார் ஹோட்டலுக்குச் செல்லும் வழியில் 80 நபர்கள் கருப்புக்கொடி காண்பித்து கோஷமிட்டனர். அதே போல் திரு. சி. சுப்பிரமணியம் வாசவி விகாரிலிருந்து டவுன் ஹாலுக்கு தொண்டர் கூட்டத்தில் கலந்து கொள்ளச் செல்லும் வழியிலும் கருப்புக் கொடி காட்டி இந்திரா காந்திக்கும் சி. சுப்பிரமணியத்திற்கும் எதிராகக் கோஷமிட்டார்கள். இதில் அரசாங்கக் கலைக் கல்லூரி மாணவர்கள் சிலரும் கலந்திருந்தார்கள். தகுந்த போலீஸ் பந்தோபஸ்து போடப்பட்டு, எவ்வித அசம்பாவிதமும் நடக்காமல் பார்த்துக்கொள்ளப்பட்டது.

அன்று பகல் 12 மணி அளவில் திரு. எம். பக்தவத்சலம் கடலூருக்கு வந்து, அவரும் தொண்டர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்தக் கூட்டம் முடிந்தவுடன், திரு. சுப்பிரமணியம் அவர்கள் கடலூரிலிருந்து சென்றுவிட்டார்.

அன்று மாலை பழைய காங்கிரஸ் காரியாலயத்திற்கு அருகாமையில் 75 கெஜம் உள்ள தங்கராஜ் மைதானத்தில் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்திற்கு திரு. சாம்பசிவ ரெட்டியார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் முதல் பேச்சாளர் திரு. கோவிந்தராஜ் பேச ஆரம்பித்தவுடன், கூட்டத்தின் ஒரு பகுதியிலுள்ள 200 நபர்கள் கோஷமிட்டுப் பேசவிடாமல் இடையூறு விளைத்தனர். அங்கிருந்த R.D.O. அவர்களும் போலீஸ் அதிகாரிகளும் அமைதியாக இருக்குமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அவர்கள் இதற்குச் செவி சாய்க்காமல், மீண்டும் சப்தம் செய்து கற்களையும், செருப்புகளையும் மேடையை

Printed as



நோக்கி வீசினர். இதன் விளைவாக அங்கிருந்த சில டியூப் விளக்குகள் உடைபட்டு, மைதானத்தில் ஒரு பகுதி இருட்டாகிவிட்டது. இந்த நேரத்தில் கூட்டத்திலுள்ளோர் போலீஸ் தடுப்பை மீறி, மேடையை நோக்கிச் செல்ல முயற்சித்தனர். நிலைமை கட்டுக்கடங்காமல் போய்விடக் கூடுமென்று உணர்ந்த R.D.O. அவர்களும் போலீஸ் அதிகாரிகளும் உடனே குறைந்த பட்ச சக்தியை உபயோகித்து அப்படி அத்து மீறினவர்களை விரட்டினர். விரட்டப்பட்டவர்கள் மைதானத்தின் வடபுறத்திலுள்ள வீதிக்கு ஓடி அங்கு வந்துகொண்டிருந்த Town Bus M.D.F. 4533 ஐ நிறுத்தி அதைச் சேதப்படுத்த முற்பட்டனர். அதற்குள் போலீஸ் அதைத் தடுத்து விரட்டி அடித்தனர். ஓடிவந்தவர்களில் ஒரு பகுதியினர் பக்கத்திலுள்ள காங்கிரஸ் காரியாலயத்திற்குச் சென்று அங்கிருந்து கற்களை வீசினர். இவர்களும் குறைந்தபட்ச சக்தியினால் விரட்டப்பட்டனர். இந்தக் குழப்பத்தில் திரு. எம். எத்திராஜுலு M.L.C அவர்கள் காயமுற்றார். இவர் சிலரை அழைத்துக் கொண்டு Guest House-ல் தங்கி இருந்த திரு. பக்தவத்சலம் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் தடுக்க வேண்டுமென்று நோக்கத்தோடு, Guest Houseற்குள் நுழைய முயற்சித்தார் என்றும், ஆனால் பந்தோபஸ்திற்காக இருந்த போலீஸ்காரர்கள் அதைத் தடுத்துவிட்டனர் என்றும் தகவல் வந்தது.

இதற்குப் பிறகு, கூட்டம் இரண்டு மணி நேரம் அமைதியாக நடைபெற்று முடிவுற்றது.

இந்த குறைந்தபட்ச சக்தியை போலீஸ் உபயோகப்படுத்தாமலிருந்திருந்தால் நிலைமை மிகவும் மோசமாகி, உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் அதிக அளவில் ஏற்பட்டிருக்குமென்று கருதப்பட்டது.

இதில் காயமுற்ற 20 பேர்கள் கடலூர் தலைமை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றனர். சாதாரண காயங்கள் தான். இதில் மூவர் மட்டும் (அதாவது திருவாளர்கள் எம். எத்திராஜுலு, M.L.C., பி. சந்திரசேகரன், சுப்பிரமணியம்) மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். இதில் சுப்பிரமணியம் என்பவர் மருத்துவ மனையிலிருந்து ஓடி விட்டார். திரு. எத்திராஜுலு அவர்களுக்கு அவரது இடது தொடையில் ஒரு ஊமைக் காயம் ஏற்பட்டிருந்தது. மருத்துவ அதிகாரி அடிப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட காயம் எதுவும் serious ஆனதல்ல என்று கருத்து தெரிவித்துள்ளார்.

போலீஸ் எடுத்துக்கொண்ட நடவடிக்கையினால் எவ்வித தொடர் அசம்பாவிதமும் நேரவில்லை, நகரம் அமைதியாகவே இருந்தது.

திரு. எம். எத்திராஜுலு, M.L.C. மற்றும் 9 நபர்கள் மேல் 147, 323, 427, ஐ.பி.சி. கீழ் கடலூர் N.T. போலீஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு கடலூர் Sub-Magistrate நீதி மன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

நம் மாண்புமிகு உறுப்பினர் திரு. எத்திராஜுலு அவர்கள் தாக்கப்பட்டது குறித்து நான் வருத்தப்படுகிறேன் என்றாலும், இதில் அதிகமாக எதையும் எடுத்துக் கூற முடியாத அளவுக்கு வழக்கு ஒன்று இருக்கிற காரணத்தால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை தலைவர் அவர்கள் அனுமதிக்கத் தேவையில்லை என்று எடுத்துக் கூறி அமர்கிறேன்.

**MR. CHAIRMAN :** Now my task is how this motion will come under rule 43. A motion to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance must comestrictly under the rules. The matter should involve more than the ordinary administration of law. Further, the Leader of the Opposition has got ample opportunity for raising the matter during the discussion on the Budget for 1970-71. In view of this, I withhold consent to raise the matter.

III-PRIVILEGE ISSUE *re* MIS STATEMENT MADE BY THE HON. THIRU P.U. SHANMUGHAM, MINISTER FOR FOOD AND COMMERCIAL TAXES ON 24TH JANUARY 1970.

MR. CHAIRMAN : Hon. Members will remember that on the 28th January 1970, the hon. Member Thiru G. Vasantha Pai raised a matter of privilege against a Member of the House, the Hon. Thiru P.U. Shanmugham regarding a statement made by him on the 24th January 1970. As the House is aware of the facts of the case, I am not traversing over them.

The House will also remember that the Hon. Minister was permitted to make a statement correcting the statement made by him during the course of an intervention on the 24th. He has expressed regret to this House for his mis-statement. The hon. Member, in spite of the enlightenment furnished by the Hon. the Minister for Education and the Leader of the Opposition on the conventions followed in these matters, did not withdraw the notice.

I have carefully gone into the precedents quoted by him and also other precedents. In Profumo's case the Minister concerned told a lie to the House regarding his own personal conduct, thereby misleading the House. The House of Commons resolved that in making a personal statement which contained words which he later admitted not to be true, a former member had been guilty of grave contempt. Even in the other case quoted by the hon. Member, it is stated 'Mr. Hale, however, recalled that he had raised a matter concerning the Attorney-General of Northern Ireland and a prima facie case had been made out; but the gentleman in question apologised and so no reference was made to the Committee'. These cases quoted by the hon. Member do not apply to the present case. Only if a statement is deliberately made with a view to misleading the House, it is considered as a breach of privilege even in the House of Commons.

In the Lok Sabha, it has been held that "incorrect statements made by a Minister cannot make any basis for a breach of privilege. It is only a deliberate lie, if it can be substantiated, that would certainly bring the offence within the meaning of a breach of privilege. Other lapses, other mistakes do not come under this category, because every day we find that Ministers make their statements in which they make mistakes and which they correct afterwards. That is happening everyday. (That is in Lok Sabha, not here). If it were to be held that that also is a breach of privilege, then probably it would be an everyday occurrence and then privilege would not mean anything of consequence." In another case, the Prime Minister of India was permitted to correct an incorrect statement made by her earlier in regard to Foreign Affairs after a Member had given notice of a Privilege motion, and the Speaker of the Lok Sabha withheld consent for the matter being raised after permitting the Prime Minister to make a statement in which she stated that it was not her intention to mislead the House. Therefore, I find from precedents, that so long as wilful intention to mislead the House was absent and the Member concerned had apologised for the misstatement, the practice has been to accept the apology and drop the matter. In the present case, I find that there was no intention on the part of the Hon. Minister to deliberately mislead the House as he came before the House at the earliest opportunity to correct his own earlier mis-statement.

அவர்கள் எதிர்க் கட்சி வரிசையில் இருந்தார்கள். அப்போது 50 பேர் கூட இல்லை. 15 பேர் தான் இருந்தார்கள். இந்த உச்ச வரம்புச் சட்டத்தைக் காங்கிரஸ் கட்சி கொண்டுவருகிறது, எனவே இதை எதிர்க்கிறேன் என்று நிச்சயம் சொல்லவில்லை. ஆனால் இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன் என்று தான் சொன்னார். அந்தச் சட்டத்தில் உள்ள ஓட்டை, உடைசல்களை நீக்கிவிட்டு, அந்தச் சட்டத்தைப் பயன் உள்ள வகையில் கொண்டுவர வேண்டுமென்று தான் சொன்னார். அந்தச் சட்டம் உச்ச வரம்பு அல்ல, மிச்ச வரம்பு என்று தான் குறிப்பிட்டார். அந்தச் சட்டமே வேண்டாமென்று சொல்லவில்லை. இன்றைக்கு பலருக்கு இருக்கிற எண்ணம், அவர்களுக்கு இருக்கிற கஷ்டம் இப்படி இவர்கள் சொல்லாமல் செய்து விட்டார்களே என்ன செய்வது என்பது தான். அது அவர்களுக்கு இருக்கிற கஷ்டம். இன்னும் சிலபேர் ஏதோ குறை சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார்கள். இந்த அரசாங்கம் பரவாயில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். ஏதோ அவர்களைத் தான் ஆண்டவன் அந்தத் துறைக்கு என்றே படைத்தது போலவும் மற்றவர்களுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாதது போலவும் சொல்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். நாங்கள் ஆளுங் கட்சியான பிறகு அருமை நண்பர்கள் பலர் எப்படிப் பேசிவருகிறார்கள்? உள்ளபடியே நான் சொல்கிறேன், சட்ட மன்றத்திலே ஒருவர் கூட சிறிது வருத்தத்தோடு பேசினார். பேறிஞர் அண்ணா அவர்கள் பொது உடைமைத் தத்துவத்தைத் தன் உள்ளத்திலே வைத்துக்கொண்டிருந்தார்கள். சோஷலிசம், கம்யூனிசம், இன்னும் மற்ற மற்ற பொருளாதார சமத்துவ தத்துவங்களை தன்னிடத்திலே ஆழமாகக் கொண்டிருந்தார்கள். இது தன்னிடத்திலே ஆழமாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்கள். மாயவரத்தில் ஒரு சமயம் நடைபெற்ற மாநாட்டில் பேறிஞர் அண்ணா அவர்கள் தோழர் ஜீவானந்தம் அவர்களையும் பக்கத்திலே வைத்துக் கொண்டு சொன்னார்கள், தனக்கும் நண்பர் ஜீவானந்தம் அவர்களுக்கும் கருத்து வித்தியாசம் இருக்கும் என்று யாராவது கருதுவார்களானால், அவர்கள் எமாந்தவர்களாவார்கள். எனக்கும் அவருக்கும் அதிகக் கருத்து வித்தியாசம் இல்லை. என்னை ஒரு தட்டிலும் நண்பர் ஜீவானந்தம் அவர்களை தராசின் மற்றொரு தட்டிலும் வைத்து; யாரிடத்திலே அழுத்தம் இருக்கிறது என்று பார்த்தீர்களானால், என் தட்டு கீழே இறங்கும், ஜீவானந்தம் இருக்கிற தட்டு மேலே இருக்கும், கம்யூனிசத்திலே அவ்வளவு அழுத்தம் எனக்கு உண்டு என்பதைப் பேறிஞர் அண்ணா அவர்கள் நண்பர் ஜீவானந்தம் அவர்களைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு சொன்னார்.

இந்த நிதி நிலை அறிக்கையை நிதி அமைச்சரவர்கள்—அண்ணா அவர்களின் பாதையைப் பின்பற்றி வந்தவர், அவரால் அரசியலில் வளர்க்கப்பட்டவர்—அவர் எடுத்துச் சொன்ன கருத்துக்கு ஏற்ப, உறுதியாக நின்று இன்றைய தினம் இதை அளித்திருக்கிறார்கள். இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கிற நேரத்தில் அவர் சொன்ன கருத்துக்களை நினைவில் கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்து அளித்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், இதிலே உள்ளபடியே 15 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று இருப்பது பரவாயில்லை, இன்னும் கொஞ்சம் முன்னாலேயே தெரிந்திருந்தால், வேண்டியதைச் செய்திருப்பேனே என்று வருத்தப்பட்டுக் கொள்கிறவர்கள் இருக்கிறார்கள். கொஞ்சம் முன்னாலே தெரிந்திருந்தால் செய்ய வேண்டியதை எல்லாம் செய்து முடித்திருப்பேன். தவணை கொடுக்காமல் கொண்டுவந்து விட்டீர்களே என்று தான் அவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். இதைப் பொதுவாக குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இப்படிப்பட்ட எண்ணங்கள் அவர்களுக்கு இருக்கிறது. செய்கிறது தான் செய்கிறீர்களே, கொஞ்சம் சொல்லிவிட்டுச் செய்தால் என்ன என்பது தான் அவர்களைப் பொறுத்த மட்டில் இன்றைய தினம் உள்ள குறையாகும். 15 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று திடீரென்று கொண்டுவந்து விட்டீர்களே; சும்மா வருகிறது; வருகிறது என்று சொல்லி வேண்டியவர்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொள்வதற்கு அவகாசம் கொடுக்காமல் திடீரென்று கொண்டு



வந்து விட்டீர்களே என்கிறார்கள். செய்வதாக ஆர்ப்பாட்டம் செய்யாமல் யாரையும் கேட்காமல் கொண்டுவந்து விட்டீர்களே, காங்கிரஸ் கட்சியைப் போல பல ஆண்டுகள் கொண்டு வருவோம், கொண்டு வருவோம் என்று சொல்லி, 30 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று கொண்டு வந்து, அதற்குப் பிறகும் வேண்டியவர்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்து, இப்படி ஒரு சட்டம் கொண்டு வந்ததைப் போல் கொண்டு வராமல் திடீரென்று கொண்டுவந்து விட்டீர்களே இது நியாயமா என்று தான் கேட்கிறார்கள். சொல்லிவிடடுச் செய்திருந்தால் என்ன, நாட்டிலே ஸ்டாம்பு பேப்பர் பஞ்சமா இருக்கிறது என்கிறார்கள். நாங்கள் திரும்பத் திரும்பச் சொல்வதெல்லாம் உள்ளபடியே எதனாலே வரி போட்டிருக்கிறோம், போட்டிருக்கிற வரியை உயர்த்தியிருக்கிறோம் என்று எண்ணிப்பார்த்தால், அல்லது வரியே போடாமல் நாட்டை ஆள வேண்டுமென்று எந்தக் காலத்திலேயாவது சொல்லியிருக்கிறோமா என்று சிந்தித்துப் பார்த்தால், நாங்கள் சொன்னதெல்லாம் எவைகளுக்கு வரி போட வேண்டுமோ அவைகளுக்கு வரி போடுங்கள் என்று தான் சொல்லி வந்திருக்கிறோம். அதைத் தான் இன்று செய்திருக்கிறோம். அன்றைக்கும் தெளிவோடு சொன்னோம். இன்றைக்கும் அதை எடுத்து நினைவுபடுத்த விரும்புகிறேன். வரி போடுங்கள், வரியே போடக்கூடாது என்று சொல்கிற கட்சியைச் சேர்ந்தவர்கள், அந்தத் தலைமையிலே வளர்ந்தவர்கள் அல்ல நாங்கள் என்று தான் குறிப்பிட்டோம். யாருக்கு வரி போட வேண்டுமோ அவர்களுக்குப் போடுங்கள், தாங்கக் கூடியவர்களுக்குப் போடுங்கள், எழைகள்மேல் சுமத்தாமல், எழை எளியவர்களுக்குப் போடாமல் தட்ட வேண்டிய இடத்திலே தட்டுங்கள். தட்ட வேண்டிய கதவாகப் பார்த்துத் தட்டுங்கள் என்று நான் அன்றைக்கு சட்ட மன்றத்திலே சொல்கிறபோது, அன்றைக்கு முன்னால் முதலமைச்சராக இருந்த காமராஜர் எழுந்து இப்படிக் கதவைத் தட்டுங்கள் என்று பேசலாமா, எங்களைக் கதவைத் தட்டுங்கள் என்று சொல்கிறீர்களே, இது நியாயமா என்று கேட்டார். நான் திரும்பச் சொன்னேன். நான் சொல்கிற கருத்தைச் சரியாக எடுத்துக் கொள்ளுங்கள், தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று கூறினேன். அதற்கும் இன்றைக்கு நாங்கள் போட்டிருக்கும் வரிக்கும் எவ்வளவு பொருத்தம் இருக்கிறது என்று கூறுவதாக அதை நினைவுபடுத்திக் கூறினேன். வரி போட்டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். எழை எளியவர்களின் மீது பாரத்தைச் சுமத்தக்கூடிய வரியையா நாங்கள் போட்டிருக்கிறோம்? இன்றைய தினம் நாங்கள் செய்திருக்கிற காரியம் யாரால் கொடுக்கமுடியுமோ அவர்களுக்குப் போட்டு, எழைகள் பாதிக்கப் படக்கூடாது என்பதை மனதிலே வைத்து வரியைப் போட்டிருக்கிறோம். சில இனங்களில் வரியைக் குறைத்திருக்கிறோம். எது எது குறைந்திருக்கிறது என்று எண்ணிப் பார்த்தால், குறிப்பாக தோராயமாக வருவாய்த் துறையில் மிக முக்கியமான நிலவரி 19 சதவீதம் என்று இருந்தது இன்றைக்கு 9·61 சதவீதம் ஆகக் குறைந்திருக்கிறது. சொல்லப்போனால் குறைந்தது என்றால், நாங்கள் வசூலிக்காமல் விட்டு விட்டோமா, அல்லது வசூலித்ததைக் கணக்கில் காட்டாமல் விட்டு விட்டோமா என்றால் அப்படியில்லை. வரியை நீக்கியிருக்கிறோம். பல இனங்களில் வரியைக் குறைத்திருக்கிறோம். அதேபோல வருமான வரி எறத்தாழ 8·34 சதவீதம் என்று இருந்தது, இன்றைய தினம் 8·18 சதவீதம் ஆகக் குறைந்திருக்கிறது.

இருபது ஆண்டுகளில் பிற்பட்டோர் நலத்திற்கு என்று எவ்வளவு ரூபாய் ஒதுக்கினீர்கள்? அதற்கு என்று தனி இலாகா உண்டா? அதற்கு என்று கொடுப்பதற்கு நிதியுண்டா? இந்த 20 ஆண்டு கால வரவு செலவுத் திட்டத்தை எடுத்துப் பாருங்கள். இன்றைய ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை எடுத்துப் பாருங்கள். பிற்பட்டோர் நலத்திற்கு, 5 கோடியே சொச்சம் இந்தத் துறைக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரைத் தவிர, மற்றவர்களால் செய்யப்பட்டது உண்டா? தமிழகத்தில் இந்தச் சர்க்காரைப் போல் இந்தத் துறைக்கு என்று நிதி ஒதுக்கிய சர்க்காரைப் பார்க்க முடியுமா? இந்தச் செயல் திட்டத்தை புதிய திட்டத்தை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறோம். ஹரிஜன நல இலாகாவிற்குக் குறைத்திருக்கிறோமா

என்றால் இல்லை. கல்வி வசதி செய்த ஆட்சிக்கு ஓட்டுப்போடுங்கள், பள்ளிகளைத் திறந்த ஆட்சிக்கு ஓட்டுப் போடுங்கள் என்று வால்போஸ்டர் அச்சடித்து ஒட்டினார்கள். ஒரு ஆணும் பெண்ணும் பக்கம் பக்கமாக கை கோர்த்துக் கொண்டு நிற்பது போலவும் இதற்குப் பின்னாலே பெருந்தலைவர் நிற்பது போலவும் படம் போட்டு காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டார்கள். நாங்கள் மாற்றுக் கட்சி ஆட்சிக்கு வந்தால் இருக்கிற பள்ளிகளை, இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளை, கல்லூரிகளை இழுத்து மூடிவிடுவோம் என்ற கருத்திலே, கல்வி வசதி அளித்த தலைவருக்கே ஓட்டுப் போடுங்கள் என்று கேட்டார்கள். இன்றைக்கு ஆளுங் கட்சியாக வந்துள்ள நாங்கள் பள்ளிகளை, உயர்நிலைப் பள்ளிகளை, கல்லூரிகளை இழுத்து மூடியா விட்டோம்? கல்விக்காக 60 என்று இருந்ததை 67 கோடியாக உயர்த்தி இருக்கிறோம்.

அடுத்து, இந்த நாட்டின் முக்கியமான துறையான வேளாண்மைத் துறைக்கு அதிகப்படியாக நிதி ஒதுக்கியிருக்கிறோம். கல்வித் துறைக்கு, மருத்துவத் துறைக்கு, இப்படி எந்தத் துறையானாலும் அவைகளுக்கு நிதியை அதிகமாக்கியிருக்கிறோமே தவிர எதற்குக் குறைத்திருக்கிறோம்? புதிய புதிய இனங்களைச் சேர்த்து இதனாலே இன்னின்னார் பயனடைவார்கள் என்று மனமாரத் தெரிந்துதான் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்று நான் எடுத்துச் சொல்கிறேன்.

குறிப்பாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட இவைகளைக் கடுமையாக எதிர்க்க மாட்டார் என்று நான் நம்புகிறேன். அப்படி எதிர்த்தாலும் நான் எப்படிக் கருதுகிறேன் என்றால், இப்படி எதிர்க்காமல் விட்டு விட்டால், நம்மைப் பற்றி நம்முடைய கட்சிக்காரர்கள் என்ன நினைப்பார்கள் என்பதற்காக எதிர்ப்பார். இதய பூர்வமாக நிச்சயமாக எதிர்க்கமாட்டார். அவர் மட்டும் தானா? நல்ல எண்ணம் கொண்ட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சில பேர்களை நான் நேரில் கேட்டிருக்கிறேன். எங்களுடைய நிதி நிலை அறிக்கை எப்படி என்று? "இரண்டு ஆண்டு காலம் முடிந்திருக்கிறது. மூன்றாவது ஆண்டு ஆட்சி நடத்துகிறோம். ஆட்சிப் பொறுப்பேற்ற நாங்கள் சிறியவர்களாக இருக்கிறோம். நீங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள், எங்கள் நிதிநிலை அறிக்கை எப்படி?" என்று கேட்டபோது சிலபேர், "இப்போது சொல்ல முடியாது" என்கிறார்கள். சில பேர் உன்னிடத்தில் சொல்லித் தொலைக்கலாம் 'என்று, உள்ளபடியே இந்த 20 வருஷங்களில் இப்படிப்பட்ட நிதி நிலை அறிக்கையை நாங்கள் தயாரித்ததில்லை என்று மனமார ஒத்துக்கொண்டவர்கள் உண்டு. மேடையில் போய் பேசுவார், இப்படி ஒரு காங்கிரஸ்காரன் சொன்னான் என்று சொல்லித் தொலைத்து விடு. ஆனால் என் பேரை மட்டும் சொல்லாதே என்று சொல்லியவர்கள் உண்டு. ஆகவே; அப்படி மனதைக் கவரத் தக்க நிலையில் இந்த நிதி நிலை அறிக்கை அமைந்திருக்கிறது. நில உடமை பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, டிராக்டர்களை எப்படி வைத்துக் கொள்ள முடியும் என்று கேட்டார்கள். டிராக்டர்களை வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், அதிக நிலம் இருந்தால் தான் முடியும். 30 ஸ்டாண்டர்டு எக்கர் இருந்ததே பத்தவில்லை. 20—15 எக்கர் என்று ஆகிவிட்டால்; எப்படி முடியும் என்று சொன்னார்கள். சென்னைக்கு வர வேண்டுமென்றால்; காரில் வரவேண்டுமா? கார் வேண்டுமென்றால், 20 ஆயிரம் ரூபாய் வேண்டும். அதற்கு நிதி ஒதுக்க வேண்டும். ஆனால் பஸ்ஸிலும் வருகிறோம், இரயிலிலும் வருகிறோம்; வாடகைக் காரிலும் வருகிறோம். நிலம் இருக்கிறது, உழ வேண்டும், அதற்கு டிராக்டர் வேண்டுமென்றால்; 60 ஆயிரம் ரூபாய் கொடுத்து வாங்கினால் தான் உண்டா? உழுவதற்கு ஒரு ஜதை மாட்டிற்கு 5 ரூபாய் கொடுத்து வாடகைக்கு ஏர் உழுவதைப் போல டிராக்டருக்கு 15 ரூபாய் கொடுத்தால், இரண்டு மணி நேரத்தில் உழுது கொடுக்கிறார்கள். அந்த அளவிற்கு முற்போக்கு அடைந்திருக்கிறது. டிராக்டர் வாடகைக்குக் கிடைக்கவில்லையா? ஒரு டிராக்டர் இருந்தது பஞ்சாயத்து யூனியனில், சென்ட்ரல் பண்டு இருக்கிறது பஞ்சாயத்து யூனியனில்



இரண்டு டிராக்டர்கள் வாங்கிக் கொள்ளலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் இரண்டு டிராக்டர்கள் இருக்கின்றன. வரிசையாகச் செயல்பட ஏற்பாடு பண்ணி வைத்திருக்கிறார்கள், நஞ்சை, புஞ்சை என்று. டிராக்டர் வாங்காமலா இருக்கிறோம்? 15 ஸ்டாண்டர்டு எக்கர் என்று குறைத்து விட்ட பிறகு டிராக்டர் தேவைப்படாதா? விஞ்ஞான அறிவு உபயோகப்படாதா? யாரும் டிராக்டர் வேண்டாம் என்று விட்டுவிடவில்லையே, யாரும் மனுப்போடாமல் இருக்கவில்லையே. நம்மால் கொடுக்கத்தான் முடியவில்லை. இதற்காகக் கடன் வசதியெல்லாம் கேட்கிறார்கள். அந்த அளவிற்கு இதிலே இருக்கிற மோகம் குறைந்து போகாது. தவறான கணக்குப் போட வேண்டாம். இன்னும் இதை விட குறைந்த ஸ்டாண்டர்டு எக்கர் அளவுள்ள நாடுகளே கிடையாதா? அந்த நாடுகள் விவசாயத்தில் முன்னேற வில்லையா? பேரறிஞர் அண்ணா அவர்கள் ஜப்பானுக்குப் போய் வந்து சொன்னார்கள். அங்கே குறைந்த அளவு ஸ்டாண்டர்டு எக்கர் என்ற நிலை இருந்தாலும், மிகச் சிறந்த முறையிலே விவசாயம் செய்கிறார்கள். 100 எக்கர் நிலத்திற்காக எந்தெந்த அளவிற்கு வாய்ப்பு வசதிகளைத் தேடி வைத்திருப்பார்களோ அந்த அளவிற்கு ஜப்பானில் 5 ஸ்டாண்டர்டு எக்கர் நிலத்திற்காக வாய்ப்பு வசதிகளை வைத்திருக்கின்றன. நம்முடைய முதலமைச்சர் உள்பட சொன்னார்கள். பஞ்சாபில் நாம் காரில் போவது போல சினிமாவுக்கும் மற்ற கேளிக்கைகளுக்கும் டிராக்டர்களிலேயே குடும்பங்களை அழைத்துக் கொண்டு போகிறார்கள். அப்படி அவ்வளவு அதிக டிராக்டர்களை உபயோகப்படுத்துகிறார்கள். அங்கு டிராக்டர்களில் ஏறுவது தவறு இல்லை என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. அப்படி நாம் வரமுடியாதா? 15 ஸ்டாண்டர்டு எக்கர் போதாதா? எல்லாவற்றையும் உள்ளடக்கிய சட்டம் வரப் போகிறது என்று முதலமைச்சர் அவர்கள் சூசகமாகத் தெரிவிக்கிறார்கள். எல்லாவற்றையும் உள்ளடக்கியது என்றால் எதைச் சொல்லப் போகிறாரோ என்று குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். குழப்ப வேண்டியதுதான். அந்தத் துறையில் தெளிவு வெகு பெருக்கு இதிலே ஏற்படாது. நாங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னோம். நாங்கள் அரசியல் கட்சி சம்பந்தப்பட்ட ஒவ்வொரு மாவட்ட மாநாடு ஆனாலும், மாநில மாநாடு ஆனாலும், தனி மாநாடுகள் ஆனாலும், தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறோம். ஒவ்வொரு பொதுக் குழுவிலும் கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லாத நேரம் கிடையாது. சுட்டிக் காட்டாத வரிகளே கிடையாது. விவசாயத் தொழிலாளர் சட்டத்தைப் பற்றியும் நான் அந்தச் சட்டமன்றத்தில் 5 ஆண்டு காலம் உறுப்பினராக இருந்தபோது, ஒவ்வொரு வேளாண்மைத் துறை மானியம் வரும்போதும் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். ஒரு நாளைக்கு இப்படிப்பட்ட சட்டம் தேவை என்று கேட்டபோது கூட, அப்போது காங்கிரஸ் கட்சித் தொழில் அமைச்சராக இருந்தவர், "இப்படிப்பட்ட சட்டம் தேவையில்லை. ஏற்கெனவே இருக்கிறது," என்று சொன்னார். இருக்கிறது என்றால் அதிகப்படுத்தலாமே என்று கேட்டேன். சட்டத்தில் குறைந்த கூலி இருக்கிறது, ஆனால் நிலச்சுவான்தார்கள் அதிகக் கூலி தருகிறார்கள். எதற்காக அந்தச் சட்டத்தைத் திருத்துவானேன் என்று கேட்டார். நான் திருப்பிக் கேட்டேன். அவர்கள் அதிகக் கூலி கொடுக்கிறார்கள் என்பதை விட குறைந்த கூலி என்று இருக்கக் கூடிய சட்டம் இருப்பது நியாயமா, திருத்தக் கூடாதா என்று கேட்டேன். நான் எழுந்து போகிற வரைக்கும் நிச்சயம் செய்யமாட்டேன் என்று அழுத்தந் திருத்தமாக இருந்துவிட்டுப் போனார். எல்லாத் தரப்புகளிலும் கேட்டேன். அந்தச் சட்டமே பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் என்று கடைசியில் சொன்னார். நான் அந்த நேரத்தில் சொன்னது பண்ணையாளைப்பற்றி அல்ல. தினக் கூலி விவசாயிகளைப் பற்றிச் சொல்கிறேன். அதற்கு வாய்ப்புக் கொடுங்கள். ஒரு சட்டம் இயற்றுங்கள் என்று கேட்டோம். செய்தார்களா? இப்போது நாங்கள் செய்கிறோம் என்றால், யாரும் சொல்லிக் கொடுத்ததில்லையே. சில பேர் நாங்கள் சொன்னோம், இதைச் செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மற்றும் சில பேர் இவர்களுக்குத் தெரியாததல்ல என்கிறார்கள். இப்படியெல்லாம் இப்போது செய்திருக்கிறார்களே, இது என்ன புரட்சிகரமா? நாங்கள் ஏற்கனவே முதன் முதல் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் என்கிறார்கள், ஆனால் நடைமுறையில் தான் வித்தியாசம் தெரியும்

அது எந்த அளவிற்குப் பயன்பட்டது, இது எந்த அளவிற்குப் பயன்பட இருக்கிறது என்று அறிந்து கொள்வார்கள். நிச்சயமாகச் சொல்கிறேன் ஏழை எளிய மக்கள் உண்மையான பயனை நிச்சயம் பெறுவார்கள். அதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. வந்திருக்கிற சட்டங்கள் 1952-ம் வருஷத்தில் தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்தது. 1956-இல் நியாய வார நிர்ணயச் சட்டம் வந்தது. 1960-61-ம் ஆண்டில் நிலத்தினுடைய உச்ச வரம்புச் சட்டம் வந்தது. 1966-இல் டிரஸ்ட் ஆக்ட் வந்தது. அதற்குப் பிறகு விவசாய நில உடமை உச்ச வரம்பு என்றால் 5 ஸ்டாண்டர்டு எக்கருக்கு மேல் எந்த உழவனும் குத்தகைதாரரை வைத்துக்கொள்ளக்கூடாது. மிராசுதார்களிடத்தில் குத்தகைக்கு வாங்கி அதில் முதலீடு செய்து எல்லா முதலும் குத்தகைதாரன் போட்டு அவன் உழுது அதன் மூலம் அறுவடை செய்து 60 பங்கை அவன் எடுத்துக்கொண்டு 40 பங்கைக் கொடுத்துவிட்டு அந்த 60 பங்கை வைத்துக்கொண்டு 5 எக்கரை குத்தகைக்கு வைத்துக்கொண்டு அவன் குடும்பம் நடத்தவில்லையா? அவன் இந்த நாட்டில் மனிதனாக இல்லையா? அப்படிப்பட்ட ஒரு நிலைமையைத் தானே சோஷலிசம் என்று சொல்லி வந்தோம். எல்லா மக்களுக்கும் எல்லாம் சமம். உழைப்பும் சமமாய் இருக்க வேண்டும். பலனும் சமமாய் இருக்க வேண்டும், இதைத்தான் வலியுறுத்தி வந்தோம். 5 ஸ்டாண்டர்டு எக்கர் குத்தகைதாரருக்குப் போதும் என்று பேசியவர்களே, எப்படி 5 ஸ்டேண்டர்டு எக்கர் குத்தகைக்காரருக்குப் போதும் என்று சொல்லும்போது, 30 ஸ்டாண்டர்டு எக்கரை 15 ஸ்டாண்டர்டு என்று குறைத்தது எப்படிக் குற்றமாகும்? இதைத் தான் செய்திருக்கிறோம். இதைச் செய்ததை விட, இன்னும் கொஞ்சம் அதிகப்படியாகச் சொல்வதானால், எல்லா அரசியல் கட்சிக்காரர்களும், ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள அத்தனை பேர்களும், சோஷலிசத்தை விரும்புகிற அத்தனை பேர்களும், பொதுவுடைமை பேசுகிற அத்தனை பேர்களும் பாரபட்சம் இல்லாமல், இந்தச் சட்டம் கொண்டு வந்தது தங்களுக்கு நல்லதோ கெட்டதோ என்று எண்ணாமல், பாதகம் ஏற்பட்டாலும் கூட கவலைப் படாமல் இருந்தால், நேர் மாறான கருத்துக்கள் இந்த நாட்டில் இருக்காது.

இது கிராமத்தில் இருக்கின்ற பொருளாதாரத்தைக் கெடுக்கும் என்கிறார்கள். இது சிலருடைய கருத்து. ஆனால், இது கிராமத்தில் இருக்கின்ற பொருளாதாரத்தை வளர்க்கும் என்பது தான் உண்மை. எப்படி வளர்க்கும். உள்ளபடியே உழைப்பவன் ஒருவன். அதன் பயனை அனுபவிப்பவன் ஒருவன். இது இன்றைக்கு இந்த நாட்டில் தீராத நோய். இந்த நோய் ஒவ்வொரு பக்கத்திலேயும், கரத்திற்குக் கரம், கட்டம், கட்டமாக குறைக்கப்படுகிறது. இன்னும்கூட சுருக்கமாகச் சொல்லப் போனால், காங்கிரஸ் கட்சி நிறைவேற்றிய கராச்சி மாநாட்டுத் தீர்மானத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிலைநாட்டிக் காட்டியிருக்கிறது. உழும் நிலம் உழைப்பவனுக்குச் சொந்தம் என்று அன்றைக்கு இருந்தது. அன்றைய நிலை உச்சவரம்பு கொண்டு வந்த பொழுது, பல ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் சர்க்கார் வசம் ஒப்புவிக்கப்பட்டு, உழுபவனுக்குக் கொடுக்கப்படும் என்ற நிலைமை நிர்மாணத்திற்கு வரவில்லை. ஆனால், இன்றைய தினம், உழும் ஏழை விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கும் வகையில் அந்தத் திட்டம் நடை முறைக்கு வரும் என்ற நம்பிக்கை ஏழைகளுக்கும் விவசாய மக்களுக்கும் இருக்கிறது. எனவே, இந்த நிதி நிலை அறிக்கை தயாரித்த இந்த சர்க்காரையும், இதை வெளியிட்ட நம்முடைய நிதி அமைச்சர் அவர்களையும் தொழிலாளர் சமுதாயத்தின் சார்பாக நான் பன்முறை பாராட்டுகிறேன். நீங்கள் தான் ஆளும் கட்சியிலே இருப்பவர் ஆயிற்றே, நீங்கள் இந்த அரசாங்கத்தைப் பாராட்டலாமா என்று கேட்கலாம். இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், நான் உள்ளபடியே தெரிவித்துக்கொள்கிறேன், இதிலே ஆளும் கட்சியா, எதிர்க் கட்சியா என்று பார்க்கத் தோன்றுது. அந்த அளவுக்கு இந்த நிதி நிலை அறிக்கை பல் வேறு நல்ல திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. 3,000 டிராக்டர்கள் இப்பொழுது வாங்குவதற்கு "Finance Corporation" விவசாய மாநிலக் கடன் திட்டத்தின் கீழ் ஒரு சட்டத்தைத் தயாரித்திருக்கிறோம். தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் துறை வளர்ச்சிக்காக பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம். அதற்கு எல்லாம் அனுமதி தருவதற்கு



இந்த அரசு நினைத்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு அரசைப் பொது மக்கள் நிச்சயமாக வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள். அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இந்த நிதி நிலை அறிக்கை இருக்கிறது என்று தான் மக்கள் எல்லாம் வெளியே பேசுகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றைப்பற்றி நினைவுபடுத்த விரும்புகிறேன். 1966-67 ஆம் ஆண்டிலே நம்முடைய நாட்டிலே வாங்கிய டிராக்டர்கள் 209. நாங்கள் இப்பொழுது வரியைப் போட்டுவிட்டோம். இரண்டு நாள் ஆயிற்று நிதி நிலை அறிக்கை வெளிவந்தது. ஆயினும் ஊர் பூராவும் இதே பேச்சு ஏதோ சாதாரண பொருள்களுக்கு எல்லாம் வரியை உயர்த்தி விட்டோம் என்று. 209 டிராக்டர்களை அந்த வருஷம் காங்கிரஸ்காரர்கள் வாங்கினார்கள். இரண்டு ஆண்டுகளுக்குள்ளே 1,328 டிராக்டர்களை நாங்கள் வாங்கி விநியோகித்திருக்கிறோமே, இதற்கு என்ன சொல்கிறீர்கள்? அதைவிட இன்னும் சொல்லப் போனால், நம்முடைய மாநிலம் மின்சார வசதியைப் பெற்ற மாநிலம். மின்சார வசதியைப் பெருக்கியதில் முன் நிலையில் இருப்பது நம்முடைய மாநிலம். இந்திய சர்க்காரே நமக்கு இதுபற்றி 'சர்டிபிகேட்' வழங்கியிருக்கிறது. இப்படி இருந்தும்; இந்தக் காங்கிரஸ் ஆட்சி, 17 ஆண்டு காலத்தில், மொத்தம் எத்தனை கிராமங்களுக்கு மின்சாரத்தை கொடுத்தது; இந்த நிதி ஆண்டு காலத்திலே நாங்கள் எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம்? புதிய மின் விசை இணைப்புகள் விவசாய கிணறுகளுக்கு, ஏற்கனவே 17 ஆண்டு காலத்திலே எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது, நாங்கள் வந்து எவ்வளவு கிணறுகளுக்கு மின் விசை இணைப்புகள் கொடுத்திருக்கிறோம் என்பதை எல்லாம் நீங்கள் ஒப்பிட்டுப் பார்த்தால், அது எல்லாம் ஒன்றுக்கு இரண்டு பங்கு, மூன்று பங்கு, நான்கு பங்கு என்று அதிகரித்துக்கொண்டு வந்திருக்கிறதே தவிர, குறைந்தபாடு இல்லை. நம்முடைய முன்னாள் முதல் அமைச்சர் கூட அடிக்கடி சொல்லுவார்கள், வரி போட வேண்டுமானால், நல்லதைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறவன் நிச்சயமாக வரிபோட்டுத்தான் ஆவான். அப்படி வரி போடாதவன் சோம்பேறி, வரி போடாதவன் நாட்டைப் பற்றி அக்கறை கொள்ளாதவன் என்பார். இப்படிச் சொன்ன அந்த வார்த்தைகள் இப்பொழுது உங்களுக்கு அது சொந்தம் இல்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். நான் இதை எடுத்துச் சொல்வதற்குக் காரணம், எதிர் கட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே காணப்பட்ட நல்ல அம்சங்களையும், சிறிய வரி உயர்வையும் ஆதரிப்பார் என்று நினைத்திருந்தேன். ஆனால், அதற்கு மாறாக, அவரும் அவரது கட்சியைச் சார்ந்தவர்களும் இப்பொழுதே வரிந்து கட்டிக்கொண்டு இந்த பட்ஜெட்டை எதிர்க்கும் நிலையிலே இறங்கி விட்டார்கள். அப்படி நான் எதிர்க்கப் போகிறேன் என்று ஆயத்தம் பண்ணிக்கொள்கிறார்கள்.

இன்னொரு பத்திரிகையிலே நான் செய்தி படித்தேன். அந்த பத்திரிகையை இங்கே கொண்டு வந்து தலைவர் அவர்கள் முன்னிலையில் "Privilege Motion" கொடுக்கலாம் என்று இருந்தேன். ஆனால், அந்த பத்திரிகையைப் பற்றி இந்த மன்றத்துக்குள்ளே பேசப்படுவதே நல்லதல்ல என்று எண்ணி அப்படிச் செய்யாமல் இருந்து விட்டேன். அவ்வளவு தரக்குறைவாக இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றித் தலையங்கம் தீட்டியிருக்கிறது. அந்த தலையங்கத்திலே ஒரு பத்தி எழுதியிருந்ததைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எதிர்க் கட்சியாக இருந்து பணியாற்றும்பொழுது சொன்னார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆளுக்கு மூன்று எக்கர் நஞ்சையும், ஆளுக்கு 5 எக்கர் புஞ்சையும் தருவோம். ஆளுக்கு ஒரு ஜோடி பசுவும், உழவு மாடும்; ஆளுக்கு ஒரு ஜோடி சேவலும், பெட்டையும்; ஆளுக்கு ஒரு ஜோடி கோழி முட்டையும் தருவோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்தார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆட்சிக்கு வந்து, இவ்வளவு தர வேண்டாம், ஒரு ஜோடி கோழி முட்டையையாவது தந்தார்களா என்று கேட்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையில் அதற்கு ஏதாவது சான்று இருக்கிறதா என்று கேட்கிறார்கள். ஒரு சர்க்கார் இங்கே கொண்டுவந்த நல்ல ஒரு நிதிநிலை அறிக்கைக்கும், அவர்கள் இது பற்றி மக்கள் மத்தியிலே ஒரு களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டு

போகிற நிலைமைக்கும் எவ்வளவு ஏற்றத் தாழ்வுகள் காணப்படுகின்றன. எவ்வளவு தரக்குறைவாக இருக்கிறது பாருங்கள். அதுவும் ஒரு பத்திரிகையாக வெளி வருகிறது. அந்த பத்திரிகையை வாங்கி கையிலே வைத்துக்கொண்டு கூச்சம் இல்லாமல் இந்த சபையிலே இருப்பவர்களும் நடக்கிறார்கள். கேட்டால், எங்கள் கட்சிப் பத்திரிகை என்று ஒன்று இல்லை என்கிறார்கள். எங்கள் கட்சியை நடத்துபவர்கள் தான் அதை நடத்துகிறார்கள், எனவே நாங்கள் வாங்கிப் படிக்கிறோம் என்கிறார்கள். அந்தப் பத்திரிகையை நான் இந்த மேலான சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பவில்லை. இதைப் பற்றி எல்லாம் பேசும்பொழுது என்னுடைய நா கூசுகிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இந்த நாட்டிலே ஏற்படக் கூடாது என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், எங்களுடைய பயணம், எங்களுக்கு இருக்கின்ற விருவிருப்பு, உத்வேகம் இந்த புரட்சிகரமான திட்டங்களிலே கொண்டிருக்கிற நாட்டம், கொஞ்சமும் குறையப் போவதில்லை. செய்கின்ற வேலைக்குப் பயனை எதிர்பார்க்கப் போவதில்லை. எங்களுக்குத் ஒரு திருப்தி என்னவென்றால், குறைந்த காலத்திலே இவர்கள் ஆட்சிக்கு வந்து பல திட்டங்களை நிறைவேற்றும் வகையிலே இந்த பட்ஜெட்டைக் கொண்டு வரும்பொழுது, பல குறைகளையும் எங்களுக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். ஒன்றை ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் புதிதாக எந்த வரியையும் போட்டுவிடவில்லை. ஏதோ சில இனங்களிலே வரிகளை உயர்த்தித்தான் இருக்கிறோம். அது ஏழை மக்களையும், விவசாயிகளையும், வாட்டி வதைக்காது என்று பெரியவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். நாங்கள் போட்ட திட்டங்கள் எல்லாம் செயலாற்றும் முறையில் "ரொம்ப ஜாக்கிரதையாக செயலாற்றுங்கள், நடவடிக்கைகளைப் பார்த்து எடுங்கள்" என்று எங்களுக்கு யோசனை நீங்கள் சொல்லலாம். அந்த யோசனைகளை நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். எனவே, இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், மறைந்த மாபெரும் மேதை அண்ணா அவர்கள் காட்டிய வழியில் நடந்த காரணத்தினால், அவர் இந்த நாட்டு மக்களுக்கு ஆற்றி இருக்கும் அரும் பணிக்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். அவர் விட்டுச் சென்ற பணிகளை இன்றைக்கு மேற்கொண்டு நடத்தி வெற்றி பெற வேண்டும் என்பதில் எங்களுக்கும், இந்த நாட்டு மக்களுக்கும் நம்பிக்கை இருக்கிறது. எனவே, நான் என்னுடைய சுய உணர்வோடு இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டி, பெருமைப்படுகிறேன். இப்படிப்பட்ட நிதி நிலை அறிக்கையை அதிகமான அளவிலே வருகின்ற ஆண்டுகளிலே செயல்படுத்தி, நாட்டுக்கு நல்லவைகளைச் செய்வோம் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்) :** மாண்புமிக்க அவைத் தலைவரவர்களே, பொதுவாக நம்முடைய நாட்டில் தனி மனிதன் வாழ்க்கையானாலும் சரி, நிறுவனமான அமைப்பானாலும் சரி, அதைவிட ஜனநாயகத்திற்கே பல நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கும் இக் காலத்தில், இப்படிப்பட்ட நல்ல முற்போக்கான ஒரு நிதி நிலை அறிக்கையை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்ததற்காக எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தனி, தனி ஒதுக்கீடுகள் வரும்போது நான் விளக்கமாகப் பேசலாம் என்று நினைக்கிறேன். ஆயினும், எடுத்துக்கொண்டிருக்கிற நிதி நிலை அறிக்கையில் காணப்படுகின்ற நல்ல திட்டங்களைச் செயல்படுத்துவதில், நடைமுறையில் இருக்கின்ற குறைகளை நீக்கி அதை நிறைவு பண்ணுகின்ற முறையில், அதனால் மக்கள் முழுப் பயனை அடையும் வகையிலே, நான் சில யோசனைகளை இங்கே நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். பொதுவாக, நம்முடைய நாட்டில் உணவுப் பற்றாக் குறை, உணவைப் பற்றிய பேச்சு அதிகமாக இருந்து வருகிறது. இந்த நேரத்தில் நாம் வேளாண்மைத் துறையில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது பற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் நம்பிக்கையூட்டும் அம்சங்கள் நிறைய இருக்கின்றன. மற்றும் இந்த அரசு நவீன இயந்திரங்களை எல்லாம் வாங்கி அதிகமாக விவசாயத் துறையிலே உபயோகப்படுத்தியதன் விளைவாக, வேளாண்மைத்துறையில் அபிவிருத்தி ஆகியிருக்கிறது என்பதை யாரும் இன்றைக்கு மறுக்க முடியாது. ஆனால், இதுபற்றி வானொலியிலே வருகின்ற செய்திகள், செய்தித் தாள்களின்



மூலமாக வருகின்ற செய்திகள் எல்லாம் தமிழ் நாடு முழுவதிலும் உள்ள, எல்லா கிராமங்களிலும் உள்ள நில உடைமைக்காரர்களுக்கும் விஸ்தரிக்கப்படவில்லை. அந்தத் துறையில், விவசாய இலாக்கா அதிகமான ஆட்களை ஈடுபடுத்தி இந்தத் துறையில் அதிக, ஆழமான கவனத்தைச் செலுத்த வேண்டும். மற்றும், கிராமத்தின் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறது. இன்றைக்கு ஒரு பஞ்சாயத்துக் கூட்டு மன்றத் தலைவர் பெரும்பாலும் விவசாயிகளுக்கு உரம் இல்லாத நிலைமையை நிறைவு செய்தால்தான், எல்லா காரியங்களையும் அதன் நிமித்தம் செய்தால்தான், இந்த நவீன விவசாய முறைகள் எல்லாம் எல்லா கிராமங்களுக்கும் பரவ ஏதுவாக இருக்கும். அப்பொழுதுதான் அதிக பட்ச உணவுப் பொருள்களை விளைவிக்க முடியும். எனவே, இந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் எல்லாம் நம்முடைய விவசாயத் துறை அலுவலர்களை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும். பல மாவட்டங்களிலே புதிய விவசாயத் தகவல் நிலையங்களை ஏற்படுத்தி, நவீன விவசாய ஆராய்ச்சிகளைச் சுலபமாக வழங்க வேண்டும். இந்த விவசாயத் துறையானது "மண் வளத்தைச் சோதனை செய்யும் முறைகளை" எளிமைப்படுத்தி, அது எல்லா விவசாயிகளுக்கும் சுலபமாக கிடைக்கும் வகையிலே ஆவன செய்ய வேண்டும். விவசாயிகள் மனு கொடுத்துத்தான் தன்னுடைய நிலத்தின் மண் வளத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நிலை மாறி, இந்த விவசாய இலாக்காவே வலியச் சென்று அப்படிப்பட்ட ஆராய்ச்சிகளைச் செய்து தர வேண்டும். இதுபோன்ற நிலைமைகள் இப்பொழுது சில மாவட்டங்களில் இருந்தாலும்கூட, இன்னும் அதிகமாகப் பல இடங்களுக்கு இவைகளை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக கிராமத்தின் முன்னேற்றத்தை இந்த அரசும் சரி, சுதந்திரம் வந்ததற்குப் பிறகும் சரி, பஞ்சாயத்து முதல்வரை வைத்துத் தான் வலியுறுத்தினார்கள். இப்பொழுது பெரும்பான்மையான பஞ்சாயத்துக்கள் அரசாங்க ஆணைகளைப் பற்றிச் சரியான நிலைமைகளிலே அறிந்து புரிந்துகொண்டு செயலாற்ற முடியாத தன்மையிலே இருப்பதால், நாம் சொல்லுகின்ற ஐந்தாண்டுத் திட்டம் போன்றவைகளை சரியாகச் செயல் படுத்தும் சக்தி அந்தப் பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு இல்லை. எனவே, ஒவ்வொரு பஞ்சாயத்தும் "நிர்வாகக் காரியஸ்தராக" இருக்க வேண்டும். அப்படிப்பட்ட திட்டத்திற்கு உயிர் ஊட்டும் அளவிலே, நம்முடைய திட்டங்களை அங்கே எல்லாம் செயல்படுத்த வேண்டும். சட்டப்படி, ஒரு பஞ்சாயத்து 30 ரூபாயிலே ஒரு குமாஸ்தாவை வைத்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. ஆனால், அந்தச் சம்பளத்திற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. எனவே, பெரும்பான்மையான இடங்களிலே அப்படி ஆட்கள் கிடைக்காததால், அரசாங்கத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் காட்டுவதோடு, அந்தப் பஞ்சாயத்துக்கள் செயல்படாது இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். ஆகவே, அந்தக் கிராமத்திலே இருக்கும் ஒவ்வொருவரும் "நிர்வாகச் செயலாளராக" இருக்க வேண்டும் என்பது தான் என்னுடைய விருப்பம். ஆனால், அப்படி ஒரு பஞ்சாயத்திலே செய்ததற்காக, இதுபற்றி விவசாய இலாக்கா ஆட்சேபித்ததாக என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதாவது, ஏற்கெனவே கிராமங்களிலே இருப்பவர்களுக்குப் பல வேலைகள் இருப்பதால் விவசாயத்தைக் கவனித்துக்கொண்டு அதைச் செய்ய முடியாது என்கிறார்கள். என்னுடைய அபிப்பிராயம் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு அலுவலர் இருந்தால், அவர் விவசாயத் துறையையும், கால் நடை விஸ்தரிப்பு போன்றவைகளைக் கூட நன்றாகக் கவனிக்க முடியும் என்று நம்புகிறேன். பஞ்சாயத்துக்கள் ஒழுங்காகக் கூட்டங்களைக் கூட்டி வருகின்றதா என்பதையும் அவர் அறியலாம். அதன் மூலம் இந்த ஜனநாயகப் பண்புகள் வளரும் என்பதையும் பார்க்கலாம்.

பொதுவாக நில உச்ச வரம்புப் பிரச்சினைகளைப் பொறுத்த மட்டில் நாம் இன்றைக்கு மிக்க கவனத்தோடு பார்க்க வேண்டிய பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் அதைக் குறிப்பிட்டார்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தில் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உச்ச வரம்புச் சட்டத்தை திருத்த இருக்கிறார்கள். நாடு நவீனமாகிக் கொண்டு வருகிற நேரத்தில்

[திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிகர்] [28th February 1970

உழவர்களின் வாழ்க்கைத் தரம் மாறாமல் இருக்கின்றது. இந்த ஒரு துறையிலே இருக்கிறவர்களின் வாழ்க்கைத் தரம் மட்டுமே அப்படியே மாறாமல் இருக்கின்றது. அவர்களுக்குக் குடியிருப்பு வசதி, கல்வி வசதி, மருத்துவ வசதி கிடைக்கிறதா என்றால் இல்லை. பெரிய மில்களில் நவீனப் படுத்தப்பட்ட பெரிய தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் வசதிகள் இவர்களுக்கும் கிடைக்கிறதா என்றால் இல்லை. தொழில் அதிபர்கள் தங்களுடைய தொழிலாளிகளுக்கு இத்தனை வசதிகளையும் செய்து தரவேண்டுமென்று செய்திருக்கிறார்கள். ஆனால் நிலத்தில் உழுவடை செய்கிறவர்களுக்கு நிலச் சுவான்தான் இந்த வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று எந்த ஏற்பாடும் இல்லை. எந்த விதமான "condition"-ம் இல்லை.

நில உச்சவரம்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், அதன் பிறகு பெரும்பாலும் மிராசுதாரர்கள் இருக்க மாட்டார்கள். பெரும்பாலான நிலங்கள் உழுவடைதாரர்கள் கைக்குப்போய்ச் சேரும். இந்தப் பிரச்னையைப் பொறுத்த மட்டில், சமய சம்பந்தமான அமைப்புகளுக்கு உள்ள நிலங்களில் உழுவடை செய்யும் உழவர்களுக்கும் இந்த அமைப்புகளுக்கும் உள்ள உறவு எப்படிப் பாதிக்கப்படும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. எனவே, அந்த உறவு கெட்டுவிடாமல் இருக்கத் தக்க விதத்திலே இந்தச் சட்டத்தைத் திருத்தினால் நல்லது என்று அந்தத் துறையில் சம்பந்தப்பட்டவன் என்ற முறையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பட்டோர் நலனுக்கென தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தை அதிகமாக வற்புறுத்தி வந்தார்கள். அவர்கள் நலனைக் கவனிக்க வேண்டியது அவசியம். அதிலே தவறு ஒன்றும் இல்லை. நியாயமானது கூட. தீண்டாமை ஒழிப்பு, பிற்பட்டோர் நலன் ஆகியவைகளை அதிகமாகக் கவனிக்க வேண்டியது அவசியமாகும். அதை இந்த அரசு நல்ல முறையிலே செயல்படுத்த, பிற்பட்டோருக்கு என ஒரு தனித் துறையை அமைத்து, அவர்கள் நலனைப் பாதுகாக்க முன்வந்திருப்பது கண்டு மன மகிழ்ச்சி அடைகிறேன். பிற்பட்டோர் தங்கள் நலனைப் பாதுகாக்க ஒரு பிரதிநிதியைப் பெற முடியவில்லை. அவர்களுக்காகக் குரல் கொடுக்க ஒருவரைப் பெற முடியவில்லை. தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. இதற்கு நாம் பரிகாரம் காணவேண்டும். குறிப்பாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வலையர், முத்துராஜா சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில், பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு பஞ்சாயத்து உறுப்பினர் கூட இல்லை. அவர்களுக்கு ஒருவர் கூடக் கிடைக்க முடியவில்லை. பஞ்சாயத்து கௌன்சிலுக்கு ஒரு பிரதிநிதியைக் கூடப் பெற முடியவில்லை. இப்படிப் பின் தங்கிய நிலையில் அந்தச் சமூகம் இருந்துகொண்டிருக்கிறது. அவர்களின் நலனில் அக்கறை கொண்டு இந்த அரசு பின் தங்கிய மக்களுக்கென ஒரு துறையை அமைத்து இருப்பது கண்டு அதற்காகப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக, கிராமப்புறங்களில் மிகச் சிக்கலான பிரச்னை குடியிருப்புப் பிரச்னை. குடியிருப்புக்கு மனைகள், வீடுகள் கிடைக்காத சிக்கல் இருக்கிறது. இதை அதிகப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் நமக்கு இருக்கிறது. ஆனால் நத்தங்களில் உள்ள நிலத்தைப் பட்டா போட்டுக்கொடுங்கள் என்று கேட்டால், பஞ்சாயத்துக்கள் பட்டா கொடுக்க முன்வருவதில்லை. ஏனென்றால் அவைகளைப் பஞ்சாயத்துக்கள் வைத்துக் கொண்டுள்ளன. மனை சொந்தமாக்கப்படுவதற்கு பட்டா கொடுங்கள் என்றால், கொடுப்பதில்லை. பஞ்சாயத்துச் சட்டம் அப்படியிருக்கிறது. எனவே நத்தங்களில் குடியிருப்பு மனைகளுக்கு பட்டா வழங்கத் தக்க முறையில், பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலப்பட்டா இல்லாவிட்டால், அவர்களுக்குக் கடன் வசதிகள் கிடைப்பதில்லை. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு அவர்களுக்குப் பட்டா பெறுகிற வசதியைச் செய்து



28th February 1970] [திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிகர்]

தர வேண்டும். அதே போல பிறந்த ஒவ்வொருவனுக்கும் குடியிருப்பு மனை வழங்கத் தக்க முறையில் நிதிநிலையைச் செயல்படுத்த வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பல கிராமங்களில் வேலைவாய்ப்பு இருந்தாலும், போதிய வேலைவாய்ப்பு கிடைக்காமல் பலர் இருக்கிறார்கள். ஆங்காங்கு சிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றியிருக்கின்றன. இருந்தாலும்கூட அவைகள் அதிக அளவில் வளரத்தக்க விதத்தில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அற நிலையம் ஒரு தனித் தலைப்பாக இராமல் "மிசிலேனியஸ்" (Miscellaneous) ஆக இருக்கிறது. பல லட்சக்கணக்கான ரூபாய் வருவாய் உடையதும், பல லட்சக்கணக்கான ரூபாயை நிர்வாகம் செய்யும் இந்த அறநிலையத்துறைக்கு ஒரு தனி வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படாமல், "மிசிலேனியஸ்" என்ற தலைப்பின் கீழே இருக்கிறது. இதிலே சில செய்திகளை நினைவுபடுத்த விரும்புகிறேன். பழங்கோவில்கள், பழைய கோவில்கள் பல கிராமத்தின் மையத்தில் இருக்கின்றன. தண்ணீர் வசதியுள்ள சிறு குளங்கள் பல பேணுவாரின்றிக் கிடக்கின்றன. பார்க்கிறோம். இவைகளைப் பேணுவதற்கு நிதி வாய்ப்புகள் போதுமானதாக இந்தக் கோவில்களுக்கு இல்லை. சில கோவில்களில் நிதி உபரி இருக்கிறது. இந்தக் கோவில்கள் தன்னிச்சையாகச் செலவு செய்துகொண்டிருக்கின்றன. இந்தத் துறைக்கு என்று ஒரு கார்ப்பரேஷன் அமைத்து பெரிய கோவில்கள், சிறிய கோவில்கள் எல்லாவற்றின் நிதியையும் நிர்வாகம் செய்யும்படி செய்தால், சிறிய வருவாய் இல்லாத கோவில்கள் உபரி நிதியிலிருந்து நீண்ட காலத் தவணையில் கடன் பெற்றுக்கொள்ள வசதி இருக்கும். இப்படி உதவி கொடுத்தால் பழைய கோவில்களைப் புதுப்பிக்க முடியும். அற நிலையத் துறைக்கு என்று ஒரு அமைச்சர் இருக்கிறார். என்டௌமன்ட் ஆக்ட் இருக்கிறது. ஆனால் அந்தச் சட்டத்தில் டிரஸ்டிகள் விரும்பினால் உதவி செய்யலாம் என்று இருக்கிறது. சட்டப்படி கோர்ட்டுக்குப் போக முடியாது. பரம்பரை டிரஸ்டிகள், அல்லது அந்தக் கோவில் சம்பந்தப் பட்ட நிர்வாகிகள் விரும்பினால் மட்டுமே, அந்தக் கோவிலின் நிதியி லிருந்து உதவி செய்யலாம் என்று இருக்கிறது. எனவே இதை மாற்றி ஒரு கார்ப்பரேஷன் அமைத்தால் அந்தக் கார்ப்பரேஷன் பெரிய கோவில்களின் உபரி நிதியிலிருந்து கடனாகக் கொடுக்க முடியும். இல்லையேல் தயவு தாட்சண்யமின்றி டிரஸ்டிகள் உதவி கொடுக்காமல் இருக்கும் நிலை மாறாது. பெரிய கோவில்களின் நிதியிலிருந்து சிறிய கோவில்களுக்குக் கடன் கொடுத்தால், கிராமத்தின் குடி தண்ணீர் பிரச்சினையையும் தீர்க்க முடியும்.

கல்வித் துறைக்கு இந்த அரசு அதிகத் தொகையை ஒதுக்கியிருக்கிறது. நிறையச் செலவழித்துக் கொண்டிருக்கிறது. திரு. ராஜா அய்யர் அவர்கள் எடுத்துக் கூறியது போல பகுத்தறிவு வந்ததா என்றால் இல்லை. மாணவர்களுக்குப் புத்திசாலித்தனத்தை வளர்க்கத் தக்க முறையில் இன்றைய கல்வியமைப்பு இருக்கிறதா என்றால், இல்லை. எனவே இந்த முறையை மாற்றியாக வேண்டும். மாணவர்களின் புத்திசாலித்தனத்தைத் தூண்டிவிடுகிற மாதிரி கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். அன்னியன் கொடுத்த ஆங்கிலேயக் கல்வி முறையே இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய சுய சிந்தனையைப் போதுமான அளவிற்கு வளர்க்கத் தக்க விதத்தில் கல்வி முறை மாற்றம் செய்யப்பட வேண்டும். பள்ளிகளில் கல்வியைக் கற்றுக் கொடுக்கின்றார்கள். அறிவைக் கற்றுக் கொடுக்கவில்லை. பள்ளிகளுக்குப் பிள்ளைகள் ஏழாவது வயதில் வருகிறார்கள். அதுவரையில் அவர்கள் அறிவு வளராமல் இருக்கும் நிலை தான் இன்று இருந்து கொண்டிருக்கிறது.

ஆங்காங்கு சிறுவர் பாதுகாப்புக்காக சிறுவர் பாதுகாப்பு இல்லங்களைத் துவங்கியிருக்கிறார்கள். இதைப் பாராட்டுகிறேன். இன்னும் அதிகப்படியான சிறுவர் பாதுகாப்பு இல்லங்கள், நர்சரிகளைத்துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிகர்] [28th February 1970

அடுத்து, பல பள்ளிகளில் 155 மாணவர்களுக்கு மேல் புதிதாக வந்தால் தான் இன்னொரு ஆசிரியரை நியமிக்கலாம் என்று உத்திரவு இருக்கிறது. அதன் மூலம் 6,7,8-வது வகுப்புகளுக்கு ஒரே ஆசிரியர் இருக்கிறார். உயர்நிலைப் பள்ளிக்குத் தனித்த விதி இருக்கிறது. 20 பையன்கள் இருந்தாலும் வகுப்பிற்கு ஒரு ஆசிரியர். ஆனால் ஆரம்பப் பாடசாலையில் 3 வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர். உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களை மேய்த்து விடலாம். ஆனால் 6,7.8-வது வகுப்பு மாணவர்களை மேய்ப்பது என்பது ரொம்ப சிக்கல் என்பதால் உயர்நிலைப் பள்ளிகளைப் போலவே இந்தக் கீழ் வகுப்புகளுக்கும் வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் என்ற நியதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றினால், ஏற்படும் நெருக்கடியைப் பற்றிப் பார்க்காமல் இது கல்வி சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருப்பதினால், இதைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, வெளிப்படையாகப் பார்க்கிற போது, இன்றைக்கு இருக்கிற இக்கட்டான சூழ்நிலையில் இது போன்ற ஒரு நிதி நிலைத்திட்டத்தைச் செய்திருப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவே, பாராட்டி, இந்தச் செயல் முறையைப் பற்றிச் சில செய்திகளை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு செயல்படுவார்கள் என்று கூறி விடைபெறுகிறேன்.

**திரு. எஸ். ராகவானந்தம் :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த 1970–71 நிதியாண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்காக என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் துண்டு விழக்கூடிய 8 கோடியே 96 லட்சம் ரூபாயைச் சரிக்கட்டுவதற்கு வரி விதிப்பின் மூலம் 6 கோடி பெற இருக்கின்றனர். இந்த வரி விதிப்பின் முறையை உண்மையாகவே சோஷலிஸத்தில் நம்பிக்கையுள்ள நாங்களெல்லாம் வரவேற்கிறோம். புதிதாக எந்த வரியும் இல்லை என்பதை மிக மகிழ்ச்சியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். விதிக்கப்பட்ட வரிகள் சம்பந்தப்பட்ட வரை, ஏற்கனவே உள்ள வரியைத்தான் உயர்த்தி இருக்கிறார்கள். அந்த வகையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இந்த நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள வரியின் மூலமாக 6 கோடி ரூபாய் பெறுவதாக இருந்தாலும், புது வரி போடவில்லை என்பதாலே, நாட்டு மக்களெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது போட்ட வரிகள் கூட யாருக்குப் போட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். மின்சாரப் பொருள்கள், ஃபோம் ரப்பர் மெத்தை, பணக்காரர்கள் 300 ரூபாய், 400 ரூபாய்க்கு வாங்கக் கூடிய மெத்தைகள், 25, 30 ரூபாய்க்குத் தலையணை போன்றவைகளை வாங்குகிறார்களே, அவைகளுக்கு வரியை உயர்த்தி இருக்கிறோம். ஏழைகளை பாதிக்கக்கூடிய பொருள்களுக்குப் போடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு நறுமணம், செண்டு போட்டுக்கொண்டு வரக்கூடியவர்களுக்குத்தான் அந்த செண்டின் மேல் அதிகமாக வரியை உயர்த்தியிருக்கிறோமேயல்லாது, ஏழை மக்களைப் பாதிக்கக் கூடிய தேயிலை, காப்பி, மண்ணெண்ணெய், சோப்பு, உரங்கள், பயிர் நோய்க் கொல்லிகள் முதலியவைகள் மீது அதிக வரியோ அல்லது புதிய வரியோ போடவில்லையென்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஐந்து லட்சத்துக்கு மேற்பட்ட அளவு வியாபாரம் செய்யக்கூடியவர்கள் ஆண்டு ஒன்றுக்கு வாணிபம் செய்து அதற்கு வரக்கூடிய வரி விதிப்பின் மேல் 7½ சத வீதம் கூடுதலாக வரி போட்டிருக்கிறோம். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் ஒரு நல்ல முதலாளித்துவ வாதத்தை இங்கே நன்றாக வைத்தார்கள். முதலாளிகளின் பிரதிநிதி இருந்தால் எவ்வளவு அழகாக வாதாடுவாரோ, அந்த அளவு மிக நன்றாக வாதாடினார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அவர்கள் சொன்னார்கள், இந்த வரியை அதிகமாக லாபம் வந்தால் கொடுக்கலாம், லாபம் வரவில்லை என்று சொன்னால், அவர்களுடைய மூலதனத்திலிருந்து கொடுக்க வேண்டுமா என்று சொன்னார்கள். நான் இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஐந்து லட்சம் ரூபாய் "டர்ன் ஓவர்" இருந்தும் லாபம் இல்லாமல் போய்விடும் என்று சொன்னால், நான்



28th rFebuary 1970] [திரு. எஸ். ராகவானந்தம்]

நம்பத் தயாராய் இல்லை. நான் பல தொழிற்சாலைச் சங்கங்களுக்குத் தலைவனாய் இருக்கிறேன். ஐந்து லட்சம் " டர்ன் ஓவர் " இருந்தும் லாபம் இருக்காது என்பதை என்னால் நம்ப முடியவில்லை.

**திரு. ஏ. தாமோதரன் :** தலைவர் அவர்களே, டிரான்ஸ்போர்ட்டில் 19 கோடி வருமானம் வந்தும் 60 லட்சம் நஷ்டம் எப்படி வருகிறது ?

**திரு. எஸ். ராகவானந்தம் :** ஏற்கனவே இருந்த அரசு நஷ்டத்தை அதிகமாக ஆக்கிவிட்ட பின்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்து அதை லாபமாக மாற்றியிருக்கிறோம் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, 270 கிலோ மீட்டருக்குக் குறைவாக ஓடும் பஸ்களும், 270 கிலோ மீட்டருக்கு மேல் ஓடும் பஸ்களும் இப்போது இருக்கக்கூடிய 50—55 ஒரு குவார்ட்டருக்கு என்று சீட்டு கணக்கிட்டு உள்ளதை 10 ரூபாய் அதிகமாக ஆக்கியிருக்கிறோம். இந்த வரிகள் மூலம் 106 லட்சம் ரூபாய் அதிக வருவாய் வரும். ஆனால், இந்த வரிகள் ஏழைகளைப் பாதிக்கப்போவதில்லை. பத்து ரூபாய் அதிக வரி போட்டுவிட்டதால், எந்த பஸ்களிலும் கட்டணம் உயர்த்தப்போவதில்லை. உயர்த்த முடியாது. இதன் மூலமாக ஏழைகளும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். திரைப் படத்தைப் பொறுத்தவரையில், ஒரு காட்சிக்கு 2½ ரூபாய் என்று இருந்ததை 5 ரூபாய் என்றும், இரண்டு ரூபாயை 4 ரூபாய் என்றும், 1½ ரூபாயை 3 ரூபாய் என்றும், 1 ரூபாயை இரண்டு ரூபாய் என்றும், அதிகம் ஆக்கியிருக்கிறோம். இதனால் தியேட்டரில் டிக்கட் விலை உயர்ந்து விடாது. எங்களுடைய மாட்டுக்கார வேலனைப் பார்க்கப் போகிறவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள். ஒவ்வொரு காட்சிக்குத் தான் உயர்த்தியிருக்கிறோம். இப்படி ஒரு 50 லட்சம் ரூபாய் பெற இந்த வரி விதிப்பைச் செய்த நிதியமைச்சரைப் • பாராட்ட வேண்டும். வரி விதிப்பு என்பதைத் தாங்கக் கூடியவர்களுக்கு விதிக்க வேண்டுமே தவிர, தாங்க முடியாதவர்களுக்கு விதிக்கக் கூடாது என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அவருடைய அந்த அடிச்சுவட்டைப் பின்பற்றிவருகிறவர்கள் தாங்கக்கூடியவர்களுக்குத்தான் இந்த வரியை விதித்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இந்த வறட்சி நிவாரணப் பணியின் காரணமாக, நாம் செய்த வேலை பாராட்டுக்குரியதாகும். 13,400 சிறு பாசனப் பகுதிகளில் சிறிய பெரிய ஏரிகள், கால்வாய்களிலும் தூர் எடுத்தும், 5,500 சாலைப் பணிகளையும், செய்திருக்கிறோம், 683 மண்வளப் பாதுகாப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதோடு 34,265 கிணறுகள் தோண்டப்பட்டு இருக்கின்றன. இந்த அளவிலே நாம் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 1,425 லட்ச ரூபாய் (ரூ. 14.25 கோடி) மத்திய அரசிலிருந்து வாங்கி அதைச் செலவு செய்திருக்கிறோம். மத்திய அரசிலிருந்து வாங்கலாமா என்று ஒருவர் கூறினார். வேறு சட்ட மன்றத்தில் முதலமைச்சர் சொன்னதைச் சொல்லக் கூடாது என்பது மரபு என்பார்கள். இருந்தாலும், உத்தரப் பிரதேசத்தில் இந்தி பேசுகிற மாநிலத்திலே உள்ள முதலமைச்சர்- அவர் இப்போது முதலமைச்சராக இல்லை—தமிழக அரசை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை திருமதி இந்திரா காந்தி விலைக்கு வாங்கி விட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால், ஐந்தாவது நிதிக் கமிஷனைப் பொறுத்த வரையில், நிதியமைச்சர் சொல்லியிருப்பதைப் பார்த்தால் இந்த மாநிலத்திற்கு எவ்வளவு பெரிய தீங்கு இழைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும். அவர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவர்தான் அதிகமாக லாபம் அடைந்திருக்கிறார் என்பதையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு அப்படி தீங்கு இழைக்கப்பட்டிருக்கிறது என்ற காரணத்தினால், மத்திய அரசாங்கத்தில் இந்திரா காந்தி அமைச்சரவையை ஆதரிக்காமல் நிறுத்திவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[28th February 1970

திரு. எஸ். ராகவானந்தம் : எங்கள் கட்சித் தலைவர், "Our support will be on the merits of each issue taken separately" என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தி பேசுகிற மாநிலங்கள் நிறையப் பெற்றிருக்கின்றன—ஆனால், தமிழகம் மட்டுமல்ல, தென்னகத்து மாநிலங்கள் எதுவுமே பயனடையவில்லை என்று இங்கே உள்ள நிதி அமைச்சர் மட்டும் கூறவில்லை. மற்ற மாநில அமைச்சர்களும் கூறுகிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள் பேசியதைப் பார்த்திருக்கிறேன். எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் மீது பாரத்தைப்போடுகிறார்கள் என்று கூறுகிறவர்களுக்குக் கேரள சட்ட மன்றத்தில் நிதியமைச்சர் திரு. சேஷன் அவர்கள் சொல்லியதைப் படித்துக் காட்டவிரும்புகிறேன்.

'It is interesting to note that under the Commission's award' 7 States would have considerable revenue surpluses ranging from Rs. 15 crores to 419 crores over the Fourth Plan period while other States such as ours will have persisting revenue deficits.

He continues by saying that when the rather remarkable coincidence that all the beneficiaries happen to be Hindi speaking States is taken into account, complaints of discrimination against Southern States that have been voiced from certain quarters cannot be easily dismissed as unwarranted.'

இந்தி பேசாத மாநிலங்களில் இருக்கக்கூடியவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஐந்தாவது நிதிக் கமிஷனிலே நியாயம் வழங்கப்படவில்லை என்று சொல்லியதைத் தள்ளிவிட முடியாது என்று அண்டை மாநிலத்திலுள்ள நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு வறட்சி நிவாரணத்திற்காகக் கிடைத்த தொகை எந்தச் சலுகையினாலும் கிடைக்கவில்லை என்பதையும், பெறவேண்டிய உரிமையோடு பெற்றுச் செலவு செய்வதிலே திறமையாகச் செலவு செய்திருக்கிறோம்' என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது கடைசியாக—(இனி வருவார்களா என்பது சந்தேகம்)—1966-67-ல் செலவு செய்தது ரூ. 8.26 கோடி. ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இந்த ஆண்டுக்கு ரூ. 21.5 கோடி ஒதுக்கியிருப்பதன் பலனாக கடந்த இரண்டு ஆண்டுகளில் 6,705 கிராமங்களுக்கு மின் வசதி கொடுக்கப்பட்டுள்ளது. 1970 மார்ச் திங்களுக்குள் 4,160 கிராமங்களுக்கு மின் வசதி கொடுக்கப்படும். 1967-68 ஆண்டு தொடக்கத்தில் மொத்தம் 25,022 கிராமங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1970-71-க்குள் 42,387 கிராமங்களுக்கு மின் வசதி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு, 222 லட்ச ரூபாய்க்கு காரண்டி கொடுத்து மில்கள் ஓடுவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். நூல் மீது விற்பனை வரி 50 சத வீதம் தொகையை 5 ஆண்டுகளுக்கு வட்டி இல்லாமல் கடனாகக் கொடுத்திருக்கிறது. துணி ஆலைகள் அனைத்துக்கும் மின் சக்தி மீது விதித்துள்ள 40 சதவீத வரியை 30 சதவீதமாகக் குறைத்து இன்றையதினம் மூடிய ஆலைகளில் 13 ஆலைகள் மீண்டும் ஓடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

அடுத்து, ஐந்தாவது நிதிக் கமிஷன் நமக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்காமல் இருந்தும்கூட, மாநில அரசு ஊழியர்களுக்கு ரூ. 500-ம் அதற்குக் குறைவாகவும் வாங்குகிறவர்களுக்கு உடனடியாக ரூ. 10 இடைக்கால நிவாரணமாக இந்த அரசு கொடுத்திருக்கிறது. பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். இந்த மன்றத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஞாபகம் இருக்குமென்று நினைக்கிறேன். 1960-ம் ஆண்டுதான் மாநில அரசு ஊழியர்களுடைய ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. ராமுண்ணி மேனன் குழு என்று அதற்குப் பெயர். அதற்குப் பிறகு 9 ஆண்டு காலம் ஆகிவிட்டது. அப்போது பஞ்சப்படியை உயர்த்தியிருக்கிறோமே தவிர, சம்பள உயர்வு அளிக்கப்படவில்லை. இந்த மாமன்றத்தில் ஊதியக் குழு அமைக்கவேண்டுமென பல முறை வற்புறுத்தி வந்திருக்கிற ஒருவன் என்ற முறையில் சொல்கிறேன். ரூ. 10 கொடுத்த



28th February 1970] ]திரு. எஸ். ராகவானந்தம்]

பிறகு செக்ரடரியேட் அசோசியேஷன் தலைவர் "It is an eyewash." வெறும் கண் துடைப்பு, என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது ரூ. 10 கொடுப்பதன் விளைவாக, கூடுதலாக ரூ. 6 கோடி செலவாகிறது. அவர்கள் கேட்பதைப் போல ரூ. 30 இடைக்கால நிவாரணமாகக் கொடுக்க வேண்டுமென்றால், ரூ. 18 கோடி கொடுக்க வேண்டும். இதை இந்த ஆட்சி தாங்க முடியுமா என்று பார்க்க வேண்டும். முழு நிவாரணம் என்றால் என்ன ? இடைக்கால நிவாரணம் எப்போது கொடுப்பது ? இந்த அரசு ஏழைகளுக்காக, குறிப்பாக அரசு ஊழியர்களுக்காக, செய்திருக்கும் நன்மைகளை மறந்துவிட முடியுமா ? மூன்று முறை பஞ்சப் படி உயர்த்தியதால் ரூ. 7.20 கோடி அதிகமாகக் கொடுத்திருக்கிறது. ரூ. 14·47 கோடி மாநில அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட ஒதுக்கியிருக்கிறார்கள். வீடு கட்டுவதால் கிடைக்கக் கூடிய லாபம் பற்றி நன்றாக நாம் அறிவோம். ரூ. 20; 25 வாடகைக்கு எல்லா வசதிகளும் வீட்டில் கிடைக்கிறது. லெட்ரின்; பாத்ரூம், லிவிங் ரூம் என்று எல்லா வசதிகளும் இருக்கின்றன. குறைந்த விலையில் அது கிடைக்காது. வெளியே உள்ள வீட்டு வாடகை இதனால் எந்த அளவுக்குக் குறைகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். எனக்கு இதில் சொந்த அனுபவம் உண்டு. திருச்சியைப் பொறுத்த வரையில், 1,000 பேருக்குக் குடியிருப்பு வசதி செய்யப்பட்டிருக்கிறது. அந்த 1,000 பேரும் நகரத்திற்குள் சென்றால், அங்கே வீட்டு வாடகை உயர்ந்துவிடும். இப்போது உயரவில்லை என்று நான் சொல்லவில்லை. ரூ. 25 என்பது 30 ஆகியிருக்கலாம். இந்த மாதிரி என்.ஜி.ஓ.க்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவில்லை என்றால், அதே வாடகை வெளியில் 50, 100 என்று உயர்ந்திருக்கும். பொதுமக்களுக்கும் வீட்டு வாடகை குறைகிறது. தமிழக அரசு ஊழியர்களுக்கு வீடு கட்ட ரூ. 14.47 லட்சம் ஒதுக்கியிருக்கிறது. உயர்நீதிமன்ற அதிகாரிகளுக்கு ரூ. 80 லட்சம் வீட்டு வசதிக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். போன கிராண்டிலேயே அது வந்திருக்கிறது. அப்படியெல்லாம் சலுகை செய்துவிட்டு; வாடகையைக் குறைத்திருக்கிறோம். ஊதியக் குழு வேறு நியமிக்கப்பட்டிருக்கிறது.' திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த மூன்று ஆண்டுகளுக்குள் அதை நியமித்திருக்கிறது. பொதுவாக ஊதியம் பற்றி ஒப்பந்தம் செய்தால், மூன்று ஆண்டுகளுக்குத் தான் அது இருக்கும். மிக அதிகமாகப் போனால்; 5 ஆண்டு. இந்த வகையில் கணக்கிட்டுப் பார்த்தால், 1965-ல் காங்கிரஸ் ஆட்சி பே கமிஷன் நியமித்திருக்க வேண்டும். அல்லது 1966—இலாவது செய்திருக்க வேண்டும். 1967-ல் தேர்தல் வந்துவிட்டது. செய்யவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் பிறகு ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அண்ணா அவர்கள் சிறியவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். அனுபவம் பெற ஒரு ஆண்டு ஆயிற்று. அடுத்த ஆண்டு அண்ணா அவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. பிறகு அவர் மறைந்துவிட்டார்கள். அந்த ஷாக்கிலிருந்து மீண்டு வந்த பிறகு, உடனடியாக ஊதியக் குழு நியமிக்கப்பட்டது. இடைக்கால நிவாரணம் தரவேண்டுமென்றால், நியமிக்கப்பட்ட "பே கமிஷன்" ஆராய்ந்து பார்த்து இறுதி முடிவு சொல்ல அதிக காலம் ஆகுமென்று தெரிந்தால்; இடைக்கால நிவாரணம் இன்னின்ன கொடுக்கலாம் என்று இண்டரிம் ரிலீஃப் ஒன்றை அவர்கள்தான் சிபார்சு செய்ய வேண்டுமே' தவிர, எந்த முதலாளியும் எந்த அரசும் உடனடியாகத் தாங்களே கொடுப்பதில்லை. அப்படி சிபார்சு இல்லாமலே இந்த அரசு தந்துள்ளது. வேளா வேளைக்குச் சோறு போடும் மனைவி சாதாரணமாக ஒரு மணிக்கு போட வேண்டுமென்றால் சில சமயம் தாமதமாவதுண்டு. அந்த நேரங்களில் 2 மணிக்குத்தான் சாப்பாடு தயாராகும் என்று தெரியும்போது, 12 மணிக்கு ஒரு காப்பியைக் கொடுப்பார்கள். அப்போதே சாப்பாடு ஒரு மணிக்கு வராது என்று தெரிந்துகொள்ளலாம். டெம்பரரியாகப் பசியை அடக்குவதற்கு அந்த காப்பி கொடுக்கப்படுகிறது. சோறு போடு என்றால், இப்போது 12 மணிக்குத்தானே காபி சாப்பிட்டீர்கள், இரண்டு மணிக்குச் சோறு போடுகிறேன் என்றுதான் எந்த தந்திரமான மனைவியும் சொல்லுவாள். இப்போது இடைக்கால நிவாரணம் கொடுக்கப்படுகிறது என்றால், முழு நிவாரணம் கொடுக்க; மூன்று ஆண்டுகளாகும். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு; இண்டரிம் ரிபோர்ட் ஒன்று கொடுப்பார்கள். அதற்குப் பிறகுதான் "ஃபைனல் ரிபோர்ட்" வரும். இடைக்கால நிவாரணத்திற்குக் கமிஷன் சிபார்சு செய்ததா ?

அதற்குக் காத்திராமல் இந்த அரசு ரூ. 10 இடைக்கால நிவாரணம் கொடுத்ததைப் பாராட்ட வேண்டாமா ? ஊதியக் குழு நியமிக்கவேண்டுமென்று அக்கறை காட்டியவன் என்ற முறையில் சொல்கிறேன். நிதியமைச்சரைக் கேட்டேன். ஐந்தாவது நிதிக் கமிஷன் சிபாரிசு வந்துவிட்டதே, ஊதியக் குழு நியமிக்கப் போகிறீர்களா, இல்லையா என்று கேட்டேன். "இருக்கும், அமைக்கக கூடும். முதலமைச்சர் அதைப் பற்றி அறிவிப்பார் என்று நம்புகிறேன்" என்று சொன்னார்கள். உங்களுக்காகப் பாடுபட்டவன் என்ற முறையில் சொல்கிறேன். அந்த என்.ஜி.ஓ.க்கள் ஊர்வலமாகச் சென்றதைப் பார்த்தேன். "நீலிக் கண்ணீர் வடிக்காதே" என்ற முறையில் பலவாறாக கோஷங்களைப் போட்டுக்கொண்டு சென்றார்கள். இதுதான் ஸ்லோகனா ? தனியார் துறையில்கூட இது போன்ற சமயங்களில் முதலாளிகள் பெயரைச் சொல்லி கோஷம் போடும் வழக்கம் இல்லை. ஊதிய உயர்வு வேண்டும். இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டுமென்றுதான் கேட்போம். தனியார் துறையில் அதைத் தான் கையாளுகிறோம். அரசு ஊழியர்கள் எந்த அளவுக்குத் தவறான பாதையில் அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என்பதை ஊர்வலம் சென்று கொண்டிருக்கும்போது, நான் பார்த்தேன். அரசாங்க ஊழியர்கள் என்பதை மறந்துவிட்டு, முதலாளிகளின் கீழ் வேலை செய்பவர்கள் கூட சொல்லாத சொல்லைச் சொல்லிக்கொண்டு சென்றீர்கள். அவர்கள் சொன்னது சட்டமன்றப் பதிவேட்டில் பதிவாகக் கூடாது என்பதால் நான் அவைகளை இங்கே சொல்ல விரும்பவில்லை. என் போன்றவர்களுக்கு உங்கள் பேரில் இருக்கிற அன்பை நீங்கள் இழக்கின்ற செயலில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள் என்பதை மட்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால், பலருடைய விரோதத்தையும் சம்பாதித்துக்கொண்டு உங்களுக்காக வாதாடியவன் நான்.

**திரு கே. ராஜாராம் :** உங்களுக்காக என்று சொல்லாதீர்கள். அவர்களுக்காக என்று சொல்லுங்கள்.

**திரு எஸ். ராகவானந்தம் :** எங்களைப் போன்றவர்கள் மிகவும் வெட்கப்படுகிறோம். அரசு ஊழியர்களுக்காக வாதாடிய நான் மிகவும் வேதனைப்படுகிறேன். ஒன்றுமில்லை என்று சொல்லாமல் ரூ. 10 கொடுத்த அரசை நான் பாராட்டுகிறேன். பல புள்ளிவிவரங்களைச் சேகரிக்க எனக்கு நேரமில்லை. என்னுடைய நினைவு சரியாக இருக்குமானால், சொல்கிறேன் ஒரு முறை அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தியபோது, சைதாப்பேட்டை மாஜிஸ்ட்ரேட் கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டார் என்பது எனக்கு ஞாபகம். புள்ளிவிவரம் சேகரிக்க வேண்டுமென்று கருதினேன். நேரம் இல்லாததால், முடியாமல் போய்விட்டது. ஆகையால் அரசு ஊழியர்களுக்கு இந்த மன்ற உறுப்பினன் என்ற முறையில் தலைவர் மூலமாகச் சொல்கிறேன். This is not the way. இதுவல்ல ஊதியம் பெற வழி. ஊதியக்குழு அனுப்பிய வினாத்தாளுக்கு பதில் எழுதி ரூ. 20 செலவு செய்து டைப் செய்து குழுவின் மெம்பர் செக்ரடரி திரு சி. என். ராகவனிடம் கொடுத்தபொழுது அவர் "You are the first person who has submitted the replies to the questionnaire" என்று கூறினார்.

அப்படி முதன் முதலாக இதற்கென்று 10 நாட்களைச் செலவு செய்து மாநில அரசு ஊழியர்களுக்கு அடிப்படை ஊதியம் என்ன இருக்க வேண்டும் என்று கணக்கெடுத்து அறிக்கை ஒன்றைக் கொடுத்தேன். தற்போது சம்பளம் ரூ. 50 தோடு பஞ்சப்படியாக ரூ. 71 சேர்த்து ஆக மொத்தம் ரூபாய் 121 வாங்குகிறார்கள். அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் ரூபாய் 170-ஆவது இருக்க வேண்டும் என்று சொல்லி, இதற்காக "சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பு, ராயல் கமிஷன் ஆன் டிரேட் யூனியன்ஸ் அண்டு எம்ப்ளாயர்ஸ் அசோசியேஷன்" ஆகியவைகளில் உள்ள பல ஆதாரங்களை எல்லாம் எடுத்து, சொந்தச் செலவு ரூபாய 20 செய்து, அவையனைத்தையும் டைப் செய்து எடுத்துக் கொண்டுபோய் கொடுத்திருக்கிறேன். மெம்பர் செக்ரட்டரி திரு சி. என். இராகவன் அவர்களிடம் கொடுத்துவிட்டு வந்தேன். சொந்தச் செலவில் ரூபாய் 20 கொடுத்து டைப் செய்யும் அளவுக்கு வசதி எனக்குக் கிடையாது. இருந்தாலும் நாம் நம் அறிக்கையைக்





கொடுக்க அதிக நாளாகிவிட்டால் என்ன ஆகுமோ என்று கருதி, முதல் முதலாகச் சென்று கொடுத்துவிட்டு வந்தவன் என்ற முறையில் உரிமையோடு சொல்லுகிறேன். "நீங்கள் மிகவும் வேதனைக்குரிய காரியங்களில் ஈடுபட்டிருக்கிறீர்கள்." அப்படி இருந்தாலும் இந்த மாநில அரசு "இப்படிச் செய்துவிட்டார்களே" என்று கருதாமல் தானே முன்வந்து இடைக்கால நிவாரணமாக ரூபாய் 10 கொடுத்திருக்கிறது. இதற்காக இந்த அரசை நான் இந்த நேரத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. எனக்குத் திருக்குறள் சரியாகத் தெரியாது. எனவே நான்சொல்லும் திருக்குறளில் தவறு இருந்தால், மன்னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்பது திருக்குறள். இதற்குக் கெடுதி செய்தவர்களைத் தண்டிப்பது எப்படி இருக்க வேண்டுமென்றால், அவர்கள் வெட்கப்படும்படியாக நன்மை செய்ய வேண்டும் என்று பொருள் சொல்லுவார்கள் என்று கருதுகிறேன். தவறு இருந்தால் தயவுசெய்து மன்னிக்க வேண்டும். அந்த வகையிலே திருக்குறளைப் பொதுமறையாக, குரானாக, பைபிளாகக் கொண்டு ஆட்சிசெய்யும் இந்த ஆட்சி அவர்களைத் தண்டிக்கும் வகையில் அவர்களுக்கெல்லாம் ரூபாய் 10 இடைக்கால நிவாரணம் கொடுத்திருக்கிறார்கள். இன்னமும் சொல்லுகிறேன். ஊதியக் கமிஷனின் ரிப்போர்ட்டு வந்ததும், அதை அமுல் படுத்தக் கோரி என்னால் ஆன எல்லா உதவியையும் செய்யத் தயாராக இருக்கிறேன். "Report of the Commission should be treated as an award of Arbitration or award of the Court·"
ஊதியக் கமிஷனின் அறிக்கை கோர்ட்டு தீர்ப்பு போல் எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் பரிந்துரைகள் அப்படியே அமுல்படுத்தப்பட வேண்டும் என்று கேட்க வேண்டும். தற்போது மத்திய அரசாங்க "பே கமிஷன்" அல்லது மாநில அரசாங்க "பே கமிஷன்" என்று எதுவாக இருந்தாலும், அது தன்னுடைய சிபாரிசுகளைக் கொடுக்கும்போது, சர்க்கார் அதை அப்படியே அமுல்படுத்துவதில்லை. அரசாங்கத்திற்குச் சாதகமாக இங்கும் அங்கும் மாற்றங்கள் செய்து அமுல்படுத்தும் நிலைதான் இருக்கிறது. நான் ஏற்கனவே நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும் மதிநுட்பமுள்ள நிதி அமைச்சர் அவர்களிடமும் இது குறித்துப் போராடி இருக்கிறேன். எனவே அதற்கெல்லாம் இடமில்லாமல், ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அப்படியே அமுல்படுத்த வேண்டும் என்று இப்போது கேட்டுக் கொள்ளுகிறேன். இதற்கிடையில் இந்த ஆட்சி 10 ரூபாய் கொடுத்திருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். குறுக்கே யாராவது அரசியல் லாபத்தைக் கருதி புகுந்திருந்தாலும், அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று நண்பர்களை நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து நிரம்பப் பேசவேண்டும் என்று நான் கருதியிருந்தாலும் நேரம் இல்லை என்பதனாலே, வருத்தப்படுகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு தாமோதரன் அவர்கள் முதலமைச்சர் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அவர் ஆங்கிலத்தை நான் சரியாகப் புரிந்து கொண்டிருப்பேன் என்று கருதுகிறேன். "ஓட்டுக் கேட்கப் போக வேண்டியவர்கள் இப்படித் தான் செய்ய வேண்டும்" என்று சொன்னார்கள். நாங்கள் யாருடைய ஓட்டுகளைப் பெற்று வந்தோம் ? ஏழை எளிய பாட்டாளி, விவசாய மக்களுடைய ஓட்டுகளைப் பெற்றுத்தான் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். அவர்கள் நன்மைக்காக எதையும் நாங்கள் செய்யத்தான் வேண்டும். உச்ச வரம்புச் சட்டம் என்பதே நாங்கள் கொண்டுவந்ததல்ல. ஏற்கெனவே காங்கிரஸ்காரர்கள் கொண்டு வந்தது தான் இந்தச் சட்டம். அவர்கள் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பாக வைத்தார்கள். அதை மாற்றி நாங்கள் 15 ஏக்கராக வைத்திருக்கிறோம். இதை ஆரம்பத்திலே கொண்டுவந்த காங்கிரஸ்காரர்கள் ஒரு தந்திரம் செய்தார்கள். சட்டம் கொண்டுவருவதற்கு முன்பாகவே நாங்கள் உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்போகிறோம், உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்போகிறோம், உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று "டாம் டாம்" அடித்து அதன் மூலம் அதிக நிலம் வைத்திருந்தவர்கள் எல்லாம் பினாமி டிரான்ஸாக்ஷன், பிரித்து எழுதி வசதி செய்துகொள்ள

வழி செய்துவிட்டு கடைசியாக உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வந்து, அதனால் யாரும் பாதிக்கப்படாமல் நிலச் சொந்தக்காரர்களையெல்லாம் காப்பாற்றினார்கள். அதை நீங்கள் தயவுசெய்து மனதில் கொண்டு இப்போது நாங்கள் செய்திருப்பதோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தி.மு.க. ஆட்சி வந்த பிறகு, உச்ச வரம்பு 30 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 15 ஆகக் குறைக்கப்போகிறோம் என்று யாருக்கும் சொல்லாமல் அவ்வளவு கான்பிடென்சியலாக, இரகசியமாக வைத்திருந்து செய்திருக்கிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** திரு ராகவானந்தம் அவர்களுக்குச்சொல்லிக் கொள்ளுகிறேன். நீங்கள் கூட உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப் போவதாகத்தான் இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்களே தவிர இப்போது கொண்டுவந்துவிடவில்லை.

**திரு எஸ். ராகவானந்தம் :** அப்படி அறிக்கையில் சொல்லப்பட்டிருந்தாலும், இது "ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்" உள்ளதாகத் தான் இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதன் மூலம் யாரும் ஏமாற்றிவிட முடியாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

I feel it will have retrospective effect and nobody can escape from it. I surmise like that.

**திரு கே. ராஜாராம் :** "ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்" கொடுப்பது என்பது உங்கள் அபிப்பிராயமா அல்லது நீங்கள் சார்ந்திருக்கிற ஆளும் கட்சியின், அரசாங்கத்தின் அபிப்பிராயமா ?

**திரு. எஸ். ராகவானந்தம் :** அந்தக் கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில் இதன் மூலம் யாரும் தப்பித்துக்கொள்ள இயலாத வகையில் சட்டம் இயற்றப்படும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இதற்கு முன்னாலே இருந்த ஆட்சியாளர்கள் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு அளிக்கும் வகையிலே முன்கூட்டியே எல்லாவற்றையும் சொல்லிவிட்டுச் செய்தார்கள். ஆனால் எங்களுடைய அரசு யாருக்கும் தெரியாத வகையில் "ஓவர்நைட்" இதைப்பற்றி அறிவித்துவிட்டார்கள். பட்ஜெட்டைப் பிரித்துப் பார்த்த பின்னர்தான் 30 ஏக்கரிலிருந்து 15 ஏக்கராக உச்ச வரம்பு குறைக்கப்பட்டிருக்கிறது என்ற விஷயம் எல்லோருக்கும் தெரிந்தது. அதுவரையில் யாருக்கும் தெரியாது. இது ஒரு சோஷலிசக் கொள்கை.

**திரு கே. ராஜாராம் :** மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதில் ரகசியம் எதுமில்லை. நாங்கள் ஆட்சியில் இருந்தபோது நிலத்திற்கு 30 ஏக்கர் உச்ச வரம்பு என்று கொண்டு வந்தபோதே, 15 ஏக்கர்தான் உச்ச வரம்பாக இருக்க வேண்டும் என்று தற்போது ஆளும் கட்சியினைச் சேர்ந்தவர்கள் திருத்தம் கொண்டு வந்தார்கள். அடுத்து, இப்போது ஆட்சிக்கு வந்து 3 வருஷமாகியும், இந்த உச்ச வரம்பைக் குறைக்கவில்லையே என்றுதான் மக்கள் கூறுகிறார்கள். 3 வருஷம் "டிலே" செய்துவிட்டார்களே என்று தான் மக்கள் நினைக்கிறார்கள்.

**திரு எஸ். ராகவானந்தம் :** எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் 15 ஏக்கராக உச்ச வரம்பைக் குறைத்ததைப் பாராட்டுகிறார் என்று எடுத்துக் கொள்ளலாமா ?

**திரு கே. ராஜாராம் :** அவசரப்படாதீர்கள். நான் சொல்வதை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். 15 ஏக்கர் உச்ச வரம்பாகக் கொண்டு வந்தது தற்போது சரியா, அதை நான் ஆதரிக்கிறேனா இல்லையா என்பதை நான் பின்னால் பேசும்போது புரிந்துகொள்ளலாம்.

**திரு எஸ். ராகவானந்தம் :** யாருக்கும் எந்த அறிவிப்பும் இல்லாமல் தந்திரமாக யாரும் தப்பித்துக்கொள்ள முடியாதபடி ஏற்பாடு செய்த இந்த அரசை நான் பாராட்டுகிறேன். சோஷலிசக் கொள்கை என்பதன்





அடிப்படையில் இப்படிக் குறைத்துத் தான் ஆக வேண்டும். மாண்புமிகு அங்கத்தினர் திரு தாமோதரன் அவர்கள் பேசுகையில் இனி 15-லிருந்து 10 ஏக்கராகி, 10 ஏக்கர் 5 ஏக்கராகி, கடைசியில் ஒன்றும் இல்லாமல் போய்விடுமோ என்றார். என்னைப் பொறுத்த வரையில் 15 ஏக்கருக்கு அடுத்து அரசாங்கம் தான் எல்லா நிலத்திற்கும் சொந்தக்காரராக வேண்டும். எல்லா நிலத்தையும் "கோவாபரேட்டிவ் பார்மிங் கலெக்டிவ் பார்மிங்" திட்டத்தின்கீழ் கொண்டுவந்து தனிப்பட்டோர் யாருக்கும் நிலத்தின் மீது சொந்தம் இல்லை என்று சொல்லுகிற நிலை தான் ஏற்பட வேண்டும். சரியான சோஷலிசம் அப்படித்தான் இருக்கும். தி.மு.க. அந்த வகையில்தான் செயல்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனவே 15 ஏக்கர் 10 ஏக்கராகக் குறையும், பிறகு 10 ஏக்கர் 5 ஏக்கராகக் குறையும் என்று தப்புக் கணக்குப போட வேண்டாம். இது தான் என்னுடைய கருத்து. தி.மு.க.வின் கொள்கையும் இது தான்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இது அரசாங்கத்தின் கொள்கையா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எஸ். ராகவானந்தம்:** தி.மு.க.வைச் சார்ந்த ஒரு தொண்டன் என்ற அடிப்படையில் அது தான் என்னுடைய எண்ணம், அபிலாஷை, ஆசை, "எக்ஸ்பெக்டேஷன், ஆண்டிசிபேஷன்".

**திரு கே. ராஜாராம் :** இது கட்சியினுடைய "ஆதரைஸ்டு, அதாரிடேடிவ்" கொள்கையல்ல என்று புரிந்துகொள்ளலாமா ?

**திரு எஸ். ராகவானந்தம் :** அப்படியே புரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** இப்படி மாண்புமிகு உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்கள் கேட்டால் பரவாயில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்பது தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. தி.மு.க.வுக்குத் திட்டவட்டமான ஒரு கொள்கை இருக்கிறது. அது அரசாங்கத்தின் மூலமாக வெளிப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஒரு சில கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். நிலச் சீர்திருத்தம் இன்னின்ன முறையிலே வர வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். உடனே அது அரசாங்கத்தின் கொள்கையா, நீங்கள் சார்ந்திருக்கிற கட்சியின் கொள்கையா என்று கேட்டால், அவர்கள் எப்படிச் சொல்லமுடியும்? அவர்களுடைய கருத்தைத்தான் சொல்லுகிறார்கள். கூட்டுறவைப் பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், அந்தத் துறை சரியாக வரவில்லை. ஆகவே ஆழம் தெரியாத இடத்தில் காலை வைக்கக்கூடாது. இதை நான் இப்படிச் சொல்லுகிற காரணத்தால், கூட்டுறவுத் துறையிலே இந்த அரசுக்கு நம்பிக்கை குறைந்துவிட்டது என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. கூட்டுறவுத் துறையில் நம்முடைய மாநிலம் மிகப் பெரிய முற்போக்கான காரியங்களை மேற்கொண்டிருக்கிறது. கூட்டுறவுத் துறைக்கு இந்த அரசாங்கம் ரொம்பப் பெரிய உற்சாகத்தை அளித்து வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாடு பல விவகாரத்தில் முதலிடம் பெறுகிறது. ஆனால் இந்தத் துறையில் முன்னாலே இருந்த அரசாங்கத்தால் ஏற்பட்ட சில நிலைமைகள் அவ்வளவு நன்றாக இல்லை. அதுவல்ல இப்போது இங்கே இருக்கிற பிரச்னை. 2,000 ஆண்டு காலமாக இருக்கிற இந்த நில மான்ய முறைகள், நிலச் சொந்தக்காரர்களுக்கும் உழுபவர்களுக்கும் இருக்கிற உறவு முறைகள், இடைத் தரகர்கள் ஆகியவைகள் இன்றையதினம் அழிக்கப்பட்டு உழைப்பவர்களுக்கும், உழைப்பை நல்குகிறவர்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு நேரடித் தொடர்பு இருக்க வேண்டும் ; இடையிலே இருப்பவர்கள் உழைப்பைக் கொண்டுபோய் விடாமல் இருக்க வேண்டும் ; இதன் மூலமாக உணவு உற்பத்தியும் பொருளாதார வளமும் அதிகமாக வேண்டும் என்று மேற்கொள்ளப்படுகிற நடவடிக்கையே தவிர, வேறு ஒன்றுமில்லை. பெரிய பண்ணையை வைத்து நடத்துவீர்களா என்று கேட்பதிலே ஒன்றும் பொருள் இல்லை. சில பேர்கள் வரி கொடுக்காமல் இருப்பதற்குக் கூட பெரிய பண்ணை வைத்துக்கொள்ளுகிறார்கள். நூற்றுக்கணக்கான

[திரு. கே. ஏ. மதியழகன்] [28th February 1970

எக்கர் வைத்துக்கொள்ளுகிறார்கள். கேட்டால் "பர்சனல் கல்டிவேஷன்" என்கிறார்கள். இதையெல்லாம் கேட்டுக்கொண்டே போனால், சரியாக இருக்காது. திரு சுவாமிநாதன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லு கிறார்கள். அதைப்போலவே கொஞ்சம் சுதந்திரமாகவே எங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் சில கருத்துக்களைச் சொல்லுகிறார்கள் என்ற அளவிலே தான் எடுத்துக்கொள்ள வேண்டும். நான்கூட சில கருத்துக் களைச் சொல்லிவிட்டு இதெல்லாம் என்னுடைய சொந்தக் கருத்துக்கள் என்று சொல்லலாம். அந்தக் கருத்துச் சுதந்திரத்தின் அடிப்படையில் தான் நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் 1990-ல் ஆளுக்கு ஒரு எக்கர் நிலம்தான் இருக்கும் என்கிறார். நண்பர் ராகவானந்தமோ 1990-ல் எல்லாம் கூட்டுறவுத் துறையில்தான் இருக்கும் என்று சொல்லுகிறார்.

**திரு. எஸ். ராகவானந்தம்:** அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இரண்டு முக்கியமான சலுகைகளை இந்த நிதி நிலை அறிக்கை தந்திருக்கிறது. ஒன்று, மருத்துவ மனைசளிலே அவர்களும், அவர்களு டைய குடும்பமும் உதவி பெறுவது; இரண்டாவதாக அவர் களுக்கு வீட்டு வாடகை தருவதை இந்த பட்ஜெட் மூலம் செய்ய இருப் பது. அந்த ஆசிரியர்கள் தலைவர்களே இவைகளை எல்லாம் பாராட்டி அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள் என்றால், இந்த ஆட்சியினிடம் எவ் வளவு நல்ல எண்ணம் இருக்கிறது அவர்களுக்கு என்றுதான் கூற வேண்டும். இறுதியாக, நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். அரசு ஊழியர்கள் இதுவரையில் வேலை செய்து ஓய்வு பெறும் பொழுது "ஓய்வு ஊதியம் கணக்கிட்டுத் தரும்பொழுது", அவர்கள் ஓய்வு பெற்ற தேதிக்குமுன் 36 மாதங்கள் கணக்கிட்டு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதை இப்பொழுது 12 மாதமாகக் குறைத் திருக்கிறார்கள். இதில் அரசாங்கத்திற்கு வரும் செலவுகளை கனம் நிதி அமைச்சர் அவர்கள் கணக்கிட்டுப் பார்த்திருக்க மாட்டார்கள் என்று கருது கிறேன். 36 மாதத்திற்குப் பதிலாக, 12 மாதங்கள் கணக்கிட்டு, அவர் களுக்கு ஓய்வு ஊதியம் கொடுப்பது என்றால், அது "calculated risk" "recurring expenditure" எவ்வளவு வரும் என்று பார்க்க வேண்டும். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு, அது எவ்வளவு அதிகமாக இருந்தாலும்கூட பரவாயில்லை என்றுதான் இந்த அரசாங்கம் அப்படிக் கொடுத்திருக்கிறது. அதைத் தான் "calculated risk" என்று சொல்லுகிறேன். எந்த ஆபத்து இருந்தாலும் இருக்கட்டும், ஓய்வு ஊதியம் பெறும் தோழர்களுக்கு 36 மாதங்கள் என்று பார்ப்பது முறையான செயல் அல்ல என்று நினைத்து, 12 மாதங்களாகக் குறைத்திருக்கிறார்கள். "It is a bold attempt" அதற்காகத் தொழிலாள மக்கள் மாத்திரமல்லாமல், இங்கே இருப்பவர் களும் நிதி அமைச்சருக்குப் பாராட்டுக்களைத் தெரிவிப்பதிலே கடமைப் பட்டிருக்கிறோம் என்று கூறி, இந்த பட்ஜெட் ஏழைகளின் பட்ஜெட் சோஷ லிச பட்ஜெட் என்று சொல்லி எனது பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m., on Monday, the 2nd March 1970.

The House then adjourned.

## VI. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

* 152. Notification issued with G.O. Ms. No. 1953, Local Administration, dated the 10th October, 1969 in regard to inclusion of certain Municipalities in Schedule IX to Tamil Nadu District Municipalities Act, 1920. [Laid on the Table of the House under section 304(d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]



28th February 1970]

* 153. Amendments to the Schedule IX of the Delimitation of Parliamentary and Assembly Constituencies order, 1966 relating to Tamil Nadu. Laid on the Table of the House under section 10(3) of the Delimitation Commission Act, 1962 (Central Act 61 of 1961).]

* 154. Statement of guarantees given by the Government of Tamil Nadu to the State Housing Board. [Laid on the Table of the House under section 92 of the Tamil Nadu State Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

### B. Reports, Notification and Other Papers.

42. Returns of Assets of three Members of the Tamil Nadu Legislative Council in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969, for the period ending 31—3—1967, 31—3—1968 and 31—3—1969.

* Laid on the Table of the House on 26th February 1970.

[28th February 1970

## APPENDIX I

[Vide answer to Starred Question No. 99 on page 150]

| | |
|---|---|
| (அ) காவல்துறை நேடுநர்கள் சம்பள வீதம் (ரூ. 225—15—375) | சம்பளம் ரூ. 300-ம் அதற்கு மேலும் பெறுபவர்களுக்கு நாட்படி ரூ. 4·50 ஆகும். ரூ. 240-க்கு மேற்பட்டும் ரூ. 300-க்கு மேற்படாமலும் சம்பளம் பெறுவோர்களுக்கு நாட்படி ரூ. 3 ஆகும். சம்பளம் ரூ. 240-ம் அதற்கு குறைவாகவும் பெறுவோர்களுக்கு நாட்படி ரூ. 2·50 ஆகும். |
| துணை நேடுநர்கள் சம்பள வீதம் (ரூ. 140-5-220). | சம்பளம் ரூ. 150-ம் அதற்கு மேற்பட்டும் பெறுவோர்களுக்கு நாட்படி ரூ. 2·50. ஆகும். சம்பளம் ரூ. 150-ம் அதற்கு குறைவாகவும் பெறுவோர்களுக்கு நாட்படி ரூ. 2·25 ஆகும். |
| தலைமைக் காவலர்கள் சம்பள வீதம் (ரூ. 90-2--110). | ரூ. 2 நாட்படி அளிக்கப்படும். |
| காவலர்கள் சம்பள வீதம் (ரூ. 70-1-75-2-95). | சம்பளம் ரூ. 90-க்கு குறைவாகப் பெறுபவர்களுக்கு நாட்படி ரூ. 1·25 ஆகும். சம்பளம் ரூ. 90-ம் அதற்கு மேற்கொண்டும் பெறுபவர்களுக்கு நாட்படி ரூ. 2 ஆகும். |

(இ) நாட்படியின் தற்போதைய வீதங்கள் 1960 அக்டோபர் திங்களில் முடிவு செயயப்படன.

(உ) நாட்படியின் வீதங்களை மாற்றியமைப்பதற்கான செயற்குறிப்பு தற்போது எதுமில்லை.



28th February 1970]

## APPENDIX II

[Vide answer to Starred Question No. 111 on page 158]

| விற்பனை வரி ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த துணைக் குழுவின் பரிவுரைகள். | அரசு எடுத்த நடவடிக்கை. |
|---|---|
| 1(a) இம்மாநிலத்தில் நகராட்சிப் பகுதிகளில் உள்ள வியாபாரிகள் அனைவரும் அவர்களுடைய மொத்த வாணிகத் தொகை என்னவாயிருப்பினும், பதிவான வணிகர்களின் தகுந்த வகைப்பாட்டின்கீழ் இச் சட்டத்தின்படித் தங்களைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படவேண்டும். அப்பொழுதுதான் வரி செலுத்த வேண்டியவர்களை அல்லது வரி செலுத்த வேண்டியவர்களாகக் கூடியவர்களைப் பற்றிய முழுமையான புள்ளி விவரங்களை வணிக வரிகள் துறை பெறமுடியும். முதற்கண், அவ்வாறான ஒரு மொத்தப் பதிவு முறை சென்னை மாநகரில் தொடங்கப்பட்டு அதன் விளைவாகக் கிடைக்கிற அனுபவத்தையொட்டி, பிற நகராட்சிப் பகுதிகளுக்கு நீட்டிக்கப்படலாம். | 1(a) அரசினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஒரு முனை வரி விதிக்கத்தக்க பொருள்களை விற்பனை செய்பவர்களும், அதன் காரணமாக மொத்த வாணிகத்தொகை என்னவாயிருப்பினும் சட்டத்தின்கீழ் பதிவு செய்துகொள்ளத் தக்கவர்களுமான சிறு வியாபாரிகள் சில்லறை வியாபாரிகள் ஆகியோருக்கு ஏற்படக் கூடிய இடர்பாடுகளை நீக்குவதற்காக வருவாய்த்துறையின் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ம் நாளிட்ட 3727-ம் எண் அரசு ஆணையின் 6-வது பத்தியில் வருவாய்த்துறை வாரியத்தின் செயற்குறிப்பை அரசு ஏற்றுக்கொண்டது. அதாவது இம் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட ஏனைய வியாபாரிகளிடமிருந்து வாங்கப்பட்ட பொருள்களை சிறு பெட்டிக்கடைகளில் விற்பவர்களும் தெருக்களில் விலை கூவி விற்பவர்களும் ஆண்டொன்றுக்கு ரூ. 7,500-க்குக் குறைவான தொகையை மொத்த வாணிகத்தொகையாக உடையவர்களுமான சிறு வியாபாரிகள் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்து கொள்வதிலிருந்து விலக்களிக்கப்படலாம். அவ்வாறு சட்டப்படி விலக்களிக்கப்படும். அத்தகைய வகையில் எந்த வியாபாரிகள் சட்டத்தின் கீழ்த் தங்களைப் பதிவு செய்து கொள்ளவில்லையோ அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியதில்லை என்ற வருவாய்த்துறை வாரியத்தின் செயற்குறிப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, துணைக்குழுவின் பரிவுரையை ஏற்றுக் கொள்வதனால், ரூ. 7,500 மொத்த வாணிகத் தொகையைக் கொண்டுள்ள சிறு வியாபாரிகளுக்குப் பதிவு செய்து கொள் |

| விற்பனை வரி ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த துணைக் குழுவின் பரிவுரைகள். | அரசு எடுத்த நடவடிக்கை. |
|---|---|
| | வதிலிருந்து விலக்களிக்கும் கொள்கையிலிருந்து பிறழுகின்றது என்று பொருளாகும். ஒரு மொத்தமாகப்பதிவு செய்துகொள்ளும் செயற்குறிப்பு நகராட்சிப் பகுதிகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளது என்பதிலும் அம் முறையை முதலில் சென்னை மாநகரில் சோதனை செய்து பார்க்க கருதப் பட்டுள்ளது என்பதிலும் ஐயமில்லை. இவ்வாறிருந்தபோதிலும், இதற்கு பலத்த எதிர்ப்புகள் ஏற்படலாமெனத் தோன்றுகிறது. இது, துறைக்கும், சிறு வியாபாரிகளுக்கும் நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கும். இச்சந்தர்ப்பங்களில், 1 (a) இனத்தில் கொடுக்கப்பட்டுள்ள துணைக்குழுவின் பரிவுரைகளை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. |
| (b) ரூ. 7,500-க்குக் குறைவாக மதிப்பீட்டுத் தொகையை மொத்த வாணிக மதிப்பீட்டுத் தொகையை உடைய வியாபாரிகளுக்கு ரூ. 5-ம்; ரூ. 7,500-ம் அதற்கு மேற்பட்டும் மொத்த வாணிபத் தொகையை உடைய வியாபாரிகளுக்கு ரூ. 10-ம் ஆக இரு பதிவுக் கட்டண வீதங்கள் இருக்கலாம். | (b) அரசினுல் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த இரண்டு பரிவுரைகளும், மேலே 1 (a) இனத்தில் கொடுக்கப்பட்டுள்ளவையும் ஏற்றுக்கொள்ளப்படாதவையுமான பரிவுரையின் விளைவாகச் செய்து கொள்ளப்பட்டவை என்பதால், இந்த இரண்டு பரிவுரைகள் குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதப்பட்டது. |
| (c) ரூ. 7,500-க்குக் குறைவான மொத்த வாணிகத் தொகையை உடைய வியாபாரிகளின் நேர்வில் பதிவைப்புதுப்பித்துக் கொள்வதற்கான கட்டணம் ரூ. 2-ஆக முடிவு செய்யப்படலாம் என்ற மாற்றத்துக்கு உட்பட்டு, வியாபாரிகள் அனைவரும் விதிகளுக்கிணங்க தங்கள் பதிவை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். | (c) ஷை |
| (d) பதிவைப் புதுப்பிக்கும் காரியத்துக்காக பதிவு எண் முதலிய விவரங்களுடன் பதிவு செய்யும் அதிகாரிகளுக்கு அனுப்பினுல் போதுமானது. பதிவு செய்யும் அதிகாரி செலுத்துச் சீட்டுக்கிடைக்கப்பெற்றது குறித்து ஒப்பம் தெரிவித்து வியாபாரியின் பதிவு புதுப்பிக்கப்பட்டது குறித்து அவருக்குத் தகவல் அறிவிக்க வேண்டும். வியாபாரி அதனைத் தனது பதிவுச் சான்றிதழுடன் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். பதிவு புதுப்பிக்கப்பட்டது குறித்து மேல் குறிப்பு எழுதுவதற்காக பதிவுச் சான்றிதழைப் பதிவு செயயும் அதிகாரிக்கு அனுப்பும் தற்போதைய நடைமுறைக் கேற்ப மாற்றப்பட வேண்டும். | (d) ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழ் நாடு பொது விற்பனை வரி விதிகள், வருவாய்த்துறையின் 1968-ம் ஆண்டு மே மாதம் 22-ம் நாளிட்ட 1063-ம் எண் அரசு ஆணையில் தக்கவாறு திருத்தப் பட்டுள்ளன. |
| 2. விற்பனையாளர்க்குரிய அனுமதிச் சீட்டு, விற்பனையாளருக்குக் கொடுக்கப்படுவதற்குப் பதிலாக, பதிவு செய்யப்பட்ட வியாபாரியின் பெயரில் கொடுக்கப்படலாம். ஆனல் குறிப்பிட்ட காலத்தில் அந்த அனுமதிச் சீட்டைப் பயன்படுத்தும் தனிப்பட்ட முகவருக்கு, வியாபாரி திட்டவட்டமாக அதிகாரமளிக்க வேண்டும். | 2. விற்பனையாளர் வைத்துள்ள அதிகாரச் சான்றிதழில் நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது பங்குதாரர் தேதியுடன் முறையாகக் கையொப்பமிட வேண்டும். அத்துடன், சம்பந்தப்பட்ட விற்பனையாளரின் பெயர், வயது, மாதிரிக் கையொப்பம் ஆகியவையும் அதில் அடங்கியிருக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அரசினுல் இப்பரிவுரை ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தைத் தக்கவாறு திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 3. வரி விதிக்கப்படுவதற்கான குறைந்த அளவு வரம்பு ரூ. 10,000 என்பதிலிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தப்படலாம். சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் உடன் பட்டுத்தீர்ப்பதற்கான பேரளவு மொத்த வாணிகத் தொகை ரூ. 50,000 என்பதிலிருந்து ரூ. 75,000 ஆக உயர்த்தப்படலாம். | 3. அரசு முதலில் இந்தப் பரிவுரையை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனல் பின்னர் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம்1-ம் தேதி முதல் வரிவிதிக்கத்தக்க குறைந்த அளவு மொத்த வாணிக வரம்பு ரூ. 10,000 என்பதிலிருந்து ரூ. 15,000 ஆகவும், தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் உடன்பட்டுத் தீர்த்துக் கொள்வதற்கான வரிவிதிக்கத் தக்க பேரளவு மொத்த வாணிகத்தொகை வரம்பு ரூ. 50,000 என்பதிலிருந்து ரூ. 75,000 ஆகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. தேவையான திருத்தங்கள், தமிழ்நாடு 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டத்தினுல் (தமிழ்நாடு சட்டம் 5/1967) செய்யப் பட்டன. |

| விற்பனை வரி ஆலோசனைக்குழுவைச் சேர்ந்த துணைக் குழுவின் பரிவுரைகள். | அரசு எடுத்த நடவடிக்கை |
|---|---|
| 4. ஓராண்டில் எப்போதாயினும் மாதாந்தர மொத்த வாணிகத் தொகையின் அடிப்படையில் வரி செலுத்தும் நடைமுறைக்கு மாற்றிக்கொள்ள வியாபாரிக்கு வாய்ப்பு அளிக்கப் படலாம். | 4. ஏற்றுக்கொள்ளப்பட்டது. (தமிழ் நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகள் வருவாய்த்துறையின் 1968-ம் ஆண்டு மே மாதம் 22-ம் தேதி நாளிட்ட 1063-ம் எண் ஆணையினால் திருத்தப்பட்டுள்ளன.) |
| 5. (a) வரி விதிக்கும் காரியத்திற்காகக் கணக்குகளைச் சோதித்துப் பார்ப்பதைப் பொறுத்த வரையில், வியாபாரிகளின் கணக்குகள் எப்போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடும் என்பதை அவர்களுக்கு முன்கூட்டியே தெரிவித்துவிடலாம். கணக்குகளைக் காட்டுவதற்குரிய சரியான தேதி குறித்து வியாபாரிகளுக்கு இரண்டாவது அறிவிப்பு ஒன்று கொடுக்கப்படலாம். | 5. (a) ஏற்றுக் கொள்ளப்படுகிறது. (இது குறித்து வருவாய்த்துறை வாரியம் வணிக வரிகள்) ஏற்கனவே சார்நிலை அதிகாரிகளுக்குக் கட்டளைகள் பிறப்பித்துள்ளது. |
| (b) கணக்குகளை ஆய்வு செய்கையில் தேவைப்படும் விவர அறிக்கைகளின் தன்மை, அழைப்பாணைகளில் குறிப்பிடப்பட வேண்டும். அப்பொழுதுதான் அத்தகைய விவர அறிக்கைகளை வியாபாரிகள் முன்னதாகத் தயாரிக்க இயலும். | (b) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது குறித்து சார்நிலை அதிகாரிகளுக்கு தேவையான கட்டளைகள் பிறப்பிக்கும்படி வருவாய்த்துறை வாரியத்தைக்(வணிக வரிகள்) கேட்டுக்கொள்ளப்பட்டது.] |
| 6. வரி விதிப்பிற்கு முந்திய அறிவிப்புக்கு பதிலளிக்கவும் கணக்குகளில் உள்ள தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் வியாபாரிகளுக்கு 15 நாட்களுக்குக் குறையாத அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். | 6. ஷை |
| 7. பட்டயக் கணக்குநர்களால் தயாரிக்கப்பட்ட கணக்குகளை ஏற்றுக்கொள்வதைப் பொறுத்தவரையில், வரி விதிப்பு அதிகாரிகள்; வியாபாரிகளின் கணக்குகளைச் சரி பார்த்து முடிவு செய்கையில் தங்கள் விருப்பப்படி வரி விதிக்கப்படுபவர்களின் நற்பெயரையும், வரி விதிக்கப்படுபவர்களின் கணக்குகளுக்குச் சான்றுகூறும் பட்டயக் கணக்கர் நிறுவனத்தின் நற்பெயரையும் கருதிப் பார்க்க வேண்டும். | 7. ஷை |



| | |
|---|---|
| 8. வரி விதிப்பு ஆணைகள் ஒப்பப்பதிவு அஞ்சலில் அனுப்பப் படலாம். அவை உள்ளூர் அஞ்சலில் அனுப்பப்பட்டால் அவற்றை மூடப்பட்ட உறைகளில் அனுப்பி ஒப்பம் பெற்றுக் கொள்ளலாம். | 8. ஏற்றுக் கொள்ளப்பட்டது. [இந்தப் பரிவுரைகளின் அடிப்படையில் சார்நிலை அதிகாரிகளுக்கு வருவாய்த் துறை வாரியம் (வணிக வரிகள்) ஏற்கனவே கட்டளைகள் பிறப்பித்துள்ளது.] |
| 9. (a) நடப்பு ஆண்டின் மொத்த வாணிகத் தொகையின் அடிப்படையில் வரி செலுத்தும் வியாபாரிகள் வரி செலுத்த வேண்டிய இறுதி நாள் அடுத்து வரும் திங்களின் (தற்போது 25-ம் நாள் என்றிருப்பதற்குப் பதிலாக) 22-ம் நாள் என்று முடிவு செய்யப்படலாம். | 9.(a) ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இது ஏற்கனவே அரசினால் கருதிப் பார்க்கப்பட்டு தற்போதுள்ள நாளைமாற்றுவதற்கான அவசியம் எதுவுமில்லை என்று வருவாய்த் துறையின் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் நாளிட்ட 2242-ம் எண் அரசு ஆணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. |
| (b) திங்கள்களின் மொத்த வாணிபத் தொகையின் அடிப்படையில் வரி செலுத்தும் வியாபாரிகள் குறித்த நேர்வுகளில், வரி செலுத்தியது குறித்த சான்று எதுவும் விவரக் கணக்குகளுடன் சேர்த்து பெறப்படவில்லையானால், கேட்கப் படுவதன் மேல் உடனடியாக வரி செலுத்தப்படுவதற்கு வகை செய்யப்படவேண்டும். உரிய நாளன்று விவரக் கணக்குகளைக் கூட பணிந்தனுப்பாத வியாபாரிகளைப் பொறுத்தவரையில், கடந்த திங்களின் விவரக் கணக்கின் அடிப்படையில் வரி செலுத்தத் தக்கதாகுமாறு செய்யப்படவேண்டும். அவ்வாறு விதிக்கப்பட்ட வரி கேட்பு அறிவிப்பு கிடைத்த தேதியிலிருந்து ஒரு வாரக் காலத்திற்குள் செலுத்தப்படத் தக்கதாகும். | (b) ஏற்றுக்கொள்ளப்படவில்லை. (தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் தற்போதுள்ள விதித் துறைகளே போதுமானவை என்று அரசு கருதியது.) |
| (c) ஒரு வணிகர் ஓராண்டில் மூன்று முறைக்குமேல் வரி செலுத்தப்படவேண்டிய தேதிக்குள் வரி செலுத்தத் தவறினால் நடப்பு ஆண்டின் மொத்த வணிகத் தொகையின் அடிப்படையில் வரி செலுத்துவதற்கு அவருக்கு அளிக்கப்பட்டுள்ள அனுமதி ரத்து செய்யப்படலாம். முந்தைய ஆண்டின் மொத்த வணிகத் தொகைக்கேற்ப தற்காலிகமான அடிப்படையில் வரி செலுத்த வேண்டுமென அவரைக் கேட்கலாம். | (c) ஏற்கப்படவில்லை. திங்கள்தோறும் அனுப்பப்படும் விவரக் கணக்குடன் ஒரு வணிகர் வரி செலுத்தத்தவறினால் முந்தைய திங்களுக்குரிய மொத்த வணிகத்தொகையின் (அடிப்படையில்) வரி செலுத்துவதற்காக அளிக்கப்பட்டுள்ள சலுகையை இழப்பாரென்றும் சட்டத்தின் ஏனைய விதித்துறைகளின்படி வரி செலுத்த வேண்டுமென்றும் வகை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. அதற்கேற்றபடி விதிகளை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. |

| விற்பனை வரி ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த துணைக் குழுவின் பரிந்துரைகள். | அரசு எடுத்த நடவடிக்கை. |
| --- | --- |
| (d) வரி செலுத்துவதில் காலதாமத மேற்பட்டால் அபராதம் விதிப்பதென்று நற்போதுள்ள விதித்துறையைச் செயல்படுத்துவதில் நிர்வாக முறையில் இடர்பாடிருப்பது தெரிய வந்துள்ளதாலும் உரிய காலத்தில் வணிகர்கள் வரியைச் செலுத்தும்படி கட்டாயப்படுத்துவதில் அது போதிய பலனளிப்பதாக இல்லை என்பதாலும் 1939-ம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் செயலில் உள்ள நடைமுறை அதாவது வணிகர் ஒருவர் உரிய காலத்தில் வரி செலுத்தத் தவறின் அவர்மீது வழக்குத் தொடரலாம் என்னும் நடைமுறை, மீண்டும் செயலுக்குக் கொண்டுவரப்படலாம். வழக்குத் தொடர்வதற்குப் பதில் அது உடன்பட்டுத் தீர்க்கப்படலாம். | (d) 24 (3) பிரிவின் விதித்துறை அப்படியே வைத்துக் கொள்ளப்படலாமென்றும் இதுபற்றி ஓராண்டுக்குப் பின்னர் ஆலோசிக்கப்படலாம் என்றும் வருவாய்த் துறையின் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 20-ம் தேதியிட்ட 2411-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் ஆணையிடப்பட்டது. இது குறித்த அறிவிப்புகளில் அல்லது ஆணைகளில் குறிப்பிட்டுள்ள காலவரையறைக்குள் விதிக்கப்பட்ட வரியைச் செலுத்தத் தவறினால் அவ்வாறு செலுத்தத் தவறிய திங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 100-க்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு ஒரு சீரான விதமாக ரூ. 1 அபராதத் தொகை விதிக்கும் வகையில் 24 (3) பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள அபராதத் தொகையை அதிகரிக்க அரசு இப்பொழுது முடிவு செய்துள்ளது. |
| 10. (a) அலுமினியப் பாளங்களுக்கு, தற்போது 5 சதவீத ஒரு முனை வரி விதிக்கப்படும். இது 5½ சதவீதம் என்று தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பதிலாக பலமுனை வரி விதிக்கப்படலாம். | 10. (a) ஏற்கப்படவில்லை. அலுமினியப் பாளங்கள் ஒரு முனைவரி விதிப்புத் திட்டத்தின் கீழேயே வைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. |
| (b) தானியவகைகள், கடலை வகைகள், பருப்பு வகைகள் ஆகியவற்றை வரி வீதத்தை முடிவு செய்யும் காரியத்திற்காக "உணவு தானியங்கள்" என்பதன் கீழ் வகைப்படுத்தவேண்டும். | (b) இது ஏற்கப்படவில்லை. (கோதுமை, கோதுமைப் பொருள்கள் தவிர) உணவு தானியங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது பற்றி ஆலோசிக்கையில் அரசு தானிய வகைகள், கடலை வகைகள் ஆகியவற்றின் நேர்வு குறித்து ஆராய்ந்து அவை குறித்த வரி விதிப்பைக் குறைக்க வேண்டியதில்லையென்று முடிவு செய்தது. |
| (c)(i) பொறிகளின் உறுப்புகள், துணைக் கருவிகள், பாகங்கள் ஆகியவற்றைப் பலமுனைவரி விதிக்குட்படுத்தும் வகையில் தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையிலிருந்து நீக்கலாம். | (c) (i) ஏற்கப்படவில்லை. |



| | |
| --- | --- |
| (ii) முதல் அட்டவணையில் (1) லிருந்து (14) வரை உள்ள இனங்கள் குறித்து மேற்சொன்ன (1)ல் உள்ள பரிவுரைகளை செயலுக்குக் கொண்டு வருவதை மாநிலங்கள் அனைத்திலும் ஒரு படித்தாகக் கொண்டு வருவது குறித்து இந்திய அரசுடன் கலந்தாலோசிக்க வேண்டுமாதலால் காலதாமதம் ஏற்படுமானால், இச்சட்டத்தின் 3-வது (3) உட்பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளவாறு சதவீத (தற்போது 1½ சதவீதம் என்று அதிகரிக்கப்பட்டுள்ளது) சலுகை வரி வீதத்தை செயலிலிருந்து நீக்கி விடலாம். இது பற்றி இந்திய அரசுடன் ஆலோசிக்கலாம். | (ii) பொறிகளைச் சேர்ந்த பாகங்களைப் பொறுத்த வரையில் விதிக்கப்படும் சணகை வரி வீதம் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் 8 (1) பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரி வீதத்தை ஒத்திருக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. 3 (3) பிரிவின் கீழ் விதிக்கப்படும் வரி வீதத்தை 2 சதவீதத்திலிருந்து 3 சத வீதமாக உயர்த்தவும் அரசு கருதியுள்ளது. எனவே இந்த வேண்டுகோளை அரசு ஏற்பதற்கில்லை. |
| (d) புழுகொல்லி மருந்துகளும், பூச்சிகொல்லி மருந்துகளும் ரசாயன உரங்களுடன் சேர்ந்து ஒருமுனை வரிக்குட்படுத்தப்படவேண்டும். | (d) ஏற்கப்பட்டது. முதல் விற்பனையில் 3 சத வீதம் என்னும் வீதத்தில் ஒரு முனை வரிக்குட்படுத்தப்பட்டு விட்டன. இம்மாநிலத்தில் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து அது செயலில் உள்ளது. |
| (e) நடவடிக்கை ஒரே மாதிரியாகவும் எளிய முறையிலும் இருக்க வேண்டுமென்பதற்காக காபி, காப்பி பொடி, சிக்கரி, பிரெஞ்சு காபி ஆகியவற்றுக்குப் பலமுனை வரி வீதத்தில் விதித்து வாங்கப்பட வேண்டும். | (e) ஏற்கப்படவில்லை. செயலில் உள்ள நடைமுறை அப்படியே வைத்துக்கொள்ளப்படலாமென்று அரசு முடிவு செய்தது. பிரெஞ்சு காப்பியின் மீது பல முனை வரிவிதித்து வாங்க வகை செய்து வருவாய்த் துறையின் 1966ம் ஆண்டு மே மாதம் 30-ம் தேதியிட்ட 1935-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. |
| 11. வரி விதிப்பவரின் கணக்காண்டு வரிவிதிப்புக் காரியத்துக்காக ஏற்றுக்கொள்ளப்படலாம். நிதியாண்டைக் கொண்டு கணக்கிடப்படும் தற்போதைய நடைமுறையை மாற்றி அமைக்கலாம். | 11. இது ஏற்கப்படவில்லை. வெவ்வேறு வணிகர்கள் வெவ்வேறு கால அளவு கொண்ட கணக்கு ஆண்டைப் பின்பற்றுகின்றனர் என்றும் வரி விதிப்பு ஆண்டுகளை ஒரு சீராகக் கொண்டு மதிப்பிட்டால்தான் சட்டத்தைச் செயல் படுத்துவது குறித்த புள்ளி விவரங்களைக் கொடுக்க முடியுமென்றும் எனவே இந்த பரிவுரையை ஏற்றுக் கொண்டால் சில இடர்பாடுகள் புதிதாகக் கிளைக்கலாம் என்றும் வருவாய்த்துறை வாரியம் கூறியுள்ளது. |

| விற்பனை வரி ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த துணைக் குழுவின் பரிவுரைகள் | அரசு எடுத்த நடவடிக்கை. |
|---|---|
| 12. (a) படிவத்தில் வணிகர் கையெழுத்திடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தைப் படிவத்தின் முடிவில் கொண்டுவர வகை செய்யலாம். A1, A2, A3, ஆகிய படிவங்களிலும் இதே முறையைக் கையாளலாம். | 12 (a) ஏற்கப்பட்டது. தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் உள்ள A1, A2, A3 ஆகிய படிவங்கள் வருவாய்த்துறையின் 1968-ம் ஆண்டு மே மாதம் 22-ம் தேதியிட்ட 1963-ம் எண்ணுள்ள அரசு ஆணையினால் தக்கபடி மாற்றியமைக்கப்பட்டன. |
| (b) தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள B லிருந்து B4 வரை உள்ள படிவங்கள் B6, 'C' படிவங்கள் ஆகியவற்றில் 1967-ம் ஆண்டு மத்திய விற்பனை வரி (தமிழ்நாடு) விதிகளின்கீழ் உள்ள படிவங்களிலும் "அறியவும்" என வரும் சொற்களுக்கு முன்னர் "தயவு செய்து" என்னும் சொல்லைச் சேர்த்துக் கொள்ளலாம். | (b) ஏற்கப்பட்டது. வருவாய்த்துறையின் 1968-ம் ஆண்டு மே மாதம் 22-ம் தேதியிட்ட 1063-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் திருத்தங்கள் வெளியிடப்பட்டன. |
| (c) தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளின்கீழ் கொடுக்கப்படும் இறுதி வரி விதிப்பு அறிக்கையும் தொகை திருப்பிக் கொடுப்பதற்கான C படிவத்தில் உள்ள ஆணையும் வருமான வரி விதிக்கப்படும் நேர்வைப் போலவே வரி விதிப்பு ஆணையுடனேயே அனுப்பப்படலாம். அதற்கேற்றபடி "C" படிவத்தை மாற்றியமைக்கலாம். | (c) ஏற்கப்பட்டது. தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளும் அதிலுள்ள படிவமும் இதற்கேற்றபடி வருவாய்த்துறையில் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதியன்று வெளியான 1093-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் மாற்றியமைக்கப்பட்டது. |
| (d) பதிவுச் சான்றிதழ் புதுப்பிக்கப்பட்டதற்கான மேல் குறிப்பு வரைவதற்காக வணிக வரி அலுவலருக்கு அனுப்பவேண்டிய தேவையில்லை யென்று முன்னர் செய்துள்ள பரிவுரையைக் கருத்தில் கொண்டு சான்றிதழைப் புதுப்பிப்பது குறித்து D-1 படிவத்தில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை எடுத்துவிடலாம். | (d) ஏற்கப்பட்டது. தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரி விதியின் 24-வது விதியின்கீழ் உள்ள D-1 படிவம் வருவாய்த்துறையில் 1968-ம் ஆண்டு மே மாதம் 22-ம் தேதியன்று வெளியான 1063-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் தக்கபடி மாற்றியமைக்கப்பட்டது. |



| | |
|---|---|
| (e) சான்றிதழை நிறுவனத்தின் பெயரிலேயே வழங்கலாமென்று முன்னர் செய்யப்பட்ட பரிவுரைக்கேற்ப D-2 படிவத்தில் விற்பனையாளரின் பெயர், முகவரிக்கென உள்ள இடத்தை எடுத்துவிடலாம். | (e) ஏற்கப்பட்டது. 2-வது பரிவுரைக்கேற்ப சட்டம் மாற்றப்பட்ட பின்னர் விதிகளிலும் மாற்றம் செய்யப்படும். |
| (f) அதிகாரி அனுமதியளிக்கும் வரையில் அந்த வணிகர் அந்த இடத்தை விட்டுச் செல்லக்கூடாதென்று கட்டுப்படுத்தும் வகையில் 12-ம் படிவத்தில் உள்ள விதித்துறையில் பயன்படுத்தியுள்ள சொற்களின் கடுமையைக் குறைக்கும் வகையில் அந்த விதித்துறை மாற்றியமைக்கப்படலாம். | (f) ஏற்கப்பட்டது. தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளின் கீழ் உள்ள 12-ம் படிவம் வருவாய்த்துறையில் 1968-ம் ஆண்டு மே மாதம் 22-ம் தேதியன்று வெளியான 1063-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் திருத்தியமைக்கப்பட்டது. |
| (g) (i) 8-ஆம் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு 20-ம் படிவத்தில் உள்ள ஒப்படைக் குறிப்புப் படிவம் மாற்றியமைக்கப்படலாம். | (g) (i) ஏற்கப்பட்டது. வருவாய்த் துறையில் 1966-ம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் தேதியன்று வெளியான 381-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் பிறப்பித்த ஆணைகளின் மூலம் 20-ம் படிவம் தக்கபடி திருத்தியமைக்கப்பட்டுள்ளது. |
| (ii) தற்போது மாற்றியமைக்கப்பட வேண்டுமென பரிவுரை செய்யப்பட்டுள்ள ஒப்படைக்குறிப்பு பற்றிய படிவத்தின்படி, அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்த பின்னரோ ஏற்றுமதி செய்வதற்கு எடுத்துச் செல்லப்படும்போதோ அத்தகைய பொருள்களுடன் ஆவணங்களும் உடன் எடுத்துச் செல்லப்படவேண்டுமென்று வருவாய்த் துறை வாரியம் கூறியுள்ள செய்திக்குறிப்பைப்பற்றி கருதிப் பார்க்கவேண்டியதில்லை | (ii) வணிகர் இல்லாத பிறருக்கு XX படிவம் கொடுக்கப்படுவதற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிவிதிகளில் வகை செய்யப்படவேண்டுமா என்பது குறித்து அரசு தனிப்பட்ட முறையில் ஆலோசித்து வருகிறது ஏனென்றால் இத்தகையோருக்கு XX படிவம் கொடுப்பதற்கு விதிகளில் எதும் வகை செய்யப்படவில்லை யாதலால் இதற்கு வகை செய்தால் பொருள்களை எடுத்துச்செல்லும் முகவர்களும் XX-ஆம் படிவம் பெற்றுக்கொள்ளலாம். |
| (h) பொருள்களின் விலை விவரங்கள் குறித்தும் அதற்கேற்ப வரி வீதம் ஆகியவற்றுடன் பொருள்களின் விற்பனை பற்றிய விவரங்களைக் காட்டும் முறையில் IX இணைப்பில் உள்ள படிவத்தில் புதிய பதிவேடு ஒன்றை ஏற்படுத்தலாம். | (h) ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளைச் சேர்ந்த வருவாய்த்துறையில் 1968-ம் ஆண்டு மே மாதம் 25-ம் தேதியன்று வெளியான 1063-ம் எண்ணுள்ள அரசு ஆணையின் மூலம் 26-வது விதியின்கீழ் புதிய பதிவேடு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. |

| விற்பனை வரி ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த துணைக் குழுவின் பரிவுரைகள். | அரசு எடுத்த நடவடிக்கை. |
|---|---|
| 13. படிவங்களை நிரப்புவது எப்படி என்பது குறித்தும், சட்டம் விதிகளின்கீழ் உள்ள நடைமுறையைப் பின்பற்றுவதில் எழக் கூடிய ஐயங்களையும் தீர்த்துவைக்கவும் வணிகர்களுக்கு வழி காட்டுவதற்காக நல்லுறவு அதிகாரிகள் நியமிக்கப்படலாம். முதற்கண் மதுரை, கோவை ஆகிய இரண்டிடங்களிலும் முன்னோடி முறையாக வருமான வரி இணை அலுவலர் பதவித்தரத்தில் நல்லுறவு அதிகாரிகள் நியமிக்கப்படலாம். இத்திட்டத்தை ஓராண்டுக் காலத்திற்கு செயல் படுத்திப் பார்க்கலாம். | 13. ஏற்கப்படவில்லை. நல்லுறவு அதிகாரிகளின் பணியை மதிப்பிட்டு அலுவலர்களே எளிதாகவும் திறமையுடனும் செய்ய முடியுமென்றும் வணிக வரித்துறையில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலை 11 மணியிலிருந்து நண்பகல் 1 மணி வரை பொது நல்லுறவு நாளாகக் கொள்ளப் படவேண்டுமென்று வரையறுத்து வருவாய்த்துறையில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் தேதியன்று வெளியான 2183-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் அரசு கருத்துத் தெரிவித்துள்ளது. அப்பொழுது வணிக வரித்துறை ஒவ்வொன்றிலுமுள்ள முதுநிலை அலுவலர் ஒருவர் வணிகர்களின் முறையீடுகளை செவிமடுத்து அவர்களுக்குத் தேவையான உதவியையும் அறிவுரையும் கூறுவார். |
| 14. வணிகவரி ஆணையாளர் இம் மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்யும்போது—வணிகக் கழகத்தையும் ஏனைய வணிக நிறுவனங்களையும் சந்திக்கலாம். | 14. ஏற்கப்பட்டது. (வணிகவரி) வருவாய்த்துறை வாரியம் இந்தப் பரிவுரையை ஏற்கெனவே செயலுக்குக்கொண்டு வந்துள்ளது. |
| 15. வருவாய்த்துறை வாரியம் வணிக நிறுவனங்கள், கூட்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் பட்டியல் ஒன்றை வைத்துவர வேண்டும். விற்பனை வரியைப் பாதிக்கக்கூடிய முக்கியமான தகவல்களை அவ்வப்போது அவர்களுக்குத் தெரிவிக்கப்படலாம். நிறுவனங்கள் விண்ணப்பித்துக்கொள்வதன்மேல் அவற்றின் பெயர் பட்டியலில் சேர்க்கப்படலாம். | 15. ஏற்கப்பட்டது. (வணிகவரி) வருவாய்த்துறை வாரியம் இப்பரிவுரையை ஏற்கனவே செயலுக்குக்கொண்டு வந்துள்ளது. |
| 16. வணிகவரி அரசிதழை உடனுக்குடன் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படலாம். | 16. ஏற்கப்பட்டது. வருவாய்த்துறையில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் தேதியன்று வெளியிடப்பட்ட 2466-ம் எண்ணுள்ள அரசு ஆணையின் மூலம் வணிகவரி அரசிதழ் வெளியிடும் முறையைச் சீரமைப்பது பற்றியும் உடனுக் குடன் வெளியிடுவது பற்றியும் முடிவான ஆணைகள் வெளி யிடப்பட்டன. |



### 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டமும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிகளும்.

| | |
|---|---|
| 1. 'C' படிவத்தில் உள்ள உறுதிமொழியைக் கொடுப்பதற்கான இறுதி தேதியை அடுத்த ஆண்டின் மே 31-ம் தேதிவரை நீட்டிக்கலாம். | 1. ஏற்கப்படவில்லை. 'C' படிவத்தில் உள்ள உறுதி மொழியை வணிகர்கள் அந்த ஆண்டின் இறுதி வரி விதிப்புக்கு முன்னர் எந்த நேரத்திலும் கொடுக்கலாம் என்று வருவாய்த்துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 19-ம் தேதியிட்ட 2631-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே இதைப்பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டிய தேவையில்லை யென்று வருவாய்த்துறை 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் தேதியன்று வெளியிடப்பட்ட 1316-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் ஆணையிடப்பட்டது. |
| 2. ஒன்றுக்கு மேற்பட்ட வியாபாரம் குறித்து அனுப்பப்படும் படிவம் குறித்து 'C' வரையறுக்கப்பட்டுள்ள தொகை அளவு ரூ. 10,000-த்திற்கு அதிகரிக்கப்படலாம். | 2. இது ஏற்கப்படவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட வாணிபம் குறித்து படிவத்தில் உறுதிமொழி அல்லது 'D' படிவத்தில் சான்றிதழ் பெறுவதற்கு ரூ. 5,000 என்ற தொகையை வரையறுத்தும் 'C' படிவத்திற்கான உறுதி மொழியின் நகல் அல்லது 'D' படிவத்தில் சான்றிதழ் கொடுக்கவும் வகை செய்து 1957-ம் ஆண்டு மத்திய விற்பனை வரி (பதிவு செய்தல்—வியாபாரத் தொகை) விதிகள் 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதியிலிருந்து திருத்தப்படுமென்றும் இந்திய அரசு 1968-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதியிட்ட கடிதத்தில் அறிவித்துள்ளது. எனவே 1957-ம் ஆண்டு மத்திய விற்பனை வரி (பதிவு செய்தல்—வியாபாரத் தொகை) விதிகளில் தற்போது சேர்க்கப்பட்டுள்ள விதித்துறையை 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1-ம் தேதியன்று நீக்கும் வகையில் அந்தந்த மாநில விதிகளை மாற்றியமைக்கும்படி இந்திய அரசு மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. அந்த வேண்டு கோளுக்கிணங்க 1957-ம் ஆண்டு பொது விற்பனைவரி (தமிழ்நாடு) விதிகளைச் சேர்ந்த 9-A விதியின்கீழ் உள்ள (2) துணை விதியையும் 10-வது விதியைச் சேர்ந்த (1) துணை |

| விற்பனை வரி ஆலோசனைக் குழுவைச் சேர்ந்த துணைக் குழுவின் பரிவுரைகள். | அரசு எடுத்த நடவடிக்கை. |
|---|---|
| | விதியின் இரண்டு வரம்பு நிபந்தனைகளையும் நீக்கி வருவாய்த்துறையில் 1969-ம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் தேதியன்று வெளியான 23-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே இது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டிய தேவையில்லை எனக் கருதப்பட்டது. |
| 3. 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழும் 1956-ம் ஆண்டு மத்திய விற்பனை வரிச்சட்டத்தின்கீழும் ஒரு சீரான நடைமுறையைப் பின்பற்ற தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் வரி விதிப்பதற்காக வியாபாரத் தொகையிலிருந்து விலக்கப்படும் கட்டணத்தொகையில் எல்லா இனங்களும் மத்திய விற்பனை வரியின் பாற்பட்ட வியாபாரத் தொகையிலிருந்தும் விலக்கப்படவேண்டும். | 3. இது ஏற்கப்படவில்லை. துணைக்குழுவின் பரிவுரைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் 1957-ம் ஆண்டு மத்திய விற்பனை வரி (பதிவு செய்தல்-வியாபாரத் தொகை) விதிகளை இந்திய அரசு திருத்த வேண்டிவரும் எனவும் எனவே இந்நடைமுறை அவசியமல்ல எனவும் வருவாய்த்துறையின் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் தேதியன்று வெளியிட்ட 1316-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் உத்தரவிடப்பட்டது. |
| 4. பொது விற்பனை வரிச்சட்டத்தின்கீழ் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான நேர்வில் செய்வது போல மத்திய விற்பனை வரியின்கீழும் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான செல்லு சீட்டை வரிவிதிப்பு ஆணையுடனே வைத்து அனுப் பலாம். | 4. ஏற்கப்பட்டது. வரி நிலுவை எதுமில்லாமலிருந்தால் 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் கீழ் தொகை திருப்பிக் கொடுப்பதற்கான செல்லுச் சீட்டை வரிவிதிப்பு ஆணையுடனே அனுப்ப வருவாய்த்துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதியிட்ட 1093-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழுள்ள 16, 18 (7) விதிகளும் 'C' படிவமும் தக்கபடி திருத்தியமைக்கப்பட்டுள்ளன. மத்திய விற்பனை வரிச்சட்டத்தைச் சேர்ந்த 9 (3) பிரிவின்படி, அந்த விதிகளைச் சேர்ந்த விதித்துறைகள் மத்திய விற்பனைவரிச்சட்டத்தின் வியாபாரங்களுக்கு பொருந்தும். |

ஏ. எஸ். வெங்கடராமன்,
துணைச் செயலாளர்.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

## Monday, the 2nd March 1970

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS

*Damage caused to D.M.K. flag and to the portrait of Late Thiru C. N. Annadurai*

* 114.Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chie Minister be pleased to state :—

(a) whether the Government have received any complaint regarding the pulling down of the D.M.K. Flag and the damages caused to the portrait of late Thiru C.N. Annadurai, former Chief Minister in Bammakottai village, Aruppukkottai taluk ,

(b) if so, the action taken thereon by the Government ; and

(c) whether any person was arrested in this connection ?

**தி.மு. கழக கொடியையும். மறைந்த திரு. அண்ணாதுரை அவர்களின் உருவப்படத்தையும் தாக்கிய நிகழ்ச்சி.**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) அருப்புக்கோட்டை தாலுகாவில் பொம்மகோட்டை கிராமத்தில் தி. மு. கழகத்தின் கொடி வெட்டப்பட்டதைப் பற்றியும் மறைந்த முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்களின் திருவுருவப் படத்தை உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளதைப் பற்றியும் அரசாங்கத்திற்குப் புகார் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

(உ) இது சம்பந்தமாக யாராவது கைது செய்யப்பட்டார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** : (அ) ஆம். ரெட்டியாப்பட்டி காவல் நிலையத்தில் புகார் ஒன்று வரப் பெற்றது.

(இ) இந்த நிகழ்ச்சிக்குத் தொடர்பான இரு தரப்பினரும் இசைந்து நல்ல முறையில் இதனைத் தீர்த்துக் கொண்டபடியால் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

(உ) இது சம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை.

*Naxalite slogans.*

* 115.Q.—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(a) the places in Tamil Nadu where wall-posters with Naxalbari slogans appeared on the 1st May 1969 ;

(b) the slogans written in them ; and

(c) the persons who prepared and pasted the wall-posters ?

[2nd March 1670

**நக்சல்பாரி கோஷ்டியினரின் கோஷங்கள்.**

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1969 மே 1-ஆம் நாள் தமிழ்நாட்டில் எப்பகுதியில் நக்சல்பாரி கோஷ்டியினரின் கோஷங்களடங்கிய [illegible]டிகள் ஒட்டப்பட்டிருந்தன ?

(இ) அதில் எழுதப்பட்டிருந்த [illegible]யாவை ?

(உ) சுவரொட்டி தயார் செய் [illegible] ?

**மாண்புமிகு திரு. மு. கருணா**[illegible] தைச் சேர்ந்த பயணச் சீட்டு [illegible]களில் 1—5—1969 அன்று நக்சலை [illegible]) அடங்கிய தமிழ்க்கையெழுத்துச் சுவ[illegible]

(இ) கீழ்க்கண்ட கொள்கைக் குரல் வா[illegible] சுவரொட்டி களில் காணப்பட்டன :

" துப்பாக்கிக் குழலிலிருந்துதான் அரசியல் அதிகார[illegible] கிறது ".

" மே தினத்தன்று படைக்கலம் ஏந்த நாங்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம். தோட்டாக்கள் வாயிலாகவே விடுதலையை அடைய முடியும். வாக்குகள் மூலம் பெற இயலாது ".

" மா.சே.துங் பாதையை நாங்கள் பின்பற்றுவோம் ."

(உ) இந்தச் சுவரொட்டிகள் சுவர்களில் ஒட்டப்பட்டதற்கு (exhibited) நக்சலைட்டைச் சார்ந்தவர்கள்தாம் பொறுப்பாளிகள் என்று ஐயுறப்படுகிறது. (காவலர்கள் சுவரொட்டிகளை அப்புறப்படுத்தினர். இதற்குத் தொடர்பாக, இந்தியத் தண்டனைச் சட்டக் கோவையின் 124-ஏ பிரிவின் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புலனாய்விற்கு ,பின்னர் இவ் வழக்கு கண்டு பிடிக்க இயலாது எனக் கருதி கைவிடப்பட்டது).

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, இப்படி நக்சல்பாரி சுவரொட்டிகள் ஒட்டியவர்கள் எத்தனை பேர் தமிழ்நாட்டில் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் ? அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கோவையில் இரண்டு பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் பேரில் வழக்கு நடந்தபோது, போதிய சாட்சிகள் இல்லாத காரணத்தால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை** இந்த நக்சல்பாரி இயக்கம் தமிழகத்தில் அமைதியாக நடைபெற்று வருகிற ஆட்சியைக் குலைக்கிற நோக்கத்தோடு கேரள எல்லைப் பகுதியில் செயல்பட்டு வருவதை அரசு உணர்ந்திருக்கிறதா? அதற்காகத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கேரள எல்லை, ஆந்திர எல்லைப் பகுதிகளில் நக்சல்பாரிகளின் நடவடிக்கையைக் கவனிப்பதற்காகத் தனிக் காவல் படை அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நக்சல்பாரி நடவடிக்கையைக் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களைப் பற்றி மத்திய அரசு தகவல் தருமாறு கேட்டு வேண்டுகோள் அனுப்பியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படி ஒன்றும் இதுவரையில் வர வில்லை.

MR. CHAIRMAN : Questions 116 to 122 are postponed.



2nd March 1970]

*Law Officers.*

* 123. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) the number of Law Officers appointed by the State Government during June and July 1969 ; and

(*b*) the principles on which these appoitments were made ?

**சட்ட அதிகாரிகள்.**

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம்** சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1969-ஆம் ஆண்டு ஜூன், ஜூலை திங்களில் மாநில அரசால் நியமிக்கப்பட்ட சட்ட அதிகாரிகள் எண்ணிக்கை என்ன ?

(இ) எந்தக் கொள்கையின் அடிப்படையில் இந்த நியமனங்கள் செய்யப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ), (இ) மேலவை முன் ஒரு விவர அறிக்கை a வைக்கப்பட்டுள்ளது.

*Jail Visitors.*

* 124. *Q.*—THIRU A.R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) the principles on which the Jail Visitors were appointed in June-July 1969 ; and

(*b*) whether any deviation was made in the method of appointment this year ?

**சிறை பார்வையாளர்கள்.**

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம்** சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) எந்த கோட்பாடுகளையொட்டி சிறை பார்வையாளர்கள் (Jail Visitors) 1969 ஜூன், ஜூலையில் நியமிக்கப்பட்டார்கள் ?

(இ) நியமன முறையிலிருந்து வழுவிய நேர்வு ஏதேனும் இந்த ஆண்டில் ஏற்பட்டதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) மத்திய சிறைகளைப் பார்வையிடும் அரசுச் சார்பற்ற பார்வையாளர்கள், மாநிலச் சிறைப் பார்வையாளர்கள் ஆகியோரை நியமிப்பதில் பின்பற்றப்படும் கோட்பாடுகளை விளக்கும் விவர அறிக்கை ** ஒன்று மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

*Honorary Presidency Magistrates.*

* 125. *Q.*—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the number of Honorary Presidency Magistrates appointed by the Government during 1967-68 ; and

(*b*) the qualifications prescribed for these posts ?

---

a Printed as Appendix I on pages 256-258.

** Printed as Appendix II on pages 258-259.

[2nd March 1970

### மதிப்பியல் குற்றவிசாரணை நீதிபதிகள்.

**திரு. வி. தங்கபாண்டியன் (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி** சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1967–68-ஆம் ஆண்டில் அரசினால் நியமிக்கப்பட்ட மதிப்பியல் குற்றவிசாரணை நீதிபதிகள் எத்தனை பேர் ?

(இ) இப்பதவிகளுக்கான குறிப்பிடப்பட்ட தகுதிகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விவரமான விடை [a] சட்ட மேலவையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

### *Chennampatti Canal Scheme.*

* 126 *Q.*—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

(*a*) the present stage of Chennampatti Canal Scheme in Aruppukkottai taluk, Ramanathapuram district ;

(*b*) the estimated cost of this scheme ; and

(*c*) the number of acres of land which will be benefited by this Scheme ?

### செவனற்பட்டி கால்வரய்த் திட்டம்.

**திதி. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :— .

(அ) இராமநாதபுரம், அருப்புக்கோட்டை தாலுக்காவிலுள்ள சென்னம்பட்டி கால்வாய்த் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(இ) அத்திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(உ) இத் திட்டத்தினால் எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம் சென்னம்பட்டி கிராமத்திற்கு அருகில் டவுண்ட நதிக்குக் குறுக்கே அணை கட்டும் திட்டம் தயாரிக்கப்பட்டு (பாசனத்) தலைமை பொறியாளரது ஆய்வில் உள்ளது.

(இ) ரூ. 19 லட்சம்.

(உ) தற்போதுள்ள 1,143 ஏக்கர் ஆயக்கட்டு இத்திட்டத்தினால் பயனடையும் என்றும், 944 ஏக்கர் புன்செய் நிலம் நன்செய்யாக மாறுவதுடன் இதுவரை பாசனம் பெறாத 119 ஏக்கர் நிலமும் பாசனம் பெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நீண்ட நெடுங்காலமாகவே அருப்புக்கோட்டைத் தாலுகா மக்களால் வற்புறுத்தப்பட்டு வருகிற காரணத்தால் அதற்குக் குறிப்பிட்ட கால வரம்பு கொடுத்து அதற்குள்ளாக இந்தத் திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா :** அதற்கான எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[a] Printed as Appendix III on pages 259–262.



2nd March 1970]

### *Grama Sevaks and Grama Sevikas.*

* 127 *Q.*—Thiru P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :—

(*a*) the functions of Grama Sevaks and Gramasevikas;

(*b*) whether there is any development in the villages as a result of the functions of Gramasevaks and sevikas ; and

(*c*) if not, the reasons therefor ?

### கிராம சேவகர்கள். கிரா சேவிகைகள்.

**திரு. பி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கிராம சேவகர்கள், கிராம சேவிகைகள், ஆகியோரின் கடமைகள் யாவை ?

(இ) இத்தகைய பணியாளர்களின் நடவடிக்கைகளினால் கிராமத்தில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில் என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** (அ) அவை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஆம்.

(உ) இவ்வினா எழவில்லை.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றுகிற கிராம சேவிகைகளுக்குப் போதிய அளவுக்கு வேலைகள் இல்லை என்பதால் அவர்களுடைய எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்ற யோசனை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அவர்களுக்கும் அடுத்த நிலையில் சமூகநல ஊழியர்கள் என்ற பிரிவினர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான வேலையும் இல்லை என்பதால், அந்தப் பதவிகளும் குறைக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** கேள்வி கிராம சேவிகைகளைப்பற்றியது. இப்போது இருக்கிற எண்ணிக்கை மேலும் அதிகமாக்கப்பட வேண்டுமென்றும் அவர்களுடைய வேலை பரவலாக இருப்பதால், எல்லா கிராமங்களையும் கவனிக்க முடியவில்லை என்றும், பல்வேறு இடங்களிலிருந்து குறைபாடுகள் தெரிவிக்கப்படுகிறதே தவிர, குறைக்க வேண்டுமென்ற முறையீடுகள் அரசாங்கத்திற்கு வரவில்லை. சமூக நல ஊழியர்கள் பற்றிக் கேட்டார்கள். ஏற்கனவே இந்த மன்றத்தில் அதற்கான விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன.

**Thiru V.K. RAMASWAMY MUDALIAR :** Mr. Chairman, Sir, may I know whether their work is being efficiently supervised, and, if so, by whom ?

**THE HON. THIRU M. MUTHUSWAMY :** Yes, Yes.

அவர்களுடைய வேலைகள் எல்லாம் கிராம வளர்ச்சித்துறையினுடைய தலைமை அதிகாரிகளால் முறையாகப் பரிசீலிக்கப்படுகிறது. அது மட்டுமல்லாமல், வேளாண்மைத்துறை அதிகாரிகள் அவர்களுடைய வேலையைப் பரிசீலித்து மேற்பார்வையிடுகிறார்கள்.

[a] Printed as Appendix IV on pages 259–262.

[2nd March 1970

THIRU A.R. DAMODARAN : Mr. Chairman, Sir, I note that one of the important functions of the Grama Sevikas is Family Planning Education. May I know, Sir, whether any special incentive or awards are afforded to them, depending on the number of sterilization operations carried on on women in the rural parts ?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :** *அப்படித் தருவதாகத்தான் என்னுடைய நினைவில் இருக்கிறது. ஆனால் அது பற்றிய விவரம் இல்லை. அவர்களுக்கும் அதற்கான ஊக்கப்பணம் தரப்படுவதாக நான் கருதுகிறேன்.*

*Hindu Temples.*

* 128. *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :—

(*a*) whether there is any proposal to remove the restrictions, if any on the entry of non-Hindus in Hindu Temples ; and

(*b*) if so, the details thereof ?

**இந்துக் கோயில்கள்.**

**திரு. எம். ராஜா அய்யர் :** *மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—*

*(அ) இந்துக் கோயில்களுள் இந்துக்கள் அல்லாதவர்கள் நுழைவதற்கான தடைகள், ஏதேனும் இருப்பின், அவற்றை நீக்குவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ;*

*(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *(அ) & (இ) ஆம். தமிழ்நாடு 1947–ஆம் ஆண்டு ஆலய நுழைவு அனுமதிச் சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளைச் சேர்ந்த 3 (a) விதி, இந்துக்களல்லாதவர்கள் இந்துக் கோயில்களின் உட்புறத்திலோ, அவற்றிற்கு வெளியிலோ அமைந்துள்ள ஓர் இடத்திற்குச் செல்லுவதற்கும், அல்லது இறை வழிபாடு செய்வதற்கும் தடை விதிக்கின்றது. அரசு இப்போது இவ்விதியை நீக்கி ஆணைகள் பிறப்பித்துள்ளது.*

**திரு. எம். ராஜா அய்யர் :** *தலைவர் அவர்களே, ராமேஸ்வரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அப்பால் இந்துக்கள் அல்லாதவர்கள் செல்லக் கூடாது என்று போர்டு இருந்து, அதை அகற்ற வேண்டுமென்று அரசு ஏதேனும் ஆணை இட்டுள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், அதற்கு எதிர்ப்பு இருந்தது. மறுபடியும் இப்போது மாட்டப்பட்டிருக்கிறது. மக்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு இந்துக்கள் அல்லாதவர்கள் வரக் கூடாது என்று போர்டு இருக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்து அங்கே அந்த போர்டு மாட்டப்பட்டிருக்கிறது. மறுபடியும் அதை நீக்கிவிட வேண்டுமென்று அரசு உத்திரவிட்டிருக்கிறதா?*

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *அதைப் போலவே அங்குள்ள மக்கள் ஆண்டவன் சன்னதியிலே எல்லா மதங்களும் சம்மதம் என்ற கொள்கையை நான் சென்றிருந்தபோது வற்புறுத்தினார்கள். அதன் காரணமாக அதற்குரிய பொறுப்பாளர்கள் அந்தப் பலகையை நீக்கியிருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.*

**திரு. ஜி. சுவாமிநாதன் :** *இந்துக்கள் அல்லாதவர்கள் கோயிலுக்குள் சில இடங்களுக்குச் செல்லக் கூடாது என்று விதி முறை இருப்பதன் காரணமாக, சில முக்கிய பகுதிகளைப் பார்ப்பதற்கே முடிவதில்லை. தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தில் இருக்கிற சோழர் கால ஓவியங்களை வெளிநாட்டார் பார்ப்பதற்கு மறுக்கப்படுகிறார்கள். அதனால் அவர்கள் மன வருத்தத்தோடு செல்கிறார்கள். அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?*



2nd March 1970]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *அவையெல்லாம் தெரிகிற காரணத்தாலும், அப்படித் தெரிந்தும், இந்த சமுதாயத்தில் நாம் அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கிக் கொடுத்திருக்கிறோமே என்று வேதனைப்படுகிற காரணத்தாலும், இதை நீக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதற்குத் தமிழகத்திலுள்ள எல்லாத் தரப்பினருடைய ஒத்துழைப்பையும் இந்தப் பேரவை விரும்புகிறது.*

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, in certain temples even Hindus have to take off their shirts when they approach the sanctum sanctorum. May I know whether the foreigners also will be brought under the same rule when they enter the sanctorum ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** *அப்படிப்பட்ட இடங்களில் அவ்வாறுதான் செல்ல வேண்டுமென்று சொன்னால், அதற்குக் கூட அன்னியர்கள் தயாராக இருப்பார்கள் என்றுதான் கருதுகிறேன்.*

Mr. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member].

*II.—Calling attention to non-renewal of Ration Cards issued to Orphanages and other public institutions consequent on change in Government policy.*

THIRUMATHI S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Food and Commercial Taxes to a matter of urgent public importance, namely, the miserable plight of the several orphanages and other public institutions in the State which are running residential institutions on account of the non-renewal of ration cards issued to them, consequent on the change in the Governmental policy and their inability to purchase rice in the open market to feed the inmates of the institutions and remedial measures taken by the Government to meet the serious situation.

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Mr. Chairman, Sir, as a result of the vigourous measures undertaken by the Government to increase food production and the recent favourable seasonal condi- 4-10
tions all over the State, the Government have decided to remove p.m.
the controls on food. In accordance with this decision, statutory rationing in Madras City and Coimbatore has been abolished. The informal rationing in the districts has also been removed and the supply of rice to cardholders and the bulk consumers has been stopped with effect from 31st January 1970, except in Madras City and Coimbatore where supply is confined to cardholders whose monthly income is Rs. 200 and below.

The Government have issued orders for the supply of rice at subsidised rates in Madras City and Coimbatore where the rupee-a-measure scheme is being continued for the benefit of persons with income not exceeding Rs. 200 per mensem to orphanages and other charitable institutions with effect from 1st March 1970.

Though the open market prices of rice in other places may be a little higher than the Government rates, the Government expect that in course of time, the prices will stabilise and settle down at a reasonable level and it may not be very difficult for such institutions to get their requirement of rice from the open market.

**திரு. கே. ராஜாராம் :** ஒரு சிறிய விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சென்னையில் பல அனாதை விடுதிகள் நடத்தபபடுகின்றன. அவைகளுக்கு சர்க்கார் குறைந்த விலையில் அரிசி கொடுத்து உதவினால் ஒழிய பல அனாதை விடுதிகள் இன்றையதினம் தொடர்ந்து நடக்க இயலாமல் மூட வேண்டிய நிலைமை ஏற்படும்போல் இருக்கிறது. பால மந்திர் போன்ற ஸ்தாபனங்களுக்கு அவ்வாறு குறைந்த விலையில் கொடுப்பார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. ஷண்முகம் :** தலைவர் அவர்களே, இன்றைக்கு அப்படி கொடுப்பதைப் பற்றித்தான் இங்கே நான் படித்தேன். படியரிசித் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு அரிசி கொடுக்கப்பட வேண்டும் என்று என்னையும் முதலமைச்சர் அவர்களையும் சந்தித்துக் கேட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் உடனே என்னிடம் சொல்ல, அதற்கான ஆணையும் பிறப்பிக்கப்பட்டது. 1-3-1970 முதற்கொண்டு ரூபாய்க்கு படியரிசி என்பதன் அடிப்படையில் அவர்களுக்கு அரிசி வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் :** தமிழ்நாட்டில் உள்ள எல்லா அனாதை விடுதிகளுக்கும் ரூபாய்க்குப் படியரிசி என்ற அடிப்படையிலேயே அரிசி அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. ஷண்முகம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இதை அமுலாக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இது இயலாத காரியம். அதாவது, படியரிசித் திட்டம் எங்கெங்கே அமுலில் இருந்ததோ—குறிப்பாக சென்னை போன்ற இடத்தில்—அந்த இடங்களில் உள்ள அனாதை விடுதிகளுக்கும் ஹரிஜன வெல்பேர் ஸ்கூல்களுக்கும் சேர்த்துப் போட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. தமிழ்நாட்டில் இருக்கிற அனாதை விடுதிகளுக்குப் போட வேண்டும் என்று கோரிக்கை எதுவும் வரவில்லை.

**திரு. வி. தங்கபாண்டியன் :** On a point of order, Sir, கவன ஈர்ப்புத்தீர்மானத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்ட பிறகு, உறுப்பினர்கள் கேள்வி கேட்பதற்கு இந்த அவையின் விதி முறை அனுமதிக்கிறதா ?

MR. CHAIRMAN : It is not a question ; it is for a clarification.

THIRUMATHI MARY C. CLUBWALA JADHAV: Mr. Chairman, Sir, will not the Government and the Hon. the Minister for Food see that we are not excluded from these exemptions ? We are running ten orphanages and other institutions with more than thousand children. During the last three weeks, charges have gone up, I should say almost doubled. That being so, how can we run these orphanages and other such institutions without this concession ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Perhaps, Sir, the hon. Member has not fully heard the answer I furnished in reply to the call attention notice. In the City we are going to distribute rice to all the orphanages which were getting ration rice prior to 31st January 1970. at subsidised rates from 1st March 1970.

## III. *General discussion on the Budget for the year* 1970-71—cont.

***திரு. சா. கணேசன் :** கனம் தலைவரவர்களே, இப்போது நமது அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரிய ஆட்சி சமர்ப்பித்திருக்கிற நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சமர்ப்பித்துக்கொள்ள நான் முன்வருகிறேன். நிதி நிலை அறிக்கையிலே தனித்தனியாக அத்தனையையும் எடுத்துக்கொண்டு தனித் தனியாகத் திறனாய்வு செய்வ



தற்கு வேண்டிய அவகாசம் நமக்கு இல்லை. ஆதலினாலே அடிப்படை முறைகள் மட்டும் எப்படி அமைய வேண்டும் என்று நான் கருதுகிறேன், எப்படி அமைந்தால் நன்மை மிகுந்ததாக இருக்கும் என்று நம்புகிறேன் என்பனவற்றை மட்டும் அமைச்சர்கள் முன்னிலையில் சமர்ப்பித்து உங்கள் மூலமாக நான் சில பேச முன்வருகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே வரியின் அளவு அதிகப்பட்டிருப்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறோம். அது புது வரியா, பழைய வரியா என்பதல்ல கேள்வி. வரி இப்படிக் கூடிக்கொண்டே போகிற நிர்ப்பந்தம் வருகிறது என்று ஆட்சியாளர்கள் சொல்லலாம். அதை அந்தக் கண்ணோட்டத்திலே காணுகிறபோது, சரியானதாகவே நமக்குப் புலப்படும். ஆனால், அதே காலத்தில் வரி உயர்ந்து, பண்ட விலை உயர மீண்டும் தேவைக்கு அதிகச் செலவு ஏற்பட்டு அதன் பிறகு அவர்கள் ஊதியம் அதிகம் வேண்டும் என்று கேட்க, ஊதியம் அதிகப்பட, ஊதியம் கொடுக்க முடியாமையினாலே மீண்டும் அரசு வரியை அதிகப்படுத்த, அதன் மூலமாக விலை ஏற, இப்படிச் செக்குச் சுற்றுவது போல சுற்றிக் கொண்டே இருக்கும் நிலை ஏற்படும் என்பதைப் பொருளாதார அடிப்படையில் கண்ணோட்டத்தைச் செலுத்துபவர்கள் நன்றாக அறிவார்கள் என்று நான் நம்புகிறேன். அது மட்டுமல்ல. வரி கூடக்கூட, எப்போதும் விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. உச்ச நிலையில் இருக்கிற மிகக் குறைந்த தொகையினரை அது பெரிதும் பாதித்து விடாது. மிகமிகத் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களையும் அது பெரிதும் பாதித்து விடாது. நடு நிலையில் இருப்பவர்கள்தான் எப்போதும் இதனால் அதிகச் சங்கடத்திற்கும் துன்பத்திற்கும், சிரமத்திற்கும் உள்ளாவார்கள் என்பதை நாம் உணர்வோம். இன்னும் சிறப்பாக, ஒரு நிலை—வருமானத்தை உடையவர்கள் இருக்கிறார்களே, ஒரு குறிப்பிட்ட தொகையையே மாதச் சம்பளமாகவோ, மாத ஊதியமாகவோ பெறுகிறவர்கள் இருக்கிறார்களே, அவர்கள் நிலைமை எல்லா வழியிலும் துயரத்தைத் தரும். அவர்கள் அரசாங்கத்திற்கு மேலும் மேலும் அதிக நிர்ப்பந்தத்தை உண்டாக்குவார்கள். ஏனென்றால் அவர்களுடைய வருமானம் வரையறைக்கு உட்பட்டது. அவர்கள் நிச்சயமாக கறுப்பு நிலையில் பணத்தை ஒதுக்கவோ, சம்பாதிக்கவோ முடியாது. அவர்களுடைய வருமானம் நேரடியாக ரூபாய் 100க்குக் கையெழுத்திட்டால், ரூபாய் 100 தான் சம்பளமாகக் கிடைக்கும். இன்கம் டாக்ஸ் முதலிய பல்வேறு வரிகளை அதிகமாக ஏற்றிக்கொண்டே போகின்றோமே, அவற்றையெல்லாம் கட்டிய பிறகு, ஆண்டுதோறும் இந்த நிலையான வருமானத்தை உடையவர்களின் கணக்கை ஒரு 10 அல்லது 12 ஆண்டுகளுக்கு எடுத்துப் பார்ப்போமானால், இறுதியில் அவர்கள் கையொப்பமிட்டு கொடுக்க வேண்டியவர்களுக்கு எல்லாம் கொடுத்துவிட்டு எஞ்சியதை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போகிறபோது, கையோடு கொண்டு செல்லும் தொகை ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே போகிறது என்பதை நாம் நன்றாக, தெளிவாக உணர வேண்டும். ஆகவே, இப்படிச் சிக்கல்கள் இல்லாமல், எப்படி நிலைமையைச் செம்மையாக்குவது என்பது பற்றி அரசு, சிறப்பாக நிதியமைச்சர் அவர்கள், கருணையோடும், அன்போடும் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

வரி போடுவது என்பது ஏதோ 10 சதம், 2 சதம், 1 சதம் என்று நாம் போடுகிறோம். ஆனால், சதம் என்பதை விரைவாக நம்மால் கருத்தில் கொள்ள முடியாது என்ற காரணத்தால், ஒரு ரூபாய் வரி போடுகிறோம் என்று உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். ஒரு ரூபாய் வரி போடுகிறோம். பண்டம் துய்ப்போருக்கு வருகிறபோது, 5 ரூபாய் அல்லது 6 ரூபாய் என்கிற அளவுக்கு அதிகப்படி விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அரசாங்கத்திற்கு வருகிற வருமானம் 1 ரூபாய்தான் என்றாலும், துய்ப்போர் இழக்கிற பணம் 5 ரூபாய். ஏனென்றால், திரும்பத் திரும்ப ஒவ்வொருவருடைய லாபமும் பண்டத்தின் விலையில் சேரும். ஹோல்சேல் நிலையிலிருந்து கடைசியில் விற்கிற அங்காடிக்கு வருகிறவரை எல்லா நிலையிலும் இடைத் தரகர்கள் பலரைத் தாண்டி வருகிற காரணத்தால் ஒன்று 6 மடங்காக, 7 மடங்காக மாறி வாங்குவோர் அல்லது

துய்ப்போர் தலையில் அந்த பாரம் சுமத்தப்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அது மட்டுமல்ல, மனித இயல்பு என்றும் சொல்ல மாட்டேன். ஆனால், அப்படி இயல்பாகிவிட்டது. பொய் சொல்வது என்பது மனித இயல்பு இல்லை. ஆனால், பொய் சொல்வது என்பது இயல்பு என்று சொல்லுகிற நிலைமைக்கு நாம் எல்லோரும் வந்துகொண்டிருக்கிறோம். நாட்டு வரி ஏற ஏற வரி ஏய்ப்பும் மனிதனைத் தூண்டிவிடும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது, மறுத்துவிடவும் கூடாது. வரி போடக் கூடாது என்று நான் சொல்லவில்லை. வரி எவ்வளவு வேண்டுமானாலும் போடலாம். ஆட்சியின் தேவைக்கு, நாட்டின் நிர்வாகத்திற்கு நாட்டின் பாதுகாப்பிற்கு வேண்டிய அளவு வரிகளைப் போடலாம். போடுகிற
4-20 p.m. போதே அந்த வரி தெளிவாக மக்களுக்குப் புலப்படுவனவாக அமைய வேண்டும். "இன்டைரக்ட் டாக்ஸ்" ஆக இருப்பது கூடாது என்று பல ஆண்டுகளாக நாம் எல்லாம் கூறிக்கொண்டே வந்திருக்கிறோம். இப்படி சில வரிகளைப் போட்டுவிட்டு, அந்த வரி துய்ப்போரிடமிருந்து வசூலிக்கப்பட மாட்டாது என்றால், வியாபாரிகள் எல்லாம் புண்ணியார்த்தமாக தர்ம சத்திரம் வைப்பது போல் சொந்தத்தில் இருந்து கொடுக்க முன்வர மாட்டார்கள் என்பது இந்த அமைச்சரவைக்கு நன்றாகத் தெரியும். நமக்கும் அது நன்றாகப் புலப்படும். "சேல்ஸ் டாக்ஸ்" என்று அதற்கென்று போடாமல், அதற்குத் தலை மேலேயே விலையை ஏற்றிவிடுவார்கள். மொத்தத்தில் 3 சத வீதம், 6 சத வீதம் என்று அதிகப்படுத்திவிடுகிறபோது, அது கனகச்சிதமாக வரும். ஆனால், அது இல்லாமல், விலையில் ஏற்றுகிறபோது ஒரு யூனிட் என்பது ஒரு ரூபாயிலும்; அல்லது $\frac{1}{4}$ ரூபாயிலும் வைத்திருப்பார்கள். அதாவது 5 காசு வரி கொடுத்தால், 10 காசு விலையில் ஏற்றிவிடுவார்கள். அல்லது 25 பைசா ஏற்றிவிடுவார்கள். இப்படித் துய்ப்பவர்களின் நிலை மிகவும் சிக்கலானதாக, சங்கடமானதாக அமைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனதினாலே இவற்றை எல்லாம் நாம் மிக நன்றாகக் கணித்துச் செயல்பட வேண்டும். இது என்னுடைய அடிப்படை வேண்டுகோள், அல்லது பிரார்த்தனை என்றுகூட நான் சொல்ல ஆசைப்படுகிறேன். இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், மக்கள் துயரத்தைச் சுலபமாக நாம் தீர்த்தவர்களாக மாட்டோம் என்பதை மனத்தில் கொள்ள வேண்டும் என்றும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, இந்த வரி போடுவது என்பதே செலவைச் சரிக்கட்ட முடியாத நிலை ஏற்படுவதினாலே வரவைப் பார்க்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே, நாம் இப்போது போடும் வரியை, மாற்றி, திருப்பி முதலில் தொடங்க வேண்டும். செலவிற்குத் திட்டத்தைப் போட்டுவிட்டு வரவிற்கு வழி என்ன என்று பார்க்கிறோம். வரவு எவ்வளவு என்று பார்த்து வரவிற்குத் தக்க செலவு என்று நாம் வரயறைப் படுத்திக்கொள்ள வேண்டும். தனி மனித வாழ்க்கையைப் போலத்தான் நாட்டின் வாழ்க்கையும், அரசின் அமைப்பும், எல்லாத் துறையும். ஆகவே செலவை நிர்ணயம் செய்துவிட்டு, பிறகு வரவிற்கு வழி தேடுவது செம்மையான முறையாக இருக்கமாட்டாது. கிராமங்களில் சொல்லுவார்களே, தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிப்பது என்று; அந்த மாதிரி ஆகிவிட்டது. இந்த ஆட்சியிலே அந்த நிலை ஏற்படக்கூடாது என்று விரும்புவதால் பரிவோடும்; அக்கறையோடும் நீங்கள் அதை வலுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். இன்னொன்று, இந்த வரிகளிலே புதிதாகப் போடப்படுகிற வரி; 1969–70-ம் ஆண்டு அசெஸ்மெண்டு, ஏற்கனவே வணிகவரி அல்லது விற்பனை வரி விதிக்கப்பட்டவர்கள், தங்களுடைய மொத்த வாணிகம் ரூ. 5 லட்சங்களுக்கு மேற்பட்டிருக்குமானால், $7\frac{1}{2}$ சதம் சர்சார்ஜ் கொடுக்க வேண்டுமென்று காணப்பட்டிருக்கிறது. இதில் பல்வேறு உதாரணங்களைக் காட்டலாம். ஆனால் நேரமில்லாத காரணத்தால்; எளிதாகத் தைக்கக் கூடிய ஒரு உதாரணத்தை மட்டும் நான் சொல்லிவிட்டு உட்காருகிறேன். அரசாங்கத்திற்கென்றோ, அரசாங்கத்தாராலோ நியமிக்கப்பட்ட ஏல விற்பனையாளர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் அரசாங்கத்திடம் எஞ்சியுள்ள பண்டங்களையோ—ஸ்கிராப் என்று சொல்லுகிறோமே—அப்படிப் பயனற்ற பண்டங்களையோ, அவற்றை எல்லாம் நீங்கள் ஏலத்தில் விற்று





விடுங்கள் என்று போட்டு விடுகிறார்கள். அவர்கள் ஏலத்திலே போடுகிறார்கள். அப்படிப் போடும்போது, அவர்கள் அந்தப் பண்டங்களுக்கு 3 சதமானம் வரி, சேல்ஸ் டாக்ஸ் போட்டு வசூலித்து விடுகிறார்கள். அவர்கள் பண்டங்களை விற்பனை செய்யவில்லை, வாங்கவுமில்லை, வேறு "பில்" போடவுமில்லை. அரசாங்கப் பண்டத்தைக் கொண்டுபோய் விற்கிறார்கள். விற்கிறார்கள் என்றால் கூட தவறு. ஏலம் போடுகிறார்கள். (சேல் பை ஆக்ஷன்.) இது தான் அங்கு நடக்கிறது. அதற்கு "சேல்ஸ் டாக்ஸ்". அவர்கள் வியாபாரம் பண்ணவில்லை. அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாக இருந்து ஏலம் போடுகிறார்கள். விற்பனை செய்கிறார்கள். இது மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது பிப்ரவரி வந்து முடிந்து விட்டது. இந்த மாதத்திற்கு வேண்டுமானால் சேர்த்து வாங்கிவிடலாம். போன 11 மாதங்களுக்கு அவர்கள் தலையிலே $7\frac{1}{2}$ பர்செண்ட் போடு என்றால், அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளாது, வாங்கியவர்கள் யாரோ தெரியாது, ஏலத்தில் எடுத்தவர்கள் காசைக் கொடுத்துவிட்டு வாங்கிக் கொண்டுபோய் விட்டார்கள். அவர்களிடத்திலும் வசூலிக்க முடியாது. இந்த நிலையில் இப்படிச் செய்வது ஏற்குமா என்பதை மட்டும் அரசு கவனத்தில்கொண்டு ஆராய வேண்டும். இத்தகைய முறை பொருந்துமா—இனிமேல் போடுவதானாலும், வரி போடுவது தாங்குமா, தாங்காதா என்பது வேறு—இது நியாயமா, சட்ட ரீதியா, ஏற்குமா என்பதை மனதில் கொள்ள வேண்டும். இந்த ஆண்டைப்பற்றிப் பேசாமல் அடுத்த ஆண்டு முதல் என்றால், அது சட்டபூர்வமானதாக இருக்கலாம், ஆனால் அறமானதா ? நேற்று சாப்பாட்டிற்கு இன்று வெஞ்சனமா என்று கேட்பார்கள். சென்ற ஆண்டு சாப்பிடக்கூடவில்லையே என்று கேட்டால், நான் நேற்று சாப்பிட்ட சாதத்திற்கு இன்றைக்கு பட்சணம் வேண்டுமென்று கேட்கிற முறையில் அல்லாமல், போடுகின்ற ஏற்பாடு முறையாக இருக்குமா என்பதைப் பரிவோடு சிந்திக்க வேண்டும். இதுதான் என்னுடைய வேண்டுகோள். இனி தேசிய உடமை. ஏதாவது சொன்னால் சுதந்திராக் கட்சிக்காரன் தேசிய உடமையை எல்லாம் எதிர்ப்பான்—இதை ஒரு கேலியாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள் எல்லாக் கட்சிக்காரர்களும்—என்று எங்கள் தலையிலே போட்டு விடுவார்கள். அதற்காக நான் கவலைப்படவில்லை. எது நியாயம் என்று நான் நம்புகிறேனோ அதை ஒளிவுமறைவின்றி எடுத்துச் சொல்லுவது என்னுடைய கடமை. தேசிய மயமாக்குவதையே நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. தேசிய மயமாக்குவது என்றால், எந்த ஒரு லட்சியத்திற்காக தேசியமயம் என்று பேசுகிறோமோ—தேசிய மயத்தினால் முன்னேற்றம் என்று சொல்லுவது, தனிப்பட்ட ஒருவனோ, அல்லது தனிப்பட்ட சிலரோ, பலரோ பெறும் லாபத்தை அரசு, அதாவது மக்கள் பெறுவதற்கு வழி வகை கிடைக்குமேயானால், அப்படிச் செய்வதற்கு முதலிலே நின்று அந்த வண்டியை இழுக்க முக்கணையிலே கழுத்தைக் கொடுக்க நான் தயார். ஆனால் தனியார் துறையிலே அவர்கள் செயல்பட்டு முறையோடு உழைத்து, லாபம் நிறையத் திரட்டி பல வழிகளிலே வருமான வரியாகவும், விற்பனை வரியாகவும், வேறு கட்டணங்களாகவும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் தந்ததற்குப் பிறகும் ஏராளமாக மிச்சப்படுத்தி, போனஸ் முதலியன வழங்கி, அதற்கு மேலே ரிசர்வ் பண்டு என்று சொல்லுகிறோமே அந்த எய்ப்பு நிதிக்கும் போடக்கூடிய நிலையிலே இருக்கிறது. தொழில் துறையை ஆட்சி ஏற்றுக்கொண்டு லாபம் வரவில்லை. அரசாங்கத்திற்கு வரவேண்டிய கட்டணங்கள் வரவில்லை. அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரிகள் வசூலாகவில்லை. அதோடு விட்டால் போதும். லாபம் இல்லாமல் தன்னைக் கட்டிக்கொண்டு போகிறோமா என்றால் அதுவுமில்லை. நட்டத்தில் வண்டியை ஓட்டுகிறோம். தனிப்பட்டவர்கள் லாபம் அடையக் கூடாது என்பதற்காக, அதை நிறுத்தி, அரசுக்கு வரவேண்டிய வருமானம் குறைந்து, மேலும் இப்படி நஷ்டமாக அமையும் நிலையில் செயல்படுவது யாருக்குப் பயன் என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். தனி மனிதன் கொள்ளையடிப்பதாகவே வைத்துக்கொள்வோம், கொள்ளையடிப்பதைத் தவிர்ப்பதற்காக நீங்கள் ஏராளமாக நட்டம் அடைவது என்றால், அது பொருந்தாத, பயன் தராத; அர்த்தமற்ற ஒரு காரியம் என்று நான் சொல்லுகிறேன். ஏதோ இந்த சோஷலிசம், நேஷனலைஸேஷன் என்று சொல்லுவ

தெல்லாம் காதுக்குச் சுகமாக இருக்கிறது, வாய்க்கும் ருசியாக இருக்கலாம். ஆனால் வாயைக் கடந்து போன பிறகு, வயிற்றைக் கெடுக்கிறது. வயிற்றுக்கு வேதனை உண்டாக்குகிறது, நோய் உண்டாக்குகிறது. வாய்க்கு மட்டும் ருசியாக இருக்கிறது என்றாலும்; அது உடலுக்கும், அதன் மூலம் வாழ்க்கைக்கும், உயிருக்கும் கெடுதியை உண்டுபண்ணுகிறது. அப்படித்தான், சோஷலிசம், நேஷனலைஸேஷன் என்றெல்லாம் பெயர் சொல்லி, நாளடைவில் ஸ்டேடிசமாக ஆகி, அதன் மூலம் பெரும் நட்டத்தை அடைந்து அதன் மூலமாக நாட்டின் வளம் குறைகின்ற நிலையில் வரியை ஏற்றி, அதன் காரணமாக விலை ஏறி மறுபடியும் அதிகமாக வரியை ஏற்றி இப்படியான ஒரு விஷச் சக்கரம் இருந்து வருவதை நீங்கள் பார்க்க வேண்டும். இது இருபது ஆண்டுகளாக நாம் காணுகின்ற உண்மை. இந்த நிலையில் எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளாமல் —எடுத்துக்கொண்டதைக் கூட நான் குறை சொல்லவில்லை—எடுத்துக் கொண்டதிலே எத்தனை துறையிலே இது வரையிலே லாபம் வராமல் இருந்தன ? அவைகளெல்லாம் என்னவோ சனியன் கையை விட்டுத் தொலைந்துபோனால் என்ன தப்பு ? சாதாரணமாக ஒரு வியாபாரி வெற்றிலை அல்லது இஞ்சி வாங்கி விற்றுக்கொண்டிருந்தான். இஞ்சி அழுகிக் கெட்டுப்போய் விட்டது ; பிரயோசனமில்லை என்றால்; இஞ்சியை விட்டு விட்டு கடலை வியாபாரம் தொடங்குகிறான். வெற்றிலை வியாபாரி வேறு வியாபாரத்திற்குப் போகவேண்டுமென்று விரும்புகிறான். அது மாதிரி குறைந்தபட்சம் வாணிபக் கண்ணோட்டத்தில் இதை எல்லாம் பார்த்தால் அரசுக்குத் தெரியும். அது தான் பயன் தரத்தக்கது, ஆட்சிக்கும், ஆட்சியினுடைய பெருமைக்கும் சிறப்பு தரக்கூடியதாக இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டிற்குத் திட்டங்கள் தேவை. இதை எல்லாம் ஈடுகட்டுவதற்காக நீங்கள் சொல்லும் காரண காரியங்கள், அல்லது ஈட்டுகின்ற வரிகள் இவற்றை எல்லாம்பற்றி இனியும் நன்றாகச் சிந்தியுங்கள். தலைநகர் சென்னை, நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் வடகோடியில் இருக்கிறது. கன்னியாகுமரி தென்கோடி. எதற்காக நம் மாநிலத்திலே இருக்கக்கூடிய பல்வேறு இலாகாக்கள் வடகோடியில் இருக்க வேண்டும் ? அதனால் அரசுக்கு ஆண்டுதோறும் எத்தனை லட்சம், அல்லது எத்தனை கோடி நட்டம் ஏற்படுகிறது ? உதாரணமாக பொதுப்பணித் துறை சென்னையிலே இருக்கிறது. வடகோடியிலிருந்துகொண்டு அது தென்கோடியிலிருக்கிற கன்யாகுமரிக்கு என்ன நன்மை செய்ய முடியும் ? எல்லா இலாகாக்களும் சென்னையில் தான் இருக்கின்றன. நாட்டிலே முக்கியமான தொழில்களெல்லாம் தெற்கே தான் இருக்கின்றன. அப்படி இருக்க, சென்னையிலே அந்தத் துறைகள் ஏன் இருக்க வேண்டும் ? திருச்சி, தஞ்சை, மதுரை இதுபோன்ற இடத்தில் வைத்து விடலாமே. இங்கே இருந்து கன்னியாகுமரிக்குப் போய்விட்டு மறுபடியும் சென்னைக்கு வருவது என்றால் எத்தனை தூரம் ? நடுநிலையில் வைத்துவிட்டால், எத்தனை கோடி மிச்சப்படும் ? எச். ஆர். அண்டு சி. இ. என்று சொல்லுகிறோமே அறநிலையத் துறை, அது இங்கே இருக்கிறது. எத்தனை கோயில்கள் இங்கே இருக்கின்றன?

4-30 p.m. இங்கே இருந்துகொண்டு இவர்கள் என்ன செய்வது ? நிறைய வருமானம் உள்ள கோயில்கள் எல்லாம் அங்கே இருக்கின்றன. ஏதோ ஒன்றிரண்டு தவிர வருமானம் உள்ள கோயில்கள், பெரிய கோயில்கள் இங்கு கிடையாது. எல்லாக் கோயில்களும் அங்கு இருக்கின்றன. இந்த அலுவலகங்களைத் தஞ்சாவூரிலே போடலாம் அல்லது திருச்சியிலே போடலாம். எதாவது ஒரு காரியம் என்றால், ஒருவர் தென் கோடியிலிருந்து இங்கே வர வேண்டியிருக்கிறது. இந்தமாதிரி அந்த அலுவலகங்களெல்லாம் ஒரு நடு இடத்தில் வைக்கப்பட்டுவிட்டால், ஒருவர் இவ்வளவு சங்கடப்பட வேண்டியது இல்லை என்று தான் நான் சொல்கிறேன். பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்ட், ஹெச். ஆர். சி. இ., கோ-ஆப்பரேசன், அக்ரிகல்சர், அனிமல் ஹஸ்பெண்டரி, எடியுகேஷன், பப்ளிக் ஹெல்த், போன்றவைகள் மத்திய பிராந்தியத்தில் எதோ ஒரு இடத்தில் இருந்தால், அந்தந்தத் துறையின் தலைவர்கள் இங்கு கூட்டம் நடைபெறுகிறபோது,



வந்து விட்டுப் போகட்டும். இந்தமாதிரி அந்த அலுவலகங்களையெல்லாம் அங்கு கொண்டுவந்து வைப்பதால், 20 கோடி ரூபாய்க்கும் மேலாக உள்ள பண விரயங்களைத் தவிர்த்து விடலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 20 கோடி என்று எப்படிச் சொல்கிறீர்கள் ?

**திரு. சா. கணேசன் :** முதலமைச்சர் அவர்கள் அதை இல்லை என்றும் சொல்லலாம், அல்லது இருக்கிறது என்றும் சொல்லலாம். எனக்கு உதவிக்கு செக்ரட்டரியோ, டெப்டி செக்ரடரியோ கிடையாது. 20 கோடி என்று சொல்வது வெறும் உத்தேசம் தான். உங்களோடு பழகுவதனால் ஊகிக்கமுடிந்த உத்தேசம். இதில் இந்த மாதிரி வரும் பணத்தைக் கொண்டு சென்னை நகரில் உள்ள தண்ணீர் கஷ்டம் போன்றவற்றைத் தீர்த்துவிடலாம். இந்த மாதிரிச் சொல்வதால் அதற்காக அத்தனை பணத்தையும் சென்னை நகருக்கே கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. எல்லா பிற நகரங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். ஒரு காலத்தில் 12 கோடிக்கு பட்ஜெட் போட்ட மாநிலம் இப்போது 200 கோடிக்கு வந்திருக்கிறோம். சேல்ஸ் டேக்ஸ் போட்டிருக்கிறீர்கள். அது வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் வரி விதிக்கக்கூடிய நேரத்தில் இன்றியமையாத பண்டங்கள் எவையோ அந்தமாதிரிப் பொருள்களுக்கு வரி விதிப்பது போன்றவற்றைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். சில பொருள்கள் என்னைப் பொறுத்த வரையில், இன்றியமையாத பொருளாக இராது. ஆனால் அதே பொருள்கள் மற்றவர்களுக்கு இன்றியமையாததாக இருக்கலாம். மொத்தத்தில் ஒரு பொருளுக்கு வரி விதிக்கும்பொழுது, அந்தப் பொருள் பெரும்பான்மையான பேர்களுக்கு இன்றியமையாததாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். பெட்ரோல் இன்றியமையாத ஒரு பொருள். எத்தனை ஏழைகள் அது உபயோகப்படுத்தப்படும் கார்களில் போய்க்கொண்டிருக்கிறார்கள் ? நான் ஜப்பான்காரர்களோடுப் பலகாலம் நெருங்கி பழகி இருக்கிறேன். அவர்கள் நாட்டில் இந்தமாதிரிப் பெட்ரோலின் விலையை ஏற்றுவது இல்லை. ஒரு தேசத்தின் வாணிபம் சிறக்க வழி என்ன என்பதை நமக்கு ஜப்பான் நல்ல முறையில் நிரூபித்துக் காட்டுகிறது. இவற்றை எல்லாம் நாம் பின்பற்ற வேண்டும் என்பதே என்னுடைய வேண்டுகொள். டைப்ரைட்டர், பெட்ரோல், மோட்டார் சீட்டுகள் போன்றவைகளுக்கெல்லாம் வரிகள் உயர்த்தப்பட்டிருக்கின்றன. இதனால் எல்லாம் பாதிக்கப்படக் கூடியவர்கள் யார் ? சாதாரண மக்கள் தான். உதாரணமாக மத்திய அரசால் ரெயில்வே கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் "பஸ்ட் கிளாஸ்" டிக்கட் எடுத்துக் கொண்டு போகிறவர்கள் யார்? அரசாங்க உத்தியோகஸ்தர்களெல்லாம் கவர்மெண்ட் செலவில் எங்கும் போய்விடுகிறார்கள். ஏதோ ஒரு சில பணக்காரர்கள் தான் "பஸ்ட் கிளாஸ்" டிக்கட் எடுத்துக்கொண்டு போகிறார்கள். ஆகையால் இந்த உயர்வால் உண்டாகும் அத்தனை சுமையும் திரும்பவும் நம் மேலேயே வரியாக வந்து சேர்கிறது. இவற்றை எல்லாம் மனதில் கொள்ளவேண்டும். சிமெண்ட் மீது வரி போடப்பட்டிருக்கிறது. அதே மாதிரி டிராக்டருக்கும் வரி போடப்பட்டிருக்கிறது. அதே மாதிரி பஸ்ஸின் வீட்டுக்கு 10 ரூபாய் கூடினால், அந்தப் பணத்தை டி. வி. எஸ்ஸோ அல்லது வேறு எந்த கம்பெனிக்காரரோவா கொடுக்கப் போகிறார்கள் ? நாம் தான், சாதாரண மக்கள் தான் அதைக் கொடுக்கப்போகிறோம். பஸ்ஸுக்கு 10 ரூபாய் அதிகம் போட்டால், அவர்கள் 12 ரூபாய் வரை மக்களிடம் வசூலித்து விடுவார்கள். இந்தமாதிரி அந்த பஸ் முதலாளிகள் லாபம் அடைவதற்கும் நாம் தான் வழி வகுத்துக் கொடுக்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அவர்கள் அந்தமாதிரி மக்களிடம் வசூல் செய்ய முடியாது.

**திரு. சா. கணேசன் :** அது எனக்குத் தெரியும். ஆனால் நான் அனுமானிக்கிறேன் அப்படி வரும் என்று. அதைச் செய்ய வழி இல்லை என்றால், பஸ்களை நிறுத்திவிடுவார்கள் என்று எண்ணு

கிறேன். ரேசர் பிளேடுக்குக் கூடுதல் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதை எல்லாம் லக்சூரி பொருள் என்று சொல்ல முடியுமா ? நம் மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதித்தனார், டாகூர் போனவர்கள் வேண்டும் என்றால், அப்படிச் சொல்லலாம். (சிரிப்பு) என்னைப் போன்றவர்கள் சொல்ல முடியாது. நான் மூன்று நாட்களுக்கு ஒரு முறை சவரம் பண்ணிக்கொளவேன். அப்படிச் செய்யாவிடில், ஒரு இன்பீரியாரிடி காம்ப்ளெக்ஸ் ஏற்படுகிறது. காட்டுமிராண்டி என்று சொல்வார்களோ என்பதற்காகத்தான் நான் சவரம் பண்ணிக்கொண்டு வர வேண்டியிருக்கிறது. இப்படி அதை எல்லாம் ஆடம்பரப் பொருள் என்று ஒதுக்குவது தர்மம் ஆகாது. நியாயம் ஆகாது. இதேமாதிரி இவற்றையெல்லாம் நாம் மனதில் கொள்ள வேண்டும். கடைசியில் பார்பர் ஷாப்புக்குப்போனால், கிராப் கட்டிங்குக்கு ரூ. 2 முதல் 4 வரை. ஷேவிங்கு ஒரு ரூபாய்க்குக் குறைவாக சென்னையில் கிடையாது. அந்த நிலைக்கு வந்தாய்விட்டது. அதைவிட சேப்டி ரேஸர் தான் சுலபம். பார்பர் ஷாப்புக்குப் போக முடியாத காலம். அவர்களுக்கு "சேல்ஸ் டாக்ஸ்" போடுகிறார்கள். பார்பர் ஷாப்புக்கு விற்பனை வரி போட்டதால், அதற்கு வரி சேர்த்து நாம் கட்ட வேண்டியிருக்கிறது. இது மாதிரி இல்லாமல் தாங்கக் கூடியதாக, பயன்உடையதாக அமையும்படி விற்பனை வரி தாங்கக்கூடியவனுக்குப் போடவேண்டும்.

7-00 p.m.

இனி 15 எக்கர் என்று நிலத்திற்கு உச்ச வரம்பு வந்திருக்கிறது. வரப்போகிறது என்று சொல்லுகிறார்கள். இன்னும் மசோதா சமர்ப்பிக்கப்படவில்லை. அமைச்சரவை சம்பந்தப்பட்டவரையில், வந்தாய்விட்டது என்று ஒப்புக்கொள்ளுகிறேன். தலை தாழ்த்தி ஏற்றுக்கொள்ளுகிறேன். இன்னும் எங்கள் முன்பாக வராததால் வரப் போகிறது என்று சொல்லுகிறேன். 15 எக்கர் என்று அடுத்த வருஷம் வந்துவிடலாம். இப்போது 30 எக்கர் என்று இருக்கிறது. பிள்ளைகள் பாகப்பிரிவினை ஆகும்பொழுது தற்செயலாக அது வந்துவிடும். இப்படி துண்டு போட்டுக்கொண்டே போனால், ஒரு காலத்தில் "கலக்டிவ் பார்ம், கோ ஆபரேட்டிவ் பார்ம்" என்று எல்லாம் சொல்லக்கூடிய நிலைக்குக் கொண்டு போய்விடும். முந்தைய அமைச்சரவை இருந்த பொழுது, நம் நாட்டில் நிலங்கள் துண்டாக இருக்கின்றன, அதை ஒன்றாகச் சேர்த்துவிட வேண்டும், அப்போது தான் நன்றாக உழுது பயிர் செய்யலாம், வரப்புகள் நிரம்ப இருப்பதால் இடம் போய்விடுகிறது, ஆகவே வரப்புகளே இல்லாமல் 200 எக்கருக்கு மேல் வரையில் வைத்திருக்கலாம் என்றெல்லாம் பேச கேட்டிருக்கிறோம். இப்படி நிலம் துண்டு போடப்பட்டால், நிலம் செம்மையாக இருக்குமா ? விவசாயம் பிழைக்குமா என்பதுபற்றி எல்லாம் சிந்திக்க வேண்டும். அதோடு 15 எக்கர் என்று சொல்லுவது என்ன முறை ? ஒரு ஐந்து பேர் அடங்கிய குடும்பத்திற்கும் 15 எக்கர், பத்துப் பேர் அடங்கிய குடும்பத்திற்கும் 15 எக்கர். ஒரு பிரும்மச்சாரியாக இருக்கிற குடும்பத்திற்கும் 15 எக்கர். ரொம்ப நன்றாக இருக்கிறது. எதையும் குறிப்பிட்டுக் காட்ட விரும்பவில்லை. எது சரியாக இருக்கும் என்பதுபற்றி ஆலோசனைகள் சொல்லுகிறோம். கோர்ட்டுக்குப் போக "ரைட்" இல்லை. ஆகவே சிந்திக்க வேண்டும். எங்கள் வீட்டில் 15 பேர்கள் இருக்கிறார்கள். ரேஷன் கார்டு 15 யூனிட். ஒரு ஆள் நான் இருக்கிறேன். ஒரு யூனிட் தருகிறார்கள். ஆனால் குடும்பத்துக்கு ஒரு யூனிட் என்று சொல்லுகிறார்கள். (குறுக்கீடு திரு கே. எஸ். மணி)—கடைசியில் கேளுங்கள். பதில் சொல்லுகிறேன். இது பொருந்துமா ? முறையாவது செம்மையாக இருக்குமா என்பதுபற்றி நாம் சிந்திக்க வேண்டும். நல்ல காலத்திற்கு எனக்கு ஒரு பரம திருப்தி. இவை எல்லாம் தனிப்பட்டவர்கள் உரிமையோடு இந்த அரசு நிறுத்தி இருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆலயங்கள், கல்லூரிகள், கல்விச் சாலைகள், அறக் கூடங்கள், இவற்றை எல்லாம் இந்த உச்ச வரம்பில் கொண்டு வந்து நிர்ப்பந்தப்படுத்தாமல் இருந்ததற்கு, இருப்பதற்கு, இருக்கப்போவதற்கு, இப்போதே நான் நன்றி தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். தனிப்பட்டவர்களுக்கும் தீமை வரக்கூடாது. வந்தால்கூட என்னைப் போன்றவர்களுக்கு அவ்வளவு வருத்தம் தேவை இல்லை. ஆலயங்கள் போன்ற



வை, பள்ளிகள் போன்றவை—ஆலயங்கள் என்றால் இந்து மதக் கோயில்கள் மட்டுமல்ல, எல்லா மதக் கோயில்களும், பள்ளிகள், அறச்சாலைகள், இவை போன்றவற்றிற்கு இருக்கின்ற நிலங்களுக்கு உச்ச வரம்பு வந்துவிடுமானால், தேசத்திலே நல்ல பணிகள், நல்ல பண்பாடுகள் வளருவதற்குப் பேர் இடையூறு ஏற்பட்டு விடும் என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் ஒன்று சொல்லுகிறேன். சோசலிசம் என்ற வார்த்தையில் இனிமை காண்கிறவர்களுக்குச் சொல்லுகிறேன். இதைவிட பெரிய சோசலிசம் இல்லை என்றுகூடச் சொல்லுகிறேன். அறக் கோவில்களில் தப்பு பண்ணலாம். தப்பு பண்ணுகிறவர்களைக் கணக்கிட்டால் எல்லா "சொசயட்டி லைப்" திட்டத்திலும் சமுதாய வாழ்க்கையிலும் தவறுகள் இருக்கும். தவறுகளைக் கணக்கிடுவது அல்ல நம் வேலை. அதனுடைய லட்சியம் என்ன, முறை என்ன, அதன் பணி என்ன, என்பதுபற்றி அதன் பெருமை சிறுமையையும் இழித்த தன்மையையும் கணக்கிடுகிறோம். அந்த நிலையில் மகோன்னதமான ஒரு நல்ல பொது உடைமைக்கு, கலை வளர்ப்புக்குப் பண்ணையாகத் திகழ்வது தூய அறக்கூடங்கள் தான்.. அவற்றிற்கு எந்த விதமான துயரமும் வராமல், இனியும் தக்க பாதுகாப்பை அருள வேண்டும் என்று ஆளும் கணத்தோரை, ஆட்சித்தலைவர்களை, நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இறுதியில் ஒரே ஒரு வேண்டுகோள். லாபம் என்பதை மட்டும் கருத்தில் கொண்டு நாம் காரியம் செய்யப்படாது. லாபமும் வேண்டும். ஆட்சி என்பது வெறுமனே தர்ம சத்திரம் நடத்துவது என்பது அல்ல. லாபமும் வேண்டும். பயன் பெரிது. லாபம் இல்லாமல் அப்பயன் கிடைத்தால் போதும். பயன் இல்லாமல் லாபமும் போய் நட்டமும் வருமானால் அடுத்த நிமிடமே சட்டி சுட்டது கை விட்டது என்றபடி அந்தத் துறையை உதறிவிட வேண்டியதுதான் ஆட்சியினுடைய திறமைக்கு, புத்திசாலித்தனத்துக்கு, நல்லெண்ணத்துக்கு அறம் கடைபிடித்தலுக்கு ஒரு ஒப்பற்ற ஹேதுவாகும் என்பதை நல்ல பர்வும் அன்பும் பரிதாபமும் உள்ளவர் என்ற ரீதியிலே இந்த அமைச்சரவைக்கு விண்ணப்பித்துக்கொண்டு தனித்துறைகளிலும் சென்று ஆங்காங்கு இருக்கிற ஓட்டைகளையோ, குறைகளையோ விஷயங்களையோ எல்லாம் குறிப்பிடாமல் மொத்தக்கணக்கிலே கனம் தலைவர் அவர்கள் மூலம் அமைச்சரவைக்கு என் கருத்துக்களைப் புலப்படுத்திக் கொண்டு எனது உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

**திரு. கே. எஸ். மணி :** தலைவர் அவர்களே, நம்முடைய சுதந்திரா கட்சி தலைவர் அவர்கள் நில உச்சவரம்புப் பற்றிக் குறிப்பிடும்போது ஒரு குடும்பத்திற்கு 15 எக்கர், 4 பேர் உள்ள குடும்பத்திற்கும் 15 எக்கர், பத்து பேர் இருக்கும் குடும்பத்திற்கும் 15 எக்கர். இது கொடுமை என்று சொன்னார்கள். நில உச்ச வரம்பு 15 எக்கர் என்று நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு விவசாயி குத்தகைதாரர் உச்ச வரம்பு என்ற பெயரால் ஐந்து எக்கரை உழுது பயிரிட்டு 60 சதவிகிதத்தைத் தான் எடுத்துக் கொண்டு 40 சதவீதத்தை நிலச்சுவான்தார்களுக்கு அளித்து விடுகிறார். அந்தக் குடும்பம் எப்படி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது ? அந்தக்குடும்பத்தையும் நாம் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறோம். நிலச்சுவான்தாரர்களுக்கு மட்டும் 15 எக்கர் வைத்து குடும்பம் நடத்த முடியாது என்றால், சுதந்திரா கட்சித் தலைவர் அவர்களை நான் பரிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன், இவர்களுடைய பிரச்னையைப் பற்றித் தங்கள் அபிப்ராயம் என்ன என்பதை சபையில் அறிவிக்க வேண்டும்.

**திரு. சா. கனேசன் :** கனம் உறுப்பினர் அவர்கள் கேட்ட வினாவிலேயே பதில் இருப்பதாக என் கருத்து. அதை விளக்குகிறேன். உழுகிறவர்கள் விளைச்சலில் 60 சதமானம் எடுத்துக்கொண்டு எஞ்சியுள்ள 40 சதமானத்தை நிலச்சுவான்தாரருக்குக் கொடுப்பதாக கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார். அதைப் பெறுபவர்கள் வரி முதல் எல்லாச் செலவையும் செய்த பிறகு, அவர்களுக்கு என்ன மிஞ்சும் என்பதைக் கணக்கிட்டால் அந்த 5 எக்கர் நிலத்தை உழுவதற்கு பாடுபட்ட சகோதரனுடைய நிலையை விட 15 எக்கர், 20 எக்கர் நிலம் வைத்திருக்கக்கூடியவர்களுக்கு

நிகராமாக வரக்கூடியது எஞ்சி நிற்கக்கூடிய அளவுக்கு நிகர் குறையும் என்பதை கனம் உறுப்பினர் அவர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள் என்பது தான் என்னுடைய பதில்.

**திரு. எம். எத்திராஜுலு :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தின் மீது எனது கருத்துரைகளைச் சொல்ல விரும்புகிறேன். இதில் 8½ கோடி ரூபாய் துண்டு விழுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே 6 கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது. "ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் வசதியைப் பெருக்குவோம், வரிகளைக் குறைப்போம்", என்பது தான் அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே முதல் முதலாகக் கூறப் பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் வந்தது முதல் வரி போட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். மறைமுகமாகவும் நேர்முகமாகவும் வரி போட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களிடத்திலிருக்கிற பேச்சுத் திறமையின் காரணத்தாலும், மக்களைச் சமாதானப்படுத்தும் முறையில் இருப்பதாலும், மக்கள் அதை ஏதோ ஒருவிதமாகச் சரிப்படுத்திக்கொண்டு போகிறார்கள் என்பதுதான் உண்மை. ஆனால் தெரிந்தவர்கள் நிச்சயமாக இது வரி போடுகின்ற அரசாங்கம்தான் என்பதையும், வரி போடாமல் அரசாங்கத்தை நடத்த முடியாது என்பதையும் நீண்டநாள் பேசி வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு நன்றாக உணர்ந்திருப்பதைப் பார்த்து சந்தோஷப்படுகிறேன்.

4-50 p.m.

அடுத்ததாக, சாதாரணமாக கிராமத்தில் குடியிருக்கிற மக்கள் வீட்டை எப்படியாவது கட்ட வேண்டுமென்று முற்படுகிறார்கள். நகரங்களிலிருந்து சிமிண்ட் வாங்கிக்கொண்டு போகிறார்கள். சிமிண்ட் போன்றவைகளுக்கு வரி போட்டால், கிராம மக்களை பாதிக்காதா ? கிராமத்தில் பரவலாக கிராம மக்கள் ரேடியோ வைத்திருக்கிறார்கள். அது ஆடம்பரப் பொருள் என்று சொல்லலாம். செல்வந்தர்கள்தான் அதை உபயோகிப்பார்கள் என்ற நிலைமை மாறி, கிராமங்களில் கூட உலக விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்காக ரேடியோ வாங்குகிறார்கள். கிராம மக்கள் வாங்கும் அந்த ரேடியோவுக்கும் வரி போட்டால், கிராம மக்களை பாதிக்ாதா ? நகர மக்கள் ரேடியோ வைத்திருப்பது வேறு. கிராம மக்கள் 90 சத விகிதத்தினர், இளைஞர்கள் முதற்கொண்டு பெரியவர்கள் வரை, கையில் ரேடியோ வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த வரியானது கிராம மக்களுக்கு நிச்சயமாக பாதகம் செய்யும் என்பதை நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**திரு. சி. பி. சிற்றரசு :** ரேடியோ அன்றாடம் வாங்குகிறார்களா ? ஆறு வருஷம், எட்டு வருஷம், பத்து வருஷத்திற்கு ஒன்றாக வாங்கு கிறார்களா ?

**திரு.எம். எத்திராஜுலு :** கிராம மக்கள் அன்றாடம் வாங்குவதில்லை அடுத்தபடியாக, டிராக்டர்களுக்கும் புல்டோசர்களுக்கும் வரி போட்டிருக் கிறார்கள். செல்வம் படைத்தவர்கள், நிலவச்சுவான்தார்கள் வாங்கு கிறார்கள். நாம் இப்போது ஏழைகளுக்கு நிலம் வழங்குகிறோம். அந்த நிலத்தை உழுது சமமாக்குவதற்கு புல்டோசர்கள் வேண்டியிருக்கின்றன. அவர்கள் அதை வாடகைக்குக் கேட்கும்போது, அதிகமான பணத்தை வசூல் செய்கிறார்கள். அப்போது கிராமத்திலுள்ள ஏழை விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அடுத்து, பஸ்ஸில் ஒரு சீட்டுக்கு 50 ரூபாயாக இருந்ததை 60 ரூபாய் ஆக்கியிருக்கிறார்கள். ஒரு சீட்டுக்கு ரூ. 10 கால் வருஷத்திற்கு அதிகம் போட்டிருக்கிறார்கள். இது ஏழைகளைத்தான் பாதிக்கிறது. பெரிய பணக்காரர்கள் யாரும் பஸ்ஸில் போவதில்லை காரில்தான் போகிறார்கள். ஏழைகள்தான் பஸ்ஸில் போகிறார்கள். அதிகமாக பஸ்ஸில் கட்டணம் உயர்த்தினால், யாரும் கேட்பதில்லை. அதைப் பற்றி ரிப்போர்ட் எழுதினாலும், அரசாங்கம் காதில் போட்டுக்கொள்வதில்லை. அப்படி ஏழைகளை பாதிக்கும் அளவில் பஸ் வரி போட வேண்டுமா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். அது நியாயமற்றது.



விலைவாசிகள் இன்னும் குறையவில்லை. புள்ளிவிவரத்தில் பார்த் தால், 1969-70-ல் 67 லட்சம் டன் அரிசி விளைந்திருப்பதாகக் காட்டியிருக் கிறார்கள். 3 கோடி மக்களுக்கும் ஒரு பவுண்டு அரிசி வீதம் போட்டால், 47 லட்சம் டன் போதுமென்றும் சொல்லப்படுகிறது. 3½ கோடி ஜனத் தொகைக்கு 1 பவுண்டு அரிசி வீதம் 53 லட்சம் டன் அரிசி போது மானது. அப்படியிருக்க பசுமைப் புரட்சி என்று சொல்கிற நேரத்தில், விளைவு அதிகமாயிருக்கிறது என்று சொல்லுகிற நேரத்தில், விளைந்த அந்த நெல், அரிசி எல்லாம் எங்கே பறந்து போயிற்று என்று தெரிய வில்லை. ஏன் அரிசி விலை உயர்ந்துகொண்டே போகிறது என்று தெரி யவில்லை. விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். நிதி அமைச்சர் அவர்கள் அரும்பாடுபட்டு நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். ஆனால் அதில் . விலையைக் குறைப்பதற்கான எந்த விதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்து, உச்ச வரம்பு வந்திருக்கிறது. அதில் 15 ஏக்கர் என்று வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிற்கும் பல்வேறு தரங்கள் இருக் கின்றன. நிலங்களெல்லாம் வெள்ளைக்காரன் காலத்தில் தரம் பிரிக்கப் பட்டன. அவர்கள் போட்ட "கிளாசிபிகேஷன்" தான் இது. ரூ. 10 முதல் ரூ. 15 வரை தீர்வை போடுவதற்கு ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர். 3 ஏக்கர் புஞ்சையின் விளைவு ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குச் சமம். அந்த மூன்று ஏக்கரில் கரும்பு, மணிலாக்கொட்டை விளைவைப் பார்க்கும்போது, ஸ்டாண் டர்டு ஏக்கர் விளைவைவிட அதிகமாக விளைகிறது. அந்த மாதிரி தரத்தைப் பார்த்து, இந்த உச்ச வரம்பைக் கொண்டு வந்தால், நன்றாக இருக்கும். அதைக் குறையாகக் கூறவில்லை. ஆங்கிலேயர்களால் தரம் பிரிக்கப்பட்ட நிலத்தை தற்போதுள்ள அரசாங்கம் தரம்பிரித்து நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்தால் நல்லது.

அடுத்து, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ரூ. 30 இடைக்கால நிவாரணம் கேட்டார்கள். 1960-ல் "பே கமிஷன்" ரிபோர்ட்படி ரூ. 9 முதல் ரூ. 15 வரையில் கொடுத்தார்கள். சராசரி ரூ. 10 எல்லோருக்கும் கொடுத்தார் கள். அதற்குப் பிறகு ராமுண்ணி மேனன் "பே கமிஷன் ரிபோர்ட்" படி 1965-ல் "பே கமிஷன்" போட்டிருக்க வேண்டும். அப்படிப் போடவில்லை. அதிலிருந்து இன்று வரை 1970-ம் வருடம் வரை கணக்கிட்டுப் பார்த்தா லும், ரூ. 30 வருகிறது. அதைத் தான் இடைக்கால நிவாரணமாகக் கேட்டார்கள். அது கொடுக்கப்படவில்லை. ஒன்றை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். மகாராஷ்ட்ரா, அரியானா, பஞ்சாப், கேரளா போன்ற மாநிலங்களில் "பே கமிஷன் ரிபோர்ட்" வந்து அமுல் நடத்தி வருகிறார் கள். "பே கமிஷன் ரிபோர்ட்" வரும்போது உத்தியோகஸ்தர்களுக்கு "ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட்" என்ற அடிப்படையில் சேர்த்துக் கொடுத் தால் தான் சரியாக இருக்க முடியும். அவர்களுடைய கஷ்டம் அப்போது தான் தீரும்.

அடுத்து, ஆசிரியர்களுக்குத் திருமணக் கடனாக ரூ. 500 கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் தான். ஏன் அவர்களுக்கு மட்டும் ரூ. 500 ? ஒரு கண்ணில் சுண்ணாம்பும் ஒரு கண்ணில் வெண்ணெயும் வைக்கலாமா ? சர்க்கார் உத்தியோகஸ்தர்களில் ஒரு சாராருக்கு ரூ. 2,000 கொடுப்பதும் மற்றவர்களுக்கு ரூ. 500 கொடுப் பதும் அவ்வளவு நல்லதல்ல என்று சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர் கள் தங்கள் ஓய்வு வயதை 58-லிருந்து 60 ஆக்க வேண்டுமென்று கேட்கிறார் கள். அஸ்ஸாமில் ஆசிரியர்களுக்கு ரிடையர்மெண்டே கிடையாது என்று சொல்லுகிறார்கள். அது அரசுக்குத் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். 60 வயது என்று வைப்பதால், என்ன கஷ்டம் ? அவர்களுடைய குறை களை எடுத்துச் சொல்கிற நேரத்தில், அவர்கள் எத்தனையோ கஷ்டங்களைச் சொல்கிறார்கள். அவற்றை அரசு ஆராய்ந்து பார்த்து அவர்களுடைய குறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, பிற்பட்ட வகுப்பினர்களுக்கு இந்த அரசு செய்திருக்கிற நல்ல காரியத்தை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. பிற்பட்ட இனத்திற் காக தனிப்பட்ட ஒரு இலாகாவை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்தோடு

அதற்காக ஒரு கமிஷன் ஒன்றைப் போட்டார்கள். அது ஒரேயிடத்தில் உட்கார்ந்து விட்டால் என்ன செய்வது ? அதைக் குறை சொல்வதாக எண்ணக்கூடாது.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அந்தக் கமிஷன் உட்கார்ந்து கொண்டிருக்கவில்லை. நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்து கருத்துக்

5-00 p.m களை அறிந்து வருகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்தக் கமிஷன் அமைப்பதற்கு முன்பே கூட பிற்பட்ட மாணவர்களுக்கு "ஸ்காலர்ஷிப்" அளித்து அதன் மூலமாக இந்த அரசு இரண்டு கோடி ரூபாய் இழப்பை இன்றைய தினம் ஈடு செய்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

**திரு. எம். எத்திராஜுலு :** நான் அதற்கான புள்ளிவிவரத்தைக் கூட கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். 1969-ல் 35,793 மாணவர்களுக்கு சம்பள உதவி செய்திருக்கிறீர்கள். இந்த வருடம் அதை புளாக்கினீர்கள். அதைப்பற்றி நான் சொல்லவில்லை. நான் கேட்பதெல்லாம் மொத்தம் எத்தனை மனுக்கள் வந்தன என்பது. மனுக்களின் எண்ணிக்கையைப் பார்த்தால், அதிகமாக இருக்கும். ஆனால் கொடுப்பதன் எண்ணிக்கையைப் பார்த்தால், வந்ததில் பாதி கூட இருக்காது.

**மாண்புமிகு திரு என். வி. நடராசன் :** வந்திருக்கிற மனுக்கள் அத்தனைக்கும் இந்த ஆண்டு உதவி சம்பளத்தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை வந்த மனுக்களில் ஒன்று கூட மிச்சமில்லை.

**திரு. எம். எத்திராஜுலு :** சென்ற ஆண்டு வந்தது மொத்தம் 35,793 தானா என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா என்று அறிய விரும்புகிறேன். கொடுப்பதைப் பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. இன்னும் எவ்வளவோ கொடுக்க வேண்டும் என்று தான் சொல்லுகிறேன். அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் அந்த இலாக்காவே வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதையே திருப்பித் திருப்பிச் சொல்வதற்காக வருத்தப்படுகிறேன். இந்த ஆண்டு எத்தனை மனுக்கள் அரசாங்கத்திற்கு வந்தனவோ அத்தனைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களிடம் எல்லாம் போய், "நீங்கள் மனு கொடுங்கள், நாங்கள் உதவுகிறோம்" என்று அரசாங்கம் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். எத்திராஜுலு :** பிற்பட்ட மாணவர்களுக்கு படிப்பில் இன்னும் சலுகைகள் அதிகம் தரப்பட வேண்டும். பரிட்சையில் தவறியவர்கள் மீண்டும் தேர்வு பெறுவதற்கு "நைட் ஸ்கூல்" வைப்பதற்கும், மற்றும் தேவைப்படும் சில சலுகைகளையும் செய்து தர ஏற்பாடு செயய வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்ளுகிறேன். உதவிச் சம்பளம் கொடுப்பதோடு இந்த இலாகா நின்று விட்டால், பிற்பட்ட இனத்தவர்களுக்கு ஒரு உதவியும் இல்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** பின் தங்கியவர்களுக்கு இந்த அரசு செய்கிற காரியங்களைக் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. எனவே அவருக்கு இந்த அவையின் மூலமாக மீண்டும் ஒரு முறை இதைப் பற்றிய வாசகங்களை எடுத்துக் கூறி நினைவுபடுத்துவது நல்லது என்று கருதுகிறேன். "கடந்த மூன்றாண்டுகளில் பின்தங்கிய வகுப்பினர்களின் நலனுக்கான முதலீடுகளை 1966-67-ல் ஒதுக்கியிருந்த 184 லட்சம் ரூபாயிலிருந்து 1969-70-ல் 314 லட்சம் ரூபாயாக இந்த அரசு உயர்த்தியுள்ளது. பின்தங்கிய வகுப்பினர்களுக்கு வழங்கப்படும் படிப்பு உதவிச் சம்பளங்களுக்கான தொகை 1966-67-ல் 94 லட்சம் ரூபாயிலிருந்து 1969-70-ல் 246 லட்சம் ரூபாய்க்கும் 1970-71-ல் 260 லட்சம் ரூபாய்க்கும் உயர்த்தப்பட்டுள்ளது. இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





**திரு. எம். எத்திராஜுலு :** நன்றி. நானும் புள்ளி விவரத்தைப் பார்த்தேன். 1968-69-ல் ரூ. 66 இலட்சமாக இருந்த தொகை பிறகு 126 இலட்ச ரூபாயாகி பிறகு 140 இலட்சமாகியிருக்கிறது என்று விளக்க உரையில் பார்த்தேன். அதைத் தான் சொல்லுகிறேன். அப்படி விளக்க உரையில் இல்லை என்று சொன்னால், நான் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து,. இன்னும் பிற்பட்ட இனத்தவர்களுக்கு ஐ.எ.எஸ். படிப்பிற்கு வேண்டிய உதவியைச் செய்தாக வேண்டும். மத்திய அரசாங்கத்திற்கு எழுதியாவது பின்தங்கியவர்கள் ஐ.எ. எஸ்., ஐ.பி.எஸ். படிக்க உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மீனவர்கள் பிரச்னை. எற்கெனவே காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது குறைந்த விலையில் மீனவர்களுக்கு விசைப்படகு "சப்ளை" செய்யப்பட்டது. ஆனால் இப்போது ஆயிரக்கணக்கான ரூபாய்கள் அதிகமாக ஆகிற அளவுக்கு ஒரு விசைப்படகு விலை நிர்ணயம் செய்து கொடுப்பது என் ஏற்பட்டது என்று எனக்குப் புரியவில்லை. எற்கெனவே கொடுக்கப்பட்ட விலையையும் இப்போது கொடுக்கப்படுகிற விலையையும் பார்த்து, இந்த விலையேற்றத்திற்குக் காரணம் என்ன என்று கண்டு பிடித்து, இதற்கு ஆவன செய்ய வேண்டும். அடுத்து, விசைப்படகில் சென்று மீன் பிடிப்பவர்களுக்கும் கட்டுமரத்தில் சென்று மீன் பிடிப்பவர்களுக்கும் அடிக்கடி சண்டை ஏற்படுகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இதில் அரசு என்ன செய்ய வேண்டும் என்று நான் கேட்கிறேன் என்றால், கட்டுமரத்தில் சென்று மீன் பிடிப்பவர்கள் எங்கே சென்று மீன்பிடிக்க வேண்டும், விசைப்படகில் சென்று மீன்பிடிப்பவர்கள் எங்கே சென்று மீன்பிடிக்க வேண்டும் என்று வரையறுத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சி.பி. சிற்றரசு :** அதற்கு கடலில் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வைக்க வேண்டும் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறாரா?

**மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து :** எற்கெனவே விசைப்படகில் சென்று மீன்பிடிப்பவர்கள் 3 மைலுக்கு அப்பால் சென்று பிடிக்க வேண்டும் என்றும், 3 மைலுக்கு உள்ளடங்கிய பகுதியில் கட்டுமரங்களில் சென்று மீன்பிடிப்பவர்கள் மீன்பிடிக்க வேண்டும் என்றும் நியதி இருக்கிறது. அதை மீறித் தான் சிலர் செல்கிறார்கள். அதனால்தான் தகராறும் ஏற்படுகிறது. அதையெல்லாம் தீர்த்து வைக்க மாநில அளவில் ஒரு குழுவையும் மாவட்ட அளவில் ஒவ்வொரு குழுவையும் அமைத்து, அவர்களுக்குள்ளாகவே இவைகள் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம்.

**திரு. எம். எத்திராஜுலு :** கடலுக்குள் ஒரு போலீஸ் ஸ்டேஷன் வைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இன்றைக்கு இந்த நாட்டில் இருக்கிற நிலைமையைப் பார்த்தால், வீட்டுக்கு வீடு ஒரு போலீஸ் ஸ்டேஷன் வைக்க வேண்டும். அப்படி வீட்டுக்கு வீடு போலீஸ் ஸ்டேஷன் வைத்தால் கூட, தி.மு.க. அரசின் காலத்தில் பயமின்றி வாழ முடியாது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மீனவர்களுக்கு எங்கெங்கே மீன்கள் நிறைய இருக்கின்றன, எங்கெங்கே மீன்பிடிக்கலாம் என்று தெரிந்து சொல்லுவதற்கு என்று ஒரு டிபார்டுமெண்டு இருக்கிறது. எங்கெங்கே மீன் அதிகமாக உற்பத்தியாகிறது என்றெல்லாம் பார்த்துச் சொல்ல வேண்டிய பொறுப்பு அவர்களுடையது. அப்படி மீனவர்களுக்குச் சரியான வழிகாட்டியாக அந்த இலாக்காவைச் சேர்ந்தவர்கள் நடக்காமல் அவர்கள் ஏதோ மீன் பிடிப்பது, கருவாடாக்குவது, அதை விற்பனை செய்வது என்று இப்படியே காரியமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எனவே அரசாங்கம் இதையும் கவனித்து அந்த இலாகா அவர்களுக்குச் சொல்லியிருக்கிற வேலையைச் செய்ய உத்திரவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மீன் பிடிப்பவர்களுடைய போட்டுகளை வைக்க சென்னையில் எண்ணூரிலும், தென்னாற்காட்டில் கடலூரிலும், திருநெல்வேலியில் தூத்துக்குடியிலும் கட்டுவதற்கு காங்கிரஸ் அரசாங்கம் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஏன் அது கைவிடப்பட்டது ? எதற்காக அவைகள் கட்டப்படவில்லை? ஏன் இன்னமும் அவைகளுக்கான வேலைகள் துவங்கப்படவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்து, காங்கிரஸ் ஆட்சியில் மீனவர்களுக்கு வீடுகட்டிக் கொடுத்தார்கள். இப்போது மீனவர்களுக்கும் வீடுகட்டிக் கொடுப்பது நிறுத்தப்பட்டு விட்டது. இனியாவது தொடர்ந்து வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அதுவும் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுத்தால் அரசாங்கத்திற்கு எவ்வளவோ பணம் மிச்சமாகும். வருஷாவருஷம் கடற்கரையில் மீனவர்கள் வீடுகள் புயல் காற்றிலும், தீயிலும், பாதிக்கப்படுவதினாலும் அரசாங்கம் அதற்கு நஷ்ட ஈடாகக் கொடுக்கும் சுமார் 50 லட்ச ரூபாய் மிச்சமாகலாம்.

கிராம வீட்டுப் பிரச்னை பற்றியும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது, நடுத்தர வகுப்பாக இருந்தாலும் சரி, உயர்ந்த வகுப்பாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் வீடு கட்டிக்கொள்ள பணம் தரப்படுகிறது. இதுபற்றி நான் ஏற்கெனவே கூட சொல்லியிருக்கிறேன. கிராமப்புறத்தில் யார் யாருக்கு வீடு கட்டிக்கொள்ளுவதற்கான சொந்த மனைகள் இருக்கின்றனவோ, அவர்களுக்காவது சர்க்கார் வீடு கட்டிக் கொள்ளுவதற்கு ரூபாய் 2,000 கொடுக்க வேண்டும். இந்த ரூ. 2,000த்துக்கு மேல் கொடுக்கமாட்டோம், உங்கள் பணத்தையும் போட்டு எப்படியாவது நீங்கள் வீட்டைக் கட்டிக்கொள்ளுங்கள், தற்போது இருப்பது போன்ற ஓலை வீடுகள் இல்லாமல் நல்ல வீடாகக் கட்டிக்கொள்ளுங்கள் என்று சொல்லுகிற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சர்க்கார் கொடுக்கிற இந்த 2,000 ரூபாய்க்கு அவர்கள் வைத்திருக்கிற மனையைக் கூட ஈடு போல் எழுதி வாங்கிக் கொள்ளலாம். இப்படிச் செய்வதன் மூலம் கிராம வீட்டுப் பிரச்னை பெரும் அளவில் தீர்ந்துவிடும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கும்போதே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்ளுகிற கூட்டத்தில் பெரும் தலைவர் திரு. காமராஜரைப் பற்றி மிகத் தரக்குறைவாகப் பேசப்படுகிறது. இப்படி தரக்குறைவாகவும், பொறுப்பற்ற முறையிலும், மட்டரகமாகவும் பேசினால், கூட்டத்தில் ஏன் கூச்சலும் குழப்பமும் ஏற்படாது ?

5-10 p.m.

**திரு. கே. எஸ். மணி :** "ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்" தலைவர் அவர்களே, திரு. காமராஜரைப் பற்றிப் பேசியது குறித்து சட்டமன்றத்திலே பேசலாமா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**டெபுடி சேர்மன் :** பொலிடிகல் பார்டி பற்றிப் பேசலாம். ஆனால் இன்டிவிஜுவல்களைப் பற்றிக் குறிப்பிடக் கூடாது.

**திரு. எம். எத்திராஜுலு :** பொறுப்புள்ள முதலமைச்சர் அவர்கள் மேடையில் அமர்ந்திருக்கும்போது, ஒருவரைப் பற்றித் தரக்குறைவாகப் பேசினால், கூச்சல், குழப்பம், இடையூறு ஏற்படும் நிலை ஏற்படுகிறது என்பதைத் தான் சொல்ல வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** உறுப்பினர் அவர்கள் நேரில் கேட்டு விட்டு இங்கே வந்து சொல்லுகிறாரா அல்லது பத்திரிகையில் அப்படிப்பட்ட செய்தி வந்து அதைப் படித்துவிட்டு இங்கே சொல்லுகிறாரா என்று விளக்கினால், நன்றாக இருக்கும்.

**திரு. எம். எத்திராஜுலு :** நேரடியாகப் பார்ப்பதற்கு எங்கே நேரம் இருக்கிறது ? பத்திரிகையில் வந்த செய்தியைக் கொண்டுதானே பேச வேண்டியிருக்கிறது. ஏறக்குறைய தமிழ்நாட்டில் 560 பத்திரிகைகள் இருக்



கின்றன என்று கருதுகிறேன். "Newspaper is the mirror of the world" என்று சொல்லுகிறார்கள். அதைத் தானே நாம் நம்ப வேண்டியிருக்கிறது. அது உலகத்திற்குக் கண்ணாடியாக இருக்கிறது.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** எந்தக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரைப் பற்றியும் தரக்குறைவாக எங்கள் மேடையில் யாரும் பேசுவதில்லை. அப்படிப் பேசினாலும், முக்கியமானவர்கள் அந்த மேடையில் இருந்தால், அதை அனுமதிப்பதில்லை. அதற்கு நூற்றுக்கணக்கான உதாரணங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவார்கள். ஆனால் இதற்கு மாறாக "அந்த" இடத்தில் தான் அப்படி நடக்கிறது.

**திரு. எம். எத்திராஜுலு :** முதலமைச்சர் அவர்களே இப்படிச் சொல்லும்போது இதை விட்டுவிடுகிறேன். ஆனால் பத்திரிகையில் பார்த்தேன். அப்படியெல்லாம் பேசினார்கள் என்று. தரக் குறைவாகப் பேசினார்கள் என்று செய்தி வந்ததால் தான், முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இங்கே கொண்டு வந்தேன்.

அடுத்து, மொழிப் பிரச்னையில் திட்டவட்டமான ஒரு கொள்கையை நாம் கடைபிடிக்க வேண்டும். இப்போது மாணவர்களுக்கு இருக்கிற பிரச்சினையே ஒன்று மொழிப் பிரச்னை, மற்றொன்று வேலையில்லாப் பிரச்னை. ஒவ்வொருவரும் சொல்லுகிறார் நீங்கள்தான் தூண்டிவிடுகிறீர்கள். இவர்கள்தான் தூண்டிவிடுகிறார்கள் என்று. இப்போது நடுவில் இருக்கிற இதுவும் சேர்ந்து 3 பேராகத் தூண்டிவிடுகிறார்கள். இதற்கு ஒரு முடிவு காண வேண்டாமா ? முதலமைச்சர் அவர்கள் மிகவும் பின்தங்கிய சமூகத்திலேயிருந்து வந்தவர்கள். இந்தப் பிரச்னைக்கு அவர் ஒரு முடிவு கட்டியாக வேண்டும். "இங்கிலீஷ் எவர், இந்தி நெவர்" (English ever, Hindi never) என்று சொல்லப்பட்டது. மொழி பற்றிய 17-வது பிரிவு கொளுத்தப்பட்டது . . . .

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொழிக் கொள்கை என்று சொன்னார்கள். அவர்கள் சார்ந்திருக்கிற அரசியல் கட்சியினுடைய மொழிக்கொள்கை என்ன, அல்லது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கொள்கை என்ன என்பதைச் சொல்லிவிட்டு, நாம் எந்தக் கொள்கையை அனுசரிக்க வேண்டுமென்று சொன்னால், நன்றாக இருக்கும். இன்றைக்கு மொழிக் கொள்கை, மொழிக் கொள்கை என்று தீவிரமாகப் பேசுவதைக் காட்டிலும், அதைச் சொன்னால் எங்களுக்கும் தெரிந்துகொள்வதற்கு நலமாக இருக்கும்.

**திரு. எம். எத்திராஜுலு:** எங்களுடைய மொழிக் கொள்கையைப் பற்றி எங்கள் கட்சியினுடைய தலைவர் அவர்கள் விளக்கமாகச் சொல்லிவிட்டார்கள். (சிரிப்பு) தலைவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், இந்தி மொழி சம்பந்தமாக இந்தி பேசாத மக்கள் விரும்புகிற வரை, நேரு சொன்ன வாக்குறுதி சட்டமாக்கப்பட வேண்டும். இது தான் எங்கள் கொள்கை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** என்ன வாக்குறுதி என்று கேட்கிறேன்.

**திரு. எம். எத்திராஜுலு :** ஹிந்தி பேசாத மக்கள் விரும்பாத வரை, அதாவது இந்தி வேண்டாமென்று சொல்லுகிறவர்கள் விரும்பும் வரை, இந்தி வரக் கூடாது. அது தான் கொள்கை. அதைத்தான இன்றைக்குச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் நம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்தியோடு, ஆங்கிலமும் வேண்டும் என்று சொல்லுபவர்களுக்கு தமிழகத்தில் இருக்கிற பள்ளிக்கூடத்தில் இடம் கிடையாது என்று இந்த ஆட்சியில் சொல்லப்பட்டிருக்கிறது. அதைத் தான் தீர்மானமாக நிறைவேற்றினார்கள். இதற்கு என்ன அர்த்தம் ? அதுவே இப்போது பாடமாக வந்து விடுகிறதே. இப்போது நேரு சொன்ன வாக்குறுதியைச் சட்டமாக்க வேண்டும் என்று தீர்மானம் போடுகிறீர்கள்.

[2nd March 1970

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது இன்னும் புரியவில்லை. திட்டவட்டமாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய—உங்களுடைய காங்கிரஸ் எந்த காங்கிரஸ் என்று தெரியாது, எந்த காங்கிரஸானாலும்—கொள்கை என்ன ? நண்பர் அவர்களுடைய கொள்கை காங்கிரஸ் கொள்கை இல்லாமல் கூட இருக்கலாம். உங்களுடைய கொள்கை என்ன ? நாங்கள் எதைக் கடைபிடிக்க வேண்டுமென்று சொன்னால் பரவாயில்லை. நீங்கள் சொல்லுவது ஒன்றும் புரியவில்லை.

**திரு. எம். எத்திராஜுலு :** நீங்கள் கேட்பதை, சிண்டிகேட்டா, இண்டிகேட்டா என்று கேளுங்களேன். அதை விட்டு விட்டு எங்கள் மொழிக் கொள்கை என்ன, இந்தக் கட்சியா, அந்தக் கட்சியா என்றும், அந்தப் பிரிந்து சென்ற காங்கிரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்று என்பதை உலகமே புரிந்து கொண்டுவிட்டது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நேருவினுடைய உறுதிமொழி காப்பாற்றப்பட வேண்டும். அது தீர்மானமாக்கப்பட வேண்டுமென்று தலைவர் திரு. காமராஜ் அவர்கள் சொல்லுவது தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையா, அல்லது அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கையா ?

**திரு. எம். எத்திராஜுலு :** அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் என்ற முறையிலே அப்போதிருந்தே சொல்லிக்கொண்டு வருகிறார். அப்போது யாருடைய கொள்கை என்று நீங்களே தெரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த திரு. காமராஜ் அவர்கள் சேலம் மாணவர் மாநாட்டிலிருந்துதான் சொல்லுகிறார். மாணவர்கள் தான் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். நேருவினுடைய 'உறுதி மொழி சட்டமாக்கப்படவேண்டுமென்று. திரு. காமராஜ் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலேயே தீர்மானம் கொண்டு வரலாமே.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அவர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்ததிலிருந்தே பல முறை சொல்லிக்கொண்டு வந்திருக்கிறார். தினசரி பத்திரிகைகளில் வந்துகொண்டே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் என்ற முறையில் சொல்லுவது வேறு. நேற்று கூட உச்சவரம்பு சட்டத்தைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் ஒரு அறிக்கை விட்டார். அதே நேரத்தில் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் திரு. காசி ராமன் அவர்கள் என்னுடைய சொந்தப் பொறுப்பில் இதைச் சொல்லியிருக்கிறேன் என்று அறிக்கை விட்டிருக்கிறார். சொந்தப் பொறுப்பு கட்சியினுடைய கொள்கை ஆகாது. திரு. காமராசருடைய கொள்கை கட்சியினுடைய கொள்கை ஆகிவிடாது. காங்கிரஸ் கட்சியில் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள் என்றால் புரிந்துகொள்ளலாம்.

**திரு. எம். எத்திராஜுலு :** இந்த மொழிக் கொள்கையில் திரு. காமராஜ் என்ன சொல்லுகிறாரோ அது தமிழ்நாடு காங்கிரசின் அடிப்படை. அது தான் எங்களுடைய கொள்கை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு. காமராசர் என்பது தமிழ் நாடு காங்கிரஸ் மட்டும் தானா, அல்லது நிஜலிங்கப்பா, ராம்சுபாக் சிங், மொரார்ஜி தேசாய் சேர்ந்துள்ள அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கும் காமராஜ் காங்கிரசுக்கும் தொடர்பு உண்டா இல்லையா ?

. **திரு. எம். எத்திராஜுலு :** உண்மையில் யாருடைய கொள்கை என்றால், திரு. காமராஜ் அவர்கள் காங்கிரசைக் கட்டி வளர்த்தவர். அவர் சொல்லுகிறார், தமிழகத்தில் பொதுமக்கள் விரும்பும் வரை இந்தி வரக்கூடாது என்று.



2nd March 1970]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திரு. காமராசர் இன்றையதினம் காங்கிரஸ் கட்சியில் உயர் நிலையில் இருக்கிறார். திரு. காமராசர் சொல்லுவதை ராம்சுபாக் சிங், மொரார்ஜி தேசாய் அல்லது மேல் மட்டத்திலே இருக்கிற அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் மதிக்கிறார்களா, இல்லையா ?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** இப்படி காங்கிரஸ் கட்சியில் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டுதான் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய மொழிக் கொள்கையை தீர்மானிக்கக் காத்துக்கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முப்பதாண்டு கால மொழிச் சரித்திரம் உண்டு (கை தட்டல்). திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை 30 ஆண்டு காலமாக நடத்திக் கொண்டு வருகிறது. அதற்குப் பொருந்தாத ஒரு கொள்கையை திரு. காமராசர் அவர்களும் திரு. எத்திராஜுலு அவர்களும் சொல்லுகிறார்களே என்பது தான் எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

**THIRU G. VASANTHA PAI : On a point of order. Is it material for a discussion on the Budget ?**

**திரு. எம். எத்திராஜுலு :** ஆகவே இந்த மொழிப் பிரச்னையில் திட்டவட்டமான ஒரு முடிவு தெரியவில்லை. இன்று மத்திய அரசு உங்களுடைய ஆதரவை நம்பி இருக்கிறது. ஆகவே இது தான் நேரம். இந்த நேரத்தை நழுவவிட்டால், இந்த விஷயத்தைப் பற்றி பிறகு கேட்க முடியாது. ஆகவே இதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் சொல்லுவது காங்கிரஸ்காரர்களாகிய எங்களுக்குள் சண்டை இருக்கிறது, இந்தச் சண்டையை பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்கிறார். மத்திய அரசு எங்களுடைய ஆதரவை நம்பி இருப்பதால் இந்திராகாந்தி அரசைக் கவிழ்ப்பதற்கு நாங்கள் அந்தச் சண்டையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கருதுவீர்களானால், இந்த மொழிப் பிரச்னையை நீங்கள் பயன்படுத்திக்கொள்ளுங்கள். பாராளுமன்றத்தில் இருக்கிற காங்கிரஸ்காரர் அத்தனை பேரும் நீங்கள் கொண்டு வருகிற மொழித் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பார்களானால், சுதந்திராக் கட்சியும் தயாராக இருப்பார்கள். "நல்ல சமயமடா, இதை நழுவ விடுவாயோ" என்பது போல அங்கு நீங்கள் கொண்டு வருகிற மொழித் தீர்மானத்தை சுதந்திராக் கட்சியினரும் ஆதரிப்பார்கள். பாராளுமன்றத்திலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 25 பேரும் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் தயாரா ?

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இந்தப் பிரச்னையில் இவ்வளவு பெரிய விவாதம் நடந்திருக்க வேண்டிய அவசியமில்லை. தலைவர் திரு. காமராஜ் அவர்கள் சிறந்த முறையிலே கொஞ்சமும் சந்தேகமில்லாமல், தன்னுடைய நோக்கத்தையும், காங்கிரசினுடைய நோக்கத்தையும் தெளிவாகக் கூறி விட்டார்கள். காங்கிரசின் அடிப்படைக்கொள்கையே மொழிப் பிரச்னை விஷயத்தில் நேரு சொன்ன வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பது தான். காங்கிரஸ் கட்சியின் கொள்கையும் அதுதான். தமிழகத்தில் திரு. காமராஜ் அவர்களுடைய கொள்கையும் அதுதான். திராவிட முன்னேற்றக் கழகமும் எங்களோடு சேர்ந்து ஒத்துழைத்து நேரு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்றுதான் திரு. காமராஜ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்கள் கொண்டு வரக்கூடிய தீர்மானம் வந்தால, எங்களுடைய ஒத்துழைப்பும் இருக்கும். அதை ஆதரிப்பதற்கு நாங்கள் எப்போதுமே பின் வாங்கமாட்டோம். அதுதான் எங்களுடைய தீர்மானம் என்பதைத் தலைவரவர்கள் தெளிவாகக் கூறி விட்டார்கள். இந்தச் சபையில் முதலமைச்சர் அவர்களுக்குத் தெளிவாக அதை விளக்கமாகக் கூறிக் கொள்கிறேன்.

[2nd March 1970

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைத் தான் திருப்பித் திருப்பிக் கேட்கிறேன். காங்கிரஸ் கொள்கை என்றால், தமிழ் நாடு காங்கிரஸ் கொள்கையா, அகில இந்திய காங்கிரஸ் கொள்கையா ?

**திரு. கே. ராஜாராம் :** காங்கிரசைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு காங்கிரஸ் கொள்கை, அகில இந்திய காங்கிரஸ் கொள்கை என்று இரு கொள்கை ஒன்றும் கிடையாது. அகில இந்திய காங்கிரஸ், தமிழ் நாடு காங்கிரஸ் எல்லாம் ஒன்றுதான். அதைப் பிளவு படுத்த நினைக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சேலத்திலே தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய உடனே நிருபர்கள் திரு. காமராசர் அவர்களைச் சந்தித்துக் கேட்டபோது, தனிப்பட்ட முறையில் ஆதரிப்பாகச் சொன்னார். அதைப் பற்றி, தனிப்பட்டவர்கள் ஆதரிப்பதை கட்சி ஏற்றுக் கொண்டாக வேண்டியதில்லை என்று சட்ட மன்றத்தில் மொரார்ஜி தேசாய் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குச்சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எம். எத்திராஜுலு :** அடுத்து, இப்போது என் மீது போலீஸ் கடந்த 1-2-1970-ல் தடியடிப் பிரயோகம் செய்தது பற்றி கோர்ட்டில் "கேஸ்" இருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். நான் அதைப் பற்றிப் பூராவாக எடுத்துக் சொல்வதற்கு இடமில்லாமல் இருக்கிறது. இருந்தாலும் நான் மனிதாபிமானத்தில் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இந்தச் சபையின் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் எப்படி இவ்வளவு நாள் காத்து வந்தீர்களோ, அது போல இந்த சபையின் அங்கத்தினர்களின் மரியாதையையும், மதிப்பையும் அரசு காக்க முன் வர வேண்டும். இந்த சபையின் அங்கத்தினர்களை போலீசார் காரணமின்றி, கட்டுப்பாடின்றி தடியால் அடித்து காலை ஒடிப்பது, காலை வெட்டுவதுதானா இந்த ஆட்சியின் சாதனை என்று கேட்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவரவர்களே, "பாயின்ட் ஆப் ஆர்டர்", சமாசாரம், விவகாரங்கள் அத்தனையும் கோர்ட்டுக்குச் சென்று விட்ட பிறகு இங்கே பேசுவது சட்டத்திற்கு விரோதம். "சப்-ஜுடிஸ்" என்று சொல்லுகிறார்களே, அது இங்கே இருக்கிறதா, இல்லையா ?

5 20 p.m. DEPUTY CHAIRMAN : When the matter is *subjudice*, it should not be talked about in the Legislative Council. The hon. Member can have only a private talk.

**திரு. எம். எத்திராஜுலு :** நான் அதைப்பற்றி அதிகமாகச் சொல்லவில்லை. நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, நாங்களும் சரிசமமாக இந்த மன்றத்தில் உட்கார்ந்து இந்த நாட்டை ஆளத் தகுதி பெற்றவர்கள் என்று தானே மக்கள் தேர்ந்தெடுத்து இந்த மன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். மந்திரி பதவி இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்த மரியாதை கூடவா போய் விடுகிறது ? நாட்டிலே மிகக் கேவலமாகப் பேசப்படுகிற நிலையை ஏற்படுத்தி விட்டீர்கள். மிகக் கருணையோடு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களோடு சரி சமமான அந்தஸ்தோடு இங்கே உட்கார்ந்து கொண்டு பணியாற்றுபவர்கள், அப்படிப்பட்ட ஒரு சட்டசபை அங்கத்தினரால் நாட்டிலே கலவரம், கஷ்டங்கள், பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுகிறது என்றால், அவரைக் கைது செய்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் அன்றைய தினமே எதிர்க் கட்சித் தலைவரவர்கள் இந்தப் பிரச்சினையை கிளப்பிய நேரத்தில் இந்த சம்பவம் ஏற்பட்டது வருந்தத் தக்கது, அதுவும் என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் தாக்கப்பட்டது வருத்தத்திற்குரியதாகும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே தாக்கப்பட்டார் என்பதற்கு நாம் அனைவரும் உணர்ச்சி பூர்வமாக வருந்துகிறோம். ஆனால் இப்படி தாக்கப்பட்ட சம்பவத்திற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றி வழக்கு நீதி மன்றத்தில் இருப்பதால் இங்கே நாம் பேசவேண்டாமென்று அன்றைக்கே சொன்னேன். இப்போது நாமெல்லாம் ஒன்றாக இருந்தோம் என்று திரு. எத்திராஜுலு அவர்கள் கூறுகிறார்கள். நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒரு மாதத்திற்கு முன்பு எங்களோடு ஒன்றாக இருந்தவர் ஒருவர் கூட்டம் போட்டால், அவர் மீது செருப்பையும், கல்லையும் வீசி எறியலாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. எம். எத்திராஜுலு :** இந்த விஷயத்திற்காக முதல் அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கூட்டி ஒரு விசாரணை நடத்த வேண்டும். உண்மை என்ன என்று தெரிந்து நீங்கள் நடவடிக்கை எடுக்கத் தவற வேண்டாம். உங்கள் ஆட்சி நல்ல ஆட்சி. அதற்குக் களங்கம் ஏற்படக் கூடாது. அங்கத்தினர்களையே இன்றைக்கு மிருகங்களை அடிப்பது போல அடிக்கிறார்கள். இந்த மாதிரிச் செய்கைகள் இனிமேல் நடக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The hon. Member need not go into details of the case. It is *sub judice*. The hon. Member may better pass on to the next subject.

**திரு. எம். எத்திராஜுலு :** நான் சொல்கிறேன், என்னுடைய காலை நீங்கள் பாருங்கள். நான் கூறிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அதிலிருந்து நீங்களே புரிந்து கொள்ளுங்கள். இன்றைக்கு என் தி.மு.க. ஆட்சியில் இருக்கிறது ? இந்திப் போராட்டம் நடந்த காலத்தில் அன்றைக்கு மக்கள் கொதித்து எழுந்தார்கள். இதை ஒடுக்க அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் மக்களை ஆடுமாடு போல் அடித்தார்கள். சுட்டுத் தள்ளினார்கள். அதனால் காங்கிரஸ் ஆட்சி ஒழிந்தது. அதை விட பன்மடங்கு தி.மு.க. ஆட்சி மக்களை ஆடுமாடு போல் நூற்றுக்கணக்கானவர்களை அடித்து கைகால் ஒடிந்திருக்கிறது. இதைப் போல் நடந்தால் தி.மு.க. ஆட்சி ஒழிந்தே தீரும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த அளவுக்குக் கொடுமை செய்ததற்கு அந்த ஆட்சி வருந்தாத காரணத்தினால் தான் அந்த மாதிரி ஏற்பட்டது. நாங்கள் உங்களுக்கு நடந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்திருக்கிறோம்.

**திரு. எம். எத்திராஜுலு :** அதைப்பற்றி இன்னும் சொல்கிறேன். முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு நீதிவிசாரணை இல்லாவிட்டாலும் கூட, இங்கே இருக்கிற சர்வ கட்சி அங்கத்தினர்களை நீங்கள் அனுப்பி விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாக கோர்ட்டில் "கேஸ்" போடப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் இலாகாதான் போட்டிருக்கிறது.

DEPUTY CHAIRMAN : It is quite against Parliamentary rules. I may just request the hon. Member to pass on to the next point.

**திரு. எம். எத்திராஜுலு :** வருத்தம் தெரிவித்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி வருத்தம் தெரிவித்ததால் எனக்கு ஏற்பட்ட பாதி கஷ்டம் போய்விட்டது.

DEPUTY CHAIRMAN : The hon. Member must stop. He must proceed to the next point.

**திரு. எம். எத்திராஜுலு :** இந்த விஷயத்தில் நீங்கள் மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டும். போலீஸ் அதிகாரிகள் கூறுவதை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1970-71 ஆண்டுக்கான பட்ஜெட் விவாதத்தின் மீது என்னுடைய கருத்தினைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க. ஆட்சியிலே முன்பு சமர்ப்பித்த 2 பட்ஜெட்டுகளுக்கும் இந்த பட்ஜெட்டுக்கும் பெரும் வித்தியாசம் இருக்கிறது. முன்பு 2 வரவு செலவுத் திட்டங்கள் சமர்ப்பித்த காலத்திலே எந்தவிதமான வரியும் போடப்படாத வரவு செலவுத் திட்டங்களாகச் சமர்ப்பித்தார்கள். ஆனால் இன்றைய வரவு செலவுத் திட்டத்திலே 6 கோடி ரூபாய்க்கு வரியினை விதித்திருப்பது ஒரு பெரிய மாறுதலுக்குரிய விஷயமாக இருக்கிறது. முன்பு சமர்ப்பிக்கப்பட்ட 2 பட்ஜெட் கூட்டத்திலும் இந்த ஆட்சியாளர்கள் தங்களின் வரவு செலவுத் திட்டங்களை மிகவும் பாராட்டுதலுக்குரியது என்றும், பெரிய சாதனை என்றும் பேசினார்கள். ஆனால் அண்ணா மறைந்த பிறகு, அவருடைய வழியைப் பின்பற்றக் கூடியவர்கள் அவர் இறந்த வருடத்தில் இந்தமாதிரி ஒரு வரவு செலவுத் திட்டத்தைப் போட்டது வருந்தத்தக்க ஒரு விஷயமாகும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பொதுவாக நாம் பார்க்கக் கூடிய நேரத்தில் இந்த விற்பனை வரியினால் பாதிக்கப்படக் கூடியவர்கள் ஏழைகள் தான் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ரேடியோ, கடிகாரம் போன்ற பொருள்களுக்கெல்லாம் விற்பனை வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த ரேடியோ, கடிகாரம் போன்ற அத்தியாவசியமான பொருள்களெல்லாம் வசதி படைத்தவர்கள் மட்டுமா உபயோகிக்கக் கூடிய பொருள்கள் ? சாதாரண ஏழை மக்களும் தான் அவைகளை உபயோகிக்கிறார்கள். அடுத்தபடியாக, சிமெண்டு போன்ற பொருள்களுக்கும் விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். டிராக்டர் போன்ற அத்தியாவசியமான விவசாய சாதனங்களுக்கும் வரியை உயர்த்தியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையைப் பார்க்கும்பொழுது, இந்த நாட்டில் சோஷலிசம் பேசிக் கொண்டு இந்த ஆட்சி இப்படி வரி விதிக்கிறதே என்ற எண்ணம் தோன்றுகிறது. பொதுவாக, வரி விதிப்பது என்பது அத்தியாவசியம் என்று ஏற்றுக்கொண்டு பார்த்தாலும், இந்தமாதிரி மாநில, மத்திய வரி விதிப்பால் பாதிக்கப்படக்கூடியவர்கள் இந்த நாட்டிலுள்ள சாதாரண ஏழை மக்கள் தான். என்னென்ன பொருள்கள் சாதாரண மக்களால் உபயோகிக்கப்படுகின்றனவோ அவற்றுக்கெல்லாம் விதி விலக்கு அளித்திருக்க வேண்டும். 250 ரூபாய்க்குக் குறைந்த விலையுள்ள ரேடியோக்களுக்கு வரி விலக்கு அளித்திருந்தாலும், சாதாரண மக்களை இந்த வரி விதிப்பு பாதித்திருக்காது. ஆனால் 250 ரூபாய்க்கும் குறைவான விலையுள்ள ரேடியோக்களுக்குக் கூட வரி விதித்திருப்பது நியாயம் அற்ற ஒரு செயலாகும் என்று கூறிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

5-30 p.m. அடுத்தபடியாக சர்சார்ஜ் விதிப்பு இருக்கிறதே, 5 லட்சம் "டர்ன் ஓவர்" ஆகும் வியாபாரிக்கு $7\frac{1}{2}$ பர்செண்ட் விற்பனை வரி சர் சார்ஜ் விதித்திருப்பது பற்றி நான் சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த சர்சார்ஜ் ஆனது வியாபாரிகளுக்கு நேரிடையானது ; இதை அவர்கள் பொது மக்களிடமிருந்து வசூலிக்கக்கூடாது என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான் சொல்லிக் கொள்வதெல்லாம், அது வேண்டுமானால் ஏட்டளவிலே இருக்க முடியுமேதவிர, நடைமுறைக்கு ஒத்து வராது. இந்த சர்சார்ஜ் பொது மக்களை பாதிக்காது, வியாபாரிகள் அதைப் பொது மக்களின் தலையிலே வைக்க மாட்டார்கள் என்ற ஒரு உறுதியை இந்த அமைச்சரவை கொடுக்க முடியுமா என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் இந்த விற்பனைப் பொருள்களுக்கு எல்லாம் விலைக் கட்டுப்பாட்டை நிர்ணயிப்பதற்கு சர்க்கார் பொதுவாக கண்ட்ரோல் செய்ய முடியாது. அப்படி இருக்கும் போது ஒரு பொருளுடைய விலை கூடுமானால், அதன் மூலம் 5 லட்சம் போய் ஒரு வியாபாரிக்கு "டர்ன" ஓவர்" ஆகும் என்றால், இந்த $7\frac{1}{2}$ பர்செண்ட் சர்சார்ஜ் கட்ட அந்த வியாபாரி என்ன செய்வான் ? ஒன்று அவனுக்கு வருகிற லாபத்திலிருந்து அதைக் கட்ட வேண்டும், அல்லது மேலும் விலையைப் பொருளின் மீது கூட்டி அதன் மூலம் மக்களிடமிருந்து அந்த சர்சார்ஜுக்கு உண்டான தொகையை அவன் பெற வேண்டும். ஆகையால் இந்த $7\frac{1}{2}$ பர்செண்ட் சர்சார்ஜ் பொதுவாக, நிச்சயமாக எல்லாத்



துறையிலும் உள்ள பொருளின் மீதும் வரியாக பொது மக்கள் கொடுக்க கூடிய நிலை ஏற்படும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையால் இப்படி வரிகள் போடுவதற்கு முன்னால், முதலில் இந்த அரசானது எந்தெந்த வரிகள் போட்டால், அது சாதாரண மக்களைப் பாதிக்காது, சட்டப்படி செல்லக்கூடியது தானா என்பதையெல்லாம் நல்ல முறையில் பரிசீலித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேரள மாநிலத்தில் சென்ற காலத்தில் அரசாண்ட இடது சாரி கம்யூனிஸ்ட் அரசாங்கம் நம்முடைய இந்திய அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக பல காரியங்கள் செய்திருக்கிறது. அந்தக் காரியங்கள் எல்லாம் அரசியல் சட்டத்தை மதித்துச் செய்யப்பட்டவை அல்ல. அரசியல் சட்டத்திற்குப் புறம்பாக சட்ட வரம்பை மீறி பல காரியங்கள் செய்திருக்கிறார்கள். அந்தச் சட்டம் கோர்ட்டுக்குச் சென்று நீதி மன்றத்தின் முடிவு அறிவிக்கப்படாத ஒரு நிலை. கனம் அமைச்சர் அவர்கள் அந்தச் சட்டம் சரியானது, செல்லுபடியாகியிருக்கிறது என்று கூறியிருப்பார்களோயானால், அந்தச் சட்டத்தைப் பற்றி ஒரு பிரச்னையும் எழுந்திராது. ஆனால் கேரள மாநிலத்தில் சட்டம் போட்ட காரணத்தால், நாங்களும் போட்டிருக்கிறோம் என்று கூறிய காரணத்தால், சட்டத்தையே மீறிய அரசை, அரசியல் சட்டத்தை மதிக்காத அரசை முன்னோடியாகக் கொள்ளலாமா என்று தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் மிகுந்த அக்கறையோடு கேட்கிற காரணத்தால், இந்த விளக்கமும் சொன்னால், சாந்தி ஏற்படும் என்று நினைக்கிறேன். கேரள மாநில உயர் நீதி மன்றம் மூன்று முறை அந்தச் சட்டம் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டது என்று கூறியிருக்கிறது. இந்தியாவின் தலைமை நீதி மன்றம் விற்பனை வரியை வாங்குவோரிடத்திலிருந்து வசூலிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று தீர்ப்புக் கூறியிருக்கிறது.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** விற்பனை வரி அவரவர்கள் வாங்க வேண்டிய நிலை இல்லையென்றால கடையில் நாம் வாங்கக்கூடிய பொருள்களுக்கு "சேல்ஸ் டாக்ஸ்" போட்டு வசூலிக்கக் கூடிய தன்மையைக் காண்கிறோமே, அதற்கு என்ன அர்த்தம் ? வாங்கவில்லை என்று அமைச்சர் சொன்னாலும், வரி வாங்குகிறார்களே, விற்பனை வரி வசூலிக்கக் கூடிய பில்கள் மீது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னேனே தவிர, வாங்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** பொதுவாக எந்த வரி போட்டாலும் மூலதனம் போட்டு வியாபாரம் செய்கிறவர்கள் லாபத்தில் தான் கண்ணோட்டம் கொண்டிருப்பார்களே தவிர, நஷ்டப்பட்டு வரி கொடுத்து மூலதனத்தை இழப்பதற்கு எந்த வியாபாரியும் முன் வரமாட்டார்கள் என்பது எல்லாக் கட்சியினரும் ஒப்புக் கொள்ளக்கூடிய விஷயம். எதற்காகக் கூறுகிறேன் என்றால், இந்த விற்பனை வரி சர்சார்ஜ் சாதாரண மக்கள் ஏழை எளியவர்கள் உபயோகிக்கும் சாமான்கள் மீது போடப்பட்டிருக்கிற காரணத்தால், அது சாதாரண மக்களையும் ஏழை மக்களையும் பாதிக்கக் கூடிய தன்மையில் இருக்கிறது. ஆகவே இந்த வரியிலிருந்து ஏழை மக்கள் உபயோகிக்கும் சாமான்களுக்கு விதிவிலக்கு அளித்திருப்பார்களேயானால், சாதாரண மக்களைப் பாதிக்கும் நிலைமை ஓரளவு குறைந்திருக்கும். ரூபாய் 250-க்குக் குறைவாக உள்ள கெடிகாரங்கள், ரேடியோக்கள் ஆகிய சாதாரண மக்கள் உபயோகிக்கும் சாமான்களுக்கு விதி விலக்கு அளித்திருக்கலாம். மின்சார சாதனங்களுக்கு விற்பனை வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அதை எடுத்துக்கொள்வோம். மின்சாரம் அநேகமாக 50 சதவீதம் எங்கு பார்த்தாலும் பூர்த்தி செய்யப்பட்ட விஷயம். எஞ்சியிருக்கக்கூடியவர்கள் யாருக்குக் கொடுக்கப்படவில்லை என்றால், கிராமங்களில் உள்ள ஏழைகளுக்கு இன்னும் மின்சாரம்

சரியானபடி கொடுக்கப்படவில்லை. ஆகையினால் இன்றையதினம் மின்சார சாதனங்கள் மீது வரி விதிப்பது, நிச்சயமாக கிராமங்களில் இனி சாதாரண விவசாயிகள் ஏழை மக்கள் மின்சாரம் கிடைத்து அதற்குரிய சாதனங்கள் வாங்கும்போது இந்த வரியினால் இந்த உயர்வால் பாதிக்கப்படுவார்கள். வசதி உள்ளவர்களுக்கு போட்ட வரியாக இருக்க முடியாது. ஏழை மக்களை பாதிக்கக்கூடிய வரியாகத்தான் இருக்கமுடியும் என்று கூறிக் கொள்ளுகிறேன். வேண்டுமானால் மின்சார சாதனங்களில் ஆடம்பரமாக உள்ள சில இனங்களுக்கு வரிகள் போடலாம். அது இல்லாமல் மின்சார சாதனங்களுக்கு எல்லாம் வரி உயர்த்தினால், நிச்சயமாக இது யாரைப் பாதிக்கும் என்றால், வரக்கூடிய காலங்களில் இந்த மாநிலத்தில் வசதியற்றவர்கள், வாய்ப்பற்றவர்கள் ஆக இருக்கக்கூடிய சாதாரண மக்களைத் தான். இனிமேல் மின்சாரத்தை அதிகம் உபயோகிக்கவேண்டியவர்கள் பணக்காரர்கள் அல்ல. இன்றையதினம் கிராமங்களில் உள்ள மக்களுக்கு மின்சாரம் கொடுத்தால் அதற்கு வேண்டிய உபகரணங்கள் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இது அவர்களைப் பாதிக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே மின்சார சாதனங்களில் ஆடம்பரமான பொருள்களுக்கு வரி போட்டு ஆடம்பரமற்ற அன்றாடம் உபயோகிக்கும் பொருள்களுக்கு, அதாவது பல்பு போன்ற சாமான்களுக்கு விலக்கு அளித்திருந்தால், உதவியாக இருக்கும் என்று கூறுகிறேன்.

அடுத்தபடியாக, மத்திய அரசிடமிருந்து இந்த மாநில அரசுக்கு ஏகப்பட்ட வருவாய் வரவேண்டி இருக்கிறது, சரியான முறையில் நிதி கொடுக்கப்படவில்லை, அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது, என்றெல்லாம் நிதி அமைச்சர் அறிக்கையில் காணப்படுகிறது. அவைகளை நீங்கள் போராடி வாங்குங்கள் என்று கூறினால், ஏதோ இந்திரா காந்தி காங்கிரசுக்கும் எங்களுக்கும் பிளவு உண்டாக்கக்கூடிய நிலையில் கூறுகிறீர்கள், ஆகையினால் இது மாதிரி யோசனைகள் கூற வேண்டாம் என்று கூறுகிறார்கள். நாங்கள் கூறுவது எல்லாம் இந்திரா காந்தியை எதிர்க்க வேண்டும் என்பதற்காகக் கூறவில்லை. நாங்கள் கூறுவது உங்களை இந்திரா காந்திக்கு எதிராகத் தூண்டிவிடுவதற்காக அல்ல. நீங்கள் கூறியவற்றைச் செய்கிறீர்களா இல்லையா என்று தான் கேட்கிறோம். எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் நீங்கள் கூறியவற்றை எல்லாம் எண்ணிக்கொண்டு தான் இருக்கிறோம். என்ன கூறினீர்கள்? என்ன என்ன செய்தீர்கள்? ஆட்சிக்கு வந்தபிறகு என்ன செய்கிறீர்கள் என்பதைப்பற்றிச் சிந்திக்கும் பொழுது நீங்கள் செய்த தவறுகள் என்ன, ஏன் செய்தீர்கள் என்று கேட்டால், சண்டை மூட்டுகிறார்கள் என்று பேசுவது அவ்வளவு அழகான காரியமல்ல. நீங்கள் மத்திய அரசிடம் ஒரு பக்கம் அநீதி இழைத்துவிட்டது என்று எதிர்க்கும் காட்சி அளிக்கிறீர்கள். இன்னொரு பக்கம் ஆதரிக்கும் காட்சி அளிக்கிறீர்கள். அதன் உட்பொருள் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் மத்திய சர்க்காரிடமிருந்து, பைனான்ஸ் கமிஷன் முதல் சகலவிதமான அம்சங்களிலும் நமக்குக் கிடைக்க வேண்டிய பல கோடி ரூபாய்கள் இன்னும் கொடுக்கப்படாத நிலை இருப்பதாக நிதி நிலை அறிக்கையில் காணப்படுகிறது. அந்த உரிமைகளைப் பெறுவதற்கு இந்த அரசு ஏதாவது உருப்படியான காரியம் செய்தார்களா, எடுக்குமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.
5-40 p.m. நமக்கு வரவேண்டிய தொகைகளைப் பெற்றால், வாங்குவோரிடம் வரி போடுகிற பிரச்னையே இல்லை. நம்முடைய மாநிலத்தில் வரியைக் குறைக்கின்ற பிரச்னையே இருந்திருக்கும். வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்று நீங்கள் கூறியது போல், நிச்சயமாக வரியைக் குறைத்து வசதியைப் பெருக்கியிருக்க முடியும். அந்த அரிய சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைத்தும், அவைகளை நீங்கள் ஏன் வலியுறுத்தவில்லை என்று தான் கேட்கிறோம். அடுத்து, அரசு ஊழியர்கள் பற்றி. மத்திய அரசு விவகாரம் சிலவற்றைப் பின் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன். இப்போது மாநில அரசு ஊழியர்களுக்கு சிறப்பு ஈட்டுப் படி கொடுத்திருக்கிறார்கள். ரூ. 100 முதல் ரூ. 500 வரை சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு ரூபாய் பத்து அதிகப்படியாகக் கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக ரூ. 500 சம்பளத்திற்கு உட்பட்டவர்களுக்கு



ரூ. 10 கூடுதல் அளித்திருக்கிறார்கள். ஒரு யோசனை கூறுகிறேன். ரூபாய் 500 சம்பளம் பெறும் ஊழியர்களையும் ரூபாய் 100 சம்பளம் பெறும் ஊழியர்களையும் இந்த அரசு ஒன்றாகக் கருதுமானால், அது ஒரு தவறான நிலையாகும். நிச்சயமாகக் கூறுகிறேன். ரூ. 100 வரை சம்பளம் வாங்குபவர்களுக்கு அதிகப்பணத்தையும், ரூ. 500 போன்ற சம்பளம் வாங்குபவர்களுக்கு இந்த ரூ. 10 கொடுத்தால், அது பாராட்டக் கூடிய விஷயமாக இருக்கும். ரூ. 500 சம்பளம் பெறுபவர்களுக்கும் ரூ. 10 உயர்வு, ரூ. 100 சம்பளம் பெறுபவர்களுக்கும் ரூ. 10 உயர்வு என்று கூறினால், அது சாதாரண கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்ததாகக் கூறமுடியாது. அதுவும் சம்பளக் கமிஷன் போட்டிருக்கிறோம். அதன் விசாரணையில் இருக்கிறது. ஏறக்குறைய ரூ. 25 அதிகப்படியாகக் கொடுக்கவேண்டிய நிலை சம்பளக் கமிஷன் அறிக்கையில் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். நீங்கள் ஏதோ ரூ. 10 கொடுத்துவிட்ட காரணத்தால், அவர்களுடைய கஷ்டங்கள் நிவர்த்தி ஆகிவிட்டன என்று கூறமுடியாத நிலை இருக்கிறது.

பத்து ரூபாயை அதிகமாகக் கொடுத்து விற்பனை வரியை அதிகப்படுத்தியிருப்பது அவர்கள் பெற்றதைத் திரும்ப வாங்கிக் கொள்கிற நிலையில்தான் அமைந்திருக்கிறது. நிச்சயமாக அது அவர்களுக்குப் பலனை அளிக்கவில்லை. ரூ. 500 வாங்குகிற ஊழியர்களுக்குக் கொடுத்திருப்பதைக் குறைக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அதை பத்து ரூபாயாகவே வைத்துக்கொள்ளுங்கள். அதற்குக் கீழே உள்ள ஊழியர்களுக்கு சற்று உயர்த்திக் கொடுத்தால் நல்லதாக இருக்குமென்று தான் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்து, அவசரப்பட்டு பல மாநிலங்களில் சட்டங்களைப் போடுவதால் அவை நீதி மன்றங்களுக்குப் போய் செல்லுபடியாகாது என்று திரும்புகின்ற நிலையைப் பார்க்கிறோம். இப்போது அண்மையில் மத்திய அரசு போட்ட சட்டம் கூட செல்லாது என்று திரும்பிவருகிறது. சட்டங்களை ஆராய்ந்து போடாத காரணத்தால், நீதிமன்றங்களில் போய்ச் செல்லாது என்று திரும்பிவருகின்றன. அதைப் பார்த்ததும் சிலருக்கு ஆத்திரம் வருகிறது. கேரளத்தில் பார்த்தோம். பகிரங்கமாக நீதிமன்றங்களை அவர்கள் தாக்குவதைப் பார்த்தோம். நீதிமன்றங்களைப்பற்றி அரசியல் கட்சி விமரிசனம் செய்கிறது. நீதிமன்றங்கள் பிற்போக்கு சக்திகளுக்கு ஆதரவு காட்டுகின்றன என்று பேசினார்கள். தமிழகத்தில் இந்த ஆட்சியில் அப்படிப்பட்ட நிலை இருக்கக் கூடாது. சட்டங்கள் செல்லுபடியாகின்ற நிலையில் இருக்க வேண்டும். நீதிக்கு உட்பட்டு, ஜனநாயக மரபைக் கட்டிக் காக்கவும், சட்டத்திற்கு உட்பட்டதாகவும் செய்கின்ற காரியங்களை நிலைநாட்டும்படியாகவும் இருக்கவேண்டும். அதில் குற்றங்களை வைத்துக்கொண்டு பிறகு கோர்ட்டு அதைச் செல்லாது என்று சொல்லியதும், கோர்ட்டின்மீது ஆத்திரப்பட்டு பயனில்லை. நாங்கள் கொண்டு வந்தோம், கோர்ட்டுதான் செல்லாது என்று சொல்கிறது என்று வருத்தப்படுவது பொருந்தாததாகும். இந்த மன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற விற்பனைவரி சர்சார்ஜ் சட்டம், நிலச் சீர்திருத்தச் சட்டம் செல்லுமா செல்லாதா என்பதை நீதி மன்றத்திற்குப் போனால்தான் புரிந்துகொள்ளமுடியும் என்று நினைக்கிறேன். மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள் கேரளாவில் கோர்ட்டில் போட்டு சட்டம் செல்லுபடியாகியிருக்கிறது என்று கூறினார்கள். அதுபற்றிய விவரம் தெரியவில்லை. நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில், அந்தச் சந்தேகம் எனக்கிருக்கிறது. இந்த அரசு 15 ஏக்கர் என்று உச்ச வரம்பு கொண்டுவந்து, பெரிய நிலச் சீர்திருத்தம் செய்வதற்குத் தயாராக இருந்தோம், ஆனால் கோர்ட் செல்லாது என்று சொல்லிவிட்டது என்று சொல்லும் விதத்தில் அல்லது அப்படிச் சொல்லவேண்டுமென்பதற்காகப் போடப்பட்ட சட்டமாக இது இருந்தால், அது சரியானதாக இருக்க முடியாது. சீர்திருத்தம் வேண்டும். சோஷலிசம் வேண்டும். இன்னும் நல்ல விதமாகப் பகிர்ந்து கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்க முடியாது. இன்றைய உலகத்தில் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியக் கொள்கை உடைய நாடுகளில் கூட நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் கொண்டு வருகிறார்கள். உலகத்தில் நிலச்

சீர்திருத்தம் எங்கேயும் வருவதைப் பார்க்கிறோம் நிலைத்தைக் கட்டி வைத்துக்கொண்டு ஏகபோகமாக உள்ள நிலச்சுவான்தார் முறையில் ஆள வேண்டுமென்று எந்த அரசியல் கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. சுதந்திரா கட்சித் தலைவர் கூட குறிப்பிட்டார்கள். 15 ஏக்கர் கொண்டு வருவதை ஆட்சேபிக்கவில்லை என்று சொன்னார்கள். அதை நான் குறையாகச் சொல்லவில்லை. சட்டம் கொண்டுவருவது தவறு என்று கூறவில்லை. சரியான முறையில் கொண்டு வந்திருக்கிறோமா என்ற ஐயப்பாடு இருப்பதால், கேட்கிறேன். இது சட்ட விரோதமான காரியமா இல்லையா என்பதை அரசு கொண்டுவருவதற்கு முன்பே சிந்தித்தால் நல்லது. நண்பர் திரு. மணி அவர்கள் பேசியபோது, காங்கிரஸ்காரர்கள் நிலச் சீர்திருத்தத்தை ஊர் அறிய, உலகம் அறிய, பலபேர் சொத்துக்களைப் பிறருக்கு எழுதிவைக்கும் அளவிற்கு விளம்பரப்படுத்தி, பிறகுதான் சாதாரணமாகக் கொண்டுவந்தார்கள் என்றார். நாங்கள் இரவோடு இரவாகப் பேசி ஒரு நாளில் யாருக்கும் தெரியாமல் கொண்டுவந்தோம் என்று கூறினார். அவர்களுடைய சோஷலிசக் கருத்தை, முற்போக்கு எண்ணத்தைப்பற்றி நான் பாராட்டுகிறேன். யாருக்கும் தெரியாமல் உண்மையான சோஷலிச எண்ணத்தோடு கொண்டுவந்திருந்தால், நான் அதைப் பாராட்டுகிறேன். அரசியல் லாபம் கருதி இருந்தால், கோர்ட்டுக்குச் செல்லவேண்டியிருக்கும் என்ற கருத்திலேயே.......

**திரு. கே. எஸ். மணி :** சட்டம் செல்லுமா செல்லாதா என்ற சந்தேகம் மாண்புமிகு உறுப்பினருக்கு இருப்பதாகச் சொன்னார்கள். இந்தச் சட்டம் செயல் முறைக்கு வருமா வராதா என்று சிந்தித்துப் பார்த்துச் செயல்படுத்த வேண்டுமென்று தெரிவித்தார்கள். எப்படி அமைத்தால் சரியாகவும் நடுத்தரமாகவும் இருக்கும் என்று தெரிவிக்க வேண்டும். செல்லாது என்றால், 15 ஆகக் குறைத்தது செல்லாதா அல்லது உச்ச வரம்பு நிர்ணயிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை என்று கோர்ட் சொல்லுமா என்ற விளக்கத்தைச் சொல்லவேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** என்னுடைய ஞாபகத்தில், முன்பு நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்த நேரத்தில் கோர்ட்டில் எடுக்கப் பட்ட முடிவின்படி, இனிமேல் இப்படிப்பட்ட சட்டம் கொண்டுவருவதற்கு அரசுக்கு வசதியில்லை என்று கருதுகிறேன். அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். 15 ஏக்கர் கொண்டு வருவதைப்பற்றி ஆட்சேபணையோ வருத்தமோ இல்லை. கோர்ட்டு முடிவு களுக்கு, சுப்ரீம் கோர்ட் தீர்ப்புகளுக்கு உட்பட்டு இருக்குமா என்று பார்க்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றிச் சரியான முறையில் விளக்கம் வேண்டுமென்றால், நண்பருடைய அரசு எங்களைக் கலந்தாலோசித்து எங்கள் கட்சியின் சார்பில் இதைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தால், அதை எங்களுடைய பாக்கியமாகக் கருதி ஆராய்ந்து என்ன விதமான ஆலோசனையைக் கேட்கிறீர்களோ, அதற்குத் தகுந்தபடி அதற்கேற்ற நிபுணர்களை உங்களிடம் அனுப்பி தக்க யோசனையைத் தெரிவிப்போம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, திராவிட முன்னேற்றக் கழகம் செய்யும் சில காரியங்களைப்பற்றிப் பேசும்போது நண்பர்களுக்கு, அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, வேதனையாக இருக்கும்.

**திரு. எஸ். ராகவானந்தம் :** அப்படியெல்லாம் இல்லை.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நண்பர் திரு. ராகவானந்தம் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இங்கே எல்லோரும் சந்தோஷமாகத்தான் இருக்கிறோம். நம்முடைய நிதி அமைச்சர் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தபோது, இது சாதாரணத் திட்டம் அல்ல என்றார்கள். வரவு செலவுத் திட்டத்தை அடிப்படையாக வைத்துப் பேசும்போது, அரசியல் கருத்துக்களைக் கலந்து பேசவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. உங்களுக்கு அது கசப்பாக இருந்தாலும் கூட, அதைப்





பெரிதாக நினைக்கமாட்டீர்கள் என்று எண்ணி, சரியானதாக இருந்தால் அதைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 20 ஆண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் பெரிய ஒரு சக்தியோடு ஆட்சியைக் கைப்பற்றியது. உலகத்தில் எந்தக் கட்சியும் 20 ஆண்டு காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றியது கிடையாது. திராவிட முன்னேற்றக் கழகம் தான் அந்தப் பெரிய சாதனையைச் சாதித்தது என்று கூறினீர்கள். உண்மையில் பார்த்தால் திராவிட முன்னேற்ற கழகத்திற்கு 50 ஆண்டு வரலாறு இருக்கிறது. ஆரம்பத்தில் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்திற்கு ஆதரவு கொடுத்து பொப்பிலி, பனகல் ராஜாக்கள் இருந்தபோது, ஜஸ்டிஸ் கட்சி சேலம் மகாநாட்டில் பெரியார் அவர்கள் மூலமாகத் திராவிடக் கழகமாக மாறியது.

**திரு. சி. பி. சிற்றரசு :** பழைய காங்கிரஸ் மகாநாட்டில் ராஜ விசுவாசம் தெரிவித்துத் தீர்மானம் போட்டது நண்பருக்குத் தெரியுமா ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகமாக மாறி, 50 வருஷ வரலாறு பெற்ற கட்சியாக இன்றைய தினம் சட்டமன்றத்தில் இருக்கிறதே தவிர, 20 ஆண்டுகளிலே வந்துவிடவில்லை. நண்பர் திரு. ஆசைத்தம்பி கூட சட்டப் பேரவையில் பேசினார்கள். " என்னுடைய கட்சிக்கு 50 ஆண்டு...."

**ஒரு உறுப்பினர் :** மற்ற சபையைப்பற்றி இங்கே பேசலாமா ?

DEPUTY CHAIRMAN : It is against parliamentary procedure practice to refer to the proceedings of the other House.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், 50 ஆண்டுகளுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் 5-50 p.m. கழகத்தின் கடந்த கால சரித்திரத்தை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் அந்தக் கட்சி காங்கிரஸ் கட்சிக்கு ஒரு எதிர்ப்புக் கட்சியாகவே நாட்டில் வளர்ந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது. அன்றைய தினம் நாடு சுதந்திரம் பெறவேண்டுமென்று காங்கிரஸ் கட்சி போராடிய நேரத்தில், ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரை வைத்துக்கொண்டு சுதந்திரம் வேண்டாமென்று கூறினார்கள். அந்த விதமாகக் காங்கிரசிற்கு எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். திராவிடக் கழகமாக மாறிய பிறகும், காங்கிரசிற்கு எதிராகவே இருந்தது. திராவிட முன்னேற்றக் கழகமாக வந்த பிறகும், காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்பாகவே......

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** ஜஸ்டிஸ் கட்சி எந்த நாளிலும் சுதந்திரம் வேண்டாமென்று சொல்லவில்லை.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** வெள்ளையர்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள் பொப்பிலி, பனகல் ராஜா போன்றவர்கள் வெள்ளைக்காரர்களுக்கு உதவி செய்தார்கள். வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டில் இருப்பதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ....

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அந்த ராஜாக்கள் பல பேர் இப்போது காங்கிரசில் இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் மறந்து விடக்கூடாது.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** அவர்கள் மாறியிருக்கலாம். ஜஸ்டிஸ் கட்சி காங்கிரசில் இணையவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் காங்கிரசில் இணையவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூட காங்கிரசிற்கு வரலாம்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, ஜஸ்டிஸ் கட்சியினுடைய மத்திய நிர்வாகக் குழுவில் போட்டுள்ள தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். ஜஸ்டிஸ் கட்சியின் மத்திய நிர்வாகக் குழுவில் வெள்ளைக்காரர்களுக்கு நாம் ஆதரவு அளிக்கக்கூடாது, நாடு சுதந்திரம் பெறவேண்டும் என்பதன்

அடிப்படையில் வெள்ளைக்காரன் கொடுத்த பட்டங்களையும் உத்தியோகங்களையும் நாம் துறக்க வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் அன்றையதினம் பொதுச் செயலாளராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் பலர் கட்சியிலிருந்தும் வெளியேறியிருக்கிறார்கள்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** அண்ணா தீர்மானம் நிறைவேற்றி, அதனால் பலர் வெளியேறியது எனக்கு நினைவில் இருக்கிறது. நான் அதைக் கூறவில்லை. 50 ஆண்டுகளுக்கு முன்பு பொப்பிலி ராஜா, பனகல் ராஜா போன்றவர்கள் வெள்ளைக்காரர்களுக்கு ஆதரவாகத் தான் இருந்தார்கள் என்று தான் சொல்ல வந்தேன். அண்ணா அவர்கள் அதற்குப் பின்னால் தான் வந்தார்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** காங்கிரஸ் கட்சியின் ஆரம்ப காலத்தில் கூட வெள்ளைக்காரர்களை ஆதரிக்கிற வகையில் தீர்மானம் போடப்பட்டது என்பதை உறுப்பினர் அவர்கள் மறந்துவிடக்கூடாது.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், காங்கிரசுக்கு எதிராக ஒரு கட்சியின் நிலை இருந்து அதன் மூலமாக ஆட்சிக்கு வந்திருக்கிறது இன்றையதினம். ஆனால் உங்கள் நிலை ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து, திராவிடர் கழகத்திலேயிருந்து திராவிட முன்னேற்றக் கழகமாக மாறிய பிறகு கூட, காங்கிரஸ் எதிர்ப்பையே ஒரு கொள்கையாகக் கொண்டிருந்த காரணத்தால், காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி கொண்ட மக்களும் காங்கிரஸ் எதிர்ப்பு கொண்ட சில சில்லறைக் கட்சிகளும், சுதந்திரா கட்சி போன்ற கட்சிகளும் உங்களோடு கூட்டு சேர்ந்தன. எனவே காங்கிரஸ் எதிர்ப்பு மனப்பான்மை உள்ள மக்கள் உங்களுக்கு வாக்கு அளித்து அதன் மூலம் நீங்கள் இங்கே ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள் இவ்வளவையும் நான் ஏன் இங்கே கூறுகிறேன் என்றால் இப்படி காங்கிரஸுக்கு எதிர்ப்புக் கூறி, காங்கிரஸ் ஆட்சியை ஒழிப்பதற்காகவே நாங்கள் இருக்கிறோம் என்று மக்களிடம் எடுத்துச் சொல்லி, அதன் மூலம் ஓட்டுப் பெற்று ஆட்சிக்கு வந்தபிறகு, இன்றையதினம் மத்தியிலே உள்ள காங்கிரஸ் ஆட்சியை ஆதரித்துக் கொண்டிருக்கிறீர்களே. இந்த நிலைக்கு என்ன காரணம் என்பது எங்களுக்குத் தெரியவேண்டும். மத்தியிலே ஆட்சி செய்யும் இந்திரா அம்மையார் அவர்கள் தன்னை உண்மையான காங்கிரஸ் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் வேண்டுமானால், எங்களைப் பார்த்து, இந்திரா அம்மையாருடைய ஆட்சியை காங்கிரஸ் ஆட்சி என்று ஒத்துக் கொள்ளுகிறீர்களா என்று கேட்கலாம். அதைப்பற்றி இப்போது பிரச்னை அல்ல.

**திரு. கே. எஸ். மணி :** அப்படியானால் உங்கள் காங்கிரஸ், காங்கிரஸ் அல்லவா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** மாண்புமிகு அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எங்களைப் பற்றிய பிரச்னையை விட்டுவிடுங்கள்.

**திரு. எஸ். முத்து :** அப்படியானால் எது காங்கிரஸ் கட்சி ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** இந்திரா அம்மையார் தன்னை சுத்தமான காங்கிரஸ் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாங்கள் ஆதரிப்பதற்குப் பெயர் காங்கிரஸ் என்று சொல்லுகிறீர்களா ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நிச்சயமாக நீங்கள் காங்கிரசைத் தான் ஆதரிக்கிறீர்கள்.





**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முன்னதாகவே அவர்களுக்கு எது சின்னம், உங்களுக்கு எது சின்னம், என்று முடிவு கூறிவிட்டதற்கு நன்றி.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். பிரச்னை என்னவென்றால், நீங்கள் காங்கிரசை எதிர்க்கிறேன் என்று சொல்லி ஓட்டுக்களை வாங்கிக் கொண்டுபோய் காங்கிரசை ஆதரித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

**திரு. கே. எஸ். மணி :** நீங்கள் சொல்லுகிறீர்கள் இந்திரா காங்கிரஸ், காங்கிரஸ் அல்ல என்று. ஆனால் இருந்தாலும் காங்கிரசைத் தான் நாங்கள் ஆதரிக்கிறோம் என்று எங்களைப் பார்த்துச் சொல்லுகிறீர்களே. உங்களில் யார் காங்கிரஸ் ?

(பல உறுப்பினர்கள் எழுந்தனர்.)

**திரு. கே. ராஜாராம் :** தயவு செய்து அவரைப் பேசவிடுங்கள் அவர் ஒருவர் பேசும்போது, இப்படிப் பலபேர் பேசிக் குறுக்கிட்டுவந்தால் என்ன செய்வது ? நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொல்ல விரும்புவதைச் சொல்ல விடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** பட்ஜெட்டுக்கும் இதற்கும் சம்பந்தம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** இந்த பட்ஜெட் கூட்டமானது பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்காக வாய்ப்பு எடுத்துக் கொள்ளும் ஒரு சந்தர்ப்பமாகும். வருஷத்திற்கு ஒரு முறை கிடைக்கிற இந்தக் கூட்டத் தொடரில் இதைப்பற்றியெல்லாம் பேசலாம். எனவே நான் விஷயத்தை விட்டுப் போய்விடவில்லை. பட்ஜெட் மீதான விவாதம் இதற்குச் சம்பந்தப்பட்டது தான் என்று மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்து, நான் பேசும்போது தயவுசெய்து சற்று அவகாசம் அளிக்க வேண்டும் என்று நண்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் என்ன பேசினாலும் அதற்கு நீங்கள் மறு மொழி கூறுவதற்கு சந்தர்ப்பம் வரும். இன்னின்ன விஷயங்களை இன்னின்ன உறுப்பினர் தவறாகப் பேசினார் என்று சொல்லுங்கள். அதை விட்டு விட்டு அடிக்கடி குறுக்கிடுவது சரியாக இல்லை. மேலும் அடிக்கடி கனம் அமைச்சர் அவர்கள் தலையிடுவது என்பது எனக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது. அதையும் கொஞ்சம் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நான் ஏன் இதையெல்லாம் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், இந்திரா அம்மையார் தன்னை உண்மையான காங்கிரஸ் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். மத்தியில் இருப்பது காங்கிரஸ் ஆட்சிதான் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். சுத்தமான காங்கிரஸ் என்று சொல்லுகிற அந்த அரசாங்கத்திற்கு இன்றைய தினம் இந்திரா காந்தி அம்மையார் தலைமை தாங்கிக்கொண்டிருக்கிறார். அது எப்படி இருந்தாலும், காங்கிரஸ் அரசாங்கம் என்று தன்னைக் கூறிக்கொள்ளுகிற அந்த அரசாங்கத்தை நீங்கள் எப்படி ஆதரிக்கிறீர்கள் என்பது தான் என் கேள்வி. காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்கு எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள், காங்கிரஸ் ஆட்சியை வீழ்த்துவதற்காகத் தான் நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லி, காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி உடைய மக்களின் ஓட்டுக்களைப் பெற்று, காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி கொண்ட மற்ற கட்சிகளின் துணையைக் கொண்டு ஓட்டுப் பெற்று ஆட்சிக்கு வந்து விட்ட பிறகு, இன்றைய தினம் தன்னைக் காங்கிரஸ் ஆட்சி அதுவும் உண்மையான காங்கிரஸ் ஆட்சி என்று சொல்லிக் கொள்ளுகிற இந்திரா அம்மையாரின் ஆட்சியை ஆதரிக்கிறீர்கள் என்றால், அது ஓட்டுப் போட்ட மக்களுக்குச் செய்கிற துரோகச் செயல் அல்லவா என்று தான் கேட்கிறேன். இன்றைய தினம் எங்கள் கட்சி உண்மையான காங்கிரசா அல்லது இந்திரா காந்தி காங்கிரஸ் உண்மையான காங்கிரசா என்ற பிரச்னைக்கு நீங்கள் போக வேண்டாம்.

[2nd March 1970

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் உறுப்பினர் அவர்களைக் கேட்பதெல்லாம் இந்திரா காங்கிரஸ் அல்லது இந்திரா அரசை எல்லா பிரச்சினைகளிலும் ஆதரிப்பதாக தி.மு.க. தீர்மானம் போட்டிருக்கிறதா அல்லது முடிவு எடுத்திருக்கிறதா என்பதற்கு விளக்கம் தேவை. அதே நேரத்தில் ராஜ மான்யங்களை ஒழிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை இந்திரா அரசு கொண்டுவருகிற போது, இந்திரா அரசை எதிர்க்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்களா ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** பழைய ஸ்தாபன காங்கிரஸ்காரர்களுக்கும் இன்றைக்கு மத்திய ஆட்சியில் உள்ள இந்திரா காங்கிரஸ்காரர்களுச்கும் பெரிய அபிப்பிராய பேதம் இருக்கிறது. அதனால் ஒரு பெரிய போராட்டமே ஏற்பட்டிருக்கிறது. கோர்ட்டுக்குக் கூட நாங்கள் போகவேண்டிய அவல நிலைக்கு வந்திருக்கிறோம். அதைப் பற்றி நாங்கள் மட்டுமல்ல, இந்த நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளுமே வருத்தப்பட வேண்டும். இந்த நிலையில் நான் சொல்லுவது எல்லாம் இந்திரா காங்கிரஸ் ஆட்சியை நீங்கள் ஆதரிப்பது சரியா என்பதுதான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எதை ஆதரிப்பது சரியல்ல, எந்தப் பிரச்னையில் ஆதரிப்பது சரியல்ல என்று தான் நான் கேட்கிறேன்.

(பல உறுப்பினர்கள் எழுந்தனர்.)

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** விளக்கம் கூறித் தான் ஆக வேண்டும் என்று கட்டாயப்படுத்த உங்களுக்கு உரிமை இல்லை.

**மாண்புமிகு உறுப்பினர் :** நீங்கள் எதைச் சொன்னாலும், அதை அப்படியே கேட்டுக்கொள்ள வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** இந்த ஆட்சியானது நான் முன்பு கூறியதைப் போல், காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்று சொல்லி மக்களிடம் ஓட்டு வாங்கி வந்த காரணத்தால், இப்போது எப்படி காங்கிரஸ் ஆட்சியை மத்தியிலே ஆதரிக்கிறது என்று தான் கேட்கிறேன். காங்கிரசை வீழ்த்துவீர்கள் என்று தான் மக்கள் உங்களுக்கு ஓட்டுப் போட்டு ஆதரவு அளித்தார்கள். இந்த இடத்தில் ஆதரிக்க வேண்டும், இந்த இடத்தில் மட்டும் எதிர்க்க வேண்டும் என்று அவர்கள் யாரும் ஓட்டுப் போடவில்லை. நான் சார்ந்த காங்கிரஸ் கட்சியானாலும் சரி, மத்தியில் உள்ள இந்திரா காங்கிரஸானாலும் சரி, அதை வீழ்த்தத் தான் தி.மு.க. ஓட்டுக் கேட்கிறது என்று மக்கள் ஓட்டு போட்டார்கள்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** "காங்கிரஸ் கட்சியை வீழ்த்துவதாகச் சொல்லி வாக்கு வாங்கினீர்கள். இப்போது ஏன் காங்கிரசை வீழ்த்தவில்லை" என்று கேட்கிறீர்கள். எது காங்கிரஸ் என்று இப்போதாவது சொல்லுங்கள்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** இதில் யார் காங்கிரஸ் என்பது அல்ல
6-00 p.m. பிரச்னை. காங்கிரஸ் என்று யார் தன்னைச் சொல்லிக்கொண்டாலும், அப்பேர்ப்பட்ட அத்தனை பேரையும் எதிர்க்க வேண்டியது தான் உங்கள் பொறுப்பு என்பது என் கருத்து. அது இந்திரா காங்கிரஸ் ஆனாலும் சரி, காமராஜர் காங்கிரசானாலும் சரி, எங்களுக்குள் பலவிதமான பேதம் இருந்தாலும், காங்கிரஸ் என்று சொல்லிக்கொள்பவர்களை எதிர்ப்பது தானே உங்கள் வேலை. அதற்குத் தானே மக்கள் உங்களுக்கு ஓட்டுப் போட்டார்கள். "காங்கிரஸ் எதிர்ப்பு என்பது தான் எங்கள் வேலை", என்று சொல்லித் தானே ஓட்டு வாங்கினீர்கள். "மாநில ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு மத்திய ஆட்சியில் இன்றைக்கு காங்கிரஸ் இருக்கிறது. அதை என்றைக்கு வீழ்த்துகிறோமோ அன்றைக்குத்தான் நாங்கள் எங்கள் பூரணமான வேலையைச் செய்து முடித்ததாகக் கருத முடியும்", என்று சொன்னவர்கள் தானே நீங்கள். அப்படிப் பேசிய நீங்கள் இன்றைக்கு இந்திராவின் காங்கிரசைப் பகிரங்கமாக ஆதரிக்கிறீர்களே, அது ஏன் என்று தான் கேட்கிறேன்.



2nd March 1970]

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி; அறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலேயே, சட்ட மன்றத்தில் "சென்னை ராஜ்யம்" என்ற பெயரை மாற்றி "தமிழ்நாடு" என்று பெயர் வைக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்தபோது, அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்குக் காங்கிரஸ் கட்சியும் ஒத்துழைத்தது. அப்படியானால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை முழுக்க முழுக்கக் காங்கிரஸ் ஆதரித்தது என்று அர்த்தமா ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வரக்கூடிய நல்ல காரியங்களை வேண்டுமானால் காங்கிரஸ் கட்சி ஆதரித்திருக்கலாம். அதே போல காங்கிரஸ் கட்சி கொண்டுவரக் கூடிய ஒரு விஷயத்தில், நல்ல காரியமாக இருந்தால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கலாம். ஆனால் இந்திரா காந்தி காங்கிரஸ் கட்சியை வீழ்த்தக் கூடிய நிலையை நீங்கள் ஏற்படுத்தவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்திரா அரசு நல்ல தீர்மானம் கொண்டு வந்தால் நாங்கள் ஆதரிக்கலாமா, வேண்டாமா ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நீங்கள் ஆதரிப்பதனாலோ, அதரிக்காததனாலோ, அந்தக் கட்சி வீழ்ந்துவிடப்போவதில்லை, நீங்கள் ஆதரித்தாலும், ஆதரிக்காவிட்டாலும், அந்தக் கட்சி இருக்கும் என்ற நிலை இருந்தால், அதில் எனக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் நான் சொல்லுவது "நீங்கள் ஆதரித்தால் தான் அந்தக் கட்சி செயல்பட முடியும்".

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இப்போது ராஜ மானியங்களை ஒழிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவரப் படுகிறது. கொண்டு வரப்படுகிற அதை நாங்கள் ஆதரிக்கலாமா, வேண்டாமா ? அதைப்பற்றிக் காங்கிரஸ் கட்சியினுடைய நிலை இங்கே எப்படி இருக்கும் ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை விட அதிக சக்தி வாய்ந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். வாக்குவாதத்திலும் சரி, பேச்சிலும் சரி, திறமையிலும் சரி, எல்லா காரியங்களிலும் என்னைவிட திறமை வாய்ந்தவர். நான் ஒரு சாதாரணத் தொண்டன். ஆகையினாலே தான் இன்றைய தினம் தமிழகத்தில் முதலமைச்சராக அவர் வர முடிந்தது. ஆகையால் அவர்கள் இப்படிக் குறுக்கிட்டு அடிக்கடி தொந்தரவு செய்வது சரியல்ல. அதற்காக, நான் உங்களோடு வாதாட தயாராக இல்லை என்ற காரணத்திற்காக, நீங்கள் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. நிச்சயமாக என்னுடைய மனதிற்குப் பட்ட உண்மையான காரணத்தால் நான் சொல்லுகிறேன். அந்தக் கட்சிக்கும் எங்களுக்கும் கொள்கை அடிப்படையில் எந்தச் சண்டையும் கிடையாது. எங்களுக்குள் எல்லோரும் ஆதரிக்கக் கூடிய கொள்கை தான் அந்தக் கட்சியினுடைய கொள்கையும். அதே கொள்கையுள்ள எங்கள் காங்கிரசை நீங்கள் ஆதரிக்கவில்லை. இப்போது இந்திரா காந்தி அமைச்சரவை பலம் பொருந்தியதாக இருக்கலாம். நாளைக்கு அதே கொள்கைகளை உடைய நாங்கள் பலம் பெறலாம். ஆனால் அந்த வளர்ச்சி ஏற்படக் கூடிய நிலை எப்போது ஏற்படும் என்றால், தேர்தல் சமயத்தில் தான் தெரிய முடியும். 1972 தேர்தலிலே எங்கள் கொள்கை தான் நல்லது, நாங்கள் தான் ஆள வேண்டுமென்று மக்கள் விரும்பினால் நாங்கள் ஆட்சிக்கு வருவோம். ஆனால் இன்றைக்கு மத்திய அரசாங்கத்தில் இருக்கக்கூடியவர்கள் காங்கிரசின் பெயராலே வந்தவர்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் கொள்கையில் மாற்றம் கிடையாது. அவர்களும் காங்கிரஸ்காரர்கள், நாங்களும் காங்கிரஸ்காரர்கள். எங்களுக்குள் உள்ளதெல்லாம் ஸ்தாபனத்தினுடைய நியதிக்குச் சரியாகக் கட்டுப்படாமல் இருந்த காரணத்தால் ஏற்பட்ட வழக்கே தவிர, எங்களுக்குள் பெரிய வித்தியாசம் கிடையாது. அந்த அம்மையார் கட்டுப்பாட்டிற்கு அடங்காத காரணத்தால் ஏற்பட்ட சண்டையே தவிர, வேறு விஷயமல்ல. ஆனால் உங்களுடைய அரசாட்சி, உங்களுடைய கட்சி எந்தச் சண்டை போட்டுக் கொண்டாலும், உங்களுடைய கட்சிக்குக் காங்கிரஸ் எதிரி. காங்கிரசிற்கு

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [2nd March 1970

எதிராக மக்களுடைய வாக்கைப் பெற்றவர்கள் நீங்கள். காமராசர் காங்கிரசானாலும் சரி, இந்திரா காந்தி காங்கிரசானாலும் சரி, அந்தக் கட்சி இருக்கக் கூடாது. அதை எதிர்க்க வேண்டுமென்று கூறி மக்களிடத்திலே வாக்கைப் பெற்றீர்கள். ஆகவே இந்திரா காந்தி அரசாட்சி நான் காங்கிரஸ் அரசாட்சி என்ற காரணத்திற்காக, அந்த அரசாட்சிக்கு ஆதரவு கொடுக்க முடியாதென்று கூறியிருந்தால், அது நல்லவிதமாக இருந்திருக்க முடியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர். நல்ல காங்கிரஸ்காரர். எனக்கு நீண்ட நாளாக அறிமுகமானவர். அந்தப் பகுதியிலே காங்கிரஸ் பெரும் புள்ளிகளிலே ஒருவர். அநதக் காரணத்தினாலே நல்ல காரியங்களைச் செய்கிற சூழ்நிலை அங்கே இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் பெரும்பான்மையாகத் திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள், இவர் காங்கிரஸ் தலைவர். ஆகவே அவர் சொல்லுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்று ஜனநாயகத்திற்குப் புறம்பான முறையில் நடந்துகொண்டால், அதை அவர் சகித்துக்கொள்வாரா என்பதை மாத்திரம் எனக்கு விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** சரியான முறையிலே நியாயம் என்று பட்டால், காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும், வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும், அதை ஏற்றுக்கொள்வதற்குத் தயங்க மாட்டேன். ஆனால் சரி இல்லை என்று பட்டால், என்னுடைய நிலையை வலியுறுத்தவே செய்வேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப் போலவே எங்களுக்கும் நியாயம் என்று படுவதை நாங்கள் செய்வதிலே தவறில்லை அல்லவா ?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நியாயமில்லையே. காங்கிரஸ் கட்சி தீர்மானம் கொண்டு வரட்டும் என்கிறீர்கள். இந்தியை ஒழிப்போம் என்று கூறினீர்கள். அதிலே பெரிய தகராறு. அதைக் கூட திரு. எத்திராஜுலு அவர்கள் பேசியபோது ஏளனம் செய்யக் கூடிய நிலையை நீங்கள் உண்டாக்கினீர்கள். அப்படிப்பட்ட நிலைமையை எல்லாம் உறுப்பினர்களுக்கு நீங்கள் ஏற்படுத்தக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள், கொஞ்சம் குறைவான எண்ணிக்கை உடையவர்களாக இருக்கலாம், அல்லது அதிகாரத்திலே இல்லாதவர்களாக இருக்கலாம். நமக்குள் அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். அதற்காக குக்கிராமங்களிலே சண்டை போடுவது போல் இங்கு சண்டை போட வேண்டிய அவசியமில்லை. தி.மு.க.வுக்கு இரண்டு கொள்கைகள் முக்கியமாக உள்ளன. ஒன்று, தென் மாநிலங்கள் சேர்ந்த சமஷ்டி, திராவிட நாடு. மற்றொன்று இந்தி எதிர்ப்பு. இந்த இரண்டும் தான் உங்கள் தேர்தல் பிரகடனத்தில் முக்கிய இடம் பெற்றுள்ளன. இந்த இரண்டு கொள்கைகளை அடைவதற்கு இந்திரா காந்தி அரசாட்சி உங்களுக்கு ஏதாவது சலுகை அளித்திருக்கிறதா என்று பார்த்தால், அப்படி ஒன்றும் சலுகை அளிக்கவில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கோரி, அந்தக் கொள்கையைப் பற்றிப் பேசுகிற நேரத்திலெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள்ளே, எங்கள் கட்சியில் பிளவு ஏற்பட்டது போல், அவர்களுடைய கட்சிக்குள்ளே ஏற்பட்டிருக்கிறதோ என்ற ஐயப்பாடு இருக்கிறது.

DEPUTY CHAIRMAN : The hon. Member has already taken 40 minutes and he can take another 5 minutes.

6-10 p.m. **திரு. என். சுந்தரேசத் தேவர் :** அப்படிப்பட்ட எதிர்ப்புத் தன்மையைக் காட்டக் கூடியதாக இருக்கிறது. ஆகையினால் தான் நான் கேட்டுக்கொள்கிறேன். "இன்றையதினம் இந்திரா காந்தி அரசாட்சி உங்களுடைய ஆதரவை நம்பி இருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். மற்றொன்று, அகில இந்திய ரீதியில் தான் திட்டங்கள் தீட்டி இருக்கிறார்கள். இந்த நாட்டு மக்களுக்கு என்



2nd March 1970] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

னென்ன திட்டங்கள் வேண்டும் என்பதை வலியுறுத்திக் காட்டி, அதை மக்கள் அறியும்படி இருந்தால்தான் நாங்கள் இந்திரா காந்தி அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்க முடியும் என்று நீங்கள் கூறி இருப்பீர்களானால் நல்லது. இன்றைய தினம் கிடைத்திருக்கிற சந்தர்ப்பத்தைப் போல இன்னொரு சந்தர்ப்பம் வராது". இதை நான் மட்டும் கூறவில்லை. நேற்றையதினம் முதலமைச்சர் கலந்துகொண்ட ஒருவிழாவில் மத்திய அமைச்சர் சந்திரசேகர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். நாங்கள் ஒன்றை ஏன் சொல்லுகிறோம் என்பதற்கு விளக்கம் கொடுப்பது போல கூறியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி சார்பான காரியங்களுக்கு மத்திய அரசுக்கு நல்ல ஆதரவு கொடுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்ற தன்மையை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிற நேரத்தில், நிச்சயமாக நீங்கள் உங்கள் கோரிக்கையை வலியுறுத்திப் பெறக்கூடிய நிலை இருக்கிறது. ஆகையினால் அந்த நிலையைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஐந்து நிமிடத்தில் சிலவற்றைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்வதற்குத் தலைவரவர்களுடைய அனுமதியைக் கேட்டுக்கொள்கிறேன். 6-10 p.m.

நிர்வாகத்தைப் பொறுத்த வரையிலும், சில காரணங்களுக்காக பாரபட்சமின்றி எல்லா அரசியல் கட்சிகளுக்கும் ஒரே நீதி என்ற முறையில் இருக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவ்வாறு அநீதி இழைக்கமாட்டார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. மீனவ சமுதாயத்தைப் பொறுத்த வரையில், அமைச்சர் அவர்கள் கூறினார்கள், மூன்று மைல்களுக்குள்ளாக விசைப் படகுகள் மீன் பிடிக்கக்கூடாது என்று விதி இருப்பதாக. ஆனால் என்னுடைய பகுதியில் பார்ப்போமேயானால், சாதாரணக் கட்டுமரங்களில் செல்லக்கூடியவர்களின் வலையை எல்லாம் அறுத்துவிட்டு, அதை நாசம் செய்து விடுகிறார்கள் விசைப் படகுகளில் போகிறவர்கள். நண்பர் திரு. கோ. சு. மணி அவர்கள்கூட அங்கு வந்து பல சமரசங்களைச் செய்து வைத்தார்கள். நான் அதில் எல்லாம் தலையிடவில்லை. ஏனென்றால் அதில் நான் தலையிட்டால், எதிர்க்கட்சிக்காரர்கள் அதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள் என்று சொல்வார்கள் என்று நான் சொல்லிவிட்டேன். ஆளும் கட்சி உறுப்பினரிடமே சொல்லி, உங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று நான் சொல்லிவிட்டேன். இந்தமாதிரி எங்கு பார்த்தாலும் நடக்கிறது. ஆகையால் இந்தமாதிரித் தகராறுகள் ஏற்படாமல் இருக்க, மூன்று மைல்களுக்குள்ளாக கட்டுமரங்களும், மூன்று மைல்களுக்கு அப்பால் விசைப் படகுகளும், சென்று மீன் பிடிக்க வேண்டும் என்று நிர்ணயித்து ஒரு சட்டம் இருப்பதை இந்த சர்க்கார் நல்ல முறையில் அமுல்படுத்த வேண்டும். ஏனென்று கேட்டால், 3 மைல்களுக்கு அப்பால் விசைப் படகுகள் மீன் பிடிக்க வேண்டும் என்று வைக்கப்பட்டால், இந்தமாதிரித் தகராறுகள் வரக்கூடிய நிர்ப்பந்தம் இருக்காது. இன்றைய தினம் மீனவ சமுதாயம் அதிக ஜனத்தொகை உள்ள ஒரு சமுதாயமாக இருக்கிறது. ஆகையால் இந்தமாதிரிச் சிலவற்றை அவர்களுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஆட்சி மத்திய அரசிடமிருந்து மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் ஸ்தல ஸ்தாபனம், ஊராட்சி ஒன்றியம் போன்றவற்றிற்கு இந்த அரசு வழங்கக் கூடிய 80,000, 30,000 என்ற மானியங்களைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பு பல ஒன்றியங்களுக்கு இல்லாமல் போய்விடுகிறது. இந்த மானியங்களை நல்ல முறையில் உபயோகிக்க முடியாத நிலையில் அடிக்கடி பலவிதமான உத்தரவுகளை இந்த அரசு போட்டு அனுப்புகிறது. மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறீர்கள். ஆனால் ஊராட்சி ஒன்றியங்களெல்லாம் இந்த மாநில அரசின் மானியம் பெற்று ஒரு வரம்பிற்கு உட்பட்டுத் தான் இயங்கவேண்டியிருக்கிறதே தவிர, அது தன்னிச்சையாக இயங்க முடியவில்லை. ஊராட்சி ஒன்றியங்கள் பல நல்ல பணிகளைச் செய்து கொண்டுவருகிறது. இப்படி பல நல்ல பணிகளைச் செய்து கொண்டிருக்கும்போது, தினமும் அரசாங்கத்திடமிருந்து புதிய புதிய உத்தரவுகள் வந்து கொண்டிருப்பதால், ஊராட்சி ஒன்றியங்கள் தங்களின் வேலையைச்

சரியாகச் செய்ய முடியவில்லை. மேலதிகாரிகளின் மேலாதிக்கம் வேறு இருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறினார்கள், "நாங்கள் சீர்திருத்தங்கள் பலவற்றைச் செய்திருக்கிறோம்" என்று. இருந்தபோதிலும் கூட, அவையெல்லாம் போதாது. ஊராட்சி ஒன்றியங்களின் மேல், மேலதிகாரிகளின் ஆதிக்கம் மிகவும் பயங்கரமாக இருக்கிறது. ஒரு ஆர்.டி.ஓ. ஊராட்சி ஒன்றியம் போடும் ஒரு தீர்மானத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்றால், நிறுத்தி வைக்க முடியும். மக்களுக்கு நன்மை புரியக்கூடிய ஒரு காரியத்தை ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றினால், அதைக்கூட ஆர்.டி.ஓ. ஒன்றையும் செய்ய வேண்டாமென்றால், அவரின் சொல் தான் நிறைவேறும். இவைகளையெல்லாம் போக்கி, அந்த ரெவின்யூ இலாகாவின் மேல் ஆதிக்கம் இல்லாதபடி, மாவட்டக் கலெக்டரின் அதிகாரத்திற்கு மட்டும் உட்பட்ட ஒரு இயக்கமாக இந்த ஊராட்சி ஒன்றியங்களை இருக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. வி. தங்கபாண்டியன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த 1970–71-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு அறிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு சமர்ப்பித்ததை வரவேற்று என்னுடைய கருத்தினைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பெரும்பாலும் தி.மு.க.-வின் அடிப்படைக் கொள்கையினை முன் வைத்து தி.மு.க. பல்வேறு காலங்களில் சொல்லி வந்த கருத்தினை தன்னுடைய மனதில் கொண்டு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்திருக்கிறார். கடந்த தினங்களில் பல்வேறு உறுப்பினர்கள் பங்கெடுத்துக்கொண்டு, அதில் அடங்கியுள்ள சிறப்பினை எடுத்துச் சொன்னார்கள். வழக்கம்போல், வாடிக்கையாக எதிர்க்க வேண்டும் என்பதே தங்களின் கடமை என்று கொண்ட எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இந்த பட்ஜெட்டில் உள்ள பல சிறப்பான கருத்தினை இங்கு மறுத்திருக்கிறார்கள். ஆனால் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். மாநிலச் சட்டத்தின் அடிப்படையில் இந்த அரசு என்ன நல்லதை செய்திருக்கிறது என்று. தமிழ் நாட்டு மக்களுக்கு நேற்று நாம் என்னென்ன செய்வதாகச் சொன்னோமோ, அதையெல்லாம் மனதில் கொண்டு தான் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பது இந்த மன்றத்திலே உள்ள அங்கத்தினர்களுக்கு நன்கு தெரியும். நம் மாண்புமிகு தலைவர் அவர்கள் வாயிலாக இந்த மன்றத்திற்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தி.மு.க. அரசு ஒன்றைத் திட்ட வட்டமாக வரையறுத்திருக்கிறது. கட்டுப்பாடுக்கு உட்பட்டுள்ள நிதி வருவாய் வாயில்களைக் கொண்டு, ஊராட்சி ஒன்றியம் ஒன்றைப் போல, நகராட்சியைப் போல, மிகக் கட்டுப்பாடான நிதி நிலையைக் கொண்டு அரசை நடத்தி மாநிலத்தை வளர்த்து வருகிறது தி.மு.க. இதை எல்லாம் கவனத்தில் கொண்டு தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாநிலங்களுக்கு மேலும் அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்திற்கு உயிர் ஊட்டும் வண்ணம் சில தினங்களுக்கு முன்பு ஒரு நல்ல தத்துவத்தைக் கூறியிருக்கிறார்கள். மாநில சுயாட்சி இந்த நாட்டுக்கு ஒரு வரப்பிரசாதம். ஒரு மாநிலம் நல்ல முறையில் வளமாக இருக்க வேண்டுமென்றால், அதற்கு முழு அதிகாரமும் கொடுக்கப்பட வேண்டும். அப்படிக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டுதான், ஒரு மாநிலத்தின் வேலைகளைச் செய்ய முடியும் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு நல்ல முறையில் புரிய வைக்கும் வண்ணம் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். "மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி" என்று இருக்க வேண்டும் என்று. அதை அவர்கள் சொன்ன காரணத்தினால், அரசியலில் தனிச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது இப்போது. பத்திரிகைகள் பல்வேறு பக்கங்களில் விமர்சனம் செய்திருக்கின்றன. ஆனால் சிலர் பதைபதைத்தார்கள். தமிழ்நாட்டின் முதல்வர் மீண்டும் நாட்டின் பிரிவினைக்கு ஆலோசனை கூறி, அரசியலிலே லாபம் தேடிக் கொள்ள விரும்புகிறார் என்று எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னார்கள். உறவு முறை என்றால், நாங்கள் டெல்லி அரசுக்குக் கரம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைத்





தான் இப்பொழுதும் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்திற்குச் சுயாட்சி வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லி வருகிறார்கள். அதன் அடிப்படையில் தான் ஒரு குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு இன்னின்ன அதிகாரங்கள் மாநிலத்திற்கு கொடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுக் கூறிவிட்டால், அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு இயங்கும் என்பதனை இந்திய அரசிற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறுவார்கள். அதை ஆதரிப்பதன் மூலமாகத் தான் திரு. நார்த்கோட் பார்கின்ஸன் என்பவர் "இந்தியா ஒரு பெரிய நாடாக இருப்பதாலும், வேறுபட்ட கலாச்சாரம் கொண்ட நாடாக இருப்பதாலும், இந்த நாட்டிற்கு மாநில சுயாட்சி தான் பொருத்தமாக இருக்கும்" என்று கூறினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லும்போது, இதில் பிரிவினைக் குரல் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்று மற்றவர்கள் சொன்னார்கள். 6-20 p.m.

அரசியலில் லாபத்தை சம்பாதிக்கிறவர்கள், இன்றையதினம் டில்லியில் இருக்கிற காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தைக் கவிழ்க்க வேண்டுமென்று கருதுகிற எதிர்க்கட்சி நண்பர்கள் இன்றையதினம் அரசியல் நிபுணர் சொல்லுகிற நல்ல கருத்தை ஏற்று, இந்த மாநிலத்திற்குச் சுயாட்சி உரிமையை வழங்குவதற்கு இந்தக் கருத்துக்கு வலிமை ஊட்டினால், டில்லியில் இருக்கிற ஆட்சி தானாகவே மறைந்துவிடும். நம் மாநில முதல்வர் குரலுக்கு உங்கள் வலிமையான ஆதரவைக் கொடுத்தால் நீங்கள் விரும்புகிற விளைவு நிச்சயமாக ஏற்படும். அதன் மூலம் இந்த நாட்டில் வறுமையைப் போக்கவும், வளத்தைக் குவிக்கவும் ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும். ஏதோ ஒரு அரசியல் லாபத்திற்காக டில்லி ஆட்சியைக் கவிழ்க்க வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் சில தினங்களுக்கு முன்பு வரை அவர்களுடன் ஒன்றாக உறவாடினார்கள். அப்போது இந்த மன்றத்தில் நாங்கள் எல்லாம் மத்திய ஆட்சியைக் குறை சொல்லுகிறபோது, இன்று எதிர்க் கட்சி வரிசையில் உள்ள நண்பர்கள் எல்லாம் துடித்தார்கள். மத்திய அரசை எதிர்க்கலாமா, மத்தியில் பலம் பொருந்திய ஒரு ஆட்சி இருக்க வேண்டாமா, அப்போது தானே வெளிநாட்டுப் படையெடுப்பைத் தடுக்க முடியும். பொருளாதார ("ஸ்டெபிலிடி") நிரந்தரத் தன்மை ஏற்படும் என்று சொன்னார்கள். அவர்கள் இன்றைய தினம் நம்மைவிட ஒருபடி அதிகமாகவே போர்க்கோலம் பூண்டு மத்திய சர்க்காரைக் கவிழ்க்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். எந்த நேரத்தில் எதைக் கவிழ்ப்பது, எதை வளர்த்துவது என்பது தமிழகத்து முதல்வர் அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே தான் இம் மாமன்றத்தில் உள்ள எதிர்க் கட்சி நண்பர்களுக்குச் சொல்லுகிறேன், தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பிரச்னைகளுக்கு ஓரளவு நல்ல முடிவு காணவேண்டும். தற்சமயம் மத்திய சர்க்காரில் மிகுந்த அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது "சென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ்". மத்தியில் அதிகமான அதிகாரங்கள் குவிக்கப்பட்டிருப்பதால் தான், மாநிலங்கள் தங்கள் வருவாயை அதிகரிக்க முடியாத நிலையில் உள்ளன. ஆகவே பொருளாதார நிபுணர்கள், அரசியல் வல்லுநர்கள் ஒத்துக்கொண்டபடி "டிசென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ்", இருக்க வேண்டும்; அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட வேண்டும். அந்த நிலைமை உருவானால், நிச்சயமாக மாநிலத்தின் வருவாயை அதிகப்படுத்தி அன்றாடத் தேவையை பூர்த்தி செய்ய முடியும். தென் மாநிலங்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டன என்று நாம் சொன்னபொழுது, ஒரு சிலர் அதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால், இன்று, உதாரணமாக, கேரளத்து நிதி அமைச்சர், முதல்வர் ஐந்தாவது நிதிக் கமிஷன் நம்மை ஏமாற்றிவிட்டது, நம்மை வஞ்சித்துவிட்டது என்ற கடுமையான வார்த்தைகளை உபயோகித்திருக்கிறார்கள். ஐந்தாவது நிதிக் கமிஷன் போடப்பட்ட போது, தென்னாட்டில் தமிழ் நாட்டில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற, இந்தத் தமிழக அரசுக்கு நிதிக் குழு நல்ல உதவி புரிய வேண்டும்; நல்ல ஆலோசனைகள் கொடுத்து கூடிய மட்டில் இந்த நாட்டின் பொருளாதாரம் வளம் பெறும்படியான நிலையை ஏற்படச் செய்ய வேண்டுமென்று எண்ணினோம். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக, நிதிக் குழு நமது தமிழ் நாட்டிற்கு ஒதுக்கீட்டில் அதிகமாக ஓரவஞ்சனை காட்டியிருக்கிறது. மத்தியில் குவிந்

திருக்கும் அதிகாரங்களை எண்ணிப் பார்க்கும்பொழுது, மத்தியில் இருக்கிற குழப்பமான மொழிக் கொள்கையை எண்ணிப் பார்க்கும்பொழுது, விரைவாக முடிவுக்கு வந்தாகவேண்டும். இதற்காக ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. அதாவது மாநில சுய ஆட்சிக்குழு. கால வரையறை கொடுத்து இந்தக் குழு அதனுடைய அறிக்கையைச் சமர்ப்பித்து, அதன் பின் இந்த மாமன்றம் ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்குமானால், இன்றையதினம் மத்திய சர்க்காரைக் கவிழ்க்க வேண்டுமென்று நினைக்கின்ற நண்பர்களுடைய நிலைமையை வெட்ட வெளிச்சமாக்கிவிட முடியும். அதற்கு மிக விரைவாக இந்தக்குழு பணி செய்ய வேண்டு மென்று இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம், "தமிழ் நாடு அரசாங்கம் தன்னுடைய மூன்றாவது நிதி நிலை அறிக்கையில், இந்த ஆண்டு வரி புதிதாக விதித்திருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகள் நிதி நிலை அறிக்கையில் வரி விதிக்கவில்லை. இந்த வரி ஏழைகளை பாதிக்கிறது", என்று சொன்னார்கள். ஒன்றை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அது இரண்டு ஆண்டு காலம் வரி விதிக்காத அரசாங்கம் இந்த ஆண்டு வரி விதித் திருக்கிறது என்பது.

**திரு. கே. ராஜாராம் :** உண்மைக்குப் புறம்பாகச் சொல்லக்கூடாது. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் வரி விதிக்காமல் இல்லை.

**திரு. வி. தங்கபாண்டியன் :** இந்த ஆண்டு போடப்பட்ட வரிகள் ஏழைகளைப் பாதிக்கிறது என்று கூறினார்கள். ஆனால் இந்த வரிகள் ஏழைகளைப் பாதிக்கவில்லை. நாம் சென்ற ஆண்டு சொன்னோம். "மத்திய சர்க்காரின் புதிய வரிக் கொள்கையால் ஏழைகள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள்", என்று. சென்ற ஆண்டு மத்திய சர்க்காருடைய புதிய வரிக் கொள்கை சாதாரண ஏழைகள், நடுத்தர மக்கள், பாட்டாளிகள், இவர்களை பாதிக்கின்றது என்று சொன்னபொழுது, அப்போது பிரிந் திராத காங்கிரஸ்காரர்கள், "மத்திய சர்க்கார் போட்ட வரிகள் எல்லாம் சரிதான், தாங்கக் கூடியவர்களுக்குத் தான் வரி போட்டிருக்கிறது", என்று சொன்னார்கள். அப்பொழுது ஒன்றாக இருந்த காரணத்தால், சென்ற ஆண்டு அதை ஏற்றுக்கொண்டார்கள். இன்று அவர்கள் பிரிந்துவிட்ட காரணத்தால், பிரிந்த உடனேயே மத்திய சர்க்காருடைய வரி ஏழை மக்களைப் பாதிக்கிறது என்று சொல்லுகிறார்கள். நாங்கள் முழு மனதுடன் சொல்லுகிறோம். மாநில அரசாங்கம் அதிகமாக வரி ரூ. 6 கோடிக்குப் போட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் இந்த ஆண்டு ரூ. 170 கோடிக்கு அதிகமான வரி விதித்திருக்கிறது. மாநில அரசாங்கம் யார் தாங்கக் கூடியவர்கள் என்று ஆராய்ந்து, தாங்கிக் கொள்ளுகிற வாய்ப்பு உள்ளவர்களுக்கு இந்த ரூ. 6 கோடி வரி போட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள், "கெடியாரம், ரேடியோக்கள் சாதாரண மக்கள் உபயோகிக்கிற பொருள்களுக்கு வரி போட்டால் தாங்கிக் கொள்ளுவார்களா ?" என்று. பொருளாதாரத்தை நான் படித்த மட்டில், மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். "நெசசரிஸ், கம்பர்ட்ஸ், லக்ஜூரிஸ்", என்று. ஒரு மனிதனின் அடிப்படைத் தேவை அவன் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்கள் தான். அதற்கு நாம் வரி விதிக்கவில்லை. வரி விதித்தால், அவன் பாதிக்கப்படுவான். உணவுப் பொருள், உடை இவைகளுக்கு வரி போட்டால், அவனுடைய அடிப் படைத் தேவைகள் பாதிக்கப்படும் என்று எண்ணுகிறோம். இந்த அடிப்படையை பூர்த்தி செய்து விட்டு, வசதிக்குச் செல்லுகிறான். வசதியைப் பெற்ற பிறகு ஆடம்பரத்திற்குச் செல்லுகிறான். அப்படிச் செல்லும் போது, அவன் அரசாங்கத்திற்கு ஒரு சிறு பகுதியைக் கொடுக்கத் தயாராய் இருப்பான். ரேடியோ, கெடியாரம், இன்னும் இதர மின்சார சாதனங்கள் எல்லாம் தினம் தினம் வாங்குகிற பொருள்கள் அல்ல. ஐந்து அல்லது பத்து வருடத்திற்கு ஒரு முறை வாங்கும் பொருள். இந்தப் பொருள் களுக்கு வரி விதிப்பதால், ஏழைகளுக்குப் பாதகம் ஏற்படும் என்று சொல்லுபவர்களுக்குச் சொல்லுகிறேன். இன்றைய தினம் மத்திய சர்க்காரில் தேயிலை, பெட்ரோல் முதலிய பொருள்களுக்கு வரியை அதிகப் படுத்தியிருக்கிறார்கள். அது ஏழைகளைப் பாதிக்கவில்லையா? சோசலிசம் பேசுகிற நாம், சமதர்மப் பாதையில் செல்லுகிற நாம் இப்படிப்பட்ட



இடர்ப்பாடுகளைக் களைந்துதான் நல்ல புரட்சிகரமான சமுதாயத்தை உருவாக்க முடியும். தமிழ்நாடு சர்க்கார் இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உண்மையிலேயே பொருளாதாரத் துறையில் ஒரு புரட்சிகர மான அத்தியாயத்தை உருவாக்கியிருக்கிறது. மாநில சர்க்கார் போட் டிருக்கிற வரி ஏழைகள் பாதிக்கப்படாமலும், சாதாரண பாட்டாளி மக்கள் வாங்குகிற பொருள்களில் அது போய்ச் சேராமலும், போடப்பட்டிருக் கிறது. நான் சொல்லுகிறேன் படக் கொட்டகை நடத்துகிறவன் என்ற முறையில், "ஷோ டாக்ஸ்" நடத்துபவர்கள் தான் கட்டவேண்டும். அது எந்த விதத்திலும் காட்சியைப் பார்க்கிறவர்களுக்குப் போய் சேராது. சட்டமில்லை. இதைப் போலத் தான் ஒரு சீட்டுக்கு ரூ. 10 கூட்டினால், அது எந்த முறையிலும் பிரயாணம் செய்கிறவர்களை பாதிக்காது. பயண டிக்கட்டில் அது சேர்க்கப்படமாட்டாது. இதைத் தெரிந்தும் இந்த அரசாங்கம் அதிகமாக வரிகளைப் போட்டு இருக்கிறது என்று சொல்லி, மக்களைத் திசை திருப்புகிற முறையில தான் எதிர்க்கட்சி காரர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியின் நல்ல திட்டங்கள் நடுத்தர மக்களுக்கும் பாட்டாளிகளுக்கும் பயன்படத் தக்க முறையில், கூட்டுச் சேர்ந்து ஆலோசனை கூறி, ஆதரவு கொடுத்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல், மிகப் பயங்கர அரசியல் புரட்சியை உண்டாக்கி ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்ற எண்ணம் தான் இருக்கிறது. உண்மையி லேயே நாட்டு மக்கள் பால் நல்லெண்ணம் யாருக்கும் இல்லை. குறிப்பாக, காங்கிரஸ் நண்பர்களுக்கு இல்லை என்று துணிந்து கூற முடியும். 6-30 p.m.

அடுத்து, மொழிக் கொள்கையைப் பற்றிக் காங்கிரஸ்காரர்கள் சொல்ல முன் வந்ததற்குப் பாராட்டுகிறேன். ஒரு காலத்தில் இந்திக்கு லாலி பாடியவர்கள் இன்று இந்த நாட்டில் இந்தி புகுத்தப்படக் கூடாது என்று நம்மைவிட வேகமாகக் கூறுகிறார்கள் என்றால், அதற்கு மூல காரணம் மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா. அவர்கள் இந்த நாட்டில் ஏற்படுத்திய இந்தி எதிர்ப்பு உணர்ச்சி திரு. காமராஜருக்கு ஏற்பட்டு, அவர் வேகமாகப் பேசுகிறார் இன்றையதினம். ஆனால் காங்கிரஸ் தலைவர், திரு. காமராஜர் எந்த மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப் பட்டுவிடும், எவர்களை வருங்கால சந்ததியார் என்று சொல்லிக்கொண்டு இருந்தார்களோ, அந்த மாணவர்களைக் கூட்டி வைத்துத்தான் இந்திப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறார்.

இந்த மாணவர்கள் தேசிய கவுன்சில் மாணவர்கள். டெல்லிக்குச் சென்று இந்திரா அம்மையாரைச் சந்தித்தார்கள். இந்த நாட்டில் இந்தி வேண்டாமென்று மாணவர்கள் கிளர்ந்தெழுந்து ரத்தம் சிந்திய போது, இங்கே துப்பாக்கிச் சத்தம் கேட்டுக்கொண்டிருந்த நேரத்தில், டெல்லிக்குச் சென்ற தேசிய மாணவர்கள் ஐந்தாண்டுக்கு இந்த நாட்டில் இந்தி கற்றுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அந்த மாணவர்களை வைத்துத்தான் இப்போது பேசுகிறார்கள். அன்றைய தினம் இன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பாதுகாப்புக் கைதியாகக் கைது செய்யப்பட்டார்கள். நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் பெரிதாகக் குறைபட்டுக் கொண்டதால், இதைச் சொல்கிறேன். மதுரை தேரோடும் வீதிகளிலே மாணவர்களை விரட்டி விரட்டி அடித்த காட்சி யாருக்கும் மறந்துவிடக் கூடியதல்ல. இன்றைய தினம் சட்ட மன்ற உறுப்பினரும் சென்ற முறை உறுப்பினராக இருந்தவருமான ராஜாங்கம் அவர்கள் எவ்வளவு கீழ்த்தரமாக நடத்தப்பட்டார் என்பதை நாம் மறந்துவிடவில்லை. அந்த கறைபடிந்த சரித்திரத்தை நாடு மறந்துவிடாது. கலைஞர் அவர்களைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து, லாரியில் அடைத்து பாளையங்கோட்டைக்குக் கொண்டு போன காட்சியை மறந்துவிட முடியாது. அப்போது கலைஞர் அவர்கள் மாணவர் களைத் தூண்டிவிடுகிறார் என்று காரணம் காட்டப்பட்டுதான், பாதுகாப்புக் கைதியாக, பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டார். இன்றைய தினம் மாணவர்களைத் தூண்டிவிட்டு தமிழக அரசிற்கு பங்கம் உண்டாக்க லாம், அமைதியைக் குலைத்து குழப்பத்தை ஏற்படுத்தலாம் என்று நடந்து வருகின்ற தலைவர்களை அதே சட்டம் விட்டுவிடாது. அதற்கும் வேளை வந்துவிடும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உல்லாசமாக ஏர்-கண்டிஷன் காரில் செல்கிறார் என்று கூறுகிறார்கள். அதைக் கேட்பதற்கு வேதனையாக இருக்கிறது. இந்த நாட்டுக்கு வழிகாட்டி வாழ்விக்கவும் தமிழகத்திற்கு உயிரூட்டவும் வந்த பேரறிஞர் அண்ணா அமெரிக்கா சென்று அறுவை சிகிச்சை பெற்றுத் திரும்பி வந்தபோது, மருத்துவர்கள் அவரை ஏர்-கண்டிஷன் வீட்டில் இருக்க வேண்டுமென்றும், வெளியே செல்வதென்றால், ஏர்-கண்டிஷன் காரில் செல்ல வேண்டுமென்றும், அப்போதுதான் பாதுகாப்பான உடல்நிலை இருக்குமென்றும் யோசனை சொன்னார்கள். ஆனால் அண்ணா அவர்கள் அதற்கு மறுத்துவிட்டார்கள். அதன் விளைவு எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்குக் கொடுமையாகிவிட்டது. பேரிழப்பைச் சந்தித்துவிட்டோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மற்றவர்கள் கூறுவதைச் சவாலாக ஏற்றுக்கொண்டு, ஏர்-கண்டிஷன் வேண்டாமென்று சொல்லிவிடக் கூடாது. அந்த நஷ்டத்தை இந்த நாடு தாங்கிக் கொள்ளாது. கண் சிகிச்சை பெற்று, மருத்துவர்கள் யோசனைப்படி, ஏர்-கண்டிஷன் காரில்தான் செல்ல வேண்டும். இந்த நாட்டு மக்களுக்காக அவர்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இந்த மன்றத் தலைவர் அவர்கள் மூலமாக முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். யாரோ மனவேதனை காரணமாக எரிச்சல் காரணமாகச் சொல்வதையெல்லாம் சவாலாக ஏற்று கருத்துத் தெரிவிக்க வேண்டாமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு நன்மைகளைச் செய்த இந்த அரசைப் பாராட்ட வேண்டியது பண்பாடு, அதைத்தான் நான் எதிர்பார்த்தேன் எதிர் தரப்பிலிருந்து. ஆனால் ஏமாற்றப்பட்டேன். 15 ஏக்கர் என்று உச்ச வரம்பு கொண்டு வந்தால், கோர்ட்டில் அது செல்லுமா என்று கேட்கிறார்கள். கோர்ட்டுக்குப் போனால் அது செல்லுமா செல்லாதா என்பதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம். ஒரு காலத்தில் ஜமீன்தார் முறை இருந்தது. அதை எதிர்த்தோம். அடுத்து நிலப்பிரபுத்துவ முறை வந்தது. அதை எதிர்த்தோம். இப்போது சட்டத்தில் புகுந்துகொண்டு 30 ஏக்கர் என்று வைத்துக்கொண்டு நிலப்பிரபுத்துவ முறையில் இருக்கிறார்கள். விவசாயம் என்பது ஒரு தேசியத் தொழில். அதை நம்பி பல லட்சக்கணக்கான மக்கள் வாழ்கிறார்கள். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கும், லட்சக் கணக்கான விவசாயக் கூலிகளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும், அதன் மூலம் நாட்டு பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும், துணிகரமான இந்தக் காரியத்தைச் செய்ய முன் வந்திருக்கிறது அரசு. இந்தியத் துணை கண்டத்தில் தமிழக அரசுதான் அப்படிக் கொண்டு வந்திருக்கிறது. சோஷலிசம்தான் எங்கள் பிறப்புரிமை என்று சொல்கிற கட்சிகூட, சோஷலிச தத்துவமேதான் எங்கள் வேதப் புத்தகம் என்று சொல்கிறவர்கள்கூட தமிழக முதல்வரின் செயலைக் கண்டு பாராட்டுகிறார்கள். தமிழக விவசாயத் துறையில் நாம் புரட்சிகரமான மாறுதலைக் காட்டவேண்டும். இந்தத் தொழில் தேசியத் தொழில். அதற்குப் பாதுகாப்பு தருவது மட்டுமல்ல. விஞ்ஞான அடிப்படையில் எல்லா ஏழை மக்களும் தொழிலில் ஈடுபடவும், அவர்களுக்கு வாழ்வளிக்கும் வகையிலும் இது அமைந்திருக்கிறது. இதில் சட்டச் சிக்கல் இருக்கிறது என்று சிலர் தங்கள் மன எரிச்சலைக் காட்டுகிறார்களே தவிர, இதை நிறைவேற்றுவதற்குத் துணையாக இருக்கிறார்கள் என்று சொல்லுமளவுக்கு ஆதரவைக் காணவில்லை அவர்கள் இதை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், இந்த சமுதாயம் அதை எதிர்பார்க்கிறது. இருபதாம் நூற்றாண்டு அதை எதிர்பார்க்கிறது. எந்த அரசும் உண்மையான சோஷலிசத்திலிருந்து பிறழ முடியாது.. அந்த லட்சியம்தான் ஜனநாயக நாட்டிற்கு, ஏழை மக்களின் அரசுக்குக் கொள்கையாக இருக்கும், அதையொட்டித்தான் நிலவள வங்கிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. கூட்டுறவு அமைப்பில் தொடங்கப்பட்டு, ஏழைகளுக்கு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பசுமைப் புரட்சிக்கு வித்திட்டிருக்கிறோம். அதன் தொடர்பாக உள்ள சீர்திருத்தங்களைத் தமிழக அரசு செய்து வருகிறது. சாதாரண விவசாயிகளிடம் கேட்டால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சிக்கல்கள் குறைந்திருப்பதை நிச்சயமாகச் சொல்வார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உரம் இல்லை என்ற குறையை எங்கும் பார்த்தோம். சென்ற ஆண்டு



அந்தக் கஷ்டத்தை இந்த அரசு நிவர்த்தி செய்தது. விவசாயி உள்ளத்தில் புயல் இருக்கக் கூடாது. வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். சட்டம் இடையூறாக இருக்கிறது என்பதை நீக்கி, அதற்குப் பரிகாரம் செய்யும் இந்த அரசைப் பாராட்டுகிறேன். எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் இடைக்கால நிவாரணம் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் அரசு ஊழியர்களுக்குப் புதிய சம்பள விகிதம் நிர்ணயிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த மாநிலத்திலும் அந்தக் குழு பரிந்துரை சொல்வதற்கு முன்னால், இடைக்கால நிவாரணம் கொடுத்ததாகத் தெரியவில்லை. தமிழக அரசு ஊழியர்களுடைய தேவையை உணர்ந்து, அவர்களுக்கு உதவி அளிக்க வேண்டுமென்றும், அதுவும் காலத்தில் செய்த உதவியாக இருக்க வேண்டுமென்றும்தான் இந்த உதவி செய்திருக்கிறது. ஆனால் தமிழ் நாட்டில் எப்படியாவது குழப்பத்தை விளைவிக்க வேண்டுமென்று, யாரை அதற்கு முன் வைத்து அரசுக்கு மாசு கற்பிக்கலாம் என்ற போக்கில், அரசு ஊழியர்கள் பேரில் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் போல எதிர்க் கட்சியினரும் தோழமைக் கட்சியினரும் சில காலத்திற்கு முன்பு நாடகமாடினார்கள். எந்தக் கட்டத்திலாவது ஊழியர்களின் கோரிக்கையை மறுத்திருக்கிறதா அரசு ? முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபிறகு மூன்று ஆண்டுகளில் மூன்று முறை பஞ்சப்படி கொடுத்திருக்கிறோம். நீங்கள் சொல்வதற்கு முன்பே சம்பளக் குழு அமைத்தோம். ஊழியர்கள் தேவையை உணர்ந்து, சம்பள விகிதத்தை நிர்ணயம் செய்யக்கூடிய வகையில் குழு அமைத்திருக்கிறோம். 50 ஆண்டுகளுக்கு முன்பு போலீஸ் இலாகாவுக்குக் கமிஷன் ஏற்படுத்தப்பட்டது. இப்போது அவர்கள் கேட்காமலேயே, இந்த ஆட்சி அவர்களுடைய தேவையை உணர்ந்து, போலீஸ் கமிஷன் ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எந்தத் துறையானாலும், முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய கடமையிலிருந்து தவறவில்லை. ஆசிரியர்களுக்கு இவர்கள்தான் பாதுகாவலர்கள் போலவும் இவர்கள்தான் ஆசிரியர்களைக் காப்பாற்றுகிறவர்கள் போலவும் பலர் இன்று பேசுகிறார்கள். ஆசிரியர்களுடைய வளர்ச்சியில் எந்த அளவுக்கு இந்த அரசு அக்கறை காட்டியுள்ளது என்பதற்குப் பல காரியங்களைக் கூற முடியும். 18 ஆண்டு காலம் உங்களுடைய ஆட்சியில் அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளைச் சொல்லமுடியாதே. மகாநாடுகளில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சென்று பேச முடியும். 18 ஆண்டு காலத்தில் அவர்கள் ஊமையாக இருந்தார்கள். கேட்பதற்குத் தைரியம் இல்லாமல் இருந்தார்கள். இன்றைக்கு அவர்களுக்குக் கேட்பதற்கு தைரியத்தைக் கொடுத்திருக்கிறோம்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன், பழுத்த மரத்திற்குத் 6-40
தான் கல்லடி விழும் என்பார்கள். அதைப்போல் தி.மு.க. அரசாங்கம் p.m.
தான் இதையெல்லாம் செய்யும் என்று காங்கிரஸ்காரர்கள், தோழமைக் கட்சிக்காரர்கள், அவர்கள் சுதந்திராக் கட்சிக்காரர்களானாலும் சரி, புரட்சி பேசுகிற கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களாயினும் சரி, தி.மு.க. ஆட்சியின் மீது தாக்குதல் தொடுத்திருக்கிறார்கள். இந்த நல்ல காரியங்களை தி.மு.க. தான் செய்யும். அதுவும் இந்த முதலமைச்சர் தான் செய்வார். ஆகவே இந்தக் காலத்தில் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று தான் இந்தப் போராட்டத்திலே அவர்களைத் தூண்டிவிட்டிருக்கிறார்கள். நான் இன்றும் சொல்லிக்கொள்வேன். அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு, உண்மையான கோரிக்கைகளுக்கு தி.மு.க. அரசு என்றைக்கும் உறுதுணையாக நிற்கும்.

தனியார் பள்ளிகளில் வேலை செய்து வந்த ஆசிரியர்கள் எவ்வளவு பாதிப்புக்கு ஆட்பட்டிருந்தார்கள் என்பது நாம் எல்லாம நன்றாக அறிந்த விஷயம். இன்றையதினம் அவர்களின் குறைகளைப் போக்குவதிலே தமிழக அரசு பல காரியங்களை மேற்கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அரசு ஊழியர்களுக்குத் திருமணக் கடன் கொடுத்தோம். அவர்கள் தங்கள் விடுமுறையைச் சேமித்து வைத்து அதற்காகப் பணம் பெறும் நிலையை உருவாக்கிக் கொடுத்தோம். இவையெல்லாம் 18 ஆண்டுகளாக எங்கே போயிருந்தன ? இதையெல்லாம்

எப்படிப் பெற்றீர்கள் ? ஓராண்டு, இரண்டாண்டு, 3 ஆண்டு காலத்திற்குள்ளாக இன்றையதினம் சம்பளக் கமிஷன் போடப்பட்டிருக்கிறது. இதற்கிடையிலே என்னென்ன நிவாரணம் கொடுக்க முடியுமோ இந்த மாநில அரசுக்கு எவ்வளவு அதிகாரம் இருக்கிறதோ, அதற்கு உட்பட்டு அதன் நிதி நிலையை ஆராய்ந்து, அதற்கு ஏற்ப எல்லாவற்றையும் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறோம். ஒரு "வெல்பேர் ஸ்டேட்" என்கிற சேமநல சர்க்கார் பல்வேறு காரியங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் இடைக்காலத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள், மாணவ நண்பர்கள் இவர்களைக் கொண்டு ஏதாவது பங்கம் விளைவிக்க வேண்டும் என்று விரும்புவதன் மூலம், நம்மை நாமே அழித்துக்கொள்ளுகிறோம் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். இந்த ஆட்சி உங்களுக்குச் செய்யாமல் வேறு எந்த ஆட்சி உங்களுக்குச் செய்யும் ? புரட்சிகரமான ஆட்சியைக் கூட நாம் பார்த்திருக்கிறோமே? கேரள மாநிலத்திலானாலும் சரி, வங்க மாநிலத்திலானாலும் சரி, அங்கெல்லாம் இருக்கிற நிலை என்ன? காலையில் மந்திரி சபை இருக்கிறது, இரவில் பார்த்தால்சபாநாயகரைக் காணோம் என்று பத்திரிகைச் செய்தி வருகிறது. எனவே இந்த ஆட்சி உங்களுடைய குறைகளைத் தீர்த்து உங்களுக்குத் தேவையான அனைத்தையும் செய்யும் என்ற நம்பிக்கையை உங்களுக்கு அளிக்க விரும்புகிறேன். உங்களின் குறைகளைச் சொல்லுங்கள். உங்கள் கோரிக்கைகளை வையுங்கள். இதற்கு இடைத் தரகர்கள் தேவையில்லை. இவர்களுக்காக வக்காலத்து வாங்க யாரும் தேவையில்லை. நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி ஒன்றைச் சொல்லுவார்கள். ஒரு தனி மனிதனுடைய கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு அத்தனைக்கும் இந்த மாநில அரசு பொறுப்பாக உள்ளது. பெற்ற பிள்ளைக்குப் படிப்பு கொடுப்பதிலிருந்து தொழிலில் ஈடுபடும் வரை எல்லா நிலையிலும் மாநில அரசு பொறுப்பாக இருக்கிறது. ஆனால் பொருள் உற்பத்தி செய்யும் நிலையில் மத்திய அரசு அதைத் தட்டிக்கொண்டு போய்விடுகிறது என்பார்கள். இப்படி' தனி மனிதனுடைய அடிப்படைத் தேவையைக் கவனிப்பது மாநில அரசு. ஆனால் அவன் ஆளாக்கப்பட்ட பிறகு, அவனால் ஆக்கப்படும் பொருளை மத்திய அரசு கொண்டுபோய்விடுகிறது. இந்த நிலையை மாற்றி, மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் சமமான பொறுப்பு இருக்கும் வகையில் சூழ்நிலை உருவாக வேண்டும். இன்றைய நிலையில் மத்திய அரசாங்கம் தன் அதிகாரங்களைக் குறைத்துக்கொள்ள தயாராக இல்லை. அறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். மத்திய அரசு தன்னுடைய அதிகாரங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தன்னிடமுள்ள பல அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு அளிக்கவேண்டும் என்று கூறுவார்கள். கல்வி, சுகாதாரம் இப்படி எல்லா துறைகளிலும் இன்றைய தினம் மத்திய அரசாங்கத்திலும் மாநில அரசாங்கங்களிலும் தனித் தனித் துறைகள் இருந்துகொண்டிருக்கின்றன. இங்கே ஒரு கல்வித் துறை என்றால், மத்தியிலே ஒரு கல்வித் துறை. இங்கே ஒரு பொதுநலத் துறை என்றால், மத்திய அரசாங்கத்திலும் ஒரு பொதுநலத்துறை, இங்கே ஒரு குடும்பக்கட்டுப்பாட்டுத் துறை என்றால், அங்கேயும் ஒன்று என்ற நிலை இன்னும் இருந்து வருகிறது. இவைகளையெல்லாமாவது மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டால், நன்றாக இருக்கும்.

இன்றையதினம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலமாகத் தமிழக அரசுக்கு இரண்டுவிதமான நஷ்டம் ஏற்படுகிறது. ஒன்று குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் மூலமாக நமக்குப் பாராளுமன்றத்தில் கிடைக்க வேண்டிய பிரதிநிதித்துவம் குறைந்துபோகிறது. அதற்குக் காரணம் இங்கே ஜனத்தொகை வளர்ச்சி தடுத்து நிறுத்தப்படுகிறது. ஏற்கெனவே 41 ஆக இருந்தது இப்போது 39-க்கு வந்துவிட்டது. இன்னொன்று மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குகிற முறையில் ஜனத்தொகையின் அடிப்படையில் அதைச் செய்கிற காரணத்தால், நிறைய ஜனத்தொகை கொண்ட உத்திரப் பிரதேசம் நிறைய உதவி பெறுகிறது. தமிழ்நாடு பெறவேண்டிய நிதி உதவி குறைந்துகொண்டே போகிறது. எனவே தான் சொல்லுகிறேன். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் எல்லா





மாநிலங்களிலும் முறையாகப் பின்பற்றப்பட வேண்டும். அந்த அடிப்படையில் நிதி ஒதுக்கீடு அமைய வேண்டும். மேலும் ஜனத்தொகையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு இல்லாமல், தேவையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு அமையவேண்டும். இதில் இந்த மாமன்றம் நல்ல முடிவெடுக்க வேண்டும். இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டம் மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதைக் கூறி அதன் மூலம் தமிழகத்திற்கு நல்ல பல திட்டங்களும் நன்மைகளும் உருவாகும் என்று கூறி என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இம்மன்றத்திலே நடப்பு ஆண்டுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற வரவுசெலவுத் திட்டத்தின்மீது எனது கருத்தைக் கூறி, எனது ஆதரவையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். இம்மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகிய இந்த நடப்பு ஆண்டு வரவுசெலவுத் திட்டம் தி.மு.க.வினுடைய கொள்கைத் திட்டமாகவும், வருங்காலத்தில் அது கடைப்பிடிக்க இருப்பதாகிய பொருளாதார மாற்றத்திற்கு வழிவகை செய்கிற ஒரு சாசனமாகவும் அமைந்திருக்கிறது என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை மூன்று கோணங்களிலிருந்து பார்ப்பதனால் முதலில் ஒரு விவசாயப் புரட்சியை அமைத்துக் காட்டுகிற ஒரு சிறந்த திட்டம் என்பதை நாம் மறுத்துவிட முடியாது. ஒரு நாட்டினுடைய முன்னேற்றம் அதனுடைய தொழிற் புரட்சியிலும், விவசாயப் புரட்சியிலும் தான் அடங்கியிருக்கிறது. என்று நாம் அறிவோம். மேலை நாடுகளில், குறிப்பாக இங்கிலாந்து போன்ற நாடுகளில் (Agrarian Revolution) விவசாயப் புரட்சிக்குப் பிறகு, பொருளாதார உற்பத்தியில் தன் நிறைவு பெற்று, பிறநாடுகளுக்கும் இன்றைய தினம் பொருள்களை அனுப்பக்கூடிய சூழ்நிலையைப் பெற்றதாக நாம் பார்க்கிறோம். அந்த வகையில் நமது தமிழகத்தின் வரலாற்றில் 20 ஆண்டுகளுக்கு அப்பால் ஒரு பெரும் புரட்சி ஏற்படுகிற நிலையில் விவசாயத்திற்குச் சிறந்த முக்கியத்துவம் தருகிற வகையில், இந்த வரவு செலவுத் திட்டம் அமைந்திருப்பதை நாம் காண முடிகிறது. அதை இங்கே குறிப்பாகச் சுட்டிக்காட்டும் முகத்தான் இங்கே சில புள்ளிவிவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். 1966-67-ல் 57·9 லட்சம் டன்னாக இருந்த உணவுதானிய உற்பத்தி, நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் 1969-70-ல் 63 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதுவும் வறட்சி மிகுந்த காலத்தில் பல்வேறு இடங்களில் நீர்ப்பற்றாக்குறையினால் எதிர்பார்த்த அளவுக்கு உணவு தானிய உற்பத்தி செய்ய முடியாதபடி இயற்கையின் கோளாறு இருந்த போதிலும், நமது அரசு மேற்கொண்ட சிறந்த விவசாய உற்பத்தித் திட்டங்களின் வழியாக இந்த அளவுக்கு உணவு உற்பத்தியில் ஒரு பெரும் ஏற்றத்தைக் கண்டிருக்கிறோம். இதைவிடச் சிறந்த முறையில் உணவு உற்பத்தி பெருகும் என்ற கருத்தை முன்னிட்டுத் தான் உணவுப் பொருள் நடமாட்டக் கட்டுப்பாட்டையும் நீக்கி, அது வெற்றியும் பெற்று எல்லா மக்களும் உணவில் இன்று தன்னிறைவு பெறுகிற நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். 6-50 p.m.

அது மட்டுமல்ல. 1966-67-ல் மிகுபயன் தரும் பயிர்வகைகள், அத்தாவது அதிக விளைச்சல் தரும் திட்டத்தின்கீழ் 5·27 லட்சம் ஏக்கர்கள் பயிரிடப்பட்டதற்கு மாறாக, 1968-69-ல் ஏறத்தாழ 17 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டான 1970-71-ல் 24 லட்சம் ஏக்கர் நிலத்தில் பயிர் வைப்பதற்கான வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து விவசாயிகளைப் பெரும்பகுதியாகக் கொண்டிருக்கிற இந்தத் தமிழகத்தில், எத்தகைய ஒரு அமைதியான புரட்சியை, மக்களுடைய மனதில் ஒரு மாற்றத்தை, ஏற்படுத்தி இருக்கிறது இன்றைய தமிழக அரசு என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவையெல்லாம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கும், மிகுநிலை பெறுவதற்கும், விவசாயத்

[2nd March 1970

துறையில் ஏற்றம் பெறுவதற்கும், விஞ்ஞான அடிப்படையில் விவசாயத்தைச் செய்யவும் அதிக வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்பதற்குச் சான்றாகும். அதனுடைய உச்சகட்டமாக இன்றைய தினம் கோவையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதற்கு அடையாளத் தொகையாக ஒரு தொகையை ஒதுக்கியிருக்கிறோம் என்பதையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய நிதி ஒதுக்கத்தில் இதற்காக நிதி ஒதுக்கம் செய்திருப்பது தமிழகத்தின் விவசாய வரலாற்றில் ஒரு பெரிய திருப்பத்தை, ஒரு பொற்காலத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை யாரும் எந்தக்காலத்திலும் மறந்துவிட முடியாது என்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் நமது விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிற நடுநிலை விவசாயிகளுக்கு 1966–67-ல் 31·44 கோடி கடன் வழங்கப்பட்டது. ஆனால் அதே நிலையில் நடப்பு ஆண்டில் அந்தத் தொகை ரூ. 62·50 கோடியாக உயர்த்தப்பட்டிருப்பதை நமது நிதி ஒதுக்கத்தில் காணமுடிகிறது 61 நில வள வங்கிகள் அதிகமாக ஏற்பட்டு, அதன் வழியாக எளிய முறையில் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடன், நடுநிலைக்காலக் கடன், நீண்டகாலக் கடன் ஆகியவை கொடுக்கப்பட்டு வருகின்றன. 1966–67-ல் நமது தமிழகத்தில் 209 டிராக்டர்கள் தான் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு கடந்த 3 ஆண்டுகளில் 1,368 டிராக்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில் 3,000 டிராக்டர்கள் கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிதி ஒதுக்கீட்டில் 72 கோடி ரூபாய் செலவிட்டு, 25,500 கிணறுகள், 13,200 குழாய்க் கிணறுகள், 15,000 வடிமுனைக் கிணறுகள் தோண்டவும், 34,600 விசையேற்றங்களை நிறுவுவதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்களையெல்லாம் மறைத்து ஏதோ வெளித்தோற்றத்தில் கட்சி ரீதியான நிலையில் தமிழகத்து மக்களைத் திசை திருப்பிவிடக்கூடாது என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, கால்நடைப் பராமரிப்பில் ஒரு புரட்சிகரமான திட்டத்தை நமது உணவமைச்சர் அவர்கள் அமைத்து வைத்திருக்கிறார்கள். இதற்கு முன்னால் எல்லாம் செயல்கூறு அடிப்படையில் இருந்தது வட்டார வளர்ச்சி அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஒரு கீ வில்லேஜ் ஸ்கீம் என்றால் அதற்கு ஒரு சென்டர் வைத்து ராஜ்யம் முழுவதும் அது வேலை செய்யும். இப்போது அப்படி இல்லை. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் மையமாக ஒவ்வொரு வளர்ச்சித் திட்டம் என்று மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, பால் பண்ணை ஒன்றை கிண்டியிலே வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மதுரையிலே பால்பொடி தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. மீன் அளத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்குத் தனியாகத் திட்டம். பாசன அபிவிருத்தித் திட்டங்கள் பல. காவிரி கழிமுகப் பாசனத் திட்டம், பரம்பிக்குளம்-ஆளியாறு பாசன அபிவிருத்தித் திட்டம், சிற்றாறு-பட்டணங்கால் திட்டம், இத்தனை பாசனத் திட்டங்கள். விவசாயத்துறைக்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மகத்தான சாதனையின் சிறந்த ஒரு கட்டத்தை அமைத்திருக்கிறது இந்த அரசாங்கம். இதற்கு முன் 30 எகராவாக இருந்த நில உச்ச வரம்பை 15 எகராவாகக் குறைப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அது இன்னும் மசோதாவாக வரவில்லை. அறிவிப்பாகத்தானே வந்திருக்கிறது என்று சொன்னார்கள். அது இந்த சட்ட மன்றத் தொடரிலேயே கூட மசோதாவாக வந்து, விவசாய மக்கள் தாங்கள் பயிரிடுகிற இடங்கள் தங்களுக்குச் சொந்தம் என்ற உணர்ச்சியோடு சந்தோஷமாக இருக்கக் கூடிய நிலையை நாம் செய்திருக்கிறோம். உச்சவரம்புச் சட்டம் 1961-லே கொண்டுவரப்பட்டது. அதைப் பற்றிப் பலர் பேசும்போது குறிப்பிட்டார்கள். உச்சவரம்புச் சட்டம் வருகிறது என்று 3 ஆண்டுகளுக்கு முன்னால் "மாராயம்" கூறுவதுபோல் அதாவது முன் அறிவிப்பதுபோல அறிவித்து உச்சவரம்பு எத்தனை என்று அறிவித்து, அவரவர்கள் தங்களுக்கு இருக்கிற நிலங்களை மற்றப் பேர்களுக்கு மாற்றிவிட்டு, பிறகு அந்தச் சட்டம் பெயரளவில் வந்ததால் மக்களுக்குப் பயனளிக்கவில்லை என்று



2nd March 1970] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

சொன்னார்கள். உண்மையில் இந்த மூன்றாண்டு கால ஆட்சியில் 15 எகராவாகக் குறைக்கப்போகிறோம் என்று தெரிவிக்காமல், அண்மையில் நடந்த மாநாட்டில் ஒரு தீர்மானத்தை வைத்துக்கொண்டு பறைசாற்றாமல் எதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து, இந்த நாட்டு ஏழை மக்கள் நலம் பெறுகிற வகையில், சோஷலிசம் என்று சொல்லிக் கொண்டு சோஷலிசம் நடைமுறையில் வராமல் பெயரளவில் மக்களுக்குச் சொல்லி, அதை ஒரு ஓட்டு சேகரிக்கிற பிரச்னையாக மாற்றிவிடாமல், உண்மையில் இந்த நாட்டில் நல்ல பொருளாதார முன்னேற்றம் வருகிற நிலையில், அதை 15 எகராவாகக் குறைத்தது ஒரு புரட்சிகரமான திட்டம் அது அறிவிப்பு நிலையில் இருந்தாலும் கூட, அதற்கு (ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட்) கொடுத்து முன்னாலிருந்தே பயன் தருகிற நிலையில் அமைக்கப் போவதிலிருந்து இதை எந்தத் தரப்பினரும் பாராட்டுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த உச்ச வரம்பு 15 எகராவாகக் குறைக்கப்பட்டிருப்பதைப் பற்றிச் சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். நிலம் சிறுகச்சிறுக ஆகி விடுகிறது என்று அச்சம் தெரிவித்தார்கள். நான் அவர்களைக் கேட்க விரும்புவது 30 எகராவையும் ஒரே வயலாகவா வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அல்லது 15 எகராவை ஒரே வயலாகவா வைத்துக்கொண்டிருக்கப் போகிறார்கள் ? விஞ்ஞான ரீதியாக நமது விவசாயத்திற்கு நிலத்தைச் சிறு சிறு அளவாக வைத்துக்கொண்டு தான் மண் வளப் பரிசிலனை செய்து, ஒரே மனிதனிடம் 6 எகரா, 7 எகரா, 10 எகரா போதும் என்று இருக்கிற நிலையில் 15 எகரா என்று முடிவு செய்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசு நிர்ணயித்திருக்கும் உச்சவரம்பை எந்த முற்போக்குவாதியும் எதிர்க்கமாட்டார்கள். மற்றவர்கள் கூட சுயநலம் காரணமாக சிறுகச் சிறுகப் போய்விடும் என்று சொன்னாலும் கூட உண்மையில் சிறுகச் சிறுகத்தான் நிலத்தைப் பயிரேற்ற முடியும். ரஷ்யா போன்ற நாடுகளில் நிலவும் (கலெக்டிவ் பார்மிங்) "கூட்டுப்பண்ணை" வைத்துக்கொள்ளுவது நம் நாட்டிற்குப் பொருந்தாது. தொழிலாளர்கள் கிடைக்காத நாட்டில் விஞ்ஞானக் கருவிகளின் உதவியால் அதிக விளைச்சலைப் பெற வேண்டியிருக்கிறது. இங்கே இன்னும் விசைக் கருவிகளை எல்லாம் கண்டுபிடித்தும் கூட கைத்தறித் தொழிலை விடாமல் வைத்துக் கொண்டிருக்கும் நிலையில் இருக்கிறோம். சிறுகச் சிறுக நிலம் ஆகிவிடும் என்று சொல்லுவது ஒரு பெரிய குறை இல்லை. இன்னும் சில பேர் சொல்லுகிறார்கள், கிராமங்களில் இருக்கிற விவசாயம் ஸ்தம்பிக்கும் நிலையில் கொண்டு போய் விடும் என்று. உண்மையில் அதிக நிலம் வைத்திருக்கிறவர்கள் தான் உற்பத்தியைப்பற்றிக் கவலைப் படாமல் இருக்கலாமே தவிர, அதனால் விவசாயம் ஸ்தம்பிக்கலாமே தவிர, இதனால் வருகிற விளைவு குறைவாக இருக்காதென்று நான் மிக உறுதியாக நம்புகிறேன். 6-58 p.m.

DEPUTY CHAIRMAN : The hon. Member may continue his speech tomorrow.

The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. *Statutory Rules and Orders.*

Nil.

### B. *Reports, Notifications and other papers.*

&43. Returns of Assets of 12 Members of the Tamil Nadu Legislative Assembly including that of the Hon. Minister for Religious Endowments

& Laid on the Table of the House on 28th February 1970.

[2nd March 1970

## APPENDIX I.

[Vide answer to starred Question No 123 on page 211]

1969-ம் ஆண்டு ஜூன் ஜூலைத் திங்களில் மாநில அரசினுல் நியமிக்கப்பட்ட சட்ட அலுவலர்களின் பெயர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| தொடர் எண்ணும் சட்ட அலுவலரின் பெயரும். | நியமிக்கப்பட்ட பதவியின் பெயர். | நியமனம் செய்யப்பட்ட நாள். |
|---|---|---|
| **உயர் நீதி மன்றம்.** | | |
| 1 திரு. எஸ். கோவிந்தசாமி நாதன். | மாநில அரசு தலைமை வழக்கறிஞர். | 9- 7-1969 |
| 2 திரு. வி. ராமசுவாமி .. | அரசு குற்ற விசாரணை வழக்கறிஞர். | 9- 7-1969 |
| 3 திரு. எஸ்: மோகன் .. | அரசு வழக்கறிஞர் .. | 9- 7-1969 |
| 4 திரு ஜி. ராமசாமி .. | அரசுக் கூட்டு வழக்கறிஞர் | 9- 7-1969 |
| 5 திருவாளர்கள் கே. வேங்கடசாமி, கே. குமாரசாமி பிள்ளை, கே. எஸ். பக்தவத்சலம், டி. சத்தியதேவ். | உதவி அரசு வழக்கறிஞர்கள். | 9- 7-1969 |
| 6 திரு. பி. ராசமாணிக்கம் .. | அரசு குற்ற விசாரணை கூட்டு வழக்கறிஞர். | 13- 7-1969 |
| **வெளியூரிலும் மாநகரிலும் உள்ள செஷன்ஸ் நீதிமன்றங்கள்.** | | |
| 7 திருமதி பத்மினி ஜேசுதுறை | அரசு குற்ற விசாரணை வழக்கறிஞர், திருநெல்வேலி. | 1- 6-1969 |
| 8 திரு. ராமையன் .. .. | அரசு குற்ற விசாரணை கூட்டு வழக்கறிஞர், திருச்சிராப்பள்ளி. | 4- 6-1969 |
| 9 திரு எம். கந்தசாமி .. | அரசு குற்ற விசாரணை கூட்டு வழக்கறிஞர், கோயம்புத்தூர். | 4- 6-1969 |
| 10 திரு கே. காளியப்பன் .. | உதவி செஷன்ஸ் நீதி மன்றத்திற்கு அரசு குற்றவிசாரணை கூட்டு வழக்கறிஞர், கோயம்புத்தூர். | 16- 6-1969 |
| 11 திரு கால்வின் ஜாகுப் .. | நாகப்பட்டினம் சிறப்பு முதல் வகுப்பு மாஜிஸ்டிரேடின் கூட்டு நீதி மன்றத்திற்கு அரசு குற்ற விசாரணை சிறப்பு வழக்கறிஞர். | 20- 6-1969 |
| 12 திரு சி. பி. துரைபதி .. | சிறப்பு வழக்குகளை விசாரணை செய்வதற்காக, சென்னை இரண்டாவது செஷன்ஸ் கூட்டு நீதி மன்றத்திற்கு அரசு குற்ற விசாரணை சிறப்பு வழக்கறிஞர். | 30- 6-1969 |



2nd March 1970]

| தொடர் எண்ணும் சட்ட அலுவலரின் பெயரும். | நியமிக்கப்பட்ட பதவியின் பெயர். | நியமனம் செய்யப்பட்ட நாள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **வெளியூரிலும் மாநகரிலும் உள்ள செஷன்ஸ் நீதிமன்றங்கள் —தொடர்ச்சி.** | | |
| 13 திரு டி. கோவிந்தராஜுலு. | சென்னை மாநகர் செஷன்ஸ் நீதி மன்றத்திற்கு மாநகர் அரசு குற்ற விசாரணை வழக்கறிஞர் (அவருக்கு பதிலாக திரு. கால்வின் ஜாகுப் முறையாக நியமிக்கப்பட்டுள்ளார்). | 19- 7-1969 |
| 14 திரு பி. மாணிக்கவாசகம். | சிறப்பு வழக்கு ஒன்றை விசாரணை செய்வதற்காக, தஞ்சாவூர் உதவி செஷன்ஸ் நீதி மன்றத்திற்கு அரசு குற்ற விசாரணைசிறப்பு வழக்கறிஞர். | 24- 7-1969 |

### நியமன அடிபடைக் கோட்பாடுகள்.

| | |
|---|---|
| 1 மாநில அரசுத் தலைமை வழக்கறிஞர். | ஒரு உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக நியமிப்பதற்கு தகுதியுடைய ஒருவரை மாநில அரசுத் தலைமை வழக்கறிஞராக மாநில ஆளுநர் அவர்கள் இந்திய அரசியலமைப்பின் 165 (1) பிரிவின் கீழ் நியமிக்கலாம். அரசு தலைமை வழக்கறிஞர் பதவியில் இருப்பது ஆளுநரின் விருப்பத்தைப் பொறுத்தது என்று 165 (3) பிரிவில் கூறப்பட்டுள்ளது. |
| 2 அரசு வழக்கறிஞர், அரசுக் கூட்டு வழக்கறிஞர், அரசு உதவி வழக்கறிஞர்கள், அரசு குற்ற விசாரணை வழக்கறிஞர்கள், அரசு குற்ற விசாரணை கூட்டு வழக்கறிஞர்கள். | வழக்கறிஞர் மன்றத்திலிருந்தோ அல்லது நீதித்துறை அலுவலர் ஒருவரை மாற்றுவதன் மூலமாகவோ சட்ட அலுவலர் ஒருவரை நியமிக்க அரசுக்கு அதிகாரம் உண்டு. நீதித்துறை அலுவலர் என்பது மாவட்ட செஷன்ஸ் நீதிபதியைக் குறிக்கும். அவர் இந்திய நாட்டியல் பணியின் உறுப்பினராகவோ, உதவி நீதிபதியாகவோ சென்னை தலைமை மாநகர் மாஜிஸ்டிரேடாகவோ, சென்னை மாநகர் உரிமை வழக்கு நீதி மன்றத்தின் நீதிபதியாகவோ சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்தின் உயர் நீதிமன்றத் துணை நடுவராகவோ (Puisne Judge) அல்லது சென்னை, அரசுப் பொறுப்பேற்றச் சொத்தின் ஆட்சியாளர் பொறுப்புச் சொத்து ஆட்சியாளராகவோ இருக்கக் கூடாது. நீதித்துறை அலுவலரை மாற்றி நியமனம் செய்யும் தேர்வுகளில், அப்படி நியமனம் செய்யப |

| தொடர் எண்ணும் சட்ட அலுவலரின் பெயரும். (1) | நியமிக்கப்பட்ட பதவியின் பெயர். (2) | நியமனம் செய்யப்பட்ட நாள். (3) |
|---|---|---|
| **நியமன அடிப்படைக் கோட்பாடுகள்—தொடர்ச்சி.** | | |
| | படும் அலுவலர் அவர் நியமனம் செய்யப்படும் நாளன்று குறைந்தது 5 (ஐந்து) ஆண்டு காலமாவது நீதித் துறை அலுவலராக இருந்திருக்க வேண்டும். வழக்கறிஞர் மன்றத்திலிருந்து நியமிக்கப்படும் ஒருவர் உயர் நீதி மன்றத்தின் வழக்கறிஞராக இருக்க வேண்டும், இந்த இரண்டு தேர்வுகளிலும் 60 (அறுபது) வயது பூர்த்தியடைந்தவர்கள் சட்ட அலுவலராக நியமிக்கப்படமாட்டார்கள். | |
| 3 அரசு குற்ற விசாரணைவழக்கறிஞர் வெளியூர் நீதி மன்றங்களிலும் மாநகர் செஷன்ஸ் நீதி மன்றங்களிலும் உள்ள அரசு குற்ற விசாரணை சிறப்பு வழக்கறிஞர்களும். மாநகர் அரசு குற்ற விசாரணை வழக்கறிஞர்களும். | ஆட்சித் தலைவர், மாவட்ட நீதிபதி ஆகியோர்களின் ஆலோசனையுடன் ஏழு ஆண்டுகளுக்குக் குறையாமல் வழக்கறிஞராக இருக்கும் வழக்கறிஞர் மன்றத்தின் உறுப்பினர்களிலிருந்து வெளியூரில் உள்ள அரசு குற்ற விசாரணை வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுகின்றனர். சென்னை, காவல் துறை கமிஷனர் செஷன்ஸ் நீதிபதி ஆகியோருடன் கலந்தாலோசித்து வழக்கறிஞர் மன்றத்திலிருந்து நேரடியாகத் தெரிந்தெடுப்பதன் மூலமோ அல்லது தலைமை மாநில குற்ற விசாரணை உதவி வழக்கறிஞர்கள், மாநில குற்ற விசாரணை உதவி வழக்கறிஞர்கள், அரசு குற்ற விசாரணை உதவி வழக்கறிஞர், தரம் I ஆகியோரிலிருந்தும் தமிழ்நாடு நீதித் துறை, பணி உறுப்பினர்களில் இருந்து மாற்றுவதன் மூலமோ மாநகர் அரசு குற்ற விசாரணை வழக்கறிஞரின் பதவிக்கு நியமனங்கள் செய்யப்படுகின்றன. அவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் 50 வயதைப் பூர்த்தி செய்திருக்கக் கூடாது. | |

## APPENDIX II.

(Vide answer to starred question No. 124 on page 211)

மத்திய சிறைகளைப் பார்வையிடும் அரசுச் சார்பற்ற பாார்வையாளர்கள் அரசுச் சிறைப் பார்வையாளர்கள், ஆகியோரை நியமிப்பதில் பின்பற்றப்படும் கோட்பாடுகள்.

### அரசுச் சார்பற்ற பார்வையாளர்கள்.

தமிழ்நாடு சிறை, சீர்த்திருத்தப்பள்ளி நடைமுறை நூல், தொகுதி II-ல் கண்டுள்ள விதிகளின்படி, சென்னை மாநகரத்தில் மத்திய சிறைக்கு காவல்துறைக் கமிஷனரைக் கலந்து கொண்டும், மற்ற சிறைகளைப் பொறுத்த மட்டில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கலந்து



கொண்டும், சிறைத் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலின் பரிவுரையின் பேரிலும், அரசுச் சார்பற்ற பார்வையாளர்களை அரசு நியமிக்கிறது. சாதாரணமாக சென்னை மத்திய சிறைச்சாலைக்கு அரசுச் சார்பற்ற சிறைப் பார்வையாளாகள் பதின்மரும் மற்று மத்திய சிறைச்சாலைகள் ஒவ்வொன்றுக்கும் அறுவரும் இருக்க வேண்டும். தவிர பெண் கைதிகள் காவலில் வைக்கப்பட்டுள்ள மத்திய சிறைச்சாலை ஒவ்வொன்றுக்கும் பெண் பார்வையாளர்களும், வேலூரில் உள்ள பெண்களுக்கான மாநிலச் சிறைக்கு 5 பெண் பார்வையாளர்களும் இருக்கவேண்டும். இருப்பினும் எந்த ஒரு சிறையைப் பொறுத்தும், அரசுச் சார்பற்ற பார்வையாளர்களின் எண்ணிக்கையை அரசு தங்களுக்குப் பொருத்தமென்று கருதும் வண்ணம் முடிவு செய்யலாம். அரசுச் சார்பற்ற பார்வையாளர் ஒவ்வொருவரும் ஈராண்டுக் காலத்திற்கு நியமிக்கப் படுகிறார்.

சமூகப் பணிகளில் பற்றுடையோர் அரசுச் சார்பற்ற பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர்.

### மாநிலம் முழுவதற்குமான சிறைப் பார்வையாளர்கள்.

மாநிலம் முழுவதற்குமான சிறைப்பார்வையாளர்கள் எவ்வளவு பேர் நியமிக்கப்பட வேண்டுமென்பது திட்டவட்டமாக வரையறுக்கப்படவில்லை. சமூகப் பணிகளைச் செய்வதில் அக்கறையுடையவரும், அவருடைய தொழில் தன்மையால், அவருடைய சொந்தச் செலவிலேயே மாநிலம் முழுவதும் எந்தச் சிறையையும் சென்று பார்வையிடக் கூடியவருமான எவரும் அரசுச் சிறைப் பார்வையாளராக நியமிக்கப்படலாம் என்பதுதான் பொதுவாகப் பின்பற்றப்படும் கொள்கையாகும்.

## APPENDIX III

(Vide answer to starred question No. 125 on page 212)

(அ) 173 ஊதியம் பெரு மாநில குற்றவிசாரணை நீதிபதிகளும் 32 மாநிலச் சிறப்பு ஊதியம்பெரு குற்றவிசாரணை நீதிபதிகளும் நியமிக்கப் பட்டனர்.

(இ) மாநில ஊதியம்பெரு குற்ற விசாரணை நீதிபதிகளின் நியமனங்கள், சென்னை மாநகரில், மாநிலத் தலைமைக் குற்ற விசாரணை நீதிபதியின் பரிவுரைகளின் மேல் அரசால் செய்யப்படுகின்றன. மதிப்பியல் குற்ற விசாரணை நீதிபதிகளாக நியமிக்கப்படவேண்டியவர் 65 வயதுக்குட்பட்டவராக இருக்கவேண்டும். சென்னை மாநகரில் மதிப்பியல் குற்றவிசாரணை நீதிபதிக்கான நியமனத்திற்கான குறைந்த வயது வரையறை 35 ஆகும். மதிப்பியல் குற்றவிசாரணை நீதிபதியாக நியமிக்கப்படுபவர் ஆட்சிமொழியில் போதிய அறிவுடையவராக இருக்கவேண்டியதுமன்றி சட்டங்களுக்குப் பொருள் விளக்கம் காண்பதில் வல்லவராகவும் இருக்கவேண்டும். அவர் அரசு சார்பற்றவராக இருப்பின் சிறந்த தகுதி பெற்றவராய் மக்களின் நம்பிக்கைக்குரியவராய் இருக்கவேண்டும். அவர் ஓய்வு பெற்ற அரசு பணியாளராயிருந்தால், பலதரப்பினரிடையே ஏற்படும் பூசல்களை விசாரித்து முடிவு எடுப்பதில் அனுபவம் உடையவாரக இருக்கவேண்டும், மற்றும் அவர் காவல்துறையில் பணியாற்றி இருக்கக்கூடாது.

## APPENDIX IV.

(Vide answer to starred question No. 127 on page 213)

### கிராம சேவகர்களின் கடமைகள்.

1. இவர் தனது பொறுப்பில் உள்ள கிராமங்களைப் பற்றிய தகவல்கள் எல்லாவற்றையும் சேகரிக்கிறார்.

(1) நிலவியல், பரப்பளவு குடியிருப்பிடங்கள், மக்கட்தொகை, பால், வயதுத் தொகுதி வகுப்புகள்.

[2nd March 1970

(2) கல்வி., நில உடமைகள், குத்தகைக் காலம், பாசன வாயில்கள், தொழில்கள், சங்கங்கள், தொகுதிகள், உட்கட்சிகள், கிராம நிறுவனங்கள், கிராமத் தலைவர்கள்.

பழக்கம், வழக்கங்கள், திருவிழாக்கள், கடந்த கால வரலாறு, அனுபவங்கள், வேளாண்மைப் பயிர்கள், நடைமுறைகள், மருத்துவம், பிற வசதிகள், கடன்கள் முதலியன.

இத்தகைய தகவல்கள் அடங்கிய ஆதாரப் பதிவேடுகளை வைத்து வருவதுடன் ஒவ்வோர் ஆண்டிலும் நாளது தேதி வரையில் தகவல் சேகரித்துவைத்து வருகிறார்கள்.

2. இவர் முறையாக எல்லா கிராமங்களுக்கும் சென்று பார்த்து கிராமத்தினருடன் அவர்களது சிக்கல்களைப் பற்றி விவாதித்து, அந்தச் சிக்கல்களுக்குத் தீர்வு காணுவதில் அவர்களுக்கு அக்கறை ஏற்படுத்தவும் செய்கிறார்.

3. அவர் வட்டார வளர்ச்சி அதிகாரியுடன் அன்றாடம் தொடர்பு வைத்துக்கொண்டு கிராமத்தினருக்குள்ள சிக்கல்களை நாள்தோறும் அவருக்குத் தெரிவித்து வருகிறார்.

4. கிராமத்தினர் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்குத் தொழில் நுட்ப உதவி பெற்று கிராம நல அதிகாரிகள் நடத்தும் பணி இருப்புப் பயிற்சிக் கூட்டங்களில் கலந்து கொண்டு கிராமத்தில் தாமே நேரில் சிக்கல்களைத் தீர்த்து வைக்கவும் கற்றுக் கொள்கிறார். மேலும் கிராம நல அதிகாரிகளை கிராமங்களுக்கு நேரிலும் எடுத்துச் செல்கிறார். அவருக்கு அவ்வப்போது கொடுகப்படும் நூல்களைப் படிப்பதன் மூலம் தொழில் நுட்ப வளர்ச்சிகளைப் பற்றி நன்கு தெரிந்து வைத்துக் கொள்கிறார்.

5. அவர் கிராமத்திற்காக திட்டங்களையும், வேலைத் திட்டங்களையும் தயாரிக்கிறார். இந்த வேலையில், அவர், கிராமத்தினரையும், கிராம நிறுவனங்களையும் ஈடுபடுத்தி, அவர்களிடையே உடன்பாடு ஏற்படுத்தி திட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சில பொறுப்புகளையும் அவர்களை மேற்கொள்ளச் செய்கிறார். இத்தகைய முயற்சிகளில், பலவகையான சமூக நலமுறைகளைப் பயன்படுத்துகிறார்.

6. கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க அவர் உதவுகிறார். ஏற்கெனவே அத்தகைய சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களில், பின்வருபவை குறித்து அவர் ஆலோசனை நல்குகிறார் :—

(i) விதைகள், ரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லிகள், பண்ணைக் கருவிகள் பங்கிட்டு அளித்தல்.

(ii) உற்பத்திக் கடன் வழங்குதல்.

(iii) பண்ணைக் பொருட்களை விற்பனை செய்தல்.

(iv) கூட்டுறவு பாசனத் திட்டங்கள்.

இவற்றைக் கூட்டுறவுகள் செய்ய முடியாதபோது வளர்ச்சு வட்டாரத் தலைமையிடத்தில் உள்ள வேளாண்மைத் துறையிடமிருந்து உதவிபெற்று இவற்றைக் குறித்த வேலைகளை இவரே ஏற்றுச் செய்கிறார்.

7. புதிய பயிர் முறைகளைப் பின்பற்ற மக்களைத் தூண்ட கீழ்க்காணும் சமூக நல முறைகளை இவர் பயன்படுத்துகிறார்.

இவற்றில் கட்புல விளக்கங்கள் மிகவும் முக்கியமானவை (தேசிய கட்புல விளக்கங்கள், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்றையோருக்கும் கொடுக்கப்படும் வேளாண்மை மானியங்களின் கீழ் கட்புல விளக்கங்கள் செய்து காட்டுதல்,

புலங்களுக்குய் வீடுகளுக்கும் சென்று பார்த்தல்.

தொகுதிக் கூட்டங்கள் பொதுக்கூட்டங்கள் நடத்துதல்.

நூல்களை வழங்குதல்.

திரைப்படக் காட்சிகள் நடத்த உதவுதல்.



2nd March 1970]

கிராம வானொலி அரங்குகளை நடத்துதல்.

பொருட்காட்சிகள், கால்நடைக் காட்சிகள் நடத்துதல்.

அவ்வப்போது இயக்கங்களும் வார விழாக்களையும் தொடங்கி வைத்தல்.

8. இளைஞர் சங்கம் அமைத்து, பொழுதுபோக்கு நடவடிக்கைகள், பயிர்ப்பாதுகாப்பு அணிகள், ஆய்வுச் சுற்றுலாக்கள் முதலிய வேலைகளில் கிராமங்களிலே நடவடிக்கைகளை இச்சங்கங்கள் மேற்கொள்ள அவர் தூண்டுகோலாக விளங்குகிறார்.

9. கிராம ஊராட்சியுடன் நெருங்கிய தொர்டபு கொண்டு பணியாற்றியும் வேளாண்மை உற்பத்தித் திட்டங்களை வகுக்கவும் அவற்றை நிறைவேற்றவும் இவர் உதவுகிறார்.

10. குடும்ப நலத் திட்ட வேலையில் நேரடியான அக்கறை எடுத்துக் கொண்டும், கருத்தடை முதலியவற்றைச் செய்து கொள்ள கிராமத்தினரை ஊக்குவிப்பதில் ஊராட்சிகளுக்கு உதவுகிறார்.

11. ஊராட்சி ஒன்றியத்துக்கான திட்டமிட்ட வேலைத் திட்டத்தின் கீழ் வரும் திட்டங்களை நிறைவேறறவும் "ஐந்தாண்டுத் திட்ட" துறைவாரித் திட்டங்களை நிறைவேற்றவும் வேளாண்மை, கால்நடை வளர்ப்புத்துறை சேமநல அதிகாரிகளுக்கு இவர் உதவியாக இருக்கிறார்.

12. வேளாண்மை மாவட்ட முனைப்புத் திட்டம் போன்ற சிறப்பு வகைப்பகுதிகளில், பண்ணைத் திட்டங்கள், கடன் முதலியவற்றை இவர் கவனித்து வருகிறார்.

13. மேலே விரிவாகச் சொல்லப்பட்ட வேளாண்மை வேலையைப் பொறுத்தமட்டில், வளர்ச்சி வட்டார நிலையில் விரிவான ஆண்டுத் திட்ட வேலை தயாரிக்கப்பட்டு இவருடைய நடவடிக்கைகள் இதன்பாற்பட்டு நடை பெறுகின்றன. திட்டங்கள் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடலாம். பொதுவான முக்கிய நடவடிக்கைகளின் சுருக்கம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

(i) தர விதைகள் கொள்முதல் செய்து பங்கிட்டு அளித்தல்.

(ii) விதை வளர்த்தல், செடிப் பண்ணை வளர்த்தல்பற்றி கட்புல விளக்கம் செய்து காட்டுதல்.

(iii) ரசாயன உரம் பங்கீட்டளிப்பதை நடத்துதல்.

(iv) மேம்படுத்தப்பட்ட பயிர் விளைச்சல் முறைகளைக் கொண்டு வருதல். (எடுத்துக்காட்டு : ஜப்பானிய நடவு முறை.)

(v) மேம்படுத்தப்பட்ட கருவிகள் செயல்படுவதைச் செய்து காட்டுதல்

(vi) ரசாயன உரம் பயன்படுத்தும் முறையைச் செய்து காட்டுதல்.

(vii) பயிர் பாதுகாப்பு முறைகளை உடனடியாக மேற்கொள்ளுதல்.

(viii) காய்கறி விதைகள், பழச் செடி நாற்றுகள் பகிர்ந்தளித்தல்.

(ix) பசுந்தழைப்பயிர்களை வளர்த்தல். பசுந்தழை மரங்களை நடுதல்.

(x) பழத்தோட்டம் ஏற்படுத்த உதவுதல்.

(xi) பல்வேறு திட்டங்களின் கீழ் வேண்டி அரசுக்குச் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை முறைப்படுத்தி அது குறித்து விசாரணை செய்தல்.

இத்தகைய நடவடிக்கைகளை பருவந்தோறும் மேற்கொள்ளப்படுகின்றன.

[2nd March 1970

கிராம சேவிகைகள் செய்யும் வேலைகள்.

1. தாய் சேய் நலம்.
2. குடும்பப் பராமரிப்பு.
3. உணவும் சத்துணவும்.
4. சுகாதாரமும், துப்புரவும்.
5. குடும்ப நலக் கல்வி.
6. சிறு சேமிப்பு.
7. வேளாண்மை உற்பத்தி, கால்நடை வளர்ப்பு.
8. சமுதாய நலப் பணிகள், கைப்பணி வகுப்புகள் நடத்துதல்.
9. ஊராட்சிகள், கூட்டுறவு—(பெண்கள் பங்கு கொள்ளுதல்).
10. வளர்ச்சி வட்டாரங்களில் நிகழும் எல்லா பொது நிகழ்ச்சிகள்.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Tuesday, the 3rd March* 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M.A. MANICKAVELU) in the Chair.

## I. OBITUARY REFERENCE TO THIRU K. T. M. AHAMED IBRAHIM, A FORMER MEMBER OF THE COUNCIL.

MR. CHAIRMAN : I am sorry to inform the House of the demise of Thiru K. T. M. Ahmed Ibrahim, a former Member of the Tamil Nadu Legislative Council, on January 30, 1970 at Tirunelveli Pettai.

He was a Member of the Tamil Nadu Legislative Council representing the Madras South Muslim Constituency during 1946-52. He was also a Member of the Constituent Assembly of India from 1946 to 1950. He was a great scholar in Arabic, Urdu, Tamil and Sanskrit. He was a Member of the Senate and Academic Council of the Annamalai University for six years.

He was General Secretary of the Madras Presidency Muslim League and the Secretary of Indian Union Muslim League.

On behalf of this House, I shall convey our deep sense of sorrow to the members of the bereaved family.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

Accordingly, the Members stood in silence for a couple of minutes.

## II. QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Gazetted Headmasters.*

*129 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether arrears of pay have been sanctioned to all Gazetted Headmasters in the Madras Educational Service whose probation has been declared as completed ; and

(*b*) if not, the reasons for the delay in disbursement ?

**அரசிதழ் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர்கள்**

**திரு. எம். ராஜா ஐயர் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு கல்விப் பணியில் உள்ளவர்களும், தகுதிகாண் பருவக் காலம் முடிந்துவிட்டதென அறிவிக்கப்பட்டவர்களுமான அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்கள் அனைவர்க்கும் சம்பள நிலுவைகள் கொடுக்கப்பட்டுள்ளனவா ?

(இ) இல்லையெனில், அவற்றை வழங்குவதில் கால தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

[3rd March 1970

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம். ஆனால் சம்பள நிலுவைத் தொகைகள் அவர்களுக்கு இன்னும் அளிக்கப்படவில்லை.

(இ) சில அலுவலர்கள் தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட்டது குறித்து, தமிழ் நாடு மாநிலக் கணக்கு ஆய்வாளர் சில தணிக்கை மறுப்புரைகளை அனுப்பியுள்ளார். இது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநருக்கும், மாநிலக் கணக்கு ஆய்வாளருக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து வந்தது. சம்பள நிலுவை அளிப்பதற்கு மாநிலக் கணக்காய்வாளருக்கு இயலும் வகையில் சில விதிகள் தளர்த்தப்பட வேண்டுமென அவர் இப்பொழுது ஆலோசனை கூறியுள்ளார். அவ்வண்ணமே விதிகளைத் தளர்த்தி இப்போது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சம்பள நிலுவை அளிப்பதற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் மாநிலக் கணக்கு ஆய்வாளர் ஆணைகளை விரைவில் பிறப்பிப்பார்.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, பொதுவாகவே இந்த "புரொபேஷன்" பூர்த்தி செய்த பிறகு, அவர்களுக்குச் சம்பளக் கூடுதல் கொடுப்பதற்கு மிகவும் அதிகமான காலதாமதமாகிறது என்ற புகார் இருக்கிறது. அந்தக் குறையை அரசாங்கம் நீக்க நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதைப் பொறுத்து, அக்கவுண்டண்ட் ஜெனரல் அவர்கள் சில விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று கூறினார்கள். அது இப்போது தளர்த்தப்பட்டு விட்டது. அவர்களுடைய அனுமதிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவில் அவர்களுடைய உத்தரவு வந்த பிறகு, அது அளிக்கப்படும்.

### *Admission of women students in Colleges.*

*130 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether women students will be admitted into the colleges to be opened in other places except Madras City ; and

(b) the procedure followed at present ?

### கல்லூரிகளில் மாணவிகளைச் சேர்த்தல்

**திரு. எம். சங்கரலிங்கம்பிள்ளை (திரு. வி. ஈஸ்வரமூர்த்தி சார்பில்)** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை நகரைத் தவிர மற்ற இடங்களில் புதிதாகத் திறக்கப்படும் எல்லாக் கல்லூரிகளிலும் பெண்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்களா ?

(இ) இதில் இப்போதுள்ள நடைமுறைக் கொள்கை என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) ஆண்கள் கல்லூரிகளில் கல்லூரிப் புகுமுக வகுப்புகளில் மாணவிகளைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்றும், மிக அண்மையில் தகுந்த மகளிர் கல்லூரி இல்லாதிருந்தால் போதிய வசதிகள் கிடைக்க வகை செய்வதற்குட்பட்டு, பட்டப்படிப்பு வகுப்புகளில் மாணவிகளைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் சென்னைப் பல்கலைக் கழகம் வரையறுத்துள்ளது. அண்மையில் மகளிர் கல்லூரிகள் இருக்குமேயானால், அக்கல்லூரிகளில் கற்றுக்கொடுக்கப்படுகிற பாடத் துறைகளைப் பொறுத்தவரை ஆண்கள் கல்லூரிகளில் மாணவிகளைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. ஆண்கள் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகளில் மாணவிகளைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆண்கள் கல்லூரிகளில் பெண்களைச் சேர்த்துக் கொள்ள மதுரைப் பல்கலைக் கழகம் அனுமதிப்பதில்லை.



3rd March 1970]

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, சில நகரங்களில் பல மைல்கள் தொலைவில் பெண்கள் கல்லூரி இல்லாததால், புதிதாக ஒரு பெண்கள் கல்லூரி வந்து பெண்கள் கல்விக்கு உதவும் வரையில் ஆண்கள் கல்லூரிகளில் மாலை நேர ஷிப்டு அல்லது காலை நேர ஷிப்டு என்று வைக்கலாம். காலை 10 மணி முதல் 4 மணி வரையில் இப்போது உள்ளதை 7 மணி முதல் 1 மணி வரையிலும் பெண்களுக்கும், 2 மணி முதல் 7 மணி வரை அல்லது 8 மணி வரையில் ஆண்களுக்கும் என்று வைத்து ஒரே கட்டிட வசதி, மற்ற வசதிகளைக் கொண்டு இரு பாலாருக்கும் கல்வி கற்பிக்க வசதி செய்ய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இது பல்கலைக் கழகத்தினுடைய முடிவைப் பொறுத்திருக்கிறது. கட்டிடங்கள், மற்றச் செலவுகளைக் குறைப்பதற்கு "ஷிப்டு", அதாவது மாற்று முறை, வந்தால் நல்லது என்ற யோசனையை நான் சொல்லி வருகிறேன். பல்கலைக் கழகத்துணைவேந்தர் இப்போதிருக்கிற நிலைமையைக் கொண்டே சமாளிக்கலாம் என்று கருத்து தெரிவித்தார்கள். இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரையில், புகுமுக வகுப்பில் பெண்களைச் சேர்க்கக்கூடாது என்ற கருத்து டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் துணை வேந்தராக இருந்த காலத்திலிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அடுத்து, பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்புகளில் வேண்டுமென்றால் சேர்த்துக் கொள்ளலாம் என்றும், ஆனால் பெண்கள் தங்குவதற்கு இடவசதி போன்றவைகளைத் தந்தால், அந்த மேல் வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் விதி வைக்கப்பட்டிருக்கிறது. புகுமுக வகுப்பிலும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகத் துணை வேந்தரிடத்திலும் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரைப் பல்கலைக் கழக சிண்டிகேட்டில் உறுப்பினராக இருப்பதால், பல்கலைக் கழகம் அவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளச் செய்து, அப்படிப் பல்கலைக்கழகம் முன் வந்தால், அதை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தயங்காது.

**திரு. எம். ராஜா அய்யர் :** பட்டப்படிப்பிலும், மேல் படிப்பிலும் பெண்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, அதிலேயே ஆண்களைச் சேர்த்துக் கொள்வதில் தடையில்லை. பி.யு.சி. வகுப்பில் பெண்களைச் சேர்த்தாலும் கூட, ஆண்களின் இடத்தை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். இந்த மாதிரி இடங்களில் பி.யு.சிக்கு என்று தனி பெண்கள் கல்லூரி ஆரம்பிக்க அரசாங்கம் இப்போதுள்ள விதிகளைத் தளர்த்த வேண்டும். சாதாரணமாக 5 லட்சம் ரூபாய் வேண்டுமென்று கேட்காதபடி, பி.யு. சி. பெண்கள் கல்லூரி அமைக்க ஆங்காங்கு விதிகளைத் தளர்த்திக் கொடுக்க வேண்டும். எங்கெங்கு மகளிர் கல்லூரி இல்லையோ அங்கெல்லாம் பி.யு.சி. மகளிர் கல்லூரி வருவதற்கு விதிகளைத் தளர்த்த அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பெண்களுக்கு என்று தனியாக புகுமுக வகுப்புக்கு கல்லூரி ஆரம்பிப்பது என்றாலும், தனியாக அதற்கும் செலவாகும். அதை ஆரம்பித்தாலும், பிறகு இதே கல்லூரியில் பி.ஏ., பி.எஸ்.ஸி. படிக்கத்தான் வருவார்கள். அது பி.யு.சி. யாகவே நின்றுவிடாது. ஆங்காங்கு ஆண்களுக்குக் கல்லூரி ஆரம்பிக்கும் போது, பி.எஸ்.ஸியில் சேர்த்துக் கொள்ளும்போது, பள்ளி இறுதி வகுப்பு வரையிலும் சேர்த்துக் கொள்ளும்போது, அவற்றிற்கு இடையில் உள்ள இந்தப் புகுமுக வகுப்பில் மட்டும் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்று கூறுகிறோம். எங்கெல்லாம் பி.யு.சி. பெண்கள் கல்லூரி இல்லையோ, அந்த ஊர்களில் மட்டும், குறிப்பாக பெண்கள் 200 அல்லது 300 பேர்கள் இருந்தால், அந்த நிலைமை ஏற்பட்டால், ஆண்கள் கல்லூரியிலிருந்து பிரித்து, பெண்கள் கல்லூரி அமைப்பதற்கு முயற்சி செய்யலாம். இதைத் தான் சிந்திக்குமாறு பல்கலைக் கழகத் துணை வேந்தரிடம் கூறியிருக்கிறேன். அது அவருடைய பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வஹாப் :** மருத்துவக் கல்லூரியிலும் மற்ற பி. ஏ., பி.எஸ்.ஸி. படிப்பு உள்ள கல்லூரிகளிலும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்க அனுமதிக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியிருக்கும்போது, பி.யு.சி.யில் சேர்க்கப்பட்டால் என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தக் கருத்தைத் தான் துணை வேந்தரிடத்தில் சொல்லியிருக்கிறேன். மதுரைப் பல்கலைக் கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் கூடி ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். அதை மீண்டும் பரிசீலனை செய்தால், எந்தெந்த ஊர்களில் ஒரே கல்லூரி மட்டும் அமைந்திருக்கிறதோ, அங்கெல்லாம் இதை அமைக்க முயற்சி செய்யலாம். பெண்கள் கல்லூரிக்காக 30 மைல், 40 மைல் வரை செல்ல வேண்டியிருக்கிறது. குறிப்பாக, அரியலூர் போன்ற இடங்களிலுள்ளவர்கள் அந்தக் குறையைக் கூறுகிறார்கள். சிலபல நிபந்தனைகளின் அடிப்படையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, அவர்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று அனுமதி அளிக்க வேண்டுமென்று பல்கலைக் கழகத்தைக் கேட்டிருக்கிறேன். அதைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஆராய்ந்து வருகிறார்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, have the Government considered the question whether restricting admission to women to these colleges is Constitutional ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அரசியல் சட்டப்படி ஒத்து வருகிறதா இல்லையா என்பதில்லை. வசதிக்கு ஏற்பத்தான் வைத்திருக்கிறோம். அதன்படி பல்கலைக் கழகம் ஒரு முடிவு ஏற்படுத்தியிருக்கிறது. அந்த முடிவின்படி நடக்க வேண்டியது அரசாங்கத்தினுடைய பொறுப்பாக இருக்கிறது. பல்கலைக்கழக சிண்டிகேட் இதைப்பற்றிச் சிந்தித்து, பெண்களைச் சேர்த்துக் கொள்ள வழிவகை செய்ய வேண்டுமென்று முயற்சித்து வருகிறது.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I bring to the notice of the Hon. the Minister for Education that there was a case in Madras, when the Manipal College was affiliated to the Madras University, of a lady having filed a case in the Madras High Court and got herself admitted for the first time in the Udipi College and it was upheld by the Court, Justice Subba Rao delivering the judgement? Will the Government, therefore, consider whether it would be right for them to impose any restriction on women being admitted to these colleges ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் போன்ற வழக்குகளைப் பற்றிய விவரம் எனக்குத் தெரியவில்லை. இப்போது அரசியல் சட்டத்தில் உரிமை இருக்கிறதா இல்லையா என்ற இடத்திற்குப் போகவில்லை. இங்குள்ள நிலைமைகளைப் பொருத்து, வசதிகளைப் பொருத்து, பெண்கள் கல்லூரியில் பெண்களும், ஆண்கள் கல்லூரியில் ஆண்களும் இருக்க வேண்டுமென்று முன்பிருந்த பல்கலைக் கழகத் துணை வேந்தரும் சிண்டிகேட்டும் கருத்து கொண்டிருந்தனர். புகுமுக வகுப்பில் சேருகின்ற மாணவர்கள் அதிலேயே பெண்களும் சேர்க்கப்படும் நிலைமை வருமானால், வேறு பல கவர்ச்சிகளோடு இந்த கவர்ச்சியும் சேர்ந்து படிப்பிற்குப் பாதகம் ஏற்படுமோ என்று தான் பெண்களை ஆண்கள் கல்லூரியில் சேர்க்கக் கூடாது என்ற விதியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அரசியல் சட்டப்படி விதிகள் உரிமைகள் பாதிக்கப்படுகிறதா இல்லையா என்பதல்ல. வசதியைப் பொருத்துத்தான் முடிவெடுக்கப்படுகிறது.

**திரு. கே. ராஜாராம் :** பல மாணவிகளின் பெற்றோர்கள் தங்கள் பெண்கள் தனியான பெண்கள் கல்லூரியில்தான் படிக்க வேண்டுமென்றும் ஆண்கள் கல்லூரியில் படிக்கக் கூடாது என்றும் எண்ணுகிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?





**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அப்படி எண்ணுகிறவர்கள் எங்கே பெண்கள் கல்லூரி இருக்கிறதோ அங்கே தங்கள் பெண்களைச் சேர்க்கலாம். சில பெற்றோர்கள் துணிந்து தங்கள் பெண்கள் ஆண்கள் கல்லூரியில் படிக்க வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். பெண்களும் விரும்புகிறார்கள். மாணவர்களும் பெண்கள் சேர்ந்து படித்தால் நன்றாக இருக்குமென்று கருதுகிறார்கள். அப்படிப்பட்ட இடத்தில் அதற்கான வசதிகள் ஏற்படுத்த முடியுமா என்பதுதான் இப்போதைய கேள்வி.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, 1952-54-ம் ஆண்டில் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அந்தக் காலத்தில் இதே மாதிரி ஒரு கேள்வி வந்ததாக எனக்கு ஞாபகம். அப்போது புகுமுக வகுப்பு என்பது இல்லை. இண்டர்மீடியேட் என்றிருந்தது. அந்த வகுப்புகளில் பெண்களையும் ஆண்களையும் சேர்க்கக் கூடாது என்றும், அது பெண்கள் வாழ்க்கையில் அபாயகரமான கட்டம் என்றும் அவர்கள் கூறினார்கள். மேல் வகுப்பில் வேண்டுமானால், இரண்டு பாலாரும் சேர்ந்து படிக்கலாம். இந்த பி.யு.சி.யில் மிக்ஸட் முறையில் அனுமதிப்பது நல்லதல்ல என்று ராஜாஜி தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட அறிவாளிகள் தெரிவித்த கருத்துக்கு ஏற்ப, புகுமுக வகுப்பில் பெண்களைச் சேர்க்காமல் இருக்க சர்க்கார் முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த முறை தான் இப்போது இருக்கிறது. அதைத் தளர்த்த வேண்டுமென்றுதான் மற்றவர்கள் கோருகிறார்கள். ஒரு வருடம் தாண்டியதற்குப் பிறகு பி.ஏ. வகுப்பில் சேரலாம் என்றிருக்கும்போது, அங்கே என்ன ஆபத்து ஏற்படுமோ அந்த ஆபத்து இப்போதும் ஏற்படலாம். பெண்களும் படிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அப்படி விரும்புகின்றவர்களுக்கு அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தரலாம் என்று பல்கலைக் கழகத்திடம் கேட்கப்பட்டு அது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

*Engineers.*

*131 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the number of posts of Superintending and Executive Engineers kept vacant as on 11th September 1969 in the Department of Public Health Engineering and Municipal Works ?

பொறியாளர்கள்

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

பொதுச் சுகாதாரப் பொறியியல்-நகராட்சிப் பணிகள் துறையில் 11-9-1969 அன்று காலியாக வைக்கப்பட்டிருந்த மேற்பார்வைப் பொறியாளர், நிர்வாகப் பொறியாளர் பதவிகள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இரண்டு நிர்வாகப் பொறியாளர் பதவிகள் 11-9-1969-ல் காலியாக இருந்தன. மேற்பார்வைப் பொறியாளர் பதவி அந்தத் தேதியில் காலியாக இல்லை.

*Craft Instructors.*

*132 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that recoveries from salaries of Craft Instructors in former District Board High Schools in Coimbatore district were ordered by the Special District Educational Officer, Coimbatore in March 1968 consequent on the reduction of their scale of pay ;

(*b*) whether representations have been received from the aggrieved Teachers ;and

(*c*) if so, the action taken thereon ?

[3rd March 1970

**கைத் திறப்பணி ஆசிரியர்கள்**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன். :

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் முன்னுள் மாவட்ட வாரிய உயர் நிலைப் பள்ளிகளில் பணி ஆற்றிய கைத்திறப்பணி ஆசிரியர்களின் ஊதிய வீதங்கள் குறைக்கப்பட்டதன் விளைவாக அவர்களது ஊதியத்திலிருந்து தொகைகள் பிடித்துக் கொள்ளுமாறு 1968-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் கோயம்புத்தூர் மாவட்டக் கல்வி சிறப்பு அதிகாரி ஆணையிட்டது உண்மையா ?

(இ) இதனுல் துன்பமடைந்த ஆசிரியர்களிடமிருந்து முறையீடுகள் பெறப்பட்டுள்ளனவா ?

(உ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவ்டிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தொழில் ஆசிரியர்களுக்கு உபரியாக வழங்கிய ஊதியத்தை திரும்ப வசூலிக்காமலிருப்பதற்கான ஆணையை அரசு பிறப்பித்துள்ளது

*Municipal High School, Aruppukottai.*

*133 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Aruppukottai Municipality has passed a resolution permitting a private Management to run the Municipal High School ; and

(b) if so, the steps taken by the Government in this regard ?

**அருப்புக்கோட்டையில் உள்ள நகராட்சி உயர்நிலைப்பள்ளி**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அருப்புக்கோட்டையிலுள்ள நகராட்சி உயர்நிலைப் பள்ளியை தனியார் நடத்துவதற்கு, அந்த நகராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றி யுள்ளதா ?

(இ) ஆம் எனில், அது பற்றி அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

*Salary of the Private Elemen ary and Middle School Teachers.*

*134 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether any representation had been received to the effect that the salary of the Private Elementary and Middle school teachers should be disbursed as before by the District Educational Officer, instead of it being disbursed through the Commissioner of Panchayat Union ; and

(b) if so, the action taken thereon ?



3rd March 1970]

**தனியார் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குள்ள சம்பளம்**

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தனியார் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக் குரிய சம்பளம் பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆணையர் மூலமாக இல்லாமல் மாவட்டக் கல்வி அதிகாரி மூலமாக முன் போல் சம்பளம் வழங்க வேண்டு மென கோரி முறையீடு ஏதேனும் வந்ததுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(ஆ) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள மானியம் பெறும் தொடக் கப் பள்ளிகளுக்கு மானியம் வழங்குவது, 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் விதித்துறைகளுக்கு உட்பட்டதாகும். இதில் மாற்றங்கள் செய் யும் செயற்குறிப்பு எதுவுமில்லை.

MR. CHAIRMAN : We will now go to question 140.

*Fodder Development and dairy development.*

*140 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) when the proposal for subsidies for fodder development and dairy development for the year 1968-69 were received by the Government from the Director of Animal Husbandry ;

(b) when the funds for these subsidies were released ;

(c) whether any part of these funds stand lapsed ; and

(d) if so, whether it was due to any delay in the relase of the funds ?

**தீவன வளர்ச்சி, பால்பண்ணை மேம்பாடு**

**திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம்)** சார்பில்: மாண்புமிகு உணவு-வணிக வரி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தீவன வளர்ச்சிக்காகவும், பால் பண்ணை மேம்பாட்டிற்காகவும் 1968–69-ஆம் ஆண்டிற்கான உதவித் தொகைகள் குறித்த செயற்குறிப்பு கள் கால் நடை வளர்ப்பு இயக்குநரிடமிருந்து அரசினுல் எப்பொழுது பெறப்பட்டன ?

(இ) இந்த உதவித் தொகைகளுக்கான நிதி எப்பொழுது வழங்கப் பட்டது ?

(உ) இந்த நிதிகளில் எப்பகுதியேனும் காலம் கடந்ததாகி விட்டதா ?

(எ) ஆம் எனில், அந்தத் தொகைகளை வழங்குவதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டதுதான் அதற்குக் காரணமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டப் பகுதியில் தீனி மேம்பாடு, பால் பண்ணை மேம்பாடு, ஆகியவை குறித்து உதவித் தொகை வழங்குவதற்கான முழுமையான செயற்குறிப்புகள், 1968-ம் ஆண்டு நவம்பர் திங்களில் கால்நடை வளர்ப்புத் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டன.

(இ) இச்செயற்குறிப்புகளுக்கு ஒப்புதல் வழங்கி ஆணைகள் 1969-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் பிறப்பிக்கப்பட்டன.

(உ) ரூ. 1,69,153.70 காலம் கடந்ததால் செலவு செய்யப்பட வில்லை.

(எ) இயக்குநரிடமிருந்து முழுமையான செயற்குறிப்புகள் வருவதில் காலதாமதம் ஏற்பட்டதனுலும் தமிழ் நாட்டில் ஏராளமான பகுதிகளில் வறட்சி நிலவியதன் காரணமாகவும், ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்த இயலவில்லை.

[3rd March 1970

*Intensive Cattle Development Project.*

*141 Q.—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :—

(a) whether there is a propaganda wing attached to the Intensive Cattle Development Project as it is attached to the Intensive Agricultural District Programme ; and

(b) if not, whether there is any proposal to start such a wing ?

**கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டம்**

**141. திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம்** *சார்பில்*) : *மாண்புமிகு உணவு-வணிக வரி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—*

(அ) வேளாண்மை மாவட்ட மும்முரத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ள செய்திப் பரப்புப் பிரிவு போல் கால்நடை வளர்ச்சி மும்முரத் திட்டத்துடன் செய்திப் பரப்புப் பிரிவு ஒன்று இணைக்கப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில் அத்தகைய செய்திப் பரப்புப் பிரிவு ஒன்றைத் துவக்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை, ஐயா.

(இ) இல்லை, ஐயா.

*Poultry Farms.*

*142 Q.—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether the Government have ordered the closure of several poultry farms ; and

(b) if so, the reasons for such closures ?

**கோழிப் பண்ணைகள்.**

**திரு. வி. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** *மாண்புமிகு உணவு-வணிக வரி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—*

(அ) பல கோழிப் பண்ணைகளை மூடிவிட அரசு உத்தரவிட்டிருக்கிறதா ?

(இ) ஆமெனில், மூடுவதற்கான காரணங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. ப உ. சண்முகம் :** (அ) ஆம். இம்மாநிலத்தில் உள்ள கோழி வளர்ச்சிப்பண்ணைகள் முப்பத்தைந்தினை மூடிவிடுமாறு அண்மையில் அரசு ஆணையிட்டுள்ளது.

(இ) இந்தக் கோழி வளர்ச்சிப் பண்ணைகள் செயல்படுவது குறித்துத் தொடர்பான அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, ஆய்வு செய்தபின்னர், மேம்படுத்த இயலாதவையும் உரிய ஆதாயம் தராதவையுமான பண்ணைகளை மூடிவிடுவதெனவும் எஞ்சியுள்ள கோழி வளர்ச்சிப்பண்ணைகள் சிக்கனமாகச் செயல்படும் வகையில் சீரமைக்கப்பட வேண்டுமென்றும் அரசு முடிவுசெய்தது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர்அவர்களே, மூடப்பட்ட கோழிப்பண்ணைகளுக்குச் சொந்தமான இடங்களையும் கட்டிடங்களையும் எதற்குப் பயன்படுத்தப்போவதாக அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.



3rd March 1970]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, ஒரு இடத்தை நெல்லை மாவட்டத்தில் என்று கருதுகிறேன்—கல்லூரிக்குக் கேட்டிருக்கிறார்கள். அபபடியே அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது. இன்னொரு இடத்தில் விற்பனை வரி இலாக்காவுக்குக் கேட்டதன் பேரில், அதற்கும் அரசாங்கம் ஒத்துக் கொண்டிருக்கிறது. பாக்கி இருக்கிற இடங்களில் மீண்டும் கோழிப் பண்ணை துவக்கலாமா என்ற பரிசீலனை நடந்துகொண்டிருக்கிது. இநத அரசாங்கத்தின் கொள்கை மாவட்டத்திற்கு ஒரு கோழிப் பண்ணை ஆரமபிக்க வேண்டும் என்பது தான். அதை இன்றையதினம் எந்த அளவுக்குச் செயல்படுத்த முடியும் என்பதைப் பற்றயெல்லாம் இப்போது அரசாங்கம் ஆலோசித்துக்கொண்டிருக்கிறது.

Thiru V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Chairman, Sir, may I know whether it is a fact that some of the owners of lands who gave their lands for the purpose of building sheds for poultry development have given notice to the Government because of the closure of these poultry farms ?

The Hon. Thiru P. U. SHANMUGHAM : I have no information, Sir.

Thiru A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, may I know whether there is any proposal to lease out some of these poultry farms to private farmers who may be interested in running these farms after paying the Government a legitimate rent, which may be fixed initially at a low level ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அப்படி யாராவது கோழி வளர்ப்பதில் அக்கறை கொண்டு அரசாங்கத்தை அணுகினால், அவர்களுக்கு அரசாங்கத்தின் சார்பில் கட்டிடம் மட்டுமல்ல, இன்னும் கோழி முட்டைகளை அடைகாத்து குஞ்சுபொரிக்க உதவும் இயந்திரமான இன்குபேட்டர்களைக்கூட வாடகைக்கு விடத் தயாராக இருக்கிறோம்.

**திரு எம். எத்திராஜலு :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது 35 பண்ணைகள் மூடப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். இந்த மாநிலத்தில் மொத்தம் எத்தனை கோழிப் பண்ணைகள் இருக்கின்றன? அதில் உள்ள கோழிகளுக்கு அடிக்கடி சீக்கு வந்து, அதன் மூலமாகப் பண்ணைகளில் இருக்கிற கோழிகள் இறந்து விடுவதாகச் சொல்லப்படுகிறது. அதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன முயற்சியை மேற்கொண்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் மொத்தம் 74 கோழிப்பண்ணைகள் இருந்தன. அவற்றில் மூடப்பட்டவை 35. இப்போது இருப்பது 39 பண்ணைகள். நோய் வந்தால், அங்கே டாக்டர்கள் இருக்கிறார்கள், அவர்கள் அதை கவனிப்பார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வஹாப் :** மூடப்பட்ட பண்ணைகளில் இருந்த கோழிகள் மற்றப் பண்ணைகளுக்கு மாற்றப்பட்டனவா, அல்லது அவைகள் என்ன ஆயின ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மூடிய பண்ணைகளில கோழியே இல்லை.

[3rd March 1970

## *Electricity Charge and surcharge.*

*143 *Q.*—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Managements of the Spinning Mills represented to Government that the reduction of electricity charge and surchage from 40 per cent to 30 per cent by way of relief to the Spinning Mills' in Tamil Nadu cannot be considered as a relief at all and that this relief forms only 6 per cent approximately of the total amount paid by the Spinning Mills by way of electricity charge and surcharge ; and

(*b*) if so, whether the Government will come forward to offer further relief for the Spinning Mills ?

### மின்சார கட்டணம்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத்திலுள்ள நூற்பாலைகளின் சிரமத்தைக் குறைக்கும் வகையில் மின்சார கட்டண சர் சார்ஜை (surcharge) 40 சத விகிதத்திலிருந்து 30 சதவிகிதமாகக் குறைக்க அரசு முன் வந்திருப்பதை ஒரு நிவாரணமளிக்கும் உதவியாகவே கொள்வதற்கில்லையென்றும், நூற்பாலைகள் செலுத்தி வரும் மின்சாரக் கட்டணம், சர்சார்ஜ் (Surcharge) ஆகிய மொத்தத் தொகையில் இந்த உதவி சற்றேறக்குறைய 6 சத விகிதந்தான் என்றும் ஆலை நிர்வாகத்தினர் ஏதேனும் முறையீடு செய்துள்ளனரா ?

(இ) ஆமெனில், அரசு நூற்பாலைகளுக்கு மேலும் உதவ முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ஒ. பி. இராமன் :** (அ) and (இ). நூற்பாலைகளுக்கு மின்சார கட்டணத்தின் மேல் விதிக்கப்படும் வரி (Tax) 21–7–1969-முதல் 40 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது. இதனை 15 சதவீதமாகக் குறைக்க கோரி ஆலை அதிபர்கள் சங்கத்திலிருந்து 24–7–1969-தேதியிட்ட ஒரு விண்ணப்பம் கிடைக்கப்பெற்றது. ஆனால் வரியை மேலும் குறைக்க தற்சமயம் இயலாது.

Mr. CHAIRMAN : Now we will go back to question 135.

## *Fertilisers.*

*135 *Q.*—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state whether the Government will take steps to supply the existing stock of fertilisers at the old rate instead of increasing the rate to the new price level ?

### ரசாயன உரங்கள்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

தற்போது தமிழகத்தில் இருப்பிலுள்ள குறைந்த விலை ரசாயன உரத்தை புதிய விகிதத்துக்கு உயர்த்தாமல் பழைய விலை விகிதத்திலேயே விவசாயிகளுக்கு விநியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திருமதி சததிர்வாணிமுத்து :** மத்திய உரத்தொகுப்பு ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படும் எல்லாவகையான ரசாயன உரங்களின் தொகுபபு விலைகளை 1–3–1969 முதல் செயலுக்கு வரும்வகையில் இந்திய அரசு உயர்த்தியுள்ளது. எனினும், 28–2–1969 அன்று அரசு,



3rd March 1970]

கணக்கில் இருந்த உர இருப்பை 1–3–1969-க்கு முன்பு நிலவிய விலையில் விற்பதற்கு இந்த அரசு அனுமதியளித்தது. இச்சலுகை விற்பனை 1969 எப்ரல் திங்கள் கடைசி வாரத்திலிருந்து செயலில் இருந்து வருகிறது. 30–11–1969 வரை இந்தச் சலுகை விற்பனை அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு வந்தது. அம்மோனியம் சல்பேட், அம்மோனியம் சல்பேட் நைட்ரேட், யூரியா போன்ற உரங்களைத் தவிர பிற உரங்களுக்கு 30–11–1969-க்குப் பிறகு 31–3–1970 வரை சலுகை விற்பனையை அரசு இப்பொழுது நீட்டியுள்ளது. எனினும் விலக்களிக்கப்பட்ட மேற்கூறிய மூன்று வகை உரங்களும் 1–12–1969 முதல் புதிய விலையிலேயே விற்கப்படுகின்றன.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, கேள்வியில் குறிப்பிட்ட ஒரு சில ரக உரங்கள் நம்முடைய மாநிலத்திற்கு வந்து பல ஆண்டுகள் ஆகின்றன. இருப்பு வைக்கப்பட்ட இடங்களில், வெகுவாக சாக்குகள் எல்லாம் கெட்டும் பல வகையிலே கட்டிகளாக ஆகியும் கெட்டிப்பட்டு கெட்டுப்போயிருக்கின்றன. அவைகளை விற்பது மிகவும் சிரமமாக இருக்கும். ஆகவே அவைகளை அரசு பழைய விலைக்கே விற்பதற்குத் தேவையான உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** பல காரணங்களால் உரம் தேக்கமாகி விட்டது. இப்போது நவரை, சொர்ணவாரி, சீசன் இருக்கிற காரணத்தால், அதிகப்படியாக செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னுற்காடு ஆகிய மாவட்டங்களில் உரம் தேவைப்படுகிறது. எனவே நாங்கள் விலையையும் குறைத்துக் கொடுக்கிறோம். 30–3–1970 வரை குறைத்துக் கொடுக்கிறோம். இப்போது பாக்கி இருந்த 83,000 டன் கையிருப்யிலிருந்து ஏறக்குறைய 60 சதவீதம் செலவழிக்கப்பட்டு விட்டது. எஞ்சிய 30, 34,000 டன் அதாவது 40 சதவீதம் தான் இருப்பில் இருக்கிறது.

**திரு எம். எத்திராஜுலு :** தலைவர் அவர்களே, தென்னுற்காடு ஜில்லாவில் உள்ள நெய்வேலியில் தயாராகும் உரம் நம் அரசுக்கு எவ்வளவு கிடைக்கிறது ? அது எந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது ? அதன் விலை என்ன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தனிக் கேள்வி போடவும்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** வறட்சிப் பிரதேசமான இராமநாதபுரம் ஜில்லாவில், அதிலும் குறிப்பாக சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர் தாலுகாக்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் அதிகமான உரம் "ஸ்டாக்" இருக்கிறது. அதைத் தேவைப்படும் இடங்களுக்கு துரிதமாக மாற்ற அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மதுரை, இராமநாதபுரம் பகுதிகளில் அமோனிய சல்பேட்டு, யூரியா இவைகள் தான் அதிகமாக செலாவணியாக்கப்பட்டு இருக்கிறது. டை அமோனியா சல்பேட்டு செலாவணியாக்கப்படவில்லை. ஆனால் பிற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்ல வகை செய்யப்பட்டிருக்கின்றது.

Thiru V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Chairman, Sir, I am told that the old stock of fertilisers has completely deteriorated in quality. If that is a fact, will the Government come forward to test the quality of these fertilisers before they distribute them to the ryots ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அது உண்மை என்று நான் நினைக்கவில்லை. சாத்தியமில்லை என்றும் கருதுகிறேன்.

[3rd March 1970

**திரு எஸ். ஜெயராம ரெட்டியரர் :** தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியையும் ஒட்டி நான் இந்தக் கேள்வியோடு ஒன்றைக் கேட்கலாம் என்று நினைக்கிறேன். . . . . . .

**மிஸ்டர் சேர்மன் :** அந்தக் கேள்விக்குப் பதில் சொன்ன பிறகு கேட்கலாம்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நரயுடு :** தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக்கூடிய உரங்களுக்கு "ஸ்டாக்" வைப்பதற்கான சில சிறு செலவினங்களை அரசு ஏற்றுக்கொண்டாலும் கூட, அவைகளையெல்லாம் உரவிலையோடு சேர்த்து விற்க முடியும். ஆனால் 2, 3 ஆண்டுகளாக மத்திய பாங்கில் லட்சக்கணக்கான ரூபாய் கடன் வாங்கி அவ்வளவுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கே வட்டிப்பொறுப்பாகும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே வட்டி நஷ்டத்தை அரசாங்கம் ஏற்பது நியாயமாகும். அரசாங்கத்தின் ஸ்டாக்கைத் தான் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் கொடௌன்களில் வாங்கி வைத்துக் கொண்டு அதற்குத் தாங்களே கடன் வாங்கி ஈடுசெய்துகொண்டிருக்கிறார்கள். எனவே உண்மையில் தேங்கிப்போன உரங்களுக்கு ஏற்படுகிற வட்டி நஷ்டத்தை அரசு ஏற்கும் முயற்சியைப்பற்றி அரசு யோசனை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஏற்படும் நஷ்டத்தைக்கருதித் தான் இப்போது ஒவ்வொரு வகையாக ஒவ்வொரு உரத்திற்கும் ஒரு சில குறிப்பிட்ட தொகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக, அமோனிய சல்பேட்டு யூரியா, அமோனியம் சல்பேட்டு நைட்ரேட்டுக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்கு 12 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அமோனியம் சல்பேட்டு நைட்ரேட் பாஸ்பேட் ஆகியவைகளுக்கு மெட்ரிக் டன்னுக்கு 13 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. டை அமோனியா குளோரைடு, பொட்டாசியம், என்.பி.கே. காம்பிளெக்ஸ் ஆகியவைகளுக்கு ரூபாய் 18 ஒரு மெட்ரிக் டன்னுக்குக் கொடுக்கப்படுகிறது. இதுவுமன்றி, இருக்கிற இருப்பை எந்த அளவுக்குச் செலாவணியாக்க வேண்டுமோ அதற்குத் தகுந்த முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. உரங்களும் இன்றைக்கு விரைவில் செலவழிக்கப்பட்டு வருகின்றன.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஒரு டன்னுக்கு இவ்வளவு என்று உரவிற்பனை செய்யும் ஹோல்சேலர்களுக்குக் கொடுக்கப்படுகிற விகிதம் உரத்தை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டுபோக. குறைந்த அளவு லாபம் இவைகளுக்காகக் கொடுக்கப்படுகிறது. வட்டி நஷ்டத்தை ஈடுகட்டுவதற்குத் தரப்படுவதில்லை. ஒவ்வொரு டன்னுக்கும் ரூபாய் 600, 700 என்று வைத்துக் கொண்டாலும் வருஷக் கணக்கில் அவைகளை "ஸ்டாக்" வைத்துக்கொண்டால், 14, 18 ரூபாய் வட்டிக்கு ஈடு கட்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். எனவே இதைப்பற்றி அரசு பரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** வட்டியெல்லாம் சேர்த்து கொடுக்கவேண்டும் என்றால், அதிகமானதொகை ஏற்படும். ஆனால் அவர்கள் இருப்பு வைத்துக்கொண்டிருக்கும் கொடௌன்களுக்கு வாடகை, போக்குவரத்துத் தொகை இவைகளைப் பொறுத்துத்தான் நஷ்ட ஈட்டுத் தொகை ஒதுக்கப்படுகிறது. எனவே எவ்வளவு சீக்கிரம் இவைகளை வினியோகிக்க முடியுமோ அதற்கான எல்லா முயற்சிகளையும் அரசாங்கம் எடுத்துக்கொண்டு வருகிறது. இன்னும் கையிருப்பில் இருக்கிற 30,000 அல்லது 34,000 டன் உரமும் சீக்கிரத்தில் செலாவணியாகிவிடும் என்று கருதுகிறது. எனவே அதற்காகிற வட்டி நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லிகொள்ளுகிறேன்.



3rd March 1970]

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சர்க்கார் வசத்தில் இருக்கிற உர "ஸ்டாக்" நிலைமையை மனதில் வைத்துக் கொண்டு பதில் சொல்லிவிட்டார்கள் என்று நினைக்கிறேன். மார்க்கெட்டிங் சொஸைடியில் தேங்கியிருக்கிற சரக்கின்பேரில் ஒரு டன்னுக்கு 18 ரூபாய் கொடுப்பதில் ரீடெயில் சொஸைடிக்குக் கொண்டுபோக 8 ரூபாய் வாடகை தரவேண்டியிருக்கிறது. எஞ்சியது 10 ரூபாய். சென்ற 1½ வருஷமாக ஒரு மாதத்திற்கு—இப்போது 3,000-லிருந்து 2,500 ரூபாயாகக் குறைந்திருக்கிறது—எங்கள் சொஸைடி மாத்திரம் ரூபாய் 30,000 வரை இராமநாதபுரம் சென்டிரல் பேங்குக்கு இது வரை வட்டியாகக் கொடுத்துக் கொண்டுவருகிறது. இன்னும் 2½ லட்சம் ரூபாய் பெருமானமுள்ள என்.பி.எக்ஸ். காம்பிளெக்ஸ் செலவாகாமல் இருக்கிறது. எங்கள் ஜில்லா வறட்சி பிரதேசமாக இருக்கிற காரணத்தால், வடாற்காடு, தென்னாற்காடு, மாவட்டங்களைப் போல உரம் வாங்கும் சூழ்நிலை எங்களுக்கு இல்லை. எனவே இங்கே தேங்கியிருக்கும் சரக்குகளை எடுத்து மற்ற இடங்களுக்கு மாற்றிச் செலாவணியாக்க ஏதாவது ஒரு திட்டம் ஒன்றை சர்க்கார் தயாரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கேள்வியே கூட்டுறவு சங்கங்களில் தேங்கியிருக்கும் உரத்தைப்பற்றியது தான். அதற்குக் கொடுக்கிற தொகையைப் பற்றித்தான் நான் குறிப்பிட்டேன். இந்தத் தொகை கூட அரசாங்கத்தின் வருவாய்த் துறை வாரியத்தின் உணவு உற்பத்தித் துறை மூலமாகத்தான் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு மாவட்டத்தில் தேங்கியிருக்கிறது என்றால், அந்த உரத்தை இன்னொருமாவட்டத்திற்கு எடுத்துச் செல்ல அரசாங்கம் ஏற்பாடு செய்யும். இன்னும் நாளாவட்டத்தில் நல்ல பருவ மழை பெய்திருப்பதால், அதிகமான உரத்தை விவசாயிகள் எடுத்துக் கொள்ளக்கூடும் என்ற காரணத்தால், வெகுவிரைவில் இருக்கிற கையிருப்பும் செலவாகி விடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே வாடகை வட்டி கட்ட வேண்டுமோ என்ற அச்சம் எழவில்லை என்று தான் திரும்பத். திரும்பச் சொல்லுகிறேன்.

**திரு கே. எஸ். மணி :** தலைவர் அவர்களே, தற்போது அரசின் வசம் கையிருப்பில் இருக்கிற உரம் வருகிற விவசாய ஆண்டுக்கும் போதுமானதாக இருக்குமா அல்லது அதைத் தாண்டியும் இருக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மேற்கொண்டு இந்திய அரசாங்கத்திடமிருந்து உரம் எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற எண்ணத்தில் தான் 1970–71-க்குக் கூட மத்திய அரசாங்கத்திலிடமிருந்து எதுவும் "இன்டென்ட்" போட்டு அரசாங்கம் உரம் கேட்கவில்லை. காரணம் 1967–68-லிருந்து நாம் அதிகப்படியான உரத்தை வாங்கி வைத்திருக்கிறோம். எனவே 1970–71-க்கு வாங்கவில்லை. வருகிற ஆண்டுக்குத் தேவையான உரம் கையில் இருக்கிறது. அது சரியாகச் செலவழிக்கப்படும்

**திரு சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, இப்போது எரு இவ்வளவு ஜாஸ்தியாக, அமோகமாக இருக்கிறது என்று கூறுகிறார்களே, கூட்டுறவு சொஸைடிகாரர்கள், "நாங்கள் ஏராளமாக வைத்துக் கொண்டிருக்கிறோம், வட்டி கட்டிக் கொண்டிருக்கிறோம்" என்று வேதனைப் படுகிறார்களே, இதற்குக் காரணம் என்ன ? சர்க்காரே கூட்டுறவு சொஸைட்டிகளை வாங்குங்கள், வாங்குங்கள் என்று துரிதப்படுத்துகிறார்களா அல்லது அவர்களே தங்களுக்குத் தேவை, கொடுங்கள் என்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டு வாங்கி வைத்திருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இந்த உரங்களில் டைஅமோனியா நைட்ரேட், பாஸ்பேட், பொட்டாசியம் கூட்டுக்கலவை இவைகளை எல்லாம் வாங்குங்கள், வாங்குங்கள் என்று விவசாயிகளைத்தான் நாங்கள் வற்புறுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் அமோனிய சல்பேட, யூரியா, நைட்ரேட் இவைகளை விவசாயிகளே வாங்கிக்கொள்கிறார்கள். இந்த ரகமான உரங்கள் விரைவில் விலை போகின்றன. மற்றவைகளைத் தான் நாங்கள் "வாங்குங்கள் " என்று சொல்லுகிறோம்.

[3rd March 1970

*136 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Government are aware of the fact that there has been an accumulation of chemical fertilisers for a number of months without any sale in the godowns of the Co-operative societies of Tamil Nadu; and

(b) if so, whether the Government will meet the loss incurred by the Co-operative Societies in this connection?

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவு ஸ்தாபனங்களின் கிடங்குகளில் பல மாதங்களாக ரசாயன உரங்கள் விற்பனையாகாமல் தேங்கியிருப்பதை தமிழ்நாடு அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இதனால் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு ஏற்படும் நட்டத்தை தமிழ்நாடு அரசு ஏற்குமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) ஆம்.

(இ) இருப்பு வைத்திருப்பவர்களிடம் தேங்கியுள்ள இருப்பைக் கருத்தில் கொண்டு, இடர் தடைப்பு அளிக்கும் நோக்கத்துடன், அவர்களுக்கு வழங்கப்படும் தரகுத் தொகையை 1-12-1969 முதல் அரசு உயர்த்தியுள்ளது. அரசுச் சார்பில் இருப்பு வைத்திருப்பவர்களிடம் தேங்கியுள்ள உர இருப்புகளை விற்பனை செய்வதற்கு மாநில அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக, நீதி ஆண்டின் தொடக்கத்தில் இருந்த இருப்புக்கு மாறாக அண்மை மாதங்களில் 60 சதவீத இருப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மாநிலத்தில் தற்போது நிலவிவரும் சாதகமான பருவ நிலைமையை முன்னிட்டும், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில், நவரைப் பருவத்திலும் ஸ்வர்ணவாரி பருவத்திலும் நெல் பயிரிடுவது குறித்த விரைவுத் திட்டம் செயல்படுத்தப்படுவதைக் கருதியும் உரங்கள் அதிகமாக விற்கப்படும். அதன் பயனாக அரசுச் சார்பில் இருப்பு வைத்திருப்பவர்களிடமுள்ள இருப்புகள் இன்னும் சிறிதளவு குறையும். இந்த சந்தர்ப்பங்களில், உர இருப்புக்கள் தேங்கியுள்ளதன் காரணமாகக் கூட்டுறவு சங்கங்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய எந்த விரயத்தையும் இந்த அரசு ஏற்பதில்லை யெனக்கருதுகிறது.

*Free pattas to Scheduled Tribes.*

*137 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) the number of free pattas granted during the year 1968-69 for residential purposes to the Scheduled Tribes in Nilgiris district;

(b) whether the Government poromboke lands near the residential quarters are being assigned free of cost to them; and

(c) if so, the extent of lands assigned during 1968-69?

**ஆதிவாசிகளுக்கு இலவச பட்டாக்கள்.**

**திரு. எம். ராஜா அய்யர் (திரு வி. ஈஸ்வரமூர்த்தி** சார்பில் மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டத்தில் ஆதிவாசிகள் குடியிருப்புகளுக்காக வழங்கப்பட்ட இலவச பட்டாக்கள் 1968-69-ஆம் ஆண்டில் எவ்வளவு?



3rd March 1970]

(இ) குடி இருப்புகளுக்கு அருகில் உள்ள அரசாங்க புறம்போக்கு நிலங்களை இலவச பட்டாக்களாக அவர்களுக்கு வழங்கப்படுகின்றனவா?

(உ) ஆம், என்றால் எவ்வளவு நிலம் 1968-69-ல் பட்டா செய்யப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) 37.

(இ) ஆம்.

(உ) இல்லை.

*Agricultural University.*

*138 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Government propose to start an Agricultural University in the State; and

(b) if so, the details thereof?

**வேளாண்மைப் பல்கலைக் கழகம்.**

**திரு. எம். ராஜா அய்யர்:** மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) அண்டு (இ) :தமிழ்நாட்டில் வேளாண்மை பல்கலைக் கழகம் ஒன்றைத் தொடங்குவது குறித்து செயற்குறிப்பை அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளது. இப் பல்கலைக் கழகம் கோவையில் அமையவில்லை. அமைக்கப்படவிருக்கும் இடம், அது குறித்த பிற விவரங்கள் நாளடைவில் முடிவு செய்யப்படும்.

*Houses for Harijans.*

*139 Q.—THIRU M. ETHIRAJULU: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state how much amount has been collected so far, out of the loan portion of Rs. 200 given to the beneficiaries besides the subsidy in the construction of houses to the Harijans in South Arcot district?

**அரிசனங்களுக்கு வீடுகள்.**

**திரு. எம். எத்திராஜுலு:** மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—தென்னாற்காடு மாவட்டத்தில் அரிசனங்களுக்கு கல் வீடு கட்டிக் கொடுத்ததில் சர்க்கார் இனமாகக் கொடுத்ததுபோக, அவர்கள் கொடுக்க வேண்டிய ரூ. 200-ல் எவ்வளவு தொகை வசூலாகியிருக்கிறது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ரூ. 81,520·24.

**திரு. எம். எத்திராஜுலு:** இவ்வளவு பெரிய தொகையை வசூலிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** "ரெவின்யூ ரெகவரி ஆக்ட்"ன் கீழ் ரெவின்யூ அதிகாரிகள் இவர்களுக்கு அவ்வப்போது தாக்கீது அனுப்பி விரைவில் தாசில்தார் மூலமாக வசூல் செய்ய ஏற்பாடுகள் செய்கிறார்கள். அவ்வப்போது அறிவிப்புகள் கொடுத்து வருகிறோம். அந்த வகையில் கொஞ்சம் கொஞ்சமாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். எத்திராஜுலு :** இந்த வீடுகள் மிகவும் ஏழைகளுக்குத் தான் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அவற்றைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையில் இருப்பதால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட அந்தத் தொகையை இனாமாக விட்டுக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நலத் துறை மூலமாக ஏழை என்று கருதுகிற வர்களுக்குச் செய்கின்ற நன்மைகளில் சில காரியங்களிலும் இனாமாகக் கொடுக்கிறோம். சிலவற்றைக் கடனாகக் கொடுக்கிறோம். கடனாகக் கொடுப்பதைத் திரும்பத் தர மறுத்துவிட்டு, அரசாங்கம் அதை ரத்து செய்யவேண்டுமென்று சொல்வது முறையாகாது. அப்படிச் செய்தால், பலருக்கு நன்மை செய்ய முடியாமல் போய் விடும். கூடுமான வரையில், கடனாகப் பெறுகிற அத்தனையையும் திருப்பித் தருவதற்கு உறுப்பினர் அவர்கள் துணையாக இருந்து உதவி செய்தால், க்ஷேமநல அரசாங்கம் நன்மைகளைச் செய்யும்போது, அதற்கு உற்சாகமாக இருக்கும். மேலும், பல நன்மைகளைச் செய்ய முடியும்.

**திரு கே. எஸ். மணி :** இப்படி பாக்கியுள்ளவர்கள் அவற்றைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கும்போது, "எங்கள் சர்க்கார் கொடுத்தது அது. அதனால் நீங்கள் அவற்றைத் திருப்பிக் கொடுக்கத் தேவையில்லை" என்று பலர் அவர்களைத் தடுப்பதாகப் புகார் ஏதும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? எங்களுக்கு வந்திருக்கிறது.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அப்படிப்பட்ட புகார் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினருக்கு வந்திருந்தால், எழுதிக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

MR. CHAIRMAN : Questions are over.

[NOTE.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1970-71—*cont.*

***திரு எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, இம் மாமன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நடப்பு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது விவசாயப் பகுதியை பொறுத்த வரையில், விவசாயிகளுக்கு உண்மையிலேயே ஊக்கத்தையும் விவசாயப் புரட்சியை உருவாக்குகிற வகையிலும் என்ன என்ன சிறப்பு அம்சங்கள் அமைந்திருக்கின்றன என்று நான் இந்த மன்றத்தின் கவனத்திற்கு நேற்றையதினம் கொண்டு வர முடிந்தது.

இன்றைக்கு கல்வித் துறையில், இந்த நிதி ஆண்டு வரவு செலவுத் திட்டம் எவ்வளவு சிறப்பாக கல்வியின் வளர்ச்சிக்கும் கல்வித் துறையில் ஈடுபட்டிருக்கின்ற, கல்விப் பணி புரிகிற ஆசிரியர் பெருமக்களுக்கும் மற்றவர்களுக்கும் ஊக்கம் அளிக்கிறது என்று சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் 2,720-ம், நடு நிலை ஆசிரியர்கள் 1,931-ம், பட்டதாரி மாணவர்கள் 1,320-ம் ஆக, மொத்தம் ஏறக்குறைய 6,000 ஆசிரியர்கள் கூடுதலாக நியமிக்க வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கிற மாற்றத்தைக் கண்டு எல்லோரும் வியக்கலாம் என்று நான் நம்புகிறேன். 6,000 ஆசிரியர்களை அதிகமாக நியமித்து கல்விப் பணியைச் சிறக்கச் செய்வது பாராட்டுக்குரியது என்பது என் கருத்து. இன்னும் ஆசிரியர்களுக்கு மற்ற அரசு ஊழியர்களுக்கு இணையாக சிறப்பு ஈட்டுப்படி ரூ. 10 கூட்டிக்கொடுத்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. சம்பள ஆணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அறிக்கை வரும் வரை காத்திருப்போம் என்று இல்லாமல், எல்லாப் பணியாளர்களுக்கும் இன்றைய கால நிலைக்கேற்ப, விலைவாசி உயர்வுக்கு ஏற்ப, இடைக்கால நிவாரணம் கொடுத்





திருப்பதைப் போல ஆசிரியர்களுக்கும் குறிப்பாகத் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது. இடையில் கூட நிதி நிலை அறிக்கை சமர்ப்பித்தவுடன் பத்திரிகையில் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகை உண்டா என்பதுபற்றி வினா எழுப்பி தலையங்கம் எழுதப்பட்டது. இதில் எல்லோருக்கும் உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைப் போலவே, ஆசிரியர்களுக்கு, குறிப்பாக தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு, பதவிப் பாதுகாப்பு அளிப்பதற்குரிய ஒரு தனிக் குழுவை நியமித்து அது எல்லா நகரங்களுக்கும் சென்று, ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகம், கல்வி நிபுணர்களைக் கண்டு ஆசிரியர்களுக்கு உரிய பதவிப் பாதுகாப்பு அளிப்பதுபற்றி ஆராய்ந்து ஒரு அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறது. அந்தக் குழுவில் உறுப்பினராக இருக்கிற பேறு பெற்றவன் என்ற நிலையில் அந்தக் குழு நல்ல முறையில் ஆசிரியர்களுடைய பதவிப் பாதுகாப்பை பேணுகிற நிலையில் திட்டத்தைத் தயாரித்து அனுப்பும், அதுவும் விரைவில் சட்டம் ஆக்கப்படுவதற்கு உரிய சிபாரிசுகளைச் செய்யும் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது போலவே தனியார் பள்ளிகளில் பணி புரிந்து வருகிற ஆசிரியர்கள் உண்மையிலேயே கல்விப் பணியில் ஒரு மாற்றாந்தாய் குழந்தை மாதிரி இதுவரை நடத்தப்பட்டு வந்தார்கள். அவர்களுக்குப் பதவிப் பாதுகாப்பு இல்லை. அதைக்கொடுக்கத் தான் ஒரு தனிக் குழு நியமிக்கப்பட்டு, திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு வைத்திய வசதி இதுவரையில் அளிக்கப்படவில்லை. இப்போது இந்த நிதிநிலை அறிக்கை வைத்திய வசதியை மற்றப் பள்ளி ஆசிரியர்களைப் போல் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினருக்கும் அளித்திருக்கிறது. மேலும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு விழாக் கடன், அதாவது, "பெஸ்டிவல் அட்வான்ஸ்" வழங்க வகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குக் கைத்தறித் துணி வாங்க கடன் இதுவரை அளிக்கப்படவில்லை, இப்போது அளிக்கப்பட்டிருக்கிறது. மலைப் பகுதிகளில் இருக்கும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு வருஷத்தில் நான்கு மாதங்களுக்கு குளிர்காலப் படி கொடுக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு திருமணக் கடன் கொடுக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது. இத்தனையும் ஒருங்கு சேரப் பார்த்தால், இது உண்மையிலேயே தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குரிய ஒரு நிதிநிலை அறிக்கையாக, அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி அவர்களுடைய நியாயமான உரிமைகளை ஒப்புக்கொள்ளுகிற நிலைமையில் அமைந்திருக்கிறது என்று ஆசிரியன் என்ற நிலையில் சொல்லிக்கொள்வதற்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மதிப்புக்குரிய நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் நேற்றுப் பேசும்பொழுது, "திருமணக் கடன் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூ. 500 கொடுத்திருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு இரண்டாயிரம் கொடுத்திருக்கிறது. இது ஒரு கண்ணில் சுண்ணாம்பும் இன்னொரு கண்ணில் வெண்ணையும் வைத்ததாக இருக்கிறது. இது முறையா" என்று கேட்டார்கள். உண்மையிலேயே அவர்களுக்குச் சொல்லுகிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்கள் திருமணக் கடன் வேண்டுமென்று 20 ஆண்டு காலம் கேட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இப்போது ரூ. 500 கொடுப்பதற்காக இந்த அரசு முன்வந்திருப்பது 20 ஆண்டு காலமாக சுண்ணாம்பு வைத்ததில் ஒரு பகுதியை எடுத்திருப்பதாக ஆகும் என்று நண்பர் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். உண்மையிலேயே ரூ. 2 ஆயிரம் வழங்கி முழுச் சுண்ணாம்பையும் அகற்றும் நிலைமை வெகு சீக்கிரத்தில் வந்து விடும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கு பென்சிலின் ட்ரீட்மெண்ட் தேவை.

**திரு. எம். எத்திராஜுலு :** தலைவர் அவர்களே, நான் நேற்றுச் சொன்னது சர்க்கார் ஊழியர்களுக்குத் திருமணக் கடன் ரூ. 2 ஆயிரம், சர்க்கார் பள்ளி ஆசிரியர்களுக்கும் ரூ. 2 ஆயிரம். சர்க்கார் ஆசிரியர்கள் போல் ஏன் இவர்களுக்கும் இரண்டாயிரம் கொடுக்கக்கூடாது என்று சொன்னேன்.

[3rd March 1970

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** சர்க்கார் பள்ளி ஆசிரியர்களுக்கு இப்போது திருமணக் கடன் உண்டு. ஒரே நிலையில் அவர்கள் கருதப்பட்டு ரூ. 2 ஆயிரம் திருமணக் கடன் பெற்று வருகிறார்கள். "தனியார் பள்ளி ஆசிரியர்களிடம் திருப்பி எப்படிப் பிடிப்பது, அதனால் நாங்கள் கொடுக்க மாட்டோம்" என்று நீங்கள் மறுத்து வந்தீர்கள். இன்று அவர்களுக்கு ரூ.500 கொடுத்து அவர்களையும் மற்ற ஆசிரியர்களுக்கு ஒப்பாக மதிக்கத் தொடங்கி வேகமாக அடி எடுத்து வைத்திருக்கிறோம் என்று நண்பர் அவர்களுக்குப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் சுண்ணாம்பை வைத்தவர்கள் நீங்கள், அதை அகற்றுகிறோம் என்று சொல்லுகிறேன். அப்படிச் சொல்லுவது என்னுடைய கடமை என்று பணிவன்புடன் சொல்லுகிறேன். அதனால் மனம் புண்பட்டிருந்தால், மன்னித்துக்கொள்ள வேண்டும். முன்பு கடைசி மூன்று ஆண்டுகள், அதாவது 36 மாதங்கள், வாங்கிய சம்பளத்தின் சராசரியை எடுத்துக் கொண்டு ஓய்வு ஊதியத்தை நிர்ணயம் செய்தார்கள். இப்போது கடைசி 12 மாதம், அதாவது ஒரு வருடச் சம்பளத்தைக் கணக்கிட்டு ஓய்வு ஊதியத்தை நிர்ணயம் செய்யும்படி வகை செய்திருப்பது உண்மையிலே ஆசிரியர்களுக்குப் பெரும் ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கிறது. நேற்று குறிப்பிட்டது போல் விவசாயத் துறைக்கும், இன்றைக்குச் சொன்னது போல் கல்வித் துறைக்கும் இந்த நிதி ஆண்டு வரவு செலவுத் திட்டம் மகத்தான புரட்சிகரமான திட்டத்தையும் ஊக்கத்தையும் கொடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு அங்கத்தினர் மறந்துவிடக்கூடாது. இவ்வாறு, பல நன்மைகள் கொடுத்தாலும் கூட, வரி விதிக்கப்பட்டிருக்கிறதே என்று சொல்லுகிறார்கள். நமது மாநிலத்திற்கு ரூ. 288 கோடி 4 லட்சம் வருவாயாக இருக்கிறது. ரூ. 296 கோடி 98 லட்சம் செலவு. எட்டுக் கோடி 94 லட்சம் துண்டு விழுகிறது. இதற்கு வரியால் சரிக்கட்டுவது ரூ. 6 கோடி தான். எஞ்சியுள்ள 294 லட்சத்தை மத்திய அரசு நமக்குத் தரவேண்டிய 45 கோடி ரூபாயையும் கடனாக சரிக்கட்டிக் கொள்ளுகிற நிலைமையில் சமாளிக்க முடியும் என்று நம்புகிறோம்.

ஆகவே இந்த வரியை 6 கோடி ரூபாய்க்குப் போட்டிருப்பது அதிகமாக ஏழைகளைப் பாதிக்காத நிலையில், நடுத்தர மக்களைப் பாதிக்காத நிலையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் புது விற்பனை வரிச் சட்டத்தின்படி 14 இனங்களுக்கு 1959-ல் விதித்த வரிகளைச் சற்று உயர்த்தியிருக்கிறோம். 1959-ல் ஜனநாயக சோஷலிசத்தைக் கொள்கையாகக் கொண்டுள்ள காங்கிரசார் ஆட்சியின் போது இந்த 14 இனங்களுக்கும், நடுத்தர மக்களை, ஏழை மக்களை பாதிக்காது என்று சொல்லி வரி போட்டார்கள். ஆகவே புதிதாக ஒன்றும் நாங்கள் வரி போடவில்லை. 1959-ல் இந்த இனங்கள் நடுத்தர மக்களை, ஏழை மக்களை பாதிக்காது என்று சொல்லி வரி போட்டார்கள். இப்பொழுது அந்த இனங்களுக்குத் தான் 12 சத விகிதத்திலிருந்து 15 சத விகிதமாக வரி ஏற்றப்பட்டிருக்கிறது. அதைப் போல ஒரு முனை வரி விதிப்பதற்கு உட்பட்ட சில பொருள்களுக்கு மீண்டும் வரி 6 சத விகிதத்திலிருந்து 8 சத விகிதத்திற்கும் ஆடம்பரப் பொருட்கள் என்று நீங்கள் கருதி வந்த பொருள்களுக்கு 7½ சத விகிதத்திலிருந்து 9 சத விகிதத்திற்கும் கூட்டப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த இரண்டிலும் சேர்ந்து கிட்டத்தட்ட ஒரு கோடியே மூன்று லட்சம் ரூபாய் எதிர்பார்க்கிறோம். அதை எல்லாம் நான் எதற்குக் குறிப்பிடுகிறேன் என்றால், மக்களைப் பாதிக்கிற வரியை உயர்த்தி விட்டோம் என்றும், ஏழைகளை பாதிக்கிறது என்றும் காங்கிரஸார் சொல்லிக் கொண்டு மக்களைத் தவறான பாதையில் அழைத்துச் செல்கிறார்களே, அதற்காகத் தான். அடுத்து, 5 லட்சத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரிக்கு விற்பனை வரி சர்சார்ஜ் என்ற முறையில் 7½ பர்சென்ட் விதிப்பதன் மூலம் ஒரு கோடியே ஒரு லட்சம் வரும் என்று எதிர்பார்க்கிறோம். சட்ட நுணுக்கம் தெரிந்த நிபுணர்கள் இந்த வரி விதிப்புச் செய்வதற்கு மாநில அரசிற்கு உரிமை உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் இந்த வரி விதிப்பு வியாபாரிகளின் வருமானத்தின் மேல் போடப்படுகிற வரியல்ல, இந்த வரி மத்திய அரசைச் சார்ந்தது அல்ல. மாநில அரசைச் சார்ந்தது தான் என்று



3rd March 1970] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

சொன்னார்கள். உண்மையில் இது வருமான வரி அல்ல. சேல்ஸ்டாக்ஸ் என்றும் உயர் வரி சர்சார்ஜ் என்றும் தான் போடப்படுகிறது. அது இந்த மாநில அரசின் அதிகாரத்திற்கு முற்றிலும் உட்பட்டது தான் என்பது மிகவும் தெளிவாக ஷெட்யூல் 7-ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதைக் கெடுத்துவிடக் கூடாது, அவர்கள் கெடுத்து விடுவார்களோ, என்ற அச்சத்தினால்தான் இதைச் சொல்கிறேன். சட்டத் துறை நிபுணர்கள் இதைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறிவிட்டார்கள். சட்ட நுணுக்கத்தைப் பொறுத்த வரையில், நான் ஒரு சாதாரணமானவன் தான். விற்பனை வரி சர்சார்ஜ் வசூலித்தால் ஒரு வியாபாரி அதைக் கட்டுவதற்கு, ஒரு பொருளை விற்கும்பொழுது, அதைத் துய்ப்பவனிடமிருந்து அந்த வரித் தொகையை அந்த சாமானின் விலையை ஏற்றுவதின் மூலம் வசூலித்து விடுவார் என்று இங்கு சொல்லப்பட்டது. ஆனால் அது சரியல்ல. இந்த (டிவாலியேஷன்) நாணய மதிப்பு குறைந்த காலத்தில் வியாபாரிகள் தாங்கள் தர வேண்டிய நியாயமான வரியைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் ; மெலிந்தவர்கள் நலனுக்காக அது அவர்களின் கடமை உணர்ச்சி அல்லவா என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த சர்சார்ஜ் மூலம் இந்த அரசிற்கு ஒரு கோடியே ஒரு லட்சம் ரூபாய் வருமானம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்தபடியாக, பஸ்களுக்கு ஒரு இருக்கைக்கு ரூ. 50, ரூ. 55 என்று இருந்ததை அதற்கு மேலாக இப்பொழுது ரூ. 10 கூட்டப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஒரு கோடியே ஆறு லட்சம் ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் பயணிகள் கட்டணத்தை உயர்த்தக் கூடாது என்று நாங்கள் சொல்லியிருக்கிறோம். இதைத் தவிர, டீசல் தவிர பிற மோட்டார் எண்ணைகளுக்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ½ கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது. ஆறு கோடி ரூபாய் வருமானம் இந்த மாதிரி வரிகளின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. நான் ஏன் இந்த மாதிரி விளக்கமாகக் கூறினேன் என்று சொன்னால், இந்த வரிகள் நாட்டிலுள்ள சாதாரண மக்களைப் பாதிக்காத முறையில் கவனமாகப் போடப்பட்டிருக்கின்றன என்பதற்காகத் தான். இதை நான் பாராட்டுகிறேன். சிறந்த அரசின் கடமையைப் பற்றி, கம்பன் "வறிஞன் ஓம்பும் ஓர்செய் எனக்காத்து" என்று குறிப்பிட்டிருக்கிறான். அவர் கூறியது போல, வருகின்ற வரி வருவாயினைக் கொண்டே இந்த பட்ஜெட் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் இந்த நிதி ஆண்டுத் திட்டத்தில் பார்க்க முடியும். எனவே தான் நம் நண்பர்கள் மாண்புமிகு திரு. எத்திராஜுலு அவர்களும், மாண்புமிகு திரு. சுந்தரேசத் தேவர் அவர்களும் இந்த பட்ஜெட்டின் உள்ளே வந்தால் அதன் சிறப்பை எல்லாம் ஒத்துக்கொள்ள வேண்டி வருமோ என்று நினைத்து, அதற்கு வெளியே நின்று "நீங்கள் இந்திரா காந்தியின் அரசைக் கவிழ்க்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் இந்திரா காங்கிரஸ் உண்மையான காங்கிரஸா அல்லது சிண்டிகேட் காங்கிரஸ் உண்மையான காங்கிரஸா என்ற பிரச்னை கிளப்பப்பட்டது. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் திறமையாக அவர்கள் வாயிலாகவே பதிலை வரவழைத்து விட்டார்கள்.

**திரு என். சுந்தரேசத் தேவர் :** இந்திரா காங்கிரஸை நாங்கள் ஒப்புக்கொள்ள வில்லை. இந்திரா காங்கிரஸ் என்று அவர்கள் கூறுகிறார்களே தவிர, நாங்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** தலைவர் அவர்களே, அவர்கள் வாதத்தில் நண்பர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். தி.மு.கழகத்தை மக்கள் ஆதரிப்பதற்குக் காரணம், ஆட்சியில் அமர்த்துவதற்குக் காரணம், கடந்த காங்கிரஸ் ஆட்சியின் மேல் உள்ள வெறுப்பும், அந்தக் காங்கிரஸ் ஆட்சியை தி.மு.க. எதிர்த்ததும் தான் என்று சொன்னார்கள். ஆனால் நான் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். இந்த அரசு அமைவதற்கு மக்கள் காரணமாக இருந்தது ஏதோ காங்கிரஸ் மேல் உள்ள வெறுப்பு மட்டுமல்ல. அண்ணா அவர்கள் அந்தக் காலத்தில் எதிர்க்க வேண்டிய காரியங்களுக்கு அன்றைய அரசை எதிர்த்தார்கள், ஆதரிக்க வேண்டிய நேரத்தில் ஆதரித்தார்கள். ஆகையால் இங்கு இப்பொழுது

ஒரு நல்ல கட்சி இருக்கிறது, நல்ல தலைமை இருக்கிறது என்று மக்கள் உணர்ந்ததின் காரணமாக, எழுந்த ஒரு அரசியல் புரட்சியால் தான் இந்த ஆட்சி ஏற்பட்டது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் தஞ்சையில் ஏற்பட்ட வெள்ளத்திலும், புயல் காலத்திலும் அங்கே உள்ள மக்களுக்கு ஏற்படக் கூடிய வேதனையைத் துடைக்க முன்னோடியாக நின்று அறிஞர் அண்ணா அவர்கள், அதற்காக ஒத்துழைத்து, பணம் திரட்டி, அவர்களுக்கு உதவி செய்ததனால், "இது வெறும் கட்சிக் காழ்ப்பினால் செயல் படுகிற கட்சி அல்ல, பொறுமையால் செயல்படும் தலைமை அல்ல" என்பதை மக்கள் உணர்ந்ததனால் தான் இந்த மாமன்றத்தில் ஆளும் வரிசையில் உட்காருகிற அரிய வாய்ப்பை மக்கள் கொடுத்தார்கள். அது போலவே வேலூர் சிறையிலே இருக்கிறபோது கூட, நம்முடைய நாட்டின் வட பகுதியில் பிற நாட்டுப் படைகள் வந்து நமது நாட்டின் பாதுகாப்பை அச்சுறுத்திக் கொண்டு நின்றபோது, தான் சிறையில் இருக்கிறோம், என்பதையும் மறந்து, சிறையில் பிடித்துப் பூட்டப்பட்ட அவல நிலைக்கு தன்னை ஆளாக்கிய அரசாங்கம் என்பதையும் மறந்து, அவர்கள் துன்புறும் காலத்தில் அவர்களுக்குத் தொல்லை கொடுக்கக்கூடாது என்று இருபதாம் நூற்றாண்டு அரசியல் நாகரீகத்தைக் களைந்து, சங்க காலத்து அரசியல் நாகரீகத்தை ஏற்றுக் கொண்டு, சிறையிலிருந்தே அறிக்கை விட்டு போர்ப்பணி முயற்சிகளில் முன் நின்று ஒத்துழைப்புக் கொடுத்ததையும் கண்ட மக்கள், உண்மையில் ஜனநாயகத்தை மதித்த கட்சி, காழ்ப்புக்கு அப்பால் நின்று செயல்படு கிற உத்தமர்கள் வரிசை என்பதற்காக இதை ஆட்சி பீடத்தில் அமர்த்தினார்கள். நான் எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால், காங்கிரசுக்கு எதிர்ப்பு இருந்ததால் தான் வர முடிந்தது என்று நினைத்துக்கொண்டிருந்தால், அந்த எண்ணம் தவறானது என்று சொல்லுவதற்கு எனக்கு உரிமை இருக்கிறதோ இல்லையோ, சொல்லிக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். தவறு என்றால் மன்னித்து விடுங்கள். அதுபோலவே மொழிக் கொள்கை பற்றியும் நம்முடைய நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். எப்படியாவது இந்தியை நாம் ஒழித்து விடுவதற்கு அவர்களும் அணிவகுத்து வருகிறார்களே என்று எனக்கு ஒரு மகிழ்ச்சி. நான் இந்த மன்றத்தில் மொழிக் கொள்கை காரணமாக இந்தத் தரப்பிற்கு வந்தவன். அதற்கு முன்னால் 1942-ம் ஆண்டு காங்கிரஸ் சுதந்திரப் போராட்டம் நடைபெறுகிற போது சிறை சென்றவன். அப்போது நான் ஒரு மாணவன். அதற்கு அப்பால் நான் தொடர்ந்து கல்வி பயின்று 1947-ல் எனது மாவட்டம் தமிழகத்தோடு சேர வேண்டுமென்று தனியாக ஒரு இயக்கம் ஆரம்பித்து அது வெற்றி பெற்றதும் மறுபடியும் கல்லூரியில் நுழைந்து, கல்லூரியில் விரிவுரையாளர், பேராசிரியர் என்ற நிலையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். ஆசிரியர் குறைகளைச் சொல்ல வேண்டுமென்று என்னை வற்புறுத்தி இங்கு அனுப்பினார்கள். அப்போது சிரமப்பட்டுக் கொண்டு ஆசிரியர்கள் குறையைச் சொல்லிக்கொண்டிருந்த போது, மொழிக்கொள்கையின் காரணமாக, இதற்கு முந்தைய அரசு ஏற்றுக்கொண்டிருந்த கொடுமையான போக்கைக் கண்டித்து, 1964-ல் ஆட்சியில் அவர்கள் இருக்கிறபோதே நான் கல்லூரியில் பணி புரிந்து கொண்டிருந்தபோது, "உங்கள் வேலை என்ன ஆகும் நீங்கள் எங்கே இருப்பீர்கள்? பாளையங்கோட்டை சிறையா, வேறு சிறையாக இருக்குமா?", என்று எச்சரிக்கை வந்தும், கவலையில்லை, மொழிக்கொள்கையில் உறுதியான கொள்கையுடையவன் என்ற முறையில் என் கடமையில் என்றும் தவறியது இடையாது. இன்றைய தினம் மற்ற உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். நண்பர் திரு. எத்திராஜுலு அவர்களும் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களும் இப்போதாவது இந்தி எதிர்ப்புப் பணியில் வந்து சேர்ந்ததற்கு எனது பாராட்டுதல்கள். ஆனால் அது தொடர்ந்து இந்தி எதிர்ப்புப் பணியாக இருக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். ஏதோ இந்திரா காந்தி அரசைக் கவிழ்க்க வேண்டுமென்று. அந்தப் பொறியிலே அவர்களே அகப்பட்டுக்கொண்டு பாராளுமன்றத்தில் திண்டாடிக்கொண்டிருக்கிற அவல நிலையில், நீங்களும் போய் அந்தப் பொறியிலே விழாமல் நாட்டில் தெளிவான மொழிக் கொள்கை



கையை வற்புறுத்த வேண்டுமென்று எனது நண்பர்களைக் கேட்டுக்கொண்டு தலைவரவர்கள் நேரம் ஆகி விட்டது என்று சொன்னாலும், ஒரே ஒரு நிமிடத்தில் எனது மாவட்டத்தைப் பற்றிச் சொல்லிவிட்டு நிறுத்திக்கொள்கிறேன்.

**மிஸ்டர் சேர்மன் :** ஒரு நிமிஷம் என்றால் எவ்வளவு என்று தெரியுமே !

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** கன்னியாகுமரி மாவட்டத்திலே ரயத்துவாரி முறையைப் புகுத்தியது, தலைவரவர்கள் ரெவின்யூ அமைச்சராக இருக்கிறபோது, என்பது தெரியும் என்று நினைக்கிறேன்.

**மிஸ்டர் சேர்மன்:** ஒரு நிமிஷத்திலே முடிக்கிற கதை இல்லையே அது.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** 1964-ம் ஆண்டு காங்கிரஸ் சர்க்கார் ரயத்துவாரி முறையை அநியாயமாகப் புகுத்தியது. ஒரு செலக்ட் கமிட்டி வந்திருந்தது. 28 பேர் சாட்சியம் வேண்டாமென்று சொன்னதைக் கேட்காமல் அந்த வரி அங்கே கொண்டு வந்து போடப்பட்டது. அது இப்போது (அரியராகி) மூன்று வருட பாக்கி பெரும் தொகையாக இருக்கிறது. அதை இந்த அரசின் கவனத்திற்குப் பணிவோடு கொண்டுவருகிறேன். அந்தக் குற்றச்சாட்டு நம் மீது இல்லாமல் இருந்தாலும், அந்தத் தீமை செய்தது அவர்களாக இருந்தாலும், அந்தக் குறையைக் கேட்டு அந்த அரியரை வெய்வு பண்ணிக் கொடுத்து, தள்ளுப்படி செய்து தமிழகத்தில் நிலச் சீர்திருத்தம், கொண்டு வந்து நில வரியைக் குறைக்கிற காலத்தில் அதையும் குறைத்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு நான் முடிக்கிறேன்.

***திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, நிதி நிலை அறிக்கையின் பேரில் சில வார்த்தைகளைக் கூற நான் விழைகிறேன். பாராட்டி என்னுடைய வார்த்தைகளைக் கூறுமுன், ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எத்தனையோ அங்கத்தினர்கள் எத்தனையோ உயர்ந்த கருத்துக்களைக் கூறுகிறார்கள். அந்தக் கருத்துக்களெல்லாம் எதற்காகக் கூறப்படுகின்றன, யாருக்காகக் கூறுகிறார்கள் என்ற ஐயம் ஏற்படுகிறது. மின்வாரியம் நமக்கு முன்னால் வைத்துள்ள முன் மாதிரியாக, இந்த நிதி நிலை அறிக்கையின்போது அங்கத்தினர்கள் கூறும் கருத்துக்களை எல்லாம் இலாக்காவாரியாகத் தொகுத்து, அந்தக் கருத்துக்களுக்கு வெவ்வேறு இலாகாக்களும், அரசாங்கமும் என்ன செய்திருக்கின்றன, ஏதாவது முடிவு செய்திருக்கின்றனவா என்று கூறினால், இங்கு நாங்கள் வீணாக்கும் நேரம் உண்மையாகவே வீணாகாது. இல்லாது போனால், யாருடைய திருப்திக்காக. அந்தக் கருத்துக்களைக் கூறுகிறார்கள் என்ற ஐயம் மனதில் எழுகிறது 5-00
அதை மின் வாரியம் ஒன்று தான் நமது நாட்டில் நன்றாகச் செய்கிறதே p.m.
ஒழிய, பிற இலாகாக்கள் அந்தக் கருத்துக்களுக்குச் செவி சாய்ப்பதாகக் கூடத் தெரியவில்லை. ஆகையினால் அதை மாண்புமிகு தலைவரவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அமைச்சர்களிடமிருந்து உறுதிமொழி கிடைக்குமேயானால், அந்த உறுதிமொழிகாப்பாற்றப்படுகிறதா என்று பார்ப்பதற்கு இங்கே ஒரு குழு இருக்கிறது. அப்படி இல்லாதபோது, நாங்கள் ஏதாவது தெரிவிப்போமேயானால், அந்தக் கருத்துகள் என்ன தான் ஆயிற்று, அவைகளுடைய விதி என்ன என்று தெரிந்து கொள்ளாத போது, அவை அப்படியே இருக்கின்றனவோ என்ற ஐயம் ஏற்படுகிறது. எனக்கு முன் பேசிய மாணபுமிகு நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டார்கள், ஆசிரியர்களுக்கு அரசு செய்திருக்கக் கூடிய நல்ல காரியங்களை எல்லாம் அவர்கள் மிகவும் வரவேற்றார்கள். நானும் வரவேற்பதற்குக் காரணம் இருக்கிறது. ஏனென்றால் இந்த ஆசிரியர்களுடைய நல்ல தொண்டில் அவருக்கு முன்னால் நான் ஈடுபட்டேன். அதனால் என் போன்றவர்களுக்கு மட்டற்ற

மகிழ்ச்சி இருக்கும். ஆனால் அரசாங்கத்தின் நோக்கத்தை, நீங்கள் கூறியிருக்கக் கூடிய கருத்துக்களையெல்லாம் நாங்கள் சரியாக அர்த்தம் செய்து கொள்கிறோமா என்ற ஐயம் ஏற்படுகிறது. எல்லோருக்கும் ரூ. 500 வரை சம்பளம் வாங்குகிறவர்களுக்கெல்லாம், ரூ 10 ஈட்டுப்படி உண்டு என்று திட்டவட்டமாகக் கூறி இருக்கிறார்கள். அதற்காக நான் அரசாங்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கருத்தைப் பற்றி எந்த விதமான ஐயமுமில்லை. ஒரே ஒரு ஐயம் மட்டும் இருக்கிறது. ஆங்கிலத்தில் "for all Employees" என்று இருக்கிறது. தமிழ் மொழிப்பெயர்ப்பில் "for all Employees" என்ற சொற்றொடரை "அரசாங்க அலுவலர்" என்று மொழிபெயர்த்து அச்சிடப்பட்டு, நிதி நிலை அறிக்கையின் இந்தப் பிரதி இங்கே விநியோகிக்கப்பட்டு முன்னர், அரசாங்க அலுவலர்கள் என்ற சொற்றொடரில் "அரசாங்க" என்ற வார்த்தையானது இங்கே அடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நிச்சயமாக நன்றி. பக்கம் 44-ல், ரூ. 500 வரை சம்பளம் வாங்கும் "எல்லாப் பணியாளர்களுக்கும்" என்ற இரண்டு வார்த்தைகளுக்கிடையிலுள்ள "அரசாங்க" என்ற வார்த்தை அடிக்கப்பட்டிருப்பதனால், இது ஆசிரியர்களுக்கும் கூட உண்டு, எல்லாப் பணியாளர்களுக்கும் உண்டு என்று சந்தோஷப்படவேண்டியது தான் என்று எனது மாண்புமிகு நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் கருத்து தெரிவித்தார்கள். 55-வது பாராவில் ஆங்கிலத்தில் இருக்கிறது:

"I am sure that all sections of this House would welcome the various benefits I have listed above which we propose to extend to our employees local body employees and teachers."

என்று. இந்த பாராவிலிருந்து மேலே கூறியிருக்கிற நலங்களெல்லாம் கவர்ண்மெண்ட் எம்ப்ளாயீஸ், லோகல்பாடி எம்ப்ளாயீஸ், டீசர்ஸ் எல்லோருக்கும் உண்டு என்று அர்த்தம் என்று என்னுடைய நண்பர் அவர்கள் பேசினார்கள். அப்படி இருக்குமானால், என்னுடைய மகிழ்ச்சிக்கு ஒரு எல்லையே இருக்காது என்று கூறுகிறேன். அவர் கூறியபடி, கல்வியால் தான் நாடு முன்னேற வேண்டும். இப்போது எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியைப் பார்க்கிறோம். பிற்போக்கான இராமநாதபுரம் மாவட்டம் எவ்வளவு முற்போக்காக வந்து கொண்டிருக்கிறது. பழைய காலத்தில் சொல்லிக் கொண்டிருந்த ஒரு சொற்றொடரைச் சம்பிரதாயமாக, வழக்கமாகச் சொல்லிக் கொண்டே வருகிறோம். ஏன் பிற்போக்கு என்று சொல்ல வேண்டும் என்று தெரியவில்லை. எனக்கு நன்றாக ஞாபகத்திற்கு வருகிறது. ஆசிரியர் பணியை 35 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கும் போது மாணவர்கள் விடை எழுதுவதற்கு தாள்களை விநியோகிப்போம். அதோடு குண்டூசியையும் கொடுப்போம். அதில் "மேட் இன் இங்கிலாண்ட்" என்று எழுதியிருக்கும். அது இங்கிலாந்திலிருந்து தான் வரவேண்டும். இப்போது 35 ஆண்டுகளுக்குப் பிறகு நாம் பார்க்கிறோம். தூத்துக்குடியில் 52 கோடியில் உரத் தொழிற்சாலை நிறுவுகிறோம். எத்தனை மற்ற தொழிற்சாலைகள் ஏற்படுத்தக் காத்திருக்கிறோம்? இது வியக்கத்தக்க முன்னேற்றம் தான். ஆனால், நான் சொல்லுவது நாம் செய்யும் பொருளின் தரம் உயர வேண்டும் என்பது. நமக்கு வரக்கூடிய குண்டூசி எது தலை, எது நுனி என்று தெரியாத அளவுக்கு இருக்கிறது. ஏன் சொல்லுகிறேன் என்றால், தாளுக்கும் ஊசிக்கும் போராட்டத்தைப் பார்க்கிறோம். குத்தும்பொழுது தாள் வென்றுவிடுகிறது குண்டூசி தோற்றுவிடுகிறது. நல்ல உற்பத்தி இருக்க வேண்டும். சமுதாய அபிவிருத்தி இருக்க வேண்டும். பஸ் கண்டக்டர்கள் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும். குமாஸ்தாக்கள் அவர்களுடைய பண்பிலிருந்து சிறிதளவும் குறையாதபடி, நாட்டு மக்கள் பெருமைப்படுகிற அளவு நடந்துகொள்ள வேண்டுமென்றால், அது எங்கள் கையில் இருக்கிறது. ஆசிரியர்கள் கையில் தான் இருக்கிறது. ஆசிரியர் பணி தான் சிறந்த பணி என்று நினைத்து, அரசாங்கம் இவ்வளவு செய்திருக்கிறது என்று நான் ஏற்றுக்கொள்ளுகிறேன். இதைத் தான் கோதாரி கமிஷன் அறிக்கையில் முதலாவது வாக்கியமாகச் சொல்லுகிறார். இந்த நாட்டின் தலைவிதி நகருள்ள பள்ளி வகுப்பு அறைகளில் நிர்ணயிக்கப்படுகிறது என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்கள். இந்தத் தலைவிதியை நிர்ணயிக்கும் ஆசிரி



யர்கள் நிலையை உயர்த்துவதற்கு இந்த அரசு செய்திருக்கிற நல்ல பணிகளை எல்லாம் எனக்கு முன் பேசிய மாண்புமிகு அங்கத்தினர் ஜாப்தாவாரியாகக் கூறிவிட்டார்கள். நான் மறுபடி கூறவேண்டியதில்லை. இன்னும் சில காலத்தில் எந்தத் துறையிலும் குறை இல்லாதபடி அது வேண்டும், இது வேண்டும் என்று குறை கூறுவதற்கு வாய்ப்பு இல்லையே என்ற குறை நேரிட்டுவிடலாம் என்ற நல்லதொரு நிலைக்கு நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம். அரசாங்க ஊழியர்களுக்கு ஒப்பாக ஆசிரியர்களுக்கும் ரூ. 10 ஈட்டுப்படி கொடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். ஆனால் "மினிமம் பென்ஷன்" ரூ 20 லிருந்து ரூ. 30-க்கு உயர்த்தியிருக்கிறார்கள் அல்லவா, அது ஆசிரியர்களுக்கு நிச்சயமாக உண்டு என்று எனது நண்பர் ஆசிரியர் பிரதிநிதி கூறுவார்களேயானால், ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறேன். இங்கு இருக்கக் கூடிய வாக்கியம் அப்படி அல்ல. குறைந்த அளவு ஓய்வு ஊதியத்தை 5-10 p.m. ரூ. 20-லிருந்து ரூ. 30 ஆக, "கவர்மெண்ட் எம்ப்ளாயீஸ்" க்கு உயர்த்தப்படுகிறது என்று தான் கூறப்பட்டிருக்கிறது. அது அர்த்தம் இல்லாமல் வரவில்லை. நமது நிதி அமைச்சர் அதுபற்றிக் கூறுவார்கள் என்று கருதுகிறேன். ஓய்வு ஊதியத்தை ரூ. 20-லிருந்து ரூ. 30 ஆக ஆக்கியிருப்பதை உயர்த்தியிருப்பதாகச் சொல்ல முடியாது. அண்டை மாநிலமான கேரளாவில் ஓய்வு ஊதியம் ரூ. 35-லிருந்து ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த உயர்வு எல்லா ஆசிரியர்களுக்கும் உண்டு என்ற குறிப்பு அதில் இருக்கிறது. அம்மாதிரிக் குறிப்பும் இங்கு தேவை என்று கருதுகிறேன். இந்தக் குழப்பத்தை அவர்கள் நீக்கி எந்த எந்தச் சலுகைகள் யார் யாருக்கு உண்டு என்று தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரே வரியில் தெளிவுபடுத்தி விடலாம். அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு என்ன சலுகைகள் உண்டோ அது எல்லாம் உள்ளாட்சித் துறைப் பள்ளிகளிலும், தனியார் பள்ளிகளிலும் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு என்று கூறிவிடலாம். ஏனென்றால் தனியார் பள்ளி ஆசிரியர்கள், உள்ளாட்சித் துறை ஆசிரியர்கள், அல்லது அரசாங்க ஆசிரியர்கள், எல்லோரும் ஒரேவிதமான சம்பளம் பெறுகிறார்கள். ஒரேவிதமான பஞ்சப்படி போன்ற ஊதியம் பெறுகிறார்கள். ஆனால் அவர்கள் ஓய்வு பெறும் பொழுது, அவர்களுக்குக் கிடைக்கும் ஓய்வு ஊதியத்தில் தான் இம்மாதிரியான வித்தியாசங்கள் இருக்கின்றன. ஓய்வு ஊதியம் எல்லோருக்கும் ஒரே விதமாக இருக்க வேண்டும் என்று அரசாங்கம் ஆணையிட்டால் ஆசிரியர்களுக்கு உள்ள மகிழ்ச்சி மட்டற்றதாகும். அவர்களுக்குச் சிரமங்கள் குறையும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஓய்வு ஊதியம் கொடுத்தது பெரிது என்று நன்றி கூறிக் கொள்ளுகிறேன். இந்த பென்ஷன் கதையை நினைத்தாலே நம்முடைய ஆனந்தம் பெருக வேண்டும். பென்ஷன் கிடைக்கிறதே என்று நினைத்துப் பெருமை கொள்ள வேண்டும். ஆசிரியர் தொழிலில் ஈடுபடும்பொழுது, பென்ஷன் வேண்டுமென்று ஆசிரியர்கள் தீர்மானம் போடும்பொழுது, ஏன் பென்ஷன் வேண்டுமென்று கேட்கிறீர்கள். "You may as well cry for the moon" என்று சொன்னார்கள். 1970-ல் பின்னோக்கிப் பார்க்கும்போது "Cry for the moon" என்பது பொருத்தமானதொரு சொற்றொடர் என்று கூடத் தோன்றவில்லை. இன்றைக்கு இருக்கும் விஞ்ஞான வளர்ச்சியில் "மூன்" வேண்டுமானாலும் கிடைத்துவிடும் போல் இருக்கிறது. அதற்கு முன்னதாகவே நமக்கு ஓய்வு ஊதியம் கிடைத்திருக்கிறது. அந்த ஊதியம் நியாயமானதாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் ரூ. 30 எல்லோருக்கும் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பள்ளிகளில் "Non-teaching staff"-க்கு எந்த விதமான சலுகையும் இல்லை. நான் குமாஸ்தாக்களை மட்டும் நினைவில் கொள்வதாக நினைக்கக் கூடாது. பள்ளிகளில் மிக ஏழ்மையான சிப்பந்திகள், "ஸ்வீப்பர்ஸ்" வாட்ச்மென், பியூன்ஸ்" இவர்கள் எந்தவிதப் பயனும் இல்லாமல், 58-வது வயதில் வெளியே போகிறார்கள். அவர்களுக்கும் "பென்ஷன்" கொடுக்க வேண்டும். சமூக நலனையே உயர்ந்த குறிக்கோளாகக் கொண்ட அரசு, "எய்டெட் ஸ்கூல்ஸ்", தனியார் பள்ளிகளில் இருக்கும் ஏழைச் சிப்பந்திகளுக்கு ரூ.20 பென்ஷன் கிடைக்குமாறு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பிற சலுகைகள் எல்லாம் ஆசிரியர்களுக்கும் கிடைக்குமாறு அரசாங்கம் முடிவு

செய்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மொத்த வருமானத்தில் கல்விக்காகச் செலவு செய்யப்படுவது ரூ. 66.83 கோடி. இது மிகவும் போற்றத்தக்கது. நான்காவது திட்டத்தில் இந்த ஆண்டிற்கு ரூ. 7.38 கோடி கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் கல்விக்குச் செலவு செய்ய முடியவில்லை என்றால் அதற்காகச் செலவு செய்யவேண்டுமென்ற கூச்சல் இப்போது இருக்கிறது. ஆனால் அந்தப் பணத்தை நல்ல முறையில் செலவு செய்ய வேண்டுமென்று கருதுகிறேன். நண்பர் அவர்கள் பெருமைப்பட்டார்கள். 6 முதல் 11 வயது வரையில் உள்ளவர்களுக்கு 2,720 அதிகமான ஆசிரியர்களை நியமிக்கப் போகிறோம் என்று கூறுகிறார்கள். 11 முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களுக்காக 1930 ஆசிரியர்களும் 14 முதல் 17 வயது வரையுள்ள மாணவர்களுக்கு 1,320 பி.டி. ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லுமிடத்து, நான் அந்தப் புள்ளி விவரங்களைச் சந்தேகிக்கிறேன். பள்ளிகளில் சேரும் மாணவர்கள் தொகை தற்சமயம் குறைந்து கொண்டு வருகிறது. அதிகரிக்கவே இல்லை. பள்ளிகள் அதிகமாக ஆசிரியர்களை நியமிப்பதற்குப் பதிலாக பள்ளிகளிலிருந்து ஆசிரியர்களை வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சில பெரும் நகரங்களில் சென்னை, திருச்சி, மதுரை, கோவை போன்ற இடங்களில் பள்ளிகளை நோக்கி மாணவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் பிரத்யட்சமாக 99 சதம் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது என்று நிரூபிக்கத் தயாராய் இருக்கிறேன். பல ஆசிரியர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு. பல பள்ளிகள் திறக்கப்படுகின்றன. முன்பு இருந்த ஆசிரியர்கள் எல்லாம் மாணவர்கள் இல்லாமல் வெளியேற்றப்படுகிறார்கள். கம்பம் உயர்நிலைப் பள்ளியிலிருந்து 18 ஆசிரியர்கள் வெளியே போக வேண்டுமென்று நோட்டீசு கொடுக்கப்பட்டு அவர்கள் ஒரு மகஜரை அனுப்பியிருக்கிறார்கள். இன்று தந்தியும் அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு காரணம் என்ன என்றால், அதே ஊரிலும் அதற்குப் பக்கத்து ஊரிலும் பள்ளிக்குச் செல்லக் கூடிய பிள்ளைகள் இல்லாததே தான். இதற்குக் காரணம் அங்கெல்லாம் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் மிகவும் தீவிரமாக நிறைவேற்றப்படுவது தான். ஆனால் உயர்நிலைப் பள்ளிகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டதால், இந்தப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு வேலையில்லாமல் வெளியே செல்ல வேண்டியிருக்கிறது. அதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கு 55 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருக்க வேண்டும் என்பதை அரசாங்கமும் விரும்பவில்லை. கல்வி இயக்குநரும் விரும்பவில்லை. ஆனால் அங்கே உள்ள கல்வி அதிகாரி 55 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று நிர்ணயம் செய்திருக்கிறார். அதற்கு விதி இடம் தரவில்லை. அந்த அதிகாரி செய்வது சரியா, அல்லது தவறா என்று கோர்ட் தான் முடிவு கூற முடியும். எங்கள் பள்ளியில் 220 பிள்ளைகளுக்கு 4 ஆசிரியர்கள் வைத்துக் கொள்ள முடியும். ஆனால் அதே 220 பிள்ளைகள் உள்ள பக்கத்திலே உள்ள ஒரு ஆரம்பப் பள்ளியில் 10 ஆசிரியர்கள் வைத்துக்கொள்ளலாம். 20 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்று ஒரு ஆரம்பப் பள்ளியில் இருக்கலாம். ஆனால் 55 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்று ஒரு உயர் நிலைப் பள்ளியில் இருக்க வேண்டும். இந்த மாதிரி முரண்பாட்டைத் தீர்க்க வேண்டும் என்று சொல்கிறேன். நீங்கள் புதிதாகப் பள்ளிகளைத் திறப்பதற்குப் பதிலாக மூடப்பட்ட வகுப்புகளைத் திறந்து அதிலிருந்த ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு தந்தாலே நல்லது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்களும், நாங்களும் அத்தனை அதிக ஆசிரியர்களை நியமித்துள்ளோம் என்று கொடுக்கும் புள்ளி விவரங்கள் எல்லாம் பொய் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. எஸ். ராகவானந்தம் :** தலைவர் அவர்களே, புள்ளிவிவரங்களைப் பொய் என்று சட்ட மன்றத்தில் கூறலாமா என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





**திரு. எம். ராஜா அய்யர் :** அது உண்மைக்கு மாறானது என்று அஞ்சுகிறேன். நான் இப்படிச் சொல்வதற்குக் காரணம் ஆசிரியர்கள் மேல் உள்ள ஒரு அக்கறை தான். என் கண்ணால் பார்த்திருக்கிறேன். இது எல்லாம் வெறும் "பேப்பர் பிகர்ஸ்" தான். இந்த நிலையில் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க அரசாங்கம் நல்லதொரு முயற்சியை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பள்ளிகளில் மாணவர் குறைவாக இருப்பதற்கு மற்றொரு காரணம் அங்கெல்லாம் குடும்பக் கட்டுப்பாடு தீவிரமாக அமுல்படுத்தப்படுவது தான். 6 முதல் 11 வரை வயதுள்ள பிள்ளைகள் 3 லட்சம் பேர்கள் சேருவார்களா என்பது சந்தேகம் தான்.

அடுத்து, மானேஜ்மெண்ட் பள்ளிகள் விஷயமாக, அதன் ஆசிரியர்களின் விஷயமாக இந்த அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சி. பி. சிற்றரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் மானேஜ்மெண்ட் பள்ளிகளைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் குறிப்பிடப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

It has been stated: " hon. Members are aware that Government are keen on the welfare of teachers. Government have set up a Committee to look into the service conditions of the teachers in various schools.

I want to know what the Hon. Member has to say about it.

THIRU M. RAJAH IYER : I am very happy that the hon. Member has drawn my attention to a possible misunderstanding which was never in my mind..

5-20 p.m.

அதைச் சிறிது தயவு செய்து தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனக்கு முன்னே பேசிய நண்பர் திரு. சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குள்ள அத்தனை சலுகைகளும் ஆசிரியர்களுக்கும் உண்டு என்று கூறினார். அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. அவர் மூலமாக வருவதை விட, மாண்புமிகு முதல்வர் வாயிலாகவோ அல்லது நிதி அமைச்சர் வாயிலாகவோ இந்த உறுதிமொழி வந்தால், எனக்கு நம்பிக்கை பிறக்கும் ; மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கும். இந்த நிதி நிலை அறிக்கையின் ஆங்கிலப் பிரதியில் எல்லோருக்கும் எல்லா வசதியும் அளிக்கப்படும் என்பது போல இருக்கிறது. ஆனால் தமிழில் வேறு மாதிரியாக இருக்கிறது. ஆங்கிலத்தில் உள்ளது போல தமிழில் குறிப்பிடப்படவில்லை. அடுத்து, பென்ஷன் ரூ. 20-லிருந்து 30 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அது எய்டட் ஸ்கூல் டீச்சர்களுக்கு உண்டா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதைப் போல டி.ஏவை சாலரியோடு "மெர்ஜ்" பண்ணி ஒருவர் கடைசி 12 மாதங்கள் வாங்கக் கூடிய சம்பளத்தைக் கணக்கிட்டு "பென்ஷன்" கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு மட்டுமா, அல்லது மற்றவர்களுக்கும் உண்டா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். பென்ஷன் விஷயங்களில் ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. இப்போது மூன்று சிக்கல்கள் இருக்கின்றன. ஒன்று, ஒரு கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர், முதல்வர் ஆகும்போது அதில் அவர் ஒரு குறுகிய காலம் தான் பணியாற்றி அதற்குரிய சம்பளத்தைப் பெறுகிறார். எனக்குத் தெரிந்த ஒருவர், ஒரு உயர்நிலைப் பள்ளியில் பல ஆண்டுகள் பணியாற்றி விட்டு, அதன் பிறகு கடந்த 21 வருடங்களாக ஒரு மிகப் பெரிய ட்ரெயினிங் காலேஜ் முதல்வராகச் செயலாற்றி வருகிறார். ஆனால் அவருக்கு ஓய்வு ஊதியம் வேண்டும் என்று கேட்டபோது, அவருடைய 21 ஆண்டு சர்வீஸை மட்டும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும், பென்ஷனுக்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்வது நியாயம் அல்ல என்று கருதுகிறேன். நான் அதற்காகப் பல முறை முறையிட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** அந்தத் தலைமை ஆசிரியர் ராஜிநாமா செய்து விட்டுத் தான் அப்படிப் போனாரா ?

**திரு. எம். ராஜா அய்யர் :** ராஜிநாமா செய்து விட்டுத் தான் போனார். மற்றும் என்னுடைய நண்பர் ஒருவர் துரைக்கண்ணு முதலியார் எனப்படுகிற அவர்கள் ஒரு கல்லூரிக்கு முதல்வராக இருந்தார். ஆனால் அவர் "பென்ஷன்" பெருமலே போய் விட்டார். 1958-க்கு முன்னால் ரிடயர் ஆன ஆசிரியர்களுக்கு முற்றிலும் "பென்ஷன்" கொடுக்கப்படவில்லை. நண்பர் திரு. சி. பி. சிற்றரசு அவர்கள் சொன்னார்கள் இந்த அரசாங்கம் ஒரு குழு நியமித்து இருப்பதாக. அதையெல்லாம் நான் மறுக்கவில்லை. நீங்கள் ஒரே நேரத்தில் நான் எதிர்பார்க்காத அளவிற்கு நிறையச் சலுகைகள் அளித்திருக்கிறீர்கள். நீங்கள் செய்துள்ள இத்தனை நலத்தையும் ஒரு சிறிது அளவு கூட குறைத்துக் கூற நான் விரும்பவில்லை.

இரண்டாவது, இவ்வாண்டுத் திட்டச் செலவில் பள்ளிகளில் நூல் நிலையங்களைத் திறப்பதற்காக லட்சக்கணக்கான பணத்தைச் செலவிட்டு, 130 உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஒரு உயர்நிலை பள்ளிக்கு ரூ. 2,000 வீதம் ரூ. 2.6 லட்சம் செலவு செய்திருக்கிறீர்கள். அது பாராட்டப்படுவதற்கு உரியது ஆகும். அடுத்தாற் போல், உயர் துவக்கப்பள்ளிகள், துவக்கப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு 4.83 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது நூல் நிலையங்கள் திறப்பதற்காக. அதில் துவக்கப்பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 30 வீதமும், உயர் துவக்கப்பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 60 வீதமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. துவக்கப் பள்ளிக்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்த ரூ. 30 ஐக் கொண்டு, அந்தப் பள்ளிகளில் நூல் நிலையங்கள் திறக்கப்பட வேண்டுமென்றால், அது ஆகக் கூடிய காரியம் என்று தோன்றவில்லை. 30 ரூபாய்க்கு எத்தனை புத்தகங்கள் வாங்க முடியும் ?

ஒரு புத்தகம் நூல் நிலையம் ஆக முடியுமா என்று கேட்கிறேன். இதிலே கவர்ன்மெண்டுக்கு எத்தனை லட்ச ரூபாய் செலவு ? 10,000 துவக்கப்பள்ளிகளுக்கு ரூ. 30, ரூ. 60 கொடுப்பதற்குப் பதிலாக பள்ளிகளின் எண்ணிக்கையைக் குறையுங்கள். 10,000 பள்ளிகளுக்குப் பதிலாக 800 அல்லது 1,000 பள்ளிகளுக்கு வாங்கிக் கொடுங்கள். சிறுவர்களுக்கான புத்தகங்கள் அருமையான புத்தகங்களாகக் கிடைக்கின்றன. ஐந்து வயதுள்ளவர்கள் படித்து இன்டறக் கூடிய பல உயர்ந்த புத்தகங்கள் வருகின்றன. அவர்களைக் கவர்ச்சிக்கும்படியான நூல் நிலையங்கள் நிறுவ வேண்டும். நோக்கமானது மிகச் சிறந்தது, பாராட்டுகிறேன். அந்த முறையினால் எவ்வளவு பணம் வீணாகிறது ? இத்தனை ஆயிரம் பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் ரூ. 30, ரூ. 60 கொடுக்கும் திட்டத்தை உடனடியாக மாற்ற வேண்டுமென்று நான் கூறுகிறேன். இதே கருத்தை இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து நான் சொல்லுகிறேன். ஆண்டு தோறும் திருப்பித் திருப்பி அச்சிடப்பட்டு நம் புத்தகத்தில் வந்து கொண்டே இருக்கிறதே ஒழிய, வேறு ஒன்றையும் காணோம். ஆகையினால்தான் நான் ஆரம்பத்திலேயே வருந்தினேன். இதை மறுபடியும் தொடர்ந்து கடைப்பிடித்து அமுலாக்கக் கூடிய சாதனமாக ஒரு இலாகா இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்று கூறினேன்.

மாவட்டக் கழகப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக்கப் போகிறோம் என்றும் அதைப் பொங்கல் பரிசாகவும் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மாவட்டப் பள்ளிகளை அரசுப் பள்ளிகளாக்குவது வரவேற்கத்தக்கது. எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் 1—4—1966-க்குப் பின்னால் வந்த கழகப் பள்ளிகளை எல்லாம் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக அமைக்க வேண்டும் என்ற கருத்தைப் பெருவாரியாக எல்லோரும் ஒப்புக்கொள்ளவில்லை அந்தப் பள்ளிகளும் ரூ. 5,000 கொடுக்கப்பட்டு கழகப் பள்ளிகளாகத் திறக்கப்பட்டன. கழகப் பள்ளி ஆசிரியர்கள் அவற்றிற்குத் தலைமை



ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். அந்தந்த டி.இ.ஒ. தான் அதற்கு ஆசிரியர்களைப் பொறுக்கியெடுக்கிறார்கள். சர்வீஸ் கமிஷன் எடுக்கவில்லை அவற்றை அரசுப்பள்ளிகளாக மாற்றிவிட்டால், இப் பள்ளிகளில் இருக்கிற தலைமை ஆசிரியர்கள் வேலை இழந்து மேலும் கிராஜுவேட் ஆசிரியர்களாகத் திரும்பிச் செல்ல வேண்டிய அவலநிலை ஏற்படலாம். ஆகவே அவைகளையும் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளாகவே கருத வேண்டுமென்று விரும்புகிறேன். அவைகளிலேயே தனித் தனியாக சர்வீசைப் பார்க்க வேண்டுமென்று கருதுகிறேன். அரசுப் பள்ளிகளில் இருக்கிறவர்கள் எல்லாம் அங்கே செல்வது, அங்கே இருக்கக் கூடியவர்கள் இங்கே வருவது, இதைத் தடுக்க வழி செய்ய வேண்டும். சீக்கிரமாகச் செய்ய வேண்டும். காலம் தாழ்த்திச் செய்தால், பல பிரச்சினைகள் எழக்கூடும். உரிய காலத்தில் செய்து விட்டால், நல்லதாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

இராமநாதபுரம் கிழக்குப் பிரதேசத்திற்கு மிகவும் மகிழ்ச்சிக்குரிய 5–30 m.p. ஒரு செய்தி இந்த அரசு சேது சமுத்திரத் திட்டத்தை அமுலாக்குவதற்கு எடுக்கக் கூடிய முயற்சியாகும். தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் உண்மையிலேயே பயனுள்ளதாக இருக்க வேண்டுமென்றால், பெரும் கப்பல்களெல்லாம் அங்கு வரவேண்டுமென்றால், சேது சமுத்திரம் திட்டம் இருந்தால் தான் முடியும். ஆகவே இதை அரசாங்கம் மத்திய அரசிடம் வற்புறுத்திக் கூறி சேது சமுத்திரத் திட்டத்தைக் கிழக்கு இராமநாதபுரத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதற்கு முன்னதாகச் செய்யவேண்டியது ஒன்று இருக்கிறது. பாம்பன் கால்வாய்க்குக் குறுக்கே பாலம் கட்ட வேண்டியது மிகவும் அவசியம். இன்றைக்கு யார் சென்றாலும், அவர்கள் மோட்டார் கார்களை எல்லாம் மண்டபத்தில் விட்டு விட்டு, ரயில் மூலமாகத்தான் ராமேசுவரத்திற்குச் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அமைச்சர்கள் கூட தாங்கள் ராமேசுவரத்திற்குச் செல்ல வேண்டுமென்று கருதினால், இரண்டு ரயில் வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அவைகளை மண்டபத்தில் சிறிது நேரம் நிறுத்தி வைத்தாலொழிய, அவர்களால் ராமேசுவரத்திற்குச் செல்ல முடியாது. எங்கள் பகுதியில் யாராவது ஒரு நல்ல காரியத்திற்கு குறுக்கே நிற்கிறார்கள் என்றால், என்ன பாம்பன் ஆறு மாதிரி குறுக்கே நிற்கிறாயே என்று சொல்லுவார்கள். ஆகவே அந்தப் பாம்பன் ஆறு பெரிய இடையூறாக இருக்கிறது. இங்கே கிளம்புகிற மோட்டார் ராமேசுவரம் கோவில் வாசல் வரை சென்று நிற்கும் அளவிற்கு ராமேசுவரம் கால்வாய்க்குக் குறுக்கே ரஸ்தா பாலம் வர வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

கடைசியாக, ஒன்று கூறி முடித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த லாட்டரி சீட்டைப் பற்றி நான் கூற வேண்டும். தலைவரவர்களே, இங்கே புத்தகங்களெல்லாம் வைக்கப்பட்டன. அதை எல்லாம் புரட்டிப் பார்த்தேன் அந்தப் புத்தகங்களை எல்லாம் வைத்துக்கொண்டு பரீட்சை எழுதக் கூடிய முறை இருக்கிறது அல்லவா, அந்தத் தேர்வில் நான் தோல்வியடைவேன் என்று தான் கருதுகிறேன். எதைப் புரட்டிப் பார்த்தாலும் ஒன்றை என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. லாட்டரி சீட்டு மூலம் தமிழ்நாடு அரசு எவ்வளவு ஆதாயம் எதிர்பார்க்கிறது என்ற குறிப்பீடுகள் என் கண்ணில் படவில்லை ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த லாட்டரி சீட்டு வாங்க வேண்டுமென்ற ஆர்வம் பொதுமக்கள் மனதை பெரிதும் கவர்ந்திருக்கின்றன. இப்போது எல்லோர் கையிலும் பணம் இருக்கிறது. " புரொகிபிஷன் " இருக்கிறபடியால், அந்தப் பணத்தை அங்கே கொண்டுபோய் செலவு செய்ய முடியாது. ஒன்று சினிமாவிற்குச் செல்ல வேண்டும் அல்லது லாட்டரி சீட்டு வாங்க வேண்டும். அதற்கு மக்களிடம் பெரிய ஆர்வம் இருக்கிறது. அதே நேரத்தில் லாட்டரிச் சீட்டு விற்பனைக்கு ஏஜெண்டுகள் தேவையா என்று நாம் பரிசீலிக்க வேண்டுமென்று எண்ணுகிறேன். இதைப் பொதுமக்களுக்கு அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இடையாது. சில கடைகளில் கூட வேறு ஒரு மாநிலச் சீட்டு

வாங்கினால் ஒழிய இந்தச் சீட்டு கொடுக்கமாட்டேன் என்கிறார்கள் என்ற புகார் மறைமுகமாகவும் நேரடியாகவும் இருக்கிறது. இதற்கெல்லாம் தீர்வு காணும் முறையில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நாட்டின் மாணவர்கள் முன்னேற வேண்டுமென்று இந்த அரசு எடுக்கும் முயற்சி பாராட்டத்தக்க தாக இருக்கிறது. எவ்வளவோ படித்தவர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு அரசாங்க அலுவலகத்திலும் லாட்டரிச் சீட்டு விற்பதற்காகவே ஒரு குமாஸ்தா வைப்போட்டு எல்லோரும் அரசாங்க அலுவலகங்களில் போய் லாட்டரி சீட்டுவாங்கி கொள்ளலாம் என்றால், இங்கே க்யூவில் நிற்பதற்குப் பதில் அரசாங்க அலுவலகங்களில் " க்யூ " வரிசையில் நின்று பெற்றுக் கொள்வார்கள். வேலையில்லாத் திண்டாட்டமும் ஓரளவு தீரும், பல பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்,

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவரவர்களே, இந்தாண்டு வரவு செலவுத் திட்டத்தைக் குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் நிதி நிலை அறிக்கையைத் தயாரித்த அரசுக்கும், நிதித் துறையினருக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். பல விவரங்கள் பற்றி இதிலே தொடர்பாக விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கத்தினர்களும், பிறரும் நிதி நிலை அறிக்கையைப் பற்றிய விவரங்களை நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். அவர்கள் புரிந்துகொள்ளும்படி செய்வதற்கு நல்ல முயற்சிகள் வழக்கம் போல் செய்திருக்கிறார்கள். சட்ட மன்றமோ அல்லது அசெம்பிளியோ கூடுகிற காலத்தில் நிதிநிலை அறிக்கையிலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் அங்கத்தினர்கள் படித்துத் தெரிந்து கொள்ள முடியாது. என்றாலும் குறைந்த பட்சம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயத்தை மட்டும் தான் நாம் தெரிந்துகொள்ள முடியும். நிதிநிலை அறிக்கையை நிதியமைச்சர் சட்ட மன்றத்தில் வைத்ததற்குப் பின்னால் அதே நாளிலோ அல்லது அதற்கு மறுதினமோ நிதி இலாகாவிலிருந்து ஒருவர் இருவர் வந்து அங்கத்தினர்களை யெல்லாம் ஒன்றாகக் கூட்டி நிதி நிலை அறிக்கையை ஆராய்வதற்கு என்ன வழி என்பதையும் நேரடியாகச் சொல்லி, அங்கத்தினர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு விளக்கம் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று நினைக்கிறேன்.

[Deputy Chairman in the Chair.]

10,15 ஆண்டுகளுக்கு முன்னால் ஓரிருமுறை அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நிதி இலாகாவில் திரு. ரங்காச்சாரி என்ற ஒருவர் டெபுடி செக்கரடரியாக இருந்தார் என்று எனக்கு நினைவு. அவர் இப்போது ஓய்வு பெற்றிருப்பார். மத்திய அரசில் அவர் ஏதோ ஒரு பணியை மேற்கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். அவரும் இன்னொருவரும் இராஜாஜி ஹாலில் அம்மாதிரி நிதி நிலை அறிக்கையைப் பற்றிய விளக்கங்களைத் தருவதற்காக வந்தார்கள். எல்லோரும் அதில் விரும்பிப் பங்கேற்றுக் கொண்டார்கள் என்று சொல்ல இயலாவிட்டாலும் கூட, விரும்பிய பலர் அந்த நாட்களில் வந்து அவர்களுடைய விளக்கங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது. இந்த ஆண்டு கூட இன்னும் திட்டங்கள் வாரியாக எடுத்துக்கொண்டு அசெம்பிளியில் விவாதிக்க ஆரம்பிக்கவில்லை. எனவே ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு ஞாயிற்றுக் கிழமையிலோ அல்லது வேறு ஒரு தினத்திலோ சட்ட மன்ற அங்கத்தினர்களையெல்லாம் ஒன்றாகக் கூட்டி நிதி இலாகாவில் உள்ளவர்கள் அதிகமான விளக்கங்களைக் கொடுத்து, அதை எப்படித் தெரிந்துகொள்ள வேண்டும் என்று புரிய வைக்கலாம். பல விளக்கங்களுக்கான விவரங்கள் தரப்பட்டிருந்தாலும் நேரடி விளக்கங்களை கூட இருந்து தருவது என்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். சட்டமன்றத்திலே பணிபுரியும் நமக்கும் ஆட்சியைப்பற்றி,





பொருளாதார நிலைமைகளைப் பற்றி, நிதி நிலைமைகளைப் பற்றி பல்வேறு விதமான கருத்துக்கள் இருக்கும். ஆனும் நாம் நம் மனதிலே கொண்டுள்ள கருத்துக்களுக்குச் சரியான முறையில் விளக்கங்கள் கிடைத்து அவைகளை நாம் புரிந்து கொள்ளும்போது நமக்கு ஒரு சரியான தெளிவு பிறக்கும். அதன் மூலமாக நாம் நம் கருத்தில் உள்ள முரண்பாடுகளை மாற்றிக்கொள்வதற்கு அது ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமையும் ; அது அரசுக்கும் ஒரு சரியான துணையாக, ஒத்தாசையாக இருப்பதாக அமையும் என்று கருதுகிறேன். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக அரசாங்க இலாக்காக்களில் பணி புரியும் உத்தியோகஸ்தர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே வருகிறது என்று நான் நினைக்கிறேன். அதற்கான அவசியம் இருக்கலாம். எண்ணிக்கை பெருகுவதற்கான காரணங்கள் இருக்கலாம். அதற்கான விளக்கங்கள் ஆட்சியில் இருப்பவர்களும், நெருங்கிய தொடர்பு உள்ளவர்களும் எவ்வளவு தெரிந்து கொள்ளுகிறார்களோ அவ்வளவு தெரிந்து கொள்ள எங்களைப் போன்றவர்களுக்கு வாய்ப்பு இருக்காது. அதற்காகவே 6-40 p.m.
தான் ஒவ்வொரு ஆண்டும் அதிகாரிகளைப் பற்றியும் ஒரு அறிக்கை இங்கே சபை முன் வைக்கப்படுகிறது. அது " Statement of posts and scales of pay " என்ற புத்தகத்தில் இருக்கிறது. அதில் மாநிலத்தில் உள்ள அரசு அலுவலர்களின் எண்ணிக்கை பற்றியும் மற்றும் அவர்கள் சம்பளம் முதலிய விவரங்களும் கொடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறாக ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கப்படுகிற புத்தகத்தில் பக்கவாரியாக, இலாக்காவாரியாக அந்தத் தொகையைக் கூட்டிப் போட்டு மொத்தம் இவ்வளவு என்று அச்சிடப்படவில்லை. ஏனோ ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறாகத் தான் கொடுக்கப்படுகிறது. அதை இரண்டு நாட்களுக்குள் கூட்டிப் போட்டு இலாக்காவாரியாகப் பிரித்துப் போடுவது என்றால், முடியவில்லை. அதற்கு 2 நாள் தேவைப்படுகிறது. இது அவ்வளவு பெரிய வேலையாக இருக்கிறது. அந்தப் புத்தகத்தை அவர்கள் இனி அச்சிடும்போது பக்கவாரியாக இலாக்காக்கள் வாரியாக அச்சிடுவதோடு கூட, கிரேடு வாரியாகப் பிரித்து அவர்களுடைய சம்பளங்களையும் குறிப்பிட்டு, அதில் எத்தனை பேர்கள் அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள் என்ற விவரங்களை வெளியிடுவது மிக மிகப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த விவரங்களைக் கேட்டு நான் கூட அரசுக்கு ஒரு கேள்வி அனுப்பியிருந்தேன், இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட காலத்தில் சிக்கனமாக அரசை நடத்துவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். அதிகமான அலுவலர்களைக் குறைக்கவேண்டும் என்ற முயற்சியில் அவர்களும் ஈடு பட்டார்கள். அம்மாதிரியாக சில சில துறைகளில் அலுவலர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் முற்பட்டார்கள் என்று கருதுகிறேன். ஆனால் அது பின்னால் இயலாமல் போயிருக்கும் என்று கருதுகிறேன். அதை நான் ஒரு குறையாக இங்கே கூறவில்லை. நல்லெண்ணத்தோடு குறைக்க முற்பட்டிருக்கலாம். குறைப்பது சிரமமாக இருந்திருக்கலாம் அல்லது அவர்கள் கருத்துக்கு, திட்டத்திற்கு, ஆட்சிக்கு ஒத்ததாக இல்லாமல் இருந்திருக்கலாம். தெலுங்கில் பழமொழி ஒன்று சொல்வார்கள். பொற்கொல்லர்கள் காடுவெட்டப் போன கதை அது பிரத்தியட்சமாக நடந்த கதை. தட்டான் காடு வெட்டிய கதை என்று சொல்லுவார்கள். அவர்கள் என்றைக்கு மண்வெட்டி பிடித்திருக்கிறார்கள் ? அவர்களைப் பார்த்து எவ்வளவு நிலம் வேண்டும் என்று கேட்ட போது, இவ்வளவு நிலம் வேண்டும் என்று சொன்னார்கள். சரி அப்படியே வெட்டி எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால் கொஞ்சம் வெட்டி விட்டு அதற்கு மேல் முடியாமல் போய்விட்டது "அந்த்தக் கோடி இந்த்த சாலு " என்று விட்டு விட்டார்கள். அதைப் போல் நம்முடைய ஆட்சி நடத்துகிறவர்களுக்கு இயலாமல் இருந்திருக்கலாம் என்று கருதுகிறேன். ஆனால் மொத்தத்தில் பார்க்கிறபோது அந்தத் தொகை மிகப் பெரிதாக வளர்ந்து விட்டிருக்கிறது. அதன் காரணகாரியத்தைப் பார்ப்பதற்கு எனக்கு அவகாசம் இல்லை. அதை அரசு யோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[3rd March 1970

**திரு. எஸ். ராகவானந்தம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆள்குறைப்பு செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்களா ?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** என்னுடைய கருத்தைச் சொல்லுகிறேன். நீங்கள் கொஞ்சம் பொறுத்திருங்கள்.

1966-67-ஆம் ஆண்டு கொடுத்த இந்த அறிக்கைப் புத்தகம் இருக்கிறது. அதில் உள்ளபடி 2,82,719 அலுவலர்கள் இருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு 1970-71க்குக் கொடுக்கப்பட்ட புத்தகப்படி (1970-ல் அச்சிடப்பட்ட புத்தகம்) 3,44,643 பேர்கள் இருக்கிறார்கள். இதை நாம் ஆராய வேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். இன்று ஏறக்குறைய 62,000 அலுவலர்கள் அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது.

**மாண்புமிகு திரு எம். முத்துசாமி :** எவ்வளவு பேருக்குப் புதிதாக வேலை கொடுத்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகிறார்?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** 1966-67-க்குக் கொடுத்த எண்ணிக்கையை 1970-71-க்குக் கொடுத்த எண்ணிக்கையிலிருந்து கழித்துப் பார்த்தாலே அமைச்சர் அவர்கள் தெரிந்துகொள்ளலாமே.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எவ்வளவு பேருக்குப் புதிதாக வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல வேண்டுகிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அவ்வளவு பேருக்கும் புதிதாக வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது சரியான வாதமாகாது. ஆரம்பத்தில் குறைப்பதற்கு முயன்றீர்கள், பிறகு அது உங்களுக்கு ஒத்ததாக இல்லை என்று விட்டு விட்டீர்கள் என்றுதான் நான் சொன்னேன். எவ்வளவு பேர் என்றால், கணக்குப் போட்டுப் பார்த்தால் தெரிகிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆரம்பத்தில் நாங்கள் சொன்னது என்ன என்று விளக்க விரும்புகிறேன். வேலையில் இருப்பவர்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும் என்று சொல்லவில்லை. ஒரு சில இலாக்காக்களில் அலுவலர்கள் அதிகமாக குவிந்திருக்கிறார்கள், அதைக் குறைத்து வேறு இலாக்காக்களுக்கு பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற திட்டத்தின் அடிப்படையில்தான் அந்த முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதே தவிர, வேறு அல்ல. அப்படிப்பட்ட திட்டத்தை மேற்கொள்ளும்போது எதிர்க்கட்சியிலிருந்து "இவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள்" என்ற முழக்கம் அதிகமாகிவிட்டது என்பதை நம் தலைவர் திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் மறந்திருக்க முடியாது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** நான் ஆரம்பத்திலே சொல்லும் போதே, இதைக் கருதித்தான் அரசுக்கு அப்படிக் குறைப்பு செய்ய அவசியம் இல்லாமல் இருந்திருக்கலாம் என்று குறிப்பிட்டேன். இவ்வளவெல்லாம் நான் சொன்னபிறகும் என் பேச்சில் என் சந்தேகப்பட வேண்டும் என்றுதான் எனக்குப் புரியவில்லை. எனவே இவ்வளவு பெரும் தொகையான அலுவலர்கள் அதிகமாக நியமிக்கப் பட்டிருப்பதைப் பற்றிக் கண்காணிக்கவேண்டும், ஆலோசிக்க வேண்டும், புனராலோசனை செய்ய வேண்டும் என்றுதான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரே ஆண்டில் பார்த்தால் கூட 1969-70-ல் இருந்ததை விட 1970-71-க்கு இருக்கிற ஜாபிதாவில் 14,976 பேர் அதிகமாகியிருக்கிறார்கள். அதைத்தான் ஆராய வேண்டுமென்று சொல்லுகிறேன். தலைமைச் செயலகத்தில் 650-லிருந்து 763 ஆகிவிட்டது. உள்நாட்டிலாகாவில் 250-லிருந்து 202 ஆகியிருக்கிறது. நிதித் துறையில் 237 என்பது



3rd March 1970] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

252 ஆகியிருக்கிறது. வருவாய்த் துறையில் 151 இருந்தது 235 ஆகியிருக்கிறது. தொழில் துறை 230 இப்போது 168 ஆகக் குறைந்து விட்டது. கல்வி 162—221 ; பொதுப் பணி 153—160 ; சட்டத்துறை 74—104 ; கிராம நலம் 199—777 ; உணவு 737—316 ; டெல்லி தமிழகம் 23—28 என்று இப்படிக் கொஞ்சம் வேறுபட்டிருக்கின்றது. கவர்னர் மாளிகை மட்டும் கூடவில்லை. அசெம்பிளி 351—424 ஆகியிருக்கிறது. அங்கத்தினர் தொகையெல்லாம் சேர்ந்திருக்கிறது. அவர்கள் முன்னால் 1966-67-ல் இருந்ததை விட அதிகப் பேர் இந்தத் தொகையில் சேர்ந்திருக்கிறார்கள். மேல் சபைக்கு, இந்தக் கவுன்சில் இலாகாவுக்கு 100 என்பது 106 ஆகியிருக்கிறது. சர்வீஸ் கமிஷன் 230—269, விவசாயம் 12,178—14,436 ; விவசாய வருமான வரி 471—538 ; கால்நடை 4,555—5,944. இம்மாதிரியாக வித்தியாசங்கள் இருக்கின்றன. போர்ட் ஆஃப் ரெவின்யூவில் 63,016 என்பது 55,894 என்ற வகையில் எட்டாயிரம் பேர்கள் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் கிராம அதிகாரிகளுடைய தொகை வெகுவாகக் குறைந்திருப்பது .கடைசியில் பார்த்தால், மேலே இருக்கிறவர்கள் குறைந்த வருமானம் உள்ளவர்கள் தலையில்தான் இதைப் போடுவது வழக்கம். கிராம ஊழியர்களில் தலையாரி, வெட்டியான் என்பவர்கள் பல்லாயிரக்கணக்காக இருக்கிறார்கள். அப்படி "போர்ட் ஆஃப் ரெவின்யூ" கணக்கில் எட்டாயிரம் பேர் குறைந்து வித்தியாசம் காட்டுகிறது. கிராம அதிகாரிகளுடைய தலைப்பைப் பார்த்தால் எட்டாயிரம் அங்கே குறைகிறது. ஆகவே இந்த வேலை வாய்ப்பு கொடுக்கும் விஷயம் ரொம்ப அவசியமானதாகும். வேலை கொடுப்பதற்கான சந்தர்ப்பம் வரும் போது, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமை. அதை யாரும் மறுக்க முடியாது. அத்தோடு சிக்கனமாக நிர்வாகம் செய்ய வேண்டுமென்று கூறியவர்கள் இப்போது அந்தச் சிக்கனம் கையாளப்படுகிறதா, அந்த முறையில்தான் வேலைகள் தரப்பட்டிருக்கிறனவா என்பதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கையில் மத்திய மாநில விவகாரங்களைப் பற்றி 12 பக்கங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. பல சந்தர்ப்பத்தில் நாங்கள் அதைக் கேட்டிருக்கிறோம். அதைப் பற்றி இங்கே விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. நிதியமைச்சருடைய நியாயமான விருப்பங்கள் எவையெவை உண்டோ அத்தனையும் நிறைவேற வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய விருப்பம் அனைத்தும் நிறைவேறுவதற்காக மேலும் மேலும் முயற்சி எடுத்து வருவதையும் நான் பாராட்டுகிறேன். மற்ற சாதனைகளைப் பற்றி வழக்கம் போல சொல்லக்கூடிய விஷயங்கள் இருக்கின்றன. ராமநாதபுரம் ஜில்லா சம்பந்தப்பட்ட வரையில், அந்த ஜில்லாவில் பழைய கால வரி பாக்கிகள் அதிகமாக இருக்கின்றன. 1911-ம் ஆண்டுதான் அந்த ஜில்லாவுக்கு ராமநாதபுரம் ஜில்லா என்ற பெயர் வந்தது. அதற்கு முன்னால் மதுரை ஜில்லாவில் 7 தாலுக்காக்களும், திருநெல்வேலி ஜில்லாவில் இரண்டு தாலுக்காக்கள், சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் சேர்ந்திருந்தன. மதுரை ஜில்லாவில் இருந்த 7 தாலுக்காக்களில் 4 ராமநாதபுரம் சமஸ்தானமாகி, மூன்று தாலுக்காக்கள் சிவகெங்கைச் சமஸ்தானத்தைச் சேர்ந்ததாக இருந்தன. அப்படி இருந்ததால், அந்த நிர்வாகம் மக்களுக்குப் பாதுகாப்பு அமைதியை ஏற்படுத்துவதற்குத்தான் பயன்பட்டதே தவிர, அரசாங்கத்தோடு தொடர்புள்ள நீதி, நிர்வாகம் பழக்க வழக்கங்கள் எல்லாம் அந்தப் பகுயில் இருந்ததில்லை. அதனால்தான் பல சிரமங்கள் இருந்தன. பழக்கத்தை மாற்றிக்கொள்வதில் கஷ்டங்கள் ஏற்பட்டன. அப்போதிருந்து தொடர்ந்து இருந்து வந்த நில வரி பாக்கிகள் ஜமீன்தாரி காலத்திலும் இருந்தது. ஐம்பது ரூபாய் கிஸ்தி கட்டியவர்கள் மத்திய அசெம்பிளி வாக்காளர்களாக இருப்பார்கள். ஜில்லா முழுவதற்கும் 20 ஆயிரம் ஓட்டு இருக்கும் தேவகோட்டைப் பகுதியில் 10 ஆயிரம் சொச்சம் ஓட்டு இருந்தது. ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் இருக்கும். தீர்வை அதிகமாக இருக்கும். அப்படிப் பல ஆண்டுகளுக்கு முன்பே வசூலிக்க முடியாமல் இதுவரை இருக்கின்ற பாக்கிகளை வருஷந்தோறும் கணக்கில் காட்டிக்கொண்டே வருவதைக் காட்டிலும், அதைப் பரிசீலனை செய்து

எவ்வளவு தூரம் அதை வசூல் செய்ய முடியும் என்று பார்த்து, வசூலிக்கக் கஷ்டமானவைகளை வஜா செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்வதோடு........

**திரு. சி. வி. ராஜகோபால் :** இதெல்லாம் வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்டதா ? ஜமீன்தாரி முறை அந்தக் காலத்தில் இருந்தது. அப்போது உள்ள பாக்கியா ?

5-55 p.m.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஜமீன் காலத்திய பாக்கி கூட இருக்கலாம். புயல் நிவாரணத்திற்குக் கொடுக்கப்பட்ட கடனை வாங்கியவர்கள் எப்படிப்பட்ட நிலையில் இருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்களுடைய பரிதாபமான நிலையைக் கருத்தில் கொண்டு அந்தக் கடன்களை வஜா செய்வதற்கான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மூன்று ஆண்டுகளாக வறட்சிப் பகுதிகள் இருக்கின்றன. நான் இருக்கிற பகுதிதான் அது. சாத்தூர் தாலுகா ஒரு பகுதி. தொடர்ந்து அந்தப் பகுதி மிகவும் கஷ்டப்படுகிறது.எங்கள் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி இருக்கிறது. எங்கள் ஜில்லாவுக்கு அமைச்சர் மாண்புமிகு திரு மாதவன் அவர்கள் கூட வந்தார்கள். எங்கள் கிராமத்திற்குப் பக்கத்தில் சில பகுதிகளைப் பார்த்து வந்தார்கள். அந்தப் பள்ளியில் கிட்டத்தட்ட 600 மாணவர்கள் படிக்கிறார்கள். உள்ளூர் மாணவர்கள் 60 பேர் கூட இருக்க மாட்டார்கள். சின்ன ஊர்தான். ஒரு மைல் இரண்டு மைல் சுற்றி உள்ள ஊர்களிலிருந்து வந்து படிக்கிறார்கள். வரும்போது ஒரு செம்பிலோ அல்லது பாட்டிலிலோ குடிநீர் கொண்டுவர வேண்டுமென்று தலைமையாசிரியர் கட்டளையிட்டிருக்கிறார். ஒரு மாத காலமாக. அவ்வளவு கஷ்டமாக இருக்கிறது அங்கே. மலையடிவாரங்களில் உள்ள ஒரு சில பகுதிகளைத் தவிர, மற்ற இடங்களில் இந்தக் கஷ்டங்கள் இருக்கின்றன. நம்முடைய "சீஃப் செக்ரட்டரி" அங்கு வந்திருந்தபோது கூட இந்தக் கோரிக்கையைக் கொடுத்தோம். ஆழப்படுத்த வேண்டிய கிணறுகளுக்கு அரசாங்கக் கடன் நில வள வங்கியில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. திரும்பத் திரும்ப ஒரே கிணறுக்கு ஆயிரம், ஆயிரத்து ஐநூறு என்று கொடுக்கப்படுகிறது. பாறை உடைப்பதற்கு அதிகமான தொகை வாங்கப்பட்டிருக்கின்றது. அதன் மூலம் பயன் அடைந்த கிணறுகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டியதில்லை. உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ள கிணறுகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய கடன் சுமை அவர்கள் தலையில் இருக்கிறது. எதற்கு ஈடாகக் கடன் கொடுக்கப்பட்டதோ, அந்த நிலமோ சொத்தோ கூட கடனுக்குப் பொறுமானமுள்ளதாகக் இருக்காது. அப்படிக் கடன் வளர்ந்து போயிருக்கிறது. அதைக் கவனிக்க வேண்டும். தண்ணீர் இல்லாமல் கஷ்டப் படுகிற அந்த இடங்களில் வறண்டு போன கிணறுகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன் முழுவதையும் நிவாரணமாகக் கொடுக்க வேண்டும். புதிய கிணறுகள் வெட்டுவதற்கு அதிகமான அளவில் கடன் தரப்பட்டிருக்கிறது. சில கிணறுகளில் தண்ணீர் கிடைக்கும் வசதியும் ஏற்பட்டிருக்கிறது. சில கிணறுகளில் எதிர்காலத்தில் தண்ணீர் உண்டாகும் என்ற நம்பிக்கை ஓரளவுக்கு இருக்கின்றது. இன்னும் சிலவற்றில் எதிர்காலத்தில் தண்ணீர் உண்டாகாது என்று ஆராய்ந்து பார்க்க வந்த அதிகாரிகள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குக் கொடுக்கப்பட்ட கடன்களுக்கு, மானியத்தை ஒன்றுக்குப் பாதியாக உயர்த்தி கடன் சுமையைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் கூட இதைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய கடன் சிரமங்களைக் குறைப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். 13-வது பக்கத்தில் இருக்கிறது. ஆகவே ஆட்சியினுடைய கொள்கைக்கும் ஒத்ததாக இருக்கக் கூடிய நிவாரணம் என்பதனால், அதைப் பற்றிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கடந்த காலத்தில் இரண்டு வருஷமாக வறட்சியாக இருந்த பகுதிகளில் கூட ஒரு நிவாரணக் கடையும் புதிதாகத் திறக்கப்படவில்லை. இப்போது உணவு தானிய வினியோகக் கட்டுப்பாடு என்பது கிடையாது. இருந்தாலும் வறட்சிப் பகுதி என்ற காரணத்தால், அப் பகுதிகளில் நியாய விலைக் கடைகளை வைத்து அரசாங்கத்தினுடைய நிர்ணய விலையில் அங்கே தானியம், அரிசி முதலியவை கொடுக்கும்படிச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்திற்குச் சொல்லுகிறேன். கடந்த தீபாவளி, தைப் பொங்கல், நாட்களில் வறட்சிப் பகுதிகளில் அரிசியைப் பார்த்தவர்கள் இருக்க மாட்டார்கள். அப்போது கூடக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்தப் பகுதிகளுக்குக் குறைந்த விலையில் தானியம் கொடுக்க ஏற்பாட்டைச் சீக்கிரம் செய்ய வேண்டும். அதற்கான துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். படி அரிசித் திட்டத்தில் எல்லாப் பகுதிகளிலும் கோயம்புத்தூருக்கும், சென்னைக்கும் போடுவதுபோல் போடவேண்டுமென்று சொல்லவில்லை எந்த எந்தப் பகுதிகளில் இந்தக் கஷ்டங்கள் இருக்கின்றனவோ அங்கே ஒரு படி அரிசி போடலாம். மழை பெய்து செழிக்கும் வரையிலும் போடலாம். இதற்கு மேலும் ஒரு கஷ்டம் இருக்க முடியுமா என்ன ? அந்தப் பகுதிகளுக்குப் படி அரிசித் திட்டத்தைக் கஷ்டம் திரும் வரையில் விஸ்தரிக்கலாம். அதற்கு நியாயம் உண்டு. ஆகையினால் அரசு இதைப் பற்றிக் கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டும். அந்தப் பகுதி மக்களுக்கு இந்தச் சலுகையைக் கொடுத்தால் மற்றப் பகுதிகளிலும் தங்களுக்குக் கொடு என்று கேட்டால், அரசாங்கத்தின் பொறுப்புக்களைச் சமாளிக்க முடியாத கஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று அரசாங்கம் இன்றைக்கு அஞ்சத் தேவையில்லை. இப்படிப்பட்ட ஒரு சில பகுதிகளை மற்றவர்கள் காட்டட்டும். அங்கேயும் அரசாங்கம் இம்மாதிரிக் காரியங்களைச் செய்யலாம். இப்படிப்பட்ட பகுதிகளைக் காணவே முடியாது. அப்பகுதிகளில் ஒரு சில லட்சம் மக்கள் தான் இருக்கின்றனர். சென்னையில் ரூ. 200 வருமானத்துக்குக் குறைந்தவர்கள் எத்தனை லட்சம் என்று தெரியாது. அவர்களை விடப் இப்பகுதிகளில் உள்ளவர்கள் மிகக் குறைவுதான். ஆகவே, அவர்களுக்குப் படி அரிசித் திட்டத்தை விஸ்தரித்துக் கொடுப்பது மிகவும் நியாயமாக இருக்கும். ராமநாதபுரம் மாவட்டத்தில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்குக் கடன் வழங்கும் தொகை நான் வரும்போது கலெக்டர் அவர்களிடம் ரூ. 50 ஆயிரம் தான் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதற்குப் பின்னால் உத்திரவு போயிருக்கலாம். துரிதமாகக் குடி தண்ணீர் வசதிக்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். சென்ற வருஷம் கடன்களின் தவணைகள் நீடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வருஷமும் கடன் தவணைகளை நீடித்துக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குக் காலாகாலத்தில் தவணைகளை நீடிக்க நியாயமான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வேலை வாய்ப்புக்கு இணைப்பு ரோடுகள் போடலாம். மண் வேலைதான். சல்லி அடிக்கிறது பாலம் கட்டுவதல்ல. உழைப்பாளிகளுக்கு நேரடியாக நூற்றுக்கு நூறு போய்ச் சேரும்படியாக இணைப்பு ரோடுகள் போடலாம். கால்வாய் தூரு அகற்ற வேண்டிய வேலைகள் இருக்கின்றன. அங்கே ஒரு சிறிய ஆறு இருக்கிறது. மலையில் ஆரம்பமாகி கடலில் போய்க் கலக்கிறது. காயல் நதி என்றும், காயச்குடி ஆறு என்றும் சொல்லுவார்கள். ஆரம்ப இடம் தெரிந்திருக்கிறது. எஞ்சினியர்கள் சென்று பார்த்தார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் கட்டிடம் கட்டியிருக்கிறார்கள் தண்ணீர் வராதபடி. வனந்திரத்தில் இருக்கிற ஒரு இடம். நாங்கள் அங்கே தூர் அகற்றி ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட வேலைகள் வேலை வாய்ப்பு அளிப்பதற்கு நல்ல டணி. எங்கள் தாலுகாவிலும் சில ஜமீந்தார்கள் உண்டு. ஜமீன்தாரி நிலங்களை எல்லாம் ரயத்வாரியாக்கி இருக்கிறார்கள். பலர் பெரியவர்களாகியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு ஜமீந்தார்கள் ஆளுகைக்கு உள்ள கண்மாய்கள் வாய்க்கால்கள் வரக்கூடிய சிற்றோடை கால்வாய்களை எல்லாம் ஆக்கிரமிப்பு செய்து தண்ணீர் வருவதற்கான வழி வகை இல்லாமல் மிகவும் தொந்திரவு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தால் அந்த முயற்சிகள் பயன் பெறுதபடி செய்வதற்கான வகைகளில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, அந்த ஆக்கிரமிப்பை அகற்றும்

6–00 p.m. முயற்சிகளை மேலும் தொடர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த 1, 2 மாதங்களுக்கு முன்னால், நான்காவது திட்டத்திற்காக இங்கே மாநிலத்தில் உள்ள எல்லாக் கலெக்டர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களும் வந்தார்கள். ராமனாதபுரம் ஜில்லாவில் புதிதாக என்ன என்ன வேலைகள் இருக்கின்றன, புதியகால்வாய்கள் வெட்டுவதற்குப் பாசன வசதி செய்வதற்குரிய பணிகள் என்னவென்று பேசப்பட்டது. அதில் சில வேலைகளை இந்த வருஷம் உடனடியாகச் எடுத்துக் கொள்ள முடியாது, அடுத்த வருஷம்தான் என்று திட்டத்தில் இருக்கும். அது இந்த வறட்சிப் பகுதிகளில் இருக்கிற காரணத்தால் முதலாவதாக இப்போதே எடுத்துக்கொள்ள வழி வகை செய்தால் வேலை வாய்ப்பு கொடுக்கலாம். அதைப் பற்றி அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் வறட்சிப் பகுதியின் கஷ்டங்களை நீக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நிலவள வங்கிகள் 101, 166 வங்கிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அது அரசாங்கத்தினுடைய அயராத உழைப்பின் காரணமாக என்றுகூட கூறியிருக்கிறார்கள். அயரா உழைப்பு வேண்டியது இல்லை. அது நியாயம் இல்லை. நியாயம் இல்லை என்றால், வங்கிகள் வரட்டும். வங்கி ஆரம்பிக்கின்ற முறை நியாயம் இல்லை என்று சொல்லுகிறேன். அவ்வளவு அவசரப்பட்டுச் செய்து கோஆபரேடிவ் தத்துவம் பல வருஷங்களாக இருக்கும்போது, அவசரமாகச் சட்டத்தின் மூலம் கொண்டுவந்து அது கோர்ட்டுக்குப் போய்ச் செல்லும், செல்லாது என்ற நிலைமை ஏற்படுமே என்ற நிலைமையைப் பற்றிக் கவலையின்றி அவசரத்தில் 66 புதிய வங்கிகள் ஏற்பட்டிருக்கின்றன. மாநில, மத்திய வங்கிக்கு ஜில்லாக்களிலிருந்து பிரதிநிதிகள் வரவேண்டும். புதிய 66 வங்கிகளுக்குப் பங்குத் தொகை எவ்வளவு, எத்தனைபேர் அங்கத்தினர்கள் சேர்த்திருக்கிறார்கள், அதற்கு ஆபீஸ் எங்கே ஏதாவது உண்டா ? அவர்களுக்குள்ளே ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து மத்திய அடமான வங்கிக்கு அனுப்ப வேண்டும். இது பற்றி முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கோ, மற்றவர்கள் கவனத்திற்கோ, முழு விவரங்களும் வந்திருக்காது என்று நான் கருதுகிறேன். அதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அது மறுபடியும் கோர்டில் செல்லாது என்று சொல்லப்பட்டதால் திருத்தச் சட்டம் வருகிறது. அவசரப்பட்டுப் பண்ண வேண்டாம். ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. நடக்கக்கூடிய அவசரமான காரியம் இதனால் நிற்காது. ஆகையால் அதை செலக்ட் கமிட்டிக்கு விட்டு ஒரே நாளில் முடித்துவிடலாம். கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மற்றவர்கள் முன்பின் அனுபவம் உள்ளவர்கள் எல்லோரையும் கலந்துகொண்டு இந்தச் சட்டத்துக்கு என்ன மாதிரி செய்யலாம் என்று யோசனை செய்து, கோர்ட்டில் போனால் சொல்லாதபடியோ அல்லது வேறு விதமான அநீதிகள் ஏற்படாதபடி நியாயமான சட்டமாக அமையும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி சம்பந்தமாக அரசாங்கம் பெரு முயற்சி செய்து கொண்டு வருகிறது. ஆனால், எல்லாமே தொடங்கக்கூடிய நிலையில் இல்லை. ஆனால், அதற்கான முயற்சிகள் எடுக்கப்படுவதாகக் கூறிக்கொள்ளப்படுகின்றது. அந்த முயற்சிகளெல்லாம் நல்ல பலன் அளிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்த முயற்சிகளை எவ்வளவு விரைவில் துவக்க இயலுமோ, அவ்வளவு விரைவில் அவை துவக்கப்பட வேண்டும். அதற்காக எங்களுடைய ஒத்துழைப்பை நாங்கள் தருவதற்குச் சித்தமாக இருக்கிறோம் என்பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப் புறங்களில் தொழில் வளர்ச்சி என்று புதிதாக ஒன்றும் இல்லை. அதற்காகத் திட்டம் ஒன்றையும் இங்கு காணோம். அதையும் யோசிக்க வேண்டும். விவசாயம் செய்பவர்களைத் தவிர அவர்களின் குடும்பங்களில் உள்ள மற்றவர்கள் வேலை பெறுவதற்காக எந்தெந்த தொழில்களைக் கிராமங்களில் தொடங்கலாம் என்பதை இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

மில்கள் மூடப்பட்டு இருக்கின்றன. சில மில்கள் திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படித் திறக்கப்பட்டிருக்கும் மில்களும் அவ்வளவு நல்லபடியாக ஓடவில்லை என்று சொல்லப்படுகிறது. ஜப்பானில் ஏதோ பண்ணுகிறார்கள்



என்று சொல்கிறார்கள். அதாவது பலப்பல சிறிய கருவிகளை பலப்பல இடங்களில் செய்து, அதைக் கொண்டு வந்து ஒரே இடத்தில் ஒன்று சேர்த்து இணைத்து இயந்திரம் ஆக்குகிறார்கள் என்கிறார்கள். அதைப் பற்றியெல்லாம் எனக்கு நிறைய அறிவு கிடையாது. அந்த மாதிரி நாமும் நம் மாநிலத்தில் செய்யலாமா என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். நூற்பு மில்களில் கதிர்களை சிறிய பிரேம்கள் கொண்டதாகப் பிரித்து சிறிய தொழிற்சாலைகளைக் கிராமப் புறங்களில் தொடங்கி, அதன் மூலம் அங்கு இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரலாமா என்பதெல்லாம் பற்றிச் சிந்திக்க வேண்டும். யோசித்து ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது கூட இந்த வேலை வாய்ப்பு அளிப்பதற்காக தனியார் துறை அல்லது பொதுத் துறை என்ற வித்தியாசம் இல்லாமல் அரசாங்கம் முயற்சி எடுத்து வருகிறது. அதில் போதிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுத் துறை, தனியார் துறை என்று வேலை வாய்ப்பிற்குக் காத்திருக்க வேண்டியது இல்லை. நீங்கள் எடுக்கும் வேலை வாய்ப்பிற்கான முயற்சிகளுக்கு நாங்கள் ஒத்துழைப்புத் தரத் தயாராக இருக்கிறோம். நேற்று இங்கே திரும்பத் திரும்ப விவாதத்தின்போது எச்சு பேச்செல்லாம் ரொம்ப நடந்தது. அதெல்லாம் இங்கு வேண்டாம். இந்த மாதிரி தி.மு.க. காரர்கள் விஞ்ஞான சோஷலிஸம் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் தனியார் துறை தொழில் அதிபர்களையெல்லாம் அழைத்து, தமிழ் நாட்டில் தொழில்களைத் திறக்கும்படி சொல்கிறார்கள் என்றெல்லாம் விமர்சிக்கப்பட்டது. அப்படிச் செய்வது நல்லதல்ல. இப்படி எதிர்த்துக் கொண்டிருந்தால் காரியம் ஆக வேண்டாமா ? இங்கே ஒருவருக்கொருவர் கிண்டலும், குத்தலும் பேசவேண்டியது அவசியம் தானா ? அதையெல்லாம் நாம் வெளியே வைத்துக்கொள்வோம். நாம் இங்கே கூடியிருப்பது நம் மக்களுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்திப்பதற்காகத் தான். ஆகவே இந்த மாதிரிச் செய்கைகளை விட்டுவிடும்படி வேண்டிக்கொள்கிறேன். சின்ன விஷயங்களில் இப்படி நடந்துகொள்வது நல்லதல்ல. தொழில் வளர்ச்சி சம்பந்தமாக நாம் நிறைய முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது இங்கு சாலையைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. 6–10 p.m.
மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு ஒரு சாலை இருக்கிறது. இதற்கு மங்கம்மா சாலை என்று பெயர். அந்த சாலை கழுகுமலை, கயத்தாறு வழியாக திருநெல்வேலிக்குப் போகிறது. இந்த சாலை 120 அடி அகலமுள்ள ஒரு சாலை ஆகும். இந்தச்சாலையில் பழங்கால மரங்கள் இன்னும் இருக்கின்றன. இந்த ரோட்டிற்காக வேண்டிய நிலங்களை "அக்கொயர்" செய்ய வேண்டியது இல்லை. அதைக் கிராம ரோடு என்றும் பஞ்சாயத்து யூனியன் ரோடு என்றும், நெடுஞ்சாலை என்றும் பிரித்துப் பராமரிக்கிறார்கள். இப்படிப்பட்ட ரோட்டை, முக்கியமான ரோட்டைக் கவனித்து, செப்பனிட்டு ஒன்றாகச் சீரமைத்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகரை அழகுபடுத்துவது சம்பந்தமாக முயற்சிகள் எடுக்கப்பட்டதை நான் மனமாறப் பாராட்டுகிறேன். எங்கள் கிராமப் புறங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள். "ஒய்யார கொண்டைக்கு தாழம்பூவாம் அதன் உள்ளே இருக்குமாம் ஈரும் பேனும்" என்று. அதே மாதிரி இந்தச் சென்னையில் தான் அண்ணாதுரை சிலையின் அருகிலிருந்து ஜெமினி வரை மௌண்ட் சாலையின் ஓரங்களில் தோண்டப்பட்டு குண்டும் குழியுமாக இருக்கிறது. கொஞ்சம் சீக்கிரமாக அரசு இந்த வேலையைக் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரி அண்ணாதுரை சாலையிலிருந்து சத்தியமூர்த்தி பவன் வரை ரோட்டில் நிறைய ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. ஜெமினி பக்கத்தில் ஒரு கர்ப்பிணி, நான் கவனிக்கவில்லையென்றால் அவரின் காலே போயிருக்கும்—அங்கு ஒரு பெரிய குழி இருக்கிறது.—அதில் தவறி விழுந்திருப்பார்கள். இப்படியாக நகரத்தில் பல இடங்களில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஜெமினி சந்திப்பில் ஒரு "ஆடோமாடிக் சிக்னல்" வைப்பதற்காக குழிகள் தோண்டப்பட்டன. அப்போது அங்கு சிவப்பு விளக்குகள் போடப்பட்டிருந்தன. அப்படி இருக்கையில் எப்படி இந்த விபத்து நடந்தது என்று எனக்குப் புரியவில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அந்த இடம் ஜெமினியிலிருந்து நுங்கம்பாக்கம் போகிற ஜெமினி காம்பவுண்டையொட்டி நடைபாதையில் இருக்கிறது. சென்னை நகரத்தைச் சீர்திருத்த எவ்வளவு முயற்சிகள் எடுத்துக் கொண்டாலும் இந்த மாதிரிக் கஷ்டங்கள் இருந்து கொண்டு தான் இருக்கும். அவை தீராது. காரணம் என்னவென்றால், ஜனத் தொகை பெருகப் பெருக அப்படித் தான் இருக்கும். இந்த மாதிரி இல்லாமலிருக்க, மாநிலத்தின் பிற பகுதிகளிலும் சமவளர்ச்சி ஏற்பட வேண்டும். அதே மாதிரி பிற மாவட்டங்களிலும் தொழில் வளர நாம் முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதை நான் காங்கிரஸ் ஆட்சி காலத்திலிருந்தே சொல்லி வந்திருக்கிறேன். இதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரம் பெருகப் பெருக தலைவலி தான். அதைத் தீர்க்க முடியாது. கட்டுப்படுத்த முடியாது. ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் வளர்ச்சி ஏற்பட, சர்க்கார் காரியாலயங்களை நிறுவ, அவைகளும் சென்னையைப் போல சம வளர்ச்சி பெற அரசாங்கம் புதிய பல திட்டங்களைக் கொண்டு வர வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என்று நான் நினைக்கிறேன். திட்டங்களில் கிராம வளர்ச்சி புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. கிராம வளர்ச்சிக்குப் போதிய முக்கியத்துவம் இருப்பதாகத் தெரியவில்லை. புதிய வரிகள் சம்பந்தப்பட்ட வரையில், இந்தப் புதிய வரிகள் போடக் கூடாது என்று நான் சொல்லவில்லை. எந்தப் புதிய வரிகளும் போடக் கூடாது என்று தி.மு.க. முன்பு கூறியது. காலம் சென்ற அண்ணாதுரை அவர்கள் தேர்தல் சந்தர்ப்பத்தில் வரியினைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்று சொன்னார்கள். அவர்கள் நெல்லையிலும், சங்கரன்கோவில் போன்ற இடங்களிலும் வரிகளை எந்த அளவில் குறைக்கப் போகிறார்கள் என்று கேட்டதற்கு, 100-க்கு 40 சதவீதம் குறைக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் இப்படிச் சொன்னார்களே, இப்பொழுது இப்படிப் போடுகிறார்களே என்று சொல்லி ஏசவரவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்பு கேலி கிண்டல் கூடாது என்று சொல்லி விட்டு, அதை வெகு நயமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் வரிகள் குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னோமே தவிர, வரியே போடக்கூடாது என்று சொல்லவில்லை. ஏழைகளைப் பாதிக்காத வரிகள் போடலாம் என்று சொன்னோம். அது தான் முன்னேற்றக் கழகத்தின் கொள்கை ஆகும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** நயமாகவோ, குத்தலாகவோ பேசக் கூடிய அந்த சாமர்த்தியமே எனக்குக் கிடையாது. (சிரிப்பு). அம்மாதிரிப் பேசக் கூடிய சாமர்த்தியத்தில் எனக்கு ஒரு மார்க்கு கூட கிடையாது. அம்மாதிரியாக நான் பேசக் கூடியவனும் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விற்பனை வரி சம்பந்தமாக ஒரு 14 பொருள்களுக்கு போடக் கூடிய வரிகள், 9 சதவிகிதத்திலிருந்து 11 ஆக, 12 சதவிகிதத்திலிருந்து 15 ஆக வேண்டுமென்று சொல்லக் கூடிய வரிகள், இதனாலெல்லாம் ஏழை மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று சொல்லி விட முடியாது. ஒரு சில ஐடங்கள் தவிர, அன்றாடப் பழக்கத்தில் எல்லோரும் உபயோகப்படுத்தும்படியான பொருள்களாக அவை இருக்கின்றன. அது எல்லோரையும் பாதிக்கும் என்பது தான் என்னுடைய கருத்து. அதை அரசாங்கம் யோசிக்க வேண்டும். பெட்ரோல் வரியும் அந்த மாதிரிக் கஷ்டம் விளைவிக்கக் கூடியது தான்.

DEPUTY CHAIRMAN: The hon. Member has already taken 45 minutes.

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஒரு ஐந்து நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். திரைப்பட வரி—அதை இன்னும் கொஞ்சம் கூட்டலாம். இந்த மோட்டார் வரி சம்பந்தப்பட்ட மட்டில், ஒரு அதிபர் சொன்னார், 350 பஸ்களுக்கு ஒரு வருஷத்திற்கு ரூ. 8,25,000 அதிகம் செலுத்த வேண்டி வரும் என்று. இதனால் எதிர்பார்த்ததைப் போல மூன்று நான்கு மடங்கு வரும்போல இருக்கிறது, அரசாங்கத்திற்கு. அப்படி அதிலே எல்லாம் வருவதனாலே, இதைக் கொஞ்சம் குறைக்கலாம். பஸ்களில்





போகிறவர்களுக்கு வரி போடவில்லை என்று அரசாங்கம் சொன்னாலும், அந்த வரியை மக்கள் தலையில் கொண்டு வருவதற்கு, அரசாங்கத்தைப் பின்னாலே நிர்பந்திப்பதற்கு வருவார்கள். அது நடக்கத்தான் போகிறது. ஆகையினால் அதைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். நில உச்ச வரம்பு, மற்றவைகளைப் பற்றி எல்லாம் இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதுபற்றி நான் எதும் குறிப்பிட விரும்பவில்லை. பிற வருமானங்கள் பற்றி மத்திய அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது. அதையும் நாம் யோசிக்க வேண்டும். அந்த நிலம் வைத்திருக்கிறவன் தான் கண்ணுக்கு முன்னாலே முதலிலே தெரிகிறானா? அதைக் கொஞ்சம் யோசிக்க வேண்டும், அரசாங்கம். குறைக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. இதே மாதிரி மலை முழுங்கி மகாதேவன்கள் திடீர் குபேரர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள். நிலம் வைத்திருப்பவர்கள் அன்றைக்கு இருந்த மாதிரியே தான் இன்றைக்கும் இருக்கிறார்கள். அவர்கள் தலையில் கைவைக்க திரும்பத் திரும்ப வருகிறோமே. ஆகையினாலே, அந்த திடீர் குபேரர்களாகக் கூடிய வாய்ப்புகள் இருக்கிறவர்களை விட்டு விட்டு திரும்பத் திரும்ப நிலம் வைத்திருப்பவர்கள் தலையிலேயே கைவைக்க வேண்டுமா என்று திரும்ப யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

***திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டுக் 6-20 p.m.
கான நிதி நிலை அறிக்கையில் முக்கியமாகவும் குறிப்பாகவும் இரண்டு விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னதுபோல கிட்டத்தட்ட 10, 12 பக்கங்களில் இருக்கிற விஷயங்கள் என்ன என்று பார்க்கிறபோது, நிதிக் கமிஷனைப் பற்றியும், திட்டக் கமிஷனைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையைப் பார்த்தாலும், நிதிக் கமிஷனைப் பற்றிப் பல விஷயங்கள் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. நிதிக் கமிஷன் அறிக்கையைப் பற்றி தற்பொழுது சொல்லப்பட்டுள்ள முக்கியமான குறைபாடு, நாம் எவ்வளவு பணம் கிடைக்குமென்று எதிர்பார்த்தோமோ அந்த அளவு நமக்கு கிடைக்கவில்லை என்பது. சென்ற ஆண்டு அவர்கள் நல்ல முறையிலே நமக்குக் கொடுப்பார்கள் என்று நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். நாம் எதிர்பார்த்ததற்கும் அவர்கள் கொடுத்ததற்கும் இடையில் குறைவு இருப்பதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ச்சி செய்து, "பாலிசி" என்று சொல்வார்கள். எந்தக் கொள்கையின் அடிப்படையில் அந்த நிதிக் கமிஷன் தனது பரிந்துரையைக் கூறியிருக்கிறது என்பது தெரியவில்லை என்றெல்லாம் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதற்கு முக்கியமான காரணம் என்ன என்பதை நான் சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையின் பேரில் பேசுகிற போது கூட குறிப்பிட்டேன். இதற்கெல்லாம் காரணம் அந்த நிதிக் கமிஷன் ஒரு நிரந்தரமான கமிஷனாக இல்லாததுதான். நிதிக் கமிஷன் என்பது நம் அரசின் சட்டத்தினுடைய 280-வது பிரிவுப் படி ஒரு சட்டபூர்வமான கமிஷன். ஆனால் நம்முடைய சம்பளக் கமிஷன் பிரிவுப் படி ஒரு சட்ட பூர்வமான கமிஷன். ஆனால் நம்முடைய சம்பளக் கமிஷன் போல ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடுவது, பிறகு கலைவது என்று இருக்கிற காரணத்தால்தான், அவர்கள் நிரந்தரமான ஆராய்ச்சிகள் செய்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் எப்படிப் பணம் கொடுப்பது என்பது பற்றி தீர்மானமான முடிவுக்கு வரமுடியவில்லை. ஆஸ்திரேலிய நாட்டிலே இருக்கும் "கிராண்ட்ஸ் கமிஷன்" போல டில்லியிலே இருக்கிற நிதிக் கமிஷனும் இருக்கவேண்டுமென்று போன தடவை நான் குறிப்பிட்டேன். ஆனால் சென்ற தடவை நான் குறிப்பிட்டதற்குப் பிறகு, அது நடைமுறையில் இருந்து தன்னுடைய வேலையை முடித்துக்கொண்டுவிட்டது. அது தொடர்ந்து இருக்கக்கூடிய கமிஷனாக இருந்தால், பல லாபங்கள் நமக்குக் கிடைத்திருக்கும். உதாரணமாக "டெட் ரிலிப்" என்று சொல்லக் கூடிய கடன் நிவாரணத்திலிருந்து நமது மாநிலத்திற்குக் கிட்டத்தட்ட ரூ. 160 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு ரூ. 140 கோடி வந்து ரூ. 160 கோடி திருப்பிக் கட்டும்படியான துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

நிதிக் கமிஷன் நிரந்தரமாக இருந்தால், இதற்குத் தனியாக ஒரு கமிஷன் போடவேண்டுமென்று சொல்ல வேண்டிய அவசியமே இருக்காது. அரசியல் சட்டம் 280-வது பிரிவுப்படி நிதிக் கமிஷன் நியமித்திருக்கிற நேரத்தில் நமது அமைச்சரவையோ, அல்லது அமைச்சர்களோ, ஜனாதிபதிக்கு எழுதி, இந்த நிதிக் கமிஷன் இந்தக் கடனைப்பற்றியும் தீர்மானிக்க வேண்டுமென்று கோரி யிருந்தால், அவர்கள் அப்போதே முடிவு எடுத்திருப்பார்கள். ஆனால் நிதிக் கமிஷன் அங்கே வேலைசெய்து கொண்டிருந்த சென்ற ஆண்டில் அதைப் பற்றி நானும் மற்றவர்களும் பேசியுள்ள நிலைமையில் இதைப்பற்றி முடிவு செய்ய வேண்டுமென்று ஜனாதிபதி அவர்களுக்கு எழுதி நமது அரசு அந்தத் துறையை தொடர்பு படுத்திக் கொள்ளாமல் இருந்தது ஒரு தவறாக இருக்குமோ என்ற கருத்து எனக்கு ஏற்படுகிறது. காரணம் என்னவென்றால், நமக்கு அரசியல் சட்டப்படி கொடுக்கப்பட்ட ஒரு உரிமையை நாம் அவர்களிடம் கேட்கத் தவறிவிட்டோம் என்பதைத் தான் நான் முதன் முதலில் குறிப்பிட விரும்புகிறேன். நிதிக் கமிஷனைப் பற்றிப் போன தடவையும் குறிப்பிட்டு இந்தக் கடனைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். இந்த நிதிக் கமிஷனைப்பற்றி வருகிற நேரத்தில் சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் பல விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வருமான வரிக்கு "சர்சார்ஜ்" போடுகிறார்கள். அந்த "சர்சார்ஜ்" இந்த நிதிக் கமிஷனுக்கு வராமல் திட்டக் கமிஷனுக்குப் போகிறது. அந்த "சர்சார்ஜ்" நமக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று நாம் கேட்டோம். அதேபோல கார்ப்பரேஷன் களுக்குப் போடுகிற வருமான வரி நிதிக்கமிஷனுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டோம். அதைப் பற்றி எந்த விதமான முடிவை அரசாங்கம் எடுத்தது என்று பார்த்தால், எந்தவிதமான முடிவையும் அரசாங்கம் எடுக்கவில்லை என்று குறிப்பிடவேண்டிய நிலையில் இருக்கிறேன். ஏனென்றால், அரசியல் சட்டம் 280-வது பிரிவின் படி நிதிக் கமிஷன் ஒரு தொடர்ந்த கமிஷனாக இருக்க வேண்டுமென்பதைப் பற்றி பாராளுமன்றத்தில் நடவடிக்கை எடுக்கக்கூடிய வாய்ப்பு 25 அங்கத்தினர்களைக் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறது. 280-வது பிரிவைத் திருத்தி அந்த நிதிக் கமிஷன் ஒரு தொடர்ந்த கமிஷனாக இருக்க வேண்டுமென்று தீர்மானத்தைக் கொடுக்கக் கூடிய வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அப்படி நீங்கள் ஒரு தீர்மானத்தைப் போட்டால், எங்கள் கட்சியும், மற்றும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிற அவ்வளவு கட்சிக்காரர்களும் அந்தத் தீர்மானத்தை ஆதரிக்கக் கூடிய ஒரு கட்டத்தில் இருக்கிறார்கள். சென்ற ஆண்டிலேயே நான் இதைப் பற்றிப் பேசுகிற போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் மத்திய அரசாங்கத்தைக் குறை கூறுவதே சுதந்திராக் கட்சிக்காரர்களுக்கு வேலையாகப் போய் விட்டது என்று குறிப்பிட்டார்கள். இந்த ஆண்டு பார்க்கிறபோது அவர்கள் மத்திய அதிகாரத்தைத் தாக்குகிற ஒரு பெரிய மாறுதலை நான் பார்க்கிறேன். சென்ற ஆண்டிலே மத்திய அரசாங்கத்தைக் குறை கூறுகிற போது, எங்களைக் கண்டித்தவர்கள் இப்போது மத்திய அரசாங்கத்தைக் குறை கூறுவதிலே எங்களுக்கு முன்னோடியாக இருக்கிறார்கள் என்பதை நான் பார்க்கிறேன். அதுவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசியபோது, சுதந்திராக் கட்சிக்காரர்களை விட அதிகமாக மத்திய சர்க்காரைத் தாக்கி, நீங்கள் ஏன் தாக்காமல் இருக்கிறீர்கள் என்று அரசைக் கேட்கிறார்கள். மத்திய சர்க்காரிடமிருந்து மாநில சர்க்காருக்கு வரவேண்டிய அதிகாரம் என்ன என்று பார்ப்பதற்கு ஒரு கமிட்டி போட்டுவிட்டோம் என்று கூறினால் மட்டும் போதாது. நமக்கு வாய்ப்பு இருக்கிற போது, பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் மூலம் கொண்டுவரக் கூடிய வாய்ப்பு இருக்கிற போது, அந்த வாய்ப்பை நீங்கள் நழுவவிட்டு விட வேண்டிய அவசியம் என்ன என்பதைத் தான் நான் கேட்கிறேன்.

இன்னொன்றைப் பற்றியும் சென்ற நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்கள். அதாவது, இந்த ரயில்வே கட்டணத்தில் கிட்டத்தட்ட 1950-ம் ஆண்டிலிருந்து 1961 வரை தனிப்பட்ட பாசஞ்சர் கட்டணத்திற்கும் "கூட்ஸ்" என்கிற, பொருளை ஏற்றிச் செல்வதற்கான கட்டணத்திற்கும் ஒரு





வரி போட்டிருந்தார்கள். அரசியல் சட்டத்தில் 269 பிரிவுப் படி, நமது மத்திய சர்க்காருக்கு ரயில்வே மூலமாகக் கிடைக்கிற வருமானத்தில் "பாசஞ்சர் டாக்ஸ்" கட்டணம் என்கிற தொகையை மாநில சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதன் படியே அதிகாரபூர்வமாக ஆண்டுதோறும் மத்திய சர்க்கார் தனக்கு வரும் ரயில்வே வருமானத்திலிருந்து மாநில அரசாங்கத்துக்கு "பாசஞ்சர் டாக்ஸ்" கட்டணத்தைக் கொடுத்து வந்தார்கள். ஆனால் அப்போது மத்திய அரசாங்கத்திலும் மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சியே ஆட்சி செய்துவந்ததன் காரணமாக, 1961-ல் சந்தானம் நிதிக் கமிஷன் அமைக்கப்பட்டபோது, எல்லா மாநில அரசாங்கங்களும் மத்திய சர்க்காருக்குக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து, "எங்களுக்கு இந்த அதிகாரம் தேவையில்லை, மத்திய சர்க்காரே அந்தப் பணம் முழுவதையும் எடுத்துக்கொண்டு நீங்களாகவே பார்த்து 'கிராண்ட்ஸ் இன் எய்டு' போல் ஒரு தொகையைக் கொடுத்தால் போதும்", என்று சொல்லிவிட்டார்கள். அந்தச் சமயத்தில், அதாவது 1961-ல் மத்திய சர்க்கார் மாநில சர்க்கார்களுக்கு இந்த வகையில் $12\frac{1}{2}$ கோடி ரூபாய் தருவோம் என்று சொன்னார்கள். அந்தச் சமயத்தில் சுமார் 30 கோடி ரூபாய் மத்திய சர்க்காருக்கு வருமானம் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதையே 1967-ல் $16\frac{1}{2}$ கோடி ரூபாயாகக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். அடுத்து, அசோக சந்த் கமிஷன் வந்தபோது, "இந்தப் பணம் போதாது, மத்திய சர்க்கார் இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டும்", என்று மாநில சர்க்கார்கள் முறையிட்டுக் கொண்டன. அப்போதே அவர் சொன்னார். உங்கள் உரிமையை நீங்களே கொடுத்து விட்டு மத்திய சர்க்கார் இஷ்டப்பட்டதைக் கொடுங்கள் என்று சொல்லிவிட்டு, பிறகு அதைப்பற்றிப் பேசுவதற்குக் கூட உங்களுக்கு அருகதை கிடையாது என்று சொன்னார். அதற்குப் பிறகு நம் மத்திய அரசு நமக்கு 5.45 சதவீதம் மொத்தப் பணத்தில் தருகிறது. அதாவது நம் மாநிலத்திற்கு இதன் மூலம் ஏறக்குறைய 80 லட்சம் ரூபாய்தான் கிடைக்கிறது. 1961-ம் ஆண்டிலிருந்து ரயில்வேக்களில் பாசஞ்சர் கட்டணத்தையும் கூட்ஸ்க்கான கட்டணத்தையும் பல மடங்காகப் பெருக்கியிருக்கிறார்கள். 1961-ல் $12\frac{1}{2}$ கோடி மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்குக் கொடுத்தது என்று சொன்னால்,. இப்போது 36 கோடி ரூபாயாவது 6-30
கொடுக்க வேண்டும். காரணம் 2, 3 மடங்குகளுக்கு மேலாகவே கட்டணத் p.m.
தை ஏற்றியிருக்கிறார்கள். அதன் காரணமாக பாசஞ்சர் டாக்சும் தகுந்தாற்போல் ஏறியிருக்கும். அந்த 80 லட்சம் ரூபாய் என்பது இப்போது 4, 5 கோடியாக நமக்கு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது உங்களுக்குத் தெரியாததல்ல. சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் கூட இதைப் பற்றிப் பிரஸ்தாபித்திருந்தீர்கள். சட்டப்படி இந்தத் தொகை முழுவதையும் மத்திய அரசாங்கமே எடுத்துக் கொள்வதற்கு உரிமை இல்லை. எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதோடு நின்று விட்டீர்களே தவிர, அதற்கு மேல் அதைக்கொடுக்க வேண்டுமென்று பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கிற உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒன்றும் செய்யவில்லை. இதை எப்படிச் செய்ய முடியும் என்றால், அரசியல் சட்டத்தின் 269-வது பிரிவுப்படி ஒரு தீர்மானம் கொண்டு போய் இருந்தால் மற்றவர்களும் ஆதரித்திருப்பார்கள். அதை நீங்கள் செய்யத் தவறி விட்டீர்கள். மத்திய சர்க்காரை வற்புறுத்திக் கேட்கத் தவறிவிட்டீர்கள். கிடைத்த ஒரு உரிமையை ஏன் பயன்படுத்தாமல் விட்டீர்கள்? அதிலும் மாநில அரசாங்கங்களுக்கு சுயாட்சி வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் இதை ஏன் பாராளுமன்றத்திலே கேட்கவில்லை? உங்கள் வேலையை அங்கே சரியாகச் செய்யவில்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் வேலையைச் சரிவரச் செய்யவில்லை என்று சொல்வது சரியாகுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** நான் அங்கத்தினர்கள் மீது குற்றம் சாட்டவில்லை. அவர்கள் தங்கள் வேலையைச் சரிவர செய்யவில்லை என்றும் சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு, 25 பாராளுமன்ற

அங்கத்தினர்களைக் கொண்டிருக்கிற அரசு, தங்கள் உறுப்பினர்களைக் கொண்டு பாராளுமன்றத்தில் இந்த உரிமைக்காக ஏன் போராடவில்லை என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அங்கத்தினருக்குச் சொல்லிக் கொள்வேன். இந்த அரசின சார்பாக இதைப் பற்றி அடிக்கடி வலியுறுத்தி, மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லிக்கொண்டு வருகிறோம். நாங்கள் செல்லுகிற நேரத்திலெல்லாம், இதைப்பற்றிக் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறோம். எழுதியும் வருகிறோம். பாராளுமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அதைப்பற்றிக் கேட்கவில்லை என்று சொன்னார்கள். இதை நினைவில் வைத்துக்கொண்டிருக்கிற உறுப்பினர் அவர்களுடைய கட்சியும் பாராளுமன்றத்தில் இருக்கிறது. அவர்களும் இதைப்பற்றிக் கேட்கவில்லை என்பதையும் நான் நினைவுபடுத்துகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எங்கள் நிலைமை வேறு. நாங்கள் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிற தொண்டர்கள். உங்கள் நிலையைப் போல் எங்கள் நிலையில்லை. மற்றொன்று எங்களைவிட நீங்கள் சுயாட்சியில் அதிகப்பற்றுள்ளவர்கள். அதிக அதிகாரம் மாநிலங்களுக்கு வேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த நிலையில் உங்கள் உறுப்பினர்கள் சட்ட அடிப்படையில் பாராளுமன்றத்தில் பேசினார்களோ பேசவில்லையோ எனக்குத் தெரியாது. நான் சொல்வதெல்லாம் இதைப்பற்றி உங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு தீர்மானமே கொண்டு போயிருக்கலாம் என்பது தான். 2, 3 ஆண்டுகளாக அதை ஏன் நீங்கள் செய்யவில்லை இனிமேலாவது அதைச் செய்யத் தயாரா என்று தான் கேட்கிறேன். அப்படி நீங்கள் செய்யத் தயாராக இருந்தால், அதை மற்றக் கட்சிக்காரர்கள் நிச்சயமாக ஆதரிக்கக் காத்திருக்கிறார்கள். இன்றையதினம் இந்திரா காங்கிரஸ் கட்சியைத் தவிர, மற்ற எல்லாக் கட்சிகளுமே மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரம் வேண்டுமென்றுதான் கேட்கின்றன.

அடுத்து, நான் சொல்ல விரும்புவது திட்டக் கமிஷனைப்பற்றி. இன்றையதினம் அரசியல் சட்டத்தின் 282 பிரிவின்படி "மிஸலேனியஸ்" என்பார்களே, சில்லரைச் செலவுகளுக்காக உருவாக்கப்பட்ட ஒரு சட்டத்தை வைத்துக்கொண்டு கோடிக்கணக்கான ரூபாய்களைத் திட்டக்கமிஷன் மூலம் மாநிலங்களுக்கு மத்திய அரசிலிருந்து தருகிறார்கள். இந்தச் சட்டத்தை மாற்ற வேண்டுமென்று ஏன் நீங்கள் போராடக்கூடாது என்றுதான் நான் கேட்கிறேன். இவைகளுக்கெல்லாம் பாராளுமன்றத்தில் தீர்மானம் கொண்டுவாருங்கள் என்றுதான் சொல்லுகிறேன். அதிக உரிமைகள் வேண்டும், அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று பேசுவது மட்டும் போதாது. இன்றையதினம் 280 பிரிவின்படி நிதிக் கமிஷன் என்பது 5 ஆண்டுக்கு ஒரு முறை இருக்கும் என்று இருப்பதைக் எடுத்துவிட்டு, அதை நிரந்தரமாக்கி, திட்டக்கமிஷன் மூலமாகக் கொடுக்கப்படும் அவ்வளவு பணத்தையும் நிதிக் கமிஷன் மூலமாகப் பங்கீடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு திரு. பி. யு. ஷண்முகம் :** தலைவர் அவர்களே, இப்போது இவ்வளவு வேகமாக வற்புறுத்திக்கொண்டிருக்கிற உறுப்பினரின் கட்சியின் சார்பாக அப்படித் தீர்மானம் கொண்டுவந்தால், நிச்சயமாக தி.மு.க. அதை ஆதரிக்கும். அவர்கள் கொண்டு வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எங்கள் கட்சியின் சார்பில் தீர்மானம் கொண்டுவருவது என்பது எங்கள் தலைமையைக் கேட்டுக்கொண்டு செய்ய வேண்டிய காரியமாகும். எங்கள் தலைவர் திரு. இராஜாஜி அவர்கள் சுதந்திராக் கட்சியின் சார்பாகப் பலமுறை எடுத்துச்சொல்லி இருக்கிறார். திட்டக் கமிஷனுக்கு அதிகப்படியாக பணம் கொடுப்பது தவறு நிதிக் கமிஷனிடம் தான் அந்த அதிகாரம் இருக்கவேண்டும் என்று சொல்லி



வருகிறார்கள். இதை எங்கள் கட்சித் தலைவர்கள் எப்படிச் செய்வார்கள் என்பதை நான் சொல்ல முடியாது. பாலிசியை உருவாக்குகிற அளவுக்கு நான் கட்சியின் தலைவனல்ல. கட்சியில் நான் ஒரு தொண்டன் என்ற காரணத்தால், அப்படிப்பட்ட வாக்குறுதி எதும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றேன். ஆனால் எனக்கு எதிரிலே இருக்கிற நீங்கள் அப்படியில்லை. கட்சியினுடைய தலைவராக இருக்கிறீர்கள். கட்சியின் கொள்கைகளை உருவாக்கும் தகுதிபடைத்தவர்கள். எனவே அதை நீங்கள் செய்யுங்கள் என்று நான் சொல்லும்போது "நீங்கள் செய்யுங்கள், நாங்கள் ஆதரிக்கிறோம்" என்று தட்டிக்கழிப்பது சரியாகுமா என்று தான் கேட்க விரும்புகிறேன். இங்கே இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். அசோக் சந்தா கமிஷன் வந்தபோது ஒரு முடிவு செய்திருந்தார்கள். திட்டக் கமிஷனிடம் பணம் கொடுப்பது தவறு, மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணத்தில் 75 சதவீதத்தை நிதிக் கமிஷன் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்றும் மிகுதியாக இருக்கிற 25 சதவீதத்தை மட்டுமே மத்திய சர்க்கார் கொடுத்தால் போதும் என்றும் முடிவு செய்தார்கள். அந்தக் கமிஷனில் 5 பேர்கள் மெம்பர்களாக இருந்தார்கள். அதில் ஒருவர் "பைனான்ஸ் செக்ரட்டரி". இப்படித் திட்டக் கமிஷனின் அதிகாரத்தைக் குறைத்து நிதிக் கமிஷனுக்குக் கொடுக்க வேண்டுமென்று 4 பேர் சொன்ன நேரத்தில் செயலாளராக இருந்த அந்த "பைனான்ஸ் செக்ரட்டரி" அப்போது பிரதமராக இருந்த நேருஜியிடம் போய் "இந்த நிலைமையை ஒத்துக்கொண்டால், பெரிய ஆபத்து ஏற்பட்டுவிடும்; இங்கே மத்திய சர்க்காரில் இருக்கிற பல இலாக்காக்களை கலைக்க வேண்டியிருக்கும்; இதை ஒத்துக்கொள்ளக் கூடாது", என்று சொன்னார். தற்போது மத்தியில் ஒரு கூட்டுறவு இலாக்கா, மாநிலத்தில் ஒரு கூட்டுறவு இலாக்கா; மத்திய அரசாங்கத்திலே ஒரு சுகாதார இலாக்கா, இங்கே மாநிலத்தில் ஒரு சுகாதார இலாக்கா என்று இரட்டையாக இருக்கின்றன. இந்தக் கமிஷனின் கருத்தை ஏற்றுக்கொண்டால், இப்படிப்பட்ட பல இலாக்காக்களைக் கலைக்க வேண்டிவரும். அதன் பிறகு எங்களுக்கே வேலையில்லாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்று சொன்னார். உடனே நீங்கள் ஒருவர் மட்டும் இதற்கு "டிசென்டிங் நோட்" போடுங்கள் என்றார்கள். கடைசியில் 4 பேர் இந்தக் கருத்தைச் சொல்ல ஒருவர் மட்டும் "டிசென்டிங் நோட்" போட்டு, அது ஜனாதிபதியின் கையெழுத்துக்குப் போகிறபோது, அவர் டிசென்டிங் நோட்டை ஏற்றுக்கொள்ளுகிற நிலைமையை உருவாக்கினார்கள். அதையும் நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். இவைகளையெல்லாம் அதிக உரிமை கோருகிற நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டும். இவைகளையெல்லாம் அதிக உரிமை கோருகிற நீங்கள் எடுத்துச் சொல்ல மறந்துவிட்டீர்கள், தவறிவிட்டீர்கள் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவையும் நான் ஏன் சொல்லுகிறேன் என்றால், மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்லுகிற நீங்கள் அதைப் பெற வேண்டும் என்ற ஆர்வத்தில் சொல்லுகிறேன். அதை நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

* **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த நல்ல கருத்தைப் பரிசீலிக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, நிதிக் கமிஷனிடம் இதைப்பற்றி ஏற்கனவே சொல்லவில்லை என்று சொல்லுவது சரியல்ல என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனக்குச் சரியாக நினைவிருந்தால் அறிஞர் அண்ணா அவர்கள் நோயால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது கூட, அவர்களே நேரடியாக ராஜாஜி ஹாலுக்கு வந்து நிதிக் கமிஷன் விவாதத்திலே பங்கு கொண்டார்கள். ஆரம்பம் முதல் இறுதிவரை மாநிலத்திற்கு அதிகப் பணம் வேண்டும் என்பதற்கான பல காரணங்களைக்காட்டி, அதிக நிதி ஒதுக்கீடு கேட்டார்கள் என்பது எனக்கு நினைவில் இருக்கிறது. அப்படி இருந்தபோதும் அங்கத்தினரின் கருத்து தற்போது தவறானது என்பதையும் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நிதிக் கமிஷன் மூலமாகக் கிடைத்தால்தான், அதிகப் பணம் கிடைக்கும் என்று சொன்னார்கள். இதைச் சந்தானம் கமிஷன், ராஜமன்னார் கமிஷன் ரிப்போர்ட்டு மூலமாக உணர்ந்திருக்கிறோம். ஆனால்

இந்த ஆண்டு வந்த கமிஷன் ரிப்போர்ட்டைப் பார்க்கிறபோது, நிதிக் கமிஷன் இந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல; தென் மாநிலங்கள் அனைத்திற்குமே பாதகம் செய்துவிட்டது என்று சொல்லுகிறார்கள். எனவே நிதிக் கமிஷன் மூலமாகப் பிரித்துக் கொடுத்தாலும் சரி, அல்லது வேறு அதிகாரத்தின் படி பிரித்துக் கொடுத்தாலும் சரி, மத்திய சர்க்கார் நேர்மையாக நடக்கவில்லை என்றால் மாநிலங்கள் நிச்சயமாக பாதிக்கப்படும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. நிதிக் கமிஷனாலேயே இந்த ஆபத்து வந்தாலும் வரலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இதை நீங்கள் சொல்வீர்கள் என்ற காரணத்திற்காகத்தான் முன்கூட்டியே சொன்னேன் நிதிக் கமிஷன் எந்த "பாலிசி" அடிப்படையில் மாநிலங்களுக்குப் பணம் ஒதுக்கீடு செய்வது என்பது சரிவர அமைக்கப்படவில்லை. அதனால்தான் மாநிலங்களுக்கு சரிவரப் பணம் வரவில்லை. இப்போது எந்த ஸ்டேட் பட்ஜெட்டில் அதிகமாகத் துண்டு விழுந்திருக்கிறதோ அவர்களுக்கு அதிகப் பணம் கொடுங்கள் என்று நிதிக் கமிஷன் சொல்லுகிறார்கள். குஜராத், சென்னை, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில்தான் நல்ல முறையில் வரியை வசூல் செய்கிறார்கள். அப்படிக் கடமையைச் சரிவரச் செய்யும் மாநிலங்களுக்குப் பாதகமாக கமிஷன் செய்கிறது. யார் சரியாக வசூலிக்காமல் இருக்கிறார்களோ அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறது. துண்டு விழும் பட்ஜெட் காட்டுகிறவர்களுக்குக் கொடுக்கிறார்கள். நிதிக் கமிஷன் அமைப்பு சாதாரணமாகக் கூடி கலைகிறவர்களாக இருக்கிறார்களே தவிர, அதற்கு சரியான நிர்வாக இயந்திரம் கிடையாது. ஆஸ்திரேலியாவில் நிதிக்கமிஷன் இருக்கிறது என்றால், பெரிய நிர்வாக இயந்திரம் வேலை செய்கிறது. பல்வேறு வகைகளில் புள்ளி விவரத்தைச் சேகரிக்கிறார்கள். மாநிலத்திற்கு மாநிலம் சரியான முறையில் நிதி கிடைக்க வழி செய்யப்படுகிறது. நிதிக் கமிஷனுக்குப் பாரபட்சம் கிடையாது. மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்காரைப் பொறுத்தவரையில் பாரபட்சம் இருக்கலாம். அப்படிப் பாரபட்சம் இல்லாத வகையில் தான் நிதிக் கமிஷன் இருக்க வேண்டுமென்று செய்யப்பட்டது. இதில் நீங்கள் ஆர்வம் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, செலவுகளின் ஒப்புவமைப்பற்றிக் கூற விரும்புகிறேன். 1966–67-ல் இருந்ததற்கும் 1970–71-க்கும் இடையே நிதிநிலை அறிக்கையில் கிட்டத்தட்ட நான்கைந்து பக்கங்களில வருகிற செலவினங்களைப் பார்க்கும்போது, இந்த இடைப்பட்ட ஆண்டுகளில் அதிகப்படியான செலவு செய்திருக்கிறோம் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது, என்னுடைய கண்ணில் படுவது வேறாக இருக்கிறது. ஏனென்றால் இந்த இடைப்பட்ட நான்கு ஆண்டுகளில் ரூபாயின் மதிப்பு என்ன, வாங்கும் பொருள்களின் தன்மை என்ன என்பது வாழ்க்கைப் புள்ளியைப் பார்க்கும்போது தெளிவாகிறது. 1966–67-ல் வாழ்க்கைப்புள்ளி 200 ஆக இருந்தது. 1953-ல் வாழ்க்கைப் புள்ளி 100 என்று இருந்தது. அதை அடிப்படையாக வைத்திருந்தார்கள். 1968–69-ல் வாழ்க்கைப் புள்ளி 220. ஒரு ஆண்டுக்கு 7 சத விகிதம் வாழ்க்கைப் புள்ளி உயருகிறது. பணத்தினுடைய மதிப்பு ஒரு ஆண்டுக்கு 7 சத விகிதம் குறைந்து கொண்டே வருகிறது. இந்த 3 ஆண்டுகளில் 20 சத விகிதம் பணத்தின் மதிப்பு குறைந்து விட்டது. 1970–71-ல் கிட்டத்தட்ட 7 சத விகிதம் அதிகமாகப் போனால், கிட்டத்தட்ட 30 சத விகிதம் வாங்குகிற பணத்தின் மதிப்பு குறையும். இந்த 30 சத விகிதம் பணத்தை நிறைவு செய்து செலவு செய்திருந்தால், அதைவிட இது அதிகம் என்று சொல்லியிருக்கலாம். அடிப்படையான ரூபாயின் செலாவணியைச் சொல்லாமல் செலவு செய்திருப்பதைப்பெருக்கிச் சொல்வது சரியா என்று எனக்குத் தோன்றியதைச் சொல்லுகிறேன். சாலை பேணும் பணிக்காக 1966–67-ல் ரூ. 5·81 கோடி செலவு செய்திருக்கிறார்கள் என்றால் 1970–71-ல் செலவு செய்ய இருப்பது ரூ. 7·19 கோடி. அதிகச் செலவு ரூ. 1·38 கோடி. பண மதிப்பு 30 சதவிகிதம் குறைப்பைப் பார்க்கும்போது, கிட்டத்தட்ட ரூ. 7·55 கோடி செலவு செய்திருக்க





வேண்டும். நீங்கள் செலவு செய்ய இருக்கும் பணம் ரூ. 7·19 கோடி. என்கிறபோது செலவு செய்தது குறைவு என்று சொன்னால், அதில் தவறு என்ன? சாலைகளுக்கு 1966–67ல் முதலீடு ரூபாய் 1·24 கோடி செலவு செய்வதற்குச் சொல்வது 1970–71-ல் ரூ. 1·61 கோடி. ஆக ரூ. 0·37 கோடி அதிகம். 30 சத விகிதம் வைத்துப் பார்த்தால் ரூ. 1·61 கோடிதான் செலவு செய்ய வேண்டும். கல்விக்காக செலவைப் பார்க்கும்போது 1966–67-ல் ரூ. 48·86 கோடி, 1970–71-ல் ரூ. 66·83 கோடி அதிகமாகச் செலவு செய்வது ரூ. 17·97 கோடி. அதில் இந்த 30 சத விகிதம் வைத்துப் பார்த்தால் ரூ. 14·65 கோடி அதிகச் செலவு செய்ய வேண்டும். நீங்கள் அதிகச் செலவு செய்வது 3 கோடி தான் என்பதையும் ரூ. 18 கோடி அல்ல என்பதையும் பார்க்கிறோம். இப்படி நிர்வாகச் செலவைக் கணக்குப் போட்டுப் பார்த்தால், சரியான கணக்கு புத்தகத்தில் போட்டிருக்கும் கணக்கிற்கு மாறுபடுகிறது. இதில் சரியான கணக்கு மறைவதாக இருக்கிறது. என்னுடைய தலைவர் அவர்கள் நேற்றையதினம்......................

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** இதே விகிதத்தில் வரி விதிப் 6-40 p.m.
பதற்கும் அவர்கள் சொல்லுவார்களா?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** வாழ்க்கைப் புள்ளி அதிகமாகி பணத்தினுடைய மதிப்பு குறைந்துவிட்டது என்பதைத்தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** நிதிநிலை அறிக்கையில் 1966–67-ல் செலவு செய்திருக்கும் வகையில் எவ்வளவு, 1970–71ல் செலவாக வேண்டியது எவ்வளவு, எவ்வளவு கூடுதலாகச்செய்யப் பட்டிருக்கிறது என்று காட்டியிருக்கிறது. ரூபாய் மதிப்பு கணக்குப் போட்டு இவ்வளவு என்று வரவு செலவுக் கணக்குப் போடுகிறவர்கள் யாரும் கொடுக்கமாட்டார்கள். அதே நேரத்தில் என்னென்ன காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்றும் பார்க்க வேண்டும். 166 உயர்நிலைப் பள்ளிகளும் 36 கல்லூரிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் செலவழிக்கப்பட்டுள்ளதை ரூ. 21 கோடி ரூபாயில்தான் கணக்குப் பார்க்கவேண்டுமே தவிர, ரூபாயின் மதிப்பைப் பார்த்தால், அப்போது வாங்கிய சம்பளம் இப்போது உயர்த்தப்பட்டிருக்கிறது. உயர்த்துவதற்குத்தான் சம்பளக் கமிஷன் வந்திருக்கிறது. 1966–ல் எப்படி கல்வித் துறை இருந்ததோ அப்படியே 1970-லும் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். விளைவைக் கொண்டுதான் மதிப்பு கணக்கிடப்பட வேண்டும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி கூறி, அடுத்து, நிலச் சீர்திருத்தத்தைப் பற்றிச சொல்ல விரும்புகிறேன். என்னுடைய கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் நேற்றுப் பேசினார்கள். அவரைத் தொடர்ந்து பேசும்போது, என்னுடைய மனதில் ஒன்று தோன்றுகிறது. நிலச் சீர்திருத்தம் என்று சொல்லும்போது, எந்த அடிப்படையில் அதைக் கொண்டு வருகிறார்கள் என்று தெரிய வேண்டும். கம்யூனிஸ்டுகள் நிலச் சீர்திருத்தம் கொண்டு வருகிறார்கள் என்றால், அதில் அவர்களுடைய கண்ணோட்டம் வேறு. உற்பத்திச் சாதனங்கள், அது எந்த சாதனமாக இருந்தாலும், நிலமாக இருந்தாலும், பாக்டரியாக இருந்தாலும், தனிப்பட்டவர்கள் கையில் இருக்கக்கூடாது என்பதுதான் கம்யூனிஸ்டுகளின் சித்தாந்தம். இரண்டு நாட்களுக்கு முன்பு நண்பர் திரு. ராகவானந்தம் அவர்கள் சொன்னார்கள். 15 ஏக்கர் என்று சட்டம் கொண்டு வந்தபிறகு என்ன செய்வீர்கள் என்று கேட்டதற்கு, எல்லா நிலங்களையும் எடுத்து கூட்டுறவு முறையில் பெரிய பண்ணைகளாக அமைக்கப் போவதாகக் கூறினார்கள். பொதுத் துறையில் கொண்டுவருவதுதான் கம்யூனிஸ்டுகளின் சித்தாந்தம். நண்பரிடம் உங்கள் சித்தாந்தமும் கம்யூனிஸ்டுகளின் சித்தாந்தமும் ஒன்றுதானா என்று நான் கேட்டேன். 15-லிருந்து 5 ஆக்கி பிறகு ஒன்றுமே இல்லாமல் நிலங்களை எல்லாமே அரசாங்க

உடைமையாக ஆக்குவதுதான் உங்கள் திட்டமா என்று கேட்டேன். நல்ல வேளையாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுச் சொன்னார்கள். "ஆழம் தெரியாமல் காலைவிடக்கூடாது. கூட்டுறவுத் துறை நல்லபடி நடக்கவில்லை. நஷ்டம்தான் அதில் வருகிறது. ஆகையால் அந்த மாதிரி அபிப்பிராயம் எனக்கில்லை" என்று சொன்னார்கள். சாதாரணமாக நிலம் உள்ளவர்கள் வருமானம் அதிகமாக அடைவதாகவும் நிலப்பிரபுத்துவம் நிலவுவதாகவும் கூறப்படுகிறது. ஏழைகளுக்குப் பங்குபோட்டுக் கொடுக்க வேண்டுமென்ற கண்ணோட்டத்தில் நிலம் உள்ளவர்கள் வசதியாக இருக்கிறார்கள் என்று சொல்வது சரியல்ல. அப்படி அவர்கள் இல்லை. நிலத்தினுடைய தரத்தைப் பார்க்க வேண்டும். தஞ்சாவூரில் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஒரு ஏக்கரைச் சொல்கிறோம். கோவையில் என்னுடைய கணக்குப்படி ஸ்டாண்டர்டு ஏக்கர் 3 பங்கு ஜாஸ்தியாக இருக்கிறது. நாங்கள் 15 ஏக்கர் வைத்திருந்தால், கோவையில் உள்ளவர்கள் சட்டப்படி 45 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம். எங்கள் நிலத்தில் சொந்தச் சாகுபடியில் கிட்டத்தட்ட ரூ. 200 ஒரு ஏக்கரில் வரலாம். 15 ஏக்கரில் ரூ. 3,000 கிடைக்கலாம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 15 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ரூ. 3,000 வருகிறது என்று சொன்னார்கள். எனக்குக் காட்டூரில் இருக்கிற நிலத்தினுடைய அளவு 13 ஏக்கர். அதாவது 2½ வேலி என்று நினைக்கிறேன். அந்த 13 ஏக்கரில் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று தரம் பிரித்துப் பார்த்தால், 5 அல்லது 6 ஏக்கர் வருமென்று கருதுகிறேன். அதில் வருஷம் ஒன்றுக்கு ரூ. 2,500 முதல் ரூ. 3,000 வரையில் வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** என்னுடைய நிலத்தைப் பற்றித்தான் நான் சொன்னேன். முதலமைச்சர் அவர்கள் அதிர்ஷ்டசாலி. அதனால்தான் முதலமைச்சராக வந்திருக்கிறார். அவருடைய அதிர்ஷ்டத்தினால் ஒரு வேளை அதிகமாக விளைந்திருக்கலாம். என்னுடைய நிலத்தில் மொத்தம் ரூ. 3,000 தான் கிடைக்கிறது. கோவையில் ஒரு ஏக்கருக்கு மஞ்சள் போடுவதாக இருந்தால் ரூ. 10,000 கிடைக்கிறது என்று சொன்னார்கள். 15 ஏக்கர் வைத்துப் பார்க்கிறபொழுது, நீங்களே கணக்குப் போடுங்கள். கிட்டத்தட்ட ரூ. 1½ லட்சம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கிடைக்கிறது. மற்ற இடங்களில் ஒரு ஏக்கருக்கு நாலாயிரம், ஐயாயிரம் கிடைக்கிறது.

**திரு. எஸ். வி. லட்சுமணன் :** கோயம்புத்தூர் ஜில்லாவில் எல்லா இடங்களிலும் மஞ்சள் போட்டு விட முடியாது. ஏக்கருக்கு பத்தாயிரம் கிடைத்தது என்பது இந்த வருஷம்தான். மற்ற நேரங்களில் கஷ்டப் பட்டிருக்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பொதுவாகப் பார்க்கும்பொழுது, கோயம்புத்தூரில் எங்கள் ஜில்லாவைவிட அதிகமாக வருமானம் கிடைக்கிறது. ஒரு நிலத்திற்கும் மற்றொரு தரத்தில் உள்ள நிலத்திற்கும் வித்தியாசம் உண்டு. எல்லா நிலத்தையும் ஒரே மாதிரியாக எண்ணி ஸ்டாண்டர்டு அளவில் தஞ்சையில் 15 ஏக்கர், கோயம்புத்தூரிலும் 15 ஏக்கர், மற்ற இடங்களிலும் 15 ஏக்கர் என்று போட்டால், அது சரியான பொருளாதார நிபுணத்துவம் வாய்ந்த சட்டமாக இருக்க முடியாது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். 15 ஏக்கர் மட்டுமே உள்ள நிலச்சுவான்தார்களும் உண்டு. தஞ்சாவூரில் 15 ஏக்கர் நிலம் வைத்துக்கொண்டு இங்கு வந்து தொழில் செய்து ரூபாய் பத்தாயிரம் சம்பாதிக்கும் வியாபாரிகளும் உண்டு. ஒருவருக்கு 15 ஏக்கர் மட்டுமே இருந்தால், அவருக்கு ரூ. 3,000 வரை கிடைக்கலாம். இன்னொருவருக்கு வியாபாரத்தில் இன்னும் ஒரு பத்தாயிரம் கிடைக்கலாம். இவரும் நிலத்தை மட்டும் வைத்து வாழ்க்கை நடத்தக் கூடியவரும் 15 ஏக்கர் மட்டுமே அதிக நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று கணக்கிட்டால் உங்கள் கண்ணோட்டம் சரியில்லை. எல்லாத்





தரப்பினருக்கும் இடங்களுக்கும் ஒரேவிதமான அளவு வைப்பது சரியல்ல என்று சொல்லிக் கொள்ளுகிறேன். நேற்றைய தினம் எங்கள் தலைவர் சொல்லும்போது, நண்பர் திரு. கே. எஸ். மணி கேட்டார்கள். "நீங்கள் 15 ஏக்கர் வைத்திருக்கக் கூடியவர்கள் வாழ்க்கை நடத்தமுடியாது என்று சொல்லுகிறீர்களே, 5 ஏக்கர் மட்டுமே வைத்திருக்கும் குத்தகைக்காரர் எப்படி வாழ்க்கை நடத்துகிறார்? அதற்கு என்ன பதில்?" என்றுகேட்டார்கள். அதற்கு என்னுடைய பதில் 5 ஏக்கர் குறைவு என்பதுதான். ஏனென்றால் 5 ஏக்கர் சாகுபடி செய்வது என்றால், 60 சதவிகிதம் தான் எடுத்துக்கொண்டு 40 சத விகிதம் நிலச்சுவான்தார்களுக்குக் கொடுத்தால் அவருக்குக் கிடைப்பது ரூ. 750-க்குள்தான் இருக்கும். 6-50 p.m
அவர்கள் சாகுபடியும் செய்து சொந்தக்காரியத்தையும் எப்படிப் பார்த்துக்கொள்ள முடியும்? ஆகவே சாகுபடியாளருக்கு 5 ஏக்கர் என்பதற்குப் பதிலாக 15 ஏக்கர் என்று மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறேன். அப்படிச் சொன்னால் எல்லோருக்குமே நிலம் எப்படிக் கொடுப்பது என்ற கேள்வி உதயமாகும். இன்னொன்றும் சொல்லுகிறேன். கிட்டத்தட்ட 1961-62-ல் நில உச்சவரம்புச் சட்டம் வந்தது. அதன்படி உபரிநிலம் 2½ லட்சம் என்று கணக்கிடப் பட்டது. கிட்டத்தட்ட 68 ஆயிரம் ஏக்கருக்கு "நோடிபிகேஷன்" என்கிற அறிக்கை இதுவரை வெளியிட்டு 8,100 ஏக்கர்தான் எடுத்திருக்கிறார்கள். இதற்கிடையில் எட்டு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. மொத்தம் வந்த உபரியில் எடுத்துக் கொண்டது 4 சத விகிதம். இதற்கே ஏழு ஆண்டுகளானால், மற்ற நிலங்களை எடுக்க இந்தத் தலைமுறையே முடிந்துவிடும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிலைமையில் உபரி நிலங்களைக்குடியானவர்களுக்கு, குத்தகைக்காரர்களுக்கு உடனடியாக எப்படிக் கொடுக்க முடியும்? உடனடியாகக் கொண்டுவரப்போகிறோம் என்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் செய்யாத மாதிரியான சட்டம் என்று சொன்னார்கள். இதில் ஆச்சரியமோ உடனடியாகக் கொண்டுவருவது என்பதோ ஒன்றும் இல்லை. சட்டம் போட்டுவிடலாம். சட்டம் எப்போது அமுலுக்கு வருகிறது என்பதுதான் பேச்சு. அமலுக்கு வருகிறது என்பது 7 ஆண்டுகளுக்குப் பின்பு. 10 ஆண்டுகளுக்குப் பின்பு..............

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அதைப் பற்றிக் கவலைப்படத் தேவை இல்லை, வெகுவிரைவில் இந்தக் கூட்டத்தொடரில் வந்துவிடும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** சட்டத்தைப்பற்றி சொல்லவில்லை. இன்றைக்கே கொண்டு வந்துவிடலாம். வந்தவுடனேயே நிலச்சுவான்தார்கள் நிலம் பறிபோய் விடுவது இல்லை. 1962-ல் 50 வேலி, 500 வேலி நிலம் உள்ள நிலச்சுவான்தாரர்கள் இன்றையதினமும் இருக்கிறார்கள். அவர்கள் நிலம் எடுக்கப்படவில்லை. காங்கிரஸ் ஆட்சி காலத்தில் நிர்வாகக் கோளாறு இருந்தது. ஆனால் உங்கள் ஆட்சியும் துரிதமாகச் செயல்படவில்லை. 15 ஏக்கர் என்று சட்டம் கொண்டுவந்தால், அது அமுலாக இன்னும் 25 ஆண்டுகள் ஆகும். உடனடியாகக் கொண்டு வந்துவிட்டோம் என்று சொல்லுவதில் அர்த்தம் என்ன என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நிலத்தை விரைவாக எடுப்பதற்கு என்ன வழி என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, உடனடியாக என்று சொன்னதன் பொருள் இது தான். ஒரு சட்டம் வருகிறது என்று சொல்லிவிட்டு, அந்தச் சட்டத்தைக் காலதாமதமாகக் கொண்டு வந்தால் இடையில் பிரித்துக் கொடுக்க வாய்ப்பு கொடுக்கப்பட்டு விடும். அந்த வாய்ப்பை இந்த அரசு கொடுக்கவில்லை. 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்த பின்னால், இரண்டு தடவை சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்று சட்டம் செல்லாது என்று வந்த பிறகு, அரசியல் சட்டம் ஆர்டிகிள் 31-ஏ, 31-பி இவைகள் திருத்தப்பட்டு, அதன் பிறகு

சட்டம் செல்லுபடியான வேலே தொடங்கியது. காலதாமதம் நீதி மன்றத்தில். நான் அதைச் சொல்லவில்லே. சட்டத்தைக் கொண்டு வருவோம் என்று சொல்லி, காலதாமதம் செய்து இடையில் பிரித்துக் கொடுக்க வாய்ப்புக் கொடுக்க மாட்டோம். என்றைக்கு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதோ அன்றைக்கிலிருந்து இது அமலுக்கு வரும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்த விஷயத்தைத் தெரிந்து கொள் வதற்கு நண்பர்கள் பலர் என்னுடைய ஜில்லாவிலிருந்து வந்திருக்கிறார் கள். அவர்கள் என்னைத் தொந்தரவுசெய்துகொண்டிருக்கிறார்கள். இந்த விளக்கம் கொடுத்ததற்கு என்றென்றும் கடமைப்பட்டிருக் கிறேன். இந்தப் பிரச்னையை விட்டு அடுத்த பிரச்னைக்கு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, உறுப் பினர் அவர்கள் என்னை அவருடைய நண்பர்கள் இருவருடன் சந்திப் பதற்குக் கேட்டிருக்கிறார்கள். இந்த விளக்கத்திற்குப் பிறகு அவர்கள் சந்திக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். நான் மாண்புமிகு உறுப் பினர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் நிலங்களையெல்லாம் விரை வாக அரசு எடுத்துக்கொள்வதற்கு என்ன வழி சொல்லுகிறார்கள் என்பது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நிலங்களுக்கு உச்சவரம்பு கொண்டு வரக் கூடாது என்பது என் அபிப்பிராயம். அது சுதந்திரா கட்சியின் கொள்கை. ஆகவே அந்தச் சட்டத்தைச் சீக்கிரம் அமுல் செய்வதற்கு யோசனை என்னைக் கேட்டால் அது சரியாகாது என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பிறகு என் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலங்களையெல்லாம் எடுத்துக் கொள்வதில் தாமதம் ஏற்படுகிறது என்று கவலைப்பட வேண்டும் ?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் கவலைப்படவில்லை. உடனடியாக என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்றுதான் கேட்டேன்.

அடுத்தபடியாக, ஒன்று இரண்டு விஷயங்களைச் சொல்லிவிட்டு விடை பெறுகிறேன். ஒன்று தஞ்சாவூர் ஜில்லா காவேரி டெல்டா. அந்தப் பகுதியைப் பொறுத்த வரையில், உலக பாங்கியின் மூலம் ரூ. 46 கோடி பாசன வசதிகளைச் சரியாக்குவதற்காகத் தரப்படும் என்று சொல்லப்பட்டது. உலக பாங்கியின் தலைவர் தஞ்சைக்கு வந்தபொழுது, தஞ்சை ஜில்லா கலெக்டர் அவர்கள் ஒரு விருந்து கொடுத்தார்கள். எனக்குச் சட்ட மன்ற உறுப்பினர் என்ற முறையில் அழைப்பு அனுப்பியிருந்தார்கள். எனவே நான் அங்கு போகும் வாய்ப்பும் நான் உலக வங்கி குழுத் தலைவருடன் பேசும் வாய்ப்பும் கிடைத்தது. அப்போது ஒரு கேள்வி கேட்டேன். "மைசூர் மாநிலத்தில் காவேரியின் குறுக்கே பல அணை கள் கட்டப்பட்டு விட்டன. இதன் காரணமாக ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு இடையூறுகள் வரும் நேரமாக இருக்கிறது. இந்த நிலைமையில் 46 கோடி ரூபாய் கொடுப்பீர்களா ?" என்று கேட்டேன். அவர் அதற்கு நேரிடையாகப் பதில் சொல்லாமல் சிரியா, ஜோர்டான், நாடுகளுக்கிடையே "யூபிரடிஸ்", "டைகிரீஸ்" நதி நீர் சம்பந்தமாகத் தகராறு வந்ததாகவும், அதனால் பல கோடி ரூபாய் கொடுக்கப்படாமல் நின்றதாகவும், இரண்டு ஆண்டு காலம் கழித்து உலக வங்கியினரே பேசி, தீர்வு கண்டதாகவும் சொன்னார்கள். நைல் நதி சம்பந்தமாக எகிப்ட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் தகராறு ஏற்பட்டு, கொடுக்கின்ற பணத்தை நிறுத்தி வைத்ததாகவும் சொன்னார்கள். "டிரிபூனல்" போட்டு நம் விவகாரம் தீர்க்கப்படும் முன்பு, தஞ்சை ஜில்லாவுக்கு உலக வங்கி கொடுப்பதாகச் சொன்ன பணம் கிடைக்காதோ என்ற அச்சம் இருக்கிறது. அதைப்பற்றி அமைச்சரவை விரைவாக ஒரு முடிவு எடுக்கும் என்று நம்புகிறேன்.



அடுத்து, தஞ்சை நகரசபை குடிநீர்த் திட்டம். இத்திட்டம் 1895-ல் வெண்ணாற்றிலிருந்து 65 ஆயிரம் தஞ்சை ஜனத்தொகைக்காகக் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. இடை யில் தஞ்சையில் ஜனத்தொகை 2 லட்சம் ஆகியிருக்கிறது. தண்ணீர்ப் பற்றுக்குறையின் கடுமையான நிலைமை கோடை காலத்தில் இருந்து வருகிறது. ஒரு மாற்றுத் திட்டத்தின் மூலம் கொள்ளிடத்திலிருந்து, அதாவது விளாங்குடி என்ற பகுதியிலிருந்து, நீர் கொண்டுவர வேண்டும் என்று ஒரு கோடி ரூபாய் அளவில் திட்டம் போட்டு, அது மூன்று நான்கு ஆண்டுகளாக "சஸ்பெண்டு" செய்யப்பட்ட நிலையில் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. முன்பு இருந்த நகரசபை காங்கிரஸ். இப்போது உள்ள நகரசபை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடையது. ஆகவே தஞ்சை குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க இந்த ஒரு கோடி ரூபாய்த் திட்டதை உடனடியாக அமுலாக்க ஏதாவது ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாகக் குறிப்பிடும் பிரச்னை முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் சுகாதார அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் சொல்லுகிறேன். "பார்ம சிஸ்ட்" கள் அதிகப்படியான சலுகைகள் வேண்டுமென்று கேட்டார்கள். முதன் முதலில் இந்த சபை அங்கத்தினராக நான் வந்தபோது, இதைப் பற்றித்தான் பேசினேன். ஆனால் அவர்கள் விஷயமாக இதுவரையில் ஒன்றும் செய்யப்படவில்லை. சென்ற தடவை சட்டமன்றம் நடந்த போது பார்மசிஸ்டுகள் உண்ணாவிரதம் நடத்தினார்கள். நானும் பேரவை உறுப்பினர் திரு. தர்மலிங்கம் அவர்களும், மேலவை உறுப் பினர் திரு. அப்துல் வகாப் அவர்களும் சுகாதார அமைச்சர், முதல மைச்சர் அவர்களிடம் இதுபற்றிப் பேசினோம். அவர்களிடம் எங்கள் சார்பாகச் சொல்லுங்கள், "இந்த பட்ஜெட்டுக்கு முன்னால் நிச்சயமாக சலுகைகள் கிடைக்கும்" என்று உறுதி கொடுத்தார்கள். அறப்போராட் டம் வாபஸ் வாங்கப்பட்டது. பட்ஜெட் வரை பொறுத்தார்கள். ஒன்றும் இல்லை. பார்மசிஸ்டுகள் அமைச்சர்களிடம் சொல்ல முடியாது, இடையில் நாங்கள் மூன்று பேர்கள் தவித்துக் கொண்டிருக்கிறோம். பார்மசிஸ்டு களுக்கு ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டுமென்று அரசை கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**DEPUTY CHAIRMAN :** The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow. 6-55 p.m.

**The House then adjourned.**

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

*Wednesday, the 4th March* 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Tamil Nadu Public Service Commission.*

* 144 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there is a condition that two papers in English have to be answered in Group IV Service (S.S.L.C. Standard) examination conducted by the Tamil Nadu Public Service Commission; and

(*b*) if so, whether there is any proposal to change this system?

### பொது ஊழியத் தேர்வுக் குழு

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொது ஊழியத் தேர்வுக்குழு (**Tamil Nadu Public Service Commission**) தேர்வில் (**Group IV Service S.S.L.C. Standard**)ஆங்கிலத்தில் இரண்டு விடைத்தாள்கள் எழுதியாக வேண்டுமென்ற நிபந்தனை இருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இம்முறையை மாற்றும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 4-வது தொகுதி பணியாளர்களுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுத் திட்டம் அண்மையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட திட்டத்தின் படி[a] ஒன்று மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

### *Prime Minister's Visit*

* 145 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Congress met the expenses incurred in connection with the Prime Mnister's visit to Tamil Nadu for election campaign in 1967; and

(*b*) if not, the action taken thereon?

### இந்தியப் பிரதமரின் வருகை

**திரு. பி. திருஞானசம்பந்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தல் பிரச்சாரத்துக்கு தமிழகம் வந்த இந்தியப் பிரதமருக்கு ஆன செலவை தமிழ்நாடு காங்கிரஸ் கட்டியதா ?

(இ) இல்லையெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

---

[a] Printed as Appendix . on pages

[4th March 1970

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** (அ) and (இ). 1967 ஜனவரியில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் உரையாற்றிய காங்கிரஸ் பொதுக் கூட்டங்களுக்காக, அரசு செய்த செலவை ஈடு கட்டுமாறு 1967 ஜூனில் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவிற்கு எழுதப்பட்டது. இதில் தொடர்புள்ள தொகை மிகவும் அதிகமாக உள்ளதென்றும், சென்டேஜ் கட்டணங்களையேனும் தள்ளுபடி செய்வதன் வாயிலாக தங்களுக்குச் சில சலுகைகள் காட்டப்படலாம் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் குழு நிர்வாகத்தினர் முறையிட்டுக் கொண்டனர். பாதுகாப்பு ஏற்பாடுகள் வகையில் செய்யப்பட்ட வழியடைப்பு ஏற்பாட்டிற்கான செலவுகள் அரசினால் ஏற்கப்பட வேண்டும் என்றும், பொதுப்பணித்துறையினர் செய்த செலவின் மேல் வசூலித்த சென்டேஜ் கட்டணங்களைத் தள்ளுபடி செய்யலாம் என்றும் தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த இனம் தவிர்த்து ரூ. 73,715·73 தொகையை அரசிற்குச் செலுத்தும்படி 12–12–1969 அன்று தமிழ்நாடு காங்கிரஸ் குழுவிற்கு எழுதப்பட்டுள்ளது.

**திரு வி தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, அந்தத் தொகையை செலுத்தியுள்ளார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இன்னும் செலுத்தவில்லை செலுத்திவிடுவார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த அரசு தற்போது எந்தத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியை அதிகார பூர்வமானதாக ஏற்று இந்த வசூல் பாக்கியைக் கேட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** 12–12–1969 அன்று எந்தத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இருந்ததோ, அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. பி. திருஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, தேர்தல் நடக்கும் போது காங்கிரஸ் ஒரே காங்கிரஸாக இருந்தது. ஆகவே அதை சிண்டிகேட் காங்கிரஸ்தான் கட்டவேண்டுமென்பது முறை. அதை அவர்களிடமிருந்து வசூலிப்பதற்கு முயற்சிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு மு கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்களே சொல்லியதைப் போல, இதைக் கொடுத்துவிட்டால் அவர்கள்தான் உண்மையான காங்கிரஸ் என்று ஒத்துக்கொள்கிறீர்களா என்று கேட்டால், ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**திரு கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, அந்தத் தொகையைப் பற்றி தகராறு இருப்பதாகவும், கணக்கில் சில விஷயங்களில் சரியாக இல்லை என்றும், அவைகளைக் குறைக்க வேண்டு மென்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** முதலில் சென்டேஜ் சார்ஜ், பாதுகாப்புச் செலவு இவைகளைக் குறைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அவைகள் எல்லாம் ஏறக்குறைய ரூ. 30 ஆயிரத்திற்கு மேல் குறைக்கப்பட்ட பிறகுதான், ரூ. 73,715·73 தரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. சென்னையில் நடந்த காங்கிரஸ் கூட்டத்திற்கு ரூ. 28,409·00. கோவையில் ரூ. 2,536·69, திருச்சியில் ரூ. 4,686·00, மதுரையில் ரூ. 23,299·30. தஞ்சையில் ரூ. 5,409·69, உதகையில் ரூ. 2,458·74 ஆக ரூ 66,799·42. பொதுக் கூட்டங்கள் நடைபெற்றதன் விளைவாக சேதமடைந்த உதகைக் குதிரைப்பந்தய மைதானத்தைச் செப்பனிடுவதற்கான செலவு ரூ. 6,916·31, ஆக மொத்தம் ரூ. 73,715·73 சென்டேஜ் பாதுகாப்பு செலவைக் குறைத்துச் சொல்லப்பட்ட செலவாகும் இது.



4th March 1970]

**திரு. கே. ராஜாராம் :** மேடை அமைப்பதற்காகும் செலவு, ஒலி பெருக்கி அமைப்பதற்கான செலவு, இவைகளையன்றி இதர செலவுகளை ஏற்றுக்கொள்ள இயலாது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி எழுதியிருக்கிறதா ? அதைப்பற்றித் தமிழ்நாடு பேரவையில் எதிர்க் கட்சித் தலைவர் திரு கருத்திருமன் அவர்கள் முதலமைச்சரிடத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கூட்டங்கள் தொடர்பாகவுள்ள செலவுகளை மாத்திரம் ஏற்றுக்கொள்வோம் என்று சொன்னார்கள். செலவு செய்யப்பட்டதில் ரூ. 73,715 தேர்தல் கூட்டத் தொடர்பாக ஏற்பட்டது என்றும், ஆகையால் இந்தப்பணத்தைக் கட்டவேண்டுமென்றும் சொல்லப்பட்டது. ஒரு அரசின் செலவிலேயே ஒரு கட்சியின் கூட்டம் நடத்துவது சரியல்ல என்பதை எண்ணிப்பார்த்தாவது, ஏற்கெனவே இருந்த முறைப்படி நடந்திருந்தாலும் அந்தப் பணத்தைக்கட்டிவிடுவதுதான முறையாகும்.

**திரு. கே. ராஜாராம் :** கூட்டத்திற்கான செலவைத் தருவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்றும், பிரதமர் என்ற முறையில் இந்த மாநிலத்திற்கு விஜயம் செய்திருப்பதால், மாநில அரசுதான் அந்தச் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சொல்வது நியாயம் அல்லவா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதனால்தான் பாதுகாப்புச் செலவு போனால் போகிறது என்றும், சென்டேஜ் சார்ஜையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** பிரதம மந்திரி அவர்கள் ஏனைய மாநிலங்களுக்குத் தேர்தல் பிரசாரக் கூட்டங்களுக்குச் செல்லும்போது, அந்தந்த மாநிலங்களின் அரசுகள் அந்தச் செலவுகளை ஏற்றுக்கொள்கின்றனவா ? அல்லது காங்கிரஸ் கமிட்டி கொடுக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மற்ற மாநிலங்களில் எப்படியிருக்கிறது என்பது தெரியாது. இந்த மாநிலத்தில் மட்டும் 1967-ல் பொதுத் தேர்தலுக்காகப் பிரதமர் வந்த பொழுது, அதற்கான செலவுகளை அரசே முதலில் செய்தது, பிறகு வாங்கிக்கொள்ளலாம் என்று. இப்போது மத்திய அமைச்சர்கள் தேர்தல் கூட்டத்தில் கலந்து கொண்டால்; அந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டால், பாதுகாப்புச் செலவு தவிர, இதர செலவுகளை எல்லாம் அந்தக் கட்சியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசு முடிவு செய்தது.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I ask the Hon. the Chief Minister whether this fact was brought to the notice of the Election Commission, since our Government cannot incur expenditure for the purpose of election campaign? If not, will the Government at least in future, whenever money is spent by the Government for election campaign, see that that fact is notified to the Election Commission?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினருடைய அந்த எண்ணத்தை இனிமேல் செயல்படுத்துவதைப்பற்றி கவனிக்கலாம்.

**திதி. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சொத்து சம்பந்தமாக வழக்கு இருக்கிற காரணத்தால், இந்தப் பணத்தை இண்டிகேட் காங்கிரஸ் அல்லது சிண்டிகேட் காங்கிரஸ் கொடுப்பதற்கு ஏதேனும் பாதகமாக இருக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** வழக்கிற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ஆனால் இந்த பணத்தை யாராவது கட்டி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இந்த அரசுக்குப் பட்டிருக்கிற கடனைத் தீர்த்துவிடுவதுதான் நல்லதாகும்.

[4th March 1970

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** 1962 பொதுத் தேர்தல் சமயத்தில் பிரதமர் தமிழகத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்குப் பேச வந்த சமயத்தில் அரசு செலவை ஏற்றுக்கொண்டதா ? அல்லது காங்கிரஸ் கட்சி கட்டியதா ? 1962-ல் பண்டித ஜவகர்லால் நேரு வந்த சமயத்தை நான் குறிப்பிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்போது என்ன நடந்தது என்ற விவரமில்லை. 1967 பற்றிதான் கேட்கப்பட்டது. அதில் செலவான ரூ. 1,10,774·97-ல் குறைக்க வேண்டுமென்று எழுதிக் கேட்ட பிறகு ரூ. 30,000-ஐக் குறைத்து அது போகத்தான் மீதமுள்ள தொகை கேட்கப்படுகிறது.

Mr. CHAIRMAN : Questions 146 to 152 are postponed.

*Water from Krishna River*

*153.—Thiru V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have examined the cost of bringing water to Madras City from the Krishna River; and

(*b*) if so, the details of the scheme?

**கிருஷ்ணா நதி தண்ணீர்.**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) கிருஷ்ணா நதியிலிருந்து சென்னை மாநகரத்திற்குத் தண்ணீர் கொண்டுவர ஆகும் செலவு பற்றி அரசு ஆய்வு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், இத்திட்டம் குறித்த விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாஷா :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*Over-bridge across Thenar*

* 154 Q.—Thiru G. SWAMINATHAN (on behalf of Thiru SAW GANESAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal to construct a broad and strong over-bridge across Thenar on Karaikudi–Devakottai Highway, since the present bridge has become very old and is very narrow and weak in its structure?

**தேனாற்றின் மேல் உள்ள பாலம்**

**திரு. ஜி. சுவாமிநாதன்** (திரு சா. கணேசன் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

காரைக்குடி தேவகோட்டை நெடுஞ்சாலையில் தேனாற்றின் மேல் உள்ள பாலம் பழங்காலத்தில் போடப்பட்டதாயும், மிகக் குறுகலாகவும், உறுதியற்றதாகவும் உள்ளதால் அதை மாற்றி உறுதியான அகலமான மேம் பாலத்தைக் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா :** அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



4th March 1970]

*Ayyan, Peruvalai, Pullambadi Canals*

*155 Q.—Thiru T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware that irrigation is affected as a result of sedimentation in the head of the Ayyan, Peruvalai, Pullambadi Canals, maintained by the River Conservancy Wing of the Public Works Department, Tiruchirappalli district; and

(*b*) if so, the action taken thereon?

**அய்யன், பெருவளை, புள்ளம்பாடி வாய்க்கால்கள்**

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) திருச்சி மாவட்டத்தில் பொதுப் பணித் துறை ஆற்றுப்பாசன இலாகாவினால் பராமரிக்கப்படும் அய்யன், பெருவளை, புள்ளம்பாடி வாய்க் கால்களின் தலைப்பு மேடிட்டு விடுவதால் நீர்ப்பாசனத்திற்கு இடையூறு ஏற்படுவதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) அய்யன், பெருவளை, புள்ளம்பாடி கால்வாய்களின் தலைப்பகுதி களில் ஆண்டுதோறும் தூர் எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர் தட்டு ஏற்பட்டதைத் தவிர்ப்பதற்காக காவிரி ஆற்றிலேயே ஒரு "ரெகுலர் ஷட்டர்ஸ்" கட்டவேண்டும் என்று—தென்பகுதியில் கட்டவேண்டும் என்று—திட்டக் குறிப்பு ஏதேனும் அரசாங்கத்திடம் இருக்கிறதா ? இருக்கிறதென் றால் அந்தத் திட்டத்தின் மதிப்பீடு என்ன ?

**மாண்புமிகுதி ரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி தூர் எடுப்பதைப்பற்றி. மாண்புமிகு உறுப்பினர் கேட்பது வேறு. எனவே பதில் சொல்ல இயலவில்லை.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, அப்பர் அணைக்கட்டி லிருந்துதான் புள்ளம்பாடி கட்டளைக் கால்வாய், அய்யன் பெருவளை போன்ற வாய்க்கால்களுக்கு கீழ் அணையாக வருகிறது. காவிரி ஆற்றிலிருந்து வருகிற தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும்போது, தென்பகுதியில் உள்ள இடத்தில் கரை இல்லாத காரணத்தாலும், அணைக்கட்டு ஒன்று இல்லாத காரணத்தாலும், தஞ்சை ஜில்லாவுக்குத் தண்ணீர் தேவை இல்லை என்றால் கூட, அந்தத் தண்ணீரைத் தடுத்து தென்பகுதிக்குத் தண்ணீர் விடமுடிய வில்லை. ஆகையால் தஞ்சை ஜில்லாவுக்குத் தண்ணீர் தேவையில்லாமல் இங்கே தண்ணீர் தேவைப்படும்போது, அந்தத் தண்ணீரை இந்தப் பகுதிக் குத் திருப்ப ஒரு அணைக்கட்டு கட்டும் திட்டம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** நான் ஏற்கெனவே குறிப் பிட்டதைப் போல், மூலக் கேள்வி தூர் எடுப்பதைப்பற்றியதாகும். அய்யன், பெருவளை, புள்ளம்பாடி கால்வாய்களின் தலைப்பகுதிகளில் ஆண்டுதோறும் தூர் எடுக்கப்பட்டுவருகிற காரணத்தால், அந்தப் பகுதியில் எந்த இடையூறும் ஏற்படவில்லை. உறுப்பினர் அவர்கள் கேட்டுவிட்ட காரணத்தால் அதை விளக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

அய்யன் வாய்க்கால், பெருவளை வாய்க்கால், புள்ளம்பாடி கால்வாய் தலைப் பகுதியில் மண் சேருவதைத் தடுத்து போதுமான அளவு நீர் வழி வதற்காக ஆண்டுக்கு ஒரு முறை தூர் எடுக்கப்பட்டு வருகிறது. 1965 முதல்

1969-ம் ஆண்டு வரை தூர் எடுப்பு பணிக்கான செலவு விவரங்களைக் கொடுக்கிறேன். புள்ளம்பாடி கால்வாய்க்காக 1965–66-ல் 6,566 ரூபாய். 1967–68-க்கு ரூபாய் 12,547ம், 1968–69-க்கு ரூபாய் 8,256-ம் 1969–70-க்கு 7-ம் மாதம் முடிய ரூபாய் 16,013-ம் செலவிடப்பட்டிருக்கிறது. அய்யன் பெருவளை முகப்பு வாய்க்காலில் 1967–68-ல் ரூபாய் 49,942-ம், 1968–69-ல் ரூ. 1,22,474-ல், 1969–70-ல் (7-ம் மாதம் முடிய) ரூ. 1,24,393-ம் செலவிடப்பட்டது. மேலும் அய்யன் பெருவளை வாய்க்காலில் 1965–66-ல் ரூ. 1,04,376-ம், 1966–67-ல் ரூ. 7,756-ம், 1967–68-ல் ரூ. 47,890-ம், 1968–69-ல் ரூ. 26,857ம். 1969–70-ல் (7-ம் மாதம் முடிய) ரூ. 52,089ம் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

### *Madurai Municipality.*

* 156 *Q.*—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether there is any proposal to make Madurai Municipality into Corporation; and

(*b*) if so, the details and the stage at which the matter now stands?

### மதுரை நகராட்சி

**திரு. எம். ராஜா அய்யர் :** திரு டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை நகராட்சியை, மாநகராட்சியாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை, அது எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** (அ) & (இ) அத்தகைய கருத்து அரசின் முன் இல்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, ஒரு நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கு என்ன நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** ஒரு நகராட்சியைச் சீரமைப்பது குறித்து கருத்து அறிய நியமிக்கப்பட்ட திரு. ரத்தினசபாபதி முதலியார் குழு தனது பரிந்துரையில் ரூ. 3½ லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்டதாகவும் ரூ. 20 லட்சம் ஆண்டு வருவாய் கொண்டதாகவுமுள்ள நகராட்சியை மாநகராட்சியாக மாற்றலாம் என்று நீண்ட காலத்திற்கு முன்னால் குறிப்பிட்டது. அந்த அடிப்படையில் பார்க்கும் போது, மாநகராட்சியாக மாற்றுவதற்கு உரிய தகுதி இருந்தாலும், மதுரையை அப்படி மாற்றுவதன் மூலமாகச் செலவுகள்தான் அதிகரிக்குமே தவிர, வருவாய்க்கு வழிவகை இல்லாத சூழ்நிலையில் மாநகராட்சியாக மாற்றத் தேவையில்லை என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

**திரு. வி. தங்கபாண்டியன் :** மதுரை நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கோரி, மதுரை நகராட்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறதா? அதற்கு அரசினுடைய பதில் என்ன ?

**மாண்புமிகு திரு மா. முத்துசாமி :** கடைசியாக மதுரை நகராட்சி மன்றம் 25—5—1967-ல் நிறைவேற்றிய தீர்மானத்தில் மதுரையை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் மீதுதான் ஒரு நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கான தகுதி இருந்தாலும், அப்படிச் செய்வதானால், அதிகச் செலவாகக்கூடிய சூழ்நிலை இருப்பதால், அது தேவையற்றது என்றும் இப்போது அந்தத் திட்டத்தை ஏற்க வேண்டியதில்லை என்றும் அரசாங்கம் கருதுகிறது.



### *Central Bus-Stand for Tiruchirappalli*

* 157 Q. THIRU T. K. SUBBIAH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to construct Central Bus-Stand in Tiruchirappalli;

(*b*) if so, the estimated cost; and

(*c*) when this work will be started?

### திருச்சிராப்பள்ளிக்கு மத்திய பேருந்து நிலையம்.

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளியில் மத்திய பேருந்து நிலையம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(உ) இவ்வேலை எப்போது துவங்கும் ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :**

(அ) ஆம்.

(இ) ரூ. 5·75 லட்சம்.

(உ) கூடிய விரைவில் தொடங்கப்படும்.

**திரு. டி. கே. சுப்பையா :** கூடிய விரைவில் என்றால், முனிசிபல் தேர்தல் நடந்துதான் வேலை துவங்குமா அல்லது இப்போது அதிகாரத்தில் உள்ளவர்களின் காலத்திலேயே துவங்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** அநேகமாக தேர்தல் முடிந்தாலும் கூட, அது எங்களுடைய அதிகாரத்தில் தான் இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன். என்றாலும் கூட இதில் தமிழ்நாடு போக்குவரத்துத் துறை தொடர்புடைய காரணத்தால், அவர்களுடைய ஒப்புதலையும் பெற வேண்டும் என்று கேட்டிருந்தது. அவர்களும் ஒப்புதல் கொடுத்து, இப்போது 26—2—1970-ல் ரூபாய் 5·75 லட்சம் செலவில் பேருந்து நிலையத்திற்கான கட்டிடம் கட்ட திருத்த மதிப்பீடுகளும் அதற்கான வரைபடங்களும் தலைமைப் பொறியாளரால் அனுப்பப்பட்டிருக்கின்றன. அது சம்பந்தமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காலம் தாழ்த்தாமல் மிக விரைவில் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்தல் நடப்பதற்கு முன்னாலேயே அது நிறைவேற்றப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, usually when municipalities construct these bus-stands, they are entitled to collect certain fees from the buses which park in those bus-stands. I am not able to understand whether the Government are to build the bus-stand in Tiruchirappalli or it will be left to the Tiruchirappalli Municipality to build the bus-stand ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** பொதுப் பணித் துறையால் கட்டித் தரப்பட வேண்டும் என்று கேட்டிருக்கிறதே தவிர, நகராட்சி மன்ற நிதியிலிருந்துதான் பணம் செலவழிக்கப்படுகிறது. அவர்கள் தான் செலவழிக்கிறார்கள். அதற்கான வரை படம், திருத்தத்திட்டம் எல்லாவற்றையும் தலைமைப் பொறியாளர் அங்கீகரிக்க வேண்டியிருப்பதால், அரசாங்கம் அதற்கு ஒப்பம் அளிக்கவேண்டியிருக்கிறது.

[4th March 1970

*Adivasi Workers.*

* 158 Q. THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) the number of persons belonging to Scheduled Tribes employed in the coffee and tea plantations in Nilgiris district during 1968–69;

(b) whether the Government are aware of the fact that they are being kept as temporary coolies only; and

(c) the steps taken by the Government to register their names in the permanent workers' list ?

**ஆதிவாசித் தொழிலாளர்கள்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீலகிரி மாவட்டத்தின் காப்பி, தேயிலைத் தோட்டங்களில் ஆதிவாசி மக்கள் 1968–69-ல் எத்தனை பேர் வேலை செய்து வந்தனர்?

(இ) இவர்கள் தற்காலிக கூலிகளாகவே வைக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(உ) இவர்களை நிரந்தரக் கூலியாள் பட்டியலில் பதிவு செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) குன்னூர் வட்டத்திலுள்ள மலைத் தோட்டங்களில் சுமார் 262 ஆதிவாசித் தொழிலாளர்கள் வேலைக் கமர்த்தப்பட்டுள்ளனர். நீலகிரி மாவட்டத்தின் கூடலூர் வட்டத்தைச் சேர்ந்த தொலைவுப் பகுதிகளிலுள்ள இரண்டொரு சிறு மலைத் தோட்டங்களில் இருளர், குறும்பர் முதலான மலைவாழ் ஆதிவாசிக் குடியைச் சேர்ந்த நாட் கூலித் தொழிலாளர்கள் சுமார் 100 பேர் வேலைக் கமர்த்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) குன்னூர் வட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட 262 தொழிலாளர்களில் 211 தொழிலாளர்கள் நிலைப்பணியினர்; எஞ்சிய 51 பேர் தற்காலிக தொழிலாளர்கள். கூடலூர் வட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட நாட்கூலித் தொழிலாளர்கள் 100 பேரைப் பொறுத்தவரையில், அவர்கள் முறையாக வேலைக்கு வருவதில்லையென்று தெரிய வருகிறது. அவர்கள் தங்கள் விருப்பப்படி வேலைக்கு வந்து போகிறார்கள்.

(உ) குன்னூர் வட்டத்தில் எஞ்சிய 51 தற்காலிகத் தொழிலாளர்களில் 1968–69-ம் ஆண்டில் 13 தொழிலாளர்கள் நிலைப் பணியினராக்கப்பட்டுள்ளனர். கூடலூர் வட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்ட நாட்கூலித் தொழிலாளர்கள் 100 பேர் சம்பந்தமாக, அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்ட போதிலும் குறிப்பிட்ட ஒரு மலைத் தோட்டத்தில் முறையாக வேலைக்கமர்வதை அவர்கள் விரும்புவதில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Questions are over.

**[Note —An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1970–71.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் பேரில் ஒரு புதிய சூழ்நிலையில் என் கருத்துக்களைத் தெரிவிக்க இங்கே நான் முன் வந்துள்ளேன். இரண்டு மூன்று தினங்களாகவே என்னுடைய நண்பர்கள், "இந்த வரவு



4th March 1970] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

செலவுத் திட்டத்தைப் பற்றி நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள் ? அதை எதிர்த்துப் பேசப் போகிறீர்களா, இல்லை உங்களுடைய இந்திரா காந்தி சர்க்காரை ஆதரிக்கும் தி.மு.க. சர்க்காரை ஆதரிக்கப் போகிறீர்களா ?" என்றெல்லாம் கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சினிமா நடிகர் "சோ" தான் நடத்துகிற பத்திரிகையில் ஒரு கார்ட்டூன் போட்டிருந்தாராம். அதை நான் பார்க்கவில்லை. அதில் இந்திரா காந்தி அம்மையாரை திரௌபதியைப் போல் போட்டு அதிலே "இவர்கள்" எல்லாம் துகில் உரிகிற மாதிரி போட்டு, அவர் கருணாநிதி என்று சொன்ன உடனே, கருணாநிதி அவர்கள் 25 சேலைகளையோ 25 வோட்டுகளையோ அனுப்புவது மாதிரி போட்டிருந்ததாகச் சொன்னார்கள். அதைப் போல் "உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்," என்று சொல்லுகிற அடிப்படையில், உறவு கொண்டாடும் நண்பர்களோடு நல்ல முறையில் ஒத்துழைப்பதுதான் நியாயம் என்று கருதுகிறேன். சாதாரணமாக நான் இந்த மன்றத்தில் 20-வது முறையாகப் பேசுகிறேன். மேல் சபையில் 14-வது தடவை, கீழ் சபையில் 5 வருடம் இருந்திருக்கிறேன். ஒரு தடவைகூட எதிர்க்கட்சிக்காரர்களோ அல்லது ஆளும்கட்சியான காங்கிரஸோ ஒத்துழையாமல் இருந்தது கிடையாது. விவாதத்தின்போது எல்லாம் விளக்கமாகச் சொல்லி விட்டவுடன் நான் அதை ஆதரிக்கிறேன், அல்லது எதிர்க்கிறேன் என்று நான் சொல்வார்கள். அந்த முறையில் சென்ற மூன்று வருடகாலமாக நடந்துவந்திருக்கிறது. இனியும் அப்படி நடந்துக்கொள்ளவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். ஜனநாயகத்தில் ஆட்சி மாறி மாறி வரும். ஆகையால் எந்தக்கட்சி ஆட்சியாக இருந்தாலும், ஆதரவு கொடுக்கவேண்டிய இடத்தில் ஆதரவு கொடுத்து, எதிர்க்கவேண்டிய இடத்தில் எதிர்க்கவேண்டும். அந்த முறையில் நேற்றுகூட நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசுகிறபோது, நிதிநிலை அறிக்கையின்பேரில் பல பாராட்டுதல்களைத் தெரிவித்தார்கள். அதேபோல இந்த வரவு செலவுத் திட்டத்தை எந்தெந்த அடிப்படையில் பாராட்ட வேண்டுமோ அந்தந்த அடிப்படையில் நான் பாராட்ட வந்திருக்கிறேன். நேற்று திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசுகையில், நிர்வாக அமைப்பில் சிக்கனத்தைப்பற்றிப் புள்ளி விவரங்களைக் கூட்டி ஆராய்ந்து, திறன் குறையாமல் நிர்வாகத்தைச் சிக்கனமாக நடத்துவதற்கு வழிவகுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த பட்ஜெட் நிதிநிலையைப் பற்றி விமர்சனம் செய்திருக்கிற இந்து, தினமணி போன்ற பத்திரிகைகள், மாநில அரசாங்கம் சிக்கனத்தைக் கையாண்டிருந்தால், இப்பொழுது புது வரிகள் போடவேண்டிய அவசியம் வந்திருக்காது என்று எழுதியிருக்கின்றன. மத்திய ரயில்வே பட்ஜெட் ஆனாலும் சரி, மற்ற பட்ஜெட்களானாலும் சரி, மத்திய அரசு நிர்வாகத்தில் சிக்கனத்தை மேற்கொண்டிருந்தால், மேலும் வரி போடவேண்டிய அவசியம் வந்திருக்காது. முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், "நாங்கள் 65 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்திருக்கிறோம்" என்று. நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இந்த 65 ஆயிரம் பேர்களில் எவ்வளவு பேர்கள் உண்மையான வொர்க் லோடோடு வேலை செய்கிறார்கள் ? வேலையில்லாமல் சில டிபார்ட்மெண்டுகளில் சும்மா இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி பல இடங்களில் நான் பார்த்திருக்கிறேன். எங்கள் இராஜபாளையத்தில் நான் மார்க்கட்டிங் கமிட்டியில் தலைவனாக இருக்கிறேன். அங்கே கிரேடிங் ஆபீஸ் என்று ஒன்று வந்திருக்கிறது. அது வந்து ஒரு வருடம் ஆகிறது. அதற்கு நான்தான் என் சொந்த இடத்தை வாடகைக்குக் கொடுத்திருக்கிறேன். அதில் ஒரு ஆபீஸர், கிளார்க்குகள் என்று இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஏதாவது ஒரு வேலையாவது செய்வதாக எனக்குத் தெரியவில்லை. இந்த மாதிரி நிறைய இடங்களில் தேவையில்லாமல் ஆபீசுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து சிக்கன நடவடிக்கை எடுப்பதன் மூலம் வீண் பணச் செலவைக் குறைக்கலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, மத்திய, மாநில உறவு பற்றி இங்கு ஏராளமாக விவாதம் நடந்தது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அதை எல்லாக் கட்சிக்

காரர்களுமே வரவேற்கிறார்கள். அதில் எல்லோரும் ஒன்றுபட்டிருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து அதிக அதிகாரங்கள் வாங்கப்பட வேண்டும். ஏனென்றால் இங்கே ஜனங்களின் நன்மையைக் கவனிக்கக் கூடியது மாநில அரசுதான். மத்திய அரசு அல்ல. மத்திய அரசு "டிபன்ஸ்" போன்றவற்றைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாநில சர்க்காருக்குத்தான் பல வேலைகள் இருக்கின்றன. ஆகையால் அதிகமான பண வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் மத்திய அரசு. அதற்காக ஒத்துழைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிதி நிலை அறிக்கையிலே வருகிற வருடத்திலே நம்முடைய தமிழ் நாட்டில் பல தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சேலம் கஞ்சன் மலை ஸ்டீல் ஆலையின் துவக்க வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. கல்பாக்கம், எண்ணூர் போன்ற இடங்களில் நிறைய பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட்டு, அந்த இடங்கள் பெரிய தொழில் நகரங்களாக ஆகிக்கொண்டு வருகின்றன. எண்ணூரில் பெட்ரோ-கெமிகல் பிளாண்ட் என்ற ஒரு தொழிற்சாலை, மெட்ராஸ் பெர்டிலைஸர் என்கிற ஒரு தொழிற்சாலை, தூத்துக்குடி துறைமுகத் திட்டம், இந்த மாதிரி பல தொடங்கப்பட்டிருக்கின்றன. எங்கள் பக்கத்திலே கூட ஆலங்குளத்தில் அப்போதிருந்த காங்கிரஸ் ஆட்சி காலத்தில் போடப்பட்ட திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஒரு தொழிற்சாலை உற்பத்தியைத் துவக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் தூத்துக்குடி துறைமுகத் திட்டம் நல்ல பலனளிக்க வேண்டும் என்றால், சேது சமுத்திரக் கால்வாய் வெட்டினால் ஒழிய, பிரயோஜனம் இல்லை. 200, 300 மைல்கள் சுற்றி வருகிற கிழக் கடற்கரையில் உள்ளவர்கள் கொழும்பு வழி வராமலே இந்தப் பக்கம் வருவதற்கு, தூத்துக்குடி வருவதற்கு, இந்தக் கால்வாய் வெட்டினால் மிகவும் வசதியாக இருக்கும். இப்படி செய்யப்படவில்லை என்றால், பம்பாய், கொச்சி என்று போய்விடுவார்கள். அதனால் சேது சமுத்திரத் திட்டத்தை எவ்வளவு சீக்கிரம் அமுல்படுத்தப்படுகிறதோ, அவ்வளவு விரைவில் தூத்துக்குடித் துறைமுகம் முக்கியத்துவம் பெறும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதே மாதிரி ராமேஸ்வரம் ரோடு ஒன்றைப் போட்டுவிட்டால், ரொம்ப சௌகரியமாக இருக்கும். இப்படிப் பல்வேறு துறைகளில் நம்முடைய தொழில் வளர்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிறோம். எங்களுடைய ஜில்லா வாசியான மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்களின் முயற்சியால் எங்கள் ஜில்லா சம்பந்தப்பட்ட வரையிலே, நிறையப் பலனடைந்திருக்கிறோம். கிராமப் புறங்களில் சிறு சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 2, 3 இடங்களில் அமைச்சர் அவர்களே கூட துவக்கி வைத்திருக்கிறார்கள்.

திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கிராம மக்களுக்கு விவசாய வேலை இல்லாத காலத்தில், அவர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து தர வேண்டுமென்று சொன்னார்கள். அந்த முறையில் சில தொழில்கள் கிராமங்களில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரி எல்லா ஜில்லாக்களிலும் ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரம், விவசாயம், ஆழக் கிணறுகள் தோண்டுதல் போன்றவற்றிற்கு இந்த வருடம் அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் கவனம் செலுத்தப்பட்டு அதற்கு வேண்டிய திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். நம்முடைய கூட்டுறவு அமைச்சர், நேற்று என்னிடத்தில் சொல்லிக்கொண்டிருந்தார்கள். 65 ஆயிரம் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக. மிக்க சந்தோஷம். ஆனால், அப்படிக் குழாய்க் கிணறுகள் போட்டும் கூட தண்ணீர் இல்லை என்றால், என்ன பிரயோஜனம்? அரசிடம் கடன் வாங்கி இப்படி வெட்டப்பட்ட குழாய்க் கிணறுகளில் தண்ணீர் வரவில்லை என்றால், அந்த விவசாயிக்கு நஷ்டம்தானே ஏற்படும். ஆகையால் இதற்காக வேண்டி, அரசு முதலில் அரசாங்கச் செலவிலே இந்த மாதிரி குழாய்க் கிணறுகளைத் தோண்டி, பிறகு மோட்டார்கள்



பொருத்தும் வேலையை மட்டும் விவசாயிகளுக்கு விட்டுவிடலாம். இது சம்பந்தமாக சமீபத்தில் நடந்த " டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்ஸில் " கூட்டத்தில் அரசாங்கத்தை இது சம்பந்தமாக அணுக வேண்டும் என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அப்போது கலெக்டர் அவர்கள், " இது வேண்டாம். நானே செய்கிறேன் " என்று சொன்னார்கள். இதற்கு சப்சிடியாகக் கொடுப்பதற்கு ஆவன செய்கிறேன் என்று சொன்னார்கள். ஏனென்றால், ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுக்காவில் இனிமேல் எந்த இடத்திலும் " சர்பேஸ் வாட்டர் " வராது. ஏனென்றால், ஆழமாக ஒவ்வொருவரும் மோட்டார் போட்டு விட்டார்கள். உகாண்டா லாங் ஸ்டேபிள் காட்டன் வந்ததனாலே, அந்த நிலங்கள் கொஞ்சம் பண்பட்ட நிலம். இந்தியாவிலேயே தஞ்சைக்கு அடுத்தபடியாக, " லாங் ஸ்டேபிள் காட்டன் " வரும்படியான இடம் ஸ்ரீவில்லிப்புத்தூர்தான். அதுவும் மல்லிக்குத் தெற்கேயும், ராஜபாளையத்திற்கு வடக்கேயும் உள்ள இடங்களில் ஜாஸ்தி வருகிறது. அந்த மாதிரி இடங்களில் " காட்டன் " நல்ல விலை விற்கிற காரணத்தால், ஏராளமாகக் கிணறுகள் தோண்டியிருக்கிறார்கள். மற்ற இடங்களிலும் தோண்டியிருக்கிறார்கள். இப்போது மின்சாரத்தின் மூலமாகப் பம்புகள் போட்டு வாட்டரை " லிப்ட் " செய்வதனால், தண்ணீர் சீக்கிரமாகத் தீர்ந்துவிடும். அதனால் ஆழக் கிணறுகள் தோண்டி கீழே இருக்கிற தண்ணீரை எடுத்தாலொழிய, அந்த ஏரியாவிற்கு விமோசனமேயில்லை. அந்த முறையைக் கையாள வேண்டுமென்று 4-30 p.m. கேட்டுக்கொள்கிறேன். கூடலூர் பக்கம் ரூ. 10 கோடியில் " பிளாண்டேஷன் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் " என்று சொல்லி, பர்மா, சிலோன், கொழும்பிலிருந்து வருகிறவர்களைக் குடியமர்த்துவதற்காக ஏற்பாடு செய்து வருகிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களெல்லாம் அங்கே வேலை செய்தவர்கள்தான். ஆனால் இப்போது வருகிறவர்களை எல்லாம் குடியேற்ற வேண்டுமென்றால், கொஞ்ச நாளைக்கு இருக்கிறார்கள். பணத்தை வாங்கிக்கொண்டு ஓடிவிடுகிறார்கள். கோயமுத்தூரில் அந்த மாதிரி குடியமர்த்தினார்கள், எங்களுடைய கடலாடியிலேயே கொஞ்சம் பேரைக் குடியமர்த்தினார்கள். அங்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 500 கொடுத்தோம், தென்னை மரம் வைப்பதற்காக. அந்த ரூ. 500 செலவழிந்த உடனே அவரவர்கள் போய்விட்டார்கள். அது எல்லாம் சும்மாத்தான் கிடக்கிறது. நண்பர் தங்கபாண்டியன் அவர்களுக்கு அந்த ஏரியாவைப் பற்றித் தெரியும். குடியமர்த்துகிற நேரத்தில் அவர்கள் அங்கேயே இருக்கும்படியான நிலைமையிலே திறமையாகக் காரியங்கள் செய்து, அவர்களுக்குப் பணத்தை மாத்திரம் கையில் கொடுத்து ஏமாந்துவிடக் கூடாது. அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டியதுதான், பிழைப்பு கொடுக்க வேண்டியதுதான். அதனாலே அதிலே கண்காணிப்பாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றப்படி வெட்டபினரி சம்பந்தப்பட்ட மட்டில், மந்திரி அவர்கள் செய்ய வேண்டியதைக் கணக்கிட்டு இன்று பல சிக்கன முறையைக் கையாண்டிருக்கிறார்கள். " கேட்டில் பார்ம் "கள் மிகவும் நஷ்டமான நிலையில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று கேள்விப்படுகிறேன். காரைக்குடிக்குப் பக்கத்தில் பள்ளத்தூரில் ஒரு " கேட்டில் பார்ம் " இருக்கிறது. அதிலே ஆடு மாடுகள் ரொம்பப் பிறபோக்காகப் போய்விட்டன, ரொம்ப நஷ்டத்தில் இருக்கிறதாகக் கேள்விப்பட்டேன். இப்போது கொஞ்சம் பரவாயில்லை என்று சொல்லுகிறார்கள். மொத்தத்தில் ஒசூர், ஒரத்தநாடு போன்ற இரண்டொரு இடங்களைத் தவிர மற்ற இடங்களில் வளமாக இருப்பதாக நான் நினைக்கவில்லை. அதிலே நஷ்டமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, " டெய்ரி பார்ம் " ஒன்று தென் சென்னையில் ஏற்பாடு செய்வதாகக் கேள்விப்படுகிறேன். ஒவ்வொரு வருஷமும் பட்ஜட் வந்தால், இதுவரையிலும் மாதவரம் பால் பண்ணை நஷ்டத்தைப் பற்றி வந்து கொண்டே இருக்கும். எப்படியோ இப்போது அதிலே நஷ்டமில்லை என்ற ஒரு " ஸ்டேஜ் " வந்திருக்கிறது. அது மாதிரி இந்தப் பால் பண்ணையும் கமர்ஷியல் லைனில் லாபகரமாக இயங்க, செய்ய வேண்டும். அப்படி அந்தப் பண்ணை அமையும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

[திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்] [4th March 1970

"பிஷரீஸ்" சம்பந்தமாக ஒரு சமாசாரம். குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, அங்கே ஒரு பிஷரீஸ் டிபார்ட்மெண்டை வைத்துக்கொண்டு மேற்கு ராமநாதபுரத்தில் ஆபீசர்கள் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். இது எதற்காக? கிழக்கு ராமநாதபுரத்தில் குளம் குட்டைகள் நிறைய இருக்கிற இடத்தில் கான்சென்ட்ரேட் செய்தால், பரவாயில்லை. அதை விட்டுவிட்டு, மேற்கு ராமநாதபுரத்தில், குடிப்பதற்குத் தண்ணீரே இல்லாத இடத்தில் "பிஷரீஸ்" "பிரமோட்" பண்ணுகிறேன் என்று உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அதை எல்லாம் காலி செய்து, தண்ணீர் இருக்கிற இடங்களில் கொண்டுபோய்ப் போட்டால் நன்றாக இருக்கும்.

கல்விக்காக நாம் கிட்டத்தட்ட ரூ. 66 கோடி செலவழிக்கிறோம். நான்கில் ஒரு பங்கு கிட்டத்தட்ட இந்தக் கல்விக்காகச் செலவழிக்கிறோம். வரவர இப்போது "எக்சாமிநேஷன்" எழுதாதபடி முதலமைச்சரிடம் "பாஸ்" வாங்க வேண்டும் என்ற அளவிற்குத்தான் எல்லோரும் முனைந்துகொண்டிருக்கிறார்கள். (சிரிப்பு). என்ன செய்கிறார்கள் என்றால், அதிலே ஒரு போட்டி வந்து விட்டது. மாணவர்களை யார் போய்ப் பிடித்துக்கொள்வது என்பதில் போட்டி. அவர்கள் விட்டுவிட்டார்கள், அந்த நேரத்தில் நாம் பிடித்துக்கொள்ள வேண்டும், இவர்களை விட்டுவிட்டார்கள், நாம் போய்ப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தோனேசியாவில் ஸ்டூடெண்டு அஜிடேஷனில் சுகர்னோவைப் போகச் சொன்னார்கள் என்றால், இங்கே எங்களையும் போகச் சொன்னது அவர்கள்தான் என்று அவர்களுக்குப் பலமான கிராக்கி இருக்கிறது. அந்த மாதிரி ஒரு மாயத்தில் வீழ்ந்து விடாது, எது நியாயம் என்று பார்த்து, "டிசிப்ளின்" "மெயின்டெயின்" பண்ணி, அவர்களுக்காகச் செலவழிக்கிற ரூபாய் வீணாகாது நல்ல முறையில் பையன்களைப் படிக்க வைத்து, அவர்களுடைய எதிர்காலம் நல்ல முறையில் இருக்கும்படியான சூழ்நிலையில் நல்ல ஒரு ஸ்திரமான முடிவெடுத்து, சலுகைகள் கொடுக்காவிட்டால், எங்கே எதிரியாகப் போய்விடுவார்களோ என்ற பயமில்லாமல், காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "பாலிடெக்னிக்" சம்பந்தமாக, எனக்கு வேண்டிய நண்பர் ஒருவரை அந்தக் காலத்திலே, "என்ன ஐயா, இவ்வளவு சொத்து வைத்திருக்கிறீர்கள், ஒரு பாலிடெக்னிக் வைக்கக் கூடாதா?" என்று இங்கே பழனியப்பன் டைரக்டராக இருந்தபோது அழைத்துக்கொண்டுபோய் ஏற்பாடு பண்ணினேன். அவர் இப்போது, "என்ன ஐயா, பாலிடெக்னிக் ஒன்றும் நடக்கமாட்டேனென்கிறதே", என்று சொல்லுகிறார். அதற்குப் பதிலாக "அக்ரிகல்சுரல் பாலிடெக்னிக்"—அந்த மாதிரி பாலிடெக்னிக் சரியாக நடக்காத இடத்திலே, ஆட்கள் வராத இடத்திலே எல்லாம், "அக்ரிகல்சுரல் பாலிடெக்னிக்" வைக்கலாம். —கோத்தாரி கமிஷனிலே கூட அதைச் சிபார்சு செய்திருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். அதை டைரக்டர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும், ஆராய்ச்சி செய்யும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன். மற்றப்படி இப்போது வரி போட்டிருக்கிறார்கள். பெட்ரோலுக்கு வரி போட்டிருக்கிறார்கள். இங்கே 2 பைசா போட்டிருக்கிறார்கள். அங்கே 10 பைசா போட்டார்கள். நான் இப்போதுதான் ஒரு காரை விற்றுவிட்டு வேறு கார் வாங்கலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். நமது கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் கூடச் சொன்னார்கள், "என்ன காரை விற்றுவிட்டாய், எனக்கு ரொம்பச் சங்கடமாக இருக்கிறது" என்று. கட்டுப்படியாகவில்லை என்று சொன்னேன். இன்னொரு கார் வாங்க வேண்டுமென்று நமது மாண்புமிகு திரு ஆதித்தனார் அவர்களிடத்தில் ஒரு நாள் நான் கேட்டேன். அவரும் கார் கொடுக்கிறேன் என்று சொன்னார். அவர் கொடுத்த பாக்கியமோ, என்னவோ தெரியவில்லை, பம்பாயிலே விலை ஏறிவிட்டது, இங்கே 2 பைசா வரி, அங்கே 10 பைசா வரி பெட்ரோலுக்கு, சேல்ஸ் டாக்ஸ் வேறு. ஆகையினாலே கார் கட்டுபடியாகுமா என்ற யோசனை வந்துவிட்டது. "டெலிவரி" இன்னும் எடுக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த "எம்.டி.எ. ரூல்ஸ்" இருக்கிறதே நம்முடைய ஊழியர்களுக்கு, அது அவர்களுக்குப் பழைய காலத்தில் ஏற்பட்டவைதான். இப்போது சாதாரணமாக ஒரு ஐ.எ.எஸ். ஆபீசர் கூட கார் வைத்துக்கொள்வதற்குப் பயப்படுகிறார்கள்.



4th March 1970] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய "டிராவலிங் அலவன்ஸ்" சின்ன மாரிஸ், பியட் கார் வைத்துக்கொண்டால் கூட, பெட்ரோல் செலவுக்குக் கூட, கட்டுப்படியாகவில்லை. பெட்ரோல் செலவுக்கே அவர்களுக்குச் சரியாகப் போய்விடுகிறது. "டிராவலிங் அலவன்ஸ்" பழைய ரூ. 10½ தான் கொடுக்கிறோம். நமக்கு பத்தாது என்று நாம் ரூ. 10-லிருந்து ரூ. 15 ஆக்கிக்கொண்டோம். ரூ. 15-லிருந்து ரூ. 20 ஆக்கிக்கொண்டோம். இன்னும் பார்லிமெண்டில் அவர்கள் ரூ. 50 வரையில் ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரி அவர்களுக்கு இந்தக் கஷ்டம் இல்லாதபடி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அவர்களுள் படுகிற கஷ்டங்களைப் பார்க்கிறேன். சொந்தக் கார் வைத்துக்கொள்வதில்லை. "ஜீப்" தான் வைத்துக்கொள்ளுவார்கள். இது இல்லாதவர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறேன்.

4 40 p.m.

அடுத்தபடியாக, விற்பனை வரி, சம்பந்தமாக 5 லட்சத்துக்கு மேல் வியாபாரம் பண்ணுகிறவர்களுக்கு வரி போட்டு அதிலிருந்து ஒரு கோடி சொச்சம் ரூபாய் வரும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். எனக்கு அது அரசியல் சட்டப்படி செல்லுமா, செல்லாதா என்ற கேள்வி எழவில்லை. இது அவசியமா என்பது பற்றித்தான் கனம் நிதி அமைச்சர் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நாங்கள் வியாபாரிகள் இருக்கிறோமே, ரொம்ப கெட்டிக்காரர்கள். எப்படியும் நாங்கள் வருமானத்தைக் குறைத்துக்கொள்ள மாட்டோம். எவன் தலையிலாவது வைத்துவிடுவோம். "கன்ஸ்யூமர்" தலையில்தான் போய்ச் சேரும். இது அவசியம் தானா, இது இல்லாமல் நிதி நிலைமையைச் சரிக்கட்ட முடியாதா என்று யோசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடி, "லேண்டு சீலிங்". நான் ஒரு வீட்டுக்குச் சாப்பிடப் போயிருந்தேன். அங்கே "முரசொலி" பத்திரிகை இருந்தது. அதில் முதலமைச்சர் பிரசங்கம் ஒன்று இருந்தது. எதற்காக உச்ச வரம்பு அளவு குறைக்கப்படுகிறது, ஏன் முன்னதாக இது அறிவிக்கப்படவில்லை என்பதற்கு எல்லாம் அதில் விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தது. 30 ஆயிரம் பட்டாதார்கள் இருக்கிறார்கள். 30 எக்கரை 15 ஸ்டாண்டார்டு எக்கராக ஆக்கினால், ஒரு லட்சத்து எண்பதாயிரம் அல்லது 2 லட்சம் எக்கர் கிடைக்கும். ஒவ்வொருவருக்கும் ஒரு எக்கர் வீதம் இரண்டு லட்சம் பேருக்குக் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருந்தது. நான் ஒப்புக்கொள்ளுகிறேன். நமது கொள்கை சோஷலிசம் என்றால், இதை ஒப்புக்கொள்ள வேண்டும். சோஷலிசம் ஒன்றும் இல்லை என்று கனம் உறுப்பினர் திரு சுவாமிநாதன் வேண்டுமென்றால் சொல்லலாம். நான் அவ்வாறு கூற முடியாது. ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நான் இங்கிருந்து நேற்றுப் போனவுடன் கிளப்புக்குப் போனேன். அங்கு இந்தியாவின் சுப்ரீம் கோர்ட் மாஜி பிரதம நீதிபதி கே. சுப்பராவ் அவர்களைச் சந்தித்தேன். நண்பர் திரு எ. ஆர். தாமோதரன் கோலக்நாத் கேஸ் சம்பந்தமாக ஆர்டிகிள் 31-எ திருத்தம் பற்றிப் பேசியதைக் குறிப்பிட்டார்கள். நான் சொன்னேன், "உங்கள் பேர் தான் சட்டசபையில் அடிபடுகிறது. உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டேன். அவர் சொன்னார் "கோலக்நாத் கேஸ்! That would not help you. The Government have got powers அதற்குமேல் செய்யாமல் இருந்தால் நல்ல வேலை" என்று சொன்னார்.

THIRU G. VASANTHA PAI: Sir, how could Mr. K. Subba Rao, a retired Chief Justice of India, sit in judgment over the judgment of the Supreme Court? He has no powers to do that.

MR. CHAIRMAN: The Member is expressing his view as a private citizen.

[4th March 1970

**திரு. எஸ் ஜெயராம ரெட்டியார் :** அவர் சொன்னார், "நீங்கள் முதலமைச்சரிடம் கேளுங்கள். எஸ்டேட் என்று டிக்ளேர் பண்ணிவிட்டு", 15 ஏக்கருக்குக் கீழே இருக்கிற நிலங்களை எடுத்துக் கொண்டால்தான் "மார்க்கட் வால்யூ" கொடுக்க வேண்டும்.

"For purposes of agrarian reforms and distributing it among the landless labourers".

என்றால் "மார்க்கட் வால்யூ" கொடுக்காமல் செய்யலாம். இதையாவது முதலமைச்சரிடம் சொல்லி விபரமாகச் செய்யச் சொல்லுங்கள், அது செய்தால் போதும்" என்று சொன்னார். இதை எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், சாதாரணமாக 4 ஏக்கர், 5 ஏக்கர் இருக்கிறவர்களுக்கு சப் ரிஜிஸ்டரார் ஆபீசில் ஒவ்வொரு நிலமும் என்ன விலைக்கு ரிஜிஸ்ட்ரேஷன் பண்ணப்பட்டிருக்கிறதோ, அதை, அவர்களுக்குக் கொடுத்துவிட்டு, மீதியை சப்சிடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கடைசியில் இவன்தான் அகப்பட்டான், ஏதோ பிள்ளையார் கோவில் ஆண்டி என்றுசொல்லுவது போல, விவசாயிகளை மட்டும் இவ்வாறு பண்ணுகிறார்கள், மற்றவர்களுக்கும் இவ்வாறு பண்ண வேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கொள்கையை ஒப்புக்கொள்ளவில்லை. இந்திய கவர்ண்மெண்ட் பட்ஜெட்படி அதனால் பாதிக்கப்படுகிற திமிங்கிலங்கள் இருக்கிறார்களே அவர்கள் "நாங்கள் அழிந்து விடுவோம்" என்று சொல்லுகிறார்கள். 25 லட்சம் ரூபாய் மதிப்பு சொத்து உள்ளவர்கள் "வெல்த் டாக்ஸ்" கட்டினால் 25 ஆயிரம் ரூபாய் நஷ்டம் வருகிறது என்று சொல்லுகிறார்கள். நண்பர் திரு கனகசபை கீழ்சபையில் இருப்பவர் ஆடிட்டரிடம் போய்விட்டு என்னிடம் காட்டினார். சோஷலிசம் என்றால் வரிகள் அதிகமாகத்தான் இருக்கும்.

"If you earn, income-tax; if you save, wealth tax; if you spend, expenditure tax; if you die, estate duty".

என்று ஒருவர் சொல்லிக் காட்டுகிறார். எத்தனையோ "டாக்ஸ்" போட்டு பணம் குவிகிறது. அங்கே நடப்பது நடக்கட்டும். அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும். இங்கே நிலச் சீர்திருத்தம் செய்கிறகாலத்தில் 4 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு "காம்பன்சேஷன்" கொடுப்பதில் குறைச்சலாகக் கொடுக்காமல் சரியாகக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியில் எங்கள் ஜில்லா சம்பந்தமாக ஒரு வார்த்தை. நண்பர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு "புரபோஸ்" பண்ணினார். நான் "செகண்டு" பண்ணுகிறேன். அவர் எங்கள் ஜில்லாவில் உள்ள கஷ்டங்களைப் பற்றிச் சொன்னார்கள். கிழக்கு ராமநாதபுரம் குடியானவர்கள் கஷ்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். சென்ற 20 ஆண்டுகளுக்கு முன்னால் ஜமீந்தாரி ஒழிப்பு வந்தது. நான் அந்த செலக்ட் கமிட்டியில் இருந்தேன். அது சம்பந்தமான சட்டத்தை இயற்றினோம். அப்போது ஜமீந்தார்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாக்கி வசூலுக்காக சில சில சதவீதத்தை எடுத்துக்கொண்டு மிச்சத்தை ஜமீந்தார்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கணக்கு செய்தார்கள். அது மாதிரித் தொகை கொடுக்கவில்லை. ஆனால் அந்த பாக்கிகள் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன. அதே சமயத்தில் கொடுத்த கடன்கள் மற்றவை எல்லாம் சேர்த்து, பழைய முதலமைச்சர் திரு காமராஜர் இருக்கும்போது, 140 லட்சம் ரூபாய் வரை பாக்கியிருக்கிறது என்று கணக்கிடப்பட்டது. அதற்குப் பின்னால், இப்போதும் கொடுத்திருக்கிறார்கள். நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள் என் ஜில்லாவுக்கு வந்தபோது ஞாபகப்படுத்தியிருக்கிறேன். அந்தக் கடனை வசூல் பண்ண முடியும் என்று நினைக்கவில்லை. நான் சொல்லுவது இந்தக் கணக்குகளை வைத்துக்கொள்வதற்கு 20 தாசில்தார்கள் இருக்கிறார்கள். ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது கடன் நிவாரண மசோதா "டெட் ரிலீப் ஆக்ட்" கொண்டுவந்தார்கள். அதாவது 100-க்கு பத்து கொடுத்தால் கணக்குத் தீர்ந்து போய்விட்டது என்று சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த மாதிரி ஒரு "இன்செண்டிவ்" கொடுத்து



4th March 1970] [திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்]

அந்தக் கடனைத் தீர்த்துக் கட்ட எங்கள் ஜில்லாவில் நடவடிக்கை துவக்க வேண்டும். இது அவசியமான காரியம் என்று கூறிக்கொண்டு இந்த நிதி மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

**திருமதி அல்மேலு அப்பாதுரை :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த 1970-71-வது ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் வழி வந்த காரணத்தால், அண்ணா அவர்களைப் போலவே இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையை இங்கே வைத்திருக்கிறார்கள். 4-50 p.m. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கிட்டத்தட்ட 288 கோடி ரூபாய் வரவு என்றும், 296 கோடி ரூபாய் செலவு என்றும் போட்டிருக்கிறது. இதிலே பற்றுக்குறை, துண்டு விழுவது 8 கோடி ரூபாய். வருவாய்க்கு மேல் ஒரு குடும்பத்திலோ, ஒரு நாட்டிலோ, செலவழித்தால், அந்த நாடு எப்படிச் சீர்படும் என்பதை நம் மாற்றுக் கட்சித் தோழர்கள் உணர வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்ல. கல்விக்காக இன்றைய அரசு 67 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது. மின்சாரத்திற்காக 21 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறார்கள். இந்த 21 கோடி ரூபாய் மூலம் தமிழ்நாட்டிலுள்ள கிராமங்கள் எல்லாவற்றிலும் மின்சார விளக்குப் போடுவதற்காக ஒரு அருமையான திட்டத்தை நிறைவேற்றுவதற்கான வழி வகை கண்டிருப்பதற்காக நான் இந்த அரசை மனதாரப் பாராட்டுகிறேன். அது மட்டுமல்ல. அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு கொடுத்து, அதற்காக 6 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். இங்கே துண்டுவிழுகின்ற பணத்தையும், மேலும் தமிழ்நாட்டில் ஏராளமான வருவாய் மத்திய அரசாங்கத்திற்குப் போகிற காரணத்தால் அதிலும் நிறையப் பங்கு தமிழ்நாட்டுக்குக் கொடுத்து, இந்த அரசு தமிழ்நாட்டில் இனனும் நிறைய சேவைகளைச் செய்ய மத்திய அரசு உதவி செய்ய வேண்டும். கோடிக் கணக்கான ரூபாய் கொடுத்து உதவ வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தையும் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். சென்னையையும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களையும், சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் இந்த வருஷம் ஒதுக்கியிருக்கிறார்கள். அடிக்கடி நம்முடைய அம்மையார் அவர்கள் இங்கே ஒன்றைச் சொல்லுவார்கள். சென்னை நகரத்தில் சென்னை அழகாக இருக்கிறது, வட சென்னை அநேகமாக மீனவர்கள் வசிக்கிற இடமாக இருக்கிற காரணத்தால், அதைச் சீர்படுத்துவதேஇல்லை என்று சொல்லுவார்கள். நான் இந்த நேரத்தில் அம்மையார் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், வட சென்னையில் எங்கள் சேரியின் சார்பில் கிட்டத்தட்ட 4,000 அடி கால்வாய் எடுத்து, சீர்படுத்தி இருக்கிறோம். இன்னும் மற்றுமுள்ள இடங்களிலும் சீர்படுத்த இருக்கிறோம். அது மட்டுமல்லாமல், இந்தப் புதிய திட்டத்தின்படி வட சென்னையிலும் சீரமைப்பு நடைபெறும் என்று நான் நம்புகிறேன். அதை இந்த 1970-71 வரவு செலவு ஆண்டுக்குள்ளாகவே செய்வார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டில், மின்சார வினியோகம், ஆசிரியர் மற்றுமுள்ள ஊழியர்களுக்குத் தேவையான ஊதியம் அளிப்பது, கல்வி வசதியளிப்பது இவைகள் எல்லாம் நல்ல முறையில் நடந்து முன்னேற்றம் அடைவதற்காக இந்த அருமையான ஒரு திட்டத்தைத் தயார் செய்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை மதிப்பிற்குரிய மாற்றுக் கட்சித் தோழர்கள், தலைவர்கள் எல்லாம் நல்ல முறையில் ஆதரித்து அவர்களும் எங்களோடு ஒத்துழைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். பல இடைத் தேர்தல்களின்போது, நான் பல கிராமங்களுக்குப் போயிருக்கிறேன். அப்போதெல்லாம் 20, 30 ஆண்டுகளாகக் கவனிக்காது இருந்த கிராமப்புறங்களில் எல்லாம் அதிலும் குறிப்பாக ஏழை மக்கள் வசிக்கிற இடங்களில் எல்லாம் இப்போது மின்சார "லைட்" போட்டு வருவதைப் பற்றிப் பொதுமக்களே என்னிடம் சொல்லிப் பாராட்டியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கெல்லாம் நல்ல மின்சார வசதி அளித்து, அவர்கள் எல்லாம் இன்றைய தினம் பம்பு

செட்டு போட்டுக்கொண்டு, வெள்ளாமையை உயர்த்த நல்ல முறையில் வளர்க்கப் பாடுபட்டுவரும் இந்த அரசை இந்த மன்றத்தில் பாராட்டாமல் இருக்க முடியாது. எனவே நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

உணவுத் துறையை எடுத்துக்கொண்டால், கடந்த 3 ஆண்டுகளாக, உணவு உற்பத்தியை எப்படிப் பெருக்க வேண்டும் என்று நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சரவை நல்லபடி யோசித்து உணவு உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறது. இந்த ஆண்டும் விளைச்சலைப் பெருக்க அரிய திட்டங்களை இந்த நிதி நிலை அறிக்கையிலே கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்காகவும் நாம் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கிட்டத்தட்ட 3 ஆண்டுகளுக்கு முன்னால் எங்களுடைய ஆட்சி இங்கே வருவதற்கு முன்னால், சென்னையில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் உள்ள இடங்களிலெல்லாம் அரிசி கிடைக்காது கூப்பனை வைத்துக்கொண்டு க்யூ வரிசையில் நின்றும் அரிசி கிடைக்காத அவல நிலையைப் பார்த்திருக்கிறோம். நான் இருக்கிற இடத்திலேயே ரேஷன் கடையில் க்யூ வரிசையில் ½ பர்லாங்கு, ஒரு பர்லாங்கு நின்று அரிசி கிடைக்காமல் திரும்பிப் போயிருப்பதைப் பார்த்திருக்கிறேன். இந்த நிலையில் அவர்கள் ஆட்சியை விட்டுச் சென்ற பிறகு, எங்கள் ஆட்சி வந்து இன்றையதினம் எங்கேயும் அரிசிப் பஞ்சம் இல்லை உணவுப் பஞ்சம் இல்லை, எல்லாம் அமைதியாக நடந்து வருகிறது என்பதைப் பார்க்கிறபோது, இதையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. நல்ல உள்ளம் படைத்த தோழர்களும் மற்றவர்களும் இதைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதுமட்டுமல்ல, உணவு உற்பத்தியில் நம்முடைய அரசு எடுத்துக் கொண்டிருக்கிற எல்லா முயற்சிகளையும் தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள் எல்லாம் மனமாறப் பாராட்டுகிறார்கள். திட்டக்குழு சம்பந்தமாக நான் பல இடங்களைச் சுற்றிப் பார்க்கிறபோது, மின்சாரத்தை உபயோகப்படுத்தி, தண்ணீரைத் தேக்கி, அதன் மூலமாக உணவைப் பெருக்கி, எங்கெல்லாம் தரிசு நிலம் இருக்கிறதோ அங்கெல்லாம் பயிர் செய்ய வசதி செய்துகொடுத்து அதன் மூலம் நாட்டு மக்களின் பஞ்சத்தையும், பட்டினியையும் போக்க பலதிட்டங்களை இந்த அரசு தீட்டியிருப்பதைக் காண முடிந்தது. அந்த அருமையான திட்டங்களுக்கு நீங்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, சென்னையில் அழகான "பார்க்" ஒன்றை அமைக்க இருக்கிறார்கள். வெளி ஊர்களில் போய்ப் பார்க்கிறபோது, கடற்கரை எல்லாம் அழகாக இருந்தாலும், இங்கே இருக்கிற கடற்கரையைப் போல் இல்லை. அந்த அளவுக்கு மிக நல்ல முறையில் இங்கே கடற்கரை இருக்கிறது. வெளி நாட்டிலிருந்து வருகிறவர்கள் வந்து பார்த்து ஆச்சரியப்படுகிறார்கள். மதிப்பிற்குரிய எங்களுடைய முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்களுடைய சமாதிக்குப் பக்கத்தில் இந்த அழகான பார்க் அமைவது வருங்காலத்தில் தமிழ் நாட்டில் உள்ளவர்களும் வெளி நாட்டிலிருந்து வருகிறவர்களும் வந்து பார்த்து பாராட்டக் கூடியதாக இருக்கும். இப்படி இன்னும் பல திட்டங்கள் தீட்டி வைத்திருக்கிறார்கள். அதற்கெல்லாம் நீங்கள் ஆதரவு தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மன்றத்தில் என் கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

* THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, I must, at the outset, say that this is a very good Budget. But I do not appreciate this fact; after having stated in the introductory paragraph that the Budget has become an opportunity for the Government and the people to rededicate themselves to the promotion of the welfare of the people, why towards the end of his Budget speech, in the last paragraph, has the Hon. the Minister for Finance felt shy, and is fighting shy of providing enough money for this class of people who are really suffering under the inflation of today ?



Mr. Chairman, let me first deal with that aspect of the matter, namely, that which affects the persons whose welfare it is the duty of the Government to promote. Let me take the Government servants first. Sir, there are about 3 lakhs of Government servants in the State. Three lakhs of persons are employed in Government service today out of whom, barring about 30 thousand, the rest, namely, 2 lakhs and 70 thousand are persons who draw a salary of Rs. 250 and less. Now there is another category of people who draw a basic salary between Rs. 250 and Rs. 500. Their plight is really miserable. I would like to say that these are the key men who implement the Government's policies and plans. They are the persons on whom the brunt of the Executive Government falls and the Government work goes on peacefully because of them. While the Ministers are busy with their policy making, it is these people who earn a salary of Rs. 250 to Rs. 500 on whom falls the brunt of smoothly executing those policies. Sir, under this category come the Deputy Collectors, Tahsildars, District Agricultural Officers, Agricultural Graduate Demonstrators, Executive Engineers, Assistant Engineers and so on. These are really the persons who bear the brunt of the administration. It is they who meet the people and execute the schemes and plans of the Government. They meet people of a high order. They are not the sort of people as of old that they met and dealt with, the farmers and the agriculturists. Now they have to meet and deal with sharp-- witted merchants and others. If the plight of such class is not improved, it is going to affect not only the welfare schemes but it will put them to a sort of temptation— it is beyond the reasonable power of many people to resist— at the hands of interested persons who will not hesitate to tempt them. So Sir it is that I wish to deal with the plight of these people first. Now, if you will look into the figures of the cost of living index for the year 1936, for purpposes of calculation, the figure was taken as hundred points. In 1936 the cost of living index was hundred. Today on that basis, the cost of living is 774 points. Now in the case of those persons who drew a salary of Rs. 12 or Rs. 25 in 1936—those who were drawing less than Rs. 250—their minimum salary has become Rs. 108 or Rs. 112 now. 5-00 p.m.
In other words, they are now drawing eight and a half times the salary they drew in the year 1936.

Now, Sir, the Tahsildar, the Deputy Collector, the Deputy Superintendent of Police, the Inspector of Police, the District Agricultural Officer, the Executive Engineer and the Assistant Engineer drew a salary of about Rs. 250 in those days. In spite of high inflationary trend, such a person at the present day is drawing only Rs. 500 or Rs. 600. Now, that is hardly two and a half times the salary that he was drawing in those days. Now because of a 7½ times price increase these people have to suffer because their salaries have increased only 2½ times. Now, Sir, as I told you, these are the persons who bear the..................

THIRU S. RAGHAVANANDAM: I should like to know where it has been stressed that the people at the lower level should be paid the minimum wage and people above that level, should be paid the minimum wage and for people above that level, just so much to keep them above want. I mean a minimum wage and fair wage and it has been clearly stated that only the people at the lower strata should be given more wage so that they may at least come up to the fair wage level. The hon. Member is advocating for people who may be drawing Rs. 250 and above and not for those who may be at starvation level.

THIRU G. VASANTHA PAI: I think the Member is rather premature in interrupting me. I am only bringing to the notice of the House certain facts because of the representation made by the Government that the Rs. 10 increase for their personnel costs them Rs. 5 crores. I am going to mention about others also. Let not the hon. Member Thiru Raghavanandam think that I am less concerned about the underdog than he is. He is mistaken. As a matter of fact, the hon. Member Thiru Raghavanandam in a very elaborate speech the other day said that the Government servants talked about the concession in the Budget as an eyewash. I would not have expected a trade union leader like Thiru Raghavanandam to say like that. I think he should have said that the Government servants said it out of exasperation. After all, everybody wants something more. I would have liked a trade union leader like him to say that.

THIRU S. RAGHAVANANDAM: On a point of clarification, Sir. I am one who has always been supporting just causes. I am still of the definite opinion that to have called it an eyewash is against all canons of justice and fairplay.

THIRU G. VASANTHA PAI: The gentleman was saying it outside the House. Canons of fairplay do not apply to a person who says things in exasperation. He has not said it inside the House. Wherever he might have said it, a non-Member said it. After all, a person could give himself up to emotions.

MR. CHAIRMAN: The hon. Member may proceed with his speech.

THIRU G. VASANTHA PAI: To resume the speech, I am not advocating the cause of only persons who got between Rs. 250 and 500. I am advocating their cause first, because first things must come first.

Now, these people are 30,000 in a total of three lakhs of Government servants. Now, the Government can, by a show of their sympathy, extend their benign hand to them and say, "Look here, we are going to ultimately increase your salaries to Rs. 1,000. You have been accustomed to a certain standard of living and not the standard of living of a man who is earning Rs. 12. We are going to consider your case. We are going to give you Rs. 1,000 ultimately. But, for the present, we give you Rs. 100." This will cost the Exchequer only Rs. 3 crores whereas the Government did not wish to give Rs. 30 because it will cost the Exchequer Rs. 18 crores. This increase will cost the Exchequer only Rs. 3 crores. I implore the Finance Minister to consider this category, not in the interests of themselves alone—I am not referring to the Fair Wages Committee Report—but in the interests of purity of public administration because these people are dealing with so many import licences and so many things which are at the Governmental level today of a high order which involves so many lakhs and crores of money and they must be kept above want in the interests of efficient administration. It is in the interests of efficient administration to keep these people above want and suffering that I am making this appeal to the Hon. the Finance Minister who, I am sure, will accept it with all the good grace that it deserves.



The next point that I wish to make is about the sanction of Rs. 10 as far as Government servants drawing Rs. 500 and below are concerned. This Budget envisages that they should be given Rs. 10. Now, Sir, I want to submit to the Government this fact. House rent allowance in the City of Madras is at the rate of Rs. 10 lump sum, Rs. 15 lump sum and Rs. 20 lump sum for a Government servant, whereas the prices are spiralling up. The cry of the Government servant is for a decent House Rent Allowance like Central Government employees. I am aware of the constituency which I represent and how people in that constituency—Executive Engineers, all bachelors—live in mansions like the Murugesa Naicker Mansion, Vinayakar Mansion, S.A.A. Mansion, and several mansions in Pitharappan Street and 190, Pycrofts Road and other places in Triplicane. I know how they live their whole life dedicated to the cause of the Government, but staying in premises as if they were travelling in a sleeper coach of a railway third class compartment. Government servants and employees of this type have to share one room with one string between them to dry their clothes. These are persons who are Executive Engineers and Assistant Engineers, Professors and teachers, who are bachelors. They all want calmness to do their work efficiently. When they come from the bustle of office routine, they are landed into tenements or rooms like this where they have to share the space with six people and pay high rent in these days of spiralling prices. I ask the Government whether this meagre house rent allowance of Rs. 10 to one category, Rs. 15 to another category and Rs. 20 to yet another category is enough even to get accommodation of two feet into two feet to-day in the City. The next request of the Government servants is for City Compensatory Allowance. We know the spiralling prices and the inflationary tendencies that are existing to-day in the City. In Cities like Madurai, Coimbatore, Tiruchirappalli, and Madras the tendency is so much that these people are only asking for a City Compensatory Allowance. The last thing they

are asking for is that their basic pay and dearness allowance should be joined together. The Government have rightly and fairly conceded this request in the case of pensioners. They have said that in the case of those who retire from 26th February 1970, pension will be calculated on the basis of basic pay and dearness allowance joined together. Now Sir, why should not these be joined together for the purpose of house rent allowance and compensatory allowance? Why should the Government servants be deprived of the benefit? The Government may say that there is no money. I can say that the question of money should be prime with the Government and where it concerns the welfare of a section of the Government servants who are suffering and are leading a life of suffering, the Government must find the money for the purpose. May be, a raffle or two or a couple of rafflees every week might get all the money that the Government want. Raffles are becoming an ordinary source of income to-day. So, let the Government start raffles for improving the condition of living of these people. Everybody will pay and I am sure everybody will subscribe for it and the money could be utilised for this. This has become an ordinary source of revenue for the Government. I understand that during the last year the yield was Rs. 13 crores. Whatever it might be, it was a sizable income.

The HON. THIRU K.A. MATHIALAGAN: Though it was Rs. 13 crores, the Government derived only Rs. 6 crores.

THIRU G. VASANTHA PAI: Anyway it is Rs. 6 crores. I wish to suggest that if the Government have found it to be constitutional, there is nothing that stands in the way of their putting through two or three raffles a week. I am sure money will come from the higher to the lower level and the Government will not be wanting in money. So, this argument of lack of finances does not appeal to me. I want to state a few facts which should make the Government realise the burden they are carrying. I am not making any derogatory statement. The word 'Budget' has been shown in the introductory paragraph of the 'Introduction to the Budget' as something to indicate a leather bag in which the Finance Minister carried a financial statement and brought it before the House. I would like to bring to the notice of the Government that a Minister is supposed to have both the patience and the ability to bear a large burden for the welfare of the people. The word 'Minister', if I may bring it to the notice of the House, without meaning anything derogatory to the whole lot of Hon. Ministers, comes from the French word '*ministre*' which means "Ass". I quote from page 438 of William Bennett Munro's "The Governments of Europe", 3rd Edition. Many years ago Raymond Poincare, at that time Minister of Finances, was strolling along the streets of a Province of France when he heard a voice behind him. "There's no making this minister go." Poincare was surprised how this person recognised him in darkness. Less surprised at being insulted than at being recognised, he turned around and saw a



peasant trying to make a donkey move faster. "There's no making this minister go", growled the peasant. The minister asked him what he meant. The peasant said, "He is lazy and there is no making the donkey move faster." Then Poincare learned that in certain corners of France an ass was called a *minister*, because he is the chief servant of the peasantry, entrusted with all manner of work that needs to be done. The minister then did not feel insulted. He said, "Undoubtedly ministers of state are the servants of the people. These donkeys are the servants of the peasantry. They carry all the burden. We carry the burdens of the people." Then he went to his Budget session. This is how it is reported in William Munro's "The Governments of Europe". I only submit this to show that the Ministers must have the patience of an as well as its proverbial quality of carrying any burden without protest that is thrust on them. In these circumstances, my request to the Government is that they should never come out with a statement that the finances are not enough. The State must bear the burden of all schemes for the welfare of its people. I am sure the Government will increase their allowance from Rs. 10 to at least Rs. 30. I am sure the Government will also consider giving an interim relief of Rs. 100 to the 30,000 Mid-Tier employees who have been badly affected during recent times.

I am happy, Sir, that the house rent allowance will also be extended to teachers. If the house rent allowance cannot be increased for all Government servants, may I make an alternative suggestion to the Government? Now, everyone contributes to the Provident Fund and the Government put this money in Government securities at a rate of interest ranging between four and six per cent. Instead of that, I would suggest that the Government can acquire lands in the name of those Provident Fund Contributors to the extent of their contribution. Then the contribution to the fund will not become a loss on account of inflation, but will increase in value with the increase in the value of the land. This will also solve the problem of housing for the employees. They will have a roof over their heads when they retire after 30 years of service. It is a matter which should be seriously considered by the Government, because the Government are now investing these Provident Fund Contributions in Government Securities bearing 4 to 6 per cent interest. The value of hundred rupees invested to-day in these securities will be only 20 paise after 20 years. But if the amount is invested on land, the inflationary effect will not be reflected in it and those who have contributed to the Provident Fund will not feel grieved. Therefore, if the Government find it difficult to increase the house rent allowance to its employees, I humbly request them to consider this alternative scheme which I have mentioned, namely, the diversion of the Provident Fund amount into tangible interest earning securities. If it is put into tangible interest earning

[THIRU G. Vasantha Pai] [4th March 1970

securities, the Government servants will have a roof over their heads when they retire after a lapse of time, and during their tenure of service.

The next point I wish to refer to is about what the Government have to do for the Pensioners. Pensioners are a sorry lot. They are persons who have retired long ago after dedicated service to the Government and in the cause of administration. Now, Sir, they are drawing a meagre pension of Rs. 20, Rs. 30, Rs. 50 or half of their salary. Almost all are struggling. Taxes are increasing, prices are going up, but the pensioners have to content themselves with their meagre pension. My submission is that what you propose to give those people who retire after 26th February 1970 should be extended to those pensioners who retired earlier and who are now living. If you cannot do it, you must have some pension Relief Fund or some such thing and they must be given the equivalent of what they were drawing in the particular year in which they retired based on the value of the rupee as it exists to-day. The second suggestion will be more acceptable, I think, to the Government. These pensioners, when they go into retirement after serving the Government so much, must have somebody to take care of their health. After all, I am looking at it from the humanitarian angle. Let these retired pensioners and their spouses be given free medical aid at all Government and Corporation dispensaries. This the Government can do without touching their purse. If that is done, they will have the satisfaction that the Government which they served so long is there to look after their health even after retirement. I make this submission to the Government because the Government say that it is a benign Government functioning in the interest of the people. The class of people on whose behalf I make this plea have served the Government with their heart and soul and therefore, it is but right that the Government should extend free medical aid to them at Government and Corporation dispensaries including cost of medicines.

That will increase the gratitude of these people to the Government and, at the same time, make them feel that the Government a very humanitarian approach to the problems besetting them.

The next point I wish to refer to is about the slums. The Budget makes a promise to remove all the slums in the city of Madras. It also refers to it in very apt terms. Another problem which has been engaging the attention of the Government is the problem of slum in Madras City and the Government have taken a policy decision to embark upon a phased programme to eliminate the slums in Madras City, and also to prevent the growth of new slums. I am one of those who attended the Republic Day Celebration this year. I have a copy of the brochure issued on that day. Sir, when the Tableau on 'Cooum River Improvement Scheme passed' before the public, I heard the



4th March 1970] [THIRU G. Vasantha Pai]

gentlemant who was reporting the proceedings on the loudspeaker say 'On the margin of the river new houses for slum dwellers'. I request you to drop this idea. If you want to relieve Cooum of its stink, you should not have houses or anything else on either side of the river. I say in the interest of public hygiene, if this brochure represents the viewpoint of the Government, that must be got away with. There should not be any slum allowed to come up on either side of the river Cooum, whether it is stone built or asbestos sheet covered, because the river will be the place for persistent defecation. Under these circumstances, I request that this must be given serious thought by the Government.

Mr. Chairman, Sir, the next point I wish to refer to is about the language teachers. The University Grants Commission had recommended that 25 per cent of the Language teachers should be upgraded and they should be made either lecturers or professors. Now, to give effect to this recommendation, it would cost the Government only about Rs. 1,50,000. I do not see why this simple recommendation should remain unimplemented for such a long time. I make a fervent appeal to the Hon. The Minister for Finance who is just now, I must say, busy checking up whether it would cost the Government only that much. I would suggest that this upgrading of 25 per cent of the language teachers as lecturers or professors could cost the Exchequer only Rs. 1,50,000. In these circumstances, the Government should see that the recommendation is implemented.

Sir, the Budget speech of the Hon. the Finance Minister also refers to the improvement of standards in education. In this connection, I wish to bring to the notice of the Government two things. Prior to the introduction of free education, in a class-room in all aided schools there were only 30 to 40 students. To-day the school authorities are persuaded to increase the number to 60. Not only is the strength in each class increased but the teachers are also being retrenched, teachers who have served the institution for more than 20 years. Unfortunately, while I am referring to this point, the Hon. the Minister for Education is not here. However, I wish to bring this to the notice of the hon. Members of the House as the facts stare one in one's face. The Government are giving fee compensation to the extent of Rs. 70 or Rs. 80 for each student in the P.U.C. and some-thing less for High Schools. But in the schools, a teacher is put in charge of sixty students. One school mistress today has to look after the needs of such a large number of students. She has to give her personal attention to each one of the students. That is not possible when the number is so large. To put it in the words of Trade Union Leaders, I should say the Government are loading these teachers with extra work for the same salary. The Government are also sending out teachers by way of retrenchment because they say these people are not required to take up

elective subjects. That is how the general scheme of education in the schools is being carried out now. I would like to say, Sir, that this must be given immediate thought because, after all, teachers are persons who put in intellectual labour. Sir, some of us come here and talk and then go elsewhere and sleep. We do our work for one or two hours for the day and go home. But these teachers spend their time from 10 in the morning to 5 in the evening in the schools. They should not be over-worked. In addition to the work they put in, in the school, after going home they have to correct the note-books of so many students, nearly 60 as against the 30 that they had to do formerly. That involves a lot of labour. And then the Government retrench some of these teachers on the ground that there are only four or five students taking electives and these are not specially qualified to teach the subjects. Sir, though these teachers may have taken some special subject for their Honours or Degree courses, they are adepts in teaching all subjects. They can teach everything. That being so, I do not see any reason why they should be retrenched. I hope the Government will seriously consider this and do something for this class of teachers.

Then, with regard to the second point on education, I have been saying, Sir, on the floor of this House time and again that choice of the medium of instruction should be left to the parents. The choice might either be Tamil or English. The choice of medium of instruction not being left to the parents has worked a great deal of harm to the cause of education and efficiency. This experiment of leaving the choice to the parents has succeeded in Bombay. No less a person than the former Chief Justice of the Supreme Court, Sri Gajendra Gadkar is the Vice-Chancellor of that University. He has left the choice of medium of instruction to the parents. Recently, Sir, even in the fantastically Hindi-stricken Delhi there was a vote taken and all students voted for English as medium of instruction. So, Sir, there is a craving for having English as medium of instruction. It is natural that some would like to have Tamil as the medium of instruction. But the choice should be left to the parents to choose whichever language they like, especially when the State cannot give full or even optimum employment to these people. They will have to look for employment elsewhere than in Madras State. Therefore, let the Government give the choice to the parents. Let the parents make the choice and either gain something by it or suffer by it.

Then, Sir, I come to 'Transport' which has become a great problem. Sir, the bus transport in the City has been nationalised. The State Transport Department in the State is probably the biggest bus owning corporation in the whole country, I do not know, or at least in this part of it. Sir, it has about 20,000 workers in the Madras City alone. Now, suddenly a policy of rationalisation has been introduced by which persons living in



far-off places like Indira Nagar, Sastri Nagar have to go round and round to reach the Secretariat or some other business locality. I do not understand what is there in this policy of rationalisation. When they have nationalised the entire transport in the City, it is the bounden duty of the Government to provide means of transport to everybody living in the City even though they may have to incur a loss. I would say further that when the Government have taken over the transport, there can be no question of loss or gain. Even at a loss the Government must provide transport facilities to everyone living in the City. Therefore, Government must find ways and means of curtailing expenditure in other departments and put the money so saved for this purpose. Sir, after all, transport is a matter which concerns the everyday life of the community and the Government cannot, therefore, shirk their responsibility or duty by resorting to rationalisation policies and all that.

The last subject I wish to refer to is about the constitutional points raised by hon. Members in this House on the financial proposals contained in the Budget. Sir, the hon. Member Thiru A. R. Damodaran expressed doubts about the legality of the proposal to levy a surcharge of $7\frac{1}{2}$ per cent on the sales-tax collected by merchants with a total turn-over of Rs. 5 lakhs and above. I do not want to pronounce any opinion on that. I consider that all the opinion or the arguments I should advance on the constitutionality or otherwise of this proposal belongs to a different forum. But if I should have been ever in the position of a retired Chief Justice of the Supreme Court of India, I would not talk about my own Judgment in a club. With great respect to my hon. Friend I should say that. He (Mr. Subba Rao) has no right to talk about his own judgment in the Golaknath case in a club even on a private enquiry from a citizen.

THIRU S. JAYARAMA REDDIAR: Mr. Chairman, Sir, Shri Subba Rao expressed that, after that judgment, many things had happened by way of constitutional changes and so, it won't help or it won't be useful to us. That is what he expressed. He never expressed any doubt his own judgment.

MR. CHAIRMAN: It was not voluntary. He was provoked.

THIRU G. VASANTHA PAI: I quite understand. That is grave and sudden, provocation in reversing his own judgment which he delivered from the High seat of the Supreme Court.

Sir, what I would like to submit is this. Golaknath case considered item 46 of the Schedule to the XVII Amendment of the Constitution in 1964. Now that case was then considering the Madras Land Ceiling Act, if I remember aright, Act 48 of 1961. Five Judges held that sections 2 and 3 of the Constitutional Amendment were invalid. Five other Judges, including Justice Shah and Justice Wanchoo held that there was constitutional authority in Parliament. Justice Hidayatullah, who

[THIRU G. Vasantha Pai] [4th March 1970

succeeded Shri Subba Rao as Chief Justice of the Supreme Court, held the balance. He said that section 2 was valid and section 3 was invalid. So now, the position is, so far as these six Judges are concerned, in the Golaknath case they have categorically come to the conclusion in prospectively over-ruling those 5-30 p.m. enactments that the State Legislature as well as Parliament has no power to amend the Constitution by bringing in any reduction in the ceiling or on any matter pertaining to the Fundamental Rights, which means that the Land Ceiling Act for any further purpose does not exist today. The Land Ceiling Act exists for what has already been done in practice. Article 141 of the Constitution says that the law declared by the Supreme Court shall be binding on all courts within the territory of India. Article 143 says that all authorities, civil and judicial, in the territory of India shall act in aid of the Supreme Court. When these two Articles are there, will it be proper for us to come forward with a legislation that will be voted by the Court the moment it is brought in?

THE HON. THIRU S. MADHAVAN: On a point of clarification, Sir. What the hon. Member Thiru Jayarama Reddiar stated is quite correct. Mr. Subba Rao has not gone against his own judgment in Golaknath case. Golaknath case is entirely different from the subject that we are discussing. We are thinking that Article 31-A will protect the Ceiling Act. Golaknath case decides only about future amendment of the Constitution similar to the amendment to Articles 31-A and 31-B. The same Honourable Chief Justice Mr. Subba Rao, after his own judgment in Golaknath case, has given another judgment in the Supreme Court holding that any ceiling on land is valid under Article 31-A. His judgment in Golaknath case relates only to future amendments similar to amendments to Article 31-A.

THIRU G. VASANTHA PAI: If I may remind the Hon. Minister, he may, if he has got time or has got the Constitution before him, refer to Article 31-A which is referred to by Mr. Subba Rao in his judgment. That Article, if I may repeat, says that in respect of land ceilings already given effect to by the Government, the Government may further acquire land after paying just compensation according to the market rate and not according to the rate which is fixed under the Land Ceiling Act.

THE HON. THIRU S. MADHAVAN: I have cited the decision of Subba Rao. There is a judgment delivered by some other judge wherein a definite opinion has been given: "it is not necessary to refer to other decided cases as this decision clearly points out that the fixing of ceiling on lands and provisions relating to it would form part of and constitute an agrarian reform, and, therefore, such provisions would have the protection of Article 31-A". That is why I was saying that only to future amendments the decision in Golaknath also would apply and not for purposes of Article 31-A which gives protection to all agrarian reforms.



4th March 1970]

THIRU G. VASANTHA PAI: I am afraid the Minister has not understood me. I am saying that Article 31-A does not give protection to the Government to take away land at a nominal compensation.

THE HON. THIRU S. MADHAVAN: The hon. Member must know how to address other Members. He said that I had not understood the point. I do not say that he has not understood the point. My only submission is that I was answering the point raised about Golaknath case.

THIRU G. VASANTHA PAI: With great respect, I am also answering with reference to Golaknath case. I am only submitting that the judgment in Golaknath case has said that the amendment to Article 31-A is valid and that future amendments cannot be made. But even under Article 31-A if the Government want to acquire under land ceiling legislation, they may acquire only on paying just and fair compensation on the basis of market rates.

THE HON. THIRU S. MADHAVAN: This judgment also relates to the Land Reform Act of Pepsu.

THIRU G. VASANTHA PAI: May I know what the judgment is? Mr. Chairman, it is probably for the Government to uphold its contention and probably for many Members of the Opposition or persons who chance to appear for these people to agitate it in a Court of Law. I leave it there. I only give this note of warning to the Government that—I am not against the reduction of land ceiling—if they want to do anything like that, they must consider the pros and cons. If the Supreme Court has gone back upon its judgment, by all means the Government may respect the later judgment which has distinguished it from the previous judgment. But if the Supreme Court judgment has not upset the previous judgment, I want this Government to go by the rule of law and respect the decision of the Supreme Court and not go against it. That is my submission on that part of the case.

Then, the last thing I want to submit is this. There is the Pay Commission sitting to-day to go into several questions as to pay of teachers, allowances etc. I am certain that many of my arguments will be met by the statement which the Hon. the Minister for Law made the other day in connection with some other Member's question that there was a Pay Commission sitting and that all these things would be considered by it. If that should be the answer of the Government. I only request that the Pay Commission Report should be expedited and that it should be ready within the next three months.

With this, I think the Government have framed a really good Budget.

I thank the Hon. Chairman for giving me this opportunity to speak and to make my first Budget speech.

**திரு. ஆர். ராமன் நாயர் :** தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்டத்தின் பேரில் சில வார்த்தைகள் சொல்ல அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். 1970-71-ஆவது வருஷத்தின் அரசினுடைய நிதி நிலை அறிக்கையின் பேரில் பேசக் கூடிய திறமை எனக்கு இல்லை என்றாலும், எனக்குத் தெரிந்த சில வார்த்தைகளை, பொதுவான சில பிரச்னைகளைத்தான் சொல்ல எனக்குத் தெரியும். இன்றையதினம் பரவலாக எங்கே பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டே வருகிறது. தகுந்த வேலை வாய்ப்பு ஏற்படவில்லை என்றால், நாட்டிற்குப் பெரும் தீங்கு நேரும். அது பெரிய வியாதியாகப் பரவிவிடும் நிலையில் இருக்கிறது. படித்த பட்டதாரிகள் ஒரு பக்கத்தில் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படித்துவிட்டு எப்படியாவது ஒரு வேலையைத் தேட வேண்டுமென்று இருக்கிற பல ஏழைகள் லட்சக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். படிக்காமலே இருக்கிற சாதாரண தொழிலாளிகள், $1\frac{1}{2}$ ரூபாய், 2 ரூபாய் வாங்குகின்ற தொழிலாளிகள் கூட எங்கே சென்றாலும் வேலை வாய்ப்பில்லாமல் திண்டாடுகிறார்கள். அதற்கு சர்க்கார் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். பல நல்ல திட்டங்களைப் போட்டு வேலை வாய்ப்பு அதிகமாகும்படி செய்ய வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அப்படி அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வரையில் ஏதாவது உதவிப் பணம் கொடுத்தாவது சர்க்கார் ஆதரிக்க வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கல்விக்குப் பல கோடி செலவு செய்யும் சர்க்கார் வேலை வாய்ப்பு அளிக்கவும் உதவி செய்ய வேண்டும். அறிவுக்காகப் படிக்கிறவர்கள் மிகவும் கம்மியாகத்தான் இருக்கிறார்கள். ஏதோ ஓரளவு படித்தால் வேலைக்குப் போய் வாழ்க்கையைச் சமாளிக்கலாம் என்ற காரணத்திற்காகத்தான் அதிகமானவர்கள் படிக்கிறார்கள். அவர்களுடைய கணக்கை சர்க்கார் எடுத்து, அவர்களுக்கு உதவிப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்போதுதான் உதவிப் பணம் கொடுக்கிற காரணத்தால் அவர்களுக்கு சீக்கிரமே 'வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டு மென்ற எண்ணமும் சர்க்காருக்கு ஏற்படும்.

கோவையில் பூட்டிக் கிடந்த மில்களை எல்லாம் மத்திய சர்க்காருடைய உதவியினால் மாநில சர்க்கார் எடுத்து நடத்த ஆரம்பித்திருக்கிறது. கோவையில் இருக்கிற பல ஆயிரக்கணக்கான மில் தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பு இல்லாத காரணத்தால் தான், பெரு முயற்சி எடுத்து சர்க்கார் இந்தக் காரியத்தைச் செய்தது. அடுத்து, இன்றைய தினம் சர்க்காரே எடுத்துக்கொண்டிருக்கிற மில்களில் உள்ள தொழிலாளிகளுக்கு கூலியைக் குறைக்கும் பிரச்னை வெகுவாக இருக்கிறது. அப்படிச் சம்பளத்தைக் குறைத்தால்தான் கட்டுபடியாகும், இல்லாவிட்டால் கட்டுபடியாகாது என்று சொல்லுகிறார்கள். அப்படிக் குறைத்தால் அரசு கொடுப்பதை விட அதிகமாகக் குறைப்பார்கள். பிறகு பழைய நிலைமை தான் வரும். அப்போது குழப்பங்கள் ஏற்படும். மில்களை மூடி திரும்பவும் அந்தத் தனிப்பட்ட மில்களையும் சேர்த்து நடத்தும் நிலைமைக்கு வந்துவிடும். ஆகையால் சம்பளத்தைக் குறைக்காமல் சர்க்கார் நடத்தும் மில்களில் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தோட்டத் தொழிலாளிகளின் பிரச்சினைபற்றிக் குறிப்பிட
5-40 p.m. விரும்புகிறேன். யாரும் அந்தப் பிரச்சினையை சட்டை செய்வதில்லை. பல முறை இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். தோட்டத் தொழிலாளிகள் இந்த மாநிலத்தில் 2 லட்சம் குடும்பங்களுக்கு மேல் வேலை செய்துவருகிறார்கள். அவர்கள் மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள். கீழ் நாட்டில் வேலை வாய்ப்பில்லாமல், வசதியில்லாமல் பல கங்காணிகள் மூலமாக மலைப் பிரதேசங்களில் ஏறிச் சென்று $1\frac{1}{4}$ அணாவிலிருந்து அவர்கள் கூலி ஏறி சிறுகச் சிறுக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தோட்டத் தொழிலாளிகள் செய்கின்ற வேலைதான் இன்றைக்கு வெளி நாட்டுச் செலாவணியை அதிகமாக நமக்குக் கொடுக்கிறது. இருந்தாலும் அவர்களுடைய நிலைமை நாளுக்கு நாள் கவலைக்குள்ளாகிக்கொண்டே இருக்கிறது. அத்தோடு கூட இந்த 1-ம் தேதியிலிருந்து அவர்களுக்குக் கொடுக்கப்பட ரேஷனும் கிடையாது என்ற



நிலை வந்திருக்கிறது. தோட்டத் தொழிலாளிகளுடைய கூலியை நிர்ணயிக்கும்போது அவர்களுடைய குடும்பத்திற்குத்தான் கூலியை நிர்ணயிக்கிறார்கள். கணவன், மனைவி, குழந்தைகளோடு கணக்கு போட்டுத்தான் கூலியை நிர்ணயம செய்கிறார்கள். அவர்கள் ரூ. $2\frac{1}{2}$ சம்பளம் வாங்கி சுமார் 8 பேர் அதற்குள் வாழ வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். வேலை ஏராளமாக இருந்தாலும், அவர்களுக்கு வேலை கொடுக்காமல் அவற்றை காண்ட்ராக்டுக்கு விட்டு முடித்துவிட்டு, வேலையில்லை என்றும், நாங்கள் என்ன செய்வதென்றும், கையை விரிக்கும் நிலை அதிகரித்துக் கொண்டு வருகிறது. தோட்டத் தொழிலாளிகளில் யாராவது கஷ்டப்பட்டு, படித்து முன்னுக்கு வந்து பி.ஏ. போன்ற பட்டப் படிப்பு படித்துவிட்டால் அவர்களுக்கு அந்த எஸ்டேட்டில் உத்தியோகம் தருவதில்லை. அவர்களுக்கு வேலை கொடுத்து அவர்கள் வந்து உட்கார்ந்துவிட்டால், அது அவமானத்திற்கான செய்கை என்று முதலாளிகளால் கருதப்படுகிறது. அதனால் வெளியிலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து வைத்துக்கொள்கிறார்கள். எனக்கு முன்னால் திரு ஈஸ்வரமூர்த்தி அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். இது ஏதோ 100, 200 பேர்கள் பிரச்னை என்று நினைத்து பதில் சொல்லியிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் 20 வருஷங்களாக சர்வீஸ் ஆகியும் பதவி நிரந்தரமாக்கப்படாமல் வேலை இருக்கும்போது கொடுக்கிறேன் என்று பல வருஷங்களாக வைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

[Deputy Chairman in the Chair]

அதைப்பற்றிக் கேட்டால் உங்களுக்குக் கிடையாது என்று சொல்லி விடுவார்கள். அதற்குமேல் சர்க்கார் அளவிலே போனால், சர்க்காரோ அல்லது சர்க்கார் அதிகாரிகளோ அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் இல்லை என்று சொல்லி விடுவார்கள். இதுவரையில் அப்படி இருந்து கொண்டிருக்கிறது. இந்த 2 வருட காலத்தில் யாருக்கும் வேலை கொடுக்காமல், அவர்களுக்கு வேண்டியவர்களுக்கே வேலை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், எல்லோருக்கும் நன்குதெரியும். அவர்கள் விஷயத்தில் இந்த அரசாங்கம் சிரத்தை இல்லாமல் இருக்கிறது. இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட அதிபர்களிடம் போய் தங்களுடைய குறைகளைச் சொல்லப்போனால், உடனே அவர்கள் போலீஸைக் கூப்பிட்டு என்னைக் கொல்லப் பார்க்கிறார்கள் என்று சொல்லிவிடுவார்கள். ஆனால் அப்படி போலீஸ் வந்தாலும் கூட, "இது உங்களின் பிரச்சினை எங்களுக்கு ஒன்றும் இதில் சம்பந்தம் இல்லை" என்று சொல்லிவிடுவார்கள். ஆகையால் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை நல்ல விதமாகக் கவனிக்கப்பட மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நாங்கள் பல முறை சொல்லியிருக்கிறோம். அந்த தோட்டத் தொழிலாளர்களின் கூலியை நிர்ணயிப்பது ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு என்றுதான். ஆனால் குடும்பத்திற்கு ஒரே ஒரு ஆளுக்குத்தான் வேலை கொடுத்து விட்டு, அதில் 8, 9 பேர்கள் வாழ்க்கை நடத்தவேண்டியிருக்கிறது. இதனால் அவர்களுக்குப் பல கெட்ட பழக்கங்கள் ஏற்படுகின்றன. இந்த அளவில் இன்றைய தினம் நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. இதற்கு சர்க்கார் ஏதாவது ஒரு கால வரம்பு வைத்து அவர்கள் குறைகளைத் தீர்க்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் அப்படிச்செய்தால், அவர்கள் புதிதாகப் பல சலுகைகள் கேட்பார்களோ, அவைகளைக் கொடுக்கவேண்டி வருமோ, "கிராச்சுயுடி" கொடுக்க வேண்டிவருமோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கேட்டால் எஸ்டேட்டை விற்று விற்றுப் போய்விடுவேன் என்று சொல்கிறார்கள். நாங்களும் பார்க்கிறோம் 25 வருடமாக ஒருவராவது அந்த மாதிரி எஸ்டேட்டை விற்றதாக தெரியவில்லை. வேண்டுமென்றால் 5, 6 லட்சத்தை வாங்கிக் கொண்டு கை மாற்றி இருக்கிறார்களே தவிர, விற்றுவிடவில்லை. என்னமோ இவர்கள் 500 பேர்களைக் காப்பாற்ற வந்தது மாதிரி பேசிக்கொண்டிருக்கிறார்கள். தோட்டத்

தொழிலாளர்களைப் பாதுகாக்க சட்டம் இருக்கிறது, ஆனால், இந்தச் சட்டத்தையெல்லாம் அமுல் நடத்தக்கூடிய அளவிலே இல்லை. இன்றைய தினம் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் "பால்" கொடு, "சோறு" கொடு, "டிரஸ்" கொடு என்றெல்லாம் சட்டம் இருக்கிறது. ஆனால், ஒரு சாம்பல் துணியை வாங்கி வைத்துக்கொண்டு, 6 மாதத்திற்கு ஒரு தடவை அங்கு வந்து இந்தக் கலர் போதுமா என்று கேட்பார்கள். திரும்ப 6 மாதத்திற்குப் பிறகு ஒரு தடவை வந்து ஒரு பெரிய கௌனை வைத்துக்கொண்டு அதை வாங்கலாமா என்று கேட்பார்கள். ஆகவே இந்த மாதிரிக் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு தயவுசெய்து தோட்டத் தொழிலாளர்கள் பிரச்னையில் ஆவன செய்யும்படி இந்த அரசைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்காமல் சட்டப்படி அவர்களுக்குண்டான சலுகைகளைக் கொடுக்காமல் தோட்ட அதிபர்கள் இருந்துவருகிறார்கள் என்று சொன்னார்கள். இதுபற்றி எந்தெந்த எஸ்டேட்டில் எந்தெந்தச் சட்டங்களை நிறைவேற்றாமல் அமுலில் கொண்டு வராமல் இருக்கிறார்கள், அதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைக் குறித்து எழுத்து மூலமாக இதுவரை அனுப்பாவிட்டால், இனிமேல் கொண்டுவந்து தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

5–50 p.m. **திரு. ஆர். ராமன் நாயர் :** நாங்கள் தொழிலாளர் நலத் துறைக்கு நிறைய தினமும் எழுதிக்கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் அதையெல்லாம் செய்யவில்லை என்று சொல்ல முடியாது. சிலவற்றை பைசல் செய்திருக்கிறார்கள். சிலவற்றை விட்டுவிட்டார்கள். ஒன்றும் செய்யாவிட்டால் இவர்கள் அதிகாரிகளாக இருக்க முடியுமா? நிறைய எழுதியிருக்கிறோம். ஒவ்வொன்றையும் எழுதியிருக்கிறோம். ஒரு காப்பிகூட இப்போது பையில் வைத்திருக்கிறேன். ஆகவே, தோட்டத். தொழிலாளர்களின் மேல் சர்க்காருக்கு அக்கறை இல்லை என்கிற அளவிலே நான் பேசவில்லை. இந்த மாநிலம் தோட்டத் தொழிலாளர்கள் விஷயத்தில் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக நடக்க வேண்டும் என்பதற்காகத்தான் இப்படிச் சொல்கிறேன். சென்னைக்கும், கோயம்புத்தூரில் உள்ளவர்களுக்கும் ரூ. 200-க்கும் குறைவான வருமானம் உள்ளவர்களுக்குப் படி அரிசி போடப்படுகிறது. ஆனால், தோட்டத் தொழிலாளர்கள் வருமானமோ மாதத்திற்கு ரூ. 50 தான். ஆனால், இவர்களுக்கு இந்தப் படி அரிசி பெறும் வாய்ப்பு இல்லை. இந்த மாதிரி உள்ள அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்து, நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூரில் பல குடும்பங்கள் சர்க்கார் பட்டா செய்து கொடுத்துள்ள ½ ஏக்கரா, ஒரு ஏக்கரா நிலத்தில் டீ பயிரிட்டு வருகிறார்கள். நான்கு வருடங்களுக்கு முன்னால் பட்டா செய்து கொடுத்து அங்கு ஒரு டீ பாக்டரி கட்டி, டீ விவசாயம் செய்யலாம் என்று சொல்லி, அவர்களிடமிருந்து அதற்காகப் பங்குத் தொகையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் இந்த பாக்டரி ஆரம்பிக்கப்படவில்லை இதுவரை. அங்குள்ள கலெக்டர் இன்னும் 2, 3 வருடங்களில் ஆரம்பித்துவிடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே பல இடங்களில் நிறைய சிறிய சிறிய டீ பாக்டரி வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல இங்கும் ஒரு டீ பாக்டரி ஆரம்பிக்க, டீ போர்டின் உதவியின் பேரில்தான், வேலை ஆரம்பிக்கப்பட்டது. டீ போர்டால் பணம் எல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது. இந்த டீ பாக்டரி மூலம் 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இப்பொழுது இந்த டீயை யாரும் வாங்க மாட்டார்கள். இந்த அளவிலே கூட்டுறவு முறையிலே ஒரு "டீ பாக்டரி" ஆரம்பித்தால், உடனடியாக 1,000 குடும்பங்கள் பலன் பெறும். ஆகவே அதற்கு உண்டான ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக, தொழிலாளர்களின் கிராச்சுடியைப் பொறுத்த அளவிலே, நம் மாநிலத்தில் வருடத்திற்கு 15 நாட்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. ஆனால் சில மாநிலங்களில் ஒரு மாதத்திற்குக் கொடுக்க வேண்டும் என்று சட்டம் ஆக்கப் போகிறார்கள். நம் மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் கூட, இதற்காகச் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும். இதற்காக சர்க்கார் தகுந்த சட்டத்தைப் போட்டு, இந்தக் கிராச்சுடியைத் திருத்தி அமைத்து வருடத்திற்கு ஒரு மாதமாவது ஒரு தொழிலாளருக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் ஒரு வருஷத்திற்குள் கொடுப்பது என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. ஆனால், இந்தத் தோட்டத் தொழிலாளியைப் பொறுத்த வரையில் ரொம்ப அத்தியாவசியம் என்னவென்றால், மின்சாரம காலையில் 6 மணிக்கு வீட்டை விட்டு வெளியே வந்துவிடுகிறான். அதற்குள்ளே எல்லா வேலையையும் முடிக்க வேண்டும். சாயந்திரம் 7 மணிக்குத்தான் வீட்டுக்குப் போகிறான். மானேஜர் ஸ்விச்சைப் போட்டு பங்களாவிற்குள் இருக்கிற மாதிரி தோட்டத் தொழிலாளியும் ஸ்விச்சைப் போட்டு வீட்டிற்குள்ளே இருப்பது அவமானம் என்று எண்ணி, அதைப் போட்டுக் கொடுக்காமல் இருக்கிறார்கள். இதைப் பல முறை நான் இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். இப்போது ஒரு வருஷத்திற்குள் எல்லா இடத்திற்கும் மின்சாரம் கொடுப்பது என்பது முடிவு. ஆனால் தோட்டத் தொழிலாளிகள் தங்கள் சொந்தச் செலவில் போடுவதாக இருந்தால் கூட —அப்படிச் சொந்தச் செலவில் போடக்கூடிய நிலையில் தோட்டத் தொழிலாளி யாரும் இல்லை—முதலாளிகள் ஏற்றுக்கொள்வதில்லை. இன்றைய தினம் அது அவர்களுக்கு ஒரு அவமானமாக இருக்கிறது. இன்றைய தினம் எல்லா இடத்திற்கும் பரவலாக மின்சாரம் கொடுப்பதாக சாக்கார் முடிவு செய்திருக்கிறது. தொழிலாளர் அமைச்சர் அவர்கள் அதை எல்லாம் எழுதவில்லையா என்றார்கள். நான் இதையெல்லாம் நிறைய எழுதியிருக்கிறேன். ஆனால், மின்சாரப் பிரச்னை, லேபர் டிபார்ட்மெண்டில் இல்லை என்று இதை எடுத்துத் தனியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்திலே உண்மையாகவே கவலையோடு சொல்லுகிறேன். கிரசின் ஆயில் அங்கே 52 பைசா, 50 பைசா விலை. அதன் விலை ஏறினாலும், ஏறுவிட்டாலும், மின்சாரம் எதற்காக வேண்டுமென்றால், போகிற வழியில்தான் பாம்பு என்றில்லை. அம்மியிலேயே பாம்பு வரக்கூடிய இருட்டுக் காடு. ஆதலால் அவர்களுக்கு மின்சார விளக்கு வசதி செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் வேண்டிய முயற்சியை எடுக்க வேண்டும். தொழிலாளர் அமைச்சர் அவர்கள் முதலாளிகளைக் கூப்பிட்டு, நல்ல வார்த்தைகள் சொல்லி—அதற்காக ஸ்ட்ரைக் வேண்டாம், வேறு ஒன்றும் வேண்டாம், அவர்களும் ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள்—அவர்களைக் கூப்பிட்டு, நீங்கள் எல்லோரும் இப்படி "லைட்" போட்டுக் கொடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். ஒரு வருஷத்திற்குள் எல்லா இடங்களிலும் மின்சாரம் கொடுப்பது என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிற இந்த சந்தர்ப்பத்தில் தோட்டத தொழிலாளிக்கு அந்த நன்மை கிடைக்கும்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தைத் தந்ததற்காக தலைவரவர்களுக்கு மறுபடியும் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

***திரு. சி. வி. ராசகோபால் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த 1970-71-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றிப் பேசுகின்ற நல்ல வாய்ப்பினைத் தந்ததற்காக என்னுடைய நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். உண்மையாக இந்த வரவு-செலவுத் திட்டத்தை இப்போது சமர்ப்பித்தது, இதற்கு முன்னாலே இருந்தாரே இந்த அவையிலே, முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள்; அவர்களிடத்திலே ஏறக்குறைய 20 ஆண்டுகளாகப் பயிற்சி பெற்றவர், அவரிடம் பாடம் கற்றவர், அவருடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கக்கூடிய முறையில் இந்தப்

பட்ஜெட்டைத் தயாரித்து இங்கு சமர்ப்பித்திருக்கிறார்கள். இதிலே மாண்புமிகு உறுப்பினர்கள், என்னுடைய நண்பர்களெல்லாம் பேசினார்கள். அவர்கள் பேசுகிறபோது நானே எண்ணிக்கொண்டேன், "இது ஏதோ வரியை ரூ. 6 கோடி அளவிற்குக் கொஞ்சம் உயர்த்தியிருக்கிறார்களே, அதை யாருக்காக உயர்த்தியிருக்கிறார்கள்?" என்று. அப்படி உயர்த்தியதை எண்ணிப் பார்க்கிறபோது, இந்த ரூ. 6 கோடி என்பது ஒரு இம்மி, ரொம்ப சிறு தொகையாக இருக்கும். வடநாட்டிலே இருக்கிற ஒரு சில குடும்பத்திலே வரவு-செலவுத் திட்டம் ரூ. 6 கோடிக்கு வருகிறது. இங்கே ஏறக்குறைய 4 கோடி மக்கள் இருக்கிறார்கள். அந்த மக்களுக்கு வரவு-செலவுத் திட்டம் போடுகிறபோது, கொஞ்சம் அதிகமாகத்தான் வரி விதித்திருக்க வேண்டும். ஆனால் மிகக் குறைவாகத்தான் விதித்திருக்கிறார்கள். எதற்கு விதித்திருக்கிறார்கள்? மின்சார சாமான்கள், சிமெண்டு, பெட்ரோல், சினிமா விஷயம், இவை எல்லாம லக்ஷரி பொருள்கள் என்று உலகத்தாராலேயே ஒப்புக்கொள்ளப்பட்டவை. அதற்குத்தான் ஏற்றியிருக்கிறார்களே ஒழிய ஏழைகள், பாமரர்கள், கைவண்டி இழுக்கிறானே குப்பன், பட்டாணிக் கடை வைத்திருக்கிறானே மாணிக்கம், ரோடு ஓரத்தில் பதுங்கிக் கிடக்கிறானே கன்னன், இப்படிப்பட்ட மக்களுக்கு ஏற்றியிருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லவே இல்லை. இதுதான் அடித்தளத்திலே இருக்கிற உண்மை. ஏழை எளியவர்கள், நடுத்தரக் குடும்பம், பாமர மக்கள், வேலை இல்லாமல் அவஸ்தைப்படுகிறவர்கள், இப்படிப்பட்ட மக்களுக்கு வரி இல்லாமல், ஏதோ இருப்பவர்களிடம், "கொஞ்சம் தாருங்கள்" என்று நல்ல இதயத்தோடு, பரிவோடு கேட்கிறார்கள். உங்களுக்குக்கூடத் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள், "நான் கார் வாங்குவதாக இருந்தேன், சேல்ஸ் டாக்ஸை ஏற்றி விட்டார்கள், பெட்ரோலுக்கு வரியை ஏற்றி விட்டார்கள், 2 பைசா இங்கே, 10 பைசா அங்கே, நான் கார் வாங்க பயப்படுகிறேன்," என்று. அவர் பாலுக்கு சர்க்கரை இல்லை என்கிறார். ஏழையோ இங்கே கூழுக்கு உப்பு இல்லை என்கிறான். எங்களுடைய அமைச்சரவை அந்தக் கூழுக்கு உப்பு இல்லை என்கிறானே, அவனைக் கருணையோடு பார்க்க வேண்டுமென்ற உள்ளத்தால் சில காரியங்கள் செய்ய வேண்டுமென்று அவர்களுக்காக முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். என்னுடைய அருமை நண்பர், அட்வகேட் திரு. வசந்த பாய் அவர்கள் பேசுகிறபோது, நான் கவனித்தேன். அப்போது நான் உள்ளே இல்லை, வெளியே இருந்தேன். ஆனால் அவர்கள் பேசுகிற ஆரம்பமே, அவருடைய தொனியே மிக வேடிக்கையாக இருந்தது. நான் இதைச் சொல்வதற்கு என்னை மன்னிக்க வேண்டும். அவர் கூறிய ஒரு கூற்றை மட்டும் இந்த அவையின் முன் வைக்க விரும்புகிறேன். அமைச்சர்கள் சுமை சுமக்கிறார்கள், ஆகவே அவர்கள் கழுதைக்கு ஒப்பானவர்கள் என்றார். அவர் வாயாலே அந்தப் பதம் வந்ததும் நான் பதறியே போனேன். படித்தவர், அட்வகேட், வேறு உதாரணங்கள் எத்தனையோ சொல்லியிருக்கலாம். அதை விட்டு விட்டு அமைச்சர்கள் கழுதைக்கு ஒப்பானவர்கள் என்று சொன்னது நியாயமில்லை. இருந்தாலும் ஒன்றை நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் வக்கீல், வாதத்தில் சிறந்தவர். ஆனால் அவர் கையாளுவது சட்டம். வெளியிலே நாம் பார்க்கிறபோது பல இடங்களில் சொல்லுகிறார்கள், "சட்டம் ஒரு கழுதை" என்று. என்ன





என்றால், முன்னாலே போனால் கடிக்கும், பின்னாலே போனால் உதைக்கும் என்கிறார்கள். அதைக் கையாளுகிற அவர் இப்படிக்கூறி இருக்கக் கூடாதே அவர் கையாளுவது எது? சட்டம். சட்டத்திற்கு வெளியிலே என்ன பெயர் வைத்திருக்கிறார்கள்? கழுதை என்று சொல்லுகிறபோது, அதை நாம் கையாளுகிறோமே, அதை இங்கே சொல்லலாமா, சொல்லக் கூடாதா என்று யோசித்துப் பார்த்திருக்க வேண்டும். ஆனால் அது அவருடைய பெரிய ஆர்கியூமெண்ட், வாதங்கள். எதைப்பற்றி வாதங்கள்? மாண்புமிகு சட்ட அமைச்சரோடு வாதித்துப்பார்த்தார். அவருடைய வாதங்கள் பூராவும் சட்டத்தைப் பற்றி. சட்டம் என்பது மக்களுக்காக ஆகவேண்டுமென்று கூறினார்கள் படித்தவர்கள். சட்டம் என்பது எப்போது வந்தது. மனிதகுலம் உண்டான பிறகு, மனித குலத்திற்கு ஏற்றவாறு கொஞ்சம் கொஞ்சமாகச் சட்டம் வந்தது. மனிதர்களுக்காகச் சட்டம் செய்யப்பட்டது. "லா" வேறு, மனச்சாட்சி வேறு, "ஜஸ்டிஸ்" வேறு. இத்தனையும் இருக்கிறது. மிக சாமர்த்தியமான நீதிபதிகள் இருக்கிறார்கள். அவர்கள் சட்டத்தைப் பல விதத்தில் விமர்சனம் செய்வார்கள்.

**டெபுடி சேர்மன் :** நீதிபதிகளைப் பற்றி பேசக் கூடாது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** குறை சொல்லவில்லை. சட்டம் நிச்சயமாகத் தேவை. சட்டத்திற்கு இருக்கிற தன்மையைப் பற்றி அவையிலே சொல்லுவது குற்றமாகாது.

**திரு. கே. ராஜாராம் :** நீதிபதிகளுக்கு நோக்கம் கற்பிக்கக்கூடாது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** சட்டத்தை வைத்துக்கொண்டு மற்றவர்களை வெல்ல வேண்டுமென்று மேடைகளில் சில சமயங்களில் வாதாடுகிறார்கள். சட்டத்தை மட்டும் வைத்துக்கொண்டு வாதித்தால் போதாது. நம் மனச்சாட்சி வாதாட வேண்டும். இந்த நாட்டிற்குத் தேவையான முக்கிய அம்சங்களுக்குத் தக்கவாறு சட்டங்களை உண்டுபண்ணிக்கொள்ளலாம். அது ஒன்றும் பெரிய சிரமம் அல்ல. ஆகவே சட்டம் நெட்டுக்குக்கூட இருக்கும். அந்த நெட்டுக்கு இருக்கிற சட்டத்தை வளைக்க வேண்டும்.

அடுத்து, அவர் இந்த சீலிங் பற்றிப் பேசும்பொழுது மிக வேதனையாகத்தான் குறிப்பிட்டார். நிலம் இல்லாதவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நிலம் கொடுக்க வேண்டுமென்பதுதான் அமைச்சரவை "சீலிங்" கொண்டு வந்திருப்பதற்குக் காரணம். இரண்டாவது, அரசு ஊழியர்களுக்கு ரூபாய் பத்து அதிகம் ஈட்டுப் படி கொடுத்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறார்கள். ஆசிரியர்கள் இதற்கு முன் "பென்ஷன்" வாங்கியது இல்லை. இன்று ஆசிரியர்களுக்கு "பென்ஷன்" என்று சொன்னவுடன் தலைநிமிர்ந்து பார்க்கிறார்கள். எங்கள் ஊரில் 50 ஆயிரம் பேர் என்றால், "பென்ஷன்" வாங்குபவர்கள் இரண்டு பேர்தான் இருப்பார்கள். ஆசிரியர்களுக்கு அந்தக் கௌரவம் வந்திருக்கிறது என்றால், இந்த ஆட்சியாளர் தன்மையை எண்ணிப் பார்க்க வேண்டும். சிலர் குறை கூறியிருந்தாலும், நல்ல எண்ணத்தோடு கூறியிருக்கிறார்கள் என்றுதான் நினைக்க வேண்டும். அப்படிக் கூறியவர்களுக்கு என்னுடைய நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. எத்திராஜுலு மிக வேதனையோடு சொன்னார், இதுமாதிரியாக என்னை அடித்துப் போட்டு விட்டார்களே, இதைக் கவனிக்க வேண்டுமென்று. அவர் நிலையில் நான் இருந்தால், நானும் அப்படித்தான் சொல்லுவேன். இந்த நிலைமை நேர்ந்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் ஆழ்ந்த வருத்தத்தை அவருக்குத் தெரிவித்தார். அப்படி இருக்கும்போது அவர் இரக்கம் காட்டியிருக்க வேண்டும். அவர் மேலும் மேலும் . . . . . . .

**திரு. எம். எத்திராஜுலு :** இரக்கம் காட்டித்தான் நான் அதிகமாகப் பேசவில்லை.

[4th March 1970

**திரு. சி. வி. ராஜகோபால் :** மிக்க நன்றி. ஒன்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஆட்சி வந்தவுடனே சட்டம் கெட்டு விட்டது, ஒழுங்கு கெட்டுவிட்டது, அக்கிரமம் என்று பேசினீர்களே, இப்போது ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்ளுகிறீர்கள், புரட்சியை உண் டாக்குகிறீர்கள். இண்டிகேட், சிண்டிகேட் என்று காலில் இருப்பதை வீசுகிறீர்கள்.

**திரு. எம். எத்திராஜிலு :** அந்த நிலைமையை அரசு பயன்படுத்து கிறது.

***திரு. சி. வி. ராஜகோபால் :** பொதுவாகவே போன வருஷம் சட்டம் தன்னுடைய வேலையைச் செய்ய ஆரம்பித்தது. இதற்கு முன்பு இருந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ரொம்ப சாந்தமானவர். சாது. அவரும் மனிதர் தானே. அவர் கர்ண கடூரமாக இருக்க வேண்டுமென்று நினைத்தால், இப்போதுள்ள மாண்புமிகு முதலமைச்சர் திரு. கருணாநிதியைப் பக்கத்தில் வைத்திருப்பார். "நான் சாதுவாக இருக்கிறேன், நீ கொஞ்சம் கர்ண கடூரமாக இருக்க வேண்டும்" என்று. 24 மணி நேரமும் காந்தியைப் போல் சாந்த சொரூபியாக இருந்தால், கொஞ்ச நேரமாவது கர்ண கடூரமாக இருக்க வேண்டும்; இனிப்புக்குப் பிறகு காரம் கொடுப்பது போல்.

அடுத்து, நண்பர் திரு. ஜி. சுவாமிநாதன் பேசும்போது, பாராட்டினார்.

It is not an ordinary things He has advanced hjs arguments very nicely and decently. It is regarding Article 282. Of course it is a constitutional matter. But . . .

இந்த பைனான்ஸ் கமிஷன் 5 வருஷத்துக்கு ஒரு முறை கூடுகிறது, பின் கலைந்து விடுகிறது. அது நிரந்தரமாக்கப்பட வேண்டும். ........

The object is Article 282 should be amended. For it, he has advanced his arguments very nicely. But my point is that the matter has been left to the Three-men Committee.

இந்த வேலை மூவர் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. என் இந்தக் கமிட்டியை நியமித்திருக்கிறோம் என்றால், வடநாட்டில் இருக்கிற எந்த அதிகாரங்கள் தமிழ் நாட்டுக்குத் தேவை, நமக்கும் அவர் களுக்கும் உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஆலோசனை கூறுவதற்காக "டிசென்டிரலைசேஷன் ஆப் பவர்ஸ்" அதில் அடங் கியிருக்கிறது.

Therefore, it is not necessary for our best friend Thiru G. Swaminathan to advance his arguments. We have already entrusted it to the Three-man Committee. If my hon. Friend wants to say anything, we will represent it through it. Let it go to the Central Government. Let the Government fight for ti. We are have to finght for it. I request my hon. Friend to co-operatte at the plaricular time yhen we need his help.

**திரு. கே. ராஜாராம் :** உங்கள் ஆங்கிலம் தமிழைவிட நன்றாக இருக்கிறது. ஆங்கிலத்தில் பேசுங்கள்.

**திரு. சி. வி. ராசகோபால் :** அவருக்கு நான் தாழ்மையுடன் தெரிவிப்பது இது. நமக்கு எதிர்காலத்தில் தனி ஆட்சி வேண்டு மென்று கோருகிறோம். எதிர் காலத்தில் இருக்கிறது. அப்போது தங்களுடைய தயவு தேவை, தாட்சண்யம் தேவை, ஒத்துழைப்புத் தேவை. நிச்சயமாக எங்களுக்குத் தெரியும். நீங்கள் எங்களோடு வந்து சேருவீர் கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்கு முன்னால் அருமை நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் பேசினார்கள். பேசுகிறபோது



4th March 1970] [திரு. சி. வி. ராசகோபால்]

மிக வேதனையோடு சொன்னார்கள், இந்திரா காந்தி எங்களை மதிப்பது இல்லை என்று. நாங்கள் என்ன செய்வது? உள்ளபடியே கேட்கிறேன். இங்கு வந்து குறைப்பட்டுக்கொண்டால், எங்களை அலட்சியப்படுத்துகிறார், உதறித்தள்ளுகிறார் என்று பேசினால் நாங்கள் என்ன செய்வது? நீங்கள் ஒன்றாகக் கைகோர்த்துக்கொண்டு போகும்போது, எங்களைச் சட்டை செய் தீர்களா? அது ஊர் உலகத்துக்குத் தெரியாதா? இன்றையதினம் முகத்தில் திருப்பி அடிக்கிறார் என்பதற்காக எவ்வளவு பெரிய சத்தம்? நமது முதலமைச்சர் கேட்கிற கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் பதில் சொல்லவில்லை. அந்த வேதனைகளையெல்லாம் பெரிதாக்கி, ஏதோ இந்திரா காந்தி எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற மாதிரி மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார். இப்போது பெரும் தலைவர் திரு. காமராஜ் புதிய பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார். "இந்த தி. மு. க. முதலமைச்சர் டில்லியில் இருக்கிற பார்லிமெண்டு உறுப் பினர்களிடம் சொல்லி, இந்தி பேசாத மக்களுக்கு பண்டித நேரு கொடுத்த உறுதிமொழியைச் சட்டமாக்க, தீர்மானம் கொண்டு வருவாரா?" என்று. எப்போது? 1970-ல். தி. மு. கழகம் இதற்கெனப் பிறந்தது. மாண்புமிகு ராஜாஜி முதன் மந்திரியாக இருந்த காலத்திலேயே, இந்தியை எதிர்த்துச் சிறை சென்றோம். It is stamped for D.M.K. They ought to know இப்போதுs நமக்கு யோசனை கூற இவர் என்ன பிரண்டா பிலாசபரா, கைடா? பெரும் தலைவர் எங்களுக்கு எந்தக் காலத்திலும் பிரண்டும் இல்லை, கைடும் இல்லை, பிலாசபரும் இல்லை. அவர் இங்கே முதலமைச்சராக இருக்கும்போது, கடற்கரைக் கூட்டத்தில் பேசினார், இந்தி வேண்டாம் என்று. இந்தி வருமா, வந்தால் கிழித்துப் போடுவேன் என்றார். நமது முதலமைச்சர் பரவாயில்லை, தமிழ் மக்களைத் தன்மானத்தோடு காப்பாற்றுகிறார் என்ற நம்பிக்கையில் இருந்தோம். அடுத்தபடி, விமானத்தில் ஏறி டில்லி போனவுடன், ஒரு மத்திய அமைச்சர் "ஏன் இப்படிச் சொன்னாய்?" என்று கேட்கும்பொழுது, அப்படி ஒன்றும் சொல்லவில்லையே என்று பதில் சொன்னார். இந்தியைத் தடுத்துவிடுவேன், கிழித்து விடுவேன் என்று சொன்னது எல்லாம் பத்திரிகையில் வந்த விஷயம்.

ஆகவே இன்றையதினம் அவருக்கு ஏன் "பொத்துக்கொண்டு" வரு கிறது? இந்தி எதிர்ப்பிற்காக நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக் கிறோம். இல்லை என்று சொல்ல முடியுமா? திருவாளர் பக்த வத்சலமாவது எங்களைப் பிடித்து எவ்வளவோ தடவை ஜெயிலில் வைத் திருப்பார். இங்கே இருக்கிற போலீஸ் போதாது என்று டெல்லியி லிருந்து மிலிட்டரியைக் கொண்டுவந்து, எங்களைப் பிடித்து ஜெயிலில் போட்டிருக்கிறார். அப்படி இருக்கும்போது இன்றையதினம் எங்களைப் பார்த்து, நீ "போடு, போடு" என்பதற்கு என்ன அவசியம் வந்தது? இந்திரா காந்தி காங்கிரஸ், அவர்கள் காங்கிரஸ், இவர்கள் காங்கிரஸ் என்றெல்லாம் சொல்லிக்கொள்ளுகிறார்களே, அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்: "உங்களுக்கு என்று ஒரு அசல் காங்கிரஸ் இருக்கிறது. அதிலே பெரும் தலைவர் மொரார்ஜி, ராம் சுபாக் சிங் என்றெல்லாம் சொல்லுகிறார்களே, அவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் கூட என்ன சொல்லுகிறார்கள், நாங்கள்தான் அசல் காங் கிரஸ், இதிலிருந்து போய்விட்டார்கள் இந்திரா காங்கிரஸ்காரர்கள் என்று. அவர்கள் எல்லாம் இந்திப் பிரச்னையில் என்ன சொல்லுகிறார்கள்? அவர்கள் இண்டிகேட் காங்கிரசாவது இருக்கட்டும், சிண்டிகேட் காங்கிரசாவது இருக்கட்டும். அவர்கள் எல்லாம் இந்த இந்திப் பிரச்னையில் என்ன சொல்லுகிறார்கள்?

"When the Prime Minister has come out from the congress, how is it possible for us to establish that Prime Minister Indira Gandhi belongs to the Congress?"

ஆகவே ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் பிரதமர் இந்திரா காந்தி பக்கம் இருக்கிறது என்கிறார்கள். எதற்காக இருக்கிறோம்? தமிழ்நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டாமா? உங்கள் காலத்தில்

சட்டவாயிலாக எல்லாவற்றையும் அவர்களுக்குக் கட்டிவிட்டிருக்கிறீர்களே ? இந்த நாட்டு வரிப் பணம், இந்த நாட்டுத் தொழில்பணம் பூராவற்றையும் மத்திய அரசாங்கத்திற்குக் கொடுத்துவிட்டீர்கள். இப்போது திடீரென்று காலையில் போய் சாயங்காலம் வாங்கி வருகிற விஷயமா ? எவ்வளவு பெரிய கான்ஸ்டிடியூஷன் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். அதை அமைக்கிறபோது எங்களைக் கேட்டா செய்தீர்கள் ? அவ்வளவு பெரிய கான்ஸ்டிடியூஷனை உடைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். கொஞ்சம் கொஞ்சமாகத்தானே அது ஆகும். உடைப்பது நீங்கள் அல்ல. சொல்லுவது நீங்கள், செய்வது நாங்கள். இதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

6–20 p.m. நேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்பவும் நன்றாகவே பேசினார்கள். பட்ஜெட்டில் ஏதாவது குறை சொல்ல வேண்டுமே என்று ஒரு சில குறைகளைச் சொன்னார்கள். மற்றபடி அவருடைய பேச்சில் தன்னுடைய கிராமத்திற்கு இதைச் சொல்லவில்லை, அதைச் செய்யவில்லை என்றுதான் இருந்தது. ஆனாலும் இந்த பட்ஜெட் உயர்ந்த அளவுக்குத் தான் இருக்கிறது என்ற "தொனி" அதிலே இருந்தது. அதற்கு பல மாண்புமிகு உறுப்பினர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். எதிர்க் கட்சியிலிருந்து பேசிய பல உறுப்பினர்கள் ஒன்றைக்கேட்டார்கள். "வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்றீர்களே, எங்கே குறைத்தீர்கள், எங்கே பெருக்கினீர்கள் ?", என்று கேட்டார்கள். இதற்கு பதில் சொல்லவேண்டியதில்லை என்றாலும் நான் ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். காரணம் திரும்பத் திரும்ப பல உறுப்பினர்களும் இதைத் தான் கேட்டார்கள். நான் உங்களைக் கேட்கிறேன். உங்களுக்கு எல்லாம் உள்ளம் இருக்கிறது. உங்களுக்கு நியாயம் புரியும் என்று நினைக்கிறேன். வரியைக் குறைக்க வேண்டும், வரியைக் குறைக்க வேண்டும் என்று சொல்லிவிட்டபிறகு, எப்படி வசதியைப் பெருக்க முடியும் ? வசதியைப் பெருக்க வேண்டுமென்றால், பணம் இருந்தால்தானே முடியும். வரியை யாருக்குக் குறைக்க வேண்டும் ? மில் முதலாளிகளுக்கா ? இல்லை, கார் வாங்கப் போனேன், அதற்குள் பெட்ரோல் விலை உயர்ந்துவிட்டது என்று சொன்னாரே திரு ஜெயராம ரெட்டியார், அவர்களுக்கு வரியைக் குறைக்க வேண்டுமா ? கந்தன், குப்பன், வேலன் இப்படிப்பட்டவர்களுக்கு வரியைக் குறைத்துக் கொடுப்பதுதான் முன்னேற்றக் கழகத்தின் லட்சியம். இதைத் தானே நாட்டு மக்களுக்குச் சொல்லி வந்திருக்கிறோம். யாருக்குக் குறைக்க வேண்டுமோ அவர்களுக்குக் குறைத்திருக்கிறோம். குடிசையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே அவர்களுக்குக் குறைத்திருக்கிறோம். நொந்து போயிருக்கிறவர்களுக்கு வரியைக் குறைத்திருக்கிறோம். டீ கடை வைத்திருக்கிறானே, அவனுக்கும், வாழைப் பழக்கடை வைத்திருக்கிறானே அவனுக்கும், கை வண்டி வலிப்பவனுக்கும் வரியைக் குறைக்க வேண்டும் என்று நாங்கள் காரியம் செய்யும்போது, நீங்கள் தயவுசெய்து முட்டுக்கட்டையாக இருக்க வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன். விஷயம் இருந்தால் சொல்லுங்கள். இந்த மாதிரியான விவகாரங்களைத் தான் செய்கிறோமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. இப்படிப்பட்ட வேலைகள் தான் இன்றைக்குக் கொஞ்சம் கொஞ்சமாக நடக்கிறது.

விவசாயத்தில் நாங்கள் எவ்வளவு பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று உங்களுக்கே தெரியுமே. ஐ.ஆர். 8 நாங்கள் தானே கொண்டு வந்தோம். கருணா என்று ஒரு விதை போட்டு ஏராளமாகப் பயிராகிறது என்று மாவட்டம் பூராவும் சொல்லுகிறார்கள். இதற்காக நாங்கள் பெருமைப்படக்கூடாதா? காடு மேடுகளையெல்லாம் கழனிகளாக்கியிருக்கின்றோமே. எங்கே பார்த்தாலும் பசுமையாக இருக்கிறது. இதற்கு முன்னாலும் பசுமைப் புரட்சி என்று ஆரம்பித்தீர்கள். வேடிக்கைக்குச் சொல்லுகிறேன் என்று நினைக்காதீர்கள். ஜெர்மனியிலிருந்து ஒருவித விதை தருவித்தீர்கள். ஜெர்மனியிலிருந்து நீங்கள் தருவித்த விதை என்ன தெரியுமா ? "வேலிகாத்தான்". அதைக் கொண்டுவந்து நிலமெல்லாம் உழுது போட்டு, "பாருங்கள், பாருங்கள கண்ணுக்கு எட்டியவரை பசுமையாக இருக்கிறது", என்றீர்கள். வேலிகாத்தானைப் பார்க்கிறபோது, எவ்வளவு பசுமையாக இருந்தது ? ஜெர்மனியிலிருந்து வந்ததல்லவா ? பசுமையாக இருக்கிறதே என்று ஏழை மக்கள் அதைப் போய்ப்பறிக்க கையை வைத்தால் முள்தான் குத்துகிறது. பிறகு அது "செப்டிக்" ஆகிறது. பின்னால் உயிருக்கே ஆபத்தாகிறது. உங்கள் காலத்தில் பயிரே இல்லை என்று நான் சொல்லவில்லை. அப்படிப்பட்ட பயிரைத்தான் வைத்திருந்தீர்கள். ஆடுமாடுகள் கூடத்தின்ன முடியாத பயிரை வைத்தீர்கள்.



**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அதன் கொட்டையைப் பருத்திக் கொட்டையோடு தண்ணீரில் நன்றாக ஊறவைத்துக் கொடுத்தால், ஆடுமாடுகள் விரும்பிச் சாப்பிடும்.

**திரு. சி. வி. ராசகோபால் :** அந்த அளவுக்கு நம் மக்கள் இன்னும் தயாராகவில்லை. இந்த விஷயங்களை எல்லாம் நல்ல விளம்பரம் கொடுத்து மக்களுக்கு விளக்க வேண்டும் என்று ஆட்சியாளர்களைக்கேட்டுக் கொள்ளுகிறேன். நண்பர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தெரிவித்த கருத்தை விரைவில் நாட்டு மக்களுக்குத் தெரிவித்து, ஆடுமாடுகளுக்கும் தெரிவித்து சாப்பிடச் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, சட்ட அமைச்சர் அவர்களிடம் ஒன்றை அருள்கூர்ந்து கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டம் இந்த வகையில் சரியில்லை என்றால், அதைத் தகுந்தபடி மாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். எங்கள் ஊரில் காட்டன் ஆடுவது வெகுவாக அதிகரித்துவிட்டது. இதற்கு காரணம் என்ன என்று டி. எஸ். பியைக் கேட்டேன். அவர்களைப் பிடிக்கக்கூடாதா என்றேன். அவர் சொன்னார் : "நாங்கள் காட்டன் ஆடுகிறவர்களைப் பிடிக்கிறோம். அவர்களும் கோர்ட்டுக்கு வருகிறார்கள். ஆனால் அந்த வழக்கை விசாரிக்கிற மாஜிஸ்டிரேட் நியாயாதிபதி இருக்கிறாரே, அவர் 5 ரூபாய் அபராதம் போடுகிறார். அவர்கள் அதை இடது கையாலேயே கொடுத்துவிட்டுப் போய்விடுகிறார்கள். அதனால்தான் வளர்கிறது" என்று. எனவே சட்டத்தைத் திருத்தியாவது அவர்களுக்குக் கொஞ்சம் "டிராஸ்டிக் பனிஷ்மெண்ட்", "சிவியர் பனிஷ்மெண்ட்" கொடுக்கிறமாதிரி நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சட்டத்தைத் திருத்த முடியாது என்றால், ஒரு உத்திரவாவது ஒரு ஜீ. ஓ. ஆவது போட வேண்டும் என்று சட்ட அமைச்சர் அவர்களைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக ஒன்றைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நாங்கள் எவ்வளவோ காருண்யத்தோடு அரசு ஊழியர்களுக்கெல்லாம் ரூபாய் 10 தாராளமாக இன்றையதினம் கொடுத்திருக்கிறோம். திரு. வசந்தபாய் அவர்கள் சொன்ன பொருளாதார அடிப்படையில் அல்ல. சர்க்காருடைய பொருளாதார நிலைமையில் அவ்வளவு தான் முடிகிறது. பொருளாதாரம் என்பதே ஒரு சர்க்கிள். ஒரு "விசியஸ் சர்க்கிள்". திரு. சா. கணேசன் அவர்கள் கூட சொன்னார். விலை ஏறும். உடனே அரசு ஊழியர்கள் ஊதியம் அதிகமாக வேண்டும் என்பார்கள். இப்படி இது மாறி மாறி வந்துகொண்டேயிருக்கும். இன்னும் ஒன்றை அரசாங்க ஊழியர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டில் இந்த அரசாங்கத்தால் காப்பாற்றப்பட வேண்டியவர்கள், அரசு ஊழியர்களைத் தவிர ஏறக்குறைய 99 3/4 சதவீத மக்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஏழை எளிய மக்கள். இவர்களுக்காவது 250 ரூபாய், 300 ரூபாய் மாதம் கிடைக்கிறது: நிச்சயமாகக் கொடுக்க வேண்டியதுதான். அதைக் கொடுத்து வருகிறோம். மீதியிருக்கிற ஏழைகளுக்கு நாம் ஒன்றும் செய்ய வேண்டாமா ? இன்றையதினம் அரசு ஊழியர்களுக்கு 10 ரூபாய் கொடுத்திருக்கிறோம். அது போதாது, 30 ரூபாய் கொடு, 100 ரூபாய் கொடு 150 ரூபாய் கொடு என்றால், அது முடிகிற காரியமா? மற்றவர்கள் தானே சுமக்கப்போகிறார்கள், நாம் சொல்வதற்கு என்ன என்று

சொல்லிவிட்டுப் போய்விடுவதா ? இது எவ்வளவு பெரிய ஆபத்தான பொருளாதாரப் பிரச்சினை ? ஒரு அரசாங்கம் எவ்வளவு சுமக்கும் என்று பார்க்க வேண்டும். முடிந்த அளவுக்குத் தந்திருக்கிறோம். மாண்புமிகு திரு. தாமோதரன் அவர்களிடம் வேலை பார்க்கிறவர் அவரைப் பார்த்து, “ என்னுடைய வேலைக்குக் கொஞ்சம் அதிகமாகப் பணம் கொடுங்கள் ” என்றால், இவர் 10 என்ன, 20 ரூபாய் தருகிறேன் என்று தரலாம். அதுவும் எப்போது ? அவர் செய்கிற வேலை திருப்தியளிக்கக்கூடியதாக இருந்தால்தான், கொடுப்பார். இன்றையதினம் ரூ. 250 முதல் ரூ. 500 வரை வாங்குகிறவர்களுக்கு 10 ரூபாய் தரப்பட்டிருக்கிறது. இது குறைவா ? அரசாங்க ஊழியர்கள், “ நாம் எதற்காக வந்திருக்கிறோம் ” என்று எண்ணிப்பார்க்க வேண்டும். மக்கள் வேலையைக் கவனிக்க வந்திருக்கிறோம். வேலையை ஒழுங்காக, அதிகமாகச் செய்ய வேண்டும். ஒரு $\frac{1}{2}$ மணி நேரம் உட்கார்ந்திருப்பது, பிறகு வெளியே வந்துவிடுவது, காப்பி சாப்பிடப் போய்விடுவது என்று தானே நடக்கிறது. இவையெல்லாம் மனதில் கொள்ள வேண்டும். அரசு ஊழியர்கள் காஞ்சிபுரத்தில் ஒரு “ போஸ்டர் ” ஒட்டினார்கள். அவர்கள் எல்லாம் படித்தவர்கள்தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இது ஒரு ஏழை நாடு. அமெரிக்கா போன்ற பணக்கார நாடல்ல. நாம் காப்பாற்ற வேண்டிய மக்கள், ஏழை மக்கள், லட்சோப லட்சம் மக்கள் வெளியே இருக்கிறார்கள். நாமாவது 300 ரூபாய் சம்பாதிக்கிறோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். காஞ்சிபுரத்திலே அரசு ஊழியர்கள் கண்டன ஊர்வலம் போட்டார்கள். போட்டுவிட்டு என்ன பேசுகிறார்கள் ? நாகரீகமான வார்த்தை இருக்க வேண்டாமா ? “ அரசு வேலையைக் கவனிக்க இருக்கிறாயா அல்லது வேறு வேலைக்கு வந்திருக்கிறாயா ? இது உன்னுடைய அரசு. நாங்கள் உன்னை நம்பிக்கொண்டிருக்கிறோம். ” நாட்டு மக்களுக்கு இன்ன வேலையைச் செய்யுங்கள் என்று பணியிடுகிறவர்கள் தானே அமைச்சர்கள். அவர்களா போய் எல்லாவற்றையும் செய்ய முடியும் ? எல்லாவற்றையும் உங்களிடம் ஒப்படைக்கிறார்கள். நீங்கள் செய்ய வேண்டியவர்கள். இப்படிப்பட்டவர்கள் என்ன கோஷம் போட்டார்கள் ? “ சந்திப்போம், சந்திப்போம் 1972-ல் சந்திப்போம் ” என்றார்கள். சந்திப்பதற்கு ஜனநாயகத்திலே எல்லோருக்கும் இடம் இருக்கிறது. “ ஆனால் நீ செய்வது அரசுப் பணி .” இதை எண்ணிப் பார்க்க வேண்டும். கலெக்டர் ஆபீசில் 475 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு இப்படி கோஷம் போடுவது என்றால், அதை விட்டுவிட்டு வெளியே வந்துவிடு. “ சந்தி ”, யாரை வேண்டுமானாலும் சந்தி. எப்போது வேண்டுமானாலும் சந்திக்கலாமே? எனவே தயவு செய்து அரசு ஊழியர்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். அரசு ஊழியர்களில் எவ்வளவோ பேர் நல்லவர்கள் இருக்கிறார்கள். 100-க்கு ஒருவர் இருவர்தான் விதண்டாவாதிகளாக இருக்கிறார்கள். நல்லவர்கள் அவர்களைக் கண்டிக்க வேண்டும். 100-க்கு 99 பேராக உள்ள நல்லவர்கள் அவர்களை கண்டிக்க வேண்டும். குறை இருக்கிறது. குறையில்லை என்று சொல்லவில்லை. குறை இருந்தால், எடுத்துச் சொல்லுங்கள். இப்படிப்பட்ட கோஷங்களால், வார்த்தைகளால் பொதுமக்கள் மனம் புண்படுகிறது. அரசு ஊழியர்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும். என்னடா 450 ரூபாய் சம்பாதிக்கிறான், இன்னும் வேண்டும் என்று கேட்கிறானே என்றுதான் நினைக்கிறார்கள். நான் பேப்பர் கடை வைத்திருக்கிறேன். அதில் மாதம் 80 ரூபாய் கூட வரவில்லை. இந்த நிலையில் அவர்கள் சந்திப்போம், சந்திப்போம் என்றால், என்ன அர்த்தம் ? எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் திருத்தம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 2, 3 காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர்கள் பேசுகிறபோது, என்னிடம் கேட்டார்கள். “ என்னய்யா, உங்கள் முதலமைச்சர் இவ்வளவு கர்ணகடூரமாக இருக்கிறார்களே ” என்றார்கள். நிர்வாகத்தில் இருக்கிறபோது, நிர்வாகத்தை ஒழுங்காக நடத்திச் செல்ல வேண்டும் என்கிறபோது, கர்ணகடூரமாக இல்லாமல், எப்படி இருப்பார் ? அப்படியில்லை என்றால், ஒரு வேலையும் நடக்காதே. எனவே நான்



அப்படி இருப்பதைப் பாராட்டுகிறேன். மற்றவர்களும் பாராட்டுகிறார்கள் என்பதைக் கூறி, எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்கு தங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

***திரு. எம். அய்யாசாமி** : மாண்புமிகு மன்றத்துணைத் தலைவர் அவர்களே, 1970–71 ஆண்டிற்குரிய நிதி நிலை அறிக்கையின் மீது பல நண்பர்கள் பல விஷயங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலுள்ள சாதக பாதகங்களை வைத்துப் பேசினார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள், குறிப்பாகக் குற்றம் சொல்லவேண்டுமென்றே கூறுவதாகச் சொல்வதும் அதை நாங்கள் கேட்பதும் இங்கே வழக்கமாகப் போய்விட்டது. ஆகவே நாங்கள் குற்றம் சொல்லவேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்வதில்லை. கருத்துக்களைச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிற நேரத்தில், சொல்லித்தான் ஆகவேண்டுமென்ற அடிப்படையில், இதைத் தவிர வேறு சந்தர்ப்பம் இல்லை என்ற நிலைமையில், இங்கு சொல்வதுதான் பயனுடையதாக இருக்குமென்ற அடிப்படையில்தான் சொல்லவேண்டியிருக்கிறது. குறிப்பாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பொறுத்து, ஒன்றிரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். வரி போடாமலே ஆட்சியை நடத்த முடியும் என்று நாங்கள் என்றைக்கும் சொல்லியதில்லை. வரி போட்டுத்தான் ஆட்சி நடத்த வேண்டுமென்பதை நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். இன்றைக்கிருக்கிற அரசைவிட நாங்கள் அதிகமாகவே வரி போட்டவர்கள் ; ஏழை எளியவர்களுக்கெல்லாம் வரி போட்டவர்கள் ; தாங்க முடியாதவர்களுக்கெல்லாம் வரி போட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள். ஆனால் அதை இப்போது சொல்லும்போது, இன்றைக்குச் சட்டமன்றத்தில் பேசுகிற ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களிடமிருந்து கடும் கண்டனக்குரலைப் 6-30 p.m. பெற்றுக் கொண்டிருக்கிறோம். நாங்கள் எப்போதும் வரி போடாமல் ஆட்சி செய்ய முடியும் என்று சொல்லவில்லை. ஆனால் அவர்கள்தான் வரி போடாமல் ஆட்சி நடத்த முடியும் என்ற கருத்தைச் சொல்லியவர்கள். அப்படிச் செய்யும்போதுதான், நீங்கள் சொன்னீர்களே என்று கேட்கிற அவசியம் ஏற்படுகிறது. தாங்கக்கூடியவர்களுக்குத்தான் வரிபோடுகிறோம் என்று அதற்கு விளக்கம் கூறினாலும் கூட, பொதுவாக வரியைக்குறைப்போம் என்று நாடறியக் கூறி வந்ததை யாரும் அதற்குள் மறந்துவிட முடியாது. ஆனால் இப்போது மூன்றாண்டு காலத்தில் நாம் பார்க்கிறோம். முதலில், தேர்தல் முடிந்த பிறகு, அந்த ஆண்டிலேயே இடைக்காலத்தில் ஏற்பட்ட நிதி நிலை அறிக்கையில் ஒருவாறு இருந்தது. அதற்குப் பின்னால் முதல் ஆண்டு வெளியிடப்பட்ட நிதி நிலை அறிக்கையில் வரியே போடவில்லை. ஆகவே வரி போடாமலே பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று பெருமிதத்தோடு கூறுகிற நிலை இருந்தது. இரண்டாம் பட்ஜெட்டுக்கு முன்னதாகவே, சில மாதங்களுக்கு முன்னதாகவே விற்பனை வரி 2 சத விகிதம் ஆக இருந்ததை 3 சதவிகிதம் ஆக்கிவிட்டு மின்சாரக் கட்டணம் போன்றவைகளை உயர்த்திவிட்டு, பட்ஜெட் தாக்கல் செய்தபோது அதில் வரியில்லை என்று சொல்கிற நிலைமை அன்றைக்கு ஏற்பட்டது. மூன்றாவது ஆண்டில் இந்த நிதி நிலை அறிக்கையில் “ நாங்கள் தாங்குகிறவர்களுக்குத்தான் வரி போட்டிருக்கிறோம் ”, என்று நேரிடையாகவே வரி போடுகிற நிலைமைக்கு வந்தாகிவிட்டது. இன்றைக்குப் போடுகிற இந்த வரிகள் மூலமாக இன்னும் இரண்டு ஆண்டு காலத்திற்கு வரி போட வேண்டிய தேவையே ஏற்படாது என்று கொஞ்சம் பொருளாதாரத்தில் அனுபவம் உள்ளவர்கள் அல்லது கணக்குத் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். அந்த அளவுக்கு இதில் அதிகப்படியான வருமானம் வரும் இனங்கள் வழியாக இரண்டு ஆண்டு காலத்திற்கு வரி போடும் நிலைமை ஏற்படாது. எப்படியிருந்தாலும் வரி போடுவது என்ற அடிப்படையிலிருந்து எந்த அரசாங்கமும் மாறிவிட முடியாது. ஆனால் இன்றைக்கு என்ன செய்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன் என்றால், விற்பனை வரிக்கு சர்சார்ஜ் போடப்பட்டிருக்கிறது. வருமானத்தை அதிகப்படுத்திக் காட்டவேண்டுமென்ற அடிப்படையில், அதிகப்படுத்தவேண்டுமென்ற அவசியத்தை முன்னிட்டு, இந்த

சர்சார்ஜ் விதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் கூறினார்கள். "நாங்கள் வியாபாரிகள். நாங்கள் அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோம். அதை வாங்குகிறவர்கள் தலையில்தான் வைப்போம்" என்று இந்த மன்றத்தில் கூறினார்கள். இதுதான் இந்த நாட்டிலுள்ள வியாபாரிகளுடைய நிலையாகும் என்பதை எல்லோரும் தெரிந்திருக்க முடியும். இதை யாரும் மறைத்துப் பேசவேண்டிய அவசியமே இல்லை. எந்த வியாபாரியும் தங்கள் கை நஷ்டப்படக்கூடிய அளவுக்கு எந்த வரியையும் தங்களுடைய லாபத்தில் குறைத்துக்கொண்டு கொடுப்பது வழக்கமில்லை. போடக்கூடிய வரி அவர்களுக்குக் கிடைக்கின்ற வருவாயை அதிகப்படுத்துவதாக ஆகுமே தவிர வேறில்லை. நேர்மையாக நடந்துகொள்ள வேண்டுமென்று நினைக்கிற ஒரு சில வியாபாரிகளைத் தவிர பெரும்பாலானவர்கள் ஒரு கணக்கு வைத்திருப்பதில்லை. சர்க்காருக்கு, வருமானத்தை வரிக்காகக் காட்டுகிற கணக்கு ஒன்றாகவும், உண்மையான கணக்கு வேறாகவும்தான் வைத்திருக்கிறார்கள்.

பெரும்பாலான வியாபாரிகள் இரு கணக்கு வைப்பது உண்டு. வருகிற வருமானத்திற்கு தனக்கு என்று உண்மையான ஒரு கணக்கும், அதிகாரிகளுக்குக் காட்டுவதற்காக ஒரு பொய்க் கணக்கும் வைத்துக்கொள்கிறார்கள். அவர்களில் சிற்சில பேர்கள் தான் ஒழுங்கான கணக்கு வைத்திருக்கிறார்கள். இந்த மாதிரி வியாபாரிகள் இரண்டு விதமான கணக்கை வைத்து மோசடி செய்து வருகிறார்கள். இது எல்லாம் நல்ல முறையில் கண்டு பிடிக்கப்பட்டால், இப்போது போடப்படுகிற வரி மாத்திரம் அல்ல, இன்னும் பல ஆண்டுகளுக்கு வரி போட வேண்டிய அவசியமே வராது. நான் பல வியாபாரிகளிடம் பழகியிருக்கிறேன். வியாபாரத் துறையில் என்னென்ன மோசடி செய்கிறார்கள் என்பதை எல்லாம் அவர்கள் கூற நான் கேட்டிருக்கிறேன். ஆக பெரும்பாலான வியாபாரிகள் விற்பனை வரிக்குப் பயந்து உண்மையான கணக்கை, வருமானத்தைச் சொல்லவில்லை. ஆகவே சரியான கணக்கை வைக்க ஏற்பாடு செய்து வரிகளை ஒழுங்காக வசூல் செய்ய நடவடிக்கை எடுத்தால், இந்த மாதிரி மேலும் மேலும் வரிகள் போட்டு, மக்களுக்கு சுமையை அதிகமாக்க வேண்டிய அவசியம் ஏற்படாது என்பது தான் என்னுடைய கருத்து ஆகும். இந்த மாதிரி வரிச் சுமையை உயர்த்துவதால், விலைவாசி உயர்ந்துதான் தீரும் என்பதைப் பல நிபுணர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே வரி உயர்த்துவது என்பது ஏதோ அரசாங்கத்தின் வருமானத்தைக் கூட்டுவதற்காக மட்டும் இருக்கக் கூடாது. இந்த வரி மக்களின் வாழ்க்கைச் செலவை அதிகரிக்கச் செய்கிறது. எல்லோரும் அதை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திரு. சா. கணேசன் அவர்கள் கூட இதைப்பற்றி மிகச் சுருக்கமாக, உதாரணம் மூலமாக விளக்கிக் காட்டினார்கள். இந்த நிலை நாட்டிலே மக்களுக்கு இருக்கிறது. ஆகவே வரி போடுவது என்பதை மாத்திரம் வைத்துக்கொள்ளாமல், ஒழுங்காக முன்பு போடப்பட்டுள்ள வரிகளை வசூலித்தாலே போதும் என்பது என்னுடைய கருத்து. ஆகவே இதுபோன்ற நடவடிக்கையை அரசு இனியும் கைக்கொள்ளாமல், அரசு பல நல்ல காரியங்களைச் செய்யும் என்று நினைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசும்பொழுது, "சில வருடங்களுக்கு முன்னால் செய்ததை விட இந்த வருடம் இவ்வளவு அதிகமாகச் செலவு செய்திருக்கிறோம், அதற்குச் செலவு செய்திருக்கிறோம், இதற்குச் செலவு செய்திருக்கிறோம்", என்று எல்லாம் கூறினார்கள். வேறு பல காரியங்களுக்காகவும் செலவு செய்திருக்கிறோம் என்றும் வேறு பல நண்பர்கள் கூறினார்கள். உண்மை தான். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் ஒரு விஷயத்தை மாத்திரம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு விபரம் தெரிந்த நாளிலிருந்து பத்திரிகைகளிலே வந்துகொண்டிருக்கும் நிதி நிலை அறிக்கை சம்பந்தமான செய்திகளை நான் பல காலம் படித்து வருகிறேன். இந்த ஆண்டிலே முந்தைய ஆண்டைவிட குறைவாகச் செலவு செய்தார்கள் என்ற செய்தியினை என்னுடைய வாழ்நாளில் நான் பார்த்ததே இல்லை. கேட்டதும் இல்லை. 1930-31-ம் ஆண்டு என்று நான்





நினைக்கிறேன். அப்பொழுது தமிழகத்தோடு ஆந்திராவும் சேர்ந்து சென்னை ராஜதானி என்று இருந்தது. அப்போது 30 கோடி ரூபாய்க்குத்தான் பட்ஜெட் போடப்பட்டது. ஆனால் இன்றைக்கு 290 கோடி ரூபாய்க்குக் கிட்டத்தட்ட வரவர உயர்ந்து, தமிழகம் மாத்திரம் தனியாகப் பிரிந்த பிறகு, நாம் பட்ஜெட் போட்டிருக்கிறோம் என்று சொன்னால், எந்த அளவிற்கு வருமானம் உயர்ந்திருக்கிறது, வரிகள் உயர்ந்திருக்கின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. நாங்கள் அதைச் செய்திருக்கிறோம் இதை செய்திருக்கிறோம் என்று சொல்லுவதில் பொருளில்லை. எல்லாச் செலவுகளும் வருமானமும் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகிக்கொண்டே வந்திருக்கின்றன. ஆஸ்பத்திரிக்கு ஒதுக்கும் தொகை அதிகமாயிருக்கிறது. அப்படியானால் நோயாளிகள் எண்ணிக்கை அதிகமாகி விட்டது என்றுதானே பொருள் ? போலீசுக்குச் செலவிடும் பணம் அதிகமாயிருக்கிறது. அப்படியானால் குற்றங்கள் பெருகிவிட்டன என்றுதானே பொருள்? சிறைச்சாலைக்கு அதிகப்பணம் செலவிடப்படுகிறது. அப்படியானால் குற்றவாளிகள், தண்டனை பெறுகிறவர்கள் அதிகமாகி விட்டார்கள் என்று தான் பொருள். ஆகவே அதிகமாகச் செய்திருக்கிறோம் என்று சொல்வது பெரிதல்ல. நாம் எதை எதைக் குறைக்க வேண்டியது என்பதை ஒழுங்காக எண்ணிப் பார்த்து, செலவு செய்ய வேண்டும். குறைக்க வேண்டிய ஒன்றைக் குறைக்காமல் முடியாது. ஆகவே செலவு என்பது ஒரு ஆண்டிற்கு ஒரு ஆண்டு கூடிக் கொண்டு தான் வந்திருக்கிறது. எந்தக் காலத்திலும் குறைந்து செலவாகவில்லை. இந்த நிலை ஏற்படாமல் அதற்கு ஒரு அணை போட்டு மேலும் உயராத அளவிற்கு நிறுத்தி வைப்பதால், அந்த விலைவாசி ஏறுவதற்குப் பதிலாக கீழே இறங்கும் என்பது என்னுடைய கருத்து. நான் பெரிய பொருளாதார நிபுணன் அல்ல. இதை எல்லாம் என்னுடைய அனுபவத்திலிருந்து தான் சொல்கிறேன். ஒரு பொருளின் விலை உயர்வது என்பது அதன் மேல் போடப்படும் வரிகள் உயர்வதால் தான் என்பது என்னுடைய கருத்து. அந்த வரிகள் குறைக்கப்படுமானால், சில ஆண்டுகளில் நிச்சயமாக விலைவாசி குறையும். இறங்கு முகத்திற்கு வந்து விடும் என்று நான் நினைக்கிறேன். இது சரியாகவும் இருக்கலாம், அல்லது பொருளாதார நிபுணர்கள் கண்ணோட்டத்தில் தவறாகவும் இருக்கலாம்.

அடுத்தபடியாக, சிமிண்ட் போன்றவற்றிற்கும், மின்சாரச் சாமான்கள் போன்றவற்றிற்கும் போடப்பட்டுள்ள வரிகள் எல்லாம் மிக வசதி படைத்தவர்களுக்காகப் போடப்பட்டுள்ள வரி என்று நிச்சயமாகக் கூற முடியாது. இன்றைக்கு அரசு ஏற்பாடு செய்துகொண்டு வருகிற மிகக் குறைந்த விலை வீட்டைக் கட்டும் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்குக்கூட இந்த சிமிண்டும், மின்சாரமும் தேவைப்படுகின்றன, உபயோகிக்கப்படுகின்றன. அப்படி இருக்கும்பொழுது சிமிண்ட்டுக்கும், மின்சாரப் பொருள்களுக்கும் வரியை உயர்த்துவதனால் இந்த மாதிரி 2,000, 3,000-க்குக் கட்டப்படும் வீடுகளில் இருக்கப் போகிற ஏழைகள் என்ன செய்யமுடியும் ? எப்படிக் கட்ட முடியும் ? சிமிண்ட், மின்சாரம் போன்றவைகளெல்லாம் சாதாரண மக்களோடு இரண்டறக் கலந்து விட்ட சாதனங்கள் அல்லவா ? ஆகவே இந்த மாதிரி உள்ளவைகளுக்கு எல்லாம் விலையை உயர்த்தி, அப்படி உயர்த்துவதால் அது ஏழைகளைப் பாதிக்காது என்று சொல்வது சில ஆண்டுகளுக்கு முன்னால் சரியாக இருந்தாலும்.........பெரிய மாளிகைகள் கட்டுகிறவர்கள் சிமிண்ட் வாங்குகிற நேரத்தில் மட்டும் அது சரியாக இருந்திருக்கலாம்—இந்த நேரத்தில், ஏழைகள் உபயோகிக்கக் கூடிய நேரத்தில், இப்படி உயர்த்துவதால் அது ஏழைகளைப் பாதிக்காது என்று சொல்வது தவறு என்று மிகப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, சிறு தொழில்களுக்கு இப்பொழுது பெரும் பணம் செலவழிக்கப்பட்டு வருகிறது. ஒரு பெரும் தொழிலை, பெரிய பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதன் மூலம் மட்டும் இந்த நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிட முடியாது. ஒவ்வொரு வீட்டிலும் சிறு சிறு தொழிற்சாலையை $\frac{1}{2}$ ஹார்ஸ் பவர், ஒரு ஹார்ஸ்

பவர் கொண்ட மோட்டார்களைக் கொண்டு அமைத்து, அப்படி அமைக்கப் படும் தொழிற்சாலையின் மூலம் இந்த நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கலாம் என்று எண்ணுகிறேன். அதைத் தான் இன்றைக்கு இங்கு கூற விரும்புகிறேன். ஏராளமாக இருக்கும் வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு 2,000, 3,000 என்று போட்டு சிறு தொழில் செய்வதற்கு வழி செய்ய வேண்டும். இந்த மாதிரி பயன் பெறத்தக்க கடன் வசதிகளைச் செய்து கொடுத்து ஆங்காங்கு வசதி களைச் செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஐ. ஆர். 8-பற்றிப் பத்திரிகைகளில் மிகப் பிரமாதமான விளம்பரங்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதில் நல்ல விளைச்சல் இருக்கிறது. அதிகம் காண்கிறது என்பதை அத்தனை பேரும்ஒத்துக் கொள்கிறார்கள். அதற்கு ஏராளமான உரம், உப்பு, மருந்துகள் போன்ற வைகள் தெளிக்கப்பட வேண்டிய அவசியமிருக்கிறது. செலவும் அதிக மாக ஆகிறது என்று பல விவசாயிகள் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். நான் அதைப் பற்றிக்கூட அதிகம் சொல்ல விரும்பவில்லை. ஐ.ஆர்.8-அவ் வளவு அதிகமாக உற்பத்தி ஆகிறதே தவிர, அது உணவிற்குப் போதுமான நல்ல சாப்பாடாக இல்லை என்று அதைச் சாப்பிட்டுப் பார்த்தவர்கள் அத்தனை பேரும் சொல்லுகிறார்கள். அது மாத்திரமல்ல. ஐ.ஆர்.8 நெல் விளைந்த அந்த வைக்கோலை மாடு கூட தின்னவில்லை என்று அத்தனைபேரும் சொல்லுகிறார்கள். அந்த வைக்கோலையே மாடு தின் னவில்லை என்றால், அதில் விளைந்த அரிசியை மனிதர்கள் சாப்பிட்டால் என்ன விளைவு ஏற்படும் என்று நான் விளக்கத் தேவையில்லை. ஆகவே ஐ.ஆர்.8 நல்ல உணவிற்குரியது இல்லை என்று பெரும்பாலானவர்கள் கூறி விட்டார்கள். சாப்பாட்டிற்கே லாயக்கில்லை என்று கூறி விட்டார் கள். ஆனால் அதிகம் விளைகிறது. அதை மாத்திரம் குறிக்கோளாக வைத்துக்கொண்டு, மனிதர்களுக்கு அது பயன்படாது இருக்கக்கூடிய நிலைமை இருப்பதைக் கவனித்து, அதற்கு ஏதாவது மாற்று கண்டு பிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். ஒரு பெரிய தவறான கருத்தை இந்த மன்றத்தின் மூலமாக நாட்டிற்கு அறிவிப்பதற்காக இதை ஒரு வாய்ப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. அய்யாசாமி அவர்கள் கருதுகிறார்கள். ஐ.ஆர். 8 அரிசி உண்மையிலேயே நல்ல ருசியானது தான். திரு. அய்யாசாமி அவர் களுடைய ருசியினுடைய தன்மை எப்படியோ, மற்றவர்களுடைய ருசியினு டைய தன்மை எப்படியோ ? அரசாங்கம் ஒரு பெரிய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு ஒரு 7 லட்சம் ஏக்கராக்களிலே இந்த ஐ. ஆர். 8 ரக விதைகள் மூலம் கண்ட்ரோலை எல்லாம் எடுத்துவிட்டு, நல்ல விளைச்சல் வரும்படியான நிலைமை ஏற்படக்கூடிய மிகப் பெரிய புரட்சிகரமான திட்டம். விவசாய மக்களுக்குக்கூட நல்ல வருமானம் வருகிற ஒரு பெரிய முயற்சி அது. அதை ஒரு துஷ்பிரசாரமாக—தப்பாக அந்த வார்த்தையை எடுத்துக்கொள்ள வேண்டாம்—அந்தக் கருத்தை இந்த மன்றத்தின் மூலம் பரவ விடக் கூடாது என்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன். அது நல்ல வகை. மாண்புமிகு உறுப்பினர்கள் போன்ற சீமான்களுக்கு வேண்டுமானால், அரிசியிலே பல வகையான அரிசி கிடைக்கின்றது. மிக உயர்ந்த ரகம், (Finer varieties) என்று இருக்கிற வகையைச் சேர்ந்ததல்ல. ஆனால் நம்மைப் போன்ற சாதாரணமானவர்கள் சாப்பிடுகிற மாதிரி அரிசி அது. அந்த முயற் யில் அரசாங்கத்தைக் குறை சொல்லுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்கள் கோபித்துக்கொள்ளலாம். அவர்கள் பழி வேண்டுமானாலும் சொல்லட்டும். ஆனால் தமிழ் நாட்டிற்கு வேண்டிய, தமிழ்நாட்டு மக்களுக்கு வேண்டியவைகளில் நாம் நடத்துகிற மிகப் பெரிய நல்ல தொரு காரியத்திற்குக் களங்கம் கற்பிப்பது அழகல்ல. ஏதோ விவ காரத்திற்குச் சொல்லுவது மாதிரிச் சொல்ல வேண்டாமென்று நான் ரொம்பவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, நண்பர் திரு. அய்யாசாமி அவர்கள் வேண்டு மென்றே பொதுமக்கள் மத்தியிலே இத்தகைய தவறான கருத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்துடன் சொல்லவில்லை. அந்த மாதிரிச் சொல்லுகிறவர்களிடம் நான் கேட்டுமிருக்கிறேன். ஆனால் நமது தமிழ் நாட்டிலே கூட ஒரே ரகமான அரிசி எல்லா இடங்களிலும் சாப்பிடுவதில்லை. ஒரு புது ரகத்தை ஒரு இடத்திற்குக் கொண்டு வருகிறபோது, அவர்கள் முதலில் சாப்பிடாமல் இருந்தார்கள். அந்த மாறுதலை அவர்கள் விரும்பாமல் இருக்கலாம். ஆனால் இன்னும் சிறிது காலம் போய் அவர்கள் அந்த மாறுதலை ஏற்றுக்கொள்ளலாம். தமிழ்நாட்டில்இருக்கக் கூடிய பழைமையான அரிசி ரகங்களை, உயர் ரகங்களை ஒவ்வொரு இடத் திற்கும் கொண்டு போனபோதுகூட, அவர்கள் விரும்பிச் சாப்பிடாமல் இருந்தார்கள். அது உடம்பிற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்று சொல்லு வதுண்டு. இப்போது அவர்கள் அதை விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அதுபோலவே வைக்கோலையும் நீண்ட நாள் போரிலே போட்டு, சில மாதங்கள் கழித்து அதை மாட்டுத்தீவனமாக உபயோகிக்கும்போது, அதே வைக்கோல் சொறசொறப்பில்லாமல், மாடுகள் விரும்பிச் சாப் பிடுகின்றன என்று சொல்லக் கேட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** என்னுடைய கூற்று எல்லாம் ஒரு பெரிய முயற்சி, இந்த நாட்டிற்கு ரொம்பத் தேவையான முயற்சி, விவசாயிகளுடைய குறைகளை நிவர்த்திப்பதற்கான முயற்சி. இப்படிப்பட்ட நேரத்திலே சாப்பிடுவதற்கே லாயக்கில்லை என்று சொல்ல உறுப்பினர் ஆரம்பித்து விட்டார்கள். ஒரு பக்கத்தில் அவர்கள் உணவு இல்லை என்று சொல்லுகிறார்கள், இன்னொரு பக்கத்தில் ஏராளமான உணவு தானியம் விளைகிற நேரத்தில், சாப்பாட்டிற்கே அது லாயக்கில்லை என்று சொல்லுகிறார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலும் தென்னாற்காடு மாவட்டத்திலும் 2 லட்சம் ஏகராவிற்கு மேல் இருக்கிறது. நமக்கு இருக்கிற ஒரு பெரிய நெருக்கடி எல்லாம் போகிறது மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கும் நல்ல வருமானம் வரக் கூடிய ஒரு பெரிய முயற்சியிலே ஈடுபட்டிருக்கும்போது, இப்போதே வைக்கோலைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். வைக்கோல் நன்றாக இல்லை, ரேஷனில் அரிசி சரியாக இல்லை என்கிற மாதிரிச் சொல்வது, விவசாய மக்களுக்கே ஒரு கெடுதல் விளைவிக்கக் கூடியதென்று தான் சொல்லுகிறேன். அவர்கள் அர சாங்கத்தை என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். இவைகளெல் லாம் நல்ல ஆராய்ச்சி செய்யப்பட்டு, அரிசி வரப்போகிறது என்று மக்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். உயர் ரகம் என்று கூறக் கூடியதல்ல. ஆனால் இது ஒரு நல்ல மாதிரியான அரிசி என்பதிலே கொஞ்சம் கூட சந்தேகமில்லை என்பதை மட்டும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. எம். அய்யாசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக் கத்திற்கு என்னுடைய நன்றி. ஆனால் ஏதோ இதன் மூலமாக தவறான ஒரு கருத்தைப் பரப்ப வேண்டுமென்ற எண்ணத்தோடு நான் இந்தச் செய்தியைக் கூறவில்லை என்பதை அமைச்சர் அவர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நாட்டிலே இருக்கக் கூடிய உணவு நெருக்கடியை எந்த அமைச்சரவையாக இருந்தாலும் தீர்க்க வேண்டும். நாட்டு மக்களுக்கு உணவு வேண்டும் என்பதிலே நான் உறுதியாக இருக் கக்கூடியவனே தவிர, நாட்டு மக்கள் பட்டினி கிடக்க வேண்டும், அதன் மூலமாக இந்த அரசுக்கு அவதூறு ஏற்பட வேண்டுமென்ற அளவிற்கு அவ்வளவு கீழ்த்தரமான கொள்கையுடையவன் அல்ல என்பதை மாண்பு மிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அதைச் சாப்பிட்டுப் பார்த்துக் கூட சொல்லவில்லை. பல விவசாயிகள் என்னிடம் சொன்னார்கள். அமைச்சரவர்கள் அதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதில் ஏதாவது குறைகள் இருக்கின்றனவா என்பதைக் கொஞ்சம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று மாத்திரம் அவர்களை நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். அய்யாசாமி] [4th March 1970

அடுத்தபடியாக, சென்னை நகரத்தில் உள்ள குடிசைகளை ஒழிப்பதற்கு என்று ஒரு கணிசமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏழு ஆண்டு காலத்தில் சென்னை நகரத்தில் உள்ள குடிசைகளை எல்லாம் ஒழித்து விடுவது என்ற திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருப்பது உண்மையிலேயே மிக வரவேற்கத்தக்க ஒன்று. அதே நேரத்தில் சென்னை மாநகரத்தில் இருக்கிற குடிசைகளை ஒழிப்பதற்கு மாத்திரம் தான் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாக நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது, ஆனால், தமிழ்நாடு முழுமையும் எங்கு பார்த்தாலும் குடிசைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் கால்வாசி குடிசைகளாகத்தான் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் காரில் போகும்போது, ரோட்டின் இரு மருங்கிலும் குடிசைகளாகவே காட்சியளிப்பதைப் பார்த்திருக்க முடியும். குடியிருப்பதற்கு வசதி இல்லாத காரணத்தினாலே, எங்கேயாவது புறம்போக்கு நிலம் இருக்கிறதா என்று பார்த்து, அங்கே குடிசை போட்டுக்கொண்டு வாழ்கிற நிலை நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே தலைநகரைச் சீர் திருத்துவது என்ற அடிப்படையிலே சென்னை மாநகரத்திலுள்ள குடிசைகளை ஒழிப்பதற்கென்ற திட்டத்தோடு நின்றுவிடாமல், தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய குடிசைவாழ் மக்களுக்கு ஒரு ஆக்கரீதியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று அமைச்சரவையை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நில உச்சவரம்புச் சட்டத்தைப் பற்றி 30 ஸ்டாண்டர்டு எக்கராக இருந்ததை 15 எக்கராகக் குறைத்ததுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசினார்கள். 30 ஸ்டாண்டர்டு எக்கராக இருப்பதை 15 எக்கராகக் குறைத்ததை என்னைப் போல் உள்ளவர்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறார்கள். அரசாங்கம் செய்த காரியத்தில் நன்மை தீமைகளை எடுத்துக் காட்டி உறுப்பினர்கள் பேசியிருந்தால், அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் வந்திருக்காது. அவர்கள் சொல்லும்பொழுதே முன்னால் இருந்த அரசு அப்படிச் செய்தது, இப்படிச் செய்தது என்ற குற்றச்சாட்டை எங்கள் மீது எடுத்து வீசி அதன் அடிப்படையில் 15 எக்கராகச் செய்துவிட்டோம் என்று சொல்லும்போது, நானும் அதற்குரிய விளக்கத்தைத் தரவேண்டியவனாக இருக்கிறேன். நில உச்சவரம்புச் சட்டம் என்று ஒன்று இல்லாத நிலைமையில், எந்த எந்தப் பிரிவை எப்படி அமைத்தால் அது ஹைகோர்ட்டில் சென்று சட்டத்திற்கு ஊறு விளைவிக்காத வகையில் சாமர்த்தியமாகச் செய்ய முடியும் என்று ஆராய்ந்து பார்த்து, சட்ட நிபுணர்கள் ஆலோசனைகளைக் கேட்டு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் எவ்வளவு சிரமப்பட்டுக் கொண்டு வந்திருக்க வேண்டும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அதன் மூலமாக அந்த அரசு எடுத்துக்கொண்ட நிலத்தின் அளவு எவ்வளவு என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

**திரு. எம். அய்யாசாமி!** அது அமைச்சர் அவர்களே கூறினார்கள், மிகக் குறைவாக எடுக்கப்பட்டிருக்கிறது என்று. இந்த மூன்று ஆண்டு காலத்தில் பாக்கி இருக்கிற நிலங்களை கணக்குப் போட்டு எடுக்கவில்லை என்று சொல்லப்பட்டது. இந்த வகையில் இந்த அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டால், இன்னும் எந்த அளவுக்கு அதிகமாக எடுக்க முடியுமோ அவ்வளவு எடுக்க முடியும். 15 எக்கர் என்று சட்டம் கொண்டுவரும்பொழுது, உங்களுக்கு அதிகப்படியான சிரமம் வைக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏற்கெனவே உள்ள நில உச்சவரம்புச் சட்டத்தில் 30 என்பதை அழித்துவிட்டு 15 என்று மாற்றுவது தான் வேலை. அந்த வேலை தான் இந்த அரசுக்கு இருக்கிறதே தவிர, மற்றப்படி இந்தச் சட்டத்திற்கு வேண்டிய அடிப்படையான ஏற்பாடுகள், நிலைமைகளை ஆராய்ந்து முடிவு கட்டுகிற எல்லா வேலைகளையும் ஏற்கெனவே முடித்து உருவம் கொடுத்தாகிவிட்டது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே மாண்புமிகு



4th March 1970] [திரு. எம். அய்யாசாமி]

உறுப்பினர்கள் இன்றைய அரசு தீவிரமாக 15 ஸ்டாண்டர்டு எக்கர் என்று நிர்ணயித்ததைப் பாராட்டுவதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. அது வரவேற்கத்தக்க ஒருசெய்தி. நான் ஒரு நிலச்சுவான்தார் அல்ல, இதைக் கொண்டுவந்துவிட்டார்களே என்று கவலைப்படுவதற்கு. ஆனால், அதே நேரத்தில் செய்த காரியத்தைச் சொல்லும்பொழுது, செய்வதற்குக் காரணமாக இருந்தவர்களை வாழ்த்தாவிட்டாலும் குறை சொல்லாமலாவது இருக்க வேண்டும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு எஸ். ராகவானந்தம் :** தலைவர் அவர்களே, நாங்கள் பாராட்டியது எல்லாம் முன் அறிவிப்பு இல்லாமல் திடீரென்று கொண்டு வந்து, நிலத்தைப் பிரிப்பதற்கு வசதி இல்லாமல் செய்ததைத்தான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். அய்யாசாமி :** அன்றைக்கு அந்தச் சட்டத்தைக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் இந்தப் பிரச்னை மக்கள் மத்தியில் எழுப்பப்பட்டு ஆராய்ந்து விமர்சிக்கப்பட்டு முதல் தடவையாகச் சட்டம் வந்தது. இன்று அப்படி அல்ல. கொண்டு வரக்கூடிய சட்டம் 30 எக்கர் என்று இருப்பதை அழித்துவிட்டு 15 எக்கர் என்றுதான் போட வேண்டும். வேறு ஒரு சிரமமோ கஷ்டமோ கிடையாது. இன்றைக்கு சட்டத்தைப்பற்றிப் பேசியாகிவிட்டது. இன்னும் சட்டம் வரவில்லை. இதற்குப் பின்னால் ஒரு வருஷம் போனால்தான் இதிலிருந்து எப்படித் தப்பித்துக்கொண்டு போயிருக்கிறார்கள் என்பது புரியும். பின்னால்தான் தெரியும். நடைமுறையில் பார்த்தால்தான் தெரியும். எத்தகைய சட்டத்திற்கும் வளைந்து கொடுக்க தப்பித்துக் கொள்ள நம் நாட்டு மக்கள் மிகத் தெளிவாகக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். எவ்வளவுதான் சட்டங்களை சாமர்த்தியமாக உருவாக்கினாலும்கூட, அதிலும் நுழைந்துகொண்டு தப்பித்துக்கொள்ளுவதில் திறமையுள்ளவர்கள் தமிழ் நாட்டு மக்களைப் போல் வேறு எந்த மாநிலத்திலும் இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

DEUPUTY CHAIRMAN : The Hon. Member may contince his speech to-morrww.

The House will now adjourn and meet again at 4 p.m. to-morrow.

The House then adjourned. 7-00 p.m.

## III. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

155. Finance Accounts 1968-69, Appropriation Accounts 1968-69 and Audit Report 1970 of the Government of Tamil Nadu. [Laid on the table of the House under Article 151 (2) of the Constitution of India].

B. Reports, Notification and Other Papers—*Nil.*

## APPENDIX.

[*Vide* answer to starred question No. 144 on page 311]

தொகுதி IV பணியாளர்களுக்கான தேர்வுத் திட்டம்.

எஸ். எஸ். எல். சி. தரம்.

| பாடம். | கால அளவு. | மதிப்பெண்கள். பெருமளவு. | மதிப்பெண்கள். தேர்வு பெற வேண்டிய குறைந்த அளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. இரண்டு பிரிவுகளைக்கொண்ட ஒரு கட்டுரைதாள். முதல் பிரிவு, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது அல்லது இந்தி மொழியில் எழுதப்பட வேண்டியது ; இரண்டாவது பிரிவு, ஆங்கிலத்தில் எழுதப்பட வேண்டியது (தற்கால உலகியல், கருத்துக்களை வட்டார மொழியில் வெளியிடும் திறனும், ஆங்கிலத்தில் எளிய இனிய நடையில் எழுதக் கூடிய திறனும் பரிசோதிக்கப்படும்). | 3 | 150 | |
| 2. சுருக்கி எழுதுவது இரண்டு பிரிவுகளைக் கொண்ட ஒரு தாள். முதல் பிரிவு ஆங்கிலத்தில் விடையளிக்க வேண்டிய ஆங்கிலப் பகுதி கொண்டது; இரண்டாவது பிரிவு இரண்டு கடிதப் போக்குவரத்துத் தாள்கள் அடங்கியது; ஒன்று தமிழிலும் மற்றொன்று ஆங்கிலத்திலும் இருக்கும். தேர்வு எழுதுபவர்கள் கடிதப் போக்குவரத்து தாளை தமிழிலோ, ஆங்கிலத்திலோ எழுதலாம். | 3 | 100 | மொத்தமாக சேர்த்து 135 மதிப்பெண்கள். |
| 3. ஆங்கிலத்தில் குறிக்கப்பட்ட பொது அறிவுத்தாள் தேர்வு எழுதுபவர்கள் விடைகளை ஆங்கிலத்திலோ வட்டார மொழிகளிலோ எழுதலாம் (குறிப்பாக இந்தியாவிலும் தமிழ் நாட்டிலும் உள்ள எல்லா வகை வாழ்க்கை முறைகள் குறித்த நுண்ணிய அறிவு சோதிக்கப்படும்). | 3 | 100 | |





| பாடம். | கால அளவு. | மதிப்பெண்கள். பெருமளவு | மதிப்பெண்கள். தேர்வு பெற வேண்டிய குறைந்த அளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 4. இரண்டு பிரிவுகளைக்கொண்ட ஒரு மொழிபெயர்ப்புத் தாள். முதல் பிரிவு வட்டார மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது, இரண்டாவது பிரிவு ஆங்கிலத்தில் இருந்து வட்டார மொழியில் மொழி பெயர்ப்பது. | 3 | 100 | |

**குறிப்பு.**—தேர்வு எழுதுபவர்களில் தமிழ்மொழியில் போதுமான அளவு அறிவு பெற்றவர்கள் ஆங்கிலத்தில் பதில் எழுத வேண்டிய தாள்களைத் தவிர பிற தாள்களைத் தமிழிலே எழுதவேண்டும். தமிழில் போதிய அறிவு பெறாதவர்கள் தமிழல்லாத பிற மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது அல்லது இந்தி இவற்றில் ஏதேனும் ஒரு மொழியில் பதில் எழுத வேண்டும்.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

**Thursday, the 5th March 1970.**

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (The Hon. Thiru M. A. MANICKAVELU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*Deputation*

*159 *Q.*—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Health be pleased to state the number of Officers of the Education Department deputed to the Government of India as on 1–8–1969?

**முகமையில் அனுப்புதல்.**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1—8—1969 அன்றுள்ள நிலவரப்படி இந்திய அரசுப் பணிக்கு முகமையில் அனுப்பப்பட்ட கல்வித் துறை அதிகாரிகள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** இரண்டு.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** இவர்கள் எந்தப் பணியின் காரணமாக மத்திய அரசிடம் செயல்படுகிறார்கள்?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, திருமதி சரஸ்வதிதுரைசாமி என்பவர் (Inspectress of Girls Schools) ஆக இருந்தவர்கள் இப்போது அசிஸ்டெண்ட் எஜுகேஷனல் அட்வைசராக ஷை 22—3—1965-லிருந்து பணியாற்றுகிறார்கள். திரு. பி. ராமநாராயண சாஸ்திரி சமஸ்கிருத துணை பேராசிரியராக இருந்தவர். 16—10—1965 லிருந்து அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசராக என். சி. சி. பட்டாலியன் பங்களூரில் பணியாற்றி வருகிறார்.

*Matriculation Schools*

*160 *Q.*—Thiru V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the number of Matriculation Schools functioning in the State in the current academic year, i.e. 1969–70;

(*b*) the medium of instruction in these schools; and

(*c*) whether Tamil is taught, as a subject in these schools?

### மெட்ரிகுலேஷன் பள்ளிகள்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நடப்புக் கல்வியாண்டில் (1969-70)-ல் இம்மாநிலத்தில் இயங்கிவரும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் எத்தனை ?

(இ) இந்தப் பள்ளிகளில் எந்த பயிற்றுமொழியில் பாடங்கள் கற்பிக்கப் படுகின்றன.

(உ) இப்பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) சென்னை பல்கலைக் கழகத்தின் கீழ் 19 பள்ளிகளும் மதுரை பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு பள்ளியும் இருக்கின்றன.

(இ) ஆங்கிலம்.

(உ) தமிழ் ஒரு மொழியாகக் கற்பிக்கப்படுகின்றது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, இப்போது உயர்நிலைப் பள்ளியாகச் செயல்படக் கூடியவைகள் மெட்ரிகுலேஷன் பள்ளிகளாக, தங்களை மாற்றிக்கொள்வதற்கு அரசு அனுமதிக்குமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் பல்கலைக் கழகத்தின் நேரடிப் பார்வையில் இருக்கின்றன. அவைகளுக்கு அனுமதி அளிப்பது பல்கலைக்கழகத்தின் உரிமையைச் சேர்ந்தது. இதற்கும் அரசிற்கும் தொடர்பு இருக்காது.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** இப்போது ஆங்கில மீடியத்தின் கீழ் செயல்பட வேண்டுமென்று ஆசைப்படக்கூடிய உயர்நிலைப் பள்ளி பல்கலைக் கழகத்திடம் அனுமதி வாங்கி மெட்ரிகுலேஷன் பள்ளியாகச் செயல்படுகின்றது. ஆகவே அரசினுடைய மொழிக் கொள்கையிலிருந்து விடுதலை பெறுவதற்காக இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதால் மெட்ரிகுலேஷன் பள்ளிகளிலும் தமிழைப் பாடமொழியாக வைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் தெரிவித்தபடி, தமிழ் பாட மொழியாக இருந்து வருகிற மற்ற உயர்நிலைப் பள்ளிகளில் இருப்பதைப் போல கொண்டுவர வேண்டுமென்றால் பல்கலைக்கழகத்தைத்தான் அணுக வேண்டும். பல்கலைக் கழகம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. பல்கலைக் கழகம் வேண்டுமென்றால் நாம் கொடுக்கலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படுகின்றன. அங்கு மாணவர்களுக்குக் கட்டணம் வசூலிப்பதற்கும் கட்டண நிர்ணயம் செய்வதற்கும் அந்தப் பள்ளிகளுக்குச் சுதந்திரமான உரிமை இருப்பதால், அதிகக் கட்டணம் வசூல் செய்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதனால், மற்றப் பள்ளிகளிலிருந்து மெட்ரிகுலேஷன் பள்ளிக்குப் போகிற மனநிலை நிர்வாகிகளிடையே உருவாகி வருவதால் அதைத் தடை செய்வதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, 2,500 அளவுக்கு உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அவற்றில் 19, 20 பள்ளிகள்தான் மெட்ரிகுலேஷன் பள்ளிகளாக இருக்கின்றன. அவற்றில் கூட ஆங்கிலோ—இந்திய பிள்ளைகளுக்கும், மற்றும் ஆங்கிலத்திலேயே



தொடர்ந்து படிக்கிறவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கிற வகையில் பல்கலைக் கழகம் பார்த்து அனுமதி அளிக்கிறது. எந்தப் பள்ளியையும் மாற்ற வேண்டுமா என்பது இப்போது பரிசீலனையில் இருக்கிறது. எதிர்காலத்தில் வரும் விண்ணப்பங்களைப் பொறுத்துத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. கே. அறிவழகன் :** தலைவர் அவர்களே, இந்த மெட்ரிகுலேஷன் பள்ளியிலே வேலை பார்க்கிற ஆசிரியர்கள் பயிற்சி பெறாத ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களிலே பல பேர் வேலையிலிருந்து நீக்கப்படுகிற நேரத்தில் எந்தவிதமான சடங்கு, சம்பிரதாயம் இல்லாமல் நீக்கப்படுகிறார்கள். அவர்களுடைய வேலையை நிர்ணயம் செய்வதற்கு இந்த அரசு ஆசிரியர் பணிக்குழு என்ற ஒன்றை டாக்டர் பால் அவர்களுடைய தலைமையில் அமைத்துள்ளது. ஆசிரியர் பணியை நிர்ணயிப்பதற்கு அந்தக் குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்ற குற்றச்சாட்டுகள் எந்தப் பள்ளியைப் பொறுத்தும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. அப்படிக் கொண்டுவரப்பட்டால், பல்கலைக்கழகத்தின் மூலமாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம். இப்போது அமைக்கப்பட்டிருக்கிற ஆசிரியர் பணிக் குழு துவக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவை குறித்துத்தான். மெட்ரிகுலேஷன் பள்ளியைப் பொறுத்து அமைக்கவில்லை. அதைப்பற்றியும் அந்தக் குழுவின் பரிந்துரை வருமானால், அரசு ஆராயும்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, will the Government preserve the right of the Matriculation Schools to have English as the medium of instruction if they want to do so?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மெட்ரிகுலேஷன் பள்ளியிலே மட்டும் ஆங்கிலத்தைப் போதிக்க இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சில குறிப்பிட்ட இடங்களில் மைனாரிடியாக சிறுபான்மையினரானவர்கள் உள்ள இடங்களில மட்டும் அவர்கள் தொடர்ந்து வேறு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தால் அல்லது ஆங்கிலத்தைப் படித்து வந்திருந்தால், அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில், ஆங்கிலம் பாட மொழியாக வைக்கப்பட்டிருக்கிறது. மற்ற பள்ளிகளில் அரசாங்கம் ஏற்றுக்கொண்ட கொள்கை அடிப்படையில், தமிழ் பாட மொழியாக இருக்க வேண்டுமென்று விதிப்படி இருக்கின்றது. அப்படியே டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிகளிலும் இருந்துவருகின்றது. குறிப்பிட்ட இடங்களில் சிறுபான்மையினரின் நலன் கருதியும் வேறு மொழியினரின் நலன் கருதியும் அந்த வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. சென்னை நகரத்தை மட்டும் எடுத்துக்கொண்டால், இங்கே 14 மொழியினருக்கும் அந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆங்காங்கு ஒன்றிரண்டு வகுப்புப் பிரிவுகள் ஆங்கிலத்தில் நடைபெற அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

### *Pension*

* 161 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) the number of pension applications pending wtih the District Educational Officer of each District received from the teacher, who retired prior to 1—4—1955 ; and

(b) the reasons for delay in this regard?

### ஓய்வு கால ஊதியம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1955-ஆம் நாளுக்கு முன்பு பணியினின்றும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களிடமிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட கல்வி அதிகாரிகளுக்கு ஓய்வு கால ஊதியம் கோரி கிடைக்கப் பெற்றுள்ளவற்றில் முடிவேதும் எடுக்கப்படாமல் இருக்கும் விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) இது குறித்து ஏற்படும் காலதாமதத்திற்குக் காரணங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) 219.

(இ) இந்த 219 நேர்வுகளில், ஓய்வூதியம் ஒப்பளிக்கப்படுவதற்காக மாநிலக் கணக்காய்வாளரிடம் 124 நேர்வுகள் முடிவு எடுக்கப்படாமல் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பு அதிகாரிகளுடன் 48 நேர்வுகள் குறித்து கடிதப்போக்குவரத்து நடந்து வருகிறது. பள்ளி நிர்வாகிகள் பள்ளிமேற்பார்வையதிகாரிகள் ஆகியவர்களுடன் 47 நேர்வுகள் குறித்துக் கடிதப்போக்குவரத்து நடந்து வருகிறது.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த ஆசிரியர்கள் ஓய்வு பெறுகிற காலம் முன்கூட்டியே தெரிகிற காரணத்தால், ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே இந்தக் கணக்கை முடித்து ஓய்வு பெறுகின்ற காலத்திலேயே அந்த ஓய்வு ஊதியத்தைக் கொடுப்பதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியத்தை உரிய காலத்தில் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கல்வித் துறைக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் பல்வேறு நிலைமைகள் வருவதால் எல்லா ஆசிரியர்களையும் பொறுத்தவரையில் அது முடிவதில்லை. பல வகையில் பல இடர்பாடுகள் இருக்கின்றன. அக்கவுண்டண்ட்—ஜெனரல் சிலபல சந்தேகங்களைக் கிளப்பிவிடுகிறார்கள், அதற்குப் பதில் எழுதவேண்டியிருப்பதால், சில வகையில் காலத் தாழ்வு ஏற்படுகிறது. அப்படி ஏற்படாமல் குறிப்பிட்ட காலத்தில் தர வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, இப்போது ரிடையராகும் ஆசிரியர்களுக்கும் பென்ஷன் வருவதற்கு 6 மாதத்திற்கு முன்பே பென்ஷனுக்கு மனு செய்ய வேண்டுமென்று விதியிருக்கிறது. இப்போது ஓய்வு பெறுகிறவர்களுக்கு இந்தக் கஷ்டமில்லை. இந்தக் கேள்வி 1—4—1955க்கு முன்னால் ரிடையர் ஆனவர்களைப் பற்றியது. ஜில்லா போர்டு உயர்நிலைப் பள்ளியில் வேலை பார்க்கிறவர்களுக்கு, துவக்கப் பள்ளியில் வேலை பார்க்கிறவர்களுக்கு, தாங்கள் வேலை பார்த்ததற்கான சான்றிதழ்கள் கிடைப்பதில்லை. அந்த ஜில்லா போர்டு ரிகார்டு எங்கேயிருக்கிறது என்று தெரிவதில்லை. கலெக்டர் ஆபீசில், ஹைஸ்கூலில், எங்கேயும் இல்லை. அதனால் நிச்சயமாக அவர்கள் அந்தச் சான்றிதழ் வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள். அவர்கள் வேலை பார்த்ததற்கான வேறு ஏதாவது சான்றிதழ்கள் இருந்தால், அதை வைத்துக்கொண்டு "பென்ஷன்" கொடுக்க அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** கொடுக்கப்பட்ட நேர்வுகள் அத்தனையும் அந்த அடிப்படையில்தான் இருக்கின்றன என்று சொல்வதற்கில்லை. அப்படி ஏதாவது சான்று கிடைக்காமலிருந்து வேறு சான்றுகள் கொடுப்பதற்கு வழி இருக்குமானால் அந்த வகையில் விண்ணப்பித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.





**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, 1955-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்னால் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு இந்த "பென்ஷன்" கொடுக்க வழிவகை செய்யப்படுமா ? இப்போது இது போன்ற ஆசிரியர்கள் 70, 75 வயதாகியிருப்பார்கள். குறைந்த எண்ணிக்கையில்தான் இருப்பார்கள் ஆகையால், அவர்களுக்கு ஏதாவது கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** 1955-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன் ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் 1958-ம் வருடம் மார்ச் மாதம் 1-ம் தேதி முதல் தரலாம் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### *Icons.*

*162 Q.—THIRU M. SANKARLINGAM PILLAI: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the icons dug out during the excavations carried out near Kannelwaramudaiyar temple in Veerapandi village, Madurai district reveal any specific period in the history of Tamil Nadu; and

(b) whether archaeologists are at work in this place?

### சிலைகள்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை:** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் ;

(அ) மதுரை மாவட்டம் வீரபாண்டி என்னும் ஊரில் கண்ணேல்வரமுடையார் கோவிலையடுத்து எடுக்கப்பட்ட சிலைகள் தமிழக வரலாற்றின் ஏதேனும் ஒரு கால கட்டத்தை வெளிக்காட்டுவதாக இருக்கிறதா ?

(இ) இவ்விடத்தில் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் செயல்படுகின்றனரா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) தோண்டி எடுக்கப்பட்ட சிலைகள் கி.பி. 14-வது அல்லது 15-வது நூற்றாண்டை, அதாவது, பிற்கால பாண்டியர் காலத்தைக் குறிப்பிடுவதாக உள்ளன.

(இ) இல்லை. எனினும், தோண்டி எடுக்கப்பட்ட சிலைகளும், கோயிலைச் சுற்றியுள்ள இடங்களும், மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறை அதிகாரி ஒருவரால் ஆய்வு செய்யப்பட்டன. அந்த இடத்தை மேலும், தோண்டி ஆய்வு செய்வது தேவையில்லையெனக் கருதப்படுகின்றது.

### *Padmanabapuram Palace in Kanyakumari district*

*163 Q.—THIRU M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether there is any proposal to renovate the Padmanabapuram Palace in Kanyakumari district and to construct a Museum Hall in that palace;

(b) if so, the estimated amount of expenditure ;; and

(c) whether the Kerala Government have agreed to share half of the total expenditure?

[5th March 1970

**கன்னியாகுமரி மாவட்ட பத்மனாபபுரம் அரண்மனை.**

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) கன்னியாகுமரி மாவட்ட பத்மனாபபுரம் அரண்மனையைப் புதுப்பிக்கவும் அதில் புராதனப் பொருட்காட்சி மண்டபம் அமைக்கவும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது ?

(உ) கேரள அரசாங்கம் இதற்கு ஆகும் செலவில் பாதியைத் தர ஒப்புக்கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ), (இ), (உ) :** பத்மனாபபுரம் அரண்மனை நல்ல நிலையில் உள்ளது. அதனோடு சேர்ந்துள்ள புராதன பொருட்காட்சி மண்டபம் பாழடைந்து கிடந்தது. ஆகையால் அதனை கேரள அரசு இடித்து விட்டது. அதே இடத்தில் புதிய கட்டிடம் ஒன்றை கட்ட ஒரு திட்டம் தயாரித்துள்ளது. இதற்கு ரூ. 3,26,000 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செலவில் பாதியை ஏற்றுக்கொள்ள கேரள அரசு ஒப்புக்கொண்டுள்ளது. எஞ்சிய பாதி செலவை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுள்ளது. இந்த அரசும் பாதிச் செலவை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டுள்ளது.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, பத்மனாபபுரம் அரண்மனை நிர்வாகம் கேரள அரசிடம் பாதியும் தமிழக அரசிடம் பாதியும் இருப்பதாக அறிகிறேன். அப்படியானால் கேரள அரசுக்கு இந்தப் பணத்தைக் கொடுத்து அவர்களைக் கொண்டு இதைச் செய்யச் சொல்லப் போகிறோமா? அவர்களிடத்தில் பெற்று நாம் செய்யப்போகிறோமா? நம்முடைய கண்காணிப்பில் இருக்க ஏதாவது செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கேரள மாநிலம் பிரியும்போது, 1956-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், பத்மனாபபுரம் அரண்மனை கேரள அரசுக்கு உரிமை உள்ளதாக உடன்பாடு செய்யப்பட்டது. அது இருப்பது தமிழகத்தில் தான். அதைப் பயன்படுத்துகிறவர்களும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆகவேதான் அந்த அரண்மனையில் பழமையைக் கருதியும் அங்கிருக்கிற தொல்பொருள்களின் தன்மையைக் கருதியும், கேரள அரசு அதைப் புதுப்பிப்பதற்கு ரூ. 3.25 லட்சம் செலவாகுமென்றும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டார்கள். நாம் அதற்குப் பிறகு ஆய்வு செய்து பாதிச் செலவை நாம் ஏற்றுக்கொள்ளலாம் என்றும் பொருட்காட்சி இன்றியமையாததாக அமையும் என்றும் ஒப்புக்கொண்டோம். இப்போது நடைமுறையில் பாதிச் செலவை அவர்களும் பாதியை நாமும் ஏற்றுக்கொள்கிறோம். அவர்கள் உரிமை உள்ளவர்களாக இருப்பதால், இந்த அரசு தான் மேற்கொண்டு செய்யும் என்று கருதுகிறேன். நம்முடைய அரசு பாதிச் செலவை ஏற்றுக்கொள்ளும் அளவில்தான் இங்கே தகவல் தரப்பட்டிருக்கிறது.

*Medium of Instruction in Colleges*

*164. Q. THIRU M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether orders have been issued to the effect that private colleges also should follow the policy of the Government, namely, that Tamil should be the medium of instruction in Government Arts Colleges; and

(b) if so, the action taken on the colleges which have failed to implement this order?



5th March 1970]

**கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் மொழி.**

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் கலைக் கல்லூரிகளில் பயிற்றுவிக்கும் மொழி தமிழ் என்ற அரசினர் கொள்கையைத் தனியார் கல்லூரிகளும் கடைபிடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டதுண்டா ?

(இ) ஆம் எனில், அவ்வுத்திரவை அமுல் நடத்தாத கல்லூரிகளின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Admission in Arts Colleges and Professional Colleges*

* 165. Q. THIRU M. SANKARALINGAM PILLAI: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether any representation was received by the Government to change the existing procedure of admission in Arts Colleges and Professional Colleges which vary from college to college and to prescribe a standard policy for all the colleges ; and

(b) if so, the steps taken thereon?

**கலைக் கல்லூரிகளில் தொழிற் நுணுக்கக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்தல்.**

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கலைக் கல்லூரிகள், தொழிற் நுணுக்கக் கல்லூரிகள் போன்ற கல்வி நிலையங்களில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுவதற்கு ஒவ்வொரு கல்லூரியும் ஒவ்வொரு விதமானக் கொள்கையைக் கடைபிடிப்பதை மாற்றி அரசாங்கமே ஒரு நிலையான கொள்கையை வகுத்து, அதனை அமுல் நடத்தும்படி முறையீடு வந்ததுண்டா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக முறையீடு இல்லை என்றாலும் கூட, தொழில் நுணுக்கக் கல்லூரிக்கு, குறிப்பாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு, பொதுவாக ஒரே செலக்ஷன் கமிட்டி வைத்து மாணவர்களை எடுக்கும் யோசனை அரசாங்கத்திற்கு ஏதாவது உண்டா? அரசாங்க ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு பொதுக் குழு இருக்கின்றது. தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அந்தந்தக் கல்லூரிகள் விருப்பம் போல மாணவர்களை எடுக்கிறார்கள். அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு எப்படி பொதுவாக இருந்து பட்டதாரிகளை எடுக்கிறார்களோ, அதேபோல தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் குழு அமைத்தால் நல்லது. 2,500 பி.டி. ஆசிரியர்கள் எடுக்கப்படுகிறார்கள். பத்தாயிரக்கணக்கான மனுக்கள் வருகின்றன. ஆகவே, அந்தக் குழு அமைத்து அதன் மூலமாக தேர்ந்தெடுப்பதற்கான நியதிகளை நிர்ணயிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறையை மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டு. சென்ற ஆண்டு அந்த முயற்சியில் ஈடுபட்டது. அப்படிச் செய்வது தவறு என்று வழக்கு மன்றங்களுக்குச் சிலர் சென்றார்கள். பொறியியல், மருத்துவக் கல்லூரி போன்று ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பள்ளிகளுக்கும் கொண்டுவந்தால், அதிக இடர்ப்பாடு இருக்காது என்ற எண்ணம் இருக்கிறது. அரசாங்கம் அதைப் பரிசீலிக்கும்.

**திரு. கே. அறிவழகன் :** கலைக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் முறையில் இரண்டு விதங்கள் இருக்கின்றன. அரசாங்கக் கல்லூரிகளில் கல்லூரி முதல்வரும், இரண்டு பேராசிரியர்களும் சேர்ந்து இதைச் செய்கிறார்கள். தனியார் கல்லூரிகளில் அவர்கள் விரும்புகின்ற வகையில் நடத்துகிறார்கள். இரண்டு கல்லூரிகளிலும் ஜூன், ஜூலை மாதங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் 50, 60 பேர்களும் அந்தப் பணியைச் செய்ய முடியாத நிலையில் இருப்பதால், சேர்க்கப்படுகிற மாணவர்களின் திறனை ஆராய்வதற்கு இரண்டு பேராசிரியர்களால் இயலாதிருப்பதால், கல்லூரிகளில் வேலைபார்க்கிற ஆசிரியர்கள் அனைவரும் மாணவர்கள் சேர்க்கப்படுகிற நேரத்தில அவர்களின் அறிவுத் திறன் மற்றவைகளை ஆராய்ந்து பார்க்கும் முறையில் அந்தப் பணியில் ஈடுபடச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** இப்போது அமைத்திருக்கிற குழுவிற்கு எந்த இடர்பாடும் இருப்பதாகப் புகார் எதுவும் வரவில்லை. மற்ற எல்லா ஆசிரியர்களையும் இந்த பொறுப்பில் ஈடுபடுத்துவது குழப்பத்தில் முடியும். ஒருவர் தேர்ந்தெடுத்தார், மற்றவர் மறுத்தார், தலைவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற குறைபாடுகள் அதிகமாகும். அதற்கே ஏராளமான நேரம் செலவாகும். உத்தியோகப் பற்றற்றவர்களை போடும்போதே, சிபாரிசுகள் போன்ற தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. எல்லோரையும் அதில் ஈடுபடுத்துவது என்றால், அவற்றைச் சமாளிக்க முடியாது என்றுதான் முதல்வரோடு இரண்டு முதிய பேராசிரியர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அவர்கள் தேர்ந்தெடுக்கும் பணியைச் செய்துவருகிறார்கள்.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, in view of the large number of writ petitions that are filed in the court regarding admission to medical colleges and as there is no settled policy, will the Government kindly consider abolishing the present system of interview and reference of mark lists to the Secretariat?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கிற முறை நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. 10, 15 ஆண்டுகளாக தொடர்ந்து வருகிற அந்த முறையின் அடிப்படையில் இந்த ஆண்டும் மேற்கொள்ளப்பட்டது. பலர் அது குறித்து ரிட்டுக்குப் போனார்களே தவிர, வழக்கு மன்றங்களில் அந்த ரிட்டுகள் நிற்கவில்லை. அப்படிப் போவதால் இடம் கிடைக்கலாம் என்று சிலரும், போடாவிட்டால் கிடைக்காமல் போகுமோ என்று சிலரும் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் போடலாமே என்று சிலரும் ரிட்டுகள் போட்டார்கள். அந்தக் கணக்கில்தான் 40. 50, 60 என்று வந்தது. ஆனால் அவர்கள் தெரிவித்த எந்தக் குறைபாடும் அங்கே நிற்கவில்லை. ஆகையால், இப்போது பின்பற்றுகின்ற முறையில் ஏதாவது யோசனை சொன்னால், சீர்திருத்தும் வகையில் மேற்கொள்ளலாம். ஏதாவது ஒரு முறை இருந்துதான் தீரவேண்டியிருக்கிறது. இப்போது ஏற்கனவே இருந்த முறை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அடுத்த ஆண்டு என்ன என்பது இனிமேல் யோசிக்கப்படவேண்டியதாகும்.



*Siddha Medical Units.*

*166 *Q.*—THIRU M. AIYASWAMY: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Siddha Medical Unit in the Government District Headquarters Hospitals; and

(*b*) if so, the details thereof ?

**சித்த மருத்துவம்.**

**திரு. எம. அய்யாசாமி :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆமெனில் அது பற்றிய விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) உண்டு.

(இ) 1967-ஆம் ஆண்டில் முதன் முதலாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. 1969–70-ஆம் ஆண்டில் மேலும் வேலூர், கடலூர், சேலம், கோயம்புத்தூர், இராமநாதபுரம் ஆகிய ஐந்து ஊர்களிலுள்ள மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்க அண்மையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்தக் கலவை மருத்துவ மனைகளில் எந்த முறையில் பயிற்சி பெற்றவர்களை நியமிப்பதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே; இந்தப் பிரிவில் எல். ஐ. எம். அல்லது ஜி. சி. எம். படிப்பு இருக்கிற ஒரு மெடிகல் ஆபீசரும், இரண்டு நர்சிங் ஆர்டர்லியும், ஒரு லஸ்கரும், ஒரு ஸ்வீப்பரும் நியமிக்கப்படுவதாக இருக்கிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அண்மையில் திருநெல்வேலியில் சித்த வைத்தியக் கல்லூரியிலிருந்து ஐந்தாண்டு பயிற்சி பெற்ற மருத்துவர்கள் பலர் வெளியே வந்திருக்கிறார்கள். அவர்களைச் சேர்ப்பதற்கான செயற்குறிப்பு இந்த மருத்துவ மனையில் இல்லை என்று அமைச்சர் தெரிவித்ததிலிருந்து தெரிகிறது. இப்போது கிட்டத்தட்ட 25, 26 பேர்கள் மூன்று நான்கு மாதங்களுக்கு முன் வெளியே வந்து தங்கள் தொழிலை நடத்த வேண்டுமென்றால், ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் பதிவு செய்ய முடியாத நிலையில் எம்.பி.பி.எஸ். என்றும் பதிவு செய்ய முடியாமல் எல்.ஐ.எம்., அல்லது ஜி.சி.எம். ஆகியவற்றிலும் பதிவு செய்ய முடியாமல் அத்தோடு வேலை எதற்கும் எடுத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். தனியாகத் தொழில் நடத்தலாமென்றால், அதுவும் அவர்களுக்கு முடியவில்லை என்பதால், அரசு அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே அதைப் பற்றிய தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. அப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்குமானால், அதை ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று பார்க்கலாம்.

[5th March 1970

**திரு. பி. திருஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, சித்த வைத்தியம் மிகவும் சிறந்ததுதான். ஆனால் அந்த வைத்தியர்களிடத்தில் சென்றால் கிழக்கே பார்த்துக்கொண்டு மருந்து சாப்பிடு, பாட்டிமையில் மருந்து சாப்பிடாதே என்பது போன்று அறிவுக்கொப்பாதவாறு சொல்கிறார்கள். அதைத் திருத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** சித்த மருத்துவம் நல்ல மருத்துவம் என்று சொல்லும்போது அந்த மருத்துவரையும் நம்பத் தான் வேண்டும். நம்பாமல் இருக்க முடியாது. வழக்கறிஞர்களை நம்பா விட்டால், ஆறு அடி மேலேயும், வைத்தியர்களை நம்பாவிட்டால் ஆறு அடி கீழேயும் போகவேண்டிவரும் என்ற ஒரு பழமொழி உண்டு. அதனால் அந்த மருத்துவத்தை நம்புகிறோம் என்றால், மருத்துவம் செய்கிற அந்த மருத்துவரையும் நம்பத்தான் வேண்டும்.

## *Madurai Unit of the State Housing Board*

* 172. Q. THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) the number of 'B' type houses constructed and proposed to be constructed by the Madurai Unit of the State Housing Board at Gnanaolivupuram, Madurai;

(*b*) the details of the amounts payable by the allottees;

(*c*) the number of houses (i) allotted and (ii) remaining unallotted;

(*d*) whether there is any provision for out-right sale of these houses for lumpsum payment ; and

(*e*) if so, the details thereof?

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்த மதுரைப் பிரிவு.

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தைச் சேர்ந்த மதுரைப் பிரிவு மதுரை ஞான ஒளிவு புறத்தில் கட்டிய, கட்டக் கருதியுள்ள "பி" வகை வீடுகள் எத்தனை ?

(இ) வீடு ஒதுக்கப்பட்டவர்கள் செலுத்த வேண்டிய தொகை பற்றிய விவரங்கள் யாவை ?

(உ) (1) ஒதுக்கப்பட்ட (2) ஒதுக்கப்படாமல் எஞ்சியுள்ள வீடுகள் எத்தனை ?

(எ) இத்தகைய வீடுகளை ஒரே நிலையில் மொத்தத் தொகைக்கு விற்பனை செய்ய ஏற்பாடு ஏதேனும் உண்டா ?

(ஐ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) மதுரை வீட்டு வசதிப் பிரிவு, ஞானஒளிவுபுரத்தின் குறைந்த வருமானத் தொகுதியின ருக்கான வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் 12 "பி" வகை அங்கணங்களையும் நடுத்தர வருமானத் தொகுதியினருக்கான வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 12 (பி) வகை அங்கணங்களையும் கட்டியுள்ளது. ஞானஒளிவு புரத்தில் மேற்கொண்டும் "பி" வகை அங்கணங்கள் கட்டுவதற்கான செயற் குறிப்பு எதுவும் இல்லை.



5th March 1970]

| | கு.வ.தொ. | | ந.வ.தொ. | |
|---|---|---|---|---|
| | ரூ. | பை. | ரூ. | பை. |
| (இ) மனுவுக்கான கட்டணம் .. .. .. | 5 | 00 | 5 | 00 |
| மனுவுடன் செலுத்த வேண்டிய முன்பணத் தொகை. | 250 | 00 | 500 | 00 |
| வீடு ஒதுக்க ஆணையின் ஒரு திங்களுக்குள் செலுத்த வேண்டிய முதல் கையடைத் தொகை. | 5,000 | 00 | 3,750 | 00 |
| வீடு ஒதுக்கப்பட்டதற்கு ஆறு திங்களுக்கு பிறகு அல்லது அங்கணம் குடியேறுவதற் குத் தயாரென்று தகவல் வந்த 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டிய 2-வது கையடைத் தொகை. | 4,850 | 00 | 1,500 | 00 |
| பிணைக் கையடைத் தொகை .. .. | 250 | 00 | 250 | 00 |
| 25 ஆண்டுகளுக்குச் செலுத்தப்பட வேண் டிய திங்கள் தவணை (தோராயமானது). | 67 | 00 | 94 | 00 |

(உ) 24 அங்கணங்களும் ஒதுக்கப்பட்டுவிட்டன.

(எ) (ஐ). இந்த அங்கணங்களை மொத்தமாகத் தொகை பெற்றுக் கொண்டு விற்பதற்கு வகை எதுவும் செய்யப்படவில்லை. எனினும், வீடு ஒதுக்கப்படுபவர் முழுத் தொகையையும் செலுத்த விரும்பினால் அவர் அவ்வாறு செய்யலாம். அத்தகைய நேர்வில் அவர் பேணுதல் கட்டண மாக திங்கள் ஒன்றுக்கு ரூ. 10-ம், முத்திரைத்தாள், பதிவு செய்வதற்கான கட்டணமாகத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 8-ம் மட்டுமே இருபத்தைந்து ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டியிருக்கும். மேற்குறிப்பிட்டவாறு மொத்தத் தொகை செலுத்துபவருக்கும் 25 ஆண்டுக்களுக்குப் பிறகே அங்கணம் ஒதுக்கப்படும் ஏனையோருடன் கூடவே அந்த அங்கணம் அவர் பெயருக்கு மாற்றப்படும். அதுவரையில் அந்த அங்கணம் மதுரை வீட்டு வசதிப் பிரிவின் ஆளுகையில் இருந்து வரும்.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக ஒரு ஸ்டேட்மெண்டு வைக்க முடியுமா என்றுதான் கேட்டிருந்தேன். இருந் தாலும் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரமாக பதிலளித்திருக் கிறார்கள். இதிலிருந்து ஒன்று எனக்குப் புரிகிறது. இந்த வீடுகளை "அவுட் ரைட் பர்சேஸ்" என்கிற முறையில், லம்ப் சம்மாக இதற்காக பணம் முழுவதையும் செலுத்தினால் கூட, உரியவர்களின் பெயருக்கு உடனே இந்த வீட்டை மாற்றித் தருவதற்கு வழியில்லை என்று தெரிகிறது. 25 ஆண்டுகள் தொடர்ந்து ஒரு சில கட்டணத்தைத் தர வேண்டும் என்று இருக்கிறது. அதற்குப் பிறகு தான் அந்த வீட்டை அவர்கள் பெயருக்கு மாற்ற வேண்டும் என்று இருக்கிறது என்று நினைக்கிறேன். இது சரி தானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** லம்ப் சம்மாகப் பணம் கொடுத்தால், பெற்றுக்கொள்ளலாம். ஆனால் மாதம் ஒன்றுக்கு "மெயின் டினன்ஸ் சார்ஜ்" என்ற வகையில் ரூபாய் 10-ம், முத்திரைத் தாள் ரெஜிஸ்ட்ரேஷன் இவைகளுக்காக மாதம் ரூ. 8-ம், ஆக மொத்தம் ரூ. 18 மாதாமாதம் கட்டிக்கொண்டு வந்தால், 25 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வீடு அவர்களுடைய பெயருக்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, மதுரையில் இருக்கும் வீட்டுவசதி வாரியத்தின் இந்தத் திட்டத்தை விருதுநகரிலும் மற்றும் பல நகர்புறங்களிலும் வீடு இல்லாமல் கஷ்டப்படுகிற சாதாரண நடுத்தர வகுப்பாருக்கும் வசதி அளிக்கும் வகையில் விஸ்தரிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** வீட்டுவசதி வாரியத்தின் கீழ் "டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்டர்ஸ்" என்று சொல்லுகிற இடங்களில் முதலில் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்கிறோம். அடுத்து, ரெவின்யூ டிவிஷனல் ஹெட்குவார்டர்ஸின் தேவையைப் பூர்த்தி செய்கிறோம். ஆனால் தாலுக்கா ஹெட்குவார்டர்ஸில் முக்கியமான இடங்களில், தேவை ஏற்பட்டால், கட்டிக் கொடுக்கப்படும். அப்படியில்லாமல், அங்கெல்லாம் வீட்டைக் கட்டிவிட்டு, வாடகைக்கு ஆள் பிடிக்க முடியாது என்ற காரணத்தால்தான், தாலுக்கா ஹெட்குவார்டர்ஸில் எல்லாம் கட்டுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "கியாரண்டி" கொடுத்தால், அப்படிப்பட்ட இடங்களில் வீடு கட்டிக்கொடுக்க வாரியம் முன்வரும்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறிய உறுதிமொழியைக் கொடுப்பதற்கு, விருதுநகர் சம்பந்தப்பட்ட மட்டில், எந்தவிதமான தயக்கமுமில்லை. விருதுநகர், மாவட்டத் தலைநகர் அல்ல என்று சொன்னாலும் கூட, அங்கே அநேகமாக கலெக்டர் ஆபீஸ் தவிர மற்ற பிராந்திய ஜில்லா ஆபீசர்களின் பல அலுவலகங்கள் இருக்கின்ற காரணத்தால், இந்தப் பிரச்னைக்கே இடம் இருக்காது. எனவே அங்கே முக்கியத்துவம் கொடுத்து வாரியம் வீடுகள் கட்டித்தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, அதைத் தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். தேவை ஏற்பட்டால், நிச்சயமாகச் செய்துகொடுக்கப்படும் என்று. அப்படித்தேவை இருக்கிறது என்று காண்பிக்க வேண்டிய பொறுப்பு மாண்புமிகு உறுப்பினரைச் சேர்ந்தது.

**திரு. எம். ராஜா அய்யர் :** இந்த வீடுகளை லம்ப் சம்மாகக் கொடுத்து வாங்க வழி இருக்கிறதா என்று கேட்டேன். அதற்குப் பதில் அளிக்கும் போது, அமைச்சர் அவர்கள் அதற்கு வழி இருக்கிறது என்றாலும் கூட, மாதம் ஒன்றுக்கு ரூபாய் 18, தொடர்ந்து 25 ஆண்டுகளுக்குக் கட்டிக் கொண்டு வந்தபிறகு தான், அந்த வீடுகள் உரியவர்களின் பெயருக்கு மாற்றிக்கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அதையும் ஒரே தொகையாக, அதாவது 25 வருஷத்திற்கான தொகையும் ஒரே தொகையாகக் கொடுத்துவிட்டால், ஒரே நாளில் அந்த வீட்டை உரியவர் பெயருக்கு மாற்றித் தருவதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். தற்போது 25 ஆண்டுகளுக்கு முன்னால் அவருக்குச் சொந்தம் ஆகாது என்ற நிலை இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த வீட்டினுடைய "மெயின்டினன்ஸ்" வீட்டுவசதி வாரியத்தைச் சேர்ந்தது. அதனுடைய ஆளுகைக்குள் இருக்கிற காரணத்தால பொறுப்பு வாரியத்தைச் சேர்ந்ததாகிறது. எனவே அந்த வீடுகளுக்குத் தேவையான "அமெனிடீஸ்" எல்லாம் செய்துகொடுக்கவேண்டிய பொறுப்பு இருக்கிறது. யாருக்காவது ஒரு வீட்டைக் கொடுத்துவிட்டால், அதற்குத் தண்ணீர் வேண்டும், "லைட்" வேண்டும், வேறு விதமான சாக்கடைத் திட்டம் வேண்டும், மற்றும் ரோடுகள் வேண்டும் என்று கேட்கிறபோது, எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இதை எல்லா வீடுகளுக்கும் சேர்த்துத்தான் கொடுக்க வேண்டும். தனிப்பட்ட ஒரு வீட்டைக் கொடுத்துவிட்டால், அந்தப் பொறுப்பு உங்களுக்குத் தேவையில்லை, நானே பார்த்துக் கொள்ளுகிறேன் என்று சொன்னால், அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.



**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, ஜில்லா தலைநகர்கள் மட்டுமல்ல, தலூகா தலைநகரங்களில் கூட அரசாங்க அலுவலர்கள் பெரும் படையினராக இருக்கிறார்கள். ஆகையால் அந்த இடங்களில் வீட்டுக் கஷ்டங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. எனவே மாநிலத் தலைநகர், மாவட்டத் தலைநகர்கள் ஆகியவற்றுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து, வீடுகள் கட்டித் தருவதைப் போல், தாலூகா தலைநகர்களிலும் தேவையின் முக்கியத்துவத்தைக் கருதி அரசு வீடுகள் கட்டித் தர முன்வருவது அவசியம் என்று கருதுகிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் சம்பந்தப்பட்ட மட்டில் கூட, அங்கே மின்சாரத் துறையைச் சார்ந்த "அக்கவுண்ட் செக்ஷன்" ஒன்று இருக்கிறது. அதில் பணியாற்றுகிற 300 ஊழியர்களின் 300 குடும்பங்கள் அங்கே பல வருஷங்களாக இருக்கின்றன. எனவே இவர்களுக்கு வீடுகட்டித் தருவதற்கான ஏற்பாடுகளை அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, நான் இதை ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். தேவை ஏற்பட்டால், நிச்சயமாகச் செய்து கொடுக்கிறோம் என்று. ஆனால் அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. தாலூகா ஹெட்க்வார்டர்ஸையும் உடனடியாக எடுத்துக் கொள்ளுவது என்றால், வீட்டு வசதி வாரியத்தினிடம் போதிய நிதி வசதி இல்லை. எங்கெங்கே அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறதோ அங்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கப்படும். மேலும் வீடுகட்டுவதற்கான நிலம் வாங்குவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. சர்க்கார் புறம்போக்கு என்றால், எடுத்துக்கொள்ளலாம். தனியார் நிலங்களை "அக்கொயர்" செய்வதில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதற்கு விலை நிர்ணயிப்பதில் பலர் கோர்ட்டுக்குப் போவதால் தடை ஏற்படுகிறது. எனவே செய்யக்கூடாது என்ற எண்ணமில்லை. தேவை என்றால், நிச்சயமாகச் செய்து கொடுக்கப்படும்.

## *State Housing Board*

* 173. Q. THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether any priority is given to Legislators in the matter of allotment of sites and buildings by the State Housing Board?

### வீட்டுவசதி வாரியம்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள கட்டிடங்களையும், கட்டிட மனைகளையும் ஒதுக்குவதில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முதலிடம் ஏதேனும் அளிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** இல்லை.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** ஏற்கனவே வீட்டுவசதி வாரியம் ஒரு மனை மட்டுமின்றி, அதற்கு மேலாகவும் கொடுத்ததாகப் பத்திரிகையில் புகார் வந்தது அரசுக்குத் தெரியுமா ? இப்படிக் கொடுப்பது தவறு என்று நான் சொல்லவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு வீட்டு மனையாவது கொடுப்பதில் சலுகை காட்டப்படவேண்டியது நியாயம் என்று கூட நினைக்கிறேன். அவ்வாறு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** வீட்டு வசதி வாரியத்தின் கீழ் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதற்குப் பல சட்டதிட்டங்கள் இருக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 10 சதவிகிதம் ஒதுக்குகிறார்கள். தமிழ் நாடு அரசாங்க ஊழியர்களுக்கு 20 சத விகிதம் ஒதுக்குகிறார்கள். மிலிட்டரியில் பணியாற்றுகிறவர்களுக்கு 5 சதவிகிதம், மத்திய சர்க்கார் ஊழியர்

களுக்கு 15 சதவிகிதம், சேர்மனுடைய விருப்பத்திற்கு—டிஸ்கிரீஷனரி கோட்டா—என்று 10 சத விகிதம் ஒதுக்குகிறார்கள். அது போக, அதாவது 60 சதவிகிதம் போக, பாக்கியை 40 சதவிகிதம் பொது மக்கள் கோட்டா என்று ஒதுக்குகிறார்கள். இதற்குச் சட்டதிட்டங்கள் இருக்கின்றன. இதிலெல்லாம் கிடைக்காதவர்கள்தான் சேர்மனை அணுகி அவருடைய டிஸ்கிரீஷனரி கோட்டாவிலிருந்து எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அந்தக் கோட்டாவிலிருந்து தான் எம். எல். ஏ.க்கள், எம்.எல்.சி.க்கள், எம்.பி.க்கள் எல்லாம் பெற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு என்று பிரத்தியேகமாகக் கிடையாது. அவர்களுக்கு என்று தனிச் சலுகை கொடுக்கப்படுவதில்லை. ஆகையால் ஒரு சிலர் 2 இடங்களைக் கூட பெற்றிருக்கலாம். மைனர் என்று இருந்தால், பெற்றோர்களுக்குக் கொடுக்கலாம் என்று இருக்கிறது. தனித் தனியான குடும்பங்களாக இருந்தால், கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆகையால் ஒரு குடும்பத்தில் 2 பிளாட் கிடைக்கக் கூடிய நிலை இருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த வரையில், இடம் ஒதுக்கப்படுவதற்கு அந்த நபருக்கு சென்னையிலோ அல்லது சென்னை மாநில முழுவதிலும் எங்கேயாவது ஒரு வீடு இருந்தாலும், கொடுக்கக் கூடாது என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் "டிஸ்கிரீஷனரி கோட்டா" என்று ஒன்று இருப்பதால், பல சட்ட மன்ற உறுப்பினர்கள், அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்லது அவர்களுடைய நெருங்கிய உறவினர்கள், எல்லாம் வீடுகள் வாங்கியிருப்பதாகத் தகவல் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், அவர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆகியோரில் யார் யாருக்கு அப்படிப்பட்ட வீட்டுமனை வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா:** சட்ட மன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, பொதுமக்கள் கூட அப்படிப் பெற்றிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக வந்துவிட்ட ஒரு கெடுதலைத் தவிர அவர்கள் வேறு எதுவும் செய்யவில்லை. ஒருவருக்கு ஒரு வீடு இருந்தால், கொடுக்கக் கூடாது என்று சட்டம் இருப்பது உண்மை தான். ஆனால் வீடென்றால் என்ன என்பதே சரியாகப் புரியவில்லை. 3,000 ரூபாயில் வீடு வைத்திருந்தால், அதுவும் வீடுதான். குடிசை போட்டுக் கொண்டிருந்தால் அதுவும் வீடுதான். 1 லட்சம் ரூபாயில் வீடு கட்டிக்கொண்டிருந்தால், அதுவும் வீடுதானா என்ற பிரச்னை இருக்கிறது. வீட்டு மனை கேட்கிறவர்கள் வேறு வீடு இல்லை என்று சொல்லுகிறபோது, அதை நாங்கள் நம்பத் தான் வேண்டியிருக்கிறது. அப்படி நம்பித் தான் ஒதுக்கப்படுகிறது. அவர்களுக்கு ஏற்கனவே வீடு இருக்கிறதா என்று பார்த்து, அதை "வெரிபை" செய்ய, அதற்கான விவரம் சேகரிக்க ஒரு தனி டிபார்ட்மெண்டை "க்ரியேட்" செய்தால் கூட, இது முடியாது. அப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்ற காரணத்தால், மனு போடுகிறவர்கள் சொல்லுவதை, நம்மைப் போன்ற எம்.எல்.ஏ., எம்.எல்.சி. சொல்லுவதை, நம்பித் தான் "பிளாட்" ஒதுக்குகிறார்கள். ஆகையால், ஒரு சில இடங்களில் 2, 3 "பிளாட்டுகள்" கூட ஒதுக்கப்பட்டிருக்கலாம். அதைச் சரியானபடி "வெரிபை" செய்ய வசதியில்லை என்ற காரணத்தால் இவைகள் நடக்கின்றன.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் எல்லாப் பிரிவினருக்கும் வீட்டு மனைகள் ஒதுக்கப்படுவதைப் போல், பத்திரிகைக்காரர்களுக்கு என்று ஒரு குறிப்பிட்ட சதவீதத்தையாவது ஒதுக்க வீட்டு வசதி வாரியம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்காக நான் அனுதாபப்படுகிறேன். இப்படி ஒவ்வொருவருக்கும் ஒதுக்கிக்கொண்டே போனால், கடைசியில் அது ½ சத விகிதம் அல்ல, 5 சதவிகிதம் என்ற அளவுக்குப் போய்விடும் என்று நினைக்கிறேன். இப்





படிப்பட்ட பத்திரிகை நிருபர்களுக்கு பொதுமக்கள்கோட்டா இருக்கிறது. அதில் கிடைக்காவிட்டாலும் சேர்மனை அணுகி அவருடைய டிஸ்கிரீஷனரி கோட்டாவில் தங்களுடைய இன்ப்ளுவென்சைப் பயன்படுத்திப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அப்படி இல்லாவிட்டாலும் கூட, அவர்களுக்கு என்று ஒரு திட்டம் போட்டு அவர்களுக்கு என்று ஒரு காலனி அமைக்கச் செய்யலாம். அப்படிப்பட்ட முயற்சியில் மாண்புமிகு உறுப்பினர் இறங்கினால், நன்றாக இருக்கும் என்று நம்புகிறேன். எனவே தற்போதைய முறையில் குறுக்கிடுவது நல்லதல்ல என்று கருதுகிறேன்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, in view of the statement just now made by the Hon. Minister, that plots were being allotted from the discretionary quota of the Chairman of the Housing Board to Members of Parliament and Legislature, will the Government see that we who represent the people are not shown such special favours in future?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** சட்ட மன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் அவர்களுக்குத் தனிச் சலுகை கிடையாது. டிஸ்கிரீஷனரி கோட்டாவில் கொடுக்கலாம். லாட் போட்டு, சீட்டு குலுக்கிக் கொடுக்கிறார்கள். அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்குக் கிடைக்கும். இல்லாதவர்கள் டிஸ்கிரீஷனரி கோட்டாவில் கேட்கலாம். மற்றபடி வேறுவிதமாக ஒதுக்குவது இல்லை என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. அறிவழகன் :** தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் வீட்டுவசதி வாரியத்தின் சேர்மனுடைய டிஸ்கிரீஷனரி கோட்டாவிலிருந்து பெறுகிற நிலை பரிதாபத்திற்கு உரியது. அவர்களுக்கு, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்து 5 ஆண்டுகளுக்கு பதவியில் இருக்கும் வரை உபயோகப்படுத்திக் கொள்ள வழிவகை இருப்பதைப் போல், இங்கேயும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தனியாக வீடுகட்டிக் கொடுக்க வீட்டுவசதி வாரியம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். அதே நேரத்தில் இன்னொரு துணைக் கேள்வியையும் சேர்த்துக் கேட்க ஆசைப்படுகிறேன். அரசாங்க ஊழியர்களுக்கு இத்தனை சதவீதம், ராணுவத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு இத்தனை சதவீதம் என்று குறிப்பிட்டு ஒதுக்கப்படுவதைப் போல், நாட்டின் முக்கியமான பணியில் ஈடுபட்டிருப்பவர்களாகிய ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, நாட்டில் பணியாற்றுகிறவர்கள் ஒவ்வொருவருமே முக்கியமானவர்கள் தான். ஒவ்வொரு வகுப்பாருக்காக ஒவ்வொருவர் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர் தொகுதியிலிருந்து வந்தவர் என்ற காரணத்தால், ஆசிரியர்கள் தான் முக்கியமானவர்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். என்னைப் போன்ற என்.ஜி.ஓ.க்களிலிருந்து வந்தவர்கள் அரசாங்க ஊழியர்கள் தான் முக்கிய மானவர்கள் என்று சொல்லுகிறோம். அவர்களுக்காகப் போராடுகிறோம். எனவே இப்படிக் கேட்பதில் நியாயமிருக்காது. வசதியுள்ள எம்.எல்.ஏ.க்கள் சொந்தமாக வீடுகட்டிக்கொள்ள ஒரு இடத்தில் சேருவார்களானால், அவர்களுக்கு என்று ஒரு "ஹவுஸ் கன்ஸ்ட்ரக்ஷன் சொஸைடி" ஆரம்பித்து அதன் மூலம் கட்டிக்கொடுக்கலாம். அப்படிப்பட்ட யோசனையில் இறங்குமாறு நண்பர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** வீட்டுவசதி வாரியத்தினுடைய தலைவர்களுடைய இஷ்டப்படி கொடுக்கலாம் என்று இருக்கிறது. இஷ்டப்படி என்கிறபோது என்ன நடக்கிறது என்றால், யார் யார் வீட்டுவசதி வாரியத்தின் தலைவருடைய கவனத்தை ஈர்க்கிறசக்தி உடையவர்களாக இருக்கிறார்களோ அமைச்சர்களைக் கொண்டோ, மற்றவர்களைக் கொண்டோ அவரை நெருங்கிச்

செல்லுகிறவர்களாக இருக்கிறார்களோ அவர்கள்தான் பெறமுடிகிறது என்று சொல்லுகிறார்கள். ஆக சக்தி உள்ளவர்கள் தான் வாங்கிக்கொள்ளுகிறார்கள். இல்லாதவர்கள் வாங்கமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே இஷ்டப்படி கொடுப்பது என்பதற்கு ஒரு கொள்கை இருக்க வேண்டும். அதை வகுக்க இந்த அமைச்சரவை முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, விருப்பப்படி கொடுக்கலாம் என்று இருப்பதற்குக் காரணம், மற்ற வகைகளில் வீட்டு மனை பெறமுடியாத, அதிர்ஷ்டக்கட்டையான, நம்மைப் போன்ற எம்.எல்.ஏ.க்களுக்கும் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பது. பொது மக்களோடு போட்டி போட முடியாது என்று தான் இதை வைத்திருக்கிறார்கள். ஒரு எம்.எல்.சி. அதைத் தன்னால் செய்ய முடியவில்லை, மற்றவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால், அது நம்முடைய வீக்னஸைத் தான் காட்டுகிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. ஆகையால் நம்மைப் போன்றவர்களுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதால், தனியாக ஒதுக்கவில்லை.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, on a point of order. The insinuation made by the Hon. Minister in his answer to the supplementary put by the hon. Member Thiru Swaminathan is not right. The hon. Member said, if I have understood him aright, that we as Members should not be shown any special favours over other ordinary people. The hon. Minister, I understand, replied saying that the hon. Member (Thiru Swaminathan) had not got it from out of the discretionary quota because others more influential than he got it. What we say is that as Members we should not get special preference over the ordinary folk. The Minister's reply seems to suggest that others with more influence got the allotment and we, therefore, grumble about it. It is not so, Sir.

**திரு. ஸி. பி. சிற்றரசு :** ஒருவரைப் பார்த்து தானம் செய்யலாம் என்று சொல்லிவிட்டு தானம் இன்னாருக்குத் தான் கொடுக்க வேண்டும் என்று சொல்வது சரிதானா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN: The hon. Member Thiru Vasantha Pai should appreciate the humorous side of it and leave it there. Then it will not come under any point of order. Now we will go back to question 167.

### *Mechanised Boats.*

* 167 *Q.*—THIRU M. ETHIRAJALU: Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state:

(*a*) whether it is a fact that the mechanised boats given to fishermen are being sold by them to others;

(*b*) if so, the number of mechanised boats sold in this way; and

(*c*) the action taken by the Government to prevent this sort of selling?



### விசைப் படகுகள்.

**திரு. எம். எத்திராஜுலு :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மீனவர்களுக்குக் கொடுக்கப்படும் விசைப் படகுகள், அவர்களால் பிறருக்கு விற்கப்படுகிறது என்பது உண்மையா ?

(இ) அப்படியானால் எத்தனை விசைப்படகுகள் இப்படி விற்கப்பட்டிருக்கின்றன ?

(உ) இப்படி விற்பதைத் தடுக்க அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

(உ) வாடகைக் கொள்முதல் ஒப்பந்தத்தின் (22) பகுதியில் சொல்லியுள்ள படி, வாடகைக்கு படகு பெற்றுக்கொள்பவர்கள் மீனளத்துறை இயக்குநரின் எழுத்துமூலமான ஆணை இல்லாமல் படகை விற்கவோ, அடகுவைக்கவோ, படகை வாடகைக்கு அல்லது கீழ்க் குத்தகைக்கு விடவோ கூடாது. அன்றியும் அப்படகுகளை பிறர் பயன்படுத்த அனுமதிக்கவும் கூடாது. இதுமாதிரியான அனுமதி எதுவும் மீனளத்துறை இயக்குநரால் வழங்கப்படவில்லை.

**திரு. எம். எத்திராஜுலு :** அமைச்சர் அவர்கள் இதுவரை மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விசைப்படகுகள் விற்கப்படவுமில்லை, துர்விநியோகம் செய்யப்படவும் இல்லை என்று சொல்லுவதை நான் மறுக்க முன்வரவில்லை. ஆனால் இம்மாதிரியான பழக்கவழக்கங்கள் நீண்ட நெடுநாட்களாக இருந்து கொண்டு வருகின்றன என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு கூட, இப்படி விற்கப்பட்டிருக்கிறது, அல்லது அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது என்று பொதுமக்கள் நிரூபிக்க முன்வருவார்களானால், அதை ரகசியமாக வைத்துக்கொண்டு அப்படி விற்கப்பட்டது உண்மை என்று நிரூபிக்கப்பட்ட பிறகு, விற்கப்பட்ட அந்த விசைப் படகுகளை அரசாங்கம் பறிமுதல் செய்ய முன்வருமா ? அப்படிப் படகுகளை வாங்கியவர்கள் மீதும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்ற உத்திரவாதம் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இதுவரையிலும் அப்படிப்பட்ட ஆதாரத்தோடு யாரும் சொல்லுவதில்லை. இப்படி வருகிற புகார்களில் ஆதாரம் இல்லை என்று விசாரணையின் போது தெரிகிற காரணத்தால் தான், அவைகள் கைவிடப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல், ஆதாரத்தோடு யாராவது புகார் சொல்ல முன்வந்தால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும். குற்றவாளிகளையும் தண்டிக்கும் என்றும் கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். எத்திராஜுலு :** இப்போது கொடுக்கப்படும் விசைப்படகுகள் கூட்டுறவு முறையில் 3 பேர்களுக்குச் சேர்த்து தரப்படுகிறது. 3 பேர்களுக்குத் தரப்பட்டாலும், அதில் ஒருவர் மற்ற 2 பேர்களுக்குப் பணத்தை கொடுத்துவிட்டு அல்லது எதேச்சாதிகாரமாக அப்புறப்படுத்திவிட்டு, அதை ஒருவர் தான் அனுபவிக்கிறார். இதுமாதிரியான நிலைமை தமிழகம் எங்கும் இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவையோ அல்லது இதை விசாரிக்க என்று ஒரு தனி அதிகாரியையோ பிரத்தியேகமாக நியமனம் செய்ய அரசு முன்வருமா ? அந்தத் தனி அதிகாரி கொடுக்கப்பட்ட விசைப் படகினை 3 பேர்களும் அனுபவிக்கிறார்களா, அதன் வருவாயை 3 பேர்களும் பகிர்ந்துகொள்ளுகிறார்களா என்றும் கண்டறிந்து அதற்கான வழிவகை செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

[5th March 1970

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அப்படிக் கிடைக்கிற புகார்களை வைத்து விசாரிக்கும்போது, அந்தக் குழுவில் இருப்பவர்களே நாங்கள் யாரும் அப்படிக் கொடுக்கவில்லை, நாங்கள் 3 பேரும் தான் அனுபவிக்கிறோம் என்று தான் சொல்லுகிறார்கள். அப்படிக் குழுவில் இருப்பவர்கள் தங்களை விரட்டி விட்டார்கள், இப்போது நாங்கள் அந்தக் குழுவில் இல்லை என்று அவர்களே ஒத்துக்கொண்டு ஆதாரபூர்வமாகச் சொன்னால், நிச்சயமாக அரசாங்கம் அதன் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* 168 *Q*.—THIRU M. EHIRAJALU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether it is a fact that the mechanised boats allotted to fishermen are being used in other States;

(*b*) whether the permission of Fisheries Department is obtained before they are sent to other States; and

(*c*) whether the Government are keeping a watch as to whether those who are allotted mechanised boats are using them?

**திரு. எம். எத்திராஜுலு :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் விசைப் படகுகள் வெளி மாநிலங்களில் வேலை செய்வது உண்மையா ?

(இ) வெளி மாநிலங்களுக்குச் செல்லும் போது மீன் இலாகா உத்திரவு பெற்று செல்லுகிறதா ?

(உ) கொடுக்கப்படும் விசைப்படகுகளை வாங்கியவர்கள் உபயோகிக்கிறார்களா என்று அரசு கண்காணிக்கிறதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் மீன்பிடி விசைப் படகுகள் வாங்கியவர்களால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஒப்பந்தத்தின் 18 (எ) பகுதியின்படி அதாவது (சலுகை விலை அடிப்படையிலும், தவணை கொள்முதல் அடிப்படையில் அரசால் வழங்கப்பட்டது) மீன்பிடி விசைப்படகுகளை வெளிமாநிலத்திற்குக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் பிற மாநிலங்களில் இத்தகைய படகுகள் செயல்படுவதற்கு வேளாண்மைத்துறையின் 1969-ம் வருடம் ஜூலை மாதம் 22-ம் நாளிட்ட 2276ஆம் எண் அரசு ஆணையில் அரசு தற்போது தடை பிறப்பித்துள்ளது.

(இ) மீன்பிடி விசைப்படகுகள் வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு வேளாண்மைத்துறையின் 1969-ஆம் வருடம் ஜூலை மாதம் 22-ம் நாளிட்ட 2276ஆம் எண் அரசு ஆணையில் தடை விதிக்கப் பட்டுள்ளதால், முன் அனுமதி பெறுவது குறித்த வினா இப்போது எழவில்லை.

(உ) மீனளத்துறை படகுகளை குறிப்பிட்டக் காலத்திற்கொரு முறை மேற்பார்வையிடும் போது இயன்றவரை இதைச் சரிபார்த்து வருகிறது.

**திரு. எம். எத்திராஜுலு :** இப்போது கொடுக்கப்படுகிற விசைப்படகுகளைச் சென்று அடிக்கடி பார்வையிட்டு அவர்கள் அவற்றை வைத்திருக்கிறார்களா அல்லது வெளி மாநிலங்களுக்கு அந்தப் படகுகள் அனுப்பப் பட்டிருக்கின்றனவா அல்லது அவைகளை துர்விநியோகம் செய்துவிட்டார்களா என்று பரிசீலிக்காத காரணத்தால் தான், இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எனவே இனிமேலாவது இப்படிப்பட்ட செயல்கள் நடை



5th March 1970]

பெறாமல் இருப்பதற்கு உதவியாக ஒரு மாதத்திற்கு ஒருமுறையாவது அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறையாவது சோதனை செய்து கண்டறியும் முறை அமுல்படுத்தப்படுமா ? மீனவர்களின் பொருளாதாரத் துறையை மேம்படுத்த வேண்டும் என்று மேற்கொள்ளுகிற இந்தச் செயல்கள் எல்லாம் சரிவர நடக்கின்றனவா என்று கண்டறியவாவது இந்த முறை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இந்த விசைப்படகுகள் ஒரே இடத்தில் இருப்பவைகள் அல்ல. ஆழ்கடலில் பல மைல்சென்று மீன் பிடித்து வருகின்றன. ஒரே இடத்தில் இருந்தாலாவது அவைகளைச் சென்று பார்த்து இருக்கின்றனவா இல்லையா என்று கண்டறிந்து வரலாம். ஆனால் பல படகுக்காரர்கள் பிற மாநிலத்துக் கடற்கரைகளுக்குச்சென்றுவிடுகின்றனர். படகுகளைக் கண்காணிக்கும் அதிகாரி முடிந்த அளவுக்கு இவைகளைக் கண்காணித்து வருகிறார். அது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**திரு. எம். எத்திராஜுலு :** அதை வைத்துக்கொண்டுதான் நான் சொல்லுகிறேன். இப்படிப் பல இடங்களுக்குச் சென்று உடனடியாகத் திரும்பி வரமுடியவில்லை என்ற காரணத்தை வைத்துக்கொண்டு தான், அவர்கள் வெளிமாநிலங்களுக்குச் செல்லும் போது, அங்கே 3 மாதம் 4 மாதம் தங்கிவிடும் நிலை ஏற்படுகிறது. அப்போதுதான் படகை விற்பது, அல்லது அடமானம் வைப்பது என்ற சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குத் தான் வெளி மாநிலங்களுக்குச் சென்று இருக்க வேண்டும் என்று அரசு ஒரு உத்திரவு பிறப்பிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அடிக்கடி இந்தப் படகுகள் கேரளப் பகுதிகளுக்குத் தான் போகின்றன. அப்படிக் கேரளக் கடற்கரையில் உள்ள நம் படகுகளை எல்லாம் தேடிக்கொண்டு வருவது என்பது எளிதல்ல. இன்னார் படகு இன்ன இடத்தில் சென்றிருக்கிறது, இன்ன இடத்தில் விற்கப்பட்டிருக்கிறது, அல்லது அடமானம் வைக்கப்பட்டிருக்கிறது என்று யாராவது ஆதாரத்தோடு புகார் சொல்லுகிறார்களா என்றால், அதுவும் இல்லை. எனவே இதில் பல சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தால் தான், நான் 'கூடுமானவரை' என்ற வார்த்தையைச் சொல்லி வருகிறேன்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஏராளமாக பிரான் என்கிற மீன்கள் பிடிக்கப்பட்டாலும், தலைநகரில் இருக்கும் திருமதி கிளப்வாலா ஜாதவ் போன்றவர்களுக்குக் கூட ஒன்றும் கிடைப்பதில்லை, எல்லாம் வெளியே "எக்ஸ்போர்ட்" செய்துவிடுகிறார்கள் என்ற குறை இருப்பதால், இதற்காகத் தனியாகக் கொஞ்சம் ஒதுக்கி இங்கே விற்பனை செய்ய அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** உறுப்பினர் அவர்கள் திருமதி கிளப்வாலா ஜாதவ் அவர்கள் பக்கத்திலே இருப்பதால், அம்மையார் அவர்களுக்குக் கேட்டு வாங்கிக்கொடுக்கலாம். இப்போது இருக்கிற கேள்வி விசைப்படகுகளைப் பற்றியது. அவைகள் பிற மாநிலங்களுக்குச் செல்லுவது பற்றியது தான்.

**மிஸ்டர் சேர்மென் :** அதற்குத் தான் தனிக் கேள்வி வருகிறதே. அதற்குள் ஏன் அவசரப்படுகிறார்?

* 169 *Q*.—THIRU M. ETHIRAJALU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state the amount to be collected from fishermen towards the cost of mechanised boats distributed to them as on 1-11-1969 district-wise?

[5th March 1970

**திரு. எம். எத்திராஜுலு :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1969-ம் வருடம் நவம்பர் மாதம் 1-ம் தேதியன்றுள்ளவாறு மீனவர்களுக்கு கொடுக்கப்பட்ட விசைப்படகுகளுக்குண்டான தொகையில் எவ்வளவு தொகை மாவட்ட வாரியாக வசூலிக்கப்படாமல் உள்ளது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :**

| மாவட்டத்தின் பெயர். | 1969-ம் வருடம் நவம்பர் மாதம் 1-ம் தேதி அன்றிலிருந்தபடி வசூலாகாமலுள்ள தொகை. | |
|---|---|---|
| | ரூ. | |
| சென்னை .. .. .. .. .. | 8,38,913 | 71 |
| செங்கற்பட்டு .. .. .. .. .. | 1,86,151 | 53 |
| தென் ஆர்க்காடு .. .. .. .. .. | 5,33,212 | 73 |
| தஞ்சாவூர் .. .. .. .. .. | 1,86,945 | 02 |
| இராமநாதபுரம் .. .. .. .. .. | 49,711 | 69 |
| திருநெல்வேலி .. .. .. .. .. | 89,002 | 27 |
| கன்னியாகுமரி .. .. .. .. .. | 2,19,462 | 71 |
| மொத்தம் .. | 21,03,399 | 66 |

**திரு. எம். எத்திராஜுலு :** மீனவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய தொகையான இந்த 22 லட்ச ரூபாய் எப்போது வசூலிக்கப்படும் ? வசூலிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? எவ்வளவு காலமாக இந்தத் தொகை வசூலிக்கப்படாமல் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** எப்போது கொடுக்கப்பட்ட கடன் தொகை இது என்று எனக்குத் தெரியாது. ஆனால் 1969-ம் வருடம் நவம்பர் மாதம் 1-ம் தேதி வரையில் வசூல் ஆகாத தொகை என்று தான் இருக்கிறது. இதில் அவர்களுக்குத் தருகிற 20 சதவீத டிஸ்கவுண்ட்—ரிடக்ஷன் போக மேற்கொண்டு 17 லட்சம் ரூபாய் அளவுக்குத் தான் வசூல் செய்ய வேண்டிவரும். அதற்காக அவ்வப்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. அவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்படுகிறது. எச்சரிக்கை நோட்டீஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. கொஞ்சம் கொஞ்சமாக வசூலிக்கப்படும்.

**திரு. எம். எத்திராஜுலு :** இது வரை சர்க்காருடைய சட்டதிட்டங்களின் படி விசைப்படகுகள் வாங்கி அதற்கான பணம் கட்டாதவர்களுடைய விசைப் படகுகள் இதுவரை எத்தனை அரசாங்கத்தால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன? மீண்டும் அந்தப் படகுகள் எந்த அடிப்படையில் மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகின்றன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தற்போது அந்தக் கணக்குப் பற்றிய விவரம் இல்லையென்றாலும் நிலுவைத் தொகை அதிகமாக இருந்தால் அரசாங்கம் அந்த விசைப்படகுகளைக் கைப்பற்றுகிறது. மீண்டும் அந்த விசைப்படகுகளை சொஸைட்டிக்கோ தனிப்பட்டவர்களுக்கோ அல்லது படகு உடைபட்டவர்களுக்கோ படகின் எஞ்சியிருக்கிற விலைக்கு விற்கப்படுகிறது.



5th March 1970]

* 170. Q. THIRU M. ETHIRAJALU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether mechanised boats have been distributed to the persons belonging to non-fisherman community; and

(b) if so. on what basis and the number of mechanised boats distributed?

**திரு. எம். எத்திராஜுலு :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் மீனவர் சமூகத்தைச் சேராதவர்களுக்கு விசைப் படகுகள் வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எந்த அடிப்படையில் எத்தனை விசைப்படகுகள் வழங்கப்பட்டுள்ளன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) & (இ) 25 அடி, 30 அடி,32 அடி, நீளமுள்ள மீன்பிடி விசைப்படகுகள், சலுகை விலையில் மீனவர் தொகுதிகளுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன. எனினும், துறையின் படகுகட்டும் தளங்களில் கட்டப்பட்ட 36 அடி நீளமுள்ள 8 படகுகள் அவற்றின் முழு விலைக்குத் தனியார் தொழில் முனைவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான விண்ணப்பங்கள் கேட்டுப் பெறப்பட்டு, அவற்றைத் தகுதியின் அடிப்படையில் பரிசீலித்த பின்னர் அந்தப் படகுகள் ஒதுக்கப்பட்டன. படகு ஒவ்வொன்றின் விலையும் சுமார் ரூ. 1,12,000 ஆக அதிகமாயிருப்பதால், மீனவர் தொகுதியினர் அவற்றை வாங்க இயலாது. மேலும் இந்தப் படகுகள் மீனவர் கூட்டுறவு கூட்டு அமைப்புகளுக்கும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஒதுக்கப்படுமானால், படகு ஒவ்வொன்றுக்கும் அரசு வழங்கவேண்டிய உதவித் தொகை சுமார் ரூ. 43,250 ஆவதால் உதவித் தொகை வழங்கும் வகையில் பெருமளவுக்கு அரசு பொறுப்பு ஏற்கவேண்டிவரும். இவைதவிர, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதற்குமுன் ஒதுக்கப்பட்ட விசைப்படகுகள் அவற்றால் முறையாகப் பயன்படுத்தப்படவில்லையென்றும், அரசுக்குச் செலுத்தவேண்டிய தவணை நிலுவைகளையும் உரிய காலத்தில் அவை செலுத்தவில்லையென்றும் தெரியவருகிறது.

**திரு. எம். எத்திராஜுலு :** இப்போது படகுகள் எந்த அடிப்படையில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன ? குலுக்கல் முறையா அல்லது சீனியாரிடி படி கொடுக்கும் முறையா அரசாங்கம் கையாளுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நான் கூறியிருப்பது 36 அடி படகுகளைப் பற்றித்தான். தனிப்பட்டவர்களுக்கு, அதாவது மீனவர்கள் அல்லாத பிறருக்குத் தொழில் நடத்த விரும்புகிறவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரை 8 படகுகள் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு முழுத்தொகையான ரூபாய் 1,12,000 உடனே கட்டி படகு வாங்கக்கூடியவர்கள், தொழிலில் மிகுந்த அக்கறை காட்டிச் செய்யக்கூடியவர்கள் என்று பரிசீலனை செய்து தான் தரப்படுகிறது. இப்படி இது வரை 8 பேருக்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எத்திராஜுலு :** இது வரை 8 படகுகள் அப்படிக் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்த 8 பேர்களும் பஸ் முதலாளிகளா அல்லது தனிப்பட்டவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அவர்கள் பஸ் முதலாளிகளாகத் தெரியவில்லை. எல்லோரும் சாதாரணமானவர்கள் என்று தான் குறிப்பில் இருக்கிறது.

[5th March 1970

**திரு. கே. எஸ். மணி :** இப்போது கொடுக்கப்படும் படகுகள் சீனியாரிடி முறையில் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. ஒரு மாவட்டத்தில் அதிக மாணவர்கள் மனு போட்டால், அந்தக் குறிப்பிட்ட மாவட்டத்திற்கே நிறைய படகுகள் போய் விடக்கூடிய நிலை ஏற்படுகிறது என்ற காரணத்தால், இனிமேல் படகுகள் தருவதில் மாவட்ட வாரியாகப் பகிர்ந்தளிக்கும் முறையை அரசாங்கம் மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதுநாள் வரையிலும் சீனியாரிடி அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதில் கோளாறுகள் ஏற்படுகின்றன என்று கருதித்தான் இனிமேல் படகுகள் விநியோகத்தில் குலுக்கல் முறையைக் கையாளுவதாக இருக்கிறது.

## *Export of Prawns*

* 171 *Q.*—THIRU M. ETHIRAJALU : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) the quantity of prawns exported to foreign countries from Tamil Nadu from 1-1-1969 to 31-10-1969; and

(*b*) out of this, the quantity of prawns exported by (1) Public Sector and (2) Private Sector?

## எரு ஏற்றுமதி.

**திரு. எம். எத்திராஜுலு :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்கு 1-1-1969 முதல் 31-10-1969 வரை எவ்வளவு எரு ஏற்றுமதி செய்யப்பட்டது ?

(இ) இவற்றில் (1) அரசுத் துறையில் (2) தனியார் துறையில் ஏற்றுமதி செய்யப்பட்ட எருவின் அளவு எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) 358.236 டன்கள்.

(இ) தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்களே தமிழ் நாட்டிலிருந்து இரால் மீன்களை ஏற்றுமதி செய்கின்றன.

**திரு. எம். எத்திராஜுலு :** தனியார் துறையில் இருப்பவர்கள் கேரளத்திலிருந்து இங்கே வந்து தமிழ்நாட்டில் பிடிக்கும் எல்லா எருவையும் குறைந்த விலைக்கு வாங்கி கொச்சிக்கு அனுப்பி அதன் மூலம் அமெரிக்காவுக்கு அனுப்புவதால், அந்தச் சர்க்காருக்கு நிறைய அந்நியச் செலாவணி கிடைக்கிறது. அந்த வியாபாரத்தை நம் அரசு செய்ய ஏன் முற்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இங்கே இப்போது 3 நிறுவனங்கள் இருக்கின்றன. இந்தோ-மெரைன் ஏஜென்சிஸ், சதர்ன் சீபேரர்ஸ் இன்னும் ஜியார்ஜு மேடோ கடலூரில் நிலையம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் எருவைப் பிடித்து உறைய வைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள். சிலவற்றைத்தான் உறைய வைக்காமல் கொச்சிக்கு அனுப்புவதாக தெரிகிறது. இவைகளை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற அடிப்படையில் தான் மண்டபத்திலும் தூத்துக்குடியிலும் இது போன்ற சில நிலையங்கள் வைக்க வேண்டும் என்று அரசாங்கம் அதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. அரசாங்கம் கட்டிக் கொடுத்த கட்டிடத்தில் இந்தோ-மெரைன் ஏஜென்சி தற்போது இருக்கிறது. அந்த கட்டிடத்திற்காக ஆண்டுக்கு 1,20,000 ரூபாய் குத்தகையாக அது சர்க்காருக்குக் கொடுத்து வருகிறது.



5th March 1970]

**திரு. எம். எத்திராஜுலு :** நிரந்தரமாக அவர்கள் தற்போது தமிழ் நாட்டில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் வியாபாரத்திற்கு என்றே அவர்கள் இங்கே வந்து, பிடிக்கிற எரு முழுவதையும் வாங்கி அதிக லாபத்தையும் பயனையும் அடைகிறார்கள். பொருளாதாரத் துறையில் மீனவர்கள் முன்னேற வேண்டும் என்றால், இனிமேலாவது அவர்கள் வாங்காத வண்ணம் தடுத்து பிடிக்கிற எரு அத்தனையும் அரசு மூலமாகவே வாங்கி வெளிநாடுகளுக்கு அனுப்பவும் அதன் மூலமாக வருகிற லாபத்தை மீனவர்களுக்கே பங்கிட்டுக் கொடுக்கவும் அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதைத் தான் ஏற்கெனவே சொன்னேன். மண்டபத்திலும் தூத்துக்குடியிலும் 2 ஃபிரீசிங் பிளாண்ட் வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. CALLING ATTENTION TO INTEGRATION OF SERVICE OF TEACHERS AND HEADMASTERS OF EX-BOARD HIGH SCHOOLS.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, 42-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வான முன்னாள் கழக உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கப் பள்ளிகளுடன் ஒருங்கிணைப்பு நடைபெறும் பொழுது 1-4-1966 என்ற காலவரை ஏற்படுத்தாமல் என்றைக்கு ஒருங்கிணைப்பு அதிகார பூர்வமாக ஏற்படுத்தப்படுகிறதோ, அந்த நாள் வரை, கழக உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களின் பதவி உயர்வு, பணி நிலை ஆகியவை பாதுகாக்கப்பட்ட வேண்டும் என்பது குறித்து மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** முன்னாள் மாவட்ட வாரிய உயர்நிலைப் பள்ளிகள் குறித்தும், அப்பள்ளிகளின் ஆசிரியர்களை எவ்வாறு அரசுப் பணியில் எடுத்துக்கொள்ளலாம் என்பது குறித்தும் தாற்காலிகமாகச் சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த முடிவுகள் 13-1-1970 அன்று நான் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் அடங்கியுள்ளன.

இந்த முடிவுகளின்படி, மேற்சொன்ன மாவட்ட வாரிய உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களை அரசுப் பணியில் சேர்த்துக்கொள்வது 1-4-1966 முதற்கொண்டு செயலுக்கு வந்துவிட்டிருப்பதாகக் கருதப்படும். மாவட்ட வாரிய இடைநிலைப் பள்ளிகள் 1-4-1966 முதற் கொண்டு அரசுக்கு மாற்றப்பட வேண்டுமென்றும், அவை அத்தேதி முதற்கொண்டு அரசு இடைநிலைப் பள்ளிகளாகவே கருதப்பட வேண்டுமென்றும், கல்வித்துறை 1966 ஏப்ரல் 15-ம் நாளன்று வெளியிட்ட 539-ஆம் எண் அரசு ஆணையில் ஆணையிடப்பட்டது. எனவே, மாவட்ட வாரியப் பள்ளிகள் அரசுப் பள்ளிகளாக எடுத்துக்கொள்ளப்பட்ட நாளாக 1-4-1966 கருதப்பட்டது. 1-4-1966 தேதியைப் பொருத்தமான தேதியாகக் கொள்வதென்ற முடிவினின்று மாறுபடுவது விரும்பத்தக்கதல்லவெனக் கருதப்படுகிறது. அந்த நாள் முதற்கொண்டே ஆசிரியர்கள் அரசுப் பணியில் எடுத்துக்கொள்ளப்படலாம் என்று மாவட்ட வாரியப் பள்ளித் தலைமை ஆசிரியர் சங்கமும் கேட்டுக்கொண்டுள்ளது. 1-4-1966-ஐ முடிவான நாளாகக் கொள்வதில் எவ்வித இடர்ப்பாடும் இருக்கும் என்று தோன்றவில்லை. அரசு எடுத்த முடிவு குறித்து ஆணை பிறப்பிக்கையில், பதவி உயர்வுகள், ஏனைய பணி நிலைகள் குறித்து வாரியப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதில் நாட்டம் செலுத்தப்படும்.

## III. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 970-71—*cont*.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது நேற்று நான் சில விஷயங்களைக் குறிப்பிட்டேன். அதன் தொடர்ச்சியாக இன்று இன்னும் சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக நான் சார்ந்துள்ள சமுதாயத்தினைப் பற்றிய சில விஷயங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆரம்ப ஆசிரியர்களின் நிலைபற்றி மாண்புமிகு ராஜா ஐயர் அவர்கள் சில முக்கியமான பிரச்சினைகளைப்பற்றி எடுத்துக்கூறினார்கள். இன்று ஆரம்ப ஆசிரியர்களின் நிலை, அதிலும் குறிப்பாக தனியார் நடத்தும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுடைய நிலை, வேதனைக்குரியதாக இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு சமுதாய வளர்ச்சிக்கென சில ஸ்தாபனங்களால் நடத்தப்படுகின்ற பள்ளிகளைத் தவிர தனியார் நடத்தும் பள்ளிகள் ஒரு வியாபாரமாகவே போய்விட்டது என்பதை மறைக்க முடியாது. அங்குள்ள ஆசிரியர்கள் மிகவும் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள், பழி வாங்கப்படுகிறார்கள். உதாரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் என்ற இடத்தில் நடத்தப்படும் சிவ சுப்பிரமணிய ஆரம்பப் பள்ளி என்று ஒன்று இருக்கிறது. அதில் எங்கள் சமூகத்தைச் சார்ந்த ஒரு பெண் ஆசிரியையாக பணியாற்றிக் கொண்டிருந்தார். செகண்டரி கிரேட் ஆசிரியை ஹையர் கிரேடு ஆசிரியையாகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அந்தப் பள்ளி நிர்வாகம் மூன்று சகோதரர்களால் பார்க்கப்பட்டு வருகிறது. மூன்று ஆண்டுக்கு ஒருவர் என்ற முறையில் அதை நிர்வகித்துக்கொண்டு வருகின்றார்கள். நான் குறிப்பிடும் ஆசிரியர் ஒரு சகோதரரால் நியமிக்கப்பட்டார். ஆனால் அடுத்த சிலஆண்டில் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற மற்றொரு சகோதரர் கீழ் ஜாதியைச் சார்ந்த ஒருவர் இங்கே ஆசிரியராக இருப்பதா என்ற ஜாதி வெறியால் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி, அந்த ஆசிரியரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டார். இந்த அநீதியை அதிகாரிகள் கண்டித்து அவருக்கு மீண்டும் பதவி கொடுக்க வேண்டும் என்று எழுதியும் பத்து மாதகாலமாக அவருக்கு அந்தப் பதவி மீண்டும் கொடுக்கப்படாமலேயே இருக்கிறார். தனியார் பள்ளி எப்படி நடைபெறுகிறது என்பதற்கு இதை ஒரு உதாரணமாகவே எடுத்துக் காட்டுகிறேன். இது தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்து, எங்கள் சமுதாயத்திற்கு நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக, சித்த வைத்தியத் தொழிலை பரம்பரை பரம்பரையாக எங்கள் சமுதாயத்தினர் செய்து கொண்டு வந்திருக்கின்றனர். இதன் காரணமாக எங்கள் சமுதாயத்திற்கே மருத்துவ சமுதாயம் என்று பெயர் வரலாயிற்று. நூல்களைக் கற்றறிந்து கொள்வதாக ஆக்கப்பட்ட சித்த மருத்துவர் இந்த மருத்துவத் துறையில் ஈடுபட்டவர்கள். செய்யுள்கள், விருத்தங்கள், வெண்பாக்கள், கலித்துறைகளால் பெரும் அளவிற்கு கல்வி கற்று பாண்டித்தியம் உடையவர்களாக வாழ்ந்தார்கள். எனவே, இந்த சமுதாயத்தினருக்கு பண்டிதர்கள் என்ற பெயரும் வழங்கப்படலாயிற்று. பெரும்பாலும் மருத்துவத் தொழிலை நம்பி வாழ்ந்து வந்த சமுதாயம் இது. எங்கள் சமுதாயத்தைச் சார்ந்த பெண்கள்தான் பண்டைய நாட்களில் மட்டும் இன்றி இன்னும் கிராமங்களில் மகப்பேறு குழந்தை வைத்தியம் போன்றவற்றைச் செய்து வந்தார்கள். இவை மட்டுமின்றி எங்கள் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் தான் முடி வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்ததால் இத்தகைய பணிகளுக்கென பண்டைய நாட்களில் எங்கள் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு என மன்னர்களால் எல்லாக் கிராமங்களிலும் மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன. மருத்துவர்கள் மானியம், சலவையாளர்கள் மானியம் என்று பல மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் இன்று என்ன நிலை என்று பார்த்தால், இப்படிப்பட்ட மானியங்கள் காலப்போக்கில் சில அடாவடிக்காரர்களால் பறிக்கப்பட்டு, கொடுக்கப்பட்ட மானியங்கள் பறிபோயிருப்பதைத்தான் பார்க்கிறோம். மருத்துவத் தொழிலை பரம்பரை பரம்பரை



யாகச் செய்துகொண்டு வந்த எங்கள் சமூகத்தினர் ஆங்கிலேயர்கள் ஆட்சிக்குப் பிறகு "அலோபதிக்" என்று சொல்லும் ஆங்கிலேய மருத்துவ முறை வந்த பிறகு, மக்களுடைய கவனம் அதில் செல்ல ஆரம்பித்த பிறகு, எங்கள் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் செய்து கொண்டு வந்த சித்த வைத்திய முறை காலப் போக்கில் எடுபடாமல் போய்விட்டது. இதன் காரணமாக வருமானம் இல்லாது எங்கள் சமுதாயத்தினர் பெரும் துயரத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். கிராமப் புறங்களிலும் தாய் சேய் நல விடுதி போன்ற நிலையங்கள் ஏற்பட்டுவிட்ட காரணத்தினால், எங்கள் சமுதாயத்தைச் சார்ந்த தாய்மார்களுக்கும் பிழைப்பிற்கு வழியில்லாது போய் விட்டது. இப்போது எஞ்சியிருக்கும் ஒரே துறை முடியிறக்கும் தொழில் ஒன்றுதான். மானியமும் போய்விட்டது. வைத்தியத் துறையில் பிழைப்பும் போய்விட்டது. எங்கள் தாய்மார்களுக்கும் வேலைவாய்ப்புகள் போய்விட்டன. எனவே எங்கள் சமுதாயத்திற்கு ஏதாவது வாழ வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமுதாயத்தில் மற்ற பல துறையிலும் ஏதாவது இன்னல் என்று ஏற்படும் போது நமது அரசாங்கம் அவர்களுக்கு ஆவன செய்கிறதைப் பார்க்கிறோம். கைத்தறி நெசவாளர்களுக்கு இன்னல் ஏற்பட்டபோது, அவர்களுக்கு அரசு உதவ முன் வந்தது. அதேபோல இராணுவத்திலிருந்து வந்தவர்களுக்கு உதவி செய்கிறதைப் பார்க்கிறோம். அதேபோல இந்த சமுதாயத்திலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு உதவ முன் வர வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன். கிராமப்புறங்களில் திறக்கப்படும் தாய்சேய் நல விடுதிகளிலெல்லாம் ஆயாவேலை அட்டெண்டர் போன்ற வேலைகளுக்கு அந்த அந்த கிராமத்தில் இருக்கும் மருத்துவ சமூகப் பெண்களுக்கு முதல் இடம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றும் கொஞ்சம் படித்த பெண்களுக்கு செவிலியர் போன்றவர்களுக்கான ஆட்களைத் தெரிந்தெடுக்கும் போது, இந்த சமுதாயத்தினருக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது மட்டுமின்றி இப்போது நிலமற்ற ஏழைகளுக்கு என்று புறம்போக்கு நிலத்தையெல்லாம் அரசாங்கம் விநியோகம் செய்து வருகின்றதைப் பார்க்கிறோம். இந்த சந்தர்ப்பத்தில், ஏற்கெனவே பல மானியங்கள் வழங்கப்பட்டு காலப்போக்கில் அவற்றை இழந்து நிற்கும் எங்கள் சமுதாயத்தினருக்கு இப்படிப்பட்ட புறம்போக்கு நிலங்களைப் பகிர்ந்தளிப்பதில் முதல் இடம் அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது மட்டுமின்றி மருத்துவக் கல்லூரிகளில் எங்கள் சமுதாயத்தினருக்கு என சில இடங்களை ஒதுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழகம் முழுவதையும் எடுத்துக் கொண்டால், எங்கள் சமூகத்தினைச் சார்ந்தவர்கள் ஒரு ஏழெட்டுப் பேர்கள்தான் இருக்கிறார்கள். இன்னும் ஒரு ஐந்து ஆறு பேர்கள் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே ஒன்று அல்லது இரண்டு சதவிகிதம் இடங்களை எங்கள் சமூகத்தினருக்கு என்று ஒதுக்கிக் கொடுத்தால் சித்த வைத்தியத் துறையில் அறவே வாழ வழி இல்லாமல் போய்விட்டபடியால் நல்ல வைத்தியத்திலாவது, ஓரளவு தலையெடுக்க முடியும். எனவே இப்படி ஒன்று அல்லது இரண்டு சதவிகிதம் இடங்களை ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஆலயங்களில் முடியிறக்கும் தொழிலில் எங்கள் சமூகத்தினர் ஈடுபட்டிருக்கிறார்கள். சில ஆண்டுகள் முன்பு வரையில் முடியிறக்குவதற்கு சீட்டு என்று தேவஸ்தானத்தில் கொடுப்பார்கள். நாலணா சீட்டு என்றால் அதில் தேவஸ்தானத்திற்கு இரண்டணாவும் தொழில் செய்கிறவருக்கு இரண்டணாவும் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் சென்ற சில ஆண்டுகளாக இந்த முறையில் ஒரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் துறையில் உள்ள லாபத்தைக் கருதி சில ஒப்பந்தக்காரர்கள், ஆண்டுக்கு அந்த தேவஸ்தானத்திற்கு இவ்வளவு என்று கொடுத்துவிட்டு, இப்போது ஒரு சீட்டை ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் என்று விற்கிறார்கள். ஆனாலும் கூட தொழில் செய்கின்றவர்களுக்கு ஊதியமாகக்

கொடுக்கப்படும் தொகை உயர்த்தப்படவில்லை. இடையிலுள்ள கண்ட்ராக்டர்கள் சாப்பிட்டுவிடுகிறார்கள். திருப்பரங்குன்றத்தில் முன்பு நாலணா எட்டணா என்று இருந்தது இப்போது ஒரு ரூபாய் இருபத்தைந்து பைசா என்று உயர்த்தப்பட்டுவிட்டது. ஆனாலும் தொழில் செய்கிறவர்களுக்கு அந்தத் தொகையில் 12 பைசாதான் கொடுக்கப்படுகிறது. இதேபோல மதுரை கள்ளழகர் கோவிலில் ஒரு டிக்கெட்டு ஒரு ரூபாய் என்று விற்கப்படுகிறது. ஆனால் தொழில் செய்பவர்களுக்கு 15 பைசா தான் கொடுக்கப்பட்டு வருகிறது. தொழில் செய்கிறவர்களுக்கு ஊதிய உயர்வினைக் கொடுக்கவில்லை. இப்படித்தான் தமிழகத்தில் பெரும்பாலான ஆலயங்களில் இருந்துகொண்டு வருகிறது.

சிற்சில இடங்களில் 50 பைசா, நாலணா கூலி கொடுக்கிறார்கள். இன்னும் அதிகமாகக் கொடுக்கவேண்டும். இது போன்ற நிலைமையை மாற்றி அமைப்பதற்கு இந்த மாதிரி தேவஸ்தானங்கள் நேரடியாக நிர்வாகத்தை நடத்தி தகுந்த அளவு கூலி வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். முடிகளுக்கு கிராக்கி இல்லாமல் இருந்த வரைக்கு பிரார்த்தனைக்கு முடி இறக்கும் முடி மயிர்களை அந்தத் தொழில் செய்பவர்களே எடுத்துச் சென்று இரண்டணா, நாலணாவுக்கு விற்றுக் கொண்டு இருந்தார்கள். அண்மையில் முடிகளுக்கு வெளிநாடுகளில் கிராக்கி ஏற்பட்டு விட்டபடியால் தேவஸ்தானங்களே அந்த முடிகளை எடுத்துக்கொள்ளுகிறார்கள். இந்த முடியினால் வெளிநாட்டுச் செலாவணி 20 கோடிக்கு மேல் அரசாங்கத்துக்கு வருமானம் வருகிறது. அந்த முடியை ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனுக்குக் கொடுத்து பல லட்சக்கனக்கான ரூபாய்களை தேவஸ்தானம் சேர்த்துக்கொள்ளுகிறது. ஆனால் உண்மையாகவே அந்த முடியின் பேரில் வருகிற வருமானம் இந்தத் தொழில் செய்கிறவர்களுக்குக் கிடைக்கவில்லை. மிகக் குறைந்த கூலிக்கு வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே எஸ்.டி.ஸி-க்கு வேண்டுமானால் அந்த முடியைக் கொடுப்பதில் யாருக்கும் ஆக்ஷேபணை இல்லை. அதனால் கிடைக்கும் வருமானம் அந்தத் தொழில் செய்கிறவர்களுக்குக் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். இன்னும் திருப்பதி போன்ற இடங்களில் நடக்கும் விதத்தைப் பார்த்துவிட்டு முன் மாதிரியாக வைத்துக்கொள்ளும்படிகேட்டுக் கொள்கிறேன். திருப்பதியில் சீட்டு 28 பைசா. ஒவ்வொரு மாதத்திலும் எஸ். டி. ஸி-க்கு முடி விற்பதின் மூலமாக வரும் வருமானம் ஆகியவற்றையும் சேர்த்து மொத்தத்தில் மூன்றில் ஒரு பங்கு தேவஸ்தானத்துக்குச் சேர்த்துக் கொண்டு இரண்டு பகுதியை அந்தத் தொழில் செய்கிறவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்கள். அங்கே சுமார் 300 பேர் தொழில் செய்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 250 முதல் ரூ. 300 வரை கிடைக்கிறது. ஆனால் மூன்றில் ஒரு பகுதிதான் தேவஸ்தானத்துக்கு எடுத்துக்கொள்கிறார்கள். இரண்டு பகுதியை தொழில் செய்கிறவர்களுக்குக் கொடுக்கிறார்கள். அதைப் போன்ற நிலையை தமிழ்நாட்டில் எல்லா ஆலயங்களிலும் உண்டாக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, திருப்பதியிலே ஒரு முடி சீட்டு 28 பைசா வாங்கிக்கொண்டு, பாக்கி முடியின் மூலமாக வருகிற பணத்தில் மூன்றில் இரண்டு பாகத்தைத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். இனி நம் நாட்டிலே முடிக்கு ரூ. 1–25 வாங்கிக் கொண்டு, 70 பைசா அந்தத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. முடியின் மூலமாக எஸ்.டி.சி-க்கு ரூ. 6 லட்சம் வருமானம் என்றால் ஏறத்தாழ ரூ. $4\frac{1}{2}$ லட்சம் தரப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**திரு. எம். அய்யாசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு மிகக நன்றி. தமிழ்நாட்டிலே பழநி ஆலயத்தில் அமைச்சர் தலையிட்டு ஒரு ரூபாய் கொடுக்கலாம் என்று ஆலோசனை கூறியதன்பேரில்





இப்பொழுது 70 பைசா கொடுக்கிறார்கள். முடியின் பெயரால் வருகிற வருமானம் ரூ. 6 லட்சம், அதில் ஒரு லட்சம் ரூபாய் போனஸ் ஆகக் கொடுக்கிறார்கள். இது உண்மையிலேயே வரவேற்கத்தக்க செய்தி, இரண்டு ஆண்டுக்கு முன்னால் நானும் இந்த விவகாரத்தில் தலையிட்டு கோவில் தர்மகர்த்தாக்களுடன் பேசினேன். அப்போது $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் போனஸ் ஆகத் தருவதாக ஒத்துக்கொண்டார்கள். அந்தத் தொழில் செய்கிறவர்களிடத்தில் ஒற்றுமையில்லை. அதன் காரணமாக ஒன்றும் கிடைக்காமல்போய், இப்போது ஒரு லட்சம் ரூபாய் கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைப்போல் சூழ்நிலையை தமிழ்நாட்டில் எல்லா ஆலயங்களிலும் உண்டாக்கித் தரவேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவுக்கு எல்லா இடங்களிலும் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலுக்குத் தகுந்தபடி கூலியைப் பெற்று வாழ்க்கை வசதியை அடையக் கூடிய சூழ்நிலையை தேவஸ்தானத்தில் தொழில் செய்கிறவர்களுக்கு மட்டுமாவது கிடைக்க மாண்புமிகு அறநிலை அமைச்சர் வழி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கஞ்சமலை தேவஸ்தானத்தில் முடி எடுத்தால், யாருக்குச் சேருவது என்ற தகராறு ஏற்பட்டு முடி தொழிலாளர்களுக்குத் தான் சேரும் என்று தர்மகர்த்தாக்குழுவில் தீர்மானம் போட்டும் ஓர் ஆண்டு காலம் கழித்து மீண்டும் முடிகள் தேவஸ்தானத்திற்கே சேரும் என்று கூறி விட்டார்கள். இது சம்பந்தமாக எனக்கு ஒரு கடிதத்தை அங்கு தொழில்செய்பவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இது போன்ற நிலை ஒவ்வொரு தேவஸ்தானத்தில் ஒவ்வொரு விதமாக இருக்கிறது. இதையெல்லாம் அரசு பரிசீலனை செய்து நல்ல விதமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The Hon. Member may please wind up his speech soon.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. சில தினங்களுக்கு முன்னால் சட்டமன்றத்தின் முன்னால் எங்கள் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் உண்ணாவிரதம் இருந்தார். அவரைப் பிடித்துச் சிறைச்சாலைக்கு அனுப்பியிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். எனக்கு நேரடியான தகவல் இல்லை. அவர் பெயர் சித்தராஜு. ராசிபுரம் நகரசபை சம்பந்தப்பட்ட மார்க்கெட் காண்டிராக்டர் ஒருவரால் நடத்தப்படுகிறது. அங்கே முடிதிருத்த நிலையம் வைக்கவேண்டுமென்று நகர சபை கமிஷனரிடம் போய்க் கேட்டிருக்கிறார். அவர் சொல்லி விட்டார். நாங்கள் குத்தகைக்கு விட்டுவிட்டோம், காண்ட்ராக்டரிடம் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று சொல்லிவிட்டார். காண்ட்ராக்டரிடம் போய்க் கேட்டதற்கு, "உன்னுடைய செலவில் குடிசை போட்டுக்கொள், ஏதாவது வாடகை கொடுத்துவிடு" என்று சொல்லி விட்டார். அதன்படி குடிசை போட்டுக்கொண்டு தொழில் செய்து வந்தார். கடை வைத்துச் சில நாட்கள் கூட ஆகவில்லை, அந்த நகரசபையில் உள்ள சம்பந்தப்பட்ட இன்ஸ்பெக்டர்கள் வேறு சில பேர்களுடன் வந்து உடனே அதைப் பிரித்து எறியவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எவ்வளவோ காரணங்கள் சொல்லியும், கமிஷனரிடம் கேட்டு அவர் சொன்னபடி காண்ட்ராக்டரிடம் அனுமதி பெற்றுத் தான் போட்டேன் என்று சொல்லியும் கேட்கவில்லை. அப்பொழுது அவர் ஒருவருக்கு ஷேவிங் செய்து கொண்டிருந்தார். அவர் இந்தியன் பாங்கியின் அலுவலர். பாதி ஷேவிங் செய்துகொண்டிருந்தார். அப்போதே பிரித்து ஆகவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். நான் இந்த ஷேவிங்கைச் செய்து முடித்து விட்டுப் பிரித்து விடுகிறேன் என்று சொல்லியும், முடியாது, முடியாது, இப்பொழுதே இறங்கி ஆகவேண்டுமென்று கட்டாயமாக பாதி ஷேவிங் செய்துகொண்டு இருந்தவரை இறக்கி

[திரு. எம். அய்யாசாமி] [5th March 1970

விட்டு கூரையை பிரித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். அதற்கு எந்தவித உத்திரவும் காட்டப்படவில்லை. பலாத்கார நிலையில் நடந்துகொண்டு போயிருக்கிறார்கள். இந்த சம்பவத்தை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்றுதான் சித்தராஜ் என்பவர் 3 தினங்களுக்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்தார். அவரைச் சென்னை நகர சட்டப்படி வழக்கமாகப் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் அடிப்படையில் கைது செய்து, ரிமாண்டுக்கு அனுப்பியிருப்பதாக அவர் தகவல் அனுப்பியிருக்கிறார். இதுபோன்ற கொடுமைகள் பல இடங்களில் நடந்துகொண்டிருக்கின்றன. இதை அரசு கவனித்து பின் தங்கிய நிலையில் உள்ள எளிய மக்களுக்கு தாராளமான மனப்பான்மை காட்ட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

* THIRU V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Chairman, Sir, I wish to make a few observations on the Budget that has been presented by the Hon. the Minister for Finance. Even though the D.M.K. Party has given a pledge that it would not resort to any fresh taxation, we find that they have now taxed very heavily many consumer goods with the result that the cost of living will go up and the lower middle classes and the upper middle classes will be hard hit. After all, there is a deficit of Rs. 6 crores and it could have been left uncovered without resorting to any additional taxation. In Andhra Pradesh we find that for a deficit of nearly Rs. twenty crores, the Andhra Pradesh Government did not resort to any fresh taxation this year and this is so in many other States also. That is really commendable. But here if there is a deficit Budget, we may ask the Central Government to give us some aid and they will also come forward to give us some aid. Now, if for this small deficit of Rs. 6 crores, we resort to tax the people, I need not say that it will hit the poor people hard.

மற்றும் ஒரு யோசனை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பாண்டியர் புல்லம்புழா என்று திட்டம் இருக்கிறது. அதன்மூலம் நீலகிரி ஜில்லா, கூடலூரிலிருந்து 3 மைல் தொலைவிலே ஒரு பிரதேசத்தில் அணை கட்டி, அதற்குப் பல கோடி ரூபாய் செலவு செய்து, அங்கேயிருந்து தண்ணீர் எடுத்து, அதன் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து, (அந்தத் தண்ணீர் வேஸ்டை), சமுத்திரத்துக்குச் செல்லும் தண்ணீரை, கோவை ஜில்லாவிலுள்ள, கோவை, பல்லடம், அவிநாசி தாலுக்காக்களில் உள்ள பிரதேசங்களுக்குக் கொடுக்கும் நிலையில் ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அது அதிகப் பலன் அளிக்கும், அங்கே இருக்கும் விவசாய மக்களுக்கு பெரிய வசதியை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன். தயவு செய்து இந்த யோசனையைப் பரிசீலிக்க வேண்டும். உறுப்பினர்கள் பேசும் போது கூட, இந்தத் திட்டத்தைப் பற்றிச் சிறந்த முறையில் சொன்னார்கள். மற்ற திட்டங்கள் பலன் அளிக்காவிட்டாலும், இந்தத் திட்டம் பலன் அளிக்கும் முறையில் இருக்கிறது என்று சொன்னார்கள். தயவு செய்து இதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்கிறேன்.

அடுத்தபடியாக, ரோடு வசதிகள் பொறுத்து, முன்பு இருந்த நிலைமையையும், இன்று இருக்கும் நிலைமையையும் பார்க்கும்போது, ரோடுகளில் முன்னேற்றமான சூழ்நிலை இல்லை. ரோட்டில் செல்லும் சர்க்கார் பஸ்கள் முன்பு இருந்த நிலைக்கும் இப்பொழுது இருக்கும் நிலைக்கும் மாறுதல் இருக்கிறது. இந்த பஸ்களை நம்பி நாம் பிரயாணம் செய்யமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அதே போல் நகரப் புறங்களில் உள்ள தனியார் பஸ்களில் ஓர் அளவு நிம்மதியாக, நம்பிக்கையோடு செல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆனால் சர்க்கார் பஸ்களில் அந்த நிம்மதியோடு செல்ல முடியவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாமக்கல்லில் கிணற்றில் கவிழ்ந்தது தனியார் பஸ்.

**திரு. எஸ். வி. லட்சுமணன் :** நாங்களும் கவிழலாம், நீங்களும் கவிழலாம். போட்டி மனப்பான்மை காரணமாக, பஸ்களை வேகமாக ஓட்டும் நிலை ஏற்படுகிறது. வேகமாக ஓட்டிக்கொண்டு செல்லும்பொழுது, விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதே சமயத்தில் "காம்படிஷன்" காரணமாக, பஸ்களிலே "ஓவர்லோட்" அதிகமாகப் போடப்படுகிறது. நகரப் புறங்களில் இந்த "ஓவர்லோட்" இருக்கிறது. போலீஸ் அதிகாரிகளை வைத்துக் கொண்டு ஓவர்லோட் போடுகிறார்கள். அதிலும் குறிப்பாக இங்கே இருக்கக் கூடிய நமது தி.மு.க. கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் அதிலே சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை இந்த இடத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். தயவு செய்து தக்க முறையில் இதைப் பரிசீலிக்க வேண்டும். கோவை நகரில் முன்பெல்லாம் கடைசி பஸ்ஸுக்குப் போகும் நேரத்தில் "ஓவர்லோட்" போடுவது வழக்கம். ஆனால் இன்றைய தினம் பட்டப்பகலில் போலீஸ்காரர்களை வைத்துக்கொண்டு போடுகிறார்கள். அதிலும் இந்தக் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் நடத்தும் பஸ்களில் இது அதிகமாக நடக்கிறது என்பதை வருத்தத்தோடு இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, கோவை ஜில்லாவில் நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். கோவையில் சென்ற ஜனவரியில், காங்கிரஸில் ஏற்பட்ட பிளவின் காரணமாக எங்களோடு இருந்து பிரிந்த நண்பர்கள்

[திரு. எஸ். வி. லட்சுமணன்] [5th March 1970

காங்கிரஸ் ஆபீஸுக்கு நாளதுவரையில் யாரும் வரவில்லை. ஜில்லா காங்கிரஸ் கமிட்டி செக்ரடரி அதுவும் 1-ம் தேதி 10 நிமிஷமும், 2-ம் தேதி 10 நிமிஷமும் வந்திருக்கிறார். அதை அடுத்து நாளது வரையில் ஜில்லா கமிட்டி காங்கிரஸ் ஆபீசுக்கு யாரும் வரவில்லை என்பதை இந்தச் சபையில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படியிருந்தும் கூட போலீஸார் எங்கள் மீது அக்ரமமாக "கேஸ்" போட்டிருக்கிறார்கள். கோர்ட்டில் தள்ளுபடி ஆகி விட்டது. அடுத்து, கோர்ட்டுக்குப் போகும் நிலையில் இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அளிக்கப்பட்ட தீர்ப்பு நியாயமல்ல என்று கூறுவது கோர்ட்டைப் பற்றி இங்கே குறை கூறுவதாகி விடும்.

**திரு. எஸ். வி. லட்சுமணன் :** அளிக்கப்பட்ட தீர்ப்பைப் பற்றிச் சொல்ல ஆசைப்படவில்லை. அங்கே எங்கள் நிலைமைபற்றிச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சென்ற ஜனவரி மாதத்தில் கோவை காங்கிரஸ் ஆபீசில் எங்களைத் தவிர வேறு யாரும் கிடையாது. அப்படி இருந்தும் கூட போலீஸ்காரர்கள் தவறாக 10 பேரை "அரஸ்டு" செய்தார்கள். "அரஸ்ட்" செய்யும்போது நாங்கள் தான் இருந்தோம், வேறுயாரும் கிடையாது. எங்களுக்குள் சண்டைசச்சரவும் கிடையாது. நாங்கள் வம்புக்கும் போவதில்லை. நன்றாக யோசித்து முடிவு எடுத்திருந்தால், திருப்தியாக இருக்கும். போலீஸ்காரர்கள் சொன்னதைக் கேட்டு முடிவு எடுத்ததற்கு மிகவும் வருத்தப்படுகிறோம். அதே போல் நிலை எப்போதும் நீடிக்கக் கூடாது. எந்தவிதமான குற்றம் இல்லாமலும், எந்தவிதமான தவறு இல்லாமலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதை முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப் படுகிறேன். இதைத் தீவிரமாக விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஒவ்வொரு இடத்திலேயும் காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்று ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. பிறகு உங்களுக்குள்ளே ஒரு பிளவு ஏற்பட்டபிறகு, எங்களைப் பொறுத்த வரை, அந்தத் தலைவர் அந்தப் பதவியிலிருந்து இறக்கப்படுகிற வரையில், நாங்கள் அந்தத் தலைவரை மதிக்க வேண்டும் என்று செய்திருக்கிறோம். அந்தத் தலைவர் செய்துள்ள புகாரில் தன்னிடம் சாவி இருக்கும்போது, மற்றவர்கள் திறந்துக்கொண்டு ஆக்கிரமித்து விட்டார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இதில் அரசு எப்படி நடந்து கொள்வது என்பது தர்மசங்கடமான நிலைமையாகும்.

**திரு. எஸ். வி. லட்சுமணன்:** அவர்களுக்கும் கட்டடத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஜில்லா காங்கிரஸ் கமிட்டி மகாசபையைக் கூட்டி அந்தத் தலைவரை விலக்கி விட்டோம் ; வேறு தலைவர் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். அதைத் தீர்மானிக்க வேண்டியது கோர்ட்டு தான்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதே மாதிரி இங்கே சென்னையில் காங்கிரஸ் தலைவரை விலக்கி விட்டதாக இண்டிகேட் காங்கிரஸ்காரர் கூறி வருகிறார்கள். சிண்டிகேட் தலைவரைத்தான் தலைவராகக் கருதி வருகிறது அரசாங்கத்தைப் பொறுத்தவரை. சத்தியமூர்த்தி பவன் சிண்டிகேட் காங்கிரஸ் கையில் இருக்கிறது. அங்கே போய் இண்டிகேட் காங்கிரஸ் காரர் ஆக்கிரமித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சிண்டிகேட் தலைவர் போலீஸுக்குப் புகார் கொடுத்தால், அவர் சார்பாகத்தான் போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.



5th March 1970]

**திரு. கே. ராஜாராம் :** இந்த விஷயத்தில் ஒரு சிறு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாநில காங்கிரஸ் கமிட்டியைப் பொறுத்தவரை, முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, பெரும்பாலோர் திரு. கக்கன் தலைமையில் தான் செயல்பட்டு வருகிறார்கள். அதே மாதிரி கோவையில் மகாசபையைக் கூட்டி 100க்கு 96 பேர் பழைய காங்கிரஸ் கமிட்டித் தலைவரை விலக்கிவிட்டு வேறொரு தலைவரைத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். ஜனநாயக ரீதியில் செயல்படும் இந்த மாதிரிக் கட்சிகள் மெஜாரிட்டி நிர்ணயப்படி தான் நடக்க வேண்டும் என்பதை அரசின் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் அதை ஒப்புக்கொள்கிறேன். தலைவர் யார், செயலாளர் யார் என்பதை அந்தக் கட்சி உறுப்பினர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் அரசைப் பொறுத்தவரை, தர்மசங்கடமான நிலைமையாகத்தான் இருக்கிறது என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அறிவார் என்று நினைக்கிறேன்.

**திரு. எஸ். வி. லட்சுமணன்:** இதை நன்கு சிந்தித்து விசாரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று முதலமைச்சரைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு கோவை ஜில்லாவில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்று ஆரம்பிக்க அரசு ஒப்புதல் அளித்ததற்காக என் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு, இதோடு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1970-71-ம் ஆண்டு வரவு செலவுப் பட்டியலைப்பற்றி என் கருத்துக்களைச் சொல்ல நான் முற்படுகிறேன். முக்கியமாக அரசு அரசாங்க ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் 10 ரூபாய் ஊதிய உயர்வு கொடுத்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன். ஆனால் 30 ரூபாய் அளித்திருந்தால், மிகவும் நன்றாக இருக்கும். மறு பரிசீலனையில் 30 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் ஆசிரியர்களுக்கு அதிகமான ஊதியம் கிடைக்கிற காரணத்தால், நம் அரசு அவர்களுக்கு 30 ரூபாய் உயர்வு அளிப்பதில் ஒன்றும் தவறில்லை என்று இந்த அரசுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ஆனால் ஒருபுறம் இந்த ஊழியர்களுக்கு 10 ரூபாய் உயர்வு அளித்தாலும், மற்ற ஊழியர்கள், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு எந்த வித ஊதிய உயர்வும் இல்லாததோடு, இப்போது வரி அதிகமாகப் போட்டிருக்கிற காரணத்தால், அந்த ஊழியர்கள் அந்த வரியினால் பாதிக்கப்படுவார்கள் ; ஏற்கெனவே கடந்த இரண்டாண்டுகளாக விலையேற்றம் ஏற்பட்டு படிப்படியாக எல்லா உணவுப் பொருட்களின் விலையும் ஏறியிருக்கிற காரணத்தால், அவர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் ; இந்தக் காரணங்களுக்காக, இந்த ஏழைகளுக்கு எந்தெந்தத் துறையில் வரி விதிக்காமல் விலக்களித்து, பணக்காரர்களுக்கு வரி விதித்தால் நல்லது என்று சிந்தித்துப்பார்த்து வரி விதிப்பை மாற்றினால், நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன். குறிப்பாக, மண்ணெண்ணெய்க்கும் சிமிண்டுக்கும் வரி அதிகமாகியிருக்கிறது. இது ஏழைகளைப் பாதிக்கும். பல பெண்கள் என்னிடம் கேட்டார்கள். இன்று கட்டை 3 ரூபாய்க்கு விற்கிற காரணத்தால், நாங்கள் அதிகமாக மண்ணெண்ணெய் உபயோகித்து வருகிறோம். ஆனால் இந்த விலையேற்றம் காரணமாக எப்படி சமைப்பது என்று எண்ணுகிறார்கள். அதனால் மத்திய அரசாங்கம் எப்படி மறு பரிசீலனை செய்து ரயில்வேயில் மூன்றும் வகுப்புக்குக் கட்டண உயர்வை நிறுத்தினார்களோ, அதே போல் நமது அரசாங்கமும் மண்ணெண்ணெய்க்கும் சிமிண்டுக்கும் வரி விதிப்பை எடுத்தால் நன்றாக இருக்கும் என்ற யோசனையைக் கூறுகிறேன்.

**திருமதி அலமேலு அப்பாதுரை :** மண்ணெண்ணெய்க்கு இந்த சர்க்கார் வரி போட்டிருப்பதாகத் தெரியவில்லையே. மத்திய சர்க்காரில் தான் போட்டிருக்கிறார்கள்.

**திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் :** எங்களைப் பொறுத்தவரை, இரண்டும் ஒன்றுதான். ஆனால் நம் சர்க்காரும் மத்திய சர்க்காரும இணைந்து பல காரியங்களைச் செய்கிற காரணத்தால், மண்ணெண்ணெய மீது போட்ட வரியை நீக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். அது மட்டுமல்ல ; சென்னை சென்ட்ரல ஸ்டேஷனிலிருந்து அரக்கோணம், பொன்னேரி வரையில் மின்சார ரயில் விடுவதற்கு நம் அரசாங்கம் அவர்களைக் கேட்கவேண்டும் என்று பல முறை நான் இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். விஸ்தரிக்கப் பட்டிருக்கிற இந்த சென்னை மாநகரத்தில் வாழுகிற மக்கள் நெருங்கியிருக் கிற காரணத்தால், தென்புறத்தில் மின்சார ரயில் இருந்தாலும், வட புறத்தில் இருக்கிற சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து அரக்கோணத்துக்கும் சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து பொன்னேரிக்கும் மின்சார ரயில் ஓடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த சந்தர்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். பல காரியங்களில் மாநில அரசும் மத்திய அரசும் இணைந்து செயல் படுவதால், மத்திய அரசு விதிக்கிற வரிகளால் இந்தப் பகுதி மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்து தெரிந்து அதைக் கண்டிக்க வேண்டும் இந்த அரசு.

கூவம் நதியை சீர்படுத்துவதை மிகவும் பாராட்டுகிறேன். ஏனென்றால்10 ஆண்டுகளாக இந்த மன்றத்தில் கூவம் நதித் திட்டத்தைப் பற்றிச் சொல்லி வந்திருக்கிறேன். இன்று அவர்கள் ஆரம்பித்தாலும் கூட, நம்முடைய காங்கிரஸ் அரசாங்கம் விட்டுச் சென்றதைச் சீராக, சிறப்பாக இந்த அரசு செய்து வருவதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால், வட சென்னையில் இருக்கிற மக்களின் நிலைபற்றித் தெரிந்திருப்பீர்கள். கூவம் விஸ்தரிக்கப்பட்டாலும், இந்த நாற்றத்தால் அவர்கள் படும் தொல்லை அந்தப் பக்கமாகப் போகிற மக்களுக்குத் தெரியும். அந்தக் காற்றினால் தொத்து நோய்கள் பரவி, அந்தப் பகுதி மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லத் தேவையில்லை. இதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், நம்முடைய அமைச்சர் களில் நான்கு பேர் வட சென்னையில் குடியேறட்டும். அப்படிக் குடி யேறினால் வட சென்னைக்கும் தென் சென்னைக்கும் உள்ள வித்தியாசங்கள், வளர்ச்சி எல்லாம் தெரியும். வட சென்னையில் இட நெருக்கடி அதிகம். அங்கே உலாவுவதற்கு பார்க்குகள் இருக்கின்றனவா ? அப்படி பார்க்குகள் அமைப்பதற்கு இந்த பட்ஜெட்டில் ஏதாவது பணம் ஒதுக்கியிருக்கிறார்களா? நீங்கள் செய்யக் கடமைப் பட்டிருக்கிறீர்கள் என்று சொல்ல விரும்பு கிறேன். வட சென்னை மக்கள் எழுத்தறிவு இல்லாத மக்கள், உழைக்கிற மக்கள் ; அவர்களுக்கு உடனடியாக வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். கூவம் நதி விஸ்தரிப்புப் போல் வட சென்னை மக்களுக்கு அங்கே உள்ள கடற்கரையை நன்றாக ஆக்கி மரீனா பீச் போல் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி அலமேலு அப்பாதுரை :** தலைவர் அவர்களே மதிப்புக்குரிய உறுப்பினர் பேசுகிறார்—வட சென்னை, தென் சென்னை என்ற முறையில். அதே நேரத்தில் வட சென்னையில் ஏராளமான கப்பல்கள் வந்து இறங்குகின்றன, தென் சென்னையில் கப்பல் கிடையாது. தயவு செய்து இந்த அரசாங்கம் தென் சென்னையில் கப்பல் துறை கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் :** வட சென்னை மக்கள் பெரும் தியாகம் செய்து கப்பல் துறை அங்கு வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஏழைகள் வாழுகிறார்கள் ; சென்னையிலுள்ள அழகான இடத்தைத் தியா கம் செய்து கப்பல் துறைக்குக் கொடுத்திருக்கிறார்கள். எந்த விஸ்தரிப்புத்





திட்டத்தையும் வட சென்னை, தென் சென்னை என்று பிரிவினை செய்ய வில்லை. எனக்கு இந்தியா பூராவும் ஒரு தேசம். ஏனென்றால் இந்தியா ஒரே தேசம் என்ற எண்ணம் கொண்டவர்கள் நாங்கள், பிரிவினை மனப்பான்மை எங்களுக்குக் கிடையாது. ஆனால், வட சென்னை, தென் சென்னை என்று பார்க்கும்போது, இன்று மட்டும் இல்லை, காங்கிரஸ் அரசு இருந்த காலத்திலும் கூட நான் இவற்றை வற்புறுத்திக் கூறியிருக்கிறேன். பெரும் தலைவர்கள் வரும் நேரத்தில், தென் சென்னையிலுள்ள திருவல் லிக்கேணி கடற்கரையில்தான் வந்து பேசுகின்றார்கள். பெருமதிப்பிற்குரிய நேருஜி அவர்கள் கூட அங்கேதான் பேசியிருக்கிறார்கள். இப்போதும் கூட எல்லை காந்தி வந்த நேரத்தில் அங்கேதான் பேசினார்கள். வட சென்னையில் உள்ளவர்கள் பஸ்ஸுக்கும் வண்டிகளுக்கும் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று செலவழித்துக்கொண்டுதான் அவர்கள் பேச்சைக் கேட்க வரவேண்டியிருக்கிறது. வட சென்னையில் உள்ள மக்கள் எவ் வளவு துன்பத்திற்கு இடையில் வாழ்கின்றார்கள் என்பதை நேருக்கு நேர் அறிய வேண்டுமானால், நான்கு அமைச்சர்களாவது அங்கே குடியேற வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய கஷ்டங்களை நேரில் பார்த்து அறிய முடியும். அந்தப் பகுதிக்கு நல்ல பஸ்கள் கிடையாது. தென் சென்னைப் பகுதிகளில் ஓடி ஆடிய பஸ்கள் வட சென்னைக்கு அனுப்பப் படுகின்றன. வட சென்னையில் ஓடும் பஸ்களால் தான் போக்கு வரத்துத் துறைக்கு அதிக வருமானம் என்றாலும் கூட, அங்கே நல்ல பஸ்கள் கிடையாது. அடிக்கடி கெட்டுப்போய் நின்றுவிடுகின்றன. நான் பஸ் ஊழி யர்களைக் குறை சொல்லவில்லை. அங்கே அனுப்பப்படும் வண்டிகள் பெரும் பாலும் நல்ல பஸ்கள் இல்லை. ஏன் இந்தப் பாகுபாடு ? இது போலத் தான் அனாதைக் குழந்தைகள் விடுதிகள் பராமரிப்பிற்கான உதவித் தொகை வழங்குவதிலும் பாகுபாடு காண்பிக்கப்படுகிறது. அங்குள்ள அனாதைக் குழந்தைகள் விடுதியில் உள்ள 370 குழந்தைகளும் உங்கள் குழந்தைகள், தாய், தந்தையற்ற குழந்தைகள். அரசாங்கம் பொறுப் பேற்று அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டாமா ? அவர்களுக்கு உண வளித்து, கல்வியளித்து அவர்களுக்கு என ஒரு எதிர்காலத்தை உரு வாக்கித் தருவதில் அரசுக்குப் பொறுப்பிருக்கிறது. அதில் பாகுபாடு காண்பிப்பது என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். இதைப் போலவே சென்னைக்கும், கோவைக்கும் மட்டும் ரூபாய்க்கு ஒரு படியரிசி என்று சொல்லிவிட்டு, மற்றவர்களுக்கு பார்க்கலாம் என்று சொல்லிவிடுவது ஒரு வகையில் பாகுபாடு செய்வதுதான். எனவே, இப்படிப்பட்ட பாகுபாடு களைப் பார்க்காமல் அரசாங்கம் ஆவன செய்யும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

அடுத்து, பரிதாபத்திற்குரிய அரிசனங்களுக்குக் குடியிருப்புகளைக் கட் டித் தருவதற்காக பணம் ஒதுக்கியிருப்பதைப் பார்த்து சந்தோஷப்படு கிறேன். ஆனால், அவர்களுக்கு என்று கட்டப்படும் குடியிருப்புகள் ஊருக்கு வெளியிலேயும், சுற்றுப்புறத்திலும் அமைக்கப்படுவதால், அவர் கள் மற்றவர்களோடு பழகி, தங்களுடைய வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டு முன்னேற முடியாதபடி இருக்கிறது. இதே நிலை பல ஆண்டு களாக நீடித்துக்கொண்டிருக்கிறது. பல இனத்தவர்கள், ஏழைகளாக உள்ளவர்கள், எப்படி ஒரே இடத்தில் ஒரே தெருவில் அல்லது ஒரே பகுதி யில் ஒன்றாகக் குடியிருந்து வாழ்கிறார்களோ, அதே போல அரிசன மக்க ளும் அரிசனக் காலனி என்று தனிப்படுத்தப்படாமல் மற்றவர்களோடு கூடி வாழ்வதற்கான வழி வகைகளைக் காண வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. சி. பி. சிற்றரசு :** மகாத்மா காந்தியடிகள் கூட அரிசனங்களுக்கு என்றுதான் தனியாக "அரிசன்" என்று ஒரு பத்திரிகையை நடத்தினார்.

**திருமதி சரஸ்வதி பாண்டுரங்கம் :** நடத்தினார் என்பது உண்மைதான். ஆனால், மற்ற சமுதாயத்தினர் அரிசனங்களும் நம்மில் ஒருவர் என்று எண்ணும் ஒரு உள்ளப் பக்குவத்தை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் அதை நடத்தினார்கள், இப்படி ஒரு காலனியில் தனியாக அவர்களைக்

குடியேற்றி வைத்தால், அவர்கள் ஒருக்காலத்திலும் முன்னேற்றம் அடைய முடியாது. அவர்களோடு பல ஆண்டு காலம் நெருங்கிப் பழகிவருவதால் தான் நான் இதைச் சொல்லுகிறேன். எனவே, இந்த அரசு அரிசனங்கள் எல்லா இடங்களிலும் குடியேறுவதற்கான வழி வகைகளை வகுத்துத் தர வேண்டும், அப்படி ஒரு திட்டத்தினைத் தீட்டிச் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை இந்த அளவோடு முடித்துக் கொள்ளுகிறேன். நன்றி.

**திரு. ஏ. பொன்னப்ப நாயுடு :** கனம் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் கிராமப்புறங்களில் வாழும் நமது பெரும்பான்மை மக்களுடைய நல் வாழ்விற்கென போதிய நிதி ஒதுக்கப்படவில்லை என்று நான் ஐயுறுகிறேன். நமது தேச மக்களில் பெரும் பகுதியினர் கிராமப்புறங்களிலேயே வாழ்கின்றனர். அவர்களில் பெரும் பகுதியினர் ஆண்டுக்கு நான்கு மாதங்களே வேலைவாய்ப்பு உடையவர்களாகவும், எஞ்சிய எட்டு மாதங்களுக்கு வேலையின்றி அவதியுறும் மக்களாகத்தான் இருக்கிறார்கள். அவர்களுடைய நல் வாழ்வினைக் கருத்தில் கொண்டுதான் காந்தியடிகள் அதிகாரம் பரவலாக்கப்பட்டு அரசு ராம ராஜ்யமாக அமைய வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். இந்தக் கருத்தினை முன்பிருந்த அரசும் சரி, இப்போது செயல்படும் அரசும் சரி, ஏற்றுக்கொண்டு பஞ்சாயத்து யூனியன்களை அடிப்படையாகக் கொண்டு பல காரியங்களைச் செய்து வருகின்றார்கள். ஆனால், அன்று காந்தியடிகள் அனைவருக்கும் வேலை வாய்ப்புக்கள் இருக்கவேண்டும், நகர மக்களுக்கு இருப்பதைப்போலவே கிராமப்புற மக்களுக்கும் வேலை வாய்ப்புகளும் வசதிகளும் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். இதைக் கருத்திற் கொண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்படி இருந்தும் கூட, இன்னமும் கிராம மக்கள் ஒரு அளவிற்காவது முன்னேற்றம் அடைந்திருக்கின்றனரா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. சட்டமன்றங்களிலும் சரி, பாராளுமன்றங்களிலும் சரி, தொழிலாளர் பற்றிய பிரச்சினைகளை எடுத்துப் பேச என்றே சிலர் இருக்கிறார்கள். அது போல சட்ட மன்றங்களில் ஆசிரியர் குறைகளை எடுத்துச் சொல்லுவதற்கு என்றே சிலர் இருக்கின்றனர். ஆனால் இப்படி கிராமப்புறங்களில் வாழ்வின்றித் தவிக்கும் ஏழை எளியவர்களுடைய குறைகளைப் பற்றி எடுத்துப் பேச யாருமே இல்லை. அவர்களுடைய குறைகளை அறிந்து ஆவன செய்வதற்கு அரசும் முன்வரவில்லை. அவர்கள் ஆண்டொன்றுக்கு எட்டு மாத காலம் வேலையின்றி வாழ்வின்றித் தவிக்கின்றனர். இந்த நிதி நிலை அறிக்கையில் அரசின் ஆண்டு வருமானம் 288 கோடி ரூபாய் என்று காண்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்தக் கிராமப்புற மக்களுடைய நல்வாழ்விற்கென எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் ஒரு கோடி ரூபாய் மட்டுமே. நமது மக்கள் தொகையில் 70, 75 சத விகிதத்தினர் கிராமப்புறங்களிலேயே வாழ்கின்றனர். ஆனால், அவர்களுடைய நல்வாழ்விற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை வெறும் ஒரு கோடி ரூபாய் மட்டுமே. அவர்களுடைய வேலை வாய்ப்பிற்கான திட்டம் ஒன்றும் காணோம். ஏதோ தாய்-சேய் நல விடுதி போன்ற சிறு திட்டங்களினால் அவர்களுக்கு என்ன வேலை வாய்ப்பு ஏற்பட்டுவிடும் என்று கருத்தில் கொண்டு பார்க்க வேண்டும். எனவே, இந்தத் தொகை போதாது. சிறு சிறு தொழில்களைக் கிராமப் புறங்களில் ஆரம்பிப்பதற்கான திட்டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். மாநில அரசும் மத்திய அரசும் கூடி இப்படி ஒரு நல்ல திட்டத்தினைத் தீட்டி செயலாக்க வேண்டும். மேலும் இன்று பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் என்று இருக்கின்றனவே தவிர, மாவட்ட ஆட்சியாளர்களும் சப்-கலெக்டர்களும்தான் அங்கேயும் தங்கள் அதிகாரத்தைச் செலுத்துகின்றார்கள். அதிகாரங்கள் கிராமப்புறங்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்று நாம் கோரும் நேரத்தில், இப்படி அதிகாரிகள் தங்கள்





அதிகாரங்களை விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு, மக்களுக்கு என அமைக்கப்பட்ட அந்த மன்றங்கள் போதிய அதிகாரத்துடன் செயல்படாமல் செய்து வருகின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும். அதிகாரங்கள் உண்மையாகவே பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் மாற்றப்பட வேண்டும்.

எங்கள் மாவட்டம் அரிசனங்கள் பெரும் அளவில் உள்ள மாவட்டம். அவர்களுக்குக் குடியிருப்பு மனை கொடுக்கிறோம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், மொத்தத்தில் 100-க்கு ஐந்து பேர்கள் கூட அப்படிப்பட்ட மனைகள் வழங்கப்படாமல்தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஹரிஜன் காலனிக்கும் 10 அல்லது 20 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல, இன்னும் சில கிராமங்களில் 20 ஜதை மாடுகள் கொடுக்கப்பட்டன. இதனால் எல்லா ஹரிஜனங்களுக்கும் அந்தப் பலன் கிடைக்கவில்லை. யார் பேருக்கும் மனை கிடையாது. அவ்வளவு பேருக்கும் நாலு செண்ட் அல்லது ஐந்து செண்ட் நிலம் கொடுத்துவிட வேண்டும். அதோடு மட்டுமல்ல, இப்போது பாங்குகள் தேசிய மயம் ஆக்கப்பட்டன. அதன் மூலம் தொழில்களுக்கு எல்லாம் கடன் கிடைக்கப்போகிறது என்று சொல்கிறார்கள். அதைப் பார்த்தால், ஏதோ டாட்டாக்களுக்கும், பிர்லாக்களுக்கும், பணக்காரர்களுக்கும் லட்சக்கணக்கான பணம் கொடுத்திருக்கிறார்கள். கிராமங்களில் வாழும் ஏழை மக்களுக்கு ஒரு ஐந்து செண்ட் மனை கொடுத்து, அவர்களுக்கு ரூ. 2,000, 3,000 கடனாக அல்லது மானியமாகக் கொடுத்து, அதை 10 வருஷம் அல்லது 20 வருஷத்தில் செலுத்திவிடும்படி ஒரு நிரந்தரமான திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அது மட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் இதில் முக்கிய கவனம் செலுத்துவார் என்று நான் நம்புகிறேன். குழந்தைகளுக்கு எல்லாம் ஒரு கப் பால் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி இலவசக் கல்வி கொடுத்து, உடை கொடுத்து, உணவு கொடுத்து, இன்றைக்கு மாணவர்கள் கல்வி பயில நாம் முயற்சி எடுத்தோமோ அப்படி, தொழில்கள் எல்லாம் இலவசமாகப் பாடசாலையில் கற்க, அந்தத் தொழில்கள் செய்யும் குழந்தைகளுக்கு ஒரு கப் பால் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு நாம் பல கோடி ரூபாய் செலவு செய்து எல்லோரையும் படிக்க வைக்கிறோம். ஆனால் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. இந்த ஏட்டுச் சுரைக்காய் நாட்டுக்குப் பயன்படாது. அன்றைக்குச் சொன்னார்கள், " குழந்தைப் பருவத்திலே அவர்களுக்கு நல்ல தொழில் சொல்லிக் கொடுக்க வேண்டும். விவசாயம் சொல்லிக் கொடுக்க வேண்டும் " என்று. தொழில் கல்வி, விவசாயக் கல்வி அடிப்படையில் வந்தால்தான் நம் நாட்டுக் குழந்தைகள் கலெக்டர் வேலைக்கு மனுப் போட மாட்டார்கள். அவ்வளவு பேருக்கும் வேலை கொடுத்துவிட முடியாது. நம்முடைய நாடு விவசாய நாடு. தொழில்கள் பரந்த நாடு. அவர்கள் அந்த சர்டிபிகேட்டை வாங்கிய உடனே அடிமை வாழ்வுக்குப் மனுப் போட மாட்டார்கள். என் கிராமத்துக்குப் போய் விவசாயம் கற்றுக்கொண்டேன். தொழில் தெரிந்துகொண்டேன். கிராமத்தை அபிவிருத்தி செய்வேன். அதைப் பொருட்படுத்தவில்லை. நூற்றுக்கு 70 பேர் படித்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை. இந்த ஏட்டுக் கல்வியைப் படித்தவர்கள் 10 வருஷத்தில் 100-க்கு 100 பேர் ஆகி விடுவார்கள். இந்தக் கல்வி அமைப்பை மாற்ற வேண்டும். ஆனால், யாரும் அதில் கவனம் செலுத்துவதில்லை. இதில் மத்திய அரசும் நம் அரசாங்கமும் கவனம் செலுத்த வேண்டும். பஞ்சாயத்துக்களில் பார்ப்போமானால் கிராமங்களுக்கு நல்ல பாதை கிடையாது. "மெட்டல் ரோட்" போடாமலே, ஜல்லி ரோடு போடாமலே பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. பஸ்கள் எங்கெங்கே போகின்றனவோ அங்கு எல்லாம் ஜல்லி ரோட் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. எ. பொன்னப்ப நாயுடு] [5th March 1970

6-50 p.m. விவசாயத் துறையில் பார்ப்போமானால், எங்கள் ஜில்லாவில் செஞ்சி, திண்டிவனம் பகுதியிலே 1968-ம் ஆண்டு புயல் காற்று அடித்து ஏரி எல்லாம் உடைந்து சாவியாகி வஜா கொடுத்திருக்கிறார்கள். 1968-ல் பாதி சாவி. 1969-ல் சுத்தமாக சாவி. இந்த மூன்று வருஷம் அங்கே இருக்கும் விவசாயிகள் எல்லா கடன்களும் வாங்கியாய்விட்டது. ஆனால், இன்றைக்கு என்னென்ன வரிகள் கட்ட வேண்டும் தெரியுமா? சர்க்கார் கடன், சொஸைடி கடன், தனியார் கடன். அதோடு இந்தக் கடன்களை எல்லாம் மோட்டார் கடன், மாட்டுக் கடன், இன்னும் வாங்கிய கடன்களையெல்லாம் உடனே வசூல் பண்ண வேண்டுமென்று ரெவின்யூ அதிகாரிகள், ஆடுமாடுகளைப் பிடித்து ஜப்தி செய்வோம் என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதிகளில் அரசாங்கக் கண்காணிப்பு இருக்க வேண்டும். மூன்று வருஷப் பணத்தை ஒரேயடியாகக் கொடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த வருஷம் கொஞ்சம் பணம், அடுத்த வருஷம் கொஞ்சம் பணம் என்று கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல; இப்போதெல்லாம் பட்டா கொடுக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கு ஒரு அமைப்பு அந்தக் காலத்திலிருந்தே உண்டு. குளம், புறம்போக்கு, ஏரி, ஓடை, மந்தவெளி புறம்போக்கு, காடு, மேய்க்கும் இடம் என்று கிராமங்களில் இருக்கும். அங்கே கோயில் இருக்கும், கோபுரம் உண்டு, குளம் இருக்கும், ஏரி இருக்கும், அது ஒரு கிராம அமைப்பு. அந்த அமைப்பு எல்லாம் சிதறிக் கொண்டிருக்கிறது. சின்ன சின்ன ஏரிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட ஏரிகளை எல்லாம், பட்டா செய்வதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். தரிசு நிலத்தைப் பட்டா செய்வதற்கு ஆட்சேபணையில்லை. இன்றைக்குப் புறம்போக்கு நாலு எக்கர் இருக்கும், ஏரிக்குத் தண்ணீர் வரும். மயான புறம்போக்கு 10 எக்கர் இருக்கும். அதில் இரண்டு எக்கரை மயான புறம்போக்காக வைத்து, மீதி எட்டு எக்கராவை அடமானம் பண்ணுகிறார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும். முன்னால் பஞ்சாயத்துக்கு அதிகாரம் இருந்தது. பஞ்சாயத்து தீர்மானம் போட்டால்தான் அடமானம் செய்ய முடியும். அதை மாற்றிவிட்டார்கள். இப்போது பஞ்சாயத்து தீர்மானம் போடுவதில்லை. அதுவும் சரியான முறையில் அந்தப் பட்டா வழங்குவதில்லை. ஒரு எக்கர் பெற வேண்டுமானால், 200, 300 ரூபாய் செலவாகும். அவ்வளவு செலவு செய்தால்தான், பட்டா வழங்குகிறார்கள். இதையெல்லாம் கண்காணிக்கவேண்டும். ஏரி மானியம் பட்டாபண்ணுகிறார்கள். சர்க்கார் உத்திரவு ஏற்கனவே இருக்கிறது. அந்த உத்திரவை அமுலாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மரக்காணம், காரடை, அரும்பாக்கம், நஞ்சமங்கலம் போன்ற 10, 15 கிராமங்களில் ஓரமாகக் கழிவடை நிலம் இருக்கிறது. 2,000 எக்கர் நிலம் இருக்கிறது. இதிலெல்லாம் உப்புத் தண்ணீராக இருக்கிறது. நான்கு மாதம் தண்ணீர் இருக்கும். இப்போது உப்புத் தண்ணீர் நிலங்களில் சாகுபடி செய்கிறார்கள். நாம் போர் போட்டால், நல்ல தண்ணீர் கிடைக்கும். அரசாங்கம் உடனடியாக அப்படிப்பட்ட நிலங்களுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் தொகுதியில் ஒரு கல்லூரி தற்காலிகமாக ஒரு கட்டிடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதை நல்ல இடத்தில் கட்ட இருக்கிறார்கள். அந்த வேலைக்கு இந்த ஆண்டு முதலிடம் கொடுத்து கல்லூரி கட்டிடத்தைக் கட்டித் தரவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு ஒங்கூர் அணையைப் பற்றி எத்தனையோ தரம் சொல்லியிருக்கிறேன். எங்கள் ஜில்லாவின் தென் பகுதியில் வீடூர் அணை கட்டி, 5,000 எக்கர் புஞ்சை நிலம், நஞ்சை நிலமாக மாற்றப்பட்டிருக்கிறது. அதே போல வட பகுதியில் இருக்கும் ஒங்கூர் தண்ணீர் சமுத்திரத்துக்குப் போய் விடுகிறது. அது சம்பந்தமாகப் பல தடவைகள் அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனம்பாக்கம், ஆவணிப்பூர், ஆங்களத்தூர்,



5th March 1970] [திரு. எ. பொன்னப்ப நாயுடு]

சேந்தமங்கலம் என்ற நான்கு கிராமங்களில் உள்ள, 4, 5 ஆயிரம் எக்கர் புஞ்சை நிலம் நஞ்சையாக மாறும். மேலும் அந்த அணை இருந்தால், இன்னும் பல கிராமங்களுக்கு ஊற்றின் மூலம் தண்ணீர் கிடைக்க வழி ஏற்படுகிறது. அந்த வசதியைச் செய்து கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட் உரையில் நான் எதிர்பார்த்தேன், நஞ்சை நிலத்துக்கு வரியை ரத்து செய்வார்கள் என்று. இதற்கு முன்பு இருந்த முதலமைச்சர் அவர்கள் தீர்க்கமாகச் சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே நாங்கள் நஞ்சை புஞ்சை நிலங்களுக்கு வரியை நீக்க வேண்டும் என்று சொன்னோம். அப்படி நீக்குவதுதான் நியாயமும் கூட. அந்தக் காலத்திலிருந்து கிராமத்திலுள்ளவர்கள்தான் நில வரி மூலமாக அரசாங்கத்துக்கு வரி கொடுத்தார்கள். நகரத்தில் இருக்கிறவர்கள் தம்படி கூட கொடுக்கவில்லை. இப்போதுதான் முனிசிபாலிடி வரி, பஞ்சாயத்து வரி, வீட்டு வரி எல்லாம் கொடுக்கிறார்கள். கிராம மக்களின் வரியிலிருந்துதான் அரசாங்கம் நடந்து வந்தது. ஆனால், அப்போது ஒரே ஒரு வரி. நிலவரி மட்டும்தான். அதற்குப் பின்னால் கிராம மக்களுக்கு என்ன என்ன வரி போட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால், பஞ்சாயத்து வரி, பஞ்சாயத்து யூனியன் வரி, வீட்டு வரி, நில வரி, செஸ் என்று எத்தனையோ வரிகள். அந்த வரியோடு "ஸேல்ஸ் டாக்ஸ்" சேர்ந்துவிட்டது. விவசாய வருமான வரியும் சேர்ந்துவிட்டது. பார்க்கப்போனால் வருஷம் 12 மாதமும் வரி கட்டத்தான் சரியாக இருக்கும். எல்லா வரியும் கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்போது அரசாங்கம் போடுகிற வரி எல்லாம் அவர்கள் மீதுதான். அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் போட்ட வரியை எடுத்துவிடவேண்டுமென்று காங்கிரஸ் அரசாங்கம் முயற்சித்தது. ஆனால் மறைந்த முதலமைச்சர் அவர்கள் தீர்க்கமாகச் சொன்னார்கள். "இந்த வருஷம் புஞ்சை நிலத்துக்கு வரி எடுக்கிறோம், அடுத்த வருஷத்தில் நஞ்சை நிலத்துக்கு எடுக்கிறோம்" என்று சொன்னார்கள். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இந்த பட்ஜெட்டில் நில வரியை எடுத்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அதை எடுக்கவில்லை. எதிர்காலத்திலேயாவது மறைந்த முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை இந்த அரசாங்கம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எங்கள் தாலுகாவில் மிகவும் முக்கியமான இரண்டு வேலைகள். சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுத்தலாம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். முன்பு இருந்த அரசாங்கம் சர்வே செய்து சேதராப்பட்டு, வானூர் பகுதியில் நல்ல சுண்ணாம்பு இருக்கிறது, அங்கே சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு கூனூர் பகுதியில் போர் போட்டால் நிலக்கரி கிடைக்கிறது. திருவண்ணாமலை பக்கத்தில் கூட நிலக்கரி கிடைக்கிறது. 50 அடி ஆழத்திலேயே கிடைக்கிறது. அதையும் எடுத்து ஏற்கெனவே அனுப்பினோம். அப்போது நெய்வேலியில் வேலை ஆரம்பித்துவிட்டார்கள். நெய்வேலியில் ஏராளமாகச் செலவு பண்ணி ஆரம்பித்து விட்டோம். இதை அப்புறம் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். சர்வே பண்ணிய அதிகாரிகளை மற்ற அதிகாரிகள் பார்த்து இதை நல்ல கரி என்று சொல்லாதீர்கள் என்று சொல்லிவிட்டார்கள். நெய்வேலியில் நல்ல கரி என்று சொல்லிவிட்டார்கள். அங்கே எவ்வளவோ தண்ணீர் இறைக்க வேண்டும். இங்கே தண்ணீர் இறைக்க வேண்டாம். செலவில்லை. அப்படிப்பட்ட நிலக்கரி அங்கே இருக்கிறது. இதை எல்லாம் அரசாங்கம் மறு பரிசீலனை செய்து சர்வே செய்து பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இப்போது முதலமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். கடலூரில் நடந்த ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இதைப்பற்றி ஏற்கனவே எங்கள் தலைவர் அவர்களும் நண்பர் திரு. எதிராஜுலுவும் சொல்லியிருக்கிறார்கள். அது ரொம்ப அக்கிரமம். யாரோ

[திரு. பொன்னப்ப நாயுடு] [5th March 1970

மாணவர்கள் செய்த ஒரு காரியம். காலையில் கருப்புக் கொடி பிடித்திருக்கிறார்கள். நான் அங்கே இல்லை. திண்டிவனத்தில்தான் இருந்தேன். மாணவர்கள் செய்த காரியம். பொதுஜனங்களை எல்லாம், கிராம ஜனங்களை எல்லாம் அடித்திருக்கிறார்கள். அதாவது மஞ்சக்குப்பம் கடைசியில் தண்ணீர் தொட்டி இருக்கிறது ; அது வரை போய் அடித்திருக்கிறார்கள். திருப்பாப்புலியூரில் இருக்கும் சினிமாக் கொட்டகை வரை அடித்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருந்தவர்கள் எல்லாம் அலறியிருக்கிறார்கள், திரும்ப அடிக்க வருகிறார்கள் என்று. ஏதோ சொன்னார்கள் என்று அடித்து விட்டார்கள். காங்கிரஸ் கட்சிதான் கிளப்பி விட்டது என்று சொல்வது தப்பு. காங்கிரஸ் கட்சிக்கும் அதற்கும்
7-02 p.m. சம்பந்தம் இல்லை. காலையிலே தலைவர் திரு சி. சுப்ரமணியம் அவர்கள் வரும்போது, மாணவர்கள் கருப்புக்கொடி காட்டியிருக்கிறார்கள். கூட்டத்தில்கூட அவர்கள்தான் கல்லை எடுத்துப் போட்டிருக்கிறார்கள். இதற்காகப் பொதுஜனங்களை அக்கிரமமாக அடித்துவிட்டார்கள். இது சம்பந்தமாக சர்வ கட்சியைச் சேர்ந்த பொதுமக்களும் எனக்கு எழுதியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக கவுன்சிலரும் கையெழுத்துப் போட்டிருக்கிறார். அந்த விண்ணப்பத்தை முதலமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். அதைப் பரிசீலித்து எது உண்மை என்று தெரிந்து அதற்கு ஆவன செய்ய வேண்டும். காங்கிரஸ் கமிட்டி ஆபீஸுக்குள்ளே இருந்த நண்பர் திரு. எத்திராஜுலுவை அடித்திருக்கிறார்கள். அவர் அப்போது தான் சென்னையிலிருந்து வந்திருக்கிறார். காங்கிரஸ் ஆபீஸில் உட்கார்ந்து கொண்டிருந்தார். இப்படிப்பட்ட அநீதி அக்கிரமம் கடலூரில் தென்னாற்காடு ஜில்லாவில் கடந்த 20 வருஷத்தில் நடந்ததில்லை. அதையொட்டி விருத்தாசலம் கூட்டத்திலேயும் தகராறு ஏற்பட்டது. இப்படி தகராறு நடந்தால், யாரும் கூட்டம் போட முடியாது. ஏற்கெனவே யார் கூட்டம் போட்டாலும், அந்தக் கூட்டத்தைப் போய்ப் பார்க்கிறதில்லை. ஆகையினால் இந்தக் கடலூர் சம்பவத்தைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து நியாயம் கிடைக்குமாறு, ஒரு விசாரணை நடத்த, ஒரு நீதிபதி போட்டு பொதுமக்களை விசாரிக்க வேண்டும். எங்களை அடித்தாலும் பரவாயில்லை ; நாங்கள் நிறைய அடிபட்டவர்கள், ஜெயிலுக்குப் போனவர்கள். அடிக்குப் பயந்தவர்கள் அல்ல. பொதுமக்களை, கிராமஜனங்களை எல்லாம் அடித்திருக்கிறார்கள். ஆஸ்பத்திரிக்குப் போனால், கோர்ட்டுக்கு இழுப்பார்கள் என்று அங்கே போகாமல் பலர் இருக்கிறார்கள். பிரெஞ்சுப் பகுதி ஜனங்கள் எல்லாம் அடிபட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் கடலூரில் நான் ஒரு கூட்டத்துக்குப் போனபோது அந்த அடி காயத்தை எல்லாம் காட்டினார்கள். ஆஸ்பத்திரிக்குப் போனவர்கள் தவிர நிறையப் பேர்கள் அங்கு போகாமல் வீட்டுக்குப் போய் விட்டார்கள். பயந்து கொண்டு ஊரை விட்டே ஓடிப் போனவர்களும் உண்டு. இப்படிப்பட்ட சம்பவம் எதிர்காலத்தில் நடக்காமல் அரசாங்கம் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

*Friday, 6th March* 1970.

The House met in the Council Chamber, Fort St. George at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Expensive Locality Allowance.*

* 174 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether teachers employed in the Government (Board) Secondary Schools in the Kodaikanal Hill area are granted the Expensive Locality Allowance; and

(*b*) if not, the reasons therefor?

### மிகுதியாகச் செலவாகும் பகுதிக்குரிய படி

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கோடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள அரசு (வாரியம்) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மிகுதியாகச் செலவாகும் பகுதிக்குரிய படி (Expensive Locality Allowance) வழங்கப்படுகிறதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) கோரிக்கை பள்ளிக் கல்வித் துறை இயக்குனரிடமிருந்து பெறப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

### *'Hill Allowance' and 'Winter Allowance'*

* 175 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the attention of the Government has been drawn to the fact that, 'Hill Allowance' and 'Winter Allowance' are not being granted to the teachers employed in the Vilpatti Government High School situated 3 miles from Kodaikanal in Madurai district;

(*b*) whether the above two allowances are being granted to those belonging to other Government Departments and teachers employed in Panchayat Union Schools situated in the same place; and

(*c*) if so, whether the 'Hill Allowance' and 'Winter Allowance' will be granted to the teachers employed in the Vilpatti Government High School also?

[6th March 1970

**மலைப்படி, குளிர்காலப் படி**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மதுரை மாவட்டத்தில் கொடைக்கானலுக்கு 3 கல் தொலைவிலுள்ள வில்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மலைப்படி (Hill Allowance), குளிர்காலப்படி (Winter Allowance) அளிக்கப்படவில்லை என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) அதே ஊரில் உள்ள வேறு அரசுத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும், இந்த இரண்டு வகைப் படிகள் (Allowances) கொடுக்கப்படுகின்றனவா ?

(உ) ஆமெனில், வில்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் மலைப்படி, குளிர்காலப்படி அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) மலைப்படி அளிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை பள்ளி கல்வி (துறை) இயக்குனரால் பெறப்பெற்றது.

(இ) வில்பட்டியிலுள்ள நில அளவு துறையை சேர்ந்தவர்களுக்கும் ஆரம்ப பள்ளி ஆசிரியர்களுக்கும் அகவிலை தலப்படி மட்டும் (Expensive Locality Allowance) அளிக்கப்படுகிறது. விவசாயத் துறையைச் சேர்ந்த பண்ணை மேலாளருக்கும் களப்பணியாளருக்கும் அகவிலை தலப்படியும் (Expensive Locality Allowance) குளிர்காலப் படியும் அளிக்கப்படுகிறது.

(உ) இவ்விஷயம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

*Midday Meals*

*176 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU R. KRISHNASWAMY NAIDU): Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the Government have issued orders for the provision of midday meals to the pupils in schools during the holidays also; and

(*b*) if so, the date from which this will come into force?

**மதிய உணவு**

**திரு. கே. ராஜாராம் :** (திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு சார்பில்) : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) பள்ளி விடுமுறை நாட்களிலும், பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு மதிய உணவு தர வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், இத்திட்டம் எந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, ராமனாதபுரம் மாவட்டத்தில் சென்ற கோடை விடுமுறையின்போது, பஞ்ச நிவாரணத்திற்காகப் பள்ளிச் சிறுவர்களுக்கு மதிய உணவு கொடுக்க அரசாங்கம் உத்தரவு போட்டதா ?



6th March 1970]

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லாப் பள்ளிகளிலும் எல்லா மாணவர்களுக்கும் விடுமுறை நாட்களில் மதிய உணவுத் திட்டத்தின்கீழ் மதிய உணவு போடும் உத்தரவு இல்லை. வறட்சி நேரத்தில் வறட்சிப் பகுதிகளில் மட்டும் சென்ற ஆண்டு மே, ஜூன் மாதங்களில் மாணவ மாணவிகளுக்கு மதிய உணவு தரப்பட்டது. அதுவும் "கேர்" நிறுவனம் அதிகப்படியான உணவுப் பொருள்களைத் தருவதற்கு முன்வந்தது. அதற்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டதால், அப்படித் தரப்பட்டது.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, விடுமுறைக் காலங்களில் மதிய உணவு கொடுக்கும் அந்தப் பணியில் ஈடுபட்ட ஆசிரியர்கள் "ஆன் டியூட்டி", வேலையில் இருந்ததாகவே கருதி, அவர்களுடைய சர்வீஸ் ரிஜிஸ்டரில் பதிவு செய்யுமாறு உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறதா ? ஏனென்றால் அவர்கள் விடுமுறை நாட்களில் மதிய உணவு அளிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** விடுமுறைக் காலங்களில் அம்மாதிரி மதிய உணவு கொடுப்பதற்கு சில மாதங்களுக்கு அனுமதித்தாலும் கூட, மதிய உணவு பெறும் குழந்தைகள் ஒழுங்காக கிராமங்களில் வருகின்றனவா ? அந்தத் திட்டம் சீராகக் கவனிக்கப்படவில்லை என்றால், அதில் தவறுகள் ஏற்படுகின்றன அல்லவா ? ஆகையால், அந்த முறை சரியானதா என்று அரசு பரிசீலனை செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் கூறியபடி, எல்லாப் பள்ளிகளிலும் எல்லா மாணவ மாணவிகளுக்கும் எல்லா விடுமுறை நாட்களிலும் மதிய உணவு போடப்படுவதில்லை. சென்ற ஆண்டு மட்டும் வறட்சி நிவாரணத்தை ஒட்டி, வறட்சிப்பணியாக மாணவ மாணவிகளுக்கு உணவு தர "கேர்" நிறுவனத்தார் முன்வந்தார்கள். வருகிற ஆண்டிற்கோ வேறு ஆண்டுகளுக்கோ இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

*Midday Meals*

*177 *Q.*—THIRU V. THANGAPANDIAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government recently to raise the per capita cost on the Midday Meals Scheme from 6 paise to 10 paise; and

(*b*) if so, the decision taken thereon by the Government?

**மதிய உணவு**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மதிய உணவு திட்டத்திற்கு நபர் ஒன்றுக்கு 6 பைசாவாக உள்ளதை 10 பைசாவாக உயர்த்தும்படி அரசிற்கு அண்மையில் ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசாங்கம் அதுபற்றி எடுத்த முடிவென்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

[6th March 1970

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, இன்றைக்கு 6 பைசா என்று இருப்பது 10 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும். இப்போது மிக அதிகமான விலைவாசி உயர்வின் காரணமாக, 6 பைசாவில் மாணவர்களுக்கு சத்துள்ள உணவு வழங்க முடியாது. ஆகவே மீண்டும் அரசாங்கம் இந்தத் திட்டம் பற்றிப் பரிசீலனை செய்து 6 பைசாவை 10 பைசாவாக ஆக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போதே 2 கோடி ரூபாய்க்கு மேல் இதற்காக நாம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல. ஆறு பைசாவோடு "கேர்" நிறுவனத்தார் தருகிற உணவுப் பொருள்களும் சேருகிற காரணத்தால், இந்தத் தொகையிலேயே இப்போது சமாளிக்கப்பட்டு வருகிறது. அப்படி சமாளிக்க முடியவில்லை என்ற குறைபாடு வந்தால், அதைப்பற்றி நாம் யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும், இப்போது (சென்டிரல் கிச்சன்) மத்திய சமையலறைத் திட்டம் "கேர்" ஸ்தாபனத்தின் கீழ் வருவதால், அநேகமாக இரண்டாண்டுகளில் இந்தப் பிரச்னை ஓரளவுக்குத் தீர்க்கப்பட்டுவிடும் என்று தோன்றுகிறது. ஏற்கனவே சென்ற ஆண்டு ஒரு மத்திய சமையலறைத் திட்டம் ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்திலும், இந்த ஆண்டு 30 இடங்களிலும் செயல்படுத்தப்பட இருக்கிறது. இப்படி 1970–72-க்குள் 374 ஒன்றியங்களிலும் மத்திய சமையலறைத் திட்டம் அமுலுக்கு வந்துவிடும் என்று சொல்லுகிறார்கள். "கேர்" நிறுவனத்தார் கொடுக்கிற உணவுப் பொருள் காரணமாக 6 பைசாவிலேயே சமாளிக்கப்பட்டு வருகிறது. அப்படி சமாளிக்க முடியாத சூழ்நிலை ஏற்படும் போது, இது கவனிக்கப்படும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** "கேர்" திட்டத்தில் மத்தியமான ஒரு இடத்தில் சமையல் செய்து விநியோகிக்கும் திட்டம் வரும்போது, அரசாங்கம் 6 பைசாவும் அங்கேயிருக்கிற லோகல் போர்டுகள் அல்லது கிராமத்தில் இத்தனை பைசா கொடுக்க வேண்டும் என்ற அவசியம் ஏற்படாது அல்லவா?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** உணவுப் பொருள் வழங்குகிற பொறுப்பு இன்னும் நம்மிடம் இருக்கிறது என்ற காரணத்தால், இந்தத் திட்டத்தை வைத்துக்கொண்டுதான் செய்ய வேண்டியிருக்கிறது. "கேர்" நிறுவனத்தார் "சென்டிரல் கிச்சன்" கட்டித் தருகிறார்கள்; சாமான்கள், மின்சாரப் பொறிகள் எல்லாம் தருகிறார்கள். உணவுப் பொருளைத் தரவேண்டிய பொறுப்பு நம்மைச் சார்ந்ததாக இருக்கிறது.

### *Age of retirement of teachers*

* 178 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the age of retirement of teachers has been reduced from 58 to 55;

(*b*) if so, the date on which the new age-limit came into force; and

(*c*) the details thereof?

### ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயது.

**திரு. எம். ராஜா அய்யர்** (திரு டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ஆசிரியர்கள் ஓய்வுபெறும் வயது 58-ல் இருந்து 55-ஆக்க குறைக்கப்பட்டுள்ளதா ?



6th March 1970]

(இ) ஆமெனில், புதிய வயது வரம்பு எந்நாளில் இருந்து செயலுக்கு வந்தது ?

(உ) அதுகுறித்த விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) & (உ) வினா எழவில்லை.

* 179 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that Government have passed orders reducing the age of retirement from 58 to 55 in the case of teachers under local bodies and former District Board High Schools (now Government Secondary Schools);

(*b*) whether representations have been received from teachers' organisations requesting the Government to fix the age of retirement as 60 in the case of all teachers under all agencies; and

(*c*) if so, the steps taken or proposed to be taken by the Government in the matter?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உள்ளாட்சி மன்றங்களின் கீழும், முன்னாள் மாவட்ட வாரிய உயர்நிலைப் பள்ளிகளின் கீழும் (தற்போது அரசு இடைநிலைப் பள்ளிகளாகும்) பணியாற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 55-ஆக குறைக்கும் வகையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பது உண்மையா ?

(இ) அனைத்து நிறுவனங்களின் கீழ் பணியாற்றும் எல்லா ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயதை 60-ஆக வரையறுக்க வேண்டும் என வேண்டி ஆசிரியர்கள் சங்கங்களிடமிருந்து முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளனவா ?

(உ) ஆமெனில், இது குறித்து அரசு மேற்கொண்ட அல்லது மேற்கொள்ளவிருக்கிற நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) இல்லை. ஆசிரியர்கள் ஓய்வுபெறும் வயது தொடர்ந்து 58-ஆக இருந்து வருகிறது. எனினும் அரசுப் பள்ளிகளில் ஆசிரியர்களாக உள்ள எவருக்கும் அரசு மூன்று மாத முன் அறிவிப்புக் கொடுத்து அவர்கள் 55 வயது நிறைவு எய்தியவுடனேயே அல்லது (55-க்குப் பின்) 58 வயது நிறைவு எய்துவதற்கு முன் எந்த நேரத்திலுமோ ஓய்வு அளிக்கலாம் என்று ஆணையிடப் பெற்றுள்ளது. சென்னை மாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி மன்றங்கள் தங்கள் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு மேற்சொன்னவாறு ஓய்வு அளிப்பதற்கு முன்பு அவ்வாசிரியர்களுக்கு அது குறித்து எழுத்து மூலமாக மூன்று மாத முன் அறிவிப்புக் கொடுப்பதோடு, அரசினரின் முன் அனுமதியும் பெற வேண்டும். அது போலவே அரசுப்பள்ளி ஆசிரியர்கள் அரசுக்கும், உள்ளாட்சி மன்ற ஆசிரியர்கள் உள்ளாட்சி மன்றத்திற்கும் மூன்று மாத முன்அறிவிப்புக் கொடுத்து 55 வயது நிறைவு எய்தியவுடனோ அல்லது (55க்குப் பின்) 58 வயது நிறைவு எய்துவதற்கு முன் எந்த நேரத்திலுமோ ஓய்வுப் பெற்றுக் கொள்ளலாம்.

(இ) இல்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

[6th March 1970

*Compulsory Medical Examination for Students.*

*180 Q.—THIRUVALARGAL V. THANGAPANDIAN : R. KRISHNASWAMY NAIDU, AND D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there is any proposal to conduct Compulsory Medical Examination for students studying in the Elementary Schools and High Schools in Tamil Nadu?

**மாணவர்களுக்கு கட்டாய வைத்திய பரிசோதனை.**

**திரு. வி. தங்கபாண்டியன், திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ் நாட்டில் உள்ள, ஆரம்ப, உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கட்டாய வைத்திய பரிசோதனை நடத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் ஏராளமான ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்றதா ? ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் கட்டாய சுகாதார நிலையம் ஏற்படுத்தினால், வருங்கால சந்ததியினர் பலம் பொருந்தியவர்களாக, நலம் பொருந்தியவர்களாக இருப்பார்கள். அதை உத்தேசித்து அரசு இப்படிப்பட்ட சுகாதார நிலையத்தின் சோதனைக்கு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே. இப்போது வாலண்டரி பேசிஸ் மெடிகல் எய்டு கொடுப்பது என்று இயங்கும் வண்டி, "மொபைல் மெடிகல் யூனிட்" அமைக்குமாறு ஈரோடு, மதுரை மாவட்டங்களிலும் நடைமுறையில் பரிட்சார்த்தமாகச் செய்யப்பட்டு வருகிறது. ஓரளவுக்குப் பலன் தருவதாக இருந்தால், அந்தத் திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் செயல்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது. சென்னையைப் பொறுத்தவரையில், தேவைப்படுகிற மாணவர்களுக்கு மருத்துவ ஆய்வு செய்யும் முறையை மாநகராட்சி மன்றமே உரிய அதிகாரிகளை வைத்துச் செய்து வருகிறது. மதுரையில் இருக்கிற கண் நோய் சிகிச்சை மருத்துவர் திரு. ஆர். வெங்கடசாமி என்பவர் ஒரு திட்டம் தந்திருக்கிறார். அதன்படி ஆசிரியர்களுக்கு ஒரு குறிப்பிட்ட 10, 15 நாட்கள் பயிற்சி தருவது மூலமாக மாணவர்களில் யார் யாருக்குக் கண் பார்வை மங்கலாக இருக்கிறது, யார் யாருக்குச் சிகிச்சை அளித்தால் பலனளிக்கும் என்ற விவரங்களை அவர்கள் சொல்ல முடியும். ஆகையால் மதுரையில் அந்தத் திட்டத்தை நடைமுறையில் பயன்படுத்தலாம் என்று ஆலோசித்து மேற்கொள்ளலாம் என்ற எண்ணத்திற்கு அரசு வந்திருக்கிறது.

*Cooperative Stores at Thiruvilliputhur*

*186 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the sale in black-market of 100 bags of wheat and 150 bags of paddy belonging to the Co-operative Stores at Thiruvilliputhur of Ramanathapuram district was detected and brought to the notice of the Government; and



6th March 1970]

(*b*) if so the action taken on the Manager of that stores; and

(*c*) whether there is any proposal to supersede the Board of Management of the Stores?

**திருவில்லிபுதூரில் உள்ள கூட்டுறவு பண்டகசாலை.**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்கவேண்டுகிறேன்.

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருவில்லிபுத்தூரில் உள்ள கூட்டுறவு பண்டகசாலையில் 100 மூட்டை கோதுமையும், 150 மூட்டை நெல்லும் கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டு அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா?

(இ) ஆம் எனில் அந்த பண்டகசாலை நிர்வாகியின் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

(உ) இப்பண்டகசாலையின் நிர்வாகக் குழுவைக் கலைக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) 1969-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 28-ஆம் தேதி நடத்தப்பட்ட விசாரணையின் போது இந்தப் பண்டகசாலையில் அரசாங்கக் கணக்கில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லில் 90 மூட்டைகள் குறைந்து காணப்பட்டன. நூறு மூட்டை கோதுமை கள்ளச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டதும் கண்டு பிடிக்கப்பட்டது.

(இ)and(உ) 1969-ம் வருடம் டிசம்பர் மாதம் 6-ம் தேதியன்று அப்பண்டகசாலையின் நிர்வாகக்குழு கலைக்கப்பட்டு பண்டகசாலையின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வதற்காக ஒரு தனி அலுவலர் (S.O.) நியமிக்கப் பட்டுள்ளார். தவிர, ஒழுங்கீனங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் கூட்டுறவுப் பதிவாளர் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி மிகவும் பயங்கரமானது என்ற வகையில் அந்த மாவட்டத்தில் பெரிய பரபரப்பை உண்டாக்கியுள்ளது. கூட்டுறவுத் துறையில் சிலர் மடாதிபதிகளைப் போல தொடர்ந்து தவறுகளைச் செய்து வருகிறார்கள். ஆனால் அதற்கு அந்தக் கூட்டுறவு மன்றத்தை, அந்த போர்டைக் கலைப்பது மட்டும் ஒரு தண்டனையாகாது. அந்த நிர்வாகி மீது மிகவும் கடுமையான நடவடிக்கை எடுத்து, இதைப் போன்று எதிர்காலத்தில் நிகழாமல் இருக்கும் வகையில் சட்டதிட்டங்களை மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, போதுமான அளவுக்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு இப்போதே விதிகள் உள்ளன. உரிய நடவடிக்கை என்பது இரண்டு வகைப்படும். ஒன்று, கிரிமினல் குற்றவியல் சார்பாக இ.பி.கோ.படி குற்றமாகும். அதன்படி நடவடிக்கை எடுக்கலாம். அது தவிர கூட்டுறவுச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கலாம். என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பதிவாளர் முடிவு செய்து அதை எடுக்க வேண்டுமென்று, அவருக்கு உத்தரவிடப் பட்டிருக்கிறது.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் கண்டிருக்கிற திருவில்லிபுத்தூர் என்ற ஊர் எந்த மாவட்டத்தில் இருக்கிறது ? ஸ்ரீவில்லிபுத்தூர் என்றுதான் ஒரு ஊர் இருக்கிறது. அதை திருவில்லிபுத்தூர் என்று அரசாங்கம் மாற்றிவிட்டதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கேள்வி எழுதியனுப்பிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ் மீது கொண்டுள்ள பற்றின் காரணமாக திருவில்லிபுத்தூர் என்று எழுதியனுப்பினார்கள். அவர்களுடைய ஆர்வத்தைக் கெடுக்க வேண்டாமென்று திருவில்லிபுத்தூர் என்று சொன்னேன்.

[6th March 1970

**மிஸ்டர் சேர்மன் :** இரண்டு ஊரும் ஒரு ஊர்தானே ?

**திரு. கே. எஸ். மணி :** எடுக்கப்படும் கிரிமினல் நடவடிக்கை அல்லது இலாகா நடவடிக்கை ரொம்பவும் காலதாமதமாக எடுக்கப்படுகிறது என்ற தகவல் அரசிற்கு வந்திருக்கிறதா ? அப்படியிருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அவ்வளவு துரிதமாக எடுக்க வேண்டுமென்று அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போதுள்ள நிலைமையில் போதிய அளவுக்கு நமக்கு அதிகாரிகள் இல்லை. அதற்காக கூட்டுறவுத் துறையில் அதிக அதிகாரிகளைப் புகுத்தும் பொருட்டு, இந்த மாநிலத்தில் உள்ள 5 பிரிவுகளை, 7 ஸோன்களாகப் பிரித்து அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவு சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பார்கள். இதைத் தவிர, போலீசில் காலதாமதம் ஆகிறது என்பதும் இப்போது நடைமுறையில் உள்ள ஒரு உண்மை. ஆகையால், போலீசிலும் இதற்காகத் தனிப்பிரிவு ஏற்படுத்துவதற்காகச் செயற்குறிப்பு ஒன்று அரசாங்கத்திடம் இருக்கிறது.

**திரு. சி. வி. ராஜகோபால் :** கூட்டுறவுத் துறையில் ஏற்கனவே நிறைய பணத்தை எடுத்துப் போனவர்களை சட்டபடி சரியானபடி தண்டிக்க முடியாவிட்டால், இப்போதுள்ள சட்டம் " rageces ", ஆக மேலேழுந்தவாறாக இருக்கிறது என்றால், அதைத் திருத்த முன்வருமா ?

**மிஸ்டர் சேர்மன் :** நேற்று சட்டம் ஒரு கழுதை என்று உறுப்பினர் சொன்னார்களே!

**திரு. சி. வி. ராஜகோபால் :** ஆகவே உறுதியான நட்வடிக்கை எடுப்பதற்கு சில சட்டங்களை, தீவிரமான சட்டங்களைப் புகுத்த ஆட்சியாளர்கள் தயாராக இருக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இப்போது ஸ்பெஷல் ஆபீசர்களை, நிர்வாகத்தைக் கவனிப்பதற்குப் போடுவதென்றால், கொஞ்சம் நாள் ஆகிறது என்பது உண்மை. ஏனென்றால் 72-வது பிரிவின்படி ஸ்பெஷல் ஆபீசர்களை நியமிக்க வேண்டும். அதற்கு முன்னால் 65-வது பிரிவின்படி விசாரணை நடத்த வேண்டும். அதற்குள் 4, 5 மாதம் கடந்துவிடுகிறது என்பதால், அரசு சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று எண்ணியுள்ளது. சட்ட அமைச்சர் கீழ் உள்ள சட்டத்துறையில், கூட்டுறவுத் துறைக்கான ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

### *Deputy Registrar of Co-operative Societies*

*187 Q.—THIRU M. AIYASWAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the vacancies in the posts of Deputy Registrar of Co-operative Societies are remaining unfilled;

(*b*) if so, the number of vacancies which have not been filled up and since how long; and

(*c*) the reason therefor?

### கூட்டுறவு துணைப்பதிவாளர் பதவிகள்.

**அய்யாசாமி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கூட்டுறவு துணைப்பதிவாளர் பதவிகள் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றனவா ?



6th March 1970]

(இ) ஆமெனில் எத்தனை இடங்கள்; எவ்வளவு காலமாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன ?

(உ) அதற்குக் காரணமென்ன ?

**மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் :** (அ) (இ) and (உ) திண்டுக்கல் கூட்டுறவு துணைப்பதிவாளர் பதவி மட்டும் தற்போது காலியாக இருக்கிறது அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட துணைப்பதிவாளர் தற்போது விடுப்பில் உள்ளார். அவர் விரைவில் பதவியில் சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவர் அவர்களே, நான் கேள்வியை எழுதி அனுப்பியபோது, தமிழ்நாட்டில் சுமார் 24 கூட்டுறவுத் துணைப் பதிவாளர்கள் பதவிகள் காலியாக இருந்தன என்பதும், அதற்குப் பின்னால் அமைச்சர் அவர்கள் நபர்களை நேரடியாக " இண்டர்வியூ " செய்து அந்த இடங்களையெல்லாம் பூர்த்தி செய்தார்கள் என்பதும் உண்மையா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** முன்னால் பல இடங்கள் காலியாக இருந்தன. இந்த மாநிலத்தில் மொத்தம் 77 துணைப் பதிவாளர்கள், டெபுடி ரெஜிஸ்டிரார்கள் இருக்க வேண்டும். அப்போது சற்றுக் குறைவாக இருந்தது. புதிதாகப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டு, துணைப் பதிவாளர்கள் தற்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. எம். அய்யாசாமி :** அதற்கு நேரடியாக அமைச்சர் அவர்கள் " இண்டர்வியூ " செய்து அவர்களை நியமித்தது உண்மையா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே டெபுடி ரெஜிஸ்டிராராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை— கூட்டுறவு சப்ரிஜிஸ்டிரார்களாக இருந்தவர்கள் டெபுடி ரெஜிஸ்டிராரார்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் விதிப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை, எந்தத் துறைக்கு அனுப்புவது என்ற கேள்வி எழுந்தது. மாநில கூட்டுறவுத் துறையில் பாங்கித் துறைக்கு அனுப்புவதா, நவீன அரிசி ஆலைத்துறை இருக்கிறது, அங்கு அனுப்புவதா, கணக்குத் தணிக்கை செய்யும்துறை இருக்கிறது, அங்கு அனுப்புவதா, எந்தத் துறைக்கு அனுப்புவது, என்ற கேள்வி எழுந்தபோது, ரெஜிஸ்டிரார் ஆப் கோவாப்பரேட்டிவ் சொசைடீஸ்— மாநில கூட்டுறவுப் பதிவாளர்— ஒரு " இண்டர்வியூ " நடத்தினார்கள். அவர்கள் அப்படி நடத்தியபிறகு, அவர்களெல்லாம் சரியான துறைக்குத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா என்று நான் பார்த்தது உண்மை.

**திரு. எம். அய்யாசாமி :** கோவாப்பரேட்டிவ் சப் ரெஜிஸ்டிரார்களாக இருக்கக்கூடியவர்கள் பதவி உயர்வு பெற்றுப் போவது என்பது தான் இதுவரை வழக்கமாக இருந்து வருகிறது. பதவி உயர்வுக்குத் தகுதியுடையவர்களை சீனியாரிட்டிப்படி புரமோஷன் லிஸ்டில் வைக்கிறார்கள். அந்த சீனியாரிட்டிப்படி பதவி உயர்வு கொடுத்து யார் யாரை எந்தெந்த இடத்திற்கு அனுப்ப வேண்டுமோ அப்படி அனுப்ப வேண்டியது இருக்க, அமைச்சர் அவர்கள் " இண்டர்வியூ " நடத்த வேண்டிய அவசியம் என்ன வந்தது என்றுதான் நான் அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, கோவாப்பரேட்டிவ் சப்ரெஜிஸ்டிராரார்களாக இருப்பவர்கள் பதவி உயர்வு பெற்று டெபுடி ரெஜிஸ்டிரார்களாகி விடுகிறார்கள். அதற்கு ஏற்கெனவே பப்ளிக் சர்வீஸ் கமிஷனின் விதிமுறைகள் இருக்கின்றன. அவர்கள் சம்மதம் பெற்று டி.ஆர்களாக ஆகி விடுகிறார்கள். அதற்குப் பிறகு, எந்தத் துறைக்கு யார் தகுந்தவர்கள் என்று பார்க்க வேண்டியிருக்கிறது. இன்று கூட்டுறவுத் துறை பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, வங்கிப் பகுதி, (கிரிடிட் பகுதி) என்றும், இரண்டாவதாக புரோசசிங், தொழிற்சாலைப் பகுதி என்றும், மூன்றாவதாக வணிகத் துறை, மார்க்கெட்டிங் என்றும், தணிக்கை என்றும், பலவாறு பிரிக்கப்பட்டிருக்கிறது. எனவே ஏற்

[6th March 1970

கனவே அவர்கள் எல்லாம் டெபுடி ரிஜிஸ்டிராரார்களான பிறகு, ஒருவர் எந்தத் துறைக்குத் தகுதியானவர் என்று அறிந்து போடவேண்டியிருக்கிறது. ஒருவர் அகில உலகச் சரித்திரம் படித்திருந்தால், அவனைத் தொழில் துறைக்கு அனுப்ப முடியாது. அதற்கு அவர் தகுதியுள்ளவராக இருக்கமாட்டார். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கணக்குத் தணிக்கை பார்க்கிற ஆடிட்டராக இருக்கிற கூட்டுறவுத் துறை அதிகாரியைப் பார்த்து, அந்த மோட்டாரின் சுவிட்சைப் போடு என்றால், அவர் உடனே வெளியே போய் மோட்டார் காரில் சுவிட்சு இருக்கிறதா என்று பார்ப்பார். தொழில் துறை பற்றித் தெரிந்தவர்கள், சொன்ன உடனே, சுவற்றில் மோட்டாருக்கான சுவிட்சு எங்கே இருக்கிறது என்று பார்த்துப் போடுவார்கள். அப்படி இந்த 4 பகுதிகளில் எந்தப் பகுப்திக்கு அவர்களை அனுப்பலாம் என்று முடிவு செய்வதற்காகச் செய்யப்பட்டதே தவிர, பதவி உயர்வுக்கும் இதற்கும் ஒட்டுறவு இல்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் கனம் அமைச்சர் அவர்களைத் திரும்பத் திரும்ப, "நீங்கள் நேரடியாகப் பார்த்தீர்களா ?", என்று கேட்டார்கள். சி.எஸ்.ஆர்கள் டி.ஆர்.களாக நியமிக்கப்பட ரிஜிஸ்டிரார் அவர்கள் "இண்டர்வியூ" செய்து தேர்ந்தெடுத்த பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூப்பிட்டு அவர்களைப் பரிசீலனை செய்யக் கூடாது என்று சட்டத்தில் தடை இருக்கிறதா ? அதை வைத்துத் தான் உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட தடை எதுவும் இல்லை. ஆனால் கூட்டுறவுத் துறையில், விரைவு படுத்துகிற வகையிலும், வகைப்படுத்துகிற *வகையிலும், 4 பிரிவுகளாகப் பிரித்து, அந்தக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறபோது, எந்தப் பகுதிக்கு ஒருவர் மிகுந்த தகுதியானவராக இருப்பார் என்று பார்க்கிற நிலை தவறு இல்லை என்றே கருதுகிறேன்.

## *Ariyalur Land Mortgage Bank*

* 188 *Q*.—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of applications received by Ariyalur Land Mortgage Bank, Tiruchirappalli District, demanding loan during 1967–68 and 1968–69;

(*b*) the number of loan applications sanctioned and the amount of loan granted; and

(*c*) whether the applications for which loan was not sanctioned, were returned?

**அரியலூர் நில அடமான வங்கி.**

**திரு டி. கே. சுப்பையா :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1967–68, 1968–69-ம் ஆண்டுகளில் திருச்சி மாவட்ட அரியலூர் நில அடமான வங்கிக்குக் கடன் கோரி எத்தனை மனுக்கள் வந்தன ?

(இ) எத்தனை மனுக்களுக்கு எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டது ?

(உ) கடன் கொடுக்கப்படாத மனுக்கள் திருப்பித் தரப்பட்டனவா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விவர அறிக்கை ஒன்று* பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

---

@ Printed as Appendix on page 41



6th March 1970]

**திரு டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, மறுக்கப்பட்ட கடன் விண்ணப்பங்கள், 1967–68-ல் 20 என்றும், 1968–69-ல் 10 என்றும் பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஒப்பளிப்பு வழங்கப்பட இயலாத கடன் மனுக்கள் இயக்குனர் வாரியத்தினால் மறுக்கப்பட்டு ஆவணங்கள் மனுதாரர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1967–68-ல் மனுச் செய்த மனுதாரருக்கு அந்த விண்ணப்பமானது எந்தக் காரணத்தை முன்னிட்டும் திரும்ப வரவில்லை என்று நிரூபித்தால். அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா ஆதித்தனார் :** எத்தனை மனுக்கள் மறுக்கப்பட்டன என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதைவிட கடன் வழங்கிய புள்ளி விவரங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். 1967–68-ல் அரியலூர் நில அடமான வங்கியில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன் 2 லட்சம் ரூபாயாகும். தோராயமாகச் சொல்லுகிறேன். 1968–69-ல் இதே வங்கி மூலமாக விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன்தொகை 15 லட்சம் ரூபாய். இந்த ஆண்டு இன்றுவரை கொடுக்கப்பட்டிருப்பது 13,17,000 ரூபாய். இப்படிப் பார்க்கிறபோது, வருஷத்திற்கு வருஷம் அதிகமாக விவசாயக் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும், சில மனுக்களைக் கையில் வைத்துக்கொண்டிருப்பதற்குக் காரணம் இருக்க முடியும் என்று கருதுகிறேன். அடுத்த முறையாவது கொடுத்துவிடலாம் என்று இருக்கலாம். மத்திய நில அடமான வங்கி அரியலூர் வங்கி உட்பட எல்லா அடமான வங்கிகளுக்கும் ஒரு சுற்றறிக்கை விட்டது. அது என்ன என்றால், 1969–70-ம் ஆண்டுக்குக் கடன் வழங்குவதற்கு என்று நிர்ணயித்துள்ள குறியீட்டைக் காட்டிலும் அதிகமாக வழங்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே 31—3—1970 வரை எந்த வங்கியும் குறியீடு இல்லாமல் (வித்தவுட் லிமிட்) கடன் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. புதிய கிணறுகள் வெட்டுவதற்கு, பம்பு செட்டு வைப்பதற்கு எல்லாம் கடன் கொடுக்க இப்போது அவர்கள் கையிலே 3 கோடி ரூபாய் அளவுக்கு வைத்துக்கொண்டு யாராவது விவசாயிகள் கடன் கேட்பார்களா, கடன் மனு வந்து சேராதா என்று தவித்துக்கொண்டிருக்கிற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற மாதிரி கடன் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்றால், அதை நாம் கண்டிப்பாகக் கவனித்துத்தான் ஆக வேண்டும். அப்படி உண்மையிலேயே இன்னும் கடன் கொடுக்கப்படாமல் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என் கவனத்திற்குக் கொண்டுவந்தால், கவனிக்கிறேன் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இப்போது இருக்கிற நிலைமையில், "வித்தவுட் லிமிட்" கொடுங்கள் என்று சொல்லி சுற்றறிக்கை விட்டபிறகு, அப்படி யாருக்காவது கொடுக்கப்படாமல் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

MR. CHAIRMAN : We will now take up question 181.

## *Srivilliputhur*

* 181 *Q*.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. Minister for Finance be pleased to state :

(*a*) whether the Srivilliputhur Municipality have passed any resolution requesting the Government to change the name "Srivilliputhur" into "Thiruvilliputhur" and sent the resolution to Government; and

(*b*) if so, the action taken thereon by the Government?

[6th March 1970

## ஸ்ரீவில்லிபுத்தூர்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரசபை ஸ்ரீவில்லிபுத்தூரை " திருவில்லிப் புத்தூர் " என்று மாற்ற வேண்டும் என்று அரசாங்கத்திற்கு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆர். கிருஷ்ணாமி நாயுடு:** காதுக்குக் கேட்பதற்கு இனிமையானதாகவோ அல்லது சிறப்பான பெயர்களோ அமையாத ஊர்ப் பெயர்களை மாற்ற அங்கே உள்ளவர்கள் விரும்பி அரசைக் கேட்டுக்கொள்வது உண்டு. ஸ்ரீவில்லிபுத்தூர் என்று தொன்றுதொட்டு இருந்துவரும் பெயரை திருவில்லிபுத்தூர் என்று மாற்றுவதன் மூலமாக ஒரு நன்மையும் இல்லை. இதில் உணர்ச்சிவயப்பட வேண்டிய அவசியமில்லை. இத்தகைய கோரிக்கை சம்பந்தமாக இந்த அரசு எந்த முறையில் பரிசீலனை செய்யும் ? இப்படிப் பெயர் மாற்றம் செய்வது அவசியமில்லை என்று நாங்கள் கருதுகிறோம். எனவே இதில் அரசின் கருத்து என்னவாக இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. மதியழகன் :** இந்தக் கருத்தில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. தமிழ்நாடு அரசாங்கம் ஏற்கனவே " ஸ்ரீ " என்றிருப்பதை மாற்றி " திரு " கிருஷ்ணசாமி நாயுடு என்று தான் எழுதச் சொல்லியிருக்கிறது. நெடுநாளாக இருந்து வந்ததை மாற்றக் கூடாது என்ற சம்பிரதாயத்தில் வளர்ந்தவர்களுக்கு இதெல்லாம் சிரமமாக இருக்கலாம். அது ஒருவகையில் நல்ல உணர்வு தான். மதிக்கப்பட வேண்டிய உணர்வு தான். இருந்தாலும் நாம் புதிய உணர்வுகளையும் மதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த ஊரில் இருக்கும் பெரும்பாலான மக்கள், அந்த ஊர் முனிசிபாலிடி, அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எல்லாம் பரிந்துரை செய்கிற நேரத்தில், அதைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. " இன்ஸ்பெக்டர் ஆப் முனிசிபாலிடீஸ் " மூலமாக மாவட்டக் கலெக்டருக்கு நகரசபை அங்கத்தினர்கள் பரிந்துரை அனுப்பி வைத்தார்கள். தற்போது அது வருவாய்த் துறை வாரியத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் கருத்துரை தெரிந்தவுடனே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயப்பட வேண்டியதில்லை. காலம் மாறிக்கொண்டிருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் என்பது திருவில்லிபுத்தூர் என்று மாறுவதாலே எந்தவிதமான கெடுதியும் வந்துவிடாது என்பது இந்த அரசின் எண்ணம்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஸ்ரீவில்லிபுத்தூர் என்பது இங்கே மட்டுமல்ல, போலீஸ் ஸ்டேஷனில் கூட திருவில்லிபுத்தூர் என்று பெயர்ப் பலகையில் போடப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டிய பிறகு, மீண்டும் அதை ஸ்ரீவில்லிப்புத்தூர் என்று மாற்றினார்கள். ஆனால் போலீஸ் ஸ்டேஷன் உள்ளே போய்ப் பார்த்தால், இன்றும்கூட திருவில்லிபுத்தூர் என்றே இருக்கிறது. மற்றும் பல அரசாங்க காரியாலயங்களிலும் இன்று நடைமுறையில் எழுதும்போது திருவில்லிபுத்தூர் என்றே எழுதப்படுகிறது. ஒருவர் பெயருக்கு முன்னால் வருகிற " ஸ்ரீ " என்பதை மாற்றிவிட்டு " திரு " என்று போடலாம். அதில் ஒன்றும் தவறில்லை. இப்படி ஊர்ப்பெயர்களுக்கு முன்னால் " ஸ்ரீ " என்றிருந்தால் அதை எடுத்து விட்டு " திரு " என்று போடுவதா என்றுதான் கேட்கிறேன். தொன்றுதொட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் என்று வழங்கப்படும் இந்த ஊர் ஒரு பழமையான நகராகும். இப்படிப்பட்ட ஊர்களின் பெயரை மாற்றுவது சரியல்ல, தற்போது ஸ்ரீசுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் என்பதை திருசுப்பிரமண்யசுவாமி தேவஸ்தானம் என்று நாளைக்கு மாற்றுவதா ? பழனியில் ஸ்ரீபழநியாண்டவர் தேவஸ்தானம் என்று இருக்கிறது. நாளைக்கு அதை மாற்றி திரு பழநியாண்டவர் தேவஸ்தானம் என்று வைக்கத் தயாரா ? அப்படி வைத்தால் அதை ஒப்புக் கொள்வார்களா என்று தான் கேட்கிறேன். ஆக இதிலே எல்லாம் மொழி வளர்ச்சி என்பது இல்லை. மொழி வளர்ச்சிக்காக வேறு இடங்களில் என்னென்னவோ செய்யலாம். முன்னாலே இருந்த ஆழ்வார்கள், நாயன்மார்கள் செய்யாத மொழி வளர்ச்சியையா நீங்கள் செய்யப்போகிறீர்கள் ? அவர்கள் பாடிய நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் இல்லாத தமிழ் மொழி வளர்ச்சியா இதில் எல்லாம் இருக்கிறது ? ஆகையால் இத்தகைய பிரச்னைகளில் சுமுகமான முறையில் நிலைமைகள் நிலவுதற்கு அமைச்சர் அவர்கள் உறுதி சொல்ல வேண்டும்.



6th March 1970]

(பல அங்கத்தினர் பேச ஆரம்பித்தனர்)

**திரு. ஆர். கிருஷ்ணாசாமி நாயுடு :** நான் சொல்லுகிற கருத்துக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுவார்கள். நீங்கள் எல்லாம் கொஞ்சம் பொறுமையாக இருங்களேன். தலைவர் அவர்களே, கொஞ்சம் இங்கே பார்த்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப் போன்றுதான் பொதுவாக நல்ல தமிழ்ப் பெயர்கள் எல்லாம் இடைக்காலத்தில் " ஸ்ரீ " என்ற அடைமொழியோடு மாற்றம் அடைந்திருக்கின்றன. இன்றையதினம் மீண்டும் அவைகளை எல்லாம் நல்ல தமிழ் சொற்களாக மாற்றவேண்டிய நிலைமை இருக்கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம், ஸ்ரீமுஷ்ணம் என்பவையெல்லாம் ஆரம்பத்தில் திருவில்லிப்புத்தூர் என்றும், திருவரங்கம் என்றும் திருமுட்டம் என்றும் தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இடைக்காலத்திலேதான் " திரு " மறைந்து " ஸ்ரீ " ஆக மாறியிருக்கின்றன. திருமறைக்காடு என்று இருந்தது இடைக்காலத்தில் வேதாரண்யம் என்று மாற்றப்பட்டு, அது மீண்டும் இன்றைக்கு திருமறைக்காடு என்று மாற்றப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்த நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் எல்லாம் கூட " திரு " என்பது தான் வழக்கத்தில் இருந்திருக்கிறது. திரு அமுது, திருத்துளசி, திருநீறு, திருநாமம் என்று " திரு " அடைமொழி சேர்ப்பதுதான் அதில் வழக்கம். அதைப் போலத்தான் திருக்குறள், திருஅருட்பா, திருவாய்மொழி என்றுதான் இருக்கின்றன. எனவே இவைகளின் அடிப்படையில்தான் " ஸ்ரீ "க்கு பதில் " திரு " வேண்டும் என்று நாம் கருதுகிறோம். ஸ்ரீவில்லிபுத்தூர் திருவில்லிப்புத்தூர் என்றும், ஸ்ரீரங்கம் திருவரங்கம் என்றும், ஸ்ரீமுஷ்ணம் திருமுட்டம் என்றும் மாற்றி எழுதப்படுவதால், அவைகளின் சிறப்பு மிகுமே தவிர குறையாது. இவைகள் எல்லாம் தூய தமிழ் மொழியில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் மக்களின் விருப்பம் பூர்த்திசெய்யப்படுகிறது.

**திரு சி. பி. சிற்றரசு :** நான் ஏற்கனவே இங்கே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இது தெரியும். நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலே "திருவரங்கத்தான். . . . . . . . . . . . . " என்று தான் வருகின்றது என்று நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** பிரச்னை அதுவல்ல. திருவில்லிபுத்தூர் என்று மாற்றி கெஜட்டில் பிரசுரம் செய்யும் வரையில் சர்க்கார் ரெக்கார்டுகளிலும் பெயர்ப்பலகைகளிலும் திருவில்லிபுத்தூர் என்று போடலாமா என்பது தான் கேள்வி. சர்க்கார் அப்படிப் பெயர் மாற்றம் செய்யும்வரை, சர்க்கார் ரெக்கார்டுகளில் போலீஸ் ஸ்டேஷன் போன்றவைகளின் பெயர்ப்பலகைகளில் திருவில்லிபுத்தூர் என்று மாற்றிப் போடக் கூடாது என்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

[6th March 1970

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியது சரி. அதிகார பூர்வமாக மாற்றப்படாத வரையில், சர்க்கார் ரெக்கார்டுகள் மற்றும் பெயர்ப்பலகைகளில் மாற்றக்கூடாது தான். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை மதிக்கிறோம். அதே மாதிரி புதிய உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டியது நியாயம். "பழையன கழிதலும் புதியன புகுதலும் உலகத்தில் இயற்கை". பழைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிற போது புதிய உணர்வுகளைப் புறக்கணிக்கக் கூடாது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். திருவரங்கப் பெருமாள் என்று தான் சொல்லுகிறோம். திருவரங்கம் அழகான வார்த்தை தான். இதில் எல்லாம் பெரிய சர்ச்சை தேவையில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அரசாங்கக் காரியாலயங்களிலும் போலீஸ் ஸ்டேஷனிலும் இம்மாதிரி அதிகார பூர்வமாக மாற்றப்படவில்லை. அப்படி எதாவது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் கண்டிப்பாக முறைப்படி மாற்றுகிற வரை இந்த நிலைமை நீடிக்கும். ஸ்ரீவில்லிபுத்தூர் என்றுதான் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, இதுபற்றிய தீர்மானத்தை ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரமன்றம் ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறதா ? அந்தத் தீர்மானத்திற்கு காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** அதுபற்றிய விவரம் இல்லை. அந்த ஊரைச் சார்ந்த கிருஷ்ணசாமி என்கிற நபர் அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அது ஒருவேளை நம் மாண்புமிகு உறுப்பினர் தானோ என்று பார்த்தேன். அவர் வேறு ஒருவர் என்று தெரிகிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** நான் குறிப்பிடுவது எல்லாம் இனி புதிதாக வருவதற்கு இப்படி தூயத் தமிழில் பெயர் வைக்கலாம். அப்போது புதிய உணர்வுகளுக்கு இடம் கொடுக்கலாம். அந்த நிலையில் தமிழ் வளரும் வகையில் தமிழ்ப் பெயர்களைச் சேர்த்துக்கொள்ளுவது சரி. அதை நான் மறுக்கவில்லை. அதேபோல திரு சிற்றரசு கூறியபடி, திருவரங்கத்தந்தாதி, கலம்பகத்தில் எல்லாம் பார்த்தால், அந்த மாதிரியான இலக்கியத்தை இன்றையதினம் தமிழ் வளர்க்கக்கூடியவர்களால் ஒன்றாவது உண்டுபண்ணமுடியுமா என்று நான் சந்தேகமாக இருக்கிறது. நம் தலைமுறையில் அப்படிப்பட்ட காவியங்களை எல்லாம் உருவாக்க முடியாது. அதில் ஒரு பாடல் வரும். "திருவரங்கா................" என்று 4 வரி வரும். அவற்றிலுள்ள சில பாடல்கள் வாயிலே இப்போது உள்ளவர்களுக்கே நுழையுமா என்று தெரியவில்லை. எதற்குக் சொல்லுகிறேன் என்றால், நபருடைய பெயரை மாற்ற "ஸ்ரீ"க்குப் பதில் "திரு" போடுகிறோம் என்றால், ஸ்ரீனிவாசன் என்பதை மாற்றி திருவாசன் என்று எழுதுவதா, ஸ்ரீபெரும்புதூர் என்று இருப்பதை மாற்றி திருப்பெரும்புதூர் என்று எழுதுவதா என்று தான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இதில் தவறு ஒன்றும் இல்லை. விருதுப்பட்டி என்று இருந்ததைத் தான் விருதுநகர் என்று மாற்றியிருக்கிறோம். காசி என்று இருந்ததைத் தான் வாரணாசி என்று மாற்றியிருக்கிறார்கள். ஆக நாம் அபிப்பிராயம் சொல்லுவதில் தவறில்லை. இதெல்லாம் பெரிய காரியமல்ல. புதிய போக்குகளுக்கு ஏற்ப நாம் ஒத்துப் போவது தான் நல்லது.

**திரு பி. திருஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஸ்ரீரங்கம், ஸ்ரீவைகுண்டம், ஸ்ரீமுஷ்ணம் என்றெல்லாம் தற்போது இருக்கிறது. அவைகளை திருவரங்கம், திருவைகுண்டம், திருமுட்டம் என்று அரசு மாற்றுமா ? மேலும் தற்போது சென்னை வானொலியில் ஸ்ரீ கருணாநிதி, ஸ்ரீ நெடுஞ்செழியன் என்று தான் சொல்லுகிறார்கள். அதையும் திரு என்று மாற்ற அரசாங்கம் முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



6th March 1970]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இவைகள் எல்லாம் காலப் போக்கில் அடுத்த கட்டங்கள். வந்தே தீரும். தாமதப்படுத்தலாமே தவிர தவிர்க்க முடியாத ஒன்று.

MR. CHAIRMAN : Questions 182 to 185 are postponed.

Questions are over.

Note.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. PRESENTATION OF THE REPORT OF THE SELECT COMMITTEE ON THE RULES OF PROCEDURE OF THE COUNCIL.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவர் அவர்களே, 1968-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சட்ட மன்ற நடைமுறை விதிகள் குறித்த பொறுக்குக் குழுவின் அறிக்கையை இந்த அவையின் முன் வைக்கிறேன்.

## III. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1970–71—*cont.*

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி :** தலைவர்அவர்களே, இந்த 1970–71ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையின் முன்பு சமர்ப்பித்து, அதனுடைய அனுமதியைக் கோரியிருக்கிறார்கள். இன்றைய நிலையில் விலைவாசி உயர்வு ஒரு புறம், அரசு ஊழியர்களுக்குர்அதிகப்படியான சம்பளம், இன்னும் பொதுமக்களுடைய தேவைகளின் அதிகரிப்பு இவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு நல்ல முறையில் பரிசிலனை செய்து, யாருக்குமே அதிக சங்கடங்களும், குறிப்பாக பொது மக்களுக்கு வரிப்பளுவும் ஏற்படாமல் திறம்பட இந்த வரவு-செலவுத் திட்டத்தைத்தயாரித்து சமர்ப்பித்ததற்கு இந்த அரசினைப் பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தினை வரவேற்கிறேன்.

பின் தங்கிய சமுதாயத்தினரின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, குறிப்பாக முதல் அமைச்சர் அவர்கள் இதில் விசேஷ கவனம் செலுத்தி, அரிசன இலாகாவிலிருந்து ஒரு தனிப்பிரிவைப் பின்தங்கியவர்களுடைய முன்னேற்றத்திற்கெனப் பிரித்து, அந்தப் பிரிவை ஒரு அமைச்சரின் பொறுப்பில் விட்டிருப்பது உண்மையிலேயே பெரிதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும். இதை முழு மனத்தோடு வரவேற்கிறேன், எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த மாநிலத்தில் பிற்பட்ட வகுப்பினர் எனப்படுவோர் 70 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய முன்னேற்றத்துக்கு என செய்யப்பட்டுள்ள வசதிகள், நிதி ஒதுக்கீடுகள் போதுமா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. மத்திய அரசிடம் இப்படிப் பின் தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்துக்கு என் அதிக மான்யம் ஒதுக்க வேண்டும் என்று வற்புறுத்தியிருப்பதைப் பத்திரிகையில் பார்த்தேன். இதற்காக நமது மாநில அரசினைப் பாராட்டுகிறேன். ஆனால், அவர்கள் எந்த அளவிற்குச் சலுகைகள் அல்லது உதவிகள் அளித்திருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. குறிப்பாக நமது மாநிலத்தில், சென்னை, செங்கல்பட்டு வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், திருச்சி, மற்றும் தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் பின் தங்கியவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அங்குள்ள மக்கள் தொகையில் பாதிக்குமேல் இருப்பவர்கள், வன்னியர்கள். ஆனால் அவர்கள் ஒரு காலத்தில் குற்றப்பரம்பரையினராகக்

கருதப்பட்டு, பல அடக்கு முறைகளுக்கும் உள்ளாக்கப்பட்டிருந்தார்கள். இதேமாதிரி தென் மாவட்டங்களில் கள்ளர், மறவர் சமூகத்தினர் இப்படிப்பட்ட அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கெல்லாம் ஓரளவிற்குப் பல சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. கல்வி வசதிகள், படிப்பவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள், தங்குவதற்கு விடுதிகள், உணவு போன்ற பல சலுகைகள் வழங்கப்பட்டு அவர்கள் உயருவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனால் அவர்கள் ஓரளவிற்கு முன்னேற்றம் அடைந்திருக்கின்றார்கள். ஆனால் அதேமாதிரி பல அடக்கு முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, பல இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த அந்த வன்னிய சமுதாயத்தினருக்கு எந்தச் சலுகையும் கொடுக்கப்படவில்லை. கல்வித் துறையிலும் சரி, மாணவர்கள் இருப்பதற்கான விடுதிகள், உணவுபோன்ற வகையிலும் சரி, இந்த சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்படவில்லை என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த நான்கைந்து மாவட்டங்களில் பின் தங்கிய இந்த வகுப்பினருக்கு சதவிகிதத்தின் அடிப்படையில் வேலை வாய்ப்புகளை அளிக்க வேண்டும். அப்படியில்லையென்றால், அவர்கள் என்றென்றைக்கும் பின் தங்கிய நிலையிலேயே இருக்க வேண்டி வரும். இருக்கும் வேலை வாய்ப்புகளில் 50 சதவிகிதத்தினை இவர்களுக்கு என்று ஒதுக்கித் தரவேண்டும். மாவட்ட மட்டத்தில், ஆசிரியர்கள் வேலை, மற்றும் கல்வித் துறை, மருத்துவத் துறை, கூட்டுறவுத் துறை போன்ற துறைகளில் ஏற்படும் வேலை வாய்ப்புகளில் இந்த சமூகத்தினருக்கு பாதியாவது ஒதுக்கித் தருவதற்கு அரசாங்கம் உத்தரவிட வேண்டும். மாநில அரசுத் துறையிலும் மாநில அளவில் ஏற்படும் உத்தியோகங்களுக்கும் மொத்த மக்களில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் இருக்கும் இந்த சமுதாயத்திற்கு மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஒதுக்கித்தர வேண்டும். எதிர்க் கட்சியினராக இருந்த காலத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டும் என்று வற்புறுத்திப் பேசிய கட்சியினர் இப்போது ஆட்சியில் இருப்பதால், அதைச் செயல்படுத்த ஒரு பெரும் வாய்ப்பு இருக்கிறது. எனவே ஆவன செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் தமது உரையில், பின் தங்கிய சமூகத்தினரின் முன்னேற்றத்திற்காக நீண்ட காலத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு சமுதாயத்தை உயர்த்துவதற்காக ஏதோ நீண்ட காலத் திட்டம் என்று சொல்லி அதற்காக ஒரு நூறு ஆண்டுகள் அல்லது இரு நூறு ஆண்டுகள் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. அவர்களுடைய முன்னேற்றத்திற்காக உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதைத்தான் பார்க்க வேண்டும். நீண்ட காலத் திட்டம் என்று சொல்லிக் கொண்டு பிறகு இது ஏதோ ஒரு சோதனைக்காகச் செய்யும் ஒரு காரியம் என்று போய்விடும்; பலன் ஏதும் ஏற்படாது போய்விடக்கூடும். எனவே உடனடியாக முன்னேற்றத்திற்கென நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவசியமானால் இதற்கான விசேஷச் சட்டங்களை வேண்டுமானாலும்கூட கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயத்தைப் பொறுத்த வரையில், விவசாய முன்னேற்றத்திற்கென இவ்வளவு வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. வரவேற்கத்தக்கதுதான். ஆனால், விவசாயத்திற்கான கரண்டு சார்ஜ் உயர்த்தப்பட்டிருப்பது உண்மையிலேயே வருத்தப்படக் கூடியதுதான். உணவு உற்பத்திக்காக இவ்வளவு சலுகைகள் அளிக்கப்படும்போது, மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவது சரியல்ல. உற்பத்திப் பெருக வேண்டும் என்று எண்ணும்போது, அதற்கான வரியை மறைமுகமாகச் சுமத்திக்கொண்டே போனால், அது விவசாயத்தைப் பாதிக்கும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்று கரும்புச் சாகுபடி ஒரு முக்கிய அங்கமாக இருக்கிறது. ஆனால் கரும்பின் விலையைப் பொறுத்தமட்டில், ஆண்டுக்கு ஆண்டு தகராறு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. கரும்பின்





விலை நிர்ணயம் என்று சொல்லும்போது, மாநில அரசு இது எங்களுடைய அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது. இது மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உள்பட்டது என்று சொல்லிவிடுகிறார்கள். எனவே ஆலைச் சொந்தக்காரர்கள் தங்கள் இஷ்டப்படி விவசாயிகளை ஆட்டிப் படைக்கிறார்கள். ரூபாய் 85 என்றும், 96 என்றும், 100 என்றும் சொல்லுகிறார்கள். விலைகளைப் பொறுத்த வரையில், பிரச்சனை வரும்போது இதில் எங்களுக்குச் சம்பந்தம் இல்லை, இது மாநில அரசிற்கு அப்பாற்பட்டது என்று சொல்லிவிடுகிறார்கள். மத்திய அரசும் விலை நிர்ணயம் என்று செய்து விடுகிறார்களே தவிர, ஆலை நிறுவனங்களுக்கும் கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் இடையில் ஏற்படும் தகராறுகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அதேபோல மாநில அரசும் இப்படிப்பட்ட தகராறுகள் ஏற்படும்போது, அவர்களுக்குப் போலீஸ் பந்தோபஸ்து கொடுப்பதோடு, தங்கள் பொறுப்பை நிறுத்திக்கொண்டு விடுகிறார்கள். விவசாயிகளுக்கு ஏற்படும் தொல்லைகளைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. இது மத்திய அரசினைச் சார்ந்த விஷயம் என்று சொல்லி விடுகிறார்கள்.

குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் புண்ணியம்பாக்கம் ஆலை இருக்கிறது. போன ஆண்டு ரூ. 85 கொடுத்திருக்கிறார்கள். பிறரும் ரூ. 75 கொடுத்திருக்கிறார்கள். ஒரே ஆண்டிலே அதே மாதிரி பிற ஆலைகளும் ரூ. 85-ம் ரூ. 75-ம் கொடுத்திருக்கிறார்கள். நவம்பரிலிருந்து மார்ச் வரையில் ரூ. 85, அதற்குப் பிறகும் நெல்லிக்குப்பம் ஆலையும் மற்ற ஆலைகளும் கொடுத்தன என்று தெரிகிறது. இப்போது சென்ற ஆண்டில் கொடுத்த ரூ. 85-ல் ரூ. 12-ஐப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிறது. பிடித்துக் கொண்டிருக்கிறார்கள், பிடித்து வருகிறார்கள். ரூ. 85 வாங்கியது ரூ. 75 ஆக இருக்கவேண்டுமென்றால் நடப்பு ஆண்டில் நடப்படுகிற கரும்பின் விலையில் பிடித்துக் கொள்ளுகிறார்கள். நிர்ப்பந்தத்தின் பேரில் கழித்துக்கொள்கிறார்கள். நடப்பு ஆண்டில் கரும்பு எடுத்துக்கொள்ளும்போது சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட அதிகப் பணத்தை எடுத்துக்கொள்ளுகிறார்கள். இந்தக் கொடுமையிலிருந்து ஏழை விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது மில் சொந்தக்காரர்கள் தங்கள் தொழில்கள் செழிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைப் பயன்படுத்தி இஷ்டப்படி ஆட்டிப்படைக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடும், வேதனையோடும் சொல்கிறேன். இதில் அரசாங்கம் உறுதியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்பேட்டை (இண்டஸ்டிரியல் எஸ்டேட்) ஆரம்பிக்கிறார்கள், அவ்வாறு ஆரம்பிப்பது வரவேற்கத்தக்கது, வரவேற்கிறேன். ஆனால், அதற்காக எடுக்கப்படுகிற நிலங்கள் விவசாயத்துக்குப் பண்பட்ட நிலங்களும், பம்புசெட்டு வைத்துப் பெரிய பெரிய கிணறுகளைக் கட்டி தண்ணீர் வசதி செய்துகொடுக்கப்பட்ட நிலங்களுமாகும். அப்பேர்ப்பட்ட நிலங்களை இண்டஸ்டிரிக்கும் எடுத்துக்கொள்கிறார்கள். விவசாயத்திற்குப் பண்பட்ட நிலங்களை விட்டுவிட்டு வேறு இடங்களில் இருக்கும் நிலங்களை எடுத்திருக்கலாம். அதை விட்டு விட்டு நகரங்களில் டவுன் பக்கத்திலேயுள்ள விலையுயர்ந்த நிலங்களையும் பம்புசெட்டுகள் போட்டு, கிணறுகளை வெட்டி இருக்கும் நிலங்களையும் ஆர்ஜிதம் செய்துகொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் இந்த அரசு தடுக்க வேண்டும். அந்த மாதிரியான, வசதியான, விவசாயத்திற்கு உகந்த நிலங்களையெல்லாம் இந்தத் தொழிற்பேட்டைக்காக எடுக்காமல், வேறு இடங்களிலேயுள்ள வேறு விதமான நிலங்களை, விவசாயத்திற்குப் பண்பாடு இல்லாமல் இருக்கும் நிலங்களை குறைந்த தொகையில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கூட்டுறவிலே ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏகபோக நிர்வாகத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இதை மாற்ற பொது மக்கள் விரும்புகிறார்கள். இதற்காக ஒரு கிளர்ச்சி மாநிலத்தில் இருக்கிறது. அதையொட்டி அந்த நிலையில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அன்று

காங்கிரஸ் ஆட்சி, அவர்கள் நிர்வாகம் இருந்தது. அவர்கள் ஆட்சியில் பாதுகாப்பு இருந்திருக்கிறது. அது உண்மை. அவைகள் தெரியும். இப்போது இருந்த கட்சியைச் சேர்ந்தவர்களை மாற்றி நியமிக்க வேண்டும். இரண்டு கட்சியிலேயும் இல்லாமல் பார்த்து நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பிட்ட கட்சிக்காரர்களோ அல்லது ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களோ, அல்லது அதிகாரிகளோ இல்லாமல், மக்களுக்குப் பரவலாகப் பயன் கிடைக்க வேண்டும் என்று இதை நான் சொல்லுகின்றேன். அவர்கள் கட்சி இருந்தாலும், மற்றவர்களையும் அதில் நியமிக்கவேண்டும் என்றும், சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் நான் சொல்கிறேன். இந்தக் கூட்டுறவு பற்றி சந்தானம் கமிட்டி என்று ஒன்று ஏற்படுத்தி, பெரிய விசாரணை நடந்தது. அந்த விசாரணை என்ன ஆயிற்று? அதன் அறிக்கை என்ன ஆயிற்று? அதன் யோசனை செயல் படுத்தப்பட்டதா? எந்தக் காரணத்தால் அவைகள் பேசப்படவில்லை? அது எந்தக் காரணத்தாலோ தெரியவில்லை. அதில் உள்ள சிபாரிசுகள் என்ன? நம்முடைய நண்பர்கள் அவர்களாலே ஏற்படுத்தப்பட்ட கமிட்டி. அந்தக் கமிட்டியின் சிபாரிசுகள் என்ன ஆயிற்று? எந்த அளவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது, ஒதுக்கி வைக்கப்பட்டது என்று தெரியவில்லை. அதனுடைய சிபாரிசுகள் மக்களுக்குப் பயன் தருவதாய் இருந்தால், அந்தப் பயனை மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் :** சந்தானம் கமிட்டி வெளியிட்ட அறிக்கை எல்லாக் கடைகளிலும் கிடைக்கின்றது. யார் வேண்டுமானாலும் வாங்கிப் படித்துக்கொள்ளலாம். சந்தானம் கமிட்டி சிபாரிசுகள் பற்றி நான் விளக்கம் சொல்லியிருக்கிறேன். நாலு வகையான சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஒன்று சட்டத்திற்குப் புறம்பான சிபாரிசுகள். சந்தானம் கமிட்டி சிபாரிசு செய்யும் போது சட்ட நிபுணர்களை வைத்துக் கொண்டு செய்யாத காரணத்தால், சட்டத்துக்குப் புறம்பான சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறார்கள். அவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. இரண்டாவது நமது சட்ட அமைச்சர் கையில் உள்ள கூட்டுறவு ஆலைகளும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் கூட்டுறவு அமைச்சரிடம் செல்ல வேண்டுமென்ற சிபாரிசு. இது நிர்வாகத்திற்கு உகந்தது அல்ல. அதை ஏற்றுக்கொள்ள வில்லை. அதேபோல் வீடு கட்டுகிற கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் வீட்டுவசதி அமைச்சர் மாண்புமிகு திரு சுப்பையா அவர்களிடம் இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையும் மாற்றுவதற்கு இல்லை. பால் பண்ணைகளை உணவு அமைச்சரிடமிருந்து மாற்றவேண்டுமென்று சொன்னார்கள் இது நிர்வாகத்திற்கு உகந்ததாக இல்லை. மூன்றாவது இந்த சந்தானம் கமிட்டி ரிப்போர்ட் செய்யும்போது அதற்கு முன்னாலும் பின்னாலும், மத்திய மாநில அமைச்சர்கள் கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதைப்போல் மத்திய மாநில அதிகாரிகள் கூடி, தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானங்களை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. நான்காவதாக ரிசர்வு பாங்கு ரூ. 16 கோடி அளவுக்குப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ரிசர்வ் பாங்கிலிருந்து வருகிறதுபோலவே சில்லறையாகக் குறுகிய காலக் கடன் ரூ. 40 கோடி அளவுக்குக் கொடுத்திருக்கிறோம். எல்லாம் ரிசர்வு பாங்கிலிருந்துதான் வருகிறது. ரிசர்வ் பாங்கு கொடுக்கிற டைரக்ஷன், அது சொல்கின்ற யோசனைகள், இவற்றுக்குப் புறம்பாக சிபாரிசுகளை அரசு ஏற்றுக்கொள்ளாது. மற்ற சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ளலாம்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி :** அதுபற்றி அரசு ஏதாவது முடிவெடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அந்த அடிப்படையில் புதிதாகச் சட்டத்தைத் திருத்துவதற்கு என்று, சட்டத் துறையில் தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தி, சட்டத்தைத் திருத்த ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒருவேளை அந்தச் சட்டத்



திருத்தத்தை வைக்க முடியுமா என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். சீக்கிரமாக முடிந்தால் வைப்போம். அரசு சொல்லக்கூடியது, பொதுப்படையான கொள்கைகளைத்தான். இன்னின்னபடி மாற்ற வேண்டும் என்று சொல்ல வேண்டியது சட்டத் துறை அதிகாரிகள்தான். லீகல் டிபார்ட்மெண்டில் தனியாக ஒரு பிரிவு—கோவாபரேஷன் செல்—என்று ஏற்படுத்தப்பட்டு, அவர்கள் இந்தத் திருத்தத்தைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** இந்த வரவு செலவுத் திட்டத்தில் புரட்சிகரமான ஒரு அறிக்கையைக் கூறியிருக்கிறார்கள் என்றால், அது நில உச்ச வரம்பு பற்றியதாகும். இந்தப் புரட்சிகரமான காரியம் முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே கொண்டு வரப்பட்டது. ஏதோ 30 ஏக்கர் உச்சவரம்பு ; அதற்கு அதிகமாக நிலம் யாரும் வைத்துக் கொள்ளக்கூடாது என்று இருந்தது. அது ஏதோ புரட்சிகரமான காரியம். அதனால் நாட்டு மக்கள் அனைவரும் நன்மை அடைகிறார்கள், நிலம் இல்லாதவர்களுக்கு எல்லாம் நிலம் வருகிறது; அத்தனைபேரும் சுபிட்சமாக இருக்கப் போகிறார்கள் ; உணவு பிரச்சினையும் தீர்ந்து விடும் ; உற்பத்தியும் அதிகமாகப் பெருகும் என்றெல்லாம் அப்போது எண்ணப்பட்டு வந்தது. ஆனால் நடைமுறையில் எதிர்பார்த்த பலன் கிடைத்ததாகவோ எண்ணங்கள் ஈடேறியதாகவோ தெரியவில்லை. ஆனால் இந்த அரசு ஏதோ நாமும் ஒரு புரட்சி செய்ய வேண்டும், நில உச்ச வரம்பைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில், 30 ஏக்கர் உச்சவரம்பை 15 ஏக்கருக்குக் குறைக்கப் பார்க்கிறார்கள். உண்மையில் அது ஒரு பிரச்சினையைத் தீர்க்கும். விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற ஏழைகளுக்கு இந்த உபரி நிலம் போகும். அவர்கள் நீண்டகாலமாகவே கூலிகளாக உழைக்கிறவர்கள். அவர்களுக்குச் சொந்தமாக நிலம் இருந்தால், அதிக ஊக்கத்தோடு பாடுபடுவார்கள்; உணவு உற்பத்தியும் நமக்குக் கிடைக்கும்; மக்களுடைய பிரச்சினைகளும் ஓரளவு தீரும் என்ற எண்ணம். ஆனால் அந்த எண்ணங்கள் எல்லாம் எந்த அளவுக்கு ஈடேற்றப்படும் என்பதைத்தான் கவனிக்க வேண்டும். முதலில் ஒரு அளவுக்குச் செய்து பார்த்திருக்கிறோம். பரீட்சார்த்தமாக நடந்திருக்கிறது. அது எந்த அளவுக்கு மக்களின் பிரச்சினையை, விவசாய மக்களின் பிரச்சினையைத் தீர்த்திருக்கிறது ; அதை விட எந்த அளவுக்குக் குறைவான நில உச்ச வரம்பு கொண்டு வந்தால், மக்களின் பிரச்சினையைத் தீர்க்கும் என்பதை நன்றாகப் பரிசிலனை செய்து பார்த்துவிட்டுச் செய்ய வேண்டும். நிலச் சீர்திருத்தத்தால் மக்கள் பலனடைகிறார்கள். உழுபவர்களுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவோம் என்ற கோஷத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அதை வரவேற்கிறோம். அப்படியில்லாமல் ஏதோ விளம்பரத்துக்காகவோ அல்லது வேறு எந்த அரசியல் காரணத்துக்காகவோ இப்படி ஒரு புரட்சி செய்கிறோம் என்று சொல்லி, இருக்கிற அமைப்பையும், இருக்கிற உணவையும், இருக்கிற உற்பத்திப் பெருக்கத்தையும் அது கெடுக்கிற நிலைக்கு பாதிக்கும் அளவுக்கு இந்தப் புரட்சித் திட்டம் உருவானாலும், அது வரவேற்கத்தக்கதல்ல. 15 ஏக்கர் என்ற வரம்பைக் கொண்டு வருவதால், எவ்வளவு நிலம் உபரியாகக் கிடைக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தை எவ்வளவு பேர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க முடியும் என்று கணக்கைப் பார்த்து, நல்ல முறையிலே பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றால், இதை வரவேற்கிறோம். அவர்கள் ஏதோ செய்தார்கள் ; நாமும் சும்மா இருக்கக்கூடாது ; நிலச் சீர்திருத்தம் செய்வோம் என்று சொல்லிக் கொண்டு இந்த மாதிரி குழப்பமான சங்கடத்தை விவசாய மக்கள் மத்தியில் கொண்டு வருவது அவ்வளவு சரியல்ல. இன்றைக்குச் சென்னையில் 6 அடுக்கு, 8 அடுக்குக் கட்டடங்கள் உயர்ந்து கொண்டே போகின்றன. ஒரே கொட்டகையில் ஒரே நேரத்தில் மூன்று ஷோ, இரண்டு ஷோ காட்டப்படுகின்றன. சட்டத்திற்குப் புறம்பாக எப்படி. எப்படியோ பணத்தைச் சேர்த்து, சுகமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனையோ கார்களை வைத்துக்கொண்

[திரு எஸ். எஸ். ராமசாமி படையாச்சி] [6th March 1970

டிருக்கிறார்கள். அப்படி இருக்கிறதை எல்லாம் விட்டு விட்டு, விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற மக்கள்—மாநிலத்தில் 70, 80 சதவிகித மக்கள்—அவர்களை விரட்டி விரட்டி குழப்பம் உண்டாக்குவது என்றால் அது சரியானதல்ல. உண்மையிலேயே அந்த மக்களுக்கு இதிலே நன்மை இருக்கிறது என்றால், சரி, இந்த மாநிலத்திலுள்ள 4 கோடி மக்களில் 2 அல்லது 3 கோடி மக்கள் விவசாய மக்கள் ; அவர்கள் இந்தச் சட்டத்தால் பலனடைகிறார்கள் என்றால், இது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் குறிப்பிட்ட ஒரு இனத்தாருக்கு, விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு மேலும் மேலும் பல தொல்லைகள், சங்கடங்கள் கொடுப்பது சரியல்ல. முன்பு எல்லாம் பட்ஜெட் வருகிறதென்றால் பெரிய வியாபாரிகள், ஷேர் மார்க்கெட் நடத்துகிறவர்கள்தான் கூர்ந்து கவனித்துக் கொண்டு கவலையோடு பார்ப்பார்கள். இப்பொழுது விவசாயிகள்தான் இந்த பட்ஜெட்டில் என்ன வருகிறது, நமக்கு என்ன தீமை வருகிறது, பம்பு செட்டுக்கு, மின்சாரத்துக்கு என்ன வரி வருகிறது, அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின் விலை எந்த அளவுக்கு உயருகிறது என்று பார்க்கிற பயங்கரத்தைத்தான் மத்திய அரசும் மாநில அரசும் உண்டாக்கி வருகிறது. சென்னை போன்ற நகரங்களில் இருக்கிற மக்களுக்கு வசதியும் வாய்ப்பும் ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள். சென்னை, கோயமுத்தூரில் மட்டும் படியரிசித் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த மாதிரி நகரத்திலுள்ளவர்கள் குறைகளை நிவர்த்திக்க, அரசியல் தலைவர்களும் தொழிற்சங்கத்தலைவர்களும் இருக்கிறார்கள் ; அரசாங்கமும் அவர்கள் குறைகளை நேரடியாகக் கேட்கிறது. ஆனால் கிராமப்பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற மக்கள் நல்ல நிலையில் இருக்கவேண்டும், அவர்களின் பாதுகாப்புக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய வேண்டும் என்றில்லாமல் அவர்களுக்கு இப்படிப் பல கோணங்களில் பல சங்கடங்கள் வருகின்றன. இதையெல்லாம் அரசாங்கம், அவசரப்படாமல், வேறு எந்தப் பிரச்சினையையும் மனதில் கொள்ளாமல் நன்றாகப் பரிசிலனை செய்து, செய்கிற சட்டம் எந்த அளவுக்கு மக்களுக்கு நன்மை பயக்கும், இதனால் நன்மை அடைகிறவர்களை விட தீமை அடைகிறவர்கள் எண்ணிக்கை குறைவா என்று பார்த்துச் செய்ய வேண்டும் என்று குறிப்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக, கடலூரில் போலீஸ்காரர்கள் அடித்து விட்டார்கள். அதிலேயும் நம்முடைய மன்றத்தில் உறுப்பினராக இருக்கிற நமது நண்பர் திரு எத்திராஜுலு அவர்கள்தான் அதிகமாக அடிபட்டிருக்கிறார். அதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் போலீசார் குறைந்த சக்தியைக் கொண்டுதான் அடித்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அங்கே இருக்கிற நிலையில் அவர்கள் செய்தது சரி, இவர்கள் செய்தது தப்பு என்றெல்லாம் விவாதிக்க நான் வரவில்லை. ஆனால் போலீஸ் எந்த அளவுக்கு இதில் அதிகமாகத் தலையீடு செய்திருக்கிறார்கள். அதிலேயும் குறிப்பாக இந்த மன்றத்தின் அங்கத்தினர், நம்மைப்போன்ற ஒருவர், ஒரு சிறந்த தொண்டர், பின் தங்கிய மக்கள் சமூகத்தின் நன்மைக்காகப் பாடுபட்டு அவர்களுக்காக என்றென்றைக்குமே வாதாடிக் கொண்டிருக்கிற சிறந்த தொண்டர், காங்கிரஸ் ஆபீஸுக்குள்ளே இருக்கும்போதே, "நான் எத்திராஜுலு, நான் எம். எல்.சி.," என்று சொல்லும்போதே, உங்களைத்தான் அடிக்கச் சொன்னார்கள் என்று சொல்லி போலீஸ்காரர்கள் அடித்ததாகச் சொல்கிறார். அப்படியிருந்தால் அது ரொம்ப வேதனைக்குரிய விஷயம். அதற்கு ஏதோ காரணம், சமாதானம் சொல்லி விட்டால் போதாது. இன்று நண்பர் திரு எதிராஜுலுக்கு வந்தது, நாளைக்கு நமக்கு வரலாம். அதனால் அதை விசாரித்து—நீதி விசாரணை மூலம் விசாரணை செய்து உண்மையில் தப்பு இருந்தால், கேஸ் போடட்டும். ஒரு மன்றத்தின் அங்கத்தினர் என்று சொல்லும்போதுகூட அடித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட அநீதிகள் இழைக்கப்படும்போது அரசு குறுக்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



6th March 1970]

**மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம் :** தலைவர் அவர்களே, இது சம்பந்தமான வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது. எனவே இதைப் பற்றித் தொடர்ந்து பேச வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** இதில் பாதிக்கப்பட்டவர் பொறுப்புள்ள ஒரு அங்கத்தினர். அவருடைய செயல் சரியில்லையென்றால், நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். அவரை விட்டுவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் இதுபற்றி ஒரு விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. பி. யு. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் பேசும்போது, நான் சட்ட மன்ற மேலவை உறுப்பினர் எத்திராஜ் என்று சொல்லியும் போலீஸார் அடித்தார்கள் என்று சொன்னதாகச் சொல்லுகிறார்கள். இது நீதி மன்றத்தில் இருக்கும் விஷயம். எனவே இதைப்பற்றி வற்புறுத்திப் பேசவேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு எஸ். எஸ். ராமசாமி படையாச்சி:** தலைவர் அவர்களே, இந்த அளவோடு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

***திரு ஜி. பராங்குசம்:** தலைவர் அவர்களே, **1970-71**-ஆம் ஆண்டுக்கான இந்த நிதி நிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைச் சொல்லுவதற்காக வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கும் இந்த மா மன்றத்திற்கும் எனது நன்றியறிதலை முதற்கண் உரித்தாக்கிக் கொள்ளுகிறேன்.

பொதுவாக, கடந்த நான்கைந்து தினங்களாக இந்த அறிக்கையின் மீது பல உறுப்பினர்கள் அதிலுள்ள சாதக பாதகங்களை விளக்கி அவை பற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். அதிலுள்ள சிறப்பு அம்சங்களை மனத்துக்குள் சிலர் வரவேற்றுப் பாராட்டினாலும் வெளிப்படையில் தாங்கள் சார்ந்துள்ள கட்சியின் நலனைக் கருத்தில் கொண்டு, தங்கள் மனத்தில் ஏற்பட்டுள்ள உண்மையான எண்ணங்களை மாற்றியமைத்துக்கொண்டு, எதிர்த்துப் பேச வேண்டும் என்ற நிலைமையில், சில உறுப்பினர்கள் பேசியிருப்பதைப் பார்த்தோம். வேறு சிலர் அவர்கள் சார்ந்துள்ள கட்சியின் கொள்கை எப்படியிருந்தாலும், இந்த வரவு-செலவுத் திட்டத்தை மனமார வரவேற்றுப் பேசினார்கள். வேறு சிலர் இந்த அறிக்கையில் உள்ள நல்ல அம்சங்களை, நல்ல திட்டங்களை மனமார வரவேற்றுப் பாராட்டிப் பேசினார்கள். ஆனால் பொதுவாகப் பார்க்கப் போனால், சென்ற நான்கைந்து தினங்களாக வெளிவரும் பத்திரிகைகளின் விமரிசனங்களையும் மக்கள் பேசிக்கொள்ளுகிறதையும் பார்த்தால், அனைவரும் இதை வரவேற்று மகிழ்ச்சி தெரிவிப்பதைப் பார்க்கிறோம். ஏழை எளியவர்கள் எல்லோரும் இதற்காக இந்த அரசினைப் பாராட்டிப் பேசுகிறதைப் பார்க்கிறோம். ஓரளவிற்குத் துண்டு விழும் நிதி நிலை அறிக்கையாக இருந்தாலும், நாட்டிலுள்ள இன்றைய பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு, நாட்டிலுள்ள மக்களுக்கு நல் வாழ்வு எதிர்காலத்தில் கிடைத்திட வேண்டும் என்ற முறையில், நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். இதற்காக அவர்களை நாம் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

இந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றிப் பேசும்போது, கடந்தகால நிகழ்ச்சிகளை நாம் சற்று எண்ணிப்பார்க்க வேண்டுவது அவசியம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்திற்கு வருவதற்கு முன்பு, நாட்டு மக்களிடம் என்னென்ன கருத்துக்களை எடுத்துச் சொல்லி வந்ததோ, அந்தக் கருத்துக்களையெல்லாம், சொல்லி வந்த திட்டங்களையெல்லாம் இந்த மூன்று ஆண்டு காலத்தில், இந்தக் குறுகிய காலத்தில் மிக வேக

மாக நிறைவேற்றி வருகிறது என்பதையும், இன்றையதினம் நாட்டு மக்களிடம் நிலவி வரும் சோக நிலைமைகளைப் போக்க, பாட்டாளி மக்களிடமும் தொழிலாளர்களிடமும் விவசாயப் பெருங்குடி மக்களிடத்திலும் ஒரு மறு மலர்ச்சி ஏற்படுத்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அரும்பணியாற்றி வருகிறது என்பதையும் நாம் சொல்லாமலேயே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புரிந்துகொண்டிருக்க முடியும். கடந்த 20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியிலே மக்களை எப்படிப்பட்ட அவல நிலையில் வாழவிட்டு விட்டார்கள் என்பதை 1967-ஆம் ஆண்டில் நடந்த தேர்தல் முடிவுகள் தெள்ளத் தெளியக் காண்பித்துவிட்டன. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரால் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்தும் மக்களுடைய துயர் துடைக்கப்படவில்லை, நலிவு நீக்கப்படவில்லை, வேலையில்லாத் திண்டாட்டம் போக்கப்படவில்லை. ஆனால் கடந்த மூன்று ஆண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, அதற்கு முன்பு இருந்த ஆட்சியாளர்களால் செய்து முடிக்க முடியாத, அவர்களால் விடப்பட்ட பெரும் குறைகளெல்லாம் இந்தக் குறுகிய காலத்தில் துடைக்கப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். இந்த நேரத்தில்தான் எதிர்க் கட்சியிலுள்ள நண்பர்கள், "வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது, படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது,' இவற்றைப் போக்க இந்த அரசு ஒன்றுமே செய்யவில்லை", என்று சொல்லுகிறார்கள். அவர்கள் யாரைப் பார்த்துச் சொல்ல வேண்டுமோ அவர்களைப் பார்த்துச் சொல்லாமல், நம்மைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டும் அவற்றின் பெயரால் தீராத் துயர்களையும் நீங்கா நலிவுகளையும் ஏற்படுத்தியவர்கள் அவர்கள்தான். சுதந்திரம் அடைந்து 20 ஆண்டுகள் கழித்தும் இந்த நாட்டு மக்களிடத்தில் இல்லாமையும் பசிப்பிணியும் இருக்கிறது என்றால், அவைகள் கடந்த 20 ஆண்டுகால ஆட்சியின் விளைவுகள்தான் என்பதை யாருமே மறுக்க முடியாது. ஆனால் மூன்று ஆண்டு காலமாகப் பொறுப்பேற்றுக்கொண்ட நாங்கள் ஆற்றிய பணிகள் மிக மிக அசாத்தியமானவைதான். சென்ற ஆண்டில் வறட்சி நிலை ஏற்பட்டபோது, வேதனையடைந்தோம். எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று கருதிக்கொண்டு வேதனையுற்றோம். வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுடைய துயர் துடைப்பதற்காக மத்திய அரசுடன் வாதாடி ஏறத்தாழ பதினேழு கோடி ரூபாயைப் பெற்று, பயங்கரமாக உருவெடுத்த அந்த நிலைமையைச் சமாளித்தோம். இப்படிப்பட்ட பல அரிய பெரிய பணிகளை நமது அரசு வேகமாக நிறைவேற்றி வருகிறது என்பதை மறப்பதற்கில்லை. மக்களுடைய நலன் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையை, நான் முன்பே குறிப்பிட்டதுபோல, அனைத்து மக்களும் பாராட்டுகின்றனர், வரவேற்கின்றனர். அரசு ஊழியர்களும் இதைப் பாராட்டி வரவேற்கின்றனர். பிற்பட்ட சமூகத்தினர், அரிசன மக்கள், கிராமப்புறங்களில் உள்ளோர் அனைவருமே இதைப் பாராட்டுகின்றனர். அரசு ஊழியர்களுக்காக என்.ஜி.ஓக்களுக்காக இந்த அரசு என்ன செய்துவிட்டது என்று கடந்த மூன்று மாத காலமாக தமிழகத்தில் அரசு ஊழியர்களைத் தூண்டிவிட்டு அதன் மூலம் பல காரியங்களைச் செய்துவிடலாம் என்று நமது மதிப்பிற்குரிய நண்பர்கள் சிலர் கருதினார்கள். எதிர்க் கட்சியிலுள்ள நண்பர்கள் எப்படியாவது இந்த அரசுக்கு ஒரு நெருக்கடி நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கருதி, எங்கெங்கே யார் யாரைத் தூண்டிவிடவேண்டுமோ, யார் யாரைத் தூண்டிவிட்டு நெருக்கடி நிலைமைகளைத் தோற்றுவிக்க வேண்டுமோ, அவற்றையெல்லாம் செய்யலாம் என்று எண்ணி, அவர்களுக்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒன்றுமே இருக்காது என்று கருதிக்கொண்டு, இது வெளியாகும் தினத்தை எதிர்நோக்கியிருந்தார்கள். ஆனால் நமது அரசு சமுதாயத்தில் உள்ள பல்வேறு துறையினரின் தேவைகள் என்னென்ன என்பதை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்புகொண்டு, அவர்களுடைய குறைகளையெல்லாம் அவ்வப்பொழுது பரிசீலனை செய்து வந்ததன் பயனாக, இன்று அரசு ஊழியர்களுக்கு சிறப்புப் படியாக ரூபாய் பத்து உடனடியாகத் தருவது என்று முடிவெடுத்தது.



இந்த அரசு இந்த நிதி நிலை அறிக்கையில் அரசு ஊழியர்களை விட்டுவிடும், நாம் இந்த அரசினை ஒரு கை பார்த்து விடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எண்ணத்தில் இடி விழுந்ததுபோலாயிற்று. இப்போது அரசு ஊழியர்களுக்கு என ஒரு சம்பளக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய அறிக்கை வரும் வரையில் ஒரு இடைக்கால நிவாரணமாக மார்ச்சு மாதத்திலிருந்து அரசு ஊழியர்களுக்கு சிறப்புப் படியாக அளிப்பது என்று முடிவெடுத்து அறிவித்தது. இது நமது எதிர்க்கட்சி நண்பர்களுக்கு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் உண்டாக்கிவிட்டது. இப்போது அவர்கள் என்ன சொல்லுகின்றார்கள்? அரசு ஊழியர்கள் 30 ரூபாய் அல்லவா கேட்டார்கள், பத்து ரூபாய் கொடுத்தால் போதுமா என்று கேட்கிறார்கள். அந்த நண்பர்களைக் கேட்கிறேன், இருபது ஆண்டு காலத்தில் இந்த அரசு ஊழியர்களுக்காக அவர்களுடைய அரசு என்ன செய்தது என்று சொல்லட்டுமே? இதுகாறும் உங்கள் அரசு அவர்களுக்காக என்ன செய்தது? அவர்கள் எவ்வளவு முறை மாநாடுகளைக் கூட்டினார்கள்? அவர்களுடைய மாநாடுகளிலே கலந்துகொள்ளும்படி அழைப்பிதழ்களை அன்று இருந்த அமைச்சர்களுக்கு அனுப்பினால், அவற்றில் கலந்துகொள்ள மறுத்தவர்கள்தான் அன்று இருந்த அமைச்சர்கள். "உங்கள் குறைகளைச் சொல்லுவதற்காகவா என்னை இங்கே அழைத்தீர்கள், வேறு வேலை இல்லையா" என்று கண்டித்துக்கொண்டு வெளியே சென்றவர்கள் தான் அன்று இருந்த அமைச்சர்கள். அவற்றையெல்லாம் இன்றைக்கு மறந்து விடுவதற்கில்லை. 30 ரூபாய் கேட்டார்கள். 10 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். கண் துடைப்புதானே இது என்கிறார்கள். ரூ. 10 பெரிதல்ல! 10 ரூபாய் தருகின்ற மனம் வரவேண்டும். அந்த மனம் உங்களிடத்தில் இருந்ததா? 20 ஆண்டு காலம் ஆட்சி நடத்தினீர்கள். உங்களுக்கு அந்த மனம் இருந்ததா? அன்று வந்த அரசு ஊழியர்களை இந்த செக்ரடேரியட்டுக்குள் நுழையக் கூடாது என்று சொன்னீர்கள். இன்றையதினம் அந்த அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சிறப்புப் படியாக ரூ. 10 கொடுத்து அதன் மூலம் ரூ. 6 கோடி, ஏற்கனவே அடைந்ததைத் தவிர மேற்கொண்டு ரூ. 6 கோடி வழங்கியிருக்கிறது என்று சொன்னால், நல்ல எண்ணம் படைத்தவர்கள் என்று பாராட்டவேண்டாமா, அல்லது குறை சொல்லாமல் இருக்கவேண்டாமா? குறை சொல்வது தான் எதிர்க்கட்சி வேலையா? நாங்கள் 1957-லிருந்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தோம். மாற்றான் தோட்டத்து மல்லியாக இருந்தாலும் அதிலே மணம் இருக்காது என்று கருதாதீர்கள் என்று தம்பிமார்களுக்குச் சொன்ன அப்பேர்ப்பட்ட பேரறிஞர் அண்ணா வழியில் வந்தவர்கள் நாங்கள். ஆகையினால் நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது, நல்ல பல காரியங்களைக் காங்கிரஸ் அரசு செய்தபோது ஆதரித்திருக்கிறோம். அவர்களுக்கு உற்சாகம் ஊட்டியும் இருக்கிறோம். வேறு மாநிலங்களிலும் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். நமது மாநிலத்தின் அறிக்கை போன்றது வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இப்பேர்ப்பட்ட நிதி நிலை அறிக்கையைப் பார்க்கமுடியுமா? இவைகளையெல்லாம் பாராட்ட வேண்டியது தானே? நமது பெருமதிப்பிற்குரிய நண்பர்கள் இன்றையதினம் வேறு பல காரணங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நல்ல அம்சங்களை விட்டு விட்டு வேறு பல முறைகளில் ஈடுபட்டு திசை திருப்பி விடப்பார்க்கிறார்கள். ஹிந்திபற்றி உங்கள் கருத்து என்ன, அபிப்பிராயம் என்ன என்று கேட்கிறார்கள். இந்தியைப்பற்றி நீங்கள் பேசுவதே எங்களுக்கு வேடிக்கையாக இருக்கிறது. உங்களைப் பார்த்துப் பரிதாபப்படுவதா என்று புரியவில்லை. 1938-ம் ஆண்டிலிருந்தே இந்தியை எதிர்க்கிறவர்கள், இந்தியை இந்த நாட்டில் நுழைய விடமாட்டோம், இந்தியைக் கொண்டுவந்து தமிழை அழிக்க இடம் கொடுக்கமாட்டோம், என்று சொல்லுகிறவர்கள், எங்களைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்? இந்தியைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன என்று திருப்பித் திருப்பி இப்போது கேட்கிறார்கள். கவர்னர் உரை விவாதத்தின் போது இந்தியைப்பற்றிச் சென்ற தொடர் கூட்டத்திலே திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது, எங்கள் தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இரு மொழித் திட்டம் தான். மத்திய சர்க்காருக்குச் சட்டமன்றம் மூலமாகத் தீர்மானம்

நிறைவேற்றி அனுப்பி ஆகிவிட்டது. இப்போது நம்முடைய தமிழகத்தில்
பள்ளிகளிலே இருமொழித் திட்டம்தான். ஆங்கிலமும் தமிழும் கற்பிக்கப்
படுகின்றன. அகில இந்திய ரீதியில் 14 மொழிகளும் தேசிய மொழி
களாக ஆக்கப்படவேண்டும். இந்திமொழி மட்டும் தேசிய மொழியாக
இருக்கக்கூடாது என்று சொல்லி வருகிருேம். அன்று நேருஜி கொடுத்த
வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும், அரசியல் சட்டம் திருத்தப்பட
வேண்டுமென்று விவாதித்துக் கொண்டிருக்கிருேம். எங்களைப் பார்த்துத்
தீர்மானம் கொண்டுவரப் போகிறீர்களா என்று பாராளுமன்றத்தில் இருக்
கும் பெருமதிப்புக்குரிய பெரும் தலைவர் நாடெங்கும் கேட்டுக்கொண்டிருக்
கிருர். ஆனல் கேட்க வேண்டிய இடம் இங்கு அல்ல, அதிலும் பாராளு
மன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பெருந்தலைவர், பல ஆண்டுக்
கள் காங்கிரஸ் கட்சிக்கு அகில இந்திய தலைவராகவும் இருந்தவர்,
அவர் தமிழ்நாட்டில் மாணவர்களிடத்தில் போய் இன்றையதினம்
மொழிப் பிரச்னையைக் கிளப்பி விட்டிருக்கிருர்கள். மாணவர்களுக்கு
நன்ருகப்புரியும். இந்திப் பிரச்னையில் யார் மாணவர்கள் பக்கம் இருக்
கிருர்கள் என்று தெரியும். இங்கே நடைபெறுவது நாடகம் என்று
நன்ருகத் தெரியும். சென்ற முன்தினம் பாராளுமன்றத்தில் இந்திப்
பிரச்னை வரும்பொழுது அந்தப் பெரும் தலைவர் அங்கே இல்லை. பாராளு
மன்றத்துக்கு வரவேயில்லை. அங்கே இண்டிகேட், சிண்டிகேட் சேர்ந்து
தோற்கடித்திருக்கிருர்கள் என்ருல், நீங்கள் இண்டிகேட் பக்கம் என்று
சொல்கிருர்கள். நாங்கள் எந்தப் பக்கமும் இல்லை. யார் நன்மை
செய்கிருர்களோ அவர்கள் பக்கம் நாங்கள் எப்போதும் இருப்போம்.
நல்ல பல திட்டங்கள், முற்போக்குத் திட்டங்கள் இந்திரா அரசு கொண்டு
வந்தால் அதை ஆதரிப்போம். மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுத்த
பாடத்தை அவர்களுக்கே கற்பிப்போம். நாங்கள் யாரையுமே பின்
தொடர்ந்து ஓடுகிறவர்கள் அல்ல. மற்றவர்கள் தான் எங்களைப் பின்
தொடர்ந்து வரவேண்டும். அத்தகைய உயர்ந்த லட்சியத்தைக் கொண்
டிருக்கிருேம். தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் சுய ஆட்சிதான் நமது
கொள்கை என்று சொல்லிவிட்டோம். மத்திய ஆட்சியைப் பொறுத்த
மட்டிலே, நாங்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டோம். அங்கே
கூட்டாட்சி தான் இருக்கவேண்டும். இவைகள் எல்லாம் சொல்லியும்
உங்கள் கொள்கை என்ன என்று கேட்கிருர்கள். இந்தியைப்பற்றி உங்கள்
அபிப்பிராயம் என்ன என்று ஒன்றும் தெரியாதவர்கள் போல் பேசிக்
கொண்டிருப்பது சாலச் சிறந்ததாக இருக்க முடியாது. நீங்கள் பேச
வேண்டிய இடத்தில் பேசுங்கள். பாராளுமன்றத்திலே தீர்மானம் கொண்டு
வாருங்கள். நேரு உறுதி மொழியைச் சட்டமாக்க வேண்டும். காமராஜ்
அங்கே பேசினல், தீர்மானம் கொண்டு வந்தால், அது சிறந்ததாக
இருக்கும். நாங்களும் அவருக்கு ஆதரவாகவும் ஒத்தாசையாகவும்
இருப்போம். அதை விட்டு விட்டு இங்கே வந்து ஏதாவது குட்டையைக்
குழப்பி மீன்பிடிக்கக் கருதினல், அந்த நினைவு வெறும் கனவாகத்தான்
போகும் என்று தெரிவித்துக்கொண்டு இந்த நிதி நிலை அறிக்கையில்
இருக்கின்ற நல்ல அம்சங்களைப் பார்ப்போம். இந்த நிதி நிலை அறிக்கை
யில் அரசு ஊழியர்கள் இந்த நாட்டுக்கு மிக மிக முக்கியமானவர்கள்,
அவர்கள் இந்த நாட்டு மக்களைக் காப்பாற்றும் பொறுப்பிலே அரசு
எவ்வளவு கவனம் செலுத்துகிறது என்பதைக் காட்டும் முறையில், அவர்
களின் குறைந்த பட்சக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு
அவர்களுக்கு "கமிஷன்" போட்டு, அந்த கமிஷன் செயல் புரிந்துகொண்
டிருக்கிறது. இந்த நிலைமையில் அவர்களுக்குச் சிறப்புப் படியாக ரூ. 10
கொடுக்கிருேம். அது மாத்திரம் அல்ல. உங்களுக்கு எல்லாம் நன்ருகத்
தெரியும். 20 ஆண்டு காலமாக ஆசிரியர் பெருங்குடி மக்கள் வாதாடிக்
கொண்டிருந்தார்கள். இதே மன்றத்தில் துணைத் தலைவர் திரு. கிருஷ்ண
மூர்த்தி அய்யர் அவர்களை எத்தனையோ முறை பார்த்திருக்கிறேன். அவர்
கள் இந்த ஆசிரியர்களுக்குப் பரிந்து பேசும் நிலை, தனியார்
துறையில் இருக்கும் ஆசிரியர்கள் நிலைபற்றிச் சொல்லுகின்ற
பொழுது அரசு பள்ளிகளைப்பற்றிச் சொல்லும்பொழுது, மிகவும் பரிதாப
கரமாக இருக்கும். அவர்களைப்பற்றி இப்போது மட்டும் அல்ல
பல ஆண்டு காலமாக நமது பெருமதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்கள்





கள் அந்த அரசு இருக்கும்போதும் எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவைகள் செவிடன் காதில ஊதிய சங்கு போல் இருந்தன. ஆனல் இந்த அரசு தனியார் துறையில் இருக்கும் பள்ளிகளை மிக அக்கறையோடு கவனித்து, 20 ஆண்டு காலம் வாதாடி, மாநாடுகள் போட்டு அதே அமைச்சர்களை மாநாடுகளுக்கு அழைத்தால், அமைச்சர்கள் வர மறுத்து, அந்த அமைச்சர்கள் ஆசிரியர்கள் மத்தியில் போய், திட்டிவிட்டு வந்தது தெரியும். இதற்காகவா எங்களை அழைத்தீர்கள் என்றும், குறைகள் சொல்லுவதற்காக அழைத்தீர்கள் என்று கோபித்துக் கொண்டு வந்த அமைச்சர்களை எனக்குத் தெரியும். ஆனல் அப்பேர்ப்பட்ட ஆசிரியர் பெருங்குடி மக்களுக்கு 20 ஆண்டு காலத்தில் கிடைக்க முடியாத வரப்பிரசாதம் போல், அவர்களுக்கு உரிமைகள் எத்தனையோ வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு வழங்கிய ரூ. 10 மாத்திரம் அல்லாமல், அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய வீட்டு வாடகைப்படி மருத்துவ வசதி, குடும்பத்துக்கு மருத்துவ வசதி இவைகள் எல்லாம் இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது என்ருல், இந்த அரசைப் பாராட்ட வேண்டாமா ? அரசைச் சிறப்பாகப் பாராட்ட வேண்டும். இவைகளையெல்லாம் நல்ல முறையில் எண்ணிப் பார்க்கும்போது, அரசு ஊழியர்களும் அவைகளைச் சிறந்த முறையில் பாராட்டுகிருர்கள். அது மட்டுமல்லாமல், இது வரை மலைப் பிரதேசத்தில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு குளிர்காலப்படி கொடுத்ததில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பது போல், ஆசிரியர்களுக்கும் 4 மாதங்களுக்குக் குளிர் காலப்படி கொடுப்பது என்று முடிவு செய்திருக்கிறது. திருமணக் கடன் ஆசிரியர்களுக்குக் கிடையாது. அரசு ஊழியர்களுக்கு மட்டும் இருந்தது. "எங்களுக்கு கிடையாதா, நாங்கள் பாவம் செய்தவர்களா ? " என்று ஆசிரியர்கள் கேட்டார்கள். அவர்களுக்கும் 500 ரூபாய் திருமணக் கடன் கொடுக்க முடிவு செய்திருக்கிறது. அதோடு கைத்தறித் துணி வாங்கக் கடன் உதவி செய்கிறது. பண்டிகை, விழாக் காலத்துக்காக, "பெஸ்டிவல் அட்வான்ஸ்" தனியார் துறை ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் அனைத்தும் தனியார் துறையில் இல்லாமல் இருந்து, தனியார் துறை ஆசிரியர்கள் என்ருல தனியாகப் பிரிக்கப்பட்டு, கேட்பார் இல்லாமல் இருந்தார்கள். அவர்களுடைய நிலைமையை எல்லாம் கவனமாகப் பரிசீலனை செய்து, நல்ல முறையில் வாய்ப்புகளையும் வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறது. அது மட்டுமல்லாமல், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு, இந்த அரசு ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லுகிருர்கள். ஆனல், இந்த அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாகப் படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் ஏறத்தாழ 6,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கிற அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிருர்கள். அது மட்டுமல்லாமல், 17 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் அளவுக்கு இந்த நிதி நிலை அறிக்கை வாய்ப்பு ஏற்படுத்தியிருக்கிறது. இவைகளையெல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது. ஓய்வு ஊதியம் என்ற முறையில், இதுவரை 20 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. இன்றையதினம் அது 30 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் இன்றைய தினம் நல்லவர்கள் பாராட்டியிருக்கிருர்கள். இது வரை 36 மாதத்துக்குக் கணக்கிடப்பட்டு வந்த ஓய்வு கால ஊதியத்தைக் கடைசி 12 மாதத்துக்குக் கணக்கிட்டால் போதும் என்ற ஏற்பாடு செய்து பென்ஷன் கணக்கிடும் முறையை மாற்றியமைத்திருக்கிருர்கள்.

தொழில் வளர்ச்சி இல்லை என்று சொல்கிருர்கள். 1966-ம் ஆண்டு இந்த நாட்டில் 6,993 தொழிற்சாலைகள் இருந்தன. 1968 இறுதியில் அந்த எண்ணிக்கை 7,394 ஆக அதிகரித்துள்ளது. கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபிறகு, 401 தொழிற்சாலைகள் கூடுதலாக ஏற்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்டால், தொழில் வளர்ச்சி வராது, தொழில் துறை கெட்டுப்போகும், எந்த முதலாளியும் தொழிற்சாலை ஏற்படுத்த முன்வர மாட்டார் என்றெல்லாம் சொல்லி வந்தார்கள். அப்படிச் சொன்னவர்களுக்கெல்லாம் நல்ல பதில் சொல்லும் அளவுக்கு இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, 401 தொழிற்

சாலைகள் கூடுதலாக ஏற்பட்டுப் பணியாற்றுகின்றன என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்லாமல், தூத்துக்குடியில் கூட்டுத் துறையில் 52 கோடி ரூபாய் செலவில் உரத் திட்டம், சேலம் உருக்காலைத் திட்டம், கஞ்சமலையில் முதல் சுரங்கம் வெட்டும் பணி போன்ற பல காரியங்களை நடத்தி வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டுக் கிடக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மூடப்பட்ட தொழிற்சாலைகள், மில்கள், திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் என்று ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் நான்கு மில்களை ஏற்று நடத்தும் அளவுக்கு, அப்போது மூடிக் கிடந்த 27 ஆலைகளில் 13 ஆலைகள் இந்த அரசு வந்ததற்குப் பிறகு திறக்கப்பட்டிருக்கின்றன. ஆலைகள் மூடப்பட்டுக் கிடந்த நேரத்தில், அதிலே பணியாற்றி வேலை இழந்த தொழிலாளர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தொல்லைகள் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள், அவைகளைப் போக்குவதற்கு யார் யாரை எப்படி எப்படி மிரட்டினால், காரியம் செய்யமுடியும் என்று பார்த்து அந்த மாதிரி மிரட்டி, 13 மில்கள் திறக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இன்னும் மத்திய சர்க்காரின் உதவி கிடைக்குமானால், ஆதரவு இருக்குமானால், இன்னும் பல மில்களைத் திறக்க வழிவகை செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஹரிஜனங்கள் முன்னேற்றத்துக்காக ரூ. 539 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1969–70-ம் ஆண்டில் நாம் 519 லட்சம் ரூபாய் ஒதுக்கியபோது மத்திய அரசில் உதவி ரூ. 25 லட்சமே கிடைத்தது. 1970–71-ம் ஆண்டுக்கு நாம் ரூ. 539 லட்சம் ஒதுக்கியும் கூட அதே 25 லட்சம் ரூபாய்தான் மத்திய அரசிலிருந்து உதவி வருகிறது. இந்த வருடம் ரூ. 20 லட்சம் அதிகமாக ஒதுக்கியிருப்பது, இந்த அரசு ஹரிஜன மக்கள் நலத்துக்காக எவ்வளவு பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு காரியம் செய்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கிறது. கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 1966–67-ல் ஏறத்தாழ 43 கோடி ரூபாயாக இருந்தது, 1970–71-ல் சுமார் 66 கோடியாக உயர்ந்திருக்கிறது. இவர்கள் ஆட்சிக்கு வந்தால், பள்ளிகளையும் கல்லூரிகளையும் மூடிவிடுவார்கள் என்றெல்லாம் 1967 தேர்தல் காலத்தில் பிரசாரம் செய்தார்கள். இலவசக் கல்வி கொடுத்தவர்கள் நாங்கள்தான் என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் இருந்த போது எஸ்.எஸ்.எல்.சி. வரை இலவசக் கல்வி இருந்தது. நாம் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு பி.யூ.சி. வரைக்கும் இலவசக் கல்வியைக் கொடுத்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல், பல புதிய கல்லூரிகளைத் திறந்து வைத்து, 23 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்கிறோம். அது போல் பசுமைப் புரட்சி ஏற்பட்டு வேளாண்மைத் துறையில் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாக, 1966–67-ல் 57·9 லட்சம் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி 1969–70-ல் 63 லட்சம் டன்னாக உயருகிற அளவுக்குப் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்யவேண்டுமோ அவைகளைச் செய்து அவர்கள் கஷ்டங்களைப் போக்கியிருக்கிறோம். 3 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமை எனக்கு நன்றாகத் தெரியும். இந்த நாட்டில் விவசாயிகளுக்கு உரம் கிடைக்காமலும் மற்ற விவசாயக் கருவிகள் எதைக் கேட்டாலும் கிடைக்காத அளவுக்கு எவ்வளவோ தொல்லைகளை விவசாயிகள் அனுபவித்து வந்தார்கள். அன்றைய தினம் உரம் வேண்டுமென்றால், கள்ள மார்க்கெட்டில் வாங்குகிற நிலைமையில் அதிலும் நல்ல உரம் கிடைக்காமல், கலப்பட உரம் என்று உப்பு மூட்டைகளை வாங்கிக்கொண்டு போனார்கள். இன்றைய தினம் எந்தக் கிராமத்துக்குச் சென்று பார்த்தாலும், எந்தப் பகுதிக்குச் சென்றாலும், விவசாயிக்குத் தேவையான உரம் கிடைக்கவில்லை என்ற குறைபாடில்லை. கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகச் சரியான முறையில் வினியோகம் செய்யப்பட்டு, அதன் காரணமாக விவசாயத்தில் இந்த நிலைமை ஏற்பட்டு ாட்டு மக்கள் பட்டினி கிடக்காத நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம். வாரத்தில் இரண்டு நாட்கள் பட்டினி இருங்கள் என்று சொல்கிற நிலைமையை நீக்கி எல்லோருக்கும் தேவையான அளவுக்கு உணவு கிடைக்கும் அளவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அது மட்டுமல்ல. கட்டுப்



பாட்டை நீக்கியிருக்கிறோம். எல்லா மாவட்டங்களுக்கும் தடையின்றி உணவு தானியம் செல்லும் அளவுக்கு எல்லோருக்கும் வெளி மார்க்கெட்டில் அரிசி கிடைக்கும் நிலைமையை உருவாக்கியிருக்கிறோம் என்றால், அவற்றுக்காக இந்த அரசை எதிர்க் கட்சி நண்பர்கள் பாராட்ட வேண்டாமா? அதற்குப் பதிலாக இன்றையதினம் விவசாயத்தில் குறைபாடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். வேளாண்மைத் துறையில் நீண்ட காலக் கடன்கள் கொடுப்பதற்கு 16 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுப்பது பற்றி, எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பல கிராமங்கள் மின் விளக்கையே பார்த்ததில்லை. அப்படிப்பட்ட கிராமங்கள் சுதந்திரநாட்டில் இருக்கக் கூடாது என்ற முறையில், எல்லா கிராமங்களுக்கும் அதிலும் குறிப்பாக ஹரிஜனங்கள் வாழுகிற பகுதிகளில், மின் இணைப்புக் கொடுக்கப்பட வேண்டும். மின் விளக்கு இல்லாத கிராமமே இருக்கக் கூடாது. இதை 1971 டிசம்பருக்குள் செய்தாக வேண்டும் என்று அரசு திட்டமிட்டு, அந்தப் பொறுப்பை அந்த இலாகா அமைச்சர் ஏற்றுக்கொண்டு மிக வேகமாகச் செய்து வருகிறார்கள். 1967–68-ம் ஆண்டில் 25,022 கிராமங்களுக்கு மட்டுமே மின்வசதி இருந்தது, 1970–71 இறுதிக்குள் 42,387 கிராமங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுவிடும். இதற்காகக் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து, வேகமாக மின் விளக்குகளைப் போடுவதற்கு ஏற்பாடு நடைபெற்று வருகிறது என்பதை நிதிநிலை அறிக்கை காட்டுகிறது.

கடைசியாக, இந்த நிதி நிலை அறிக்கையில் மிக முக்கியமாக எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும் பிரச்சினை நில உச்ச வரம்பாகும். நில உச்சவரம்பைப் பற்றிச் சிலர் எதிர்த்தாலும், பயனற்றது என்று சொன்னாலும், இதனால் பாதகமே தவிர நன்மை இல்லை என்று கணக்குக் காட்டினாலும் கூட, ஏழை மக்களால் அது வரவேற்கப்படுகிறது. ஏற்கனவே போடப்பட்ட சட்டங்கள் சரியான முறையில் இல்லை. காங்கிரஸ்காரர்கள் 30 ஏக்கர் என்று கொண்டுவந்தபோது, அது சரிவரச் செய்யப்படவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை "இது உச்சவரம்பு இல்லை, மிச்ச வரம்பு" என்று குறிப்பிட்டார்கள். காரணம், பல ஆண்டுகளுக்கு முன்பே இதுபோல சட்டம் வரப்போகிறது என்று அவர்கள் பகிரங்கப்படுத்தி சொத்து உள்ளவர்கள் அவற்றைப் பிரித்துத் தங்களுக்குள்ளே சரி செய்துகொள்வதற்கு இடமளித்தார்கள். பெரிய மிராசுதார்களும் நிலச்சுவான்தார்களும் எப்படிச் செய்யவேண்டுமோ அப்படிச் செய்து கொண்டார்கள். அவர்கள் எல்லாம் முடித்துவிட்டோம் என்று சொன்னதும், சட்டம் கொண்டுவந்தார்கள். இன்றைய தினம் நாம் வெளியே யாருக்கும் தெரியாத அளவில், ரகசியமாக இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். நிதிநிலை அறிக்கை வந்தவுடனே, எந்தக்காலத்திலிருந்து அது அமுலுக்கு வருமென்று கேட்டார்கள். அதற்கான சட்டம் உடனே கொண்டுவரப்படும் என்று பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நில உச்சவரம்புச் சட்டத்தைப் பாட்டாளி மக்கள், ஏழை விவசாயிகள் புரட்சிகரமான திட்டம் என்று சொல்கிறார்கள். இதைத் துணிவோடு இந்த அரசு நிறைவேற்ற முன் வர வேண்டுமென்று எல்லோருமே சொல்கிறார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லி என்.ஜி.ஓ.க்கள், பிற்பட்ட மக்கள், அரிசன மக்கள் எல்லோரும் பாராட்டி வாழ்த்துகிற இந்த பட்ஜெட்டை நானும் வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. திருஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக தமிழக சர்க்கார் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் என்னென்ன நன்மைகளை நாங்கள் செய்வோம் என்று வாக்குறுதி அளித்தார்களோ அவற்றை மெல்ல மெல்ல ஆனால் உறுதியோடு நிறைவேற்றி வருகிறார்கள். மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், அவை தமிழகத்திலே மிகமிகப் பின்தங்கிய மாவட்டங்கள். அந்த மாவட்டங்களில் வாழ்கிற மக்கள் மிகவும் பின் தங்கியவர்கள். அப்படிப்பட்ட பின்தங்கிய மக்களின் நலனைப் பேணுவதற்கு பிற்பட்டோர் நலக்குழு

[திரு. பி. திருஞானசம்பந்தம்] [6th March 1970

என்ற குழுவை அமைத்து, அதற்காக 1970–71 நிதிநிலை அறிக்கையில் பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கிய இந்த சர்க்காருக்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. இன்றைக்கு மதுரையில் கள்ளர் ரெக்ளமேஷன் என்ற பிரிவை ஆரம்பித்து, சில குறிப்பிட்ட இனங்களுக்கு, "டீ-நோட்டிஃபைடு டிரைப்ஸ்" என்ற பிரிவினருக்கு நன்மை செய்வதற்கு யோசித்து வருகிறது. அதில் கள்ளர் சமூகம்தான் நன்மை அடைய முடிகிறது. குறிப்பாக மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரை, முக்குலத்தோர் ரெக்ளமேஷனில் மறவர், கள்ளர், அகம்படியர் என்ற மூன்றிற்கும் நன்மை கிடைக்கும் அளவில் அதை இந்த அரசு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு பொறுப்பேற்ற மூன்று ஆண்டுகளில் மிகவும் உத்வேகத்தோடு விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல வழிகளில் இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்து வந்திருக்கிறது. 1970–71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளுக்குக் கடன்களுக்காகவும், பம்பு செட் வாங்கி வைப்பதற்கும் இன்னும் பிற இனங்களுக்கும் பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே போல கல்விக்கும் கடந்த மூன்று ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்த்தால், 20 ஆண்டு காலத்தில் ஒதுக்கியதை விட மிகவும் அதிகமாக ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. இங்கே பேசிய எதிர்க் கட்சி வரிசையிலுள்ள நண்பர்கள் 6 கோடி ரூபாய்க்கு வரிவிதித்திருப்பதை மிகவும் அநியாயம், அக்கிரமம் என்று கண்டித்துப் பேசினார்கள். ஆனால் 20 ஆண்டு ஆட்சியில் அவர்கள் எந்தெந்தப் பொருள்களுக்கு வரி போட்டார்கள் ? அதுவும் குறிப்பாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் மீது வரியைப் போட்டார்கள். அவர்கள்தான் இன்றைக்குப் பணக்காரர்களைப் பாதிக்கும்படி வரியைப் போட்டிருக்கும் நம்மைப் பார்த்து, அதிகமான வரியைப் போட்டுவிட்டீர்கள் என்று சொல்கிறார்கள். இதைக் கூறும்போது, பத்து பிள்ளை பெற்ற ஒரு தாயிடம் பிள்ளை பெருத மலடி சென்று மருத்துவம் கூறிய கதையாக இருக்கிறது. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் சொன்னபடி, அவர்களுடைய மனச்சாட்சி உண்மையிலேயே கண்டிப்பதற்குத் துணியவில்லை. கட்சிக் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட நிலையில்தான் அவர்கள் கண்டிக்கிறார்கள் என்று நான் எண்ண வேண்டியிருக்கிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எத்திராஜுலு அவர்கள் கடலூரில் தாக்கப்பட்டதைப்பற்றி வலியுறுத்திப் பேசினார்கள். ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சட்ட சபை அங்கத்தினர் தாக்கப்பட்டது வருத்தத்திற்கு உரியதுதான். ஆனால் காங்கிரஸ் கட்சி காலத்தில் இங்கே இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றவரும் அன்றைய தினமும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவருமான திரு. ராஜாங்கம் அவர்களை என்ன செய்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மாவட்டக் கலெக்டர் அவர் வீட்டிற்குச் சென்று வெளியே பதட்டமான நிலைமையிருப்பதாகவும், அதைத் தணிப்பதற்கு அவர் வந்தால் உதவியாக இருக்குமென்றும் அழைத்துச் சென்று, அவர் கலகத்தைத் தூண்டினார் என்று அவர் மீது கேஸ் போட்டு ரிமாண்டில் வைத்து எவ்வளவு கொடுமைப்படுத்தினார்கள் ? அதைப் பற்றி நாம் கூக்குரலிட்ட நேரத்தில், அப்போது ஆட்சியிலிருந்த பெரியவர்கள் மனம் துணிந்து இரக்கப்படுகிறேன், வருத்தப்படுகிறேன் என்று சொல்லக்கூட இல்லை. இன்றைக்கு பேரறிஞர் அண்ணா அவர்களின் வழி வந்த ஆட்சியின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிகழ்ச்சியைக் கேள்விப்பட்டவுடனேயே வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். பெருந்தன்மை உள்ளவர்களாக எதிர் வரிசையில் உள்ளவர்கள் இருந்தால், அவர்கள் தெரிவித்த..........



6th March 1970]

**திரு. எம். எத்திராஜுலு :** அவர்கள் சொல்லியதைப் போல, காங்கிரஸ் ஆட்சியில் கைது செய்து அழைத்துச் சென்றார்கள் என்பதுதான்......

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, இந்த விஷயம் சம்பந்தமாகப் பேச வேண்டாமென்று மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அப்போதே சொன்னார்கள். அதை முன்னிட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. ராசகோபால் கூட பேசும்போது அதை நிறுத்திவிட்டேன் என்று சொன்னார்கள். அந்த வழக்கு விசாரணையில் இருக்கிறது. ஆகையால் உறுப்பினர்கள் அதைப் பற்றிப் பேசாமல் இருக்கும்படி அமைச்சருடன் நானும் சேர்ந்து கேட்டுக்கொள்கிறேன். அதைப்பற்றி பேச வேண்டியவைகள் பேசியாகிவிட்டது. உறுப்பினர் திருஞானசம்பந்தத்தையும் இனி மேல் அதைப் பற்றிப் பேசவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்..

**திரு. பி. திருஞான சம்பந்தம் :** தலைவர் அவர்களே, இந்த நில உச்சவரம்பைப் பொறுத்தவரையில், இன்றைய தினம் தமிழ் நாட்டில் இருக்கிற மிகச் சாதாரண மக்கள் அனைவரும் இதனை வரவேற்கிறார்கள். ஆனால் அதை எதிர்க்கிறவர்கள் யார் என்றால், இப்படிப்பட்ட நில உச்ச வரம்பு வரும் என்று சற்றும் எதிர்பார்க்காது, அதன் காரணமாகப் பாதிக்கப்படுகிறவர்கள் தான் இன்றைய தினம் அலறுகிறார்கள். ஐயகோ இப்படிப்பட்ட நிலைமைகள் வரலாமா என்று கூக்குரலிடுகிறார்கள். இதற்கு முன்பிருந்த அரசாங்கம் நில உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டுவந்தது. ஆனால் எப்படிக் கொண்டுவந்தது என்பதைத் தயவுசெய்து இந்த மன்றத்தில் இருப்பவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். 10, 12 ஆண்டுகளாக நில உச்ச வரம்பு சட்டம் கொண்டுவரப்படும். நில உச்சவரம்பு சட்டம் கொண்டு வரப்படும் என்று தம்பட்டம் அடித்துவிட்டு, அதற்குப் பிறகு கொண்டு வரப்பட்டது. இன்னொன்றையும் நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் ரெக்கார்டுகளையும் பத்திரங்களின் விற்பனையையும் கணக்கெடுத்துப் பார்த்தால் இதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ளலாம். பெரும் பெரும் நிலச்சுவான்தாரர்கள் எல்லாம் தங்கள் நிலங்களைத் தங்கள் உறவினர்கள் பெயருக்கும் மற்றவர்கள் பெயருக்கும், தங்களுக்கு மிகவும் வேண்டியவர்கள் பெயருக்கும் பிரித்துக் கொடுத்துவிட்ட காரணத்தால், அப்போது அந்த நில உச்சவரம்புச் சட்டம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியடையவில்லை. ஆனால் இன்றைய தினம் தமிழக அரசு—திராவிட முன்னேற்றக் கழக அரசு—யாருக்கும் தெரியாமல், யாரும் சற்றும் எதிர்பாராத நேரத்தில், அந்த நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொண்டு வருவதற்காக இந்த சர்க்காருடைய தைரியத்தையும் விவேகத்தையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப்போல, இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி நண்பர்கள், "நிலத்திற்கு உச்ச வரம்பு கொண்டு வந்ததைப் போல், என் நகர்ப்புற சொத்துக்கு உச்சவரம்பு கொண்டு வரப்படவில்லை? என் பஸ் வைத்துக்கொள்ளுவதற்கு உச்சவரம்பு கொண்டுவரப்படவில்லை?" என்றெல்லாம் கேட்கிறார்கள். மிக நியாயமான கேள்விதான். எங்களைப் பார்த்து என் செய்யவில்லை என்று கேட்கிற நண்பர்களை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். 20 ஆண்டுகாலமாக ஆட்சி செய்து கொண்டிருந்தீர்களே, அப்போதெல்லாம் இவைகளை உங்களால் என் செய்ய முடியவில்லை என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நாடு 100 ஆண்டுக் காலமாக மாற்றானுக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. அதற்குப் பிறகு, 10, 18 ஆண்டுகளுக்கு முன்தான் சுதந்திரம் பெற்றிருக்கிறோம். அப்படிச் சுதந்திரம் பெற்று நாட்டில் சீர்திருத்தம் செய்வது என்பது சுலபத்தில் நடப்பதல்ல. இங்கே ஸ்ரீவில்லிபுத்தூர் என்று இருப்பதை திருவில்லிப் புத்தூர் என்று மாற்றுவது என்பதே பெரிய சர்ச்சைக்கும் எதிர்ப்புக்கும் உரிய பிரச்னையாகும்போது, பல புரட்சிகரமான மாற்றங்களை ஒரே நேரத்தில் செய்தால், அதனால் விரும்பத்தகாத விளைவுகள்தான் வரும் என்று யாரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். எதிர்க்கட்சியில் உள்ள நண்பர்கள் எங்களைப் பார்த்து, "என் இதைச் செய்யவில்லை ? என் அதைச் கொண்டுவரவில்லை ?" என்று கேட்கிறபோது இப்படிப்பட்ட

[திரு. பி. திருஞான சம்பந்தம்] [6th March 1970

புரட்சிகரமான திட்டங்களைத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒன்று தான் மிகத் தைரியமாகச் செய்ய முடியும் என்று நல்ல நம்பிக்கையிலே தான் இப்படிக் கேட்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். ஆகவே இந்தச் சர்க்கார் அதனுடைய திட்டங்களை, கொள்கைகளை, அது நில உச்ச வரம்பு பற்றியதானாலும் சரி அல்லது நகர்ப்புற சொத்துகளுக்கு உச்ச வரம்பு கொண்டுவருவதானாலும் சரி, அல்லது வேறு பல புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டுவருவதானாலும் சரி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிப்படி செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு தான், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், ஒரு மறுமலர்ச்சி, சாதாரண ஏழை எளிய மக்களிடம் ஒரு நல்ல எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில்தான் அந்த நம்பிக்கையை நாசமாக்காமல் இன்றைய தினம் ஆளும் பொறுப்பில் இருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் நல்ல பல திட்டங்களைப் போட்டுவருகிறார்கள். அந்தத் திட்டங்களுக்கு எல்லாம் நீங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எதிர்க்கட்சியின் மரபு குற்றங் குறைகளைச் சுட்டிக் காட்டுவது என்றிருந்தாலும், தாங்கள் செய்த நல்லவைகளையும் பாராட்ட வேண்டும். அப்போதுதான் எங்களுக்கு உற்சாகம் ஏற்படும் என்று நான் இன்றைய தினம் எதிர் கட்சியில் உள்ள நண்பர்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இறுதியாக, இந்த அமைச்சரவைக்கு என்னுடைய பாராட்டுதல்களையும் வணக்கத்தையும் தமிழ்நாட்டு மக்களின் சார்பில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரி ஆற்று நீர்ப் பிரச்னையில் ஒரு மாபெரும் வெற்றியை இந்த அமைச்சரவை ஈட்டித் தந்திருக்கிறது. அதற்காகவும் நான் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் கூறி முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. டி. கே. ஷண்முகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, **1970-71**-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு எனக்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறிக் கொள்ளுகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மதியழகன் என்ற பெயரைப் படைத்தவர்கள். அவருடைய பெயருக்கு ஒப்ப, மிகுந்த மதி நுட்பத்தோடும், ஆழ்ந்த சிந்தனையோடும், அறிவுத்திறனோடும் நன்கு ஆராய்ந்து இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். மனப்பூர்வமாக இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன். முக்கியமாக எந்த வரிகள் போட்டாலும், ஏழை மக்களை அது பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பது எல்லோரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும். இப்போது போட்டிருக்கிற வரிவிகிதங்கள் ஏழை எளிய மக்களைச் சிறிதும் பாதிக்காத முறையில் இருக்கின்றன என்பதை நான் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் முதன்மையான தொழில்—ஏன், இந்தியாவுக்கே முதன்மையான தொழில்—வேளாண்மையாகும். அந்த வேளாண்மைத் தொழிலில் மிகப் பெரிய புரட்சிகரமான ஒரு திட்டத்தை தமிழக அரசு இப்போது கொண்டு வந்திருக்கிறது என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்தத் துறையில் தமிழக அரசு செய்திருக்கும் புரட்சியை "வேளாண்மைப் புரட்சி" என்று நாம் தாராளமாக அழைக்கலாம். ஔவைப் பெருமாட்டி உழவுத் தொழிலின் மேன்மை குறித்துச் சொல்லிய பாடல் ஒன்று என் நினைவுக்கு வருகிறது :—

"ஆற்றங்கரையின் மரமும், அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே —ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு."



6th March 1970] [திரு. டி. கே. ஷண்முகம்]

என்று சொல்லியிருக்கிறார். ஔவைப் பெருமாட்டி உழவுத் தொழில் பற்றி இந்த ஒரு வெண்பாவை மட்டும் பாடவில்லை. எத்தனை எத்தனையோ கருத்துக்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய திருவள்ளுவப் பெருந்தகை 10 குறட்பாக்களில் மிக அழகாக உழவைப் பற்றி சிறப்பித்துப் பாடியிருக்கிறார். இவற்றையெல்லாம் நன்குணர்ந்திருப்பதால்தான் தமிழக அரசினர் உழவுத் தொழிலில் ஒரு மாபெரும் புரட்சியைச் செய்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

முப்பது ஏக்கரிலிருந்து 15 ஏக்கராக நில உச்ச வரம்பைக் குறைத்திருக்கிறார்கள். இதை உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் கிடைத்த மிகப் பெரியதொரு வரப்பிரசாதமாக நான் கருதுகிறேன். இதைப்பற்றி இங்கே அன்பர்கள் பலர் புள்ளி விவரங்களை எடுத்துக்காட்டி மிக அழகாகப் பேசினார்கள். எனது மதிப்பிற்குரிய நண்பர் மாண்புமிகு திரு சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள் பேசியபோது, நான் நன்கு கவனித்தேன். அவர்கள் விவசாயத் துறையில் தன்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர் என்ற காரணத்தால், மிக அழகாகப் புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டி எவ்வளவு பெரிய புரட்சியை ஆட்சியாளர்கள் செய்திருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டினார்கள். எனவே அதைப்பற்றி என்னைப் போன்றவர்கள் அதிகமாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன். என்னைப் பொறுத்த வரையில், பணம் படைத்தவர்களுக்கு இது பாதகமான ஒரு வரவு-செலவுத் திட்டம். ஆனால், ஏழை எளிய மக்களுக்கு இதை விட ஒரு அருமையான வரவு-செலவுத் திட்டத்தை வேறு யாரும் தீட்டியிருக்க முடியாது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். நிலவள வங்கிகள், மற்றும் வேளாண்மை வளர்ச்சிக்குரிய பல திட்டங்கள் இவற்றையெல்லாம் பார்த்தால், மிக அருமையாக ஆழ்ந்து சிந்தித்து இந்தத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள் என்பது புலப்படும். இந்த நிதி நிலை அறிக்கையை முழுதும் நன்றாகப் படித்துப் பார்த்தால், தமிழ்நாட்டில் இந்த வேளாண்மைத் திட்டத்தின் மூலம் ஒரு பொற்காலம் உருவாகி வருகிறது என்றே நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, அரசு ஊழியர்களுக்கு சிறப்பு ஈட்டிப்படியாக ரூபாய் 10 வழங்கியிருப்பதும், ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதிகள், திருமணக் கடன், இவைகள் எல்லாம் கொடுத்திருப்பதும் தமிழக அரசின் நல்லெண்ணத்தை நன்கு எடுத்துக்காட்டுகிறது என்றே நான் கருதுகிறேன்.

வரி விகிதங்களை எடுத்துப் பார்த்தால், வானொலிப் பெட்டி, கடிகாரம் இவற்றிற்கு எல்லாம் வரி போட்டிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஏழை எளிய மக்கள் வாங்கிப் பயன்படுத்துகிறார்கள் என்பது உண்மை தான். சாலையோரங்களில் வசிப்பவர்களிடத்திலும் குடிசை வாழ் மக்களிடத்திலும்கூட இன்று டிரான்ஸிஸ்டர் ரேடியோக்கள் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் அவர்கள் அகில உலக செய்திகளைக் கேட்பதற்காக அவற்றை வாங்கி வைத்திருக்கவில்லை. பெரும்பாலும் திரைப்படப் பாடல்களைக் கேட்பதற்காகவே அவற்றை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் பல இடங்களில் இதுபற்றிக் கூர்ந்து கவனித்திருக்கிறேன் ; சென்னை நகரில் மட்டுமின்றி, பெரும்பாலும் எல்லா இடங்களிலும் மக்கள் விரும்பிக் கேட்பது திரைப்படப் பாடல்களைத்தான். கலைஞன் என்ற முறையில் இதைச் சற்று அழுத்தமாகவே இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இப்படிப்பட்ட சாதனங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்களா என்று பார்த்தால், இல்லையென்பது தெளிவு. இன்றியமையாதவை உணவுப் பொருட்கள் தாம். இவையெல்லாம் பொழுதுபோக்கிற்காக உள்ள கேளிக்கை பொருட்கள். எனவே, இவற்றின்மீது சற்றுக் கூடுதலாக வரி விதித்திருப்பது நாமெல்லாம் வரவேற்கக்கூடிய அம்சமாக இருக்கிறதேயன்றி, கண்டிக்கத்தக்கதாக இல்லை. இருக்கும் அதிகாரங்களை வைத்துக்கொண்டு இவ்வளவு அற்புதமான ஒரு நிதி நிலை அறிக்கையைத் தயாரித்திருப்பதற்காக நான் அமைச்சரவையை மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். பெரும் அளவுக்கு வரிகளைப் போடுவதற்குரிய அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசிடம் இருக்

கின்றன. நமக்கு இருக்கக்கூடிய அதிகாரங்கள் மிகவும் குறைவானவை. அவற்றை வைத்துக்கொண்டு இவ்வளவு பெரிய சாதனைகளைச் செய்து காட்டுவது பாராட்டத்தக்கதாகும்.

அடுத்து, அண்மையிலே திருச்சியிலே நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிலே நமது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஒரு கோஷம் கொடுத்தார்கள்; "மாநிலத்தில் சுய ஆட்சி, மத்தியிலே கூட்டாட்சி" என்று. இது தமிழ் அரசுக் கழகத்தினராகிய எங்களுக்கு தேனாக இனிக்கும் திவ்வியமான ஒரு கோஷம் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் கழகம் தோன்றிய காலத்திலிருந்து பல மேடைகளிலும் மாநாடுகளிலும் இந்தக் கோஷங்களை நாங்கள் முழக்கிவந்து இருக்கிறோம். மாநில சுய ஆட்சியின் பேராலேயே மாநாடு நடத்தியிருக்கிறோம். அப்படி நாங்கள் கூட்டிய மாநாடுகளிலேயெல்லாம் இந்தக் கோரிக்கையை வற்புறுத்தி யிருக்கிறோம். இது தமிழரசுக் கழகத்தின் லட்சியக் கொள்கையாக இருக்கிறது. எங்கள் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள், மாநில சுய ஆட்சியைப் பற்றி தனியாக நூல்கள் எழுதியிருக்கிறார்கள். சென்ற ஆண்டில் நாங்கள் இது சம்பந்தமாக நடத்திய அடையாளப் போராட்டத்தைத் தமிழகம் அறியும். அந்த இலட்சியம், அந்தக் குறிக்கோள் திராவிட முன்னேற்றக் கழகத்தின், இன்றைய அரசின் கோஷமாக மலர்ந்திருக்கின்றது என்பதைப் பார்க்கும்போது, எங்களுடைய உணர்ச்சி விவரிக்க இயலாத ஒன்றாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விழைகிறேன். ஒரு காலத்தில் பஞ்சாபிஸ்தான் கேட்கப்பட்டது அகாலி தளத்தினரால். அகாலி தளத்தின் தலைவர் மாண்புமிகு குர்நாம் சிங் அவர்கள் திருச்சி மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்கள் பத்திரிகை நிருபர்களிடத்தில் பேசும்போது, இன்று எங்கள் கொள்கை மாநில சுயாட்சிக் கொள்கைதான் என்று சொன்னார்கள். எல்லை காந்தி என்று அன்புடன் அழைக்கப்படும் கான் அப்துல் காபர்கான் அவர்கள் அண்மையிலே நமது நாட்டில் பல இடங்களிலே சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். அவர்கள் ஒரு காலத்தில் பாகிஸ்தானத்திலிருந்து பக்தூனிஸ்தான் பிரிய வேண்டும் என்று கோரி வந்தார்கள். அவர்கள் தம்முடைய சுற்றுப் பயணத்தின்போது பல இடங்களிலே மாநில சுய ஆட்சிக் கோரிக்கையை வற்புறுத்திப் பேசியிருக்கிறார்கள். காசுமீர் சிங்கம் என்று அழைக்கப்பட்ட ஷேக் அப்துல்லா அவர்களைப்பற்றி நாம் அனைவருமே அறிவோம். அவர்கள் காசுமீரிதான் வேண்டும் என்று கேட்டார்கள். இப்போது பத்திரிகைச் செய்திகளைத் தொடர்ந்து படித்து வருவதிலிருந்து அவர்களுடைய கோரிக்கையும் மாநில சுய ஆட்சிக் கோரிக்கைதான் என்பதை ஒருவாறு புரிந்துகொண்டிருக்கிறேன். நமது திராவிட முன்னேற்றக் கழகத்தார் ஒரு காலத்தில் திராவிட நாடு வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தது நமக்குத் தெரியும். ஆனால், நாட்டின் நிலைமைகளை நன்கு உணர்ந்துகொண்ட மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தப் பிரிவினைக் கொள்கையை அறவே கைவிட்டு விட்டு மாநில சுய ஆட்சிதான் தங்களுடைய கோஷம் என்று அவர்கள் கடைசியில் எழுதிய உயில் என்று சொல்லப்பட்ட அவரது 'காஞ்சி' இதழில், "தம்பி, இனி மாநில சுய ஆட்சிதான் நமது கொள்கையாக இருக்க வேண்டும்" என்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இவ்வாறு "மாநிலங்களில் சுய ஆட்சி; மத்தியில் கூட்டாட்சி" என்று நமது கலைஞர் அவர்கள் இட்ட கோஷம், இன்று பாரதம் முழுவதுமே பல்வேறு மாநிலங்களில் பேசப்பட்டு வருவதைப் பார்க்கும்போது, பெருமகிழ்ச்சி ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு தங்கபாண்டியன் என்று நினைக்கிறேன், அவர்கள் குறிப்பிட்டார்கள், ஆங்கில நிபுணர் ஒருவர் அவர் பெயர் எனக்கு நினைவில்லை, நானும் பத்திரிகையில் பார்த்தேன், மாநில சுய ஆட்சிக் கோரிக்கையை வரவேற்று "அது ஒன்றுதான் இந்திய ஒருமைப்பாட்டிற்கு உகந்தது" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லியிருக்கிறார். இது தமிழரசுக் கழகத்திற்கு மிக மிக மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாகும் தலைவர் அவர்களே, நான் உண்மையாக நம்புகிறேன்; மாநில சுய ஆட்சிக் கோரிக்கையைப் பெறுவதற்கு நான் திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் பரிபூர்ணமான நம்பிக்கை



வைத்து இருக்கிறேன்; அவர்களால் தான் இதைப் பெற முடியும் என்றும் கருதுகிறேன். எனவேதான் அவர்களை நாங்கள் முழு மனத்தோடு ஆதரிக்கிறோம். ஆனால் இந்த இலட்சியத்தை மிக எளிதாக அடைந்துவிட முடியும் என்று நாங்கள் நம்பவில்லை. ஏன் என்றால், நீண்டகாலம் அதிகாரம் செலுத்திக்கொண்டிருந்தவர்கள், அதிகார போதையில் மயங்கிக் கிடந்தவர்கள் அவர்கள். எனவே, இந்தக் கோரிக்கைக்கு அவ்வளவு எளிதாக ஒப்புதல் அளித்துவிடமாட்டார்கள். போராடித்தான் பெற்றாக வேண்டும். அந்தக் கடுமையான போராட்டத்தைத் தமிழரசுக் கழகம் மிக ஆர்வத்தோடு எதிர்பார்த்துகொண்டிருக்கிறது. மாநில சுய ஆட்சிபற்றிய மூவர் குழுவின் கேள்வித்தாள் எனக்கு வந்திருக்கிறது. வழக்கம்போல அது ஆங்கிலத்தில் வந்திருக்கிறது. தமிழிலும் வரும் என்று சிறிய குறிப்பு அதில் காணப்படுகிறது. தமிழில் அது விரைவில் கிடைக்கும் என்று நான் விரும்புகிறேன். எவ்வளவு சீக்கிரத்தில் அது வருகிறதோ, அவ்வளவு விரைவில் எங்கள் பதிலையும் அளிப்போம் என்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, நாடகக் கலைஞன் என்ற முறையில், "தாகூர் நாடக அரங்கத்" தைப்பற்றி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். முன்னமே வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் இதைப்பற்றி வற்புறுத்திப் பேசியிருக்கிறேன். பத்தாண்டு காலம் ஆகின்றது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டிலேயே குறிப்பிட்டார்கள், "அதன் வேலைகள் தொடங்கிவிடும்" என்று. ஆனால், வேலை தொடங்கப்படவில்லை. அரசு வெளியிட்டுள்ள இந்த ஆண்டின் குறிப்பேடுகளில் அதுபற்றிய செய்தி ஒன்றையும் காணோம் என்பதைப் பார்க்கும்போது, "அந்த அரங்கம் தோன்றுமா?" என்ற கேள்விக் குறியை எழுப்பிக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. பல இலட்சம் ரூபாய் செலவழித்தும் கூட இப்போதும் அது கிரிம்ஸ் சாலையில் அனாதையாக நின்று கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இதை மதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என் கடமையாகும்.

அடுத்து, "கலைத்துறைக்கு என்றே ஒரு அமைச்சர் வேண்டும்" என்று முன்பு வெளியிட்ட கோரிக்கையை நான் மீண்டும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** கலைத் துறைக்கு நானே இருக்கிறேனே!

**திரு டி. கே. ஷண்முகம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அந்தத் துறைக்கு "நானே இருக்கிறேன்" என்று மிக ஆர்வத்தோடு குறிப்பிட்டார்கள். கலைத் துறைக்கு அமைச்சராக இருப்பதற்கு அவரைவிடத் தகுந்த ஒருவர் கிடைப்பார் என்று நான் நம்பவில்லை. ஆனாலும் இன்றைக்கு அவர்கள் ஏற்றுள்ள பொறுப்புகளின் இடையிலே, நாடகம், இசை, நடனம், சிற்பம், ஓவியம் போன்ற கலைத்துறை சம்பந்தப்பட்ட விஷயங்களையும் ஏற்பது சடினமாக அமையும் என்றே நான் கருதுகிறேன். கலைத் துறைக்கு என்று தனியாக ஒருவர் இருந்தால் அவர் அதில் முழு கவனத்தையும் செலுத்த முடியும் என்று கருதுகிறேன். அப்படித் தனியாக ஒரு அமைச்சர் இருந்தால் கூட அவரும் கலைஞர் அவர்களுடைய மேற்பார்வையில் தானே இருக்கப் போகிறார். எனவே, இப்படி தனியாக ஒரு அமைச்சரை ஏற்படுத்தித் தந்தால், எங்களுடைய குறைகளை அடிக்கடி எடுத்துச்சொல்லுவதற்கும் அவர்களை அணுகிப் பேசுவதற்கும் நல்ல வசதியான வாய்ப்புகள் ஏற்படும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

அது மாத்திரம் அல்ல. கலைத் துறைக்கு நம் தமிழகத்தில் உயரிய மதிப்பு உண்டு. பேரறிஞர்கள், வெளிநாட்டவர்கள் எல்லாம் தமிழகத்தின் கலைத் துறையைப்பற்றி மிகச் சிறப்பாக புகழுரை கூறியிருக்கிறார்கள். தமிழகம் கலைகளின் பிறப்பிடம் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சிறப்பு நமக்கு இருப்பதால், தமிழக அமைச்சரவையிலே கலைத்துறை

அமைச்சர் இருக்கிறார் என்ற பெருமையும் நமக்கு வேண்டுமென்றும், அதை மீண்டும் முதல்வர் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்றும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கலைஞர் அவர்களுக்கு இடையறாது அலுவல்கள் இருக்கின்றன. இந்த நேரத்திலே கூட அவர்கள் நாடகப் பணியிலே ஈடுபடுகிறார்கள். 'வெள்ளிக்கிழமை' நாடகத்திற்கு இந்தத் தொல்லைகளுக்கு இடையே உரையாடல்கள் எழுதியிருக்கிறார்கள். திரைப்படத்திற்கும் உரையாடல் எழுதுவதற்கு ஒப்புக்கொண்டு அந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள் என்றாலும்கூட, கலைத் துறைக்குத் தனியாக அமைச்சர் வேண்டுமென்ற எனது கோரிக்கையை மீண்டும் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் அரிய செல்வம். அனைவரும் அதை நன்றாக உணர்வார்கள். அவர் குளிர்பதன காரில் போவதை யாரோ சிலர் குறை கூறினார்களாம். அப்படியானால் அந்தக் கார் வேண்டாம் என்று கலைஞர் சொல்வதாக நான் கேள்விப்பட்டேன். அவர் வாழ்வு தமிழ்நாட்டின் வாழ்வு. தமிழ்நாட்டின் அரிய கருவூலம் அவர். அவருடைய தேவைக்கு உடல் நலத்திற்கு எது வேண்டுமானாலும், அதைக் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். மற்றவர்கள் பேச்சுக்களை எல்லாம் அவர்கள் கவனத்தில் கொள்ளக் கூடாது. அவர்கள் இடத்தில் இருக்கக் கூடிய ஒரு அசூயையின் காரணமாக சிலர் ஏதாவது சொல்வார்கள். அமைச்சர் என்ற முறையில் அவர் உடல் நலத்துக்குத் தேவைப்படும் அனைத்தையும் கண்டிப்பாக செய்துகொள்ளவேண்டுமென்று இந்த மன்றத்தின் சார்பில் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரைப்படத் துறைக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும் ஒரு சிறிய வேண்டுகோள் இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். திரையிடப்படும் நல்ல படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிப்பதென்பது ஒரு நல்ல பழக்கம். அந்த நல்ல பழக்கத்தைச் செயலாற்றக்கூடிய வாய்ப்பு தமிழகத்திற்கு இன்னும் ஏற்படவில்லை. வேறு மாநிலங்களிலும் அந்த வாய்ப்பு ஏற்பட்டு பல படங்களுக்கு வரி விலக்கு அளித்து வந்த செய்திகள் எல்லாம் நாம் அறிவோம். தமிழ்நாட்டுக்கு மட்டும் அந்த வாய்ப்புக் கிட்டவில்லை. தமிழரசு வந்த பிறகு திரைப்படத் துறைக்கு பரிசுகள் வழங்கி பாராட்டு அளிப்பது போல், கேளிக்கை வரியிலிருந்து சில படங்களுக்கு விலக்கு அளிப்பதாலே தமிழகம் மேலும் முன் அணியில் வரவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். அண்மையிலே கன்னட மாநிலத்தில் "நம்ம மக்களு" என்ற படத்துக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டதாக அறிந்தேன். நம் தமிழகப் பேராசிரியர் எழுதிய கதை அது என்பது மகிழ்ச்சிக்குரியது. தமிழ்ப்படங்களுக்குப் பரிசளிப்பு என்பது வேறு. கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிப்பது வேறு. படங்களுக்குத் தேர்வுக்குழு அமைத்து சீரிய முறையில் பரிசுகள் அளிக்கிறார்கள். கேளிக்கை வரி விலக்கு உட்படக்கூடிய படம் பரிசு பெறாமலே கூட போகலாம்..."ஸ்ரீகிருஷ்ணதேவராயர்" என்னும் வரலாற்றுப் படத்துக்கும் கன்னட மாநிலத்தில் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளித்திருப்பதாக இப்போது தான் இந்த மன்றத்துக்கு வரும்போது செய்தி பார்த்தேன். எனக்கு மிக மகிழ்ச்சியாக இருந்தது. தமிழ்நாட்டில் ஔவையார், வீரபாண்டிய கட்ட பொம்மன், கப்பலோட்டிய தமிழன் ஆகிய படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டுமென்று அன்று ஆட்சியிலிருந்த சர்க்காருக்கு நாங்கள் வேண்டுகோள் விடுத்தோம். ஆனால் கலைத் துறையிலே அவர்கள் ஆழ்ந்த கவனம் செலுத்தாத காரணத்தால், எங்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கவில்லை. பதில்கூட வரவில்லை. இப்பொழுது நம்முடைய சி.என்.வி. படத் தயாரிப்பாளர்கள் வெளியிட்ட "வா ராஜா வா" என்ற படம் கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்படுவதற்குரிய வகையிலே எல்லாத் தகுதிகளும் வாய்ந்த சிறந்த படம் என்று நான் கருதுகிறேன். குழந்தைகள் பார்க்கத் தகுந்த மிக நல்ல படம். நட்சத்திரங்கள் யாருமே பங்கு எடுத்துக் கொள்ளாத, நல்ல அறிவுரைகள் நிறைந்த படம். சுற்றுலா வளர்ச்சிக்கும், குடும்ப நலத் திட்டத்துக்கும் நன்கு பிரசாரம் செய்யக்கூடிய மிக அருமையான படம். தமிழ்ப் பண்பாட்டை உயர்த்தக் கூடிய படம்.



முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த படத்தைப் பார்த்திருக்கிறார்கள் பாராட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் தனிப்பட்ட முறையில கடிதம் எழுதினேன். தயாரிப்பாளர் சார்பிலும் விண்ணப்பம் விடுத்துள்ளதாக அறிகிறேன். அதுபற்றி அமைச்சரவை நன்கு ஆராய்ந்து முடிவு எடுத்து கேளிக்கை வரியிலிருந்து அதற்கு விலக்கு அளிக்குமானால், கலைத்துறைக்கு மேலும் ஊக்கமும் உற்சாகமும் அளிப்பதாகும் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். வரி விலக்கால் பட அதிபர்களுக்கு லாபம் ஒன்றும் அதிகமாக வந்து விடாது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். பண்பாட்டுக்குரிய ஒரு நல்ல படத்தை மக்கள் அதிகமாகப் பார்ப்பதற்கு இது வாய்ப்பாக இருக்கும் என்பதாலேயே இந்த வேண்டுகோளை சமர்ப்பிக்கிறேன். இப்போது டிக்கட்டில் கட்டணத்தை வேறாகவும், வரியை வேறாகவும் தான் குறிப்பிடுகிறார்கள்; வரி விலக்கு நாம் அளித்தோமானால், அந்த டிக்கட்டிலேயே "வரி விலக்கு அளிக்கப்பட்ட படம்" என்று முத்திரை குத்தி மக்களுக்கு அந்தப் பணம் லாபமாக கிடைக்கும். அதிகமான மக்கள் பார்ப்பதற்கு வாய்ப்பும் ஏற்படும். பட அதிபர்களுக்கு ஒரு புகழ் கிடைக்கும்; அரசு பாராட்டக்கூடிய, நாட்டுக்குத் தேவையான ஒரு நல்ல படத்தை எடுத்தோம் என்று மன நிறைவு ஏற்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்த சீட்டுக்கு எவ்வளவு குறைப்பு என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**திரு. டி. கே. ஷண்முகம்:** அந்த ஆராய்ச்சியிலே நான் ஈடுபடவில்லை. ஆனால் எனக்குத தெரியும், வரி விகிதத்தைத் தனியாகப் போடுகிறார்கள். கட்டணத்தைத் தனியாகப் போடுகிறார்கள். கன்னட மாநிலத்தில் நான் கூறிய முறையில்தான் கேளிக்கை வரி விலக்கு அளிக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.கே.எஸ். அவர்கள் இந்த கேளிக்கை வரியிலிருந்து சிறந்த படங்களுக்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று கூறினார். சிறந்த படங்களைத் தமிழக அரசு மதிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு கூறுகிறார்கள். சிறந்த படங்களை தமிழக அரசு மதித்து அதற்குப் பரிசு வழங்கியிருக்கிறது. இப்போது நிதி நிலையின் காரணமாக அந்தக் கோரிக்கையை அதிகமாக வற்புறுத்தாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. டி. கே. ஷண்முகம் :** நான் முன்பே குறிப்பிட்டேன். கேளிக்கை வரி விலக்கு வேறு. இப்போது படத்திற்கு பரிசு அளிப்பது வேறு என்று.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சிறந்த படங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு செய்தால், சிறந்த படங்களுக்கு நல்ல வசூல் ஆகிறது. அதனால் கேளிக்கை வரி அதிகமாக வருவதை இழக்க நேரிடும்.

**திரு. டி. கே. ஷண்முகம் :** நிதி நிலையை உத்தேசித்து இது இப்போது சாத்தியம் அல்ல என்று முதல் அமைச்சர் கூறுவதிலே எனக்கு உடன்பாடு இருந்தாலும், தமிழ் மாநிலத்துக்கு இந்தப் பெருமையும் கிடைக்கவேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். மற்ற மாநிலங்களிலே, பல ஆண்டுகளுக்கு முன்பே படோசி, தீவார் போன்ற பல்வேறு படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறார்கள். இவ்வாறு திரைப்படங்களுக்குத் தனியாகவும், நாட்டை வளர்க்கும் நல்ல படங்களுக்குக் கேளிக்கை வரி விலக்கும் மற்ற மாநிலங்கள் அளிக்கும்போது கலைத் துறையில் சிறப்புமிக்க தமிழகத்துக்கு ஏன் இந்த சிறப்பு கிடைக்கக்கூடாது என்பதுதான் என் கருத்து. எனது வேண்டுகோளை அமைச்சரவை நன்றாகப் பரிசீலிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, நிதி நிலை அறிக்கையை மகிழ்வுடன் வரவேற்று இந்த அளவோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ.பி. ஜனார்த்தனம் :** தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே நல்ல தமிழ் கொஞ்சி விளையாடுகிறது. இத்தகைய சொற்கள் வரவேண்டுமென்று பல ஆண்டுகளாக நாங்கள் கனவு கண்டிருந்தோம். நாவலர் குறிப்பிட்டதுபோல், கண்ணீரும் செந்நீரும் சிந்தியவர்கள். மாநாடு என்று குறிப்பிட்ட நேரத்தில், அது மாடுகள் கூடும் இடம் என்று கேலி பேசியவர்களை எனக்கு தெரியும். தமிழ்ப் புலவர்களுக்கு மாதம் 30 ரூபாய் சம்பளம் போதும் என்று முழங்கிய தேசிய பீரங்கிகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். தமிழுக்கு ஒரு வாழ்வு கொடுத்து, குறிப்பாக, "தோற்றுவாய்", "ஏற்றத்தாழ்வுகள்", "குவியல்", "நிலைக்குழு", "எய்தியது முன்னேற்றம்", "வேளாண்மை", "மேம்பாட்டு ஆறு கழகம்", "பால்பண்ணை", "வாரியம்", "மீன் அளம்", "திருத்த மதிப்பீடு" போன்ற இவ்வளவு சொற்களைக் கண்டு பூரிக்கிறேன். 2,000 ஆண்டுகளாக மாசுகளை ஏற்ற தமிழ்த்தாய் உயிர் ஊட்டம் பெறுவாள் என்று மிகவும் மகிழ்ச்சி அடையும் தமிழ் சிட்டுக்கள் பூரிப்பால் துள்ளிக் குதிக்கிற நாள்.

அடுத்து, இந்த அரசு என்னென்ன நன்மைகளைச் செய்ய இருக்கிறது என்பதை நமது நிதியமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அரசு ஊழியர்களுக்கு 10 ரூபாய் ஈட்டுப்படியாக அதிகமாகத் தருகிறோம் என்பதைக் குறிப்பிட்டார்கள். அரசு ஊழியர்கள் என்னென்ன பாடு பட்டார்கள் என்பதை எல்லாம் நாங்கள் அறிவோம். ஒரு காலத்தில் அரசு ஊழியர்களின் தலைவராக திரு ஜகதீசய்யர் இருந்தது எனக்கு கவனம் இருக்கிறது. அப்போது சேப்பாக்கத்தில் தங்கள் குறைகளைக் கூற ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அந்தக் கூட்டத்துக்கு நானும் சென்றிருந்தேன். அங்கே வீசப்பட்ட கண்ணீர்ப்புகைக் குண்டுகளினால் சிதறி ஓடி பக்கத்திலிருந்த கால்வாயில் விழுந்தவர்கள் ஏராளம். அத்தனை காட்சிகளையும் நேரில் கண்டிருக்கிறோம். நம்முடைய கலைஞர் அவர்களுக்கு மோப்பம் பிடிக்கிற சக்தி மிக மிக அதிகம். எதிரிகள் எதைப் பிடித்துக் கொள்வார்கள் என்பதை "பிளட் ஹவுண்ட்" (blood hound) போல் மோப்பம் பிடித்து முன்னாலேயே தெரிந்து கொள்கிறார்கள், மென்னியைப் பிடித்து விடுகிறார். கட்டைகளை எதற்காக எடுக்கிறார்கள், எதற்காக தீ மூட்டுகிறார்கள் என்று கண்டு பிடித்து, உடனே "பயர் எக்ஸ்டிங்ஷன்" என்று சொல்லுவது போல் தீ அணைப்பு வேலையில் ஈடுபட்டு, கிளர்ச்சிகளை வளர விடாமல், போராட்டங்களை அங்கேயே அடக்கி, யார் யார் பாதிக்கப்பட்டார்களோ, அவர்களுக்கு அவ்வப்போது நிவாரணம் தருவதிலே மிக விரைந்து செயல் படுகிறார். அப்படிப்பட்ட ஒரு முதலமைச்சரைப் பெற்றதில் நாமெல்லாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

அடுத்து, இந்த நிதி நிலை அறிக்கையில் இந்த சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் பொருளாதாரத் துறையில் இருக்கிற மோதல்களை குறித்தும், அந்த சர்க்கார் பெருளாதாரத் துறையில் எப்படி எல்லாம் நடந்து கொள்கிறது, ஓரவஞ்சனைகள் செய்கிறது என்பதைக் குறித்தும், எப்படி நம்முடைய பொருளாதாரக் கொள்கை குறித்த பெரும்பாலான முடிவுகள் புது டில்லியிலும் பம்பாயிலும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதைக் குறித்தும், நிதி வாயில்களைத் திரட்டும் அதிகாரம் பெருமளவில் மத்திய அரசிடம் இருக்கிறது என்பதைக் குறித்தும் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் 30 ஆண்டு காலமாக இதற்காகப் பேசி வந்திருக்கிறோம். பார்கின்ஸன் போன்றவர்கள், கேரளத்தைச் சேர்ந்த சேஷன் போன்றவர்கள் எங்களுக்கு அடிக்கடி ஆதரவு தருகிறார்கள். நாங்கள் சொன்னால் பரம்பரை எதிரிகள் ; நாங்கள் சொன்னால் வயிற்றெரிச்சல்காரர்கள் ; நாங்கள் சொன்னால் வேண்டுமென்றே பேசுபவர்கள் ; நாங்கள் சொன்னால் தேசத்துரோகப் பரம்பரையினர். ஆனால் சொன்ன சேஷன் யார்? அவர் எடுத்துக் காட்டியுள்ளார்; பீகார், உத்தரப்பிரதேசம், குஜராத், பாஞ்சாலம், அரியானா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களுக்கு மானியமாக 1,300 கோடி





ரூபாய் தரப்பட்டிருக்கிறது என்பதையும் அதில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். எங்களுக்கு இருக்கிற சிறப்பு எல்லாம் நாங்கள் சற்று முன்னாலே சொல்லுகிறோம். 10 ஆண்டுகள் 20 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து கேட்ட கல்லக்குடி இப்போது வழங்கப்பட்டது. பல ஆண்டுகள் கழித்தாவது தெளிவு வருகிறது, வழி பிறக்கிறது. அது எங்களுக்கு நல்ல உற்சாகத்தைக் கொடுக்கிறது.

அடுத்து, வறட்சியின் அறைகூவலைச் சமாளித்தோம் என்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வறட்சி துயர் துடைப்பு வேலைகளில் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைத்தது, எவ்வளவு ஆக்கப்பணிகள் நிறைவேறின என்று நாடு நன்கு அறிந்திருக்கிறது.

அடுத்து, தமிழகம் மின் வசதியில் முன்னணியில் நிற்கிறது ; எனவே அதற்குரிய பாராட்டுகள் பல இடங்களிலிருந்து கிடைக்கின்றன. 1970-71க்குள் 42,387 கிராமங்களுக்கு மின்வசதி அளித்து விடுவோம் என்ற அமைச்சரின் உறுதியை நான் மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். சேலம் உருக்காலைத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் கஞ்சமலையில் முதல் சுரங்கத்தை வெட்டும் பணியைத் தொடங்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இதற்காக நாங்கள் பேசி, தொண்டை வறளக் கத்தி, அதற்காகக் கூட்டம் சேர்த்து, அதற்காகக் கிளர்ச்சி நடத்தி, பல ஆண்டுகளாக இருக்கிற ஒரு பிரச்சினைக்கு விடிவு ஏற்படுவது குறித்து நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன். கல்வி வருங்காலத்துக்கு எவ்வளவு தேவை என்பதை உணர்ந்து, 66·83 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். பின் தங்கிய வகுப்பினரின் நலன் தான் எங்கள் உயிர் மூச்சு. கடந்த 50 ஆண்டு காலமாக நீதிக் கட்சியாக திராவிடர் கழகமாக, சுயமரியாதை இயக்கமாக, திராவிட முன்னேற்றக் கழகமாக நாங்கள் பாடுபடுவது பிற்பட்ட மக்களுக்காகத்தான். சமுதாய ஏற்றத் தாழ்வுகளை எல்லாம் வேட்டு வைத்துத் தகர்த்துவிடும் ஆவேசப் பேச்சுக்களால், கிளர்ச்சியால், எங்கள் வேகத்தால் ஓரளவு சமனப்படுத்தி இப்போது ஒரு அமைச்சரவையும் அதற்காகப் போட்டிருக்கிறோம். ஒரு நாட்டிலே குறிப்பிட்ட ஒரு பகுதியினர் மட்டும் முன்னேறவும் மற்ற 100-க்கு 97 வீதம் மக்கள் கீழ் நிலையில் இருப்பதுமான நிலையைக் கண்டு தான் டாக்டர் நாயர் அவர்கள் கர்ஜித்தார்கள் ; சர் தியாகராயர் வெகுண்டெழுந்தார்கள் ; மற்றும் பலர் அரும்பாடு பட்டார்கள். அவர்களுடைய கனவு நனவாகத் தக்க வகையில் இந்த ஆட்சி இதைச் செய்திருப்பது மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. சென்னை நகரில் உள்ள குடிசைகள் இந்த நகரின் அலங்கோல நிலையை எடுத்துக்காட்டுகின்றன. அந்தக் குடிசைகளைப் படிப்படியாக ஏழு ஆண்டுகளில் அகற்றுவதற்கான திட்டத்தைப் போட்டு, அதற்கு இந்த ஆண்டில் ஒரு கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ள செயலையும் நான் பாராட்டுகிறேன். அடுத்து, கிராம அலுவலர்களுக்கும் ஒரு புதிய பணியமைப்பை இந்த அரசு செய்ய இருக்கிறது. எனவே இத்தகைய காரியங்களை எல்லாம் செய்ய இந்த சர்க்கார் முன் வந்திருப்பது குறித்து நான் மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

கடைசியாக, இதிலிலுள்ள புரட்சிகரமான திட்டம் நில உச்ச வரம்பு குறைக்கப்படும் திட்டம்.

"ஒடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகிவிட்டால் ஓர் நொடிக்குள்
ஒடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய் விடுவார் உணரப்பா நீ."

என்று உலகப்பனுக்கு உணர்த்துகின்றார். நாங்கள் ஏழைமக்களின் வாக்குகளைப் பெற்று அரசுக்கு வந்த பிறகு, ஜனங்களின் மாண்டேட்—அதை நடத்திக் காட்டுகிறோமே தவிர, யார் மீதும் எங்களுக்கு விரோதம் கிடையாது. இந்த உயிர் மூச்சான லட்சியத்துக்காக நாங்கள் ஒரு காலத்தில் பாடுபட்டவர்கள்தான். ஏழைகளின் நிலை உயராதா என்று ஏங்கியவர்கள்

தான்.. புரட்சிக் கொடிகளை ஏற்றிக் கொண்டு ஆதிக்க பிரிவினர் மீது' முதலாளி வர்க்கத்தின் மீது சாடினோம். ஆனால் ஏற்றத்தாழ்வுகள் போக இந்த நாட்டிலே நம் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது போல், பலாத்காரம் இல்லாத புரட்சி, நக்சல்பாரிவேலை இல்லை, அண்டர்கிரௌண்ட் வேலை இல்லை, மக்களிடத்தில் மன்றாடி மாற்றுக் கட்சித் தோழர்களையும் அழைத்துக் கலந்து பேசி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறோம். எனவே நான் இந்த நிதி நிலையை மிகவும் வரவேற்கிறேன். நாங்கள் ஆட்சிக்கு வந்து இன்று மூன்று ஆண்டுகளாகின்றன. அறிஞர் அண்ணா அவர்கள் இன்றைக்கு இல்லையே என்ற வருத்தம் எங்களுடைய நெஞ்சத்தை எல்லாம் பிழிகிறது. ஆனாலும் அவர்களுக்குப் பிறகு வந்த கலைஞர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் துடிப்போடும் ஆர்வத்தோடும் பணியாற்றி வருகிறார்கள். இதை நாங்களே புகழ்ந்து கொள்ளவில்லை. நேற்றைய தினம் இந்த மன்றத்தில் பேசிய திருமதி கிளப்வாலா அம்மையார் அவர்கள் அழகாக குறிப்பிட்டு புகழுரை கொடுத்தார்கள், இராணுவம் மாதிரி கட்டுப்பாடோடு வேலை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த மாதிரி மாற்றுக் கட்சியில் உள்ளவர்களும் பாராட்டுகளைத் தெரிவிக்கிறார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, அமைதியாக எல்லாம் நடைபெறுகிறது. நேற்று கூட உத்தரப் பிரதேசத்தில் டெபுடி ஸ்பீக்கர் பட்டபாடு தெரியும். அவருடைய கோட்டு காலரைப் பிடித்து இழுத்திருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் எவ்வளவு நிம்மதியாக நம் அவைத் தலைவர்களும் உறுப்பினர்களும் தொல்லை இல்லாமல் இருக்கிறோம். அது தான் தமிழ்ப் பண்பாடு ; வள்ளுவர் வகுத்த வழி ; அறிஞர் அண்ணா அவர்கள் தந்த பெருந்தன்மை. நமக்குள்ளே இருக்கிற பல பண்பாடுகளை வளர்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே அனைவரும் இதிலே சிறந்து விளங்குகிறோம்.

கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு விஷயத்தைச் சொல்லி என் பேச்சை முடிக்கிறேன். சில சமயங்களில் இந்த உலகில் ஏன் பிறந்தோம் என்று அங்கலாய்ப்பார்கள் அண்ணா அவர்கள். அப்படிச் சொல்லக் காரணம், சமுதாய விரோத சக்திகள் இந்த நாட்டில் தலை விரித்தாடுவதைப் போல், வேறு எந்த நாட்டிலேயும் இல்லை, ஏமாற்று வேலை செய்கிறவர்கள் சமுதாயத்தில் பெரியவராக மதிக்கப்படுகிறார்கள். கொள்ளை கொள்ளையாக வரிகளை ஏப்பம் விடுகிறவர்கள் எங்களுக்கு ஒன்றும் புரியவில்லையே என்று சொல்கிறார்கள். இந்த அவல நிலை இந்த நாட்டைத் தவிர வேறு எங்குமே கிடையாது. நம் நாட்டின் கலைப் பொருட்கள், சோழர் காலத்திய பண்பாட்டுப் பொருள்கள் ஆகியவற்றைத் திருடிக்கொண்டு போய் ஏற்றுமதி செய்கிறவர்களைப் பற்றியே எல்லாம் பத்திரிக்கையில் பார்க்கிறோம். நம் நாட்டில் தான் அது நடக்கிறது. பால் என்றால் ஆங்கில நாட்டில் பால். இங்கே பால் என்று கொடுக்கிறார்கள். கலப்படத்தில் பெரிய பெரிய கலைஞர்கள் இங்கே இருக்கிறார்கள் எவ்வளவு ஆபத்து விளைகிறது இந்தக்கலப்படத்தால் ? இந்தப் பொருட்களை உட்கொண்டு நாம் எப்படி உயிர் வாழ்கிறோம் என்பதே அதிசயமாக இருக்கிறது. நான் அறிந்த வரையில், எந்தப் பொருளில் எதைக் கலக்கிறார்கள் என்பதைச் சொல்லுகிறேன். மிளகாய்ப்பொடியில் செங்கற்றூளைக் கலக்கிறார்கள், காப்பிப்பொடியில் புளியங்கொட்டையைக் கலக்கிறார்கள் ; சீவலில் ஈச்சங்கொட்டையைக் கலக்கிறார்கள் ; அடுத்து மஞ்சளில் சாயத்தை கலக்கிறார்கள். இந்தச் சாயம் உயிருக்கு எவ்வளவு ஆபத்து ; அதனால் தான் கான்ஸர் போன்ற வியாதிகள் எல்லாம் வருகின்றன. பருப்பிலே ரெட் கிரோமைட்டை கலக்கிறார்கள். அரிசியைத் தயார் செய்யும்போது அதிலே கலப்பதற்குக் கல்லையும் தயார் செய்கிறார்கள். எங்கோ நியூயார்க்கில் உள்ள காட்டன் விலையை வைத்து இங்கே சூதாடுகிறார்கள். நம் ஆட்கள் இப்படி சூதிலே வளர்ந்தால் நம் நாடு வாழாது. ஆயிரம் ஆயிரம் அவதாரங்கள் இருக்கிற நாட்டில், வண்டி வண்டியாகப் புராணங்கள், வண்டி வண்டியாக சாஸ்திரங்கள், ஜீவாத்மா பரமாத்மா என்று





பேசுகிற சின்மயானந்தர்கள் வாழுகிற நாட்டில் அயோக்கியத்தனமாக கலப்படம் செய்கிற திருடர்களும் இருக்கிறார்கள். இதைப் பற்றிச் சொல்லும் போது, நான் கட்சியை மறந்து விடுகிறேன். இதைச் சொல்லும் போது, நான் ஒரு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்பதை மறந்து விடுகிறேன். இந்த நாட்டின் ஏழை மக்கள் சாப்பிடுவது ஒழுங்காக இருக்க வேண்டும் என்பதிலே நான் அக்கறை உள்ளவனாக இருக்கிறேன். அப்படி இல்லாவிட்டால், நம்முடைய பரம்பரை என்ன ஆகும், இதை எல்லாம் சாப்பிட்டால் ? அவர்களுக்குக் கடும் தண்டனை தரவேண்டும். கடந்த ஆண்டு இந்திரா காந்தி அம்மையார் ஒரு கருத்தைத் தெரிவித்ததாக " இந்தியன் எக்ஸ்பிரஸ் " பங்களூர் பதிப்பில் 24—6—1969-ல் வெளியாகியிருந்தது. அதாவது

" At a Press Conference, the Prime Minister has expressed her deep concern over the growing danger to the health of the people due to sub-standard and spurious drugs."

மருந்திலே கலப்படம் செய்கிறார்கள் துணிவோடு. உயிருக்கு ஆபத்தான பொருள்களைக்கலக்குகிறார்கள். ஒருவன் சாவதற்கு விஷத்தை வாங்கிச் சாப்பிட்டான். அவன் சாகவில்லை. காரணம், அந்த விஷத்திலும் கலப்படம் செய்திருக்கிறார்கள். தலைவலி என்று தேய்த்துக்கொள்வதற்குத் தைலம் கேட்டால், அதில் கிரசின் ஆயிலைக் கலக்கிறார்கள். மக்கள் உயிரோடும் வாழ்க்கையோடும் விளையாடுகின்ற இவர்களுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்கவேண்டும் ? பாரதியார், " மோதி மிதித்துவிடு பாப்பா பகை கொள்ளலாகாது பாப்பா " என்றெல்லாம் பாடினார். பாப்பாவுக்குப் பாடினார். அதைக் கேட்டாவது நாம் கிளம்பவேண்டாமா ? பல ஆண்டுகளாக பல பெரியவர்கள் இந்த மூடத்தனத்தை அறியாமையை நமக்கெல்லாம் எடுத்துக் காட்டி வந்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நாம் எள்ளனம் செய்து வந்திருக்கிறோமே தவிர, நம் கண்ணில் உள்ளதை நாம் துடைத்தோமோ ?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தமிழகத்திலுள்ள பல இடங்களில் பல மருந்துகள் தயாரிக்கப்படுவதில்லை. தமிழகத்தில் ஒரு தனி நிலையம் மருந்துக் கட்டுப்பாட்டிற்காக நிறுவ வேண்டுமென்று இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தமிழக அரசுக்கு எழுதியிருக்கிறார்கள் என்பதை மனதில் கொண்டு, தமிழக அரசு தனி கட்டுப்பாடு நிலையம் ஒன்றை அமைக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எ. பி. ஜனார்த்தனம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை நான் வரவேற்கிறேன். நம்முடைய நாட்டில் இதைப் பற்றியெல்லாம் கண்டிக்க, தடுக்க, கிளர்ந்தெழவேண்டும். நமக்கு அது தெரிவதில்லை. மலம் அள்ளுகிறவர்களுக்கு அது பழக்கப்பட்டு போவதுபோல, நமக்கு இந்தக் கொடுமைகள் பழக்கப்பட்டுப்போகின்றன. வெளிநாட்டிலிருந்து வருகின்றவர்கள் நம்மைப் பார்க்கும்போது, இப்படி இருக்கிறதே உங்கள் நிலைமை என்று ரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள். எனவே இதை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அண்ணா அவர்கள் அடிக்கடி சலிப்போடு சொல்வார்கள், " ஏன் பிறந்தோம் இங்கு " என்று அப்படி சமுதாயத்திற்குத் தீங்கு செய்யும் சண்டாளர்களை, சமூக விரோதிகளை, கடுமையாக எதிர்த்து அழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவற்றிற்கு முடிவு கட்டியாகவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த அரசுக்கு ஆதரவு தருகின்ற அத்தனை பேருக்கும் வணக்கத்தைத் தெரிவித்து, தமிழ் மணம் கமழுகின்ற இந்த பட்ஜெட்டை நான் வரவேற்கிறேன்.

DEPUTY CHAIRMAN : Does any other hon. Member wish to speak to-day?

(After a pause)

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

## IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

Nil

### *B. Reports, Notification and Other Papers.*

44. Report of the Select Committee on the Rules of Procedure of the Legislative Council appointed in the year 1968.



## APPENDIX

(*Vide* answer to starred question No. 188 on page 422 .)

விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | 1967–68 | | 1968–69 | |
|---|---|---|---|---|
| | எண். | தொகை. | எண். | தொகை. |
| 1. ஆண்டுத் தொடக்கத்தில் முடிவு செய்யப்படாமல் இருந்த மனுக்கள். | 15 | 88,000 | 10 | 2,71,639 |
| 2. ஏற்றுக்கொள்ளப்பட்ட மனுக்கள். | 68 | 4,92,000 | 1 187 | 61,82,981 |
| 3. மொத்தம் .. .. | 83 | 5,80,(00 | 1197 | 64,54,620 |
| 4. வழங்கப்பட்ட தொகை .. | 53 | 2,09,361 | 363 | 15,00,620 |
| 5. மறுக்கப்பட்ட கடன் மனுக்கள். | 20 | 99,000 | 10 | 4,29,500 |
| 6. நிதி ஆண்டின் இறுதியில் முடிவு செய்யப்படாமல் எஞ்சியுள்ள கடன் மனுக்கள். | 10 | 2,71,639 | 824 | 45,24,500 |

ஒப்பளிப்பு வழங்கப்பட இயலாத கடன் மனுக்கள் இயக்குநர் வாரியத்திலும் மறுக்கப்பட்டு ஆவணங்கள் மனுதாரர்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Saturday, the 7th March 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

## I—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS

### *S.S.L.C. Public Examination.*

@ *116. THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(a) the number of students who sat for the S.S.L.C. Public Examination held in April 1969 according to the New Scheme; and

(b) the break-up of that number according to the various Elective subjects offered by them?

### பள்ளியிறுதிப் பொதுத் தேர்வு.

**திரு. எம். ராஜா அய்யர்:** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) 1969 ஏப்ரலில் புதிய திட்டத்தின்படி நடந்த பள்ளியிறுதிப் பொதுத் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை என்ன ?

(இ) மாணவர்களால் எடுத்துக்கொள்ளப்பட்ட பல்வேறு விருப்பப் பாடங்களையொட்டி, அவர்களின் எண்ணிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** (அ) 1,59,406

(இ) சட்டமன்ற மேலவை முன் விவர அறிக்கை c ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். ராஜா அய்யர்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே சில நாட்களுக்கு முன்னர் நான் தெரிவித்துக் கொண்டபடி, இந்த 1,51,351 பேர்களில் சமஸ்கிருதம் எழுதியவர்கள் 122 மாணவர்கள்தான் இருக்கிறார்கள். அராபியத்தில் 42 மாணவர்கள், பாரசீகத்தில் 5 மாணவர்கள் இருக்கிறார்கள். ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களில் " கிளாசிகல் லாங்குவேஜ் " என்ற அராபியம், சமஸ்கிருதம், பாரசீகம் போன்றவைகளில் மிகக் குறைந்த மாணவர்கள்தான் இருக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால், இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் இந்த மொழி மாணவர்களே கிடைக்காத நிலை ஏற்படும். அதனால் அரசாங்கம் துரிதமாக ஏதாவது நடவடிக்கை எடுத்து அந்த மூன்று மொழிகளிலும் கீழ் வகுப்புகளிலிருந்து கற்பிக்க வகை செய்யவேண்டும். அதையும் வருகின்ற ஜூன் மாதத்திற்குள் ஏற்பாடு செய்தால் தான், அவற்றைத் துவக்க வசதியாக இருக்கும். அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

---

@ Postponed from the list of questions for 2nd March 1970.

c **Printed as Appendix I on page**

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் கூறியதற்கு இணங்க கீழ் வகுப்புகளில் பயிற்றுவிக்க வேண்டுமென்றால், அதற்கென தனிப் பிரிவுகள் ஒதுக்க வேண்டியிருக்கிறது. கிராஃப்ட் பிரிவுகளை அவற்றிற்கு ஒதுக்கலாம் என்ற யோசனை இருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. அதுபற்றிய முடிவு எடுத்த பிறகுதான் சொல்ல முடியும்.

## *Marina Beach*

@ * 117 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there is any proposal for beautifying Marina Beach?

## மெரினா கடற்கரை

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

மெரினா கடற்கரையை அழகு படுத்துவது குறித்து செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** ஆம்.

**திரு. எம். எத்திராஜுலு :** இதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது ? என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர், அவர்களே பொதுப்பணித் துறை பராமரிப்பின் கீழ் மெரினா கடற்கரை இருக்கிறது. 1966-ல் ஒரு கமிட்டி அமைத்து அதில் " டவுன் பிளானிங் ஜாயிண்ட் டைரக்டர் " அமைப்பாளராக இருக்கிறார். அதன் மூலம் ஒரு திட்டம் அமைக்கப்பட்டது. சென்னை மெரினா கடற்கறையை அழகுபடுத்த ரூ. 76,46,400 தொடராச் செலவிலும் ரூ. 5 லட்சம் தொடரும் செலவினத்திலும் வைத்து, திட்ட அறிக்கை வெளியிட்டார்கள். நிதி பற்றுக்குறையின் காரணமாகத் திட்டம் மேற்கொள்ளப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் தருகிற ரூ. 2 லட்சத்தில் அழகு படுத்தும் திட்டத்தை இப்போது அமல் படுத்தி வருகிறார்கள். அதற்கென ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டு, சில பல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அங்கே படகு கட்டும் துறையும் இருக்கிறது. 4, 5 மாதங்களில் அவையும் அகற்றப்பட்டு ராயபுரம் பகுதிக்கு மாற்றப்படும். அயோத்தியாக்குப்பம் பகுதிகளில் உள்ள குடிசைகளை அகற்றி, அவர்களிற்காகக் கட்டிடம் கட்டுவதற்கு " ஹவுசிங் போர்டு " முயற்சி எடுத்து வருகிறது. அங்கே படகுகள், கட்டுமரங்கள் கொண்டுவந்து துக்குவதில் சில சிரமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதி மீனவர்களுக்கு படகு, கட்டுமரங்கள் ஒதுக்குவதற்குப் பயன்பட்டுவருவதால், மீன் வளத் துறையினர், பொதுப்பணித் துறையினர், வீட்டு வசதி வாரியத்தினர் ஆகிய மூவரும் முயன்று அவற்றை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். தொன்று தொட்டு நூறாண்டுகளாகக் குறிபிட்ட இடத்தில் மீன் பிடித்து வருகிறார்கள். அதில் தகராறு வராமல் அயோத்தியாக்குப்பம் இந்த இடத்திலென்றும் நடுக்குப்பம் இந்த இடத்திலென்றும் பிரித்து வைக்கிறார்கள். அதற்கு ஏற்ப 100, 150 அடி இடைவெளி விட்டு நான்கு இடங்களைக் குறிப்பிட்டு தனி முளைகளை அடித்து அவர்களுக்கு ஒதுக்கிவிட்டு, பொதுமக்கள் நடப்பதற்கும் கடற்கரையை அழகுபடுத்தவும் வகை செய்யப்படுகிறது. அதை நடைமுறைப் படுத்த மீனளத்துறையும் பொதுப்பணித் துறையையும் ஈடுபட்டிருக்கின்றன.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மெரினா கடற்கரைப் பகுதிகளில் அடிக்கடி குடிசைகள் தோன்றுவதும் மறைவதும் மீண்டும் தோன்றுவதுமாக இருக்கின்றன. சென்னை வாசிகள் ஓய்வை நாடி அங்கே செல்லும்போது



அவை மீனவர்கள் தொழில் நடத்தும் இடமாக இருக்கின்றன. அந்தக் குடிசைப் பகுதிகளை அகற்றி ஏதாவது மாற்று ஏற்பாடு செய்து, அந்தப் பகுதிகள் ஒழுங்காக அழகாக இருக்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கடற்கரையில் சிலபல குடிசைகள் போட்டு வைத்திருந்தார்கள். இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு நடந்தபோது, அதையொட்டி அந்தக் குடிசைகள் அகற்றப்பட்டன. இப்போது குடிசைகள் இல்லை, கட்டப்பட விடவில்லை. அப்படி அமைந்தாலும், அவற்றை அகற்றும் முயற்சியில் காவல்துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள். மீனவர்கள் வலைகள், கயிறுகள் ஆகியவற்றை முட்டாக வைப்பதற்கு அந்த இடங்களைப் பயன்படுத்துகிறார்கள். இனிமேல் அப்படிப் பரவலாக அவைகளை வைக்கக்கூடாது என்றும், குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கி அவற்றில் வைக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. மக்கள் நடப்பதற்கும் புழங்குவதற்கும் அதிகமான மணற்பரப்பை ஏற்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வசதியான கழிவிடங்கள் அமைக்க வேண்டுமென்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதற்கும் அந்தத் துறையினர் நடவடிக்கை எடுத்துவருகிறார்கள். மேற்கொண்டு குடிசைகள் போட அனுமதிக்கப்படுவதில்லை.

**திரு. கே. ராஜாராம் :** அயோத்தியாக் குப்பத்திற்கு நேராக அரை பர்லாங் தூரத்திற்கு மிகவும் சுகாதாரக் குறைவான வரசனையும், நாற்றமும் வருகின்ற நிலையில் இருக்கிறது. அதைக் கொஞ்சம் சுத்தமாக வைப்பதற்கும் கட்டிடங்கள் கட்டி அதற்கு வழி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கிருந்தும் 100, 200 குடிசைகளில் இருக்கிறவர்களை வேறு கட்டிடம் கட்டிக் கொடுத்து அகற்ற ஏற்பாடு செய்யலாம். சுகாதாரக் குறைவு இல்லாமல் தடுப்பதற்கு, சரியான முயற்சி எடுப்பார்களா, அந்த இடங்கள் ஆபாசமாக இருப்பதை மாற்றி நல்லவகையில் செப்பனிட ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறிய யோசனையின் அடிப்படையில் குடிசைகள் அகற்றப்பட்டு, கட்டிடங்கள் கட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. 300 குடும்பங்கள் அவற்றில் குடியேறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதியை பூங்காவாக மாற்றியமைக்க பொதுப்பணித் துறையினர் முயன்று வருகிறார்கள். குடிசைகள் இருக்கக்கூடாது என்ற திட்டத்தின் அடிப்படையில், வீட்டு வசதி வாரியத்தினர் கட்டிடங்களைக் கட்டி வருகின்றார்கள். முடிந்த பிறகு கழிவிடங்கள் அமைக்கும் நிலை ஏற்படும். காலையில் குதிரைப்படையினர் கடற்கரை ஓரங்களில் காவலாகச் செல்கிறார்கள். ஆனால் அவர்கள் வருவதற்கு முன்னர் அங்கே வந்து அசுத்தப்படுத்தி விட்டுப் போய்விடுகிறார்கள். இதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பு தேவை. அழகுபடுத்தும் வேலை தீவிரப்படும்போது அதற்கான காவல் முறையும் தீவிரப்படுத்தப்படும்.

**திரு. கே. ராஜாராம் :** காவல் படையினர் காலை 6 மணிக்கு மேல்தான் வருகிறார்கள். 6 மணிக்கு முன்னால் ஒரு சிலர் அங்கே போகிறவர்களுடைய அனுபவம் வேறு மாதிரி இருக்கிறது. ஆகையால் கூடுமான வரையில் மீனளத் துறையினரிடம் சொல்லி, எந்த விதமான பலாத்காரமும் செய்யாமல், அங்குள்ள குடிசை மக்களிடம் நேரடியாகப் பேசி பஞ்சாயத்தார்களைக் கலந்து பேசி அயோத்தியாக் குப்பம் வாசிகள் இடங்களில் அசுத்தம் செய்யாமல் இருப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** புதிதாகக் கட்டப் படுகிற வீடுகளில் கழிவிடங்கள் அமைக்கும் சூழ்நிலை ஏற்படுவதால், அவற்றைப் பயன்படுத்தும் நிலை ஏற்படும். அப்போது கடற்கரையை அசுத்தப்படுத்தும் சூழ்நிலை இருக்காது.

[7th March 1970

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, can we have an assurance from the Hon. Minister that there won't be any more artificial monuments put up on the sands of the beach from Anna Samadhi to Foreshore Estate?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** வேறு எந்த நினைவுச் சின்னமும் அங்கே வருகிற நிலையில் இல்லை. பொதுக் கூட்டங்கள் நடத்துவதற்கான அளவிற்குச் சீரணிப் படையினர் கட்டிடம் கட்டித் தந்திருக்கிறார்கள். எல்லோருக்கும் அது தேவைப்படுகிறது. ஏற்கனவே வெகு சிரமங்களுக்கிடையிலேதான் அங்கே பொதுக்கூட்டங்கள் நடத்தவேண்டிய அவசியம் இருந்தது. இப்போது அது சுலபமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அங்கே படகு கட்டும் துறை இருக்கிறது. அதை அகற்ற வேண்டிய ஏற்பாடுகள் நடக்கின்றன. இன்னும் ஐந்தாறு மாதங்களில் அந்தத் துறை ராயபுரம் பகுதிக்கு மாற்றப்படும்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I hope there won't be long stretches of road going up to the sea because that mars the beauty of the Marina which is the second longest beach in the world?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்** வேறு நினைவுச் சின்னங்கள் எதுவும் அங்கே எழுப்புவதாக இல்லை. சீரணி மேடைக்குப் போவதற்கு ரோடு போட்டிருக்கிறது. வேறு எதுவும் அங்கே நிறுவப்படாது.

THIRU G. VASANTHA PAI : I hope, Mr. Chairman, there won't be any more.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு மெரினா பீச் இப்போது இருப்பதைவிட அழகாக இருந்ததாக எனக்கு நினைவிருக்கிறது. அதைப் பராமரிக்க ஆண்டு தோறும் பணம் ஒதுக்கிச் செலவு செய்யப்படுகிறதா ? அப்படியிருந்தால், ஆண்டு ஒன்றுக்கு உத்தேசமாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** அதற்கான நடவடிக்கை இப்போது எடுக்கப்பட்டு வருகிறது. அந்த பீச்சை அழகுபடுத்த வேண்டுமென்ற உணர்வு எல்லோருக்கும் இருக்கிறது. சிறு தொகை ஒதுக்கி இனிமேல் பராமரிக்கும் சூழ்நிலைதான் ஏற்படும். அதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபட்டு வருகிறது.

THIRUMATHI S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, there used to be a very good aquarium here on the beach before. It was considered one of the best, or almost the best, in the world with a collection of very rare fishes. Now the aquarium that we have on the beach cannot be said to come up to that standard. Would the Government consider, when they are beautifying the beach, the question of enlarging the existing one and bringing it up to the standard it enjoyed once?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அங்கே மீன் கண்காட்சி இருக்கிறது. அங்கே படகு கட்டும் துறை இருக்கிறது. அதை மறைத்துக் கொண்டிருக்கிறது. அதனால் மீன் கண்காட்சிப் பகுதியின் பொலிவு குறைந்து விட்டது. அங்குள்ள படகு கட்டும் துறை அகற்றப்பட்டதும், மீன் கண்காட்சிப் பகுதி பிரிவு விரிவு படுத்தப்பட்டு, அதைப் பழைய நிலையில் கொண்டு வர ஏற்பாடு செய்யப் படும்.



7th March 1970]

**திரு. கே. ராஜாராம் :** படகு கட்டும் துறையின் போர்டு மறைந்து விடுகிறது. அதோடு அந்தத் துறை போர்டைக்கூட பல சிகப்புக் கொடிகள் மறைத்துக்கொண்டு பறக்கின்றன. அந்தக் கொடிகளை அகற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** படகு கட்டும் துறை அகற்றப்படும்போது, அந்தக் கொடிகளும் அகற்றப்பட்டு, போகிற இடத்திற்கு அந்தக் கொடிகள் போகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Borker Committee Report*

@ *118 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether it is a fact that the Prime Minister of India has written during April 1969 to the Government of Tamil Nadu recommending the implementation of the Borker Committee Report and appointment of full time Drug Control Officers; and

(*b*) if so, the action taken thereon?

### போர்க்கர் குழு அறிக்கை

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) போர்க்கர் குழுவின் அறிக்கையைச் செயல்படுத்தவும் முழு நேர மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரிகளை நியமனம் செய்யவும் பரிந்துரைத்து 1969 எப்ரல் திங்களில் இந்திய தலைமை அமைச்சர் தமிழ்நாடு அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :**

(அ) ஆம்.

(இ) போர்க்கர் குழு அறிக்கையின் சிபார்சுகளின்படி மருந்துகள் வாசனைப் பொருள்கள்' சட்டத்தை (Drugs and Cosmetics Act) தகுந்த முறையில் அமுல் செய்வதற்காக உதவித் தொகையை அளிக்கும்படி இந்திய அரசை இம்மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்த போர்க்கர் கமிட்டியின் பரிந்துரை வெளியாகி கிட்டத்தட்ட 7 ஆண்டுகளாகின்றன. அந்தக் கமிட்டியின் முக்கியமானதொரு பரிந்துரை மருந்துக்கு என்று தனிக் கட்டுப்பாடு அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்பதுதான். தற்போது சுகாதார குடும்பக் கட்டுப்பாடு டைரக்டர் தான் மருந்துத் துறைக்கும் டைரக்டராக இருக்கிறார். அவர்களுக்கு மருந்து உற்பத்தியைக் கண்காணிக்கவோ, மருந்து வியாபாரத்தைக் கண்காணிக்கவோ, சரியான முறையில் கவனம் செலுத்தவோ அவகாசம் இல்லை என்பதோடு, மருந்துத் துறைப் பட்டதாரிகளே மருந்துத் துறைக்கு அதிகாரியாக இருக்கவேண்டுமென்பது நன்றாக இருக்குமென்று கருதுகிறேன். போர்க்கர் கமிட்டியின் அறிக்கை வெளிவந்த பிறகு, நமது அண்டை மாநிலங்களான மைசூர், கேரளா, மகாராஷ்டிரா, குஜராத் போன்றவைகள் எல்லாம் தமது மாநிலங்களில் மருந்துத் துறைக்கு என்று தனித்துறை ஏற்படுத்தி, அதற்கெனவே ஒரு தனி கட்டுப்பாடு அதிகாரியை நியமித்து மருந்துகளைப் பராமரித்து வருகின்றன. இப்படி மருந்துகளைப் பரிசோதனை செய்வதற்கான தனி ஆய்வுக் கூடங்கள் அமைக்க மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யத் தயாராக இருக்கிறது. செலவில் 80 சதவீதத்தை மத்திய அரசு கொடுத்து, மீதி 20 சதவீதத்தை மாநில அரசு கொடுத்து, தனிப்

---

@ Postponed from the list of questions for 2nd March 1970.

[7th March 1970

பரிசோதனைத் துறை அமைக்கலாம். அதன்மூலம் மருந்துப் பரிசோதனையை வெகு சீக்கிரமாகச் செய்து முடிக்கலாம். தற்போது மருந்துகளைப் பரிசோதனைக்கு அனுப்பினால், அதன் முடிவு வருவதற்கு ஓராண்டு அல்லது 2 ஆண்டுகள் கூட ஆகிறது. அதாவது மருந்துப் பரிசோதனை முடிந்து முடிவு வெளிவருவதற்குள் அந்த மருந்துகளுக்கு என்று நிர்ணயிக்கப்பட்ட காலகெடு முடிவடைந்துவிடுகிற காரணத்தால், அப்படிப்பட்ட மருந்து தயாரிப்போர் மீது தவறு இருந்தாலும் கூட, ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்கமுடியாத நிலை இருந்து வருகிறது. எனவே இந்த நிலையை மனதில் கொண்டு மருந்து உற்பத்தியைக் கவனிக்கவும் கண்காணிக்கவும் தனிக் கட்டுப்பாடு அதிகாரி ஒருவரை நியமனம் செய்யவும், தனிக் கட்டுப்பாடு அதிகாரிக்கான தனிக் கட்டிடம் கட்டவும், மருந்துகளைப் பரிசோதனை செய்யவென்றே ஒரு பரிசோதனைக்கூடம் அமைக்கவும் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தற்போது "அசிஸ்டெண்ட் டிரக்ஸ் கண்ட்ரோலர்" என்ற ஒருவர் மருத்துவத் துறை இயக்குநருக்கு உதவியாக இருந்து வருகிறார். போர்க்கர் கமிட்டி இந்தத் துறைக்கென்றே தனிஅதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. நம் மாநிலம் முழுவதுமாக தற்போது 3,918 சேல்ஸ் ஸ்டோர்ஸ்கள்—மருந்து விற்பனை நிலையங்கள்—295 மானுபேக்சரிங் ஸ்டோர்ஸ்—அதாவது உற்பத்தி செய்யும் நிலையங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் சென்று பார்த்துக் கண்காணிப்பதற்காக என்று 19 டிரக்ஸ் இன்ஸ்பெக்டர்கள்தான் இருக்கின்றனர். அதில் 6 பேர் சென்னையில் மட்டும் பணியாற்றுகின்றனர். மற்றவர்கள் மாவட்டத்திற்கு ஒருவர் என்று பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று பரிசோதனை செய்து கண்காணிப்பதற்குத் தேவையான அளவில் இல்லை. இவர்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, இவர்களுக்காகவென்றே தனிக் கட்டிடங்களுக்காகவும், பரிசோதனை ஆய்வுக்கூடங்கள் அமைக்க ரூ. 16,35,000 தேவைப்படுகிறது என்றும் அதற்கான வரைபடங்கள் போடப்பட்டிருக்கின்றன. மேலும் அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு ரூ. 3,50,000 தேவை என்றும் அந்தத் துறையினர் கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு இந்திய அரசாங்கத்திடம் இது குறித்து நிதி உதவி கோரியிருக்கிறது. அது கிடைத்த உடனே இதில் அரசாங்கம் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட போர்க்கர் கமிட்டியின் அறிக்கையின் "மெயின் ஃபீச்சர்ஸ்" என்ன என்று கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு விஆர். நெடுஞ்செழியன் :** இந்தத் துறைக்கு என்று தனியாக "கண்ட்ரோலர் ஒருவர் இருக்க வேண்டும் என்றும், "டெஸ்டிங் லேபரேட்டரி" வைக்க வேண்டுமென்றும், "சூப்பர்வைசரி ஸ்டாப், இண்டெலிஜென்ஸ் விங்" அமைக்க வேண்டும் என்றும் போர்க்கர் கமிட்டி சொல்லியிருக்கிறது. மேலும் அடிஷனல் இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்றும் கூறியிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாவட்ட மருந்துக் கட்டுப்பாடு தனி அதிகாரிகளை நியமிப்பதில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. இரண்டாவதாக, மாவட்டங்களுக்கு என்று அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் தற்போது கெஜட்டட் ஆபீசர்களாக இருந்தாலும், மாதத்திற்கு ரூ. 75 தான் பயணப்படியாக வாங்குகிறார்கள். இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு ஒரு வாரத்திற்குக்கூட ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போக முடியாது. எனவே அவர்கள் மாவட்டம் முழுவதிலுமாக மருந்து விற்பனைப் பரிசோதனைகளைப் பார்க்க முடியவில்லை. இன்றைய தினம் அந்த அதிகாரிகளைவிட அவர்களுடைய பியூன்கள் அதிகப் பயணப்படி



7th March 1970]

பெறுகிற நிலை இருக்கிறது. அதிகாரிகளுக்கு ரூ. 75 என்று நிர்ணயித்திருக்கும்போது பியூன்களுக்கு எம்.டி.எ. அடிப்படையில் பயணப்படி வழங்கப்படுகிறது. இதன் காரணமாக மருந்துக் கட்டுப்பாடு அதிகாரிகள் பல இடங்களுக்குப் போகமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏதாவது மருந்து ஒன்றின் தரம் கெட்டுவிட்டது என்று சென்னையிலிருந்து கடிதம் வந்தால், உடனடியாக மாவட்டம் முழுவதும் சென்று கண்காணிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். இந்தக் குறைவான பணத்தைக் கொண்டு, இந்த வேலையைச் செய்ய முடியாமலிருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய டி.எ.-வை அதிகப்படுத்தவும் எம்.டி.எ. ரூல்ஸ் படி அவர்களுக்கு டி.எ. கிடைக்கச் செய்யவும், மாநிலத்திற்கென்று தனி மருந்துக் கட்டுப்பாடு அதிகாரிகளை நியமிக்கவும் அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் "பிக்சட் டி.எ." போதுமானதாக இல்லை. அதை அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை வந்திருக்கிறது. அது தற்போது அரசாங்கத்தின் பரிசிலனையிலிருக்கிறது.

**திரு. வி. கே. ராமசாமி முதலியார் :** தற்போது எங்கே பார்த்தாலும், மருந்து விலை அதிகமாக இருக்கிறது என்ற புகார் இருக்கிற காரணத்தால் அந்தத் தனி அதிகாரிகள் விலை குறைப்பது பற்றியும் பரிசீலிக்கிறார்களா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரமில்லை. தனிக் கேள்வி போடவும்.

*Sri Brahadeeswara temple at Thanjavur.*

*110 Q—T :)x§ G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that Sri Brahadeeswara temple at Thanjavur is not maintained properly;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken by the Government in this regard?

**தஞ்சாவூரிலுள்ள ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோயில்**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) தஞ்சாவூரிலுள்ள ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோயில் சரிவரப் பேணப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) இது குறித்து அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ), (இ), (உ) பண்டைய நினைவுச் சின்னங்கள் தொல் பொருள் இடங்கள், வழிபடாக்கூறுகள் குறித்த 1958-ம் ஆண்டு சட்டத்தின்கீழ் (மத்தியச் சட்டம்), இந்திய அரசின் தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினரால் தஞ்சாவூரில் உள்ள ஸ்ரீபிரகதீஸ்வரர் ஆலயம் பாதுகாக்கப்பட்டும் பேணப்பட்டும் வருகின்றது. இந்த ஆலயம் செவ்விய நிலையில் இருப்பதாகவும், உடனடியாக இதைச் செப்பனிடுவது தேவையில்லை" என்றும், இந்திய அரசு கருதுகிறது. எனினும், இந்திய அரசின் கருத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. மாநில

@ Postponed from the list of questions for 2nd March 1970.

அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இந்த ஆலயத்தைப் பாதுகாப்பது இயலும் வகையில் தேசிய முக்கியத்துவம் பெற்ற நினைவுச் சின்னங்கள் பட்டியலிலிருந்து இந்த ஆலயத்தை நீக்கிவிடும்படி, இந்திய அரசு வேண்டப்பட்டுள்ளது. இந்த வேண்டுகோளை இந்திய அரசு ஏற்கவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய மாநிலத்திலுள்ள கோயில்களில் முக்கியமான கோயிலாகும் அது. அதனுடைய பிரகாரங்கள்கூட பல இடங்களில் இடிந்து நடப்பதற்கே முடியாத நிலையில் இருக்கின்றன. மண்டபங்கள் இடிந்த நிலையில் காட்சி அளிக்கின்றன. இந்தக் கோயில் மிக உயர்ந்த, சிறந்த கோயில் என்பதாக விளம்பரம் செய்திருக்கும் காரணத்தால், வெளிநாடுகளிலிருந்து பலர் வந்து அந்தக் கோயிலைப் பார்க்கிறார்கள். அங்கே இருக்கும் பாழடைந்த மண்டபங்களையும் இடிந்த இடங்களையும் பார்த்துவிட்டு ஏன் தஞ்சைக்கு வந்தோம் என்று மனச் சோர்வோடு போகின்றதைப் பார்க்கும்போது, நமக்கு மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அந்தக் கோயிலைக் கட்டிய ராஜராஜனுடைய உருவச் சிலையை அங்கே நிறுவ வேண்டுமென்று கிட்ட தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே முயற்சி எடுத்து, அதற்கான நிதியையும் வசூல் செய்திருக்கிறார்கள். அதற்கான சிலையையும் உருவாக்கியிருக்கிறோம். கடந்த மூன்று மாதங்களாக அதுவும் நிறுவப்படாமல் இருக்கிறது. அதை நிறுவுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு வி. ஆர். நெடுஞ்செழியன் :** தஞ்சை பெரிய கோவில் 1958-லிருந்து இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரின் பாதுகாப்பில் இருக்கிறது. ஏற்கனவே நம்முடைய மாநில தொல்பொருள் துறை ஒன்று இல்லாமல் இருந்தது. 1965-லிருந்து நம்முடைய மாநிலத்திலும் அந்தத் துறையை அமைத்திருக்கிறோம். நம்முடைய மாநில தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழே அதைக் கொண்டுவர வேண்டுமென்று 1966-லிருந்து தொடர்ந்து இந்திய அரசாங்கத்திற்கு எழுதிக் கொண்டுதான் வருகிறோம். இந்திய ஆர்க்கலாஜிகல் சர்வே அதைத் தாங்களே பராமரிக்க வேண்டுமென்றும், நம்மிடம் ஒப்படைக்க முடியாது என்றும் கூறுகிறார்கள். அந்தக் கோவிலுக்கு ஒரு திருப்பணிக் குழு அமைத்தார்கள் அந்த ஊரிலே. இந்திய ஆர்க்கலாஜிகல் சர்வே அந்தப் பணத்தை தங்களிடம் கொடுத்தால், அந்தப் பணியைச் செய்கிறோம் என்கிறார்கள். ஆனால் திருப்பணிக் குழுவினர் தாங்களே அவர்கள் மேற்பார்வையில் இருந்து அந்தப் பணியை மேற்கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் அதிகாரிகளின் மேற்பார்வையில் அவர்கள் கூறுகிற நிபந்தனைகளை அனுசரித்து ஏற்றவகையில் அப்பணியை மேற்கொள்ளலாம் என்று அரசு எழுதியது. அதற்கு மறுக்கிறார்கள். அத்துடன் அந்த ஆர்கலாஜிகல் சர்வேயினர் ஓரளவுக்குத் தான் பராமரிப்புக்காகச் செலவழிக்கிறார்கள். அவர்களுக்குக் கிட்டத்தட்ட 2 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பழுது பார்க்கவும் சாரம் கட்டவும் மற்றவைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டு 1969 மார்ச் துவங்கி இதுவரையில் 37,480 ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1969–70-ல் 40 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் கோவிலின் தன்மையும் மற்றவைகளையும் பார்க்கும்போது அந்தத் தொகை போதுமானதாக இல்லை. திருப்பணிக் குழுவினரின் முயற்சியில் பணம் திரட்டி அதைப் புதுப்பித்தால் பொருத்தமாக இருக்கும். அதனால் கோவில் சீர்படுவதற்கு வழி ஏற்படும் என்று அரசு கருதுகிறது.

ராஜராஜன் சிலை வைப்பதற்கு ஆர்கலாஜிகல் சர்வே மறுத்துவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7, 8 நாட்களுக்கு முன்பு இந்தியப் பிரதமருக்கு நேரடியாக எழுதியிருக்கிறார்கள். அந்தக் கோவிலின் வரலாற்றுச் சிறப்புப்பற்றியும் ராஜராஜனுக்கும் அந்தக் கோவிலுக்கும் உள்ள தொடர்புபற்றியும் அப்படிப்பட்ட ஒருவனுடைய சிலையை உள்ளே



நிறுவுவது கோவிலின் அழகையோ தொல்பொருள் தன்மையையோ பாதிக்காது என்ற அளவில் அதற்கு அனுமதி வழங்குமாறு பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். பதில் வந்த பிறகு நடவடிக்கை எடுப்போம். அந்தக் கோவில் நம் கீழ் வரவேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். அப்படி வந்தால் யுனஸ்கோவுக்குச் சொல்லி தற்போது ஸ்ரீரங்கம் கோவிலுக்குச் செலவழிக்கப்பட்டது போல தஞ்சைக் கோவிலுக்கும் வெளி நாட்டிலிருந்து கெமிகல்ஸ் முதலியன வரவழைப்பதற்கும் திட்டம் இருக்கிறது. அதற்கு முன்னால் கோயிலைப்பொறுத்துதான் பெரு முயற்சியாக இருந்துவருகிறது. முதலமைச்சர் அவர்கள் டில்லிக்குச் செல்லும்போது பிரதமரிடம் சொல்லியாவது அதை நிறைவேற்றவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

### *Headmasters of Municipal High Schools*

@ * 120 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the procedure in force in the matter of appointment of Headmasters in Municipal High Schools in the State?

### நகராட்சி உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

இம் மாநிலத்தில் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களை நியமனம் செய்வது குறித்து செயலில் இருக்கும் நடைமுறை என்ன?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** மேலவையின் முன் விவர அறிக்கையொன்று b வைக்கப்பட்டுள்ளது.

### *Secondary Grade Teachers.*

@ * 121 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether it is a fact that the benefit of upgrading Secondary grade teachers in Higher Grade posts, Secondary Grade posts sanctioned by the Department from 3rd August 1967 has been denied to certain teachers by Aided management of Higher Elementary (middle) schools in Mannargudi Range of Thanjavur district; and

(b) if so, the relief proposed by the Government in such cases?

### இடைநிலைத்தர ஆசிரியர்கள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) துவக்கத் தரப் பதவிகளில் உள்ள இடைநிலைத் தர ஆசிரியர்களை 3—8—1967 முதல் துறையினர் ஒப்பளிப்பு வழங்கியுள்ள இடைநிலைத் தர ஆசிரியர் பதவிகளுக்கு உயர்த்துவதால் வரும் பலனை தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி சரகத்திலுள்ள அரசு உதவி பெறும் உயர்தரத் தொடக்க (நடுநிலைப்) பள்ளிகளின் நிர்வாகிகள் சில ஆசிரியர்களுக்கு அளிக்க மறுத்துள்ளனர் என்பது உண்மையா?

---

b Printed as Appendix II on page

a Postponed from the list of questions for 2nd March 1970

[7th March 1970

(இ) ஆமெனில், இந் நேர்வுகளை மாற்றும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அவ்வாறு புறக்கணிக்கப்பட்ட ஆசிரியர்களுக்குக் கிடைக்கவேண்டிய நன்மைகளை அளிக்கும்படி தொடர்புடைய நிர்வாகத்தினருக்குக் கட்டளையிடப்பட்டு பள்ளியின் தகவிலாச் செயல்கள் திருத்தியமைக்கப்படாவிட்டால், பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட ஏற்பு திரும்பப் பெறப்படும் என்று அவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

@ * 122 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) the number of Secondary Grade Teachers in Aided Elementary Schools in Kumbakonam Range of Thanjavur district in whose case the salary (the Secondary Grade) entered in the S.R. prior to 1st April 1958 was subsequently reduced to Higher Grade salary; and

(b) the reasons therefor?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சரகத்தில் உள்ள அரசு மானியம் பெறும் தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலைத் தர ஆசிரியர்களில் எத்தனை பேர் நேர்வில் 1—4—1958-க்கு முன்பு பணிப் பதிவேட்டில் எழுதப்பட்ட சம்பளம் (இடைநிலைத்தர சம்பளம்) பின்னர் துவக்கத்தர சம்பளமாகக் குறைக்கப்பட்டது?

(இ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஒன்று.

(இ) வினாவில் குறிப்பிட்டுள்ள ஆசிரியர், தொடக்கத்தர ஆசிரியர் பதவியில் முதலில் நியமிக்கப்பட்டார். எனவே; அந்த ஆசிரியர் தொடக்கத்தர ஆசிரியர் சம்பளம் மட்டுமே பெற உரிமையுடையவராவார். ஆனால் மானியத் தொகை தவறுதலாக 1958 மார்ச் முதல் 1960 அக்டோபர் வரை இடைநிலை ஆசிரியர் சம்பள வித அடிப்படையில் கல்வித்துறை அதிகாரிகளால் முடிவு செய்யப்பட்டது. இத்தவறு 1960 நவம்பரில் கண்டுபிடிக்கப்பட்டு அந்த ஆசிரியர் சம்பளம் 1958 மார்ச்சு முதற்கொண்டு தொடக்கத்தர ஆசிரியர் சம்பள விதத்தில் மாற்றி நிச்சயிக்கப்பட்டது.

*Admission into Medical College*

@ * 189 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state the action taken on the arrest of a former Minister of this State on the alleged corruption in connection with the admission of a student to Medical College during 1969?

**மருத்துவக் கல்லூரியில் சேர்த்தல்**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1969-ஆம் ஆண்டில் மாணவர் ஒருவரை மருத்துவக் கல்லூரியில் சேர்ப்பதில் லஞ்சக் குற்றச்சாட்டு சாட்டப்பட்டு மாநில முன்னாள் அமைச்சர் ஒருவர் கைது செய்யப்பட்டதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இவ்வழக்கில் புலனாய்வு முடிக்கப்பட்டு வரைவு குற்றப்பத்திரிகை முடிவு செய்யப்பட்டு வருகிறது.

---

Postponed from the list of questions for 2nd March 1970.



7th March 1970]

*Liquor.*

* 190. Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a large number of liquor bottles were seized on 3rd March 1969 in a timber shop in Aruppukottai town, Ramanathapuram district;

(b) if so, the number of persons arrested in that connection; and

(c) the number of persons among them who were convicted?

**மதுபானம்.**

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) 3-3-1969 தேதியன்று இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டை நகரத்தில் மரக்கடையொன்றில் மதுபான புட்டிகள் ஏராளமாக பிடிக்கப்பட்டனவா ?

(இ) ஆமெனில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் ?

(உ) அவர்களில் எத்தனை பேர் தண்டிக்கப்பட்டார்கள் ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம். ஆறுபுட்டி ஜிஞ்சர் பெரியும் 'வெள்ளிக் கோப்பை' அடையாளமிட்ட மூன்று புட்டி பிராந்தியும் (6 அவுன்ஸ்) கைப்பற்றப்பட்டது.

(இ) ஒருவர் கைது செய்யப்பட்டார்.

(உ) அருப்புக்கோட்டை துணை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் தண்டனை வழங்கப்பட்டு குற்றவாளிகள் அப்பீல் செய்து இப்போது தேவகோட்டையில் உள்ள மாவட்ட மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

*Corruption cases.*

* 191. Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state the steps taken to reduce the delay involved in the disposal of corruption cases at different levels?

**லஞ்சக் குற்ற வழக்குகள்.**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

பல்வேறு நிலைகளில் லஞ்சக் குற்ற வழக்குகள் குறித்து முடிவெடுப்பதில் ஏற்படும் தாமதத்தைக் குறைப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் முடிவு ஆவதில் கீழே சொல்லிய மூன்று நிலைகளில் ஒன்று அல்லது பலவற்றில் காலதாமதம் ஏற்படுகிறதா அரசு கருதுகிறது.

(i) புலன் விசாரணையில் தாமதம்; குற்றச்சாட்டுகளைத் தயாரித்தல், வழக்கை விசாரித்து யார் முடிவு செய்வது என்பது. அதாவது துறை அதிகாரி ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம் அல்லது சட்ட நீதி மன்றம்).

(ii) விசாரணை அதிகாரி விரைவாக விசாரணை தொடங்குவதில் தாமதம்;

(iii) (தண்டனை அளிக்கும் அதிகாரியும் விசாரணை அதிகாரியும் வெவ்வேறு அதிகாரிகளாயிருக்குமிடத்து) விசாரணை அதிகாரியிடமிருந்து அறிக்கை வரப்பெற்றதும் தண்டனை அளிக்கும் அதிகாரி இறுதி ஆணைகள் பிறப்பித்தலில் தாமதம்.

எனவே, எல்லா ஒழுங்கு நடவடிக்கைகளும் அதிலும் முக்கியமாக தற்காலிகமாக வேலையிலிருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ள அதிகாரிகளின் வழக்குகளில் மிகம் விரைந்து முடிவு எடுக்கப்படவேண்டும் என்று தொடர்புடைய அதிகாரிகளுக்கு அரசு வலியுறுத்தியது.

கீழே விவரித்துள்ளவாறு இதற்குரிய கால வரம்பு பொது (பணிகள்).

25-5-1967 நாளிட்ட 1275 எண் அரசு ஆணையில் முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

| | |
|---|---|
| (i) புலன் விசாரணையில் தாமதம், குற்றச் சாட்டுகளைத் தயாரித்தல் வழக்கை விசாரித்து யார் முடிவு செய்வது என்பது (அதாவது துறை அதிகாரி, ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றம் அல்லது சட்ட நீதி மன்றம்) .. .. .. .. | 4 திங்கள். |
| (ii) விசாரணை அதிகாரிகள் விசாரணை நடத்துதல் .. .. .. .. .. .. | 6 திங்கள். |
| (iii) தண்டனை அளிக்கும் அதிகாரியும் விசாரணை அதிகாரியும் வெவ்வேறு அதிகாரியாயிருக்குமிடத்து விசாரணை அதிகாரியிடமிருந்து அறிக்கை வரப்பெற்றதும் தண்டனை அளிக்கும் அதிகாரி இறுதி ஆணைகள் பிறப்பித்தல் .. .. .. .. | 2 திங்கள். |
| மொத்தம் .. | 12 திங்கள். |

(அதாவது ஓராண்டு அதற்கு கால வரம்பு செய்யப் பட்டிருக்கிறது.)

*Courts.*

* 192.Q.—Thiru G. VASANTHA PAI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Courts functioning in the City Civil Court, Madras City (i) in 1947 and (ii) as on 1st September 1969?

**நீதி மன்றங்கள்.**

**திரு. ஜி. வசந்தபாய் ;** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(1) 1947-லும், (2) 1-9-1969 நாட்படியும், சென்னை மாநகரில் மாநகர உரிமை வழக்கு நீதி மன்றத்தில் செயல்படும் நீதி மன்றங்கள் எத்தனை ?

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** 1947-ம் ஆண்டில் சென்னையில் உள்ள மாநகர உரிமை வழக்கு நீதிமன்றத்தில் முதன்மை நீதிபதியின் நீதிமன்றம், கூட்டு நீதிபதியின் நீதிமன்றம், ஆகிய இரு நீதிமன்றங்கள் செயலாற்றி வந்தன. 1-9-1969 அன்றைய நிலவரப்படி சென்னை மாநகர உரிமை வழக்கு நீதிமன்றத்தில் முதன்மை நீதிபதியின் நீதி மன்றம் ஒன்று மாவட்ட, செஷன்ஸ் நீதிபதிகள் பதவித்தரத்தில் கூடுதல் நீதிபதிகளின் நீதிமன்றங்கள் இரண்டு, துணை நீதிபதிகளின் பதவித் தரத்தில் உதவி நீதிபதிகளின் நீதிமன்றங்கள் ஒன்பது ஆகிய பன்னிரண்டு நீதிமன்றங்கள் செயலாற்றி வந்தன. மேற்கூறிய பதவிகளில் இரண்டாவது கூடுதல் நீதிபதி, எட்டாவது உதவி நீதிபதி, ஒன்பதாவது உதவி நீதிபதி ஆகியோரது பதவிகள் தாற்காலிகமானவை.

* 193. Q.—Thiru G. VASANTHA PAI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Courts of Small Causes functioning at Madras (i) in 1947 and (ii) as on 1st September 1969?





**திரு. ஜி. வசந்தபாய் .** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(1) 1947-லும், (2) 1-9-1969 நாளன்றும் சென்னையில் செயல் பட்டுவரும் சிறு வழக்கு நீதி மன்றங்கள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (1) 1947-ஆம் ஆண்டில் சிறு வழக்கு நீதிமன்றங்கள் மூன்று இருந்தன.

(2) 1-9-1969-ல் அத்தகைய எட்டு நீதி மன்றங்கள் இருந்தன.

* 194 Q.—Thiru G. VASANTHA PAI: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of Tribunals functioning in the premises of the City Civil Court and the Small Causes Court at Madras?

**திரு. ஜி. வசந்தபாய் .** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

சென்னையில், மாநகர உரிமை வழக்கு நீதி மன்றத்திலும், சிறு வழக்கு நீதி மன்றத்திலும் செயல்பட்டு வரும் நடுவர் மன்றங்கள் எத்தனை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சென்னையில் உள்ள மாநகர் உரிமை வழக்கு நீதி மன்றக் கட்டிடத்தில் மாநகர் உரிமை வழக்கு நீதிமன்றங்கள் 12-ஐத் தவிர, 2 நடுவர் மன்றங்களும் (Tribunals) செயல்பட்டு வருகின்றன. சிறு வழக்குகள் நீதி மன்றத்தில் தனியாக நடுவர் மன்றம் எதுவும் செயல்படவில்லை. ஆனால், சிறு வழக்குகள் நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியும், இரண்டாவது நீதிபதியும் பதிவாளரும் சில சட்டங்களின் கீழ் நடுவர் மன்றத்தினராகச் செயலாற்றுகின்றனர்.

Thiru G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, in view of the large number of courts as well as Tribunals functioning in that building, will the Government consider the question of giving facilities to the litigants as well as the lawyers appearing in those courts in the shape of waiting halls, since the court work is accumulating and the court halls are overcrowded?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தேவைக்கும் வசதிக்கும் ஏற்ப அடிக்கடி உயர்நீதி மன்றம் தன்னுடைய கருத்துக்களை அனுப்பி வைக்கிறது. அவை அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு, இருக்கின்ற நிதி நிலைக்கு ஏற்றவாறு ஒப்புக்கொள்கிறோம்.

*Construction of Chambers for Lawyers*

* 195 Q.—Thiru G. VASANTHA PAI: Will the Hon. the Ministre for Industries e pleased to state—

(a) whether any proposals have been forwarded by the High Court of Madras to the Government for putting up construction of Chambers for Lawyers and for affording other facilities to the legal profession;

(b) if so, when the proposals received by the Government; and

(c) the stage at which the matter now stands?

**வழக்கறிஞர்களுக்கான அறைகள்.**

**திரு. ஜி. வசந்தபாய் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வழக்கறிஞர்களுக்கான அறைகள் கட்டுவதற்கும், சட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பிற வசதிகள் செய்து கொடுப்பதற்குமான செயற்குறிப்புகள் எவற்றையேனும் சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

[7th March 1970

(இ) ஆமெனில், அந்தச் செயற்குறிப்புகள் அரசுக்கு எப்போது வந்தன ?

(உ) இது தற்போது எந்நிலையிலுள்ளது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) இல்லை.

(இ), & (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, when I moved a call attention motion on the last occasion, I was given an assurance by the Hon. Minister that the High Court was considering the question of putting up a Chamber for the lawyers. Further, I understand that the High Court has sent proposals for Rs. 6 lakhs to the Government recently for the construction of 60 chambers as also to provide other facilities in the High Court compound next to the Advocates' Association. Have the Government received that proposal and, if so, may I know what action is proposed to be taken on those proposals?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உயர்நீதி மன்றம் நமக்குத் தந்திருக்கின்ற தகவல்படி, 10½ லட்சம் ரூபாய்க்குத் தனி சேம்பர் கட்டுவதற்கு ஒரு திட்டம் தயாரித்து, அதைப் பொதுப்பணித் துறையினருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்து அறியப்பட்ட பிறகு, அரசாங்கத்திற்கு வரும். அதற்குப் பின்னால் நாம் முடிவு எடுக்க வேண்டும்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, the Government gave an assurance on the 13th September that lawyers' chambers would be constructed. I hope the Government would keep up that assurance.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அரசாங்கம் எதையெதைச் செய்ய முடியுமோ அதைத் தவறாது செய்யும்.

MR. CHAIRMAN : Questions 196 to 198 are postponed.

*Ramanathapuram District Co-operative Primary Land Development Bank.*

*199 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any petition has been received by the Government from the Ramanathapuram District Co-operative Primary Land Development Bank Employees' Association regarding their pay, period of service, priorities and their appointment in the Primary Land Development Bank to be formed newly; and

(*b*) if so, the decisions taken thereon by the Government?

**இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு பிரதம நிலவள வங்கி.**

**திரு எம். ராஜா அய்யர்.** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு பிரதம நிலவள வங்கிகளின் ஊழியர்கள் சங்கத்திலிருந்து அவர்களின் ஊதியம், பணிக்காலம், முன்னுரிமை, புதிதாக அமைக்கவிருக்கும் பிரதம நிலவள வங்கிகளில் அவர்கள் நியமனம் முதலியன பற்றி விண்ணப்பம் ஏதுவும் அரசிற்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் அரசு எடுத்த முடிவுகள் என்ன !



7th March 1970]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) புதிதாகத் தொடங்கப்படுகிற நிலவளவங்கிகள் பணியாளர்களை நியமிக்கையில் பழைய தொடக்க நிலவளவங்கிகளில் பணிபுரிந்து, உபரியாயிருப்பதாக உள்ள பணியாளர்களுக்கு முதன்மைச் சலுகை அளிக்கவேண்டும் என்று அவ்வங்கிகளுக்கு அரசு முன்னரே ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, புதிதாகத் துவக்கப் பட்ட நிலவள வங்கிகள், பழைய நிலவளவங்கிகளிலிருந்து நீக்கப்பட்ட பணியாளர்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதன் காரணமாக புதிய நிலவள வங்கிகளுக்குப் பணக் கஷ்டமேற்படுகிறது. அதுவும் தவிர அவர்கள் எல்லாம் நிலவளவங்கிகளில் அதிகமான சம்பளம் வாங்கிக் கொண்டிருந்திருக்கிறார்கள். அதே வகைப் பணியாளர்கள் குறைந்த சம்பளத்திற்குக் கிடைக்கிற நிலையில் அதிகமான சம்பளம் கொடுத்து பழைய நிலவள வங்கிகளில் பணியாற்றியவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளுவதன் மூலம் புதிய வங்கிகளின் நிதிநிலை பாதிக்கப்படுகிறது என்பதை அரசு அறியுமா ? அதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா வென அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, எந்தக் காரணத்தைக் கொண்டும் புதிய நிலவள வங்கிகளுக்குப் பணக் கஷ்டம் ஏற்படுவதற்கான முகாந்திரமில்லை. ஏனெனில் புதிய நிலவள வங்கி ஒவ்வொன்றுக்கும் ரூ. 25,000 அரசாங்கப் பங்குத் தொகையாக முதலில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்று சொன்னார்கள். ஆணை இருந் தாலும், அப்படி பாதிக்கப்பட்ட பணியாளர்கள் யாரிடத்திலே போய், எந்த வங்கிகளிடத்திலே போய் தங்களுக்கு உத்தியோகம் வேண்டுமென்று கேட்பதற்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, ஆணை என்றால் ஆங்கிலத்தில் "கவர்ன்மெண்ட் ஆர்டர்" என்று சொல்லுவார்கள். ஆணை யாருக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். புதிய நிலவள வங்கிகளுக்கு இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பழைய நிலவள வங்கிகள் தாலூக்காவுக்கு ஒன்றாக இருந்தன. இப்போது ஒரு பிளாக்குக்கு ஒரு வங்கி என்று ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக பழைய நிலவள வங்கியில் உள்ள பணியாளர்கள் உபரியாக இருப்பார்கள். ஏற்கெனவே அந்த வங்கியில் ஒரு சூப்பர்வைசர் இருந்திருப் பார் அல்லது ஒரு அசிஸ்டெண்ட் இருந்திருப்பார். அவர்கள் எல்லாம் உபரியாக இருப்பார்கள். எந்த பிளாக்கிற்குப் புதிய நிலவள வங்கி உண் டாக்கப்படுகிறதோ, அந்த வங்கிக்குப் பழைய நிலவள வங்கியில் பணியாற் றிக் கொண்டிருந்து உபரியாக வெளியே அனுப்பப்பட்டவர்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** ஒவ்வொரு வட்டாரந்தோறும் ஆரம்பிக்கப்படும் நிலவள வங்கிகளுக்கு அரசு ரூ. 25,000 முதலீடாகக் கொடுக்கிறது. ஆகவே பணக்கஷ்டம் ஏற்படுவதற்குக் காரணமில்லை என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். வங்கியினுடைய கடன் வாங்கும் சக்தியைப் பெருக்குவதற்காகத் தான் ரூ. 25,000 கொடுக்கப் படுகிறது. வட்டியின் மூலமாக நிலவள வங்கி எவ்வளவு ஆதாயத்தைத் தேடுகிறதோ, அதைக் கொண்டு தான் தன்னை ஸ்திரப்படுத்திக்கொள்ள முடியும். இப்படி புதிய நிலவள வங்கிகளுக்கு ரூ. 25,000 மூலதனத் திற்காக உதவி செய்வதோடு கூட, வேறுவிதங்களிலும் கஷ்டமில்லாத நிலைமையை உருவாக்குவதற்காக சிறிது காலத்திற்காவது அரசாங்கம் அவைகளுக்கு மான்யமாகச் சிறிது தொகையை அளிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் :** புதிய நிலவள வங்கிகளின் நிலைமையை நன்றாக ஆராய்ந்து பார்த்தபிறகுதான் ரூ. 25,000 முதல் ரூ. 50,000 வரை கொடுப்பது என்று முடிவுசெய்து தந்துகொண்

டிருக்கிறோம். எனவே இந்த நிலையில் மான்யம் எதுவும் தேவையில்லை என்றே கருதுகிறோம். நாங்கள் கொடுக்கிற இந்தப் பணம் அந்த வங்கியினுடைய கடன்வாங்கும் சக்தியை உயர்த்தும் என்பது உண்மை. அந்த வங்கிகள் சொந்தமாக வைத்திருக்கிற அந்தத் தொகையோடு அரசாங்கம் கொடுக்கிற தொகையையும் சேர்த்து அந்த அளவுக்குக் கடன் பெற்றுக் கொள்ளலாம். எனவே மாண்புமிகு உறுப்பினருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது என்னவென்றால், புதிதாகத் தொடங்கப்பட்ட எல்லா நிலவள வங்கிகளுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதாவது ஒவ்வொரு புதிய நிலவள வங்கியும் 5 லட்சம் ரூபாய் பெற்றுக்கொள்ளத் தயாரா என்று கேட்டு, மத்திய நிலவள வங்கியிலிருந்து அறிக்கை சென்றிருக்கிற காரணத்தால், விவசாயிகளுக்குக் கடன் கிடைப்பதில் அல்லது நிலவள வங்கிகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு எந்தக் கஷ்டமும் இருக்கக் காரணமில்லை.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, பழைய நிலவள வங்கிகளிலிருந்து உபரியாக வெளியே அனுப்பப்பட்டவர்கள் புதிய நிலவள வங்கிகளில் வேலை கோரும்போது, அந்த வங்கிகளின் (போர்டு ஆப் டைரெக்டர்ஸ்) நிர்வாகக் குழுவினர் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள மறுப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. அவ்வாறு மறுத்துவிட்டால், அரசாங்கம் அவர்களைக் கட்டாயப்படுத்த அதிகாரம் உண்டா? புதிய நிலவள வங்கிகள் கண்டிப்பாக அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் அவைகளுக்கு உத்திரவு பிறப்பித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் ;** தலைவர் அவர்களே, புதிய நிலவள வங்கிகள், பழைய நிலவள வங்கிகளில் உபரி என்று வெளியேற்றப்பட்டவர்களுக்கு முதலிடம் கொடுத்து, அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசு உத்திரவிட்டிருக்கிறது. இருந்தபோதிலும், அந்த நிர்வாகக் குழுவின் (போர்டு ஆப் டைரக்டர்ஸ்) முடிவே இறுதியானது என்பது உண்மை. புதிய நிலவள வங்கிகளில் அரசின் சார்பில் நியமிக்கப்படுபவர் மானேஜர் ஒருவர் தான். மற்றப் பணியாளர்கள் எல்லாம் அந்தந்த வங்கிகளாலேயே நியமிக்கப்படுகிறார்கள். அதாவது சூபர்வைசர், அசிஸ்டண்ட், உதவியாளர்கள் போன்ற பணியாளர்கள் எல்லாம் அந்தந்த வங்கிகளாலேயே நியமிக்கப்படுகிறார்கள். அவ்வாறு நியமிக்கப்படும்போது, பழைய வங்கிகளின் பணியாளர்களுக்கு முதலிடம் தரவேண்டுமென்று உத்திரவிட்டிருக்கிறோம். அவ்வாறு ஒரு வங்கி அவர்களுக்கு வேலை கொடுக்க மறுக்கிறது என்றால், வேறு வங்கிகளில் வேலை பார்த்துக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** புதிய வங்கிகள் 5 லட்சம் ரூபாய் வரை கடனாக வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கின்றனவா ? பழைய வங்கிகள் இவ்வாறு வாங்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். பழைய வங்கியின் மூலமாக, ஸ்ரீவில்லிப்புத்தூரைச் சேர்ந்த விவசாயி ஒருவர் பாறை உடைக்கும் யந்திரம் ஒன்றை வாங்குவதற்காக என்று ரூ. 40,000-க்கு மனுச் செய்துகொண்டார். அந்த மனு மத்திய வங்கிக்கு வந்து அந்த அளவுக்குப் பணம் இருக்கிறதா என்று கேட்கப்பட்டு, அந்த ரூபாய் 40,000-ஐ 4 பேருக்குக் கொடுக்கலாமே, ஒருவருக்கு மட்டும் அதை எப்படிக் கொடுப்பது என்று கேள்வி கேட்கப்பட்டு, இன்னும் கொடுக்கப்படாமல் இருக்கிறது. கொடுப்பதற்கான சந்தர்ப்பமில்லை, பண வசதியில்லை என்று சொல்லப்பட்டு, இன்னும் அந்த மனு "சாங்ஷன்" செய்யப்படாமல் இருக்கிறது. இப்படி இருக்கும்போது பழைய வங்கிகள் சரியாக பட்டுவாடா செய்யாததன் காரணமாக, பணம் தேங்கியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டிற்கும் உள்ள முரண்பாட்டை விளக்குவார்களா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** மத்திய நிலவள வங்கி புதிய வங்கிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையின் நகல் இருக்கிறது. ஆனால் அதை நான் இங்கே எடுத்துக்கொண்டு வரவில்லை. முன்பெல்லாம் நிலவள வங்கிகள் மத்திய வங்கியிடமிருந்து இவ்வளவு தான் வாங்க



வேண்டும் என்ற குறியீடு இருந்தது. தற்போது அந்தக் குறியீடு இல்லாமல் (லிமிட் இல்லாமல்) நிலவள வங்கிகள் தங்களுக்கு எவ்வளவு வேண்மானாலும் கேட்டு வாங்கி, விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கலாம் என்று சுற்றறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. தற்போது அந்த வங்கிகள் 5 லட்சம் ரூபாயாவது வாங்கிக்கொள்ளத் தயாரா என்று கேட்டு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சம்பவம் பற்றிச் சொன்னார்கள். ஒரு தனிப்பட்ட நபருக்கு ரூ. 40,000 தரப்படவில்லை என்று வருத்தப்பட்டார்கள். அதற்குக் காரணம் என்னவென்று எனக்குத் தெரியாது. அதைப்பற்றிப் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனாலும் கூடியவரையில் தனி நபருக்கு ரூ. 40,000 கொடுப்பது என்பது 1967-க்கு முன்னால் சாதாரணமாக நடந்திருந்தபோதிலும், இப்போது இருக்கிற ஏழை எளியவர்கள் அரசு அவ்வாறு தனிப்பட்டவருக்கு ரூ. 40,000 கொடுப்பதுபற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டியிருக்கிறது.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, இந்த அரசு அதிகாரத்திற்கு வந்தபிறகு தான் புதிதாக வந்த ரிஜிஸ்டிரார் அவர்கள் நில வள வங்கிகள் 40,000 ரூபாய் வரை விவசாயிகளுக்குப் பெரிய இயந்திரங்கள் வாங்கிக்கொள்ள கடன் வசதி அளிக்கலாம் என்று அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதன்படி தான் கடன் கோரப்பட்டது. ரூ. 30,000 அல்லது ரூ. 35,000 அளவில் பாறை உடைக்கும் இயந்திரத்தை வாங்குவது என்றால், அது தனிப்பட்ட ஒருவருக்கு மட்டுமல்ல ; அந்தப் பிரதேசம் முழுவதற்குமாகத் தான் ஒருவர் வாங்குகிறார். அது எல்லோராலும் வாங்க முடியாது. வசதியுள்ள ஒருவர் வாங்குவதற்குத் தான் சாத்தியமாக இருக்கும். இருந்தாலும் அந்த இயந்திரத்தைப் பலரும் பயன்படுத்திக்கொள்வார்கள். ஆகவே இது ஏதோ தனிப்பட்ட ஒருவருக்குக் கொடுக்கப்படும் கடன் தொகை என்று அமைச்சர் அவர்கள் கருதக்கூடாது என்று தெரிவித்துக்கொண்டு, அதைச் சீக்கிரமாக அனுமதிக்கும் முயற்சியை மேற்கொள்ளுவாரா என்று அறிய விரும்புகிறேன்'

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர் :** தனிப்பட்ட ஒரு சிறு விவசாயி பாறை உடைக்கும் இயந்திரத்தைச் சொந்தத்தில் வைத்துக் கொள்ள முடியாது என்று தான் புதிய திட்டத்தின்படி பாறை உடைக்கும் இயந்திரங்கள், துளைபோடும் இயந்திரங்கள் எல்லாம் கலெக்டருடைய நிர்வாகத்தில் தனிப் பிரிவாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். ஆகையால் தனிப்பட்டவர்கள் குழாய்க் கிணறு போட அல்லது பாறை உடைக்க என்று இயந்திரங்களைச் சொந்தத்தில் தனியாக வைத்துக்கொள்ள வேண்டிய தேவையில்லை.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 40,000 தனிப்பட்ட ஒருவருக்குக் கொடுப்பது என்பது 1967-க்கு முன்னால் நடந்திருக்கலாம், இப்போது இல்லை என்று சொன்னார்கள். இந்த அமைச்சரவை ஏற்பட்ட பிறகு தான் ரூ. 40,000 வரை ஒரு நபருக்குக் கொடுக்கலாம் என்று சுற்றறிக்கை போட்டுவிட்டு, அதற்குப் பிறகு அந்த இலாக்காவை நிர்வகிக்கும் அமைச்சர் அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ இப்படிப் பேசியிருக்கிறார்கள். எனவே அதைத் திரும்பப் பெற்றுக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** அம்மாதிரி ரூபாய் 40,000 அளவுக்குக் கொடுக்கலாம். அந்த விவசாயிக்கு அவ்வளவு தேவைப்படுகிறதா என்று பார்த்துக் கொடுக்கலாம். ஆனால் பொதுவாகப் பார்க்கிறபோது, கூடுமான வரையில் ஒரு விவசாயிக்கு ரூபாய் 10,000 அல்லது 12,000 அல்லது 15,000 என்ற அளவிற்குத் தான் கொடுக்கும் வகையில் வங்கிகள் செயல்படுகின்றன.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, இப்போது உள்ள அமைச்சர் அவர்களே ஒரு சுற்றறிக்கை விட்டுவிட்டு தெரியாதவர் போல் முன்னே அம்மாதிரி நடந்திருக்கலாம், இப்போது நடக்காது என்று சொல்லுவது தவறல்லவா? அவரே அப்படிப்பட்ட உத்திரவைப் போட்டுவிட்டு, இப்போது ஏதோ நினைவில்லாதவரைப் போல் பேசலாமா?

[7th March 1970

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர் :** தலைவர் அவர்களே, அந்தச் சுற்றறிக்கையில் சொல்லியிருக்கும் தொகை மேல்வரம்பு. அந்த அள வுக்கு யாருக்கும் சாதாரணமாகக் கொடுக்கப்படுவதில்லை. ஏதேனும் "ஸ்பெஷல் சர்கம்ஸ்டன்சஸ்" இருந்தால் தனிப்பட்ட காரணங்கள் இருந்தா லொழிய, அந்த அளவுக்கு யாருக்கும் பணம் கொடுப்பதில்லை.

*Recommendations of the Santhanam Committee.*

* 200 *Q*.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the action taken on the recommendations of the Santhanam Committee to improve the working of the Village Co-operative Credit Societies on date?

**சந்தானம் குழு செய்த பரிவுரைகள்.**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

கிராமக் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கங்கள் செயல்படுவதை மேம்படுத்துவது குறித்து சந்தானம் குழு செய்த பரிவுரைகள்மீது இந்நாள் வரையில் எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனர் :** சந்தானம் குழுவின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

## UNSTARRED QUESTIONS

*District Educational Officers and Gazetted Headmasters.*

17. *Q*.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the number of District Educational Officers and Gazetted Headmasters in the State who have not yet been declared as having completed their probation as on 1st September 1968;

(*b*) the maximum period of such delay in declaration in any one case so far; and

(*c*) the reasons for the delay?

*A*.—

(*a*) 19.

(*b*) Nearly 10 months.

(*c*) The Officers did not pass the language test, within the period of probation as required under the rules. Hence the question of relaxation of the rule in favour of these officers was under the consideration of the Government.

*Secondary Grade Training Institutions.*

18. *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the number of Secondary Grade Training Institutions in the State and the total number of trainees passed out of such institutions in 1968–69?

*A*.—

Number of Training Institutions—20.

Number of trainees passed—1,433.



7th March 1970]

**திருவையாறு அரசினர் தமிழ்க் கல்லூரி**

19 கே.—திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) திருவையாறு அரசினர் தமிழ்க் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு இலவச உணவு அளிக்கப்படுகிறதா ?

(இ) பயனடையும் (1) மாணவ (2) மாணவிகள் எத்தனை பேர்?

*A*.— (a) Yes.

(b) Boy students .. .. 85

Girl students .. .. 153

**பேருந்து விபத்துக்கள்.**

20—கே. திரு. எம். எத்திராஜுலு : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) 1967–68, 1968–69-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் எத்தனை பேருந்து விபத்துக்கள் நடந்திருக்கின்றன ?

(இ) அதில் உயிரிழந்தவர்கள் எத்தனை பேர் ?

*A*.—(a) 1967–68 .. .. 2561

1968–69 .. .. 2317

(b) 1967–68 .. .. 673

1968–69 .. .. 470

MR. CHAIRMAN : Questions are over.

[*Note*—An astersik [*] at the Commencement of a speech indicates revision by the Member :]

II. ANNOUNCEMENT *re*. DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN : At a meeting of the Business Advisory Committee held at 3.30 p.m. to-day, the following programme of business has been decided—

| | |
|---|---|
| 9th March .. .. .. | Reply to the debate on the Budget and Government Bills. |
| 10th March to 24th March .. | No meeting. |
| 25th March .. .. .. | Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1969–70 |
| 26th March .. .. .. | Discussion on the Final Supplementary Statement of Expenditure for 1969-70 |
| 27th March .. .. .. | Holiday. |
| 28th March .. .. .. | Non-official business. |
| 29 h March .. .. .. | Holiday. |
| 30th March .. .. .. | Appropriation Bills. |
| 31st March .. .. .. | General discussion on the Policy of the Government Agriculture and Irrigation. |
| 1st April .. .. .. | General discussion on the Policy of the Government Education. |
| 2nd April .. .. .. | General discussion on the Policy of the Government Industries. |
| 3rd April .. .. .. | General discussion on the Policy of the Government District Administration. |
| 4th April .. .. .. | Appropriation Bills and other Government Bills. |

5th April—Holiday.

6th April—Goernment Bills and Valedictory speeches for retiring Members.

The House will meet daily from 4 p.m. to 7 p.m. and on the 6th April the House will meet from 3 p.m.

### III. General discussion on the Budget for the year 1970–71—*cont.*

Mr. CHAIRMAN : Now we will resume the discussion on the Budget for the year 1970–71. I have to inform the House that eleven hon. Members are anxious to take part in the discussion to-day. Now it is ten minutes to 5 of the clock. So rationing of time for speeches has to be introduced. Now I want the co-operation of hon. Members. If every hon. Member takes only about 10 minutes, we will be able to accommodate all the hon. Members. Otherwise, some hon. Members will have to be dropped. It is for the hon. Members to adjust so that all the hon. Members can take part in the debate. Hon. Members are carried off by the enthusiasm they evince in speaking and do not generally note the time they are taking. So just a minute before the allotted time, I will ring the bell so that they may note that their time has run out and conclude their speeches. I now call upon the hon. Member Thiru D. V. Narayanaswami to speak.

**திரு. டி. வி. நாராயணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1970–71-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்ளுகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் திரு. மதியழகன் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையை நல்ல முறையில் அரசின் சாதனைகளை விளக்கியும் மக்களுடைய முன்னேற்றத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்ற திட்டங்களை விளக்கியும் தயாரித்து அளித்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையினை உழவர் பெரு மக்கள், பாட்டாளி மக்கள், இன்னும் அரசு ஊழியர்கள் ஆக அனைத்துத் துறையினருமே நல்ல முறையில் வரவேற்றும் பாராட்டியும் பேசியிருக்கிறார்கள். சாதாரண ஏழை மக்கள் இந்த நிதி நிலை அறிக்கையினை ஒரு பெரும் வரப்பிரசாதமாகவே கருதுகிறார்கள். தொழில் துறை முன்னேற்றம் அடைவதற்கான வழி முறைகளை இந்தத் திட்டத்திலே காண்கிறோம். வேளாண்மைத் துறை எதிர்காலத்திலே மேம்பாடடைவதற்கான வழி வகைகள் இதிலே கூறப்பட்டிருக்கின்றன. வேளாண்மை பெருகுவதற்காக வங்கிகள் மூலம் கடன் வசதிகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டு, விவசாயம் மேலும் செழிப்பதற்கான வழி முறைகள் இதிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்த நிதி நிலை அறிக்கையிலே துண்டு விழுவதைச் சரிக்கட்டுவதற்காக ஏற்கெனவே இருக்கின்ற வரி விகிதாசாரங்களை சில இனங்களில் கூட்டி சற்று கூடுதலான வருமானம் கிடைப்பதற்கான வழி முறைகளை வகுத்திருக்கிறார்கள்.

இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர்களுக்கு இந்த நிதி நிலை அறிக்கை திருப்தியளித்தாலும்கூட, ஏதாவது குறைகளைச் சொல்லியே ஆகவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக, சில குறைகளைச் சொல்லியிருப்பார்களே தவிர, இதில் ஏதோ குறைபாடு இருக்கிறது, அதில் குறைபாடு இருக்கிறது என்று அவர்கள் எதையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. போடப்பட்டுள்ள கூடுதல் வரிகள் ஏழை மக்களைப் பாதிக்கும் அளவிற்கு அமையவில்லை. கூடுதலாகப் போடப்பட்டுள்ள வரிகள் வசதி படைத்தவர்களைத்தான் ஓரளவிற்குப் பாதிக்கலாமே தவிர, ஏழைகளைப்



பாதிக்கக்கூடியதாக அவற்றில் ஒன்றும் இல்லை. மோட்டார் வண்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், ரேடியோக்கள், புகைப்படம் பிடிக்கும் கருவிகள் இவைகள் மீது கூடுதலாக வரிகளைப் போட்டிருந்தாலும் இவை மக்கள் அன்றாடம் வாங்கும் பொருள்கள் என்று சொல்லமுடியாது. எந்த ஒரு ஏழையும் காலையில் எழுந்திருந்து ஒரு குளிர் சாதனப் பெட்டியையோ அல்லது கிராமபோன் பெட்டியையோ அல்லது ஒரு ரேடியோவையோ வாங்கச் சொல்லுகிறார்களா என்றால் இல்லை. ஏதோ கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்துக்கொண்டு ஒரு நாள் போய் ஒரு ரேடியோவை வாங்குகிறார்கள். இவை தினமும் வாங்கக்கூடிய பொருள்கள் இல்லை. எனவே இந்தப் பொருள்கள்மீது வரி விதிப்பதன் மூலம் எந்த விதமான பாதகமும் ஏற்பட்டுவிட முடியாது.

வரிகளை உயர்த்தாமலோ அல்லது போடாமலோ எந்த அரசும் நடைபெற்றதாகச் சரித்திரம் கிடையாது. இதை எதிர்ப்புறத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களே ஏற்றுக்கொள்ளுகிறார்கள். ஆனாலும் அவர்கள் அதே நேரத்தில் பெரும் கோரிக்கைகளையும் எழுப்புகிறார்கள். அரசு ஊழியர்களுக்கு சிறப்புப் படியாக பத்து ரூபாய் அளித்தது போதாது என்று கூறுகின்றனர். அதே நேரத்தில் புதிய வரி உயர்வையும் எதிர்க்கிறார்கள். வரிவிதிக்காமல் எந்த ஒரு அரசும் பெருகிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட முடியாது. மக்கள் நலன்களைப் பேணிக்காப்பதற்குத் தேவையான வருவாய்க்கு உகந்த வரிகளைப் போட்டுத்தான் எந்த ஒரு அரசையும் நாம் நடத்த முடியும்.

வரி விதிப்புகள் என்று சொல்லும்போது, பஸ்களுக்கு உபயோகப்படுத்தும் டீசல் எண்ணெய்மீது வரி போடாமல் மோட்டார் கார்களுக்கும் விமானங்களுக்கும் உபயோகப்படுத்தும் பெட்ரோல் மீதுதான் வரி போடப்பட்டிருக்கிறது. சாதாரண மக்கள் உபயோகப்படுத்தும் பஸ்கள் டீசல் எண்ணெயால்தான் ஓட்டப்படுகின்றன. அவற்றின்மீது வரி விதிக்கப்பட்டால், மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்று அந்த எண்ணெயின் மீது வரி விதிக்கப்படவில்லை என்பது வரவேற்கத்தக்கதாகும். இதே போல, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஐந்து இலட்சத்துக்கு மேல் வாணிபம் செய்யும் நபர் அல்லது நிறுவனங்கள் மீது இருந்துவந்த $7\frac{1}{2}$ சதவிகிதம் வரியைச் சற்றுக் கூடுதலாக்கி, அதன் மூலம் ஒரு கோடி ரூபாய்க்கான வருவாயை எதிர்பார்க்கிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இத்தகைய வரி விதிப்புகள் ஏழை எளியவர்களைப் பாதிக்கும் என்று யாரும் சொல்லிவிட முடியாது. இது போலவே தினத்திற்கு 270 கிலோ மீட்டர்களுக்கு மேல் ஓடும் பஸ்களுக்கு இது வரையில் இருக்கை ஒன்றுக்கு 50 ரூபாய், 55 ரூபாய் என்று இருந்ததைப் பத்து ரூபாய் அதிகப்படுத்தி, அதன் மூலம் 1·6 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது போல, சினிமாப் படக்காட்சி வரியை இரண்டு மடங்காகக் கூட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு கிருஷ்ணசாமி அவர்கள் சினிமாவிற்கு வரி போட்டும், அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று குறிப்பிட்டார்கள். சினிமாக் காட்சிகளுக்கு வரி போடுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஏற்கெனவே சினிமாக் காட்சிகளுக்கு மிகவும் அதிகமாக வரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதற்கு மேலே சர்சார்ஜ் என்று போடப்பட்டு, இப்போது மேலும் அது கூடுதலாக்கப்பட்டு அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ஆறு கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் இங்கே குறிப்பிட விரும்புவதெல்லாம் கலைத் துறையைப் பற்றி நாம் கொஞ்சம் அதிக அக்கறை எடுத்து; கலைத் துறையில் பல புதுமைகளைக் கையாள்வதற்காக, கலைத் துறை மேம்பாடடைவதற்காக, அதற்கென ஒரு தனிக் கமிஷனை, ஒரு குழுவை அமைத்திடல் வேண்டும். திரைப்படத் துறையில், நாடகத் துறையி என்னென்ன வளர்ச்சி காணலாம், அதற்கு என்னென்ன உதல் செய்யலாம், திரைப்படத்தையும் நாடகத்தையும் எந்த அளவி வி சமுதாயத்திற்காகப் பயன்படுத்தலாம் என்பதைப்பற்றியெல்லாம் நாம் சிந்தித்துப் பார்ப்பதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று

[திரு. டி. வி. நாராயணசாமி] [7th March 1970

இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்வது என்னுடைய கடமையாகிறது. இது மட்டுமின்றி திரைப்படத் துறைக்கு என்றும் நாடகத் துறைக்கு என்றும் கணிசமான நிதியை ஒதுக்கீடு செய்து, அது ஒரு மானியம் என்ற அளவில் இல்லாமல் அது திரும்பி வரக்கூடிய அளவிற்கு எவ்வளவோ தொழில்களுக்குப் பணம் ஒதுக்கி, பெரிய நிறுவனங்கள், கார்ப்பொரேஷன்கள் என்ற அளவில் பொதுமக்களிடமிருந்து பணத்தினைப் பங்குகளாகப் பெற்று அரசினர் எப்படி ஒரு கூட்டு நிறுவனமாக அமைத்து நடத்துகிறார்களோ, அதேபோல இந்தத் தொழிலையும், சினிமாத் தொழிலையும் நாடகத்தொழிலையும் அபிவிருத்தி செய்வதற்கான ஒரு நிதியை ஏற்படுத்தித்தந்தால், பேருதவியாக இருக்கும். இப்படிப்பட்ட பணிகள் கலை உலகில் அக்கறை கொண்ட ஒரு அரசினால்தான் முடியும்.

காங்கிரஸ் நண்பர்கள் நம்மைப்பார்த்து திராவிட முன்னேற்றக் கழகத்தினர் நாடகமாடிகள், கூத்தாடிகள் என்று எல்லாம் அன்றைய தினம் சொன்னார்கள்.

அந்த அளவுக்கு நாம் நாடகத்தோடும் திரைப்படத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். இன்றைய தினம் நமது பெருமதிப்புக்குரிய முதல்வராகத் தமிழகத்தை நடத்திச் செல்லுகின்ற மாண்புமிகு கலைஞர் திரு மு. கருணாநிதி அவர்கள் நாடகத் துறையில் ஈடுபட்டு, சிறந்த நாடகங்களைப் படைத்து நடத்தியிருக்கிறார்கள். அதைப் போலவே நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களும், என்னைப் போன்ற தி.மு.க. காரர்களை மந்திரிகளாக்கிய, நம்முடைய ஆசான் பெருமதிப்புக்குரிய அறிஞர் அண்ணா அவர்களுடன் நாடகத்துறையில் அந்தக் காலத்திலேயே நாடகங்களைத் தீட்டி தானும் பவுடர் பூசி வேடம் போட்டு நடித்திருக்கிறார்கள். "சந்திரோதயம், சந்திரமோஹன், வேலைக்காரி" போன்ற நாடகங்கள் எல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள். "சந்திரோதயம், சந்திரமோஹன்" நாடகங்களில் அவர்களே நடித்தார்கள். அப்படிப்பட்ட நாடகங்களிலே நடிக்க ஒரு அரிய வாய்ப்பு எங்களைப் போன்றவர்களுக்குக் கிடைத்து வந்தது. தி.மு.க.-வின் ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்களைத் தொடர்ந்து நமது கலைஞர் நாடகங்களைத் தீட்டினார்கள். திரைப்படங்களை எழுதினார்கள். கலைஞர் எழுதிய பராசக்தி ஒரு பெரிய எழுச்சியை உண்டாக்கியது. அதற்கு முன்னால் வேலைக்காரி திரைப்படம் மிகப் பெரிய மாற்றத்தைத் திரைப்பட உலகிலே ஏற்படுத்தியது. நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் அன்றைய தினம் அதிலே நடித்தார். அதைப்போலவே "பராசக்தி" நம்முடைய கலைஞர் அவர்கள் உருவாக்கிய ஒரு சிறந்த படம். சிவாஜி கணேசன் எடுத்த எடுப்பிலே நன்கு நடித்து மிகச் சிறந்த நடிகர் என்று நிருபித்தார். இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், நம்முடைய அமைச்சர்கள் சிந்தனை செய்து, இந்தத் தொழிலுக்குத் தனியாக நிறுவனம் அமைத்து, தனியாகச் செயல் திட்டம் அமைத்து, அந்த வருமானத்தை உயர்த்தும் அளவுக்குத் திட்டமிட்டு செயல்பட முடியும் என்பதைத்தான் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைச் செய்யாமலிருப்பது ஒரு குறை என்ற அளவிலே இங்கு நான் இதைக் குறிப்பிடவில்லை. இங்கே ஆசிரியர்களைக் பற்றி நம் மதிப்பு வாய்ந்த உறுப்பினர்கள், ஆசிரியர் பதவியிலிருந்து வந்தவர்கள் பேசியிருக்கிறார்கள். அதைப் போலவே ஒவ்வொரு துறையினின்றும் வந்தவர்கள் அந்தந்தத் துறைக்குத் தங்களால் இயன்ற பணிகளையாற்றி அவரவர் கடமையைச் செய்கிறார்கள். அதைப் போலவே, நான் கலைத் துறையிலிருந்து வந்திருப்பதால், இந்தக் கலைத் துறையைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல திரைப்படத்திற்கு பரிசுத் திட்டம் வைத்திருப்பது எவ்வளவோ வரவேற்கத்தக்கதுதான். கடந்த ஆட்சி காலத்தில் அத்தகைய நிலையில்லை. ஆனால் இன்றையதினம் அது ஒரு படி முன்னேற்றம் என்ற அளவுக்கு நமக்கு மகிழ்ச்சி தான். நேற்றையதினம் இங்கு பேசிய பெருமதிப்பு வாய்ந்த என் கலை உலக



7th March 1970] [திரு. டி. வி. நாராயணசாமி]

ஆசான் முத்தமிழ்க் கலாரத்ன டி. கே. ஷண்முகம் சிறப்பாக எடுத்துக் காட்டினார்கள். கலைத்துறை என்பது தனித் துறையாகச் செயல்பட வேண்டும் என்று. மேலும் நம் நாடு கலை அம்சங்கள் பொருந்திய நாடாகும் வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் எல்லாம் நம்மைப் பாராட்டுகிறார்கள். நம் நாட்டில் இருக்கிற கலை உணர்ச்சியைப் பாராட்டுகிறார்கள். உலகத்திலேயே கலைத் துறையில் தலை சிறந்து விளங்கியது தமிழகம் என்பதைப் போற்றிப் புகழ்கிறார்கள். ஆகவே, அதற்கென தனியாக அமைச்சர் இருக்க வேண்டுமென்ற அவர் கருத்தை வெளியிட்டார்கள். அதைப் போலவே தான் அந்தத் துறையிலே தனியாக கவனம் செலுத்துவதற்கு ஆய்வுக் குழு ஒன்றை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். எப்படியெல்லாம் இதை முன்னேற்றலாம் என்று நாம் திட்டமிட வேண்டும். அப்படித் திட்டமிடுவதன் மூலமாக நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு எ. பி. ஜனார்தனம் இங்கே பேசினார்களே இந்த சமுதாயத்திலே இருக்கவேண்டிய அளவு பண்பாடுகள் இல்லை, இந்த நாட்டில் மோசக்காரர்கள் இருக்கிறார்கள், இந்த நாட்டிலே வஞ்சிக்கிறவர்கள் இருக்கிறார்கள், இங்கே சமுதாயப் பண்பு வேண்டும், நல்ல ஒழுக்கம் வேண்டும் என்பதற்காக, அழகாக அவர்கள் எடுத்துக்கூறினார்களே அதை ஏற்படுத்த முடியும். அப்படிப்பட்ட பண்புகளை சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டுவதற்கு கலைத்துறை போன்று வேறு எந்தத் துறையும் இருக்க முடியாது. அந்தக் காலத்தில் பக்தியைப் பரப்பினார்கள் என்றால், கலைத் துறை மூலமாகத்தான் செய்தார்கள். ஆழ்வாராதிகள் பெருமையை எடுத்துச்சொல்வதற்கு மதங்களின் பெருமையை எடுத்துச் சொல்வதற்கு, சைவம், வைணவம் போன்றவற்றின் பெருமையை எடுத்துச் சொல்வதற்கு நாடகங்கள் உதவியாக இருந்திருக்கின்றன. கலை துணையாக இருந்திருக்கிறது. அதைப் போலவே தேசிய எழுச்சியை சுதந்திர வேட்கையை எடுத்துக்காட்டியது கலை. இதைப்போலவே தமிழக அரசு அமைய வேண்டும். தமிழர்கள் தமிழர்களாக இருக்க வேண்டும். தமிழ் உணர்வோடு இருக்க வேண்டும். தரணி எல்லாம் தமிழன் தலைநிமிர்ந்து நடக்க வேண்டும் என்பதற்கு கலைத்துறை மூலமாக நாம் பரணி பாடியுள்ளோம். அப்படிப்பட்ட கலைத் துறையை மேலும் பயன்படுத்தி எதிர்காலத்தில் நாம் மாநில சுயாட்சி பெறவேண்டிய சூழ்நிலையில் நம் மக்களிடத்தில் எழுச்சியை ஏற்படுத்தி நம் தமிழகத்தை மேலும் மேலும் வளப்படுத்துவதற்கு எவ்வித கட்சி வேற்றுமையுமின்றி தமிழகத்தின் மொத்த நலனின் அடிப்படையில் இத்தகைய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இதைக் காங்கிரஸ் நண்பர்களும் நிச்சயமாக எதிர்க்க மாட்டார்கள். அப்படி எதிர்த்தால், அவர்களுக்கு நாம் தக்க முறையில் விளக்கம் சொல்ல முடியும். காங்கிரஸ்காரர்கள் நாம் எதைச் செய்தாலும் எதிர்க்கத்தான் செய்வார்கள். ஆகவே, அப்படிப்பட்ட கலைத்துறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்று ஏற்கெனவே மன்றத்தில் நான் கூறியுள்ள இந்த நல்ல கருத்துக்களுக்கு அவர்கள் கொஞ்சம் பெரிய மனது வைத்து நல்லதொரு முடிவினை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

***திரு. ஆர். சாம்பசிவம் :** தலைவரவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என் கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே இந்த வரவு செலவுத் திட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம், அது மதியோடு நிதி சேர்ந்து அமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம். அது கொடூரமான கையிலே சிக்கிக் கொள்ளாமல் கருணை படைத்த கையில் சிக்கிக்கொண்ட காரணத்தால், அது கருணை வாய்ந்த முதல்வர் கலைஞர் தலைமையில் மதியும், நிதியும் சேர்ந்த ஒரு உயர்ந்த பட்ஜெட் என்று சொன்னால், அது மிகையாகாது. அப்படிப்பட்ட அந்த வரவு செலவுத் திட்டத்தை கடந்த 8 நாட்களாக அங்கத்தினர்கள் பாராட்டியும் பாராட்டாமலும் பேசிக்கொண்டிருந்தார்கள். பாராட்டவேண்டிய

அம்சங்கள் பல இருந்தும் கூட பாராட்டாமல் இருந்து வந்திருக்கிறார்கள். அதற்காக வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளாமல் இருப்பதற்கில்லை. நல்லதைப் பாராட்ட வேண்டுமென்று எங்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிவிட்டுச் சென்றார்கள். அதன்படி நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோது, நல்லதைப் பாராட்டியும், குறைகளைச் சொல்லியும் திருத்தம் சொல்லி வந்தோம் என்பதை எடுத்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த பட்ஜெட்டில் எல்லாவித கண்ணோட்டத்துடனும், குறிப்பாக எழைகளுக்கு எந்த அளவுக்குச் செய்ய வேண்டுமோ அந்த அளவுக்கு இந்தத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருப்பதை விரிவாகப் பேசியிருக்கிறார்கள். நேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்இதை விடச் சிறந்த பட்ஜெட் இந்த உபகண்டத்தில் வேறு எங்கேயாவது உண்டா என்று கேட்டார்கள். நான் இன்னும் ஒரு படி அதிகமாகப் போய்ச் சொல்லுவேன். இதைவிடச் சிறந்த மந்திரிசபை இந்த உபகண்டத்தில் உண்டா என்று. எனென்றால் எழைகளாகவே பிறந்து எழைகளாகவே வாழ்ந்து, எழைகளுக்காகவே பாடுபட்டு, எழைகளுக்காகவே இன்னும் பாடுபடுகிற அரசை அமைத்திருக்கிற ஒரே கட்சி, ஒரே ஸ்தாபனம் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர வேறு இந்த உபகண்டத்தில் இல்லை என்றே சொல்லலாம். வேண்டுமானால் மேற்கு வங்கத்தையும் கேரளத்தையும் கூறலாம். ஆனால் அங்கே கூட்டாட்சி நடப்பது மட்டுமல்ல; அது நிலையற்ற, நிம்மதியற்ற ஆட்சியாகவும் இருக்கிறது. இங்கே நிலையான நிம்மதியான ஆட்சியாக இருப்பதுமட்டுமல்ல. உருப்படியான காரியங்களை நல்ல முறையில் செய்கிற ஆட்சியாகவும் இந்த நாட்டில் அமைந்திருப்பது நாமெல்லாம் செய்த நற்றவம் என்று தான் சொல்ல வேண்டும். இந்திய உபகண்டத்தில் எல்லா மாநிலங்களிலும் அமைதி நிலவாத நேரத்தில் இந்த ஒரு மாநிலம் தான் முழு அமைதியோடு, அரசியல் பண்போடு, ஜனநாயக உணர்வோடு, செயல்படுகிறது என்றால், அதை நாம் எல்லாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அதற்குக் காரணம் நாங்களெல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த வழியில் செல்கிறவர்கள்; அதே வழியில் செல்லுகிற கலைஞர் அவர்களையும் அவர்கள் கூட இருக்கிற மற்ற அமைச்சர்களையும் பெற்று, அவர்கள் நம்மையெல்லாம் நல்ல முறையில் நடத்திச் செல்கிறார்கள் என்பதைத் தவிர, வேறு எந்தக் காரணத்தைச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. இன்னும் எங்கள் தலைவர் முதலமைச்சர் அவர்கள் "குளு குளு" காரில் போகிறார் என்று குறை கூறிப் பேசியிருக்கிறார்கள். அது அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை. இன்னும் ஒரு படி போய் முதலமைச்சர் என் டாக்டரிடம் உடம்பைக் காட்டுகிறார் எனறு கூடக் கேட்கலாம் அவர்கள். இதை எல்லாம் முதலமைச்சர் அவர்கள் பொருட்படுத்தாமல், மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைவிட்டு வெளியேறுவது போலில்லாமல், இந்தத் தமிழகத்துக்குச் செய்ய வேண்டிய அரிய பெரிய காரியங்கள் பல இருப்பதால், அவர்கள் உடல் நலத்துக்கு என்னென்ன வேண்டுமோ அதை எல்லாம் செய்துகொண்டால் தான் தமிழ் மக்களுக்குத் தெம்பும் உற்சாகமும் இருக்குமென்று அவர்களுக்கு நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த பட்ஜெட்டிலே எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்திருப்பது நில உச்ச வரம்புச் சட்டம், எற்கெனவே 30 எக்கராக இருந்ததை இப்போது 15 எக்கராகக் குறைத்திருப்பது தான். உண்மையிலேயே இது குறிப்பாக நடுத்தர விவசாயிகள், சிறு விவசாயிகள் இவர்களால் பாராட்டி வரவேற்கப்படுகிற திட்டமாகும். சிலர் சொல்லுகிறார்கள். நிலம் பிரிக்கப்பட்டுவிட்டால், சிதறிப்போனால், சரியாக விவசாயம் செய்ய முடியாது என்று. அந்தக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். "அகல உழுவதை விட ஆழ உழுவது மேல்" என்று. "எர் செய்யாததை எரு செய்யும்" என்று. நிலம் குறைந்த அளவில் இல்லாமல், பரந்த அளவில் இருந்தால் ஆழ உழமுடியாது. அதற்கு





எரு நிறையப் போட வேண்டும். அப்படி எரு போட்டு நிலத்தின் வளம் குன்றாமல் இருக்க வேண்டும் என்றால், நிலம் பரந்த அளவில் இருக்கக் கூடாது. இந்த இரண்டு காரணங்களுக்காகவாவது நிலத்தைத் துண்டாக்குவது தவறல்ல. பெரிய நிலப்பிரபுக்கள் கூட, 15 எக்கர் நிலத்துக்கு மேல் இருந்தால் கூட, சொந்தமாகச் சாகுபடி செய்கிறவர்கள் மிக மிகக்குறைவு. அப்படிச் சாகுபடி செய்யவும் முடியாது. அப்படி அவர்களே நேரடி விவசாயம் செய்யாமல் இருக்கும்போது, பிரித்துக் கொடுப்பது எப்படித் தவறாகும்? நேற்றுப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு ராமசாமி படையாச்சி அவர்கள் சொன்னார்கள். உயர்ந்த நிலைமையில் சினிமாக் கொட்டகைக்காரர்கள், வியாபாரிகள் எல்லாம் சுகமாக வாழும்போது, என் நிலப்பிரபுக்கள் மட்டும் வாழமுடியாமல் செய்வதற்கு இந்தச் சட்டத்தைக்கொண்டு வருகிறீர்கள் என்று கேட்டார்கள். உண்மையில் நிலத்திலிருந்து வருகிற வருமானத்தை மட்டும் வைத்துக் கொண்டு அவர்கள் பிரபுக்களாக வாழ முடியாது. 200 எக்கர் நிலம் வைத்துக்கொண்டிருந்தால் கூட, சிறு வியாபாரிகள் வாழும் வாழ்க்கையைக்கூட வாழ முடியாது. நிலப்பிரபுக்களாக இருந்துகொண்டு அதற்கு மேலும் எதாவது ஒரு தொழில் செய்தால் தான் வாழ முடியும். வெறும் நில வருமானத்தை வைத்துக் கொண்டு, ஆடம்பரமான வாழ்க்கை வாழ முடியாது என்பது நிதர்சனமான உண்மை. அப்படி இருக்க நிலத்தை எடுத்துக்கொண்டு, அதற்கான பணத்தை வாங்கித் தொழில் செய்தால் நாட்டுக்கும் நன்மை, வேலையில்லாத் திண்டாட்டமும் தீரும், அவர்களும் உல்லாசமாக வாழலாம் என்பது தான் என் கருத்து.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி**: அவர்களுக்கு பஸ் பெர்மிட் கொடுக்கச் சொல்லுங்கள்.

**திரு. ஆர். சாம்பசிவம்**: விவசாயிகள் தொழில் நடத்தத் தேவையான, உற்சாகத்தை அளிப்பதாகத் தொழில் அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் தொழில்கள் எராளமாக எற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. அதனால் அவர்களுக்கு ஒன்றும் சிரமம் இருக்காது என்று கருதுகிறேன். மேற்கொண்டு இந்த உச்ச வரம்பில் கரும்பு, சவுக்கு, தென்னை, மாந்தோப்பு போன்றவைகளுக்கு விதிவிலக்கு அளிக்கக்கூடாது என்பது தான் என் கருத்து. எனென்றால் ஆண்டாண்டு தோறும் விலையேற்றம் காரணமாக, இந்தத் தோப்புகளிலிருந்து அதிக வருமானம் அடையும்போதும் ஆண்டுதோறும் உழுது பயிரிடும் நிலத்தை விட அதிக வருமானம் அடையும் போதும் என் விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்பது தான் என் தாழ்மையான கேள்வி. ஆனால், இந்த நிலத்தை எடுக்கும்போது, அதற்குரிய பணத்தை உடனடியாக கொடுத்தால் தான், அதைக் கொண்டு எதாவது தொழில் ஆரம்பிக்கவோ அல்லது வேறு நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தவோ முடியும். அவர்களுக்குள்ள பயம் எல்லாம் பணம் வருமோ வராதோ, சிதறுண்டு போகுமோ, ஆண்டு ஆண்டாக, கொஞ்சம் கொஞ்சமாகக் கிடைக்குமோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. அந்த ஐயப்பாட்டைப் போக்கும் வகையில், எதாவது ஒரு, வழியில் உடனடியாக திருப்பிக் கொடுத்தால், அதுவே பெரிய உபகாரமாக இருக்கும் என்பது என் கருத்து.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றிப் பலரும் பேசினார்கள். உண்மையில் படித்தவர்கள் எல்லாம் சர்க்கார் வேலை செய்ய வேண்டுமென்றால், முடியாது. படிப்பது சர்க்கார் வேலைக்காகத் தான் என்றில்லாமல் படிப்பது அறிவு வளர்ச்சிக்காக தொழில்கற்றுக் கொள்வதற்காக என்ற முறையில் இருக்க வேண்டும். அந்த அளவில் படிப்பின் கொள்கையை மாற்றவேண்டும் என்ற நிலைமை இன்றைக்கு இருக்கிறது. எனென்றால் படித்தவர்கள் எல்லாம் சர்க்கார் வேலை தேடித் திரிகிற காலம் இதுவல்ல. அந்த அளவுக்கு சர்க்கார் வேலை கொடுக்க அரசாங்கத்தில் நிதி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு பொன்னப்ப நாயுடு அவர்கள், படித்தவர்களுக்கு வேலை இல்லை

என்றால், வேலையில்லாத் திண்டாட்டம் என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு வேலை இல்லாத நேரத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதை உணராமல், அதற்கு என்ன வழி என்று பார்த்து மாற்று வழி சொல்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். உண்மையில் கிராமவாசிகளுக்குத் தான் அது நல்ல முறையில் புரியும். அதையும் உணர்ந்து நல்ல முறையில் வேலை தேடித் தரவேண்டும் என்றால், தொழில்களை இன்னும் அதிகமாகப் பெருக்க வேண்டும் என்று சொல்வதில் காரணம் இல்லாமல் இல்லை. படித்தவர்கள் கடமைகளை மறந்து உரிமைகளை மட்டும் கோராமல், கடமையோடு உரிமையையும் இணைத்துச் செயல்பட்டால் எதிர்காலத்தில் நாட்டுக்கு நன்மை எற்படும்.

இந்தி மொழிப் போராட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மொழிக் கொள்கைப் பற்றிப் பல முறை விளக்கிய பிறகும் கூட இன்னமும் சந்தேகம் இருப்பது போல், நாட்டிலே பேசி வருகிறார்கள். முதன் முதலில் இந்தியை நுழைய விடமாட்டோம் என்று பேசியது கழகம் தான் ; அதற்காகப் பல கஷ்டங்களை அனுபவித்ததும் இந்தக் கழகம் தான் ; என்னைப் போன்றவர்கள் ராஜத்துரோக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தோம், கடந்த ஆட்சியில். அப்படியிருந்தும் இந்திக்காக நாங்கள் போராடாதது போலவும், அவர்கள் தான் இந்தியை எதிர்ப்பது போலவும் பேசுவது உண்மையில் நியாயமாகத் தெரியவில்லை. நாங்கள் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். இந்தி எந்த ரூபத்தில் வந்தாலும், நுழைய விட மாட்டோம் , அதற்காக இந்த அரசுப் பதவியை இழக்கவும் தயார் என்று முதலமைச்சர் அவர்கள் பலமுறை சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்தியை எக்காரணத்தாலும் நுழைய விட மாட்டோம் என்று சொல்லுகிற எங்களைப் பார்த்து, இந்தியை எதிர்த்து நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்பவர்களை என்ன சொல்லுவது என்று எனக்குத் தெரியவில்லை. சுருக்கமாகச் சொன்னால், அதைக் கோமாளித்தனம், அரசியல் வேடிக்கை என்று தான் சொல்ல வேண்டும். மாநில சுயாட்சியைப் பற்றியும் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சி அடைய எல்லாவிதப் போராட்டத்தையும் நடத்தத் தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குத் தகுந்த நேரம் வந்து விட்டது. அடுத்த 1972-ல் மத்தியிலே ஒரே கட்சி அரசு அமையுமா என்ற சந்தேகம் இருக்கிறது. அப்படிப் பல கட்சிகளின் கூட்டாட்சி அமையும்போது இந்த மாநில சுயாட்சிக்கு நல்ல ஆதரவு கிடைக்கும். அடுத்து பல கட்சிகள் கூட்டு சேர்ந்து இந்த நாட்டில் கூட்டாட்சி அமையக்கூடிய சந்தர்ப்பம் வரும்போது, அந்தக் கூட்டாட்சிக்குப் பிரதமராக வரும் வாய்ப்பு கலைஞர் அவர்களுக்குத் தான் உண்டு என்று திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன். இந்தியப் பிரதமராகக் கலைஞர் வருவது மட்டுமல்ல, இந்தியாவின் ஜனாதிபதி யார் என்று தீர்மானம் செய்கிற பெரிய பொறுப்பும் அவருக்குத் தான் வரப்போகிறது என்றால் மிகையாகாது. அப்போது அவர் கையாலேயே மாநில சுயாட்சிக்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்து, அதிலே கையெழுத்துப் போடும் வாய்ப்பைப் பெறப் போகிறார்கள் என்று இந்தச் சபைக்கு முன்னெச்சரிக்கையாக மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். காங்கிரஸ்காரர்கள் இன்று இரண்டு பிரிவாகப் பிரிந்த பிறகு, அவர்கள் பேசும் நிலைமையைப் பார்த்தால், வேதனையாக இருக்கிறது. அவர்கள் எதிர்பார்த்தார்கள். நாம் பிரிந்து விடுவோம், திராவிட முன்னேற்றக்கழகம் இரண்டாக உடைபடும், நாம் சிரிக்கலாம் என்று நினைத்தார்கள். நினைக்க நனைக்கு என்று கிராமத்தில் சொல்வது போல் நடந்து விட்டது. அதைப் பற்றிச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. காரணம் நாம் அழிவதை அவர்கள் எதிர்பார்த்தவர்கள், அவர்கள் பிரிந்து விட்டார்கள். ஆனாலும் நாம் நினைக்கிறோம். அவர்கள் மறுபடியும் ஒன்று சேர்ந்து நல்லபடியாக இருக்க வேண்டும் என்று தான். அடுத்து, பின் தங்கியவர்களைப் பற்றிச் சொல்லும்போது, சில சமூகத்தைக் குறிப்பிடுவதாக இருக்கிறது. பொருளாதாரத்தில் வசதி குறைந்தவர்



கள் பின் தங்கியவர்கள், மற்றவர்கள் முற்போக்கானவர்கள் என்ற முறையில் இருந்தால், ஜாதி வித்தியாசம் எல்லாம் மறைந்து விடும் என்ற என் தாழ்மையான கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால் இந்த அரசியல் பணக்காரர்களுக்கு இருக்கும் பிடிப்பு தளர்ந்து ஜாதி வெறியும் ஒழிந்து ஏழைகளுடைய அரசாங்கமாக இது மாறும் என்று கூறிக் கொண்டு இங்கு பேச வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

* THIRUMATHI S. MANJUBHASHINI : Mr. Chairman, Sir, I wish to place a few points not touched by any of the previous speakers for your consideration and I request the hon. Members opposite to give me the opportunity to speak without interruption.

Health, as you are aware, is the most important factor in the life of any person, especially that of a child. Sir, the other day a question was asked about medical examination for children in the Primary and Pre-Schools, and it was answered that there was no adequate provision for looking after the children in the schools. Sir, if this health problem is decentralised and extended to the villages, and if medical examinations are made for little children in the 'Balavadis' which have been established by the Government, who suffer from certain fundamental and congenital difficulties, and if they are diagnosed and later on if treatment is given, they will become normal children like any other normal child. I hope the Government will give serious thought to this important matter.

Sir, I wish to say a few words about Family Planning. I was a Member of the Estimates Committee about two years back and we went round many of the hospitals to find out the number of operations performed and the number of persons, who availed themselves of the opportunities to get themselves sterilised. But on going through the staistics furnished by the officials, we found that out of one thousand operations performed, not even one person of any other religious community, except that of Hindus, had under gone the operation. There is a great deal of resistance on the part of Catholics and Muslims. There is a lacuna also in implementing the Family Planning Programme because the Civil Code prevents persons of Hindu and Christian origin marrying more than one wife. But certain privileges are given to the Muslim Community and Muslims are able to marry four wives, while a Hindu or a Christian can marry only one. Therefore, if a Hindu gets one child a year by one wife, a Muslim gets four children by four wives.

MR. CHAIRMAN : What about the 'Twins' ?

THIRUMATHI S. MANJUB ASHINI : Thank you, Sir, for the addition. Sometimes, it is twins, triplets and quadruplets alo (laughter). Therefore, it is high time that our State, which is

[7th March 1970

so particular about Family Planning and which is successfully implementing the schemes, should think of a Common Civil Code, which should be applicable to all the people, irrespective of the religious community to which they belong.

MR. CHAIRMAN : They should marry one wife at a time.

THIRUMATHI S. MANJUBHASHINI : ...... marry only one wife at a time. I stand corrected, Sir. I would earnestly request the Government to think about this proposition. There were some letters to this effect by Muslim women some time back in the papers wherein they had said that this problem did exist and that they were facing certain difficulties because of this handicap. I congratulate the women of this community who have come forward to brave the anger of their men and to present this picture of their lives and their misery before the public.

Then, family planning is taken advantage of by the persons who are prosperous, who can afford to have four children and give them all the facilities that should and ought to be given to children that are born. Sir, a prosperous person—I suppose even Ministers are included in it—will restrict the number of children to two or three whees the man in the street gets six and seven children and if asked, there is resistance to get himself or his wife sterilised. Therefore, I would suggest to the Government to consider the proposition, since free education is given in this State, whether it is to the advantage of the Government to go on continuing giving free amenities to the public who go on begetting children, but who are unable to look after them and to give them the proper facilities for education, health and other things which are most necessary for a child that is born to-day to grow up into a proper citizen to-morrow. I would suggest that after three children, which is the officially accepted number—I think the Government have now decided upon it—the Government should say that they would levy school fees for the fourth child, that they would not give maternity leave to women in service if they are going to have more than three children, because this is the only thing that people will listen to and they should not go on continuing to give free education to six or seven children, free facilities and everything else so that they will have practically no responsibility whatsoever. If this be done, I am sure people who beget children without giving a thought to it would consider, " Look, my fourth child will be an expensive proposition. I will consider whether I should have it or should not have it."

Then, another vexatious thing which is there is the slums in the City. Some of us have been social workers in the City, doing a lot of work among the poor and the needy, looking after children that are not wanted, creating institutions for them, and raising their standard of life so that they or one of them will become one day, who knows, the Chief Minister of Tamil Nadu. Now, these



7th March 1970]

institutions are there and they are surrounded by slums. There is so much of stink, so much of filth and to whomsoever you may protest, nothing is being done. In Thyagarayanagar, on one of the most famous roads called the Gopathy Narayanaswami Chetty Road, there is a Deaf and Dumb Convent which houses 300 to 400 children, there is the Anjuman Orphanage which houses a larger number, there is the Bala Mandir which has got 500 children, there is a high school which has got a thousand children, and there is an elementary school which has got 700 children. They are all practically surrounded by slums. Slum people do not have any consideration for the cleanliness of the City. Now, I find that the ground of G. N. Chetty Road is being levelled by a bulldozer and more slums are being created. This particular slum is constructed on the drain water channel. The sewage of these slums passes right into the rain water channel. There was a scheme before when the last Government was in power, to remove this slum entirely away from this area. Therefore, I would request the Government to consider whether it would not be possible for them to shift this particular slum which is on the entrance of Thyagarayanagar G. N Chetty Road to some other area and give them a better place to live in and teach them to live better. Now, on G.N. Chetty Road there are huts temporarily on both sides of the road and one can hardly pass through that road without vomiting. Then, there is the street to the Gurudwara and the Governor comes almost daily to that area and when he comes there is a lot of bleaching powder put there to take away the smell. That is all that is being done. Therefore, I would request the Government to give it a lot of thought before constructing these tenements which, I think, are being contemplated, and clear up that area and give that land to the Orphanages that are there so that they may make this Orphanage a better place for children to live in and grow up as proper citizens.

Then, much was said about prices and fair taxation by many of our Members. What strikes me is this. I am not talking for this party or that party. But there are several people of the lower middle classes who are the foundation on which our entire society is built. They are the worst sufferers in this taxation business. Prices are spiralling every day and nothing is being done about it. Previously if it cost an ordinary lower middle class person about Rs. 50 a month, he has to spend Rs. 250 now. He cannot go to Government and say that this is not enough. He cannot go to some other philanthropic person and say, " Look, I am not able to make both ends meet. So, kindly give me some charity." These people have to sit and starve and starve their children. This is not the way that we should deal with this. We must give some relief to the lower middle class people. The lower middle class people, as I said, have to go to the office and have got certain responsibilities to the community at large. I would quote one instance. Next to the Deaf and Dumb Convent

there is a drain water channel. There is a hut there with eight buffales. One buffalo costs Rs. 2,000 and if a person has got eight buffaloes, that meas that that person is worth Rs. 16,000 and he or she gets a large income over it and that person lives in a slum. I quote this one instance. There are many such instances where Government of India employees getting a very decent wage and getting dearness allowance also get the hutments. Whenever things are being done for the very poor people, the Government should take care to give charity where it is due and not do it just because they live in slums.

With these words, I conclude.

THIRU V. ISVARMURTI: Mr. Chairman, Sir, I take this opportunity to offer some of my remarks on the Budget presented by the Hon. the Minister for Finance. The Budget, on the whole is quite welcome but I would like to point out some of the areas of discontent that it tries to play down. As a preface, Sir, I would like to say that, as it stands, the Budget has some built-in contradictions. It serves some areas well. For instance, it has come out with a realistic policy of levying some taxes. For long the Government gave the impression that it did not believe in taxes. But now fortunately the Government believe that taxes are an inevitable part of the economic development. While levying taxes, the Government have not come forward with plans for economic development. That is the reason why prices are rising. I think the time has come when the Government should realise the basic factor for the rise in prices, namely, that unless they come with definite plans for economic development and levy taxes prices are bound to rise. This contradiction is, as I say, reflected in the polarisation of political forces in the country. For instance, after the split in the Congress party at the Centre, the ruling party in Tamil Nadu finds itself in a dilemma. We are not able to say whether this Government belongs, say, to a sort of rightist party or to a sort of leftist party. This dilenima simply arises because it believes in giving protection to the Government at the Centre which is heavily dependent on this party. At the same time, the party at the Centre does not believe in making its stand clear so that till 1972 elections the Government will be faced yith this dilemma. On the one side, it says it believes in Socialism and on the other side, it says it wants the Centre to survive. That is the muilt-in contradication because otherwise, the Centre will be finished.

I want to point out, Sir, that the polarisation of forces, political forces in the country is already making itself felt in Tamil Nadu. For instance, the Hon. the Chief Minister has come forward with a thesis on which I would like to offer a few remarks. The Hon. the Chief Minister has said that the future belonged to the regional parties and that his party believed in autonomy for the State and co-existence or coalition at the Centre. If the



coalition at the Centre is to be a reality, then this Government should make up their mind whether they are going to support the 'Indicate' in the long run or replace the 'Indicate' and build up the political forces on a different line on some definite political principles so that at least before the 1972 elections, the picture would become quite clear. Again, Sir, the polarisation that is taking place at the national level has had its impact on some other political parties in Tamil Nadu. Already we feel that this United Front in Tamil Nadu is not going to survive. The Swatantra party, the S.S.P. and the C.P.M. are feeling that they must now make up their mind with reference to what is happening at the national level. The Forward Block here which was with the Swatantra party has already taken a stand at the national level and decided to function as a separate unit, so that it has become clear that depending upon the forces that operate at the national level, the parties at the State level have also to take their stand. Therefore, until this is made clear, the party in power will also definitely be tied to several of the built-in contradictions that we see reflected in the Budget. The Government would be forced on the one side to levy taxes and on the other side, they will be handicapped in the implementation of some definite economic programmes. For instance, take the question of greater autonomy for the States. The Government have set up a Commission to examine this question. I feel that this is the opportune time for the Government to press for many of their projects in the State. If actually the projected coalition at the Centre takes place, this Government will become one of the partners of that coalition and on the basis of that coalition, the Government will be tied to fixed commitments of the coalition partners. They will demand equal autonomous powers with the other States and in that process the party in power, the D.M.K. will find its hands tied up. So, Sir, before the actual coalition takes place, now when the D.M.K. is very important for the very survival of the Government at the Centre, it must press some at least, if not all, of their projects, and get them sanctioned for the State. The Government need not wait for the Commission to make its recommendations. It will take many months for the Commission to finalise its recommendations and even if it comes up with definite proposals, they will be only of academic importtance. Political consequence depends on political force and political action. I think the Government should fight for all their rights now, immediately when they are in a strong position and not postpone it to be negotiated on the recommendations of the Commission.

Sir, the Hon. the Chief Minister's thesis that the future belongs to the regional parties is a flimsy one. I do not think that this thesis can stand a minute's scrutiny when one considers contemporary events in India. When once you take a particular and definite stand at the national level, whether you belong to the

[Thiru V. Isvarmurti] [7th March 1970

region or any language area or a religion even, becomes immaterial. But if you say you are going to support the 'Indicate', then your stand becomes quite clear. But if you say "coalition at the Centre", then you should become a partner of the coalition consisting of two, three or more parties. Even in a coalition, there are bound to be two opposing forces, one ruling and the other the Opposition force. This thesis, that the future belongs to the regional parties, will, therefore, become a very unsupportable idea. It won't stand the test of time. I trust, on the oher hand, that the future belongs to the two sets of forces.

THIRU G. SWAMINATHAN : May we know what the two sets of forces are?

MR. CHAIRMAN : Why not come to practical politics, the Budget?

THIRU S. RAGHAVANANDAM : It is not coalition at the Centre. We have said that it should be a federal set-up.

MR. CHAIRMAN : The hon. Members are all looking too far ahead.

THIRU S. RAGHAVANANDAM : Because one should see beyond one's nose, Mr. Chairman.

THIRU V. ISVARMURTI : Sir, now coming to the problems, all teachers, of course, welcome the attitude of the Government towards solving their problems. In regard to integration, I wish to call the attention of the Hon. the Minister for Education to the fact that it requires some clear thinking. For instance, the other day the Hon. Minister has given the impression that so far as integration of the services of the former district board schools is concerned, the integration will have effect from 1st April 1966. But from what the Director of School Education seems to have said two or three days ago, to the representatives of teachers, it appears the integration will take effect from the date of implementation of the scheme. There can be no harm in effecting the integration from the date the scheme was actually implemented because only a limited number of schools are involved.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : The present decision is that it should take effect from 1st April 1966.

THIRU V. ISVARMURTI : But I think there is nothing wrong in reconsidering the issue because even if we bring about the integration on the date of actual implementation of the order, I think there will be only limited scope for the former teachers of District Board Schools in the matter of promotion and other benefits. So, I would like to plead on behalf of the State Teachers and Headmasters Council that the integration may be effected from the date of actual implementation of the scheme.



7th March 1970]

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Sir, only after taking the concent of the Headmasters Association, we came to the decision that the integration should take effect from 1st April 1966.

THIRU V. ISVARMURTI : Two months ago I met the Director and there was a discussion. It seems they have agreed that there is no harm in effecting it. I would like the Government to reconsider whether this can be complied with.

About the Selection Grade for the former District Board teachers, it seems that they are going to follow the one-third principle which applies to the Government High School. I think if we adopt this one-third principle, most of the teachers belonging to the former District Boards will have no opportunity of enjoying any promotion whatever. Instead of applying this irrational principle of one-third, I think we can adopt the rational principle of giving promotion to Selection Grade to all teachers who have put in 10 years of service. As the Government are aware, in Kerala this is done. I think, there, teachers who have served for twelve years are automatically given the Selection Grade. I think in Tamil Nadu too, we can follow this principle of giving promotion after ten years and I would like to request the Hon. the Minister for Education to consider this also.

About teachers I would like to draw attention to the long-standing demand of the Tamil Pandits. The Tamil Pandits, as the Government are aware, are demanding for a long time that those who have got first grade training qualification and who work as second grade tamil pandits may be given the first grade salary. So, I request the Hon. Minister to consider payment of first grade salary to those Tamil Pandits and once this demand is conceded, I think almost all the problems of high school teachers, as far as salaries are concerned, would have been solved. So, I hope the Hon. Minister will consider the question of giving the Second Grade Tamil Pandits with the First Grade training qualification the same salary as First Grade Pandits.

I need not here talk anything about education. But recently I met Dr. Malcolm Adiseshayya and I heard from that gentleman that all the money that the UNESCO had given for Science teaching in India had been confined to the schools in the Delhi area. I think the scheme is operating for the past five or eight years and this money has not come to any of the States. I think we have got excellent relations with Dr. Malcolm Adiseshayya of the UNESCO. I think that the Hon. Ministers are going to Paris to attend the Tamil Conference and that they would like to take this opportunity of making the UNESCO give grant to improve Science teaching which badly needs improvement. I think the Hon. Minister will consider this suggestion also.

[Thiru V. Isvarmurti] [7th March 1970

Lastly, I want to point out to the Hon. Minister the problems of the Electricity Board Engineers. I think the Electricity Board Engineers are the most urbane and civilised sector of our intelligentsia and I think the situation on that front is becoming rather unpleasant. They are giving advertisements in papers, not in ordinary papers, but in papers belonging to different political parties, and it creates a very unpleasant situation. I think their demand is quite reasonable. After all, they compare themselves, not in absolute terms, but with what prevails in other States. I think our State pays the lowest salary to our Electricity Board Engineers. I think it needs no further persuasion. Recently the papers gave the impression that the Chief Minister had given an assurance to raise the salaries in the next Budget, and after two or three days, that newspaper report was denied. So, I do not know what is the position actually now.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நான் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவதை நிதி நிலை அறிக்கையிலே அறிவிப்பதாகச் சொல்லவில்லை. அவர்களுடைய கோரிக்கைகளை அனுதாபத்தோடு கவனித்து, விரைவில் சாதகமான முடிவை அறிவிக்கிறேன் என்று சொன்னேனே தவிர, நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடுவதாகச் சொல்லவில்லை.

THIRU V. ISVARMURTI : I request the Hon. the Chief Minister to look into the matter and give the Engineers a fair deal because as we all know, to get very high marks in Mathematics is a very big thing and all those who get the highest marks in the subject take to engineering education. I think the best brains in our society are all engineers.

About agriculture, I welcome the reduction of ceiling to 15 standard acres. Irrespective of political implications, I welcome it as a progressive measure. But the revenue administration of the villages is so outmoded. Even now as a Member of the Legislative Council, I find my Village Karnam and my Village Munsif are treating me like an ordinary, illiterate farmer. My Karnam demands, "If you do not give me money, please give me your car for to-day". They are trained to ask for bribes. They do not feel ashamed to ask for bribes. If I say my car is engaged, he says, "Please lend me your tractor for to-day". I lent my tractor and got his signature. I think the Hon. the Minister for Finance announced that he would improve the working of the village administration and it is high time that we do something to change the system, to do away with these old people and put some educated young men so that there will be some civilised approach to the problem. I was the other day very much impressed by the proposition to abolish the Board of Revenue. Instead of abolishing the Board of Revenue, the system at the grass roots may be changed. Jamabadi has been abolished. I think no one is interested in Jamabandi. I think the revenue administration needs some overhauling at the grassroot level, at the village level.



7th March 1970]

**திரு. கே. அறிவழகன் :** தலைவர் அவர்களே, கிராம அதிகாரிகள் கர்ணங்கள் பல்வேறு முறையிலே உறுப்பினர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் பலவிதச் சலுகைகளை எதிர்பார்க்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு ஈஸ்வரமூர்த்தி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய ஊதியங்களும் உயர வேண்டும் என்று குறிப்பிடுகிறாரா என்று நான் அறிய விரும்புகிறேன்.

THIRU V. ISVARMURTI : I come now to the working of the Land Mortgage Banks. Only one thing I want to bring to the attention of the Hon. Minister. If we go for a loan to a scheduled, commercial nationalised bank, we have to produce a 'no objection' certificate from the Land Mortgage Bank. The Land Mortgage Banks have these days become very jealous of their importance. If the farmers want to borrow from the nationalised banks, the Land Mortgage Banks insist that they should never approach the Land Mortgage Banks for a loan. So, they refuse to give this 'no objection' certificate on flimsy grounds. I think the Government should lay down as a policy that once we have passed a law that the Land Mortgage Banks will have the first charge on the property, there should be no objection from the point of view of the banks to issue a 'no objection' certificate. I think the farmer should be relieved from all these pinpricks that are still a major hurdle for genuine economic operation and for genuine agricultural operation. As a practising agriculturist, I want to point out that even if we reduce the ceiling to 15 standard acres, we can do good agriculture provided we are relieved from the shackles in which we find ourselves.

With these few remarks, I rise to welcome this Budget.

MR. CHAIRMAN : The hon. Member Thiru K. Arivazhagan. (After a pause). If the hon. Member wants, he can speak a little later or day after to-morrow.

**திரு. கே. அறிவழகன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையில் பல்வேறு சிறப்பான அம்சங்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துக் கூறினார்கள். அவற்றில் மிகச் சிறப்புக்குரியது ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பல்வேறு சலுகைகள் ஆகும். பல்லாண்டுகளாக அவர்களுக்கு மறுக்கப்பட்டு வந்த சலுகைகள் பல்லாண்டுகளாக அவர்கள் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டும் கொடுக்கப்படாத சலுகைகள் இன்று அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமின்றி ஆசிரியர்களுடைய பணி மிகச் சிறப்புடையதாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடும் முறையில், அந்தப் பணி சிறக்கும் வகையில் டாக்டர் பால் அவர்கள் தலைமையில் அமைத்துள்ள குழுவில் நானும் ஒரு உறுப்பினர் என்ற முறையில் தனியார் பள்ளி ஆசிரியர்கள் எவ்வளவு தொல்லைகளுக்கும் இன்னல்களுக்கும் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை அறிந்திருப்பதால், இந்தக் குழுவின் பணிகளால் அவர்களுடைய துயர் துடைக்கப்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தம்முடைய பட்ஜெட் உரையில் நமது நிதி அமைச்சர் அவர்கள் மத்திய மாநில உறவுகள் பற்றி மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய மாநில உறவுகளைப் பொறுத்த வரையில், அண்ணா அவர்களே முன்பு நன்கு எடுத்துரைத்திருக்கிறார்கள். அதுபோன்ற மத்திய மாநில உறவுகளில் இன்னும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டிய

நெருக்கங்களையும் தவிர்க்க வேண்டிய தன்மைகளையும் மிகத் தெளிவாக தமது நிதி அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பண்டித ஜவஹர்லால் நேரு இருந்த காலத்தில், அப்போதிருந்த இந்திய நாட்டின் அரசியல் அமைப்பைப்பற்றி பொருளாதாரப் பேராசிரியர் ஹிக்ஸ் என்பவர், "இந்திய அரசியல் என்பது பண்டித நேரு அவர்களுடைய "இன்ஃப்ளுயென்ஸ்" செல்வாக்கைப் பொருத்துத்தான் அமைந்திருக்கிறதே தவிர இது இந்திய அரசியல் சட்டத்தினாலோ அல்லது மத்திய அரசு என்று இருப்பதாலோ அமைந்துவிடவில்லை" என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இன்று இந்திய உபகண்டத்தின் பல்வேறு மாநிலங்களிலும் பல்வேறு கட்சியினர் ஆளக்கூடிய ஒரு அமைப்பு ஏற்பட்ட பிறகு, இந்த ஆட்சி அமைப்புகள் அனைத்தும் ஒன்றுபட்டு இயங்கவேண்டுமானால், அண்மையிலே பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்கள் பார்லிமெண்டில் கேட்ட ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, அந்தந்த மாநிலப் பிரச்சனைக்கு ஏற்ற வகையில்தான் பரிகாரம் காணமுடியுமே தவிர, அப்படிப்பட்ட பிரச்சனைகள் எல்லாவற்றுக்குமாக ஒரேவிதமான தீர்ப்பை வழங்குவதற்கான முடிவை நாம் முதலிலேயே எடுத்துக்கொள்ள முடியாது" என்ற ரீதியில் சொல்லியிருப்பதானது மத்திய அரசில் அதிகாரம் குவிய வேண்டும் என்ற கருத்துக்கு மாறுபட்ட கருத்தாகும் என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு மத்திய அரசு தன்னிடம் எவ்வளவுதான் அதிகாரங்களைக் குவித்து வைத்திருந்தும்கூட, அந்த அதிகாரங்கள் முழுவதையும் அது பயன்படுத்த முடியாத நிலைமைகள் அண்மையில் உருவாகியிருப்பதைப் பார்க்கிறோம். மேற்கு வங்காளத்தில் மத்திய அரசு தலையிட முடியாத நிலையில் இருக்கிறது என்று உள் துறை அமைச்சர் திரு. சவாண் அவர்கள் வெளிப்படையாகக் குறிப்பிட்டார்கள். இதே நேரத்திலே அண்மையில் நமது மாநிலத்திற்கு வந்திருந்த பஞ்சாப் மாநில முதல்வர் குர்னாம் சிங் அவர்கள் குறிப்பிட்டார்கள், தன்னைக் கேட்காமலேயே தங்கள் மாநிலத்திலே மத்திய அரசின் போலீஸ் படையினர் தலையிட்டனர் என்று. இது எதைக் காட்டுகிறது என்றால்; மத்திய அரசு ஒரேவிதமான தீர்ப்பை நாடு முழுவதுக்கும் அமல்படுத்தக்கூடிய நிலையில் இல்லை என்பதைத் தெள்ளத் தெளிய காண்பிக்கிறது. மேற்கு வங்காளத்திலுள்ள உறுப்பினர்கள் சிலருடைய உதவியைப் பெற வேண்டியிருப்பதால், அங்கே வேறு விதமான தீர்ப்பையும் அதே நிலையில் உள்ள வேறு பிற மாநிலத்திற்கு வேறு விதமான தீர்ப்பையும் கையாளும் நிலை உருவாகியிருக்கிறது என்பதைத்தான் இது எடுத்துக் காண்பிக்கிறது. இன்றைய தினம் உள்ள மாநில ஆட்சிகளின் தன்மையைப் பார்க்கும்போது, எதிர் காலத்திலே மத்திய ஆட்சி என்பது பெரும் அதிகாரங்களைக்கொண்ட ஒரு தனியாட்சி என்ற நிலையில்லாமல், ஒரு கூட்டு ஆட்சியாக, மாநிலங்களின் கூட்டாட்சியாகத்தான் அமைய முடியும் என்று எண்ண வேண்டியிருக்கிறது. இதே நேரத்திலே தேசீய வரவின் வாயில்களின் மொத்தத் தொகுப்பில் இம் மாநிலத்தின் பங்கு இதற்கு முன்பிருந்ததைவிட இப்போது பெரும் அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறது, நமக்கு நியாயமாகத் தரவேண்டிய நிதியைத் தரவில்லை என்று நமது நிதியமைச்சர் அவர்கள் வருத்தத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்திய அரசியலிலிருந்து மாநிலத்திற்கு நியாயமாக வரவேண்டிய நிதிகூட அந்த மாநிலத்தில் உள்ள முதல் அமைச்சர் அவர்களுடைய வாதிடும் திறமையை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கிறதே தவிர, நமது மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் இந்தியப் பிரதமரிடத்தில் வறட்சி நிவாரணப்பணி என்ற முறையில் எடுத்துச்சொல்லி வாதிட்டு, அவர்களை அழைத்துக் கொண்டுவந்து வறட்சிப் பகுதிகளைப் பார்வையிடச் சொல்லி இப்படித்தான் பெற முடிகிறதே தவிர, மத்திய அரசின் இந்தப் போக்கு ஒரு மாநில முதலமைச்சரின் திறமையை எடுத்துக் காட்டுவதற்குத்தான் பயன்படுகிறதே தவிர, மாநிலத்தின் தேவைகளை நன்கு ஆராய்ந்து போதிய நிதி உதவியை அளிப்பதாக அமையவில்லை. எனவே ஒரு மாநிலத்தின் பல்வேறு பிரச்சனைகள் எடுத்துக் காட்டத்தக்க அறிவாற்றலையுடைய ஒரு முதலமைச்சர் இருப்பதால்தான் இந்த உதவியைப் பெற முடிகிறதே தவிர, சாதாரண நிலையில் பெற முடியாத நிலைமையில் இருக்கிறோம். நாட்டிலே உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தினைப் போக்கிட நமது





அரசு எவ்வளவோ முயன்று வருகிறது. ஆனாலும் அது ஒரு மாநிலப் பிரச்சனையாக இல்லாமல், இந்தியா முழுவதுக்குமே உள்ள ஒரு பிரச்சனையாக இருப்பதால், குறைந்த வருவாய் உள்ள ஒரு மாநில அரசு பெரும் அளவிற்குப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாமல் உள்ள நிலையில் இருக்கிறது. இந்திய துணைக் கண்டத்திலே ஏறத்தாழ இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான எஞ்சினீயர்கள், பொறியியல் வல்லுநர்கள் வேலையின்றி இருப்பதாகப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. மேலும் நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் பல இலட்சக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்புக்கள் இன்றி அல்லல் படுவதை அறிவோம். ஆண்டுதோறும் இரண்டு லட்சம் பிள்ளைகளுக்குக் குறையாமல், எஸ். எஸ். எல்.ஸி. தேர்வு பெற்று வெளி வருகிறார்கள். முதல் வகுப்பில் 14 லட்சம் குழந்தைகள் சேர்ந்து படித்தாலும், பிறகு அது 12 லட்சமாகி மூன்றாவது நான்காவது வகுப்புகளில் வரும்போது அது எட்டு லட்சமாக ஆகி, ஆறாவது ஏழாவது வகுப்பில் வரும்போது ஐந்து லட்சம் என்று ஆகி, கடைசியில் எஸ்.எஸ். எல்.ஸி. தேர்விற்கு வரும்போது, 14 லட்சத்திலிருந்து 2 லட்சத்திற்கு வந்துவிடுகிறது. இடையிலே 12 லட்சம் பேர் படிக்கமுடியாத நிலையில் தங்கள் படிப்பை இடையிலே விட்டுவிட்டவர்களாக இருக்கிறார்கள். இப்படி இடையிலே விட்டதற்குக் காரணம் வேறு என்னவாக இருந்தாலும், நிதி வசதி இல்லாதது நிச்சயமாக ஒரு காரணமாகத்தான் இருக்க வேண்டும். இந்த நிலையில் நமது மாநிலத்திற்கு வேண்டிய நிதியை மத்திய அரசு தராமலிருப்பதைப் பார்க்கும்போது, சற்று ஏமாற்றத்தைத் தான் உண்டாக்குகிறது. மத்திய அரசு இந்த நாட்டின் பாதுகாப்பிற்கென செலவழிக்கும் தொகையைப்பற்றிப் பொருளாதார நிபுணர்கள் கேட்டார்கள். "பப்ளிக் பைனான்ஸ்" என்ற நிதியிலேயிருந்து செலவழிக்கிறார்கள். மத்தியிலே இருக்கிற அரசு பாதுகாப்புக்காகச் செலவிடும் தொகை கூடுமானால், அது பிரதம மந்திரியின் அரசியல் தந்திரத்தில் குறைபாட்டைக் குறிக்கும், பக்கத்தில் உள்ள பாகிஸ்தானோடு பல்வேறு விதமான சச்சரவுகளைத் தீர்க்கமுடியாத சூழ்நிலை உருவாகாமல் பார்த்துக்கொண்டால், பாதுகாப்புச் செலவைக் குறைக்க முடியும். மற்ற மாநிலங்களில் சாதாரணமாக மந்திரிகளைப் பார்க்க முடியாது. இந்த அரசு மக்களுடைய அரசு. அமைச்சர்களை மக்கள் நேரடியாகச் சந்திக்கலாம், நம்முடைய கல்வி அமைச்சர், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அமைச்சர்கள் இன்றைய தினம் பொதுமக்களைச் சந்திக்கின்ற அளவுக்கு இருக்கிறார்கள். ஏதன்ஸ் நகரத்தில் கிரேக்க தேசத்தில் நடைபெற்ற ஜனநாயகத்தில் மக்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுடைய பிரச்சனையை ஆராய்ந்து முடிவு எடுத்தார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க சேலத்தில் இரும்பு உருக்காலை ஏற்படுத்த வேண்டும். அதைத் தரவேண்டுமென்று நாங்கள் கேட்கும் நேரத்தில் 3-வது திட்டம் உருவாகி அதற்கு 10,000 கோடி ரூபாய் ஒதுக்குவது என்று திட்டமிட்டு, பொகாரோ தொழிற்சாலையை மறந்த காரணத்தால், அன்றையதினம் இருந்த ஜவகர்லால் நேரு அவர்கள், அதற்கு ஒரு ஆயிரம் கோடி ரூபாய் திட்டம் சமர்ப்பித்ததற்குப் பின்னால், அதற்குப் பணம் ஒதுக்கினார்கள். அப்போது தமிழகத்தில் கேட்ட இந்தத் திட்டம் ஏறக்குறைய 100 கோடி ரூபாயில் முடியக்கூடிய திட்டமாக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகும் நேரத்தில் இருந்தது. அந்தத் திட்டத்தை நமக்குத் தந்திருப்பார்கள் ஆனால் திரு. டி டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் அந்த நேரத்தில் சொல்லியது ஞாபகத்துக்கு வருகிறது. எவ்வளவு பெரிய இரும்பு உருக்குத் தொழிற்சாலையானாலும் 3,000 அல்லது 4,000 பேர்கள்தான் வேலைபார்க்க முடியும் என்று குறிப்பிட்டார்கள். அதையும் நான் விளக்கிவிட விரும்புகிறேன். 3,000 அல்லது 4,000 பேர்கள் தான் வேலை பெற்றாலும், அதோடு ஏற்படக்கூடிய துணைத் தொழிற்சாலைகள் "ஆன்சிலரி இண்டஸ்ரீஸ்"களையும் சேர்த்துக் கணக்கிட்டால், ஏறக்குறைய 20,000 பேர்களுக்கு வேலை தரமுடியும். இந்த நாட்டுக்கு விவசாயத் துறையில் "பசுமைப் புரட்சி"யை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிற வேளாண்மைத் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் மேற்கொண்டிருக்கிற பல்வேறு நடவடிக்கைகளுக்குத் தேவையான பம்பு

செட்டுகளை, உபகரணங்களை, நாம் அளிப்பதற்கு இன்றையதினம் முன் வந்தது மட்டுமல்லாமல், உலகத்துக்கே அதிசயம் தரும் அளவுக்கு நாம் வளர்ந்து வருகிற பொருளாதாரப்பான்மை பெற்றிருக்க முடியும். அன்றைய தினம் தராத காரணத்தால், நாம் விவசாயிகளின் முகத்தைப் பார்த்து, அவர்களுக்கு 15 ஏக்கராகக் குறைத்துக் கொடுக்கும் நிலைமையிலே இருக்கிறோமே தவிர, அவர்கள் பெறவேண்டிய எல்லாவித நன்மைகளையும் அளிக்க முடியாத அவல நிலையில் இருக்கிறோம் என்றால், காரணம் நாம் கேட்ட இரும்பு உருக்குத் தொழிற்சாலையை மத்திய அரசு தர மறுத்துவிட்டதுதான். மத்திய அரசு தரவில்லை என்பதை அன்றைய தினம் இருந்த சர்க்கார் உணர்ந்ததா என்று இன்றையதினம் வரை சந்தேகமாக இருக்கிறது. அன்றையதினம் கொடுத்திருந்தால் 10,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும் ஒரு நிலை, ஏறக்குறைய 2 அல்லது 3 லட்சம் பேர்கள் இதன்மூலம் வாழும் சூழ்நிலை உருவாகி, தமிழகத்தில் இன்றைய தினம் இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம் வந்திருக்காது அது மட்டுமல்லாமல், நெய்வேலி நிலக்கரித் திட்டத்தில் "பிட்" என்று அழைக்கப்படுகிற ஒரு பள்ளம் தோண்டியிருக்கிறார்கள். மற்றொன்றைத் துவக்கும் முயற்சியை இன்னும் மேற்கொள்ள வில்லை. அதனால் அங்கு உள்ள பொறியியல் நிபுணர்களும் வேலை வாய்ப்பை இழக்கக்கூடிய ஆபத்தை அது உருவாக்கிக் கொண்டிருக்கிறது. ஆக இந்த நிலைமை தீர்வதற்கு ஒரே வழி என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் அடிக்கடி தன்னுடைய உரையில் குறிப்பிட்டுக்கொண்டிருப்பது போல், மத்திய அரசு நமக்கு வழங்கவேண்டிய உரிமையை வழங்கினால்தான், நாம் பணிகளை மேற்கொள்ள முடியும்.

கல்வி இலாகாவைப் பொறுத்த வரையில், ஆசிரியர்களைப்பற்றி மறுபடியும் ஒரு வார்த்தை கூறி முடிக்க விரும்புகிறேன். கோதாரி கமிஷன் அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதுபோல், வகுப்பறையில் தான் இந்தியாவின் தலைவிதி நிர்ணயிக்கப்படுகிறது என்ற காரணத்தால், அந்த வகுப்பறைகளுக்கு வேண்டிய தேவைகளை, வசதிகளை மாணவர்களுக்கு வேண்டிய பல்வேறு உபகரணங்களை, நமது பள்ளிக்கூடங்களில் தனியார் அறிவு வளர்ச்சிக்காக அவர்களுக்குத் தரப்படும் கல்விக்குத் தேவையான விஞ்ஞான சாதனங்கள், படங்கள் இவைகளை அளிக்கத்தக்க சூழ்நிலையை உருவாக்குவதற்கு, இந்த முறை கல்விக்காக அதிகத் தொகை ஒதுக்கியிருப்பதைப் பாராட்டுவதோடு, இதுபோல் பல கோடி ரூபாய்கள் கல்விக்கு ஒதுக்குங்கள், ஆசிரியர்களுக்கும் பல்வேறு விதமான நன்மைகள், ஏற்படுத்துங்கள். அவர்களின் குறைகளை நீக்கும் பணியை மேற்கொள்ளுங்கள் என்று சொல்லி நன்றி கூறி இந்த அளவில் முடிக்கிறேன்.

**திரு. டி. கே. சுப்பையா:** தலைவர் அவர்களே, 1970–71-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே ஒரு சில வார்த்தைகளை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். காங்கிரஸ்காரர்களைப் பொறுத்த வரையில், நாடகக்காரர்களை நாடக நடிகர்களை இகழ்வது எங்கள் கொள்கை அல்ல. அதனுடைய அறிகுறியாகத்தான் திருமதி கே. பி. சுந்தராம்பாளைக் கூட இந்த அவையிலே, அன்று காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்திய காலத்திலே பிரதிநிதியாக அனுப்பி வைத்தார்கள் என்று தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் நிலத்தைக்கொண்டு மட்டும் வாழ முடியாது, வேறு தொழில் செய்துகொண்டு தான் இருப்பார்கள் என்ற நிலையிலே இங்கே பேசப்பட்டது உண்மை. அவ்வாறு வேலை செய்வது மிக வரவேற்கத்தக்கது தான். இப்போது கூட நில உச்ச வரம்பை 30 ஏக்கராவிலிருந்து 15 ஏக்கராவாக ஆக்கியது நல்லது. செய்ய வேண்டிய காரியத்தை நாங்கள் சொல்லவில்லை. நாம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி உச்ச வரம்பைக் குறைப்பது. எந்த இடத்தில் கொண்டுபோய் நிறுத்தும் என்பதைப்பற்றி இன்னும் யாரும் எந்தவித முடிவுக்கும் வரவில்லை. காங்கிரஸ்காரர்கள் 30 ஏக்கரா என்று உச்ச வரம்பு நிர்ணயித்த போது, அவர்கள் எந்த நிலையை எடுத்தார்கள் என்பது தான் முக்கியமான கேள்வி. இந்த நில உச்ச வரம்பைப்பற்றி





எந்த நிலையிலே நாம் நிற்கின்றோம்?. நிலம் குவிந்திருப்பதைப் பகிர்ந்து கொடுப்பது தான் சித்தாந்தம். நிலங்களை ஏழை எளியவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்பதைத் திட்டவட்டமாகக் கருத வேண்டும். 1969-ல் நிலங்கள் கணக்கு எடுக்கப்பட்டு, சென்ஸஸ் கணக்கு எடுத்திருக்கிறோம். இதையெல்லாம் கவனித்து நிலம் இல்லாதவர்களுக்கு எவ்வளவு கொடுக்க முடியுமோ, அதைப் பிரித்துக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்துவிட்டால், இது சர்வாதிகார நாடு தான் என்று கருதுகிறேன்.

நிலத்தைப்பற்றி உங்களுடைய தத்துவம் நிலம் குவிந்துவிடக்கூடாது என்றிருந்தால், நிலச்சொந்தக்காரர்களே தர்மகர்த்தாக்களாக இருந்து பகிர்ந்து அளிக்கச் செய்தால் என்ன தவறு என்பது எனக்கு விளங்க வேண்டும். அதில் சர்க்காருக்குக்கூட சில நன்மைகள் இருக்கின்றன. நீங்கள் எடுத்துக் கொள்ளும் நிலங்களை எவ்வாறு எங்கெங்கு எப்படிப் பிரித்துக் கொடுக்கப்போகிறீர்கள் என்பதற்கு என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்களோ, நான் அறியேன். ஆனால் இதன் மூலம் நிச்சயமாகக் குறைபாடுகள் தான் வர முடியும். நமது முதலமைச்சர் அவர்கள் எதிலேயும் கேள்விக்குறிக்கு உரியவராகவே இருக்கக் கூடியவர். சென்னையில் இருக்கக்கூடிய புறம்போக்கு நிலத்தை யாருக்கு, எவ்வளவு நிலம், கிரய சாசனமாகவோ, அடைமானமாகவோ குத்தகையாகவோ கொடுத்தீர்கள் என்ற கேள்வி கேட்கப்படுகிறது. பலவாறாகப் கேள்வி கேட்கிறார்கள். இன்னாருக்குக் கொடுத்தார்களா என்று கேட்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இன்னாருக்கு இல்லை என்று பதில் சொல்கிறார். இதில் ஒன்றும் கஷ்டமில்லை. சந்தேகக் குறி வந்து விட்டது என்றால், அமைச்சர் தெளிவாக......

**திரு. எஸ். ராகவானந்தம் :** அமைச்சர் இந்த சபையிலே பேசவில்லை. மற்ற சபையில் பேசியதை இங்கே பேசக்கூடாது என்பது மரபு. இந்த சபையில் யாரும் பேசவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. டி. கே. சுப்பையா :** நான் எந்த சபையைப்பற்றியும் சொல்லவில்லை. உறுப்பினர் அவர்கள் சபை என்று உணர்ந்துகொண்டிருக்கிறார். மக்களிடத்தில் பரவலாகப் பேசப்படுகிறது. அதற்கு மந்திரியின் பதிலும் வந்திருக்கிறது. பொறுப்புள்ள முதலமைச்சரும் இதர அமைச்சர்களும் பதில் அளிக்கிறார்கள். சந்தேகத்தைத் தெளிவுபடுத்த வேண்டியது நல்லது என்று கருதுகிறேன். நான் ஏற்கெனவே கூறியமாதிரி, கேள்விக்குறியாக இருக்க வேண்டும் என்றால், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. சில சந்தேகங்கள் மக்கள் மத்தியில் தோன்றிவிட்டால், அந்தச் சந்தேகங்களைத் தெளிவாக்க வேண்டியது அவசியம். கிராமத்தில் ரொம்பச் சுலபம். நிலம் அடைமானம் செய்து தாசில்தார், கலெக்டர் போன்றவர்கள் அந்த லிஸ்டை அங்கத்தினர்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எப்போதுமே பட்டணத்தில் புரிந்துகொள்வது என்பது கஷ்டம். கிராம வாசிகள் ஒரு ஊரில் புதிதாக யாராவது வந்தாலும், ஒரு வீட்டில் தப்பு நடந்தாலும் தெரிந்துகொள்ளுவார்கள். பட்டணத்தில் புரியாது. பெரிய நெருக்கடி உள்ள இடம். இப்போது சென்னையில் இவ்வளவு பெரிய சர்ச்சை கிளம்பியது. இதைத் தெளிவு படுத்துவதில் ஒரு கஷ்டம் இல்லை என்று நினைக்கிறேன். இந்த மாதிரி நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதில்கூட கஷ்டம் உண்டு. ஆனால் அந்த நிலத்தை அவர்களாகவே தங்களுக்கு வேண்டியவர்களுக்கோ, உறவினர்களுக்கோ கொடுக்கலாம் என்றால், எப்படியும் இந்த மாநிலத்தில் இருக்கிறவர்களுக்குத்தான் கொடுக்க முடியும். ஒரு உடன்படிக்கையின் பேரிலே கொடுத்தால், தவறாக இருக்கலாம். கிரய சாசனமாக ஒருவருக்குக் கொடுத்தால் நமக்கு ஆட்சேபணை இருக்க முடியாது. இதையும் அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே சில மரபுகளைப்பற்றி அடிக்கடி ஐயப்பாடுகள் வருவதுண்டு. ஓர் அங்கத்தினர் குரல் எழுப்புவதும் அதை எதிர்த்து மாற்றுக் கட்சி அங்கத்தினர் குரல் கொடுப்பதும் சர்வ சாதாரணமான

விஷயம். ஆனால் தி.மு.க.வினரான நீங்கள் வரியினைக் குறைத்து வசதிகளைப் பெருக்குவோம் என்று சொன்னீர்களே என்றால், அந்தக் காலத்தில் நீங்கள் சொல்லவில்லையா என்று கேட்கிறீர்கள். ஆட்சிக்கு வந்து விட்டீர்கள். அதற்குப் பிறகாவது வரி விதிக்காமலிருந்தால், நம் வளர்ச்சிப் பணிகள் தேக்கம் அடைந்து நலிந்துபோகும் என்று உணர வேண்டும். இதுதான் அன்றுள்ள நிலைமைக்கும் இன்றுள்ள நிலைமைக்கும் உள்ள தாரதம்மியம். இதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஆட்சிக்கு வந்த பிறகு எவ்வளவு பொறுப்புக்கள் வந்திருக்கின்றன என்று உணர்ந்துவிட்டால், எந்த வித இடைஞ்சலும் இல்லை. எந்த அரசியல் வாதியானாலும், ஆட்சி நடத்துகிறவர்கள் வரி விதித்துத்தான் வசதிகளைப் பெருக்க வேண்டும். வரி விதித்துத்தான் ஆக வேண்டும் என்ற நிலைமையை உணர்ந்துவிட்டால், ஆட்சேபனை இல்லை. அடுத்தபடியாக, இந்த வரி விதிப்பதில் கொடுக்கும் சக்தி உள்ளவர்களுக்கு மட்டும் விதிக்க வேண்டும் என்பதுதான் சோஷலிசம் என்று சொல்லக்கூடிய இலட்சியத்தைக் கடைப்பிடிப்பதாகும். இப்போது விதித்துள்ள வரிகளில் ஒரு சில வரிகள் ஏழைகளைத் கஷ்டப் படுத்தும் நிலையில் இருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். மத்திய அரசில் கூட ரெயில்வே பட்ஜெட்டில் மூன்றும் வகுப்பிற்குக் கட்டணத்தைக் கூட்டியதை எல்லாக் கட்சியினரும் எதிர்த்தார்கள். 'ஏழைகள் கஷ்டப்படுவார்கள் என்பதை ஒப்புக்கொண்டு, அதை ரத்து செய்தார்கள். அந்த வகையில் இந்த அரசும் சில வரிகளை நீக்கினால் அதிகக் கஷ்டம் இருக்காது. சிமெண்டுக்கு வரிபோடுவதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிமெண்டு ஏதோ பங்களாவில் உள்ளவர்களுக்கு மட்டும்தான் உபயோகப்படும் என்று கருதக்கூடாது. உங்களுக்கு அனுபவம் அதிகம். எங்கே பார்த்தாலும் தீப்பிடிக்காத வீடுகள் கட்ட வேண்டும் என்பது உங்கள் சித்தாந்தம். தீப்பிடிக்காத வீடுகளுக்கு அஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகள் வேண்டும். அதற்கு சிமெண்டுதான் தேவைப்படுகிறது. இந்த மாதிரி வரியால் அஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகளின் விலை கூடிவிடும். கட்டிடம் கட்டுவதில் இப்போது செங்கல் விலை கூடிக் கொண்டிருக்கிறது. சிமெண்டு இருந்தால், ஒரு கல் வைத்து முக்கால் அடி கனத்தில் சுவர் கட்ட முடியும். ஆகையினாலே இந்த சிமெண்டு ஏழைகளுக்கும் பிரதானமாகத்தான் தேவைப்படுகிறது.

அடுத்தபடியாக, விவசாயிகள் பம்பு செட்டுக்கு மின்சாரத்தை நிறைய உபயோகிக்கிறார்கள். அந்த மின்சாரத்திற்குக் கட்டணத்தை அதிகப் படுத்தியிருக்கக் கூடாது. இந்த மாதிரி மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருள்களுக்கெல்லாம் இந்த வரி விதிப்பினால் விலை கூடுகிறது. இத்துடன் பம்பு செட்டுக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்கு சிமெண்ட்டு உபயோகிக்கப்படுகிறது. இதையெல்லாம் இப்போது கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே இவற்றையெல்லாம் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதுபோல மின்சாரக் கட்டணத்தை எட்டு பைசாவிலிருந்து பத்து பைசாவிற்கு உயர்த்தியிருப்பதையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஐந்து, பத்து ஏக்கர் வைத்து விவசாயம் செய்கிறவர்கள்தான் மின்சார மோட்டார் வைத்திருக்கிறார்கள். அந்த ஏழை விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப் போவதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் திருச்சியிலே உலகத் தமிழ் மாநாடு என்று பல லட்சம் ரூபாய் வசூல் செய்து சேர்த்து வைத்து விவசாயக் கல்லூரிக்கு என்று ஒரு நிதியை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரியையும் கூடிய விரைவில் அமைக்க வேண்டும்.

**திரு. கே. எஸ். அப்துல்வகாப் :** அங்கே ஒதுக்கப்பட்ட தொகை மெடிக்கல் காலேஜுக்கு என்று நினைவுபடுத்துகிறேன்.



**திரு. டி. கே. சுப்பையா :** பணத்தை வசூலிக்கும்போது மருத்துவக் கல்லூரிக்கு என்றுதான் சொன்னார்கள். பின்னால் அமைச்சர்களைக் கேட்டபோது விவசாயக் கல்லூரி ஏற்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். அமைச்சர்கள் சொன்ன உறுதி மொழிக்கு வந்து விட்டோம். ஏதோ ஒன்று வரவேண்டும். மருத்துவக் கல்லூரி வந்தால், ரொம்ப சந்தோஷம். விவசாயக் கல்லூரி கொடுக்கிறேன் என்றால், வேண்டாம் என்றால், அதுவும் போய் விடும். அரசாங்கம் விவசாயக் கல்லூரிதான் அவசியம் என்று முடிவெடுத்திருக்கிறது. அந்தக் கல்லூரியை விரைவில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். உலகத் தமிழ் மாநாடு பணத்தை மாவட்ட நலக் கழகத்திலிருந்து கரூர் நூற்பு ஆலைக்கு வட்டிக்குக் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே சீக்கிரமாக முடிவெடுத்து விவசாயக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு வழிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சாலைகளைப் பொறுத்தவரையில், ரூ. 719 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராம இணைப்புச் சாலைகள் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றன. சாதாரணமாக எங்கள் பகுதியில் திருமானூரிலிருந்து தூத்தூர் வரையில் 16 மைல் கிழக்கு மேற்கில், ஏலாக்குறிச்சி கொய்யூர் 12 மைல் தெற்கு வடக்காக என்ற இந்த சுற்றளவுக்குள் 19 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. சுமார் 45 ஆயிரம் ஜனத்தொகை இருக்கிறது. அவ்வளவு மக்களும் இன்று இந்த 1970-ம் ஆண்டிலும் நிச்சயமாக பஸ்ஸில் போகமுடியவில்லை. ஆறு ஏழு மைல் என்று நடந்து........

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** அந்தப் பஞ்சாயத்துக்கு வருமானம் எவ்வளவு,?

**திரு. டி. கே. சுப்பையா :** புள்ளி விவரம் தயார் செய்யவில்லை. வருமானம் மிகவும் குறைவான ஏரியாதான் அது. மிகவும் பின் தங்கிய பகுதி வருமானம் எவ்வளவு என்று கணக்குப் பார்ப்பதைவிட அந்தப் பகுதியில் வருஷத்திற்கு எத்தனை கொலை நடந்திருக்கிறது என்று கணக்கெடுப்பது சுலபம். அவ்வளவு பின் தங்கிய பகுதி அது. அங்கே காய்ச்சப்படும் திருட்டுச் சாராயத் தொழில் எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்று கணக்கெடுத்தால், வியப்புக்குரியதாக இருக்கும். ஆனால் இந்த திருமானூர் பஞ்சாயத்து யூனியனிலும் அரியலூர் பஞ்சாயத்து யூனியனிலும் ஒருங்கிணைந்த பகுதி அது. கொள்ளிடத்திற்கு வட பகுதி. மருதையாற்றிற்குத் தென் பகுதி. இரண்டுக்கும் மத்தியில் காட்சி அளிக்கிறது. சென்னையில் வைக்கப்பட்டிருக்கும் சிலைகளில் ஒன்று வீரமாமுனிவருடையது. அந்தத் தமிழ் வளர்த்த வீரமாமுனிவர் இருந்த இடமே ஏலாக்குறிச்சிதான். உ.வே. சுவாமிநாத அய்யர் கூட அங்கே இருந்திருக்கிறார். மூன்று நான்கு உயர்நிலைப்பள்ளிகள் அங்கே இருக்கின்றன. போக்கு வரத்து வசதியில்லாமல் அந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதிக்கு விரைவில் "ஸ்பெஷல் ஸ்கீம்" போட்டு, ரோடு அமைத்து, பஸ் போக்குவரத்துச் சாலையாக ஆக்க வேண்டும். சென்ட்ரல் ரோடு ஃபண்ட்டிலிருந்து ஒரு பாலம் அமைக்கப்பட்டிருக்கிறது. திருமானூருக்கும் விளாங்குடிக்கும் பல வருஷங்களாக நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் 52 லட்சம் ரூபாய்க்குத் திட்டம் போடுகிறார்கள். 1968-69, 1969-70, 1970-71 இந்த மூன்று ஆண்டுகளுக்கும் திட்டத்தில் பார்த்தால், அதே ரூ. 52 லட்சம்தான் இருக்கிறது. அதனுடைய "எஸ்டிமேட்" அவ்வளவுதான். ஆனால் இந்த ரூ. 52 லட்சத்தைக் கொண்டு சிறிய பாலமாக அமைக்கப் போவதாகச் சொன்னார்கள். இப்போது பெரிய பாலமாக அமைக்கும் நிலையில் இந்தப் புத்தகத்தில் போடப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது. ரூ. 52 லட்சத்தை வைத்து பாலம் பெரியதாக அமைக்க முடியுமா என்ற ஐயப்பாடு இருக்கிறது. வேலை என்னமோ பெரிய

பாலத்திற்காக நடப்பதாகத்தான் தெரிகிறது. ஒப்பந்தக்காரர்களால் தனியாகத் தயாரிக்கப்பட்ட "எஸ்டிமேட்" காரணமாக இவ்வளவு சிக்கனமாக ஆகிறது என்று நினைக்கிறேன். அதைப் பரிசீலனை செய்து அரசு பெரிய பாலமாகவே கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, நமது முதலமைச்சர் அவர்கள் மராமத்து அமைச்சராக இருந்தபோது, பொது மராமத்து இலாகாவை ஒருங்கிணைக்க வேண்டுமென்ற ஆவலில் இருந்தார்கள். புள்ளம்பாடி வாய்க்காலில் இருக்கிற பல ஏரிகளை யார் மராமத்து செய்வது என்பது சரியாக முடிவாகாமல் இருக்கிறது. கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. ஒரு ஏரியை மராமத்து செய்ய பஞ்சாயத்து யூனியன் செலவு செய்தால், உடனே ஆடிட் ரிபோர்ட்டில் அதற்கு யூனியன் செலவு செய்யக்கூடாது, ஆர்.சி. டிவிஷன்தான் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆர்.சி. டிவிஷன் செய்தால் அந்த இடத்தில் நீங்கள் செய்யக்கூடாது, இந்த இடம் பஞ்சாயத்து யூனியன், செய்ய வேண்டியது என்று சொல்லுகிறார்கள். இப்படியாக அந்தப் பகுதி கேள்விக்குறியாகவே இருந்து வருவதை அரசு கவனிக்க வேண்டும். பல சந்தர்ப்பங்களில் நான் இதைத் தெரிவித்திருக்கிறேன். நமது திட்டக்குழுவினர் கூட இந்த ஏரிகளைப் பார்வையிட்டார்கள். அரசாங்கத்திற்கு அந்த அறிக்கை வந்திருக்குமென்று நினைக்கிறேன்.

அடுத்து, மொழிப் பிரச்சினைக்கு சிறிது ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். விரைவிலேயே முதலமைச்சர் அவர்கள் கேள்விக்குறிக்கு ஆளாகாமல் மற்றத் தலைவர்களைக் கூட்டி வைத்து இந்த நாட்டில் நல்ல நிலைமையை ஏற்படுத்தி மத்திய அரசோடு சுமுகமான உறவு கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவர் அவர்களே, 1970–71-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டிலே பேசுவதற்கான வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட் பாராட்டுக்குரிய பட்ஜெட். முஸ்லீம் லீக்கின் சார்பில் அதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். 1967 மார்ச் மாதம் 6-ம் தேதி, இன்றைக்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு நமது பேரன்பைப் பெற்றிருந்த பேரறிஞர் அண்ணாவின் தலைமையின்கீழ் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. மூன்று ஆண்டுகள் ஆட்சி வெற்றிகரமாக நடத்தியமைக்காக, முஸ்லீம் லீக்கின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு இஸ்லாமியர்களை அன்புடனும் அனுசரணையுடனும் நடத்தி வருவதற்காக முஸ்லீம் லீக்கின் சார்பில் நான் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், இந்த அரசு நீண்ட காலம் பல பொதுத் தேர்தல்களில் வெற்றி பெற்று அரசு நடத்த எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்தனையைச் சமர்ப்பிக்கின்றேன்.

தலைவர் அவர்களே, நேற்று இரவு நான் ஒரு விசித்திரமான கனவு கண்டேன். நமது முதலமைச்சர் அவர்கள் தலையில் கிரீடம் இருந்தது. கையில் வாள் இருந்தது. அவருக்குப் பின்னால் ஒரு படை அணிவகுப்பு நின்றது. எதிரே வீரேந்திரபடீல் வாள் ஏந்தி நின்றார். அவருக்குப் பின்னால் ஒரு படை அணிவகுப்பு இருந்தது.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்த சமயத்தில் உறுப்பினர் அவர்கள் விழித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். (சிரிப்பு).

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** அதன் பிறகு கனவு கலைந்து விட்டது. இந்த மாதிரி கனவு எப்படி வந்தது என்று யோசித்தேன். காலைப் பத்திரிகையில் வீரேந்திரபடீல் விட்ட அறிக்கையைப் படித்ததின்





எதிரொலிதான் அந்தக் கனவு என்று உத்தேசித்தேன். மத்திய அரசு ஹேமாவதியில் அணை கட்டக்கூடாது என்று வேண்டுகோள் விட்டதையும் மீறி கட்டுவேன் என்று அறிக்கை விட்டதையும் படித்ததால், எனக்கு ஏற்பட்ட ஆத்திரத்தின் எதிரொலி அந்தக் கனவு என்று நினைக்கிறேன். நான் ஒரு உறுப்பினன் இந்த சட்டமன்றத்தில். அந்த அளவிலேயே எனக்கு அவ்வளவு ஆத்திரம் வருகிறது என்றால், அதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுச் செயல்படும் முதலமைச்சர் அவர்களுக்கு எந்த அளவுக்கு ஆத்திரம் வந்திருக்கும் என்று எனக்கு யோசனை வந்தது. அப்படி ஆத்திரப்படும் நேரத்தில், இன்று காலையில் அவர்களுடைய அறிக்கையைப் படித்தேன். மகிழ்ந்தேன். அந்த அறிக்கையில் பெருந்தன்மை இருந்தது. அந்த அறிக்கையில் அடக்கம் இருந்தது. அந்த அறிக்கையில் சமாதானப் போக்கு இருந்தது. அவர்களை நான் பல காலமாக அறிவேன். விறுவிறுப்பாகச் செயல்படக்கூடியவர். விறுவிறுப்பாக யோசிக்கக் கூடியவர்கள். அந்த அறிக்கை அவர்களுடைய சுபாவத்திற்கு ஒத்த அறிக்கையாக எனக்குத் தென்படவில்லை. பேரறிஞர் அண்ணா இருந்தால், எந்த முறையில் பேசியிருப்பார்களோ அந்தத் தொனி அந்த அறிக்கையில் தென்பட்டதைப் பார்த்தேன். பொறுப்பு அதிகமானால் பெருந்தன்மை தானாக உருவாகும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அந்தப் பெருந்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனாலும் அந்த ஹேமாவதிப் பிரச்னையைப் பொறுத்தவரையில் நமக்கு பெரும் பாதகம் ஏற்படக்கூடிய ஒரு அறிக்கையைத்தான் வீரேந்திரபடீல் வெளியிட்டிருக்கிறார். இந்தப் பிரச்னையை மத்திய அரசின் துணை கொண்டு மிகவும் சாமர்த்தியமான முறையில் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. வீரேந்திர படீல் பேசினார் என்றால், அவராகப் பேசியிருப்பதாக நான் நினைக்கவில்லை. நிஜலிங்கப்பா அவர்கள் தூண்டுதல் பேரில் பேசப்பட்ட ராஜதந்திரப் பேச்சு அது.

**திரு கே. ராஜாராம் :** இந்தச் சபையில் இல்லாதவர்களைப்பற்றி, பொதுவாக சம்பந்தப்படாதவர்களைப்பற்றி, நாம் பேசவேண்டிய அவசியமில்லை. என்னைப் பொறுத்த வரையில், வீரேந்திர படீல் அந்த மாதிரிச் செய்தது நமக்கு நல்லதுதான் என்று நான் கருதுகிறேன். டிரிபியூனலுக்கு அந்த விஷயத்தை துரிதமாக அனுப்புவதற்கு அவர்கள் உதவி இருக்கிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். மத்திய சாக்கார் தாக்கீதுக்கு விரோதமாகக் கட்ட வேண்டுமென்று அவர் சொன்னால் உடனேயே டிரிபியூனலுக்கு அனுப்புவார்கள் என்று நினைக்கிறேன். நம்முடைய காரியத்தை துரிதப்படுத்துவதற்கு மறைமுகமான உதவியாகும் அது. மத்திய சர்க்காரும் துரிதமாக அதை டிரிபியூனலுக்கு அனுப்புவார்கள் என்று நம்புகிறேன். ஆகையால் இங்கே இல்லாத அதில் சம்பந்தப்படாதவர்களைப் பற்றியெல்லாம் பேசவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அது மட்டுமன்றி, ஹேமாவதி அணைக்கட்டு சம்பந்தமாக, நமக்கும் மைசூர் மாநில அரசுக்குமிடையே நடைபெற்றுவருகிற கடிதப் போக்குவரத்துகள், அறிக்கைகள், சட்ட மன்றப் பேச்சுகள் இன்னும் இதற்கிடையில் மத்திய சர்க்காரின் தலையீடு, அவர்கள் தந்திருக்கிற தகவல்கள் எல்லாம் நாம் அனைவரும் அறிந்த ஒன்றாக இருக்கிற காரணத்தாலும், நாம் இங்கே பேசுகிற பேச்சுக்கள், பிரச்னையை இன்னும் சிக்கலாக்கிவிட்டுவிடக் கூடாது என்பதற்காகவும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த விஷயத்தை இதோடு விட்டுவிட்டு மற்ற விஷயங்களுக்குப் போவது நல்லதென்று கருதுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** நம் அன்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு, அதைப்பற்றி ஒரே ஒரு வார்த்தையை மட்டும் சொல்லிக்கொண்டு அடுத்த விஷயத்திற்குப் போக விரும்புகிறேன். மத்திய சர்க்கார் சீக்கிரமாக இதில் ஒன்றும் செய்யவில்லை என்னும் நிலையில் நம்முடைய அரசு கோர்ட்டு மூலமாக ஒரு "ஸ்டே" வாங்க முயற்சி செய்யவேண்டும் என்ற யோசனையை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [7th March 1970

அடுத்து, தமிழ் நாட்டிலுள்ள எல்லா முஸ்லீம்களையும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்களாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை சுமார் 20 வருஷ காலமாகப் பல துறைகளிலிருந்தும் எழுப்பப்பட்டு வருகிறது. இந்த மன்றத்தில் நான் உறுப்பினனாகிய பிறகு பேசிய முதல் பேச்சிலேயே இந்தக் கோரிக்கையைத் தான் நான் சமர்ப்பித்தேன். அடுத்து, இந்த மன்றத்திலே பலமுறை நான் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறேன். ஆனாலும் அந்தக் கோரிக்கை இதுவரையிலும் அனுதாபத்துடன் அணுகப்படவில்லை என்ற நிலை தான் நீடித்துக் கொண்டிருக்கிறது. இருந்தாலும், நம் அருமை முதலமைச்சர் அவர்களிடம் இந்தப் பிரச்னையை நான் தெரிவித்தபோது, "நான் அதைச் சீக்கிரத்தில் கவனிக்கிறேன்", என்று நல்ல பதில் சொன்னார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நமது மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்களிடமும் இதைப்பற்றிக் குறிப்பிட்டேன். அவரும் அனுதாபத்துடன் இந்தப் பிரச்னையைக் கவனிப்பதாகச் சொன்னார்கள். தற்போது பிற்பட்டோர் நலக் குழு என்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு இந்த விஷயத்தைப் பரிசீலனை செய்கிறது. நான் கூட அந்தக் குழுவின் முன்பாக சாட்சியம் அளித்திருக்கிறேன். சாட்சியம் அளித்த மற்ற நண்பர்கள் என்னிடத்தில் அந்தக் குழு அவர்களை மிரட்டியதாகத் தகவல் சொன்னார்கள். சாட்சியமளிப்பவர்களை அந்தக் குழு நிதானத்துடன் விசாரணை செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தக் குழுவின் விசாரணையின் போக்கைப் பார்த்தால், பாரபட்சமான முடிவுதான் சொல்லப்படும் என்று நினைக்கத் தோன்றுகிறது. அந்தக் குழுவின் முடிவு பாரபட்சமாக இருந்தாலும், இந்த அரசு நம்முடைய இந்த நீண்டகால கோரிக்கையை அனுதாபத்துடன் அணுகி, நமக்குச் சாதகமான ஒரு முடிவைக் கொடுக்கவேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, இந்த மாநில சர்வீஸ் கமிஷனின் உறுப்பினர்களில் முஸ்லீம் ஒருவரைப் போடவேண்டும் என்று நான் பலமுறை கேட்டிருக்கிறேன். சுமார் 10 வருஷ காலமாக முஸ்லீம் பிரதிநிதித்துவம் அந்தக் கமிஷனில் இல்லாமல் இருந்தது. இந்தச் சபையில் நான் பல முறை பேசிய பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களிடம் சொல்லிய பிறகு, ஒரு முஸ்லீம் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். ஆனால் துரதிருஷ்டவசமாக அவர் 2 அல்லது 3 மாதம் தான் அந்தப் பதவியிலிருந்தார். அதற்குள் அவர் காலமாகிவிட்டார். அப்படிக் காலியான அந்த ஸ்தானத்திற்கு ஒரு முஸ்லீமைப் போடவேண்டும் என்று கேட்டேன். அந்தக் கோரிக்கை இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது. எனவே, அடுத்து காலியாகக் கூடிய ஸ்தானத்திற்காவது ஒரு முஸ்லீமை உறுப்பினராக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றுமொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். போலீஸ் இலாக்காவில் முஸ்லீம்களுக்கு எந்த அளவுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இல்லாமல் குறைவாகவே இருக்கிறது. அதைக் கூடுதலாக்கிச் சரிகட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் சி.ஐ.டி. இலாக்காவில் சுமார் 20 வருஷத்திற்கு மேலாக ஒரு முஸ்லீம்கூட இல்லாத நிலைமை இருந்து வருகிறது. இதையும் பரிசீலிக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். முஸ்லீம்களிடம் பாரபட்சம் காட்டக் கூடாது என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சி.ஐ.டி. இலாக்காவில் எந்த முஸ்லீமுக்காவது பிரமோஷன் வர இருந்து அது தவிர்க்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



7th March 1970]

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** எனக்குத் தெரிந்த வரையில் சி.ஐ.டி. இலாக்காவில் ஒரு எஸ்.ஐ. கூட இருந்ததில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். எனவேதான் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தற்போது எஸ்.ஐ. ரெக்ரூட்மெண்ட் நடக்கவிருக்கிறது. அதில் முஸ்லீம்களுக்கு உரிய சதவீதத்திற்குக் குறையாத அளவுக்குக் கொடுக்கும்படி உத்திரவிட வேண்டும். மேலும் டிஸ்டிரிக்ட் முன்சீப் நியமனத்திலும் உரிய சதவீதம் கொடுக்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, தற்போது போலீஸ் இலாக்காவின் காரியதரிசியே இந்த மாநிலத்தில் ஒரு முஸ்லீம் தான் இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். போலீஸ் இலாக்காவில் இருக்கவேண்டிய அளவுக்கு எஸ்.ஐ. இல்லை, போலீசார் இல்லை என்று உறுப்பினர் அவர்கள் பேசுவது நல்ல வாதமாகாது. தமிழ்நாட்டில் இருக்கிற இஸ்லாமியர், இஸ்லாமியர் அல்லாதார் என்ற முறையில் பேசுகிற இந்தப் புதுமாதிரியான பாணி நல்லதல்ல என்று தான் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கே நான் ஒரு தகவலைச் சொல்லுவதற்காக யாரும் என்னைத்தவறாகக் கருதக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பொதுவாக, இன்றைய இந்தியா—பாகிஸ்தான் சூழ்நிலையில் முஸ்லீம்களை "ஹோம் டிபார்ட்மெண்ட்" செக்கரட்டரிகளாக நியமிக்கக் கூடாது என்றெல்லாம் இந்திய அரசிடமிருந்து தாக்கீது வருகிறது. ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்ற அளவில் தகவல்கள் எல்லாம் கேட்கப்படுகிற இந்த நேரத்தில் நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், இந்த அரசாங்கம் முஸ்லீம், முஸ்லீமல்லாதார் என்ற வித்தியாசம் பாராமல், ஒரு முஸ்லீமை ஹோம் செக்கரட்டரியாக நியமித்திருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முஸ்லீம்கள் மீது இந்த ஆட்சிக்கு அக்கறை இல்லாதது மாதிரிப் பேசவேண்டாம். முஸ்லீம்கள் மீது இந்த ஆட்சிக்கு மிகுந்த அக்கறை உண்டு என்று தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தமாதிரிப் புதிய பாணியில் பேசுவதை விட்டு, வழக்கமாகப் பேசுகிற பாணியில் பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்னுடைய ஆரம்பப் பேச்சிலேயே திராவிட முன்னேற்றக் கழக அரசு இஸ்லாமியர்களிடம் அன்போடும் ஆதரவோடும் நடந்துகொள்கிறது என்று சொன்னேன். இஸ்லாமியர்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட்டது காங்கிரஸ் ஆட்சியில். அது இன்றைய தினம் ஓரளவுக்கு நீக்கப்படுகிறது என்பதை நான் இங்கே குறிப்பாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சி.ஐ.டி. டிபார்ட்மெண்டில் முஸ்லீம்கள் யாரும் இல்லாமல் இருந்தார்கள் என்று குறிப்பிட்டதற்குக் காரணம் அதை இந்த அரசு நல்லெண்ணத்துடன் விசாரித்து தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்ற எண்ணம் எனக்கு இருப்பதால் தான்.

"டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ்" நியமனம் சமீபத்தில் செய்யப்படவிருக்கிறது. அதிலும் முஸ்லீம்களுக்குக் கணிசமான ஸ்தானம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேறொரு பொதுவான விஷயம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அண்மையில் இந்த மாநிலம் முழுவதும் நகராட்சி மன்றத் தேர்தல்கள் நடந்தபோது, ஒரு 10 நகரங்களுக்கு மட்டும் தேர்தல்கள் நடக்கவில்லை. அந்தப் பத்து நகரங்களிலும் தற்போது வீட்டு வரியை உயர்த்தியிருக்கிறார்கள். அந்த வரி உயர்வைத் தேர்தல் முடிந்தபிறகு அமுல் நடத்துங்கள் என்று தான் கேட்டுக்கொள்ளுகிறேன். காரணம் அந்த வரி உயர்வை எதிர்த்து அப்பீல் செய்ய வெண்டுமென்றால், முனிசிபல் கவுன்சிலுக்குத் தான் செய்ய வேண்டும். அப்படி கவுன்சிலுக்கு அப்பீல்

செய்ய வழியில்லாமல் இருக்கிறது. எனவே அந்த வரி உயர்வை ஒத்தி வைக்கவேண்டுமென்று அந்த ஊர் பொதுமக்கள் அரசாங்கத்திற்கு மனு செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும் அறிகிறேன். அதையும் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பஸ்ஸுக்கு ஒரு சீட்டுக்கு 10 ரூபாய் வீதம் தற்போது வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. டவுன் பஸ்களைப் பொறுத்த வரையில், ஒரு சீட்டுக்கு இவ்வளவு என்று உயர்த்தப்படவில்லை. 3 பஸ் வைத்திருப்பவர்களுக்கு சீட்டுக்கு இவ்வளவு என்று உயர்த்தாமல், அதற்கு மேம்பட்ட எண்ணிக்கையுள்ள பஸ் சொந்தக்காரர்களுக்கு மட்டும் கூடுதல் வரி விதிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், பர்மாவிலிருந்து வந்த அகதிகளுக்கு இந்த அரசு எவ்வளவோ உதவிகள் அளித்து வருவதை நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு முன்பு ரூ. 1,000, 2,000 என்று உதவியளிக்கப்பட்டது. அந்த உதவித் தொகை போதாது என்ற வகையில், தற்போது ரூபாய் 5,000 கடன் அளிக்க வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த நிலையில் திருச்சி லப்பைக்குடிகாடு என்ற ஊரில் ரூ. 500, ரூ. 1,000 அவர்களுக்குக் கொடுத்ததை வசூலிக்கும் வகையில் அதிகாரிகள் கெடுபிடி செய்து சொத்துக்களை எல்லாம் ஜப்தி செய்துகொண்டிருக்கிறார்கள். இது சரியல்ல. பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து இப்படி நிர்ப்பந்தப்படுத்தி, தொகைகளை வசூலிப்பது நல்ல போக்காக இருக்க முடியாது. எனவே உடனே அரசு தலையிட்டு இப்படிக் கடன்களை வசூலிப்பதை நிறுத்துவதோடு, இந்த அகதிகளுக்கெல்லாம் பிரகடனம் செய்த தொகை ஐயாயிரம் என்பதை அவர்கள் வாங்கிய தொகையிலிருந்து ஒரு ஆயிரம், இரண்டாயிரம் ரூபாயைக் கழித்துக்கொண்டு பாக்கியுள்ள மூன்று அல்லது நாலாயிரம் ரூபாய்த் தொகையை அவர்களுக்கு விரைவில் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து; ஃபார்மஸிஸ்டுகளைப் பற்றி நண்பர் திரு சம்பந்தம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஃபார்மஸிஸ்டுகளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொடுப்பதாக உறுதி கூறியிருக்கிறார்கள். அதை விரைவில் நிறைவேற்றிக்கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. டி. கே. பொன்னுவேலு :** தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையினை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. பி. டி. மூத்து :** பெரு மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1970-71-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்றுப் பேச ஒரு வாய்ப்பினை அளித்தமைக்காக எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் வேளாண்மைத் துறைக்காக 72 கோடி ரூபாய் செலவு செய்யும் அளவிற்குத் திட்டங்கள் தீட்டப்பட்டிருப்பது கண்டு நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசைப் பெரிதும் பாராட்டுகிறார்கள். இந்த 72 கோடி ரூபாய் செலவில் 25,500 கிணறுகள், 13,200 குழாய்க் கிணறுகள், 15,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஆகியவற்றைத் தோண்டுவதற்கும், 34,600 விசை யேற்றங்களை நிறுவுவதற்கும், 3,000 டிராக்டர்களை வழங்குவதற்குமான திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. இதனால் பெரும் அளவிற்கு பலன் பெறும் விவசாயப் பெருங்குடி மக்களை நான் இப்போதே பாராட்டுகிறேன், அவர்களை வாழ்த்துகிறேன், வேளாண்மைக்காக





இப்படிப்பட்ட தனி கவனம் செலுத்தி இந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்த நமது அரசிற்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுமட்டுமின்றி விவசாயத்தைப் பெருக்கும் வகையில் குறுகிய கால விவசாயக் கடனுக்கு என 62 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது ஒரு மட்டற்ற மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இது மட்டுமின்றி நீண்ட காலக் கடனுக்கு என 16 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது விவசாயத்தை நல்ல முறையில் ஊக்குவிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. நடப்பு ஆண்டில் பருவ மழை பெய்திட்டால், நாம் பெரும் அளவில் உணவுத் துறையில் முன்னேற்றம் காண்பது மட்டுமின்றி அண்டை மாநிலங்களுக்கும் உணவு தான்யத்தை அனுப்பும் அளவிற்கு ஏற்றம் காண்போம் என்பதில் ஐயப்பாடில்லை.

அடுத்து, கல்விக்கு என 64 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் கிராமப்புறங்களில் சமூகப்பணிகளுக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலுள்ள குடிசை வாழ் 'மக்களுடைய நல்வாழ்விற்கு என ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த நிதிநிலை அறிக்கையானது பாராட்டி வரவேற்கக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல பணிகளை அரசு செய்தாலும், எதிர்க்கட்சியில் உள்ள காங்கிரஸ் நண்பர்கள், "6 கோடி ரூபாய்க்குக் கூடுதல் வரியை விதித்துவிட்டார்களே; திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், வரியைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம் என்றெல்லாம் கூறினார்களே, பார்த்தீர்களா· வரியை விதித்திருக்கிறார்கள்", என்று இன்றைய தினம் போகுமிடங்களிலெல்லாம் பேசும் மேடைகளிலெல்லாம் பிரச்சாரம் செய்து வருவதைப் பார்க்கிறோம். தயவு செய்து எண்ணிப்பாருங்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பீடத்திற்கு வருவதற்கு முன்பு, 1967-க்கு முன்பு நாட்டின் நிலை என்ன? அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இரண்டாண்டு ஆட்சிக்காலத்திலும் நமது பெரு மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களுடைய இந்த ஓராண்டு கால ஆட்சியிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்களையும் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கலைஞர் அவர்கள் பொறுப்பேற்று ஓராண்டுக் காலம்தான் ஆகிறது. ஆனால் இந்தக் குறுகிய காலத்திற்குள் மக்கள் எந்த அளவிற்கு வசதிகளைப் பெற்று வாழ்கின்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதை எண்ணிப்பார்க்க விரும்பாத பெரு மதிப்பிற்குரிய காங்கிரஸ் நண்பர்கள் வரி போட்டிருப்பதையே ஒரு பெரும் குறையாக மக்களிடம் எடுத்துக்கூறி வருகிறார்கள். ஆனால் இதற்கு முன்பு 1969-70-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின் மீது உரையாற்றிய காங்கிரஸ் நண்பர்கள் விலைவாசி ஏற்றத்தைப் பற்றிப் பேசினார்கள். தஞ்சையில் நடந்த துப்பாக்கிச் சூட்டைப்பற்றிப் பேசினார்கள். சென்னையில் உள்ள கூவம் ஆற்று பிரச்னை பற்றிப் பேசினார்கள். மூடப்பட்டிருந்த நூற்பு ஆலைகளைப்பற்றிப் பேசினார்கள். மூடக்கப்பட்டிருந்த தொழில்களைப் பற்றிப் பேசினார்கள். ஆனால் இடையிலுள்ள ஓராண்டுக் கழக ஆட்சியில் அவைகள் துடைக்கப்பட்டுவிட்டபடியால், அப்படிப்பட்ட குறைகளை இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்போது அவர்களால் சொல்ல முடியவில்லை என்பதைப் பார்க்கிறோம். கலைஞர் அவர்கள் எப்படிப்பட்ட நெருக்கடியான நேரத்தில் பதவி ஏற்றார்கள் என்பதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். மதிப்பிற்குரிய ரெட்டியார் அவர்களே குறிப்பிட்டதுபோல, என்றுமே கண்டிராத அளவிற்குத் தமிழ் நாட்டில் வறட்சி நிலைமை. பல இடங்களில் குடிப்பதற்கும் நீர் இல்லை என்ற நிலை. அன்றைக்கு நாம் சொன்னோம், இங்கு இருந்த காங்கிரஸ் அரசினைப் பார்த்து, மத்திய அரசிடமிருந்து நிவாரணத்திற்காக ஒரு பத்து கோடி ரூபாய் தொகையை உதவியாகக் கொடுங்கள் என்று. பத்து கோடியா என்று மலைத்துக் கேட்க மறுத்துவிட்டார்கள் அந்த நேரத்தில். ஆனால் கலைஞர் அவர்கள் மத்திய அரசிடம் வாதிட்டு 17 கோடி ரூபாயை வறட்சிப் பணிகளுக்கு என உதவியாகப் பெற்றார்கள். காங்கிரஸ் ஆட்சியில் கொண்டுவந்த உணவுக் கட்டுப்பாடுகளை நமது அரசு நீக்கியது. தமிழகத்திலேயே மொத்தமாக 106 விவசாயக் கடன் வங்கிகள் இருந்தன. ஆனால் சென்ற ஆண்டு

மேலும் 61 வங்கிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுவரையில் விவசாயிகள் தாலுக்கா தலைநகரில் சென்று தங்கள் கடன் பணத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்குப் பதிலாக அந்தந்த ஊராட்சி ஒன்றியம் உள்ள இடத்திலேயே கடன்களைப் பெற்றுக்கொள்ளத் தக்க வகையில் மென்மேலும் விவசாயிகளுக்கான வங்கிகள் ஏற்படுத்தப்பட்டுவருகின்றன. அது மட்டுமின்றி இதுகாறும் விவசாயிகள் தங்களுடைய கிணறுகளை ஆழப்படுத்த வேண்டியிருந்தால், அதற்கான கடன் தொகைகளை விவசாய வங்கிகளிடமிருந்துதான் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலை இருந்தது. இப்போது முன்னேற்றக் கழக அரசு இந்த நிலையை மாற்றியமைத்து ஒரு விவசாயி அந்தக் கிராமத்திலுள்ள கூட்டுறவு பாங்கியிலேயே பத்தாயிரம் ரூபாய் வரையில் கடனாகப் பெறலாம் என்ற திட்டத்தினை அமல் படுத்தியிருக்கிறது. பம்பு செட்டுக்கு ஐயாயிரம் ரூபாய் வரையில் கடன் பெறுவதற்கான வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. கலைஞர் ஆட்சியில் ஏற்பட்ட பெரும் மாறுதல் கிராமத்திலுள்ள கூட்டுறவு பாங்கிகளிலேயே விவசாயிகள் பெரும் அளவிற்குக் கடன் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுதான். இது மட்டுமல்ல. இரண்டு லட்சம் ஏக்கர் நிலத்திற்கு மேல் நிலமற்ற ஏழைகளுக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுத்திருக்கிறார்கள். மேலும், கால்நடை பராமரிப்புக்கு என உள்ள மருத்துவ நிலையங்கள் தாலுக்காவிற்கு ஒன்று என்று இருந்ததை நமது அரசு பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்துக்கு ஒன்று, இன்னும் சில இடங்களில் இரண்டு மூன்று என்று கூட ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறது. அது மட்டுமின்றி 1967-க்கு முன்பு நமது தமிழகத்திலேயே டிராக்டர்களின் எண்ணிக்கை 300 என்று இருந்ததை ஒரு ஆயிரத்திற்கு உயர்த்தி, நடப்பு ஆண்டில் அது நாலாயிரத்திற்கும் அதிகமாகக்கூடிய வழி முறைகளை வகுத்துத்தந்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு சட்ட மன்றத்தில் பேசிய மதிப்பிற்குரிய மாற்றுக்கட்சி உறுப்பினர்கள் மூடப்பட்ட மில்களைப் பற்றிப் பேசினார்கள். ஆனால் இந்த ஆண்டில் அப்படிப் பேச அவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. காரணம் 13, 14 மில்களை மீண்டும் இயங்கச் செய்வதற்கு இந்த அரசு பெரும்பாடுபட்டு அதில் வெற்றியும் கண்டிருக்கிறது. எனவே இப்போது அவர்கள் இதுபற்றிப் பேசுவதில்லை. நீண்டகாலமாக பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டங்களைப் பற்றிப் பேசிக்கொண்டே இருந்தார்கள் முன்பு ஆட்சியில் இருந்தவர்கள். ஆனால் நிறைவேற்றப்படாமலேயே இருந்தது. கழக அரசு அவற்றைத் திறம்படச் செய்து முடித்தது. பிற்பட்ட மக்களுக்காக அமைச்சரவையில் ஒரு பிரிவையே ஏற்படுத்தி அவர்களுடைய முன்னேற்றத்திற்கு என தனிப்பிரிவினைக் காண்பித்திருக்கிறது. கழக அரசு. காந்தி நூற்றாண்டு விழாவைச் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது கழக அரசு. ஆனால் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்துகொண்டிருந்தார்கள் சுப்பிரமணியமா இவரா அவரா என்று கோஷ்டிப் பூசல்களில் ஈடுபட்டிருந்தார்கள். கழக அரசு தில்லையாடி வள்ளியம்மையைக் கௌரவித்தது இந்தக் காந்தி நூற்றாண்டிலே. தமிழ் நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனாரின் குடும்பத்தை ஆதரிப்பதற்காகவும், நாமக்கல் கவிஞர் அவர்களைக் கௌரவிக்கவும் குடும்பப் பென்ஷன் அளித்தது. இப்படிப் பட்ட வசதிகளைச் செய்து கொடுத்த காரணத்தினால், நாட்டிலே நடைபெற்ற இடைத் தேர்தல்களில் மக்கள், ஏழை எளியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்ததைப் பார்த்தோம். ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தல் மக்களால் நேரடியாக நடத்தப்படும் தேர்வாக இருக்க வேண்டும் என்று சொல்லிவந்ததைச் சட்டமாக ஆக்கிற்று கழக அரசு. இப்படிப் பட்ட முன்னேற்றகரமான பணிகளால் காங்கிரசிடம் 67-க்கும் மேற்பட்டிருந்த நகராட்சிகள் 10, 14 என்று மாறி, அவ்வளவும் திராவிட முன்னேற்றக் கழகத்திடம் வந்துள்ளதைப் பார்க்கிறோம். இடைத் தேர்தலில் முகையூரில் வெற்றி. பெருந்துறையில் வெற்றி இவற்றையெல்லாம் காங்கிரஸ்காரர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த ஓராண்டுக் காலத்தில் 1967-ல் ஏறத்தாழ 49 சட்ட மன்ற உறுப்பினர்களைப் பெற்றிருந்த காங்கிரஸ் 48, 47 என்று மாறி இன்றைக்கு காங்கிரஸ் உடைபட்டு 42 உறுப்பினர்கள் என்ற நிலைமையை அடைந்திருக்கிறது. இதையும் எண்ணிப்பார்க்க வேண்டும்.



நாங்கள் அன்றைக்கு 139-ஆக இருந்தோம். பெருந்துறை தேர்தலுக்குப்பிறகு 140-ஆக இருக்கிறோம். திருச்சியிலே மாநாடு நடைபெற்றது. அந்த் மாநாடு நல்ல மாநாடு. அந்த மாநாட்டில் கிடைத்த வசூல் தொகை ரூ. 1,10,000 ரூபாய். பெருமளவில் மக்கள் அந்த மாநாட்டுக்கு வந்திருந்தார்கள். காங்கிரஸ்காரர்கள் பொறாமை காரணமாக சேலத்தில் மாநாட்டைக் கூட்டி, அந்த மாநாட்டிலே அதிகமாக வசூல் ஆகியது என்று சொன்னார்கள். ஆனால் எந்த அமைச்சர்களும் அந்த மாநாட்டிலே கலந்துகொள்ள வரவில்லை. அங்கே பேசிய பேச்சாளர்கள் அனைவருமே ஏதாவது போராட்டம் நடைபெற வேண்டுமென்று வரிசையாகப் பேசினார்கள். ஆனால் திரு. கருத்திருமன் அவர்கள் பேசும் போது தெளிவாகச் சொன்னார்கள். இப்போது போராட்டம் வேண்டாம், 1972-ல் "நாமிநேஷன்" போடும்போது உள்ளே இருந்து போடுவோம் என்ற அளவில் மாநாடு முடிந்தது. அதிலே இன்னொரு விஷயம். திருச்சியில் நடந்த எங்கள் மாநாட்டில் தெளிவாகக் சொன்னோம் ரூ. 1,10,000 வசூல் என்று. ஆனால் தமிழகத்தின் பொது மாநாட்டைப் போட்ட காங்கிரஸ்காரர்கள் வசூல் எவ்வளவு என்று சொல்லவில்லை. எனக்கு நெருங்கிய நண்பர் ஒருவரைக் கேட்டபோது, சொன்னார். மொத்த வசூல் ரூ. 18,000 என்றும், செலவுத் தொகை ரூ. 20,000 என்றும், அதனால் தான் சொல்லவில்லை என்றும் சொன்னார்கள்.

**திரு. கே. ராஜாராம் :** அதற்கும் வரி போடலாமென்று அங்கத்தினர் நினைக்கிறாரா!

**திரு. பி. டி. முத்து :** காமராஜர் பேசும்போது, "55 ஆண்டு காலம் நான் அரசியல் வாழ்க்கையில் இருக்கிறேன். சேலம் மாநாடு பெரிய வெற்றி. இத்தகைய கூட்டத்தை வேறு எங்கேயும் பார்க்கவில்லை ", என்று உரை நிகழ்த்தினார். நாங்கள் எல்லாம் எதிர்பார்த்தோம். இவ்வளவு பெரிய கூட்டம் வந்திருக்கிறதே, வசூல் எவ்வளவு என்று சொல்லுவார்களே என்று. ஆனால் சொல்லவே இல்லை. அப்படிப்பட்ட நிலைக்கு காங்கிரஸ் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்லி, வரவு செலவுத் திட்டம் நல்ல திட்டம் என்றும் விவசாயி மக்கள் அதை வரவேற்கிறார்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிறேன். கடந்த காலத்தில் நாட்டில் வறட்சி ஏற்பட்டது. எல்லா மாவட்டத்திலும் வறட்சி நிலை தணிந்திருந்தாலும் மதுரை, திருநெல்வேலி, ராமனுதபுரம் போன்ற பகுதிகளில் இன்னும் வறட்சி இருக்கிறது. அதற்குக் கொஞ்சம் தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் திருச்சி மாநாட்டிற்குப் பிறகு, எங்கள் மாவட்டத்தில் அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டி அங்கே இருக்கிற வறட்சி நிலைமையைப்பற்றித் தெளிவாகச் சொன்னோம். உண்மையில் சென்ற ஆண்டு சேலம் மாவட்டம் எந்த அளவுக்கு நீர் வளம் பெற்று இருந்ததோ, அந்த அளவுக்கு இல்லை. ராசீபுரம், நாமக்கல், திருச்செங்கோடு போன்ற பகுதிகளில் வறட்சி இருக்கிறது. அமைச்சர்களுக்குச் சொன்னோம். ஏதாவது வறட்சி நிவாரண நிதி கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்த முறையில் வறட்சி நிவாரணப் பணிகள் என் மாவட்டத்திற்கு அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகளின் மிக முக்கியமான பிரச்சினை நீர்ப்பிரச்சினை எங்கள் பகுதியில் தண்ணீருக்காக 150, 200 அடி கீழே தோண்ட வேண்டியிருக்கிறது. பாறையைப் பிளக்க வேண்டுமென்றால் தோட்டாக்கள் கிடைக்கவில்லை. விவசாயிகள் வாங்கும்போது, ஒரு தோட்டா விலை ஏறத்தாழ ரூ. 5 அல்லது ரூபாய் 6 ஆகிறது. மறைந்த விவசாய அமைச்சர் அவர்கள் சேலம், கோயம்புத்தூரில் அதற்குக் கிடங்குகள் திறப்பதாகச் சொன்னார்கள். இது வரை திறக்காத காரணத்தால், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தோட்டா வேண்டுமென்றால், மைசூருக்கும், ஆந்திராவுக்கும் சென்று கள்ளத்தனமாகக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. வருவதும் சரியாக விநியோகிக்கப்படுவதில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் இது பற்றிச் சொல்லியிருக்கிறேன். அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலும் சொல்லியிருக்கிறேன். இதுவரை தோட்டாக்களுக்குப் பரிகாரம்

[திரு. பி. டி. முத்து] [7th March 1970

கிடைக்கவில்லை. ரூ. 10,000-த்தில் வெட்ட வேண்டிய கிணறுக்கு விவசாயி ரூ. 20,000 செலவழிக்கவேண்டியிருக்கிறது. 200 அடி ஆழத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரவேண்டியிருப்பதால், கரண்ட் அதிகமாகத்தேவைப் படுகிறது. மற்ற இடத்தில் ஒரு ஏக்கருக்கு ரூ. 20 செலவானால், இங்கே ஏறத்தாழ ரூ. 100 ஆகிற நிலைமை இருக்கிற காரணத்தால், எங்கள் சேலம் மாவட்டத்திற்காவது ஏற்கனவே இருந்த கட்டணத்தை அனுமதிக்கவேண்டும். 8¼ பைசாவாக இருந்ததை 10 பைசாவாக ஆக்கியிருக்கிறார்கள். எங்கள் தொகுதிக்கு மட்டுமாவாது 8¼ பைசா என்று தரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற வாரத்தில் எங்கள் ராசீபுரம் வட்டத்தில் சுகாதார அமைச்சர் அவர்கள் வந்தபோது ஆஸ்பத்திரியைக் காட்டினோம். 1960-ம் ஆண்டு அதற்காக 1,80,000 சாங்க்ஷன் செய்யப்பட்டு இது வரை எந்த வேலையும் முடியவில்லை. சேலத்தின் இரண்டாவது தலைநகர் ராசீபுரம். இருக்கிற மருத்துவ மனையில் 23 படுக்கைகள் தான் இருக்கின்றன. அமைச்சரிடம் சொன்னோம். ஆவன செய்வதாகச் சொன்னார். ஆனால் நிதி நிலை அறிக்கையில் அதற்குப் பணம் ஒதுக்கப்படவில்லை. 1960-ல் ஒதுக்கிய 1,50,0000 ரூபாய்க்குப் பிரசவ விடுதி, அறுவை அறங்கு, ஆடவர், பெண்டிர் குழந்தைகளுக்குத் தனி வார்டு, காசநோய் பிரிவு ஆகியவற்றை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்றைக்கே சொன்னோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்தார்கள். அதற்காக நகராட்சி மன்றத்திடம் அனுமதி வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். நகராட்சியினர் அனுமதி இப்போது கொடுத்திருக்கிறார்கள். எங்கள் வேண்டுகோளை ஏற்றுச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு எங்கள் மாவட்டத்துக்கு வறட்சி நிவாரண உதவியும் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த ஆண்டு பருவமழை தவறிய காரணத்தால், ராசீபுரம், நாமக்கல், திருச்செங்கோடு தாலுக்காக்களில், இன்னும் சின்ன கிராமங்களில், குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை. இதற்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன். பொதுவாக எங்கள் பகுதியில் 5 அணைகள் கட்டவேண்டும். ராசீபுரம் வட்டத்தில் கொல்லி மலை இருக்கிறது. நாறைக் கிணறு, பச்சினம்பாளையம், முத்துப் பாளையம், இந்த இடங்களில் அணைகள் கட்டினால் தண்ணீர் கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி 1970–71-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்று முடித்துக் கொள்ளுகிறேன்.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 4.00 p.m. on Monday, the 9th March 1970.

The House then adjourned.

## IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. *Statutory Rules and Orders.*

Nil.

### B. *Reports, notifications and other papers.*

* 45. Resume of work transacted by the Tamil Nadu Legislative Council from 19th to 28th January 1970 during the XXXV Session.

46. Returns of Assets of Thiruvalargal R. Sambasivam and G. Parangusam, M.L.Cs. for the period ending 31st March 1969.

47. Answers to unstarred questions Nos. 17 to 20.

* Sent by messengers to all M.L.Cs. on 5th March 1970.





## APPENDIX I.

[ *Vide* answer to Starred Question No. 116 on page 455]

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை முன் வைக்கப்பட்ட விவர அறிக்கை.

1969 ஏப்ரல் திங்களில் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவர்களின் எண்ணிக்கை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| பிரிவு-1—விருப்பப்பாடங்கள். | மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1 குறிக்கணக்கியலும், வடிவியலும் | 39,602 |
| 2 பௌதீகம் | 20,250 |
| 3 ரசாயனம் | 13,568 |
| 4 உயிரியல் | 25,489 |
| 5 சரித்திரம் | 51,884 |
| 6 நில இயல் | 383 |
| 7 சமஸ்கிருதம் (வட மொழி) | 122 |
| 8 அராபியம் | 42 |
| 9 பாரசீகம் | 5 |
| | 1,51,351 |

| பிரிவு-2—விருப்பபாடங்கள். | |
|---|---|
| 1 பொறியியல் | 3,111 |
| 2 வேளாண்மை | 1,570 |
| 3 அனுவகவியல் | 2,761 |
| 4 மனையியல் | 486 |
| 5 வரைதலும் எண்ண ஒலியும் தீட்டுதலும். | 51 |
| 6 இசை | 76 |
| மொத்தம் | 8,055 |

## APPENDIX II.

[ *Vide* answer to Starred Question No. 120 on page 463 ]

நகராட்சி மன்றத்தின் கீழுள்ள உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் அல்லது தலைமை ஆசிரியை பதவி காலியாகையில் ஆண்கள் உயர்நிலைப்பள்ளியாயின், தலைமைக் கல்வி அதிகாரியாலும், பெண்கள் உயர் நிலைப்பள்ளியாயின் பெண்கள் பள்ளிகள் நேடுநராலும் தயாரிக்கப்பட்ட பட்டியலில் உள்ள பெயர்களில் தகுதி வாய்ந்தவர்களை நகராட்சி மன்றத்தின் நியமனக்குழு நியமனம் செய்து மேற்படி காலியிடத்தை நிரப்புகிறது.

[7th March 1970

2. நகராட்சி மன்றப் பணியில் எல்.டி.பி.டி., அல்லது பி.இடி., தகுதியில் 5 ஆண்டுகளுக்குக் குறையாது பணியாற்றியுள்ள அல்லது பெயர் பட்டியல் எந்த ஆண்டு குறித்து தயாரிக்கப்படுகிறதோ அந்த ஆண்டு மே திங்கள் 1-ஆம் நாளன்று 5 ஆண்டுக்குக் குறையாது பணியாற்றியிருக்கக்கூடும் ஆனால் பெயர்ப் பட்டியலில் ஏற்கனவே இடம் பெறாத எல்.டி. பி.டி., அல்லது பி.இடி., உதவியாளர்கள் பெயர்கள் அடங்கிய பெயர் பட்டியல் ஒன்றை நியமனக் குழு தலைமைக் கல்வி அதிகாரிக்கும், பெண்கள் பள்ளி நேடுநருக்கும், அனுப்ப வேண்டியதுமன்றி, அக்குழுவின் கருத்துப்படி, அவர்களில் யாருடைய பெயரைப் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்பது பற்றிய பரிந்துரைகளுடன், அவ்வாறு பரிந்துரைக்கப்படுவதற்கான காரணங்கள் அடங்கிய விவர அறிக்கையையும்நியமனக் குழு சம்பந்தப்பட்ட தலைமைக் கல்வி அதிகாரி அல்லது பெண்கள் பள்ளிகள் நேடுநர்களுக்கு அனுப்ப வேண்டும். இப்பட்டியல் எந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட வேண்டுமோ அதற்கு அடுத்து முந்திய ஆண்டு அக்டோபர் திங்களில் அனுப்பப்படுகிறது. நியமனக்குழுவால் அனுப்பப்பட்ட பெயர் பட்டியலின் அடிப்படையில், ஆண்கள் பள்ளியாயின் நியமனக் குழு, தலைமை கல்வி அதிகாரி மாவட்ட கல்வி அதிகாரி ஆகியோரும் பெண்கள் பள்ளியாய் இருப்பின் நியமனக் குழுவும் பெண்கள் பள்ளிகளில் பெண்நேடுநரும் தகுதியான பெயர் பட்டியலைத் தயாரிக்கக் கூடுவர். தலைமை கல்வி அதிகாரி அல்லது பெண் நேடுநர், நியமனக்குழுவின் பரிந்துரைகளை ஏற்க இயலாமல் இருப்பின் ' பள்ளிக் கல்வி இயக்குநருக்கு குறிப்புரை அனுப்பப்படுகிறது. அவர் இது குறித்து முடிவு செய்ய அரசு, பொருத்தமெனக் கருதினால் அவரது முடிவை மாற்றியமைக்கலாம். இவ்வாறுதயாரிக்கப்பட்ட பெயர் பட்டியல் இரகசியமாக கருதப்பட்டு, மே திங்கள் 1-ஆம் நாளுக்குப் பிற்படாமல் நகராட்சி மன்றத்தின் நிர்வாக அதிகாரிக்கு அனுப்பப்படுகிறது. அதே சமயத்தில் பெயர் பட்டியலின் நகல் ஒன்று சென்னை பள்ளிக்கல்வி இயக்குநருக்கும் இரகசியமாக அனுப்பப்படுகிறது.

குறிப்பு : (1) தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியை நியமனம் குறித்து ஐந்தாண்டுத் தகுதிப் பணியை முடிவு செய்யும் காரியத்திற்காக, அந்நகராட்சிப் பணியில் ஐந்தாண்டுகள் பணியாற்றிய உதவியாளர்கள் இல்லாத நேர்விலும் வேறு ஆசிரியரின் முதுநிலை பாதிக்கப்படாத நேர்விலும் அரசினால் ஏற்பளிக்கப்பட்ட இடைநிலைப்பள்ளி—அது எவரால் நிர்வகிக்கப்படினும்—அல்லது பாதுகாப்புத்துறை இடைநிலைப்பள்ளிகளில் உதவியாளர்களின் முந்திய பணியும் கருத்தில் கொள்ளப்படுகிறது.

(2) ஒரு நகராட்சி மன்றத்திற்கு, ஆண்டு பெயர்ப்பட்டியல் புதிதாகத் தயாரிக்கப்படுவது அவசியமானால் அல்லது தற்பொழுதுள்ள பெயர்ப் பட்டியலில் மாற்றங்கள் செய்யவேண்டியிருப்பின் மட்டுமே தலைமைக் கல்வி அதிகாரியும், மாவட்ட கல்வி அதிகாரியும் அல்லது பெண்கள் பள்ளிகள் பெண் நேடுநர் நியமனக் குழுவுடன் கூட்டம் நடத்தலாம்.

(3) மூன்றுக்குக் குறையாமலும் ஐந்துக்கு மேற்படாமலும் பெயர்களைக் கொண்ட இப்பட்டியல் இரகசியமாக வைத்திருக்கப்படவேண்டும்.

(4) தலைமைக் கல்வி அதிகாரி அல்லது பெண் நேடுநர் அந்நகராட்சிப்பணியில் தகுதியுடைய ஆசிரியர்கள் போதுமான அளவில் இல்லை என அறிந்தால் விளம்பரங்கள் மூலம் வெளியிலிருந்து விண்ணப்பங்கள் நிர்வாக அதிகாரியால் வரவழைக்கப்படலாம். நிர்வாக அதிகாரியால் பெறப்படும் விண்ணப்பங்கள் யாவும் தலைமைக் கல்வி அதிகாரி அல்லது பெண் நேடுநருக்கு அனுப்பப்படுகின்றன. தலைமைக் கல்வி அதிகாரி அல்லது பெண் நேடுநர் நேர்முகத் தேர்வு நடத்துவது அவசியமெனக் கருதினால் மாவட்டக் கல்வி அதிகாரியுடன் கலந்துகொண்டு விண்ணப்பதாரர்களில் தகுதியானவர்களை தொடக்கத் தேர்தலில் தேர்ந்தெடுத்து நேரடிப் பேட்டி நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். நேரடிப்பேட்டியில் கலந்துகொண்டவர்களில் தகுதியானவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து, முன்பு நகராட்சி மன்றத்தில் பணிபுரிந்தவர்களின் பெயர்களையும் அப்பட்டியலில் குறித்துக் கொள்ளவேண்டும்.



7th March 1970]

(5) பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்படும் பெயர் குறித்து தலைமைக் கல்வி அதிகாரி அல்லது பெண்கள் பள்ளி பெண் நேடுநர், நியமனக் குழு இவர்களிடையே கருத்து வேறுபாடு இருப்பின், அவர்களில் ஒருவர் இதைப்பற்றி பள்ளி கல்வி இயக்குநரிடம் அறிவிக்கலாம். அவரது முடிவே இறுதியானதாகும். எனினும், அரசு மாற்றம் செய்வது உகந்ததெனக் கருதினால் மேற்படி முடிவை மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

6. பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள எவரது பெயரும், அவரது பெயரை நீக்குவதற்கான காரணங்கள் எழுத்து மூலம் பதிவு செய்யப்பட்டாலன்றி மற்றபடி பெயர்ப்பட்டியலிருந்து நீக்கப்படக் கூடாது.

7. பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்பட்டு, ஆனால் வேலைக்கு அமர்த்தப்படாது உள்ளவர்களின் பெயர்கள் அடுத்தடுத்து பெயர் பட்டியலில் சேர்க்கப்படுகின்றன.

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

**Monday, the 9th March 1970.**

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

*Thirukkural Research*

* @ 146. *Q.*—THIRU V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the way in which the amount allotted by the Tamil Nadu Government to the Universities in Tamil Nadu for conducting research in Thirukkural has been spent; and

(*b*) the names of the Scholars appointed for the Thirukkural Research ?

**திருக்குறள் ஆராய்ச்சி**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருக்குறள் ஆராய்ச்சிக்காக தமிழக அரசு தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கிய தொகை எவ்வாறு செலவிடப் பட்டது ?

(இ) திருக்குறள் ஆராய்ச்சிக்காக நியமிக்கப்பட்ட அறிஞர்கள் பெயர்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ), (இ). இம்மாநிலத்தில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள் ஒவ்வொருவரிடமும் மூன்று லட்சம் ரூபாய் ஒப்படைக்கப்பட்டது. சென்னை பல்கலைக் கழகம் கீழ்க்கண்ட நியமனங்களைச் செய்துள்ளது—

விரிவுரையாளர்—(1) வித்துவான் எம். சண்முகம் பிள்ளை.
(2) திரு கே. டி. திருநாவுக்கரசு.

ஆராய்ச்சி மாணவர்.—வித்துவான் இ. சுந்தரமூர்த்தி.
(உயர் விரிவுரையாளர்—இப்பதவிக்குப் பொருத்தமானவராக எவரையும் பல்கலைக் கழகத் தேர்வுக்குழு கருதவில்லை.)

கீழே குறிப்பிட்டவர்களை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நியமனம் செய்துள்ளது —

உயர் விரிவுரையாளர்.—டாக்டர் எம். கோவிந்தசாமி, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.

ஆராய்ச்சி உதவியாளர்.—திரு எஸ். தண்டபாணி தேசிகர் (மகா வித்வான்)

---

a Postponed from the list of questions for 4th March 1970.

கீழே குறிப்பிட்டவர்களை மதுரைப் பல்கலைக் கழகம் நியமனம் செய்துள்ளது:—

விரிவுரையாளர்—(1) டாக்டர் டி. முருகரத்தினம், பி.ஏ. (ஹானர்ஸ்), எம்.லிட்., பி.எச்.டி. (மனித இன ஆராய்ச்சி நூலில் தகுதிப் பட்டயம், மொழி நூலாராய்ச்சியில் தகுதிப் பட்டயம்).

(2) செல்வி காமாட்சி சீனிவாசன், பி.ஏ., எம்.ஏ. (மொழி நூலாராய்ச்சியில் தகுதிப்பட்டயம்), எம்.லிட். (ஆராய்ச்சி).

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த நிதியிலிருந்து நிரந்தரமாக இந்த ஆராய்ச்சிக்கு ஒரு வருவாய் வருவதற்கான ஏற்பாடு ஏதேனும் செய்யப்பட்டிருக்கிறதா அல்லது இந்த ஒதுக்கப்பட்ட நிதி செலவான பிறகு, ஆராய்ச்சி நின்றுவிடுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் இந்த ஆராய்ச்சிக்காக நியமிக்கப்பட்ட அறிஞர்கள் போதிய தகுதி படைத்தவர்கள் அல்ல என்ற குறைபாடு பொதுவாக இருந்து வருகிறது. ஆகவே இதற்காக நியமிக்கப்பட்ட அறிஞர்கள் சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது அந்தந்தப் பல்கலைக் கழகத்தாலேயே நியமிக்கப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட 3 பல்கலைக் கழகத்திற்கும் தலைக்கு 3 லட்சம் ரூபாய் என்ற அளவில் 9 லட்சம் ரூபாய் இந்த வகையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த 3 லட்சம் ரூபாயை நிலையான வைப்பு நிதியாக ஏதேனும் ஒரு வங்கியில் போட்டு அதிலிருந்து வருகிற வட்டியைத்தான் இந்த ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று இருக்கிற காரணத்தால், என்றென்றைக்கும் பயன்படவேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், இந்த நிதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 22,500 வட்டியாகக் கிடைக்கும். அந்தப்பணத்திற்குள் தான் இந்த ஆராய்ச்சி நடக்க வேண்டும் என்பதுதான் நியதி.

பல்கலைக் கழகத்தின் மற்ற துறைப் பேராசிரியர்களைத் தேர்ந்தெடுக்க என்னென்ன தகுதிகளை, முறைகளைக் கையாளுகிறார்களோ அதே முறையைக் கையாண்டுதான் ஆராய்ச்சித் துறையில் ஈடுபடுத்தப்படுகிற பேராசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதற்கு என்று, பல்கலைக் கழகத்தினுடைய தமிழ்த்துறை பேராசிரியர், விரிவுரையாளர்கள் போன்றவர்களை நியமிக்கத் தனிக் குழு அமைப்பது போல், தமிழ் வல்லுனர்கள் 4 பேரும், பேராசிரியர்கள் துணைப் பேராசிரியர்கள் இவர்களைக் கொண்ட குழு ஒன்றுதான் இந்த ஆராய்ச்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கிறது. அந்தந்தப் பல்கலைக் கழகங்கள் எந்தெந்த ஆராய்ச்சித் துறையில் பணியாற்ற வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறதோ அவைகளுக்குத் தகுதி படைத்தவர்களைத் தான் நியமித்திருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்பட்டவர்கள் தகுதிக் குறைவானவர்கள் என்று கூறிவிட முடியாது. காரணம் அவர்கள் எல்லாம் எம்.ஏ., எம்.லிட்., பி.ஹெச்.டி., போன்ற பட்டம் பெற்றவர்கள் தான். எனவே தேர்ந்தெடுத்ததிலே குறைபாடு இல்லை. சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு உயர் விரிவுரையாளர் பதவிக்கு ஒருவரும் தகுதியானவராகத் கிடைக்கவில்லை என்று பல்கலைக் கழகத் தேர்வுக்குழு கருதிய காரணத்தால், அந்த இடம் இன்னும் நிறைவு செய்யப்படாமல் இருக்கிறது. தகுதியானவர் கிடைக்கும்போது அது நிறைவு செய்யப் படும். மற்றைய பகுதிகளுக்குத் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. டி. கே. ஷண்முகம் :** தலைவரவர்களே, திருக்குறள் ஆராய்ச்சி எப்படி நடத்தப்பட வேண்டும் என்று அரசு ஏதாவது ஒரு குறிப்பு கொடுத்திருக்கிறதா அல்லது அந்தப் பொறுப்பு அந்தந்தப் பல்கலைக் கழகத்திற்கே விடப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த நிதி 3 பல்கலைக் கழகங்களுக்கும் வழங்கப்பட்ட பிறகு, 9-8-1968-ல் நானே மூன்று பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர்களையும், தமிழ்ப் பேராசிரியர்களையும் கூப்பிட்டு வைத்து, எந்த வகையில் திருக்குறள் பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டுமென்று ஆலோசித்தேன். காரணம் 3 பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களும் சேர்ந்து ஒரே ஆராய்ச்சியைத் திரும்பத் திரும்பச் செய்துகொண்டிருந்தால், இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் மூலம் விரிவான பலன் கிடைக்காது என்று கருதி, 3 பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களும் தனித்தனியாக ஆராய வேண்டிய தலைப்புகள் பொறுக்கி எடுத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இது திருக்குறள் ஆராய்ச்சித் துறை என்று இருந்தாலும் கூட, திருக்குறள் ஆராய்ச்சிக்குச் செலவழிக்கப்பட்ட பிறகு, தமிழின் பல்வேறு துறைகளைப் பற்றியும் ஆராய இத்துறை பயன்படுத்தப்படவேண்டும். பெயர்தான் திருக்குறள் ஆராய்ச்சி என்றிருக்கிறதே தவிர, என்றைக்குமே திருக்குறளைப்பற்றியேதான் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்ற நிலையில்லை. தமிழின் வேறு பல துறைகளும் ஆராய்ச்சிக்காக வென்று எடுத்துக் கொள்ளப்படும். அதற்கு ஏற்ற வகையிலேதான் ஆராய்ச்சிக்கான தலைப்புகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. மூன்று பல்கலைக் கழகங்களும் முதலில் அந்தத் துறையில் ஆராய்ச்சி செய்யட்டும் என்றுதான் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு திருக்குறளுடைய "இலக்கியப் பகுதி" பற்றி ஆராய்ச்சி செய்ய அந்தத் தலைப்பு அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அடுத்து, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு திருக்குறளுடைய "ஒப்புவமை பற்றிய பகுதி" பற்றி ஆராயத் தலைப்பு தரப்பட்டிருக்கிறது. மதுரைப் பல்கலைக்கழகத்திற்குத் திருக்குறளுடைய "வாழ்வியல் பகுதி" பற்றி ஆராய வேண்டுமென்று தலைப்பு தரப்பட்டிருக்கிறது. இப்படி 3 பிரிவுகள் தனித்தனியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகு சென்னைப் பல்கலைக் கழகம் "சங்க இலக்கியங்கள் மற்றும் பண்டை இலக்கியங்கள்" பற்றி ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டுமென்றும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் "இடைக்கால இலக்கியங்கள்" பற்றி ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டுமென்றும் மதுரைப் பல்கலைக் கழகம் "தற்கால இலக்கியங்கள் பற்றி" ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது. அதுமட்டுமின்றி, இம் மூன்று பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களும், பேராசிரியர்களும் ஆறு திங்களுக்கு ஒரு முறையேனும் கூடி தங்கள் பல்கலைக் கழகங்களின் ஆராய்ச்சிப் பிரிவுகள் இரட்டிப்பு வேலைகளைச் செய்யாமல் தடுக்கவும் அவர்கள் செய்கிற பணிகளைக் குறித்து ஒருவரோடு ஒருவர் கலந்து தக்க முறைகளை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இம்மாதிரி மூன்று பல்கலைக் கழகங்களும் தனித் தனியாக மேற்கொண்டுள்ள இந்த ஆராய்ச்சி தமிழுக்கும், தமிழகத்திற்கும் பயன்படும் என்ற அடிப்படையில் தான் பொருள்கள் நன்கு பிரித்துத் தரப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. அறிவழகன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திருக்குறள் ஆராய்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட துறைகளின் தலைப்புகளைப் பற்றிச் சொல்லுகிற நேரத்தில் திருக்குறளுடைய வாழ்வியல் பகுதி, ஒப்புவமைப் பகுதி என்று சொன்னார்கள். ஆனால் திருக்குறளைப் பற்றிய ஆராய்ச்சியைச் சாதாரணமாக ஒரு ஆராய்ச்சி மாணவரே செய்ய முடியும் என்பதால், மேலே குறிப்பிட்ட தலைப்புகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை என்பதோடு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நெடுங்காலமாகப் பல்வேறு மன்றங்களில் பேசுகிறபோது தெரிவித்த கருத்திற்கிணங்க திருக்குறளின் 133 அதிகாரங்களிலும் சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களை, உலகத்தின் பல்வேறு அறிஞர்கள் கூறிய கருத்துக்களோடு ஒப்பிட்டு, உலகத்தின் பல்வேறு இலக்கியங்களில் காணப்படும் ஒத்த கருத்துக்களோடு ஒப்பிட்டு, மேலைநாட்டுச் சிறந்த சிந்தனையாளர்களின் கருத்துகளோடு ஒப்பிட்டுப் பார்த்து, அதை உலகத்திற்கு எடுத்துச் சொல்லும் முயற்சியில் ஈடுபடுவதுதான் திருக்குறள் ஆராய்ச்சியில் செய்யக் கூடிய முதல்பணியாக இருக்கும் என்ற காரணத்தால், அவ்வாறே சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று அவைகளுக்குத் தெரிவிக்க அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் ஆராய்ச்சி நடத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் ஆராய்ச்சிக்காக பொறுக்கப்பட்ட தலைப்பு களில் திருக்குறளின் "ஒப்புவமை பகுதி" ஒன்றுகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. திருக்குறளில் காணப்படும் கருத்துக்களை மற்ற இலக்கியங் களிலும் பிறநாட்டு உலக இலக்கியங்களில் காணப்படும் கருத்துக்களோடு ஒப்புநோக்கி உணர்த்தவும், பிறநாட்டுப் பேரறிஞர்கள் கூறிய கருத்துக் களோடு உலகப் பேராசியர்கள் கூறிய கருத்துக்களோடு இன்னின்ன வகைகளில் ஒப்புவமை உள்ளதாக இருக்கிறது என்று எடுத்துக் கூறவும் தான் இந்தத் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**தவத்திரு. தெய்வசிகாமணி அருணசல தேசிகர்** (குன்றகுடி அடிகளார்): தலைவரவர்களே, திருக்குறள் ஒரு இலக்கிய நூலாக வழங்கப்பட்டாலும், அது ஒரு சிறந்த "உள இயல்" "சமூக இயல்" "பொருளியல்" அடிப்படை யில் வளர்ந்திருக்கிறதால் பிறநாட்டு நூல்களை ஒப்புநோக்குகிறபோது மிகச் சிறந்த அறவியல் நூலாகவும் அது விளங்குகிறது. திருக்குறள் உள இயல் அடிப்படையில், திருக்குறள் பொருளியல் அடிப்படையில், திருக்குறள் சமுதாய இயல் அடிப்படையில், திருக்குறள் மக்களாட்சி மரபுகள்' என்ற முறையில் ஆய்வு செய்தால், அது வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். இலக்கிய ஒப்புவமைப் பகுதி பற்றி ஏற்கெனவே வந்திருக்கும் உரைவளங்கள் போதுமானவையாக இருக் கின்றன. முக்கியமாக உள இயல், சமூக இயல் வகையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல, பல்வேறு கருத்துக்கள் மனதில் கொள்ளப்பட்டிருக்கின்றன. என்றாலும் இப்போது குறிப்பிட்டிருக்கிற ஆராய்ச்சி வேலைகள் முடிவடைந்தபின்னர் அடுத்து செய்யப்பட வேண்டிய ஆரய்ச்சிகளை மேற்கொள்ளும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் சொன்ன கருத்துக்களை உள்ளத்தில் கொண்டு அவ்வகைளும் ஆராயப்படும். இந்த ஆராய்ச்சித் துறை நீண்ட காலத்திற்கு இருக்கப்போகிறது. இன்னும் பல ஆண்டுகள் ஆராய்ந்த பிறகு, திருக்குறளில் இன்னும் என்ன என்ன இருக்கிறது என்று தேடிப் பிடிக்க வேண்டிய நிலை ஏற்படும். அப்போது இவைகளை உள்ளத்தில் கொண்டு பொருளியல் துறை, அறிவியல் துறை; மக்களாட்சித் துறை ஆகியவைகளையும் ஆராயலாம்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, திருக்குறள் ஆராய்ச்சி, திருக்குறள் ஆராய்ச்சி என்று சொல்லிக்கொண்டே போனால், ஆராயப்பட்ட விஷயங்களைச் சாதாரண மக்களுக்கு எடுத்துச் சொல்ல, அவர்களுக்குப் பாடமாகக் கற்பிக்க வேண்டிய வகையில் இந்த அரசு ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா ? வெறும் ஆராய்ச்சி மட்டும் இருந்துகொண்டே போனால், என்ன லாபம் ? மக்களுக்கு அதை எடுத்துச் சொல்ல வேண்டாமா? அந்த வகையில் அரசாங்கம் என்ன திட்டம் வைத்திருக் கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுவரையில் செய்யப்பட்ட ஆசாய்ச்சியின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் நடக்காத காரணத்தால்தான், இந்த வகையில் தொடர்ந்து ஆராய்ச்சி செய்து அவர்களை அதன்படி நடக்க வைக்க என்ன செய்யலாம் என்று ஆராய வேண்டியிருக்கிறது.

**மிஸ்டர் சேர்மன் :** கேள்வி மட்டும் கேட்பதானல், உறுப்பினர் கேட்கலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே; விரிவான ஆராய்ச்சியில் பிறநாட்டு இலக்கியங்களை எல்லாம் ஆராய்ந்து பல நல்ல முடிவுகள் ஏற்படுத்துவதற்கான யோசனைகள் எல்லாம் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.



பிற மொழிகளில் இருக்கிற ஒலி எழுத்துக்கள் தமிழில் இல்லை. உதாரணமாக, ஜப்பான் என்பதை சப்பான் என்றும், ஜெர்மனி என்பதை செர்மனி என்றும்தான் எழுதுகிறோம். எனவே அப்படிப்பட்ட ஒலி எழுத்துக்கள் எல்லாம் தமிழில் வருவதற்கான முயற்சிகளையும் இந்த ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னபடி, திருக்குறள் ஆராய்ச்சி, மற்ற இலக்கியங்கள் பற்றிய ஆராய்ச்சிக்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்பற்றியும், ஆராய்ச்சி மேற்கொள்ளலாம். அதைப்பற்றிய எண்ணங்கள் இருக்கின்றன. தமிழில் அவர் கேட்ட ஒலிக் குறிப் பெல்லாம் இருக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் எழுத்துக்கள் மொத்தம் 247 என்று இருந்தாலும்—உயிரெழுத்து 12, மெய்யெழுத்து 18, ஆக மொத்தம் 30—அவைகளில் பல எழுத்துக்கள் பயன்படுத்தப்படாமலேயே இருக்கின்றன. உடன்படுமெய் இருக்கிறது. அவைகளை எல்லாம் எந்த வகையில் உபயோகப்படுத்தலாம் என்று ஆராயப்படுகிறது. ஆய்தவெழுத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள் ஆரர்ய்ச்சி செய்திருக்கிறார்கள். அந்தத் துறையில் ஏற்கெனவே நல்ல ஆராய்ச்சிகள் நடந்திருக்கின்றன. இப்படி எல்லா மொழிகளிலும் எல்லா ஒலிக்குறிப்பும் வருவதில்லை என்பதையும் நாம் உணர வேண்டும். ஆங்கிலத்தை எடுத்துக் கொண்டால் அது உலகம் முழுவதும் பரவியிருக்கிற மொழியாக இருந்தாலும், உலகம் முழுவதும் பரவியிருக்கிற ஒரு பெரும் மொழியாக இருந்தாலும், அந்த மொழியில் கூட தஞ்சாவூரை டான்சூர் என்றும் தூத்துக்குடியை டுட்டிக்கோரின் என்றும்தான் சொல்ல முடிந்தது. இன்னும் சொல்லப்போனால் தமிழைக் கூட "டமில்" என்றுதான் சொன்னார்கள். அதே மாதிரி நம் மொழியில் உள்ள ஒலிக்குறிப்பை எல்லாம் சீன மொழியிலோ ஜப்பான் மொழியிலோ அப்படியே உச்சரிக்க முடியாது. முடிந்த அளவுக்குத்தான் அவைகளை ஒரு மொழியில் கொண்டுவரமுடியும். ஆகவே ஒலிக் குறிப்புகளை எல்லாம் அதிகமாக்க எதிர்காலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : Now let us see what " Swatantra " wants.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, திருக்குறளை இந்த மாநிலத்திலும் வேறு மாநிலங்களிலும் பரப்புவதற்காக தமிழக அரசு கடைப்பிடிக்கும் முறைகள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தைப் பொறுத்த வரையிலும், 10, 15 ஆண்டு களுக்கு முன்பெல்லாம் இல்லாத அளவுக்கு நல்ல ஆர்வமும் எழுச்சியும் திருக்குறளுக்கு ஏற்பட்டிருக்கிறது. கடந்த 3 ஆண்டுகளாகப் பல்கலைக் கழகத்தில் படித்து வெளியேறுகிற பட்டதாரிகளுக்கு ஒரு திருக்குறள் புத்தகம் கொடுக்கப்படுகிறது. மூன்று ஆண்டுகளாக இதனைத் தொடர்ந்து செய்து வருகிறோம். இப்போது திருவள்ளுவர் 2,000 ஆண்டு நிறைவு விழா நாடெங்கும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டு திருக்குறள் பற்றியும் திருக்குறள் நெறி பற்றியும் மக்களுக்கு ஏராளமாக விளக்கம் தரப்பட்டிருக்கிறது. வேறு பல மாநிலங்களின் முக்கியமான மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பிற மொழிகளில் மொழி பெயர்த்த அறிஞர்களைத் தமிழகத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் ஆண்டுக்கு ஆண்டு பாராட்டி வருகிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் கேடயமும் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. குறிப்பாக மராட்டிய மொழி, மலையாள மொழி, கன்னட மொழி, ஆந்திர மொழிகளில் எல்லாம் மொழி பெயர்க்கப்பட்டு, அந்த மொழி பெயர்ப்பாளர்களுக்கு பரிசுகள் வழங்கியிருக்கிறார்கள். இன்னும் இந்தியில், வங்க மொழியில் எல்லாம் கூட மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது.

[9th March 1970

பிற மொழிகளில் மொழிபெயர்க்கும் ஆசிரியர்களுக்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம் பாராட்டு தெரிவிக்கிறது. உலகத்தின் பல்வேறு மொழிகளில் திருக்குறள் இன்றையதினம் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. ஸ்விடிஷ் மொழியில் மொழி பெயர்க்கும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழில் தங்களால் அங்கே அச்சடிக்க முடியாத நிலை இருக்கிற காரணத்தால், தமிழில் நீங்கள் அச்சடித்துக் கொடுக்க முடியுமா என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அப்படியே நாங்களும் அச்சடித்துக் கொடுக்கிறோம் என்று அவர்களுக்கு வாக்கு அளித்திருக்கிறோம். இப்படி வேறு மொழிகளில் கூட மொழிபெயர்க்கப் பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

*Government High School, Krishnagiri.*

* 147 @ *Q.*—THIRU V. ISVARMURTHI : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the District Educational Officer, Dharmapuri granted permission to the local D.M.K. partymen in Krishnagiri to hold the 2,000th Birth day anniversary celebration of Thiruvalluvar at the Government High School, Krishnagiri during August 1969 ;

(*b*) whether the permission granted to hold the anniversary was intimated to the Headmaster of the said High School; and

(*c*) if not, the reasons therefor?

**அரசு உயர்நிலைப் பள்ளி. கிருஷ்ணகிரி**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருவள்ளுவரது 2000-ஆம் ஆண்டு பிறந்த நாள் விழாவை கிருஷ்ணகிரியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் கொண்டாடுவதற்கு உள்ளூர் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியாளர்களுக்கு தருமபுரி மாவட்ட கல்வி அதிகாரி 1969-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அனுமதி வழங்கினாரா?

(இ) மேற்கூறிய உயர்நிலைப் பள்ளியில் பிறந்த நாள் விழா கொண்டாடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது, அப்பள்ளியின் தலைமை ஆசிரியருக்குத் தெரிவிக்கப்பட்டதா ?

(உ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) இவ்விழாவை கிருஷ்ணகிரி உயர்நிலைப் பள்ளியில் நடத்த தி. மு. கழகத்தினருக்கோ அன்றி வேறு எந்த அரசியல் கட்சிக்கோ, அனுமதி கொடுக்கப்படவில்லை. சேலம் முதன்மைக் கல்வி அதிகாரி நகர தமிழ் இலக்கிய மன்றத்திற்கு அனுமதி அளித்துள்ளார்.

(இ) ஆம்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, பொது இடங்களில் தேசியத் தலைவர்களுடைய பிறந்தநாள் விழாக்கள், நாட்டின் முக்கிய தலைவர்களின் விழாக்களைக் கொண்டாடுவது தவறா? அதற்கு அனுமதி கேட்டால் அரசு அனுமதி கொடுக்க மறுக்குமா?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எந்த அரசியல் கட்சியையும் சேராமல், கலாசாரத்தின் அடிப்படையில், தேசியத் தன்மை அடிப்படையில், கொண்டாடப்படுகிற விழாக்களுக்குப் பொது இடங்களில், பள்ளிகளில் அனுமதி அளிக்கப்படுகின்றது. அனுமதி பெற்றுத்தான் நடத்த வேண்டுமே தவிர, அனுமதி பெறாமல் நடத்தக்

a Postponed from the list of questions for 4th March 1970



9th March 1970]

கூடாது. மாவட்டக் கல்வி அதிகாரிக்கு சங்கடம் இருக்குமானால், கல்வி இயக்குனருக்கு எழுதி அனுமதி பெற்றுத்தான் அவை நடக்கவேண்டுமென்றிருக்கிறது. தேசியத் தலைவர்கள், நாட்டுக்குப் பொதுவானவர்கள் சம்பந்தப்பட்டவரை, மாச்சரியங்களுக்கு, தகராறுகளுக்கு இடமில்லாத அளவில் இருந்தால் அனுமதி அளிக்கப்படுகிறது.

*Non-teaching staff in Aided High Schools.*

* 148. @ *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any departmental order has been issued on 19th Octoebr 1968 denying Earned Leave to the members of the non-teaching staff in Aided High Schools;

(*b*) whether it is a fact that there was a departmental order issued on 7th May 1965 placing them on a par with the teaching staff in the matter of leave rules; and

(*c*) if so, the reasons for the reversal of such order ?

**மான்யம்பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்கள்**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம்பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஈட்டிய விடுப்பு மறுத்து, 19–10–1968 நாளன்று துறைசார்ந்த ஆணை ஏதேனும் பிறப்பிக்கப்பட்டுள்ளதா ?

(இ) விடுப்பு விதிகளைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுக்கு நிகரான நிலையில் இவர்களை வைத்து 7–5–1965 நாளன்று துறை சார்ந்த ஆணை பிறப்பிக்கப்பட்டது உண்மையா?

(உ) ஆமெனில், அத்தகைய ஆணை தள்ளுபடி செய்யப்பட்டதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) ஆம். பள்ளிக் கல்வி இயக்குநரால்.

(இ) ஆம்.

(உ) மான்யம் பெறும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 1–4–1968 முதல் அளிக்கப்படும் தாராள விடுப்பு விதிகள், இப்பள்ளிகளிலுள்ள ஆசிரியரல்லாத அலுவலர்களுக்குப் பொருந்தாது. ஏனெனில், அவர்கள் ஆசிரியர்களைப் போல் நீட்டு விடுமுறை துறையைச் சேர்ந்தவர்களல்ல. எனினும், பணிமுறைமைகளை ஆய்வதற்காக அமைக்கப்பட்ட குழு இந்த விஷயத்தையும் கவனிக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஆசிரியர்களைப் போல ஆசிரியர் அல்லாத எழுத்தர்களுக்கும் ஈட்டிய விடுப்பு கொடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அவர்களும் மற்ற அரசாங்க அலுவலர்களைப் போல கருதப்பட வேண்டும் அல்லது ஆசிரியர்களைப் போல கருதப்பட வேண்டும். இரண்டு சாராரில் யாராவது ஒரு சாராரைப்போல அவர்கள் கருதப்பட வேண்டும். அவர்களைப்போல இவர்களுக்கும் ஈட்டிய விடுப்பு கொடுக்க வேண்டுமென்று அரசு கருதுமா?

@ Postponed from the list of questions for 4th March 1970.

[9th March 1970

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய பணி வேறு. ஆசிரியர் அல்லாத அலுவலர்களின் பணி வேறு. விடுமுறை காலத்தில் அவர்களுடைய பணி பள்ளிகளுக்குத் தேவைப்படுகிறது. விடுமுறை காலத்தில் ஓரளவுக்கு "பர்மிஷன்" என்ற நிலையில் செல்லாத நாட்களில் விடுமுறை என்பதாக மற்ற அரசு அலுவலர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்கலாமா என்பது யோசனையில் இருக்கிறது. அதற்கான குழு ஆராய்ந்து வருவதால் அவர்களுடைய இந்தக் கோரிக்கையின் மீதான கருத்து எதிர்பார்க்கப்படுகிறது. வந்த பிறகு அதுபற்றி ஆராயலாம்.

**திரு. கே. அறிவழகன்:** மானியம் பெறுகிற உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் எந்த விடுப்பையும் பெறமுடியாமல் இருப்பதால், டாக்டர் பால் குழுவின் அறிக்கை வெளியாவதற்கு முன்னால் கூட, அவர்கள் இதுவரையில் விடுப்பு பெறமுடியாத நிலையில் இருப்பதால் இடைக்காலத்தில் அவர்கள் இந்த அடிப்படை வசதியைப் பெறுவதற்குத் தனியாக அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆசிரியர்களை ஒத்து, இவர்களை நடத்துகின்ற நிலைமை இப்போதில்லை. இரண்டு விதத்திலும் ஆராயலாம். அரசாங்கம் அந்தக் குழுவின் அறிக்கையை எதிர்பார்க்கிறது. வந்தபிறகுதான் அதுபற்றிய முடிவு எடுக்க முடியும்.

### *Clerks in Aided High Schools*

* 149. @ *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state the stage at which the consideration of the restoration of cuts in salaries imposed on clerks in Aided High Schools on 31st March 164 stands ?

**மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் எழுத்தர்கள்.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் எழுத்தர்கள் நேர்வில் 31—3—1964 அன்று சம்பளத்தில் பிடித்துக் கொள்ளப் பட்ட தொகைகளை மீண்டும் கொடுத்துவிடுவதற்கான ஆலோசனை இப்போது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** இவ் விஷயம் அரசின் பரிசீலனையிலிருக்கிறது. விரைவில் ஒரு முடிவு எடுக்கப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** கிட்டத்தட்ட 4 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வாங்குகிற சம்பளமும் ஊதிய உயர்வும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் 400 எழுத்தர்களுக்குக் கொடுக்கப்படாமல் வைத்திருக்க என்ன காரணம்? இதைக் கொடுப்பதில் எந்தத் தவறுமில்லை என்பதாலும், தற்சமயம் அவர்கள் வாங்குகிற சம்பளத்திலும் ஓய்வு ஊதியத்திலும் பாதிக்கப்படுகிறார்கள் என்ற காரணத்தாலும், அந்த உயர்வை அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** ஆசிரியரல்லாதவர்கள் 200 பேர் சம்பளம் இந்த வகையில் குறைக்கப்பட்டிருக்கின்றது. அது பற்றிய கருத்துரையை இயக்குனர் அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அது நிதித் துறையின் பரிசீலனையில் இருக்கிறது. நிதித் துறை சிபாரிசு வந்த பிறகு, அதுபற்றி தக்க முடிவு எடுக்கப்படும்.

@ Postponed from the list of questions for 4th March 1970.



9th March 1970]

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் எழுத்தர்கள் 250 பேருக்கு மேல் இருந்தால் நியமிக்கலாம் என்று விதியிருக்கிறது. ஏதாவது காரணத்தால் சேருகிற பிள்ளைகள் 250-க்குக் குறைவாகிவிட்டால், அந்த ஆண்டு அந்த எழுத்தர்களின் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. அவர்கள் அட்டெண்டராக நியமிக்கப்படுகிறார்கள். பிள்ளைகள் அதிகமாக வராதது அவர்கள் குறையோ தவறோ அல்ல ஆகையால் பிள்ளைகளின் எண்ணிக்கை 250-க்குக் குறைந்தாலும், அவர்களது சம்பளம் பாதிக்கப்படாத அளவுக்குக் கொடுக்க அரசாங்கம் விதி வகுக்குமா?

**மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இங்கே இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரக் குறிப்பு தரப்படும்.

### *Hindi Pandits*

* 150. @ *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that Hindi Pandits of long experience in Aided High Schools posted to Aided Elementary Schools are denied Medical Leave;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) whether there is any proposal to grant Medical Leave in such cases ?

**இந்தி பண்டிதர்கள்**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் நீண்ட கால அனுபவம் பெற்று மானியம் பெறும் தொடக்கப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட இந்தி பண்டிதர்களுக்கு மருத்துவ விடுப்பு மறுக்கப்படுகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அத்தகைய நேர்வுகளில், மருத்துவ விடுப்பு கொடுப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) மானியம் பெறும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதிக்கப்படும் விடுப்பு வசதிகள், மானியம் பெறும் தொடக்கப் பள்ளிகளில் மாற்றுப்பணிகளில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள இந்தி ஆசிரியர்களுக்கும் அனுமதிக்கப்படுகின்றன. மானியம் பெறும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ விடுப்பு அளிக்கப்படாததால், அப்பள்ளிகளில் பணியில் எடுத்துக் கொள்ளப்படும் இந்தி ஆசிரியர்களும் மருத்துவ விடுப்பு பெறத் தகுதியற்றவர்களாகின்றனர்.

(உ) இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ஜி.ஓ. 477-ன்படி மற்ற ஆசிரியர்களுக்குள்ள அவ்வளவு உரிமைகளும் சலுகைகளும் இந்திப் பண்டிதர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அதன்படி நோய்கால விடுமுறை மட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதன் காரணமாக வேறு வேலைக்குப் போகும்போது, சங்கடம் ஏற்படுகிறது. இப்போது ஒரு ஆண்டு கழித்து வந்தால், ஒரு மாதம் லீவு கொடுக்கலாம் என்று சொல்லப்படுகிறது. மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கிற அந்தச் சலுகைகளை இந்திப் பண்டிதர்களுக்கு, குறிப்பாக நோய் கால விடுமுறை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

@ Postponed from the list of questions for 4th March 1970.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** இந்தி ஆசிரியர்களுடைய சம்பளம் அப்படியே காப்பாற்றப்படும் நோக்கத்தில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தி ஆசிரியர்களில் பி.எ. படித்தவர்கள், எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள், எட்டாவது வகுப்பும், 5 வகுப்பே படித்வர்களும் இருக்கிறார்கள். இந்தியில் தேர்ச்சி பெற்று இந்தி ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தகுதிக்கு ஏற்றவாறு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடக்கப் பள்ளியில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் ஏற்கனவே வாங்கிய சம்பளம் காப்பாற்றப்படுகிறது. மற்ற உரிமைகள் சம்பந்ததப்பட்டவரை, அந்தந்த இடத்தில் என்ன இருக்கிறதோ, அதைத்தான் பெற முடியும். உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போகத் தகுந்த தகுதி இருந்தால், அந்த இடத்திற்கு விண்ணப்பித்தால், அந்த இடத்திற்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள் தரப்படலாம். தொடக்கப் பள்ளியில் பணியாற்றுகிறவர்களுக்கு அவர்கள் பணியாற்றுகிற சூழ்நிலையில் என்ன சலுகைகள் இருக்கின்றனவோ, அவற்றை மற்ற ஆசிரியர்களைப் போலப் பெறுவார்கள். தனிச் சலுகை தருவதற்கில்லை. வாங்குகின்ற சம்பளம் காப்பாற்றப்படும்.

**திரு. பி. ஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்தி தேவையில்லை என்று முடிவு செய்திருக்கும் கட்டத்தில், இங்கிருக்கிற இந்தி ஆசிரியர்களுக்கு இந்தி கற்றுக்கொள்ள விரும்புகிற மாணவர்கள் உள்ள பிற மாநிலங்களில் வேலைவாய்ப்பு தேடித்தர இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு வி. ஆர். நெடுஞ்செழியன் :** அங்கே கிராக்கியிருந்து அவர்கள் விண்ணப்பித்துக்கொண்டால், அவர்கள் போவதை இந்த அரசு தடுக்காது. இங்கேகூட இரண்டு உயர்நிலைப் பள்ளிகளில் இந்தி நடைபெற இடம் அளித்திருக்கிறார்கள். சிறுபான்மையாக இருக்கிறவர்கள் இந்தி படிக்க இந்தி வகுப்புக்கு வாய்ப்பு அளித்திருக்கிறோம். வேறு மாநிலங்களுக்குச் செல்வதற்கு என்று, "இங்கே இருக்கிறார்கள், நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்", என்று கேட்பது முறையாகாது, சரியும் ஆகாது.

*Bachelor of Indian Medicine Course*

* 151. @ *Q.*—THIRU G. VASANTHA PAI: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) whether the Bachelor of Indian Medicine Course requires any training for the student undergoing such Course in a College intended for teaching Allopathic Medicine and Surgery; and

(*b*) if so, whether this causes difficulty in imparting instruction to regular students of Allopathic Medicine and Surgery in the College at Tirunelveli?

**இந்திய மருத்தல பட்டப் படிப்பு.**

**திரு. ஜி. வசந்தாபாய் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேல்நாட்டு மருத்துவமும், அறுவை சிகிச்சையும் கற்றுக் கொடுக்கும் கல்லூரியில் இந்திய மருத்துவ பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு மேற்படி படிப்பிற்காக பயிற்சி ஏதேனும் தேவைப்படுகிறதா?

(இ) ஆம் எனில், திருநெல்வேலியிலுள்ள கல்லூரியில் மேல் நாட்டு மருத்துவமும், அறுவை சிகிச்சையும் படிக்கும் மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் இதனால் இடர்ப்பாடு ஏற்படுகின்றதா ?

* Postponed from the list of questions for 4th March 1970.



**மாண்பு மிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) &(இ).—இந்திய மருத்துவப் பட்டப்படிப்பு, நான்கு ஆண்டுக்கால அளவு கொண்டதாகும். இறுதி ஆண்டுத் தேர்வை முடித்த பின்னர், இந்திய மருத்துவப் படிப்பு மாணவர்கள், தாங்கள் மருத்துவ மனையில் இருந்து துணை மருத்துவராகப் பணியாற்றும் காலத்தில் திருநெல்வேலியிலுள்ள ஆங்கில மருத்துவக் கல்லூரியில் பணியாளர்களைச் சில விஞ்ஞான முறைகளில் பரிசோதனை செய்வதில் பயிற்சிபெற வேண்டும். இதனால் அவர்கள் அந்த நோய்களின் கடுமையை மதிப்பிட்டறிய முடியும். மேலும் சித்த மருத்துவம் மூலம் தாங்கள் செய்த சிகிச்சையில் பிணியாளர்கள் எந்தளவு பயனடைந்தார்கள் என்பதையும் அவர்கள் அறிய முடியும். திருநெல்வேலி, (அலோபதிக்) ஆங்கில மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குப் பாடம் புகட்டுவதில் இதனால் எந்த இடர்ப்பாடும் ஏற்படுவதில்லை.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, will the Hon. the Minister for Health please note that this was done in pursuance of a strike by the students of Indian Medicine and only after that, the Government have conceded then the right to attend this allopathic college? Sir, may I know whether the Government are aware that the operation theatre in this college at Tirunelveli has been affected by titanus and that the theatre is not functioning now? Further, because of the exodus of the students of Indian Medicine to the allopathic college and hospital, I am told that the Professor of Surgery is really taking classes for them and there has not been a Professor for Inorganic Chemistry and, therefore, the Professor of Bio-Chemistry is looking after it? Is it not because of the invasion of the students of Indian Medicine that the trouble has been created and this sort of thing is happening?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி, அலோபதி மருத்துவ மனையில் இந்திய மருத்துவ மாணவர்கள் பயிற்சி பெறுவதில் எந்த இடர்ப்பாடும் இல்லை. அவர்கள் வந்து இரண்டு அல்லது மூன்று வாரங்கள் அங்குள்ள மருத்துவ நிலைமைகளை ஆராய்வதற்கும் தெரிந்து கொள்வதற்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. திருநெல்வேலி அலோபதி மருத்துவமனையில் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு எந்தக் கேடும் ஏற்படாதபடி வகை செய்யப்பட்டிருக்கிறது. அங்கே வந்து அந்த மருத்துவத்தைப்பற்றித் தெரிந்து கொண்டால், அவர்கள் இருவருக்கும் உள்ள "இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்," "சுப்பீரியாரிட்டி காம்ப்பௌக்ஸ்" தகராறு ஏற்படாது என்பதற்காக இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்திய மருத்துவப் பயிற்சியாளர்கள் தங்களைப் போலவே "ஸ்டெத்தாஸ்கோப்" முதலியவைகளை வைத்துக் கொண்டு போவது பொது மக்களிடம் இருவரையும் ஒன்றாகக் காட்டக் கூடியதாக இருப்பதாக, அலோபதி மருத்துவப் பயிற்சியாளர்கள் புகார் செய்தார்கள். அலோபதி மாணவர்கள் அதைத் தடுத்தார்கள். அதை யொட்டி வேலை நிறுத்தம் ஏற்பட்டது. சிறிது நாள் நிறுத்தப்பட்டது. பிறகு அவர்களுக்குள் எந்த இடர்ப்பாடும் ஏற்படாத வகையில், முடிவு செய்து பயிற்சி நடந்து வருகிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, is it not against the interest of the patients that these persons trained in Indian Medicine who wear coats and stetheoscopes, try to attend os the patients and look at their case sheets?

MR. CHAIRMAN: The hon. Member may repeat his question.

[9th March 1970

THIRU G. VASANTHA PAI : I have information that these students of Indian Medicine look at the case sheets of the patients in the hospital and try to give them advice. Is that not against the interest of the patients?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அங்கே இருக்கிற கேஸ் ஷீட்டுகளைப் பார்ப்பதில் தவறு ஏற்படவில்லை. பார்த்ததற்குப் பிறகு சித்த மருத்துவப் பயிற்சியாளர்கள் அந்த மருத்துவத்தைப் புகுத்துவதற்காக இன்னின்ன மருந்தைச் சாப்பிடுங்கள் என்று சொன்னால்தான், அது தவறாகும். அப்படிப்பட்ட முறையில் அங்கே பயிற்சி அளிக்கப்படவில்லை.

*Kilpauk Medical College.*

* 152. @ *Q.*—THIRU G. VASANTHA PAI : Will the Hon. the Minitser for Education and Health be pleased to state the reasons for the strike staged by tht students of the Kilpauk Medical College in July 1969?

**கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி.**

**திரு. ஜி. வசந்தாபாய் :** மாண்புமிகு கல்வி—சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

1969-ஆம் ஆண்டு ஜூலை திங்களில் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லாமலிருந்ததற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** 1969-ஆம் ஆண்டிலிருந்து கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் இருபாலாரும் கற்க வகை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள் உடனடியாக ஏற்கப்படவில்லை என்ற காரணத்தால் மாணவியர் கல்லூரி செல்லாமலிருந்தனர்.

2. அரசு சென்னைப் பல்கலைக் கழகத்தைக் கலந்தாலோசித்த பின்னர், சென்னை, கீழ்ப்பாகக்கம் மருத்துவக் கல்லூரியை இருபாலாரும் கல்வி கற்கும் நிறுவனமாக மாற்றி சுகாதாரத் துறையின் 1969 செப்டம்பர் திங்கள் 6-ம் நாளிட்ட 1631-ஆம் எண்ணுள்ள அரசு ஆணையில் ஆணை பிறப்பித்தது.

*Food Production.*

* @ 201. *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) the extent to which food production had been affected as a result of the drought conditions in our State during this year; and

(*b*) the steps taken to meet the situation?

**உணவு தானிய உற்பத்தி.**

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு வேளாண்மை-அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1969-ல் ஏற்பட்ட வறட்சியால் நம் மாநிலத்தில் உணவு தானிய உற்பத்தி எவ்வளவு குறைந்துள்ளது ?

(இ) இதனை சரிக்கட்ட என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஓர் விவர அறிக்கை b அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

a Postponed from the l st of questions for 4th March 1970
b Printed as Appendix I on page....



9th March 1970]

MR. CHAIRMAN : Questions Nos. 202 to 205 are postponed.

*"Tamil Nadu Deivika peravai"*

* 206. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endownments be pleased to state :

(*a*) whether the Government have accorded recognition to the " Tamil Nadu Deivika Peravai ";

(*b*) if so, the functions of the " Peravai "; and

(*c*) the matters of the Mutts on which the Hindu Religious and Charitable Endowments Commissioner consults this " Peravai " and takes decisions?

**தெய்விகப் பேரவை.**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள், கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தமிழ்நாடு தெய்வீகப் பேரவையை அரசாங்கம் அங்கீகரித்துள்ளதா?

(இ) ஆமெனில் அதன் பணிகள் என்ன ?

(உ) திருமடங்களின் எந்த அம்சங்களில் அறநிலைய நெறியாளர் (Endowments Commissioner) இப்பேரவையோடு கலந்து முடிவு எடுக்கிறார் ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** (அ) தமிழ்நாடு தெய்வீகப் பேரவை 1869-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் 1956-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 23-ம் நாளில் பதிவுசெய்யப்பட்ட ஒரு நிறுவனமாகும். இப்பேரைவயின் அமைப்பு விதிகளுக்கு ஏற்பளித்து ஆணைகள் எதையும் அரசு பிறப்பிக்கவில்லை. இப்பேரவையின் தலைவர் பதவி மடாதிபதி ஒருவரால் முறை மாற்றுப்படி ஓராண்டு கால அளவிற்கு வகிக்கப்படும். அறநிலைய ஆணையாளர் அலுவல் முறையில் இப்பேரவையின் துணைத் தலைவராவார். இப்பேரவையின் நிர்வாகப் பணி இவரால் மேற்பார்வையிடப் படுகிறது. ஒவ்வொரு மாவட்ட மன்றமும் அப்பகுதியில் துணை ஆணையாளரை மன்றத் தலைவராகக்கொண்டிருக்கும். துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் பேரவைச் செயலாளராக துணைத் தலைவரால் நியமிக்கப் படுகிறார். கோவில்களின் நிதியைக் கொண்டு இப்பேரவை நிர்வகிக்கப் படுகிறது.

(இ) இந்துக்கள், இந்து சமயத்தின் சீரிய தன்மையை நன்குணர்ந்து போற்றவும், இந்து சமயத்தில் அவர்களுக்குள்ள பந்தை வலுப்படுத்தவும், இந்து சமய நெறிமுறைகளின்படி நடக்கவும் அவர்களுக்கு உதவும் வகையில் சமயப் பணிகளைத் தமிழ் நாட்டில் மேற்கொள்வதற்கு இப்பேரவை அமைக்கப்பட்டுள்ளது. இப்பேரவையின் அமைப்புமுறை நடவடிக்கைகள் பற்றிய குறிப்பில் படியொன்று மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) இப்பேரவையின் பணிகள் 14 மடாதிபதிகளடங்கிய மாநில மன்றத்தினால் மேற்கொள்ளப்படும். ஆண்டு வரவு-செலவு கணக்கை முடிவு செய்யவும் பேரவையின் நோக்கங்களைச் செயல்படுத்துவது குறித்து பிற நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யவும் இம்மாநில மன்றம் ஆண்டுக்கு ஒரு முறை கூட வேண்டும். சமய நூல்கள் வெளியிடுதல், இந்து சமயப் பிரசாரம் செய்பவர்களுக்குப் பயிற்சியளிப்பது பற்றிய திட்டம் அமைத்தல், பாடசாலைகள் நடத்துதல், இந்துக்களின் சமய நலனுக்கான வசதிகளைச் செய்து தருதல், மருத்துவமனைகள் திறத்தல் போன்ற பணிகளுக்கு மாநில மன்றம் வகை செய்யும். இப்பேரவை உறுப்பினர்களாயுள்ள மடாதிபதிகள் மேலே குறிப்பிட்டுள்ளவை பற்றியும் அமைப்பு முறை விதிகள் இவைகளில் குறிப்பிட்டுள்ளவைகள் பற்றியும் முடிவெடுப்பர். மடங்கள் குறித்த தனிப்பட்ட பொருள்கள் அல்லது தேர்வுகள் இப்பேரவையின் முன்வரா.

a Printed as Appendix II.

9th March 1970

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, இந்த குறிப்பிலிருந்து தெய்வீகப் பேரவை என்பது இன்னும் சரியான முறையில் செயல்படாமல் தொடக்க நிலையிலே இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பேரவை பயன் படும் வகையில் தர்மபுரம் ஆதீனத்தில் சில காலத்திற்கு முன்னால் சமய ஆராய்ச்சிக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டது என்று நினைக்கிறேன். அந்தக் கல்லூரியை ஒரு பல்கலைக்கழக நிலைக்கு உயர்த்தி, அங்கே தத்துவங் களையும் சமயங்களையும் பற்றிய ஆய்ச்சி செய்யலாம் என்ற கருத்து நீண்ட நாளாக அறிவாளிகளிடையே இருந்து வருகிறது. அந்த வகையில் இந்தப் பேரவை பணி செய்வது நிலையான பெயரைத் தரும் என்று சொல்லிக் கொண்டு அதைச் செய்ய இந்த அரசு தூண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, மாண்பு மிகு உறுப்பினர் சொன்ன அந்த கருத்து பற்றிய தகவல் என்னிடம் இல்லை. இருந்தாலும் பேரவை திருமுல்லைவாயில் என்ற இடத்தில் ஒரு உயர் நிலைக் கல்லூரி கட்டி, அதற்குள் ஓரியண்டல்காலேஜ் ஏற்படுத்தி, சமயம் சம்பந்தமான பரிசீலனை செய்யலாம் என்ற திட்டம் வைத்திருப்புதாகத் தெரிகிறது மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய யோசனையைப் பேரவைக்கு அதிகார தொனியில் சொல்ல முடியாவிட்டலும், யோசனையாகச் சொல்ல லாம் என்று நினைக்கிறேன்.

**திரு. கே. அறிவழகன் :** தலைவர் அவர்களே, இந்தத் தமிழ்நாடு தேய்வீகப் பேரவையில் குறிப்பிடப்பட்டுள்ள "தெய்வீகம்" என்ற சொல் மூலமாக பல நேரங்களில் அதனுடைய செயல்களைப் பற்றிய சந்தேகம் உருவாகிறது. ஆகவே அந்தத் துறைக்கு அறநிலையத் துறை என்று பெயர் வைத்திருப்பதைப் போல இதையும் அறநெறிப் பேரவை என்று அழைக்க யோசிக்கப்படுமா ? இந்தப்பேரவை செயலில், நம் மிடையே உள்ள தேவாரம், திருவாசகம் முதலியவற்றில் கூறப்பட்டிருக் கிற "செகுலர் ஸ்டேட்" என்ற முறையில், பொதுவான மதச் சார்பற்ற பல் வேறு கருத்துக்களை எடுத்து விளக்குகின்ற முயற்சியில் ஈடுப்டுவார்களா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, "செகுலர் ஸ்டேட்" என்று சொன்னால், அரசாங்கம் தான் செகுலராக இருக்க முடியும், தெய்வீகப் பேரவை அப்படி இருக்க வேண்டுமா என்பது தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தை யோசனை யாகப் பேரவைக்குச் சொல்லலாமே தவிர, பெயரை மாற்றுகிற பொறுப்பு பேரவையைச் சார்ந்தது. அவர்கள் ரிஜிஸ்தர் செய்திருக்கிறார்கள். மாற்று வதானால் பேரவையின் ஜெனரல் பாடியில் வைத்துத்தான் அதை மாற்றவேண்டியிருக்கிறது.

**தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் குன்றகுடி அடிகளார் :** தமிழ்நாடு தெய்வீகப் பேரவை சங்கங்களின் பதிவுச் சட்டத்தின்கீழ் செய்பதிவுயெப் பெற்ற ஒன்றாக இருப்பதால், அது பூரணத் தகுதியுடைய பணியைச் செய்ய முடியாமல் இருக்கிறது. இந்த அரசு அதைச் சட்ட சம்பந் தமான ஒரு நிறுவனமாக ஆக்க முன்வருமா என் பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல சட்ட சம்பந்த மான நிறுவனமாக இல்லாததால், திருக்கோயில்களின் வருமானத்தி லிருந்து வரவேண்டிய இரண்டு விழுக்காடு வருமானம் சில இடங்களி லிருந்து வரப்பெறுவதில்லை. அதற்குப் பல்வேறு திருக்கோயில்களின் தர்மகர்த்தாக்களுக்கு உடன்பாடு இல்லை. அதனால் திட்டங்களுக்கு ஏற்ற வாறு அவை பணியாற்ற முடியவில்லை. அதற்கு நிறைய நிதி தேவைப்படு கிறது. அதை இந்து அற நிலையப் பாதுகாப்பில் வைத்திருக்கிறது அரசு. அந்தப் பேரவையைச் சட்ட சம்பந்தமான உரிமை பெற்றதாக உரு வாக்கி வலிவும் பொலிவும் உள்ளதாக ஆக்குகின்ற நோக்கம் அரசிற்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, இப் போது கூட அறநிலையங்கள் சட்டப்படி, இந்து ரிலிஜியஸ் எண்டோமேண்ட் போர்டு இருக்கிறதே தவிர அற நிலையங்கள் அந்தந்த ட்ரஸ்ட்களின் ஆதிக்கத்தில்தான் இருக்கின்றன. அதில் அரசாங்கம் அதிகமாகத் தலை



9th March 1970]

யிடுவதில்லை. சரியான முறையில் பரிபாலிக்கவில்லை என்றால்தான், அரசாங்கம் தலையிடுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் இது "செகுலர் கவர்மெண்ட்" ஆயிற்றே, அதனால் பேரவையின் பெயரை அறநெறிக் கழகம் என்று மாற்றவேண்டு மென்று கேட்டார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அடிகளார் அவர்கள் அதை அரசாங்கத்தார் எடுத்துக் கொண்டு நடத்தவேண்டு மென்று சொல்கிறார்கள். அந்த இரண்டு கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதால், பேரவை ஒரு தீர்மானத்தைப் போட்டு அரசாங்கத் திற்கு அனுப்பினால், அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யலாம்.

**திரு பி. திருஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, சில ஆண்டு களுக்கு முன்பு திரு. காமராஜ் தலைமையில் கிருபானந்தவாரியார் ஆரம் பித்து வைத்த தெய்வீகப் பேரவையும் இதுவும் ஒன்றுதானா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையில், தமிழகத்தில் ஒரு தெய்வீகப் பேரவைதான் இருக்கிறது. ஆகவே இந்தப் பேரவைதான் அந்தப் பேரவையாக இருக்குமென்று கருதுகிறேன்.

## *Priests*

* 207. *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the number of priests in the temples of Tamil Nadu during 1967–68;

(*b*) the total amount of salary paid to these priests in the financial year 1967–68;

(*c*) from which fund this salary is paid; and

(*d*) out of this, (1) the minimum and (2) the maximum salary?

## பூசை செய்யும் ஊழியர்கள்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ்நாட்டுக் கோயில்களில் பூசை செய்யும் ஊழியர்களின் தொகை 1967–68-ல் எத்தனை ?

(இ) இவர்களின் சம்பளம் மொத்தத் தொகை 1967–68-ம் நிதி ஆண்டில் எவ்வளவு ?

(உ) இச்சம்பளம் எந்த நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது ?

(எ) இதில் (1) குறைந்த (2) அதிக சம்பளம் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** (அ) & (இ) இப்புள்ளி விவரங்களைப் பெறுவதில் செலவிடும் உழைப்பும் காலமும் அதனால் விளையக்கூடிய பொது நலத்திற்குச் சற்றும் ஈடாகமாட்டா.

(உ) கோயில்களில் பூசை புரியும் பணியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட கோயில்களின் நிதியிலிருந்து சம்பளங்கள் வழங்கப்படுகின்றன.

(எ) குறைந்த அளவு சம்பளம் அல்லது பேரளவு சம்பளம் எதுவும் விதிகளில் வரையறுக்கப்படவில்லை. ஒவ்வொரு கோயிலும் தனக்குக் கிடைக்கின்ற வருவாயைப் பொறுத்து, தன்னால் இயன்ற அளவுக்குச் சம்பளம் கொடுக்கின்றது.

Mr. CHAIRMAN : Question 208.

(The hon. Member Thiru Isvarmurti rose as the Chairman was calling Question 208).

[9th March 1970

MR. CHAIRMAN : No, that question is over. We are now on question 208.

THIRU V. ISVARMURTI : I would like to put a supplmentary, Sir.

MR. CHAIRMAN : From the answer given by the Hon. Minister, I thought there was no need for a supplementary.

THIRU V. ISVARMURTI : I want to bring to the notice of the Hon. Minister a problem, Sir.

MR. CHAIRMAN : All right. But the supplementary must have a bearing on the main question and not go at a tangent.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி:** நான் கோவிலுக்குப் போகிற வழக்கம் உடையவன் அல்ல. ஒரு முறை பழனிக்குச் சென்றிருந்தேன். சுவாமியைக் கும்பிட வேண்டுமானால், அங்கே போவதற்குக் கொஞ்சம் பணம் கேட்கிறார்கள். அதேபோல கோவில் பிரசாதம் வெளியே விற்கப்படுகிறது. ஆகையால் சரியான ஊதியம் கொடுத்து இப்படிப்பட்ட ஊழல்கள் அங்கே நடப்பது தவிர்க்கப்படுமா ? பக்தர்கள் மனதைப் புண்படுத்துகிறது என்பதால், அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, உள்ளே இருக்கிற பிரசாதம்தான் என்று வெளியே விற்கிறார்கள். அதன் மூலமாக சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஊதியம் கொடுத்து நடத்தினால் என்ன என்று கேட்டார்கள். அங்கே விற்கிறவர்களுக்கு எல்லோருக்கும் ஊதியம் கொடுப்பதென்றால் லட்சக்கணக்கான பேர் பிரசாதம் விற்க ஆரம்பித்துவிடுவார்கள். அப்படிப்பட்ட நிலைமை சமாளிக்க முடியாமல் போகும் என்பதால், அதில் தலையிட முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுக் கோவில்களில் குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் பூஜை செய்யலாம் என்று இருக்கிறது. எல்லா இனத்தைச் சேர்ந்தவர்களும் பூஜை செய்வதற்கு, பிற மாநிலங்களில் அளிப்பதைப் போல பயிற்சியை இங்கே நடத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா :** மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. என்னிடத்தில் அந்தத் தகவல் இல்லை.

### *Jain Temple*

* 208. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be plas to state—

(*a*) whether there is any proposal to protect the Jain temple in Vijayamangalam, Erode taluk, Coimbatore district; and

(*b*) whether the Government are giving any grant to the trustee of this temple?

### சமணர் கோயில்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கோவை மாவட்டம் ஈரோடு தாலுக்கா விஜயமங்கலத்தில் இருக்கும் சமணர் கோயிலைப் பாதுகாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) இக்கோயில் தர்மகர்த்தாவிற்கு அரசாங்கம் ஏதேனும் மானியம் வழங்குகிறதா ?



9th March 1970]

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** (அ) ஆம். இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் விதித் துறைகளை நீட்டிப்பதன் மூலம், அக் கோயிலை இந்து சமய அறக்கட்டளைகள் துறையின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) இல்லை.

### *Trustees.*

* 209. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the cases filed against the appointment of trustees for temples under the control of the Hindu Religious and Charitable Endowments Department are pending for years together before the Hindu Religious and Charitable Endowments Courts; and

(*b*) if so, the action taken thereon?

### பொறுப்பாளர்கள்

**திரு. வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) இந்து சமய அறக் கட்டளைகளுக்கு உட்பட்ட கோயில்களுக்கு நியமிக்கப்படும் பொறுப்பாளர்கள் (Trustees) நியமனத்தை எதிர்த்துப் போடும் வழக்குகள் அறக்கட்டளைகளுக்கு உட்பட்ட வழக்கு மன்றங்களில் ஆண்டுக் கணக்காகத் தீர்க்கப்படாமலிருப்பதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** பகுதிகள் (அ), and (இ) : 1965-லிருந்து 1968 வரையுள்ள கால அளவில் 366 மறு விசாரணை மனுக்கள் கொடுக்கப்பட்டன. இவற்றில் 327 மனுக்கள் குறித்து தீர்ப்பளிக்கப்பட்டது. 39 மனுக்கள் இன்னும் முடிவுறாமலிருக்கின்றன. இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையாளர் தம்மிடம் முடிவுறாமலுள்ள வழக்குகளில் விரைந்து முடிவெடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறார். இந்த வழக்குகளை முடிவு செய்வதற்கு முறைப்படியான சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருப்பதால் ஓரளவு தாமதம் ஏற்படுவது தவிர்க்க இயலாததாகும்.

**தவத்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் :** (குன்றக்குடி அடிகளார்) தலைவர் அவர்களே, இங்கே பல கோவில்களில் காலியான தர்மகர்த்தா ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப் பெறாமல் இருக்கின்றன என்ற புகார் பரவலாக இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** கூடுமான வரையில் எல்லாக் கோவில்களுக்கும் நியமிக்கப்படுகிறார்கள். சில கோவில்களுக்கு தர்மகர்த்தாக்களை நியமிப்பதில் தாமதம் ஏற்படுவது உண்மை. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அஸிஸ்டெண்ட் கமிஷனர் ஒரு தர்மகர்த்தாவை நியமித்தவுடனே, சிலர் அப்பீல் செய்கிறார்கள். "ஸ்டே" வாங்குகிறார்கள். "ஸ்டே" வாங்கினால் அதற்கு முறைப்படி, நோட்டீஸ் எல்லாம் "சர்வ்" செய்தாக வேண்டியிருக்கிறது. இரண்டு கட்சிக்காரர்களையும் அழைத்து அவர்களுடைய ஆர்குமெண்டைக் கேட்க வேண்டும். அதற்குப் பிறகு லாயரை வைக்கிறார்கள். லாயரை வைத்தால், அவர் "அட்ஜார்ன்மெண்ட்" வாங்கிவிடுகிறார். இவ்வளவு ஆன பிறகும் மனுப்போட்டவர்கள் டெபுடி கமிஷனரிடம் ஒரு மனுப் போடுகிறார்கள். நான் தான் பரம்பரை தர்மகர்த்தா என்று நடவடிக்கையை நிறுத்திவிடுகிறார்கள். ஆகவே ஒன்றிரண்டு ஆண்டுகள் கூட காலதாமதம் ஆகிறது.

[9th March 1970

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இந்த அறநிலையப் பாதுகாப்புக் கழகத்திலிருந்து கோவில் பொறுப்பாளர்களாகக் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களை, குறிப்பாக கம்யூனிஸ்டுகளை நியமித்திருக்கிறார்களா ? அதற்குக் காரணம் என்ன? அப்படி நியமனம் செய்திருப்பது தவறு என்று வழக்கு போடப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** அப்படிப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. அறங்காவலராக வரும்போது தனக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொல்வதால்தான், அறங்காவலராகப் போடப்படுகிறார்கள். எனக்கு நம்பிக்கை இல்லை, இருந்தாலும் என்னை அறங்காவலராகப் போட வேண்டும் என்று கேட்டால்தான், இந்தக் கேள்வி எழும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எனக்குத் தெரிந்த வரையில், சில பல கம்யூனிஸ்டுகளைப் பொறுப்பாளராகப் போட்டிருக்கிறார்கள். போடப்பட்டிருக்கிற பொறுப்பாளர்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். அது அமைச்சருக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** அவர்கள் எழுதிக்கொடுத்ததாகத் தெரியவில்லை. கடவுள் நம்பிக்கை இல்லை என்று அவர்கள் சொல்லவில்லை. கம்யூனிஸ்ட் தத்துவம், கொள்கை எனக்கு அதிகமாகத் தெரியாததால், சரியான முறையில் இங்கே அதைப்பற்றி விளக்க முடியவில்லை. கடவுள் நம்பிக்கையற்றவர்கள் அவர்கள் என்பது எனக்குத் தெரியாது. அவர்கள் அறங்காவலராக வரும்போது நம்பிக்கை இருக்கிறது என்றுதான் மனுப்போடுகிறார்கள்.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவர் அவர்களே, இந்த அறக்கட்டளைகள் மீது தொடரப்படுகிற வழக்குகள் பல ஆண்டுகளாக நடைபெறுகின்றன என்பது அனுபவத்தில் காணுகின்ற உண்மையாகும். இம்மாதிரி மதுரையில் ஒரு வழக்கு தொடரப்பட்டு 3 ஆண்டு காலமாக விசாரணையில் இருந்து, பிறகு "மிஸ்ஸலேனியஸ் புரசீடிங்ஸ்" என்று நடந்தது. 1961-லிருந்து 1967 வரையில் நடந்து பிறகு "ஸ்கீம் புரசீடிங்ஸ்" தகராறில் 3 வருஷம் ஆயிற்று. ஆக 9 வருஷ காலமாக அது தீர்க்கப்படாமல் இருந்தது. இதைப் பரிசீலனை செய்து, இந்த வழக்குகள் இரண்டு மூன்று வருஷங்களில் முடிவுபெற அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, அதைத்தான் முதலிலேயே சொன்னேன். அறங்காவலர் நியமிப்பதில் காலதாமதம் ஆவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன என்று சொன்னேன். உதவி ஆணையர் நியமித்த அறங்காவலர்களை எதிர்த்து கமிஷனருக்கு அப்பீல் செய்கிறார்கள். அவர் முறைப்படி, சட்டப்படி அதற்கு வேண்டிய நோட்டீஸ் முதலியன கொடுத்து நடத்தவேண்டியிருக்கிறது. பிறகு வக்கீல்களை வைத்து "அட்ஜர்ன்மெண்ட்" வாங்கிவிடுகிறார்கள். இரண்டு பேரையும் அழைத்து ஆர்குமெண்ட் கேட்கவேண்டியிருக்கிறது. டெபுடி கமிஷனரிடம் போய் பரம்பரை தர்மகர்த்தா என்று மனுப்போடுகிறார்கள். அதனால் முதலில் கவனித்த மனுவை பைசல் ஆகாமல் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படிச் சட்டச் சிக்கல்கள் இருப்பதால், தாமதம் ஏற்படுகிறது.

**திரு கே. எஸ். மணி :** தலைவர் அவர்களே, இப்படி நியமிக்கப்படும் நியமனங்கள் சரியில்லை என்று அதிகப்படியான வழக்குகளை எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் கொண்டுபோயிருக்கிறார்கள் என்ற தகவல் அமைச்சருக்கு வந்திருக்கிறதா? அப்படி இருந்தால், அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்க் கட்சி என்று சொல்கிறார்கள். கோவிலைப் பொறுத்த வரையில், கட்சி இருப்பதாகத் தெரியவில்லை. எதிர்க் கட்சி என்று சொன்னால், யார் என்று குறிப்பிடவில்லை. ஆகவே அது சம்பந்தமான பிரச்னையைப் பேசுவதற்கு மன்றத்தில் சரியான தகவல் இல்லை.



9th March 1970]

**தவத்திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிகர் (குன்றக்குடி அடிகளார்):** அறநிலைய ஆட்சித் துறையில் இப்படிப் பல வழக்குகள் அறநிலைய அலுவலர்களால் பைசல் ஆக்கப்பெறாமல் இருப்பதால், அன்றாட அலுவல்களையும் முறையீடுகளையும் கேட்பதற்கு ஒரே அலுவலர் இருப்பதால், இத் தாமதம் ஏற்படுகிறது. அதைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வழக்குகளை விசாரிப்பதற்கு அந்தத் தகுதிக்கு உட்பட்ட ஒருவரை விசாரணை அலுவலராக நியமித்தால், அந்த வழக்குகள் சீக்கிரமாகப் பைசல் ஆவதற்கு வழி ஏற்படும். இதை அரசு ஆராயுமா?

**மாண்புமிகு திரு கே. வி. சுப்பையா :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வழக்குகளை விசாரிக்க வேண்டுமென்பதற்காக, தமிழ்நாட்டில் ஏறக்குறைய நான்கு, ஐந்து டெபுடி கமிஷனர்கள் சட்டம் பயின்றவர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் ராமனாதபுரத்திலிருந்து சென்னைக்கு வரவேண்டியிருக்கும். இப்போது மதுரைக்கு வந்துவிட்டால் போதும். இப்போது இருப்பதே பொதுமக்களுக்கு வசதியாக இருப்பதால், அதிகமாகத் தேவையில்லை.

## *Calibration fees*

* 210. *Q.*—Mr. CHAIRMAN : As the hon. Member Thiru A. R. Damodaran is not in his place, the question together with the answer will be printed in the Official Report of the proceedings.

Thiru A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the scale of calibration fees for calibration of Petroleum Tank Lorries has been revised by the Weights and Measures Department during the years 1966–69;

(*b*) if so, the fees fixed prior to April 1966 and the present scale ; and

(*c*) whether any extra fee is levied for calibrating one compartment of Petroleum Tank Lorry to two or more dips, and if so, the scale thereof?

## அளவுத் திருத்தக் கட்டணங்கள்

**திரு. ஏ. ஆர். தாமோதரன்** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) பெட்ரோல் தொட்டி அமைந்துள்ள லாரிகளில் அளவிடுவதற்கான அளவுத் திருத்தக் கட்டணங்கள் 1966–69-ஆம் ஆண்டுகளில் எடைகள்-அளவைகள் துறையினால் திருத்தியமைக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், 1—4—1966-க்கு முன்னர் விதிக்கப்பட்ட கட்டணங்களும் தற்போது செயலிலுள்ள கட்டணங்களும் யாவை?

(உ) லாரியில் அமைந்துள்ள பெட்ரோல் தொட்டியின் பிரிவு ஒன்றில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூழ்கு அளவுக் குறிகளை அமைக்கக் கூடுதலாகக் கட்டணம் ஏதேனும் விதிக்கப்படுகின்றதா? ஆமெனில், அக்கட்டண வீதம் என்ன?

**மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்.** (அ) ஆம். கட்டணம் இரண்டு முறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 1—5—67-லிருந்து முதல் முறையாகவும் 1—1—68-லிருந்து இரண்டாம் முறையாகவும் மாற்றியமைக்கப்பட்டது.

(இ) 1—4—66-க்கு முன்னர்—

முதல் 100 லிட்டருக்கு ரூ. 1 வீதமும், ஒவ்வொரு கூடுதல் 100 லிட்டருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் ரூ. 1 வீதமும்.

[9th March 1970

*தற்போதுள்ள கட்டண வீதம்*—

முதல் 100 லிட்டருக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ. 5 வீதமும், ஒவ்வொரு கூடுதல் 100 லிட்டருக்கும் அல்லது அதன் பகுதிக்கும் ரூ. 500 என்ற பேரளவுக்குட்பட்டு கூடுதலாக ரூ. 2 வீதமும்.

(உ) ஆம். *நிறுவுவதற்கான கட்டணம்*—

முதல் 100 லிட்டருக்கு ரூ. 50 வீதமும் ஒவ்வொரு கூடுதல் 100 லிட்டருக்கு அல்லது அதன் பகுதிக்கு ரூ. 500 என்று பேரளவுக்குட்பட்டு கூடுதலாக ரூ. 40 வீதமும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member].

## II. ANNOUNCEMENTS.

### (1) MESSAGE FROM THE GOVERNOR.

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1970.

### (2) MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1970 (L.A. Bill No. 4 of 1970), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have further received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Co-operative Land Development Bank (Amendment) Bill, 1970 (L. A. Bill No. 5 of 1970), as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

## III. GOVERNMENT MOTIONS.

### (1) ELECTION OF NINE MEMBERS TO THE COMMITTEE OF PREVILEGES.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Mr. Chairman, Sir, I move—

" That, with reference to rule 156 of the Tamil Nadu Legislative Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect nine Members to be Members of the Committee of Privileges for the financial year 1970-71 ".



9th March 1970]

MR. CHAIRMAN : The question is :

" That, with reference to rule 156 of Tamil Nadu Legislative Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect nine Members to be Members of the Committee of Privileges for the financial year 1970–71 ".

The motion was put and carried.

MR. CHAIRMAN : I have to inform the House that, in accordane with regulation 2 (1) framed for the holding of elections in accordance with the principle of proportional representation by means of the single transferable vote, I fix the following programme for election of nine Members to the Committee of Privileges for the financial year 1970–71 :—

| | |
|---|---|
| Time and date for the receipt of nominations ... | 4-30 p.m. on 25—3—1970 |
| Time and date for the scrutiny of nominations ... | 5-00 p.m. on 25—3—1970 |
| Time and date for the withdrawal of nominations ... | 12 noon on 28—3—1970 |

Nomination forms can be had from the Secretary. There will be an election, if the number of candidates nominated, exceeds nine. The date and time of the poll, if any, will be intimated later.

### (2) ELECTION OF SIX MEMBERS TO THE HOUSE COMMITTEE.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIYAN : Mr. Chairman, Sir, I move :

" That with reference to rule 173 of the Tamil Nadu Legislative Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect six members to be Members of the House Committee for the financial year 1970–71 ".

MR. CHAIRMAN : The question is :

" That, with reference to rule 173 of the Tamil Nadu Legislative Council Rules, this Council do proceed on a date to be fixed by the Hon. Chairman to elect six Members to be Members of the House Committee for the financial year 1970–71 ".

The motion was put and carried.

MR. CHAIRMAN : I have to inform the House that, in accordance with Regulation 2 (1) framed for the holding of elections in accordance with the principle of proportional representation by means of the single transferable vote, I fix the following programme for election of six members to the House Committee for the financial year, 1970–71.

[9th March 1970

| | |
|---|---|
| Time and date for the receipt of nominations ... | 4-30 p.m. on 25—3—1970 |
| Time and date for the scrutiny of nominations ... | 5 p.m. on 25—3—1970 |
| Time and date for the withdrawal of nominations ... | 12 noon on 28—3—1970 |

Nomination forms can be had from the Secretary. There will be an election, if the number of candidates nominated, exceeds six. The date and time of the poll, if any, will be intimated later.

## IV. GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1970–71 (*Contd.*)

***திரு. கே. ராஜாராம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இவ்வருடம் வரவு செலவுத் திட்டம் நல்ல தமிழில் இருந்தது. நல்ல தமிழ் மட்டும் அல்ல, மிகவும் நீண்டதொரு உரையாக ஆற்றினார்கள். அதற்காக நிதி அமைச்சரை நான் பாராட்டுகிறேன். ஆனால் எதிர்பார்த்த அளவு நன்மை இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் இந்த மாநிலத்திற்குக் கிடைக் காது என்று அறியும்போது, அது மிகவும் ஏமாற்றத்தைத் தருகிறது. ஏனெனில் 1966–67-ல், பொறுப்பை ஏற்றுக்கொண்ட வருடத்தில், இந்த மாநிலத்தின் மொத்த வருவாய் ரூ. 194 கோடிதான். முடிந்துபோன மூன்று ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாகக் கூடி, வரப்போகிற வருடத் தில் கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் வரும் என்று எதிர்பார்க்கும் அளவுக்கு மாநிலத்தின் வருவாய் உயர்ந்திருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் வருவாய்த் துறையில் 211 கோடி ரூபாய் அதிகமாக வரி வந்திருக் கிறது. இந்த 211 கோடி ரூபாய்க்கான நன்மைகள் இந்த மாநிலத் திற்குக் கிடைக்கவில்லை என்றுதான் நான் ஏமாற்றம் என்ற வார்த்தையை உபயோகித்தேனே ஒழிய வேறு ஒன்றும் இல்லை.

1966–67-ல் காங்கிரஸ் அமைச்சரவை இருந்த காலத்தில் இருந்ததை விட, 1967–68-ல் 39 கோடியும், 1968–69 ல் 83½ கோடியும், 1969–70-ல் முடிவுபெறுகிற வருடத்தில் 88½ கோடியும், ஆக மொத்தம் 211 கோடி ரூபாய், சாதாரணமாக வரவேண்டிய 194 கோடியைவிட அதிகமாக வந்திருக்கிறது. அப்படி இருந்தும் அதற்கான நன்மையை மாநில மக்கள் அடையவில்லை. புதிதாகத் தொழில்கள் எதுவும் ஆரம்பிக்கப்பட வில்லை. இந்த வரப்போகிற வருடத்திலாவது சேலம் உருக்காலை, நெய்வேலி யில் இரண்டாவது சுரங்கம், சேதுசமுத்திரத் திட்டம், இதுபோன்ற நல்ல திட்டங்கள், புதிய திட்டங்கள் நமக்குக் கிடைக்கும் என்று மகிழ்ச்சி யோடு நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்த்து வந்த எனக்கு ஏமாற்றத்தைத்தான் கொடுத்தது. காஞ்சிபுரத்தில் ஒரு ஜரிகைத் தொழிற்சாலை போன்ற இரண்டொரு விஷயங்கள் இருந் தாலும் எதிர்பார்த்த அளவு இல்லை என்றுதான் குறை சொல்கிறேனே தவிர, ஒன்றுமே இல்லை என்று சொல்லவில்லை. இப்பொழுது போடப் பட்டிருக்கும் புதிய வரிகள் நமது மாநிலத்தில் மட்டுமல்லாமல், மத்திய அரசும் சரியாகக் கிட்டத்தட்ட 170 கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டிருக் கிறார்கள். இப்படி மாநில அரசும், மத்திய அரசும் சேர்ந்து மக்களை எவ்வளவு தூரம் வருத்தமுடியுமோ அவ்வளவு தூரம் வருத்த ஆரம் பித்திருக்கிறார்கள். 500 ரூபாய் வரை சம்பளம் வாங்கும் அரசு சிப்பந்தி களுக்கு மாதம் 10 ரூபாய் இடைக்கால நிவாரணம் அளிப்பதையும் ஆசிரியர்களுக்கு நல்ல பல சலுகைகள் அளிப்பதையும் பற்றி உரை யில் கேட்டவுடன் உண்மையில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் இந்த வரி அதிகமாகப் போடுவதைப் பார்த்தவுடன், இவர்களுக்குக் கிடைத்த 10 ரூபாய்க்குப் பதிலாக, மாதம் 15 ரூபாய் வரை அதிகமாகச் செலவழிக்கும்படியான அளவுக்கு, மாநில அரசு எதிர்பாராத அள வுக்கு, மத்திய அரசும் சேர்ந்து வரியைப் போட்டு, ஒரு கையினால் கொடுக்



9th March 1970] [திரு. கே. ராஜாராம்]

கின்றதை மறு கையினால் பிடுங்கிக்கொள்கிற மாதிரி, அகவிலைகள் உயர்ந்து விட்டன. பொதுவாக இடைக்கால நிவாரணம் என்று இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். இருந் தாலும் வெறும் வாயை மெல்வதற்கு கொஞ்சம் அவல் கொடுக்கிற மாதிரி 10 ரூபாயைக் கொடுத்ததற்கு மகிழ்ச்சியைத் தெரிவிக்க தவறக் கூடாது என்று எண்ணுகிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது அகவிலையும் மிக உயர ஆரம்பித்து விட்டது. அரசு வரி போட்டது என்னவோ சில இனங்களுக்குத்தான். ஆனால் வரி போடாத இனங்களுக்குக்கூட "சிம்பதடிக் ரைஸ்" என்பார்களே, அநுதாப உயர்வுகள், அதுமாதிரி மற்றப் பண்டங்களுக்கும் ஏற்பட்டு விட்டன. நாம் விதிக்கப்போகிற 5 லட்சத்துக்கு மேற்பட்ட "டர்னோவர்" இருக்கக்கூடிய வியாபாரிகளுக்கு 7½ சதவீதம் அதிக வரி பண்டம் வாங்கும் மக்களைப் பாதிக்காமல் பார்த்துக்கொள்வோம் என்று நிதி யமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் நம்மைவிட கெட்டிக்காரர்கள் அவர்கள். பல பண்டங்களின் விலையை இப்பொழுதே ஏற்ற ஆரம்பித்து விட்டார்கள். நேற்றைய மெயில் பத்திரிகையில் வந்த சில விஷயங்களைப் பார்த்தால் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. சம்பந்தம் இல்லாத பண்டங்களின் விலை எல்லாம் ஏற ஆரம்பித்து விட்டது என்று குறிப் பிடப்பட்டிருந்தது,

அடுத்தபடியாக பஸ்களுக்கு ஒரு ஆசனத்திற்கு 10 ரூபாய் அதிகமாக வரி விதிக்கப்போகிறார்கள். ஆனால் இதை டிக்கட்டின் பேரில் போடாமல் கவனித்துக்கொள்வோம் என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருந் தாலும், வேறு வகைகளில் மக்களுக்கு வசதிகள் நிறைய குறைய ஆரம்பித்துவிடும். ஏனெனில் சிறிய பஸ் சொந்தக்காரர்கள், அதாவது 5 பஸ்களுக்கு உட்பட்டவர்கள் என்று சர்க்கார் நிர்ணயித்திருக்கிற "நான் ஃபிலீட் ஓனர்ஸை" இது மிகவும் பாதிக்கும். அவர்கள் எல்லாம் நல்ல நிலைமையில் பஸ்ஸை வைத்துக்கொள்ள மாட்டார்கள். ஆசனங்கள்கூட சரியாக இருக்காது. இதுமாதிரிக் கஷ்டங்கள் ஏற்படும். ஓவர்லோடும் அதிகமாகப் போடுவார்கள். ஆகையினால் சிறிய "பஸ் ஓனர்கள்" என்று சொல்லக்கூடிய 5, 6 பஸ்களுக்கு உட்பட்டவர்கள் என்று அரசாங்கம் "ஃபிலீட் ஓனர்ஸ்" கணக்கில் சேர்க்காதவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க முடியுமா, அவர்களுக்குச் சலுகை கொடுத்து விலக்களிக்க முடி யுமா என்பதை அரசாங்கம் ஆலோசனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். "டர்னோவர்" பேரில் 5 லட்சத்துக்கு அதிகமாக உள்ளவர்களுக்கு 7½ சதவீதம் சர்சார்ஜ் என்பது செல்லுமா என்பதைச் சட்ட இலாகா ஆலோசனை செய்ய வேண்டும் என்று சொல்கிறேன். அவசரப்பட்டு சர்சார்ஜ் விதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நிதி அமைச்சர் அவர்களின் உரையில் பல பக்கங்கள் மத்திய அரசின் நிதிக் கமிஷன் நமக்குச் செய்திருக்கும் ஓர வஞ்சனையைப்பற்றி வெகு அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். விளக்கமாகவும் சொல்லி யிருக்கிறார்கள். இதை முற்றிலும் ஆதரிக்கிறேன். இதுமாதிரி ஏற்பட்டது விரும்பத்தகாத ஒன்றுதான். நல்ல நிர்வாகம் செய்து, நன்றாகப் பணத்தை சம்பாதித்து, மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று முற்பட்டால், அதற்குக் கிடைக்கும் பலன் இதுதான் போலும். 194 கோடி ரூபாயிலிருந்து மாநிலத்தின் வரவு செலவுத் திட்டத்தை இன்று 300 கோடிக்கு உயர்த்தியதனால் இந்த விளைவு ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிகின்றோம். மாநிலத்தின் செலவுகளை அவர்களே சரிகட்டக்கூடிய அளவுக்கு வருவாய் வந்துகொண்டிருக்கிறது. ஆகையினால் "ஃபைனான்ஸ் கமிஷன்" அதிகமாக நிதி ஒதுக்கத் தேவையில்லை என்ற அளவுக்குத் தான் இப்பொழுது கொடுக்கும் பணத்தைக் குறைத்திருக்கிறார்கள். ஆகவே அன்றே சொன்னதுபோல் மீண்டும் இந்த அரசாங்கத்திற்கு வலியுறுத்த விரும்புகிறேன். அவசரப்பட்டு வரிகளை உயர்த்தி நமக்கு மத்திய அரசிலிருந்து கிடைக்கவேண்டிய பல நிதி உதவிகளுக்கு ஒரு கெடுதல் தேடிக்கொள்ள வேண்டாம். நீங்களே அதை அடைக்க வேண்டாம். மாநில அரசே அதற்குத் தடுப்பை உண்டுபண்ண வேண்டாம்

என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுதே போட்டிருக்கும் வரிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவசியம் ஏற்பட்டால், வரிகளை ரத்து செய்யவும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஏதோ மறந்து இரண்டொரு இடங்களில் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி பற்றி நிதியமைச்சர் அவர்களின் சொற்களிலே வந்திருக்கிறதே ஒழிய, மாநில அரசின் நிர்வாகத்தில் நல்லதொரு பங்கை ஏற்று நடத்தும் பஞ்சாயத்துகளையும், பஞ்சாயத்து யூனியன்களையும் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. பல கஷ்டங்கள் இருக்கலாம். அவைகளைத் திருத்தியமைக்க
5-00 p.m. வேண்டும். அவைகளுக்கு வருவாய் இல்லாததால், அவைகள் நல்ல காரியங்கள் எதுவுமே செய்ய முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றன. ஆகையினாலே அவைகளுக்கு வருவாயைத் தேடிக்கொடுக்க ஒரு யோசனையும் அரசு செய்யவில்லையே என்று வருந்துகிறேன்.

பல கிராமங்களில் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் இல்லாமலிருந்து வருகின்றன. அவைகள் பெரும்பாலும் கூரைகளில், அதுவும் கறையான் பிடித்த கூறைகளில் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றைச் சரி பார்த்து அமைக்க பஞ்சாயத்து யூனியன்கள் பணம் இல்லாமல் கஷ்டப்பட்டு வருகின்றன. அதற்கு நான் ஒரு யோசனை சொல்ல ஆசைப்படுகிறேன். ஏற்கனவே புஞ்சை நிலங்களுக்கு வரி இல்லை என்று சொல்லிவிட்டோம். இப்போதும் கூட அதிகமாக நமக்கு ஒன்றும் கையைப் பிடிக்காது. தண்ணீர் வரியை மட்டும் அரசாங்கம் வைத்துக்கொண்டு நில வரி முழுமையையும் பஞ்சாயத்துக்களுக்கு என் கொடுத்துவிடக் கூடாது ? ராஜஸ்தான் போன்ற இதர மாநிலங்களில் நிலவரியை மாநில அரசு எடுத்துக் கொள்வதில்லை. நிலவரி பூராவுமே பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி நம் மாநிலத்திலும் நிலவரி முழுவதையும் பஞ்சாயத்துக்களிடம் கொடுத்துவிட்டு பிராஜெக்டுகள், வாய்க்கால்கள் போன்றவைகளை அரசு சரி பார்க்க வேண்டியிருப்பதால், தண்ணீர் வரியை மாத்திரம் அரசாங்கம் எடுத்துக்கொண்டு நில வரி முழுவதையும் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கலாம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நிலவரி இப்போது புஞ்சை நிலங்களுக்கு இல்லை. மற்ற நிலவரியை அப்படியே பஞ்சாயத்துக்களுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்பது அபிப்பிராயமா ? அல்லது, நில வரியையே எடுத்துவிட வேண்டும் என்பது அபிப்பிராயமா ? மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்கள் இவற்றை எல்லாம் நீக்குவதாகச் சொல்லி வந்தார்கள் என்பதை சுட்டிக் காட்டுகிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** நில வரி முழுமையுமே ரத்து செய்துவிட வேண்டும் என்று மூன்று ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அமைச்சரவை கவனித்ததாகத் தெரியவில்லை. இந்த நிலைமையில் பஞ்சாயத்துக்கள் அதை வசூல் செய்து எடுத்துக்கொள்ளலாமே என்றுதான் சொல்கிறேன். ரத்து செய்யும் பட்சத்தில் அதை நாங்கள் வரவேற்போம்.

**திரு கே. எஸ். மணி :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நில வரி பூராவையுமே ரத்து செய்துவிட வேண்டுமென்று சொல்லுகிறார். இப்பொழுது பஞ்சாயத்துக்களுக்கு இருக்கும் நில வரியைக்கொடுத்து விட்டால் வரவு செலவுத் திட்டத்தில் சர்க்கார் எதிர் பார்க்கும் மதிப்பீட்டிற்குக் குறைவு ஏற்படுமே. அப்பொழுது புதிய வரி போட வேண்டும் என்று எண்ணமா ? இதை எப்படிச் சமாளிப்பது என்று அறிய விரும்புகிறேன்.

**திரு கே. ராஜாராம் :** தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டத்தில் புதியதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒன்றே ஒன்று தான் புதிய அம்சம். இதற்கு முன்னால் ஜனத்தொகை விகிதாசாரப்படி பஞ்சாயத்துகளுக்குப் பணம் கொடுத்து வந்தோம். இப்பொழுது அதையும் கொடுத்து, மேற்கொண்டு ரோடு மைலேஜ் கணக்கைப் பார்த்து ஒரு கிராண்ட் கொடுக்



கிறோம். இதை கவர்னர் உரையின் பேரில் பேசியபோது நான் என்னுடைய பாராட்டுதலை அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறேன். பஞ்சாயத்துக்களுக்கு அதிகமான நிதி வசதி செய்து கொடுக்கும் வகையில், அவைகளை நேரடியாகிய மாநில அரசின் ஏஜண்டுகளாகச் செயல்பட்டு வரி வசூல் செய்வதால், அவைகளுக்கு மேலும் உதவி செய்ய வேண்டும் என்று சொல்கிறேனே தவிர, இதில் அரசியல் பேச்சுக்கு இடமே இல்லை.

அத்துடன் பஞ்சாயத்து யூனியன்கள் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டிய விஷயத்தில் அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். கலெக்டர் தலைமையில் அவைகள் இயங்கி வருவது சிறந்த ஒரு அமைப்பு தான். ஆனால் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள் பஞ்சாயத்து நிர்வாகத்தில் தலையிட்டுப் பல தொல்லைகள் கொடுத்து, காரியங்களைத் தாமதப்படுத்தக் காரணமாக இருக்கிறார்கள். டிவிஷனல் பஞ்சாயத்து ஆபீசர், ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் ஆகியவர்கள் மட்டுமே பஞ்சாயத்துக்களை மேற்பார்வை செய்ய வேண்டுமே தவிர, ரெவின்யூ இலாக்காவைச் சார்ந்த ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், தாசில்தார், இவர்களிடம் அந்தப் பொறுப்பைக் கொடுக்கிறபோது, அவர்களுக்குக் கீழே இருக்கிற ரெவின்யூ இன்ஸ்பெக்டரும் மற்றும் இதர சிப்பந்திகளும் பெரிய மணியம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். இதனால் வேலை தடைபடுகிறது. ஆதலால் கலெக்டருடைய பஞ்சாயத்து பர்சனல் அஸிஸ்டெண்ட், டிவிஷனல் பஞ்சாயத்து ஆபீசர் இவர்கள் மேற்பார்வையில் மட்டும் செயல்பட்டு வந்தால், செவ்வனே வேலை நடைபெறும். சட்டசபை அங்கத்தினர்களாக வருவதற்கும், அமைச்சர்களாக வருவதற்கும் தகுதியும் வாய்ப்பும் படைத்தவர்கள் பலர் பஞ்சாயத்துத் தலைவர்களாய் இருப்பதால், பொதுவாக அவர்கள் தைரியமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டால், மாநில அரசாங்கத்தின் வேலைப்பளு பல விதத்தில் குறையும். ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் கண்ட்ரோல் இருக்கக்கூடாது என்று சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொல்கிறேன். பஞ்சாயத்து ஊராட்சித் துறை முழு மேற்பார்வையையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் வந்து விட்டதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். சேது சமுத்திரத் திட்டத்தை எந்த வகையிலும் நிறைவேற்றும்படியாக நாம் மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால், நம் பேரிலே எல்லாம் ஒரு குற்றச் சாட்டைச் சுமத்த மக்கள் ஆரம்பித்துவிடுவார்கள். தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும், இதன் காரணமாக நஷ்டத்தில் வேலை செய்யும். 30 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து விட்டு, அதற்குத் தகுந்த வருவாய் வேண்டுமானால், சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட்டாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சேது வாய்க்கால் மூலமாக வரும் கப்பல்கள் மூலமாகத்தான் தூத்துக்குடித் திட்டத்திற்காகும் செலவுக் கேற்ற வருவாய் காண முடியும். சேது சமுத்திரத் திட்டத்தை இந்த நாட்டில் ஆரம்பிக்க, முதலமைச்சருடைய சமார்த்தியத்தாலும் அவருக்குள்ள செல்வாக்கினாலும், வழிவகைகள் காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காவேரி டெல்டா விஷயத்தில் அரசு செலுத்தி வரும் அக்கறையை மிகவும் பாராட்டுகிறேன். இப்போது மைசூர் அரசாங்கத்துடன் ஏற்பட்டிருக்கும் சர்ச்சையைத் தீர்ப்பதற்கு நமது பண்பிற்கு இணங்க ஒரு சுமூகமான வழியில் தீர்வு காண வேண்டும் என்று தமிழ் நாட்டினர் விரும்புகிறோம். நமது மாநிலத்தின் சார்பாக எடுக்கப்படும் எல்லா முடிவுகளுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கு சர்வ கட்சிகளும் சேர்ந்து அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். இதில் எவ்வளவு துரிதமாக வேலை செய்ய வேண்டுமோ, அவ்வளவு துரிதமாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய சர்க்கார் அனுப்பியிருக்கும் தாக்கீதுக்கு விரோதமாக, அங்கு அணை கட்டுவது என்று சொன்னால் நமது, மாநில அரசு சும்மா இருக்க முடியாது. மத்திய சர்க்காரும் உடனடியாக நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால், நிலைமை மேலும் மோசமடையாமல் போக வழி ஏற்பட்டிருக்கும். மத்திய சர்க்கார் இதற்கு வகை செய்யாமல்,

போனால், நாம் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் நிவாரணம் பெற வேண்டும். அப்படி மத்திய சர்க்காரும் விட்டு விடாது என்றும், மைசூர் அரசும் அந்த அளவுக்கு நடந்து கொள்ளாது என்றும் நம்புகிறேன். மத்திய அரசே துரிதமாக இதில் செயல் படுவார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மைசூர் அரசுக்கு மத்திய அரசு ஒரு கடிதம் எழுதியிருப்பதாகத் தகவல். அந்த அடிப்படையில் 1924-ம் வருடத்திய ஒப்பந்தத்தை மீறுமல் கட்டுவதாக இருந்தால் கட்டலாம். எல்லாத் தலைவர்களுமாக ஒரு அபிப்பிராயம் கொடுக்க, பிரதம மந்திரி யிடம் நான் நமது நிலையை நேரில் எடுத்துச் சொன்னேன். அந்தக் கடிதத்தின் நகல் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு தான் சட்ட மன்றத்தில் நான் பதில் அளிக்கின்ற நேரத்தில் கூட, ஹேமாவதி அணை யைக் கட்ட வேண்டாம் என்று சொல்லவில்லை, 1924-ம் வருடத்திய ஒப்பந்தத்தை மாற்றும் வகையில் கட்டக் கூடாது என்பது தான் முக்கியம் என்று குறிப்பிட்டிருந்தேன். அதை வைத்துச் சில ஆங்கிலப் பத்திரிகைகள் ஹேமாவதி அணை கட்ட வேண்டாம் என்று மத்திய அரசு சொல்லியிருப்பதாகச் சொல்லி எழுதியிருக்கிறார்கள். ஆகவே எதிர்க் கட்சித் தலைவர் அவர் உரையோடு இதையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். 1924-ம் வருஷத்திய அதைத் தான் நாங்களும் எதிர்பார்க்கின்றோம். ஹேமாவதி ஒப்பந்தம் மீறுமல் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். அப்படிக் அணையைக் கட்டுவதற்கு அவர்களுக்கு அருகதை கிடையாது. கட்டுவதானால், நம்மைக் கலந்து கொண்டு, ஏற்கனவே பாய்ந்து கொண் டிருக்கும் தண்ணீர் அளவு குறைந்து விடாமல், நமக்குத் தேவையான தண்ணீர் போக, மீதியை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதுபற்றி இரண்டு அரசாங்கங்களும் உட்கார்ந்து பேசி ஒரு முடிவுக்கு வரலாம். எதுவும் செய்யாமல் இருந்துவிட்டால், தஞ்சாவூர், திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களில் காவேரி நீர்ப்பாசனம் பெரிதும் பாதிக்கப்படும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிடும். இப்பொழுது அவர்கள் அப்படித் தான் அந்த அணையைக் கட்டப் பார்க்கிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகையினால், முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுடன் உடனடி யாகத் தொடர்பு கொண்டு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் நாமே நட வடிக்கை எடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இது ஒரு வயிற்றுப்பாட்டுப் பிரச்னை. திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் நெல் விளைச்சல் பாதிக்கப் பட்டால், நமது மாநிலமே பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரி இவ்வளவு கவனம் செலுத்துகின்ற அரசு பெரியாறு பாசன விஷயத்திலும் அக்கறை செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெரியாறு பேரணையில் தண்ணீர் திறந்து விட்டால், இருக் கின்ற 13 மைல் தூரத்திற்கும் போய் கடைசிக்குப் போவதற்கு 30 நாட்கள் ஆகின்றன. இதனால் விவசாயிகளுக்குக் கஷ்டம் ஏற்படுகிறது. அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட்ட 3 அல்லது 4 நாட்களில் தண்ணீர் கடைசி வரை போய்ச் சேரும்படி வாய்க்கால்களைத் தூரு வாறி, போதிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயம். இந்த மாவட்டங்களில் போதிய தண்ணீர் கிடைப்பது கிடையாது. அந்தப் பிரதேசங்கள் எல்லாம் வானம் பார்த்த பிரதேசங்கள். நல்ல பாசனக் குளங்கள் எல்லாம் மழை இல்லை என் றால், வற்றிப் போய்விடும். எனவே அரசாங்கம் நல்லபடி யோசித்து, சில கோடி ரூபாய்கள் செலவழித்தாலும் பரவாயில்லை என்று சப்ளை வாய்க் கால்களைத் தூர் எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதோடு சீமை முருகவேல் முட்கள் சப்ளை சேனல்களை அடைத்துக்கொண்டிருக்கின்றன. எனவே நல்லபடி தூரு எடுத்து அணையில் தண்ணீரைத் திறந்து விட்டால், இரண்டு அல்லது மூன்று நாட்களில் தண்ணீர் கடைசி வரைக்கும் போய்ச்



சேரும்படி செய்ய வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவித்துக்கொள் கிறேன். அதை முதலமைச்சர் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக் களில் சில பகுதிகளில் வறட்சி நிலைமை இருக்கிறது. இதுபற்றி நிதி அமைச்சர் சொல்லியிருப்பதற்கு மகிழ்ச்சி தெரிவித்துக்கொண்டு, துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நேற்று கூட மதுரையிலிருந்து வந்த செய்திகளைப் பார்த்தால், அந்த ஜில்லாவில் வேடசந்தூர், திருமங்கலம், உசிலம்பட்டி ஆகிய பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது. எனவே மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லா கலெக்டர்களுக்கு உடனடியாக உத்தரவு பிறப்பித்து உக்தானுசார நடவடிக்கைகளை எடுத்து இந்தக் குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற் காக நமது நிதி அமைச்சரின் உரையில் உருப்படியான வேலைகள் எதுவும் சொல்லப்படவில்லை. எனவே நான் ஒரு யோசனையைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கிராமப் புறங்களில்தான் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. எனவே கிராமப் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் அந்தந்தப் பகுதியில் உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க ஏதாவது வழிவகை செய்ய வேண்டும். சிறு சிறு தொழில்கள் ஆரம்பிக்கலாம். ஜப்பானில் செய்வது போன்று கிராமப் புறங்களில், சிறு சிறு உறுப்புகள், உதாரணமாக, சைக்கிள் பார்ட்ஸ், மோட்டார் பார்ட்ஸ், ஸ்பேர் பார்ட்ஸ் போன்ற கருவிகளைச் செய்ய லாம். இரண்டே வருஷங்களில் எல்லா கிராமங்களிலும் மின்சார வசதி யைச் செய்து தரப் போவதாக முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படியானால், இந்த மின்சாரத்தைத் தகுந்தபடியாக கிராமங்களில் உப யோகப்படுத்திக் கொள்ள வேண்டும். தெரு விளக்குகள் எரிப்பதற்காகத் தான் மின்சாரம் என்று இருக்கக் கூடாது. சிறு சிறு தொழில்களுக் கெல்லாம் மின்சாரத்தை உபயோகப்படுத்த வேண்டும். மட் கார்ட், ஷூ ஆணி போன்ற சின்னச் சின்ன சாமான்களைச் செய்யும் தொழில்களுக் கெல்லாம் மின்சாரம் உபயோகப்படுத்தப்பட வேண்டும். சென்னை நகரில் 5 லட்சம் பேர்களுக்கு மட்டும் போதுமான குடிநீரை 25 லட்சம் பேர்கள் பகிர்ந்து கொள்ளவேண்டிய நிலை இருக்கிறது. மற்ற சுகாதார வசதி கள், பப்ளிக் கன்வீனியன்ஸ் போன்றவைகளை, 5 லட்சம் பேர்களுக்கான வசதியை 25 லட்சம் பேர்கள் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிலை இருக் கிறது. கிராமப்புற மக்கள் சாதாரணமாக நகரத்திற்கு வர வேண்டும் என்று விரும்பமாட்டார்கள். அங்கே வேலை வாய்ப்புகள் இல்லாமை யினால்தான், நகர்ப் புறங்களுக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் நேரிடுகிறது. நகர்ப்புறத்திற்கு வந்தால், ரிக்ஷா இழுத்தால் கூட 4, 5 ரூபாய் சம்பாதிக்கலாம் என்று உழைப்பதற்காக வருகிறார்கள். முதலில் பிச்சை எடுக்கத்தான் வருகிறார்கள். பின்னால் ஏதோ தொழில் செய்து பிழைக்கிறார்கள். எனவே ஜப்பானில் உள்ளது போல் கிராமங்களில் தொழில் வசதிகள் ஏற்பட வேண்டும். ஜப்பானில் அப்படித்தான் இருக்கிறது. போய்ப் பார்த்தால் நன்றாக விளங்கும். இதையே போன முறை, 1967–68 பட்ஜெட் விவாதத்திலும் சொன்னேன். அண்ணா அவர்கள் உன்னிப்பாகக் கவனித்து நல்ல யோசனை என்று பாராட்டினார் கள். எனவே நிதி அமைச்சர் அவர்கள் நன்கு யோசித்து ஏதாவது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை விட நல்ல யோசனை வேறு எதுவும் இருக்க முடியாது என்றும் சொல்லுவேன்.

அடுத்தபடியாக, படித்த மக்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம். இதைப்பற்றிச் சொல்லும்போது, ஒரு யோசனையைத் தெரிவிக்க விரும்பு கிறேன். எந்தெந்த மாநிலங்களுக்கு யார் யார் போக விரும்புகிறார் களோ, அவர்களுக்கு அவர்கள் விரும்பும் மொழியிலேயே கற்றுக் கொடுக்கலாம். இப்போது பேங்குகளில் சொந்தத் தொழில் நடத்த உதவி செய்கிறார்கள். இதையும் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

படித்த உடனேயே அரசாங்க உத்தியோகங்களுக்குத்தான் மனுப் போடுவது என்பது வழக்கத்தில் வந்து விட்டது. இந்த நிலைமை மாற வேண்டும். மத்திய அரசு 14 வங்கிகளை "நேஷனலைஸ்" பண்ணியிருக்கிறார்கள். இதைப் பயன்படுத்திக் கொண்டு இளைஞர்கள், சொந்தத் தொழில் செய்வதற்கு ஊக்கப்படுத்தவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் தான், ஒழுக்கம் குறைவதற்குக் காரணம் என்பது என்னுடைய அபிப்பிராயம். வேலையில்லாமல் இருக்கும்போதுதான் ஒழுக்கக் கேடுகள் ஆரம்பிக்கின்றன.

அண்மையில் முதலமைச்சர் அவர்கள் எம்மதமும் சம்மதம், எல்லோரும் ஓரினம் என்று பேசியிருப்பது உண்மையிலேயே மன நிறைவைத் தருகிறது. அதேமாதிரி அண்மையில் பஞ்சாப் மாநில முதலமைச்சரைக் கொண்டு வந்து தமிழ் நாட்டில் அவருக்குச் சிறப்பு செய்து அனுப்பியது மகிழ்ச்சியை அளிக்கிறது. இதேமாதிரி அவரும் இங்கே உள்ள முதலமைச்சரை அழைத்திருக்கிறார்கள். மற்ற மாநில முதலமைச்சர்களுடனும் நல்ல சௌஜன்ய மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதற்கு இது ஒரு நல்ல ஆரம்பம் என்று சொல்லுவேன். அதேமாதிரி மொழி விஷயத்தில் நமது மொழியைப் பாராட்டிக் கொள்வதற்கு நமக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதே மாதிரி மற்ற மொழியைப் பாராட்டிக் கொள்வதற்கு அவரவர்களுக்கு உரிமை உண்டு. அவர்கள் பாராட்டிக்கொள்ளத் தான் செய்வார்கள். ஆகையால் பிற மொழிகளைப் பற்றி நமது மாநிலப் பத்திரிகைகள் எழுதும்போதும், பிறர் பிரசுரம் செய்யும்போதும் அவற்றைக் குறைத்துப் பேசுவது என்பது நல்லதல்ல. ஹிந்தி அரக்கி என்று கார்ட்டூன் போடுவது எல்லாம் நல்லதல்ல. இப்போது பம்பாயில் சிவசேனா போன்றவை ஏற்பட்டதற்குக் கூட இவைகள் எல்லாம் ஒரு காரணம். மொழி வெறியை நமது மாநிலத்தில் தூண்டி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதிரி விஷயங்களில் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். அதிலும் அமைச்சர் அவர்கள் செல்வாக்கிலுள்ள பத்திரிகைகள் இதைக் கடைப்பிடித்து மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மொழி விஷயத்தில் எங்களைப் பொறுத்தவரையில், ஒரு விதமான சந்தேகத்திற்கும் இடமில்லாமல் மறைந்த பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்கள் கடைசியாகக் கொடுத்த வாக்குறுதிதான் எங்கள் கொள்கை. அதாவது ஹிந்தி வழக்கத்தில் இல்லாத மாநிலங்கள் ஹிந்தியை விரும்பாதவரை ஆங்கிலமே இருந்து தீரும் என்பதாகும். இந்த வாக்குறுதியை ஜவஹர்லால் நேரு அவர்கள் அடித்துச் சொன்னார்கள்—அதை எந்த வகையிலும் நிறைவேற்றிவிட வேண்டும் என்று ஒரே பிடிவாதமாக இருந்தார்கள். இன்று இம்மாநிலத்தில் ஆளுங்கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பத்தில் ஹிந்தியை அறவே வெறுத்தார்கள். "English ever, Hindi never" என்று சொன்னார்கள். ஆனால் இன்று திருச்சியில், நாங்கள் இது வரையில் சொல்லி வந்த ஜவஹர்லால் நேருவின் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற அந்தக் கொள்கையை, நமது முதலமைச்சர் மற்ற அமைச்சர்கள் முன்னிலையில் ஏகமனதாக, தீர்மானமாக நிறைவேற்றியது மன நிறைவை அளிக்கிறது. பத்திரிகையில் வந்திருந்ததைப் பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். எங்களைப் பொறுத்த வரையில், இந்த மாநிலத்தில் மொழிப் பிரச்னைக்கு இடமே இல்லை. காங்கிரஸ் என்ன சொல்லி வந்ததோ, அதையே திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லும்போது, இதைக் காட்டிலும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு விஷயம் வேறு ஒன்று இருக்க முடியாது.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தி மொழி ஆதிக்கம் கூடாது என்பதைப் பொறுத்தவரையிலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்கெனவே என்ன கருத்தைக் கொண்டிருந்ததோ அதே கருத்தைத்தான் இப்பொழுதும் கொண்டிக்



கிறது. 1968-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23-ம் நாள் இந்தச் சட்டமன்றப் பேரவையிலே, தீர்மானம் நிறைவேற்றிய நிலையிலேகூட, தெளிவுபடுத்தியிருக்கின்றோம். ஏனெனில் ஒரு மொழிக்கு மட்டும் கொடுக்கப்பட்டிருக்கும் தகுதி இந்தியாவிலே உள்ள எல்லா மொழிகளுக்கும் தரப்படவேண்டும். இந்திக்கு மட்டும் தனிச் சலுகை கூடாது. அது வரையில் ஆங்கிலமேதான் தொடர்ந்து நீடிக்க வேண்டும். இந்தியே இந்தியாவின் பொது மொழி ஆட்சிமொழி என்ற தத்துவத்திற்கு இடந்தரக் கூடாது என்று கருதப்படுகிறது. ஆனால், 1965-க்குப் பிறகு அரசியல் நிர்ணயச் சட்டத்தின்படி இந்திதான் ஆட்சி மொழியாக எல்லா வகையிலும் இருக்கும் என்று இருக்கிறது. ஆட்சி மொழித் தீர்மானத்தை இந்திய அரசு கொண்டு வந்தது. ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்க சில வழி வகை செய்தது. பண்டித ஜவகர்லால் நேரு சொன்னார், இந்தி பேசாத மக்கள் விரும்புகிற காலம் வரையில் ஆங்கிலம் நீடிக்கும் என்று. அவருக்குப் பிறகு அவர் கொடுத்த உறுதி மொழியின் அடிப்படையிலே தீர்மானம் வகுக்கப்பட்டது. ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்க வழி செய்யும் வகையிலேதான் நேருவின் உறுதி மொழி பயன்பட்டுவருகிறது. அந்தத் தன்மைகளோடு நாம் நிற்க விரும்பவில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் அப்பொழுது சொன்னார்கள், மழையைத் தடுப்பதற்கு குடை வேண்டும் என்று இருந்தாலும், அது கிடைக்கிற வரையிலும் துணியைப் போட்டுக் கொள்கிறமாதிரி, நேருவின் உறுதி மொழி ஆங்கிலத்தை அறவே நீக்குவதைத் தவிர்த்து, தொடர்ந்து நீடிக்கச் செய்யும் என்ற வகையிலே வரவேற்கிறேன் என்று. ஆகவே இந்தியே தொடர்ந்து . ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து வேண்டும் என்ற அடிப்படையிலேதான் திருச்சி மாநாட்டுத் தீர்மானம் அமைந்திருக்கிறது. நேருவின் உறுதிமொழி இடைக்காலச் சாந்தி என்ற அளவுக்கு அமையும்.

**திரு. கே. ராஜாராம் :** மழையைத் தடுப்பதற்குக் குடை கிடைக்கிற வரையில் துண்டு கிடைத்தால் நல்லது என்று கல்வி அமைச்சர் அவர்கள், அண்ணா அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். நாங்களும் அப்படித்தான் நினைக்கிறோம். இந்த நாட்டுக்கு இந்திதான் பொது மொழியாக இருக்க வேண்டும் என்பதைக் காங்கிரஸ் ரத்து செய்யவில்லை என்கிறார்கள். ஆனால், தென் மாநிலங்களைப் பொறுத்த வரையில், நமக்கு ஆங்கிலம் ஏதோ சொந்த மொழி போன்று பயின்று விட்டோம். ஆட்சிமொழியாக ஆங்கிலம் இருந்து வந்துகொண்டிருக்கிறது. திடீரென்று புதிதாக இந்தியைக் கற்று, ஆட்சிமொழியாகக் கொண்டு வருவது என்றால், எங்களுடைய இஷ்டம் இல்லாமல் கொண்டுவரக் கூடாது. இந்தியைக் கற்றுக்கொள்ள இன்னும் எத்தனை வருஷம் ஆகுமோ தெரியவில்லை. கௌகத்தியிலே நடந்த காங்கிரஸ்சில் ஜவகர்லால் நேரு அவர்கள் இருந்தார்கள். நமது முன்னாள் நிதியமைச்சர் திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துப் பேசினார்கள். வெகு அழுத்தமாகச் சொன்னார்கள். நான் மேடையிலே இருந்தேன். அண்மையில் விலகிய நிதியமைச்சர் மொரார்ஜி அவர்கள் அப்பொழுது கோபமாகக் கேட்டார்கள். எப்பொழுதுமே ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்களே, எவ்வளவு காலம் என்று கேட்டார்கள். நாங்கள் விரும்பும் வரை என்று சொன்னார்கள் திரு. சுப்பிரமணியம். அம்மாதிரி நாங்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நமக்கு வேண்டும் என்ற தீர்ப்பு கொடுக்கும் அதிகாரம் நமக்கு இருக்கவேண்டும் என்பதுதான், ஜவகர்லால் நேருவினுடைய வாக்குறுதி. ஆகையினால் அதற்கு எந்தவிதமான மாற்றமும் கிடையாது. சிறப்பான வாக்குறுதி. அதையே காமராஜர் அவர்களும் வற்புறுத்தி வருகிறார்கள். நாங்கள் எல்லோரும் அதைத்தான் வற்புறுத்தி வருகிறோம். அது சட்டமாக ஆக வேண்டும் என்று திரு. காமராஜர் அவர்களும் சொல்கிறார்கள். இப்பொழுது நமது முதலமைச்சர் அவர்கள் பிரதம மந்திரிக்கு வேண்டியவர்களாக இருக்கிறார்கள், ஒத்துழைக்கிறார்கள். ஆகவே இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[9th March 1970

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** நாங்கள் இப்பொழுது வேண்டியவர்களாக இருக்கிறோம், ஒத்துழைக்கிறோம். ஆனால், லால் பகதூர் சாஸ்திரி அவர்களையும், இந்திரா காந்தி அவர்களையும் திரு. காமராஜர்தானே கிங் மேக்கராக இருந்துகொண்டு பிரதமர்களாக ஆக்கிவைத்தார். அப்பொழுதே என் உத்தரவு போட்டு செய்திருக்கக் கூடாது ?

**திரு. கே. ராஜாராம் :** ஏதோ தவறி விட்டோம். அந்த நேரத்தில் சட்டம் போட்டிருக்க முடியும். நாங்கள் நினைத்தோம், பதறாமல் செய்து கொள்வோம், நாளாக நாளாக, உருவாகும் நிலைமையைப் பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்தோம். அப்போதே செய்திருக்க முடியும். இப்போதும் நம்மால்தான் முடியும் என்று எண்ணுகிறோம். அன்று தவறி விட்டோம். இன்றாவது முடித்துக் கொள்ள வேண்டும். உங்களோடு நாங்களும் சேர்ந்து நேருவின் உறுதிமொழியை சட்டமாகச் செய்ய வேண்டுமென்று நாங்களும் எங்கள் தலைவர்களும் வற்புறுத்தி வருகிறோம். இதற்கான தீர்மானத்தைக் கொண்டு வரலாம் என்று நான் முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். திரு. அன்பழகன் அவர்களுடைய தீர்மானத்திற்கு பதிலாக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** அந்தத் தீர்மானம் விரைவிலே போடுவதற்கு அதற்கான வடிவம் அமைக்கப்படுகிறது. அது விரைவிலே வர இருக்கிறது. அப்போது உங்கள் ஆதரவு நிச்சயமாக நாடாளுமன்றத்திலே கிட்டும் என்று நினைக்கிறேன். இங்கே கிட்டி பயன் இல்லை.

**திரு. கே. ராஜாராம்:** இந்த இரு சபைகளிலேயும் அம்மாதிரித் தீர்மானத்தைப் போட்டு அனுப்புவோம். அப்படிப்போட்டு அனுப்பலாம். இதை வைத்துக்கொண்டு அங்கே முயற்சிக்கலாம். நேருவினுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு உடனடியாக முயற்சிக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களே தீர்மானத்தைக் கொண்டு வந்து இங்கு நிறைவேற்றட்டும். எங்கள் கட்சியின் முழு ஆதரவும் அதற்கு இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். பொதுவாக நில உச்சவரம்பு நிர்ணயத்தைப் பற்றிக் காங்கிரஸின் அபிப்பிராயம் எல்லோருக்கும் தெரிந்ததே. நில உச்ச வரம்புச் சட்டம் என்பதையே தமிழ் நாட்டில் காங்கிரஸ் அரசாங்கம்தான் முதலில் கொண்டு வந்தது. அப்பொழுது ஆறு மாதம், ஒரு வருஷம் வரை தயங்கி பல யோசனைகள் செய்து எக்கனாமிக் யூனிட் எது என்று ஆலோசித்துத் தான் 30 எக்கரா இருந்தால் போதும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றினோம். இன்று முதலமைச்சராக இருப்பவரும் அன்று எதிர்க் கட்சி உப தலைவராக இருந்தார். ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து 15 எக்கரா இருந்தால் போதும் என்று சொன்னார்கள். அந்தத் திருத்தத் தீர்மானத்தைத் தோற்கடித்து 30 எக்கரா இருந்தால் போதும் என்று நிறைவேற்றினோம். அன்றைக்கு இருந்த கருத்து எல்லாம் இதுதான். தஞ்சை ஜில்லாவில் சிலர் 3,000 எக்கர், 2,000 எக்கர் என்று வைத்திருந்தார்கள். அப்படி சுதந்திரமாக நிலங்களை வைத்து வாழ்க்கையைப் பெருக்கிக் கொண்டிருந்த தஞ்சை ஜில்லாவில், திடீரென குறைக்கப் போகும்போது எக்கனாமிக் யூனிட் வேண்டும் என்றுதான் 30 எக்கராவுக்குக் கொண்டுவந்தோம். அங்கே 30 எக்கராவுக்குக் குறைத்துவிட்டு, மற்றத் தொழில்களிலும் வீடு கட்டி வாடகைக்குக் வாங்குபவர்கள், மில்கள் வைத்திருப்பவர்கள், தொழிற்சாலை நடத்துபவர்கள், நகரங்களில் பெரும் பெரும் தொழில்களைச் செய்து சம்பாதிப்பவர்கள், ஒன்றுமே செய்யாமல் வட்டிக்குப் பணம் கொடுத்து சம்பாதிப்பவர்கள் எல்லாம் லட்சம் லட்சமாக சம்பாதிக்கிறார்கள். இது மாதிரி சமுதாயத்தில் பல துறைகளில் சம்பாதித்துக்கொண்டிருப்பவர்



9th March 1970] [திரு. கே. ராஜாராம்]

களுக்கும் சமத்துவமாக வரம்பைக் கட்டிவிட்டு அடுத்தபடி நிலம் வைத்திருப்பவர்களை மேலும் தொட்டிருந்தால் நியாயமாக இருக்கும் என்பது என் போன்றோரின் எண்ணம். மற்றபடி உச்ச வரம்பைப்பற்றி, அமைச்சர் அவர்களே சட்டம் கொண்டு வருகிறார்கள். மசோதா வரும்போது விவாதிக்கலாம். இப்பொழுது அவசரப்பட்டு விட்டார்கள் என்று நினைக்கிறேன். என், 15 எக்கராவாக நில உச்சவரம்பை வைக்கக் கூடாது என்று மற்ற அரசியல் கட்சிகள் சொன்னதற்காகவோ அல்லது கம்யூனிஸ்ட்கள் வாயை அடைப்பதற்காகவோ, இதைக் கொண்டு வந்திருக்கலாம். எனவே அவசரப்பட்டு இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்னால், நகர்ப்புற சொத்துக்களுக்கு வரம்பு செய்ய வேண்டும். சாதாரணமாக கிராமங்களிலே விவசாயிகளுக்கு 30 எக்கராவிற்கு எவ்வளவு வருமானம் வருமோ, அந்த அளவிற்கு அதிகமாக மார்ஜின் கொடுத்துக்கூட, 50 ஸ்டான்டார்ட் எக்கர் இருந்தால், எவ்வளவு வருமானம் வருமோ அந்த அளவுக்கு நகர்ப்புற சொத்து வைத்திருப்பவர்களுக்கு வருவாயைக் குறைத்து நிர்ணயித்த பிறகு, 30 எக்கரா வைத்திருப்பவர்களைக் குறைத்தால் நன்றாக இருக்கும் என்பது தான் என் அபிப்பிராயம். இதை எதிர்ப்பதாகக் கருத வேண்டாம். என்னுடைய கருத்தை மசோதா வரும்போது சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** இன்றைக்கு இருக்கின்ற கான்ஸ்டிட்யூஷன் படி "அர்பன் ப்ராபர்ட்டி சீலிங்" நம்மாலே போட முடியுமா ? போடப்படுகின்ற அதிகாரம் 31 (ஏ) செல்லாது என்று சொல்லி விட்டாலும், ஏற்கெனவே இருக்கின்ற காரணத்தால், அதைப் பயன்படுத்தி முடிக்கிறோம். "அர்பன் ப்ராபர்டி சீலிங்" கான்ஸ்டிட்யூஷன் அமெண்ட்மெண்ட் இல்லாமல் கொண்டுவர முடியுமா ?

**திரு. கே. ராஜாராம் :** அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், எனக்கும் தெரியும். இப்போது மத்திய அரசாங்கத்தில் அர்பன் ப்ராபர்டிக்கு சீலிங் கொண்டு வர வேண்டும் என்று கிளர்ச்சி இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பட்ஜெட்டில் கூட சொல்லப்பட்டிருக்கிறது. "அர்பன் ப்ராபர்டி சீலிங்" கொண்டு வருகிறோம் என்கிறார்கள். அது வரை நாம் பொறுக்கலாம். அத்துடன் ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்று சொல்கிற மாதிரி, விவசாயிகள் பத்து எக்கரா வைத்திருந்தாலும் 50 எக்கர் வைத்திருந்தாலும், அவர்களுக்குக் கிளர்ச்சி செய்யத் தெரியாது. முடிந்திருந்தால், விவசாயம் செய்யத்தான் தெரியும். தன்னிடம் வேலை செய்பவர்களை வேண்டுமானால், கடுமையாக வேலை வாங்குவார்கள். கிளர்ச்சி பண்ணி அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்குமளவிற்குப் பெரும் போராட்டத்தை நடத்தும் நிலைமையில் விவசாயிகள் இல்லை. அந்த எண்ணம் கூடத் தமிழ் நாட்டு விவசாயிகளுக்கு இல்லை. அதை உபயோகப்படுத்திக் கொண்டு இப்படிக் கொண்டுவருவது கூடாது. நகரத்திலே "இம்" என்றால் உடனே பெரிய பத்திரிகைகள் எழுதி விடுகின்றன. இங்கே உள்ளவர்கள் ஹவுஸ் ஓனர்ஸ் அசோசியேஷன் என்றும், சேம்பர் ஆப் காமர்ஸ் என்றும், சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரி பெரிய சொத்துக்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் சங்கங்கள் வைத்துக்கொண்டு, பெரும் பத்திரிக்கைகளை வைத்துக்கொண்டு, கிளர்ச்சி செய்ய இங்கு ஆரம்பித்து விடுகிறார்கள். அரசாங்கத்திடம் வலியுறுத்தி தங்களுக்கு, விலக்கு அளிப்பதற்காக ஏற்பாடு செய்கிறார்கள். ஆகையினால் ஒன்றுமில்லாமல், சாதாரணமாகச் சொல்வதற்கு தைரியம் கூட இல்லாமல் கிராமத்திலே உள்ள மக்களுக்கு உணவு உற்பத்தி செய்து கொண்டிருக்கிறானே, விவசாயி, அவன் தலையிலே மீண்டும் மீண்டும் கையை வைத்து ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்ற மாதிரி, அந்த விவசாயியின் வருமானத்தை மறுபடியும் குறைப்பது நியாயமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த 30 எக்கரை 15 எக்கர் ஆகக் குறைப்பது என்பதைக் கொஞ்சம் பொறுத்திருந்து பின்னால் மத்திய சர்க்காரிலிருந்து வர இருக்கின்ற "அர்பன் சீலிங் ஆக்டைப்" பார்த்துவிட்டுக் கொண்டு வரலாமே என்று சொல்கிறேன்.

"லேண்ட் சீலிங்" என்பதைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் கட்சியின் கொள்கை அதை எடுக்கப்போவதில்லை என்பதை மட்டும் சொல்லிக் கொண்டு, இவ்வளவு நேரம் பேச அனுமதி கொடுத்த தற்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 11 நாட்களாக நடைபெற்ற இந்த விவாதத் திற்கு கடைசியாக முடிவு வைக்கின்ற வகையில் நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். இந்த ஆண்டு வரவு–செலவுக்கான நிதி நிலை அறிக்கையை பொதுவாக, இந்த மன்றத்தில் அங்கத்தினர்களின் பேச்சுக்களைக் கவனித்தபோது, எல்லோருமே நல்ல வகையில் வரவேற்றிருக்கிறார்கள் என்றுதான் சொல்வேன். இந்த மன்றத்திலே வழக்கமாக ஒரு பெரிய மரபு, ஒரு புகழ் உண்டு. பாரபட்சமற்ற தன்மையில், ரொம்ப நிதானத் துடனும், தைரியத்துடனும் தன்னுடைய அபிப்பிராயத்தை, எந்தக் கட்சி யைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், என்னுடைய கருத்து இது என்று சொல்லும் மரபு உண்டு. இந்த மன்றத்தில் மட்டுமல்லாமல், சட்டசபை யிலும், வெளியே பத்திரிகைகளும் பொதுமக்களும் இந்த நிதி நிலை அறிக்கையை பெரிய அளவில் வரவேற்றிருக்கிறார்கள். இதில் எனக் குக் கொஞ்சமும் சந்தேகம் இல்லை. நான் சட்ட மன்றத்தில் பேசும் போது ஒன்றைக் குறிப்பிட்டேன். அரசாங்கத்தில் நிதியமைச்சர் வேலை என்பதே ரொம்பவும் சங்கடமான வேலை. கெட்ட பெயர் வாங்குவதற்குப் பொருத்தமான வேலை இந்த நிதியமைச்சர் வேலை தான். இந்த இக்கட்ட டான நிலைமையில், சட்ட மன்ற உறுப்பினர்களில் பல கட்சிக்காரர்கள் இருப்பதால் நமக்குள் எவ்வளவு அபிப்பிராய பேதங்கள் இருப்பினும், ஒவ்வொருவரும் ஒரு அபிப்பிராயத்தைக் கொண்டிருப்பினும், இம் மாநிலத்தின் முன்னேற்றத்தில், இந்த மாநில மக்களுக்கு நல்லதொரு புதிய வாழ்வு ஏற்படுத்துவதில், அவர்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரம் கிடைக்கச் செய்வதில், சுதந்திரா கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி வலது, இடது, காங்கிரஸ் கட்சி, எல்லோருக்கும் அக்கரை இருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை. இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், நல்ல முறையில் எல்லோரும் அதை வரவேற்றிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்கள் தனது பேச்சைத் துவங்கும்போது, கொஞ்சம் பயமாகத் தான் இருந்தது. எங்கே தாக்கப் போகிறாரோ என்று தான் நினைத்தேன். எதிர்க் கட்சித் தலைவர், இந்த அறிக்கை அவ்வளவு கவர்ச்சிகரமாக இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஏதோ மாவுக்குத் தகுந்த பணியாரம் என்று சொல்லு வார்கள். ஏதோ சக்தியை அனுசரித்து, இந்த நாட்டு ஏழை எளிய மக்களுக்கு நல்லது செய்ய முயற்சித்திருக்கிறோம். இந்த வரவு–செலவுத் திட்டம் என்பது சேல்ஸ் டேக்ஸ் வரவு–செலவுக் கணக்கு போல் ஆகாது, மளிகைக்கடை வரவு–செலவு போல் அல்ல. இது இந்த மாநிலத்தின்
5-40 p.m. பொருளாதார அபிவிருத்திக்கு நாம் மேற்கொண்டிருக்கிற வளர்ச்சியின் பணிகள் எப்படிப்பட்டவை என்பதை விளக்குவதாகும். இனிமேல் செய்யப் போகின்ற காரியங்களுக்கு நிதி கண்டு பிடிக்கவும், அவற்றை நிறைவேற்ற சபதம் எடுத்துக் கொள்ளவுமாக அமைந்திருக்கின்ற ஒரு அறிக்கை இது. ஒரு பெரிய பணியில் எங்களை அர்ப்பணித்துக் கொள்வதாகத்தான் நாங்கள் கருதுகிறோம். பெரிய அளவில் அமையவில்லை என்பதை நாங்களே ஒத்துக்கொள்கிறோம். சேலம் இரும்பு உருக்கு ஆலை, சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் எல்லாம் எப் பொழுது என்று கேட்டார்கள். நாங்களும் அதைத் தான் கேட்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதையே தான் கேட் கிறார்கள். 21-ம் தேதி நடை பெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் சேலம் இரும்பு உருக்காலைத் திட்டம், சேது சமுத்திரத் திட்டம், இவற் றைப் பற்றிய விவரங்களெல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகும் ஒன்றையும் காணோம், தனி நாடு பேசுகிறார்கள், வேறு எதை எதையோ பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். வரம்





கொடுக்கும் அதிகாரம் அங்கே இருக்கக் கூடாது. அதை எடுக்க வேண்டும் என்பதைப் பற்றி நம்முடைய நிதிநிலை அறிக்கையில் பத்துப் பக்கத்திற்கு மேல் விளக்கப்பட்டிருக்கிறது. சேலம் இரும்பு ஆலையைப் பொறுத்த வரையில், ஒன்று சொல்லிக்கொள்வேன். நார்வே நாட்டிலும், ஸ்வீடன் நாட்டிலும், இன்னும் எவ்வளவோ வெளிநாடுகளிலே எல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட்டு தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட் கொடுத்த பிறகு, ஃபைனான்ஸ் கமிஷன்தான் தடையாக இருக்கிறது என்று சொல்வது பொருத்தமாக இல்லை. நல்ல நிலைமையை நியாயப்படுத்திக் கொள்ளவில்லை என்று தான் சொல்ல வேண்டும். நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோ தரன் அவர்கள் பேசுகிறபோது நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் இரண் டாவது திட்டம் ஒரு முக்கியமான திட்டம் என்றும், சேலம் இரும்பு உருக்காலைக்கு வேண்டிய பிரிக்கெட்ஸ்—பழுப்பு நிலக்கரியைச் சுத்தப் படுத்த ஒரு தொடர் இணைப்பாகக் கொள்ள வேண்டும் என்றும் எடுத்துக் காட்டினார்கள். அதே மாதிரித்தான் சேது சமுத்திரத் திட்டமும். அந்தத் திட்டத்தின் மூலமாக மேற்குக் கடற்கரையில் கொழும்பைச் சுற்றிக்கொண்டு வர வேண்டிய கப்பல்கள் தங்கள் தூரத்தைக் குறைத்துக்கொண்டு தூத்துக்குடிக்கு வரலாம். அந்த வகையில் தூத்துக்குடி ஒரு பிரதானமான துறைமுகமாக வளர வாய்ப்பு இருக்கிறது. அதே மாதிரியாக கல் பாக்கம் அனல் மின்சார நிலையம் 400 மெகவாட் உற்பத்தித் திறனுக்கப் பட்டால், நான்காவது திட்ட இறுதியில் நமக்குத் தேவைப்படும் மின் சக்தியைப் பெற முடியும். மின்சாரத் துறை எவ்வளவு தான் திட்டம் போட்டாலும், நமது மாநில வளர்ச்சித் திட்டத்தின் கண்ணோட்டத்தில் பார்க்கின்றபோது, பற்றாக் குறையாகத்தான் இருக்கிறது என்பதை எடுத் துச் சொல்லத் தேவையில்லை. நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்களுக்குச் சொல்வேன். அல்லும் பகலும் இந்தக் காரியங்களுக்காக நாங்கள் எடுக்கின்ற முயற்சி தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன. அந்த முயற்சிகள் எல்லாம் நல்ல பலனை அளிக்கும் என்று அவர் நம்புவது போல், நாங்களும் நம்புகிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். நமது அரசாங்கத்தின் முன் இருக் கின்ற பல முயற்சிகளில் ஒன்று இரண்டைத் தான் இங்கு சொல்கிறேன். ஒரு விஷயத்தை முதலில் சொல்லிக் கொள்கிறேன். அதிகப்படியாக சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது உண்மை. நிதி உதவிகள் பெறும் பொருட்டு ஒரு நிறுவனம் ஆரம்பிக்க வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். நான் மகிழ்ச்சியோடு ஒரு விஷயத்தை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் என்ற பேரால் ஒரு நிறுவனம் துவங்கப் பட்டுள்ளது. அந்தக் கார்ப்பரேஷனைச் சார்ந்து சுமார் 85 தொழில்கள் இருக்கின்றன. தனிப்பட்டவர்களுக்குப் பல விதமான உதவிகள், கடன் வசதிகள், தொழில்கள் எப்படி அமைந்தால் அவைகளுக்கு வாய்ப்புகள் எப்படி இருக்கும், ஃபிஸிபிலிட்டீஸ் (feasibilities) எப்படி தொழில் கள் ஆரம்பிப்பதற்கு வேண்டிய யந்திர உதவிகள், தொழில் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்கள், ப்ரொக்யூர் செய்து அவர் களுக்குக் கொடுக்கின்ற காரியங்கள் போன்ற உதவிகள், செய்வதற்காக "ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்" என்ற ஒரு நிறுவனம் துவங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. கே. சுப்பையா :** "இண்டஸ்ட்டிரியல் டெவலப்மெண்ட் கார்ப்ப ரேஷன்" என்று ஒன்று மவுண்டு ரோடில் லோகல் லைப்ரரிக்குப் பக்கத்தில் இருக்கிறதே ? அதற்கும் இந்தக் கார்ப்பரேஷனுக்கும் என்ன வித்தி யாசம் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** உறுப்பினர் குறிப்பிடுகிற கார்ப்பரேஷன் பற்றி எனக்குத் தகவல் இல்லை. இந்த "ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்" மூலமாகத் தனிப் பட்டவர்கள் நிறுவனங்கள்—தொழில் நிறுவனங்கள்—உதவி பெறலாம். இங்கே அம்பத்தூர் அருகே உருவாகி வருகின்ற தொழில்களுக்குத்

தனிப்பட்டவர்கள் தொடங்கிய நிறுவனங்களுக்கு, கடன் வசதி, மூலப் பொருள் வசதி போன்ற வசதிகளை அளிப்பதற்காக இந்த நிறுவனம் துவங்க இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

5-50 p.m. நேருவின் உறுதிமொழியைப்பற்றிக் கூறினார்கள். ஹிந்தி மொழியைப் பற்றிக் கூறினார்கள். இந்தப் பிரச்னை 20 வருஷ காலமாக அலைக்கழைக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. ஹிந்தி மொழி யாருக்குத் தேவை? இங்கே இருக்கின்ற—திருவாரூர், திருத்துறைப்பூண்டியில் இருக்கின்ற குழந்தைகளுக்கு ஹிந்தி அறிவு வேண்டும் என்று யார் சொல்ல வேண்டும்? இங்கே இருக்கின்ற ஆசிரியர் தொகுதியைச் சேர்ந்த ஐயர் போன்றவர்கள், ஆசிரியப் பெருமக்கள், வைஸ் சான்ஸ்லர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் சொல்லட்டும். அதை விட்டு உத்தரப் பிரதேசத்தில் உள்ளவர்கள், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஹரியானு போன்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் பாராளுமன்றத்தில் கொஞ்சம் கூடுதலாக இருப்பதனுல், அவர்கள் சொல்வதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ருல், இது என்ன சுயராஜ்யம், இது என்ன சுதந்திரம், இது என்ன பார்லிமெண்டரி உரிமை? இது எனக்குப் புரியவில்லை. இந்த மாதிரியான கோளாறுகள் ஏன் ஏற்படுகின்றன என்று தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த 'வரையில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு யாரும் கொள்கைகளைக் கற்றுத் தர வேண்டியதில்லை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. கருணநிதி அவர்கள் கூட சொல்லியிருக்கிருர்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் யாரும் தயாரித்தவையல்ல. தீர்மான ரூபத்தில் வந்தவையல்ல. தமிழ் மொழிக்கு உயிர் கொடுக்க வேண்டும் என்ற போராட்டம் 1938-லிருந்து 1968, மேலும் இன்றுவரை நீடித்து வருகின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொழிக் கொள்கை மிகவும் தெளிவான கொள்கை, திட்டவட்டமான 'கொள்கை. ஆனல், காங்கிரஸ் மொழிக் கொள்கை என்னவென்று தெரியவில்லை. அதிலே ஒரு தெளிவில்லை. நேருவின் உறுதி மொழியை நிறைவேற்ற வேண்டுமா வேண்டாமா என்று கேட்டால், நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களாலே சரியாகச் சொல்ல முடியாது. தமிழ் நாட்டு காங்கிரஸ் கட்சியின் கொள்கையா, காமராஜரின் கொள்கையா என்பது தெரியவில்லை. நேருவின் உறுதி மொழியைவிட எங்களுடைய கொள்கை பெரிய கொள்கை. எங்களுடைய கொள்கையை நாவலர் அவர்கள் எடுத்துச் சொன்னர்கள். ஹிந்தியை எந்தக் காலத்திலும், இங்கே வரவிடக் கூடாது. டெல்லியிலே அது ஒரு ஆட்சி மொழியாக இருக்கட்டும். நாங்கள் இந்தி பேசாத மக்கள். உத்தரப் பிரதேசக்காரனுக்கும், மராட்டியனுக்கும், அரியானக் காரனுக்கும் எந்த உரிமைகள் இந்த பூபாகத்திலே இருக்கின்றனவோ அந்த உரிமைகள் எங்களுக்கும் உண்டு. இப்போது எங்கள் மொழி வருவதற்கு முடியவில்லை. அதுவரையிலே ஆங்கிலம் இருக்கட்டும் என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. எந்தக் காலத்திலேயும், எந்த ரூபத்திலேயும் இந்தி கூடாது. "இங்கிலீஷ் எவர்" "(English ever)" என்று ஆச்சாரியார் அவர்கள் சொல்வார்களே அதுபோல, "இந்தி நெவர்" "(Hirdi never)" என்பதுதான் எங்களுடைய கொள்கை. இந்தியைப் போல் தமிழ் மொழியும் ஒரு நாள் டெல்லிப் பேரரசிலே ஒரு ஆட்சி மொழியாக வர வேண்டும். அதற்கான அருகதை இருக்கிறது. அது வருகின்ற வரையிலே ஆங்கிலமும் இருக்க வேண்டும் என்பதுதான் தி.மு. கழகத்தின் கொள்கை.

***திரு. கே. ராஜாராம்:** நிதி அமைச்சர் வெகு அழுத்தமாகச் சொல்லி விட்டார்கள், "இந்தியே எங்களுக்குப் பிடிக்காது. எப்போதுமே வேண்டாம்" என்று. இந்த நிலைமையில் திருச்சியில் நேருவின் வாக்குறுதியின்படி நாங்கள் விரும்பும் வரை ஆங்கிலம் இருக்க வேண்டும், நேருவின் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்ற தீர்மானம் போடப்பட்டது உண்டா? அதை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் தானே போடப்பட்டது? ஆகவே எப்போதும் இந்தி வேண்டாம்





என்று சொல்வது ஒரு புறம் இருக்க, இப்போது கிடைத்தால் போதும், என்ற அளவில் கல்வி அமைச்சர் அவர்கள் தற்காலிகமாக நேருவின் வாக்குறுதித் தீர்மானம் நிறைவேற்றினல் போதும் என்று சொன்னதாக அறிகின்றேன். நிதி அமைச்சர் அவர்களும் அதைத்தான் சொல்வார்கள் என்று எண்ணுகிறேன். ஆகையினல் இப்போது நேருவின் உறுதிமொழித் தீர்மானம் நிறைவேற்றினல் போதும் என்ற எண்ணத்திலேதான் இருக்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. மு. கருணநிதி:** இந்தி பொது மொழியாவதைத் தடுக்க அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற தீர்மானமும் அதோடு இப்போதைக்கு நேருவின் உறுதி மொழியைச் சட்டமாக்க வேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இது ஏதோ பெரியவர்கள் பேசி அதற்குப் பிறகு கற்றுக்கொண்ட பாடம் அல்ல. சட்ட மன்றத்தில் இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதைப் பற்றிப் பேசும்போது அறிஞர் அண்ண அவர்கள் சொல்லியிருக்கிருர்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இப்போதைக்கு என்று பேசவில்லை. எப்போதைக்கும் பேசுகிறேன். நேருவின் உறுதி மொழி "So long as non-Hindi people want, let English continue" இதுதான் சாராம்சம். இந்தி பேசாத மக்கள் எவ்வளவு நாட்களுக்கு விரும்புகிருர்களோ, அவ்வளவு நாட்களுக்கு பேஷாக இருக்கட்டுமே! ஆனல் தி. மு. கழகக் கொள்கை நேருவின் உறுதி மொழியிலும் நம்பிக்கை இல்லை, இந்தி இங்கே வரக் கூடாது என்பது தான். இந்தி கூடாது என்பதல்ல. எங்களுக்குத் தமிழ் மொழி மேலே எவ்வளவு ஆசை இருக்கிறதோ, அதேமாதிரி இந்திக்காரனுக்கும் இந்தி மொழி மேலே ஆசை இருக்காதா? இந்தப் பெரிய பூபாகத்திலே நாம் எல்லாம் பங்குதாரர்கள், பாகஸ்தர்கள். ஒரு மாநில மொழி இன்னொரு மாநிலத்தின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்பது தான் எங்கள் நிலையே தவிர, இந்தி கூடாது என்பதல்ல. இந்தி நம்முடைய ஊரிலே எந்த ரூபத்திலேயாகட்டும் இருக்கக் கூடாது. இந்தி படித்தால் தான், மத்திய அரசாங்கத்தில் பங்கு இருக்கிறது என்ற நிலைமை இருக்கக்கூடாது. அதற்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக எங்கள் தாய் மொழி தமிழ் அந்த அந்தஸ்தைப் பெறுகிற வரையிலே, ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டவட்டமான கொள்கை, தெளிவான கொள்கை. அது நமது சட்ட மன்றத்திலேயும் நிறைவேறியிருக்கிறது. இதையெல்லாம் இப்போதைக்கு மட்டும் என்று யோசித்துக்கொண்டிருக்க முடியாது. எப்போதும் இருப்பது என்பதால் தான் சேது சமுத்திரத் திட்டத்தை, சேலம் உருக்காலையைப் பற்றி யோசிக்கிருேம். இது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை. இது மிகத் தெளிவானது. அந்தக் கொள்கைகள் நிறைவேருமல் இருப்பதற்குக் காரணம், அங்கே இருக்கிற அதிகாரக் குவியல். இன்றைக்கு நிறைவேற்றி வைக்க வேண்டிய உரிமைகள் பொருளாதார ரீதியிலே அங்கே இருக்கின்றன. விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்ருல், இன்றையதினம் பணத்தைத் திரட்டுகிற அதிகாரம் முழுவதும் அங்கே இருக்கிறது. சாதாரணமாக சேலத்திலே ஒரு தொழிற்சாலை வைக்க வேண்டுமென்ருல், அதற்கான லைசென்ஸ் தருகிற அதிகாரம் டெல்லியில் இருப்பவர்களிடம் இருக்கிறது. அவர்கள் பார்த்து ஜோசியம் பார்த்து, ஆருடம் கேட்டு, நாள் குறித்தால்தான், நாம் இங்கே அந்தத் தொழிற்சாலையைத் துவக்கலாம் என்கிற அளவுக்கு, அதிகாரம் முழுவதும் அங்கே இருக்கிறது. இன்றையதினம் டெல்லிப் பட்டணத்திலே ஒரு அரசாங்கம் நடக்கிறதா என்றே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. பலமாக டெல்லியிலே அரசாங்கம் நடக்கிறதா என்றே எனக்கும் புரியவில்லை. இவர்கள் பாகஸ்தர்கள், பிரிவினைச் சண்டை, குடும்பத்தில் தகராறு வந்துவிட்டால், என்ன நிலைமை ஏற்படுமோ, அப்படித்தான் இன்றைய தினம் டெல்லியிலே நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதனலே நாடு முழுவதிலும் பெரிய பெரிய காரியங்கள் எல்லாம் நிற்கின்றன. இப்படி டெல்லிப் பட்டணத்திலும், பம்பாய் நகரத்திலும், பெரிய பொருளாதார சூத்திரக் கயிறுகள் இருக்கிறவரை, எந்த மாநிலம்தான் தன்னளவில் சுதந்திர

[திரு. கே. ஏ. மதியழகன்] [9th March 1970

மான பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாக இருக்க முடியும்? பாங்குகள், செலாவணி, கரன்சி, ஃபிஸ்கல் பாலிசி போன்றவைகளை எல்லாம் நிர்ணயிக்கிற பொறுப்பு இன்றுவரை அவர்களிடமே தான் இருக்கிறது. எந்தக் காரியத்திலே அவர்கள் மாநிலங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு செய்கிறார்கள்? நாட்டில் பருத்தி இறக்குமதி செய்வதை நிறுத்திவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். நூற்பாலைகளுக்கு ஆலைச் சொந்தக்காரர்கள் எப்படி நூல் வாங்குவார்கள்? உடனே துணி விலை ஏறும். உடனே கோஷம் போடலாமா என்று திரு. எத்திராஜுலு அவர்கள் வந்துவிடுகிறார்கள். டெல்லியிலே இருக்கிறவர்கள் கடைப்பிடிக்கும் "பிரைஸ் பாலிசி" காரணமாக, அவர்கள் எடுக்கும் சில முடிவுகள் காரணமாக, இங்கே இருக்கிற விலைவாசி பாதிக்கப்படுகிறது என்பதை அவர்கள் உணர்ந்து செயல்படுவதில்லை. மற்ற மாநிலங்களிலே எல்லாம் கூட மக்களுடைய நம்பிக்கையைப் பெற்ற அரசாங்கங்கள் இருக்கின்றன. அவர்களையும் கேட்டுக்கொண்டு இப்படிப்பட்ட விவகாரங்களில் முடிவெடுப்போம் என்ற எண்ணம் டெல்லியிலே இருப்பவர்களுக்கு இல்லை. எனவே தான் கொள்கையை வகுக்கிற அதிகாரம் மாநிலங்களுக்கும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் "பெடரல் எகனுமிக் பிளானிங் கவுன்சில" ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னோம். அதை நல்ல அளவில் ஆதரித்ததற்காக நான் இங்கே நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதைப் போலவே நம் பெரு மதிப்பிற்குரிய எதிர் கட்சித் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நான் நன்றிதெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பைனான்ஸ்—நிதிக் கமிஷன் என்பது எதற்காக இருக்கிறது என்றால், எங்கள் பகுதியில் கிராமங்களில் சொல்லுவார்கள்—கெட்டுப் போன குடும்பத்திற்கு உதவி செய்வது என்று—அப்படி நிதிப் பற்றாக்குறை உள்ள மாநிலங்களுக்கு உதவி செய்வதற்காக என்று ஏற்பட்டது. இங்கே திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் இல்லை, அவருக்குத் தெரியும். அவருடைய பாஷையில் சொல்ல வேண்டுமென்றால், நொடித்துப் போன குடும்பத்திற்குக் கொஞ்சம் கையைத் தூக்கி விடுவது என்று சொல்லுவார்கள்.
6-00 p.m. அப்படி எந்த மாநிலங்களுக்காவது நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டால், ரெவின்யூ அக்கவுண்டில் அதிகப்பணம் போட்டு, சரிக்கட்ட வேண்டும் என்பதற்காகப் போடப்பட்டதுதான் இந்தக் கமிஷன். வருஷா வருஷம் 1300 கோடி, 1400 கோடி என்று மத்தியப் பிரதேசத்தின் கணக்கிலும், உத்திரப் பிரதேசத்தின் கணக்கிலும், அதிகமாகிக் கொண்டு வந்திருக்கிறது. ஆனால் இங்கே இருப்பதே மோசமாகக் குறைந்து கொண்டே வந்து கொண்டிருக்கிறது. 36 கோடி ரூபாய் வருவது தற்போது 23 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்று நான் கொஞ்சம் நாசூக்காகச் சொன்னேன். ஆனால் பக்கத்திலே இருக்கிற கேரள நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதை திரு. இராகவானந்தம் அவர்கள் இங்கே படித்துக் காட்டினார்கள். நிதிக் கமிஷன் செய்திருப்பதைப் பார்த்தால், திராவிடத்திற்கே, தென்னகத்திற்கே, தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களுக்கு ஓர வஞ்சனையாகவும், இந்தி பேசுகிற வட மாநிலங்களுக்குப் பாரபட்சமாகவும், அது நடந்துகொண்டிருக்கிறது என்று நிதி நிலை அறிக்கையிலேயே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது மிகவும் கவனத்திற்குரியது. இந்த அநீதி போக்கப்பட வேண்டும். அரசு ஊழியர்களுக்கு எல்லாம், நாம் சிறப்பு ஈட்டுப் படி கொடுத்திருக்கிறோம். ஏதோ அம்மையார் அவர்கள் நிதி அமைச்சர் என்ற முறையில் டெல்லியில் இருந்து கொண்டு மாநிலங்களுக்கு 126 கோடி கொடுக்கப் போவதாகத் தெரிகிறது. அதைப் பெறுவதற்காக நம் முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்லும்போது வற்புறுத்த இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை இந்த மாமன்றம் ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதே மாதிரியான விஷயம் தான் கடன்விவகாரமும். நான் முன்பே சொல்லியிருக்கிறேன். மத்திய சர்க்காரிலேயிருந்து, நாம் 140 கோடி ரூபாய் பெறுகிறோம் என்றால் அதை 4, 5 ஆண்டுகள் கழித்து 160 கோடியாகத் திருப்பித் தரவேண்டும் என்றால், இது என்ன கணக்கு என்று தான் எனக்குப் புரியவில்லை. டெல்லியில் நடந்த



9th March 1970] [திரு. கே. ஏ. மதியழகன்]

மாநாட்டிலேயே நான் ஒரு முறை இதுபற்றிக் கேட்டேன். இது என்ன மத்திய அரசாங்கத்திலேயிருந்து மாநில அரசாங்கங்களுக்குக் கிடைக்கிற உதவியா அல்லது மாநில அரசாங்கங்களிலிருந்து மத்திய அரசாங்கத்திற்குக் கிடைக்கிற உதவியா என்று கேட்டேன்.

"Whether it is assistance from the Centre to the State or assistance from the State to the Centre"

என்று கேட்டேன். இது ஒன்றும் வேடிக்கையான கேள்வியல்ல, வேதனையான கேள்வி. இன்றைக்கு அப்படித்தான் இருக்கிறது. 140 கோடி ரூபாய் மத்திய அரசாங்கத்திடமிருந்து கடன் பெற்று 5 ஆண்டுகாலத்திலே 160 கோடி ரூபாயாகத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்றால் எப்படித் திரட்டுவது? இப்படிக் கொடுத்தால், இங்கே உறுப்பினர்கள் கேட்கிற காரியம் எல்லாம் எப்படி நடக்கும்? கிராமங்களுக்கு ஒவ்வொன்றும் வேண்டும் என்று கேட்கிறார்கள். அதையெல்லாம் எந்தப் பணத்தைக் கொண்டு செய்வது? அதுவும் மத்திய சர்க்காரின் சொந்தப் பணமா என்றால், அதுவும் இல்லை. வெளியே இருப்பவன் இனமாக, யாசகமாகக் கொடுத்தது. அதையெல்லாம் நம் மீது கடன் என்று சுமத்துகிறார்கள். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்திற்காக நாம் வாங்கியக் கடன் 60, 70 கோடி இருக்கிறது. 11 வருஷமாக அந்தக் காரியம் முடிவடையாமல் இருக்கிறது. நம்முடைய திரு. சுப்பிரமணியம் காலத்திலே பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் ஆரம்பமானது. அந்தக் காலத்திலேயிருந்து இந்தப் புண்ணியவான்கள் எல்லாம் போன பிறகும் முடியவில்லை. அதற்குப் பிறகு திரு. காமராஜர் வந்தார். அவருக்குப் பிறகும் ஒருவர் வந்தார். இப்படியெல்லாம் ஆனபிறகு இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் காலத்தில் தான், நாம் ஒரு அனுகூலம் பெற்றிருக்கிறோம். இது வரை அணையைக் கட்டி, வாய்க்காலை வெட்டிவிட்டு, திருமங்கலத்திற்குத் தண்ணீர் போய்ச் சேர்ந்ததா என்றால், 11 வருஷமாக இல்லை. கேரளாக்காரனிடம் சரியான ஒப்பந்தம் செய்துக் கொள்ளாத காரணத்தால் 11 வருஷகாலமாக இதிலே தண்ணீர் வரவில்லை. இந்தத் திட்டத்தை யொட்டி மின்சாரத்திற்கு என்று சோலையாறுத் திட்டம் என்று போட்டு அதற்கு ஒரு 10 கோடி ரூபாய் ஒதுக்கி செலவழித்திருக்கிறார்கள். $2\frac{1}{4}$ லட்சம் ஏக்கர் பாசனம் செய்ய முடியும் என்று அப்போது கடன் வாங்கியிருக்கிறோம். அது வாய்காலாகி, அணைக்கட்டாகி, இன்னமும் தண்ணீர் திறந்து விடப்படாமல் இருக்கிறது. 10 வருஷத்திற்குள் இப்போது மத்திய அரசாங்கத்திடமிருந்து நோட்டீஸ் வந்துவிட்டது, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று. இதற்கெல்லாம் ஒரு முறையில்லையா? எதற்காக வாங்கிய கடன் இது? 10 கோடி ரூபாய் செலவழித்து சோலையாறு திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதிலே என்றைக்குத் தண்ணீர் வருவது? என்றைக்கு மின்சாரம் வருவது? இதே போல் தான் கனடா நாட்டுக்காரன் கொடுத்த மின்சார சாதனங்களுக்கு இன்றைய தினம் மத்திய சர்க்கார் நம்மிடம் கடன் என்று சொல்லி பணம் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். குந்தாத் திட்டத்திற்காக கனடா நாட்டுக்காரன் சில இயந்திரங்களை, டர்பைன்களைப் போன்ற இயந்திரங்களை யாசகமாகக் கொடுத்தான் இவைகளை எல்லாம் கணக்கில் வரவு வைத்துக் கொண்டு இப்போது வட்டி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கேட்டால், உங்களுக்குக் கடனாகத்தான் கொடுத்திருக்கிறோம் என்கிறார்கள். அதைப் போலவே தான் பொற்கொல்லர்களுக்குக் கடன் கொடுத்து விட்டு, அதையெல்லாம் இப்போது நம்மீது சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். மொரார்ஜி தேசாயை யார் இதைச் செய்யச் சொன்னது? செய்ததெல்லாம் செய்துவிட்டு, இன்றைய தினம் அந்த வாழ்விழந்த பொற்கொல்லர்கள் எல்லாம் இந்த மாளிகையின் முன்னாலே, முதலமைச்சர் முன்னாலே, கோஷம் போடுகிறார்கள் என்றால், இதற்கெல்லாம் யார் பொறுப்பு? இந்தக் கடனெல்லாம் திரும்பி வருகிற கடனா? வராத கடன்கள் என்று எழுதப்படவேண்டியவைகள் தானே. உங்களுடைய பிற்போக்கான சில முடிவுகளால், இன்றைய தினம் அவர்கள் தங்கள் வாழ்க்கையை இழந்து தங்கள் உழைப்பை இழந்து திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித்தொகையையெல்லாம் நம் கணக்கில்

எழுதிக்கொண்டு நம்மைத் திருப்பிக் கொண்டு என்கிறார்கள். இந்த நிலை எல்லாம் இன்று வரை இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், வெளிநாடுகளிலிருந்து சாதாரணமாக 50 வருஷக் கடன் என்ற அளவில் ஒரு நாமினல் இண்டரஸ்டுக்கு வாங்கி, நமக்கு ஏதோ மார்வாடிக் கடைக்காரன் வட்டிக்குக் கொடுப்பதைப் போல் கொடுக்கிறார்கள். இங்கே இருக்கிற திரு. கிருஷ்ணசாமி நாயுடு கேட்கிறார், "விவசாயிக்கு கடன் யார் தருவது ?" என்று- அரசாங்கம் என்றால் என்ன ? எனவே தான் இந்த நிலைமைகளை எல்லாம் சரிவர ஆராய்வதற்கு என்று—கடன்களை ஆராய்வதற்கான குழு என்ற அளவில் "டெட் கமிஷன்" நியமிக்க வேண்டும் என்பதையும் இந்த மாமன்றம் நல்ல வகையிலே வரவேற்றதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இன்னும் தகராறு இருக்கிறது. "கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது" என்று சொல்லுவார்களே, அதைப் போல் தான் இன்றைக்கு நிலைமை இருக்கிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ரூ. 24,000 கோடிக்கு போடப்பட்ட திட்டம் இன்னும் அதிகமாகிக் கொண்டுதானே போகிறது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ரூபாய் 420 கோடிக்கு ஒரு திட்டம் போட்டால் 250 கோடிக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். இன்றைக்கு ரூ. 202 கோடி ஆகிவிட்டது. சேலம் இரும்பாலையைக் கொடுங்கள் என்றால், அந்த 202 கோடியிலேயே முடித்துக் கொள்ளுங்கள் என்கிறார்கள். மொத்தமாக 502 கோடிக்குள்ளே உங்களுடைய திட்டத்தை முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். எப்படி இந்த மாநிலத்தில் பொருளாதார அபிவிருத்தி செய்ய முடியும் என்பதையே நினைத்துப்பார்க்க முடியவில்லை. இதனால் சேலம் இரும்பாலை, சேதுசமுத்திரத் திட்டமெல்லாம் காலம் கடந்து போகிறது. இந்த மாமன்றத்தில் ஒன்று சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மூன்றாண்டு காலம் இந்த மாநிலத்தினுடைய நெருக்கடியான நேரம் என்பதில் சந்தேகமில்லை. ஒரு பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது என்பதால் அல்ல. உணவு நெருக்கடி நாளுக்கு நாள் பெருகி வந்த நேரத்தில் எப்படியிருந்தது ? இங்கே இருந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் உணவுப் பிரச்சினையைச் சமாளிக்கவில்லை, அதனால்தான் அவர்களுக்குப் பாதி ஓட்டு கிடைத்ததாக எதிர்க் கட்சியினர் சொன்னார்கள். எப்படி வைத்துக்கொண்டாலும் அபாயகரமான நிலையில் பஞ்சமும் பட்டினியும் நிறைந்த நிலையில்தான் வைத்திருந்தார்கள். நான் உணவுத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற இரண்டாவது நாள் உணவுதானியக் கிடங்கைப் பார்க்கும்போது, இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குச் சென்னை மாநகர மக்களுக்குக் கொடுக்கக்கூடிய அளவில்தான் அங்கே இருந்தது. அப்படிப்பட்ட நிலை வேகமாக மாறவேண்டுமென்று உறுதியான, தெளிவான உணவுக் கொள்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கித் தந்தார்கள். அதன் மூலமாக இந்த மாநிலத்தில் கடந்த மூன்று ஆண்டு காலமாக 25 லட்சம் டன், விவசாயிகளுக்கு சிரமம் இல்லாத வகையில் கொள்முதல் செய்யப்பட்டது. $1\frac{3}{4}$ கோடி மக்களுக்குப் பல்வேறு வகையில் விநியோகம் செய்யும் வாய்ப்பு இருந்தது. கள்ளக் கடத்தல்காரர்கள் பதுக்காமல், தரகர்கள் விலை ஏற்றாமல், உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. விலை ஏறிவிட்டதாகச் சொல்லுகிறோம். கடந்த ஆண்டு சுதந்திர தினத்தன்று கவர்னர் பேசிய போது பப்ளிக் அட்மினிஸ்ட்ரேஷனில் மட்டுமல்ல, சாதாரண வெளிச்சந்தையில் கூட இந்திய பூபாகத்தில் எந்த மாநிலத்திலும் அரிசி விலை இவ்வளவு குறைவாக இருந்ததில்லை என்று பாராட்டினார்கள். உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இருக்கிற பெரிய வழி உணவு உற்பத்தியை அதிகரிப்பது தான். வயல்களிலும் தோட்டங்களிலும் பசுமைப் புரட்சி மூலமாகத்தான் நெருக்கடியைச் சமாளிக்கலாம் என்று திட்டமிடப்பட்டது.



**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** கடந்த மூன்றுவருஷ காலத்தில் தமிழ் நாட்டில் பெரும் நெருக்கடி இருந்தது என்பது உண்மை. வறட்சி இருந்தது உண்மை. கஷ்டம் மிகுந்திருந்தது உண்மை. ஆனால் வறட்சி ஏற்படுவதற்கு முன் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி ஏற்றுக் கொள்வதற்கு முன்னால், தமிழ் நாட்டில் இருந்த நியாயவிலைக் கடைகளுக்கும், இந்த வறட்சி காலத்தில் வந்த நியாயவிலைக் கடைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை, உணவு அமைச்சர் அவர்கள் பதிலில் சொன்னார்கள். அப்போது எவ்வளவு கிராமத்தில் விநியோகிக்கப்பட்டதோ அதை விட அதிகமாக விநியோகிக்கப்படவில்லை. வேறு பல உணவுப் பொருள்களைச் சேர்த்துக் கணக்குக் கொடுத்தார்கள். வறட்சிப் பகுதியில் நியாயவிலைக் கடைகள் இல்லாத பகுதிகள் இருந்தன. தீபாவளி, பொங்கல் போன்ற நாட்களில் கூட அரிசி இல்லை என்று சொன்னார்கள். இதை மறுக்க முடியாது.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அவர்களுடைய ஊரில் இல்லை 6-10 p.m.
என்று சொல்கிறார்கள்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** ராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சிப் பகுதியான எல்லா இடங்களிலும் நியாயவிலைக் கடைகள் வைத்துக் கொள்ளப்பட்டன. பல இடங்களில் கலெக்டர் வற்புறுத்தி அந்தக் கடைகளை அமைத்திருக்கிறார்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ராமநாதபுரம் மக்களைப்பற்றி நமக்கும் தெரியும். ராமநாதபுரம் மக்கள் இந்த அரசின் மீது எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். நான் பொதுவான நிலையை சொல்கிறேன். குறை சொல்வதற்காக இல்லை. இந்த அரசாங்கம் மேற்கொண்டிருந்த தைரியமான, தீவிரமான கொள்கையைக் குறித்துதான் சொல்கிறேன். உணவுப் பிரச்னையில் தீர்வு கண்டிருக்கிறோம் என்றால், வயல் வெளிகளிலே நாம் ஏற்படுத்திய புரட்சிகரமான நடவடிக்கைகள்தான் அதற்குக் காரணம். நெளரோபின் ரக விதையின் மூலமாக அமோக விளைச்சலைக் கண்டிருக்கிறோம். 24 லட்சம் ஏக்கரில் உயர்ரக விதைகளின் மூலமாகப் பயிரிடுகின்ற தன்மை வந்திருக்கிறது. மிகுந்த பெருமையோடு சொல்கிறேன். கடந்த ஆண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்களை மதுராந்தகம், செங்கற்பட்டு, செம்பரம்பாக்கம் பகுதிகளுக்கு அழைத்துச் சென்றார்கள். பெரிய மைதானமாக இருப்பதைக் காட்டினார்கள். சென்னை நகரமே முழுகிவிடும் என்று சொல்கிற அளவுக்கு நீர்த்தேக்க அளவுள்ள அந்த செம்பரம்பாக்கம் ஏரி மிகப்பரந்த ஏரி. இந்திரா அவர்களிடம் முதலமைச்சர் அவற்றைக் காட்டியபோது இது ஏதோ விளையாட்டு மைதானமாக இருக்கிறதே தவிர குளம் என்று நம்பவே முடியவில்லை என்று அம்மையார் சொன்னார்கள். அந்த அளவுக்கு வறட்சியாக இருந்த மாவட்டத்தில் ஐ. ஆர் 8 என்ற புது ரக நெல் மூலமாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் 2 லட்சம் ஏக்கரும், வட ஆற்க்காடு மாவட்டத்தில் $1\frac{1}{2}$ லட்சம் ஏக்கரும், தென்னார்க்காடு மாவட்டத்தில் $1\frac{1}{4}$ லட்சம் ஏக்கரும்,பயிரிடப்பட்டு இன்றைக்குத் தானியங்கள் குலுங்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டு மாதங்களில் இந்த மூன்று மாவட்டங்களிலும் நல்ல விளைச்சல் நாம் நீக்கியிருக்கிற உணவுக் கட்டுப்பாட்டின் வெற்றியை உறுதியாக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். நாம் மேற்கொண்டிருக்கிற ரசாயன உர விநியோக முறையில் 85 ஆயிரம் டன் தான் அப்போது இருந்தது. இன்றைக்கு 1 லட்சத்து 33 ஆயிரம் டன் நைட்ரஜன் ஃபெர்டிலைசர் விநியோகிக்கும் நிலமை ஏற்பட்டிருக்கிறது. ஆகாய விமானங்கள் மூலமாக மருந்துகளைத் தெளிக்கிற விதத்தில், 28 ஆயிரம் ஏக்கரில் துவங்கி, இன்றைக்கு 2 லட்சம் ஏக்கர் வரையில் இந்த ஆண்டில் விமான மூலம் பெஸ்டிசைடுகள் தெளிக்கப்படுகின்றன. வருகிற ஆண்டில் 10 லட்சம் ஏக்கரில் தெளிப்பதற்கான பெரிய காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. மன்றத்தில் பொதுவாக வேளாண்மைத் துறைக்கும் நீர்ப்பாசனத் துறைக்கும் பணம் அதிகம் செலவு செய்யவில்லை என்று சொன்னார்கள். இங்கே அல்ல, அந்த மன்றத்தில். இரண்டையும்

[திரு. கே. ஏ. மதியழகன்] [9th March 1970

சேர்த்தே சொல்கிறேன். இப்போது வேளாண்மைத் துறைக்கும், நீர்ப்பாசனத் துறைக்கும் இந்த ஆண்டு 22½ கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். அது குறைவு என்று சொன்னார்கள். இப்போது பசுமைப் புரட்சிக்குச் செய்யும் செலவுகளைப் பார்க்க வேண்டும். கூட்டுறவு இயக்கங்கள், தனியார் பாங்கு நிறுவனங்கள் மூலமாக ஏராளமான நடவடிக்கைகளில் விவசாயத் துறையில் ஈடுபடுகிறோம். உதாரணத்திற்குச் சொல்கிறேன். இந்த ஆண்டில் விவசாயத் துறைக்கு மட்டும் "ஷாட்-டர்ம்", "மீடியம்-டர்ம்" "லாங்-டர்ம்" லோன் என்ற வகையில் "அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்" மூலமாகக் கொடுத்திருக்கிற பணம் ரூ. 88 கோடி. விவசாயத் துறைக்கு, நீர்ப்பாசனத் துறைக்கும் அரசாங்கக் கணக்கில் 22 கோடி ரூபாய் என்றால், அத்துடன் இந்தக் கணக்கையும் கூட்டிக்கொள்ள வேண்டும். ரூ. 88 கோடியையும் ரூ. 22 கோடியையும் சேர்க்க வேண்டும். மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்வேன். இந்த ஆண்டு விவசாய அபிவிருத்திக்காக 22-ம், 88-ம் சேர்த்து ரூ. 110 கோடி அளவுக்கு ஆகிறது. குறுகிய காலக்கடனுகை ரூ. 67 கோடி, மத்தியகாலக் கடனுகை ரூ. 16 கோடி, ஆக 83 கோடி "அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்" மூலமாக பம்ப் செட்டுகள் வைக்கவும். டிராக்டர்கள் வாங்கவும், கிணறுகள் வெட்டவும் கொடுத்தது ரூபாய் 5 கோடி, இவை சேர்த்து ரூ. 88 கோடியும் தனியாக ஒதுக்கப்பட்ட ரூபாய் 22 கோடியும் சேர்த்தால் ரூ. 110 கோடி செலவு செய்யப்பட்டிருப்பது தெரியும். 1967–68-ல் ரூ. 44 கோடி சர்க்கார் கணக்குக்கு வெளியே ஆனது. 1968–69-ல் ரூ. 60 கோடி, 1969–70-ல் இந்தத் துறையில் 78 கோடி ரூபாய் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. குறுகியக் காலக் கடனுகை ரூ. 62 கோடி, நீண்டகாலக் கடனுகை ரூ. 14 கோடி, "அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்" மூலமாக 1·25 கோடி ரூபாய் பல்வேறு வகையில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கம் மிகுந்த ஆர்வத்தோடு விவசாய அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் சொல்லிக் கொண்டு வந்த முயற்சிகளின் விளைவாக இந்த ஆண்டிலே நாம் உணவுக் கட்டுப்பாட்டை எடுக்கும்படியான நிலைமைக்கு வந்தோம். அதை இந்த மன்றம் பாராட்டியதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அது மேலும் நல்ல முறையிலே அமைகின்ற வகையிலே எல்லோரும் உற்சாகத்தோடு அரசாங்கத்தோடு ஒத்துழைத்து சமூக விரோதிகள், வர்த்தக சூதாடிகள் என்பவர்களால் சில இடங்களிலே இருக்கின்ற நெருக்கடியைப் பயன்படுத்தாமல் இருக்க, இந்த அரசாங்கம் நடவடிக்கைகளை ஆதரிக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து, நில உச்சவரம்பைப் பற்றிச் சொன்னார்கள். நான் அதிகம்சொல்லத் தேவையில்லை. நில வரம்புபற்றி இந்தஅரசாங்கத்திற்கும் கட்சிக்கும் ஒரு கொள்கை உண்டு. அதற்கு எஜமானர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னென்ன தோன்றுகிறதோ அதற்காக இந்த அரசாங்கம் அமையவில்லை. அவர்களுக்கு வாக்குப் போட்ட மக்களின் ஆணையை நிறைவேற்றத்தான் வந்திருக்கிறோம். சில பேர் கேட்டார்கள். இது சட்டப்படி செல்லுமா என்று. சில பேர் சொன்னார்கள். இப்படியெல்லாம் தாராளமாக இருக்க வேண்டுமென்று. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுகூட எனக்கு மன நிறைவு தருவதாக இல்லை. ஏதோ சங்கடமான காரியம் வந்து விட்டது போல், அவர்களுடைய தொனி இருந்ததே தவிர, அவர்களுடைய சோஷலிசப் பாணிக்கு, பெருந் தலைவர் காமராஜர் சொல்வதற்கு, ஏற்றதாக இல்லை. நிலச் சீர்திருத்தக் காரியங்கள் என்பவைகளை முன்னாலே செய்தவர்கள் சரியாகச் செய்ய வில்லை. ஓட்டை உடைசல்கள் ஏற்பட்டு விட்டன. பல ஊனங்கள் ஏற்பட்டுவிட்டன. எந்த நோக்கத்திற்காகச் சீர்திருத்தம் வந்ததோ அது நிறைவேறவில்லை என்பதுதான் இருக்கின்ற நிலவரம். இதை அனுசரித்து இன்றைக்கு இருக்கிற நமது அரசு ஒரு உறுதியான, திட்டவட்டமான முடிவு எடுத்தது. இது ஒன்றும் புதி தல்ல. திடீரென்று வந்து விட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் இது ரொம்பத் தெளிவாகத்தான் இருக்கின்றது.



9th March 1970]

* **திரு. கே. ராஜாராம்:** தலைவர் அவர்களே, இதற்கு விளக்கம் சொல்ல விரும்புகிறேன். 1961-ல் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் தான் என்று உச்ச வரம்பு கட்டிய பிற்பாடு, அரசாங்கம் 65,000 ஏக்கர் வரை கிடைக்கும் என்று வெளியிட்டார்கள். இன்றுவரை தி.மு.க. அரசாங்கம் ஏற்பட்ட பிற்பாடு, 24,572 ஏக்கரா தான் கைப்பற்றப்பட்டிருக்கிறது. இதிலும் 8,120 ஏக்கரா தான் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. கைப்பற்றப்பட்ட ஏக்கர்களிலே கூட 16,000-க்கு மேல் விநியோகிக்கப்படாமல் அரசாங்கத்தின் கைவசம் இருக்கிறது. இந்த நிலைமையில் ஏற்கனவே இருப்பதையே சரிவர நிறைவேற்றாத போது திடீரென்று மேலும் உச்ச வரம்பைக் குறைத்து நிலங்களை ஏற்றுக் கொள்ளலாமா? இதையெல்லாம் முடித்து விட்டுச் செய்யலாம். "ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்" கொடுக்கலாம் என்று சட்டம் கொண்டு வருவதற்குள்ளே முடிவு செய்துகொள்ள வேண்டும். "அர்பன் லேண்ட் சீலிங்" வந்து விட்டால், ஜனங்களுக்குத் திருப்தியாக இருக்கும். நான் இந்தக் கொள்கையை வரவேற்கிறேன் என்று தான் சொன்னேன். மக்களுக்கு, சமுதாயத்திற்கு நியாயம் வழங்க வேண்டும். ஒரே தாப்பினர், ஒரே பகுதியினர் மட்டும் வாட்டப் பட்டுக் கொண்டிருப்பது நியாயமல்ல. எல்லா வகையினருக்கும் நியாயம் வேண்டும் என்று சொல்கிறேனே தவிர, இதை எதிர்க்கவில்லை.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போது 15 ஸ்டேண்டர்ட் ஏக்கரா என்று உச்ச வரம்பை ஆக்கி யிருப்பதில், ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட நிலம் அரசாங்கத்தால் கைப்பற்றப்படும் என்கின்ற நிலைமையை அதிகாரிகள் எங்களுக்கு விளக்கியிருக்கிறார்கள். இப்பொழுது 30-லிருந்து 15-ஆக ஆக்கியிருக்கின்றோம். அனேகமாக எல்லோரும் 30, 30 என்றே பிரித்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில், 15, 16, சிலர் 20 ஏக்கரா என்றும் வைத்திருக்கிறார்கள். இதிலேயே ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கரா கிடைக்கிறது என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆயிரம், ஐநூறு,, எண்ணூறு என்று வைத்திருந்தவர்கள் இருந்த போதிலும், 30 ஏக்கரா என்ற சீலிங் வந்த நேரத்தில், ஏன் 65,000 ஏக்கர் தான் வந்தது என்று எண்ணிப் பார்க்கிற நேரத்திலே தான், புரட்சிகரமான சட்டங்கள் அவசரமாகவும், திடீரென்றும், வர வேண்டும் என்ற உண்மையை எதிர்க் கட்சித் தலைவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள். 6–20 p.m.

**திரு. கே. ராஜாராம்:** புரிந்து கொண்டிருக்கிறேன். அரசாங்கம் வியாபாரம் செய்யப் போவதில்லை. மக்களின் நிலத்தைப் பிடுங்கிக் கொள்வது என்பது அரசாங்கத்தின் கொள்கையல்ல. சமுதாயத்தில் சோஷலிசப் பாணியில் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறோம். அரசாங்கமே நிலத்தை வாங்கிக் கொண்டு திருப்பிக் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களே பிரித்துக் கொடுத்து விட்டார்கள், இது தான் வித்தியாசம். வேறொன்றுமில்லை. நாம் தான் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று என்ன இருக்கிறது?

* **மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** பிரித்து யாருக்குக் கொடுத்தார்கள் என்பது தான் பிரச்னை. அவர்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்தார்களேயல்லாமல், ஏழை எளிய மக்கள் யாருக்கும் கொடுத்துவிடவில்லை. அவர்கள் பிரித்துக் கொடுத்திருப்பதெல்லாம் மகன், மகள், பேரன் இப்படிப்பட்ட முறையிலே தான். சொந்தக்காரர்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். பினாமி பத்திரங்களை எழுதி வைத்துக்கொண்டு, அவர்களே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. ராஜாராம்:** அவர்களும் 30 ஏக்கரா வரையிலே தான் கொடுத்திருக்க முடியும். மாமன், மச்சினன், மருமகன் எல்லாம் இந்த நாட்டுப் பிரஜைகள் தான். அவர்களுக்கு 20 ஏக்கரா இருந்தால், 10 ஏக்கர் கொடுப்பதில் என்ன தவறு? 500 ஏக்கரா வைத்திருந்தால், 30 ஏக்கரா வைத்துக்கொண்டு, மிச்ச நிலத்தை அரசாங்கம் பிரித்துக் கொடுக்கும் வரை காத்திராமல், தானே பிரித்துக் கொடுத்து விடுவதில் என்ன தவறு என்று கேட்கிறேன்.

**திரு டி. கே. சுப்பையா:** முதலமைச்சர் "ஏழை" என்று சொன்னார்கள் ஏழை யார்? இன்றைக்கு நீங்கள் நிலத்தைப் பிரித்துக் கொடுத்தால் கூட, அவன் விற்று விட்டால், நாளை மறுநாள் அவன் ஏழை. நிலம்

[திரு. டி. கே. சுப்பையா] [9th March 1970

வாங்கக் கூடியவர்கள் எப்போதும்ஏழையாக இல்லாமல் இருப்பர் என்று இந்த அரசு உறுதி செய்யுமா? ஆகையினாலே, ஏழை என்பவர் நிலத்தை வாங்கி விட்டால், இனிமேல் விற்கக் கூடாது என்ற நிலையை இந்த அரசு உருவாக்குமா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இலக்கணப்படி, வடபாதி மங்கலத்தார், மன்றாடியார் இவர்கள் தான் ஏழைகள்.

**திரு. கே. ராஜாராம் :** மூன்று வருடமாக அந்த 30 எக்கரா நில உச்ச வரம்பு கட்டியது போக மீதி நிலத்தைக் கைப்பற்றாமல் இருக்கிறோம். மேற்கொண்டு புதிய சீர்திருத்தத்தை விஸ்தரிக்க ஆரம்பித்திருக்கிறோம் என்று தான் நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** 60,000 எக்கரா என்பது வாஸ்தவம். கொடுத்தது என்பதும் வாஸ்தவம். அவர்கள் மந்திரியாக இருந்தவர்கள். அவர்களுக்குத் தெரியும். அவர்களுடைய பண்பு, முறைகள் எல்லாம். மிச்சம் இருப்பது ஒப்படை செய்யப்படவில்லையே தவிர, பல குத்தகைக்கு லீசாக கொடுக்கப்பட்டிருக்கிறது. பல தகராறுகளினாலே ஒரு பகுதி கொடுக்கப்படவில்லை. சில பகுதி தாவாவிலே இருக்கிறது. ஆனால் அந்தக் காரணத்தினாலே இது வரக் கூடாது என்பது சரியானதல்ல. அந்தச் சட்டம் சரியாகச் செய்யப்படவில்லை என்பது தான் சமுதாயத்தின் குற்றச்சாட்டு. தி. மு. கழகம் இன்றைக்கு செய்திருக்கின்ற நிலச் சீர்திருத்தங்களினாலே எல்லோருக்கும் நிலம் வந்துவிடும் என்பது அல்ல. எல்லோரும் மிராசுதாரர்கள் ஆகிவிடுவார்கள் என்பது அல்ல. ஒரு முக்கியமான சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே இவைகளை சம தர்மத்திற்கான வாய்ப்பாகத் தான கருதுகிறோம். எங்களுடைய கொள்கை பதினைந்தா, இருபதா என்பதல்ல. இவைகளுடைய மிக முக்கியமான அம்சம் இது. இருக்கிற நிலைமையிலே இதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் காரியங்களை இன்றைக்கே மேற்கொண்டிருக்கிறது. குதிரை ஓடிய பிறகு லாயத்தைப் பூட்டி விட்டால், ஒன்றும் இருக்காது. ஆகவே கண்டிப்பாக விவசாயிகளுக்கு, உழவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று நம்புகிறோம். பணக்காரர்கள் இந்த மாதிரியான சமாச்சாரத்திலே இல்லை என்று சொல்லிவிட மாட்டார்கள் என்று நினைக்கிறோம். பழைய கோட்டை பட்டக்காரரும், வலிவலம் தேசிகரும், வடபாதி மங்கலத்தாரும்—இந்த மாதிரி இருப்பவர்கள் நிலங்களுக்குரிய காவலர்கள் என்ற முறையிலே சொல்கிறேன். இதற்காகத் தெளிவாக, திட்டவட்டமாக மக்களுக்குச் சொல்லி விட்டு வந்தோம். திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலேயிருந்து நான் கொடுக்கின்றேன். இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே தான் நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறேன். சுருக்கமாகச் சொல்லுவதற்காகத் தான் சொல்கிறேன். ஒரு சமுதாயத்திற்குப் பொருளாதார மாறுதல் செய்கின்ற நேரத்திலே அந்த நிலங்களை அனுபவித்தவர்களெல்லாம் விட்டுக் கொடுக்க நடுங்குகிறார்கள். ஆனால் ஏழை எளியவர்களைத் தவிர, மிகச் சாதாரணப் பாட்டாளிகளைத் தவிர, அவர்கள் நலன்களைத் தவிர, கொள்கை வரையறை, சீலிங் ஒன்றுமே கிடையாது. அது தான் இந்தக் கட்சிக்கு சீலிங் என்ற முறையிலே அதற்கான நலன்களெல்லாம் பாதுகாக்கப்படும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். முற்போக்கான திட்டம், முற்போக்கான திட்டம் என்று விளம்பரம் பெற்ற நிலச் சீர்திருத்தச் சட்டம் சத்தற்றதாக ஆகிவிட்டது. அண்ணா அவர்கள் போன தேர்தல் அறிக்கையிலே, 1967-இல், இந்த மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை மக்கள் முன்னேற்றக் கழகத்திடம் ஒப்படைத்ததற்கு முன்னாலே, பொது மக்களுக்குத் தந்துவிட்டு வந்த வாக்குறுதி.........

MR. CHAIRMAN : We have got two more urgent Bills to be disposed of.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Shall I conclude by 6-45 p.m.?



9th March 1970]

MR. CHAIRMAN : The Hon. Minister has already very elaborately dealt with all the important points.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : In that case I shall conclude in a minute or two, Sir.

காங்கிரசைக் கைப்பற்றி ஆட்டிப்படைக்கும் நிலச்சுவான்தார்கள் நில உச்ச வரம்புச் சட்டத்தை உருகுலைத்துவிட்டனர். அவைகளைத் தடுத்திடும் ஆற்றல் இப்போதைய காங்கிரசுக்கு இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அந்தச் சட்டத்தில் உள்ள ஓட்டைகளை அடைத்து, அந்தச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ளும் நிலச்சுவாந்தார்களைக் கண்டுபிடித்து, அவர்கள் செய்து கொண்டிருந்த போலித்தனத்தைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க இருக்கிறது. இந்த 15 எக்கர் சீலிங் என்பது ஒரு முக்கியமான அம்சமாகும். மற்றவற்றைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்ற அமைச்சர்களோடும் மற்றவர்களோடும் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலச்சுவாந்தார்கள் செய்துகொண்ட ஏற்பாட்டினுடைய போலித்தனத்தைக் கண்டு ஆராய்ந்து, அதைத் தடுத்து நிறுத்தும் சீர்திருத்தம் தான் இந்த நிலச் சீர்திருத்தம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயச் சொத்துக்கள் மீதான வரியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். விவசாயச் சொத்துக்கு வரி போட்டதை இந்த அரசாங்கம் ஒத்துக் கொண்டது என்று கருதமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். விவசாயச் சொத்துக்களின் மீது வரி போடுகின்ற அதிகாரமே மத்திய அரசாங்கத்திற்குக் கிடையாது. அது சட்ட விரோதம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசாங்கம் வரி போடுகின்ற இனத்திலேயே இது வராது. அது நம்மீது செய்கின்ற "என்கிரோச்மெண்ட்". அது நம் மீது திணிக்கப்படுகின்ற ஆக்கிரமிப்பு. அது நம் மீது செய்யப்படுகின்ற ஊடுருவல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அது நாம் வரி விதிக்கின்ற இனத்தின்மீது வருகிற தடை. அவர்களுக்கு அதிகாரமே இல்லாத ஒரு காரியத்தில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது எங்களது கருத்து. "டேக்ஸ் ஆன் கேபிடல் அசெட்ஸ்" போட மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. விவசாயசொத்துக்கள் அதிலிருந்து விடுபட்டிருக்கின்றன. இந்த மாதிரி நகர்ப்புறச் சொத்துக்கள் இருக்கின்றன. இதற்கு வரி போட்டது சட்ட விரோதம். திருச்சியில் நடந்த எங்களது மாநாட்டிலும் இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். முன்னாள் மத்திய நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாயிடமும் எடுத்துச்சொல்லியிருக்கிறோம். அந்த வரியைப் போடுவதற்கு அதிகாரம் இங்கேதான் உள்ளது. அதே மாதிரி நகர்ப்புறச் சொத்துக்கள் இருக்கின்றன. நகர்ப்புறப் பணக்காரர்கள் எங்களுக்குச் சொந்தக்காரர்கள் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் வேண்டியவர்கள் அல்ல. எல்லா ஊர்களிலும், நகர்ப்புறமாக இருந்தாலும் நாட்டுப்புறமாக இருந்தாலும், ஓரளவுக்கு மேல் இருக்கக்கூடாது. ரொம்பக் கீழே இருக்கிறவர்கள் மேலே வர வேண்டும், மிகப் பெரிய சுகபோகியாகவும் இருக்கக்கூடாது என்பது தான் எங்களுடைய சித்தாந்தம். இந்த அரசாங்கம் நகரத்தில் யார் யார் என்னென்ன சொத்து வைத்திருக்கிறார்கள் என்ற விவரத்தைச் சேகரிக்கும்படி ரெவின்யூ இலாக்காவைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. என்ன செய்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆறு மாதங்களுக்கு முன்பு ஒரு உத்திரவு போட்டோம். நான் ஏற்கனவே சொன்னமாதிரி, நகர்ப்புற நிலங்களுக்கு உச்ச வரம்பு விதிக்க வேண்டும் என்பதில் கொள்கை வித்தியாசம் இந்தக் கட்சிக்குக் கிடையாது. அதை மத்திய சர்க்கார் தான் செய்ய வேண்டும். சட்டப்படி அதிகாரம் அங்கே தான் இருக்கிறது. இங்கேயே இருக்கிறதா என்பதை இன்னும் ஆராய்ந்து பார்க்கலாம். இல்லை என்று தான் நினைக்கிறேன். ஆகவே ஏழை, எளியவர்கள், பொருளாதாரத்தில் கீழே உள்ளவர்கள், புறக்கணிக்கப்பட்டுள்ளவர்கள் இவர்களைத் தூக்கிவிடுவதற்கு முயற்சிக்கிறோம். அதிலே நீங்களும் பொது மக்களும் நம்பிக்கை வைக்க

வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இவ்வளவு நேரம் என்னைப் பேச அனுமதித்த மன்றத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Now the Budget discussion is over. We will now take up item V.

## V. GOVERNMENT BILLS.

### (1) THE TAMIL NADU APPROPRIATION (VOTE ON ACCOUNT) BILL, 1970.

### (L. A. BILL No. 4 OF 1970)

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Chairman, Sir, I move—

"That the Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1970 @ (L.A. Bill No. 4 of 1970) as passed by the Assembly be taken into consideration for making recommendations".

MR. CHAIRMAN: The question is:

"That the Tamil Nadu Appropriatioin (Vote on Account Bill 1970 (L. A. Bill No. 4 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations".

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN: There are no recommendations to clauses 2 and 3, the Schedule, clause 1, the Long Title and the Enacting Formula. Therefore, the Bill will be returned to the Legislative Assembly without any recommendations.

### (2) THE TAMIL NADU CO-OPERATIVE LAND DEVELOPMENT BANKS (AMENDMENT) BILL, 1970.

### (L. A. BILL No. 5 OF 1970)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** சட்டப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ் நாடு 1970-ஆம் ஆண்டு கூட்டுறவு நில வள வங்கிகள் (திருத்த) மசோதாவை[b] (சட்டப் பேரவை மசோதா எண் 5/1970) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முன் மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, கீழ் சட்டசபையிலே நிறைவேற்றப்பட்டுள்ள 5 எண்ணுள்ள மசோதாவை, அதாவது 1970-ஆம் ஆண்டு கூட்டுறவு நில வள வங்கிகள் (திருத்த) மசோதாவை, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது எல்லாம், இது ஒரு சாதாரண திருத்தம். அந்தந்த நில வள வங்கிகளுக்கு அதனதன் தலைவர்களே பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். அதைத் தவிர, வேறு எந்த முக்கியமான விஷயமும் இந்த மசோதாவில் குறிப்பிடப்படவில்லை. கூட்டுறவு நில வள வங்கிகளில் 100, 500, 1,000 என்று உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மத்திய வங்கியும் மற்ற வங்கிகளும் சேர்ந்து முடிவு எடுக்க வேண்டிய நேரத்தில் பிரதிநிதியாக ஒருவர் தான் போக முடியும். பிரதிநிதியாக வருவதற்கு யார் தகுதி படைத்தவர் என்று ஆராய்ந்து பார்க்க நேரிடும்போது, அது தேர்தலில் தான் போய் முடியும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இப்பொழுதுள்ள வங்கிகளில் எல்லாப் பொறுப்பும் தலைவர்களுக்குத் தான் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, பொதுக் கூட்டத்தைக் கூட்டுவது, அந்தக்

@ Printed as Appendix III

b Printed as appendix IV



கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவது எல்லாம் அந்தத் தலைவர் தான். அதைப்போலவே நிர்வாகத்தை நடத்துவது அந்தத் தலைவர் தான். வங்கி கடன் வாங்குவது, கடன் வழங்குவது, அதைக் கண்காணிப்பது, எல்லாம் அந்தத் தலைவர் தான். அதே போல் கணக்குகள் சரிவர இருக்கின்றனவா என்று பார்க்கும் பொறுப்பும் வங்கியின் தலைவருக்குத் தான் இருக்கிறது. தவறு இருக்குமானாலும், துண்டு விழுந்தாலும் ஈடு செய்ய வேண்டியவர் அந்தத் தலைவர்தான். அதைப் போலவே துரதிர்ஷ்ட வசமாக ஏதாவது பெரிய தவறு ஏற்பட்டுவிட்டால், அதற்குக் கிரிமினல் குற்றம் சாட்டப்பட்டு, கோர்ட்டுக் கூண்டில் நின்று, தண்டனையைத் தாங்க வேண்டியது அந்தத் தலைவர் தான். அப்படிப்பட்ட தலைவர் தன்மைக்கு, உகந்தவாறும் பொறுப்பு வகிக்கின்ற காரணத்திற்காகவும், அந்தத் தலைவரே வங்கியின் பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்ற ஒன்றைத் தான் இந்த மசோதா கூறுகிறது.

அடிக்கடி வங்கிகளின் கூட்டங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு வங்கியும் மத்திய வங்கியின் கூட்டங்கள் நடை பெறுகின்ற போது ஒருவரைத்தான் அனுப்பி வைக்க முடியும். அப்படிப் பிரதிநிதியாகப் போகக்கூடியவர், தகுதி வாய்ந்தவர், அந்த வங்கியின் தலைவர் தான் என்பது பொறுத்தமாகவும், நியாயமாகவும் இருக்கிறது என்பது தெளிவாக இருக்கிறது. அதோடு கூட 27—1—1970-ல் நடைபெற்ற கூட்டத்தில், இப்படியான கருத்து ஒருமனதாகத் தெரிவிக்கப்பட்டது.

தலைவர் தான் பிரதிநிதியாக இருக்க வேண்டும் என்பது விதிகளிலே இணைக்கப்பட்டிருக்கிறது, அது போதாது, சட்டத்தில் இருக்க வேண்டும் என்று உயர் நீதி மன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பதால், இந்த மசோதா வந்திருக்கிறது. இந்த ஒரு பிரச்சனையைத் தவிர, வேறு எதுவும் இல்லை. இம்மாதிரி மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்புவது வழக்கமும் அல்ல, இந்த சபையில் அனுப்பப்பட்டதும் இல்லை. ஆகையால் இந்த மசோதாவை நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Motion moved—

"That the Tamil Nadu Co-operative Land Development Banks (Amendment) Bill 1970 (L.A. Bill No. 5 of 1970), as passed by the Assembly, be taken into consideration".

Now, there is an amendment in the name of the hon. Member Thiru Krishnaswami Naidu. He may move it and get it seconded.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** இந்த மசோதாவின் பேரில் நான் கொடுத்துள்ள கீழே கண்ட திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்:—

"That the Tamil Nadu Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 5 of 1970), as passed by the Assembly, be referred to a Select Committee, consisting of 15 Members of the Legislative Council".

THIRU T. K. SUBBIAH: I second the amendment, Sir.

**திரு. வி. கே. ராமசாமி முதலியார்:** தலைவரைப் பிரதிநிதியாகப் போடுவது பற்றி ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு நாட்களாக அந்தப் பிரதிநிதியைத் தனியாகத் தேர்ந்தெடுத்து அனுப்புவது வழக்கம். திடீரென்று தலைவரே இருக்கலாம் என்றால், பஞ்சாயத்து ஆக்டிலேயே அப்படி இருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்களே யூனியன் பிரசிடெண்டாக இருக்கிறார்கள் என்று காரணம் சொல்லக் கூடாது. இருந்தாலும் ஜனநாயக முறையில் பேங்குகளுக்குப் பலவித

காரணங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவார். தலைவரே இப்போது பிரதிநிதியாகப் போவதற்குக் காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் சொல்லிய போதிலும், எனக்கு அது நன்ருகத் தோன்றவில்லை. எப்படிப் பார்த்தாலும், தலைவர் அவர்கள் பிரதிநிதியாகப் போகும்போது, தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதுதான் உசிதம். இப்போது இந்த மாற்றம் செய்து எல்லாத் தலைவர்களும் போக வேண்டும் என்பதல்ல. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உயர் நீதி மன்றத்தில் வந்த வழக்கிலே உள்ள தீர்ப்பைச் குறிப்பிட்டு, அதற்குப் பிறகு அந்த ஒரு காரணத்திற்காகவே இந்த மாற்றம் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக மட்டும் இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லவில்லை. 1961-ஆம் வருஷம் கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின்படி புதிதாக அமைக்கப்பட வேண்டிய சங்கங்கள், நில அடமான பேங்காக இருந்தாலும் சரி, வேறு சங்கங்களாக இருந்தாலும் சரி, முதலில் அமைப்பதற்கு முன்னால் எடுத்துக் கொள்ள வேண்டிய ஆரம்ப நடைமுறை என்ன, என்னென்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டி இருக்கிறது என்பதைக் கவனித்தால் ஒரு விஷயத்தைப் பார்க்கலாம். 1964-லிருந்து தமிழ் நாட்டிலும், பிற மாநிலங்களிலும், குறிப்பாக, ஆந்திர மாநிலத்தில் சட்டத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சரி, சம்பிரதாயம், மரபு இருக்கிறது. அத்தகைய முன் ஏற்பாடுகள், முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை ஆலோசிக்க வேண்டும். 27-12-1969-ல் ஒரு ஜி.ஓ. போகிறது. அன்றே ராமனாதபுரம் மாவட்டத்தில் 60 நில அடமான வங்கிகள் பதிவு செய்யப்படுகின்றன. இதை அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். முதலமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. அமைச்சரவையைச் சார்ந்த மற்றவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய நியாய புத்திக்குப் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். சென்னையிலிருந்து அரசாங்கம் உத்திரவு பிறப்பிப்பது 27-12-1969-ல். அதே தேதியிலே ராமனாதபுரம் ஜில்லாவிலே, 9 வட்டாரங்களிலே நில வள வங்கிகள் பதிவு செய்யப்படுகின்றன. இவைகளுக்கெல்லாம் உள் நோக்கங்கள் இருக்கின்றன. ஆரம்பத்தில் நிலவள வங்கிகள் பதிவு செய்யப்படும்போது, நில வள வங்கித் திருத்தச் சட்டம் கொண்டு வரும் போதே, ஆர அமர யோசித்துக் கொண்டு வரலாம் என்று சொல்லியிருக்கிறேன். அவர்களுடைய குறிக்கோள் ஒன்று. தமிழ்நாடு மத்திய நில அடமான வங்கியினுடைய 3-ல் ஒரு பகுதியினர் ரிட்டையர் ஆக வேண்டியவர்கள். அதற்காக ஒரு தேதி குறிப்பிட வேண்டுமென்று அரசாங்க இலாக்காவைக் கேட்கிற போது, "உங்களுடைய ஆயுள் காலம் நீடிக்கப்படுகிறது" என்று

6-40 p.m. பிப்ரவரி வரை அதைத் தள்ளி வைத்து விட்டு, அதற்குள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி, அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகச் செய்யப்படுகிறது. இந்த ஒரே நோக்கத்திற்காகத்தான் இது கொண்டுவரப்படுகிறது. என்று சொல்கிறேன். கவர்னர் பெருமான் வெளியே போகிருர், அவர் செல்வதற்குள் கையெழுத்து வாங்க வேண்டும் என்பதற்காக இவ்வளவு அவசரமா? பரபரப்பா ? சிந்திக்க வேண்டாமா? இத்தனை காலமாக இருந்த மரபு, புதிய சங்கங்கள் அமைக்கப்படுவதற்கு முன் "ப்ரமோட்டர்கள்" இருக்க வேண்டும் என்பது. 10 அங்கத்தினர்கள் அங்கிகரித்திருக்க வேண்டும். சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட "பைலா" 6 பிரதிகளிலே 10 அங்கத்தினர்கள் கையெழுத்துப் போட வேண்டும். இவ்வளவு பங்குத் தொகை வசூலித்திருக்கிறோம் என்று தெரிவிக்க வேண்டும். இது எல்லாம் வந்ததற்குப் பிறகுதான் இதை டெபுட்டி ரெஜிஸ்ட்ரார் பதிவு செய்ய வேண்டும். எந்த ஆதாரத்தின் பேரில், ஜி.ஒ. பிறப்பித்த தேதியிலே "பைலா" தயாராகாத நிலையில், சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்,





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** "ப்ரமோட்டர்கள்" இருக்க வேண்டும் என்று விதி இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்களே, அந்த விதி எங்கே இருக்கிறது? எந்தப் புத்தகத்தில் இருக்கிறது?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** 61-வது வருஷச் சட்டத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** 1961-வது வருஷச் சட்டம் என் கையில் இருக்கிறது. இதில் ப்ரமோட்டர்களை நியமிக்க எந்த வித வழி முறைகளும் செய்யப்படவில்லை. இருந்தால் எடுத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

[The Deputy Chairman in the Chair.]

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** சட்டத்தில் இல்லாவிட்டாலும், அதற்கான விதிமுறைகள் இருக்கும். அதில் குறிப்பிடப்பட்டிருககும். எந்த சங்கமும் அமைப்பதற்கு முன்பு, சட்டத்தில் இல்லாவிட்டாலும்கூட, நடைமுறையில் அமுலாக்கப்படுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. இது வரையில் நடைமுறையிலிருந்த இது சம்பந்தமான ஒன்றைக்கூட கூற விரும்புகிறேன். கூட்டுறவு இலாக்கா மாநில அதிகாரிகளையும் மற்றவர்களையும் கலந்து ஆலோசிக்கும் போது, இவர்களுடைய கருத்து, கொள்கை என்ன என்று கூறிவிடலாம். அவர்கள் இந்தச் சட்டம் எப்படி இருக்க வேண்டுமென்று வரைந்து கொண்டு வருவார்கள். எல்லோரும் யோசிப்பார்கள். இப்போது இவர்களே வரைகிறார்கள். எனவே அவர்கள் இப்போது அரசாங்கத்தில் வரைவதற்கு முன்னால், இதற்கான அதிகாரிகளின் கருத்துக்களை என்ன என்று அவர்களை எழுத்து மூலமாக கேட்டு, பதிவாளர்களோ மற்றவர்களோ தங்களுடைய கருத்துக்கள் என்னவென்று எழுத்து மூலமாகச் சொல்லி, இவைகளெல்லாம் ஒரு ரெகார்டாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று விழிப்படைந்து செயல்படுகின்றார்களோ என்றுகூட சந்தேகப்படுகிறேன்.

ஹைகோர்ட்டில் இப்படி ஒரு தீர்ப்பளிக்கப்பட்ட பிறகுதான் இலாக்காவில் உள்ள காரியதரிசியையோ அல்லது ரிஜிஸ்ட்ராரையோ அழைத்து அவர்களின் கருத்துக்கள் என்ன என்று கேட்டுக்கொண்டீர்களே தவிர, அவர்கள் எல்லாம் இதிலே எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ? அவர்கள் எல்லாம் இதிலே என்ன கருத்துக்களைச் சொன்னார்கள் என்று பின்னாலே கேள்வி எழுந்தால் என்ன செய்வது என்பதற்காக உயர்நீதி மன்றத் தீர்ப்புக்குப் பின்னால் விழிப்படைந்து கேட்டிருக்கிறீர்கள். என்பதுதான் உண்மை. அது தான் என்னுடைய அனுமானம். அப்படி அவசரப்பட்டு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டி, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் கொண்டுவருவதற்காக அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே வெள்ளை அறிக்கை ஒன்றையும் அதே தேதியில் "கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களின் 1968-69-ல் எய்திய முன்னேற்றங்கள் பற்றிய ஆய்வுரை" என்ற இன்னொரு புத்தகத்தையும் வைத்தார்கள். ஒரே நாளில் இந்த இரண்டு புத்தகங்களும் நம் மன்றத்தின் முன்னே வைக்கப்பட்டன. ஆய்வுரைக்கும் இந்த வெள்ளை அறிக்கைக்கும் "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் போட்ட முடிச்சு" என்பார்களே, அந்த சம்பந்தம்தான் இருக்கிறது. கூட்டுறவுத் துறையில் செய்த சாதனைகளைத்தான் கூறியிருக்கிறோம். அவ்வளவு சாதனைகளும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்திற்கு என்ன குறியீடு என்றெல்லாம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் நான் குறை கூறவில்லை. ஆனால் வெள்ளை அறிக்கையைப் பார்த்தால், நேர்மாருக இருக்கிறது. இது கூட்டுறவு நிலவள வங்கியைப் பொறுத்தது. வங்கித் தொழில் புரிய தாலூக்கா தலை நகர்களைத் தவிர, வேறு நாதியே இல்லை என்ற அளவுக்கு அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஜில்லா கூட்டுறவு பாங்கியும் ஒவ்வொரு வட்டாரத்திலும் தன் கிளையை ஸ்தாபித்தாக வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது.

அநேகமாக எல்லா இடங்களிலும் கிளைகள் ஏற்கெனவே இருக்கின்றன. இருந்தால் ஓரிரு இடங்களில் இல்லாமல் இருக்கலாம். அதே நிலையில் "பாங்க்" நடவடிக்கை இல்லாமல் பாங்க் என்ற பெயரில், கூட்டுறவுத் துறையில் சில பாங்குகள் இருக்கின்றன. கூட்டுறவு விவசாயத் துறை பாங்க், ரூரல் பாங்க் என்று பல ஏற்பட்டிருக்கின்றன. இப்போது 14 பாங்குகள் தேசியமயமாக்கப்பட்ட பிறகு......

**டெபுடி சேர்மன் :** உறுப்பினர் அவர்கள் குறிப்பாக இந்தத் திருத்தத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** இதனை எதற்காக செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும் என்பதற்காகத்தான் இவைகளை எல்லாம் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றையதினம் எங்கேயும் பாங்குகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவர்களும் எங்கே செழிப்பான பகுதிகள் இருக்கின்றனவோ அங்கே போய் கிளைகள் ஆரம்பித்துவிடுகிறார்கள். பின்னாலே தங்கள் பாங்குக்குக் கெடுதி வந்துவிடக்கூடாதே என்று அங்கே போய் ஆரம்பிக்கிறார்கள். அந்த நிலையில் பாங்குகள் ஆரம்பிக்கப்படுகின்றன. இப்போது விரிவாகச் சொல்ல நேரமில்லை. கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். 4 கோடி ரூபாய் கடன் பெற்றுக்கொள்ளும்படி நில வள வங்கியைக் கேட்டோம், அவர்கள் வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். இவர்கள் அப்படிக் கேட்டது எப்போது? அவர்கள் வேண்டாம் என்று சொன்னது எப்போது? அதற்கெல்லாம் என்ன ஆதாரம்?

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** 4 கோடி ரூபாய் வரை மத்திய நிலவள வங்கிக்குக் கொடுக்கத் தயாராக இருந்தாலும், நாங்கள் அந்த வங்கிக்கு என்ன எழுதினோம் என்றால், உங்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கேளுங்கள், தருகிறோம் என்றோம். அவர்கள் தான் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். ரிசரவ் வங்கி எங்களுக்கு எழுதுகிறபோது, மத்திய நிலவள வங்கிக்கு எவ்வளவு தேவைப்படுகிறது என்று கேட்டார்கள். இப்போது $1\frac{1}{2}$ கோடி இருக்கிறது, மொத்தம் 6 கோடி தேவைப்படுகிறது. எனவே $4\frac{1}{2}$ கோடி மூலதனம் இன்னும் தேவைப்படுகிறது என்று அறிந்து, நாங்கள் மத்திய நிலவள வங்கிக்குக் கடிதம் எழுதினோம். அதற்கு அவர்கள் தீர்மானமே போட்டு அனுப்பி யிருக்கிறார்கள். உங்களிடமிருந்து நாங்கள் பணம் வாங்கிக் கொள்ள மாட்டோம் என்று. கடனாகச் சொல்லவில்லை. வட்டிக்கு என்று சொல்லவில்லை. மூலதனமாக எவ்வளவு வேண்டும் என்று கேட்டதற்கு, வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். பிறகு நாங்கள் அவர்களை நேரில் அழைத்துக் கேட்டபிறகு, $1\frac{1}{4}$ கோடி வாங்க சம்மதித்துக் கொள்ளு கிறோம்என்று சொன்னார்கள். அதற்குத்தான் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : அமைச்சர் அவர்கள் கேட்டும் அப்படி பதில் வந்தது என்று சொன்னார்கள். ஆனால் எங்கள் ஸ்ரீவில்லிபுத்தூர்...........

* **மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** எனக்குத் தவறான கருத்தைச் சொல்ல வேண்டுமென்றோ, தவறான புள்ளிவிவரம் தர வேண்டு மென்றோ எண்ணம் இல்லை. தவறாகச் சொல்லுவதால் எனக்கு என்ன பலன் இருக்கிறது? ஒன்றுமில்லையே? உங்களுக்கு எவ்வளவு தேவைப்படுகிறது என்று கேட்டால், அரசு கொடுக்கிற பணத்தை வாங்க மாட்டோம் என்று அவர்கள் தெரிவித்தார்கள். பிறகு தான் அந்தச் செயலாளரைக் கூப்பிட்டுக் கேட்டேன். அதற்குப் பிறகு தான் ஒத்துக்கொண்டார்கள். அரசுக்கு ரிசர்வ் பேங்க் கடன் குறைந்த வட்டிக்குத் தருகிறது. முதல் 2 ஆண்டுகளுக்கு வட்டியே இல்லை. அடுத்த 3 ஆண்டுகளுக்கு 2 சத விதம் வட்டி, அடுத்த 4 ஆண்டுகளுக்கு



$2\frac{1}{2}$ சத விதம் வட்டி, அடுத்த 3 ஆண்டுகளுக்கு 3 சத விதம் வட்டி, இப்படித் தருகிறது. இப்படி வருகிற பணத்தைத் தருகிறோம் என்று சொன்னதற்குத்தான் "எங்களுக்கு உங்கள் பணமே தேவையில்லை," என்று அவர்கள் தீர்மானமே போட்டு அனுப்பினார்கள். தவறான புள்ளிவிவரம் தர வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் விரும்பினால், அவருக்கு தலைவர் அவர்களின் மூலமாக அனுப்பி வைக்கவும் தயாராக உள்ளேன். தற்போது அந்தத் தீர்மானம் என் கைவசம் இல்லை.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அது எந்தச் சூழ்நிலையில் தேவைப் படாமல் இருந்ததோ தெரியாது. இப்போது எல்லா இடங்களிலும் அமைக்கப்பட்ட கூட்டுறவு பாங்குகளுக்கு எல்லாம் "தலைவர்கள்" தான், பிரதிநிதிகள் அல்ல என்று சொல்லுகிறார்கள். அதற்குத் திருத்தம் கொண்டுவர வேண்டும். அது எப்படி இருந்தாலும், அதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** பெயரில் தானே மாறுதல். வேறொன்றும் இல்லையே ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இப்போது இருக்கிற கூட்டுறவுத் துறையில் உள்ள காரியங்களைக் கிளறக் கிளற, அது இப்போது இருக்கக் கூடியவர்களுக்கு உயர்வு தரத் தக்கதாக இருக்காது. ஆகவே அவைகளைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது. இப்போது இருக்கிற பிரச்னை, கூட்டுறவு பாங்கியின் தலைவரே பிரதிநிதியாகச் செல்ல வேண்டும் என்பது. ஏனென்றால் அவர்தான் எதற்கும் பொறுப் பேற்கிறார். தண்டனை வந்தாலும் அவர்தான் அனுபவிக்கிறார். அதுதான் இந்தத் திருத்தம். இதை விட்டுவிட்டு கூட்டுறவுத் துறையைப் பற்றிப் பொதுவாக எடுத்துப் பேசுவது என்பது அவ்வளவு சிறப்பான முறையில் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** இதுகாறும் தமிழ்நாட்டுக் கூட்டுறவுத் துறை இயங்கிவந்த விதம் நல்ல கனவு கண்டதாக இருக்காது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது இத்தனை ஆண்டு கால வளர்ச்சியை வேண்டுமென்றே பழிப்பதாகும். 1927-ம்ஆண்டிலிருந்து நான் கூட்டுறவுத் துறையில் இருக்கிறேன். ஸ்ரீவில்லிபுத்தூர் சம்பந்தப் பட்ட மட்டில், ஒரு கிராமத்தில் ஒரு கூட்டுறவு சங்கத்தில்கூட ஒரு தவறும் நடக்கவில்லை. மற்ற இடங்களில் எத்தனையோ அக்கிரமம் செய்தவர்கள் இருக்கலாம். இதற்காகப் பழைய விஷயங்களைப் பற்றிப் பேசுவது அவ்வளவு நல்லதாக இருக்காது என்று பேசுவது முறையல்ல.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, நேற்றுகூட கேள்விப் பட்டேன். ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள மிகப் பெரிய சொசைடி ஒன்றில் சிவப்பிரகாசம் என்பவர் பெரிய மோசடி செய்து, அந்த போர்டே சூப்பர்சீட் செய்யப்பட்டிருக்கிறது. அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பது நான் சொல்லாமலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அந்தச் சங்கங்கள் அமைப்பதற்கு எடுத்துக்கொண்ட முறைகள் தவறானவை என்று சொல்லும்போது, இன்றைக்கு அதற்கு நேர்மாறாக ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு ஸ்டோர் முடிவு கட்டுவதைப் பற்றிச் சொல்வது என்ன பொருத்தம் என்று எனக்குப் புரியவில்லை. அதை முடிவு கட்டுவதற்கு தி.மு.க. காரர்கள் தான் காரணம். ஸ்ரீவில்லிபுத்தூர் தி.மு.க. அன்பர்கள் 2 பிரிவாகப் பிரிந்து இதைச் செய்கிறார்கள். அங்கத்தினர் பாண்டியன் அவர்கள் தான் இதற்குக் காரணம் என்று ஏன் சொல்ல மறைக்கிறார்கள் ?

அதில் ஒரு பகுதி சீக்கிரமாக சங்கத்தை மூடவேண்டும் என்கிறார்கள். இன்னொரு பகுதி எப்படியாவது அதை முடிவு கட்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஆக கோளாறு, கோளாறு தான்.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** எந்த ஜில்லாவை எடுத்துக்கொண்டாலும், கூட்டுறவுத் துறையில் புகார்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் பெரும்பாலான சங்கங்கள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன. அதைக் காரணம் காட்டி பயமுறுத்துகிற வகையில் இவ்வாறான சட்டம் கொண்டுவர வேண்டும் என்று சொல்லுவது முறையாகாது என்பதைத்தான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சந்தானம் கமிட்டி முடிவுகள் அத்தனையும் உங்களுடைய கருத்திற்கு இசைந்ததாக இல்லை என்று கருதுகிறேன். அதனால்தான் அதன்படி நடவடிக்கை எடுக்கவில்லை. செலக்ட் கமிட்டி போட்டால், பல்வேறு அபிப்பிராயம் உள்ளவர்கள் வருவார்கள். அனுபவம் உள்ளவர்கள் வருவார்கள். ஒரு திருத்தம் மட்டுமல்ல; பல வழிகளில் யோசித்து நன்றாக அமைக்கலாம். இன்னும் எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. இந்தத் திருத்தம் கடைசிவரையில் போகுமா, இடையிலேயே ஹைகோர்ட்டிலிருந்து செல்லாது என்று திரும்பி வருமா என்று சந்தேகப் படுகிறேன். ஆகையால்தான் பொறுக்குக் கமிட்டிக்கு விடுங்கள் என்று சொல்கிறேன். விட்டால் விடுங்கள், இல்லாவிட்டால் அது உங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது.

**திரு. எம். எத்திராஜுலு :** இந்தத் திருத்த மசோதாமீது சிலர் பேசுவதற்கு இருக்கிறார்கள். மணி ஏழு ஆகிவிட்டது. இதைத் தொடர்ந்து நாளைக்கு வைத்துக்கொண்டால், அங்கத்தினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததாக இருக்கும். இப்படியே முடித்துவிடுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : The Hon. Minister...........

(Several hon. Members rose...............)

DEPUTY CHAIRMAN : If hon. Members want to speak, they must speak one by one. We will, if secessary, continue to sit even after 7 O'clock and dispose of the Bill today itself as per the suggestion of the Business Advisory Committee.

**திரு. கே. ராசாராம் :** கொஞ்ச நேரம் அதிகமாக [உட்கார்ந்து முடிப்
7-10 பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. மினிஸ்டர் அதைத்தான் கேட்டார். எல்லோரும் ஒத்துக்கொண்டோம். இருந்து அதை முடிப்பதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபணையில்லை.

THIRU G. SWAMINATHAN : Mr. Deputy Chairman, Sir, I wish to make only two points in regard to this Bill. The amendment before the House refers to section 3 of the Act and the Hon. Minister invited the attention of the earlier speaker to the need for confining his remarks only to the provisions contained in the Bill, namely, that particular section regarding the delegation of the President. With the permission of the Chair, I wish to make two points in regard to clause 3 (a) (iii). Sir, according to the Santanam Committee Report about which I had occasion to speak on the floor of this House earlier, one main recommendation of





the Committee was that nobody should continue on the Board of Directors of the Banks for more than two terms, that is, for more than six years. Sir, my submission is that this main and important recommendation of that Committee could have been adopted in section 3-A. Actually, Sir, when I had the opportunity to refer to it probably, I think, during the last Budget session, the Hon. Minister agreed to it and said that a suitable amendment would be brought forth. I think, Sir, it is more than a year since the Committee made its recommendation and the report was published. I do not know why there is this delay in bringing in the comprehensive Bill promised by the Minister. If there was to be delay in bringing in the comprehensive Bill, as was promised by the Hon. Minister and assured by our late Chief Minister, the revered Anna they could have at least brought in an amendment to section 3 (a) (iii) where they could have stated : "Provided further that a Member who has been continuously a Member of the Board of Directors for a term of six years prior to the enactment of the Act, shall cease to be a Member of the board from the date of commencement of the Act" that the Hon. Minister could have easily imcrporated in this Amending Bill.

Then, Sir, the second point I wanted to refer to was the rule-making powers given under this Act in section 3 (c). Now, Sir, the hon. Members of the House are quite well aware that in most cases the loan that is given through the Land Mortgage Bank does not reach those who own less than five acres of land. They are not given any loan. Nearly 80 per cent of the loan is given to land owners who own more than five acres. We could have made a rule under the section I referred to that fifty per cent of the loans sanctioned by the bank should go to the peasants who own less than five acres. With these words, I close, Sir.

**திரு. எம். எத்திராஜுலு :** உதவித் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, தலைவர் என்பவர் சிறைக்குப் போவதற்கும் சிறப்பு பெறுவதற்குமாக இருக்கிறவர் என்ற காரணத்தால் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுவதாக இருக்கிறது. சிறைக்குப் போவதும் சிறப்புப்பெறுவதும் தலைவர் தான். தலைவர் மீது மட்டும் அவ்விதமான பாரத்தைக் கொண்டுவருவது என்று நினைப்பது அவ்வளவு நல்லதல்ல.

**திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அமைச்சர், "ஸ்தாபனத்தின் தலைவர் பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும்", என்று சொன்னார்கள். தலைவர் மட்டும் எழுதும் பத்திரம் செல்லாது, கூட இரண்டு டைரக்டர்களும் அதில் இருக்க வேண்டும்.

திரு எம். எத்திராஜுலு. ஆகவேதான் "ஜெனரல் பாடி" கூடி அங்கிருக்கிற பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அனுப்புவது என்பது பரவலாக எல்லோருக்கும் அந்த உரிமையைக் கொடுப்பதாக அமைந்திருக்கிறது. ஆனால் இப்போது அந்த உரிமை அப்படியே எடுக்கப்பட்டு தலைவருக்குத்தான் அந்த அதிகாரம் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமானதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே படிப்படியாக அப்படித்தான் நடந்து வந்திருக்கிறது. இப்போது இந்தத் திருத்தம்

கொண்டுவருவதற்கு உள்நோக்கமில்லை என்கிறார்கள். உள்நோக்கமில்லாமல் இவ்வளவு அவசரமாக ஏன் கொண்டுவர வேண்டும்? அவசர அவசரமாகக் கொண்டு வந்து உயர்நீதி மன்றத்தில் அடிபடக் கூடிய நிலையில் ஏன் வைக்கவேண்டுமென்றுதான் நான் கேட்கிறேன். சந்தானம் கமிட்டி அறிக்கை இன்னும் சீக்கிரத்தில் வர வேண்டும். கூட்டுறவு சட்டம் கொண்டுவர வேண்டுமென்று பேசப்படுகிறது. இன்னும் ஒரு மாதத்தில் சட்டத்தை உருவாக்கிக் கொண்டுவந்தால், இதை அவசர அவசரமாக நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை. ஆகையால் இப்போதிருக்கிறபடியே ஜெனரல் பாடியால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியையே நிலவள வங்கிக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியில்லாவிட்டால், செலக்ட் கமிட்டி போட்டு பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்த திருத்தத்தை ஆதரிக்கிறேன்.

**திரு என். சுந்தரேசத் தேவர் :** இந்தத் திருத்தத்தின் மீது என்னுடைய அபிப்பிராயத்தைக் கூற ஆசைப்படுகிறேன். எந்த விதமான குறையும் சொல்ல வேண்டுமென்று நான் இதைக் கூறவில்லை. உண்மையான விஷயத்தை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். பொதுவாக ஒரு சங்கத்தின் தலைவர் மத்திய பாங்குக்குப் பிரதிநிதியாகச் செல்ல வேண்டுமென்று திருத்தம் வந்திருக்கிறது. அப்படிச் செய்வதில் பெரிய கஷ்டம் இருக்கிறது. நம்முடைய பஞ்சாயத்துச் சட்டத்தை எடுத்துக்கொண்டால், ஒரு பஞ்சாயத்துத் தலைவர் யூனியனுக்குச் செல்லுகிற நிலைமை இருப்பதால் பஞ்சாயத்து யூனியன் செய்யக்கூடிய காரியங்களைத்தான் அவர் செய்ய முடியும். ஆனால் அவர் எந்தப் பஞ்சாயத்திலிருந்து வந்தாரோ அந்தப் பஞ்சாயத்திற்கு அதிகமாகச் செய்கிறார் என்ற குறைபாடு பரவலாக இருக்கிறது. அதேபோல ஒரு வங்கியின் தலைவர் பிரதிநிதியாக மேலே உள்ள மத்திய பாங்கிற்குச் சென்றால், தன்னுடைய வங்கிக்கு அதிக பட்சமாகச் செய்கிற நிலைமை ஏற்படும். கீழ் உள்ள மற்ற வங்கியில் தவறான காரியத்தை, தவறான கொள்கையைக் கடைப்பிடித்தால் அதை அமுல் படுத்தும் நிலைமை மத்திய வங்கிக்கு ஏற்படும். பிறகு எல்லா வங்கிகளுக்கும் அந்த நிலைமை ஏற்படும். ஆகையால் எந்த வங்கியின் தலைவராகவும் இல்லாத ஒருவரை மத்திய வங்கியில் இருக்கச் செய்தால், எல்லா வங்கிகளுக்கும் பொதுவாகச் செய்வார் என்ற நம்பிக்கை பிறக்கும். அது நியாயமாகவும் இருக்கும். தவறுகள் ஏற்படாமல் இருக்கவும் அது உதவும்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஒரு திருத்தத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். சர்க்கார் மசோதா தலைவரையே பிரதிநிதியாக அனுப்பவேண்டும் என்று இருக்கிறது. தலைவரையே பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்க ஆட்சேபணை இருக்க முடியாது. சர்க்காருக்கு உள் நோக்கம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இப்பொழுது சர்க்கார் திருத்தத்தைக் கொண்டு வந்துவிட்டார்கள். கீழ் சபையிலும் பாசாகி விட்டது. இனிமேல் பிராக்டிகலாகப் பார்க்க வேண்டும். தலைவரே பிரதிநிதியாவதிலே தப்பில்லை. எனக்கும் அவருக்கும் வாக்குவாதம் கூட பல இடங்களிலே ஆகியிருக்கிறது. தருமர் இருக்கிற இடத்திலேயே இப்படியெல்லாம் நடக்கிறதே என்று சொல்வார்கள். அதே மாதிரி நீங்கள் இருக்கிற ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுக்காவிலே பெரும் பெருச்சாளிகள் எல்லாம் இருக்கிறார்களே என்பேன். அவர்கள் அனுபவத்திலே அந்த மாதிரி இருக்கிறது. நிரந்தரமாக பெரிய சீர்திருத்தம் கொண்டுவருகிறபோது, அதைப் பார்த்துக் கொள்ளலாம். அந்த சமயத்திலே அவருடைய அனுபவத்தையும் உபயோகித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்த சமயத்திலே அவர் திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.



*** திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களே, தலைவரே பிரதிநிதியாகச் செல்ல வேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கம் என்பதாகச் சொன்னார்கள். தலைவரே பிரதிநிதியாகப் போவதில் இப்போதும் ஆட்சேபணை இருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கனவே 106 பிரைமரி பாங்குகள் நமது மாநிலத்தில் இருந்தன. அவைகளிலே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது தலைவர்களே பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இப்பொழுதும் 50, 60, பேர் இருக்கிறார்கள். அதிலே தடை ஒன்றும் இல்லை.' ஆனால் இப்பொழுது சில பிரைமரி பாங்குகளின் தலைவர்கள் அந்த பாங்குகளை நிர்வகிக்கத்தான் முடியுமே ஒழிய, பிரதிநிதிகளாக வெளியே சென்னைக்குச் சென்று லாண்டு மார்ட்கேஜ் பாங்குக்குப் போய்விட்டுவர முடிவதில்லை. ஆகவே ஆங்கிலம் படித்தவர்கள் சட்டம் தெரிந்தவர்கள், இம் மாதிரி ஆட்களைப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கிறார்கள். இனிமேல் அதற்கு இடமில்லாமல் போய்விடுகிறது. இப்பொழுது ஆங்கிலம் தெரியாத, தமிழ் தெரிந்த நல்லவர்களைத் தலைவர்களாகப் போட்டுக்கொண்டிருக்கிறோம். இனிமேல் ஆங்கிலம் தெரிந்தவர்களைத் தான் போடவேண்டியிருக்கும். ஆகவே கிராமத்திலே இருக்கிறவர்களுக்கு ஒரு " டிஸ்குவாலிபிகேஷன் " மாதிரி ஆகிவிடுகிறது. 29-ம் தேதி ரெஜிஸ்டர் செய்யலாம் என்று சர்க்கார் உத்தரவு போடுகிறது. அன்றைய தேதியிலேயே ராமநாதபுரம் ஜில்லாவிலே 9 பாங்குகள் ரெஜிஸ்டர் ஆகியிருக்கின்றன. மறுநாள் 51 பாங்குகள் ரெஜிஸ்டர் ஆகியிருக்கின்றன. இது முன்கூட்டியே செய்யப்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. நிச்சயமாக அப்படித்தான் செய்யப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களுக்கு இவ்வளவு அவசரம் தேவை இல்லை என்பது என்னுடைய அபிப்ராயம். கோர்ட்டிலே ஜட்ஜ் கேட்கிறார், " விதிகள் சரியாக எழுதப்படவில்லையே, நானும் லா டிபார்ட்மெண்டிலே செக்ரட்ரியாக இருந்தவன். லா டிபார்ட்மெண்ட் தயார் செய்த விதிகள் மாதிரி தெரியவில்லையே " என்று. ரிஜிஸ்ட்ரார் ஆபீஸிலே தான் தயார் செய்துகொண்டு வந்தார்கள் என்ற அளவுக்கு இருக்கிறது. லா டிபார்ட்மெண்டைக்கூட கலக்காமல் விதிகளைத் தயாரிக்கும்படியாக என்ன அவசரம் வந்து விட்டது இந்த அமைச்சருக்கு ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** " லா டிபார்ட்மெண்ட் " எல்லாம் சரிபார்த்துத்தான் கொடுத்திருக்கிறது. ஆகையினாலே தவறான பேச்சை மேற்கொண்டு சொல்லிக்கொண்டு போக வேண்டாம்.

**திரு கே. ராஜாராம் :** கோர்ட்டிலே சொல்லப்பட்ட வார்த்தைகளைத் தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லுகிறேன் சொல்லுவதை உண்மை என்று ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். லா டிபார்ட்மெண்டிலே சரி பார்த்த விதிகள்தான்.

*** திரு. கே. ராஜாராம் :** கோர்ட்டிலே ஹைகோர்ட் ஜட்ஜ் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னது தப்பாக இருக்கும். அப்படி இருக்கலாம். அடுத்தபடியாக பத்து பேர்கூடி எங்களுக்கு இந்த "பேங்க்" வேண்டும் என்று ப்ரமோட் பண்ணி, பைலாஸ் எல்லாம் அங்கீகரித்து, அப்ளிகேஷன் வந்துதான் ரிஜிஸ்ட்டர் பண்ண வேண்டும். இங்கே ஒன்றுமே இல்லை. 1961 ஆக்டிலே செக்ஷன் 8-லே "க்ளியர் " ஆக இருக்கிறது. எங்கே இருக்கிறது என்று கேட்கிறார்கள் அமைச்சர் அவர்கள். கோ-ஆபரேட்டிவ் சொஸைடீஸ் ஆக்டிலே இல்லாமல் இல்லை. அந்த நடைமுறைகள் எல்லாம் இல்லாமல் இது செய்யப்பட்டிருக்கிறது. பொதுவாக எங்களுடைய புகார் எல்லாம் ஜனநாயக ரீதியிலே செயல்படவில்லை என்பதுதான்-

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** செக்ஷன் 8-ல் "ப்ரமோட்டர்" என்று சொல்லவே இல்லை.

**திரு. கே. ராஜாராம் :** ஒருவித முன்னேற்பாடும் இல்லாமல் என்றைக்கு உத்தரவு போட்டார்களோ, அன்றைக்கே பதிவும் செய்யப்பட்டிருக்கிறது என்ன அவசரம் வந்தது ?

**மாண்புமிகு திரு. ஙி. பா. ஆதித்தனர் :** " ப்ரமோட்டர் " என்று விதியில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நல்ல வேளையாகப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். அதில் இல்லை. ஆகவே, அதிலே இல்லை என்று ஏற்றுக்கொண்டு பேசலாம்.

**திரு. கே. ராஜாராம் :** ரெஜிஸ்டர் செய்வதற்கு மனு கொடுக்க வேண்டும். மனு கொடுக்க பைலாவை " ப்ரேம் " பண்ண வேண்டும் பைலா " ப்ரேம் " செய்ய பத்து பேர் இருக்க வேண்டும். ஒன்றுமே நடக்கவில்லையே.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** நல்ல வேளையாகப் புத்தகம் கையில் எடுத்துக் கொண்டு வந்தேன். 8-வது விதியிலே " ப்ரமோட்டர் " என்ற வார்த்தை இல்லை என்றால், இல்லை என்று சொல்லுங்களேன்.

**திரு. கே. ராஜாராம் :** அப்ளிகேஷன் போட்டுக்கொண்டு வரவேண்டும். " ப்ரமோட்டர் " என்பது நடைமுறைச் சொல்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** அப்படி என்றால் நடைமுறைச் சொல் என்று சொல்லுங்கள்.

**திரு. கே. ராஜாராம் :** எட்டாவது விதியிலே கூட அப்ளிகேஷன் தயார் செய்து பைலாவுடன் வர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

" The application shall be accompanied by acopy of the proposed by-laws of the society and the persons by whom or on whose behalf such application is made shall furnish such information in regard to the society as the Registrar may require ".

ப்ரமோட்டர் என்று இல்லை. வழக்கமாக அப்படித் தான் சொல்லுகிறோமே தவிர வேறு அல்ல. அந்தப் பொது முறை கவனிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்களுடைய அவசரத்திற்கு என்ன அவசியம் ? இவை ரெஜிஸ்டர் பண்ணி 9 மாதம் ஆகிறது. 9 மாதமாக விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று பேங்குகளை ஏற்படுத்தி, கோடி கோடியாக வைத்துக் கொள்ளப்படுகிறது இதை வாங்கிக் கொண்டு போக ஆள் இல்லை என்றால் இன்று வரைக்கும் ஒரு தம்பிடி கொடுக்கப்படவில்லை. 9 மாதத்திலே ஒரு தம்படியாவது "டிஸ்ட்ரிப்யூட் " பண்ணவில்லை. இதை அமைச்சர் மறுப்பாரா என்று கேட்கிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** ரிஜிஸ்ட்ரார் " மே " என்று தானே இருக்கிறது ? " மே " என்றால் " மே நாட் " என்று கூட வைத்துக்கொள்ளலாம்.

*** திரு. கே. ராஜாராம் :** எந்தச் சட்டத்தை எடுத்துப் பார்த்தாலும் " ஷெல் " என்று இருக்காது. " மே " என்ற வார்த்தைக்கே " ஷெல் " என்று அர்த்தம் தான். தமிழ்நாட்டுச் சட்டத்தைப் புரட்டிப் பாருங்கள். " மே " என்ற வார்த்தை இருக்காது.

அடுத்தபடியாக, இவ்வளவு அவசரப்பட்டு, பதிந்து ஆரம்பிக்கப்பட்ட, டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் மார்ச் மாதம் வரை பணம் பட்டுவாடா செய்யவில்லை. இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துப் பார்த்துச் செய்து கொள்ளலாம். ஜனநாயக முறைப்படி பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க முடியவில்லை. இந்தத் திருத்தத்தை அந்த சபையிலே " பாஸ் " செய்து விட்டார்கள். இந்த சபையில் மட்டும் செலக்ட் கமிட்டி போட்டு, 4, 5 நாட்களுக்குள்ளே பரிசீலனை செய்து விடலாம். நாளைக்கே கையெழுத்து வாங்கி விட வேண்டும் என்ற அவசரம் இல்லை. இன்னும் ஒரு மாதம் பொறுத்திருந்து கூட செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 25-ம் தேதிக்குள்ளே முடித்து விடலாம். அவர்களே பேரைச் சொல்லட்டும், போட்டு விடுவோம். கவர்னரிடம் கையெழுத்து வாங்கி விடலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.



*** மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** தலைவர் அவர்களே, இங்கே சொன்ன கருத்துக்கள் பல, உண்மையாக நடந்தது என்ன என்பது பற்றித் தெரியாமல் சொன்னவை. அது பற்றி நான் வருத்தப்படுகிறேன். " அவசர கோலமாக " நடந்தது என்று சொன்னார்கள். வெள்ளை அறிக்கை ஒன்று வைத்ததையும் சொன்னார்கள். பனாக்குகள் தோறும் பாங்குகள் என்று சொன்ன தேதி என்னவென்று சொல்லியிருந்தார் என்றால், நன்றாக இருந்திருக்கும். கடந்த 1969 மார்ச் 15ம் தேதி இது தொடங்கியது என்று தெரியும். காலதாமதம் அதிகமாகி விட்டது என்று சொல்லலாமே தவிர அவசர கோலமாக நடந்தது என்று சொல்ல முடியாது.

அடுத்தாற்போல், நண்பர்கள் கேட்டார்கள், ஏன், ஏன் என்று கேட்பதற்காகச் சொல்லுகிறேன். உங்களுக்கு மன நிறைவு ஏற்படும் என்பதற்காகச் சொல்லுகிறேன். ஏன் டிசம்பர் மாதமே செய்யப்பட்டது என்ற கேள்விக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் டிசம்பர் மாதம் பதிவு செய்யப்பட்டது, ஏன் டிசம்பர் மாதம் பதிவு செய்யப்பட்டது என்று மூன்று முறை திரும்பத்திரும்பக் கேட்டார்கள். ஏன் டிசம்பர் மாதம் என்றால் ரிசர்வ் பாங்கியிலிருந்து வந்த சுற்றறிக்கைகள் டிசம்பர் மாதத்திற்கு முன்னால் பதிவு செய்யப்பட்ட வங்கிகளுக்கு, மூலதனமாக 25,000 ரூபாய் டிசம்பர் மாதத்திற்குள் கொடுப்பதாகக் குறிப்பிட்டன. எப்பொழுதோ தொடங்கியது, எப்படியோ மார்ச் மாதத்தில் தான் முடிவு பெற்றது. முன்பு எல்லாம் இந்த நிலவள வங்கிகளுக்கு இந்த மாதிரியான ஏற்பாடுகள் நீங்கள் செய்திருக்கிறீர்களா ? இல்லை. நீங்கள் 20 ஆண்டு காலமாகச் செய்தது கிடையாது. நிலவள வங்கிகளுக்கு 10,000 ரூபாயைச் சேர்த்து இந்த அரசு பங்குத் தொகையாகக் கொடுக்கிறது என்ற முறை இப்பொழுது தான் ஏற்பாடாகியிருக்கிறது. குறை சொல்வதை விட்டுப் பாராட்டக் கூடாதா ? கொஞ்சம் பாராட்டிப் பேசுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** முதல் தடவையாக ரிசர்வ் பேங்க் நிலவள வங்கிகளுக்கு உதவி செய்வது இப்பொழுதுதான்.

***மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் :** கொஞ்சம் நான் சொல்வதைக் கேட்டுக் கொள்ளுங்கள். ரிசர்வ் பேங்க், இந்த அரசு எத்தனையோ முறை கேட்டுப் பார்த்து, இப்பொழுதுதான் கொடுத்திருக்கிறது. முதல் முறையாகப் பெற்றதற்கு பாராட்டக்கூடாதா என்று தான் கேட்கிறேன். கொஞ்சம் அழகாக எங்களைப் பற்றிச் சொல்லக்கூடாதா ? எத்தனையோ முறை நீங்கள் கேட்டிருக்கிறீர்கள். கிடைக்கவில்லையே. இந்த மசோதாவில் எந்த அவசர கோலமும் இல்லை. உள்நோக்கம் உள்நோக்கம் என்று சொல்லத் தேவையில்லை. உள்நோக்கம் என்று நீங்கள் பேசுவதைப் பற்றிப் பகிரங்கமாகச் சொல்கிறேன். கட்சி வேறுபாடு என்று எவருக்கும் இருக்காது. நாங்கள் அந்தப் பரம்பரையில் வரவில்லை. ஒன்றை மட்டும் எடுத்துக் காட்டாகச் சொல்லுகிறேன். கட்சி என்று பாகுபாடுபடுத்தக்கூடாது என்று கழக அரசைத் தமிழகத்தில் நிலைக்கவைத்த பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் 3,000-க்கு மேற்பட்ட காங்கிரஸ்காரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 வீதம் பென்ஷன் கொடுத்திருக்கிறார்கள். கட்சி என்று நினைத்திருந்தால், அப்படிக் கொடுத்திருப்பாரா? 1967-ல் ஆட்சிக்கு வந்தவுடனே எந்தக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் அவரைத் துன்புறுத்தினார்களோ, எந்தக் காங்கிரஸ்காரர்கள் அவருக்கு இன்னல்களைக் கொடுத்தார்களோ, அந்தக் காங்கிரஸ் கட்சியின் தியாகிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 வீதம் பென்ஷன் கொடுத்திருக்கிறார். காங்கிரஸ் ஆட்சியிலே 67 பேர் மட்டுமே பெற்றிருந்தார்கள். அதையே ரத்து செய்கிறேன் என்று ஒரு வரி எழுதி இருக்கலாமே அவர்.

7-00 p.m.

**திரு. கே. ராஜாராம் :** தலைவர் அவர்களே, வேறு எந்த அமைச்சரும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வளவு உணர்ச்சிவயப்பட்டுப் பேசியது இல்லை.

இந்த அமைச்சர், புதியதாக திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்த அமைச்சர், ஏன் இவ்வளவு உணர்ச்சி வயப்பட்டு ஆத்திரத்தோடு பேச வேண்டும் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** கட்சி வேறுபாடற்ற முறையில் அரசு நடைபெற்று வருவதைப் பாராட்டவில்லையே என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைச் சொல்லுகிறேன். கட்சி வேறுபாடு, உள்நோக்கம் என்று சொல்லுகிறபோது, சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதற்கு முன்னால் திரு. பக்தவத்சலமும், அதற்கு முன்னால் திரு. காமராஜரும் முதலமைச்சர்களாக இருந்தார்கள். அவர்கள் இருக்கிறபோது அந்தக் காங்கிரஸ் தியாகிகள் 61 பேர் தான் என்று அவர்களுக்கு மட்டும் மாதம் ரூபாய் 50 கொடுத்தார்கள். இந்தத் தமிழக அரசு ஏற்பட்ட பிறகு தான், 1947-க்கு முன்னுள்ள காங்கிரஸ் தியாகிகள் தமிழகத்தில் 67 பேர் தானா இருக்கிறார்கள், பாவம், அவர்கள் செய்யாததை நாம் செய்வோம், என்று கண்டுபிடித்து அவர்களைப் பற்றி எந்தக் குறிப்பும் தேவையில்லை என்று, ஏறத்தாழ 3,000 பேர்களுக்கு, பென்ஷன் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் கட்சி வேறுபாடு கருதிக் காரியங்களை செய்வதில்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** பேச்சுக்கும் விஷயத்திற்கும் சம்பந்தம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த அரசு கட்சி வேறுபாடு கொள்ளாதது என்பதற்காகவே சொல்கிறேன். அப்படி கட்சி வேறுபாடு இல்லாமல் இந்த நில வள வங்கிகள் எல்லாம் செயல்படும் என்று உறுதியாகச் சொல்கிறேன். அங்கு வருகிறவர்கள் என்ன சட்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள், கதர் சட்டையா, கருப்புச் சட்டையா, சிகப்புச் சட்டையா என்று யாரும் கவலைப்பட மாட்டார்கள். எந்த விதமான உள்நோக்கமும் இருக்காது, யார் தலைவராக இருக்கிறாரோ அவரே பிரதிநிதியாக இருப்பது நல்லது, எந்தத் தொல்லையும் இருக்காது, ஒவ்வொரு தடவையும் ஒவ்வொருவர் சென்னைக்கு வந்து அலைந்து திரியவேண்டிய அவசியம் இருக்காது என்று தெரிவித்துக் கொண்டு, இந்தச் சாதாரண சின்ன மசோதாவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

DEPUTY CHAIRMAN : Is the hon. Mmber pressing his amendment?

THIRU R. KRISHNASWAMY NAIDU : Yes.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 5 of 1970), as passed by the Assembly, be referred to a Select Committee consisting of 15 Members of the Legislative Council ".

The amendment was put and lost.

DEPUTY CHAIRMAN : The question is—

"That the Tamil Nadu Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 (L. A. Bill 5 of 1970), as passed by the Assembly, be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 4 were put and carried.

Clause 1, the Long Title and the Enacting Formula were put and carried.





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உதவித் தலைவர் அவர்களே, "சட்டப் பேரவை நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கூட்டுறவு நில வள வங்கிகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 5/1970) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

DEPUTY CHAIRMAN : The question is—

'That the Tamil Nadu Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 5 of 1970), as passed by the Assembly, be passed ".

The motion was put and carried and the Bill was passed.

DEPUTY CHAIRMAN—The House will now adjourn and meet again at 4 p.m. on Wednesday, the 25th March 1970. 7-25 p.m.

The House then adjourned.

## IV. PAPERS LAID ON THE TABLE OF THE HONSE.

### A. *Statutory Rules and Orders.*

156. Notification issued with G.O. Ms. No. 1668, Revenue, dated the 14th August 1969 making the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Rules, 1969. [*Laid on the Table of the House under section 14 (4) of the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Act, 1969 (Tamil Nadu Act 19 of 1969.*]

### B. *Report, Notifications and other Papers.*

48. The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1970 (L. A. Bill No. 4 of 1970).

49. The Tamil Nadu Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 (L. A. Bill No. 5 of 1970).

# APPENDIX I.

(*Vide* answer to Starred Question No. 201 on page 2).

(அ) இம் மாநிலத்தில் 1969–70-ஆம் ஆண்டுக்கான உணவு தானியங்கள் உற்பத்திக் குறிக்கோள் அளவு 63 லட்சம் டன் ஆகும். எல்லா வகைப் பயிர்களும் அறுவடையாகும் வரையில், வறட்சி காரணமாக 1969–70-ல் உற்பத்தி எவ்வளவு குறையும் என்று மதிப்பிட இயலாது. இருந்தபோதிலும், 1969–70-ல், வடகிழக்குப் பருவ மழையினுல் உணவு உற்பத்தி 63 லட்சம் டன்கள் அளவை அடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

(இ) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வறட்சித் துயர்தணிப்புப் பணிகள் பலவற்றை இவ்வரசு மேற்கொண்டுள்ளது. இவற்றில் பாசனக் கிணறுகள் வெட்டுதலும் ஆழப்படுத்துதலும், பெரிய சிறிய பாசன ஏரிகளைச் செப்பனிடுதலும், மண்வளப் பாதுகாப்பு போன்ற வேலைகளும் அடங்கும்.

உணவு தானியங்கள் பற்றுக் குறையைச் சரிக்கட்டும் பொருட்டு, 3 லட்சம் டன் அரிசி வழங்குமாறு இந்திய அரசை இவ்வரசு எழுதிக் கேட்டது. இருப்பினும், இந்திய அரசு 1969 அக்டோபர் வரை 80,000 டன் அரிசி வழங்கியுள்ளது.

மக்களிடையே கோதுமை உட்கொள்ளும் பழக்கத்தைக் கொண்டு வந்து, வறட்சிப் பகுதிகளில் அரிசி வழங்குவதை ஓரளவுக்குக் குறைத்து கோதுமை வழங்கும் எண்ணத்துடன் இம் மாநிலம் முழுவதும் 11—5—69 தேதி முதல் 31—1—70 வரை ஈடு செய் விலையில் கோதுமை வழங்கப் பட்டது.

# APPFNDIX II

(*Vide* answer to Starred Question No. 206 on page 13).

## தமிழ்நாடு தெய்வீகப் பேரவை சென்னை

தமிழ்நாடு தெய்வீகப் பேரவை என்பது இந்துக்கள் இந்து சமயத்தின் சீரிய தன்மையை நன்குணர்ந்து போற்றவும், இந்துக்களுக்கு அவர்களது சமயத்திடமுள்ள பற்றை வலுப்படுத்தவும், இந்து தர்ம, நீதி நூல்களில் கூறியுள்ளவாறு இந்து சமய வாழ்க்கையின்படி தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் உதவும் வகையில் இம்மாநிலத்தில் சமயப் பணிகளை மேற்கொள்ளும் நோக்குடன் அமைக்கப்பட்டது. இப்பேரவை தென் இந்தியாவிலுள்ள மடங்கள், கோவில்கள் அடங்கிய ஒரு நிறுவனமாகும். இந்து சமயத்தினரிடையே கருத்து வேறுபாட்டிற்குரியதான பொருள்கள் தவிர்க்கப்படும். பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட கூறுகள் வற்புறுத்தப்பட்டு இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டுள்ள எல்லா இந்துக்களுக்கும் மேற்கூறிய நடவடிக்கைகளின் பயன் கிட்டுமாறு செய்யப்படும்.

2. இப்பேரவை சங்கங்கள், பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட ஒரு நிறுவனமாகும். இதன் அலுவலகம் 22, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-34 என்ற முகவரியிலுள்ளது. மடாதிபதிகளும் சென்னை இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறை ஆணையாளரு மடங்கிய மாநில மன்றத்தினுல் பேரவையின் பணிகள் ஏற்பாடு செய்யப் படுகின்றன. இப்பேரவையின் தலைவர் பதவி மடாதிபதி ஒருவரால் முறைமாற்றுப்படி ஓராண்டு கால அளவிற்கு வகிக்கப்படும். இந்து சமய அறக்கட்டளைகள் ஆணையாளர், அலுவல் முறையால் பேரவையின் துணைத் தலைவராவார். தருமபுரி ஆதினத்தின் மடாதிபதியாகிய தவத்திரு. ஸ்ரீலஸ்ரீ



கயிலை சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களை முதல் பேரவைத் தலைவராகக் கொண்டு இந்நிறுவனம் 13—6—1966 முதற்கொண்டு செயல்படத் துவங்கியது. துணை ஆணையாளர் பதவித் தரத்திலுள்ள ஒருவர் இந்நிறுவனத்தின் செயலாளராக விரைவில் பொறுப்பேற்பார்.

3. அன்றாட வழிப்பாட்டிற்கு உரித்தான எளிய கடவுள் வணக்கப் பாடல்கள், அல்லது இந்து சமய அடிப்படைக் கொள்கைகளை விளக்கும் சிறு நூல்கள் அல்லது நூல்கள், சமயப் பொருள் குறித்த ஐயப்பாடுகளை நீக்கும் வெளியீடுகள், இந்து சமயத்தை எதிர்க்கும் அறிக்கை அல்லது பிரசாரங்களுக்கு விடையளிக்கும் நூல்கள், ஆரம்பப் பள்ளிச் சிறுவர் களுக்கு இலவசமாக வழங்குவதற்காக ஔவையார், ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, நன்னெறி பிற நீதி நூல்கள் போன்ற நூல்களை வெளியிடுதல், உயர்தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு வழங்குவதற்காக திருக்குறள் (அறத்துப்பால், பொருட்பால்), நீதி நெறி விளக்கம் ஆகிய நூல்களை வெளியிடுதல், போட்டி நிகழ்ச்சிகளுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட திருமுறைகளை வெளியிடுதல் ஆகியவற்றுக்காக இந்து சமய இலக்கியத்தில் தேர்ந்தவர்களைக் கொண்ட ஆசிரியர் குழு ஒன்றை இந்நிறுவனம் அமைத்துள்ளது. மேற்கூறிய நூல்களிலிருந்து பாடல்களை மனப்பாடம் செய்து ஒப்பிக்கும் போட்டி ஆசிரியர் குழுவால் நடத்தப்படும். அப் போட்டிகளில் முதன்மையாக நிற்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். இம் மாநிலத்தில் இந்து சமயப் பிரச்சாரகர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக, ஒன்று அல்லது இரண்டு பள்ளிகள் தொடங்கப்படும். பயிற்சியாளர் களுக்குத் தேவையான தகுதிகள், பயிற்சிக் கால அளவு பின்பற்றப்படும் பாட முறை, தொடர்பான பிற பொருள்கள் வரையறுக்கப்படும். மேலும் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் இவர்களுக்கு முட்முர பயிற்சியளிப்பதற்குப் பாடசாலைகள் தொடங்கப்படும். இம்மாநிலத்தில் மடங்களாலும், கோயில் களாலும் நடத்தப்படும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு விருப்ப அடிப்படையில் சமஸ்கிருதம் கற்றுக்கொள்ள தகுந்த வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

4. பொதுவாக, இம்மாநிலத்திலுள்ள இந்துக்களின் சமய நலனுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான எல்லா நடவடிக்கை களும் மேற்கொள்ளப்படும். மேலும் இந்நிறுவனம் எல்லா வசதி களுடனும் கூடிய மருத்துவ மனைகளை எவ்வளவு இடங்களில் நிறுவ முடியுமோ அவ்வளவு இடங்களில் நிறுவும்.

5. மாவட்ட மன்றங்களின் வாயிலாக ஒவ்வொரு நகரிலும் வட்டத் திலும், மாவட்டத்திலும் சமயப்பணி புரிவதே இந்நிறுவனத்தின் முக்கிய பணியாயிருக்கும். மாவட்ட மன்றத்திற்கு அப்பகுதியின் துணை ஆணை யாளர் தலைமை வகிப்பார். மடங்கள், கோயில்கள் இவைகளின் அதிபர் கள், அரசு அலுவலில் இல்லாத உள்ளூர் பெரிய மனிதர்கள் ஆகியோர் மாவட்ட மன்ற உறுப்பினர்களாக இருப்பார். மாவட்ட மன்றம் அப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பணிகளைக் கண்காணிக்கும். குறிப்பாக கீழ்க்கண்டவற்றைக் கண்காணிக்கும்—

(1) இந்துக் குழந்தைகள் கல்வி பயில பள்ளிகளில்லாத ஊர்களில், மாநில மன்றங்களிலிருந்து தேவையான அளவு நிதியுடன் கீழ்த்திசைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படும். இத்தகைய பள்ளிகளில் இந்து சமயப் பற்று குறித்த ஒழுக்கம் சமய நெறி பற்றிய போதனைகள் பாடத் திட்டத் தில் சேர்த்துக் கொள்ளப்படும்.

(2) அப்பகுதியிலுள்ள அனாதை இல்லங்கள் சரிவர நடைபெறு கின்றனவாவென்று மாவட்ட மன்றம் கவனித்து அவசியமெனக் கருதினால் இதுபோன்று மேலும் கூடுதல் அனாதை இல்லங்களைத் திறப்பது பற்றிய செயற்குறிப்புகளை மாநில மன்றத்திற்கு அனுப்பும்.

(3) தற்பொழுது, மருத்துவ வசதி போதுமான அளவுக்கு இல்லாத அல்லது தகுந்த வகையில் அமையாத இடங்களில் மருந்தகங்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட மன்றம் எடுத்துக்கொள்ளும்,

இத்தகைய மருந்தகங்களில் உள்ளூர் பகுதிகளின் தகுதிக்கேற்ப ஆயுர்வேத, சித்த, ஹோமியோபதி, ஆங்கில மருத்துவ முறைகளில் சிகிச்சை அளிக்கப்படும்.

6. சமயத்தின் "அடிப்படைப்பணி" ஒவ்வொரு கிராமத்திலும் உள்ளூர் சங்கங்களால் மேற்கொள்ளப்படும். இந்துக்களின் சமய, சமுதாய வாழ்வுக்குத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் இந்தச் சங்கங்கள் மேற்கொள்ளும். மடங்கள் தங்களால் எவ்வளவு பகுதிகளை எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு பகுதிகளை எடுத்துக்கொண்டு அங்கெல்லாம் சங்கங்களை நிறுவ வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மடங்களால் அல்லது ஏனைய நிறுவனங்களால் மேற்கொள்ளப்படாது விடுபட்ட பகுதிகளில் மாவட்ட மன்றங்கள் சங்கங்களை அமைக்கும்.

7. இச்சங்கம் அவ்வப் பகுதி மக்களின் வசதிக்கு ஏற்ப வாரத்தின் ஏதாவது ஒருநாளில் "வார வழிபாடு" நடத்தும். இந்த வார வழிபாடுகளுக்கு முன்னர், வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், புராண இதிகாச பிரசங்கங்கள். கோயில்கள் அல்லது கோயில்களில் நடைபெறும் விழாக்கள் அல்லது ஏனைய சமய நடவடிக்கைகள் பற்றிய திரைப்படங்கள் போன்ற தகுந்த கேளிக்கை நிகழ்ச்சிகள் நடைபெறும். அடுத்தநாள் ஒவ்வொரு இந்துவும் "அன்றாட வழிபாடு" செய்வதன் முக்கியத்துவம் அவசியம் பற்றிய சுருக்கமான உரையொன்று நடத்தப்படும். இந்த வழிபாடு எவ்வாறு செய்யப்பட வேண்டுமெனத் தகுதிவாய்ந்தவர்களால் செய்முறையில் விளக்கப்படும். இத்தகைய செய்முறை விளக்கத்திற்குப் பின்னர் "மௌன தியானம்" செய்யுமாறு உரை கேட்க வந்தவர்கள் கேட்கப்படுவர். இதன் பின்னர் தெரிந்தெடுக்கப்பட்ட "நாமாவளிகளை" அனைவரும் சேர்ந்து பாடவேண்டும். நாமாவளிகளில் நன்கு தேர்ச்சி பெற்ற ஒருவர் முதலில் நாமாவளிகளைச் சொல்லுவார். பிறர் அவரைப் பின்பற்றி அவற்றைத் திரும்பக் கூறவேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட மனப்பாடப் பக்திப் பாடல்களை அப்பகுதியிலுள்ள இந்துக்களுக்குப் பாராயணம் செய்யப் பயிற்சியளிப்பதற்கு ஓதுவார்கள் அல்லது தகுதியானவர்களை சங்கம் நியமிக்கும். இப்பகுதியிலுள்ள பள்ளிகளில் சங்கம், போட்டிகள் நடத்த ஏற்பாடு செய்யும். ஆசிரியர் குழு குறிப்பிடும் சமய நூல்களிலிருந்து அல்லது சமய இலக்கியங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளை மனப்பாடம் செய்து ஒப்பிப்பவர்களுக்குப் பரிசுகள் வழங்கவும் மேற்படி சங்கம் ஏற்பாடு செய்யும். கோயில்களே இல்லாத பகுதிகளில், விநாயகர் அல்லது அனுமார் அல்லது அந்த உள்ளூர் பகுதியில் மிகவும் புகழ் வாய்ந்த ஒரு கடவுளுக்குக் கோயில் கட்டுவது பற்றிய நடவடிக்கைகள் சங்கத்தால் மேற்கொள்ளப்படும். மேலும் கோயில்கள் முறையாக பேணப்படுவது குறித்து குறிப்பாக அப்பகுதி கிராம அர்ச்சகர் மூலமாக கோயில்கள் சரிவர பேணப்பட்டு வருகின்றனவா என்பதை சங்கம் நன்கு கவனிக்கும். இது குறித்து உரிய நேரத்தில் நடவடிக்கைகள் எடுக்குமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வற்புறுத்தும். கோயில்கள் புனித தலங்கள் முதலியவற்றில் நெடுங்காலமாக வழக்கிலுள்ள மரபு வழிப்படி விழாக்கள் நடத்துவதற்கு கோயில் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பும், உதவியுமளிக்கும். பூசாரிகளுக்குத் தேவையான ஊக்கமும் அளிக்கும். தேர்திருவிழா சரியாக நடைபெறுவதால் இச்சங்கம் குறிப்பான நாட்டம் செலுத்தும். அப்பகுதியிலுள்ள இந்து சமயத்தைச் சேர்ந்த எல்லா வகுப்பினரும் கோயில் தேரை இழுப்பதில் முக்கிய பங்கு கொள்ளச் செய்ய இச்சங்கம் ஊக்கமளிக்கும். கோயில் தேர்கள் இல்லாத ஊர்களில் அல்லது தேர்த்திருவிழா கைவிடப்பட்ட இடங்களில், சங்கம், தகுதியான தேர்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் அல்லது தேர்த் திருவிழாவை மீண்டும் நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இச்சங்கம் "அரிசி உண்டி" வைத்து அந்த உண்டிகளில் சேர்ப்பிக்கப்படும் அரிசியை குறித்த காலத்துக்கு ஒரு முறை சேகரிக்கும். அவ்வாறு சேர்க்கப்படும் அரிசியை சமைத்து உள்ளூர் கோயிலில் "நிவேத்தியமாக" வைத்து அதைப் "பிரசாதமாக" பாதி விலைக்குப் பகிர்ந்தளிக்கும் இவ்வாறு சேமிக்கப்படும் தொகை, கோயில்களில் "நிவேத்தியங்களை" நிலையான அடிப்படையில் தொடர்ந்து





சலுகை விலையில் அளிக்கப் பயன்படுத்தபடும். அப்பகுதியில் பணிபுரியும் பிரச்சாரகர்கள் அல்லது தகுதியானவர்கள் சிறைச்சாலையிலுள்ள கைதிகளையும் மருத்துவ மனைகளிலுள்ள நோயாளிகளையும், அப்பகுதியிலுள்ள சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள இளங் குற்றவாளிகளையும் சென்று பார்க்கவும் அவர்களுக்குப் புனித பிரசாதம் வழங்கவும், வருங்காலத்தில் நல்வாழ்வு வாழுமாறு கைதிகளுக்கும் இளம் குற்றவாளிகளுக்கும் அறிவுரை வழங்கவும், மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறுவோருக்கு ஆறுதல் அளிக்க எல்லா வகை உதவிகளைச் செய்யவும் இச்சங்கம் வகை செய்யும். கல்வி பயில பள்ளிகளில்லாது இந்துக்கள் துன்புறும் பகுதிகளில் கீழ்த்திசைப் பள்ளிகளைத் தொடங்க சங்கம் வகை செய்யும். அப்பகுதியிலுள்ள இந்து அனாதை இல்லங்கள் சரிவரச் செயல்படுகின்றனவா என்றும் இச்சங்கம் கண்காணிக்கும். அவசியமான இடங்களில் அவ்வப் பகுதிகளின் தேவைக்கேற்ப ஆயுர்வேத, சித்த, ஹோமியோபதி, ஆங்கில மருத்துவ முறைகளில் மருத்துவ சிகிச்சை அளிக்க மருந்தகங்கள் நடத்த இச்சங்கம் வகை செய்யும். அப்பகுதியில், அனாதையாக இறப்பவர்களை இந்து சமய நெறிகளுக்கிணங்க முறைப்படி அடக்கம் செய்யவும், அவர்களின் ஈமக் கடன்களை நடத்தவும் இச்சங்கம் வகை செய்யும்.

8. சென்னை, இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறை, ஆணையாளரைத் தலைவராகக் கொண்டும், மாநில மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவல் சார்பற்ற 9 உறுப்பினர்களைக் கொண்டும் மாநில ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்படும். இந்த ஆலோசனைக் குழு பேரவை தமக்கு அனுப்பும் எல்லா நேர்வுகள் குறித்தும் பேரவைக்கு ஆலோசனையளிக்கும். மாவட்ட மன்றங்கள், மாநில மன்றச் செயலாளருக்கு அனுப்பும் காலாண்டு அறிக்கையை ஆய்வு செய்து, அதுபற்றித் தமது கருத்தையும் ஆலோசனைகளையும் மாநில மன்றத்துக்கு இந்த ஆலோசனைக் குழு தெரிவிக்கும். பேரவையின் நோக்கங்களைச் செயல்படுத்துவது குறித்த எல்லாப் பொருள்கள் பற்றியும் அது ஆலோசனை அளிக்கும்

9. இப்பேரவை நல்ல நிதி நிலைமையைப் பெற்றிருக்கும். மடங்கள், கோயில்கள், தாங்களாக மனமுவந்தளிக்கும் ஆண்டு நன்கொடைகள், குறிப்பிட்ட அறக்கட்டளைகள், மேற்கூறிய நிறுவனங்களால் வழங்கப்படும் சிறப்பு நன்கொடைகள், இந்து சமய அறக்கட்டளைகள் பொது நிதியிலிருந்து வழங்கப்படும் மானியம், ஏனைய பிற வழிகளிலிருந்து கிடைக்கும் நன்கொடைகள் இந்நிதியில் அடங்கும்.

10. பொதுவாக, இந்துக்கள், இந்து சமய நீதி நூல்களில் வரையறுக்கப்பட்டுள்ள வழிமுறைகளுக்கிணங்க தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் வகையில் இந்து சமயத்திற்குப் புத்துயிர் அளிக்கவும், இந்து சமுதாயத்தைச் சீரமைக்கவும் இப்பேரவை பாடுபடும்.

## APPENDIX III.

[*Vide* iem V (i) on page 552.]

(As passed by the Assembly)

*A Bill to provide for the withdrawal of certain sums from and out of the Consolidated Fund of the State for the service of a part of the financial year commencing on the 1st April 1970.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-first Year of the Republic of India as follows:—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1970.

[9th March 1970

2. *Withdrawal of certain sums from and out of Consolidated Fund of the State for a part of the financial year commencing on the 1st April 1970.*—The State Government may withdraw from and out of the Consolidated Fund of the State sums not exceeding one hundred and sixty-four crores thirty-one lakhs fifty-nine thousand and nine hundred rupees, being moneys required to meet—

(*a*) the grants made in advance by the Tamil Nadu Legislative Assembly for a part of the financial year commencing on the 1st April 1970, as set forth in column (3) of the Schedule; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for the same part of the same financial year, as set forth in column (4) of the Schedule.

3. *Appropriation.*—The sums authorized to be withdrawn from and out of the Consolidated Fund by this Act shall be appropriated for the services and purposes expressed in the Schedule in relation to the said year.

THE SCHEDULE.

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. | | |
|---|---|---|---|---|
| | | Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department. | 52,00,000 | *100* | 52,00,100 |
| 2 | Motor Vehicles Acts—Administration. | 9,00,000 | .. | 9,00,000 |
| 3 | General Sales Tax and Other Taxes and Duties—Administration | 45,00,000 | *2,000* | 45,02;000 |
| 4 | Stamps—Administration .. | 7,00,000 | .. | 7,00,000 |
| 5 | Registration Department .. | 23,00,000 | *100* | 23.00,100 |
| | *Debt Charges* .. .. | .. | *10,10,00,000* | 10, 10,00,000 |
| 6 | State Legislature .. .. | 6,00,000 | *14,000* | 6,14,000 |
| 7 | Elections .. .. .. | 2,00,000 | .. | 2,00,000 |
| 8 | Head of State, Ministers and Headquarters Staff. | 1,14,00,000 | *4,00,000* | 1,18,00,000 |
| 8A | Milk Supply Schemes .. | 97,00,000 | .. | 97,00,000 |
| 9 | District Administration and Miscellaneous. | 3,89,00,000 | *10,000* | 3,89,10,000 |
| 9A | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959. | 10,00,000 | *200* | 10,00,200 |
| 10 | Administration of Justice .. | 60,00,000 | *8,00,000* | 68,00,000 |
| 11 | Jails .. .. .. | 59,00,000 | .. | 59,00,000 |
| 12 | Police .. .. .. | 3,62,00,000 | *100* | 3,62,00,100 |
| 13 | Education .. .. .. | 16,93,00,000 | .. | 16,93,00,000 |
| 14 | Medical .. .. .. | 3,99,00,000 | *100* | 3,99,00,100 |
| 15 | Public Health .. .. | 2,25,00,000 | *100* | 2,25,00,100 |
| 16 | Agriculture .. .. .. | 4,00,00,000 | *300* | 4,00,00,300 |



9th March 1970]

| Demand number. | Services and purposes. | Sums not exceeding. | | |
|---|---|---|---|---|
| | | Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 17 | Fisheries .. .. .. | 44,0,,000 | .. | 44,00,000 |
| 18 | Animal Husbandry .. | 96,00,000 | *100* | 96,00,100 |
| 19 | Co-operation .. .. | 1,00,00,000 | .. | 1,00,00,000 |
| 20 | Industries .. .. .. | 96,00,000 | *5,000* | 96,05,000 |
| 21 | Cinchona .. .. .. | 14,00,000 | .. | 1400,000 |
| 22 | Khadi .. .. .. | 4,00,000 | .. | 4,00,000 |
| 23 | Community Development Projects, etc. | 1,51,00,000 | .. | 1,51,00,000 |
| 24 | Labour including Factories. | 20,00,000 | *100* | 20,00,100 |
| 25 | Welfare of the Scheduled Tribes, Castes and Other Backward Classes. | 2,21,00,000 | *100* | 2,21,00,100 |
| 26 | Irrigation .. .. .. | 94,00,000 | .. | 94,00,000 |
| 27 | Public Works—Works .. | 2,55,00,000 | *50,000* | 2,55,50,000 |
| 28 | Public Works—Establishments and Tools and Plant. | 1,09,00,000 | .. | 1,09,00,000 |
| 29 | Public Works—Grants-in-Aid | 75,00,000 | .. | 75,00,000 |
| 30 | Road Transport Schemes | 4,88,00,000 | *50,000* | 4,88,50,000 |
| 31 | Famine Relief .. .. | 4,00,000 | *12,00,000* | 16,00,000 |
| 32 | Pensions .. .. .. | 1,08,00,000 | *3,00,000* | 1,11,00,000 |
| 33 | Miscellaneous .. .. | 2,08,00,000 | *4,00,000* | 2,12,00,000 |
| 34 | Stationery and Printing .. | 69,00,000 | *5,000* | 69,05,000 |
| 35 | Forest Department .. .. | 49,00,000 | *100* | 49,00,100 |
| 36 | Other Miscellaneous Compensations and Assignments. | 2,23,00,000 | *5,00,000* | 2,28,00,000 |
| 37 | Compensation to Zamindars. | 19,00,000 | .. | 19,00,000 |
| 38 | Capital Outlay on Public Health. | 11,00,000 | .. | 11,00,000 |
| 39 | Capital Outlay on Agriculture. | 5,00,000 | *100* | 5,00,100 |
| 40 | Capital Outlay on Industrial Development. | 2,17,00,000 | *100* | 2,17,00,100 |
| 41 | Capital Outlay on Irrigation. | 2,13,00,000 | .. | 2,13,00,000 |
| 42 | Capital Outlay on Public Works. | 3,00,00,000 | *100* | 3,00,00,000 |
| 43 | Capital Outlay on Road Transport Schemes. | 75,00,000 | *100* | 75,00,100 |
| 44 | Capital Outlay on Forests .. | 35,00,000 | .. | 35,00,000 |
| 45 | Commuted value of Pensions. | 2.00,000 | *22,000* | 2,22,000 |
| 46 | Capital Outlay on Scheme of Government Trading. | 14,25,00,000 | *100* | 14,25,00,100 |
| 47 | Loan and Advances by the State Government. | 5,89,00,000 | .. | 5,89,00,000 |
| | *Public Debt—Repayment* .. | .. | *61,13,00,000* | 61,13,00,000 |
| | Grand Total .. | 92,71,00,000 | *71,60,59,900* | 1,64,31,59,900 |

*I certify tat this is a Money Bills*

Fort St. George,
Madras,
9th March 1970.

K. GOVINDAN,
*Speaker, Tamil Nadu Legislative Assembly.*

[9th March 1970

## APPENDIX IV.

[*Vide* item V (2) on page 552]

### L.A. Bill No. 5 of 1970
### As passed by the Assembly

*A Bill further to amend the Tamil Nadu Co-operative Land Development Banks Act*, 1934.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-first Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Co-operative Land Development Banks (Amendment) Act, 1970.

(2) It shall be deemed to have come into force on the 12th day of October 1969.

2. *Amendment of section 3-A, Tamil Nadu Act X of* 1934.— In the third proviso to sub-section (3) of section 3-A of the Tamil Nadu Co-operative Land Development Banks Act, 1934 (Tamil Nadu Act X of 1934) (hereinafter referred to as the principal Act), for the words " existing members of ", the words " existing members of the Board of Directors of " shall be substituted.

3. *Amendment of section 3-B, Tamil Nadu Act X of* 1934.— Section 3-B of the principal Act shall be re-numbered as sub-section (1) of that section, and—

(i) in sub-section (1) as so re-numbered, for the word " delegates ", the word " presidents " shall be substituted;

(ii) after sub-section (1) as so re-numbered, the following sub-section shall be added, namely :—

" (2) The election of a person as a member of the Board shall not be called in question on the ground of the existence of any vacancy for whatever reason among the presidents of the primary land development banks ".

4. *Amendment of section 38-C, Tamil Nadu Act X of* 1934.— In section 38-C of the principal Act, for the words " or in any other law ", the words and brackets " or in any rule or by-law (including the by-law of any registered co-operative society) or in any other law " shall be substituted.

## THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Wednesday, the 25th March 1970.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, the Deputy Chairman (Thiru G. KRISHNAMOORTHY) in the Chair.

### I. OBITUARY REFERENCE TO Thiru S. RAMANATHAN, FORMER MINISTER OF MADRAS STATE.

DEPUTY CHAIRMAN : I have to inform the House, with deep regret, of the death of Thiru S. Ramanathan, a former Minister of Madras State, on the 9th March 1970, in Madras.

He was elected to the Legislative Assembly from the Mayavaram-Shiyali General Rural Constituency during the general elections, 1937. He was Minister for Public Information and Administration Reports in the First Congress Ministry of Rajaji in 1937.

He took part in the Self-Respect Movement and edited for some time the "Revolt " and the "Rationalist ".

On behalf of this House, I shall convey our deep sense of sorrow to the members of the bereaved family.

I request the hon. Members to stand in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

Accordingly, the hon. Members stood in silence for a couple of minutes as a mark of respect to the deceased.

### II. QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS

DEPUTY CHAIRMAN : Questions 182 to 185 and 196 to 198 are postponed.

*Fort St. George Gazette.*

*202. † *Q.*—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(*a*) the reason for printing the expression "Governor of Madras " in the Extra-ordinary Issue of the *Fort St. George Gazette* (English) (No. 191 —Part II Section 2), dated 4th August 1969 ; and

(*b*) whether the Government have ordered that both the expressions "Governor of Madras " and "Governor of Tamil Nadu " may be used in English ?

**தமிழ்நாடு அரசிதழ்.**

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : *மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—*

(அ) 1969-ம் வருடம் ஆகஸ்டு மாதம் 4-ம் தேதியிட்ட தமிழ் நாடு அரசிதழ் தனி வெளியீட்டில் (எண் 191—இரண்டாம் பாகம், இரண்டாம் பிரிவு) ஆங்கில பதிப்பில் " Governor of Madras " என்று அச்சிடப் பட்டிருப்பதற்கான காரணமென்ன ?

† Postponed from the list of questions for 9th March 1970.

(இ) "Governor of Madras" "Governor of Tamil Nadu", என்கிற இரு சொற்றொடரையும் ஆங்கிலத்தில் உபயோகிக்கலாம் என அரசு ஆணை பிறப்பித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) சம்பந்தப்பட்ட துறையினரிடமிருந்து அனுப்பியதைப்போலவே அரசு அச்சகத்தில் அச்சிடப் பட்டிருக்கிறது. எனினும் இனி இது போன்று பிழை நேரா வண்ணம் அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) இல்லை.

*Elementary School Teachers.*

*203. †. *Q.*.—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether the Government have ordered to stop the implementation of the decision of the Adhoc Committee with Sivakasi Divisional Officer as President, by which the couple teachers who were working in the elementary schools of Saminathapuram and East Rajakularaman which are under the administration of Srivilliputhur Panchayat Union, have been transferred to other places ;

(*b*) if so, whether the Panchayat Union has passed a resolution at a special meeting conducted on 26th July 1969 asking the permission to implement this decision without any alteration and sent the same to Government ;

(*c*) whether the Teachers Federation also have supported this by a resolution on 6th July 1969 ;

(*d*) whether the District Collector and M.L.A. of that Constituency have addressed the Government stressing that the decision of Adhoc Committee is reasonable ; and

(*e*) if so, the steps taken by the Government thereon ?

**ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்.**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள சாமி நாதபுரம், கீழ்ராஜகுலராமன் ஆகிய இரண்டு ஊர்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஆசிரியப் பணி புரிந்து வந்த கணவன் மனைவியான இரு ஆசிரியர்களை இவ்வாண்டு வேறு ஊர்களுக்கு மாற்றிய சிவகாசி கோட்ட ஆட்சியாளர் தலைமையிலுள்ள அட்ஹாக் கமிட்டியினரின் முடிவை அமுல் நடத்தாமல் நிறுத்தி வைக்கும்படி அரசு உத்திரவிட்டதா ?

(இ) ஆமெனில் அம்முடிவை மாற்றாமல் அமுல் நடத்த அனுமதிக்கும்படி 1969-ம் வருடம் ஜூலை மாதம் 26-ம் தேதியன்று நடந்த ஊராட்சி ஒன்றிய தனிக் கூட்டம் ஒன்றில் தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியதா ?

(உ) 1969-ம் வருடம் ஜூலை மாதம் 6-ம் தேதி அதை ஆதரித்து ஆசிரியர் கூட்டணியும் அரசுக்கு ஒரு தீர்மானம் மூலம் தெரிவித்ததா ?

(எ) அட்ஹாக் கமிட்டியின் முடிவு நியாயமானதென வற்புறுத்தி அம்மாவட்ட ஆட்சியாளரும், அத்தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினரும் அரசினருக்கு எழுதினரா ?

(ஐ) ஆமெனில் அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

† Postponed from the list of questions for 9th March 1970.





**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) ஆம்.

(எ) மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை ஒன்று பெறப் பட்டுள்ளது. சட்டமன்றப் பேரவை உறுப்பினரிடமிருந்து இது குறித்துக் கடிதம் எதுவும் அரசுக்கு வரவில்லை.

(ஐ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** துணைத் தலைவர் அவர்களே, இதன் மீது ரிப்போர்ட்டு அனுப்பும்படி கலெக்டர் அவர்களைக் கேட்டிருப்பதாக அறிகிறேன். கலெக்டர் அவர்களிடமிருந்து அதற்கான பதில் வந்து விட்டதா ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை ஒன்று பெறப்பட்டுள்ளது. அதன் மீது விரைவாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** கலெக்டரிடமிருந்து வந்த பதிலின் சாரத்தை அமைச்சர் அவர்கள் தயவு செய்து தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** கோட்ட ஆட்சித் தலைவர் குறிப்பின்படியும், ஊராட்சி ஒன்றியத் தலைவர் குறிப்பின்படியும், ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் குறிப்பின்படியும், அந்த ஆசிரியர்கள் மாறுதலை உறுதிப் படுத்த வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய பரிசீலனைக்கு அது வந்திருக்கிறது. விரைவாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

*Creches.*

*204. †. *Q.*—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether any scheme with the provision of new amenities for the creches is to be implemented with the collaboration of Care Institution ;

(*b*) the number of creches in Tamil Nadu district-wise ;

(*c*) whether there is any proposal to increase the number of the creches ;

(*d*) the number of places, which have come forward to give local help for the construction of buildings for the creches according to the new scheme ; and

(*e*) whether the Government will place on the table of the House, a statement containing the procedures adopted in these creches ?

**குழந்தைகள் காப்பகங்கள்.**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கேர் (Care) நிறுவனத்தினரின் ஒத்துழைப்புடன் குழந்தைகள் காப்பகங்களுக்கு புதிய வசதிகளுடன் கூடிய திட்டம் செயல்பட விருக்கிறதா ?

(இ) தமிழ் நாட்டில் குழந்தைகள் காப்பகங்கள் மாவட்ட வாரியாக எத்தனை உள்ளன ?

† Postponed from the list of Questions for 9th March 1970.

[25th January 1970

(உ) இக்காப்பகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(எ) புதிய திட்டப்படி காப்பகங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு உள்ளூர் உதவி தர எத்தனை ஊர்கள் முன்வந்திருக்கின்றன ?

(ஐ) இக்காப்பகங்களின் நடைமுறைகள் அடங்கிய விவர அறிக்கை யொன்றை அரசு மன்றத்தின் முன் வைக்குமா ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** (அ) ஆம்.

| | |
|---|---|
| (இ) வட ஆற்காடு மாவட்டம் .. .. .. | 119 |
| தென் ஆற்காடு மாவட்டம் .. .. .. .. | 115 |
| செங்கற்பட்டு மாவட்டம் .. .. .. .. | 51 |
| கோயமுத்தூர் மாவட்டம் .. .. .. .. | 55 |
| தருமபுரி மாவட்டம் .. .. .. .. | 49 |
| கன்னியாகுமரி மாவட்டம் .. .. .. .. | 61 |
| மதுரை மாவட்டம் .. .. .. .. .. | 82 |
| நீலகிரி மாவட்டம் .. .. .. .. .. | 20 |
| இராமநாதபுரம் மாவட்டம் .. .. .. | 109 |
| சேலம் மாவட்டம் .. .. .. .. .. | 45 |
| தஞ்சாவூர் மாவட்டம் .. .. .. .. | 158 |
| திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. .. .. | 92 |
| திருநெல்வேலி மாவட்டம் .. .. .. .. | 78 |

(உ) ஆம்.

(எ) & (ஐ) "கேர்" நிறுவனத்தின் உடனுழைப்புடன் பள்ளி செல்லும் வயதடையாச் சிறுவர்கள் பேறு கால மகளிர் மற்றும் பாலூட்டும் அன்னையருக்கு ஊட்டமளித்தல், குழந்தைகள் காப்பகங்களுக்கான (பாலவாடிகள்) கட்டிடங்கள் கட்டுதல் குறித்த திட்டமொன்றைச் செயல்படுத்துவதற்குரிய விரிவான கட்டளைகளை அரசு பிறப்பித்துள்ளது. இத் திட்டம் கிராம வளர்ச்சி-உள்ளாட்சித் துறையால் கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் மூலமாக மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட வேண்டும். மேற்படி திட்டத்தை விரைவாகச் செயல்படுத்துவதற்கென கிராம வளர்ச்சி துறை இயக்குநர் அலுவலகம் விரிவான செயற்குறிப்புக்களைத் தயாரித்து வருகிறது. அவை எதிர்பார்க்கப்படுகின்றன.

*Overhead Tank.*

*205†. *Q*.—Thiru T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) the date on which the overhead tank, constructed by the Thirumanur Panchayat, Tiruchirappalli District, was opened ; and

(*b*) the date on which the power connection was given ?

**மேல்மட்ட நீர் தொட்டி.**

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சி மாவட்டம், திருமானூர் பஞ்சாயத்தால் கட்டப்பட்ட மேல் மட்ட நீர் தொட்டி எந்த தேதியில் திறந்து வைக்கப்பட்டது ?

(இ) எந்த தேதியில் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** (அ) & (இ) : 6—10—1969 தேதியில் தற்காலிக மின் இணைப்புடன் திறந்து வைக்கப்பட்டது.

† Postponed from the list of Questions for 9th March 1970.



25th March 1970]

**திரு. டி. கே. சுப்பையா :** துணைத் தலைவர் அவர்களே, மின் இணைப்புக் கொடுக்கும்போது தற்காலிகமாகக் கொடுக்கப்பட்டது என்று சொன்னால், நிரந்தரமாகக் கொடுக்கப்பட்டது எந்தத் தேதியில் ? அப்படி தற்காலிகமாகக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** அதைத் திறந்துவைக்கிற நேரத்தில் தற்காலிகமாக இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி மன்றத்திலிருந்து ஒரு டெபாசிட் தொகையோடு, ஊராட்சி மன்றத் தலைவர் ஒரு ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத்தால்தான் நிரந்தரமாக மின்சார வாரியத்திலிருந்து மின் இணைப்புக் கொடுப்பார்கள். அப்படி எழுதிக் கொடுப்பதில் காலதாமதம் ஆனதால், தற்காலிகமாக இணைப்புக் கொடுக்கப்பட்டது. ஆனால் தற்போது மீண்டும் நிரந்தரமாக மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. டி. கே. சுப்பையா :** விண்ணப்பம் கொடுக்கும்போது, அந்தத் தலைவர் நிரந்தரமாக மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டிருந்தாரா அல்லது தற்காலிகமாக இணைப்பு கேட்டிருந்தாரா ? அவர் கேட்காமல் எப்படி தற்காலிக மின் இணைப்பு கொடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** அதுபற்றிய விவரம் இல்லை.

*Dacoity in Virudhunager—Sattur Highways.*

*211. *Q*..—Thiru R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it has been brought to the notice of the Government that on the early morning of 21st May 1969 some persons waylaid the car of Agricultural Income-tax Officer and other lorries in the Virudhunagar Sattur High Road and relieved them of cash and jewels worth thousands of rupees ; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

**விருதுநகர்-சாத்தூர் நெடுஞ்சாலையில் கொள்ளையிட்ட நிகழ்ச்சி.**

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 21—5—1969 அன்று விடியற்காலையில் விருதுநகர்-சாத்தூர் நெடுஞ்சாலையில் சிலர் ஒரு வேளாண்மை வருமான வரி அதிகாரியின் காரை மறித்தும், லாரிகளை மடக்கியும் ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நகைகளையும், ரொக்கப் பணத்தையும் கொள்ளையிட்ட நிகழ்ச்சி அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் பேரில் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) இதில் சம்பந்தப்பட்டுள்ள குற்றம் சாட்டப்பட்ட பதினைந்துபேர் மீதான குற்றப் பத்திரிகை விருதுநகர் நீதித்துறை சப்மாஜிஸ்ட்ரேட்டிடம் 27—1—1970ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவர்களில் பதின்மூன்று பேர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய இருவரும் தேடப்பட்டு வருகின்றனர்.

*Documentaries.*

*212 Q. THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) the designation of the Officer who decides the contents of the documents released by the State Government ; and

(b) the amount spent for the preparation of Documentaries during 1968-69 ?

மெய்விளக்கத் திரைப் படங்கள்.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாநில அரசினால் வெளியிடப்படும் மெய்விளக்கத் திரைப் படங்களில் பொருள் முடிவு செய்யும் அதிகாரியின் பதவிப் பெயர் யாது ?

(இ) 1968-69ஆம் ஆண்டில் மெய்விளக்கத் திரைப்படங்கள் தயாரிப்பதற்குச் செலவு செய்யப்பட்ட தொகை என்ன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகள் பற்றிய நிகழ்ச்சிப் படங்கள் எல்லாம் திரைப் படக் கல்லூரி மூலமாக எடுக்கப்படுகிறது. அப்படங்களில் எடுக்கப்பட வேண்டிய விவரங்கள் எல்லாம் சம்பந்தப்பட்டத் துறைத் தலைவர்களால் முடிவு செய்யப்படுகிறது. செய்திப் படங்களில் எடுக்க வேண்டிய விவரங்களை செய்தித்துறை இயக்குநர் முடிவு செய்கிறார்.

(இ) 1968-69ல் நிகழ்ச்சிப் படங்களைத் தயாரிக்க செலவிடப்பட்ட தொகை ரூ. 16,871, செய்திப் படம் தயாரிப்பதற்காக ரூ. 2,06,231 செலவிடப்பட்டுள்ளது.

**திரு வி. ஈஸ்வரமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, செய்தித் துறைப் படங்கள் அரசாங்கத்தினுடைய திட்டங்களையும் சாதனைகளையும் காட்டுவதற்குப் பதிலாக, அமைச்சர்களுடைய நிகழ்ச்சிகளையும், சுற்றுப் பயணங்களையுமே அதிகமாகக் காட்டுவதற்காக பரவலாக ஒரு உணர்ச்சி பொது மக்களிடத்தில் இருக்கிறதென்பதை முன்னிட்டு, இனி எதிர் காலத்திலாவது செய்தித்துறைப் படங்களைத் தரமுள்ள படங்களாகவும், அரசாங்கத்தினுடைய பல்வேறு திட்டங்களை விளக்கக்கூடிய படங்களாகவும் தயாரிக்க, அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய சாதனைகளையும், அரசாங்கத்தினுடைய செயல்முறைகளையும் செய்திப் படங்களாகத் தயாரித்துக் காட்டும்போது, அரசாங்கத்தோடு அமைச்சர்கள் ஒன்றியிருக்கிற காரணத்தால், அவர்களும் அந்தப் படங்களில் தவறி விழுந்துவிடுகிறார்கள். ஆகவே தான் அவர்களையும் சேர்த்துக் காட்டுகிறார்கள். பொதுவாக, கல்வி என்ற தலைப்பின் கீழ், கல்வித்துறை மாநாடுகள் கல்லூரிகளின் முக்கிய நிகழ்ச்சிகள், இலவச மதிய உணவுத் திட்டம், குருடர்-செவிடர் பள்ளிகள் பற்றிய செய்திப் படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமின்றி, "கிரிக்கெட் மாட்ச்", "ஹாக்கி மாட்ச்", "வாலி-பால் மாட்ச்", "சைக்கிள் ரேஸ்" போன்றவைகளும் படமெடுக்கப்பட்டுள்ளன. மேலும் "போலிஸ் ஸ்போர்ட்ஸ்" செய்திப்படமாக்கப்பட்டிருக்கிறது. அடுத்து, மதத் துறைகளில் முக்கியமான நிகழ்ச்சிகளும் படமாக்கப்பட்டிருக்கின்றன. சமீபத்தில் வைத்தீஸ்வரன் கோயிலில் நடைபெற்ற "கும்பாபிஷேகத்தை" செய்திப் படமாகத் தயாரித்திருக்கிறார்கள். அதில் எந்த அமைச்சரும் கலந்து கொள்ளவில்லை. அடுத்து, தஞ்சையில் நடைபெற்ற இராஜராஜ சோழனின் ஆயிரமாண்டு விழா நிகழ்ச்சியும் செய்திப் படமாக்கப்பட்டிருக்கிறது. நல்ல கலை நிகழ்ச்சிகள், வெளிநாட்டு கலாசாரக் கோஷ்டிகளின்



நிகழ்ச்சிகள் படமாக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக ரஷ்யன் "பேலட்" படமாக்கப்பட்டிருக்கிறது. "ஜெர்மன் பப்பட் ஷோ" படமெடுக்கப்பட்டு காட்டப்பட்டிருக்கிறது. மேலும் அரசாங்கப் பொது நிகழ்ச்சிகள் போன்ற முக்கிய மாநாடுகள், குடியரசுத் தின விழா நிகழ்ச்சிகள், சுதந்திர தின விழா நிகழ்ச்சிகள், இவைகளையொட்டி நடக்கிற சர்வகட்சிக் கூட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் செய்திப் படங்களாக எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிகழ்ச்சியில் பங்குகொண்டு பேசிய எல்லாத் தலைவர்களுமே அதில் காட்டப்பட்டிருக்கிறார்கள். மேலும் தேசத் தலைவர்களைப்பற்றிய முக்கிய நிகழ்ச்சிகள் என்பதன் அடிப்படையில் காந்தி நூற்றாண்டு விழா படமாக்கப்பட்டு செய்திப் படமாக வெளியிடப்பட்டிருக்கிறது. 31—9—1969ல் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு கோமதிசங்கர திட்சதருக்குப் பாராட்டு தெரிவிக்கும் முறையில் நடைபெற்ற பொன்னாடை போர்த்து விழா பற்றிய செய்திப்படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. திருச்சியில் நடைபெற்ற திரு முத்துராமலிங்கத் தேவரின் விழா செய்திப் படமாக வெளியிடப்பட்டிருக்கிறது. திருச்சியைச் சார்ந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு கல்யாணசுந்தரம் அவர்களின் 60வது பிறந்த தின விழாவும், திரு கு. காமராஜர் பிறந்த தின விழாவும், திரு. இராஜாஜியின் பிறந்த தின விழாவும் படமாக்கப்பட்டிருக்கின்றன. எனவே அமைச்சர்கள் கலந்து கொள்ளுகிற நிகழ்ச்சிகள் மட்டுமே செய்திப் படமாக்கப்படுவதாகச் சொல்ல முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். இராகவானந்தம் :** அமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளுகிற எல்லாத் தொழிலாளர் நிகழ்ச்சிகளும் படமெடுக்கப்பட்டு காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** எவையெவைகளை மக்களுக்குக் காட்டலாம் என்று அரசுத் துறை நினைக்கிறதோ அவைகளெல்லாம் படமெடுத்துக் காட்டப்படுகின்றன.

**திரு. வி. தங்கபாண்டியன் :** மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை, தமிழக அரசு செய்திப் படமாகத் தயாரித்து வெளியிட முன்வருமா ?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** சரித்திரத்தைச் செய்திப் படமாகத் தயாரிப்பது கஷ்டமான காரியமாகும்.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதைப் போல், பல அரசாங்க வேலைத் திட்டங்களைப் பற்றிய செய்திப் படங்கள் தயாரித்துக் காட்டும்போது அமைச்சர்களும் அதில் காட்டப்படுகிறார்கள். ஆனால் பல செய்திப் படங்களில் அமைச்சர்கள் காட்டப்படாத காரணத்தால், அந்த இடங்களுக்கு அமைச்சர்கள் வரவேயில்லை. அவைகளையெல்லாம் அமைச்சர்கள் பார்வையிடவேயில்லை என்ற எண்ணம் மக்களில் பெரும்பாலோர்க்கிருக்கிற காரணத்தால், அந்த இடங்களுக்கு எல்லாம் அமைச்சர்கள் போய்ப் பார்த்து, அவைகளைப் பற்றித் தயாரிக்கும் செய்திப் படங்களிலும் அமைச்சர்கள் இடம் பெற அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினரின் இந்தக் கருத்து ஆலோசிக்கப்படும்.

**திரு. கே. எஸ். அப்துல்வகாப் :** துணைத் தலைவரவர்களே, பல கட்சித் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள் செய்திப் படமாக்கப்பட்டதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். எங்கள் கட்சியின் தலைவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களின் பிறந்த நாள் விழா படமாக்கப்பட்டதா ? இல்லை என்றால், அதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதிலே உறுப்பினர் அவர்களுக்கு அக்கறை இல்லை என்று அர்த்தம். அவர்களும் எழுதிக் கேட்டிருந்தால் அதற்கும் அந்தச் செய்திப் படமெடுக்கும் யூனிட் சென்றிருக்கும்.

**திரு. எம். ராஜா ஐயர் :** தற்போது செய்திப் படங்களெல்லாம் 35 எம். எம். படங்களாகவே இருக்கின்றன. இவைகள் எல்லாம் 16 எம்.எம். படங்களாக எடுக்கப்பட்டு பள்ளிகளில் திரையிடப்படுவதற்கும் அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதில் ஒரு குறிப்பிட்ட படங்களை, அதாவது அறிவுரை புகட்ட உதவியாயுள்ள படங்களை 16 எம். எம். படங்களாக்கி பள்ளிகளுக்கும் பயன்படுத்தலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது.

**Thiru G. VASANTHA PAI :** Will the Government consider the question of having films taken of all our temples and places of resort, like Ootacamund, Kodaikanal and Thekkadi and exhibiting them?

**மாண்புமிகு திரு மு. கருணாநிதி :** இப்போதே பல ஆலயங்கள் படமாக்கப்பட்டிருக்கின்றன. நம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பல ஆலயங்களுக்கும் சென்று அங்குள்ள ஆபரணங்களைப் பார்வையிடுவது போன்ற ஒரு படத் தொகுப்பு வண்ணப்படத்தில் தொகுக்கப்பட்டிருக்கிறது. அவைகளோடு மாண்புமிகு உறுப்பினர் திரு வசந்த பாய் அவர்கள் சொல்லுகிற ரம்யமான காட்சிகளும் படமெடுக்கப்பட்டு அவைகளும் தொகுக்கப்பட்டு வெளியிடப்படும்.

### *District Educational Officers*

* 213 Q. Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the number of District Educational Officers who have been provided with departmental Jeeps ; and

(*b*) the proposal, if any, to supply such Jeeps to the remaining District Educational Officers ?

### மாவட்டக் கல்வி அதிகாரிகள்.

**திரு எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையினுல் ஜீப் வண்டி வசதி அளிக்கப்பட்டுள்ள மாவட்டக் கல்வி அதிகாரிகள் எத்தனை பேர் ?

(இ) ஜீப் வண்டிகள் வழங்கப்படாத எஞ்சியுள்ள மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு, ஜீப் வண்டிகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) 38 மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு ஜீப் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) மேலும் 7 மாவட்டக் கல்வி அலுவலர்கட்கும் ஜீப் கொடுக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

### *National Foundation for Teachers' Welfare*

* 214 *Q*—Thiru M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the collections made for the National Foundation for Teachers' Welfare in this State during 1967, 1968 and 1969;

(*b*) the amounts available for helping teachers in each of the three years; and

(*c*) the amounts distributed and the number of beneficiaries each year?



### ஆசிரியர் நலனுக்கான தேசிய நிறுவனம்

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) ஆசிரியர் நலனுக்கான தேசிய நிறுவனத்திற்கு 1967, 1968, 1969ஆம் ஆண்டுகளில் இம்மாநிலத்தில் வசூலிக்கப்பட்ட நன்கொடை எவ்வளவு ?

(இ) இம்மூன்று ஆண்டுகளின் ஒவ்வோர் ஆண்டிலும், ஆசிரியர்களுக்கு உதவி செய்வதற்காக கிடைத்த தொகை எவ்வளவு ?

(உ) ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்ட தொகையும், பயன்பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையும் என்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** ஒரு விவர அறிக்கை* மேலவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். ராஜா அய்யர் :** துணைத் தலைவர் அவர்களே, மொத்தம் 21½ லட்சம் ரூபாய் வசூல் ஆகியிருக்கிறது. அதில் ரூ. 17½ லட்சம் அவர்களுக்குக் கொடுப்பதற்குத் தயாராக இருந்தும் கூட, ரூ. 1½ லட்சம்தான் இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கி ரூ. 16 லட்சம் தேங்கிக் கிடக்கிறது. லட்சக்கணக்கான ஆசிரியர்கள் இதற்காக மனுச் செய்திருப்பார்கள் என்று கருதுகிறேன். இவர்களுக்கு இன்னின்ன விதி முறைகளின்படிதான் உதவி அளிக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏதாவது வகை செய்திருக்கிறதா ? இல்லாவிட்டால், அதற்கென மனுக்கள் வரவில்லையா ? கொடுப்பதற்கு ரூ. 17½ லட்சம் இருந்தும் ரூ. 16 லட்சம் தேங்கிக் கிடப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, அந்த நிதி 1966லிருந்து திரட்டப்பட்டாலும், 1968 முதல்தான் தரப்படுகின்றது. மனுக்கள் பல வந்திருக்கின்றன. அவைகள் பரிசீலிக்கப்பட்டு அவைகளின் தன்மை ஆராயப்பட்டு வரவேண்டும். அதைச் செய்வதற்கு அமைக்கப்பட்ட குழு விரைவில் கூடுமானுல் மேற்கொண்டு ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளலாம். 300 அல்லது 400க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு நீடித்த காலங்களுக்குத் தர வேண்டியிருப்பதால், வைப்பு நிதி வைத்து அதன் வாயிலாகத் தரவேண்டியிருக்கிறது. அந்தந்த ஆண்டுகளில் வருகின்றவைகளைச் செலவழித்துவிடுவது என்ருல், அதை சுலபத்தில் செய்யலாம். இருந்தாலும், சிலருக்கு ரூ. 30, ரூ. 40, ரூ. 50 என்று வாழ்நாள் முழுவதும் தருகிற நிலையில் அதற்கென வைப்பு நிதி வைத்தாக வேண்டியிருக்கிறது. முக்கியமாகக் கொடுக்கத் தகுதி படைத்த ஆசிரியர்களுக்குத் தர வேண்டுமென்று இருக்கிருேம். அந்தக் குழுக் கூட்டம் கூட்டப்படாமல் இருக்கிறது. விரைவில் கூட்டச் செய்து மீண்டும் தகுதியானவர்களைத் தேர்ந்து தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. எம். ராஜா அய்யர் :** அந்தக் குழுவில் தற்போது யார் யார் இருக்கிருர்கள் ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குழுவிற்குக் கல்வி அமைச்சர் தலைவராக இருக்கிருர். நிதித் துறை துணைச் செயலாளர் ஒரு உறுப்பினர், டாக்டர் எ. ஐராவதி ஒரு உறுப்பினர், திரு டி. புருஷோத்தமன் ஒரு உறுப்பினர், திரு. இ. டி. சௌரிராஜன், திரு டி. டி. சந்தானகிருஷ்ணன் உறுப்பினர்கள், பள்ளி கல்வி இயக்குனர் உறுப்பினராகவும், செயலாளர், பொருளாளராகவும் இருக்கிருர்.

* Printed as Appendix

[25th March 1970

*Pharmacy Graduates*

*215— Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that many Pharmacy Graduates are at present unemployed;

(*b*) if so, the number of unemployed Pharmacy Graduates as on 1st July 1969 ; and

(*c*) the steps taken by the Government to provide employment for them?

**மருந்தாக்கப் பட்டதாரிகள்**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மருந்தாக்கப் பட்டதாரிகள் பலர் தற்போது வேலையின்றி இருக்கின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், 1-7-1969 அன்றுள்ளபடி வேலையின்றி இருக்கும் மருந்தாக்கப் பட்டதாரிகள் எத்தனை பேர் ?

(உ) அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :**

(அ) & (இ) அரசிடம் தகவல் இல்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எனக்குத் தெரிந்த வரையில், 250 பட்டதாரிகளுக்கு மேலாக தற்போது வேலையில்லாமல் இருப்பதாகத் தெரிகிறது. ஒவ்வொரு ஆண்டும் மதுரையிலிருந்து 40 பட்டதாரிகளும், சென்னை மருத்துவக் கல்லூரியிலிருந்து 70 பட்டதாரிகளும், ஆக 110 பட்டதாரிகள் வெளியே வருகிறார்கள். அவர்களுக்கு வேலையில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு மருந்துக் கட்டுப்பாடு அலுவலகத்தினை விஸ்தரிப்பதன் மூலமாக முயற்சிக்கலாம். மருந்து பரிசீலனை ஆய்வுக்கூடங்களை வைப்பதன் மூலமாக வேலை கொடுக்கலாம். தலைமை மருத்துவ மனையில் மருந்து தயாரிப்பு சாலைகளை வைப்பதன் மூலமாக வேலை அளிக்கலாம். அரசு இவைகளுக்கான வழிவகைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க முயலுமா ?

**மாண்மிபுகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** இப்போது அந்த ஃபார்மஸி பட்டப் படிப்பு படித்துவருகிறவர்கள் சாதாரணமாக மருத்துவக் கல்லூரிகளில் அஸிஸ்டெண்ட் ரீடர்ஸ், ஃபார்மாசியூடிகல் கெமிஸ்ட்ரி அல்லது ஃபார்மகாலஜி என்பதன் கீழ் அமர்த்தப்படுகின்றனர். ஃபார்மகாலஜி டிபார்ட்மெண்டில் அசிஸ்டெண்டுகளாக நியமிக்கப்படுகிறார்கள். டிரக் கண்ட்ரோல் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப்படுகிறார்கள். மருந்துக் கட்டுப்பாட்டு அகங்களை அதிகமாக்க வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. அவற்றை அதிகமாக்கும்போது, வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை தருகின்ற வாய்ப்பு ஏற்படும். இப்போது உள்ள இடங்களில் காலி இல்லை. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போல, அவற்றை விரிவுபடுத்தும் நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இப்போதிருப்பது போதாது என்று இயக்குனரிடமிருந்து கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மருந்துகளைப் பரிசோதனை செய்து ஆங்காங்கு நடவடிக்கை எடுக்கக்கூடியவர்களின் எண்ணிக்கை உயர்ந்தால், இதற்கான வாய்ப்பு ஏற்படும். அப்போது சிலருக்கு வேலை அளிக்க முயற்சி செய்யலாம். மேலும் எந்தெந்த வகையில் விரிவுபடுத்தலாம் என்று அரசு ஆராய்ந்து வருகிறது.



25th March 1970]

## UNSTARRED QUESTIONS

*District Educational Officers*

21 *Q.*—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state:—

(*a*) the number of former T.C. Government Employees who are now working in the State as District Educational Officers ;

(*b*) the number of years of their service as District Educational Officers;

(*c*) the salary of each D.E.O. as on 31st July 1968;

(*d*) whether their probation as D.E.Os. has been declared ;

(*e*) if not, whether there is any rule or Government order, that after continuously working in a post for some prescribed period every Government Officer is entitled to have his probation declared ; and

(*f*) if so, the reason why their probation has not yet been declared?

*A.*—

(*a*) 11

(*b*) Varies from 6 years to 11 years.

(*c*)—

| | *Serial number and name of the Officer.* | *Pay as on 31st July* 1968. |
|---|---|---|
| | | RS. |
| 1 | Thiru S. Sivaramakrishna Iyer .. .. .. .. | 350 |
| 2 | .. A. Sivathanu Pillai .. .. .. .. .. | 350 |
| 3 | .. V. Sankaranarayana Iyer .. .. .. | 475 |
| 4 | .. G. Mahadeva Iyer .. .. .. .. .. | 350 |
| 5 | ,, S. Justus .. .. .. .. .. | 325 |
| 6 | ,, M. Parameswaran Pillai .. .. .. .. | 325 |
| 7 | ,, T. Aiyamperumal Pillai .. .. .. .. | 350 |
| 8 | ,, P. Alfred .. .. .. .. .. | 350 |
| 9 | ,, S. Mahadeva Iyer .. .. .. .. .. | 325 |
| 10 | ,, C. James .. .. .. .. .. | 350 |
| 11 | ,, K. Ananthapalpu .. .. .. .. .. | 300 |

(*d*) Yes, except in two cases

(*e*) So far as temporary appointments are concerned there is no such order.

(*f*) The temporary appointments of the two officers have not yet been regularised as disciplinary proceedings are pending against them. The question of declaration of their probation will arise only after their appointments are regularised.

**அரிசன நலத் துறையினால் செலவழிக்கப்பட்ட தொகை**

*22 **திரு வி. தங்கபாண்டியன் :** மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) 1968-69-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில் அரிசன நலத்துறையினரால் (1) நீர் அழுத்தத் தொட்டிகள் ; (2) பள்ளிகள் ; (3) கிணறுகள் முதலியவைகளுக்குச் செலவழிக்கப்பட்ட தொகை முறையே எவ்வளவு ?

(இ) முதுகுளத்தூர் தாலுகாவில் மேற்குறிப்பிட்ட காரியங்களுக்குச் செலவழிக்கப்பட்ட பணம் எவ்வளவு ?

[25th March 1970

*A.*—(*a*) and (*b*)—

| | Total amount spent in Ramanathapuram. district. | Total amount spent in Mudukulathur taluk. |
|---|---|---|
| | RS. | RS. |
| Water facilities— | | |
| 1. Automatic pressure .. .. | 80,000 | .. |
| 2. Drinking water wells .. | 36,053 | .. |
| 3. Irrigation wells .. .. .. | 60,500 | 9,500 |
| Schools— | | |
| 1. Maintenance charges .. .. | 2,52,236 | 63,176 |
| 2. Construction and repair to school buildings. | 18,590 | 59,958 |
| 3. Supply of midday meals to school children. | 83,000 | 22,945 |
| 4. Free supply of clothing to pupils studying in denotified tribes' Schools. | 22,493 | 18,254 |

*Post-Graduate Engineers of Public Works Department*

23 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of post-Graduate Engineers working in the Public Works Department as on 30th January 1970 ; and

(*b*) the details of designation of such engineers ?

*A.*—

(*a*) The number of Post-Graduate Engineers working in Public Works Department as on 30th January 1970—98.

(*b*) Details of designation of such Engineers.—

| | |
|---|---|
| Superintending Engineers .. .. .. | 4 |
| Executive Engineers .. .. .. .. | 13 |
| Assistant Engineers .. .. .. .. | 38 |
| Junior Engineers .. .. .. .. | 43 |
| Total .. | 98 |

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## III. ADJOURNMENT MOTION *RE* HARDSHIP TO PEASANTS DUE TO ENHANCED RATE FOR POWER AND AGITATION BY THE PEASANTS.

DEPUTY CHAIRMAN : I have received notice of a motion under rule 43 of the Council Rules from Thiru V. Isvarmurti to discuss an urgent matter of public importance, namely, the hardship caused to the peasants due to the enhanced rate for power, the non-compliance of the Government to postpone the recovery of dues from the peasants, and the agitations already made by the peasants and the other proposed to



25th March 1970] [Deputy Chairman]

be made on the 28th of this month. Now, I request the hon. Member to explain how the matter is one of urgent public importance and how it involves more than the ordinary administration of law under the rules.

Thiru V. ISVARMURTI : Mr. Deputy Chairman, on the 18th of this month the Coimbatore District Agriculturists' Association staged a massive demonstration in Coimbatore town and elsewhere. With this agitation not only all the progressive nationalist parties associated but this association itself was non-partisan in character and it won the spontaneous response of all the peasants of the district. The demands put forward by the Association were essentially simple and the enhancement of power tariff and the non-compliance of the Government with the request for the postponement of dues were quite unreasonable. In spite of such massive response from the peasants, the Hon. the Chief Minister took the opportunity of repudiating those demands with sarcastic remarks such as that the motives behind the agitation were different and the landlords who were opposed to the proposed reduction in the land ceiling were instrumental in staging those demonstrations. It is a matter of deep regret that the Hon. the Chief Minister, instead of properly assessing the feelings of the peasants............ 4-20 p.m.

DEPUTY CHAIRMAN : The hon. Member may confine his remarks to the point how it involves more than the ordinary administration of law.

Thiru V. ISVARMURTI : I think the matter is one of sufficient public importance and the House may be given an opportunity to discuss this problem.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஈஸ்வரமூர்த்தி அவர்கள் கொடுத்திருக்கிற இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தையொட்டி, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கோவை மாவட்டத்தில் நடைபெற்ற கிளர்ச்சியைப் பற்றி நான் ஏற்கனவே குறிப்பிட்டதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே நான் அதைப் பற்றிக் கூறியிருக்கிற காரணத்தால், மீண்டும் விரிவான விளக்கமெதையும் கொடுக்க விரும்பவில்லை. நம்முடைய சட்டமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில் பல வரிகளைப் பற்றியும், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற வரிகளில் எவையெவைகளைக் குறைக்க வேண்டும் என்பதைப் பற்றியும், சட்டமன்றத்திலும், மேலவையிலும் எடுத்துக் கூறுவதற்கான நல்வாய்ப்பு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருந்திருக்கிறது. அந்த வாய்ப்பினை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு கோரிக்கைகளை வைத்த நேரத்தில், இந்த அரசு அவைகளில் நியாயமானவைகள் என்று தோன்றியவைகளை மனதில் ஏற்றுக் கொண்டு அவைகளுக்கேற்ற வகையில் வரி விலக்குகள் செய்திருப்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். ஆனால், சில சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ளாமல், கோவை மாவட்டத்தில் கிளர்ச்சிகளில் ஈடுபட்டது வருந்தத் தக்கதாகும். அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களில் சிலபேர் வேறு பல காரணங்களுக்காகக் கலந்துகொண்டிருந்தாலும்—அதை நான் மீண்டும் விளக்க விரும்பவில்லை—அவர்கள் வெளிப்படையாகச் சொன்ன அடிப்படைக் காரணம் விவசாயத்திற்கு விதிக்கப்படும் மின் கட்டணம் அதிகமாக்கப்பட்டுவிட்டது என்பதுதான். ஏற்கனவே ஒரு யூனிட் மின்சாரக் கட்டணம் $8\frac{1}{4}$ பைசா என்றிருந்ததை இப்போது 10 பைசாவாக உயர்த்தியிருக்கிறோம் என்பதுதான். ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தியாவதற்காகும் செலவு இந்த அரசுக்கு

16 பைசா ஆகிறது. ஏற்கனவே விவசாயிகளுக்காக ஏறத்தாழ 9 கோடி ரூபாய் இந்த அரசு மான்யமாக வழங்கியதன் காரணமாகத்தான் விவசாயிகளுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை 8¼ பைசா என்ற விலைக்குத் தரும் நிலைமை இருந்தது. இப்போது 10 பைசா ஒரு யூனிட் மின்சாரத்திற்கு என்று கட்டண விகிதத்தை மாற்றிய பிறகும் இந்த அரசு 6 கோடி ரூபாய் அளவில் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கிக்கொண்டிருக்கிறது. யூனிட்டுக்கு 6 பைசா நட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான் ஏறத்தாழ 6 கோடி ரூபாய் இந்த அரசுக்குச் செலவாகிறது என்பதை இந்தக் கிளர்ச்சியில் ஈடுபடுகிறவர்களும், மற்றவர்களை ஈடுபடச் செய்தவர்களும், அப்படி ஈடுபட்டவர்களுக்காகப் பரிந்து பேசுகிறவர்களும் மறந்துவிடக்கூடாது. குறிப்பாக மற்ற மாநிலங்களில் வசூலிக்கப்படும் மின்சாரக் கட்டணங்களோடு இதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்று நான் மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆந்திர மாநிலத்தில் ஒரு யூனிட் மின்சாரத்திற்கான கட்டணம் 12 பைசாவாக இருக்கிறது. அசாம் மாநிலத்தில் 14 பைசா. பீகாரில் 15 பைசா. குஜராத்தில் 15 பைசா. ஹரியாணா மாநிலத்தில் 16.22 பைசா. மத்தியப் பிரதேசத்தில் 11·5 பைசா. மகாராஷ்டிரத்தில் 17.87 பைசா. ஒரிசா மாநிலத்தில் 12 பைசா, ராஜஸ்தான் மாநிலத்தில் 14.3 பைசா. உத்திரப் பிரதேசத்தில் 15 பைசா. மேற்கு வங்கத்தில் 12 பைசா. மைசூர் மாநிலத்தில் 10 பைசா. கேரளத்தில் 8 பைசா. தமிழ்நாட்டில் 8·25 பைசா என்றிருந்ததை 10 பைசாவாக்க இருக்கிறோம். இதில் கேரளத்திலிருந்தும், மைசூரிலிருந்தும் நாம் மின்சாரத்தை விலைக்கு வாங்கிப் பயன்படுத்துகிறோம் என்பதையும், அப்படி வாங்கப்பட்ட மின்சாரம் விவசாயிகளுடைய இடத்திற்குப் போய்ச்சேருகிறபோது யூனிட்டுக்கு 16 பைசா ஆகிறது என்பதையும், இருப்பினும் நாம் அதை 10 பைசாவுக்கு விவசாயிகளுககு வினியோகிக்கிறோம் என்பதையும் அதன் காரணமாக ஆண்டுக்கு 6 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்துவிடக் கூடாது. மைசூரிலும் கேரளத்திலும், மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இருந்தாலும் நம் தமிழ்நாட்டைப் போல் விவசாயிகளுக்கு அவர்களுடைய இடங்களுக்குக் கொண்டுபோய் கொடுக்கிற செலவைக் கூட அந்த மாநிலங்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அப்படி இருந்தும் மின்சாரக் கட்டணம் அங்கே அந்த அளவில் இருக்கிறது. எனவே இவைகளை எல்லாம் சிந்தித்துப் பார்த்து, இதற்காக ஒரு கிளர்ச்சி அவசியம்தானா என்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் யோசித்துப் பார்க்க வேண்டும் என்று இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை பிரேரேபித்துள்ள மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலம் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

மற்றும் நிலுவைகளை வசூலிப்பதை நிறுத்திவைக்க வேண்டும் என்று கோவை மாவட்டத்தில் மட்டுமின்றி, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கோரிக்கை வந்துகொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் இந்த நிலுவைகளை வசூலிப்பதைக் கொஞ்சம் தள்ளிப்போட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசு இன்று தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறது. கோவை மாவட்டத்திற்கு மட்டும் உரிய பிரச்னையல்ல இது. ஆகவே, வெகு விரைவில் அதற்கான ஒரு முடிவெடுத்து, ஆறு மாத காலத்திற்காவது நிலுவைகளை வசூலிப்பதைத் தள்ளி வைக்கலாம் என்ற யோசனை அரசுக்கு இருக்கிறது. எனவே அதற்கான ஆணையை வெகு விரைவில் அரசு பிறப்பிக்க இருக்கிறதென்பதையும் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தையொட்டி கருத்துத் தெரிவிக்கும் இந்த நேரத்தில் வெளியிடுவதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். ஆகவே, இந்த விளக்கங்களுக்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பதைக் கூறிக்கொண்டு அமர்கிறேன்.

DEPUTY CHAIRMAN : A motion to adjourn the business of the House to discuss a definite matter of urgent public importance must come strictly under the rules. The matter should involve more than



the ordinary administration of law. Moreover, the hon. Member has got an opportunity to raise this matter at the time of the discussion on the Appropriation Bill or at any other suitable time. In view of this, I withhold consent to raising of this matter.

THIRU G. VASANTHA PAI : I have given notice of an adjournment motion, Sir.

DEPUTY CHAIRMAN: The adjournment motion given notice of by the hon. Member Thiru G. Vasantha Pai has come to me. It is under consideration. The decision of the Chair will be let known tomorrow.

The Hon. the Finance Minister will now present the Final Supplementary Statement of Expenditure for 1969—70.

## IV. PRESENTATION OF THE FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1969-70.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I rise to present the Final Supplementary Estimates for the year 1969-70. A detailed statement explaining the Demands for Grants is placed on the table of the House. This Supplementary Demand is for a sum of Rs. 18·50 crores, of which a sum of Rs. 7·78 crores is on Revenue Account. The Supplementary Estimates as usual reflect the additional expenditure under different heads over and above the existing appropriation. Most of the increases have already been shown in the Revised Estimates presented to the House along with the Budget. We have also made an up-to-date review of the expenditure so far incurred by different departments and have provided for inevitable increases. The present batch of Supplementary Estimates also includes several "New Service" schemes sanctioned after the presentation of the Second Supplementary Estimates.

2. The largest single item included in the present Supplementary Estimates is in the nature of charged appropriation. It is the provision of Rs. 9·59 crores made for the repayment of ways and means advance taken from the Reserve Bank of India. In my speech while presenting the Final Supplementary Estimates last year, I had explained at some length the reasons which necessitated large charged appropriations under this head. I may reiterate that the amounts sought do not reflect any erosion in our resources but are proposed merely to comply with a budgetary formality under which day-to-day repayments to the Reserve Bank of India have to be covered by formal appropriation. Most of these payments are matched by corresponding receipts and therefore the appropriation sought under this head reflects the extent of day-to-day fluctuations in our cash balance kept with the Reserve Bank of India rather than the net impact of such transactions on the resources of the Government.

3. Another large item figuring in the present Supplementary Estimates has also been referred to by me on a number of occasions in this House. I am referring to the provision of Rs. 1·27 crores included under Demand 31 for expenditure on drought relief works taken up during the year. As Hon'ble Members are aware, the total expenditure envisaged on the drought relief programme has been of the order of

[Thiru K. A. Mathialagan] [25th March 1970

Rs. 18 crores, of which Rs. 14·25 crores has been covered by loans and grants from the Government of India. Some of the other decisions of Government which have also been brought to the notice of the Legislature earlier and for which provision is sought in the present Supplementary Estimates include liberalisation of the rates of batta, night halt allowance, etc., applicable to the workers of the Transport Department based on the recommendations of the HighPower Committee,for which a provision of Rs. 40·59 lakhs has been included in Demand 30 and expenditure on the setting up of the Police Commission which will go into the conditions of service, duties and responsibilities of the Tamil Nadu Police force for which approval has been sought under Grant 12. Yet another important scheme which we have already brought to the notice of the Legislature is the decision of Government to open Primary Land Development Banks in each of the Blocks in the State. In the current year, sanction has been accorded for the share-capital participation in 60 such banks and Hon'ble Members will notice that a provision of Rs. 15 lakhs has been made in the current year towards this.

4. Hon'ble Members may be aware that the Government have constituted a Committee for undertaking comprehensive State-wide examination of the jurisdiction of Civil and Criminal Courts in order to cater to the long-felt need for rationalisation in the jurisdiction of these Court. The formal approval of the Legislature is sought for this measure through a token provision included under Grant 10.

4-30 p.m.

5. A sizable item of expenditure for which provision is sought through the Supplementary Estimates is on the revision and printing of electoral rolls in all the Assembly Constituencies in the State. This revision has been taken up at the instance of the Election Commission of India. A provision of Rs. 25·15 lakhs for this has been included under Grant 7.

6. May I invite the attention of the Hon'ble Members to the provision made under Grant 40 for the setting up of a Second Dairy Plant for Madras City at Guindy. This Dairy, which entails a total outlay of Rs.54·55 lakhs will augment milk supply to the City and thus considerably ease the milk supply position in our growing metropolis. I would like to also invite the attention of the Hon'ble Members to the provision made under the same Grant for the setting up of a cattle feed mixing plant at Madhavaram. Besides, the approval of the Legislature is also being sought for the installation of a milk powder plant at an estimated cost of Rs. 21 lakhs and with a capacity of 2,000 litres per hour, to convert the surplus milk available in the Madurai Milk Project into milk powder.

7. I would like to draw the attention of the Hon'ble Members to the provision sought under Grant 15 for the extension of the reorganised pattern of family planning to 100 more Blocks in the State. The entire expenditure on this programme is met by the Government of India. We have so far covered 225 Blocks in this State and we have under consideration proposals to cover the remaining Blocks as well under this programme. Hon'ble Members will also notice that provision has been sought under Grants 15 and 42 for the purchase of vehicles and the construction of buildings for this programme. Another important welfare programme, for which the approval of the Legislature is sought through a token provision under Grant 23, relates to the setting up of "Kuzhandaigal Kappagams". These centres will supply milk to pre-school children and expectant and nursing mothers.



25th March 1970] [Thiru K. A. Mathialagan]

8. The House is aware of the bold programme taken up by the Government for the provision of protected, safe and assured water-supply to all the areas in the State. Such a programme calls for massive capital outlays, and we have been able to secure assistance to the tune of Rs. 192 lakhs in the current year from the Life Insurance Corporation of India to meet expenditure on this programme. The larger programme envisaged by us hasin turn necessitated the strengthening of the technical establishments entrusted with the implementation of this programme. Necessary provision for this has been sought under Grant 15.

9. Other proposals included in the present Supplementary Estimates do not call for any special comments apart from the detailed explanatory notes furnished in the statement placed before the House.

10. With these words, Sir, I commend the Supplementary Estimates for the acceptance of this House.

DEPUTY CHAIRMAN : The House will now adjourn and meet again at 4-00 p.m. to-morrow. 4-35 p.m.

The House then adjourned.

## V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. STATUTORY RULES AND ORDERS.

* 157. Notification issued with G.O. Ms. No. 66, Legislative Assembly, dated the 4th October 1969 in regard to certain amendments to the Tamil Nadu Legislature Travelling Allowance Rules, 1955, published at pages 131-138 of the Rules Supplement to Part II of the *Fort St. George Gazette* dated the 27th July 1955. [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Tamil Nadu Payment of Salaries Act,* 1951 (*Tamil Nadu Act XX of* 1951).]

* 158. Notification issued with G.O. Ms. No. 63, Legislative Assembly, dated the 26th September 1969 in regard to certain amendments to the Tamil Nadu Legislature Travelling Allowance Rules, 1955. [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Tamil Nadu Payment of Salaries Act,* 1951 (*Tamil Nadu Act* XX *of* 1951).]

* 159. Notification issued with G.O. Ms. No. 1326, Agriculture, dated the 25th April 1969 in regard to notification of certain areas in North Arcot district under the Tamil Nadu Land Improvement Schemes Act, 1959. [*Laid on the Table of the House under section* 44 (3) *of the Tamil Nadu Land Improvement Schemes Act,* 1959 (*Tamil Nadu Act* 31 *of* 1959.]

160. Notification issued with G.O. Ms. No. 3104, Public (Elections), dated the 19th December 1969 in regard to an amendment to the rules for the use and maintenance of Government cars allotted to Ministers, Speaker, Legislative Assembly and Chairman, Legislative Council published at page 107 of Part V of the *Fort St. Geroge Gazette,* dated the 12th March 1969. [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Tamil Nadu Payment of Salaries Act,* 1951 (*Tamil Nadu Act XX of* 1951).]

161. Notification issued with R.Dis. No. 45331/69, dated the 13th August 1969 in regard to exclusion of Nadupatti Revenue village in, Tiruvannamalai taluk of North Arcot district from Kannampanda

Panchayat and constitution of separate Panchayat. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act,* 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

162. Notification issued with R.Dis. No. 32286/69, dated 13th August 1969 in regard to exclusion of certain areas from the Nadupatti Panchayat and included within the limits of Kalamanur Panchayat. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act,* 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

163. Notification issued with R.Dis. No. 144060/69-P2, dated the 18th September 1969 in regard to exclusion of certain areas from Desaivilakku Panchayat in Omalur taluk of Salem district and constitution of a separate Panchayat by name Duttampatti Panchayat. [*Laid on the Table of the House under section* 189 (4) *of the Tamil Nadu Panchayts Act,* 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

164. Notification issued with R.Dis. No. 29158/69, dated the 6th September 1969 in regard to exclusion of certain areas from the limits of the Adavathur Panchayat of Tiruchirappalli district and constitution of a separate Panchayat by name Allithurai Panchayat. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act,* 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

### B. REPORTS, NOTIFICATIONS AND OTHER PAPERS.

*50. A pamphlet on Housing in Tamil Nadu 1969-70 (English and Tamil).

*51. Pamphlet setting out the policies under the Demand No. 25—Welfare of the Scheduled Tribes, Castes and Other Backward Classes (1970-71) (Tamil).

*52. A review on the working of the Stationery and Printing Department during the year 1969-70 (Tamil).

*53. Policy Note under Demand No. 46—Capital Outlay on Schemes of Government Trading (English and Tamil).

54. Twelfth Report of the Committee on Estimates, 1969-70 on Stationery and Printing Department.

55. Policy Note on the Demand No. XVIII—Animal Husbandry. 1970-71 (Tamil).

56. Policy Note on Dairy Development Department, 1970-71(Tamil).

57. Policy Note on Demand on Land Revenue (English and Tamil).

58. A Review on the progress made in the Handloom Industry (English and Tamil).

59. Thirteenth Report of the Committee on Estimates, 1969-70, on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Women's Welfare Department.

60. A review of Industrial Development in Tamil Nadu for 1969-70 (English and Tamil).

61. Notification issued with Roc. No. 183807/69-P2, dated the 14th November 1969 in regard to an erratum to the notification published at pages 314 and 315 of Part II—Section 2 of the *Fort St. George Gazette*, dated the 1st October 1969.



62. Policy Note on Tamil Nadu Khadi and Village Industries Board (English and Tamil).

63. Fourteenth Report of the Committee on Estimates, 1969-70 on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Madras Record Office (Now Tamil Nadu Archives).

64. Fifteenth Report of the Committee on Estimates, 1969-70 on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on the Directorate of Handlooms.

65. Review on the working of the Forest Department (Tamil).

66. A Note on the Tamil Nadu Cinchona Department (Tamil).

67. A Review on the working of Minor Ports in Tamil Nadu, 1969-70 (English and Tamil).

68. Answers to Unstarred Question Nos. 21 to 23.

69. Statement containing furtherp articulars collected in respect of Legislative Council Starred Question No. 178 answered on 10th March 1969.

---

* Sent to all M.L.Cs. on 18th March 1970.

## APPENDIX

(*Vide* answer to Starred Question No. 214 on page 581.)

| | | தொகை. |
|---|---|---|
| | | ரூ. |
| (அ) | 1966–67 (4–1–1966 முதல் 31–3–1967 முடிய) .. | 9,79,540·45 |
| | 1967–68 (1–4–1967 முதல் 31–3–1968 முடிய) .. | 5,40,850·89 |
| | 1968–69 (1–4–1968 முதல் 31–3–1969 முடிய) .. | 5,33,825·85 |
| | 1969–70 (1–4–1969 முதல் 30–9–1969 முடிய) .. | 1,07,850·09 |
| (ஆ) | 1966–67 .. .. .. .. .. .. | இல்லை. |
| | 1967–68 .. .. .. .. .. .. | 8,74,953·39 |
| | 1968–69 .. .. .. .. .. .. | 6,95,813·73 |
| | 1969–70 (1969 செப்டம்பர் முடிய) .. .. | 1,70,883·45 |
| (இ) | 1966–67 .. .. .. .. .. .. | இல்லை. |
| | 1967–68 .. .. .. .. .. .. | 200·00 |
| | 1968–69 .. .. .. .. .. .. | 48,097·35 |
| | 1969–70 (1969 செப்டம்பர் வரை) .. .. .. | 93,289·29 |

பயன் பெற்றோர் எண்ணிக்கை.

| | |
|---|---|
| 1966–67 .. .. .. .. .. .. | இல்லை. |
| 1967–68 .. .. .. .. .. .. | 15 |
| 1968–69 .. " .. .. .. .. | 98 |
| 1969–70 (1969 செப்டம்பர் வரை) .. .. | 101 |

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

### Thursday, the 26th March 1970.

The House met in the Council Chamber, *Fort St. George*, at four of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### *Arts College.*

*182[a] *Q.*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Public Works be Pleased to State:

(*a*) whether the Wakf Board proposes to start any Arts College in the State; and

(*b*) if so, the details thereof?

**கலைக்கல்லூரி**

**திரு. எம். ராஜா அய்யர்:** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்தில் கலைக்கல்லூரி ஒன்றைத் துவக்க முஸ்லீம் அறக் கட்டளை வாரியம் திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) அந்த விதமான கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் வக்ப் போர்டு பரிசீலனையில் இருக்கிறது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** முஸ்லீம் அறக்கட்டளை வாரியத்தின்மீது அரசினுடைய கண்காணிப்பு எத்தகையது?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** வக்ப் போர்டு என்பது ஒரு ஸ்டாசுடரி போர்டாகும். எலக்ட்ரிசிடி போர்டு போலத்தான் இதுவும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**திரு எஸ். ஜெயராம ரெட்டியார்:** தலைவர் அவர்களே, நாட்டில் தற்பொழுது மதத்தின் பெயராலும் ஜாதியின் பெயராலும் அதிகமான கல்லூரிகள் திறக்கப்படுகின்றன. அந்தக் கல்லூரிகளின் நிர்வாகத்திற்குப் பெரும்பாலும் அரசு உதவி அளிக்கிறது. அதனால் அந்தக் கல்லூரிகளில் இந்த மதத்தினர், இந்திந்த விகிதாசாரத்தில் இருக்க வேண்டுமென்று அரசு நிர்ணயம் செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மற்றக் கல்லூரிகளைப் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. மதுரையில் இருக்கிற வக்ப் போர்டு கல்லூரியைப் பொறுத்த வரையில், அங்கு இருக்கிற மாணவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் முஸ்லீம் மாணவர்கள்.

---

[a] Postponed from the list of questions for 25th March 1970

**திரு எம். ராஜா அய்யர் :** வக்ப் போர்டினால் நடத்தப்படும் கல்லூரிகளில் படிக்கிற முஸ்லீம் மாணவர்கள் விரும்பினால், அவர்களுக்கு அறபோதனைக்கு, கல்லூரி நேரங்களில் இல்லாவிட்டாலும், பிற நேரங்களில் வழி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போது பல தனிப்பட்ட நிறுவனங்கள் நடத்துகிற கல்லூரிகளிலும், மற்ற இடங்களிலும் போதிக்கப்படுகின்றது. கல்லூரியில் படிக்கிறவர்கள் விரும்பினால், இது நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

**திரு. வி. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, அறக்கட்டளை சார்பாக நிர்மாணிக்கப்படுகின்ற கல்லூரிகள் இந்த இந்த அடிப்படையில் நிர்மாணிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் ஏதாவது ஆணையிட்டிருக்கிறதா ? அப்படிப்பட்ட மதச் சார்புள்ள கல்லூரிகளில் மதப் பிரச்சாரம் அதிகமாகச் செய்யப்படுவதாகக் குற்றச்சாட்டு ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மதப் பிரச்சாரம் செய்வதாக குற்றச்சாட்டும் வரவில்லை. கல்லூரிகள் திறப்பதற்கு அரசாங்கம் அனுமதி தருவதில்லை. பல்கலைக் கழகத்தின் அனுமதியோடு அதன் விதி முறைகளுக்கு உட்பட்டு மற்றவைகளைப் போல இந்தக் கல்லூரியும் நடத்தப்படுகிறது.

**திரு எம். ராஜா அய்யர் :** சில கல்லூரிகள் திறப்பதற்கான யோசனை வக்ப் போர்டு பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அவை எந்தெந்த இடங்களில் திறப்பதாக உள்ளன என்று அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தற்போது உடுமல்பேட்டை, பரமக்குடி ஆகிய இடங்களில் வக்ப் போர்டு மூலமாகக் கல்லூரிகள் திறப்பதற்கான செயற் குறிப்பு வக்ப் போர்டின் ஆலோசனையில் இருக்கிறது.

*Overbridges*

*183a Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct overbridges at the Railway level crossings at Subramaniapuram and near Sri Meenakshi Mills in Madurai City ; and

(*b*) if so, the stage at which the matter now stands ?

மேம்பாலங்கள்

**திரு ஏ. ஆர். தாமோதரன் (திரு டி. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை நகரில் சுப்பிரமணியபுரத்திலும், ஸ்ரீ மீனாட்சி ஆலையின் அருகிலும் உள்ள சாலை-இருப்புப் பாதைக் கடவுகளில் மேம்பாலங்கள் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) இவ்வரசு இவ்வேலைகளுக்கு தன் ஆணை எண். 2701, பொதுப் பணி, தேதி, 30-12-1968-ல் ஒப்புதல் அளித்திருக்கிறது. மதுரை நகராட்சியின் வரம்புக்குள் சுப்பிரமணியபுரம், மீனாட்சி ஆலை ஆகியவற்றுக்கு

a Postponed from the list of questions for 25th March 1970





அருகே 7-ம் எண், தேசிய நெடுஞ்சாலையின் 300-2, 300-7 மைலில் உள்ள இருப்புப்பாதை-சாலைக் கடவுகளில் மேம் பாலங்கள் கட்டுவதற்கான மதிப்பீடுகளுக்கு தலைமைப்பொறியாளரால் தொழில் நுட்ப ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்புமாறு கேட்பது முதலிய முறையான நடைமுறைகள் அனைத்தையும் பின்பற்றிய பின்னர், இப் பணி நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்படும்.

**திரு எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, இந்த இரண்டு சாலைகளும் சீக்கிரமாக வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே குறிப்பு தரப்பட்டிருந்தது. ஆனால் ஒரு வருஷமாகியும் கூட அது இன்னும் அமுலாக்கப்படவில்லை. அந்த மேம்பாலத்தைக் (ஓவர் பிரிட்ஜை) கட்டுவதில் தாமதம் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகவும், அதைத் தடை செய்யவேண்டுமென்பதற்காகவும், மீனாட்சி மில்லுக்கும் ரயில் பாதைக்கும் வெகு அருகாமையில் ஒரு வருஷத்திற்கு மேலாகவே சின்னஞ்சிறு விக்கிரகங்களைக் கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள். அப்படி மதசம்பந்தமான காரணங்களைக் காட்டி அந்த மேம்பாலம் கட்டுவதைத் தடுத்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் காரணங்களை எல்லாம் பொருட்படுத்தாமல், அரசு சீக்கிரமாக, அதன் முக்கியத்துவத்தை உணர்ந்து காரியம் நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, எந்த நல்ல காரியத்தைச் செய்தாலும், அதற்குத் தடை ஏற்பட்டுவருவதைப் பார்த்து வருகிறோம். இதைப் போன்ற மேம்பாலம் கட்டுவதை எதிர்த்து ஆட்சேபணை கிளப்பப்பட்டிருக்கிறது. அதை இந்த அரசும் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த ஆட்சேபணைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்து அவைகள் ஏற்றுக்கொள்ளத் தக்கனவல்ல என்று அரசு முடிவு செய்திருக்கிறது. இந்த வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகளும் கோரப்பட்டிருக்கின்றன.

**திரு. எம். எத்திராஜுலு :** தலைவர் அவர்களே, இந்த வேலைக்காக ஒதுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் இந்த நிதியில் மத்திய அரசின் நிதி உதவி ஏதேனும் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இதில் பாதித் தொகை மத்திய சர்க்காரின் நிதியாகும்.

**திரு. எம். எத்திராஜுலு :** தமிழ்நாட்டில் பல இடங்களில் இப்படி இருப்புப் பாதைகள் நெடுஞ்சாலைகளின் குறுக்கே வருவதன் காரணமாக போக்குவரத்திற்கும் பொது ஜனங்களின் நடமாட்டத்திற்கும் தடை ஏற்படுகிறது என்பதையொட்டி, தமிழ்நாடு முழுவதும் இப்படிப்பட்ட மேம்பாலங்கள் கட்டுவதற்கு உகந்த இடங்கள் என்று எத்தனை இடங்களைத் தேர்ந்தெடுத்து இந்த அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அது பற்றிய விவரம் தற்போதில்லை என்றாலும், தமிழ்நாட்டில் கும்பகோணம், மாயூரம், கோயம்புத்தூர், திருச்சி, செங்கல்பட்டு ஆகிய இடங்களில் இப்படிப்பட்ட மேம்பாலங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பை மத்திய சர்க்காருக்கு இந்த அரசு அனுப்பியிருக்கிறது. இந்த ஆண்டு சில வேலைகளை எடுத்துக் கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாடார் :** மேம்பாலங்கள் இல்லாமல் இருப்பது மட்டுமல்ல. பல ஆண்டுகளாகப் பேருந்துகள் செல்லும் முக்கியமான சாலைகளில் கூட இருப்புப் பதை குறுக்கிடும்போது, அந்த இருப்புப் பாதையில் ஆள் காவலும் இல்லாமல், லெவல் கிராசிங்கும் இல்லாமல் இருக்கும் நிலை இருக்கிறது. 1927-ம் வருஷத்திலேயே ஒரு ரயில் பாதை போடப்பட்டது. அதைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரசாங்கம் தெரிவித்து, இத்தகைய

இடங்களில் லெவல்-கிராசிங் ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்திய போது, அதற்கு அதிகச் செலவாகும், அந்தச் செலவை மாநில சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன். சாலைகள் எல்லாம் ஏற்கனவே இருந்தவைகளாகும். இடையில் வந்ததுதான் இந்த ரயில்வே. ஆகையால் ரயில்வே இலாகாவினர் தான் இதற்காகும் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் நம் மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதியதாக எனக்கு நினைவு. இப்படிப் பல இடங்கள் இருக்கின்றன. எனவே இதைப் பற்றி மீண்டும் இந்த அரசு மத்திய சர்க்காருக்கு எழுதி, இதற்காகும் செலவை அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வாதம் நியாயமான வாதம்தான். மத்திய சர்க்காரே இவைகளை எல்லாம் செய்ய வேண்டும் என்றுதான் நாங்களும் வற்புறுத்துகிறோம். அப்படி லெவல் கிராசிங் போட்டால், அதற்குக் காவல் போட ஆகிற செலவை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். எனவேதான் அப்படி தேவைப்படுகிற முக்கியமான இடங்களில் மட்டும் இதற்காக ஆகும் செலவை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது.

**திரு கே. எஸ். அப்துல் வகாப் :** மேம்பாலங்கள் கட்டுவதற்காகும் செலவில் மத்திய சர்க்கார் பாதிச் செலவை ஏற்றுக்கொள்ளுகிறதென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ரயில்வே இலாகாவின் சார்பில் தண்டவாளத்திற்கு மேல் வருகிற பாலத்திற்கு மட்டும் ஆகிற செலவைத்தான் ரயில்வே ஒத்துக்கொள்ளுவதாகவும், ஏனைய பணத்தை மாநில அரசே ஏற்றுக்கொள்ளுவதாகவும் நினைக்கிறேன். இந்த வகையில் பார்த்தால், ½ பாகம்தான் மத்திய சர்க்கார் நிதியிலிருந்து வரும் என்பதை உணர்கிறேன். அது சரியா அல்லது மத்திய சர்க்கார் ஆகிற செலவில் பாதித் தொகையை மாநில சர்க்காருக்குத் தருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்கனவே இருந்தது. இப்போது ஏற்பட்டிருக்கிற முடிவின் அடிப்படையில், மத்திய அரசு பாதித் தொகையையும், மாநில அரசு பாதித் தொகையையும் செலவில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை இருக்கிறது. மற்றும் நகராட்சி மன்றங்களின் எல்லைக்குள் இவைகள் வந்தால், நகராட்சி மன்றமும் பாதித் தொகையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. எம். எத்திராஜுலு :** சென்ற ஆண்டு நான் ஒரு கேள்வி கேட்டிருந்தபோது கடலூர்-திருப்பாப்புலியூரில் ஒரு ரயில்வே மேம்பாலத்தைக் கட்டும் திட்டம் நான்காவது திட்டத்தில் இடம் பெறும் என்று முதலமைச்சர் அவர்கள் அன்று சொன்னார்கள். பொதுமக்கள் போக்குவரத்திற்கு அந்த இடம் மிகவும் தடையாக இருக்கிற காரணத்தால், தென்னாற்காடு மாவட்டத்தின் தலைநகராகிய கடலூர்-திருப்பாப்புலியூரில் உள்ள இந்த இருப்புப் பாதை மீது ஒரு மேம்பாலத்தைக் கட்ட இனிமேலாவது மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசு சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்ற காரணத்தால், இந்த வினாவிற்குப் பதிலளிக்க இயலவில்லை.

### *Lorry accidents*

*184[a] Q.—Thiru P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is

a Postponed from the list of questions for 25th March 1970





**any proposal to prohibit plying of lorries between 12O' clock in the mid-night and 2 a.m. in the morning since lorry accidents are increasing day by day ?**

### லாரி விபத்து

**திரு பி. திருஞானசம்மந்தம் :** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

லாரி விபத்து நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருவதால் இரவு 12 மணி முதல் 2 மணி வரை லாரிகளை ஓட்டக் கூடாது என்று தடை விதிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு ஜி. சுவாமிநாதன் :** லாரி ஓட்டுபவர்கள் இரவு நேரங்களில் தூங்காமல் இருக்க வேண்டுமென்று "டெக்ஸ்டிரின்" என்ற மாத்திரையைச் சாப்பிடுகிறார்கள். அதைச் சாப்பிட்டால் தூக்கம் வராது. அந்த மாத்திரையை அவர்கள் அதிகப்படியாகச் சாப்பிடுவதாகவும் அறிகிறேன். ஆனால் அந்த மாத்திரையை மருத்துவர் பிரிஸ்க்ரிப்ஷன் இல்லாமல் கொடுக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அப்படியிருந்தும், அவற்றை வாங்கி, தொடர்ந்தும் அதிகப்படியாகவும் சாப்பிடுவதால்விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று தெரிகிற காரணத்தால், அரசு அந்த மாத்திரைகளை மருத்துவச் சீட்டு இல்லாமல் விற்பனை செய்வதைக் கண்காணிக்கும் உத்தேசம் கொண்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்த மாத்திரையைப் பற்றிய விபரம் தெரியாது. மாண்புமிகு உறுப்பினருக்கு அது தெரிந்திருக்கலாம். மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாததால், பதில் சொல்ல இயலவில்லை.

**திரு. எம். எத்திராஜுலு :** சார், இப்போது லாரி விபத்து நாளுக்கு நாள் அதிமாகிக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் பத்திரிகையில் படிக்கிறோம். ஆகையால் இதை எப்படியும் கட்டுப்படுத்துவதற்கு, அதிக வேகம் போவதைத் தடுப்பதற்கு ஸ்பீடா மீட்டர் வைப்பதற்கு அரசு யோசிக்குமா ? அல்லது இரவு நேரங்களில் வருகிற லாரிகளில் ஒரு டிரைவரோடு இன்னொரு டிரைவரும் இருந்து ஷிப்டு முறையில் ஓட்டுவதற்கு அரசாங்கம் ஏதேனும் விதி முறை செய்யுமா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வேகத்தைக் கட்டுப்படுத்த பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மெட்ராஸ் மோட்டார் வெகிக்கிள்ஸ் ரூல்ஸ் 160எ விதியின்படி 200 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் மாலை 6 மணியிலிருந்து காலை 6 மணி வரையில் தொடர்ந்து வேலை செய்யக் கூடாது, அதாவது ஓட்டக் கூடாது என்று இருந்தது. அதை எடுக்க வேண்டுமென்று ஆட்சேபணை கிளப்பப்பட்டது. அந்த ஆட்சேபணை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அதைப் பற்றி பிறகு அரசு முடிவெடுக்கும்.

**திரு கே. எஸ். மணி :** பொருள்கள் கொண்டுவருகிற லாரிகள் யானைகவுனியில் இத்தனை மணிக்குக் கொண்டுவந்து சேர்க்கவேண்டுமென்று விதியிருப்பதால், லாரிகள் வேகமாக ஓட்டிவர வேண்டியிருக்கிறது. அதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதால், அந்த மார்க்கெட்டைத் திறக்கின்ற நேரத்தை முன்கூட்டியும், சாத்துகின்ற நேரத்தை அதிகரித்தும் அரசு உத்திரவிடுமா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மார்க்கெட்டுக்குக் குறித்த காலத்தில் வரவேண்டுமென்ற விதி இருந்தாலும், நம்முடைய விதியைக் காப்பாற்றிக்கொள்ள கொஞ்சம் ஜாக்கிரதையாக வரவேண்டும்.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, will the Hon. Minister be pleased to look into the matter in view of the fact that on either side of Mount Road up to Guindy a number of colleges are situated and these lorries are driven in a most dangerous manner right through the day, let alone the night, and stop the lorry traffic on this road at least during the day?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: The Hon. Member's suggestion will be considered.

திரு கே. எஸ். அப்துல் வகாப்: லாரி விபத்துக்களைக் குறைக்கும் வகையில் ஹெவி லைசன்ஸ் பெற்று பத்து வருஷ அனுபவமுள்ள டிரைவர்களுக்கு மட்டும் லைசன்ஸ் கொடுத்து ஓட்டுவதற்கு அனுமதிப்பதுபற்றி அரசு சிந்தித்து ஏதாவது முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றுவிட்ட காரணத்தாலேயே, விபத்துக்கள் ஏற்பட விட மாட்டார்கள் என்று சொல்ல முடியாது. சாமர்த்தியமாக ஓட்டுவதைப் பொறுத்தது இது.

*Bus accident*

*185 *Q.*—THIRU M. ETHIRAJULU: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that a bus belonging to the Periakulam Roadways was involved in an accident between Kumili and Lower Camp in Madurai district in last June;

(*b*) if so, the number of passengers who lost their lives; and

(*c*) the reasons for the accident?

பேருந்து விபத்து

திரு எம். எத்திராஜுலு: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கடந்த ஜூன் மாதத்தில் மதுரை மாவட்டத்திலுள்ள குமிழிக்கும் லோயர் கேம்ப்புக்கும் இடையில் பெரியகுளம் ரோடுவேஸ் பேருந்து விபத்துக்குள்ளாகியது உண்மையா?

(இ) ஆமெனில், அதிலிருந்த பிரயாணிகள் எத்தனை பேர் உயிரிழந்தனர்?

(உ) விபத்துக்கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) பத்துப் பேர்.

(உ) பெரியகுளம் ரோடுவேஸ் நிறுவனத்தைச் சேர்ந்த MDV 7404-ஆம் எண்ணுள்ள பேருந்தின் வலவர், குமிழிக்கும் லோயர் கேம்புக்கும் இடையேயுள்ள மலைச் சாலையின் குறுகிய பாதையில் தன் பேருந்துக்கு எதிர்த் திசையில் மற்றொரு பேருந்து வருவதைக்கண்டு பிரேக்குகள் போட்டார். எனினும், பிரேக் செயல்படவில்லை. இரு பேருந்துகளும் நேருக்கு நேர் மோதிக்கொள்வதைத் தவிர்ப்பதற்கென அப் பேருந்தின் வலவர் பேருந்தை இடது புறமாகத் திருப்பினர். பேருந்து பாதையினின்றும் விலகி, 95 அடி ஆழத்திற்குக் கீழே உருண்டு விழுந்தது.



திரு எம். எத்திராஜுலு: அந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை அந்தப் பேருந்துவின் உரிமையாளர்களால் கொடுக்கப்பட்டிருக்கிறதா? அதற்காக இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது பற்றிய குறிப்பு எதுவும் இங்கில்லை. அஜாக்கிரதையாக அந்தப் பேருந்தை ஓட்டியதாக அதன் டிரைவர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

திரு எம். எத்திராஜுலு: அந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஏதாவது நஷ்ட ஈட்டுத் தொகை வாங்கிக் கொடுக்க இந்த அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றிய விவரம் என்னிடமில்லை.

திரு எம். எத்திராஜுலு: நீலகிரி, ஏற்காடு, கோடைக்கானல் ஆகிய மலைகளுக்குச் செல்லும் பாதைகளில் தான் அடிக்கடி இம்மாதிரியான விபத்துக்கள் ஏற்படுகின்றன. திருப்பதிக்குச் செல்லும் மலைப் பாதையின் ஓரங்களில் தற்போது சுவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். அதைப் போல இந்த மலைப் பாதைகளில் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்க மலைச் சாலைகளின் ஓரங்களில் சுவர்கள் எழுப்ப இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த விபத்து ஏற்பட்டதற்குப் பிறகு தடுப்புச் சுவர் ஏற்படுத்த வேண்டும் என்று இதற்காக ரூபாய் 5 லட்சம் ஒதுக்கும் செயற்குறிப்பு அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது.

திரு எஸ். ராகவானந்தம்: தலைவர் அவர்களே, அந்தப் பாதை 1967-க்குப் பின்னுல்தான் போடப்பட்டதா? அல்லது அதற்கு முன்னுல் இருந்தே இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது எனக்குத் தெரியாது.

*Auction of old buses*

*196[a] *Q.*—THIRU T. K. SUBBIAH: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of buses of the State Transport Department which were declared as condemned and sold in auction during the years 1967 and 1968; and

(*b*) the amount so realised therefrom?

பழைய பேருந்துகள் ஏலம்

திரு. டி. கே. சுப்பையா: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அரசு பேருந்துத் துறை பேருந்துகளில் உதவாது என 1967–68-ஆம் ஆண்டுகளில் எத்தனை பேருந்துகள் ஏலம் விடப்பட்டன?

(இ) இதனுல் அரசுக்கு எவ்வளவு பணம் கிடைத்தது?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) and (இ) 1967-ல் 76 உதவாத பேருந்துகள் 8,25,547 ரூபாய்க் கும், 1968-ல் 161 உதவாத பேருந்துகள் 13,21,650 ரூபாய்க்கும் ஏலத்தில் விற்கப்பட்டன.

---

a Postponed from the list of questions for 25th March 1970

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த உதவாத பஸ்களை ஏலமெடுத்தவர்கள் அவைகளை என்ன செய்கிறார்கள் ? மீண்டும் அவைகளை சர்வீசுகளாக நடத்துகிறார்களா ? அவ்வாறு நடத்துகிறார்கள் என்றால், நாம் உதவாதவைகள் என்று சொன்ன அந்த பஸ்களுக்கு அவர்களால் எப்படி சர்டிபிகேட் வாங்கப்பட்டு நடைமுறைக்கு உபயோகமுள்ளதாக கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உதவாத பஸ்களை ஏலத்தில் விடுகிறோம். ஏலத்தில் எடுத்துப் போய் அவைகளை என்ன செய்கிறார்கள் என்ற விபரம் என்னிடம் இல்லை.

**திரு. எம். எத்திராஜுலு :** அப்படி உதவாத பஸ்களை எல்லாம் ஏலம் போடுவதாகச் சொல்லப்படுவது எந்த முறையில் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது ? பத்திரிகைகளின் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறதா ? அப்படியானால் அதற்கான விளம்பரம் எல்லாப் பத்திரிகைகளிலும் தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா :** பத்திரிகைகளில்தான் விளம்பரப்படுத்துவதாக எண்ணுகிறேன். ஆனால், இப்போது இப்படி ஏலம் விடுவதற்கான கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டு அதன் பார்வையில்தான் பஸ்கள் ஏலம் விடப்படுகின்றன. அந்தக் கமிட்டியில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

Director, Tamil Nadu State Transport Department.
Chief Engineer, Tamil Nadu State Transport Department.
Mechanical Engineer, Tamil Nadu State Transport Department.
Works Manager, State Transport Central Workshop, Chromepet.
District Transportation Officer, Kanyakumari district, Nagercoil
Depot Superintendent, concerned.
Thiru T. P. Alagamuthu, M.L.A.
THIRU Kasiram, M.L.A.
Thiru G. Parangusam, M.L.A.

**திரு. டி. கே. சுப்பையா :** உதவாத பஸ்கள் எல்லாம் மீண்டும் உபயோகப்பட மாட்டாது என்ற காரணத்தால், ஏலம் விடப்படுவதால், இவைகளை மீண்டும் சர்வீஸ் பஸ்களாக உபயோகப்படுத்தக் கூடாது என்ற அடிப்படையில் ஏலம் விடப்படுமா ? தற்போது அவைகள் எந்த முறையில் ஏலம் விடப்படுகின்றன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அப்படிப்பட்ட பஸ்களை எல்லாம் ஏலத்தில் எடுத்துச் சென்று, மீண்டும் உதவுகிற முறையில் பழுது பார்த்து, தாங்கள் அவைகளை உபயோகிக்கலாம் என்ற எண்ணத்தில்தான் ஏலம் எடுக்க வருகிறார்கள். மீண்டும் அவைகளையெல்லாம் சர்வீஸ் பஸ்களாக விடக் கூடாது என்றால், அவைகளை ஏலம் வாங்கும் பிரச்னையே இல்லாமல் போய்விடும். அவைகளை எல்லாம் நாம் பழுது பார்த்து உபயோகிப்பது நமக்கு லாபகரமாக இல்லாமல் இருப்பதால் தான் அவைகளை நாம் ஏலத்திற்கு விடுகிறோம். 1966ஆம் ஆண்டு வரை இந்த ஏலம் விடுவது என்பது டிபார்ட்மென்டிலேயே செய்யப்பட்டு வந்தது. 1967-க்குப் பிறகு அதற்கு என்று ஒரு தனிக் கமிட்டி ஏற்படுத்தி, அதன் மூலமாகத் தான் ஏலம் விடப்பட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு சி. பி. சிற்றரசு :** காயலான் கடையில் உள்ள பழைய சாமான்களில் பெரும்பாலான சாமான்கள், ஏலம் விடப்பட்ட பஸ்களின் சாமான்கள்தான் என்பதை அரசு அறியுமா ?



**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா :** பஸ்களை ஏலம் விட்ட பிறகு அவைகளை எடுத்துச் செல்லுகிறவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

### *Jeddarpalayam scheme*

* 197 *Q.*—THIRU T.K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether any scheme was considered for the construction of a drainage channel on the left bank of the Cauvery at Jeddarpalayam and to link the channel with the sea (via) Namakkal, Turaiyur, Perambalur, Ariyalur and Udayarpalayam taluks with a view to prevent damages by breaches whenever River Cauvery is in spate ; and

(*b*) if so, the decision taken thereon ?

### ஜேட்டார்பாளையம் திட்டம்

**திரு டி. கே. சுப்பையா :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) காவேரியில் வெள்ளம் அதிகமாக வரும்போது உடைப்பு எடுத்து சேதம் விளைவிக்காமல் தடுக்க ஜேட்டார்பாளையத்தில் காவேரியின் இடது பக்கத்தில் ஓர் வடிகால் வாய்க்கால், நாமக்கல், துறையூர், பெரும்பலூர், அரியலூர், உடையார்பாளையம் தாலூக்காக்கள் வழியாக வெட்டி சமுத்திரத்தில் கொண்டு போய் இணைக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டதா ?

(இ) முடிவு என்ன ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா :** (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கு அதிகச் செலவு ஆவதாலும், பயன் மிகவும் குறைவாக இருப்பதாலும், இத்திட்டம் கைவிடப்பட்டது.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரில் வெள்ளத் தடுப்பு நிதி என்று ஒன்று இருப்பதாகத் தெரிகிறது. அதைப் பயன்படுத்தி லாப நஷ்டக் கணக்குப் பாராமல் செய்யவேண்டிய இந்த விஷயத்தில் அரசாங்கம் ஏன் பின் தங்கவேண்டும் ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா :** குறிப்பிட்ட வேலைத்திட்டம் இருப்பதாக என்னிடத்தில் தகவல் இல்லை. மூன்று திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டு அதில் மோகனூர் வாய்க்காலை விரிவுபடுத்தும் திட்டம் இன்னும் அரசாங்கத்தில் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. டி. கே. சுப்பையா :** மத்திய சர்க்காரில் வெள்ளத்தடுப்புக்கென்று ஒரு நிதி இருக்கிறது என்பதை அரசு அறியுமா ? அதிலிருந்து பெற்று காவிரியிலிருந்து வருகின்ற வெள்ளத்தால் அந்தப் பகுதிகளில் நஷ்டம் ஏற்படாத வகையில் வடிகால் மாதிரி ஏதாவது வெட்டி விடுவதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும், வெள்ளத் தடுப்பு நிதியிலிருந்து பொதுவாகக் கொடுக்கப்படுகிறது. அதை வைத்துக்கொண்டு இந்தத் திட்டத்திற்காகச் செலவு செய்தால், அதிகமாக இதற்கு ஆகும் எஸ்டிமேட்டாலும், அவ்வளவு செலவு செய்தாலும் அதனால் பெறுகின்ற பலன் மிகக் குறைவாக இருப்பதாலும், இந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

[26th March 1970

*Palar Anicut Scheme*

* 198 *Q.*—Thiru T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stage of Palar scheme in Thethur Ammapatti, Marungapuri Panchayat Union, Tiruchirappalli district ?

**பாலாறு அணைக்கட்டுத் திட்டம்**

**திரு.டி. கே. சுப்பையா :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

திருச்சி மாவட்ட மருங்காபுரி பஞ்சாயத்து ஒன்றியபிலுள்ள தெத்தூர் அம்மாபட்டி பாலாறு அணைக்கட்டுத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா :** இந்த இடத்தில் ஓர் நீர்த் தேக்கத்தை உருவாக்கும் ஒரு திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

**திரு டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் எப்போது மேற்கொள்ளப்படும் ? எந்தெந்த மாவட்டங்களில் இது நிறைவேற்றப் படும் ? எவ்வளவு ஏக்கர்கள் இதனால் பயன்பெறும் ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாஷா :** இந்தத் திட்டம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை செய்யப்பட்ட பிறகு அவை பற்றிய முடிவு எடுக்கப்படும். எந்தெந்த இடங்களுக்கு என்றால், திருச்சி மாவட்டத்தில் குளித்தலை வட்டத்தில் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியப் பகுதியிலுள்ள அம்மாபட்டி கிராமத்திற்கு அருகில் பாலாற்றின் குறுக்கே பயனற்றுப் போனதாகக் கைவிடப்பட்ட அணைக்கட்டைப் புதுப்பிக்கும், செத்தூர், ஆலம்பட்டி, மருதம்பட்டி முதலிய கிராமங்கள் ஏரிகளின் கீழ் உள்ள ஆயக்கட்டுக்கு நீர் வழங்கும்பொருட்டு நீர் வழங்கும் வாய்க்கால்களைப் புதுப்பிக்கும்படியும் கோரி முறையீடு ஒன்று 1962-ல் தலைமைப் பொறியாளரால் (பாசனம்) பரிசீலிக்கப்பட்டது. பரிசீலனை இன்னும் முடியவில்லை.

**மிஸ்டர் சேர்மன் :** ஆர்க்காடு—ராணிப்பேட்டை பாலாறு இல்லை. இது வேறு பாலாறு.

*N.G.G.Os' Association of the Nilgiris District.*

* 216 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Non-Gazetted Government Officers' Association of the Nilgiris district submitted a Memorandum to the Chief Minister for the grant of Hill Allowance to them ; and

(*b*) if so, the action taken thereon ?

**நீலகிரி மாவட்ட அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் சங்கம்.**

**திரு. வி. ஈஸ்வர்மூர்த்தி :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) நீலகிரி மாவட்டத்தில் அரசிதழ் பதிவுபெறாத ஊழியர்கள் சங்கத்தினர் தங்களுக்கு மலைவாழ் இடப்படி அளிக்க வேண்டி முதல் அமைச்சருக்கு முறையீடு ஒன்றை பணிந்தனுப்பியுள்ளனரா ?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) அத்தகைய முறையீடு எதுவும் முதலமைச்சருக்கு வரவில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.



26th March 1970]

*Arishtams*

* 217 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Arishtams sold in the Ayurvedic Pharmacies contain Chloral Hydrate as one of the ingredients ; and

(*b*) if so, whether action has been taken under the Madras Chloral Hydrates Rules against the offenders ?

**அரிஷ்டம்.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஆயுர்வேத மருந்துக் கடைகளில் விற்கப்படும் அரிஷ்டங்களில் குளோரால் ஹைட்ரேட் அடங்கியுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், குற்றம் செய்தவர்கள் மீது தமிழ்நாடு குளோரால் ஹைட்ரேட் விதிகளின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சில இடங்களில் விற்கப்படும் அரிஷ்டங்களில் குளோரால் ஹைட்ரேட் அடங்கியிருந்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டு அப்படிச் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** குற்றம் செய்தவர்கள் மீது குளோரால் ஹைட்ரேட் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. பல இடங்களில் அரிஷ்டங்களில் குளோரால் ஹைட்ரேட் அடங்கியிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டாலும், பல ஆண்டு களுக்கு முன்னால் இந்த விதி ஏற்பட்டிருப்பதால், அதன் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிடுகிறார்கள். நான்கைந்து ஆண்டு களுக்கு முன்னால் மாயவரத்தில் பிடிக்கப்பட்ட வழக்கில் அந்த விதியின் கீழ் தண்டனை தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த விதியின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று தான் நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** விதியின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக் கையின்படி சில இடங்களில், அவர்கள் சொல்லியதைப் போல, தண்டனை யிலிருந்து தப்பிவிட்டாலும் கூட, சில இடங்களில் தண்டனை அளிக்கப் பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் கனகசுகம் என்ற பெயரால் ஒரு அரிஷ்டம், ஆல அரிஷ்டம் என்ற பெயரால் ஒன்று, இவையிரண்டி லும், எழு புட்டிகள் கைப்பற்றப்பட்டன. அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளில் அவர்களுக்கு தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். ராகவானந்தம் :** இந்த நடவடிக்கைகள் மதுவிலக்குச் சட்டத் தின்கீழ் எடுக்கப்படுகின்றனவா ? அப்படியானால், கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக் கின்றன ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:** தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 4 (1) ஏ பிரிவின்கீழ் 1959-ல் குளோரால் ஹைட்ரேட் சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் சோதனை செய்து இம்மாதிரி அரிஷ்டங்களை எடுத்து அதன் பேரில் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி எடுக்கப் பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. எம். எத்திராஜுலு :** அரிஷ்டம் இப்போது எல்லா இடங்களிலும் விற்கப்படுகிறது. அரிஷ்டம் என்ற பெயரால் கள்ளச் சாராயம் விற்கப் படுவதாக பல இடங்களில் போலீஸ்காரர்களால் கண்டு பிடிக்கப்படுவ தாகச் சொல்கிறார்கள். அப்படியானால் இந்த அரிஷ்டம் விற்கப் படுகிற இடங்களை சர்க்கார் எப்படி சோதனையிடுகிறார்கள் ? இத்தனை மாதங்களுக்கு ஒரு முறை சோதனை என்று தவறாமல் கண்காணிக்கப்படுமா?

[26th Marsh 197)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அரிஷ்டங்களைத் தடை செய்வதற்கு நம்மால் இயலாது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போல, இந்த அரிஷ்டத்தில் போதைப் பொருள்களைக் கலந்து விற்பனை செய்வதைக் கண்டு பிடித்து தடை செய்யலாம். எத்தனை இடங்களில் எந்தெந்த வகையில் சோதனை செய்கிறார்கள் என்ற விவரத்தை இப்போது அளிக்க இயலாது. அந்த சோதனையைக் கடுமையாக்க வேண்டுமென்று அரசு காவல் துறைக்கு யோசனை சொல்லியிருக்கிறது.

*Liquor permits*

*218 *Q.*—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether liquor permit has heen granted to any of the Members of the Legislature ;

(*b*) if so, the Number of Members who have been so granted permits ; and

(*c*) the basis on which such permits have been granted to them ?

**மது அருந்துவதற்கான அனுமதி**

**திரு. வி. தங்கப்பாண்டியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சட்ட மன்ற உறுப்பினர்கள் யாருக்காவது மது அருந்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டுள்ளது ?

(உ) எந்த அடிப்படையில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) ஆறு உறுப்பினர்கள்.

(உ) அனுமதி சீட்டுகள் உடல் நல காரணங்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

**திரு ஜி. சுவாமிநாதன் :** இதில் மேலவை உறுப்பினர்கள் யாருக்காவது அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மேலவை உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குமாக, மொத்தம் ஆறு பேருக்கு மது பர்மிட் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு வி. தங்கப்பாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த ஆறு உறுப்பினர்களுடைய பெயர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பார்களா ?

Thiru A.R. DAMODARAN : Mr. Chairman, Sir, is this question really necessary ? I am not one of them (laughter). But I do not think that it is in the public interest. The permits must have been granted on medical grounds. I do not think it is fair to the Member to make it a matter of public importance.

Thiru M. RAJAH IYER : Mr. Chairman, Sir, if I am to understand the position aright, no permit is granted to a Member by virtue of his being a Member of the Legislature. No special preference is given to Members of the Legislature in this regard. Permits were given to them, even as permits were given to the members of the public on



26th March 1970]

medical grounds. Are we going to categorise people for whom such permits were given when no special privilege or discretion in favour of the Member of the Legislature has been shown ? And is it necessary to announce their names on the floor of this House ?

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** இந்தப் பெயர் பிரச்னைபற்றிய கேள்விகள் அதிகமாகிவிட்ட காரணத்தால், அந்தப் பெயர்களை வெளியிடாமல் இருந்தால் தான் ஆபத்தாகப் போகும் என்று எண்ணுகிறேன். கீழ்க்கண்ட உறுப்பினர்கள் மது பர்மிட் வைத்திருக்கிறார்கள் :—

1. திரு. எம். ஏ. முத்தையா செட்டியார்.
2. திரு. துரைசாமி நாயுடு, எம்.எல்.சி.
3. டாக்டர் சந்தோஷம், எல்.எல். சி.

Thiru G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I know whether there has been any improvement in their condition after the grant of the permits ? (Laughter.)

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** அதைப்பற்றி அந்த உறுப்பினர்களைத்தான் கேட்க வேண்டும்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, இந்த அவை உறுப்பினர்கள் தங்களுக்கு பெர்மிட் வேண்டுமென்று கேட்டால் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மட்டுமாவது மெடிகல் கிரவுண்ட்ஸ் எதுவுமில்லாமலே தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** சில பேர் அந்தக் கஷ்டமும் இல்லாமலே பெற்றுக்கொண்டிருப்பதாகக் கேள்வி.

**திரு. எம். எத்திராஜுலு :** இங்கு மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருக்கிறது. அதை அமுல்படுத்த வேண்டிய தமிழக அரசில் சட்டசபை உறுப்பினர்களும், அதைக் கண்டுபிடிக்க வேண்டிய போலீஸ்காரர்களும் குடிக்கிறார்களே என்று பொதுவாக பொதுமக்களால் பேசப்படுவதைத் தடுக்கவாவது அரசாங்கம் இதில் தீவிர நடவடிக்கை எதையாவது மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** மதுவிலக்குச் சட்டத்தை தீவிரமாக அமுலாக்குவதற்கும், மது குடிப்பதற்கான பெர்மிட் வழங்குவதற்கும் எந்த விதமான தொடர்புமில்லை.

Mr. CHAIRMAN : Questions 219 to 223 are postponed.

*Tourist Bungalow*

*224 *Q.*—Thiru M. SANKARALINGAM PILLAI :Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether there is any proposal to construct a Tourist Bungalow on low rent basis in Chithannavasal, Pudukkottai ; and

(*b*) if so, the stage at which the proposal stands ?

**சுற்றுலா மாளிகை**

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) புதுக்கோட்டை, சித்தன்னவாசலில் குறைந்த வாடகையுள்ள சுற்றுலா மாளிகை கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எந்நிலையிலுள்ளது ?

[26th March 1970

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** (அ) (இ) சித்தன்ன வாசலில் ரூ. 1·25 லட்சம் செலவில் குறைந்த வருமானமுள்ளோர்க்கு சுற்றுலா மாளிகை ஒன்றை மத்திய அரசிடமிருந்து, பாதித் தொகையை உதவியாகப் பெற்றுக் கட்டுவதற்கான திட்டம் அனுப்பப்பட்டது. ஆனால் தற்போது அந்தத்திட்டம் மத்திய அரசால் கைவிடப்பட்டதால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியவில்லை. புதுக்கோட்டையில் சுற்றுலா மாளிகை கட்ட தற்போது திட்டம் எதுவும் இல்லை. இந்த இரண்டு ஊர்களில் சுற்றுலா வாய்ப்புகள் பற்றிய தகவல் புதுடில்லியிலுள்ள மத்திய சுற்றுலா துறை தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, சித்தன்னவாசலுக்குக் கோடை காலத்தில் போகும்போது, அங்கே வெயில் காரணமாக மேலே ஏறிப்போவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே அங்கே போகிறவர்களின் வசதியைக் கருதி தங்கும் ஷெட் ஒன்றைக் கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :** அதற்கான செயற் குறிப்பு எதுவும் தற்போது அரசாங்கத்திடம் இல்லை.

*City Civil Court, Madras*

*225 *Q.*—THIRU G. VASANTHA PAI : Will the Hon. the Minister for Industries be pleased to state :—

(*a*) whether any new building was constructed for the City Civil Court, Madras in the year 1964 ;

(*b*) whether any provision has been made in the building by way of accommodation for Chambers of Lawyers or for canteen facilities for them ; and

(*c*) if not, the reasons therefor ?

**உரிமை வழக்கு நீதிமன்றங்கள்.**

**திரு. ஜி. வசந்தபை :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) 1964-ஆம் ஆண்டில் சென்னை மாநகர உரிமை வழக்கு நீதி மன்றத்திற்காக புதிய கட்டிடம் ஏதேனும் கட்டப்பட்டதா ?

(இ) வழக்கறிஞர்கள் அறைகள் அல்லது அவர்களுக்கு சிற்றுண்டிச் சாலை வசதிகள் ஆகியவற்றிற்காக ஏற்பாடு ஏதேனும் அந்தக் கட்டிடத்தில் செய்து கொடுக்கப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) உயர்நீதிமன்றச் சுற்றுவளவுக்குள் உள்ள வழக்கறிஞர் அறைகளில் வழக்கறிஞர்களுக்கு ஏற்கனவே இட வசதி அளிக்கப்பட்டுள்ளது. அண்மையிலுள்ள நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் சாலையில் சில கெஜ தூரங்களுக்குள்ளாகவே சிற்றுண்டிசாலை வசதிகள் உள்ளன.

*Nationalised Bus-routes*

*226 *Q.*—THIRU T.K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

(*a*) the number of Bus routes which were nationalised district-wise in Tamil Nadu from 6th March 1967 up to the end of January 1969; and



26th March 1970]

(*b*) out of those, whose routes have been taken over, the number of operators district-wise, who were granted permits to operate in new routes within the prescribed limits of distance ?

**தேசிய மயமாக்கப்பட்ட பேருந்து தடங்கள்.**

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்ட வாரியாக தமிழ் நாட்டில் 6–3–1967 முதல் 1969 ஜனவரி முடிய எத்தனை பேருந்து தடங்கள் தேசிய மயம் ஆக்கப்பட்டன ?

(இ) தடங்களை இழந்த உரிமையாளர்களுக்கு மாவட்டவாரியாக எத்தனை பேருக்கு சட்ட வரம்புக்குட்பட்ட மைல்களுக்குள் புதிதாக ரூட்டுகள் ஓட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** (அ) and (இ) மேலவை முன் விவர அறிக்கை [a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, அப்படி பாதிக்கப் பட்டவர்களுக்குப் புதிதாக "ரூட்டுகள்" வழங்குவதில் என்னென்ன சலுகைகள் கடைபிடிக்கப்படுகின்றன ? திருச்சி மாவட்டத்தில் மட்டும் 11 ரூட்டுகளை இழந்தவர்களுக்கு எந்தவிதமான பரிகாரமும் செய்யப்பட வில்லை. இதற்கு என்ன காரணம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** பாதிக்கப்பட்டவர்கள் என்று பிரச்னையே எழுவது கிடையாது. பெர்மிட் எக்ஸ்பைர் ஆன பிறகு எல்லோருடையதைப் போலவே அவர்கள் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவர்களுக்கு என்று சலுகை கொடுப்பது சட்டபடி சரியல்ல.

**திரு. டி. கே. சுப்பையா :** ரூட்டுகளை இழந்தவர்களுக்கு மற்ற மாவட்டங்களில் வேறு ரூட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் எல்லாம் எந்தச் சலுகையை வைத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** சலுகையின் அடிப் படையில் கொடுக்கப்படுவதில்லை. அந்த விதிகளின்படி, அந்த ரூட் பர்மிட் வாங்க "எலிஜிபிலிடி" இருந்து அவர்களும் விண்ணப்பித்தால், ஆர்.டி. ஓ. அதைப் பரிசீலித்து அதை அளித்திருக்கலாம்.

**திரு. டி. கே. சுப்பையா :** என்னுடைய கேள்வியிலேயே "தடங்களை இழந்த உரிமையாளர்களுக்கு மாவட்டவாரியாக எத்தனை பேருக்கு சட்ட வரம்புக்குட்பட்ட மைல்களுக்குள் புதிதாக ரூட்டுகள் ஓட்ட அனுமதி அளிக்கப்பட்டது" என்று தான் கேட்டிருக்கிறேன். அதற்கான பதிலில் கூட "பாதிக்கப்பட்ட பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்கியுள்ள புதிய அனுமதிச் சீட்டுகள்" என்று தான் விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தான் கொடுக்கப்பட்டிருப்பதாக நான் எண்ணுகிறேன். அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், அவைகள் எந்தச் சலுகையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன். திருச்சி மாவட்டத்தில் மட்டும் 11 ரூட்டுகளை இழந்தவர்களுக்கு எந்தவிதச் சலுகையும் கிடைக்காததற்குக் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தக் காரணத்தாலும் தனிச் சலுகை அளிப்பதில்லை. மற்றவர்களைப் போலவே, அவர்களும் புதிய பர்மிட்டுக்கு விண்ணப்பம் செய்கிறார்கள். தகுதியின் அடிப்படையில் "ரூட் பர்மிட" அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

---

* Printed as Appendix on page .

[26th March 1970

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** பல வருஷங்களுக்கு முன்னால் கள்ளுக்கடைத் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்த மாநிலத்தவர்களுக்கு, நான் ஆர். டி. ஏ.-வில் இருக்கிற போது ஒரு யோசனை சொன்னேன். அதாவது அவர்களுக்கு எல்லாம் இருந்த வேலைவாய்ப்பு போய்விட்டதால், அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று சொல்லி அப்படி ஒரு "டைரெக்ஷன்" இருந்தது. இப்போது 75 மைல்களுக்கு மேல் உள்ள ரூட்டுகளை அந்த பஸ் உரிமையாளர்கள் இழக்கிற போது, அந்த இழப்பு அவர்களை அதிகம் பாதிக்காத வகையில் புதிய ரூட்டுகளை வழங்கும் போது, அவர்களுக்குத் தனியாக இதற்கென்று ஒரு மார்க் அல்லது ½ மார்க்கு மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாகப் போட்டுக்கொடுக்கலாம். எனவே இந்த யோசனையின் அடிப்படையில் அவர்களுக்குச் சலுகை வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாஷா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப் போல், டைரெக்ஷன் கொடுக்க நமக்கு அதிகாரம் இல்லை என்று தலைமை நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது. ஆனாலும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தாங்களாகவே முன் வந்து இந்த மாதிரி சலுகை கொடுத்தால், எனக்கு ஆட்சேபமில்லை.

**திரு. எம். எத்திராஜுலு :** பாதிக்கப்பட்ட பஸ் உரிமையாளர்களுக்கு மீன்பிடி விசைப்படகுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா ? அவர்களுக்கு எல்லாம் சலுகை காட்டக்கூடிய வகையில் அவர்களுக்கு மீன்பிடி விசைப்படகுகள் வழங்கப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** இது விவசாயத்துறை சம்பந்தமான கேள்வி. என்னிடம் விவரமில்லை.

**திரு. டி. கே. சுப்பையா :** 75 மைல்களுக்கு மேற்பட்ட ரூட்டுகளில் சொந்தக்காரர்களிடமிருந்து அந்த தடங்களையெல்லாம் தேசியமயமாக்கி அரசாங்கமே அவைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அரசின் கொள்கை இருந்து வருகிறது. தற்போது 75 மைல்களுக்குள்ளாக அந்த பஸ்களை விடுவதற்கு அந்தப் பஸ்களின் சொந்தக்காரர்களே மைலேஜைக் குறைத்துக் கொண்டு அதற்காக விண்ணப்பித்துக் கொண்டால் அவர்களுக்கு அனுமதியளிக்க அரசாங்கம் முன்வந்து அதற்குத் தேவையான உத்தரவிடப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா :** 75 மைல்களுக்கு மேற்பட்ட பேருந்துத் தடங்களை தேசியமயமாக்குவது என்பது இந்த அரசின் கொள்கை. எனவே இதை "சர்கம்வெண்ட்" செய்வதற்கும், தூரத்தைத் தாங்களாகவே குறைத்துக் கொள்ளுவதற்கும் அரசாங்கம் அனுமதியளிக்கவில்லை.

*Pullambadi Canal.*

* 227 *Q.*—THIRU T.K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the present stage of the scheme to provide shutters for the feeder canal which links the Senapathi and Mudikondan Villages with Vettakudi Eri fed by Pullambadi canal ; and

(*b*) the number of shutters that will be provided!

**புள்ளம்பாடி வாய்க்கால்.**

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புள்ளம்பாடி வாய்க்காலில் வேட்டக்குடி ஏரியிலிருந்து சேனாபதி முடிகொண்டான் கிராமங்களுக்குச் செல்லும் இணை வாய்க்காலுக்கு "ஷட்டர்ஸ்" போடும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(இ) எத்தனை போடப்படும் ?



26th March 1970]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இத்திட்டத்திற்கு நிர்வாகப் பொறியாளரால் 1–3–1969 அன்று ரூபாய் 17,000 மதிப்பிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

(இ) வேட்டக்குடி ஏரியின் முக்கிய நீர் வழங்கு கால்வாயின் 13 மதகுகளும், 7 மதகுகளும், கட்டப்படவிருக்கின்றன. மேற்பரப்பில் ஆறு மதகுகள் ஏற்கனவே கட்டப்பட்டு, அடைப்பு பலகைகளும் பொருத்தப் பட்டுள்ளன. வருகின்ற அடைப்புக் காலத்திற்குள் மீதியுள்ள பணிகளையும் மேற்கொண்டு முடிக்கப்படும்.

**திரு. டி. கே. சுப்பையா :** இந்த ஷட்டர் பலகை போடும் திட்டத்தை எந்த இலாகா செய்கிறது ? அதைப் பராமரிப்பவர்கள் யார்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பொதுப் பணித் துறை இலாகா சம்பந்தமானதாக அந்தக் கண்மாய் இருந்தால், பொதுப் பணித் துறை செய்யும். ரெவின்யூ இலாகாவுக்கு சம்பந்தப்பட்டதாக இருந்தால், ரெவின்யூ இலாகா பராமரிக்கும். பஞ்சாயத்து சம்பந்தப்பட்டதாக இருந்தால், தொடர்புள்ள பஞ்சாயத்து அதைக் கண்காணிக்க வேண்டும்.

**திரு. டி. கே. சுப்பையா:** தலைவர் அவர்களே, அங்கு ஆர். சி. டிவிஷன் தான் இதை மராமத்துச் செய்கிறது. ஆனால் பராமரிப்புச் செய்வதற்கு யாருமே இல்லை. அதற்காகத்தான் அதை அமைச்சருக்கு ஞாபகப்படுத்தும் அளவில் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். அதை ஆராய்ந்து அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதைப்பற்றிய விவரக் குறிப்பு வாங்கி மாண்புமிகு உறுப்பினருக்கு நான் கட்டாயம் தெரியப் படுத்துகிறேன்.

*Transport facility.*

* 228 *Q.*—THIRU T.K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Thiruvaiyaru Panchayat and Panchayat Union have passed and sent to the Government any resolution requesting the Government to ply more buses between Thanjavur and Thiruvaiyaru; and

(*b*) if so, the action taken thereon ?

**போக்குவரத்து வசதி.**

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சைக்கும் திருவையாற்றிற்கும் அதிக பேருந்துகள் விட வேண்டுமென்று திருவையாறு ஊராட்சி ஒன்றியமும், ஊராட்சியும் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) and (இ) அரசுக்கு எந்த முறையீடும் வரவில்லை. இருந்தபோதிலும் பொது மக்களிடமிருந்து முறையீடுகளும் திருவையாறு ஊராட்சி மன்றத் தீர்மானமும் தஞ்சாவூர் போக்குவரத்து அதிகாரிக்கு கிடைத்துள்ளன. வழித் தடங்களை நீட்டித்தும் கூடுதல் நடைகளுக்கு (additional singles) அனுமதியளித்தும், அதன் மூலம் தஞ்சாவூர்-திருவையாற்றுக்கு இடையே கூடுதல் போக்குவரத்து வசதிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

**திரு. டி. கே. சுப்பையா :** கூடுதல் பஸ்களைவிட டவுன் பஸ்ஸாக விட வேண்டுமென்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா :** டவுன் பஸ் விடுவதற்குப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனுல் பல தடவை "ஸ்டே" வாங்கி அதைத் தடை செய்தார்கள். கடைசியாக டவுன் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

*Taxis.*

* 229. *Q.*—THIRU T.K. SUBBIAH : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Taxi owners in Tiruchirappalli Town have made any representation to the Government for the removal of meters from the taxis ; and

(*b*) if so, the action taken thereon ?

வாடகை கார்கள்.

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சிராப்பள்ளி நகரில் உள்ள டாக்சி சொந்தக்காரர்கள் டாக்சி மீட்டரை எடுக்கக் கோரி முறையீடு செய்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா :** (அ) திருச்சிராப்பள்ளி நகரில் ஓடுகிற வாடகைக் கார்களில் மீட்டர் பொருத்துவதற்கான கால அளவை நீட்டிக்குமாறு திருச்சிராப்பள்ளி ஒப்பந்த ஊர்திகள் உரிமையாளர்கள் சங்கம் அரசை வேண்டிக்கொண்டது.

(இ) அந்தச் சங்கத்தின் வேண்டுகோள் மறுக்கப்பட்டது.

**திரு. டி. கே. சுப்பையா :** ஆறு மாதம் என்பது எந்த மாதத்தோடு முடிகிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஜூன் மாதத்தோடு முடிகிறது.

*Public Works Department Code Books.*

* 230. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the year or years in which the Public Works Department Code Books were first published ;

(*b*) when they were subsequently revised ; and

(*c*) whether there is any proposal to revise them ?

**பொதுப் பணித் துறை விதிக்கோவை.**

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொதுப் பணித் துறை விதிக்கோவைப் புத்தகங்கள் முதன் முதலாக எந்த ஆண்டில் அல்லது ஆண்டுகளில் வெளியிடப்பட்டன ?

(இ) அவை பின்னர், எப்பொழுது திருத்தியமைக்கப்பட்டன ?

(உ) அவற்றை திருத்தியமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**'மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.** (அ) தமிழ்நாடு பொதுப் பணித் துறை பற்றிய விதிக்கோவை நூல்கள் 1—6—1926 முதல் செயலுக்கு வந்தன.



(இ) தமிழ்நாடு பொதுப் பணித்துறை பற்றிய விதிக்கோவை நூல்கள் 1953-ஆம் ஆண்டு திருத்தப்பட்டன.

(உ) ஆம். பொதுப் பணித் துறை பற்றிய விதிக் கோவையினைத் திருத்துவது குறித்து அரசு ஆய்வு செய்து வருகிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[*NOTE.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. ADJOURNMENT MOTION *RE* STATEMENT OF THE CHIEF MINISTER IN THE ASSEMBLY *RE* THE ABOLITION OF THE UPPER HOUSE (LEGISLATIVE COUNCIL).

MR. CHAIRMAN : I have received notice of a motion from the hon. Member Thiru G. Vasantha Pai under rule 43 of the Legislative Council Rules for the adjournment of the business of the House to discuss a definite matter of urgent public importance, arising out of the speech made by the Leader of the Opposition in the LegislativeAssembly during 4-30 p.m. the discussion on the Appropriation (Vote on Account) Bill, on 9th March 1970, urging the abolition of the Upper House in Tamil Nadu though there was no resolution before the Assembly as envisaged by article 169 of the Constitution, and the acquiescence in the proposal by the Hon. the Chief Minister who is the Leader of the House in the Council that the said dialogue on the floor of the Assembly has coincided with the announcement of the Election Commission calling upon the several Council Constituencies to fill up the vacancies in the Council in the place of those retiring by rotation on the 21st April 1970 and has also created grave doubts in the minds of the public about the usefulness or other-wise of the Upper House.

I would like to know from the hon. Member how this matter comes under the rule referred to by him.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, the very existence of this House depends now on the mercy of the other House. When two strange bed-fellows, the Leader of the House (Council) and the Leader of the Opposition in the other House, come together to destroy the very existence of this House, I say it is a matter of urgent public importance. Now, Mr. Chairman, there is a rule in our rules of procedure, namely, rule 67 or some other rule, which says that nothing should be stated on the floor of the House about the other House. In the Assembly Rules also I think there is a similar rule saying that nothing should be said about this House on the floor of the Assembly. When there is this sort of limitation put on our freedom of speech in either House, the Leader of the Opposition in the Assembly and the Leader of this House as Chief Minister participated in a discussion in the Assembly which cast reflection on the utility or usefulness of this House or talked about the futility of its existence. That is a matter which requires grave consideration on our part. I am saying that because on the 21st of next month some of us are to retire by rotation. By a notification, dated the 9th March, the Election Commission has announced that elections would take place to fill up these vacancies arising from the 21st of April. On the 11th March 1970 the Hon. the Chief Minister and the Leader of the Opposition in the Assembly enter into a sort of friendly conspiracy to destroy the very existence of the Upper House. (Interruption) I am not saying it in a bad way..........

[26th March 1970

THIRU S. RAGHAVANANDAM : Is the word 'conspiracy' parliamentary, Sir ?

THIRU G. VASANTHA PAI . Mr. Chairman, Sir, I meant to say as, friendly discussion' to destroy the very existence of the Upper House of which the Hon. the Chief Minister is the Leader. I, therefore say, Sir, that this is a matter of grave,urgent public importance for us to consider. It is also important for another reason, namely, that we should not say anything against the Assembly and the Assembly should not say anything against us, unless there is a definite motion on the anvil. If there was a Resolution under Article 169 of the Constitution before the Assembly and the Parliament had moved in that behalf saying that this Second Chamber should be abolished, then it would be all right. Otherwise, nothing should be said by the other House about the utility or futility of this Chamber. But I find from the wording of the speech of the Leader of the Opposition. Thiru Karuthiruman, that it was to the effect that the continuance of this House was entirely uneconomic. My submission to you, Mr. Chairman, is that this is a matter of definite public importance. This House should be permitted to discuss it as its very existenee and continuance depends on the resolution to be passed in the future. But I do not want that this Damocles' sword should be kept hanging over us, over this house, by persistent and periodical reports about abolition of this House in future without any definite move in that behalf.

After all, Sir, we are entitled to receive respect from members of our constituencies and when we go asking them for votes, they say : "Why ask for our votes when the House itself is to go out of existence ?" I submit that this sort of thing should not be stated by Hon. Ministers. I really did not expect the Hon. the Chief Minister and the Leader of the House to acquiesce in this dialogue.

One more important thing to which I would like to refer is this. The Hon. the Chief Minister seems to have replied, "Because you are losing the majority, you are bringing in this resolution in this House" This is because the value of the Upper House has not been realised and it is thought that the ruling party can bring their nominees to this House indirectly. I would like, Sir, that the constituencies which return Members to this House should be given due respect, and the House also should be given due respect by Members of both the Houses who participate in such discussions. We should not be let down or lowered in public estimation. It is for that reason that I am bringing in this adjournment motion as it is a matter of definite urgent public importance.

MR. CHAIRMAN : Now we will hear the Hon. the Chief Minister.

4-40 p.m. *மாண்புமிகு திரு மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மேலவை தொடர்ந்து இருக்கலாமா அல்லது இருக்க வேண்டாமா என்பதைப்பற்றி சட்டமன்றத்தில் உள்ளவர்கள் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. மேலவை தொடர்ந்து இருக்க வேண்டுமென்றோ அல்லது தேவை இல்லை, கலைத்து விடவேண்டுமென்றோ தீர்மானம் கொண்டு வருவதற்கு சட்டமன்றத்தில் உள்ளவருக்கு உரிமை இருப்பதாகத் தான் என்னைப் பொறுத்தவரையில் நான் அறிகிறேன். இப்படி இருக்கும்பொழுது, சட்ட மன்றத்தில் மேலவை தொடர்ந்து இருக்க வேண்டியது இல்லை என்கிற கருத்தினைச் சொல்லிவிட்டு, மேலவை இருப்பதற்குப் பதிலாக முக்கியமானவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற கருத்து அடிப்படையில் சட்ட மன்றத்திலே 10 அல்லது 12 பேரை நியமித்துக் கொள்ளலாம், சட்ட மன்ற உறுப்



26th March 1970]

பினர்களாகத் தேர்ந்தெடுக்கலாம் அல்லது நியமிக்கப்படலாம் என்ற கருத்தை எதிர்கட்சித் தலைவர் திரு கருத்திருமன் எடுத்துச் சொன்னார்கள். அப்போது நான் குறுக்கிட்டு, அப்படிச் செய்வதாக இருந்தால், அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்றுதான் கூறியிருக்கிறேன். மேலவையை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக 10 அல்லது 12 பேரை சட்டசபையிலே நியமித்துக் கொள்ளலாம் என்ற புதிய யோசனையை அமுல் செய்வதாக இருந்தால், அதற்கு அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அதுவுமல்லாமல் மேலவை கலைக்கப்படும் என்றோ அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்றோ நான் அறிவிக்கவில்லை. அது மட்டுமல்ல. சட்ட மன்றத்தில் கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் பேசுகிறபொழுது, மேலவை உறுப்பினர்கள் இன்னும் கொஞ்சம் அதிகம் ஆக்கப்பட வேண்டும், நமக்குள்ள விதாச்சாரப்படி இப்போது 234 சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பதற்கேற்றவாறு 10 பேர் மேலவை உறுப்பினர்கள் அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசிடம் வைத்திருக்கிறோம், அதை வலியுறுத்துவோம் என்று குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். இது வரவிருக்கிற, நடந்து கொண்டிருக்கிற இந்தத் தேர்தல்களை எந்த வ்கையிலும் பாதிக்காது என்று நான் கருதுகிறேன். பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் இந்தப் பிரச்னையை அங்கே கிளப்பவில்லை என்பதையும், நிச்சயமாக பாதிக்காது, ஒரு வேளை இதுவரையில் பாதிக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு வசந்தபை எண்ணிக்கொண்டிருந்தால் இப்போது நான் நந்த விளக்கத்திற்குப் பிறகு சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆனவர்களும் ஆகப்போகிறவர்களும் அஞ்சத்தேவையில்லை என்று கூறி இந்தப் பிரச்னைக்கு இதோடு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம் என்ற கருத்தை அளித்து அமைகிறேன்.

MR. CHAIRMAN : Now I have heard both sides. The Press reports themselves did not give any impression that the House would be abolished and the Chief Minister has said that the abolition of the Upper House was subject to getting powers to nominate experts in various fields. This itself proves the utility or usefulness of the Council.

The question whether the Legislative Council should exist or not is entirely a matter of policy of the Government and the Assembly and if they so decide, this House can do nothing about it. Further, the hon. Member has got opportunities to raise this matter in the course of the discussion on the Appropriation Bill on the main Budget or ever in the course of discussion on the Supplementary Estimates under Grant VII—Elections, or Grant VI—State Legislative Council. Further, Government have also asked for an increase in the strength of the Legislative Council. It is entirely a matter of policy of the Government and also the Member has got ample opportunities to raise this matter in the House. Further, the matter of increasing the strength of the House is also pending. What really happened in the Assembly, to put it in the words of the Hon. Member, was only a friendly dialogue. So, the hon. Member need not get flabbergasted about it now. I may also use this opportunity to inform this House that the Members should not raise a subject by way of adjournment motion just for eliciting information from the Hon. Ministers. They should use all other parliamentary opportunities available to them for those purposes, and only in cases where it is a grave matter of urgent public importance warranting discussion by adjournment of the House, it should be brought before the House. Therefore, I withhold my consent to this motion.

[26th March 1970

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, அதாவது மணப்பாறை நகராட்சி மன்றத்தின் நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து மணப்பாறை நகராட்சி மன்ற காங்கிரஸ் உறுப்பினர் திரு எஸ். நீலகண்டன் அவர்கள் நகராட்சி மன்ற அலுவலகத்தின் முன்பாக உண்ணாவிரதம் இருப்பது குறித்து மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். முத்துசாமி :** தலைவர் அவர்களே, அரசாங்கத்தினரிடம் கிடைத்துள்ள தகவலின்படி, மணப்பாறை நகரமன்ற உறுப்பினரான திரு எஸ். நீலகண்டன், 5—3—1970 அன்று மாலை உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். மறு நாள் பிற்பகல் அதை நிறுத்திக் கொண்டார். துரைக்கண்ணு என்பவரை நகராட்சிப் பள்ளியில் ஒரு ஆசிரியராகத் தற்காலிகமாக நியமித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மேற்படி உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

இது பற்றிய விவரம் கீழ்வருமாறு :—

5—11—1969 அன்று கீழ்க்காணும் இருவர் தற்காலிகமாக விடுப்புக்கான காலி இடங்களில் (Leave vacancies) ஆசிரியைகளாக நியமிக்கப்பட்டனர் :—

(1) திருமதி பி. சரஸ்வதி.

(2) திருமதி லீலாவதி.

1970-ம் வருடம் பிப்ரவரி மாதம் 7-ம் தேதி அன்று துரைக்கண்ணு என்பவர் காலியாயிருந்த ஆசிரியர் பதவிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டார். இவர் அங்குள்ள ஆர். சி. ஆரம்பப் பள்ளியில் எழு மாத காலம் ஆசிரியராகப் பணியாற்றி அனுபவமுள்ளவர். எனவே, இவர் மற்றவர்களைவிடச் சிறந்த முறையில் நியமனத்துக்குத் தகுதி வாய்ந்தவர்.

1970-ம் வருடம் மார்ச் மாதம் 4-ம் தேதி அன்று திருமதி லீலாவதி வேலையிலிருந்து "இடம் இல்லாத காரணத்தினால்" விடுவிக்கப்பட்டார். திருமதி சரஸ்வதி வேலையில் நீடித்து வருகிறார்.

தற்காலிகமாக நியமிக்கப்படும் எந்த ஆசிரியரும் வேலை காலியில்லாத காரணத்தினால், எந்த நேரத்திலும் விடுவிக்கப்படலாம்.

தற்காலிகமாக இறுதியில் நியமிக்கப்பட்ட திரு. துரைக்கண்ணு என்பவரே முதலில் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்க வேண்டும். தற்காலிகமாகச் செய்யப்படும் நியமனங்களில் கூட கிரமமுறை (seniority) பொதுவாகக் கையாளப்பட வேண்டியதே. திரு. துரைக்கண்ணு என்பவரை வேலையில் தொடரவும் திருமதி லீலாவதி என்பவரை வேலையிலிருந்து நீக்கவும் உத்தரவிட்டது நேர்மையானது அல்ல. முறையான கொள்கையைக் கொண்டு கையாளுமாறு ஆணையருக்குத் தனியாக அறிவுரை வழங்கப்படுகிறது.

## IV. DISCUSSION ON THE FINAL SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1969-70.

MR. CHAIRMAN : We will take up discussion on the Final Supplementary Statement of Expenditure for 1969-70. Thiru M. Rajah Iyer will now speak.

* THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, I have great pleasure in offering a few remarks on the Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1969-70 placed before the House.



26th March 1970] [Thiru M. Raja Iyer]

Sir, one of the actions of the Government that was hailed by all sections of employees—Government servants, Local Body, employees and teachers in Aided Schools—was the sanction of the Special Compensatory Allowance of Rs. 10 to them. There was a little confusion abour this measure whether it was given only for the Government servents I hope the Hon. Finance Minister's Budget Speech has made it abundantly clear that it will be applicable to all employees in the Local Bodies as well as teachers in Aided Sch1ols. Still I find, Sir, in page 36 of the booklet before us in the Explanatory Note that the Government have ordered that pending receipt of the Pay Commission's Report, a special compensatory allowance of Rs. 10 be granted to all Government servants drawing a pay upto and inclusive of Rs. 500 per mensem with effect from the salary earned for March 1970 payable in April 1970. I do not understand how this generous measure of the Government announced so unequivocally could be restricted only to the Government servants here in page 36 under item 6. Sir, I am only sorry that this note has been drawn up rather indifferently and in a slipshod manner and I think it does not indicate any restriction on the part of the Government to confine such a vital measure, the concession shown to all employees, to Government servants alone. There is a lot of confusion about it. In fact, there was an editorial to which the hon. Member referred. We were not quite sure whether Aided School Teachers would be eligible for this concession. The Budget Speech made it abundantly clear that it would apply to all employees. It is very unfortunate, therefore, Sir. that this note should be there. I would appeal for greater care in preparation of notes and indices that are placed before the House. The other day, I had occasion to refer to an important measure, namely, introduction of Raffle Scheme, but it did not find a place in the three voluminous books placed before us, while insignificant items were there. It only went to show that the contents of the indices under various topics were merely brought out from the pages of last year's Budget. With a little care being bestowed on what are important and what are unimportant items, such an important measure as introduction of raffles, could have been brought in the index. Here is yet another instance, Sir, where it makes it appear that Government servants alone are eligible for the Special Compensatory Allowance. It should be disillusioned at the earliest opportunity and instructions should be issued to all the officers to see that the pay for March that is to be disbursed on 1st April gives this benefit of special compensatory allowance to all the employees, employees of the local bodies and aided school teachers and Government servants. After all, Sir, 1st April is not far away and the pay for March has to be sanctioned by the authorities within a week's time and I hope that on 1st April 1970 all the employees would get this compensatory allowance.

Sir, on page 34 of the memorandum, I find a reference to the new pension scheme, that has been hailed by one and all. I remember our hon. Friend Thiru Raghavanandam here pointing it out as a measure where generosity runs riot. In fact, the hon. Member went to the extent of saying that the Government had committed themselves to the new scheme without calculating the cost of this very generous measure to merge D.A. with salary for purpose of calculating the pension and also saying that the last 12 months' average pay drawn would be the quantum for arriving at the pension. This was hailed as a laudable measure. But I am only sorry that this benefit or boon would go only to people, who accidentally retired on or after the 26th February 1970. I do not understand how this 26th of February could be considered as the crucial

date that would affect the quantum of pension to which a Government servant retiring in 1969-70 may be entitled. If the Government had said that 1st April 1970 would be the crucial date, then there might be some meaning in the proposal. The Hon. the Finance Minister presented the Budget on the 26th February 1970. He could have presented it on the 25th or the 24th. That one day is to affect the quantum of pension of people who retired before the particular date. That strikes me as rather unjust and rather accidental.

THE HON. THIRU M. MUTHUSWAMY : How is 1st April 1970 reasonable ?

THIRU M. RAJAH IYER : Being the date on which the financial year begins, I thought 1st April 1970 would have some reason or rhyme behind it. Even if the Government fix 1st April 1970 as the crucial date, I admit there would be hard cases. I grant that. As a School-master I know how these hard cases could crop up. If we fix 35 per cent for a pass, or even 30 per cent, there will always be hard cases of pupils getting a few marks less than the minimum required for a pass. What I would like to urge for the consideration of the Government is this. Why should not Government make this applicable to all Government servants who retired in the year 1969-70 ? Now only some of the people who retire in the year 1969-70 are to get the benefit. Why should not the Government extend this concession to all the Government servants who retire in the year 1969-70 ? That would make the generosity of the Government complete. It would earn the gratitude of more Government servants to the Government than now. I must say, Sir, there is almost a fine parallel to drive my point home. Family pensions are going to be given to colleagues of ours in the Legislature who unfortunately passed away during their term of office, and for whom we passed condolence resolutions. The family of the deceased Members is to get a pension and that is to be given retrospective effect for the entire term of the legislator. This is reasonable, And, Sir, just in the same way, we should give retrospective effect to this benefit, and enable all Government servants who retired in the year 1969-70 to get this benefit.

I am glad, Sir, that the Pasumpon Muthuramalinga Thevar College is to get Rs. 2 lakhs by way of special grant for its building scheme. That college is dear to our hearts for a number of reasons. It serves a backward area and a most backward community. It is a unique college. Most of the reputed colleges give admission to boys getting 500 and 450 marks. This college goes out of the way and admits boys getting less than 250 marks. They get the most backward boys. That is almost a disqualification for the other colleges. The students who get such marks are slow learners. But with these boys they have produced wonderful results. They took in boys with low marks and produced very high percentage of passes. Therefore when this college gets Rs. 2 lakhs for the building programme, it is something about which we are really happy. But I do not understand why we should cut into the provision made for the welfare of Scheduled Tribes and Backward classes to provide this money. Even though the college might be related in a way to denotified tribes, etc., and the most backward community. I feel that the provision for the college building should have come out of the provision made for education. It is just an accident that this college serves a backward area. If Rs. 2 lakhs were to come fromthe provision made for Education then



this Rs. 2 lakhs under the Welfare of Scheduled Tribes and Backward Classes would still be available for distribution of scholarships to the members of those communities. So, I hope that instead of bringing it under the provision made for Backward Classes, it can as well be brought under the head ' Education '.

I am happy that the Text-Books Society is going ahead and is asking for a loan of Rs. 5 lakhs to bring out nationalised text-books. I do not know whether it is to be a loan or somethingelse. But this amount cannot touch the fringe of the problem. We are talking in terms of production of millions and millions of text-books for the schools for all classes and for several subjects. And these should be available before June 1970, Mathematics books, English books, and so on. For this lakhs and lakhs of rupees must be available to the Corporation. I do not understand how by merely advancing Rs. 5 lakhs the target that we have set could be achieved.

Apart from this, Sir, the Corporation should stand on secure and firm foundation. I am glad to note that this Corporation is to be made an autonomous body, of course, under the control of the Government. p.m. Whenever it requires money, it could get it from the nationalised banks without an application to the Government. Plenty of money is available with the nationalised banks. I hope the Text-Books Corporation could get all the money it requires from these banks and bring out the books in time. Bringing out millions of books in time and making them available to the school boys is no easy joke. It is a prodigious undertaking. Then there are three important aspects of this question—the production of quality books which is an academic question ; the printing and publication of books and the marketing of books, that is, making them available to the students in time which is the commercial aspect. I wonder whether by June 1970 all these could be completed and whether our books would be available in time. If the Government are thinking in terms of supplying these books by June 1970, these books should be in the market by May 1970. We have almost reached April and unless they are available in May, the students would not get these books in time and we will have to think of new experiments in teaching, namely, imparting knowledge without basing it on text-books. It may be a salutary principle, of course, but unfortunately our classroom teaching is bookridden and book-based. Teachers will be at sea unless they get these books in time. Can we ensure the supply of these important books for all schools by the month of May 1970 without fail ? If not, it is up to the Government to allow the private publishers to go ahead for one more year. The Text-Books Corporation could come into the field in the year 1971. If there is going to be confusion about the books being made available to schools, the students will suffer and suffer terribly. There may be good reasons behind nationalisation of text-books, sound reasons for bringing out books by a nationalised corporation. But unless we are able to implement the promise and bring out the books in time, I feel private enterprise should bring out the books for one more year so that the students may not suffer when the schools reopen.

Sir, another suggestion I wish to put forward is that the Corporation should be an autonomous body. It must be able to get all the money it needs from the nationalised banks. The accounts of the Corporation should be kept separate. They should not be merged with the general accounts. Whatever profits accrue—I am sure very

substantial and considerable profits would accrue—all these profits should go purely to improving the quality of education and to enhancing the welfare of the teachers. For education and teacher welfare alone should the profits accruing from the sale of the nationalised books be ear-marked.

Thank you, Sir.

***திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, துணை மானிய கோரிக்கை அறிக்கையில் 12-வது கோரிக்கையான காவல் துறையை அடிப்படையாக வைத்து தமிழ்நாட்டுக்கே உரிய ஒரு புதிய பிரச்னையைப்பற்றிப் பேசலாம் என்று கருதுகிறேன். தற்சமயம் கள்ளநோட்டு அடிக்கிற விவகாரம் அதிகப் படியாக பல இடங்களில் பேசப்பட்டு வருகிறது. நோட்டு அடிப்பவர்கள் மிகுதியான பணத்தைச் சேர்த்துவிடுகிறார்கள். ஒரு சமுதாயத்திற்கு புறம் பான காரியத்தைச் செய்கிறார்கள் என்று பார்க்கிறோம். ஆனால் நோட்டு அடிக்கிறவர்களுக்கு மேலான இன்னும் சுலபமாகவும் சீக்கிரமாகவும் சம்பாதிக்கும் மற்றொரு பிரிவினர் தமிழகத்தில் இருக்கிறார்கள் என் பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் கிட்டத்தட்ட கடந்த 25 ஆண்டுகளாக மிகுந்த புராதன கலைப்பொருளாக இருக்கிற விக்கிரகங்களைத் திருடி விற்பனை செய்து கோடிக் கணக்கான ரூபாய் சம்பாதிக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு குழு வினர் 1964–66 வருஷத்தில் கிட்டத்தட்ட ரூ. 20 லட்சம் பெறுமான விக்கிர கங்களைத் திருடியிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பத்து லட்சம் ரூபாய் பெறுமான விக்கிரகங்களைக் கைப்பற்றி தஞ்சையில் ஒரு வழக்கு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. இதை யார் செய்கிறார்கள் என்று பார்க்கும் பொழுது, சாதாரண ஏழைகள் செய்வதில்லை. சமுதாயத்தில் பெரிய தொடர்பு உள்ளவர்கள். பெரிய ஸ்தாபனங்களில் தொடர்பு வைத்திருப் பவர்கள்தான் இந்தக் காரியத்தைச் செய்கிறார்கள். அது மட்டுமல்லாமல், இவர்கள் "ஆர்ட் மியூஸியம்" என்று வைத்துக்கொண்டு கலைப் பொருள் களை ஆட்களை வைத்துத் திருடி விற்பனை செய்ய வெளி நாட்டுக்கு அனுப்புகி றார்கள். கலைப் பொருள்களின் பெருமானம் "வேல்யூ" நமக்குச் சாதாரண மாகத் தெரியாமல் இருக்கிறது. தமிழகத்திலுள்ள கலைப் பொருள்களை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று முதலாவது சோழர் காலத்து விக்கிரகங்கள். இரண்டு, இரண்டாவது சோழர் கால விக்கிரகங்கள். மூன்று நாய்க்கர் கால விக்கிரகங்கள். இதில் எவ்வளவுக்கெவ்வளவு விக்கிரகங் களின் காலம் பின்னோக்கி போகிறதோ அவ்வளக்கவ்வளவு விக்கிரங் களுக்குப் பெறுமானம் "வேல்யு" அதிகப்படியாக ஆகிறது. ஒரு சிலையின் விலை எவ்வளவு என்பதற்கு உதாரணமாக நான் கடந்த 6 மாத காலத் திற்குள் நடைபெற்ற சில திருட்டுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். அதில் ஒன்று தஞ்சை கலைக்கூடத்தில் உள்ள 4, 5 திருவெண்காடு விக்கிரகங்கள் இந்த விக்கிரகங்களில் சிவபார்வதி, பிரசாண்டார், ரிஷபதேவர், கல்யாண கோலம் ஆகிய விக்கிரகங்கள் அண்மையில் வாஷிங்டனில் நடந்த ஒரு பெரிய கலைக் கண் காட்சிக்கு அனுப்பப்பட்டன. அங்கே இந்த விக்கிரங் களின் விலை என்ன என்ன என்று கணக்குப் போட்டார்கள். அவர்கள் சொல்லிய கணக்குப்படி இந்த 5 விக்கிரகங்களின் மதிப்பு ரூ. 5 கோடி. இந்தக் கணக்கை ஆர்க்கலாஜிக்கல் டிபார்ட்மெண்டில் கூட தெரிந்து கொள்ளலாம். தஞ்சைக் கலைக் கூடத்தில் இன்னும் கோடிக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பல விக்கிரகங்கள் இருக்கின்றன. அவைக ளுக்குக் காவல் காலையில் ஒருவர், மாலையில் ஒருவர்—இவர்கள் போலீஸ் கார்கள்கூட அல்ல. கடந்த டிசம்பர் மாதத்தில் அங்கே உள்ள கலைப் பொருள்களைத் திருடுவதற்காக ஒரு சிலர் மாலையில் நுழைந்து காவல் காரரை அடித்து அவரைக் கட்டிப்போடுகிற சமயத்தில் அசந்தர்ப்பமாக போலீஸ்காரர்கள் கண்ணில் பட்டு தவிர்த்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் இந்த 5 கோடி ரூபாய் பெறுமானமுள்ள விக்ரகங்கள் திருட்டுப்போயிருக் கும். அண்மையில் தென்னாற்காடு ஜில்லா ராஜேந்திர பட்டணத்தில் 2½ அடி உயரமுள்ள ஒரு அம்மன் விக்ரகம் காணவில்லை. அதன் மதிப்பு



ரூ. 75 ஆயிரம். அடுத்தபடி, திருப்பந்துருத்தி, தஞ்சைக்கு அருகில் உள்ள ஊர். அங்கு வரதராஜபெருமாள் கோவிலில் 6 மாதங்களுக்கு முன்னால் ஒரு விக்கிரகம் திருடு போயிருக்கிறது. அதன் விலை ஆயிரக் கணக்கான ரூபாய். அடுத்து, நன்னிலத்தில் சில விக்கிரகங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அதில் ரூ. 5 லட்சம் பெறுமானமுள்ள 9 விக்கிரகங்கள் காணாமல் போய் அறந்தாங்கியில் பிடிக்கப்பட்டிருக்கின்றன. திருச்சி ஜில்லாவில் அல்லிதுரை என்ற ஊரில் ரூ. 15 ஆயிரம் பெறுமானமுள்ள ஒரு சிறிய பிரதோஷண விநாயகர் திருடு போயிருக்கிறது. அதைக் கண்டு பிடித்து, பாலக்கரை போலீஸ் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட் டுள்ளது. துர்ப்பாக்கியமான நிலை என்னவென்றால் இச்சிலைகளின் மதிப்பு யாருக்கும் தெரியவில்லை. கோவிலில் இருக்கின்ற விக்கிரகங்களைப் பற்றிப் பேரேடு வைத்திருக்கிறார்கள். அதில் செப்பு விக்கிரகத்தின் கனம் இவ் வளவு என்று எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த விக்கிரகங்களின் கனம் இரண்டு பவுண்டு அல்லது ஒரு பவுண்டு என்றுதான் தெரிகிறதே தவிர, அவற்றினுடைய விலை ரூ. 20 அல்லது 30 லட்சம் என்பது தெரியவில்லை. அந்த மாதிரி விக்ரகங்கள் திருடு போய்விட்டதற்காக காவல் நிலையத்திற்கு வந்து புகார் கொடுத்தால், அவர்கள் அவற்றினுடைய பெறுமானம் தெரி யாமல் சுலபமாக விட்டு விடுகிறார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மாதிரி விக்ரகங்களின் மதிப்பைத் தெரிவிப்பதால், இன்னும் கூடு 5-10 p.m.
தலான ஆபத்து ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எப்போதாவது சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறோம். இனிமேல் கோயிலில் இருக்கிற விக்ரகங்கள் என்னென்ன, எப்படிப்பட்ட நிலையில் இருக்கின்றன, அவற்றின் மதிப்பு என்ன என்பதை யெல்லாம் தெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும். கோயில்களிலும், கலைக் கூடங்களிலும் உள்ள விக்கிரகங்களுக்கு எந்த விதமான பாதுகாப் பும் இல்லை. ஏதோ பெயருக்கு ஒரு காவலாளி இருக்கிறார். அதுவும் போலீஸ்காரர் இல்லை. அதைப் பயன் படுத்திக் கொண்டு சமூகத்தில் பெரிய மனிதர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள் இந்த விக்ரகங்களைத் திருடி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக் கிறார்கள். இவற்றைத் தவிர்க்க 1938-ல் "ஆண்டிக்விடிஸ் கண்ட்ரோல் ஆக்ட்" என்ற ஒரு சட்டம் போடப்பட்டிருக்கிறது. இந்த பழைய சட்டத்தை வைத்துக்கொண்டுதான் இன்னும் நாம் கண்காணிக்கிறோம். இதற்காக எந்தவிதமான புதுச் சட்டமும் இல்லை. இதில் இன்னும் ஒரு முக்கிய மான விஷயம் என்னவென்றால் கோயிலிலிருந்து திருடுகிறவர்கள், அதை திருடுவதற்கு முன்னால் அந்த விக்கிரகத்தைப் படம் எடுத்துக் கொண்டு போய், அதைப் போன்ற வேறு ஒரு விக்கிரகம் செய்து அதைக் கோயிலில் வைத்து விடுகிறார்கள். கோயிலில் உண்மையான விக்ரகம் இருப்பதாக நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் பல இடங்களில் பழைய விக்ரகம் இப்பொழுது இல்லை. இதற்கு நான் ஒரு உதாரணம் சொல் வேன். கும்பகோணம் பக்கத்திலுள்ள சிவபுரம் என்ற இடத்தில் 1956-ம் வருடத்தில் நடராஜர் உள்ளிட்ட 7 விக்கிரகங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. இதில் நடராஜர் விக்ரகம் மட்டும் 15 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ளது. இதைத் திருடிக் கொண்டு போய்விட்டு அந்தக் கோயிலில் வேறு ஒரு விக்கிரகத்தை வைத்திருக்கிறார்கள். யூ. கே.யிலுள்ள "பாரட்" என்ற நிபுணர் நம் நாட்டுக்கு வந்து விக்ரகங்களை பார்க்கிறபோது பம்பாயில் புராதன பொருள்கள் விற்கிற இடத்தில், இந்த நடராஜர் சிலையைப் பார்த்து விட்டு, அண்மையில் "ப்ரான்ஸஸ் ஆப் சவுத் இந்தியா" என்ற புத்தகத் தில் அதைப் பற்றி எழுதி இருக்கிறார். கும்பகோணம் சிவபுரத்தில் தோண்டி எடுக்கப்பட்ட கலைப் பொருளான நடராஜர் சிலை பம்பாயில் உள்ள மார்க்கட்டில் விலை பேசப்படுகிறது என்று அவர் அதில் எழுதுகிறார் கள். ஆனால் இன்னும் அந்த சிலை கோயிலில் இருப்பதாக நமக்கு நினைப்பு. விக்கிரகத் திருட்டு சம்பந்தமாக வழக்கு ஒன்று அண்மையில் உயர்நீதி மன்றத்தில் நடந்தது. நீதிபதி கே. நாராயணசாமி முதலி யார் அவர்கள் தீர்ப்பிலிருந்து ஒரு சில வார்த்தைகளை நான் இங்கே படிக்கிறேன்.

[Thiru G. Swaminathan] [26th March 1970

" His Lordship said that there were discrepancies in the prosecution evidence and gave the benefit of doubt and acquitted the accused ".

இப்படி குற்றவாளிகள் விடுபடுவதற்குக் காரணம் என்ன? போலீஸ் கண்காணிப்பு வேண்டிய அளவு இல்லை என்பதுதான். இதைப்பற்றி அவர்கள் மேலும் குறிப்பிட்டிருப்பது . . . .

" I am cognisant of the great evil of the denudation in the form of theft of idols and other treasures from temples which is sweeping the country from one end to the other. These gangs of criminals operating as racketeers are selling these priceless and invaluable treasures which really constitute a monumental testimony to our cultural richness and heritage and must be brought to book by creating a special cell ".

விக்ரகத் திருட்டுகள் பற்றி அடிக்கடி பல கேள்விகள் நம்முடைய மன்றத்தில் எழுப்பப்பட்டிருக்கின்றன. அதையொட்டி இந்துமத அறநிலைய கமிஷனரால் பல கடிதங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. 1954-ம் வருடம் டிசம்பர் மாதம் 10-ம் தேதியில் கோயில் நிர்வாகிகளுக்கு எழுதப்பட்டிருப்பது,

" It has been impressed sufficiently on the Executive authorities of religious institutions both under the rules framed under sections 36 and 100 (2) (i) of the Act, as well as in the Executive instructions cited above that their paramount duty is to safeguard against theft and preserve the jewels and other valuables, etc., of religious institutions. However, of late, there have been many cases of thefts of jewels, precious stones, golden domes, scrapping of gold and silver from vahanams, etc. Sanctum sanctorums have been broken open and the idols have been uprooted and the gold and silver pieces and precious stones deposited underneath the pedestals of the idols have been removed."

இதற்கு அடுத்தபடியாக 1955-ம் வருடம் மார்ச் மாதம் 12-ம் தேதி அன்று எழுதப்பட்டுள்ள இன்னொரு கடிதத்தில்

"Whenever thefts of jewels, idols and other properties belonging to institutions occur, the Executive authorities of such institutions should immediately report to the police giving full details as to how the theft had occurred, the nature, description and approximate value of the articles lost and the names and addresses of persons who are suspected to be involved in the theft and send a copy of such report to the Deputy Commissioner " என்பது.

மேற் குறிப்பிட்ட கடிதத்தில் திருட்டை எப்படிக் கண்டு பிடிப்பது, நடந்தால் என்ன செய்வது என்பவை விளக்கப்பட்டுள்ளன. மறுபடியும் ஒரு கடிதம் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி அன்று அனுப்பப்பட்டிருக்கிறது. அதில்

"Of late, theft of idols is on the increase. Ways and means have to be devised effectively to prevent thefts of idols. Idols of antiquity cannot be valued in terms of money ".

என்று எழுதப்பட்டிருக்கிறது. 1965-ல் மறுபடியும் ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் 1965–69-க்கு இடைப்பட்ட காலத்தில் கிட்டத்தட்ட நூற்றுக்கணக்கான இடங்களில் விக்கிரகங்கள் திருட்டுப் போயிருக்கின்றன. இந்த விக்ரகங்கள் தமிழ் நாட்டின் புராதனச் சொத்து. எனவே அவற்றைக் காப்பாற்ற வேண்டிய பெரிய பொறுப்பு மக்களுக்கும், அரசிற்கும் உண்டு. இந்த விக்கிரகங்களெல்லாம் தமிழ் நாட்டை விட்டுப் போய் விட்டால், நம் தமிழ் கலாச்சாரத்தைக் காப்பாற்ற முடியாது போய்விடும் என்பதைக் கருத்தில் கொண்டு விக்கிரகங்கள் திருட்டுப்போவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த விக்ரகத் திருட்டுகளைக் கண்டுபிடிக்க ஒரு இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ், ஹெட்



26th March 1970] [திரு. ஜி. சுவாமிநாதன்]

கான்ஸ்டபிள், ஒரு கான்ஸ்டபிள், ஆக மூன்று பேர்கள் இருக்கிறார்கள். நம்முடைய தமிழ் நாட்டில் தஞ்சை, திருச்சி ஆகிய இடங்களில்தான் இத்திருட்டுகள் அதிகம். கண்காணிக்க 3 பேர்கள் தான் இருக்கிறார்கள் என்பதால்தான் இவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இதற்கு நம்முடைய மாநில அளவிலே நாராயணசாமி முதலியார் அவர்கள் சொன்னதைப்போல ஒரு தனிப் போலீஸ் படை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

Thiru G. VASANTHA PAI: I am obliged to you, Mr. Chairman, for giving me this opportunity to speak on the Supplementary Estimate presented by the Government and to refer to the topic that I raised earlier in the day, namely, adjournment of the House to discuss a definite matter of urgent public importance. I shall resume from where I left the matter. I would like to say, Sir, that it is the duty of the House as well as Members of the House to see that the respect for this House is restored outside the precincts of the House also. One of the reasons why of late respect for the House has gone is the existence of constituencies which bring in Members by indirect election and the system of nominations. This is liable to great abuse at the hands of the party politicians. They make use of these constituencies just to make this House a replica of the Legislative Assembly which is not the intention of the Constitution. They are virtually bringing in political parties through these constituencies and making the House a replica of the Assembly and thus they defame us in the eyes of the other people and say that we are not useful or that we are a body which can be of no utility.

Sir, the Constitution under Article 173 (3) (*b*) has put in the regular mode of indirect election from these constituencies. There it is said that the Local Authorities are an electorate, that the teachers are an electorate and that the Graduates are an electorate. All these electorates have been defined in the Representation of People Act, under the notification under the Constitution and the delimitation of constituencies. Sir, the teachers have also been defined under Article 173. It also defines the Graduates' Constituency and what the qualifications and equivalent qualifications of the electors are. The real object of forming these constituencies is to provide representation for educated people, for teachers, for members of the local bodies, municipal councils and the graduates who can send their representatives and voice their independent opinion on the floor of this House. But, Sir, starting from a former Chief Minister of Tamil Nadu, when it was Madras State, from the time of Thiru C. Rajagopalachari, a method of nomination was used to bring politicians through these constituencies. Lately also, Sir, people have been bringing in politicians through these constituencies and this has not served the real purpose for which these constituencies were brought into existence under the Constitution. My object in referring to this matter is that this Council should not be made a replica of the Assembly. It will serve its purpose if real representatives of local authorities, if real representatives of graduates are returned to this House, and persons nominated by Government are really specialists in Art, Culture, Social work, Literature and things like that. If such people adorn the House, then we will not be the object of derisive criticism at the hands of the Members of the Assembly. The existing practice brings us into contempt in the mind of the public. I want the Government and the members of political parties to give this House the due weightage that the provision of the Constitution calls for and make the Upper House a truly representative body of the several interests which it is sought to be made, and not

just a replica or a smaller model of the Assembly where political factions are there on either side and Members lift their hands as per the dictates of the party whips, but a body of Members to put forth their objective viewpoints to the Government and the public and use their independent judgment on matters coming before them without being unduly warped by party discipline.

It is my request, Sir, that the Members of the other House should respect this House and also all the constitutional provisions should be strictly followed. Sir, even in the case of the nomination of Thiru C. Rajagopalachari to the Council, there was a writ petition in the High Court. The Court refused to interfere in it and said that it was done in the appropriate manner, that it was approved by the Governor and that, therefore, it could not be questioned in a Court of Law, but observed that these constituencies served a different purpose.

Sir, under these circumstances, my only object in bringing in the adjournment motion earlier and now in speaking on it is to impress upon the House that the constituencies should be left in their pure state, uninvaded by political ambitions and made to serve the purpose for which the Constitution-makers intended it. I fervently appeal to the Treasury Benches as well as to the Opposition not to make use of these constituencies for any other purpose, least of all for political purposes.

I thank you again, Mr. Chairman, Sir, for giving me this opportunity and I do hope that the supplementary demands made here have been rightly made and will continue to be made for the full period of the existence of this House and the Constitution also. I hope also that no radical change will be made in the existing set-up and no effort will be made to throw away the Upper House, but every effort will be made to subserve it and preserve it in the true spirit in which it was intended to function and help the administration as well as the functioning of democracy in this country.

Thank you, Mr. Chairman.

5-20 p.m. ***திரு. எஸ். ராகவானந்தம்** : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள மானிய கோரிக்கை 30-31-ன் மீது என்னுடைய கருத்தினை வழங்க நினைக்கிறேன். சில மாதங்களுக்கு முன்னால் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு என ஒரு தனி உயர் மட்ட குழு அமைத்து, அவர்களுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க, தமிழக அரசு அவர்களுக்கென தனியாக ஒரு உயர் மட்ட குழு அமைத்தது. அந்த உயர் மட்டக் குழுவின் பரிந்துரைக்கு இணங்கி, டிராவலிங் அலவனஸ் (பிரயாணப்படி), இரவு அலவன்ஸ், இரவு தங்கு அலவன்ஸ் போன்ற வற்றிற்காக 40 லட்சத்து 59 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இதற்காக நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் உயர் மட்ட குழு வைக்க வேண்டும் என்று கேட்ட காலம் 2-வது ஊதியக் குழு வருமா, வராதா ; அமைப்பார்களா, அமைக்க மாட்டார்களா என்று சந்தேகமாக இருந்த காலம். அந்த நேரத்தில் நான் கேட்ட போது, உடனடியாக அதை ஏற்றுக் கொண்டு உயர் மட்டக் குழுவை அமைத்து இவ்வளவு சலுகைகள் அளித்ததற்கு தமிழகப் போக்குவரத்துத் தொழிலாளர் இன்றைய தினம் மிகவும் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறார்கள். 2-வது ஊதியக் குழுவின் பரிந்துரைக்காக காத்திராமல் உயர் மட்ட ஊதியக் குழுவின் பரிந்துரையின் பேரில் "ப்ரிஞ்ச் பெனிபிட்ஸ்" என்று சொல்லக்கூடிய மற்றச் சலுகைகள், அவர்கள் என்ன தர வேண்டுமென்று கேட்டார்களோ அதை விட அதிகமாகவே வழங்கி



யிருக்கிறது. அதைப் போல போக்குவரத்து ஊழியர்கள் சம்பந்தமாக 2-வது ஊதியக் குழு செயல்படுவதற்கு முன்னால், அது சம்பந்தமாக தொழிற் சங்கத் தலைவர்களை, அதில் அக்கரை காட்டக் கூடியவர்களைக் கலந்தாலோசித்த பிறகு செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இப்போது கூட டெக்னிகல் சிப்பந்திகள் என்று சொல்லக்கூடியவர் களுக்குச் சில குறைகள் இருக்கின்றன. அவை பற்றி போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கூறியிருக்கிறேன். இப்போதுள்ள அமைச்சர் அவர்கள் எதையும் மிகவும் நிதானமாகக் கேட்டறிந்து அவற்றில் நல்ல முறையில் நீதி வழங்கக்கூடியவர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மிகவும் இருக்கும் காரணத்தினால், இரண்டாவது ஊதியக் குழு தனது பரிந்துரைகளை வெளியிடும் வரையில் காத்திராமல் இவற்றைச் செய்வார்கள் என்று கருதுகின்றேன். நான் வேறு ஒன்றை முக்கியமாக இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது கண்டக்டர்கள் மீது இரண்டு விதமான வழக்குகள் இலாகா ரீதியாகத் தொடரப்படுகின்றன. ஒன்று "எஃப். வி." என்று சொல்லப்படுவது. அதாவது "ஃபேர் கலெக்டட்" அதாவது பயணத்திற்கான பணத்தைப் பெற்றுக்கொண்டு பயணத்திற்கான கட்டணச் சீட்டைக் கொடுக்காமல் இருப்பது என்பது ஒரு வகையான குற்றச்சாட்டு. இன்னும் ஒன்று "எஃப்.என்.வி.", அதாவது "ஃபேர் நாட் கலெக்டெட்" என்பது. அதாவது பிரயாணி களிடமிருந்து பணத்தையும் பெறாமல் டிக்கெட்டும் கொடுக்காமல் இருந்து விடுவதாகும். இது மற்றவகையான குற்றச்சாட்டு. இவற்றுக்காக கண்டக்டர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படுகிறது. வேண்டுமென்றே ஏமாற்றுவதற்காக பணத்தைப் பெற்றுக்கொண்டு பயணச்சீட்டை கொடுக் காமல் இருக்கும் கண்டக்டர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதில் யாரும் குறுக்கே நிற்கவில்லை. ஆனால் பணமே வாங்காமல் இருக்கும் போது, இப்படித் தண்டனை கொடுக்கப்படுகிறது. இது அதிகமாக சென்னை மாநகரத்தில் ஓடும் ஸர்வீஸில்தான் நடைபெறுகிறது. குறிப்பாக "பீக் அவர்" என்று சொல்லப்படும் காலை 9 லிருந்து 10 மணி வரையில் அதிகமான நெரிசல் ஏற்படும் நேரத்தில் இப்படி நேர்ந்துவிடுகிறது. கண்டக்டர்கள் "டிக்கெட் ப்ளீஸ்" "டிக்கட் ப்ளீஸ்" என்று கேட்டுக் கொண்டே போகிறார்கள். ஆனால் பழக்கப்பட்ட ஒரு சிலர் டிக்கெட்டே வாங்காமல் இருந்துவிட்டு இறங்கவேண்டிய இடம் வந்ததும் இறங்கிச் சென்றுவிடுகிறார்கள். அடிக்கடி பிரயாணிகள் வேண்டுமானால், கண்டக்டர் களைப் பற்றிக் குறை சொல்லுகின்றார்களே தவிர, பிரயாணிகளிடம் உள்ள இந்தக் குறையைப் பற்றி, அதாவது இந்த நாணயக் குறைபற்றி யாரும் பேசக்காணோம். பிரயாணம் செய்கிற அனைவருமே நாணய மானவர்கள் என்று யாரும் கருதமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். எனக்கும் அனுபவம் உண்டு. இரயில்வேயிலும் இப்படிப் பயணம் செய்கின்றவர்கள் உண்டு. நான் இரெயில்வேயில் ஸ்டேஷன் மாஸ்டராக வும் டிக்கட் கலெக்டராகவும் பணியாற்றியிருக்கிறேன். அப்படி டிக்கெட்டின்றி பயணம் செய்கின்றவர்களுடைய முகத்தைப் பார்த்தாலேயே தெரிந்துவிடும். ஆனால் நெரிசல் நேரங்களில் பஸ்ஸில் இப்படி டிக்கெட்டின்றி பயணம் செய்கின்றவர்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம். இரெயில்வேயில், டிக்கெட்டின்றி பயணம் செய்கின்றவர் களுக்கு பயணக் கட்டணத்துடன் குறைந்த பட்சம் பத்து ரூபாய் அபராதத் தொகையாக வசூலிக்கப்படுகிறது என்பது என்னுடைய நினைவு. அவர்கள் அப்படிப்பட்ட அபராதத்தொகைகளைக் கட்டத் தவறினால், சிறைத் தண்டனையும் இருக்கிறது. அதுபோன்று அரசு பஸ்களில் இப்படி டிக்கட்டின்றி பயணம் செய்கின்றவர்களுக்கும் தண்டனை விதிப் பதற்கு ஏற்றதாக ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு திரு முத்துசாமி அவர்களிடம் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனென்றால் சம்பந்தப்பட்ட துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் இவ்விடம் இல்லை. மாண்புமிகு திரு. முத்துசாமி அவர்கள் அவரிடம் சொல்லுவார்கள் என்று கருதுகிறேன். குறைந்த பட்சம் ஒரு ரூபாயாவது அபராதத்தொகையாக வசூல் செய்வதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இப்படி ஒரு சட்டம் இருந்தால், டிக்கட்டின்றி பயணம்

[திரு. எஸ். ராகவானந்தம்] [26th March 1970

செய்யத் தயங்குவார்கள். இதன் மூலம் இலாகாவிற்கும் வசூல் குறையாமல் இருக்கும், கண்டக்டர்கள் மீதும் இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளும் தண்டனைகளும் வருவதைத் தவிர்க்க முடியும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழில் சங்கங்கள் பற்றி ஒரு வார்த்தையைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழகப் போக்குவரத்துத் துறையில் இரண்டு சங்கங்கள் செயல்படுகின்றன. ஒன்று அங்கீகரிக்கப்பட்ட சங்கம். மற்றது அங்கீகாரம் இல்லாத சங்கம். இப்படி அங்கீகாரம் இல்லாத சங்கத்தினர் "சீப் பாப்புலாரிட்டி" என்று சொல்லுவார்களே, அப்படிப்பட்ட மலிவான செல்வாக்கு பெறுவதற்காக, கோரிக்கைகள் வைக்கும்போது பெறமுடியாத கோரிக்கைகளையும் தெரிந்தே தொழிலாளர்களிடம் சொல்லி, அவர்களைக் கவர்ச்சி செய்ய வேண்டும் என்று செய்கிறார்கள். நானும் பல தொழிற் சங்கங்களுக்குத் தலைவராக இருந்துகொண்டு இருக்கிறேன் என்பது இந்த மன்றத்தில் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும் என்று கருதுகிறேன். நான் சாதாரணமாகக் கையாளும் முறை என்னவெனில் முதலாளிகளுக்கு அதிக லாபத்தைப்பெற்றுத் தந்து தொழிலாளர்களுக்கு அதிகச் சலுகைகளைப் பெற்றுத் தருவது என்பதுதான். ஏனென்றால் அவர்களுக்கு லாபம் இல்லையென்றால் தொழிலாளர்களுக்குத் தருவதற்கு அவர்களிடம் பணம் இருக்கப்போவதில்லை. எனவே நிர்வாகத்தோடு ஒத்துழைத்து அவர்கள் பெறும் லாபத்தில் பெரும் அளவிற்குத் தொழிலாளர்களுக்குப் பெற்றுத்தருவது என்ற தத்துவத்தில் தான் நான் தொழிற் சங்கத்தினை நடத்திவருகின்றேன். ஆனால் அங்கீகாரம் இல்லாத போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் தொழிலாளர்களிடத்திலே தவறான சில பிரச்சாரங்களைச் செய்து வருகின்றார்கள். இன்று இந்தச் சங்கத்தினர் தொழிலாளர்களிடம் "போனஸ் பெற வேண்டும்" என்பது போன்ற ஆசைகளை எழுப்பிவருகின்றார்கள். இது கவர்ச்சியாகத்தான் தெரியும் தொழிலாளர்களுக்கு. தொழிலில் லாபம் ஏற்பட்டாலும், நட்டம் ஏற்பட்டாலும், நான்கு சதவிகிதம் போனஸாகக் கொடுக்க வேண்டும் என்ற ஆசைகளை எழுப்பும் போது யாருக்குத்தான் கவர்ச்சியாக இருக்காது? நல்ல வேளையாகத் துணைத் தலைவர் இங்கே பேசும் வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அவர்கள்கூட ஒரு சந்தர்ப்பத்திலே ஆசிரியர்களுக்கு "போனஸ்" வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். அன்றைக்குக் கேட்டேன். எந்த விதமான "போனஸ்" வேண்டும் அது இன்செண்டிவ் போனஸா, லாபத்தில் போனஸா என்று. எனவே "போனஸ் வேண்டும்" என்று கேட்கும்போது கவர்ச்சியாகத்தான் இருக்கிறது. இப்படிப்பட்ட கவர்ச்சியான கோரிக்கைகளைக் கிளப்பிவிட்டு, தொழிலாளர்களைக் கிளர்ச்சிப்பாதையில் தள்ளிவிட வேண்டும் என்று அரசியல் நோக்கங்களுக்காக சிலர் இவற்றில் ஈடுபடுகின்றார்கள். இப்படித் தொழிலாளர்கள் பிரச்சனையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, பொதுவான ஒரு உண்மையினை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். 1965-ஆம் ஆண்டு போனஸ் சட்டத்தில் 32-வது பிரிவு 4-வது உட்பிரிவின் கீழ் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது, "போனஸ் என்பது மத்திய அரசாக இருந்தாலும், மாநில அரசாக இருந்தாலும், அவர்கள் இலாகாவின் கீழ் தொழில் நடக்குமானால், அந்தத் தொழிலில் பணியாற்றுகின்றவர்களுக்குப் போனஸ் இல்லை" என்ற ஒரு விதிவிலக்கை அறிவித்திருக்கிறது. எனவேதான் மத்திய அரசு நடத்தும் தபால் தந்திப் பிரிவிலும் சரி, மத்திய அரசு நடத்தும் ரெயில்வே டிப்பார்ட்மெண்டிலும் சரி, அவற்றில் உள்ள ஊழியர்களுக்கு "போனஸ்" என்பது கொடுக்கப்படாமல் இருக்கிறது. அந்த விதிவிலக்கின்கீழ்தான் அரசு இலாகாவினால் நடத்தப்படும் ட்ரான்ஸ்போர்ட் இலாகாவில் உள்ளவர்களுக்கும் "போனஸ்" கொடுக்கப்படாமல் இருக்கிறது. எனவே "போனஸ்" வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறவர்கள் அதற்கு முன்னதாக இலாகாவில் இருப்பதை ஒரு கார்ப்பொரேஷனின் கீழ் கொண்டு வரவேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருப்பார்களானால் நானும் அதற்கு ஆதரவாக இருந்திருப்பேன்.



26th March 1970] [திரு. எஸ். ராகவானந்தம்]

மாறாக அது நடைபெற முடியாத ஒன்று என்று தெரிந்திருந்தும் இப்போதே உங்களுக்கு "போனஸ்" உண்டு என்று அவர்களிடம் ஒரு ஆசையை எழுப்பிவிட்டு, பிறகு அவர்களிடம் ஒரு மனக்கசப்பை ஏற்படுத்திவிடவேண்டும் என்பதற்காக ஒரு சிலர் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவது உண்மையிலேயே வருந்தக்கூடிய ஒன்றாகும். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுவதெல்லாம் தொழிற்சங்கத்தை நடத்துவது என்பது சாதாரணமானதல்ல. முள்ளின்மீது போட்ட துணியை எடுப்பது போல, மிக எச்சரிக்கையுடன் செய்யவேண்டிய ஒரு காரியமாகும். கோரிக்கைகளை வைப்பது என்பது மிகவும் சுலபம். ஆனால் அவைகளைப் பெற முடியாமல் போகும்போது, அது பற்றிய சமாதானத்தைத் தொழிலாளர்களுக்குச் சொல்லும்போதுதான் அதில் உள்ள சங்கடங்கள் தெரியும். எனவே இப்படிப்பட்ட கோரிக்கைகளை எடுத்து வைக்கும்போது, நாம் எச்சரிக்கையுடனும் நியாயமாகவும் வைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இப்போது போக்குவரத்துத் துறையிலேயைச் சார்ந்த தொழிலாளர்கள் மிகவும் அக்கறையுடன் பணியாற்றிக்கொண்டு வருகின்றார்கள். எனவே அவர்கள் இன்னும் நம்பிக்கையுடன் பணியாற்றுவதற்கு ஏற்றவாறு "டிக்கெட்டு இன்றி பயணம் செய்கின்றவர்களுக்கு தண்டனை" என்ற சட்டத்தினைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் அதில் பணியாற்றுகின்றவர்கள் குடியிருக்கும் இடங்களிலிருந்து பணியாற்றும் இடத்திற்குச் செல்லுவதற்கான "ரெஸிடென்ஷியல் கார்டு பாஸ்" கொடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட உடனடிப் பிரச்சனைகளைப் பொறுத்தவரையில் காலம் தாழ்த்தாமல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு உத்திரவுகளைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் துயர் துடைப்புப் பணிகளுக்கு என ரூபாய் 1·28 கோடி அதிகமாக வேண்டும் என்று இறுதி மதிப்பீட்டில் கோரியிருக்கிறார்கள். நான் அரசினை இந்தச் செயலுக்காக மிகவும் பாராட்டக் கடமைப்பட்டவனாகின்றேன். இந்தத் துயர் துடைப்புப் பணிகளுக்கென மொத்தமாக இந்த அரசு ரூ. 18·35 கோடி செலவழித்திருக்கிறது. இதில் குடி தண்ணீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் வெட்டுவதற்கும் ரூ. 5·93 கோடி ரூபாயும், சிறு பாசனப் பணிகளுக்கு என ரூ. 2·80 கோடியும், பெரும் பாசனப் பணிகளுக்கு ரூ. 2·24 கோடியும், சாலைப் பணிகளுக்கு என ரூ. 3·28 கோடியும், மண் வளப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு என ரூ. 0·21 கோடியும் மராமத்து பணிகளுக்கு என ரூ. 0·09 கோடியும், தக்காவி கடன்களுக்கு என ரூ. 2·65 கோடியும், பாதிக்கப்பட்ட இடங்களில் தண்ணீர் வழங்குவதற்காக விரைவு திட்டத்தின் 5–30
கீழ் ரூ. 0·51 கோடியும் ஆக ரூ. 18·35 கோடி செலவழித்திருக்கிறார்கள். p.m.
இவற்றில் மகிழ்ச்சிக்குரிய காரியம் என்னவென்றால், இப்படி மொத்தமாகச் செலவழிக்கப்பட்டுள்ள ரூ. 18 கோடியே முப்பத்தைந்து லட்சத்தில் ரூ. 17 கோடிக்கு மேலே கிராமப்புறங்களுக்காகவே செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அரசியல் காரணங்களுக்காக எதிர்க்கட்சியினர் இன்று இந்த அரசு கிராமப்புறங்களை அறவே புறக்கணித்து விட்டது, அனைத்தையும் நகர்ப்புறங்களுக்கே செய்து கொண்டு வருகின்றது என்ற கருத்தைச் சொல்லிக்கொண்டே வருகின்றனர். நான் அப்படிப்பட்டவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ரூ. 18·35 கோடி ரூபாயில் ரூ. 17 கோடி கிராம மக்களுடைய நலன்களுக்காகவே, அவர்களுடைய துயர் துடைப்பிற்காகவே செலவழிக்கப்பட்டிருக்கின்றது என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு கிராம மக்களிடத்தில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கின்றது என்பதைத் தெரியப்படுத்துவதற்காகத்தான் இதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, டில்லிக்குச் சென்றிருந்த மாண்புமிகு முதலமைச்சரும் நிதியமைச்சரும் இந்த 1970-71-ம் ஆண்டு மத்திய வரவு செலவுத் திட்டத்தில் மத்திய அரசு ரூ. 25 கோடி துயர்தணிப்பு நிதியாக ஒதுக்கியிருக்கிறார்கள். சில மாநிலங்களுக்கு, வறட்சி இடங்களில் வாய்ப்பு தேடித் தருவதற்காக ரூ. 25 கோடி ஒரு ஆண்டுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். எஞ்சிய நான்கு ஆண்டுகளில் ரூ. 100 கோடி ஒதுக்கலாம் என்று எதிர்பார்த்து, இந்த 100 கோடியில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை, அது தவறு, அது சேர்க்கப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர். அப்படி சேர்த்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்னாரே, "ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தனூர் போன்ற ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பகுதிகள் பஞ்சப்பிரதேசம் ஆயிற்றே, என்ன செய்யப் போகிறீர்கள்" என்று, அப்பேர்ப்பட்ட பிரதேசங்களுக்கு உதவி செய்வதற்கு மத்திய அரசு ஒதுக்கிய தொகையிலிருந்து வறட்சிப் பிரதேசங்களில் வேலை வாய்ப்பு தேடித்தருவதற்கு உதவும். எனவேதான் பணம் வேண்டுமென்று வலியுறுத்திப் பேசினார்கள். அந்தக் கொள்கையை மீண்டும் வலியுறுத்தியிருப்பதற்கும் என்னுடைய நன்றியறிதலையும் பாராட்டுதலையும் இந்த அரசுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில், கிராம மக்களுக்கு மிகவும் பாடுபட்டுக்கொண்டிருக்கிற அரசு இது. ஒதுக்கியிருக்கிற பெரும்பாலான தொகையை துயர் துடைப்புப் பணிகளுக்கு, கிராம மக்களுக்குச் செலவு செய்திருக்கிறார்கள். வீணாக மின்சாரக் கட்டணத்தை 8·25 பைசாவிலிருந்து பத்து பைசாவிற்கு உயர்த்திய காரணத்தால், கிராம மக்களைப் புறக்கணித்து விட்டார்கள் என்று சொல்லி வரவிருக்கிற பஞ்சாயத்து தேர்தலில் ஓட்டு வாங்க முடியுமா என்று ஆசையோடு இருக்கிற எதிர்கட்சி தோழர்களுக்கு சொல்லிக்கொள்ளுவேன், "அந்தப் பிரச்சாரம் பலன் அளிக்காது" என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்திய அரசிடம் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, கிடைக்க வேண்டிய உரிமையைப் பெற்றிருக்கிறது. மாண்புமிகு நிதியமைச்சர், "துயர் தணிப்புப் பணிகள் செலவுக்கு மத்திய அரசு உதவி கிடைக்காது. அதற்கு மேல் செய்தால் அதில் 75 சதவிகிதம் மத்திய அரசும் 25 சதவீதம் மாநில அரசும் செய்ய வேண்டும், இந்த 25 சதவீதம் மத்திய அரசு கடனாகத்தரலாம்" என்று இதுவரை நமக்குக் கிடைக்க வேண்டியதைப் பெற்றுள்ளார். அது எங்களால்தான் முடிந்தது என்று சொல்லிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன். அப்படி உரிமையை வாங்கிய அரசுக்கு நன்றியும் பாராட்டுதலும் தெரிவித்துக்கொண்டு இந்த அளவோடு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

***திரு. எம். எத்திராஜுலு :** தலைவர் அவர்களே, கனம் நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்த துணைமானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதலில் காவல் துறையினருக்கு அவர்களுடைய கடமை பொறுப்பு மேம்பாடு குற்றங்களை கண்டுபிடித்தல் போன்றவைகளில் சீர்படுத்துவதற்கும் ஒழுங்கான ஒரு ஏற்பாட்டினை எதிர்காலத்தில் இவர்களுக்கு செய்வதற்கும் ஒரு குழுவை தமிழக அரசு நியமித்திருப்பதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். ஆனால் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வித்தாளானது சுற்றறிக்கையின் மூலம் அங்கத்தினர்களுக்கு வந்திருக்கிறது. அதில் கேட்டிருப்பதையே திருப்பித் திருப்பிக் கேட்டிருக்கிறார்கள். உங்களுடைய யோசனைகளை எல்லாம் தெரிவிக்கவேண்டும் என்று திருப்பித் திருப்பித் கேட்டிருக்கிறார்களே தவிர, அதற்காக அவர்கள் என்ன என்ன பணியாற்றவேண்டும், கடமைகளைச் செய்யவேண்டும், அவர்களுக்குள்ள பணிகள் தான் என்ன என்பதை நன்றாகச் சீர்தூக்கி, ஆராய்ந்து பார்த்து, அந்தக் குழுவினர்களுக்கு நல்ல ஏற்பாட்டைச் செய்யவேண்டுமானால், இந்தக் கேள்வித்தாள் மட்டிலும் அவர்களுக்குத் துணையாக இருக்க முடியாது என்று இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏன் சொல்லுகிறேன் என்றால், சட்டம் ஒருபுறம் இருந்தாலும் கூட, சட்டத்தை



மீறி அவர்கள் செய்ய வேண்டியது பல என்ற அடிப்படையில், இன்றைய தினம் இருக்கிற காவல்படையினர் அத்துமீறி செயல்படுகிற காரணத்தால்தான், இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதால், அவர்களுடைய செயல் முறைகளை வரையறுக்க, யாருக்கு எந்த வேலை உரித்தானது, யார் எந்த வேலையைச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு ஒழுங்கு முறையை வகுத்துக் கொடுப்பதற்கு இந்தக் கேள்வித்தாளை அனுப்பிவிட்டு, அவர்கள் பதிலை இந்தக் குழு பெற்றுக்கொண்டு முடிவுக்கு வருமேயானால், நிச்சயமாக அது பலன் தராது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவேதான் அந்தக் குழுவானது ஒரு ஜில்லாவின் பல பகுதிகளுக்குச் செல்லும்போது ஒவ்வொரு ஜில்லாவின் தலைநகரிலும், உட்கார்ந்து அங்கே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களை வரவழைத்து அவர்களோடு விவாதம் செய்து, அவர்களுக்கு உண்டான பணி என்ன என்பதை நிர்ணயித்து இந்த அரசு ஆவன செய்ய வேண்டும், அவர்களுக்குக் கட்டளையிட வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்யாவிட்டால், ஏதோ ஒரு கமிட்டி அமைத்து, விசாரணைக் குழு ஏற்படுத்திவிட்டோம், அது அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று அரசு செயல்பட்டு விட்டால், ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஒரு நாட்டின் சீர்கேட்டிற்கும் இந்தக் காவல் படையினர் தான் காரணமாக இருப்பர் என்பதை அரசு நன்றாக உணர்ந்து பார்க்க வேண்டும். எந்தக் கட்சியினர் ஆட்சியில் இருந்தாலும் கூட, அம்மாதிரியான நிலைமை எப்பொழுதுமே ஏற்படாமல் அதைத் தடுத்து நிறுத்தவேண்டியதைத் தங்களுடைய கடமையாகக்கொள்ளவேண்டும் என்பதை இந்த நேரத்தில் அரசுக்கு நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே தான் மீண்டும் சொல்லுகிறேன். இந்தக் குழு ஜில்லாத் தலைநகருக்கு வரும் பொழுது, சட்டசபை அங்கத்தினர்களோடு ஒரு நாளோ இரண்டு நாளோ விவாதத்தில் இறங்கி அவர்களோடு விவாதித்து நல்ல ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, மாநில சட்டமன்றத்தின் குழுக்கள், பிரயாண படிகளுக்கும், மற்றும் அவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கு வேண்டிய சாமான்கள் பெறுவதற்கும் ரூ. 3,88,200 ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலவை உறுப்பினர்கள் தங்குவதற்கு "லவுஞ்சு ரூம்" நல்ல முறையில் அமைத்து தர வேண்டுமென்று பல முறை எடுத்துச் சொல்லியும்கூட, அதைப் பற்றி இந்த அரசு காதில் போட்டுக்கொள்வதாகத் தெரியவில்லை. மற்ற நாடுகளுக்கு சென்று பார்த்தால் உறுப்பினர்கள் தங்கக்கூடிய அறைகள் எவ்வளவு மேம்பாடான முறையில் அமைக்கப்பட்டு எல்லா சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் சொல்லாமலேயே பல இடங்களுக்குச் சென்றிருக்கும் அங்கத்தினர்கள் தெரிந்திருக்கலாம். ஆனால் இந்தத் தமிழக சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் தங்குவதற்கான அறை பொருத்தமான இடமாக இல்லை என்பது பலமுறை இந்த மன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சட்ட மன்றம் நடக்கும் நேரத்தில், அங்கு நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைக் கவனிக்கலாம் என்று வந்தால் கூட சட்ட மன்றத்தில் என்ன நடக்கிறது என்று கேட்பதற்கு லவுஞ்சு ரூமில் ஒலிபெருக்கி வைக்காதது மிகவும் வருந்தத்தக்கது. எந்தவிதமான வசதியற்ற நிலையில்தான் இன்றையதினம் மேல்சபை உறுப்பினர்களுக்கு அமைக்கப்பட்ட "லவுஞ்சு ரூம்" இருக்கிறது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதற்கு நமது நிதியமைச்சர் அவர்கள் இனிமேலாவது உரிய நடவடிக்கை எடுத்து இந்த மேலவை உறுப்பினர்கள் தங்குவதற்கு வேண்டிய "லவுஞ்சு ரூம்" நல்ல முறையில் அமைய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்த சமயத்தில் தலைவர் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்கின்ற நேரத்தில், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு நேரடியாக அவர்களின் சுற்று பயணத் திட்டங்கள் அனுப்பப்படுகின்றன. ஆனால் அமைச்சர்கள் சுற்றுப் பயணம் செய்துவிட்டு அவர்கள் ஊரை விட்டு வெளியேறிய பிறகுதான், கலெக்டர் அனுப்பும் தபால் அங்கத்தினர்களுக்குக் கிடைக்கிறது. இந்த விஷயம் வேதனை தருவதாக இருக்கிறது. இங்கே இருந்தும் 20 பைசா தபால் தலை ஒட்டி அனுப்புகிறார்கள். அமைச்சர்கள் வந்துவிட்டு போனபிறகு, எங்களுக்குக் கலெக்டர் அலுவலகத்திலிருந்து தபால் மூலம் சுற்றுப்பயணத் திட்டம் அனுப்பப்படுகிறது. ஏன் அந்த வீண் செலவு? இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் இப்படிப்பட்ட வீணான செலவுகள் எத்தனையோ இன்றைக்கு ஜில்லா மட்டத்தில் அரசுத் துறையில் ஏற்படுகின்றன. அமைச்சர்களின் சுற்றுப்பயணத் திட்டங்கள் இங்கேயிருந்து முன் கூட்டியே அனுப்பினால் போதும். அந்தமாதிரிச் செய்யாமல் சுற்றுப் பயணம் நடக்கிற அன்றைய தினம்தான் கலெக்டரிடத்தில் தபால் வருகிறது. அப்படியானால் மந்திரிகளை எப்படிச் சந்தித்து பொதுமக்கள் குறைகளைச் சொல்ல முடியும்? இதையெல்லாம் தவிர்க்க வேண்டும்.

அடுத்து அமைச்சர்கள் சுற்று பயணத்தின்போது வெளியூர்களில் தங்களின் கட்சிக்காரர்கள் வீட்டுக்குச் செல்கிறார்கள். நான் 'வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அமைச்சர்கள் அப்படி தங்களின் கட்சிக் காரர்களின் வீட்டுக்குப் போய் சந்திப்பது சம்பந்தமாக ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி அமைச்சர்கள் தங்களின் கட்சிக் காரர்களின் வீட்டிற்கு செல்லும்பொழுது, அவர்களோடு அரசாங்க அதிகாரி களை அங்கே அழைத்து செல்கிறார்கள். அங்கு நடக்கும் விருந்திலும் கலந்துகொள்ளச் செய்கிறார்கள். இது மிகக் கேவலமான ஒன்றாகும். ஆகவே அமைச்சர்களின் சுற்றுப்பயணத்தின்போதும், அவர்களுடைய கட்சிக்காரர்களின் வீட்டிற்குச் செல்லும்போதும் அல்லது கட்சி விவகாரங் களைப் பற்றிப் பேசுகின்ற நேரத்திலும் அதிகாரிகளை அழைத்துச் செல்ல வேண்டாம் என்று நான் மிகமிக வருத்தத்தோடு அமைச்சர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை நான் சொல்வதற்குக் காரணம் இந்த மாதிரிச் செய்கையானது லஞ்சத்திற்கு அடிப்படையாக இருக்கிறது என்பதுதான்.

[Deputy Chairman in the Chair]

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல, எந்த அமைச்சரும் கட்சிக்காரர்களின் வீட் டிற்கு அதிகாரிகளை அழைத்துச் செல்வதில்லை. போலீஸ்காரர்கள் மட்டும் அமைச்சர்களின் பாதுகாப்பிற்கு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அமைச்சர்கள் தங்களின் கட்சிக்காரர்களின் வீட்டிற்கு அதிகாரி களை அழைத்துச் செல்வது லஞ்சத்திற்கு வழி வகுக்கும் என்று சொல்லி யிருக்கிறார். இந்த மாதிரிச் சொல்வது ஒரு பொறுப்பான உறுப் பினருக்கு அழகல்ல. இந்த மாதிரிச் சொல்வது எல்லா அமைச்சர் களையும், அவர்கள் சார்ந்துள்ள கட்சியையும் இழிவுபடுத்துவது ஆகும். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பிப் பெற்றுக்கொண்டால் நல்லது.

**திரு. எம். எத்திராஜுலு:** நான் இந்த மாதிரிச் சொன்னது ஏதோ குற்றச் சாட்டிற்காக வேண்டிச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ அமைச்சர்கள் தங்களின் கட்சிக்காரர்களின் வீட்டிற்கு அதிகாரிகளை அழைத்துச் செல்கிறார்கள் என்றால், ஏதோ ஒரு அமைச்சர் லஞ்சத்தில் ஈடுபட்டார் என்றுதான் பொருளாகும். அப்படி நினைப்பது தான் உலகத்தின் நியதி. இது சாதாரண வார்த்தையல்ல. அந்த வார்த்தைகளின் அர்த்தம் தெரிந்துகொண்டுதான் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் பேசுகிறார்களா அல்லது நம்முடைய மாண்புமிகு உறுப் பினர் திரு. வசந்த பை சொன்னது மாதிரி, "பேசுவதற்கு நமக்கு சுதந் திரம் உண்டு, எதை வேண்டுமானாலும் பயன்படுத்திப் பேசலாம்" என்று





பேசுகிறார்களா ? ஆனால் அதிலும் சில கட்டுத் திட்டங்கள் உண்டு என்பதை மனதில் நிலை நிறுத்திக்கொண்டு, இப்படிப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு எம். எத்திராஜுலு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர்கள் சுற்றுப் பயணம் போகும்போது, அதிகாரிகளையும் மற்றவர்களையும் தங்களின் கட்சி அங்கத்தினர்களின் வீட்டிற்கு அழைத்துச் செல்லுகின்றபோது, சாதாரண மக்கள் அதைப் பார்க்கும்பொழுது, அந்த அங்கத்தினர்களால்தான் தாங்கள் பல காரியங்களைச் சாதிக்க முடியும் என்ற எண்ணம் அவர்களுக்கு வருகின்றது. அதற்காக வேண்டி அதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** இது ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் சார்ந்த கட்சியினுடைய அரசாங்கத்திற்குப் பொருத்தமாக இருந்திருக்கலாம். மக்கள் மனதில் அப்படி ஒன்றுமில்லை. ஆனால் அப்படிப்பட்ட ஒரு தவறான எண்ணம் மாண்புமிகு உறுப்பினர் அவர் களின் மனதில் வருகிறது. அப்படி வர வேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஏதாவது நடந்து அப்படிச் சொல்லுவதற்கு நியாய மிருந்தால், தைரியமாகச் சொல்லலாம். பொதுப்படையாகச் சொல்வது நல்லதல்ல. பொது வாழ்க்கையில் இருப்பவர்களெல்லாம் கெடுதலான வர்கள், அல்லது கெடுதலுக்கே உரியவர்கள் என்று சொல்வது அவ்வளவு சரியானதல்ல.

**திரு எம். எத்திராஜுலு:** ஆகவே அவ்வாறு எதிர் காலத்தில் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்வதி லிருந்து இனிமேல் நடைபெறாமலிருக்கும் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** அப்படியானால் ஏதோ நடைபெற்று இருக்கிறது என்கிற அர்த்தத்தில் உறுப்பினர் பேசுகிறார்கள். அதைச் சொல்ல உறுப்பினருக்கு விருப்பம் இல்லாமலிருந்தால், சொல்லி விட்டுப் போகட்டும். பொதுவாக ஒருவர் வீட்டுக்கு அமைச்சர் போகிறார் என்று சொன்னால், அது அரசாங்கத்தையும், அமைச்சரையும் ரொம்ப அவமதிப்பதற்கு உரியதாக இருக்கிறது. அதனால் தான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். அதன் பொருளை உறுப்பினர் தெளிவாகப் புரிந்து கொள்ளவில்லை. புரிந்துகொண்டிருந்தால் சொல்லட்டும். தாராள மாகச் சொல்லட்டும். பொதுவாகத் தப்பு, தப்பு என்று சொல்லிக் கொண்டு போகக்கூடாது. வேண்டிய ஆதாரம் வேண்டும். அபாண்டமாகப் பேசுவது எந்த விதமான சம்பிரதாயத்திற்கும் உரியதல்ல.

**திரு எம். எத்திராஜுலு:** அடுத்தபடியாக, மருத்துவத் துறைக்கு 15 லட்சத்து 96 ஆயிரத்து 200 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் 5-50 p.m.
திட்டத்தின் கீழ் நான் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். கடலூரில் 13 லட்ச ரூபாய்க்கு மேல் செலவழித்து பெரிய மருத்துவ மனை ஒன்று கட்டப்பட்டு, அது நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. ஆனால் குழந்தைகள் பராமரிப்புக்காக அங்கே இருக்கின்ற வார்டு பற்றாக்குறையாக இருக்கிறதென்று பல தடவை அங்கே இருக்கின்ற அட்வைசரி கமிட்டி மூலமாகவும், நானும் அடிக்கடி இந்த மன்றத்திலே சொல்லியிருக் கிறேன். ஆனால் இன்னும் அந்த மருத்துவ மனையில் குழந்தை களுக்கான படுக்கை வசதிகள் விரிவுபடுத்தப்படவில்லை என்பதை நான் நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இது தென் ஆற்காடு மாவட்டத்தின் தலைநகரில் இருக்கிறது. இந்த மருத்துவ மனைக்கு தலைநகரைச் சுற்றியுள்ள 8 தாலூக்காக்களிலிருந்து குழந்தை கள் பராமரிப்புக்காக, சிகிச்சை பெற்றுக்கொள்வதற்காக, வரவேண்டி யிருக்கிறது. அதனால் அங்கே இட வசதிகள் போதவில்லை. இந்தப் பற்றாக் குறையினால் வந்தவர்களெல்லாம் திரும்பச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எனவே அதை விரிவுபடுத்த வேண்டியது

மிகவும் அவசியமானது என்ற அடிப்படையிலே அமைச்சர் அவர்கள் இதை உடனடியாக விரிவுபடுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ஐ.டி.ஹெச். வார்டு என்று ஒன்று அந்த ஆஸ்பத்திரியின் எதிரில் கட்டப்பட்டிருக்கிறது. இந்த வார்டு வெறும் ஓலையினால் கட்டப்பட்டிருக்கிறது. அதில் வியாதியஸ்தர்களைக் கொண்டுபோய் வைக்கிறார்கள். இந்தக் காலத்தில் ஓலையினால் கட்டப்பட்ட வீட்டில் இருப்பவர்களுக்கு என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். இந்த சபையில் பலதடவை சொல்லிக் கொண்டிருக்கிறேன் கவனித்தபாடில்லை. அட்வைசரி கமிட்டி மூலமாக இதை சர்க்காருக்கும் எழுதி அனுப்பியிருக்கிறோம். இந்த ஐ.டி.ஹெச். வார்டு சம்பந்தமாக நகர சபைக்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர இதற்கும் சர்க்காருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று ஒதுங்கியிருக்கிறது இந்த சர்க்கார். ஆனால் நகர சபையில் பல தடவை சொன்னாலும் கூட இதை கவனிப்பதில்லை. ஆகவே 15, 20 "பெட்" உள்ள இந்த ஐ.டி.ஹெச்.-சை சர்க்கார் எடுத்து நடத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்ய சர்க்கார் தயங்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதற்கான சட்ட விதிகள் முரண்பாடாக இருந்தாலும் திருத்துவது நல்லது. இது தலைநகர ஆஸ்பத்திரியாக இருப்பதால் நோயாளிகள் திருக்கோவிலூரிலிருந்தும் கள்ளக்குறிச்சியிலிருந்தும் மற்றும் வெகு தொலைவிலுள்ள ஊர்களிலிருந்தும் இந்த மருத்துவ மனைக்கு சிகிச்சைக் காக வருகின்றார்கள். துரதிர்ஷ்ட வசமாக நோயாளி இறந்துவிட்டால், பிரேதத்தை எடுத்துக்கொண்டு போவதற்கு வண்டிகள் இல்லை. அங்கே ஒரே ஒரு "வேன்" தான் இருக்கிறது. அதிலே பிணத்தை ஏற்றுவது இல்லை. நோயாளிகளுக்காகத்தான் இருக்கிறது என்று சொல்லி விடுகிறார்கள். எனவே இதற்காக ஒரு தனி "வேன்" வாங்க வேண்டும். ஆனால் இதற்காக அரசாங்கம் இன்னும் அனுமதி கொடுக்கவில்லை. இதற்குத் துரிதமாக ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். இதற்காக நாங்கள் "அட்வைஸரி பாடி" கூட்டத்திலே கூட தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். இதுபோன்ற விஷயங்களில் இதற்கு முன்பு இருந்த அரசுதான் ஒன்றும் செய்யவில்லை யென்றாலும்கூட, இந்த அரசாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். பல மாவட்டங்களிலே இப்படிப்பட்ட வேன்கள் இருப்ப தாகத் தெரிகிறது. வேண்டுமானால் "டிபார்ட்மெண்டு" மூலமாகக் கேட்டுப் பார்த்தால் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றது என்பது தெரியும். இறந்தவர்களுடைய உடலை எடுத்துச் செல்ல தனி வண்டியை அமர்த்திக்கொள்ள வசதி இல்லாதவர்கள் வாடகை கார்களை கேட்கப் போனால், "300 ரூபாய் கொடுக்கிறீர்களா அல்லது 200 ரூபாய் கொடுக் கின்றீர்களா ?" என்று கேட்கிறார்கள். ஏழைகள் என்ன செய்வார்கள் ? எனவே அரசே ஒரு வேனை வைத்திருந்தால் எளிதாக இருக்கும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்கே இருப்பது மாவட்டத்தின் தலைநகரில் உள்ள மருத்துவ மனை. ஆனால் அங்கே ஸ்பெஷலிஸ்டுகள் என்று சொல்லக்கூடிய ஒரு டாக்டர் கூட இல்லை.

**DEPUTY CHAIRMAN**: The Hon. Member should confine his remarks to the items in the Supplementary Estimates.

**திரு எம். எத்திராஜுலு :** டெபுடி சேர்மன் அவர்களே, ஸப்ளி மெண்டரியாகத்தான் ரூ. 15·96 லட்சம் கோரப்படுகிறது, இந்தத் தலைப்பின் கீழே. அதைப்பற்றித்தான் பேசுகிறேன். தயவுசெய்து அங்கே ஸ்பெஷலிஸ்டுகள் என்று சொல்லப்படும் டாக்டர்களைப் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.





**திரு. சி. வி. ராஜகோபால் :** எதற்காக ஸ்பெஷலிஸ்டுகள் ?

**திரு. எம். எத்திராஜுலு :** எல்லாவற்றுக்கும்தான் அவர்கள் தேவைப் படுகிறார்கள். இதற்கு வேண்டும், அதற்கு வேண்டும் என்று தனித் தனியாகச் சொல்லிக்கொண்டு இருக்க நேரம் இல்லை. இப்போதே நேரம் இல்லை என்று டெபுடி சேர்மன் அவர்கள் சொல்லுகின்றார்கள்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்கு இப்போது மாதம் வீட்டு வாடகைப்படி என்று ரூ. 10 லிருந்து ரூ. 20 வரையில் கொடுக்கப்படுகிறது. இந்த பத்து ரூபாய்க்கும் இருபது ரூபாய்க்கும் ஒரு ஓலைக் குடிசை கிடைக்குமா வாடகைக்கு என்று தயவுசெய்து யோசித்துப் பாருங்கள். அவர்கள் எப்படி எப்படியோ ஒண்டிக் குடித்தனம் செய்து கொண்டு மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ சம்பளக் கமிஷன் அமைத்து விட்டிருக்கிறோம் என்று இதைத் தள்ளிப் போடாமல், இந்த வகையில் அவர்களுக்கு ஏதாவது செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய அரசிலே 100-க்கு 15 என்று கொடுக்கிறார்கள். இந்திரா அரசு உங்கள் அரசாக இருப்பதால், இதை அவர்களிடம் எடுத்துச் சொல்லி அதற்கு வேண்டிய நிதி உதவியைப் பெற்று இவர்களுக்கு இதைச் செய்து தரவேண்டும். மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் இந்தத் துறையில் ஏன் வித்தியாசம் இருக்க வேண்டும் ? யோசித்துப் பாருங்கள். எதிர்க் கட்சியில் இருப்பதால், இப்படிப்பட்ட கோரிக்கைகளை எழுப்புகிறோம் என்று தயவுசெய்து எண்ணி விட வேண்டாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஏதோ அவர்கள் கட்சி ஆட்சியில் இருந்தபோது அவர்கள் கொடுத்துக்கொண்டு இருந்தது போலவும், இப்போது அவற்றையெல்லாம் இந்த அரசு குறைத்துவிட்டது போலவும் பொருள்படும் தொனியில் பேசுகின்றார்கள். முன்பு இருந்ததைவிட இப்போது அரசு ஊழியர்கள் நன்கு கவனித்துக்கொள்ளப்படுகிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. எம். எத்திராஜுலு :** எங்கள் கட்சி ஆட்சியில் இருந்தபோது, அரசு ஊழியர்களின் சம்பள விகிதங்கள், பஞ்சப்படி, வீட்டு வாடகை போன்றவற்றை பத்துத் தடவை கூட்டிக்கொடுத்திருக்கிறோம். ஆனால் இப்போதுள்ள ஆளும் கட்சியினர் இந்த மூன்று ஆண்டு காலத்தில் ஒரு தடவை கூட்டிக்கொடுத்துவிட்டு இவ்வளவு கொடுத்தோம், அவ்வளவு கொடுத்திருக்கிறோம் என்று பெரும் பிரச்சாரம் செய்து கொண்டிருக் கிறார்கள். நாங்கள் ஆட்சியில் இருந்தபோது, பத்துத் தடவை கொடுத் திருக்கிறோம். எனவே இந்த வீட்டு வாடகையையாவது உயர்த்திக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது 1972-ல் பார்ப்போம் என்று எல்லாம் பேசினார்கள். நேரம் இல்லாத காரணத்தினால் அவற்றையெல்லாம் விட்டுவிடுகிறேன்.

**திரு. டி. கே. பொன்னுவேலு :** உறுப்பினர் அவர்கள் கட்சி ஆட்சியில் இருக்கும்போதுகூட, அந்த அரசு எப்போது பத்துத் தடவை கொடுத்தது ?

**திரு. எம். எத்திராஜுலு :** எங்கள் கட்சி ஆட்சியிலிருந்தபோது, பத்துத் தடவை கொடுத்திருக்கிறோம். எந்தெந்த ஆண்டில் எப்படி எப்படி உயர்த்திக் கொடுக்கப்பட்டது என்ற விவரங்களை நாளைய மறுதினம் தரத் தயாராயிருக்கிறேன்.

அடுத்து, துயர் துடைப்புப் பணிகளைப் பொறுத்த வரையில், சென்னை யில் ரூ. 25 லட்சம் செலவழித்து, 12 ஆயிரம் குழாய்க் கிணறுகளைப் போட்டிருக்கிறோம் என்று அரசின் சார்பில் சொல்லப்பட்டது. அவைகளைப் போட ஆரம்பித்த நேரம், நல்ல வேளையாக மழை பெய்தது. ஆனால் இப்போது அந்தக் குழாய்கள் எங்கே போய்விட்டன என்று தெரிய

வில்லை. அவற்றையெல்லாம் நல்ல முறையில் வெளியே எடுத்திருந்தால், கிராமப்புறங்களில் தண்ணீர்க் கிணறுகள் இல்லாமல் அவதிப்படும் மக்களுக்கு உபயோகப்படும் விதத்தில், அவற்றை அங்கே அமைத்துத் தந்திருக்கலாம். ஆனால் இப்போது அவைகள் எதுவுமே அவைபோடப்பட்ட இடத்திலே இல்லை. எங்கே போய்விட்டன, யார் எடுத்துக்கொண்டு போனார்கள் என்பது தெரியவில்லை. ஒரு அரசு இவ்வளவு மோசமாக, அதைப்பற்றிக் கவலைப்படாமலிருப்பது உள்ளபடியே வேதனைக்குரியதாகும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, ஏதோ 25 லட்ச ரூபாய் செலவில் போடப்பட்ட 12 ஆயிரம் குழாய்களும் காணமற் போய்விட்டன என்று பேசுவது, வேண்டுமானால் அங்கத்தினர் சார்ந்துள்ள கட்சிப் பிரச்சாரத்திற்குப் பயன்படலாமே தவிர, அல்லது பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் இப்படிப்பட்ட ஒரு பிரச்சாரம் வரவேண்டும் என்பதற்கு வேண்டுமானால் பயன்படலாமே தவிர, அவர் கூறுவது உண்மையின் அடிப்படையில் கூறுவது இல்லை. குழாய்கள் எல்லாம் இருக்கின்றன. வேண்டுமானால் மாண்புமிகு திரு. எத்திராஜுலு அவர்களே வந்து பார்க்கலாம்.

**திரு. எம். எத்திராஜுலு :** அமைச்சர் அவர்களிடத்திலே மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன், எந்த எந்த இடத்தில் இப்படிப் போடப்பட்ட குழாய்கள் இப்போது காணமற் போயிருக்கின்றன என்று.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, எங்கெங்கே இல்லை என்பதைக் காண்பிக்கிறேன் என்று சொல்லுகிறார் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். அவற்றை யார் யார் எடுத்துச் சென்றார்கள் என்ற பட்டியலையும் கொடுத்தால், அரசுக்கு உதவியாக இருக்கும்.

**திரு. எம். எத்திராஜுலு :** அது அரசுக்குத்தான் தெரியும். எனவே இவ்வளவு லட்சம் ரூபாய் தெருவில் போட்டதுபோல், மக்களுடைய வரிப் பணம் இப்படிப் பாழாகப் போய்விட்டது. இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் நீக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு பேச வாய்ப்பினை அளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. டி. கே. சுப்பையா :** துணைத் தலைவர் அவர்களே, இந்தத்
6-00 p.m. துணை மான்யக் கோரிக்கைமீது சில கருத்துகளைச் சொல்ல ஆசைப் படுகிறேன். "தஞ்சை மாவட்டம் பெரம்பலூர்-மானமதுரை சாலையில் திருமானூரில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே படுகை மட்டத்தில் தரைப் பாலம் ஒன்று கட்டும் பணியைப் பார்வையிட சிறப்புக் கோட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது" என்று இதில் கோரப்பட்டு உள்ளது. இந்தப் பாலத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டு விட்டன என்று கருதுகிறேன். வேலை நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் இதுபற்றி வரவு செலவுத் திட்ட ஆங்கிலப் பிரதியில், இது 'ஹை லெவல் பிரிட்ஜ்' என்று காட்டப்பட்டிருக்கிறது. தமிழிலே உள்ள பிரதியில் தரை மட்டப்பாலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதலிலே 52 லட்சம் ரூபாய் செலவிலே பொறியாளர்கள் தரைமட்டப் பாலத்திற்குத்தான் வரைபடங்கள், திட்டங்கள், எஸ்டிமேட்டுகள் எல்லாம் போட்டார்கள். ஆனால் அதற்குப் பிறகு அதே தொகைக்கு அதை ஒரு "ஹை லெவல் பிரிட்ஜாக" அமைத்திட முடியும் என்று பொறியியல் வல்லுனர்களும் கண்டிராக்டர்களும் அபிப்பிராயப்பட்டதால், அது இப்போது உயர் மட்டப் பாலமாக அமைந்திட வேலை நடந்துகொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். அப்படியிருந்தால், அது தரை மட்டப்பாலமாக அமைய இருக்கிறதா அல்லது உயர் மட்டப் பாலமாக அமைய இருக்கிறதா என்று அரசு விளக்கம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



அடுத்து, இந்த நிலவள வங்கிகள் ஏற்படுத்துவதை விரைவில் முடிக்க வேண்டும் என்ற காரணத்தினால், எங்கே பார்த்தாலும் மிக அவசரமாக பங்குத் தொகைகள் வசூலிக்கப்படுகின்றன. பங்குகளோடு உங்களுக்கு எவ்வளவு கடன் வேண்டும் என்று கேட்டு, அதற்கான பங்குகளையும் இப்போது மிக மிக அவசரமாக சற்று நிர்பந்தத்துடனேயே வசூல் செய்கிறார்கள். இதில் இவ்வளவு அவசரம் காண்பிக்க வேண்டுமா என்று நினைக்கிறேன். ரூ. 25 ஆயிரத்துக்குப் பங்குகள் இருந்தால் தான், நில வள வங்கிகளை ஏற்படுத்த முடியும் என்ற காரணத்தினால், இப்போது வற்புறுத்தி, பங்குகளை வசூல் செய்கிறார்கள். இப்படி இல்லாமல், ரூ. 10,000 பங்குத் தொகையிருந்தால் போதும், மிச்சம் ரூ. 10 ஆயிரத்தை அரசு கடனாகக் கொடுக்கும் என்ற ஏற்பாடுகள் இருந்தால் இப்படி நிர்பந்தப்படுத்தி பங்குகளை வாங்க வேண்டிய அவசியம் இருக்காது, இன்றுள்ள இந்த கெடுபிடியும் வேண்டியிருக்காது என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பால் பண்ணை ஏற்படுத்துவதைப்பற்றி இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்கள் அரியலூர் பக்கத்தில் ஏற்கனவே ஜமீன் காடுகள் என்று 100, 150 எக்கர்கள் இருந்தன. புலிகள் கூட இருந்த காடு அது. நல்ல வளமான காடு. அந்தக் கிராமத்தில் ஒரு பால் பண்ணை ஏற்படுத்துவதற்காக ஏற்கனவே ஒரு திட்டம் இருந்ததாக அறிகிறேன். ஆனால் என்ன காரணத்தாலோ அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது. சென்னை நகரத்திற்கு அருகில் ஒரு பால் பண்ணைத் திட்டம் செயலாற்றப்பட்டு வருவதை நான் வரவேற்றாலும், இப்படிப் பட்ட பால் பண்ணைகள் கிராமத்திலே ஏற்படுத்தும்போது, நல்ல சூழ்நிலைகள் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நீர்ப்பாசனம் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பலமுறை புள்ளம்பாடி வாய்க்கால் பிரச்னை பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அமைச்சர்கள் அதைத் தெளிவாகக் கேட்கிறார்களா என்ற ஐயப்பாடு எனக்கு இருக்கிறது. காரணம் இதுதான். நான் மூன்று ஆண்டுகளாக அந்தப் பிரச்னைபற்றி இங்கே சொல்லியிருக்கிறேன். அதன் நிர்வாக அமைப்பிலே இருக்கிற கோளாறுகளைக் குறிப்பிட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகுமுதலமைச்சர் அவர்கள் மராமத்து அமைச்சராக இருந்தபோது, இதைச் செய்துவிடுவோம் என்றார்கள். இதற்காக பஞ்சாயத்து யூனியன் சட்டத்தை மாற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே அரசு இனியும் அதைக் கவனிக்காமல் இருப்பது நல்லதல்ல. நேற்றைய தினம் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மக்களின் நிலைமையை அரசாங்கத்திற்குத் தெரிவித்தால், அரசாங்கம் ஆவன செய்யும் என்றார்கள். அந்த வகையில் மக்கள் நிலையை அரசாங்கத்திற்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். எக்கருக்கு ரூபாய் 200 வரை "பெட்டர்மெண்ட் டாக்ஸ்" என்று இப்போது தான் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டு பணம் கொடுக்கும்போது, அந்தப் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை என்றால், அதன் விளைவுகளை எண்ணிப் பார்க்க வேண்டும். 1971-க்குள் இதைச் செய்யாவிட்டால், வரி கொடுக்க முடியாது என்ற வகையில் ஒரு "வரிகொடா இயக்கம்" அந்தப் பகுதியில் நடந்தால் ஆச்சர்யப்படுவதற்கில்லை. நான் இதை அமைச்சர்களைப் பயமுறுத்துவதற்காகச் சொல்லவில்லை. நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கோரிக்கைக்கு இணங்க, அங்கே நடப்பதை மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இதைக் கடைசி எச்சரிக்கையாகச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். உடனடியாகப் புள்ளம்பாடி கால்வாயைச் சீரமைக்க வேண்டும் என்று கூறி என் வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரேரேபித்துள்ள துணை மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகளை நான் கூற விரும்புகிறேன். நிலவள வங்கிகளுக்கு அதிகமான பங்குத் தொகையளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி, அதற்கான நிதி ஒதுக்கக் கோரிக்கை இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்போது புதிதாக 60 நிலவள வங்கிகள் பதிவாகியுள்ளன. 1969-ம் ஆண்டுக்குள்ளாகவே அவைகள் எல்லாம் பதிவு செய்யப்பட வேண்டும் என்று அவைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ம் தேதியன்று புதிதாக 60 நிலவள வங்கிகள் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதற்கான கட்டளையை அரசு பிறப்பித்திருக்கிறது. அன்றையதினமே எங்கள் ஜில்லாவில் 9 நிலவள வங்கிகள் பதிவு செய்யப்பட்டு விட்டன. இப்படி 29-ம் தேதிக்குள்ளாகவே 60 வங்கிகளும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வங்கிகளுக்கு வங்கி ஒன்றிற்கு 25,000 ரூபாய் என்ற அளவில் அரசாங்கப் பங்குத் தொகை கொடுக்க, 15 லட்சம் ரூபாய் தேவை என்று கேட்கப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டில் இன்னும் 60 வங்கிகள் பதிவு செய்யப்படலாம். அதற்கும் ரூபாய் 7½ லட்சம் தேவைப்படுகிறது. மேலும் 45 வங்கிகள் அடுத்த ஆண்டோ, அல்லது நிதி வசதியிருந்தால் இந்த ஆண்டோ, துவங்கப்படலாம். இந்த வங்கிகளுக்கு அரசாங்கப் பங்குத் தொகை கொடுக்கும் விஷயத்தில், அந்த பாங்குகள் ஒவ்வொன்றும் 25,000 ரூபாய் பங்குத் தொகையாக அங்கத்தினர்களிடமிருந்து வசூல் செய்தபிறகுதான், அரசாங்கப் பங்குத் தொகையான ரூ. 25,000 கொடுக்கப்படும் என்று சொல்லப்படவில்லை. ரூபாய் 10,000-க்குக் குறைவில்லாமல் எவ்வளவு தொகை வசூல் செய்வார்களோ, அதற்குத் தகுந்தாற்போல் அதே அளவுத் தொகையை அரசாங்கம் கொடுக்கும் என்று சொன்னார்கள். 2, 3 தினங்களுக்கு முன் கூட்டுறவுத் துறையின் பதிவாளர் எல்லா டெபுடி ரெஜிஸ்ட்ரார்களுக்கும் ஒரு அறிக்கை அனுப்பி வைத்திருக்கிறார். அதில் அவர் என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்றால், புதிதாகப் பதிவு செய்யப்பட்ட நிலவள வங்கிகள் முயற்சிகள், பணிகள் எதையும் ஏற்றுக்கொள்வதற்கான நிலை இன்னும் வரவில்லை. எந்த வட்டாரத்திற்காக நில வள வங்கி பதிவு செய்யப்பட்டிருக்கிறதோ, அந்த வட்டாரத்தில் ஏற்கெனவே உள்ள தாலூக்கா நிலவள வங்கிகள் எந்தெந்தக் கடமையைச் செய்து வந்தனவோ அவைகளையெல்லாம் புதிய நிலவள வங்கி மேற்கொண்டு செய்யும் என்று இருந்துவிட வேண்டாம். புதிய நிலவள வங்கிகள் அதற்கான தகுதி பெற்று அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் வரையில், பழைய நிலவள வங்கிகளே அந்தக் கடமையைச் செய்து வர வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அவசர அவசரமாக இந்த வங்கிகள் எல்லாம் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தைத் தவிர வேறொன்றுமில்லை. ஏற்கெனவே இருந்த தலைவர்கள், அதாவது 1969 ஆரம்பத்திலும், இந்த நிதி வருஷத்திலும் ரிடையர் ஆனவர்கள், மறுபடியும் பதவிக்கு வந்துவிடமுடியாத வகையில், அந்த வங்கிகளைக் கைப்பற்றும் நோக்கத்தோடு தான் இந்த முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதை இந்த அமைச்சர் அவையிலுள்ள மற்றவர்கள் எல்லோரும் விரும்புகிறார்களா என்று எனக்குப் புரியவில்லை.

6-20 p.m. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது ஏதோ அவசர அவசரமாக இந்த நிலவள வங்கிகளையெல்லாம் ஆரம்பித்துவிட்டதாகக் குறிப்பிட்டார்கள். 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதிக்குள் இவைகளையெல்லாம் பதிவு செய்தால் தான், ரிசர்வ் பாங்கு வங்கி ஒன்றுக்கு ரூ. 25,000 கடன் கொடுப்பதாகச் சொன்னதன் காரணமாகத் தான், அந்தத் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும் என்று செய்யப்பட்டிருக்கின்றதே தவிர, வங்கியில்



இருக்கிற ஒருவரை நீக்க வேண்டும் என்பதற்காக பதிவு செய்யப்பட்டதாக ஒரு தவறான கருத்தை அவர் கொள்ளவும் வேண்டாம். நாட்டில் பரப்பவும் வேண்டாம் என்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** முதலில் நிலவள வங்கிகள் சட்டத்திற்கான உப விதிகள் ஜனவரி மாதத்தில் தயாரிக்கப்பட்டன. அதற்குப் பின்னால் அந்தச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டுவரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதாவது, உயர் நீதி மன்றத்தின் தீர்ப்பின் காரணமாக, புதிய உப விதிகள் செய்கிறோம் என்று 1970-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ம் தேதியன்று மற்றொரு வகையான உப விதிகள் பிரசுரிக்கப்பட்டன. ஜனவரியில் வெளியிடப்பட்ட உப விதியில் மாநில நிலவள வங்கியினுடைய எக்சிகியூடிவ் கமிட்டி ஒன்று உண்டு என்று இருக்கிறது. 17 பேர்களைக் கொண்ட எக்சிகியூடிவ் உண்டு என்று இருந்தது. இப்போது வந்திருக்கிற உப விதிகளின்படி அப்படி எக்சிகியூடிவ் கமிட்டி என்று ஒன்று இல்லை. இதனால் என்ன ஆகிறது என்றால், ஜில்லாவிலிருந்து ஏற்கெனவே 40 பிரதிநிதிகள் வருகிறார்கள். ஆக மொத்தம் 51 பேர்களைக் கொண்ட போர்டு ஒரு சில விண்ணப்பங்களை ஆராய வேண்டுமென்றாலும் கூட வேண்டும். இது சாத்தியமா என்று தான் கேட்கிறேன். நீங்கள் எல்லாம் அனுபவம் இல்லாதவர்கள் அல்ல, விவரம் தெரியாதவர்கள் அல்ல.

எங்காவது 51 பேர் கொண்ட ஒரு மாநில வங்கியின் நிர்வாகக் குழு இருக்குமா ? 17 பேர் கொண்ட எக்சிகியூடிவ் கமிட்டி இருந்ததை எடுத்து விட்டு, 51 பேர் கொண்ட ஒரு போர்டு இருந்து அத்தனையையும் செய்யப் போகிறது என்பதைத் தான் இதன் மூலமாக அறிந்துகொள்ள முடிகிறது. ஏன் அப்படிச் செய்யப்படுகிறது என்றால், மத்திய அரசோ அல்லது ரிசர்வ் பாங்கோ வட்டாரம் தோறும் ஏற்படுகிற இந்த நிலவள வங்கிகளுக்குப் பங்குத் தொகை கொடுப்பதை வாங்கி, 1969-க்குள்ளே பதிவு செய்யப்பட்டுவிட்ட சங்கங்களுக்கு அந்தத் தொகையை உபயோகப்படுத்த வேண்டுமென்று கருதி, பதிவு செய்திருக்கலாம். பதிவு செய்வதற்குக் காலம் இருந்திருக்கிறது. பதிவு செய்யும்போது நிலவள வங்கியின் அமைப்பு நாம் சந்தேகம் கொள்ளும் வகையில் இருக்கிறதே என்பதைத் தான் நான் சொல்கிறேன். 60 வங்கிகளிலிருந்து 40 பேர்கள் இங்கே வந்துவிடுகிறார்களே என்பதைத் தான்......

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** ஒன்று அது வேண்டாமென்று சொல்லட்டும். நிலவள வங்கியை வேண்டாமென்று சொல்கிறார்களா ? அதைச் சொல்லிவிடட்டும். ஏற்கெனவே இருக்கிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமானது. ஏதோ நோக்கத்தோடு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். சில நிலைமைகளினால் சில விளைவுகள் ஏற்படுகின்றன. அதை ஏதோ பாப காரியமாகச் செய்து விட்டதாக 29-ம் தேதி ஏன் செய்தீர்கள் என்று கேட்பது முறையல்ல. ஒன்று சொல்லலாம். இனி வங்கியே தேவையில்லை என்று சொல்லி அவற்றிற்கான காரியங்களைச் செய்யாதீர்கள் என்று சொல்லலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அதைச் சொல்வதற்கு நான் தயாராக இல்லை. இப்போது இருக்கின்ற 106 வங்கிகளே இந்தப் பணியைச் செய்ய முடியும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** நான் அதைத் தான் உறுப்பினர் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன். அதைத் தான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன். இருப்பதே போதும், இனி தேவையில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்லலாம். இதனால் மத்தியக் குழுவிற்கு வரமாட்டார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லாமலே எல்லோருக்கும் தெரியும். ஆகையால் அது கூடாது என்பது அவர் கருத்து.

[26th March 1970

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** அதை ஒப்புக் கொள்கிறேன். ஒரு காரணத்தால் அதைச் செய்திருக்கலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, நிலவள வங்கியின் மத்தியக் குழுவிற்கு பிரதிநிதித்துவம் அதிகமாக வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கை. இது தேவையற்ற கொள்கை என்று எதிர்க்கட்சியிலுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் கொள்ளலாம் அதில் தவறில்லை. எங்கள் கொள்கையாக இதை வைத்திருப்பதால் செய்கிறோம். குறிப்பிட்ட ஒருவரை நீக்க வேண்டுமென்ற தவருன நோக்கத்தில் செய்வதாகக் கருதவேண்டாம். அவர்களே கூட தேர்ந்தெடுக்கப்படலாம். ஆகையால் அதைக் கொண்டு வந்து இதில் பிணைக்க வேண்டாம். வட்டங்கள் வாரியாகப் பிரிக்க வேண்டும் என்பதும் அங்கெல்லாம் நிலவள வங்கிகளை வைக்கவேண்டுமென்பதும் தான் அரசின் கொள்கை. அதன்படி இதைச் செய்கிறோம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஆகவே இந்த உபவிதியின்படி பார்க்கும்போது, நான் கொண்டுள்ள சந்தேகத்தை என்னால் நிவர்த்தி செய்துகொள்ள முடியவில்லை. மேலாகச் சொல்ல நான் தயாராக இல்லை. என்னுடைய கண்ணோட்டத்தில் தவறு காண்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. நியமன மெம்பர்கள் என்று 10 அல்லது 11 பேரை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் எங்கே இருந்தால் அனுகூலமோ அங்கே இல்லை. மத்திய நிலவள வங்கியில் அத்தனை பேரும் இருக்கவேண்டுமென்று நியமித்திருக்கிறார்கள். எங்கே கடன் மனுக்களைப் பரிசீலனை செய்து எங்கெங்கே கடன்களைப் பகிர்ந்து அளிக்கவேண்டுமோ அந்த இடங்களில் அத்தகைய திறமை உள்ளவர்கள் இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் இருந்தவர்களை நீக்குவதற்குத் தான் அரசு இப்படிச் செய்கிறது என்ற கருத்திலே பேசுகிறார்கள். குறிப்பிட்டவரை மீண்டும் தலைவராகக் கொண்டுவர வேண்டுமென்பது அவருடைய விருப்பம், நோக்கம். அந்த நோக்கம் எங்களுக்கு இல்லை.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ஆகவே பிப்ரவரி 20-ம் தேதி அன்று நியமன மெம்பர்கள் பெயர் உத்தரவு மூலம் வந்து விட்டது. அமைச்சர் 29-ம் தேதி இல்லை என்று மறுக்கிறார்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதுபற்றிய தகவல் விசாரித்துச் சொல்லலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** இப்போது இந்த வங்கிகளுக்கு ரூ. 1,000 கடன் வாங்குகிறவர்கள் ரூ. 50 பங்குத் தொகை செலுத்த வேண்டும். ரூ. 2½ லட்சம் லேவாதேவி வந்தபொழுது தான் ஒரு வட்டாரத்தில் ரூ. 25,000 பங்குத் தொகையைச் சேர்த்து அவர்கள் அனுபவித்துக் கொள்ள முடியும். அந்தச் சூழ்நிலையில் துரிதமாக நடைபெற்றால் ஒழிய, அது நடக்காது. நிலவள வங்கியில் கிணறுகளுக்கு மானியம் கொடுக்கும் தொகை கூட அந்த வருஷத்தில் கொடுபட வேண்டியது தடைபட்டுவிடக் கூடாது என்பதற்காக எங்களுடைய மார்க்கெட்டிங் சொசைட்டி ஜீப்பைக் கொடுத்திருக்கிறேன். அந்தப் பகுதியிலுள்ள டெபுடி ரெஜிஸ்ட்ராரிடம் ஜீப் இல்லை. ரெவின்யூ இலாகா தான் எல்லா இடத்திலும் கை வைக்குமே. அப்படி அவர்கள் அதை எடுத்துக்கொண்டார்கள். அதனால் நாங்கள் ஜீப் கொடுத்து உதவ வேண்டியிருக்கிறது. மக்கள் நன்மை அடைய வேண்டுமென்பதில் அக்கறை இல்லாதவன் அல்ல நான். மத்திய மாநில வங்கியின் நிர்வாகம் நல்ல வகையில் நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்சத் துயர் தணிப்புக்காக எங்கள் பகுதியில் அதிகம் செய்ய வேண்டும். கஷ்டம் இருக்கிறது என்று முன்பே சொன்னேன். சீக்கிரமாக அந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். வேலையில்லாத



26th March 1970] [திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு]

கஷ்டங்கள் அதிகமாக இருக்கின்றன. பால் பண்ணைத் திட்டம் இப்போது நகரப் புறங்களில் வைக்கப்பட்டு அதிகமாகச் செலவு செய்யப்படுகிறது. கிராமப் புறங்களில் பால் பண்ணைகளைப் பதிவு செய்வதில் தயக்கம் காட்டப்படுகிறது. நகரங்களில் உள்ள பால் பண்ணைகளில் கிராமங்களிலிருந்து வருகின்ற பால் விலையில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிகிறது. ஆகையால் கிராமப் பகுதிகளில் பால் பண்ணை ஏற்படுத்த உதவ வேண்டும். அவற்றைப் புறக்கணிக்கக் கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன். கிராமங்களில் பால் பண்ணை சொசைடிகளை பதிவு செய்ய மறுக்கிறார்கள். ஓர் வருஷத்தில் இத்தனைக்கு மேல் பதிவு செய்ய மாட்டோம் என்று சொல்கிற நிலை இருக்கிறது. இங்கே எவ்வளவு நகரங்களுக்குச் செலவு செய்கிறோமோ அந்த அளவுக்குக் கிராம சங்கங்கள் வளர்ச்சியில் அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கிராமப் புறங்களிலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு அரசாங்கம் பங்குத் தொகை புதிதாகக் கொடுத்து வருகிறது. எந்தெந்த சங்கங்கள் "வயபிள்" யூனிட்டாக இருந்து கொடுத்த கடனைத் திரும்பத் தருகிற நிலையில் இருக்கிறதோ, அவற்றிற்குக் கடன் அளிக்கிறோம். கிராமப் புறங்களில் பாஸ்டரைசிங் யூனிட்டுகள், "சில்லிங்" யூனிட்டுகள் எல்லாம் கொண்டு போய் வைக்கிறோம். கிராமப் புறங்களில் இன்னும் அதிகமான அளவில் பால் பண்ணை கூட்டுறவு சங்கங்கள் ஏற்பட வேண்டுமென்பதில் சர்க்கார் அக்கறை காட்டிக்கொண்டு தான் இருக்கிறது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** பால் குளிர் பதன ஏற்பாடுகள் 6-20
ஸ்ரீவில்லிப்புத்தூர், விருதுநகர் போன்ற இடங்களில் இருக்கின்றன. p.m.
அதற்குக் கிராமப் புறங்களிலிருந்து பால் அனுப்புகிறார்கள். மற்ற இடங்களிலிருந்து வருகின்ற பாலுக்குக் கொடுக்கிற விலைக்கும் கிராமப்புறங்களிலிருந்து கொண்டுவரும் பாலுக்குக் கொடுக்கிற விலைக்கும் வித்தியாசம் இருக்கிறது. சில சமயங்களில் கிராமப்புறங்களிலிருந்து வருகிற பாலை வேண்டாமென்று சொல்லி மறுத்துவிடுகிறார்கள். நிர்வாகத்தில் உள்ள இந்தக் குறையைப் பார்த்து நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வித் துறையில் கட்டிடம் கட்டுவதற்கு கோடம்பாக்கத்தில் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு நில ஆர்ஜிதம் செய்ய ரூ. 1,46,360.80 பைசா வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. கிராமப் புறங்களில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு இன்னும் சரியான கட்டிடங்கள் இல்லை.

அங்கு சரியான "சயன்ஸ் லேபரெட்டரி" முதலிய வசதிகளும் இல்லை. படிப்பதற்கு வசதிகள், கட்டிடங்கள் இல்லை. ஆகையினால் கிராமப்புறங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு எவ்வளவு சீக்கிரம் கட்டிட வசதியும் பயில்வதற்கான சாதனங்களும் ஏற்படுத்த வேண்டுமோ அதில் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று போலீஸ் இலாகா சம்பந்தப்பட்டவரை, காவல் துறை என்பதற்குப் பதிலாக காப்புத் துறை என்று வைத்தால் கௌரவமாக இருக்குமே என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** தலைவர் அவர்களே, காப்பு என்று வைத்தால் தங்கள் கைக்குக் காப்பு போட்டு போட்டுவிடுவார்கள் என்று ஜனங்கள் பயப்படுவார்கள். ஆகவே காப்பு என்ற வார்த்தை வேண்டாம், காவல் துறை என்றே இருக்கட்டும்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** நான் ஹாஸ்யத்திற்காகச் சொல்லவில்லை. எது உசிதம் என்று யோசித்துப் பார்க்கவேண்டும் என்று சொல்லுகிறேன். பொது மக்கள் மத்தியில் காவல் துறை என்ற வார்த்தை அவ்வளவு மதிப்பிற்குரியதாக இல்லை என்பது உணர்வு.

ஆகையால் தான் திரும்பச் சொல்கிறேன். அதை யோசித்து அதனைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இதைத் தவிர ஸ்ரீவில்லிப் புத்தூர் என்ற ஊர்ப்பெயரை மாற்றுவது சம்பந்தமாக ஒருவரைச் சந்தித்தபோது, விவாதம் செய்தோம். ரெவின்யூ போர்டுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். பெயர் மாற்றுவதற்கான காரணம், அத்தியாவசியம், அதற்கு என்ன நியாயம் என்று நேரில் பேசினால், ஏன் மாற்றக்கூடாது, மாற்றினால் என்ன என்று கேள்வியைத் தான் திரும்பக் கேட்கிறார்களே தவிர, அதற்கான நியாயத்தை, காரணகாரியங்களைப் பொது மக்கள் புரிந்து கொள்ளும் அளவுக்கு ஒரு இம்மி அளவும் சொல்லவில்லை. குருசாமி என்பவர் தமிழை வளர்க்கிறவர் என்று வைத்துக்கொள்வோம். "கு" என்பது உயிர் எழுத்தா, மெய் எழுத்தா, உயிர் மெய்யெழுத்தா என்று அவருக்குத் தெரியாது. நான் சொல்வது யாரையும் ஏசுவதற்கு அல்ல. தமிழை வளர்க்கவேண்டும் என்று கருதுபவன் நான். தமிழில் ஆர்வம் உள்ளவன். வேண்டுமென்றே ஒரு மாறுதல் செய்துவிட்டோம் என்கிற மாதிரி திருப்தி அவர்களுக்கு. பொதுமக்கள் மனதை வீணாகப் புண்படுத்த வேண்டாம், ஏன் பொது மக்கள் மனதில் கவலை உண்டு பண்ண வேண்டும் என்று தான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, அதற்காக நாம் சகல கலா பண்டிதர்கள், அவருக்கு உயிர் எழுத்து எது, மெய்யெழுத்து எது என்று தெரியாது என்று உறுப்பினரைப் போன்றவர்கள் பேசுவது உசிதம் தானா என்று கேட்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** ஒரு குறிப்பிட்ட பெயரைச் சொல்லவில்லை. பொதுவாகச் சொன்னேன். பொன்னுசாமி, முத்துசாமி என்பதைப் போல சொன்னேனே தவிர ஒருவரையும் குறித்துச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** குருசாமி என்ற பெயருள்ளவர் உறுப்பினர் அவர்கள் ஊரில் இல்லையா ?

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். ஒருவரைக் குறித்தோ ஒருவரை மனதில் நினைத்தோ சொல்லவில்லை. ஆகவே நான் குறிப்பிட்டதை யாரோ ஒருவரைக் குறித்து என்று கொள்ள வேண்டாம். அந்த விஷயத்தில் நிதி அமைச்சர் கூட பதில் சொன்னார்கள். விருதுபட்டி என்று இருந்ததை விருதுநகர் என்று மாற்றவில்லையா என்று. பட்டிக்கும் நகருக்கும் வித்தியாசம் இல்லையா ? வார்த்தை அழகாக இருக்கிறது. பட்டி நகராக மாறியிருக்கிறது. ஆகையால் வித்தியாசம் உண்டு. அன்றைக்கு நீங்கள் பதில் சொல்லுகிறபொழுது, பேசியதிலிருந்து கோரிக்கை நிறைவேற்றுவதற்கு சாதகமாக உங்களுடைய எண்ணங்கள் இருக்குமே என்ற கருத்தில் தான் இன்றும் நான் வற்புறுத்துகிறேன். அனாவசியமாக பொது மக்கள் மனதில் கஷ்டத்தை ஏற்படுத்த வேண்டாம்.

**திரு. வி. தங்கபாண்டியன்:** தலைவர் அவர்களே, நகருடைய பெயர் மாற்றம் சம்பந்தமாக ஸ்ரீவில்லிப்புத்தூர் நகர மன்றமே ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கும் கட்சிக்காரர்கள் உள்பட எல்லோருமே நகரத்தின் பெயர் மாற்றப்பட வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** நகர மன்ற அங்கத்தினர்கள் ஓட்டுக் கேட்கிறபொழுது பெயரை மாற்றப் போகிறோம் என்று ஓட்டு வாங்கினார்கள்? அங்கத்தினர்கள் சென்று ஸ்ரீவில்லிப்புத்தூர் நகரசபையில் மக்களுக்கு செய்ய வேண்டியசேவைகளில் ஊர்பெயரை மாற்றுவது தலைகீழாகக் கவிழ்த்துவது, என்பதற்காகவா, ஓட்டுப் போடவேண்டுமென்று ஓட்டுப் போட்டார்கள்? ஆகையால் இதை யோசித்துச் செய்ய வேண்டுமென்று சொல்லு



கிறேன். அந்தக் காலத்தில் உள்ளவர்கள் "ஸ்ரீ"க்கும் "திரு"க்கும் உள்ள புனிதத்தை மறுக்கவில்லை. அத்தனைபேரும் திரு, திரு என்று பாடியிருக்கிறார்கள். அது அங்கே ஒத்து இருக்க வேண்டும். பாவை இணைகிறபொழுது சரியாக இருக்க வேண்டும். திருவில்லிபுத்தூர் என்றால் திருவற்ற என்று அர்த்தம் இருக்கிறது. ஆதாரங்கள் இருக்கின்றன. திரு. வில்லி, என்றால் திருவில்லாத, அறிவில்லா, அறிவிலி என்பவன்போல் பொருள் தரும் வாழ்வு. இல்லாத புத்தூர் ஐந்து கொடு என்று கிருஷ்ணன் கேட்டான் துரியோதனனிடம் பஞ்சபாண்டவர்களுக்கு தாழ்வில்லி புத்தூர் ஐந்து கொடு என்று. 50, 60 வருஷத்துக்கு முன்பே உரையெழுதி வைத்திருக்கிறார்கள். ஆகையினால் திருவிலலி என்றால் திருவற்ற என்று அர்த்தமாகிறது. அது அமங்கலமாக இருக்கிறது. இதை எல்லாம் யோசித்து பொது மக்களுடைய உணர்வையும் கருத்தையும் அறிந்து காரியம் செய்ய வேண்டும். செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன. இது ஒன்றும் இப்போது அவசியமான பிரச்னை அல்ல. அங்கு இன்னும் 15 நாளைக்குப் பிறகு குடிக்கத் தண்ணீர் இல்லை. அவ்வளவு தண்ணீர் குறைந்து கொண்டே வருகிறது. அப்படியிருக்க ஏன் இந்தக் கூத்து ? ஆகையால் இதை எல்லாம் மனதில் கொண்டு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1969-70-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நல்ல கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இந்தக் கருத்துக்களைப் பேசியவர்கள் எல்லாம் இங்கு இருக்கிறார்களா இல்லையா என்பது தெரியவில்லை. எங்கே நானும் நமது தலைவர் அவர்களும் இரண்டு பேரும் தான் இருக்க வேண்டுமோ என்று பயந்துகொண்டு இருந்தேன். இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்த பை அவர்கள் இந்த மன்றமே போய்விடப் போகிறது, ஆபத்து வந்து விட்டது என்று முதலமைச்சர் மீது பெரிய குற்றச்சாட்டு ஒன்று சாட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் அப்படி எல்லாம் போகாது என்று உத்தரவாதம் அளித்தார்கள். இருந்தாலும் திரும்பியும் போகிறமாதிரியான பிரசங்கம் பண்ணிவிட்டு, மன்றத்தைக் காப்பாற்றுவதற்கோ, தன்னைக் காப்பாற்றுவதற்கோ தெரியவில்லை. அவர்கள் போய் விட்டார்கள். பொதுவாக இந்த மன்றம் போகவேண்டிய ஆபத்து இல்லையென்றாலும் இரண்டு விதமான கருத்துக்களும் இருக்கின்றன. அவர்களே ஒத்துக்கொள்ளவேண்டும். சில மாநிலங்களில் இப்படி மன்றம் வேண்டாம் என்பது மட்டுமல்ல, அதையே எடுத்துவிட்டார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதற்கான காரணங்களும் இருக்கின்றன. எல்லாக் காரணங்களும் எல்லா இடங்களுக்கும் உகந்தவையல்ல. காலம் எப்படி எப்படி எல்லாம் மாறும் என்பதைச் சொல்ல முடியாது. இருந்தாலும் ஏதோ இந்த மன்றத்திற்கு ஆபத்து வந்து விட்டது, அதைக் காப்பாற்ற வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இவ்வளவு உணர்வு பூர்வமானதை நான் பார்த்ததில்லை. ஸ்ரீவில்லிபுத்தூர் திருவில்லிபுத்தூராக மாறிவிடுமே என்று உணர்வு பூர்வமாகச் சொல்லிக் காண்பித்தார்கள். இந்தப் பெயர் மாற்றம் அவர்கள் கட்சி வேண்டுமென்று கேட்டால், அந்த உணர்வுக்கு மதிப்புக் கொடுப்பேன்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** ஏன் மதிப்புக் கொடுக்க வேண்டும்? காரணம், நியாயம் என்ன என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். 6-30 p.m.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** உறுப்பினர் அவர்களும நியாயத்தைப்பற்றிச் சொல்லவில்லை. உணர்வைப்பற்றித் தான் சொன்னார்கள். இங்கிருக்கிற விவகாரம் ஒன்று. அவர்கள் இன்றைக்குப் பயப்படத் தேவையில்லை என்று சொல்லுகிறேன். இருக்கிற நிலவரத்தை நாம்

[திரு. கே. எ. மதியழகன்] [26th March 1970

சொல்லுகிறோம். மாநிலத்தில் சுய ஆட்சி, மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்திற்கு எல்லா அதிகாரங்களும் வேண்டுமென்று சொல்லுகிறோம். ஒரு சின்ன ஊர்ப் பெயரை மாற்ற வேண்டுமென்றால் கூட, ரெவின்யூ போர்டு மந்திரி கையெழுத்துப் போட்டால் வேறு உத்தரவு வந்துவிடும் என்று பயப்படத் தேவையில்லை. அந்த அளவிற்கு ஒரு மாநிலத்தின் அதிகாரம் இருக்கிறது. ஒரு சின்ன ஊர், ரெவின்யூ கிராமத்தின் பெயரை மாற்ற வேண்டுமென்று சொன்னால் கூட அதற்கு டெல்லியிலிருக்கிற அரசாங்கம் நமக்கு அனுமதி அளிக்க வேண்டும். மாநிலம் மத்திய அரசிற்குக் கட்டுப்பட்டுத் தான் இருக்கிறது. ஆகையால் இந்த பெயர் மாற்றம் சீக்கிரம் ஏற்பட்டு விடாது. அங்கே போய் அதற்காக போராடித் தீர வேண்டும் என்று நிலைமையிருக்கிறது. அதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்காலிகமாக சந்தோஷமாக இருக்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன். அதமன் கோட்டை என்று இருந்ததை "அதிகமான் கோட்டை" என்று மாற்றுவதற்குப் போராட்டம் நடத்த வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்தோஷமாக இருக்கலாம் என்று மீண்டும் கூறிக்கொள்கிறேன். நிலவள வங்கி பற்றிச் சொன்னார்கள். உள்ளதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள. 106 வங்கிகளாக இருப்பதை 180, 170 என்றானால், நிலைமைகள் மாறத்தான் செய்யும். ஆகையால் நில வளவங்கிகளைக் குறைப்பது சரியானதல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஒரே நாளில் ஏதோ ஆளும் கட்சியைத் சார்ந்தவர்களை ஆதரிப்பதற்கு, பல்வேறு இடங்களிலும் நில வள வங்கிகளைப் புதிதாகத் திறந்திருப்பதாகச் சொல்லி, அதற்காக அவசர அவசரமாக உறுப்பினர்களைச் சேர்த்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். இதில் உண்மையான விவரங்கள் என்னவென்றால், இந்த மாதம் 31-ம் தேதிக்குள் ஏற்படுத்தப்படும் நில வள வங்கிகளுக்கு மட்டுமே ரிசர்வ் பேங்க் பங்குத் தொகைக்காக மாநில அரசாங்கத்திற்குப் பணம் கொடுக்கும் என்று நிர்ணயித்திருந்ததால், உடனடியாக 31-ம் தேதிக்குள் பல்வேறு நில வள வங்கிகளை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதை விட்டு விட்டு வேறு ஏதோ ஒரு காரணத்திற்காக இந்த வங்கிகளையெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று கூறுவது நியாயமானதல்ல. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா ஐயர் அவர்கள் இங்கு ஒரு தவறைச் சுட்டிக்காட்டினார்கள். 36-வது பக்கத்தின் படி "The Government have ordered that pending receipt of the report of the Pay Commission, a Special Compensatory Allowance of Rs. 10 be granted to all Government servants drawing a pay up to and inclusive of Rs. 500 per mensem with effect from the salary earned for March 1970 payable in April 1970". அது தவறென்று சொன்னாலும், நாம் ஒத்துக்கொள்ளலாம். தவறில்லை என்றும் நாம் வாதம் செய்யலாம். அந்த வாக்கியம் தவறானது அல்ல. ஏனென்றால் நம்முடைய சட்ட மன்றச் சட்டத்தில் சர்க்காரால் நேரடியாகக் கொடுக்கப்படும் பேமெண்டிற்குத் தான் வழி இருக்கிறது. ஆசிரியர்கள், எய்டட் ஸ்கூல் ஆசிரியர்கள், பஞ்சாயத்து யூனியன் சர்வீஸில் உள்ளவர்கள் போன்றவர்கள் வேறு நிலையில் இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில், சாதாரணமாக தனி பட்ஜெட் எஸ்டிமேட் போடப்படுகிறது. அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

The Special Compensatory Allowance sanctioned in paragraph 1 above shall apply to full time employees paid from Contingencies including those paid at market rates and to work charged establishments other than casual employees.

Orders regarding applicability of the Special Compensatory Allowance sanctioned in this order to the employees of local bodies (including teachers)



26th March 1970] [திரு. கே. எ. மதியழகன்]

and the Corporation of Madras and also to the teachers in aided educational institutions will be issued separately in the Rural Development and Local Administration Department and Education Department.

என்று போடப்பட்டிருக்கிறது. The orders are under issue now. ஆகவே இவர்களுக்குத் தனித்தனியாக ஆர்.டி.எல்.எ. டிபார்ட்மெண்டில் கணக்கு வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைத்தவறாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

அடுத்தபடியாக, பென்ஷன் பற்றி அவர்கள் சொன்னார்கள். 26-2-1970 என்று வைத்திருப்பதை ஏன் கொஞ்சம் முன் கூட்டி வைக்கக் கூடாது என்று சொன்னார்கள். இவைகளையெல்லாம் இந்த மாதிரிச் செய்தால், ஒன்றுக்கொன்று முரணான வாதம் வந்து கொண்டு தான் இருக்கும். இந்தத் தேதி வைத்ததால் பெரிய பாதகம் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. இந்த பென்ஷனின் பலன்களை நல்ல வகையிலே எல்லோரும் வரவேற்கிறார்கள் என்ற வகையிலே நாம் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அடுத்தபடியாக, இந்தப் புத்தக வெளியீட்டு சம்பந்தமாக நல்ல யோசனைகளை அதனுடைய பொறுப்பாளர் அரசாங்கத்திற்குக் கொண்டு வருவார் , என்பதை மட்டும் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு, அதில் மிகவும் அரசாங்கம் அக்கரை கொண்டிருக்கிறதென்றும் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் விக்ரகங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு, எங்கு போனார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் அதில் ஒரு பெரிய ஆராய்ச்சியே நடத்தி விட்டார்கள். இதிலே அவர்கள் எவ்வளவு பாண்டித்தியம் பெற்றிருக்கிறார்கள் என்பதை இதன் மூலமாக நாம் தெரிந்துகொள்ளலாம். இந்த விக்ரகங்கள் திருட்டு சம்பந்தமாக தீவிரமான நடவடிக்கை எடுக்கும்படி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய காவல் துறையைக் கேட்டுக்கொள்வார் என்று தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களின் கட்சியைப் சார்ந்த திரு. ராகவானந்தம் அவர்கள் பஸ் போக்குவரத்துத் துறையைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுடைய குறைகளைப் பற்றியும் பொதுவாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். சில யோசனைகளையும் கூறியிருக்கிறார்கள். அவர்களின் யோசனைகளை நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, எவையெவை நியாயமான யோசனைகளாக இருக்கின்றனவோ, அவைகளெல்லாம் அமுல்படுத்தப்படும் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.

அடுத்து, துயர் தணிப்புக்காக டெல்லி சர்க்கார் 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இந்த 25 கோடி ரூபாய் இந்த ஆண்டிற்கும், வருகிற வருடத்திற்கு 100 கோடி ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. அந்த ஆண்டில் எங்கெங்கு பஞ்சம், மிக வறட்சி இருக்குமோ அந்த இடத்திற்கு 100 கோடி ரூபாய் என்று கணக்குப் போட்டு அதில் நமக்கு நன்மையும் ஏற்படாமல் செய்திருக்கிறது டெல்லி சர்க்கார். இந்த 100 கோடி ரூபாயில் தமிழ் நாட்டிற்கு என்ன பங்கு என்று கேட்டிருந்தார்கள். உங்களுக்குப் பங்கு ஒன்றும் கிடையாது, ஸீரோதான் உங்களுடைய பங்கு என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். இந்த அக்கிரமத்தைக் கண்டித்துத்தான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தொடர்ந்து ஆட்சேபத்தைத் தெரிவித்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த மாதிரி இரண்டு மூன்று பெரிய அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கின்றன. ஏதோ ஒரு கணக்கினைக் காண்பிப்பது பிறகு மிச்சம் இவ்வளவு என்று சொல்லி, அதிலும் உங்களுக்குப் பங்கு ஒன்றும் கிடையாது என்று சொல்லுவது என்று இப்படித்தான் இருக்கிறது. மொத்தம் ஒரு 800

[திரு. கே. ஏ. மதியழகன்] [26th March 1970

கோடி ரூபாய், ஆண்டிற்கு ரூ. 175 கோடி வீதம் ஐந்தாண்டிற்கு ஏறத்தாழ 800 கோடி ரூபாய் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். இந்த 100 கோடி ரூபாயிலும் பங்கில்லை என்று கூறிவிட்டார்கள். இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் நிரந்தரமான வரட்சிப் பகுதிகளாக இருக்கின்றன. இராமநாதபுரம் பகுதி, மதுரையில் வேடசாந்தூர் பகுதி, கோவை மாவட்டத்திலே காங்கேயம், வெள்ளக்கோவில், தாராபுரம் போன்ற பகுதிகள், இன்னும் ஆலங்குளம் போன்ற பகுதிகள் அனைத்துமே நிரந்தரமாக வறட்சிப் பகுதிகளாக இருக்கின்றன. இவற்றுக்காகக் கொடுத்திருக்க வேண்டும். அப்படியில்லையென்றால் ஒரு மாநிலத்திற்கு ஒரு மாவட்டம் என்று ஒரு கணக்குப் போட்டு, அந்த அடிப்படையில் கொடுத்திருக்கலாம். கொடுக்கவில்லை. எனவே இவற்றுக்காக நாம் நமது கண்டனங்களைத் தெரிவித்திருக்கின்றோம். இந்த கண்டனங்கள் எல்லாம் எந்த அளவிற்கு அவர்களிடம் பலிக்கப்போகின்றன என்பது தெரியவில்லை. ஆனால் இவற்றைப் பெறும்வரையில் நாம் வற்புறுத்துவோம், கண்டனங்களைத் தெரிவிப்போம், போராடுவோம். கமிட்டிகள் என்றும், திட்டக் கமிஷன் என்றும், நிதிக் கமிஷன் என்றும் போட்டு, பெரும் அளவிற்குப் புள்ளி விவரங்களையெல்லாம் திரட்டி வைத்துக்கொண்டு கடைசியில் யாருக்கும் இல்லாமல் 800 கோடி ரூபாயை நிறுத்திவைத்துக்கொண்டு, தமிழகத்திற்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதைக்கூடக் கொடுக்காமல் இருப்பது வருந்தத்தக்கது, கண்டனத்திற்கு உரியது என்று நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய ஒப்புதல் இல்லாமலேயே ஏதோ பலர் சொல்லுகிறார்கள் என்பதற்காக, சம்பிரதாயத்திற்காக அதை நிறைவேற்றிக்கொண்டாலும், அவற்றுக்கு மக்கள் மன்றத்தின் ஒப்புதல் பெற முடியாத நிலை இருக்கிறது. எனவே நமது பங்கிற்கு நாம் விடாமல் போராடுவோம் என்று நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. இராகவானந்தம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

6-40 p.m.

நண்பர் திரு. எத்திராஜுலு அவர்கள் நமது மேல் சபையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். உறுப்பினர்கள் தங்கியிருப்பதற்கு ஒரு அறை இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். எனக்குக்கூட விருப்பம் இருக்கிறது. மேல் சபைக்கு என தனியாகக் கட்டிடம் ஒன்றும் சட்ட மன்றத்திற்கு என்று தனியாக ஒரு கட்டிடம் ஒன்றும் ஒரு பத்து பதினைந்து கோடி ரூபாய் அளவில் செலவழித்துக் கட்ட வேண்டும் என்று. வெளி மாநிலங்களில் போய்ப்பார்த்தால், நேற்றைக்கு முந்தைய நாளிலே தோன்றிய மாநிலங்கள் எல்லாம் பெரும் பணம் செலவழித்து சட்ட மன்றத்திற்கும் மேல் அவைக்கும் நேர்த்தியான கட்டிடங்களைக் கட்டிக்கொண்டிருக்கும் போது, நாமும் நமது சட்ட மன்றப் பேரவைக்கு பிரம்மாண்டமான கட்டிடங்களைக் கட்டிக்கொண்டால், பெருமையாக இருக்கும் என்று ஆசைப்படுவது உண்டு. ஆனால் சட்டியில் இருந்தால்தான் அகப்பையில் வரும் என்று சொல்வது போல, ஆஸ்பத்திரி கட்டிடங்களுக்கே இன்னும் கூடுதலான வசதிகள் வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது, இப்படி ஒரு ஆசையா என்று நமது நண்பர் மாண்புமிகு திரு. எத்திராஜுலு அவர்கள் சண்டைக்கு வரக்கூடும். மாண்புமிகு திரு. எத்திராஜுலு அவர்கள் கூறுவதையும் கவனிக்க வேண்டும். அதே போல நான் சொல்லும் இந்த ஆசைகளும் காலப் போக்கிலே நிறைவேற வேண்டும். அப்போதுதான் நமது தமிழ் நாட்டிற்குப் பெருமை. முன்பு ஒரு அறை இருந்தது. அது இப்போது ஓட்டலாகிவிட்டதா என்று தெரியவில்லை. அவற்றையெல்லாம் விசாரித்து வேண்டியதையெல்லாம் அரசு செய்து தரும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பிற்பட்ட வகுப்பினருக்கான கமிஷனைப் பற்றி மாண்புமிகு திரு. எத்திராஜுலு அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு கமிஷனை ஏற்பாடு செய்து விட்டு, அது செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது அது சொல்லக் கூடிய பரிந்துரைகள், அதன் பின் விளைவுகளைப்பற்றி நோக்கம் கற்பிக்கக் கூடாது.



6th March 1970]

**திரு. எம். எத்திராஜுலு:** அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக்கொள்ளுகிறேன். நான் குறிப்பிட்டது பிற்பட்டவர்களுக்கான கமிஷனைப் பற்றி அல்ல. காவல் படையினருக்காக ஏற்படுத்தப்பட்ட கமிஷன் அந்த அந்த ஜில்லாத் தலைநகரங்களுக்குச் செல்லும்போது, அங்கே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்களையும் கலந்து உரையாடி முடிவிற்கு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** பொதுவாக அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ள பணியில் அக்கரை கொண்டவர்கள் எல்லாரிடத்திலும் கமிஷன் விவாதிக்கலாம். அப்படி விவாதிப்பதற்காகத்தான் இப்படிப்பட்ட கமிஷன்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. எனக்கு எப்போதும் இந்த பிற்பட்ட வகுப்பாருக்கான கமிஷனைப் பற்றி நினைவு. மாண்புமிகு நண்பர் திரு. எத்திராஜுலு அவர்களுக்கு போலீஸ் துறையினர் பேரிலுள்ள அக்கரைக்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். ஏனென்றால் அவருக்கும் போலீசுக்கும் எப்படிப்பட்ட உறவு என்று நாம் அறிவோம். இரண்டு மூன்று தடவை தடியடிக்கு உள்ளானவர் அவர்கள். எனவே அவரே போலீஸ் துறையினருடைய நலனில் அக்கரை கொண்டு கருத்துக்களைக் கமிஷன் முன்பு சொல்ல விரும்புகிறார் என்றால், கண்டிப்பாக அந்தக் கமிஷன் அவர்கள் சொல்லும் கருத்துக்களை எடுத்துக்கொள்ளும், எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. சுப்பையா அவர்கள் சொல்லும்போது திருமானூரில் பாலம் கட்டுவதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. அது சம்பந்தமான விவரங்களைத் தெரிந்து கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதிக்கிறேன் என்று கூறிக்கொண்டு இந்த இறுதி மான்யக் கோரிக்கையில் பல நல்ல யோசனைகளைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி கூறி இன்னும் ஏதாவது விட்டுப் போயிருந்தால், அவற்றையெல்லாம் அதிகாரிகள் மூலம் எடுத்து ஆராய்ந்து வேண்டியது செய்யப்படும் என்று கூறி என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**DEPUTY CHAIRMAN:** The House will now adjourn and meet again at 4 p.m. on Saturday, the 28th March 1970. 6-45 p.m.

The House then adjourned.

## V. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

165. Notification issued with G. O. Ms. No. 2177, Local Administration, dated the 7th November 1969 in regard to preliminary notification for the constitution of a Municipality with the name of Virudhachalam in South Arcot District. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

166. Notification issued with Rc. No. 173361/68-E3 dated the 4th May 1969 in regard to extension of certain provisions of Tamil Nadu District Municipalities Act, 1920 to the entire area of Ayyalur Town Panchayat, Madurai District. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

167. Notification issued with G.O. Ms. No. 29, Co-operation, dated the 19th September 1969 in regard to certain amendments to the Tamil Nadu Money Lenders Rules, 1969. [*Laid on the Table of the House under section* 22 (3) *of the Tamil Nadu Money Lenders Act*, 1957 (*Tamil Nadu Act XXVI of* 1957.)]

[26th March 1970

168. Notification issued with R. Dis. No 144837/69-P2, dated the 7th November 1969 in regard to exclusion of certain areas from the existing Keelapaguthy Panchayat of Tiruchirappalli district and constitution of a separate Panchayat by name " Tharagampatty " Panchayat. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

169. Notification issued with R. Dis. No. 74668/69-P2, dated the 22nd November 1969 in regard to exclusion of certain areas from the existing Vanavasi Town Panchayat in Mettur Taluk of Salem district and constitution of a separate Panchayat by name "Sanarpatti" Panchayat. [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

170. Notification issued with R. Dis. No. 144829/69-P2, dated the 27th October 1969 in regard to exclusion of certain areas from the limits of Kolakudi Panchayat in Musiri Taluk of Tiruchirappalli district and constitution of a separate Panchayat by name "Appanallur Panchayat". [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

171. Notification issued with G.O. Ms. No. 2104, Local Administration, dated the 30th October 1969, in regard to preliminary notification for constitution of Municipality with the name of Thuraiyur in the Tiruchirappalli district. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

172. Notification issued with G.O. Ms. No. 2106, Local Administration, dated the 30th October 1969, in regard to preliminary notification for Constitution of a Municipality with the name of Satyamangalam, in Coimbatore District. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act* 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

173. Notification issued with G.O. Ms. No. 2105, Local Administration, dated the 30th November, 1969 in regard to preliminary notification for the constitution of a Municipality with the name of Pallavapuram in Chingleput District. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920.)]

*B. Reports, Notifications and Other Papers.*

70. Sixteenth Report of the Committee on Estimates 1969-70 on Forests.

71. A Review on Road Development and Building Programme in Tamil Nadu 1969-70 (English and Tamil).

72. A Review on Irrigation in Tamil Nadu 1969-70 (English and Tamil).

73. Speech by Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Public Works on Demands for Irrigation Grants, 1970-71. (English and Tamil).

74. Policy Note on Irrigation (English and Tamil).



26th March 1970]

## APPENDIX

[*Vide* answer to Starred Question No. 226 on page 607 ]

6—3—1967 முதல் 31—1—1969 வரை மாவட்ட வாரியாக நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்து வழித்தடங்களின் எண்ணிக்கையையும், பாதிக்கப்பட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட புதிய அனுமதிச் சீட்டுகளின் எண்ணிக்கையையும் காட்டும் விவர அறிக்கை.

| தொடர் எண். | மாவட்டங்கள். | 6-3-1967 முதல் 31-1-1969 வரை நாட்டுடைமையாக்கப்பட்ட பேருந்து வழித்தடங்களின் எண்ணிக்கை. | பாதிக்கப்பட்ட பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்கியுள்ள புதிய அனுமதிச் சீட்டுகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | செங்கற்பட்டு (சென்னை மாநகரிலிருந்து புறப்படும் சென்னை மாநகருக்கு வந்து சேரும் வழித்தடங்கள் உட்பட). | 112 | 1 |
| 2 | வட ஆற்காடு .. .. .. .. | 6 | 3 |
| 3 | தென் ஆற்காடு .. .. .. | 14 | 2 |
| 4 | தஞ்சாவூர் .. .. .. .. | 1 | 1 |
| 5 | திருச்சிராப்பள்ளி .. .. .. | 11 | .. |
| 6 | மதுரை .. .. .. .. | 6 | 4 |
| 7 | ராமநாதபுரம் .. .. .. | 10 | 1 |
| 8 | திருநெல்வேலி .. .. .. | 16 | 4 |
| 9 | கன்னியாகுமரி .. .. .. | 31 | .. |
| 10 | நீலகிரி .. .. .. .. .. | 5 | .. |
| 11 | கோயம்புத்தூர் .. .. .. | 17 | 1 |
| 12 | சேலம் .. .. .. .. | 12 | .. |
| 13 | **தருமபுரி** .. .. .. .. | **17** | **9** |

# THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

## Satur day, the 28th March 1970

The House met in the Council Chamber Fort St. George, at four of the Clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS

*Polytechnics.*

*231 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether it is a fact that the students of most of the Polytechnics in the State are on strike ;

(*b*) if so, the reasons therefor ; and

(*c*) the steps taken by the Government to end the strike

**பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள்**

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் உள்ள பெரும்பாலான பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளின் மாணவர்கள் பள்ளிக்குச் செல்லாமல் உள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) மாணவர்கள் பள்ளி செல்லாமலிருப்பதை நிறுத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) 1969-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் சிலவற்றில் மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவில்லை.

(இ) தங்கள் கோரிக்கைகளில் சிலவற்றை வலியுறுத்துவதற்காக அவர்கள் அவ்வாறு வகுப்புகளுக்குச் செல்லாமலிருந்தனர்.

(உ) மாணவர்கள், வகுப்புகளுக்குச் செல்லாமலிருப்பதைத் தாங்களாகவே நிறுத்திவிட்டு 1969 அக்டோபர் திங்கள் முதல் வாரத்திலிருந்து திரும்பவும் வகுப்புகளுக்கு முறையாகச் சென்று வருகின்றனர்.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, பல்வேறு பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் உள்ள மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்திருப்பதனால், அவர்கள் கூறுகிற குறைபாடுகள் எத்தகையவை என்று ஆராயப்பட்டதா ? அவற்றில் எல்லாவற்றிற்கும் பொருந்தக் கூடிய பொதுவான குறைகள் இருக்கின்றனவா அல்லது தனிப்பட்ட குறைகள் இருக்கின்றனவா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பொதுவாக வேலை வாய்ப்பு தருவதைப் பற்றியும் தேர்வுகளைத் தள்ளிப் போட வேண்டுமென்றும் சில சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், முதல் ஆண்டு மாணவர்கள் இரண்டாம் ஆண்டுக்கு அனுப்பப்பட வேண்டுமென்றும், இப்படிச் சில பல முறையீடுகளை வைத்து வேலை நிறுத்தம் செய்தார்கள். உள்ள நிலைமையை விளக்கம் செய்த பிறகு, வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்று மீண்டும் செல்கின்றனர்.

[28th March 1970

**திரு. எம். ராஜா அய்யர் :** இப்போதுள்ள நிலையை உத்தேசித்து, அரசாங்கம் இந்தப் பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் சேர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 39 பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. முதலில் 4,800 இடங்கள் இருந்தன. அவற்றில் 3,574 இடங்கள்தான் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. தேவைப்படுகிற தொழில்களுக்கான இடங்களை அதிகப்படுத்தலாமா என்ற எண்ணமிருக்கிறது. எங்கெங்கு அந்த வகுப்புகளில் மாணவர்கள் படிக்க அதிகமாக விரும்புகிறார்களோ அவற்றை அதிகமாக்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அதற்கான கணக்குகள் திரட்டப்படுகின்றன. மேலும் வெளிவருகிற மாணவர்களுக்கு அந்தப் பயிற்சிப் பள்ளியிலே இருக்கிற இயந்திரங்களைப் பயன்படுத்தி, தொழில் செய்யும் முறையில், மதுரை, சென்னையில் கொண்டுவந்த திட்டம் பலன் அளித்திருக்கிறது. 40 அல்லது 50 மாணவர்கள் சேர்ந்து காலை 4½ முதல் 8½ மணி வரையிலும் மாலை 5 முதல் 8 மணி வரையிலும் அந்த இயந்திரங்களைப் பயன்படுத்தலாம் என்றும், அதற்கான ஆர்டரைப் பெற்றுக் கொண்டு குறைந்த அளவு வாடகை கொடுத்துவிட்டு அதைச் செய்யலாம் என்னும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான் மதுரையில் போய்ப் பார்த்தேன். அந்த மாணவர்கள் மாதம் ரூ. 150, ரூ. 200 அளவுக்கு சம்பாதிக்கிறார்கள். நாளடைவில் அதன் மூலம் ஏற்படும் பழக்கத்தை வைத்துக் கொண்டு தனியாகத் தொழில் ஆரம்பிக்க அது உதவும். அத்திட்டத்தைப் பல்வேறு பயிற்சிப் பள்ளிகளில் வைக்கலாமா என்று அரசு ஆராய்ந்து வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** பல் தொழில் பயிற்சிப் பள்ளிப் பாடத் திட்டங்கள் முழுவதையும் மாற்றியமைக்க மத்திய அரசு ஒரு குழு அமைத்திருக்கிறதா ? அமைக்கப்பட்ட அந்தக் குழு சம்பந்தமாக மாநில அரசின் ஆலோசனை கேட்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

*B. Pharmacy Course.*

*232 *Q.*—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether the B. Pharmacy Course in the Madras and Madural Medical Colleges has been given permanent recognition by the Centrai Pharamcy Council of India ;

(*b*) if not, the reasons therefor ; and

(c) the steps taken to secure permanent recognition ?

**மருந்தாக்கக் கலைப் பட்டப் படிப்பு**

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகளில் மருந்தாக்கக் கலைப்பட்டப் படிப்புக்கு, இந்திய மத்திய மருந்தாக்கக் கலை மன்றத்தால் நிலையான ஏற்பு அளிக்கப்பட்டுள்ளதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(உ) நிலையான ஏற்பளிக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் யாவை?



28th March 1970].

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் .** (அ) இல்லை.

(இ) இந்திய மருந்தாக்க இயல் மன்றத்தால் நியமிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர்கள் சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகளில் மருந்தாக்க இயல் பாடமுறைக்கான வசதிகளை ஆய்வு செய்தனர். சில மேம்பாடுகளைச் செய்யலாமென்று அவர்கள் கருத்து தெரிவித்தனர். அதன் பரிவுரைகள் செயல்படுத்தப்பட்ட பின்னர் மருந்தாக்க இயல் மன்றம் இப்பாட முறைக்கு ஏற்பு வழங்கும்.

(உ) இந்த அரசின் கருத்துரைகள் இந்திய மருந்தாக்க இயல் மன்றத்திற்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

Thiru D. SANTOSHAM : Sir, it is said that without this recognition, it is not possible for our B. Pharmacy Graduates to go for post-graduate courses in other Universities and it is also said that even after they get their industrial training, this want of recognition stands as a bar. Therefore, will the Government try to get this recognition as early as possible and take all steps to see that it is got as quickly as possible ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தக் குழுவினர் இங்கே வந்திருந்து, சிலபல குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, அவைகளை நிறைவு செய்தால், ஏற்பு வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறைப்பாடுகள் எல்லாம் நிறைவு செய்யப்பட்டு, இப்போது இந்திய அரசுக்கு இந்த மாநில அரசு எழுதியுள்ளது. மத்திய அரசின் பதில் வந்தபிறகு, அவர்கள் ஏற்பு வழங்கக் கூடும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எந்தெந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று அந்தக் குழுவினர் சொன்னார்களோ, அவைகளெல்லாம் நீக்கப்பட்ட பிறகே, மத்திய அரசிற்கும் பதில் வரையப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து விரைவில் அனுமதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. டி. சந்தோஷம் :** நீக்கப்பட வேண்டும் என்று அந்தக் குழுவினர் சுட்டிக் காட்டிய குறைபாடுகளில் முக்கியமான ஒன்றிரண்டு குறைபாடுகளை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பல குறைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

The observation of the Pharmacy Council is that the department has all the apparatus mentioned in the education regulations except the Best Bhall balance and Tincture press. The department is making arrangements to procure these equipments, for use in this department. They have also made observations about Pharmaceutics, chemistry staff, concession of marks, library, etc.

Thiru G. SWAMINATHAN : Sir, I think the purchase of the Tincture press and balance may not cost more than Rs. 5,000. May I know how long it will take for the Government to fulfill the recommendation of the Council ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அவர்கள் எடுத்துக் காட்டிய குறைபாடுகள் எல்லாம் இப்போது நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. எவ்வளவு காலமாயிற்று என்ற குறிப்பு என்னிடம் இல்லை.

*233 *Q.*—Thiru D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any representation has been received or made to the Government by the B. Pharmacy students of Madurai Medical College to start a separate College of Pharmacy at Madras and Madurai ; and

(*b*) if so, the action taken thereon ?

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலும், மதுரையிலும் மருந்தியல் படிப்புக்கான கல்லூரி ஒன்று தனியாகத் தொடங்குவது குறித்து முறையீடு ஏதேனும் மதுரை மருத்துவக் கல்லூரியில் மருந்தியல் பட்டப் படிப்பு (B. Pharmacy) மாணவர்களிடமிருந்து அரசுக்கு வந்துள்ளதா அல்லது செய்து கொள்ளப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இது பரிசீலனையில் இருக்கிறது.

THIRU D. SANTOSHAM : Sir, at present the B. Pharmacy Course is precariously attached to the Medical College at Madras and Madurai and the students complain, I think with justification, that the professors and the Dean of the Medical Colleges give them only secondary or step-motherly attention and they do not get the education that is their due. They also say that if a separate college is formed for them, there will be more scope for research in indigenous drugs and so on. What they ask for is not a separate building. It can be had in the same building. They want that only the professors and other staff should be kept separate and B. Pharmacy called a separate unit. Will the Government consider that this is an urgent reform and expedite decision on this ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தற்போது சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகளின் கீழ் இது தனிப் பிரிவாக வைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இதற்கென்று ஒரு தனிக் கல்லூரி வைக்கும் முயற்சியை ஒத்துக் கொண்டால், அதனால் பெரும் செலவு ஏற்படும். மேலும் இப்போதே பயிற்சி பெற்று, வெளியே வருகிற அத்தனை மாண வர்களுக்கும் வேலை தேடித் தருவது இயலாத காரியமாக இருக்கிறது. எனவே இப்போது 35 (பர்ஸ்ட் இன்டக்ரேட் கோர்ஸ்) மாணவர்களும், மற்ற 15 மாணவர்களும் தான் இருக்கிறார்கள். இவர்களுக்கு என்று தனிக் கல்லூரி வைப்பதென்றால், பெரும் செலவு தான் ஏற்படும். கல்லூரி வைத்துவிட்டோம் என்றால், அதற்குப் பிறகு அதில் இடங்களின் எண்ணிக்கையைப் பெருக்க வேண்டிவரும். அதற்குப் பிறகு அங்கே படித்து வெளியே வருகிற அத்தனை மாணவர்களுக்கும் வேலை வாய்ப்புத் தேடித் தருவது என்பது கடினமான பிரச்னையாகும். எனவே மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழும் செயல்படும் இந்த இரண்டு மருத்துவக் கல்லூரிகளின் கீழேயே அது தனிப் பிரிவாக இருப்பதே நலம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமி நாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், தற்போது படித்து வெளியேறிய பலருக்கும் வேலை வாய்ப்பு இல்லாத நெருக்கடி நிலை இருக்கிற காரணத் தால், இதற்கென்று தனிக்கல்லூரி வைப்பதனால் பயன் ஏற்படாது என்றே கருதுகிறேன். மாணவர்களும் அதிகமாகி, வேலைவாய்ப்பும் அதிகமாகும் நிலையில் தனிக் கல்லூரி அமைக்கும் முயற்சியில் ஈடுபடலாம். அதுவரை யில் தற்போதையை முறையில் ஏதேனும் குறைபாடு இருக்குமானால், அதை நீக்குவதற்கான முயற்சியை நாம் மேற்கொள்ளலாம்.

**திரு. டி. சந்தோஷம் :** அதிகமாகச் செலவு ஏற்படாத வகையில் இப் போது இருக்கிற கட்டடங்களிலேயே, வகுப்பறைகளிலேயே, ஆஸ்பத்திரிகளி லேயே அவர்கள் தகுந்த பயிற்சியைப் பெறும்படியான நிலையை வைத்துக் கொண்டு போதனாசிரியர்களை மாத்திரம் தனியாக நியமித்து, அதைத் தனிக் கல்லூரியாக அதே கட்டிடத்தில் நடத்த சாத்தியமில்லையா ? இதனால் செலவு ஒன்றும் அதிமாகாதே. இதை அரசு பரிசீலிக்குமா ?



**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கல்லூரி என்று வைத்துவிட்டால், அதற்கு என்று ஒரு பிரின்சிபால், மற்ற வைகள் எல்லாம் வேண்டும். சென்னையிலிருப்பதையும் மதுரையிலிருப் பதையும் ஒன்றாக இணைக்க வேண்டும். அதற்கு அதிகக் கட்டிடம் வேண் டும். தற்போதே இப்படிப்பட்ட பயிற்சி தரும் கல்லூரிப் பாடமுறைகள், அதாவது சானிடரி கோர்ஸ் எல்லாம், மருத்துவக் கல்லூரியின் கீழ்தான் இருக்கின்றன. பிறகு அவர்கள் எல்லாம் கூட தங்களுக்குத் தனிக் கல்லூரி வேண்டும் என்று கேட்பார்கள். தனிக் கல்லூரி வைத்து நடத்துகிற அளவுக்கு மாணவர்கள் எண்ணிக்கை இருந்தால் நடத்தலாம். இப் போது இருக்கிற மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கிறபோது, தனிக் கல்லூரியாக வைத்து நடத்த வேண்டிய அவசியமில்லை என்றுதான் மருத்துவத் துறை இயக்குநர் அவர்களும் பொதுநலம்-குடும்பக் கட்டுப்பாடு துறை இயக்குநர் அவர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள்.

THIRU V. K. RAMASWAMY MUDALIAR : Sir, arising out of the answer of the Hon. Minister to question 232, that permanent recognition had not been granted so far, may I know what is the object in starting or considering the request of the students to start another Pharmacy College ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதைத்தான் முதல் கேள்வியிலேயே குறிப்பிட்டேன். அதற்கான முயற்சி கள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு ஏற்பு வழங்கும் திட்டம் விரை வில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனிக் கல்லூரியாக வைக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு இசைவு தந்தால், அதனால் அரசாங்கத்திற்குப் பெரும் செலவு ஏற்படும் என் பதைக் கருதி, தனிக் கல்லூரியாக இது இல்லாமல், இப்போது இருக்கிற நிலையே நீடிக்கப்படும் என்று சொன்னேன்.

THIRU G. SWAMINATHAN : Sir, in all the other States they have got a separate college for B. Pharmacy. Regarding students, there are not only B. Pharmacy students but also diploma in Pharmacy students who are neraly 200 to 300 in number. They can be pooled together into a separate college and the only difference is that they should have a separate Principal for the institution and the only department to be interlinked is pharmacology. There may not be much expenditure to the Government in clubbing both the institutions. As a matter of fact, the Government will gain because now we have two professors one for each subject in the Madurai and Madras colleges. By having it as a separate college instead of having two, the Government will be gaining. Will the Government consider this matter ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷனும், டைரக்டர் ஆப் ஹெல்த் சர்வீஸஸ் அண்டு பேமிலி ப்ளானிங்கும் இதற்கென்று தற்போது தனிக் கல்லூரி தேவையில்லை என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் வேறு பல மாநிலங்களில் தனிக் கல்லூரி இருக்கிறது என்ற குறிப்பு இங்கே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறி யதைப் போன்று மீண்டும் ஆராயப்பட வேண்டுமென்றால், அதற்கான வசதிகள் இருந்தால், இது பரிசீலிக்கப்பட்டு தக்க முடிவு எடுக்கலாம்.

*Training Schools.*

*234 *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any new system for admission into training schools was introduced during the year 1969 ; and

(*b*) if so, the reasons and the details there of ?

**பயிற்சிப் பள்ளிகள்**

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்காக புதிய முறை ஏதேனும் 1969ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள், விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) அண்டு (இ) பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்துகொள்ளத் தெரிந்தெடுப்பதற்கு மாணவர்களை மதிப்பிடுவதில் ஒரே சீரான முறையை உறுதிப்படுத்தும் பொருட்டு ஆசிரியர் தொழிலுக்கு சாலச் சிறந்த திறமையுள்ளவர்களைப் பெறும் நோக்கத்துடனும், நேர்முகத் தேர்விற்கு வருகிற மாணவர்களின் திறமையை மதிப்பிடுவதற்கு பள்ளி இறுதிப் பொதுத் தேர்வில் மாணவர்கள் பெற்ற மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்களைத் தெரிந்தெடுப்பதற்கும் ஒரே சீரான நடைமுறையை மேற்கொள்ளுதலை அரசு வரையறுத்துள்ளது. நேர் முகத் தேர்வுக்கு உயர்ந்த அளவு 85 மதிப்பெண்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்லூரி புகுமுக வகுப்புத் தேர்வில் தேறிய மாணவர்களைப் பொறுத்த வரையில் கல்லூரிப் புகுமுக வகுப்புத் தேர்வில் அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் கூடுதல் மதிப்பெண்கள் வழங்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

THIRU D. SANTOSHAM : Sir, next to admissions to the medical colleges, the greatest rush and sometimes even the greatest corruption takes place in admissions to the training schools. Admission to training schools takes place after completion of the secondary school stage where much of genius which is to be decided by personal interview is not required. Therefore, will the Government consider the total abolition of the 85 marks allotted for the *viva voce* test and go only by the marks already obtained by the candidates at the public examination ? Would it not be possible to abolish the system of personal interview and awarding marks for that so that this kind of rush may be avoided ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போன்று இந்தப் பயிற்சிக்கு அதிகமான மாணவர்கள் வருகிறார்கள் என்பது உண்மை. ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அதற்கென ஒரு அடிப்படை எண் பெறவேண்டுமென்ற முறை இல்லாமல் இருந்தது. சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு 250 எண்கள் குறைந்த அளவு வாங்க வேண்டுமென்று இருந்தது. வருகிற ஆண்டில் அதை 300-க்கு உயர்த்தலாமா என்ற யோசனை இருந்து வருகிறது. அத்தோடு பல்வேறு தன்மைகளையும் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மார்க்குகள் மட்டும் இல்லாமல் அவற்றோடு அந்தந்தப் பகுதியில் அல்லது மாவட்டத்தில் இருப்பவர்களுக்கு, பள்ளிக்குப் பக்கத்தில் இருக்கிறவர்களுக்கு, சலுகை அளிக்கும் முறையில் சில எண்களை அளிக்க யோசனை இருக்கிறது. ஏழை எளியவர்களை, வேலை வாய்ப்பு இல்லாதவர்களை நாம் பார்க்கிறோம். 300 இடங்களுக்கு 3,000 விண்ணப்பங்கள் வருகிறபோது, யாருக்குத் தருவது என்ற பிரச்னை வருகிறது. அடிப்படையை 280 எண்களாக வைத்து, கையெழுத்து, இசை, நாடகப் பயிற்சி போன்றவைகளுக்கு 25 எண்களும், பொது அறிவிற்கு 25-ம் கல்வி பயிற்றுவிக்கும் திறனுக்கு 25-ம், பர்சனலிடி என்ற தோற்றப் பொலிவிற்கு 25-ம், விளையாட்டுத் திறனுக்கு 25-ம் அந்த லொகாலிடியைப் பொருத்த வரையில் 10 எண்களும் அளிக்கலாம் என்றிருக்கிறது. அந்த வகையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பெரும்பாலும் மாவட்ட அளவில் உள்ள கல்வி அதிகாரிகள் தான் குழுவில் இடம் பெறுகிறார்கள். பள்ளியில் எடுத்த எண்களை வைத்துக் கொண்டு என் ஒருவரின் தரத்தை நிர்ணயிக்கக் கூடாது என்ற கருத்து பரவலாக இருக்கிறது. ஆகவே அந்த எண்களையும் இந்த எண்களையும்



சேர்த்து இதில் அதிகமான எண் யார் பெறுகிறார்களோ அவர்களைச் சேர்த்துக்கொள்ளும்படி சொல்லியிருக்கிறோம். வேண்டியவர்கள் வேண்டாதவர்களுக்கு இடம் தருகிறார்கள் என்ற குறைபாடு இருப்பதால், இந்த இரண்டு எண்களையும் சேர்க்கச் செய்திருக்கிறோம். இதில் வருகிற சங்கடங்களைப் பார்த்து, அவற்றைத் திருத்தி, வருகிற ஆண்டில் இத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களை அழைத்துப் பேசி, அது பற்றிய முடிவெடுக்கலாம் என்றிருக்கிறோம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** ரெவின்யூ டிபார்டுமெண்டுக்கு குமாஸ்தாக்களைப் பொறுக்கி எடுக்கும்போது, அவர்களுக்கு 300 மார்க் வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆசிரியராக வருவதற்கு 250 மார்க் போதுமென்று இருந்தால், மற்றத் துறைகளைக் காட்டிலும் குறைந்த தகுதி இருந்தால், ஆசிரியராவதற்குப் போதும் என்று கருதுவதற்கு இடமிருக்கிறது. ஆகையால் அவர்கள் பெற்றிருக்கிற மார்க்குகளையும் வைத்துக்கொண்டு ஆசிரியராவதற்கான தகுதி, குண நலன்கள் இவைகளுக்குச் சில மார்க்குகளை வைத்து நல்ல முறையில் தேர்ந்தெடுக்கும் ஏற்பாடுகளை அரசு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி, 220, 230 மார்க் வாங்கியவர்கள் எல்லாம் அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பிறகு 250 மார்க் வைத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறிய அடிப்படையில், அடுத்த ஆண்டு அதை 300 ஆக உயர்த்தலாமா என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது. கல்வி பயிற்றுவிக்கும் ஆற்றல் இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்காகத்தான் 25 மார்க் ஒதுக்கப்பட்டிருக்கிறது. விளையாட்டுத் திறன் ஆகியவைகளுக்கு 25 எண்களும், பள்ளி இருக்கிற இடத்தில் இருந்தால் 10 மார்க்குகளும், கையெழுத்துக்கு 25-ம் ஆக மொத்தம் 85 மார்க் போடப்படும். இந்த முறையில் குறைபாடுகள் இருந்தால், அவற்றைக் கண்டறிந்து வருகிற ஆண்டில் என்ன செய்யலாம் என்பதைப் பார்க்கலாம்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சியில் சேருகிறபோது, தகுதி அடிப்படை வைத்தால், 2½ வயதானவர்கள் 25-க்கு பிறகு பயிற்சிக்குப் போக முடியாத நிலை ஏற்படுகிறது. இதற்கு முன் வயதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அனுமதிக்க ஏற்பாடு இருந்தது. தகுதி அடிப்படையோடு வயதையும் ஒட்டி தேர்வு செய்யும் முறையைப் பயன்படுத்தினால், ஆசிரியர்களின் குறை நீங்கும். அத்துடன் இந்தக் குழுவில் உத்தியோகப் பற்றற்றவர்கள் இருந்து நடத்தினால், அதனால் நன்மை உண்டாகும் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. இதை அரசு உணர்ந்து நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** இப்போது வயது பற்றியும் ஆராயப்படுகிறது. அதிலும் இரண்டு மூன்று குறைபாடுகள் இருக்கின்றன. வயதானவர்கள் பள்ளியை விட்டே பல ஆண்டுகள் ஆன பிறகு மறுபடியும் பயிற்சி பெற்று சொல்லிக் கொடுக்கும் தகுதி பெறுவார்களா என்று யோசிக்க வேண்டியிருக்கிறது. ஆசிரியர்களாக வருகிறவர்கள் மிகவும் இளைஞர்களாக இருந்தால், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வித்தியாசம் தெரியாமல் நிர்வகிப்பதில் அமைதியின்மையும் பல சங்கடங்களும் வந்துவிடுகின்றன. அவற்றையெல்லாம் காணவேண்டுமென்று தான் நேர்காணும் முறை வைக்கப்பட்டு, என்னென்ன தகுதிகள் வைத்திருக்கிறோமோ, அவை இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அதற்காக அணுகி சிபாரிசு செய்கிறவர்கள் கட்டாயப்படுத்தாமலிருந்தால், நோக்கம் நிறைவேற வாய்ப்பு ஏற்படும். அதற்கான நடவடிக்கைகளைப் பற்றி அரசாங்கம் யோசித்து வருகிறது.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவர் அவர்களே, அரசினர் நடத்தும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே தேர்வு செய்வதற்கு சட்டதிட்டங்களை வைத்திருக்கிறார்கள். அதில் எவ்வளவு போட்டியிருக்கிறது என்பதை திரு. சந்தோஷம் அவர்கள் சொன்னார்கள். மெடிகல் காலேஜு

அட்மிஷன் மாதிரி ஆகிவிடுகிறது. தனியார் துறையில் நடத்தப்படுகிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் அதை நடத்துகிறவர்கள் காண்ட்ராக்ட் மாதிரி, வியாபாரம் போல், நிர்ணயம் செய்கிறார்கள். மார்க்கெட் மாதிரி விலை ஏறுகிறது. வியாபாரப் போக்கில் பணம் கொடுக்கிறவர்களுக்கு, எந்தவிதமான தகுதியும் பார்க்கப்படாமல், இடம் அளிக்கப்படுகிறது. அதற்கும் இதேமாதிரித் தகுதி நிர்ணயம் செய்து, ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், சர்க்காரே அவற்றை எடுத்து நடத்துவதற்கு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் இருக்கின்றன என்பதனால்தான், 1969–70-ல் தனியார் துறையில் உள்ள பயிற்சிப் பள்ளிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மெடிகல், இன்ஜினியரிங் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்க குழுக்கள் இருப்பதைப் போல, குழு அமைப்பதற்கான முயற்சியைச் சென்ற ஆண்டு மேற்கொண்டோம். அது கூடாது என்று ஹைகோர்ட்டில் ரிட் போட்டார்கள். அதில் ஓரளவு அவர்கள் வெற்றியும் பெற்றார்கள். நாம் அப்பீலுக்குப் போயிருக்கிறோம். வேறு ஒருவர் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார். அது அப்பீலில் இருக்கிறது. அவற்றின் முடிவு வந்தபிறகு, தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறோம். அவர்களாகவே மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள குறைபாடுகளை, பணம் வாங்குகிறார்கள் என்ற குறையைப் போக்கத்தான் பொதுவான அமைப்பு ஏற்படுத்த முயன்றோம். ரிட் போட்டிருக்கிறார்கள். முடிவு வந்த பிறகு அதன் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, while recognising that there is any amount of practical difficulties in choosing the proper boys with merit, may I know whether the Government would consider the desirability of admitting students to such institutions on the basis of an entrance examination as is done in the Central institutions like the I.I.T. and Zipmer Medical College where everything is above board, where influence or money, influence by the legislators and offer of money by the general public, will not play a part in the admission of students to such institutions ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த முறையை ஒட்டி, வேண்டுமென்றால், அப்படிப்பட்ட ஒரு முறையையும் ஆராய்ந்து, அது பலன் தந்தால் ஏற்கனவே எடுத்த எண்களையும் என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷன் மூலமாக எடுக்கிற எண்களையும் நேர்முகத் தேர்வில் பெறுகிற எண்களையும் சேர்த்துக் கணக்கிடும் முயற்சியைச் செய்யலாம். மெடிகல் காலேஜுக்குக்கூட அப்படிப்பட்ட ஏற்பாடு செய்யலாமா என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். அது ஆராயப்பட்டு வருகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, if such a system were adopted, may I know whether the Government would consider the desirability of having a majority of external examiners so that malpractices may not creep into the entrance examinations ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடுகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷனில் மட்டும் பெறுகிற எண்களை வைத்துச் சேர்க்க வேண்டுமென்றால், அதிலும் கூட குறை கூறும் நிலைமை வரும். வேறு பல இடங்களில் அப்படிப்பட்ட அனுபவங்களை நாம் பெற்றிருக்கிறோம். பள்ளி இறுதி வகுப்பில் பெறும் மார்க்குகள் மட்டும் அல்லாமல் என்ட்ரன்ஸ் எக்ஸாமினேஷனில் பெறும் மார்க்குகளையும் சேர்த்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தை உள்ளத்தில் கொண்டு, அதைப்பற்றி ஆராயும்போது, ஆவன செய்யலாம்.



**திரு. எம். ராஜா அய்யர் :** இந்தக் குழுக்களுக்கு அதிகாரிகளை நியமித்திருப்பது நல்லது. அதிகாரிகள் சட்டதிட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கையில் இருப்பது 85 மார்க்குகள். 300 மார்க்கோடு கூட்டினால், 385 ஆகப் போடமுடியும். 395, 400 மார்க்குகள் எடுத்துள்ளவர்களுக்கு ஒரு மார்க்கும் போடாமலே அதிகமாக இருக்கும். அவர்களை விட்டுவிட்டால், ஏன் விட்டார்கள் என்று கேட்கிறார்கள். அப்படி அவர்கள் அறிக்கை அனுப்புகிறார்களா ? இப்போது மிகவும் அதிகமாக மார்க்குகள் வாங்கினாலும், விட்டுவிடப்படுகிறார்கள். அந்தந்த மாவட்ட அதிகாரிகள் இதுபற்றிய அறிக்கையை அனுப்புகிறார்களா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** இவற்றையெல்லாம் பார்ப்பதற்காகத் தான் "ஸ்க்ரூட்டினி கமிட்டி" ஒன்று அமைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போன்ற குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்காக இந்த "ஸ்க்ரூட்டினி கமிட்டி" போடப்பட்டிருக்கிறது. அவர்கள் பார்த்து அதைத் தணிக்கை செய்கிறார்கள். அவர்களுக்கு மாவட்ட அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பிக்கிறார்கள்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தனியார் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு நன்கொடை என்று பணம் வாங்கிக்கொண்டு சேர்க்கிறார்கள் என்று குறை சொல்லப்படுகிறது. சென்ற ஆண்டு அப்படி நன்கொடை வாங்கி மாணவர்களைச் சேர்த்த எத்தனை பள்ளிகள் மீது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது ? எடுக்கவில்லை என்றால், என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** அதற்குப் பெயரே நன்கொடை என்று அமைந்துவிடுமானால், எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. நன்கொடை என்றாலே அவர்களாக விரும்பிக்கொடுப்பது என்று ஆகிறது. கட்டாயப்படுத்தவில்லை என்பார்கள். பணத்தை லஞ்சம் என்று வாங்கினால், வற்புறுத்திப் பெற்றால், அவர்களைக் கேட்க முடியும். அந்தக் குறைபாடுகளைப் போக்குவதற்காகத்தான் ஒரு சீரான அமைப்பின் கீழ், அரசினர் பள்ளி, தனியார் பள்ளி, தொழில் துறைப் பள்ளி யாவற்றிற்கும் இருப்பதைப் போல வைக்க வேண்டுமென்று முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன்பேரில்தான் ரிட் போட்டிருக்கிறார்கள். அதன் முடிவு நாம் எடுத்த முயற்சி சரி என்று ஆகிவிட்டால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, இப்போது ஆசிரியர் பயிற்சிக்கு வருகிற மாணவர்களின் குறைந்த பட்ச வயது இவ்வளவுதான் இருக்க வேண்டுமென்ற நியதி ஏதேனும் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர், நெடுஞ்செழியன் :** அப்படிப்பட்ட குறைந்த பட்ச வயது இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் சொல்ல முடியும்.

*Teachers*

*235 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) the number of teachers allotted to each of the District Educational Officer's Circle in the State for appointment of additional teachers as per requirement in 1969–70 ; and

(*b*) the estimated expenditure thereof ?

### ஆசிரியர்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1969–70-ஆம் ஆண்டின் தேவைக்கென அதிகப்படியான ஆசிரியர்களை நியமித்துக்கொள்வதற்காக மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டக் கல்வியதிகாரியின் வட்டத்துக்கும் அனுமதிக்கப்பட்ட ஆசிரியர் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) இதற்காகும் செலவின் மதிப்பீடு என்ன ?

**மாண்புமிகு திரு இரா நெடுஞ்செழியன் :** (அ) ஆண்டு (இ) சட்டமன்ற மேலவை முன் விவர [a]அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கல்வித் துறையில் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டு வருகிற இந்த நிலையில் கூட ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதாசாரம் இன்னும் குறைந்த பாடில்லை. இதன் காரணமாகக் கல்வியின் தரம் குறைந்து கொண்டே வருகிறது என்ற பொதுவான குற்றச் சாட்டும், அதிருப்தியும் இருந்துவருகிறது. இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறதென்பதை நாமும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆகவே, இந்த ஆண்டிலாவது அந்தக் குறையை நீக்கும் முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஆசிரியர் மாணவர்களின் விகிதாசாரம் நாம் எதிர்பார்க்கிற அளவில் இல்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் நான் முதலில் சொன்னபடி, நிதிப் பற்றுக்குறை காரணமாக, இந்தத் துறையில் அதிகம் செலவழிக்க இயலாத நிலை இருக்கிற காரணத்தால், ஆண்டுதோறும் கிடைக்கிற ஆசிரியர்களை வைத்துக்கொண்டு, சேர்க்கப்படும் மாணவர்களுக்குப் பயிற்சி தரும் நிலைமை இருந்து வருகிறது. இந்த ஆண்டுகூட எதிர்பார்த்த அளவுக்கு ஆசிரியர்களை நியமிக்க முடியவில்லை. அதிகமான ஆசிரியர்களுக்காக அனுமதி கோரியபோது, நிதித் துறையைச் சார்ந்தவர்கள் நிதிப் பற்றுக்குறை காரணமாக அதற்கு மறுப்பு கொடுத்திருக்கிறார்கள். எனவே ஆண்டுக்கு இவ்வளவு ஆசிரியர்களைத் தான் வேலைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறபோது, இந்தச் சிரமம் ஏற்படுகிறது. விகிதாசாரத்தைக் குறைக்க வேண்டுமென்றால், ஆசிரியர்களின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு, பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையையும் குறைக்க வேண்டியிருக்கும். அல்லது புதிய பள்ளிகள் எதையும் ஏற்படுத்தாமல் இருக்க வேண்டும். ஆனால் எப்படியும் அதிகமான அளவுக்கு மாணவர்களுக்குப் படிப்பு வசதி செய்து தர வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், ஏழை எளிய மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஓரளவுக்கு மாணவர் ஆசிரியர் விகிதாச்சாரம் அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை என்று செயல்பட வேண்டியிருக்கிறது. நிதி வசதி மேன்மேலும் பெருகும்போது தான் இந்தக் குறைபாடு நீங்கும். ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், சென்ற ஆண்டு 7,000க்கும் கூடுதலாக ஆசிரியர்கள் தேவை என்று கேட்டபோது, 5,000க்கும் சற்று அதிகமானவர்களைத்தான் சேர்த்துக்கொள்ளும் சூழ்நிலை நிதிநிலை காரணமாக ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் இன்னும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இப்போது போட்டிருக்கிற கணக்குப்படி பார்த்தால், 1972–73-ல் தான் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற சூழ்நிலை உள்ளது. எனவே, இனி புதிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை ஏற்படுத்தாமல் இருப்பதோடு கூட, இருக்கிற ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும் ஹையர் கிரேட் பயிற்சியை எடுத்துவிட்டு, "செகண்டரி கிரேடு" பயிற்சியை மட்டும் வைத்துக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. அந்த அளவுக்கு ஆசிரியர்களை

a Printed as Appendix on pages 698–700.



உருவாக்கினாலும், அவர்களையெல்லாம் 1972–73க்குள் வேலை வாய்ப்புகளில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நிலை இருக்கிறது. நிதி வசதி பெருகப் பெருக ஆசிரியர் மாணவர் விகிதாசாரத்தைக் குறைத்துக்கொள்ள முடியும். ஆனால் அது தற்போது முடியாத சூழ்நிலை இருக்கிறது.

**திரு. கே. அறிவழகன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்ட ஆசிரியர்களின் பதவி எண்ணிக்கையைக் குறிப்பிடும் வகையில் தென் சென்னைக்கு இடை நிலைத் தரத்தில் 12 ஆசிரியர்கள் என்றும், உயர்த்தொடக்கத் தரத்தில் 64 ஆசிரியர்கள் என்றும் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தென் சென்னையில், "கேசரி உயர்நிலைப் பள்ளி" ஒன்று இருக்கிறது. அங்கே படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 80-லிருந்து 75 ஆகக் குறைந்ததனால் 5 ஆசிரியர்கள் "டி.ஈ.ஓ."வின் ஆணையின்படி வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆசிரியர்களைப் புதிதாக நியமிக்கிற நல்ல கொள்கை தமிழக அரசுக்கு இருக்கிற போது, இவ்வாறு நிரந்தரமாக இருக்கிற ஆசிரியர்களையும் நீக்குகிற போக்கு தனியார் பள்ளிகளில் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அதைத் தடுப்பதற்கான உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போன்ற நிலைமை தனியார் பள்ளிகளில் இருந்து அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அது ஆராயப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வரும்.

### *Secondary School-Leaving Certificate*

*236 *Q.*—THIRU M. AIYASWAMY : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether any circular has been sent to all heads of schools on 21st November 1968 by the Secretary, Secondary Education Committee stating that the name of the community need not be mentioned in the student's S.S.L.C. Book ;

(*b*) whether, as a result of the circular, the community of the student is not mentioned in the S.S.L.C. Certificates and instead of that the community of the student is mentioned generally as Backward Class, Most Backward Class, Scheduled Castes, etc. ;

(*c*) whether the Government are aware of the fact that the Revenue Department officials refuse to furnish Community Certificates to applicants for scholarship when they approach the officials for the said certificates as the community of the student is not mentioned in the S.S.L.C. Books ; and

(*d*) whether the Government will take steps to help the students out of this paradoxical situation ?

### பள்ளி இறுதித் தேர்வுச் சான்றிதழ்.

**திரு. எம். அய்யாசாமி :** மாண்புமிகு கல்வி–சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) பள்ளி இறுதித் தேர்வுச் சான்றிதழ் புத்தகத்தில் மாணவனுடைய சாதிப் பெயர் குறிப்பிடத் தேவை இல்லை என்று 21–11–1968-ல் செகண்டரி கல்விக் குழுச் செயலாளரால் பள்ளித் தலைவர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறதா ?

(இ) அந்த சுற்றறிக்கையின் பயனாக பள்ளி இறுதித் தேர்வுச் சான்றிதழ் புத்தகங்களில் மாணவனுடைய சாதிப் பெயரைக் குறிப்பிடாமல் பின் தங்கிய வகுப்பு, மிகப் பின் தங்கிய வகுப்பு, ஷெட்யூல் வகுப்பு என்று பொதுப்படையாகக் குறிப்பிடப் பட்டு வருகிறதா ?

(உ) உபகாரச் சம்பளம் கோரி விண்ணப்பம் செய்யும் மாணவன் ரெவின்யூ இலாகா அதிகாரிகளிடம் சமூகச் சான்றிதழ் வாங்கச் செல்லும் போது பள்ளி இறுதித் தேர்வுச் சான்றிதழ் புத்தகத்தில் சாதிப் பெயர் குறிப்பிடப்படாததால் சமூகச் சான்றிதழ் வழங்க மறுக்கிறார்கள். என்ற விபரம் அரசுக்குத் தெரியுமா?

(எ) அந்த முரண்பட்ட நிலையிலிருந்து மாணவர்களுக்கு வசதியளிக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன். :** (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) (ஊ) (எ) : இதன் காரணமாக ஏற்படும் இடர்ப்பாடு எதைக் குறித்தும் அரசுக்குத் தெரியாது. குறிப்பிட்ட நேர்வு ஏதேனும் அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் எஸ்.எஸ்.எல்.ஸி. சர்டிபிகேட் புத்தகத்தில் மாணவர்களின் "வகுப்பு பெயர்களும்" குறிப்பிடப்பட்டு வந்தன. ஆனால் இந்த உத்திரவு போட்ட நாளிலிருந்து "பேக்வர்டு கம்யூனிடி அல்லது மோஸ்ட் பேக்வர்டு கம்யூனிடி," என்று பொதுப்படையாகப் போட்டுவிடுகிறார்கள். மாணவர்களின் படிப்பிற்காக "ஸ்காலர்ஷிப் ;" கோரி விண்ணப்பம் போடும்போதும், மற்ற சமயங்களிலும், ரெவின்யூ இலாகா அதிகாரிகளிடம் போய், மாணவன் சார்ந்திருக்கும் சமூகத்தைப் பற்றிய சான்றிதழ் கேட்டால், அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட் புத்தகத்தில் என்ன போட்டிருக்கிறதோ அதைத் தான் போட்டுத் தருவது வழக்கம். "பர்டிகுலராக" இந்தக் கம்யூனிடியைச் சார்ந்தவர் என்று சர்டிபிகேட் புத்தகத்தில் குறிப்பிடாததால் அதிகாரிகள் போட்டுத் தர மறுக்கிறார்கள். இதனால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே "ஸ்காலர்ஷிப்" கோரும் போது, எஸ். எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டுகளில் இருப்பதைப் போலவே "பேக்வேர்டு கம்யூனிடி அல்லது மோஸ்ட் பேக்வர்டு கம்யூனிடி" என்றிருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும், அல்லது கம்யூனிடி சர்டிபிகேட்டே கேட்காத நிலையாவது உருவாக வேண்டும். இதை அரசு செய்ய முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு: இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலில் சொன்னபடி, அது பற்றிய விண்ணப்பம் எதுவும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இத்தகைய உத்தரவின் காரணமாக யாருக்காவது கெடுதல் ஏற்பட்டிருந்தால், அரசு அதை ஆலோசித்து, இரண்டிலொன்று செய்யும். ஏற்கெனவே ஜாதியின் பெயர் குறிப்பிடப்பட்டு வந்தது. அதைக் குறிப்பிட வேண்டாம், அதற்குப் பதில் "பேக்வர்டு, மோஸ்ட் பேக்வர்டு, அல்லது ஷெட்யூல்ட் கேஸ்ட், ஷெட்யூல்ட்டு டிரைப்ஸ், கன்வர்டட் கிரிஸ்டியானிடி , என்று மட்டும் குறிப்பிட்டால் போதும்" என்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அங்கே ஜாதிப் பெயர் தேவைப்படுகிறது என்ற நிலைமை ஏற்பட்டால், ஒன்று அங்கே ஜாதிப்பெயரைக் கேட்கக் கூடாது என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் அல்லது ஜாதிப் பெயரைக் குறிப்பிடுவதற்காவது ஏற்பாடு செய்ய வேண்டும். எனவே இப்படிப்பட்ட முறையில் தனிப்பட்ட இடர்ப்பாடுகள் இருந்து, அவைகள் சுட்டிக்காட்டப்பட்டால், இரண்டிலொரு நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, ஜாதி அடிப்படையை மட்டுமின்றி மாணவர்களுடைய ஏழ்மை நிலையையும் மனதில் கொண்டு அரசு, உபகாரச் சம்பளம் முதலியவைகளைவழங்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜி. ஜெகஜீவன்ராம் அவர்கள் அண்மையில் கூறியிருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா ? அப்படிப் பொருளாதார நிலைமையை மனதில் கொண்டு மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கும் எண்ணம் இந்த அரசுக்கு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஜாதி மட்டுமின்றி அவர்களுடைய வருமானத்தின் அடிப்படையிலும் வசதி செய்யும் சூழ்நிலைதான் விரும்பப்படுகிறது. சாதாரணமாக பிற்படுத்தப்பட்டவர்கள்.. தாழ்த்தப்பட்டவர்கள் என்று பட்டியலில் இருப்பவர்கள் பல நூறு ஆண்டுக்காலமாக தாழ்த்தப்பட்ட நிலைமையில் இருந்த காரணத்தால், இன்னும் ஒரு சில ஆண்டுகளுக்காவது அவர்களுக்கு அந்தச் சலுகைகள் இருக்கத்தான் வேண்டும் என்ற நிலையிருக்கிறது. ஆயினும் எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்று தான் இலவசக் கல்வி முறையை அமுல்படுத்தி வருகிறோம். இப்படி "ஸ்காலர்ஷிப்" வழங்கும் முறையில் ஏழ்மையும் ஓரளவுக்குக் கவனிக்கப்படுகிறது. ஜாதியைக் கணக்கெடுத்துக் கொள்ளாமல், ஏழ்மையை மட்டுமே கணக்கில் கொள்ள வேண்டும் என்ற கருத்தும் இருந்து வருகிறது. இருப்பினும் இப்போது இருக்கிற சூழ்நிலையில் இதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. பல ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த நிலைமை சீர்பட்ட பிறகு, அப்படிப்பட்ட கருத்தின் அடிப்படையில் செயல்படும் தன்மை வரும்.

**திரு. எம். அய்யாசாமி :** தலைவர் அவர்களே, பிற்பட்டவர் பட்டியலில் 156 வகுப்புகளின் பெயர்கள் இருக்கின்றன. அதேபோல் ஷெட்யூல்டு வகுப்பிலும் பல இருக்கின்றன. சர்டிபிகேட் புத்தகத்தில் இந்தக் கம்யூனிடியைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடும்போது, அந்தப்பட்டியலில் உள்ள வரிசை எண்ணை—அதாவது அந்த குறிப்பிட்ட வகுப்பிற்கான எண்ணைக்—குறிப்பிட வழியில்லை. இதைச் சொன்னால், தாசில்தார் ஜாதிக்கான பத்திரம் இருக்கிறதா, ரெக்கார்டு இருக்கிறதா, என்றுகேட்டு, அதைக் கொண்டுவரச் சொல்லுகிறார். இதனால் சிரமம் ஏற்படுகிறது. எனவே இப்படி மாணவர்கள் ஸ்காலர்ஷிப்புக்கு விண்ணப்பிக்கும்போது பொதுவாக சர்டிபிகேட்டில் உள்ள கம்யூனிடியை அங்கீகாரம் செய்யும் நிலையைக் கொண்டு வந்தால்தான், இந்தச் சிரமங்கள் எல்லாம் தீரும். இதை அரசாங்கம் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றித்தான் நான் முதலில் குறிப்பிட்டேன். இது ஆராயப்பட வேண்டியதொன்றாகும். இதைத் திருத்துவதா அல்லது அதைத் திருத்துவதா என்று பார்க்க வேண்டும். இடர்ப்பாடு இருந்தால், இரண்டில் ஒன்றைத் திருத்தியாக வேண்டும். அதுபற்றி இந்த அரசு ஆராயும்.

MR. CHAIRMAN : Question No. 237 is postponed.

### *Smuggling of foodgrains*

*238 *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 151 on 2nd March 1968 the present stage of the proposal to amend the rules, so as to provide for the confiscation of permits of lorries engaged in smuggling of food-grains ?

### உணவு தானியக் கடத்தல்

**திரு. வி. தங்கபாண்டியன் : :** மாண்புமிகு உணவு-வணிக வரி அமைச்சர் அவர்கள் 2–3–1968ஆம் தேதி அன்று 151-ஆம் எண் வினாவிற்கு அளித்த விடையையொட்டி கீழ்க்கண்ட ,வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

உணவு தானிய கடத்தலில் ஈடுபடுத்தப்படும் சரக்குப் பேருந்துகளின் அனுமதிச் சீட்டைப் பறிமுதல் செய்யும் வகையில் விதிகளை திருத்துவதைக் குறித்த பரிசீலனை எந்நிலையில் உள்ளது ?

[28th March 1970

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** உணவு தானியக் கடத்தலில் ஈடுபடுத்தப்படும் சரக்குப் பேருந்துகளின் அனுமதிச் சீட்டைப் பறிமுதல் செய்யும் வகையில் விதிகளைத் திருத்துவதற்கான வழிகளை இந்த அரசு பரிசீலனை செய்தது. 1940-வது ஆண்டு சென்னை மோட்டார் வாகனங்களின் விதிகளின் கீழ் 160 (ஏ) விதியையும் 1939-வது ஆண்டு மோட்டார் வாகனங்களின் சட்டத்தின் 60 (i) (ஏ) பிரிவின் நிபந்தனைகளையும் மீறின சரக்குப் பேருந்துகளின் அனுமதிச் சீட்டை மண்டலப் போக்கு வரத்து அதிகாரிகள் ரத்து செய்யவோ, தற்காலிகமாக விலக்கி வைக்கவோ செய்யலாம்.

**திரு. வி. தங்கபாண்டியன் :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட விதிமுறைகள் இருந்தாலும்கூட, மேற்கு ராமனுதபுரத்திலிருந்து மிக அதிகமாகக் கள்ளக்கடத்தல் கேரள மாநிலத்திற்குச் செல்கிறது. ஏற்கனவே வறட்சியாக இருக்கின்ற மேற்கு ராமனுதபுரத்தில் இக் கள்ளக் கடத்தலால் விலைவாசிகள் அதிகமாக ஏறிக்கொண்டிருக்கின்றன. ஆகையால் கள்ளக் கடத்தலில் ஈடுபடுகிற லாரிகளின் லைசென்சை உடனடியாகப் பறிப்பதற்குத் தகுந்த ஏற்பாடு செய்தால், ஓரளவு கட்டுப்ப்டுத்தலாம். இதற்கு அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இருக்கிற சட்டத்தின் மூலமே அதைச் செயயலாம் என்ற காரணத்தால், அதைச் செய்ய யோசிக்கவில்லை.

**திரு. டி. சந்தோஷம் :** நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு அங்கே அந்த லாரி தவருக உபயோகிக்கப்பட்டது என்று நிரூபிக்கப் பட்டால், அவர்களுக்கு தண்டனை அளிக்கும் போது, சட்டப்படி நீதி மன்றமே அந்த லாரிகளைக் கூட பறிமுதல் செய்யலாம், பர்மிட்டோடு கூட. அப்படியிருக்க, அதை விடுத்து அந்த நீதிமன்றத்தின் கருத்துக்கு மாருக, பர்மிட்டை ரத்து செயவது தவறு என்பதை அரசாங்கம் கவனத்தில் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் ;** தலைவர் அவர்களே, கள்ளக் கடத்தலில் ஈடுபடுகிற லாரிகள் மீது வழக்கு போட்டு நீதிமன்றத்திற்குப் போனால், அந்த வழக்கு முடிவதற்குள் லாரி ஓடித் தேய்ந்து போய்விடும். உடனடியாக கள்ளக்கடத்தலைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் சட்டத்தின் கீழ்கொடுக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி வருகிறோம். நீதி மன்றத்திற்குப் போனால், அது முடியும் வரையில் ஒன்றும் செய்ய முடியாது. எனவே இந்தச் சட்டத்தின்படி ரத்து செய்கிறோம்.

**திரு. டி. சந்தோஷம் :** நீதி மன்றத்தில் வழக்குகள் முடிவதற்குள் லாரி தேய்ந்து போகும் என்றார்கள். அந்த அளவுக்கு நீடிக்கும் என்று கருத முடியாது. சட்ட அமைச்சர் அவர்களே அப்படிக் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன். இரண்டு மாதங்களுக்குள் வழக்குகளை முடிக்க வேண்டுமென்று விதியே இருக்கிறது. அப்படியிருக்கும் போது, நீதி மன்றத்திற்குச் செல்வதில் நியாயம் இருக்கிறது என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நீதிமன்றத்திற்குச் சென்றால் அவ்வளவு காலம் ஆகாது என்று அங்கத்தினர் சொல்வதை ஏற்றுக் கொண்டாலும் கூட, நீதி மன்றத்திற்கு மேல் உயர் நீதி மன்றம் என்று, ஒன்றிற்கு மேல் ஒன்று படிப்படியாக அது போய்க் கொண்டேயிருக்கும். நம் நோக்கம் கள்ளக் கடத்தலை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்பது. அதனால் துரிதமான நடவடிக்கை எடுத்து அதைத் தடுக்க இந்த சட்டத்தைப் பயன் படுத்துகிறோமே தவிர, வேறு அல்ல.



28th March 1970]

*Water for irrigation to Ramanathapuram district.*

*239 *Q*.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government of Tamil Nadu have examined the possibilities of bringing water from the rivers of Kerala State to Ramanathapuram district for irrigation purposes ; and

(*b*) if so, the details thereof ?

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பாசனத்திற்கு தண்ணீர்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு கேரளமாநில ஆறுகளிலி ருந்து பாசனத்திற்கு தண்ணீர் கொண்டுவரும் சாத்தியக்கூறுகள் பற்றி தமிழக அரசு ஆராய்ந்ததா ?

(இ) ஆமெனில், விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) கேரள மாநில ஆறுகளிலிருந்து இராமநாதபுரம் மாவட்டத் திற்கு பாசனத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் சாத்தியக் கூறுகள் இன்னும் ஆராயப்பட்டு வருவதால் அதனைப் பற்றிய விபரமான அறிக்கை தற்போது கூற இயலாது.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, இராமநாத புரம், திருநெல்வேலி, மதுரை போன்ற மாவட்டங்களுக்கு கேர மலைப் பகுதிகளிலிருந்து பாசனத்திற்குத் திட்டங்கள் வகுப்பதற்கான ஆய்வைப் பல ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய எஞ்சினியர்கள் செய்து பல ஆதாரங்களை வைத்திருப்பதாக முன்னல் சொல்லப்பட்டது. அதன் அடிப்படையில் இந்த அரசு மேலும் ஆய்வு செய்து பாசனத் திற்கான வசதிகளை ஏற்படுத்தித் தர துரிதமாக நடவடிக்கை மேற் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, பரம்பிக் குளம்—ஆளியாறு திட்டம் சம்பந்தமாக தற்போது பேச்சுவார்த்தை முடிந்திருக்கிறது. அது வெற்றிகரமாக முடிந்த பிறகு, இந்தத் திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன். :** "நீரார்" ஆற்றில் தமிழக அரசு அணை கட்டுவதை கேரள அரசு ஆட்சேபித்திருக்கிறதா ? அதைப்பற்றி நம் அரசி னுடைய நிலை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாசா :** அது பற்றி நம்முடைய அரசு கேரள அரசோடு கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக் கிறது. எனவே இந்த நேரத்தில் மேற்கொண்டு பதில் சொல்வது சரியல்ல என்று நான் கருதுகிற காரணத்தால், பதில் சொல்ல இயல வில்லை.

**திரு. டி. சந்தோஷம் :** இராஜபாளையம் பக்கத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து மேற்குப் பக்கமாகப் போகும் சில நதிகளைத் திருப்பி நம் பக்கம் கொண்டு வந்து நம் மாநிலத்திற்கு உபயோகப் படுத்தும் சாத்தியம் இருக்கிறது என்பதை வெள்ளைக்கார ஆட்சியிலேயே பரிசீலித்திருக்கிறார்கள். அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் முத்தையா செட்டியார் அவர்கள் கூட பல முறை இங்கே குறிப்பிட்டிருக் கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட முயற்சியைப் பற்றி முடிவு எடுக்கப்பட்டதா

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாசா :** அது பற்றி ஆராயப் பட்டு வருகிறது. கேரள மாநிலத்தோடு தொடர்புகொண்டு செய்ய வேண்டியிருப்பதால், தற்போது கேரள அரசோடு தொடர்பு கொண்டு வருகிறோம்.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் முடிவு பெற்றதற்குப் பின்னால் இவைகளைக் கவனிக்க இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பம்பையாறு, கீரியாறு, கல்லாறு போன்ற ஆறுகளால் இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பாசன வசதி ஏற்படும் என்று சொல்லப்பட்டது. இப்போது பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டத்தோடு தொடர்பில்லாத வேறு ஆறுகளைப் பரிசீலிப்பதென்பது பிறகு தான் நடக்கும் என்று காத்திருக்க வேண்டுமா அல்லது வெகு விரைவிலேயே இவைகளைப் பற்றியும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை முடித்திருக்கிறோம். அது வெற்றிகரமாக முடியும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தத் திட்டங்கள் பற்றி கேரள மாநிலத்தோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கிறது.

### *Anna Samadhi.*

*240 *Q.*—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the amount spent on the Anna Samadhi in the Marina so far ?

### அண்ணா சமாதி.

**திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

மெரீனாவிலுள்ள அண்ணா சமாதிக்காக இது வரை செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாசா :** 1970 சனவரித் திங்கள் முடிய ரூ. 1,15,354 செலவு செய்யப்பட்டுள்ளது.

Thiru V. ISVARMURTI : Mr. Chairman, Sir, may I know whether it is a fact that the Samadhi was constructed without the permission of the Corporation of Madras and under what head has the money been allotted ? Is it also a fact that the money allotted for the Cooum Improvement Scheme had been diverted to the Samadhi ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாசா :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை. 1970-ம் ஆண்டு வரை அண்ணா சமாதிக்காக எவ்வளவு செலவழிக்கபட்டிருக்கிறது என்று தான் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மற்றக் கேள்விகளைத் தனியாகக் கேட்டால், விவரம் சேகரித்துச் சொல்ல முடியும்.

**திரு. பி. திருஞானசம்பந்தம் :** தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா சமாதிக்குப் பக்கத்தில் நூல் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாசா :** அது பற்றிய குறிப்பு எதுவும் இங்கே தரப்படவில்லை.

Mr. CHAIRMAN : Questions are over.





[Note.—An asterisk (*) at the commencement of a speech indicate revision by the Member.]

## II.—STATEMENT *RE.* CORRECTION OF ANSWER TO SUPPLEMENTARY QUESTION UNDER STARRED QUESTION No. 218.

The Hon. Thiru V. R. NEDUNCHEZHIYAN : Mr. Chairman, Sir, while answering a supplementary question to Legislative Council Question No. 218, the Hon. the Chief Minister stated that the number of Legislators who had been given liquor permits was six whereas it is only five, that is, three Members of the Legislative Assembly and two Members of the Legislative Council. Dr. M. A. Muthiah Chettiar, M.L.C., is not a liquor permit holder. 4 30 p.m.

Mr. CHAIRMAN : It is unfortunate that this error took place. I wish the press will kindly give as much publicity to this as was given to the other thing.

## III. NON-OFFICIAL BUSINESS.

### (i) *Bills.*

#### (1) The Code of Criminal Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969.

Thiru D. SANTOSHAM : Mr. Chairman, Sir, I beg leave to introduce the Code of Criminal Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969.

Thiru G. SWAMINATHAN : I second it, Sir.

Mr. CHAIRMAN : The question is—

' That leave be granted for the introduction of the Code of Criminal Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969 '.

The motion was put and carried and leave was granted.

Thiru D. SANTOSHAM : Mr. Chairman, Sir, I introduce the Bill.

Mr. CHAIRMAN : The Bill is introduced.

#### (2) The Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969.

Thiru G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I beg leave to introduce the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969.

Thiru D. SANTOSHAM : I second it, Sir.

Mr. CHAIRMAN : The question is—

" That leave be granted for the introduction of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969 ".

The motion was put and carried and leave was granted.

Thiru G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I introduce the Bill.

Mr. CHAIRMAN : The Bill is introduced.

(3) The Madras University (Amendment) Bill, 1969.

Thiru V. ISVARMURTI : Mr. Chairman, Sir, I move—

"That the Madras University (Amendment) Bill , 1969 (L. C. Bill No. 1 of 1969) be taken into consideration."

Thiru G. SWAMINATHAN : Sir, I second it.

Mr. CHAIRMAN : Motion moved—

"That the Madras University (Amendment) Bill, 1969, (L. C. Bill No. 1 of 1969) be taken into consideration."

* Thiru V. ISVARMURTI : Sir, under the existing Act, the Vice-Chancellor of the Madras University can hold office for three terms, that is, totally for nine years, and there is also no age restriction. A person can hold office without any reference to his age. My amendment tries to limit the term of office of the Vice-Chancellor to two terms, that is, in total for 6 years, and it also restricts the age of the Vice-Chancellor to 65 years.

Before I refer to the reasons for moving this amendment, I want to give a brief account of the state of affairs in our premier University. We for a long time felt proud of the traditions of our Madras University. There was a time when the Madras University represented the highest traditions and it covered the entire Madras Presidency. But now things are not as good as we think them to be from outside. I can indeed say that the Madras University was running a parallel Government. If we can say that we have the Government of the masses in *Fort St. George* the educated classes had the Government at the Madras University for a long time. This was the position. Just I would like to cite some instances that prevail in the Madras University. I want to tell the House that in the Madras University to-day, there are at least 6 Professors—full-time Professors—who have completed their 65th year. They are being given extension. In fact, the University has become the University of the old people. These people ought to have retired long ago and given way to young people. Instead of that, they are still occupying the places without giving room for youngsters. I am very sorry to make this point. Unless we give proper representation and proper recognition to young persons' talent......

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த மசோதா துணை வேந்தர் அவர்களுடைய பருவ காலம் பற்றியும் அவருடைய வயதைப் பற்றியும் சம்பந்தப்பட்ட திருத்த மசோதா. மேலும் பல் கலைக்கழகம் என்பது ஒரு " ஆட்டானமஸ் பாடி". எனவே அதைப்பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் விவாதிக்கத் தேவையில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

* Thiru V. ISVARMURTI : In fact, I am just coming to the
4 40 question of giving more autonomy to the University. The very purpose of the Bill is to ensure proper and greater autonomy for the University. I think the Legislature has power to seek information from the University and also the Legislature has power to debate the state of affairs of the University. So, just for information of the Members, I want to bring to the attention of the House some affairs that have taken place in the University. Recently some persons were appointed to certain posts and they have not turned up immediately for these posts, because there is not enough attraction for these posts to utilise the talents of these people,

a Published on pages 199-200 of Part IV—Section 3 of the Extraordinary issue of Fort St. George Gazette, dated the 25th August 1969.





which the University should normally aim at. For instance, I am told that whenever a post of Professor fell vacant, normally the Reader in that Department should be put in charge. But a practice has developed in the University to put it in charge of the Professor belonging to other Departments. It has put the Professors in an awkward position. I am sorry to say, Sir, that no incentive has been given to the young and junior persons. We talk so much about fall in standards of education. The fall in standard of education is only due to the bad state of affairs in the University. I would like to bring to the notice of the House another instance. At present, incentive is not given to youngsters in the selection of Professors. The pay of a University Lecturer is less than that of an Assistant Professor in an affiliated College. When we keep this iniquitous rule with regard to pay of people in the University how can we expect talented people to join the Madras University? For instance, in the Mysore University, the Professors are given Car allowance and they were also given loans for the purchase of cars. They are provided with accommodation. They are given a number of other facilities. In Madras, the Professors are not enjoying these facilities. They must be given loans to build their own houses to live in. The Act was framed ,to suit the convenience of a particular individual. Now the time has come to establish some healthy conventions and give proper autonomy to the University. The Hon. the Minister for Education mentioned about the autonomy of the University. The amendment which I seek to bring before the House is aimed at giving proper and greater autonomy to the University. In this connection, I would like to point out that Mrs. Lakshmi Krishnamurthi, as a Member of the Joint Select Committee, made a remark with regard to the constitution of a Committee for selecting Vice-Chancellor. A Committee of three members is formed, the Chancellor nominates one member, the Senate nominates one member, and the Syndicate nominates one member. This Committee of three, selects one person from a panel of three. In fact it means the Chancellor is acting on the advice of the Government. The Government by advising the Chancellor to select a person as Vice-Chancellor can straight a way appoint the Vice-Chancellor.This procedure does not ensure autonomy for the University. It is just interfering with the autonomy of the University. I understand the previous Government had altered the sound tradition of autonomy of the University under the previous Act. We must take action to undo the mischief done by the 1966 amendment. I think we will be establishing a good precedent, if we take action to set right the things. My amendment tries to ensure this autonomy and this will put an end to the faulty precedents that have been built up over the past thirty years by giving protection to a particular individual. The University should have full autonomy with regard to selection of Vice-Chancellor.

The other important point is limiting the term of the Vice-Chancellor to six years. Sir, the Kothari Commission, the University Grants Commission, a Commission of the Oxford University, and every other University Commission have pointed out that the normal term for which a Vice-Chancellor could hold office is a period of three years or a maximum period of six years. But only in Madras we allowed matters to drift and that had caused havoc with higher education in our State When I say havoc, I would also point out one important thing. If you go to Adyar and see the Central Institutions that have come up there like the Indian Institute of Technology and others, you will find that all the important posts of Professors and others are occupied by non-Tamilians. I do not say this with any parochial motive. It is because

[Thiru V. Isvarmurti] [28th March 1970

we in Madras State did not develop the post-graduate education for a long time. In the development of post-graduate education I can say without fear of contradiction that we have lagged behind not by thirty years but by fifty years. I can even say that we are half a century behind the times. Let me point out just an instance. I had a talk with the Director of Ramanujam Institute of Mathematics. The Director said that the studies that they did on waves and in fluid dynamics were 25 years old and he feared they would continue the same for another 25 years unless something else happened in the meanwhile. Radical changes have taken place even in such subjects as Philosophy, Economics and Ethics with which I am familiar. Even in these subjects we are centuries behind the standards attained by International Universities. Why is this so ? It is because we keep on the same professors even after they have attained the age of sixty-five and do not allow young people to come in. Even if they are allowed to come in, their salaries and allowances are less than those drawn by the ordinary Lecturers. I have seen in other Universities young people of thirties with Ph. D. qualification and Doctor's qualifications appointed to responsible posts. We cannot imagine such things to happen here because we have put a premium on age. I think a great Economist has said that if any true discovery is to be made, it should be made before one is thirty. After thirty, you just go on explaining and just trying to develop the theory that you have discovered. Even the great scientist Einstein discoverd his new theories before he was thirty and for the rest of his life he went on altering and improving on it.

Sir, this is a serious problem. I am not talking about any political problem. And I do not also have any particular person in mind when

4-50 p.m. I refer to these things. This is a serious thing. We have not developed the talents available with us. So, when new institutions come up in the State, we do not have the men to man them. So, we have to look up to the other Universities to supply the men required, to the Mysore University, to the Andhra University and to the other Universities in the North. So, on the one hand, we have the educated unemployed and on the other, we find there is dearth of hands, trained personnel to man important positions. As I said earlier, when I was talking to the Director of Ramanujam Institute of Mathematics, he said in the Madras University campus there were no proper canteen facilities. It is ridiculous that I have to mention all these in this connection. There is no canteen worth the status of the University. There are no drinking water facilities. There are no table lights. These were also related to me when I went round the University with the leading professors there. They were reluctant to say all these to me. Why should such a state of affairs prevail in the Madras University ? It is because we relied too much on an individual. In democracy no individual is indispensable. My amendment, therefore, seeks to ensure that such mistakes are not committed again. I think the Madras University has established healthy traditions. It is very considerable. But its reputation is quite out of proportion to its actual achievements. Why is this false reputation which we are now parading ?

My feeling is that we do not properly appreciate the problems of higher education. The time has come when we must look into the matter and ensure that there is a succession of good Vice-Chancellors and new talents and all varieties of talents are afforded all facilities so that all these talented men would be available to develop higher education in our State. It is with that in view that I propose that the term of the Vice-Chancellor shoud be limited to six years. Within six



28th March 1970] [Thiru V. Isvarmurti]

years, a person with talents, real talents, can do wonders. In Oxford, for instance, I can say that the post of Vice-Chancellor is looked down upon. No Professor would be forthcoming to take up that post. The Vice-Chancellor there is looked upon as a glorified clerk of the University. On the other hand, people would like to become the head of the college because there they have larger opportunities to develop their talents and to recruit new talents. But only in our country the post of Vice-Chancellor has assumed enormous importance. In recent times it has even acquired political over-tones. Under the existing circumstances, the appointment of a Vice-Chancellor is practically an appointment made by the Chief Minister of the State. So, let us imagine what will be the future of higher education in our country. So, let us go back to the very sound principle of autonomy for the University.

About the age-limit for professors, I need not say much as to why young men should be promoted as Vice-Chancellors. When one is young and has vigour and idealism, one must occupy the position of Vice-Chancellor. The Kothari Commission with great foresight has warned that the post of Vice-Chancellor should not be looked upon as a reward given to retired people from other fields. When I point this out, it is no reflection on any individual. It has become the practice here to treat it as a reward for people who retire from other fields. If we at-least restrict the term to six years, even if a retired person is appointed as Vice-Chancellor at the age of 58, he can retire from the post of Vice-Chancellor before the attainment of his 65th year. If we do not put a limit on the term, then we will be faced with a real danger. People who retire from Government service and enter other fields may again entertain ambitions to become Vice-Chancellors and they may stand in the way of young people coming to occupy the post of Vice-Chancellors. Tamil Nadu has a lot of young people with talent. But these talented young men are not attracted by the University. So, let the term be limited to six years. Otherwise, there is the danger of another Caesar stepping into the Madras University, as its ruler. So the Government should give careful consideration to the amendments which I have given notice of. They are quite reasonable and very conservative. Though the University requires radical reforms, my amendments do not seek to reform anything in a big way. As a believer in democracy, I want the changes to be introduced gradually. As a first step, let these two amendments be accepted.

In this connection, I would like the Government to consider one or two suggestions that I wish to make. For instance, the Madras University has become an uninspiring place. It just looks like a Secretariat office. Professors come after eleven, twelve or one or two of the clock and then just stay for two or three hours and then retire back to their residences somewhere outside the City. Let us have a new campus for the University. Let the campus of the University now at Chepauk be used for conducting examinations and storing examination papers and the publication of results. Let us have preferably a campus outside the City of Madras. (Interruption) You must have a place which is worth calling as a University Campus. You must be able to feel it in the atmosphere. The campus should have the atmosphere where you could have free and leisurely thinking, which would be conducive to peaceful contemplation. That facility is lacking in our University. The prime quality of a University arises out of its location. When you enter the place, you must feel that you are not in the midst of politicians but in the midst of scholars.

[Thiru V. Isvarmurti] [28th March 1970

T atmosphere is not there in the Madras University. Previously the M s University was managed by a single individual and he never bothere about anybody else. The Professors had no voice to say anything. They should have a final say with regard to matters, however small or great they may be. They had to rely on the administrative machinery for everything. There is no inspiration or incentive for them. We are going on taking degrees and actually we are mad after degrees. I am sorry to say that there is no market for degrees. We are all fond of putting our degrees after our names. We are slavishly following this.

THIRU S. RAGHAVANANDAM : The hon. Member is also guilty of it.

THIRU V. ISVARMURTI : The Professors must be given proper accommodation and they must be given. . . . .

MR. CHAIRMAN : The hon. Member is straying far and wide.

THIRU V. ISVARMURTI : The pay of a Lecturer of the University should be higher than that of a Lecturer in an affiliated College. I think there is a provision in the Amended Act of 1966, which is in force, for the Government to ask for a report of the Senate with regard to the working of the University and its progress. I think the Government should avail themselves of this opportunity to appoint an Expert Committee—preferably of experienced persons from Universities—to deal with the state of affairs prevailing in Humanities and Engineering Departments and suggest some radical remedies in order to enable our Departments to come to the level of Universities in North India, not to speak of International Universities. This is very essential if we want to improve our higher education. The initiative is lacking on the part of our University. We do not have Scholars from other Universities. The Government should make use of the opportunity when we receive the report of the Senate. The Government should review the Report and go into the standards of teaching both in the Post-Graduate level and Doctorate level. Our Ph.D. thesis now will be rejected by the other Universities. We take subjects with reluctance. In order to keep pace with the development of teaching in other Universities, I want the Government to go into this aspect. We are already going ahead of Post-Graduate University. There should be young men to man this University. The University and the Government should take steps in consultation with other Universities to ensure greater glory for our Premier University.

Thank you, Sir.

5-10 p.m. *THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, I want to say just a few words in defence of old age after having listened to the Hon. young graduate from a Western University. I must say, Sir, that if youth is undesirable in any field, it is most undesirable in the educational field. The older one is, the better one would prove to be as an educationist. Whatever Mr. Einstein and others might say or have said, I would like to refer to what Vinobhaji has said, which is very revolutionary. He said that in his scheme of education no one who is younger than forty should be a teacher. One should prepare himself to be a teacher up to his fortieth year and go up to the age of 70 years and if necessary even afterwards, until his hairs grow very much grey. So, I would like old age to be very much respected in our Universities



28th March 1970] [Thiru M. Raja Iyer]

and given its proper place. My hon. Friend complains of two clauses and, therefore, wants them to be amended. But he has rightly pointed out that the Act itself has built-in safety devices and that is that after a period of five years, the working of the Act is to be reviewed. If any serious defects are noticed during such a review they could certainly be rectified. In this connection, I would like to say that in any field, particularly in the educational field, whatever reform we think of has got to be done most carefully. I would not even recommend hastening slowly in this field. We must go slowly so that difficulties that are observed may be rectified and so that one difficulty, when it is being rectified, does not bring in another difficulty in its wake. A five year period has been set down for the difficulties to be reviewed, noted and rectified. I think we are now in the year 1970. We can remain patient for a few more years and then think of amending the Madras University Act and the Madurai University Act. What is more necessary is to look into the Annamalai University Act. It has remained as it was first passed. I would like that in such matters we should be extremely circumspect and careful and where University education is concerned, our Acts only serve as guide-lines, and things relating to quality of education and content of post-graduate courses, the creature comforts that are to be provided to members of the staff so that they may be enabled to put forth their best and facilities to be offered in respect of salary-scales and all that, I am afraid, come within the purview of the, Syndicate and the Senate of the University and we cannot trespass upon that field. That is the submission that I would like to make. Sir.

*திரு. கே. அறிவழகன் : மாண்பு மிக்க அவைத்தலைவரவர்களே, மாண்புமிக்க உறுப்பினர் திரு. ஈஸ்வர மூர்த்தி அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சென்னை பல்கலைக்கழகச் சட்டத் திருத்தத்தின் மீது சில கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, பல்கலைக்கழகத் துணை வேந்தருடைய பதவிக் காலம் மூன்று பருவங்களாக இருக்க வேண்டுமோ, அல்லது ஒன்று, இரண்டு பருவங்களாக இருக்கலாமா என்பது தான் பிரச்னை. மூன்று பருவங்கள் இருப்பதற்கோ அல்லது இரண்டு பருவங்கள் அவர் நீடிப்பதற்கோ பல்கலைக் கழகத்தின் சமுதாய அந்தஸ்தையும், கல்வித் தரத்தையும் உயர்த்துவதை அடிப்படையாக கொள்ள வேண்டும். ஆனால், இப்பொழுது ஒரு பல்கலைக் கழகத்திலே ஒரு துணை வேந்தர் இரண்டு, மூன்று பருவகாலம் இருந்தாலும் கூட அவர் புதிய சிந்தனையுடன் பணியாற்றுவதற்கு முடியாத சூழ்நிலை இருப்பதால் தான், அவருடைய பருவ ( Term ) காலத்தைப் பற்றிச் சந்தேகிக்கவேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது. முதலாவதாக, பல்கலைக் கழகத் துணை வேந்தர் தலைமை வகித்து நடத்துகின்ற "சிண்டிகேட்" யானாலும், "செனட்" யானாலும், "அகடெமிக் கவுன்சில்" யானாலும்—அந்தப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக யார் வந்தாலும்—அந்த அமைப்புகளிலே உறுப்பினர்களாக அங்கம் வகிப்பவர்கள் அந்தத் துணை வேந்தரை சார்ந்து நடக்கக் கூடிய இக்கட்டான சூழ்நிலை அமைந்திருக்கிறது. அதற்கு முதலாவது காரணம் "First Grade Colleges" முதல் தரக் கல்லூரிகளின் முதல்வர்கள் பெரும் பகுதியாக செனட்டிலேயும், அகடெமிக் கவுன்சிலிலேயும் இருப்பதாலேயே அவர்கள் துணை வேந்தருடைய உதவியைப் பெற்றுத்தான் தங்களுடைய கல்லூரிகளை நடத்த முடியும் என்ற நம்பிக்கை பரவலாக இருப்பது. பல் வேறு விதமான காரியங்களை தங்கள் கல்லூரிகளிலே ஆற்றுவதற்குத் துணை வேந்தருடைய உதவி தேவைப்படும் என்று அவர்கள் எண்ணுவதால், அவர்கள் தங்களுடைய தரமான கருத்துக்களை எடுத்துச் சொல்ல இயலவில்லை.

அடுத்த கருத்து என்னவென்றால், துணை வேந்தர் இளைஞராக இருக்க வேண்டுமோ, அல்லது வயது முதிர்ந்த 55, 60 வயதாக இருப்பதால் பலன் ஏற்படுமோ என்பது. அதிலேயும் கூட வயது முதிர்ந்தவர்களிலும்

சிந்தனை மிகுந்தவர்கள் இருப்பதைக் காண்கிறோம். வயது குறைந்தவர்களிலும் நாட்டினுடைய முன்னேற்றத்திலே அக்கரை இல்லாதவர்கள் தென்படுகிறார்கள். சில மாணவர்களைப் பார்க்கும்போது நமக்கு இது தெளிவாகத் தெரிகிறது. எனவே, இதிலே பல்கலைக்கழகம் என்ன கொள்கை கோட்பாடு உடையதாக அமைந்திருக்க வேண்டும் என்பதைப் பற்றி மறைந்த டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் சொன்னார்கள், "It should project into the Society" என்று. அதாவது அது சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாக, சாதாரண மக்களை முன்னுக்குக் கொண்டுவருவதாக அமைந்திருக்க வேண்டும் என்றார்கள். மற்றும், டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் டெல்லி பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பேசும்பொழுது சொன்னார்கள். "Our Universities should be educated in Regional Languages." இவைகளை சிந்தித்துப் பார்க்கும் பொழுது நம்முடைய தமிழக அரசு இந்த உலக தமிழ்நாடு நடந்த நேரத்தில் இங்கிருக்கும் மூன்று பல்கலைக் கழகங்களிலேயேும் "திருக்குறள் ஆராய்ச்சிக்காக" என்று பல இலட்சம் ரூபாய்களை வழங்கியது, அது வரையில் அந்த மூன்று பல்கலைக் கழகங்களிலேயும் இப்படிப்பட்ட ஒரு விரிவான ஆராய்ச்சி நடத்தப்படவில்லை என்பதைக் காட்டுகிறது. அதனால் என்ன பலன் ஏற்படும் என்று பல்கலைக் கழக "செனட்" உறுப்பினர்களோ, அகடெமிக் கவுன்சில் உறுப்பினர்களோ கருதியிருப்பார்கள். அதற்குச காரணம் அவர்கள் விஞ்ஞானத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் பெரும் முன்னேற்றம் கண்டிருப்பதாகப கற்பனை செய்து கொண்டதன் விளைவே ஆகும். நம்முடைய பல்கலைக்கழக ஆராய்ச்சியினால் வெளிப்படுகின்ற அறிக்கைகள் சில, வேறு பல பல்கலைக்கழகங்களினால் ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது உண்மை. ஆனால் இதற்கு அடிப்படைக், காரணம் என்ன? இதற்கு முன்னால் இருந்த சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் உலக அரங்குகளிலேயும், யுனெஸ்கோ போன்ற ஸ்தாபனத்தின் தலைவராக இருந்ததனால் பெற்றிருந்த அனுபவமும், அறிவாற்றலும், திறமையும் தான் இந்தப் பல்கலைக் கழகத்திற்கு பெருமையைத் தேடித் தந்ததே தவிர, பல்கலைக் கழகம் அமைந்த முறை சென்னை பல்கலைக் கழகமானாலும், அண்ணாமலை பல்கலைக் கழகமானாலும், மதுரை பல்கலைக் கழகமானாலும் நிச்சயமாக மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடத்திலேயும் புதிய சிந்தனையை ஏற்படுத்தவில்லை. ஆனால், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தைப் பற்றிச சிறப்பாகச் சொல்லுகிறார்கள். Prof லீகாக்ஹீகாக் என்கிற பொருளாதார பேராசிரியர் அமெரிக்காவிலிருந்து ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திற்குச் சென்று பார்த்து, அதைப்பற்றி எழுதும்பொழுது நகைச்சுவையாகக் குறிப்பிட்டார் "Professors of Oxford smoke and smoke, that is all". ஆனால் அங்கே துணை வேந்தர் பதவி என்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்றால், அந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் மரியாதையே தனி. அதற்கு ஒரு உதாரணம் பிரதமராக இருந்தபோது திரு மாக் மில்லன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக துணை வேந்தர் பதவிக்குப் போட்டியிட்டு தோற்றுவிட்டார். ஆயினும், இப்பொழுது மறுபடியும் நின்று, வெற்றி பெற்று துணை வேந்தராக இருக்கிறார். இந்தச் சூழ்நிலை நம்முடைய பல்கலைக்கழகங்களிலே வரவேண்டும். துணை வேந்தர் சிறப்பும்,
5-10 p.m. புகழும், தகுதியும் உடையவராக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையிலே வரவேண்டுமானால் நம்முடைய பல்கலைக் கழக செனட்டில் ஏறக்குறைய 50 பேர்கள் "கிராஜுவேட்டிலே" பட்டதாரிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதாவது சென்னை பல்கலைக் கழக சட்டத்தின்படி 50 உறுப்பினர்கள் "கிராஜுவேட்டிலே" பட்டதாரிகள் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த சட்டத்தின்படி மற்றும் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் "First Grade" கல்லூரியிலே மூன்று ஆண்டுகள் பணிபுரிந்தவர்களாக இருக்கவேண்டும் என்று இருக்கிறது. எம்.ஏ. பட்டத்திற்குச் சொல்லிக்கொடுக்கின்ற நம்முடைய தமிழக மாநிலக் கல்லூரியின் முதல்வர் சென்ற ஆண்டு வரை "செனட்டிலே" உறுப்பினர் அல்ல. அவர் மூன்று ஆண்டுகாலம் முதல் தரக் கல்லூரியிலே பணிபுரிந்தவராக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால்,



அவர் இந்த ஆண்டுதான் செனட்டில் உறுப்பினராகியிருக்கிறார். எனவே அந்த செனட்டிலே எல்லா முதல்தர கல்லூரிகளிலே இருப்பவர்களும் உறுப்பினர்களாக தேர்தல் இல்லாமலே அமர்ந்திருக்கிறார்கள். ஜனநாயகத்தின் அடிப்படையே பொறுப்புள்ளவர்கள் அப்படிப்பட்ட இடங்களுக்கு அனுப்பப்பட வேண்டுமானால், தேர்ந்தெடுத்து அனுப்பப்பட வேண்டும். இப்பொழுது இருக்கின்ற துணை வேந்தராக இருந்தாலும், இதற்கு முன்னால் இருந்த துணை வேந்தரும் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர் என்றாலும் கூட செனட்டும், அகடெமிக் கவுன்சிலும் அவர் சொல்வதைத் கேட்க வேண்டும் என்ற நிலையுடைய அமைப்பாக இருப்பதால் துணைவேந்தர் எண்ணம்தான் அங்கே நிறைவேறுகிறது. அதனால், புதிய எண்ணங்களைச் சொல்ல வேண்டிய வாய்ப்பில்லை. தலைவரவர்களே, நான்கூட செனட்டிலேயும், அகடெமிக் கவுன்சிலிலேயும் மூன்று ஆண்டுகள் உறுப்பினராக இருந்திருக்கிறேன். நானும் புதிய எண்ணங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால், அவற்றை நிறைவேற்றித்தரத் தக்க நிலைமை அங்கே ஏற்படவில்லை. இப்பொழுதும் அதே நிலைமை 5-20 p.m.
தான் நீடிக்கிறது. அகவே, செனட்டிலே எல்லா கல்லூரிகளிலேயிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள் அமர்ந்து அவர்கள் நேரடியாகத் தங்களுடைய துணை வேந்தரைத் தேர்ந்தெடுக்கும் முறை வந்தால்தான், சிறப்பும், பொறுப்புமுள்ள துணை வேந்தர்களை நாம் பெற முடியும். எனவே, தேர்தல் என்றால் படித்த மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களும் செனட்டுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்ற பட்டதாரி பிரதிநிதிகளும் சட்டசபையிலே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிகள் எல்லோருமாக சேர்ந்து அவர்கள் துணை வேந்தரைத் தேர்ந்தெடுக்கும் முறை அமைந்தால் ஒழிய, ஒரு துணை வேந்தருக்கு மூன்று பருவம் (டெர்ம்) கொடுத்தாலும் சரி, இரண்டு டெர்ம் கொடுத்தாலும் சரி, அவர் ஏறக்குறைய பழைய காலத்து ஔரங்கசீப் போல் தான் இருப்பார். ஔரங்கசீப் சொன்னார்." I came alone unto this World and I am going alone to the other World." அவர் தனியாகவே வருகிறார், இந்த உலகத்தை விட்டு தனியாகவே போகிறார் என்று ஔரங்கசீப் சொன்னதுமாதிரிதான் துணை வேந்தர்கள் இருப்பார்கள். மற்றும் தன்னுடைய பிள்ளைகளுக்கு சாகும் போது சொன்னார், "நான் மக்களை மறந்துவிட்டேன், நீங்களாவது அவர்களை மறக்காமல் இருங்கள்" என்று அது போன்று துணைவேந்தர் வருகிறார் போகிறார் கடைசியாக அதைப்போல் வேண்டுமானால் உபதேசம் கொடுக்க முடியும். ஒரு முறை சென்னைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் திரு. ஜெயசாம ராஜ உடையார் அவர்கள் டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்களையும், திரு. சி. சுப்பிரமணியத்தையும் வைத்துச் சொன்னார்கள். தமிழைப் பாடமொழியாக்க சிரமப் படுவதற்குக் காரணம் இருநூறு ஆண்டுகளாக இந்த நாட்டிலே இருக்கின்ற கல்வி நிறுவனங்கள் அதிலே படித்த பட்டதாரிகள் எம்.ஏ., எம்.எஸ்.ஸி. பட்டம்பெற்றவர்கள் தங்களுடைய தாய்நாட்டு மக்களுக்கு மேலை நாட்டுக் கருத்துக்களை எடுத்துக் கூற வேண்டிய கடமையை நிறைவேற்றவில்லை என்பதுதான். அவர்கள் அப்படி தமிழிலே எல்லாவற்றையும் சொல்லுவதோ, தருவதோ தங்களுடைய சமுதாயத்திற்கே தாழ்ந்தது என்ற கருத்தை மக்களிடையே பரவலாக ஏற்படுத்திவிட்டதால், இன்றைக்குத் தாய்மொழியிலே பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடுமா என்ற நிலைமை வந்து விட்டது என்று சொன்னார். அவர் மறுபடியும் குறிப்பாக ஒன்றைச் சொன்னார்; அதை நான் இந்த இடத்திலேயே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்மிடம் இருந்து மேலைநாடு பெற வேண்டிய திருக்குறளை, சங்க இலக்கியக் கருத்துக்களை நாம் உலகத்துக்குத் தரவில்லை. பெறவேண்டியதையும் பெறவில்லை நம்மிடம் "ராக்கட்" இல்லை கொடுப்பதற்கு; விண்வெளி சாதனங்கள் இல்லை. ஆனால், அவற்றையெல்லாம் செய்கின்றவர்களின் விஞ்ஞான நுட்பங்களை அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலை இன்றைக்கு மாணவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் அளித்தால் போதும் என்ற நிலைமையில் தான் நாம் இருக்கிறோம். தமிழகத்திலே இருந்துகொண்டு தமிழன் வெளி உலகத்திற்குச் செய்ய வேண்டியதை ஒரு கால்டுவெல், கிறிஸ்தவப் பாதிரியார் செய்திருக்கிறார். வீரமாமுனிவர் அகராதியே தயாரித்துக் கொடுத்திருக்கிறார். ஆனால் இந்தப் பணிகளை நம்முடைய சமுதாயத்திற்கும், தாய் மொழிக்கும் செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ய

வேண்டும் என்ற உணர்ச்சி கொண்டவர்கள் துணை வேந்தராக வருவதற்கு இந்தத் திருத்தம் பயன்படுமா என்று யோசித்துப் பார்க்கும்பொழுது, பல்கலைக் கழக அமைப்பு அத்தனையையும் மாற்றினால்தான் நன்மை வரும் என்ற நிலைமை இருக்கிறது என்று என்னுடைய கருத்தினை தெரிவித்து பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

***திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி கொண்டுவந்த திருத்த மசோதாவின் மீது என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தீர்மானத்தின் முக்கிய நோக்கம் துணைவேந்தருடைய பதவிக்காலம், பருவம் இரு முறையாக இருக்கவேண்டுமா, அல்லது 3 முறையாக இருக்கவேண்டுமா என்பது. பதவியின் பருவம் இரண்டிற்கு மேலே போகக் கூடாது என்று அவர் மசோதாவில் வலியுறுத்துகிறார் என்று நினைக்கிறேன். அடுத்து, செனெட்டிலிருந்து ஒருவர், சிண்டிகேட்டிலிருந்து ஒருவர், சான்சலரால் ஒருவர் என்று மூவர் சேர்ந்த குழு நியமிக்கப்படுகிறது. அந்த முறையில் ஒருவர் அமைச்சருடைய ஆலோசனை பேரில் சான்சலரால் நியமிக்கப்படுகிறார். அது இருக்கக் கூடாது, செனெட்டிலிருந்து 3 பேரை எடுத்து, அவர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இந்த இரண்டு விஷயங்களே மசோதாவில் சொல்லப்பட்டிருக்கின்றன. பருவத்தைப்பற்றி மட்டும் தான் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். துணைவேந்தர் பதவி இரண்டு; மூன்று பருவங்கள் இருப்பதில் பெரும் தவறு இருப்பதாகச் சொல்லவில்லை. தகுதி வாய்ந்தவர் கிடைத்தால் ஐந்து பருவம் அவரை வைத்திருந்தாலும் அதில் தவறு இல்லை. இந்தப் பாரம்பரியம் இருப்பதனால், சென்னைப் பல்கலைக்கழகம் சிறப்புப் பெற்றது என்பது என்னுடைய கருத்து. கருத்து வேறுபட்டாலும், பல ஆண்டு தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகம் பெருமையும், சிறப்பும் பெற்றதற்கு இதுதான் காரணம் என்று நான் நினைக்கிறேன். ஒரு பருவம் முடிந்த உடனே துணைவேந்தரை அனுப்பி விடலாம். அதில் தவறு இல்லை. திரும்பவும் செனெட் ஒரு ஆளை எடுத்து, சான்ஸலர் ஒரு ஆளை எடுத்து, அதன் பிறகு சிண்டிகேட் ஒரு நபரை நியமித்து அவர்கள் பரிந்துரையின் பேரில் அரசு துணைவேந்தரை நியமிக்கிறது. ஆகவே இரு பருவம் முடிந்து மறு பருவத்தில் செனேட் சொல்லுகின்ற ஆள் திரும்பிவரலாம். இரண்டாவது பருவம் கூட அதே நபர் வரலாம். அவர் திறமையானவராக இருந்தால், மூன்று பருவம் தொடர்ந்து இருக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. இரண்டு பருவத்தோடு நாம் நிறுத்திவிடலாம். ஆனால் தகுதிக்கு ஏற்ப, சூழ்நிலைக்கு ஏற்ப, சட்டத்தை எப்பொழுதும் ஆங்கிலத்தில் சொல்வது போல், "பிளக்ஸிபிள்" ஆக வைத்துக்கொள்வது நல்லது. கொஞ்சம் "ரிஜிட்" ஆக வைத்துக்கொள்வோமானால், சிக்கலாகிவிடும் என்று நினைக்கிறேன். என்னுடைய கருத்து இது. அவர் அவருடைய கருத்தைச் சொன்னார். எதையும் யோசித்துச் செய்ய வேண்டும். இந்த இரண்டும் இல்லாமல், அரசு ஆலோசனைப்படி முதலமைச்சர் அவர்கள் நாமிநேஷன் செய்கிறவர் துணைவேந்தராக இருக்கும்படி அதிகாரம் இருக்கலாம் என்பது என்னுடைய கருத்து. சான்ஸலர் அவர்களால் நாமிநேஷன் செய்யப்படுகிறவர் அமைச்சர்களுடைய ஆலோசனையின் பேரில் நியமிக்கப்படுகிறார் என்றாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மையைப் பெற்ற அரசு மக்களாட்சி இருக்கிற ஒரு நாட்டில், அமைச்சரவையால் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படுவதில் தவறு இல்லை. காரணம், உதாரணத்திற்குச் சொல்வேன். செனட்டிலிருந்து சிண்டிகேட்டுக்கு 4 பேர் வருகிறார்கள். நான் யாரையும் குறைசொல்வதாக நினைக்கவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். மதுரைப் பல்கலைக் கழக சிண்டிகேட்டிற்கு வருகிறவர்கள் தங்கள் தங்களுடைய சொந்த காலேஜ் காரியத்தை நடத்திவருகிறார்கள். அதற்கப்பால் அவர்கள் செயல்படுவதில்லை என்பது என்னுடைய அனுபவ ரீதியில் தெரிந்த உண்மை. சிண்டிகேட்டில் இருக்கிறவர்கள் 4 காலேஜ் நடத்துகிறார்கள் யூனிவர்சிடி 2,000 மாணவர்கள் தான் வைத்துக்கொள்ளலாமென்று விதித்தால், 2,500 பேரை சேர்த்து வைத்துக்கொள்கிறார்கள். சிண்டிகேட் மெம்பராக





இருப்பதால் துணிவு அவர்களுக்கு இருக்கிறது. சிண்டிகேட் மெம்பர் என்ற வலிவால் சட்டத்தைப் புறக்கணித்து, விதி முறையைப் புறக்கணித்து அவர்கள் நடந்துகொள்வதற்கு இந்தப் பதவியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். செனெட்டிலிருந்து தேர்ந்தெடு கப்பட்டவர்கள் 3 பேரிலிருந்து தான் இருக்க வேண்டுமென்று துணை வேந்தர் சொன்னால் காலேஜ் அதிகமாக வைத்துக்கொண்டு இருப்பவர்கள் தான் துணைவேந்தராக வரமுடியும் என்கிற அச்சம் எனக்கு உறுதியாக உண்டு. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற அமைச்சு ஆட்சியில் இருக்கிற காலத்தில், அவர்கள் மக்களின் நலனை முன்னிட்டு, கல்வி நிலைமையினை முன்னிட்டு, ஒரு நல்ல துணைவேந்தர் இருக்க வேண்டுமென்று அவர்கள் முடிவு கட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்க வேண்டும். துணைவேந்தரை நியமிக்கிற அதிகாரம் முதலமைச்சருக்கு, கல்வி அமைச்சருக்கு இருக்கிறது என்றால் மக்களுக்கு இருக்கிறது என்றுதான் பொருள். எனவே மக்கள் வழியில் செயல்படுகிற அமைச்சருக்கு இந்த அதிகாரம் இருக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து. எனவே இந்தத் தீர்மானத்தில் 2 பருவம் என்று வரையறுத்துச் சொல்ல வேண்டுமென்ற நண்பர் திரு. ஈஸ்வரமூர்த்தி கோரிக்கையை கொஞ்சம் தயவுசெய்து வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொண்டு அவர் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் அமைகிறேன்.

* **Thiru M. RAJAH IYER :** Mr. Chairman, Sir, I crave your 5-30
permission on a point of information. The Committee that is consti- p m
tuted, namely, one from the Senate, one from the Syndicate and the third nominated by the Chancellor, is not the committee of prospective candidates for the post of Vice-Chancellor. It is a committee which is to select the panel of three names for selection as the Vice-Chancellor. It may be that even if the Chancellor's nominee wants a particular person to become the Vice-Chancellor, the other two on the committee may vote it out so that the Government cannot get a person nominated on the committee and through him get a person of their choice. These three form the Selection Committee and whoever may be the candidate whom the Governor's nominee may put forward, the majority decision may rule it out and bring in a deserving man as the Vice-Chancellor. It is uncharitable to say that the Governor can get the candidate that he wants through the member nominated by him. It is quite likely that if his candidate is not a deserving one, the other two can rule his nominee out. Because this uncharitable construction was placed upon that aspect of the University Act, I wish to make it clear that it is not so.

**Thiru G. SWAMINATHAN :** Mr. Chairman, Sir, on a point of clarification, The Hon. Member Thiru Rajah Iyer said that the committee consisted of three members, one nominated by the Governor, another by the Senate, and the third by the Syndicate. Now, if the nominee of the Governor proposes a particular name, he said the other two members on the Committee can overrule by a majority decision the particular person if he is not a deserving person. But I think they do not have such a power to override the decision of the Government nominee by a majority, as I understand the position.

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெருஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஈஸ்வரமூர்த்தி அவர்கள் பல்கலைக்கழகத் துணை வேந்தருடைய பருவம் எவ்வளவு காலம் இருக்கவேண்டும் என்பதைப் பற்றியும் எந்த அளவுக்கு வயதானவர்கள் பதவியை வகிக்கலாம் என்பதைப்பற்றியும் பல்கலைக் கழகச் சட்டத்திற்குத் திருத்தத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்து இங்கே அதுபற்றிக் கருத்துக்களை எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தினுடைய நோக்கம் பல்கலைக் கழகத் துணைவேந்தராக நியமிக்கப்படுகிறவர்

3 ஆண்டு, அதாவது ஒரு பருவம், பதவி வகிக்கலாம் என்றாலும், இப்போது இரண்டு பருவ காலம் மட்டும் தான் இருக்க வேண்டுமென்றும், 65 வயது கடந்தவர்கள் ஓய்வு பெற்று, புதிய பல்கலைக் கழகத் துணை வேந்தர் நியமிக்கப்படவேணடும் என்றும் சொல்லும் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கிறார். இந்தச் சட்டத்தில் குறிப்பிட்டு இருப்பது இதுதான். பல்கலைக் கழகத் துணைவேந்தர் மூன்று ஆண்டு காலத்திற்கு. அதாவது ஒரு பருவத்துக்கு, தேர்ந்தெடுக்கப்படுவர். பிறகு அவரே இரண்டாவது பருவத்துக்கு திரும்பி ஒரு தடவை தேர்ந்தெடுக்கப்படலாம். இப்படி இரண்டு பருவங்கள் தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்படலாம். மூன்று பருவங்கள் அதிக அளவுக்குத் தேர்த்தெடுக்கப்படலாமென்பது சட்டம். மூன்று பருவங்களை இரண்டு பருவங்களாக ஆக்க வேண்டும் என்பதைப் பற்றியும், வயது குறிப்பிடப்படவேண்டும் என்பது பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் கருத்து தெரிவித்தார். அதைத் தவிர, மற்றக் கருத்துக்கள் எல்லாம் கல்வி பற்றிய அறிக்கை வரும்போது விவாதிக்கப்படவேண்டிய ஒன்று என்று தெரிவித்திருக்கிறார். மசோதாவுக்கும் மற்றைய கருத்துக்களுக்கும் தொடர்பு இல்லை. மசோதாவினுடைய நோக்கம் பற்றிய ,கருத்தை மட்டும்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றும் பல்கலைக் கழகத்தில் செய்யப்படவேண்டிய வசதிகள், வாய்ப்புகள் அங்கே என்னென்ன நடைபெறுகின்றன என்பதைப்பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். இந்தத் தொடரிலே கல்வி பற்றிய அறிக்கை வைக்கப்பட்டு அதன் மேல் விவாதம் நடைபெறப் போகிறது. இப்போது கவனிக்க வேண்டியது இந்த மசோதாவைப்பற்றிய கருத்துக்கள் மட்டும்தான். அதிலே என்னுடைய கருத்தைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். இப்போது இருக்கிற சென்னைப் பல்கலைக் கழகச் சட்டம் 1966-ம் ஆண்டுச் சட்டம் என்ற முறையில் ஓரளவு ஆராய்ந்து திருத்தப்பட்டு இப்போது நடைமுறையில் இருந்து வருகிறது. இந்தச் சட்டம் கூட பொறுக்கு குழுவுக்கு விடப்பட்டு சட்டமன்றப் பேரவை, மேலவைகளைச் சார்ந்த உறுப்பினர்களால் ஆராயப்பட்டுக் கொண்டு வரப்பட்ட சட்டம். மறுபடியும் அதைப்பற்றி விளக்கங்கள் பெறவேண்டும் என்ற முறையில் தான் 5 ஆண்டு காலத்திற்கு ஒரு முறை இந்தச் சட்டம் எப்படி வேலை செய்கிறது என்று ஆராய்ந்து ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டு, அதன் மீது அரசு மேலும் நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறது. ஐந்து ஆண்டு காலம் ஆனதற்குப் பிறகு அறிக்கை பெற முடியும். அதன் மேல் மேலும் செய்ய வேண்டியவைகள் என்ன என்பது பற்றி ஆராய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அது வந்த பிறகு திருத்தங்களைக் கொண்டு வரலாம். இப்போது இருக்கிற கருத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் இந்தச் சட்டத்திற்கு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார். இதிலே துணை வேந்தர் இரண்டு 'டர்ம்' தான் இருக்க வேண்டுமென்று சொல்வதிலே அதிகப் பொருள் இருக்க முடியாது. ஒரு பல்கலைக் கழகத் துணைவேந்தர் பெருமையோடும், புகழோடும் இருப்பதும், அறிவோடும், ஆற்றலோடும் நிர்வகிப்பதும் பருவங்கள் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல. சாதாரணமாக கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள், இவைகளை நிர்வகிக்கின்ற பொறுப்பையும் கொள்கை முடிவுகளை எடுக்கவேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்பவர்களும் பல்கலைக்கழக நிர்வாகத்தை ஏற்றுக்கொள்பவரும் அனுபவம் பெற்றவர்களாகவும், அறிவாற்றலில் சிறந்தவர்களாகவும், வயதானவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகவே சாதாரணமாக, இயற்கையாக வயதானவர்களைத்தான் இப்பொறுப்புகளுக்கு எதிர்பார்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஒரேயடியாக ஒன்பது ஆண்டு காலம் காண்டிராக்ட் என்ற அளவிலே அந்தப் பதவி கொடுக்கப்படவில்லை. ஐந்து ஆண்டு காண்டிராக்ட் கொடுத்துவிட்டு என்ன செய்வது இடையில் நீக்க முடியவில்லையே என்று திண்டாட வேண்டிய கட்டங்கள் சில சமயங்களில் ஏற்படுகின்றன. அந்த நிலையும் ஏற்படவில்லை. மூன்று ஆண்டு காலத்திற்கு ஒரு முறை மீண்டும் பல்கலைக்கழகத் துணை வேந்தரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இருக்கிறது. முதலமைச்சர் ஒருவரைச் சிபாரிசு செய்தால், அவர் தன்னுடைய பருவகாலம் வரையில் பதவியில் இருக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. ஒருவர் துணை வேந்தராக மூன்று ஆண்டுகள் பணி செய்த பிறகு, அவருடைய பணி திருப்திகரமாக இல்லாவிட்டால், அவரை நிறுத்திவிடுவதற்கு இப்போது இருக்கும் சட்டத்திலே வாய்ப்பு இருக்கிறது.



மாண்புமிகு உறுப்பினர் திரு ஈஸ்வரமூர்த்தி கூறியது போன்று, ஆறு ஆண்டோடு நிறுத்திவிடலாம். ஆறு ஆண்டிற்கு மேல் கூடாது என்ற அவருடைய திருத்தச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இப்போதிருக்கிற சட்டத்தில் இடமிருக்கிறது. ஆறு ஆண்டில் நிறுத்திவிடலாம். பிறகு புதியவர்களைத் தேடிக் கிடைக்காத இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டால், ஆறு ஆண்டிற்கு மேல் இருக்கவே கூடாது என்ற சட்டத்தை வைத்துக்கொண்டிருந்தால், இடர்பாடு இருக்கும். ஆகவே, ஆற்றல் மிக்கவர்களை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படாமல் இருக்க மேற்கொண்டு மூன்று ஆண்டு காலம் இருக்கலாம் என்று இருப்பது, மாண்புமிகு உறுப்பினர் திரு சங்கரலிங்கம் பிள்ளை சொன்னது போல " பிளெக்சிபல் " ஆக இருப்பது நல்லது. இப்போதிருக்கிற சட்டப்படி, மூன்று ஆண்டோடு நிறுத்தலாம். திரு ஈஸ்வரமூர்த்தி கருதுகிற மாதிரி, ஆறு ஆண்டோடு நிறுத்தலாம். எல்லோரும் விரும்புகிற மாதிரி இருந்தால் ஒன்பது ஆண்டோடு நிறுத்தலாம். ஆறு ஆண்டோடு நிறுத்த வேண்டும் என்ற நிலைமை இல்லை. பல்கலைக்கழகத்தில் அனுபவம் பெற்றவர்கள், ஆற்றல் மிக்கவர்கள் பல ஆண்டுகாலம் இருப்பதன் மூலமாக நன்மை உண்டு. மிக அனுபவம் பெற்றவர், பெயரும் புகழும் பெற்றவர் டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்கள் அவர்கள் 25 ஆண்டு காலம் தொடர்ந்து சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராய் இருந்தார்கள். இந்த மேலவையின் உறுப்பினராகவும் இருந்து பணியாற்றினார்கள். டாக்டர் லட்சுமணசுவாமிமுதலியார் அவர்கள் 25 ஆண்டு காலம் சென்னை பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்ததன் காரணமாக, சென்னைப் பல்கலைக் கழகம் பெயரும் புகழும் பெற்று விளங்கிற்று. அகில இந்தியாவில் வேறு எந்தப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பெயரும் யாருக்கும் தெரியாது. அகில உலகமும் சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தர் பெயரை மட்டும் அறிந்திருந்த அளவிற்கு சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு பெயரும் புகழும் ஏற்பட்டது என்பதை யாரும் மறுத்து விட மாட்டார்கள். அவர் 25 ஆண்டுகள் தொடர்ந்து துணை வேந்தராய் இருந்து வந்தார்கள். டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் துணை வேந்தராய் இருந்தார். அவர் துணை வேந்தராய் இருந்தபோது அந்தப் பல்கலைக்கழகம் பெயரும் புகழும் பெற்று விளங்கிற்று. டாக்டர் சி. ஆர். ரெட்டி துணை வேந்தராய் இருந்த போது, பல்கலைக்கழகம் பெயரும் புகழும் பெற்று விளங்கிற்று. ரைட் ஆனரபில் சீனுவாச சாஸ்திரியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தராய் இருந்தார். அவருடைய பெயர் புகழோடு விளங்கிற்று. அவர் மாதிரி, டாக்டர் ஏ. எல். முதலியார் போன்று இந்தியாவிலே எவ்வளவோ பேர் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களாக இருந்தார்கள். கல்வியமைச்சர் ஆயிற்றே, நீ அவர்கள் பெயரை சொல் என்று கேட்பார்களானால்—இந்த மாதிரி 3, 4 துணை வேந்தர்கள் பெயர்கள் தான் மனதில் தங்கத் தக்க அளவிற்கு இருக்கின்றன. மற்ற பல்கலைக் கழகத் துணை வேந்தர்களைப் பற்றித் தெரியாது. எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால், டாக்டர் ஏ. எல். முதலியார் இருந்ததினால் சென்னை பல்கலைக்கழகத்திற்கு பெயரும் புகழும் இருந்தன. லட்சுமணசுவாமி முதலியாரைப் போன்று புகழ் படைத்தவர்களாவது 25 ஆண்டு காலம் கூட இருக்கலாம். ஆனால் லட்சுமணசுவாமி முதலியார் மாதிரி இல்லாமல், எப்படியாவது பதவியை மட்டும் வைத்துக்கொண்டு சிலபேர் 25 ஆண்டுகாலம் எதிர்காலத்தில் பதவியைப்பெற்று இருந்துவிடுவார்களோ என்ற எண்ணம் இருக்குமானால், மூன்று டர்ம் இருக்கட்டும் எதிர்காலத்தில் வருகிறவர்கள் ஆற்றலையும், அறிவையும் புகழையும் நிலைநாட்டாமல் 25 ஆண்டு காலம் இருக்கலாம் என்று சொல்லி விடுவார்களோ என்ற அச்சத்தின் அடிப்படையில் மூன்று டர்ம் இருக்கலாம் என்று நாமும் 1966-ம் ஆண்டு பொறுக்குக் குழுவும் ஆராய்ந்து ஒரு முடிவு

செய்யப்பட்டது. இந்த முடிவுப்படி ஆறு ஆண்டிலும் நிறுத்தலாம். மூன்று ஆண்டிலும் நிறுத்தலாம் என்ற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஆறு ஆண்டில் நிறுத்தலாம் என்று வரையறுத்துவிட்டால், புதியவரைத் தேடிப்பிடித்து வைக்க கஷ்டம் ஏற்பட்டால், இடர்பாடு வரும். ஆகவே, ஒரு பல்கலைக்கழகத்தை நிர்வகிப்பதற்கு, அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிற அளவிற்கு துணை வேந்தர்களைத் தேர்ந்தெடுப்பதில் முழு அளவிலே நாம் வெற்றியடைந்திருக்கிறோமா என்றால், சொல்ல முடியாது. ஒரு பல்கலைக் கழகத் துணை வேந்தரை, அறிவு ஆற்றல் என்று எல்லா வகையிலேயும் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுப்பது கடினம் ஆகும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இரண்டு டர்ம், மூன்று டர்ம் இருக்க வழி இருப்பது நல்லது. மாண்புமிகு உறுப்பினர் திரு ஈஸ்வரமூர்த்தி கருதுகிற மாதிரி, ஆறு ஆண்டில் நிறுத்துவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், மேற்கொண்டு ஒரு டர்ம் இருப்பதில் தவறு இல்லை. அப்படியிருப்பது பயன்படுகிற ஒன்றாக அமையும். மருத்துவத் துறைகளில் பிரமோஷனுக்குத் தகுதிபடைத்தவர்கள் இல்லாத காரணத்தினால், அது போன்ற சில துறைகளில் 60 வயதானவர்களையும் வைத்துக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆனால் நாம் 55 வயதோடு ஓய்வு பெற வேண்டும் என்ற சட்டத்தை
5-40 p.m வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆக, 60, 61, 62 என்று வயதானவர்களையும் வைத்துக் கொள்ளவேண்டிருக்கிறது. அப்படி அவர்களைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருந்தால் தான் நன்றாக இருக்கும் என்ற கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. 55 வயதுக்கு மேல் வைப்பதில்லை என்று சட்டம் இருந்தாலும், இப்படிப்பட்டவர்களை நியமிப்பதற்குச் சட்டத்தைத் திருத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, துணை வேந்தராக வருகிறவர் மூன்று டர்ம் இருக்கலாம் என்று இருப்பதில் எந்த விதத் தகராறும் இல்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். 65 ஆண்டிற்கு மேல் இருக்கக்கூடாது என்று வயதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வயதைப்பற்றிச் சொல்வதற்கில்லை. இப்படிப்பட்ட இடங்களில் உட்காருகிறவர்கள் அதிகமாக உடலுழைப்பைத் தந்து பணியாற்ற வேண்டியிருக்குமோ என்றால், உடலுழைப்புத் தருவதன் மூலமாகத் தான் இந்தப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் பதவியின் வேலையை நிறைவேற்ற முடியும் என்று நினைப்பது சரியல்ல. சிந்தனையிலே வலிவு பெற்றவர்கள், அதிகமாகச் சிந்தித்துப் பார்த்து ஆற்றல் அடிப்படையில் காரியம் ஆற்றுபவர்கள் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும். இதற்கும் வயதிற்கும் சம்பந்தம் இருக்க முடியாது. 65 வயதோடு நிறுத்திவிடவேண்டுமென்று சொல்வது சரியாக இருக்க முடியாது. 62, 61 வயதில் பல்கலைக்கழகத் துணை வேந்தர்களாக வந்தால், அவர்கள் 65 வயதோடு நின்று விட வேண்டுமென்று சொன்னால், அவர்களால் காரியங்களை ஆற்ற முடியாது. வயதை வைப்பதால் சில சங்கடங்கள் ஏற்படும். 1966-ம் ஆண்டு இந்த வயதைப் பற்றிப் பொறுக்கு குழுவிலும் விவாதம் வந்தது. கோதாரி கமிஷன் குறிப்பிட்டிருப்பதைப்பற்றி ஆராய்ந்தார்கள். அந்தப் பொறுக்குக் குழுவிலே தலைவர் அவர்கள்

"The reappointment of the Vice-Chancellor is not automatic and all the required formalities have to be gone through. After all, it is open to the selection committee to recommend new talents available. Therefore, if a retiring Vice-Chancellor was reappointed for another term, they can object to it. But persons with experience are preferable, particularly in the field of education."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். வயதை நிர்ணயிக்க வேண்டுமென்ற விவாதம் வந்தபோது, நிர்ணயிக்க வேண்டாம் என்ற முடிவை எடுத்திருக்கிறார்கள். மற்றும் கோதாரி கமிஷனுக்கு மாநில அரசு சார்பாகப் பதில் எழுதுகிற போது, இந்தக் கருத்தை வலியுறுத்தித் தான் எழுதப்பட்டது. கோதாரி கமிஷன் சிபாரிசின் பேரில், மாநில அரசின் கருத்து என்ன என்று கேட்ட போது, பதில் எழுதி அனுப்பியிருக்கிறோம். இந்தக் கருத்தைத் தான் சொல்லியிருக்கிறோம்.





"The Comm ission recommends the fixing of the age limit of Vice-Chancellors at 65. It does not appear to be realistic for heads of Institutions in the University to retire around that age. It is they that are eligible to function as Vice-Chancellors. Hence, the age-limit will have to be suitably raised."

இவ்வாறுதான் நாம் கோதாரி கமிஷன் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறோம் என்று எழுதியிருக்கிறோம். 65 வயது என்று வரைமுறை படுத்துவதனாலோ, அல்லது இரண்டு டர்ம் என்று சொல்லி அதற்கு மேல் நிறுத்துவதனாலோ, அதிகப் பலன் இருக்க முடியாது. இரண்டு நோக்கமும் நிறைவேற சட்டம் இடம் தரவில்லையா என்றால், உறுப்பினர் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குச் சட்டத்தில் முழு வாய்ப்புத் தெரிகிறது. வாய்ப்புத் தெரிகிற காரணத்தினால் இடமும் இருக்கிறது. நாம் ஒரு அவசரமான முடிவை ஏற்படுத்தி விட்டு, பிறகு அவதிப்பட்டால் இருக்க இப்போதிருப்பது நல்லது. வேறு திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்ற நிலைமை ஏற்படுமானால், 5 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தச் சட்டத்தை ஆராய்வதற்கு வழியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தியும் மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை இப்போது ஆராயலாம். ஒன்பது ஆண்டு காலம் இருக்கலாம் என்று இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு புதிய கருத்துக்கள் போதிய அளவிற்குப் பல்கலை கழகத்தில் வருவது தான் நல்லது. ஒருவர் தங்கள் காலத்தினுடைய கருத்துக்களை, தன்மைகளை அடிப்படையாக வைத்து, அதற்கு மேல் இடம் கொடுக்காத சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், ஒன்பது ஆண்டுகள் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதைக் குறைக்கிற மாதிரியும் வேண்டாம், அதிகப்படுத்தவும் வேண்டாம். எதிர்காலத்தில் வளர்ந்து வருகிற மாறுதல்களையொட்டி நிலைமைகள் மாறலாம். இதற்கு முன்னால் பல்கலைக் கழகத்தில் நூற்றாண்டிற்கு நூற்றாண்டுதான் மாறுதல் ஏற்படும். 17-ம் நூற்றாண்டு 18-ம் நூற்றாண்டு, 19-ம் நூற்றாண்டு, 20-ம் நூற்றாண்டு என்று 70 ஆண்டுகளுக்கு மாறுதலே ஏற்படாது. 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்ற நிலையில் மாறுதலே ஏற்படாது. ஆனால் இன்றைய நிலைமையில் 12 ஆண்டு காலத்திற்குள்ளே சில பல மாறுதல்களைக் கொண்டு வரவேண்டிய நிலைமை இருக்கின்றது. பல்வேறு நாடுகள் தங்களுடைய பல்கலைக்கழகங்களில், உலக யுத்தத்திற்கு அப்புறம் ஏற்பட்ட உலக இயலையொட்டி, மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மூன்று டர்ம் வைத்திருப்பது நியாயமான அடிப்படையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு ஈஸ்வரமூர்த்தி குறிப்பிட்டது போன்ற கருத்துக்கள் எல்லாம் ஆராயப்பட்டு வந்திருக்கிற காரணத்தினால், அவர் கூறுகிற கருத்தை நிறைவேற்ற இடம் இருக்கிறது. இந்த அடிப்படையில் பல்கலைக்கழகத்தைத் தொடர்ந்து நடத்திச் செல்ல வாய்ப்பு இருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் எந்த வகையிலும் மற்ற பல்கலைக் கழகங்களோடு ஒப்பிடும்போது, சென்னைப் பல்கலைக்கழகம் தம் பெயரையும் புகழையும் நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTI: My information is that the Madras University has been ranked as tenth amongst the Indian Universities.

மாண்புமிகு திரு. வி ஆர். நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் எந்த வகையிலே நம்முடைய பல்கலைக் கழகம் பத்தாவது இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதைத் தனியாகக் காண வேண்டும். இது பற்றி நான் அகில இந்திய மகாநாட்டிலே கலந்து கொண்டு பேசும்பொழுது, குறிப்பிட முயற்சிக்கிறேன். அதனுடைய "ரிசல்ட்" அல்லது அதனுடைய வசதியைக் குறித்து பத்தாவது இடம் என்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTI: Educational Standards.

THIRU D. SANTOSHAM: Who has the right to decide it ?

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTI : The Central Government have the right and they have ranked them.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன். அம்மையார் அவர்கள் கூறுவது ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று. வேறு பல்கலைக் கழகத்திலே கொடுக்கப்படுகின்ற பட்டங்களைக்கூட நாம் ஏற்றுக்கொள்ளாத அளவிலே தான் நம்முடைய நிலைமை இருக்கிறது. ஆனால், சென்னை பட்டதாரிகள் எங்கு சென்றாலும், அவர்களை எடுத்துக்கொள்ளக்கூடிய மதிப்பு இருக்கிறது. அது மேலும் வளர வேண்டும். மற்றும் கல்லூரிகளிலே "ஸ்டாண்டர்டு" குறைந்திருக்கிறது என்று வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அதற்காகத் தனி நடவடிக்கைகள் எடுத்து, அக்குறைகளைப் போக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனாலும், இந்த மசோதாவைப் பொறுத்த மட்டில், இப்பொழுது இருக்கின்ற சட்டத்திலே இருக்கின்ற கருத்தின் காரணமாகவும், இந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு ஆராய இருப்பதாலும், இந்த மசோதாவை வற்புறுத்த வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு ஈஸ்வரமூர்த்தி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

THIRU V. ISVARMURTI : Mr. Chairman, in view of the assurance given by the Hon. Minister that the stato of affairs in the Madras University will be looked into afresh when such a review takes place after a year or so, I do not press my Bill.

The Bill was, by leave, withdrawn.

## (ii) *Resolutions*

### (1) MEDIUM OF INSTRUCTION IN COLLEGES.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I beg to move the Resolution standing in my name, namely—

"That this House recommends to the Government :—

(1) that there be dual media of instruction in Tamil and English up to the P.U.C. stage—English being made compulsory for students opting for Tamil medium and Tamil or mother-tongue being made compulsory for students opting for English medium and the choice of the medium of instruction be left to the parents, and

(2) that, after the P.U.C. stage :—

(a) all instruction in Science subjects and Mathematics only be given in English ; and

(b) that, English be compulsory in the Degree Courses along with Tamil or any other literature chosen for the Degree Courses."

THIRU A. R. DAMODARAN : I second the Resolution, Sir.

MR. CHAIRMAN : Resolution moved—

"That this House recommends to the Government :—

(1) that there be dual media of instruction in Tamil and English up to the P.U.C. stage—English being made compulsory for students opting for Tamil medium and Tamil or mother-tongue being made compulsory for students opting for English medium and the choice of the medium of instruction be left to the parents ; and

(2) that, after the P.U.C. stage :—

(a) all instruction in Science subjects and Mathematics only be given in English ; and

(b) that English be compulsory in the Degree Courses along with Tamil or any other literature chosen for the Degree courses."

The Resolution is before the House for discussion.



THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, it is common knowledge that history repeats itself. In the bygone times when India was in the throes of Alexander's invasion, the large number of linguistic States that flourished in the country, about 59 or 60 in number, were unable to hold together against the invader because they had no means of proper communication and no proper and common dialect to communicate their views to each other. Each was strong but linguistically divided and, therefore, they were not united in ambition, in purpose, or in knowledge. This was because they could not disseminate among themselves what they had acquired for themselves. The result was that Alexander came and invaded the country. Though Porus put up a good front against him, it was only Maha Padmanandhi that could give him a fight and turn him away from the banks of the Bias. All this will be clear to one who has read the history of invasion of Alexander by Plutarch. Had we been united at that time, we would have driven the mighty Alexander from the shores of our country. Division amongst ourselves has been the tradition right through. We have, right from the beginning of our history, been constant victims of foreign invasion. And now history is repeating itself and we have yielded to the pressure of individual persons who foisted the linguistic States on us with the result that the linguistic States have become the order of the day. We cannot do anything about it now. But we can still keep with us some of the good traditions that the British gave us.

(DEPUTY CHAIRMAN IN THE CHAIR.)

One of the good things that British rule had given us was the English language. That language unified the country and provided a link between the different States in India. And second, they gave us the judiciary and that is still there. But that also, I should say, is in a state of flux, with the formation of States on linguistic basis, and the invasion of Tamil into the Courts. I am afraid the Supreme Court Judges will have to learn all the fourteen or more languages of India. That being the state of affairs, I do not know where we are drifting to.

My sole object in bringing this Resolution before the House is this. We have taken a pledge of national integration and we are repeating it on every Independence Day. But we are allowing the forces of disintegration to permeate every school and college. We are giving up the sources of knowledge. We are trying to be parochial and regionalistic. In our attempt to conserve and preserve our own language we are driving out every other language that was a source of knowledge to us and that helped to keep us united. Some time back when I had been to the Saraswathi Mahal Library in Thanjvaur, I found a complete shelf empty with the words : 'Books taken away by the Germans.' I was surprised to find that the manuscripts of several Sanskrit works on medicine, science and astronomy by famous authors like Charaka, Danvanthri, Vararuchi, Varahamihira and others were missing. They had contributed by independent research to all these branches of Science. These had been taken away by foreigners and used by people like Max Muller The Curator of the Library, when asked whether there was any likelihood of our getting back those manuscripts, said that they had gone for ever. Sir, two years ago, I saw a German friend of mine. I do not remember his name and it is also difficult to pronounce German names. I asked him what contribution these manuscripts had made in improving their knowledge. He said that most of modern medicine relating to diseases of the stomach owed its source to these works, works of Charaka and others. He narrated how several of the modern drugs were developed from source material taken from those works. But

the pity is that we have not cared to utilise these valuable material. We are trying to translate these things and coin new words and that too to be done by a group of persons who constitute themselves into a Committee and whose sole purpose is to translate foreign words, the English words, into Tamil. Committees generally do not serve any purpose and especially in regard to translation of foreign words into Indian languages, they cannot achieve much unless those persons are qualified enough to do the job. They must be people who can get at the fundamental idea by continued research for ages. Sir, in this connection, I must say I do not agree with my hon. friend Thiru Isvarmurti on this point. We are not a nation of translators. If we want to catch up with the fast moving West, we must advance technologically, we must advance in the field of medicine, science and in other fields. We cannot afford to lose any more time in the race to catch up with the West. We must go forward and not fallbackward. It may be good to have Tamil equivalents for those many English terms based on Sangam literature. But they should be such as can be easily understood by the common people. I am equally proud of Sangam literature at Poompuhar. But what is being done now is to completely eradicate the influence of English and Sanskrit languages. I do not want to refer to the many words that have now been introduced in translation. They have introduced the word 'Ayam' which no man can easily understand. I am not for the moment saying anything against Tamil literature. I am myself a student of History and I have specialised in my History Honours the study of Manimekalai, Silapathikaram and Tirukural. I have studied the works of Awaiyar. I have also studied Silappathikaram in great detail, of course, with the help of English translations. (Laughter). That may be a tragedy but none-the-less I may claim I know something about these great Tamil works, as much as anybody else, if not more.

Sir, in this connection, I wish to say one thing. In the year 1968-69, I conducted a personal research by going to several educational institutions and asking the people concerned: "What about admissions to Tamil and English medium classes". The information I gathered indicated that not many took to Tamil as medium of instruction. For admission to English medium classes, I was given to understand that candidates were recommended by Ministers down to Corporators. There were lots of recommendations for admission to English medium classes, I was told. (Interruption). I got this information during the visit to several of these institutions. Sir, if I am given an opportunity to conduct an analysis of the number of wards of members of his own party (the hon. Member who interrupted) and find out the number who have taken English as medium of instruction, I am sure the statement I made just now that there was great demand for English as medium of instruction would be borne out. It is a fact that more people have taken to English rather than to Tamil as medium of instruction and it cannot be denied. It is also a fact that more recommendations have come for admission to English medium classes than to Tamil medium classes. I cannot give exact figures regarding the number of students that have opted for English medium and those that have opted for Tamil medium. The Government have got the necessary machinery. They can collect the necessary statistics and then they will find that what I have stated is a fact.

As I said, I am not against Tamil Literature developing. It is a great literature. If you want to have Tamil as medium of instruction for learningLiterature, Philosophy, Indian History, Geography and so on, I entirely



agree that Tamil should be there. But, unfortunately, that language has not a scientific background and if you insist that science subjects like Mathematics, Physics, Chemistry, Botany, Medicine, Anatomy, Pathology and such other subjects should be studied through the medium of Tamil, then, Sir, I am certain that no person who thinks of the advancement of the country and the prosperity of the people and who wants to compete with the Western nation would agree with that proposition. He would never agree that Tamil would serve the purpose he has in view. I am not, I wish to assure you again, Sir, attacking the Tamil Language as such. I have great respect for it. As I said, I have studied it myself and I am a student of that language. I am studying the language more intensely now and if I have the opportunity to come back to this House, I hope to speak in Tamil and that too, in chase Tamil. But that is not what I am driving at. I may tell you, Sir, that by adopting Tamil as medium of instruction we are shutting out the window to communicate with the West. English was our window to the West for hundreds of years. We have hundreds and hundreds of books, fundamental works, on scientific and other subjects. We have only about thirty books in Tamil and that too, in translation from the original works in English.

Sir, the other day I happened to meet a gentleman who was trying to translate into Tamil an original work on astronomy. He has been at it from the year 1917. He told me he was yet to complete his task. I do not want to mention his name here. What I am submitting to you is that in our attempt to advance and develop our language further and further, we should not lose sight of our people becoming more and more efficient. We must be efficient. We must come up in the world. Our children must come up in the world. Let us not try to put any impediment in the way of their development by trying to direct how they should live or how they should learn. Let the medium of instruc- 5-50 p.m.
tion be left to the parents to decide. If I may, I will once again refer to the referendum that was taken in Delhi. The parents there decided in favour of English as medium of instruction. Sir, the hon. Member Thiru Isvarmurti referred to the fact that some of the Vice-Chancellors might be good but generally when they come to dabble in politics, then the whole thing is turned into a state of turmoil. You know the instance of Dr. Triguna Sen. He started the Hindi agitation and the whole country has come to be in a state of turmoil. They now say English is going away. I do not know what makes them give up English and eradicate it from our curriculum. I would plead with all the emphasis at my command that English should be retained as it serves as a window to the West. Let us not have intellectual black-out in the country.

THIRU M. RAJAH IYER: Is it true to say that English is going from out of our country?

**மாண்புமிகு திரு பி. யு. ஷண்முகம் :** ஆங்கிலத்தை நீக்கிவிடுவோம் என்பதாகக் கூறுவது சரியில்லை. ஆங்கிலமும்தான் இருக்கிறது. ஆங்கி லத்திலே அது இல்லையே என்று பேசுவது முறையா? படிப்படியாகத் தான் தமிழைக் கொண்டுவருவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். ஆகவே, திரு வசந்தபாய் போன்ற ஆங்கிலத்திலே சிறந்த பாண்டித்தியம் பெற்றவர்கள், தமிழ் போதனு மொழி என்றிருப்பதை மாற்ற வேண்டும் என்று சொல்லுவது தமிழ் வளர்வதற்கு ஊக்கம் காட் டும் வகையிலே அமையாது. அப்படிப்பட்டவர்கள் தமிழிலே இதெல்லாம் லாம் வரவேண்டும் என்று முயற்சிக்க வேண்டுமே தவிர, முயற்சி எடுப்ப வர்களை முறியடிக்கக் கூடாது.

THIRU G. VASANTHA PAI: I am not at all discouraging what the Government are doing to conserve and subserve the Tamil language. I said that at the very beginning of my speech and I do so now. I also

desire that the regional languages should come up. But for them to replace English in the field of scientific knowledge and development it would take forty years when we can hope to have experts to translate into Tamil original works in other foreign languages. So far English has been the medium of instruction and the scientific terms cannot be easily translated into Tamil.

**மாண்புமிகு திரு பி. யு. ஷண்முகம்:** *தலைவரவர்களே, தமிழை அத்தகைய தகுதிக்குக் கொண்டுவருவதற்கு 40 ஆண்டு காலம் ஆகும் என்று சொன்னார்கள். அப்படியே நாம் அதை ஏற்றுக்கொண்டாலும், 40 ஆண்டுக்கு முன்பு இதுதான் முதல்படி என்ற முயற்சியிலே ஆரம்பித்தால்தான் அது நிறைவேற முடியும் என்று சொல்லிக்கொள்கிறேன்.*

THIRU G. VASANTHA PAI: I do not say that you should wait for forty years and the experiment should not be started from today. It should be begun even now but it should be done by persons who had done research before these expressions are passed on to the young men. They should be men who have done research like Danvantri, Charaka and others who have produced original works in Sanskrit after doing a great deal of research, in subjects like Medicine, Astronomy and others. It has been scientifically developed. They had the ability and did it after much scientific research.

My submission to the Government now is that English should be retained as the medium of instruction for scientific subjects, for at least another forty years, before we have enough books in Tamil to teach those subjects. And again the main aim of my Resolution is that English and Tamil should go together till the degree stage and both the languages should be conserved and preserved. The interests of both the languages should be subserved. I have not said that Tamil should not come in. Everybody should have opportunities to have his education both in English and in Tamil and one should not be sacrificed at the expense of the other.

Then, I come to the practical aspect of finding employment for our educated young men. Lakhs of students are appearing for the S.S.L.C. Examination every year. Of those who pass out at least 25 or 35 thousand go to the next stage, namely, the P.U.C. and thereafter to the Degree courses. I think nearly 15 to 20 thousand young men take their Degrees every year. I think only 600 to 800 people retire every year from Government service and only that number of young men can find employment. The rest have to go out of the State to find employment, If the English language is taboo and their knowledge of English is reduced to the minimum even the few who had opportunities in the State will be made to seek their future elsewhere. They must get a minimum amount of education so that they can eke out their livelihood. This can be done only by giving them education in the language in which there has been scientific development and not otherwise.

Sir, language is an expression of thought and has no barrier. A few months back a very learned leaderette appeared in one of the leading papers in Madras which quoted the Japanese experience. Sir, the Japanese are an experienced and industrialised people. They introduced Japanese as the medium of instruction in all schools and colleges. They found that Japanese as a medium of instruction was not enough to cope with modern developments and compete with the outside world. So, they switched over again to English as the medium of nstruction. This expereince of the Japanese was quoted in the editorial.



It seems they went to the extent of saying: 'Say it in English' Now even an advanced,scientifically developed and industrialised country like Japan had found from experience that they could not impart useful instruction and education in a language other than English,: it could not be given in their own language, Japanese, but only through English in their own national interest. I may tell you, Sir.

THE HON. THIRU S. MADHAVAN: Mr. Deputy Chairman, Sir, just for the informatoin of the hon. Member I may say this. A Japanese team of young experts met me here the other day while I was the Education Minister. I think a number of engineering graduates were on that team. I tried to discuss the problem of education with them including the problem of the medium of instruction. The young engineering experts were not able to speak with me in English.

THIRU G. VASANTHA PAI: I may tell the Hon. Minister that it is a policy with most of the eastern nations who are communists not to talk in a language except their own, and have the speech translated.

AN HON. MEMBER: Why not adopt that also?

THIRU G. VASANTHA PAI: That is only when talking and not in knowing.

THE HON. THIRU S. MADHAVAN: I wish to correct the hon. Member, because I put a specific question to them on this vexed problem. I had my own doubt how we were going to develop the language in Tamil Nadu. Japan had made such strides in the development of their own language that they were able to produce engineering graduate through their own mother tongue. A member of the team said that it was easier to study the engineering course in their own mother tongue than in English.

THIRU G. VASANTHA PAI: I would like the Hon. Minister to examine this question further. I say it with authority that the Japanese had reverted to the English medium of instruction for their scientific subjects. What was stated during the interview of the Minister with the Japanese team might be correct but that was two years ago. (Interruption) But the editorial of which I made mention appeared recently.

THE HON. THIRU S. MADHAVAN: But the Japanese people themselves told me something else.

THIRU G. VASANTHA PAI: I have come to understand what I have stated. The Hon. Minister has come to understand what he thinks is the position. I think I must leave it at that.

I must also inform the House that I have had opportunities to travel in the Far East. I have gone as a member of the Lawyer's Delegation to the Far East and I have seen most of the countries in that area. I know several of the leading persons there are Oxford or Harvard returned graduates even in the so called Communist countries. At a reception which I attended in one of those countries, Mr. Ki was speaking and a lady sitting next to me thinking that his neighbour did not know English asked him; 'Liky speechy' He got up, turned round to me and spoke in the same accent: 'Liky speechy' I am only referring to this to show that we should not merely copy and do what others do. There is no harm in our adopting a different course in order to get ourselves educated, in order to get our knowledge widened, and in order to get our vision enlarged. Have we not heard the Great Tagore sing in his celerated Gitanjali:

Where the mind is without fear and the head is held high;

Where knowledge is free; . . . . . .

Where the clear stream of reason has not lost its way into dreary desert sand of dead habit;

Where the mind is led forward by thee into ever-widening thought and action

Into that haven of freedom, my Father, let my country awake."

AN HON. MEMBR: He sang in Bengali.

THIRU G. VASANTHA PAI: He might have but he never said that knowledge must be limited or that it should be curtailed. Even the Thirukural' has said that you must go abroad and learn. Even Awaiyar said that you must cross the seas and learn.

**மாண்புமிகு திரு பி. யு. ஷண்முகம் :** நாம் எல்லாம் வெளிநாடு
களுக்குச் சென்று கற்க வேண்டியதையெல்லாம் மொழி வித்தியாசமின்றி
கற்க வேண்டுமென்று அவ்வையாரும், திருவள்ளுவரும் கூறியிருப்பதாக
மாண்புமிகு உறுப்பினர் திரு வசந்த பாய் கூறினார். ஆனால், அவர்கள்
எல்லாம் தாய் மொழியை நாம் இழந்துவிட வேண்டுமென்று
ஒரு பொழுதும் சொல்லவில்லை என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன்.

THIRU G. VASANTHA PAI: I am only saying that English is an international language and probably fast becoming inter-planetary language. We should not put an embargo on the study of English. We should not prevent children getting educated. I personallly feel language should be no bar toacquire knowledge when we have the opportunity. We ourselves are educated in English. Every one of the Ministers here is highly educated in English. Why then should we deprive our children of that facility to learn English and widen their knowledge? Why should they depend on translations for acquiring that knowledge?

**மாண்புமிகு திரு எம். முத்துசாமி :** என்னுடைய தகப்பனார் ஒரு
6-00 p.m, விதமான கல்வியை எனக்கு அளித்தார். ஆனால், நான் என்னுடைய
மகனுடைய காலத்திலே அதையே பின்பற்ற வேண்டும் என்று சொல்ல
முடியாது. நம்முடைய மொழிக் கொள்கையைக் குறிப்பிட்டு, வெளி
நாடுகளிலே நடப்பவைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு வசந்த
பாய் சொன்னார்கள். நானும் மாஸ்கோ போன்ற இடங்களுக்குச் சென்று
வந்தேன். உலகத்திலேயே விஞ்ஞானத்திலே தலைசிறந்த நாடு என்று
கருதப்படுகிற ரஷ்ய நாட்டிலே விஞ்ஞானம் எல்லாம் ரஷ்ய மொழியிலே
தான் கற்கப்பட்டு அந்தப் பல்கலைக் கழகம் நடைபெறுவதாக
எனக்குத் தெரிகிறது. ஆகவே, குறிப்பாகத் தமிழ் மொழி வளமுடைய
மொழி: அது மேலும் நன்றாக வளருவதற்கான முயற்சிகளை எடுத்துக்
கொண்டு, சிறப்பான காரியங்களைச் செய்ய வேண்டும் என்பதற்காகத்
தான் கல்லூரிகளிலே அதைப் பாட மொழியாகக் கொண்டு வருகிறோம்.
எனவே, ஆங்கிலத்தைப் புறக்கணிக்க வேண்டும் என்பதில்லை அரசின்
நோக்கம். ஆங்கிலம் யாரும் கற்க வேண்டாம் என்று சொல்லவில்லை.

THIRU G. VASANTHA PAI: I again emphasise that all our leading men, men like the Rt. Hon. Sastri, Dr. C.R. Reddi, Dr. A.L. Mudaliar Dr. A. R. Mudaliar, Sir S. Radhakrishnan, Dr. C. V. Raman and even our present Governor Sardar Ujjal Singh have all been the products of English education. They have all brought glory to our country. I can here recall an incident that took place in my college days when Thiru Ayyappan Pillai was appointed professor of English in the Presidency College. The then Governor of Madras wrote to people in Oxford to spare a professor in English. They wrote to him asking whether he would like to have a first rate Indian or a third rate English man as professor of English. When the Governor replied saying that he required a first rate professor, Thiru Pillai who was in Trivandrum was sent to the Presidency College. What I want to convey to the House by referring to this incident is that our people have got abundant intelligence and talent to make themselves felt in any part of the world. To show their mettle they must be given the opportunity. They must be given the opportunity to choose the medium of instruction. We cannot and should not foist a particular medium on the children and say that they must learn only in Tamil. Some like the persons on the Treasury Benches may have a flair for that language.





**திரு. எஸ். ராகவனந்தம் :** தமிழ்நாட்டு சட்ட மன்றப் பேரவையிலே
தமிழிலே பாடம் கற்றுக் கொடுக்கக் கூடாது என்று பேசுவதைக் கேட்கவே
எனக்குக் கவலையாகவும், வேதனையாகவும் இருக்கிறது. தமிழகத்திலே
ஒரு தமிழ் அரசாங்கமே இருந்துகொண்டிருக்கும் பொழுது, தமிழ் எல்லா
வகையிலேயும் முன்னேறுவதற்கு 40 வருஷம் ஆகும் என்று ஒரு கால
நிர்ணயத்தைச் சொன்னால், நான் இந்த அவையை விட்டு வெளியே போக
வேண்டிய 'நிலைமை இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

"This should not happen in the Tamil Nadu Legislative Council'.

THIRU G. VASANTHA PAI: I never said that.

THIRU S. RAGHAVANANDAM: I want to tell the Chair that it is rather humiliating to hear such a thing being stated on the floor of the Tamil Nadu Legislature. We may have to think of withdrawing from the House.

DEPUTY CHAIRMAN: The hon. Member may please state his view in his speech.

**மாண்புமிகு திரு பி. யு. ஷண்முகம் :** மாண்புமிகு உறுப்பினர் திரு
வசந்தபாய் எதையும் பேசுவதற்கு உரிமை உண்டு. தமிழ்நாட்டிலே
தமிழுக்காக நான் வாதாட வேண்டிய துர்பாக்கியம் இருக்கிறதே என்றுதான்
வருத்தப்படுகிறேன். தொடர்ந்து அவர் பேசலாம். தமிழர்களுடைய மன
தைப் புண்படுத்துவது சரியில்லை என்று தமிழ் மக்கள் சார்பில் நான்
அவருக்குச் சொல்லிக்கொள்கிறேன். அது சரியான முறையல்ல என்பதை
வலியுறுத்திக் கூறுகிறேன்.

THIRU G. VASANTHA PAI: Mr. Deputy Chairman, Sir, I think I have made it abundantly clear that I have nothing against the Tamil language as such. I have only said that Tamil should be the medium of instruction along with English up to the B.A. Degree. But I am now concentrating on the study of scientific subjects like Mathematics, Physics Chemistry and so on. I think this august body cannot curtail my freedom' of speech.

**மாண்புமிகு திரு பி. யு. ஷண்முகம் :** மறுபடியும் வலியுறுத்திக்
கூறிக்கொள்கிறேன். அவர் இந்த அவையில் உறுப்பினர் என்ற முறை
யில் எதை வேண்டுமானாலும் பேசலாம். இந்த ஒரு நாட்டில்தான்
தாய் மொழிக்காக வாதாட வேண்டிய அவசியம் வந்திருக்கிறதே தவிர,
வேறு எந்த நாட்டிலேயும் இந்தத் துர்பாக்கிய நிலைமை கிடையாது. நம்
முடைய தமிழ்த் தாயின் நிலைமை அவ்வளவு பரிதாபகரமாக இருக்கிறது

THIRU G. VASANTHA PAI: Sir, I have brought forward tl resolution with a full knowledge of my rightsand liberties as a Member o. this House. I would like to submit again, as I have repeatedly stated in

the course of my speech, that I am not against Tamil being the medium of instruction. I have said that Tamil may be the medium of instruction 6-10 p.m up to the B.A. Degree along with English. I plead for a better understanding of my Resolution. I have only said that till such time that we are able to get good translations and suitable expressions in Tamil for English expressions in regard to scientific subjects, in order to keep pace with the advancement taking place in the rest of the world, we should retain English also along with Tamil as medium of instruction. Till such time only I want English should be retained. That is all my object.

Now, Sir, I will conclude my speech by saying that in moving my Resolution, I mean no disrespect to any person in Tamil Nadu or to the Tamil language, which I also respect very much. I am moving the Resolution out of regard for the children of Tamil Nadu who should be given the facility to opt for either the Tamil medium or the English-medium through their parents and the State should not enforce any medium on them. That is all I say and it is in that view that I am moving the Resolution for the acceptance of the House.

**திரு டி. கே. ஷண்முகம் :** பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே இந்தத் தீர்மானத்தின் மீது எனக்குப் பேச வாய்ப்பு அளித்ததற்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு வசந்தபாய் அவர்கள் தாம் கொண்டு வந்துள்ள தீர்மானத்தைப் பற்றி மிகுந்த உணர்ச்சியோடு பேசினார்கள். அதன் மூலம் இந்த மன்றத்திலே வீற்றிருக்கும் எங்களைப் போன்ற அன்பர்களுடைய உணர்ச்சிகளையும், அமைச்சர்களுடைய உணர்ச்சிகளையும் கிளப்பிவிட்டார்கள். பொதுவாக, "விளக்கு அணையும்பொழுது ஜோதி விடுவது இயற்கை" என்று தமிழிலே ஒரு பழமொழி உண்டு. ஆங்கில ஆதிக்கத்தின் அந்திய காலம் நெருங்கிக்கொண்டிருப்பதால், உணர்ச்சியும், வேகமும் அதிகமாகத்தானிருக்கும். 1,000 வசந்த பாய்கள் முயற்சித்தாலும் கூட, எல்லாக் கட்டங்களிலேயும் தமிழ் பயிற்சி மொழி ஆவதைத் தடுக்கவே முடியாது என்பதை இந்த மன்றத்திலே உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு பாய் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தின் வாசகங்கள் தெளிவாக இல்லை. நான் அதைத் தமிழிலேதான் படித்தேன். எனக்கு ஆங்கிலம் சரியாகத் தெரியாது. ஓரளவுக்கு அவ்வப்பொழுது சிறு, சிறு வார்த்தைகளைத்தான் புரிந்துகொள்ள முடியும். எனவே, அதை நான் தமிழிலேதான் படித்தேன். அந்தத் தீர்மானத்திலே அவர்களுக்கே தெளிவு இருக்கிறதா, இல்லையா என்பது பற்றிய ஐயப்பாடு எழுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வீட்டு மொழி தமிழ் அல்ல : நம் எல்லோருக்கும் அது நன்றாகத் தெரியும். தமிழ்த் திரு நாட்டிலே உள்ள சிறுபான்மையினரிலே ஒருவர் அவர். அப்படிப்பட்டவர், தமிழுக்கு விரோதமாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பது, இந்த மன்றத்திலுள்ளவர்களையும், இந்த மன்றத்திற்கு வெளியேயுள்ள கோடிக்கணக்கான பொதுமக்களையும் அவமதிப்பதாகவும், அவர்களுடைய உள்ளங்களைப் புண்படுத்துவதாகவும், உள்ளது என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் தமிழ் பயிற்சி மொழி ஆவதற்குத் தடையாக இல்லாமல், சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற முறையிலே ஒரு தீர்மானம் கொண்டுவந்திருந்தால், நான் அவரைப் பாராட்டியிருப்பேன். மைசூர் சட்டமன்றத்திலே தமிழர் ஒருவர் இடம் பெற்று, 'அவர் கன்னடம் பயிற்சி மொழியாக இருக்கக் கூடாது' என்று ஒரு தீர்மானம் கொண்டுவர முடியுமா ? இன்று பெங்களூரிலே தமிழர் படுகின்ற பாடு எல்லாம் நமக்கு நன்றாகத் தெரிந்ததுதானே !

இனி தீர்மானத்தின் வாசகங்களைப் பார்ப்போம். ஆங்கிலமும், தமிழும் இரண்டும் பயிற்சி மொழிகளாக இருக்கலாம் என்கிறார் நண்பர் அவர்கள். மாணவர்களுக்கு ஏக காலத்திலே ஒரு மொழிதான் பயிற்சி மொழியாக இருக்க முடியும். இரு மொழி பயிற்சி மொழிகளாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. தமிழைப் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலமும், ஆங்கிலத்தைப் பயிலும் மாணவர்களுக்குத் தமிழும் கட்டாயமாக இருக்க வேண்டும்" என்று அவர்கள் தீர்மானத்திலே கூறுகிறார்கள். பயிற்சி மொழி எதுவாக இருந்தாலும், மாணவர்கள் பயிலக் கூடிய பருவம் முழுவதும் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகக் கட்டாயமாக இருக்கும் என்பதுதான் அரசின் கொள்கையும் கூட. தமிழ் மொழி எல்லா மட்டங்களிலேயும் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும் என்று நான் சார்ந்துள்ள தமிழரசுக் கழகம் கூறுகிறது. அது அதனுடைய ஜீவாதாரமான கொள்கை. அது கூட ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக இருப்பதை இதுவரை ஆட்சேபிக்கவில்லை. பயிற்சி மொழிகளைப் பெற்றோர்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். இதை நானோ, நான் சார்ந்திருக்கும் தமிழ் அரசுக் கழகமோ, அல்லது கோடிக்கணக்கான தமிழ் மக்களோ ஏற்க முடியாது என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



தமிழ்நாட்டிலே தமிழ்தான் எல்லாக் கட்டங்களிலும் பயிற்சி மொழி 6-20 p.m. யாக இருகக வேண்டுமென்பது நான் சார்ந்துள்ள தமிழரசுக் கழகத்தின் கொள்கை. ஏன், இன்றைய அரசின் கொள்கையும் அதுதான். இன்று இல்லாவிட்டாலும் படிப்படியாக, வெகு விரைவில் தனியார் கல்லூரிகளிலேயும் தமிழை மட்டும் பயிற்சி மொழியாக ஆக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதில் கொஞ்சம்கூட ஐயப்பாடு இல்லை. பேரறிஞர், மாமேதை அண்ணா அவர்கள் 23—1—68 அன்று சட்டப் பேரவையில் அதற்கான வாக்குறுதியினைத் திட்டவட்டமாக அளித்திருக்கிறார்கள். அரசின் போக்குக்கு மாறாக, திரு வசந்தபாய் அவர்கள், அவருடைய தீர்மானத்திலே, "அறிவியல், கணிதம் ஆகிய பாடங்கள் ஆங்கிலத்தில் மட்டும் கற்பிக்கப்பட வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். "தேனுக்கு கொடுக்கிலே விஷம்" இருப்பது போல் இந்தத் தீர்மானத்திலேயுள்ள விஷம் தோய்ந்த பகுதி அதுதான். இப்படி எல்லாம் சொல்லி பட்டதாரிகள் தொகுதி வாக்காளர்களைக் குழப்ப முயல்கிறார் நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். இதைவிட, எல்லாக் கட்டங்களிலும் ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்று சொல்லி இருந்தால், அப்படித் துணிவோடு அவர் எடுத்துச் சொல்லியதற்காக நான் அவரைப் பாராட்டி இருப்பேன். எனவே, ஒட்டு மொத்தமாக நான் சொல்ல விரும்புவது, இதுதான். தமிழரசுக் கழகத்தின் சார்பிலும் கோடிக்கணக்கான தமிழ் மக்களுடைய சார்பிலும் வன்மையாக இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன் என்று பணிவோடு சொல்லி அமைகிறேன்.

***திரு எஸ். ராகவானந்தம் :** மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, முதலிலே என்னுடைய பெயரை அழைத்தபோது நான் பேசாமல் இருந்ததற்கு மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு வசந்த பாய் அவர்கள் தமிழில் கணிதம், அறிவியல் பாடங்களைக் கற்றுக் கொடுக்க சக்தி இல்லை என்று பேசியதைக் கேட்டு நான் கொதிப்படைந்த காரணத்தால், சற்று அவகாசம் கேட்டதற்கு, மீண்டும் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பி.ஏ. பட்ட வகுப்புக்கு ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று சொன்னதற்கு நான் வருத்தப்படவில்லை. 40 ஆண்டு காலம் பிடிக்கும் என்று சொல்வதைக் கேட்டுக்கொண்டிருக்கிற துர்பாக்கிய நிலை வந்ததை எண்ணித்தான் நான் வருத்தப்படுகிறேன். ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று அவர் சொன்னபோது, ஆங்கிலம் எனக்குத் தெரியாது, அவருக்கு ஆங்கிலம் நன்கு தெரியும், எனக்குத் தமிழ் தவிர வேறு அறிந்து கொள்ளும் சக்தி இல்லை என்று பயப்படவில்லை. என்னுடைய ஒப்பற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் உலகத்திலேயே ஆங்கிலத்தில் மிக அழகாகப்பேசகூடிய ஆற்றல் படைத்த ஒருவர் என்று பெயர்பெற்றவர். நான் எஸ்.எஸ்.எல்.சி. வரையில் படித்திருந்தாலும், திரு வசந்த பாயை விட அழகாகப் பேசாவிட்டாலும், ஆங்கிலத்தில் அந்த அளவில் என்னாலும் பேச முடியும். இருந்தாலும், ஆங்கிலத்தின் "யுடிலிடி", அதனுடைய உதவித் தன்மையை, பலனை நாங்கள் மறுக்கக்கூடியவர்கள் அல்ல.

[திரு எஸ். ராகவானந்தம்] [28th March 1970

ஆனால் தமிழிலே போதிக்க முடியாது என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை மறுத்து, தமிழிலே போதிக்க முடியும் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ரஷ்யாவிலே எல்லாப் பாடங்களும் ரஷ்ய மொழியில் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். நானும் அதைப் படித்திருக்கிறேன். ஆங்கிலமும் கம்பல்சரி, கட்டாயம். ஆனால் மற்ற வகைப் பாடங்களும் ரஷிய மொழியிலே தான் சொல்லித் தருகிறார்கள். தமிழர்கள் கூடியுள்ள இந்த மன்றத்தில் நான் இதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாங்கள் அறிஞர் அண்ணாவின் தலைமையில், முன்னேற்றக் கழகம் ஆனாலும், திராவிடர்க் கழகமாக இருந்தபோதும் சரி, தமிழ் மொழி மீது இந்தி ஆதிக்கம் செலுத்தியதை எதிர்த்துச் சிறை சென்றிருக்கிறோம். எங்கள் கடைசிச் சொட்டு ரத்தம் இருக்கும் வரை, எந்த மொழி ஆதிக்கம் செலுத்தினாலும், அதை எதிர்த்தே தீருவோம். அது எங்கள் உயிர் மூச்சு. எதிர்க்கட்சியாக இருந்தபோது, சிறை சென்றிருக்கிறோம். தமிழுக்கு எந்தவகையிலே தகுதி இல்லை ? தமிழில் கற்றுக்கொடுக்க முடியாது,புத்தகங்களை உருவாக்க முடியாது என்று எதைக் கொண்டு சொல்கிறார்கள் ? தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய நாம் தமிழிலே பாடம் படிக்க முடியாது என்று எதைக் கொண்டு சொல்கிறார்கள் ? ஆங்கிலம் படிக்கத் தெரிந்தவர் எத்தனை பேர் ? ஆங்கிலம் பேசக் கூடியவர்கள் எத்தனை பேர், ஆங்கிலத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் ? திரு வசந்த பாய் பேசியதை நான் கவனித்துக்கொண்டிருந்தேன். அதில் எத்தனை இலக்கணப் பிழைகள் இருந்தன ? தமிழால் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையுடைய தி.மு. கழகத்தினுடைய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. படிப்படியாகப் பல ஆண்டுகளில், நாளாவட்டத்தில், எப்படித் தமிழைப் புகுத்த வேண்டும் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அவசர அவசரமாக ஆங்கிலத்தை எடுத்துவிடவில்லை. அறிஞர் அண்ணா எங்களுக்குச் சொல்லிக்கொடுத்த பாடமே "Hasten slowly" என்பதாகும். எங்களுடைய கொள்கை தமிழுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, அதே நேரத்தில் ஒரு மாநிலத்திற்கும் மற்றொரு மாநிலத்திற்கும் தொடர்பு ஏற்படுத்துவதற்கு ஒரு நாட்டிற்கும், வேறு நாட்டிற்கும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டியது அவசியமென்று நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். National integration, International integration இரண்டுக்கும் சேர்த்து ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று சொல்வதிலே இருவேறு அபிப்பிராயத்துக்கு இடமில்லை. ஆனால் இந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன் திரு வசந்தபாய் பேசியது "இன்சினுவேஷன்" ஆக இருந்தது. தமிழுக்கு எந்தத் தகுதி இல்லை ? 40 ஆண்டுகள் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் என்பதை மெத்த மனவருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். என்னாலே பொறுத்துக் கொண்டிருக்கமுடியவில்லை. பொறுத்துக் கொண்டிருக்கத் தயாராக இல்லை. எம்.ஏ. பட்டம் பெற்ற அறிஞர் அண்ணா (Master of Arts) கலையில் எஜமானன் என்ற பட்டம் பெறுகிறவரையில் தமிழில் சொல்லிக் கொடுக்க முடியும், தமிழுக்கு அந்தத் தகுதி இருக்கிறது என்று சொல்லியிருக்கிற காரணத்தினால், இந்தத் தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன் என்று சொல்லி இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : I never said Tamil should not be the medium for arts courses. I want to correct the hon. Member because he was referring to M.A. and other things. I was talking only about Science subjects being taught in English.

* திரு எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு வசந்தபாய் கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்க்கிறேன். அந்தத்



28th March 1970] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

தீர்மானத்தில் முதல் பகுதி தேவையில்லாத ஒன்று. பட்டப்படிப்பு ஆங்கிலத்தில் கற்பிக்கப்பட வேண்டும். தமிழில் கற்பிக்கக் கூடாது என்று சொல்வதுதான் அவருடைய தீர்மானத்தின் பொருளாக அமைகிறது. அதை நான் உண்மையிலேயே வன்மையாகக் கண்டிக்கிறேன். எதிர்க்கிறேன். அவர்கள் கூறுகின்ற காரணங்களை ஒவ்வொன்றாக எடுத்து பதில் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர் கூறிய காரணங்களில் தமிழ், இன்றைக்கு பயிற்றுவிக்கும் தகுதி பெறவில்லை என்பது முக்கியமாகும் அவர்கள் சொன்னார்கள், நானும் மொழி பெயர்ப்பு மூலமாக தமிழ் படித்திருக்கிறேன் என்று. மொழி பெயர்ப்பு மூலமாக ஒரு மொழியைச் சரியாகத் தெரிந்துகொள்ள முடியாது. சிலப்பதிகாரம் என்பதை ஆங்கிலத்தில் படிக்கும்பொழுது, சிலப்பதிகாரம் என்றும் கோதையார் என்பதை ஆங்கிலத்தில் கோடையாறு என்றும் எழுதுகிறோம். ஒரு மொழியை மற்றொரு மொழியில் மொழி பெயர்த்து இலக்கியம் படைத்துவிட முடியாது. நானும் தமிழ் படித்திருக்கிறேன் என்று சொன்னால், அது அவல நிலைதான். அவர் சொல்லியிருக்கிற இன்னொன்று தமிழ் மொழியில் விஞ்ஞானப் பாடங்களைக் கற்பிப்பதற்குத் தகுதியான சொல்வளம் இல்லை என்பதே. அது உண்மைக்குப் பொருத்தமானது அன்று. ஏனென்றால் தமிழ் மொழியில் பிற மொழிகளைவிட எல்லா வளங்களும் அதிகம் இருக்கின்றன என்பது வரலாறு காட்டுகிற உண்மை. சங்க இலக்கியம் காட்டுகிற உண்மை. சங்க இலக்கியத்தை ஆழ்ந்து படித்தால், பல இலக்கணச் சொற்கள், பல விஞ்ஞானச் சொற்கள், ஆட்சிச் சொற்கள் இருப்பதைக் காணலாம். ஆங்கிலம் 200 ஆண்டுகள் ஆட்சி மொழியாக இருந்ததனால், தமிழ் முன்னேற்றம் அடையவில்லை. வீழ்ந்துவிட்டது. கிரேக்க மொழி வளர்ந்திருந்ததைவிட தமிழ் மொழி ஒரு காலத்தில் அதிகம் வளர்ந்திருந்தது. பிறகு தமிழ் உணர்ச்சி குறைந்து ஆட்சி பீடத்தில் இல்லாத காரணத்தினால், பல்லாயிரக் கணக்கான வருஷங்கள் தொடர்ந்து தமிழ் ஆட்சி பீடத்திலிருந்து மறைந்திருந்த காரணத்தினால், இன்று இந்த அவல நிலைக்கு ஆளாகியிருக்கிறோம். அந்த நிலையை இந்த மன்றத்தில் இருக்கிற தமிழ் உணர்ச்சி கொண்ட தமிழர்கள் ஆட்சி புரிகிற இந்த நாளில் அகற்ற முயல்கிறோம்.

இந்த நிலை இப்போது மாறியிருக்கிறது. தமிழ் உணர்ச்சி பெற்ற 6-30
தமிழர்கள் ஆட்சி நடத்துகிற இந்த நாளில் அதை அகற்ற முயலுகிற p.m.
காரியத்திற்கு நண்பர் அவர்கள் உடந்தையாக இருக்க வேண்டுமென்று கருதுகிறேன். அவர்கள் கூறினார்கள், சில தமிழ் மொழி வார்த்தைகள் எல்லாம் புரிவதில்லை என்று. அவருக்குப் புரிவதில்லைதான். கமிட்டியை ஆயம் என்று சொன்னால் எப்படிப் புரியும் என்றார்கள். மொழி முதலில் புரிவதில்லை. பிறந்தபோது மொழி புரிவதில்லை. சொல்லிச் சொல்லி, தெரிந்து, தெளிந்து, காதாரக் கேட்டுக் கேட்டுத் தானே சொல்லைப் புரிந்துகொள்ள முடிகிறது. கமிட்டி என்ற சொல்லைக் கேட்டுப் பழகிய நாங்கள், தமிழர்களாகிய நாங்கள், ஆய்வு என்று கேட்டுப் பழக சில ஆண்டுகள் பிடிக்கும். பொறுத்துக் கொள்ள வேண்டியது தான். ஐந்து வயதுக் குழந்தை என்று நினைத்துக்கொள்ள வேண்டியதுதான். எனக்கு நினைவு வருகிறது, நீதிபதியை நடுவர் என்று சொன்னவுடன் முதலில் கிண்டல் செய்தவர்கள் உண்டு. பெரியவர்களில் பலர் கிண்டல் செய்தார்கள். நடுவர் என்றால் வயலை நடுவாரா என்றவர்கள் உண்டு. நடுவர் மன்றம் என்றால் வயலை நடுவார்களா என்று கேட்டனர். ஆனால் இப்போது யாரும் அவ்வாறு சொல்வதில்லை. நடுவர் என்றால் நீதிபதி என்று தெளிவாக ஏற்றுக்கொள்கிறார்கள். உதாரணத்திற்கு தமிழில் பார்க்கலாம், கேட்டேன் என்ற சொல் இருக்கிறது. "ஆஸ்க்" என்றால் வினவுதல், கேட்பது என்றால் "ஹியர்" என்று சொல்கிறோம். ஒருவர் பேசுவதைக் கேட்டேன் என்று சொல்கிறோம். "ஐ ஹியர் திரு வசந்தபாய்" என்று சொல்கிறோம். அவர் இதனைச் செய்தார்களா என்று கேட்டேன் என்பதற்கு "ஐ ஆஸ்க்ட் ஹிம்" என்கிறோம். கேட்டேன் என்ற சொல் இப்படி இரண்டு பொருள்களைச் சொல்ல உதவுகிறது. அவர் பேசுவதைக் கேட்டேன், அவர் இதனைச் செய்வார்களா என்பதைக் கேட்டேன் என்று இரண்டு பொருள்களை ஒரே சொல்லால் குறிக்கிறோம். இதனால் மயக்கம் யாருக்கும் ஏற்படுவதில்லை. நீண்ட

ஆண்டுகளாக இந்தச சொல் இரு பொருளை வழங்குகிறது என்பதை நாம்
தெரிந்து, தெளிந்து ஏற்றுக் கொள்வதன் காரணமாக, மயக்கமில்லை.
பார்த்து, தெரிந்து, கேட்டுத் தெளிந்து கொள்ள வேண்டும். இதைப்
போல பல உதாரணங்களைச் சொல்ல முடியும். வெள்ளையன் இந்த
நாட்டிற்கு வந்தவுடன் பல இடங்களுக்கு வருகிறுன். திருவாரூருக்கும்,
தஞ்சைக்கும் வந்தான் என்று வைத்துக்கொள்ளுங்கள். திரு சுவாமி
நாதன் அவர்கள் எங்கள் தஞ்சை ஆலயத்தைக் கவனிக்க வேண்டும்
என்பார்களே, அந்த ஆலயத்தின் தேர் வருகிறது. வெள்ளையன் இது
என்னவென்று கேட்டான். அவனுக்கு சொல்லிக் கொடுத்து வந்த
துபாஷ், சாமி காரில் போகிருர் என்று சொல்ல அவன் தேரைக்
கார் என்றுதான் சொன்ஞன். இப்போது "கார் பெஸ்டிவல்"
என்று சொல்கிறேம். 6 அடி உயரம் உள்ளதைக் "கார்" என்று
சொல்கிறேம். 80 அடி உயரம் உள்ள தேரையும் "கார்" என்று
ஆங்கிலத்தில் சொல்கிறேம். அதைப்பற்றி யாரும் தகராறு பண்ணுவ
தாகத் தெரியவில்லை. ஆனுல் நாம் கமிட்டியை ஆயம் என்று சொல்வ
தால் பொருள் புரிகிறதா என்று தகராறு பண்ணுகிறேம். ஆங்கிலத்தில்
இந்த ஒரு சொல்லால் இரண்டு பொருளை உணர்த்த முடிகிறதென்ருல்,
எப்படிச் சொல்வது என்று ஆராயாமல் விடுகிருர்கள். பிலாலஜிஸ்டுகள்
ஆராய்ச்சி செய்து இலக்கணத்திலும் மற்றவைகளிலும் நேரத்தை வீணுக்
குவதில்லை. ஆகவே எந்தவிதத் தகராறும் கிடையாது. இந்த ஆராய்ச்சி
யில் மொழியாளர்கள் நுழைவதில்லை. இங்கு நாம் அப்படியுல்ல. இது
புரியவில்லையென்று எண்ணுகிறேம். புரிவதற்குப் பொறுத்துக்கொள்ள
வேண்டும். நான் கல்லூரியினுடைய முதல்வராகப் பணியாற்றி வருகிற
போது, எம்.ஏ. ஆங்கிலம் படித்தவர்கள் உட்கல் யூனிவர்சிடி சர்டிபி
கேட்டைக் கொண்டு வந்தார்கள். பிற மாநிலங்களிலிருந்து பட்டப்படிப்பு
சர்டிபிகேட்டைக் கொண்டு வந்தார்கள். சர்டிபிகேட்டு ஒரிஜனல் இந்தியில்
இருக்கிறது. அதைப் படிக்க முடியாது. அவர்கள் படித்தது ஆங்கிலம்
எம்.ஏ. மற்ற சில மாநிலங்களில் எம்.ஏ. சர்டிபிகேட்டை, ஆங்கிலத்திற்
குரிய சர்டிபிகேட்டை. ஆங்கிலத்தில் கொடுப்பதற்குப் பதிலாக இந்தியில்
கொடுக்கிருர்கள். இந்த நிலை இருக்கும்போது, தமிழக மேலவையி
லிருந்து அங்கத்தினர் தமிழால் முடியுமா என்று கேட்கிருர். ஆனுல்
பிற மாநிலங்களில் எம்.ஏ. ஆங்கிலம் சர்டிபிகேட் இந்தியில் கொடுக்கப்பட்டு
வருகிறது. இவ்வளவு உணர்வு பிற மாநிலங்களில் இருக்கிறது. தாய்
மொழிமீது கொண்ட மோகத்தில் காரில் இருக்கிற எண்ணை இந்தியில்
எழுதுகிருர்கள். நமக்கு அங்கு போனுல் ஒன்றும் படிக்க முடியவில்லை.
ஆனுல் இங்கே நம் பகுதியில் தமிழுக்குத் தகுதியில்லையென்று சொன்
னுல், எப்போதுதான் தகுதி உண்டு என்று சொல்லப்போகிற காலம்
வரப்போகிறது என்று கேட்கிறேன் ? நீந்தக் கற்றுக்கொள்கிருன் என்று
வைத்துக்கொள்ளுங்கள். தண்ணீரில் இறங்காமல் கை, கால்களை உதைக்
காமல் எப்படி நீந்தக் கற்றுக்கொள்வான் என்பது தெரியவில்லை. கற்றுக்
கொள்ள வேண்டுமென்ருல் நனைந்து, நனைந்து தான் ஆக வேண்டும்.
நாமெல்லாம் படிக்கிறபோது "சல்ப்யூரிக் ஆசிட்" என்று படித்தோம்.
இப்போது கந்தக காடி என்று சொல்கிருர்கள். நமக்கு ஒத்துக்கொள்ளாத
தாக இருக்கலாம். இப்போது இளைஞர்கள் தயக்கமில்லாமல் விஞ்ஞான
கூடத்திலே "எக்ஸ்பெரிமண்ட்", என்பதற்குப்பதில் சோதனை செய்
கிறேம் என்று தெளிவோடு சொல்கிருர்கள். நான் கல்லூரியோடு, கல்
வித் துறையோடு நீண்ட நாட்கள் தொடர்புடையவன் என்ற முறையில்
சொல்வேன். தமிழ் இளைஞர்கள் பிற மொழி வழியாகப் பயிலுவதால்
பின் தங்கி நிற்கிருர்கள். தமிழ் மொழி மூலமாக விஞ்ஞானம் போன்ற
பல கலைகளையும் பயிலுவார்களானுல் பிற மாநிலங்களையும் மிஞ்சி நின்று
செயல்படுகிற காலம் விரைவில் வரும். அதை மாண்புமிகு கல்வி அமைச்
சர் அவர்களும், அமைச்சரவையும் விரைவில் கொண்டு வந்து இந்த அரிய,
உயரிய காலத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். அவர்கள் குறிப்பிட்டார்கள். ஜப்
பானில் ஆங்கிலத்திற்கு மாறிவிட்டார்கள் என்று. இன்றுவரை எனக்குத்
தெரிந்த அளவில், ஜப்பானியர்கள் ஜப்பானிய மொழியிலே உயர் கல்வி
பெற்று, விஞ்ஞான அறிவு பெற்றதால் தான் குறைந்த செலவில்
உயர்ந்த பொருள்களைத் தயாரிக்கிருர்கள். மற்ற நாடுகளில் ஒரு விமானம்



20 லட்சம் ஆகுமென்ருல், அவர்கள் 5 லட்சத்தில் தயாரிக்கிருர்கள்
ருஷ்யாவில் எனக்கு நெருங்கிய நண்பர் இருக்கிருர். தமிழ் உணர்ச்சி
யோடு தம் மகளுக்குத் தமிழி என்று பெயர் வைத்திருக்கிருர். அவருக்கு
ஆங்கிலம் தெரியும். ஆனுல் பயன்படவில்லை. ருஷிய மொழியைப்
படித்து விட்டுத்தான் அவர்களோடு பேசிக் கொள்கிறேன் என்று சொல்
கிருர்கள். அவர் குறிப்பிட்டார், ஏதோ ஒரு பகுதியில் ஒரு பெரிய
வருக்கு ஆங்கிலம் தெரியாது என்று நினைத்தபோது, அவரும் ஒரு
சொல்லை ஆங்கிலத்தில் பதில் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். ஆங்
கிலம் தெரியாத பலர் பல ஆண்டுகள் அரசியலிலே இருந்துவிட்ட காரணத்
தினுல், இரண்டு மூன்று சொற்களைச் சொல்வதைப் பார்க்கிறேம். அதை
வைத்துக்கொண்டு ஆங்கிலம் தெரிந்தவர் என்று மதித்து விடக்கூடாது
என்பது எனது பணிவான வேண்டுகோள். உலகத் தமிழ் மாநாடு
இங்கு, நடைபெறுகிறபோது சிங்களத்திலிருந்து வந்து கலந்துகொண்ட
அமைச்சர் அவர்கள் சிங்கள நாட்டில் மருத்துவக்கலையைக்கூட எம்.பி.பி.எஸ்.
பட்டப்படிப்பைக் கூட தமிழ்மூலம் கற்பிக்கிறேம் என்று பெரும் மக்கள்
கூடியிருக்கிற மாநாட்டில் சொன்னதைக் காதாரக் கேட்டு, அந்தநிலை
இங்கு வருகிற நன்னுளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறபோது, கணிதத்தை
யும், மற்றப் பாடங்களையும் தமிழில் படிக்கக்கூடாது என்ற தீர்மானம்
வருவதே துர்ப்பாக்கியம். இந்த துர்ப்பாக்கிய நிலையிலிருந்து தன்னைத்
தவிர்த்துக்கொள்வதற்கு திரு. ராகவானந்தம் அவர்களுக்கு அரை
மணி நேரம் பிடித்தது. அவர் தன்னை நிதானப்படுத்திக் கொள்வ
தற்கு அரை மணி நேரம் பிடித்தது என்ருல், அது தமிழ்
உணர்ச்சியைக் காட்டிக் கொள்கிற அளவுகோல் என்று தெரிந்து
கொண்டேன்.

நான் கல்லூரியிலே பணி புரிகிற போது கவனித்திருக்கிறேன். அவர்
தீர்மானத்தில் ஒரு பகுதி பொதுவாகச் சொன்னுலும், தீர்மானத்தின்
வாசகத்திற்கு வருகிறேன். "கல்லூரிப் புகுமுக வகுப்பு வரை தமிழிலும்,
ஆங்கிலத்திலுமாக இரு பயிற்சி மொழிகள் இருக்கலாம்". ஆங்கில வழி
யாகப் பயிலுகிறவர்களும் தமிழ் மொழி வழியாகப் பயிலுகிறவர்களும்
இருக்கிருர்கள். அரசு சுற்றறிக்கை விட்டிருக்கிறது. ஒவ்வொரு கல்லூரி
யிலும் ஒரு பிரிவேனும் தமிழ் வழியாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும்
என்று. ஆகவே, தீர்மானத்தின் இந்தப் பகுதி தேவையில்லாத ஒன்று.
தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஆங்கிலம்
இன்றும் சொல்லிக் கொடுக்கிருர்கள். எல்லோருக்கும் "பர்ஸ்ட் பார்ட்"
ஆங்கிலம்தான். எல்லோரும் கட்டாயமாக ஆங்கிலத்தைப் பயின்று வரு
கிருர்கள். ஆகவே தீர்மானத்தில் இந்தப் பகுதியும் தேவையில்லாத
ஒன்று. ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்ட மாணவர்களுக்
குத் தமிழ் அல்லது தாய் மொழி பயில வேண்டும் என்று
சொல்கிருர்கள். தமிழைக் கட்டாயம் என்று சொல்லவில்லை. விருப்
பத்தை வைத்து இங்கே தப்புவதற்கு வழி வைத்துக் கொண்டார்கள்.
இதுவும் இப்போது அப்படித்தான் இருக்கிறது. பெற்ருேர்களே பயிற்சி
மொழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிருர்கள். மாணவர்களோடு
கலந்து தேர்ந்தெடுக்க வேண்டுமென்ருர்கள். கல்லூரியில் பார்க்கிறபோது
என்ன எண்ணம் இருக்கிறதென்ருல், ஆங்கில மொழி வழியாகப் படித்
தால் தான் வேலை கிடைக்கும் அல்லது மெடிகல் காலேஜ் அட்மிஷன்
கிடைக்கும், என்ஜினீயரிங் கல்லூரியில் அட்மிஷன் கிடைக்கும் என்று
தவருக நினைக்கிருர்கள். அதே நேரத்தில் மாணவர்கள் வகுப்பில்
சேர்ந்து ஒரு டர்ம் இரண்டு மாதம் ஆனுலும் ஆங்கில மொழிப் புலமை
குறைவின் காரணமாக நன்கு படிக்கிற மாணவர் கூட தோற்று விடு
கிருன். பிறகு அவனைத் தமிழ் பயிற்சி வகுப்பிற்கு அனுப்பினுல், முதல்
தரத்தில் வெற்றி பெறுகிருன். தமிழ் பயிற்சி வகுப்பிற்கு மாற்றி
பல்கலைக் கழகப்பரீட்சை எழுதி நல்ல மதிப்பெண்கள் பெற்று வருகிருன்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததன் மூலமாக உறங்கிக்கொண்
டிருக்கின்ற தமிழ் சமுதாயம் விழித்தெழுந்து தங்களுடைய கடமையை 6-40 p.m.
யும், பொறுப்பையும், தக்க காலத்தில் நிறைவேற்ற வேண்டும். இன்னு
மும் காலம் கடத்தினுல், இத்தகைய தீர்மானங்கள் இன்னும் பல

வந்து நம்மை எல்லாம் துயரத்திலே ஆழ்த்திவிடும். எனவே, எல்லாக் கட்டங் களிலேயும், விஞ்ஞானம் உட்பட, தமிழிலேயே பயிலுவிக்க வாய்ப்பு ஏற்படச் செய்து, பிற மொழியாளர்கள் இருந்தால், அவர்கள் விரும்பு கின்ற ஆங்கில மொழியில் பயிலுவதற்கு "சிறுபான்மையினர் பாது காப்பு" என்ற பிரிவை வைத்துக்கொள்ள வேண்டும். அதோடு மற்ற மாநிலங்களிலே இடம் வாங்கி அவர்களை எல்லாம் அங்கே அனுப்ப வழி செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்தாமல், அவர்களே தமிழில் எல்லா கட்டங்களிலேயும் கற்பிக்க வேண்டுமென்று பிரேரேபித்து, அவரைப் பற்றித் தமிழ் மக்கள் மனதிலே இருக்கின்ற களங்க உணர்வை மாற்றிக்கொள்வார் கள் என்று நம்புகிறேன். எனவே, இவற்றைக் கூறிக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Will the Government kindly consider whether it is not necessary to prescribe a short period of three or four months for the Commission to submit its report ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, the Government do not think it necessary. It has already been pointed out that the report has to be submitted as early as possible.

**திரு. எம். எத்திராஜுலு :** இந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கக்கூடிய வாடகைப் படியை கொஞ்சம் உயர்த்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

### *Power Connection.*

*249 *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) the year in which motors were purchased with Government loan assistance and supplied to the villagers of Mallur in Thirumanur block ;

(*b*) whether power connection has been secured ; and

(*c*) if not, when it will be available ?

### மின்சார இணைப்பு.

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருமானூர் வட்டாரத்தைச் சேர்ந்த மல்லூர் கிராமவாசிகளுக்கு எந்த ஆண்டு அரசு கடன் உதவியுடன் மோட்டார்கள் வாங்கித் தரப் பட்டது ?

(இ) மின்சார இணைப்பு கிடைத்து விட்டதா ?

(உ) இல்லை எனில், எப்போது கிடைக்கும் ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) 1964-65, 1965-66.

(இ) மின்சார இணைப்பு இன்னும் கிடைக்கவில்லை.

(உ) மல்லூர், மற்றும் இரண்டு கிராமங்களுக்கு மின்சக்தி வழங்குவதற்காக முதற்கண் 1968-ல் தயாரிக்கப்பட்ட திட்டம் ஆதாய மற்றதென மின்சார வாரியத்திற்குத் தெரிய வந்ததே மின்சக்தி நீட்டிப்பு வழங்கு



30th March 1970]

வதில் தாமதம் ஏற்பட்டதற்குக் காரணமாகும். இத் திட்டத்தை ஆதாயமுள்ளதாகவும் வாரியம் ஏற்கத்தக்கதாகவும் செய்யும் வகையில், தேவைப்படும் கூடுதல் மின் இணைப்புகளுக்கு இப்போது இசைவு பெறப்பட்டுள்ளது. பணியை உடனடியாக மேற்கொள்ளும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் திருச்சிராப்பள்ளி, மின்சாரத் திட்டத்தின் மேற்பார்வைப் பொறியாளருக்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கும் எழுதியுள்ளார். மின் நீட்டிப்பு விரைவில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, மல்லூர் கிராமவாசிகளில் எத்தனை பேருக்கு மின்சார மோட்டார்கள் அரசாங்கத்தால் வழங்கப் பட்டிருக்கின்றன ? அவைகளுக்கான மொத்தத் தொகை என்ன ? அந்த மோட்டார்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கும் வரையிலாவது, இந்த அரசாங்கம் அவர்களிடமிருந்து அந்தத் தொகைக்கான வட்டியை வசூலிக்காமல் இருக்குமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அந்தக் கிராமத்திற்கு 1964-65-ல் போடப்பட்ட முதல் திட்டப்படி ரூ. 1,40,200 தேவைப்படும் என்று கூறப்பட்டது. இரண்டாவதாகப் போடப்பட்ட திட்டத்தின்படி-ரூ. 2,19,900 தேவைப்படும் என்று சொன்னார்கள். அவ்வளவுக்கும் அங்கே தெரு விளக்குகள் கேட்டு, வீடுகளுக்கான இணைப்புகள் கேட்டு, விவசாயத்திற்கான மின் இணைப்பு கேட்டு, போதுமான எண்ணிக்கையுள்ளவர்கள் வரவில்லை. எனவே இவ்வளவு செலவழித்து ஆதாயமில்லாமல் ஒரு சிலருக்கு மட்டும் போடுவதா என்ற அடிப்படையில் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. இப்போது மீண்டும் கேட்டதன் காரணமாக, அந்த மல்லூர் கிராமத்தோடு, சிறுவாச்சூர், மணியாக்குறிச்சி ஆகிய இரண்டு கிராமங்களையும் சேர்த்து, விவசாயத்திற்கு 80 எச். பி. என்றிருந்ததை 200 எச் பி. யாக மாற்றி விவசாயத்திற்குத் தேவையான மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று தெரிவித்து, அதற்கு மேலும் தெரு விளக்குகள், மற்றும் வேளாண்மைக்காக அதிகமான மின் அழுத்தம் தரும் அளவுக்கு அதிகப்படுத்தி இப்போது அவர்களுக்குக் கொடுக்க திருச்சி மாவட்டக் கலெக்டர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார். அதன் பிறகு தான் அவர்களுக்கு வட்டியில்லாமல் கொடுப்பதா இல்லையா என்ற பிரச்னையே எழக்கூடும். ஏற்கெனவே இந்தத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி மல்லூர் கிராமத்தில் எத்தனை விவசாயிகளுக்கு எவ்வளவு மின்சார மோட்டார் பம்பு செட்டுகள் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன ? அதற்கு அரசாங்கம் கடனாக எவ்வளவு தொகை வழங்கியிருக்கிறது ? அப்படி அரசாங்கத்தால் வாங்கித் தரப்பட்ட இந்த மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் வரையில் விவசாயிகளிடமிருந்து அதற்கான வட்டி வசூலிக்காமலிருக்க அரசாங்கம் உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** திருமானூர் வட்டத்தில் மல்லூர் கிராமத்தில் இந்த ஆண்டு கடன் உதவியுடன் விவசாயிகளுக்கு மோட்டார் வாங்கித் தரப்படவில்லை. இன்னும் அங்கே மின் இணைப்பே கொடுக்கப்படவில்லை என்கிற நிலையில், எப்படி மின்சார மோட்டார்கள் வாங்கிக்கொடுக்க முடியும் ? மின் இணைப்புக் கொடுக்க ஏற்ற அளவுக்குக் கிராமம் இல்லை என்று தான் நான் படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறேன். இப்போது மின் இணைப்புத் தரக்கூடிய அளவுக்கு அந்தக் கிராமம் தகுதி பெற்றிருக்கிறது. 11 பேர் அங்கிருந்து மோட்டார் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதில் எத்தனை பேருக்குக் கொடுப்பது, எந்த அளவுக்கு விசை தேவைப்படும் என்று பார்த்துத் தான் கொடுக்கப்படும். அவர்களின் விண்ணப்பங்கள் நிறைந்த பட்டியல் அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிறது.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி எத்தனை மோட்டார்கள் அரசாங்கக் கடன் மூலமாக அந்த விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது தான். சுமார் 15 மோட்டார்கள்

வரையிலும் அந்தக் கிராம வாசிகளுக்குத் தரப்பட்டிருக்கின்றன என்று எண்ணுகிறேன். அந்த மோட்டார்களை வாங்கித் தருவதற்கு அரசாங்கத்திற்கு மொத்தம் எவ்வளவு தொகை செலவானது ? அப்படி வாங்கித் தரப்பட்ட மோட்டார்களுக்கு விவசாயிகளிடமிருந்து வட்டித் தொகை வசூல் செய்யாமலிருக்க அரசு உத்தரவிடுமா என்பது தான் கேள்வி. ஏனென்றால், 5, 6 வருஷங்களாகவே அவர்கள் அந்த மோட்டார்களை வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவர்களுக்கு மின் இணைப்பு கிடைக்கவில்லை. இப்போது அவர்களை வற்புறுத்திக் கடன் தொகையைத் திருப்பித் தரவேண்டும் என்று வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதால் நான் இதைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, இங்கே எனக்குக் கொடுக்கப்பட்ட விவரத்திலிருந்து இது வரை அந்தக கிராமத்தில் 11 பேர்கள்தான் பம்புசெட்டு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இன்னும் மின் இணைப்புத் தரவில்லை. ஆகவே அவர்களுக்கு பம்பு செட்டு கொடுக்கவில்லை என்று தான் குறிப்பு இருக்கிறது.

**திரு. டி. கே. சுப்பையா :** தலைவர் அவர்களே, மின்சார மோட்டார் வாங்கிக்கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அங்கத்தினனுகிய நான் நிரூபணம் செய்துவிட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, இதில் நிரூபித்துவிட்டால் என்ன பதில் என்று சவால் விடுவதற்கு இடமேயில்லை. தமக்குக் கிடைத்திருக்கிற குறிப்பின் அடிப்படையில், அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறார்கள். இங்கே குறிப்பிடப்பட்ட இந்த ஊரில் மட்டுமல்ல, பல இடங்களில் இப்படி நடந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 5, 6 ஆண்டுகளுக்கு முன்னுலேயே வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஒத்துக்கொண்டார்கள். 1962-ம் ஆண்டில் வாங்கிக் கொடுத்த மின்சார மோட்டார்களுக்கு இன்னும் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறது. இது யாருடைய குறையும் அல்ல. ஏற்கெனவே மின்சார இலாக்காவுக்கும் கடன் கொடுப்பதற்கும் தொடர்பில்லாமல் இருந்தது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு ஒரு சுற்றறிக்கை அனுப்பியது. மின்சாரம் கொடுப்பதும், கடன் கொடுப்பதும், ஒரு சீராக நடக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். எனவே இதிலெல்லாம் சவால் விடுவது சரியில்லை. அப்படியே அந்த ஊரில் கொடுத்திருந்தால், மின்சார இலாக்காவைக் கேட்டால், இதற்கான ஏற்பாடு செய்யலாம்.

**திரு. டி. கே. சுப்பையா :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு மாண்புமிகு தலைவர் அவர்களின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளுவது என்னவென்றால், இதில் நான் சவால் விடுவதாகக் கருத வேண்டாம். சர்க்காருடைய பணம் போயிருக்கிறது என்றுதான் சொல்லுகிறேன். சரியான தகவல் இல்லை என்றால், மறுமுறை கேட்டுத் தெரிவிக்கிறேன் என்றால், திருப்தியடைய முடியும். அதை விடுத்து என்னுடைய மூலக் கேள்விக்கே சம்பந்தமில்லாமல் அமைச்சர் பதில் அளிக்கும்போது, அதற்குப் பக்கபலமாகச் சொல்லுகிற நிலைமையை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு "பக்க மேளம் கொட்ட" யாரும் வரவில்லை. நான் சொன்னதெல்லாம் பல ஊர்களில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் கூட 1962-ம் ஆண்டு வாங்கிக் கொடுக்கப்பட்ட மின்சார பம்புசெட்டுகளுக்கு நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு தான் மின்சாரம் கொடுத்திருக்கிறோம். இதற்குக் காரணம் கடன் கொடுக்கிற இலாக்காவுக்கும் மின்சார இலாக்காவுக்கும் தொடர்பு இல்லாத சூழ்நிலை இருந்து வந்தது. இதை இந்த ஆட்சி வந்த பிறகு, மாற்றி அமைத்திருக்கிறோம். எங்கே கடன் கொடுக்கிறார்களோ அங்கேயே மின்சார இலாக்காவையும் கேட்க வேண்டும் என்று விதி பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.



அது இப்போது நடைமுறைக்கு வந்திருக்கிறது. எனவே அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து தான் அவர் பதில் சொல்ல முடியும். ஏற்கெனவே கொடுத்ததாக அங்கத்தினர் சொன்னால், நிச்சயமாக அதை விசாரித்துச் சொல்லலாம். எனவே இதில் அமைச்சர் மறைக்கிறார் அல்லது மறுக்கிறார் என்று அங்கத்தினர் அவர்கள் இவ்வளவு கோபம் கொள்ள வேண்டியதில்லை.

**திரு. டி. கே. சுப்பையா :** நான் தவருகப் பக்க மேளம் என்று சொல்லவில்லை. நான் சொன்னது பக்கபலமாக என்ற வார்த்தைதான். அமைச்சர் அவர்கள் "பக்க மேளமாக" என்று சொன்னதாக நினைக்கிறேன். என்னுடைய கேள்வி எத்தனை பேருக்கு அரசாங்கத்தின் கடன் உதவியுடன் மோட்டார்கள் வாங்கித் தரப்பட்டன என்பது தான். அரசாங்கத்தின் உதவியுடன் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட இலாக்காவிலிருந்து தகுந்த பதில் வரவில்லை என்றால், அமைச்சர் அவர்கள் அதற்கான விவரத்தைச் சேகரித்து மறுமுறையாவது எடுத்துக் கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : The Hon. Minister may ask for notice.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டதைப் போல், இங்கே எனக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பின்படி, இது வரை 11 பேர் பம்புசெட்டு வேண்டும் என்று கோரி மனுச் செய்துகொண்டிருக்கிறார்கள். இதில் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது என்பதற்கான தகவல் எதுவும் இல்லை. அந்தக் கிராமத்திற்கு இன்னும் மின் இணைப்பு தரப்படவில்லை. அதற்குப் பிறகு தான் எத்தனை மோட்டார் பம்புசெட்டுகள் கொடுப்பது என்ற பிரச்னையே எழும். முன்னுலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல், பம்புசெட்டுக்குக் கடன் கொடுக்கிற இலாக்காவுக்கும் மின்சார இலாக்காவுக்கும் தொடர்பில்லாமல் நடந்திருக்கிறது. இப்போது இங்கே இருக்கிற விளக்க உரையில் 11 பேர் கேட்டிருக்கிறார்கள் என்று தான் இருக்கிறது. தனிக் கேள்வி கேட்டால், எத்தனை பேருக்கு ஏற்கெனவே கொடுத்திருக்கிறார்கள், அவர்கள் பம்பு செட்டு வாங்கிப் பயன்படுத்தினார்களா இல்லையா என்று சொல்லலாம்.

*Modern Rice Mill.*

*250 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minsiter for Co-operation be pleased to state :

(*a*) the cost of the parboiling unit installed at the Modern Rice Mill at Thiruvarur ;

(*b*) whether it is working to its full capacity ; and

(*c*) if not, the reasons therefor ?

**நவீன அரிசி ஆலை.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) திருவாரூரில் உள்ள நவீன அரிசி ஆலையில் நெல்லை ஓரளவு புழுக்க வைக்கும் பிரிவை நிறுவுவதற்கு என்ன செலவு ஆகியது ?

(இ) அது தனது முழுதிறனுக்கு செயல்படுகின்றதா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ரூ. 2,87,002.76.

(இ) இல்லை.

(உ) நெல்லைப் புழுக்க வைக்கும் பிரிவு, 24 மணி நேரங்கொண்ட ஒரு நாளில் 96 டன் நெல்லைப் புழுக்க வைக்கும் திறன் வாய்ந்தது.

1969-ம் ஆண்டு நவம்பர் திங்களில் வீசிய பெரும் புயலின்போது, கொதிகலன்களிலிருந்து வெளிவரும் புகையை வெளியகற்றும் புகை போக்கியின் ஒரு பகுதி முறிந்து விட்டது. அதனால் புகை போக்கியை மீண்டும் அமைத்து, வெளிப்போக்கும் குழாயை பழுதுபார்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு, பாரத கனரக மின் கருவிகள் நிறுவனத்தைச் சேர்ந்த திருச்சிராப்பள்ளி கொதி கலன் பிரிவுடன் இணைந்த வல்லுநர்களைக் கலந்தாலோசித்து, புகைக் குழாயினையும் புகை போக்கியினையும் பழுது பார்க்கும் பணியை மேற் கொண்டு வருகிறது. இப்பணியை முடிப்பதற்குத் தேவையான உருக்குத் தகடுகள் பெறுவதில் புகை போக்கித் தயாரிப்பாளர்களுக்குச் சில இடர்ப் பாடுகள் ஏற்பட்டுள்ளன. இதன் விளைவாக இயந்திரத்தின் திட்டமிட்டத் திறனளவுக்குப் புழுக்கப்பட்ட அரிசியை உற்பத்தி செய்வது தடைப் பட்டுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** புழுக்க வைக்கும் கருவி உற்பத்தி செய்து கொண்டிருக்கிறதா என்று கேள்வி கேட்டிருக்கிறேன். மீண்டும் கேட் கிறேன். அந்த இயந்திரம் தற்போது உற்பத்தி செய்துகொண்டிருக் கிறதா இல்லையா ? இதற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, கேட்கப் பட்ட மூலக் கேள்வி அந்த இயந்திரம் அதன் "புல் கெபாசிட்டிக்கு" வேலை செய்கின்றதா என்பது தான். அதற்குத் தான் நான் பதில் சொன்னேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, துணைக் கேள்வியாகத் தான் கேட்கிறேன். அந்த இயந்திரம் தற்போது வேலை செய்துகொண்டிருக் கிறதா இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** வேலை செய்துகொண்டிருக்க வில்லை. அது புழுங்கலரிசி வேக வைக்க மட்டும் பொருத்தப்பட்டது. அதே சமயம் உலர வைக்கத் தனியாக இயந்திரம் தேவைப்பட்டது. அந்த இயந்திரம் 1969-ம் ஆண்டு அக்டோபரில் பொருத்தப்பட்டது. நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட புய ல் விழுந்து விட்டது. எனவே அதில் இப்போது உற்பத்தியில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** ரூபாய் 2 லட்சம் செலவில் வாங்கி வைக்கப் பட்ட அந்த இயந்திரம் 1966 முதல் 1969 வரை ஏதோ காரணத்தினால் வேலை செய்யவில்லை என்றால், அதனால் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படு கிறது என்பதைக் கருதி, அரசாங்கம் இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் நஷ்டம் ஏற்படவில்லை. புழுங்கலரிசி உற்பத்தி செய்யும் பகுதி வேலை செய்யவில்லை என்றால் நஷ்டமில்லை. ஏனென்றால் பச்சை யரிசி உற்பத்தி நடந்துகொண்டிருக்கிறது. கருவி என்பது "கேபிடல்" மூலதனமாக இருக்கிறது. 100-க்கு இவ்வளவு என்ற வகையில் பச்சரிசி உற்பத்தியில் கிடைக்கிறது. பச்சரிசியிலிருந்து கிடைக்கிற தவிட்டிலிருந்து எண்ணெ கிடைக்கிறது. ஆகவே நஷ்டம் எதுவுமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்த இயந்திரத்தின் மூலமாக 2 லட்ச ரூபாய் உபயோகமில்லாத முதலாக இருப்பதால், அந்த முதலீடு அனாவசிய மாகிறது. அதற்கு ஏதாவது வட்டி என்று வைத்தால் கூட அதுவும் அனாவசியமாகப் போகிறது. அவசியமில்லாமல் முன்யோசனையின்றி வாங்கி வைக்கப் பட்டிருக்கிற இயந்திரம் வேலை செய்யும் வகையில் ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, இந்தப் புழுங்கலரிசி உற்பத்தி செய்வதால் உற்பத்தியாளருக்கு லாபம் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. மேலும் நாட்டின் நன்மையைக் கருதி, புழுங்க



லரிசி உற்பத்தி செய்யும் இயந்திரம் தேவை என்று கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்ட இந்த இயந்திரத்தின் புகைபோக்கி 1969-ம் ஆண்டு நவம்பர், புயல்போது விழுந்து விட்டது. அதைச் செப்பனிடுவதற்குத் தகுந்த உருக்குத் தகடுகள் கிடைப்பதில் இடர்ப்பாடுகள் இருப்பதன் காரணமாகக் காலதாமதம் ஆகிறது.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** இந்தப் பழுதடைந்த இயந்திரத்திற்கு பதில் இயந்திரம் வேறு நாட்டிலிருந்து தான் இறக்குமதி செய்யப்பட வேண்டுமா அல்லது அமைச்சர் சொன்னது மாதிரி தகடுகள் மாத்திரம் கிடைக்காத காரணத்தினால், பழுது பார்க்கப்படாமல் இருக்கிறதா ? அப்படித் தகுந்த தகடுகள் வாங்குவதில் என்ன சிரமம் இருக்கிறது ? ஏன் தாமதம் ஏற்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, புயல் காரணமாக அந்தப் புகை போக்கி ஒரு முறை விழுந்துவிட்டது. எனவே, அதை மீண்டும் பழுது பார்க்கும்போது நல்லமுறையில் திருத்தி அமைக்க வேண்டும் என்றுதான் அதற்குத் தேவையான நல்ல உருக்குத் தகடு களைத் தேடிக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் காலதாமதம் ஏற்படு கிறது. திருச்சியிலுள்ள பாய்லர் பிளாண்ட் நிபுணர்கள் கூட இதை வந்து பார்த்து வேண்டியதைச் செய்து வருகிறார்கள். ஆகவே, இதற்கிடையில் நஷ்டம் வருகிறது என்று நினைத்தால், அது சரியல்ல. நான் கூட கால தாமதமாகிறதே என்று வருத்தத்தோடு அவர்களைக் கேட்டபோது, இத னால் என்ன நஷ்டம் வந்தது ; லாபம்தானே அதிகமாக வருகிறது பச்சை அரிசி உற்பத்தியினால் லாபம்தான் அதிகமாக வருகிறது என்று பதில் வந்துகொண்டிருக்கிறது.

**திரு. வி. கே. ராமசாமி முதலியார் :** இவ்வளவு ரூபாய் செலவழித்த இந்த மில் வேலை செய்யாமல் இருக்கும்போது, இன்னும் அதிகமான மில்கள் ஆரம்பிக்கப் போகிறோம் என்று அமைச்சர் கூறியிருப்பது நியாய மாகுமா? எனவே, அதைக் கைவிட அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது இந்த மில் அல்ல. வேறு பல ஆலைகளைப் பொருத்திக்கொண்டிருக்கிறோம். 13 ஆலைகளை மாடர்ன் ரைஸ் மில்களை ஏற்படுத்த இருக்கிறோம். அதில் புழுங்கலரிசி உற்பத்தி செய்யும் இயந்திரம் பொருத்தப்படவில்லை. இந்த இயந்திரம் ஸ்பெஷல் போர்டு பவுண்டேஷ னிலிருந்து கொண்டுவரப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. புழுக்க வைக்கிற இயந்திரம் தனி, உலர வைக்கிற இயந்திரம் தனி, புதிதாக வைக்கப்பட விருக்கும் மாடர்ன் ரைஸ் மில்களில் இந்த இயந்திரங்கள் பொருத்தப் படுவதில்லை. முதலில் குறிப்பிட்ட புழுங்கலரிசி உற்பத்தி செய்யும் இயந் திரத்திற்கு 30 லட்சம் ரூபாய் முதலீடு தேவைப்பட்டிருக்கிறது. புதிதாக வைக்கப்படவிருக்கும் 13 மில்கள், 12 அல்லது 13 லட்சம் ரூபாய் முதலீட் டில் அமைக்கப்பட இருக்கின்றன.

**THIRU A. R. DAMODARAN :** Sir, while it is very interesting to learn from the Hon. Minister that it is more profitable for raw rice to be made rather than boiled rice, may I point out that since this project has been specifically sanctioned by the Ford Foundation, it would be a matter of disgrace for the Tamil Nadu Government to state that the structure which fell down in November could not be repaired till the end of March? It may reflect on the efficiency of our engineers. At least from that point of view, if not from the point of view of profit or loss, may I suggest that this thing may be repaired immediately ? Otherwise, it would cast a reflection on the efficiency of our engineering services.

**THE HON. THIRU SI. PA. ADITANAR :** There is absolutely no reflection on the efficiency of the engineers. They are the most capable people, not only in our country but also when compared with engineers of

[30th March 1970

other countries. The cyclone caused the damage and the chimney got damaged as early as in November 1969. When we repair the chimney, it must be done in the proper manner, so that a second cyclone may not cause any damage to the chimney. That is why there is delay. The damage was caused only in November 1969, about three or four months back. This is not too long a time for repairing a chimney of that kind.

THIRU G. VASANTHA PAI : There was a cyclone in November 1968 also. I do not know whether this damage was caused then or in November 1969 ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : There was a cyclone in 1968 also. But in that cyclone this particular chimney did not fall down. The records here show that the breaking of the chimney happened only in November 1969. The point mentioned by the hon. Member occurred to me also. Therefore, I made it a special point to check up and find out whether the damage occurred only during 1969 cyclone and whether it could be called a cyclone at all. They say that a fast gust of wind must have caused the damage.

THIRU G. VASANTHA PAI: I wanted to know whether the cyclone was the cause of the damage as alleged by the Hon. Minister or it was due to other reasons ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : The Co-operative people who are managing it say that there was some kind of a fast gust of wind in November 1969 immediately after the drying plant was installed and, therefore, it fell down. I am sure they are doing their best to put it in order. In the meantime, I am looking into the accounts and they appear to be in perfect order.

THIRU M. RAJAH IYER : May I know, Sir, whether the Government anticipate a cyclone in 1970 also and, if so, will the structure be cyclone proof when it is set up ?

MR. CHAIRMAN : That is why they have taken it up.

THE HON. THIRU SI. PA. ADITANAR : Mr. Chairman, you have yourself enlightened the hon. Member.

**திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவர் அவர்களே, நெல்லைப் புழுக்க வைக்கும் இயந்திரம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு இரண்டு லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதனால் நஷ்டம் ஏற்படுகிறதா இல்லையா என்று கேட்டால், பச்சை அரிசி அரைப்பதன் மூலமாக லாபம் வருகிறது, அதனால் நஷ்டம் என்பதற்கு இடமில்லை என்று பதில் சொல்லுகிறார்கள். இந்த இரண்டு லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு, அமைக்கப்பட்ட இந்த இயந்திரம் வேலைசெய்யாமல் இருப்பதால் நஷ்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் எப்படிச் சொல்கிறார் என்று விளக்கம் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** லாப நஷ்டக் கணக்கைப் போட்டுப் பார்த்தால் தெரியும். பென்சில் பேப்பரை வைத்துக்கொண்டு எழுதிப் பார்த்தால் இது மிக எளிதாகத் தெரிந்துவிடும். இரண்டு லட்சம் ரூபாய் முதல் போட்டு, இந்த இயந்திரத்தை அமைத்து விட்டிருந்தாலும் அதில் கிடைக்கிற லாபத்தை விட, பச்சை அரிசி உற்பத்தி செய்தால், அதிக லாபம் வருகிறது.



30th March 1970]

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த இயந்திரத்தைச் சும்மா வைத்திருப்பதாலேயே நிறைய லாபம் கிடைத்திருக்கிறது என்றால் இந்த நிலைமை இந்தக் குறிப்பிட்ட இயந்திரத்தை வைப்பதற்கு முன்பே தெரியவில்லையா, இப்போதுதான் தெரிந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இதுசம்பந்தப்பட்ட கூட்டுறவு சொசைடிக்கு இது தெரிந்ததா இல்லையா என்று என்னால் சொல்ல முடியாது. ஏனென்றால் இதெல்லாம் 1966-ல் நடந்தது.

MR. CHAIRMAN : Questions are over.

[NOTE:—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II. ANNOUNCEMENTS.

### (1) *Election of Members to the Privileges Committee.*

MR. CHAIRMAN : I have to inform the House that the following candidates have been validly nominated for election in nine Members to the Committee of Privileges for the financial year 1970–71 :—

1. Thiru R. Krishnaswamy Naidu.
2. Thirumathi S. Manjubashini.
3. Thiru S. Raghavanandam.
4. Thiru C. V. Rajagopal.
5. Thiru M. Sankaralingam.
6. Thiru T. K. Subbiah.
7. Thiru N. Sundaresa Thevar.
8. Thiru G. Swaminathan.
9. Thiru N. Wilson Appollos.

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, nine, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges. The Deputy Chairman is an ex-officio Member.

Under rule 156 (4) of the Council Rules, I have nominated the Deputy Chairman to be the Chairman of the Committee.

### (2) *Election of Members to the House Committee.*

MR. CHAIRMAN : I have to inform the House that the following six candidates have been validly nominated for election to the House Committee for the financial year 1970–71 :—

1. Thiru K. Arivazhagan.
2. Thiru M. Aiyaswamy.
3. Thirumathi Mary C. Clubwala Jadhav.
4. Thiru R. Raman Nair.
5. Thiru V. Thangapandian.
6. Thiru P. Thirugnanasambandham.

As the number of candidates nominated is equal to the number of vacancies to be filled, namely, six, I hereby declare them to have been duly elected to the House Committee.

In addition to the above, under rule 173 (1) of the Council Rules, I nominate the following two members to be the Members of the said Committee:—

1. Thiru M. Rajah Iyer.
2. Thiru S. Jayarama Reddiar.

The Deputy Chairman of the Council shall be ex-officio Chairman of the Committee.

(3) *Message from the Governor.*

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Appropriation (No. 2) Bill, 1970.

(4) *Message from the Assembly.*

MR. CHAIRMAN : I have also received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a Copy of the Tamil Nadu Appropration (No. 2) Bill, 1970 (L.A. Bill No. 9 of 1970), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

## III. GOVERNMENT BILL.

*The Tamil Nadu Appropriation (No. 2) Bill 1970 (L.A. Bill No. 9 of 1970).*

The HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Chairman, Sir, I move—

'That the Tamil Nadu (Appropriation No. 2) Bill 1970, (L.A. Bill No. 9 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations.

MR. CHAIRMAN : Motion moved—

'That the Tamil Nadu Appropriation (No. 2), Bill 1970 (L.A. Bill No. 9 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations'.

* THIRUMATHI LAKSHMI KRISHNAMURTI : Mr. Chairman, Sir, I find there is a token provision of Rs. 100 voted by the Legislative Assembly for pensions. Since there was no time for me to move my resolution day before yesterday, I take this opportunity to place before this House and the Hon. the Finance Minister now that he is present, a few points.

I rise to speak on behalf of the most inarticulate and most vulnerable section of our society, those unfortunate women who happend to lose their main support in life, that is, their husbands. Unfortunately, Sir, in our Society, women still are very much only in the homestead and are not qualified enough to stand on their own feet. So much so, they depend upon their husbands, who are still the bread-winners of their families. If, as fate, will will it, it happends that the husbands suddenly die, these unfortuante women are left very much in the street with their dependent children.

I feel, Sir, that in a Welfare State it is the duty of the Government to come forward to stretch out a helping hand to these unfortunate women. Times have changed. The social structure has changed very much.



There was a time, 20 to 30 years ago, when the joint family system existed and the onerous duty of looking after either the aged or the orphans or the widowed, mainly rested with the families themselves so much so the State did not have a great part in it. But today- times have changed so much that this responsibility has devolved on the Welfare State. Sir, we find that our youngsters go out to earn bread and go far away from their families, so much so that the sisters and mothers who are rendered widows have to look after themselves. Sir, I am told that the Government are reaping several crores from their raffle scheme. I am glad to find statements made by the Hon. Ministers that the amount derived from rafflles would be earmarked for welfare work. If the Government could see that a small portion of this income is diverted to pay a small pension to the destitute widows, it will probably be the most deserving welfare scheme that this Government can introduce and thus they may earn the undying gratitude of these unfortunate women. After all, I pead for a paltry sum of Rs. 30 being granted to them as pension If this is done, the Government will be doing a lot in lifting their trouble and preventing these women from being literally driven into the streets. With these words, I conclude Sir.

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கல் மசோதாவின்போது ஓரிரு விஷயங்களைக் கூற விரும்புகிறேன். சட்ட மேலவை அங்கத்தினர்கள் தங்கும் விடுதிகளில் சில வசதிகளைப் பொறுத்துத்தான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நாம் சர்வகலாசாலைக் கட்டிடங்களுக்கு பக்கத்திலே பீச் ரோடிலே இருந்து கொண்டு புதிய சட்ட மன்ற அங்கத்தினர் விடுதியை மாலை 7 மணிக்கு பார்த்தோமானால் வெளி மாநிலங்களிலேயிருந்து வந்தவர்களும் அந்த இடத்தைக் காணுகிறபோது சற்று நின்று தயங்கி அதைப் பார்த்துவிட்டுத தான் செல்வார்கள். வெளிப் பார்வைக்கு அவ்வளவு அழகாக அது தோற்றமளிக்கிறது. மற்ற நேரங்களிலும் அந்தக் கட்டிடம் அழகாக அமைந்திருக்கிறது. நல்ல இடத்திலே அமைந்திருக்கிறது என்பதிலே சந்தேகமில்லை. அதே போன்று முந்தைய புதிய விடுதி ஒன்று அந்த எஸ்டேட்டில் இருக்கிறது. முன்னாள் கவர்னர்கள் இருந்த மாளிகைக்கு மேல் புறத்தில் அது அமைந்திருக்கிறது. அந்தக் கட்டிடத்திற்குக் கூட விளக்குப் போட்டு முன்னாலே இருக்கிற ரோடுகளிலே இருந்து பார்த்தால், அதிலே போட்டிருக்கிற விளக்குகள் ஒன்றும் பார்ப்பவர் கண்ணுக்குத் தெரியாது. அவ்வளவு நன்றாக அமைந்திருக்கிறது. விளக்குகள் ஒளி நேராகக் கண்ணுக்குப் படாமல் கட்டிடத்திற்குள் பிரதிபலிக்கிறது. எல்லாமே நன்றாக அமைந்திருக்கிறது என்றாலும்கூட, எதற்காக இந்தக் கட்டிடங்கள் கட்டப்பட்டனவோ யாருடைய சௌகரியத்திற்காக அமைக்கப்பட்டனவோ, அதனுடைய சௌகரியங்களை அனுபவிப்பதற்கு இல்லாத வகையிலே அங்குள்ள நிர்வாகம் சூழ்நிலைகள் எல்லாம் மாறாக அமைந்திருக்கின்றன. இவ்வளவு அழகாக நல்ல வகையில் அமைந்திருக்கக்கூடிய விடுதிகளில் நடைமுறைகளில் உள்ள வசதிகள் மிகவும் அசௌகரியமாக இருந்துகொண்டிருக்கின்றன. விளக்குகளுக்கு பல்புகள் சரியாக இல்லை என்று சொன்னால், சீக்கிரமாக அவை உடனே மாற்றப்படுவதில்லை. புதிதாக ஒன்று போடுவதில்லை. மாதக் கணக்காக அந்த முந்தைய விடுதியிலே மலம் கழிக்கும் இடங்களுக்குச் சென்றால், மூன்று பல்புகள் போட வேண்டிய இடத்தில் ஒரு பல்பு, அதுவும் இந்த வருஷ ஆரம்பத்திலிருந்து இருந்துகொண்டிருக்கிறது. இதே மாதிரியாக சில அசௌகரியங்கள் இருப்பதை முன்னாலேயே பார்த்திருக்கிறேன். இந்த சர்க்கார் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே எச்சிலைகளைப் போடுவதற்கு வைத்திருக்கக் கூடிய தொட்டி பழங்காலத்தில் வாங்கியது. எச்சிலைகளைப் போட்டு மூடி வைத்தால்கூட தாராளமாகக் காக்காய்கள் அவைகளை வெளியே எடுத்துப் போட்டுவிடுகின்றன. அந்த இலைகளை மிதித்துக் கொண்டு, தாண்டிக்கொண்டு, குளிக்கும் அறைகளுக்குச் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. வராண்டா வழியாகப் போனால், தொட்டிகள்

காட்சி அளிக்கின்றன. குளிக்கும் அறையில் குளிப்பதற்குத் தண்ணீரைத் தேக்கிக்கொள்வதற்கு ஒரு வாளியோ கொப்பரையோ அண்டாவோ இல்லை. அப்போதே எல்லா அறைகளுக்கும் பித்தளை அண்டா வாங்கப் பட்டது. எதோ ஓரிரு இடத்தில் இருக்கிறது. அண்டாக்கள் என்ன ஆயிற்று என்பதற்கு அங்கே ஸ்டாக் இல்லை. கெட்டுப் போக்கக் காரணம் இல்லை. காரணம் அவ்வளவு பலமானது. என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. குளிக்கும் அறையிலே வாளிகள் இல்லாமல் கடந்த இரண்டு நாட்களாகத் தணிவாக வைக்கப்பட்ட குழாயின்கீழ் உட்கார்ந்து குளிக்கிறேன். தலையில் மொண்டுவிட்டுக்கொள்ள செம்போ பாத்திரமோ இல்லை. குளித்து எழுந்திருக்கும்பொழுது ஜாக்கிரதையாக எழுந்திருக்க வேண்டும். குழாய் என் தலையிலே ஓரிரு தடவை குட்டி இருக்கிறது. அந்த அனுபவம் இருக்கிறது. ஆகவே ஜாக்கிரதையாகக் குளிக்க வேண்டியிருக்கிறது. அப்படி வாளி போன்ற இந்த வசதிகள் எல்லாம் இல்லாமல் இருந்துகொண்டிருக்கின்றன. இந்தப் புதிய ஹாஸ்டல் விடுதியில் இருக்கிற கஷ்டங்கள் இன்னும் சில. காலை 9 மணி வரைக்கும் அசெம்பிளிக்கு வரக்கூடிய அங்கத்தினர்கள் குளித்துவிட்டு காலாகாலத்தில் வருவதற்கே பெரும்பாடு. பாத் ரூம் காலியாக இருக்காது. வெளியிலிருந்து வருகிறவர்களுக்கு முதல் உரிமை. இது சர்வ சகஜம். அவர்களுக்குத்தான் முதல் உரிமை. யாருமே ஒன்றும் கேட்க முடியாது. யார் வருகிறார்கள் போகிறார்கள் யார் குளிக்கிறார்கள் என்றும் அங்கத்தினர்களுக்கு எந்த விதமான இடைஞ்சலும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் யாருக்கும் அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை. அங்கத்தினர்களுக்குக் கூட இல்லாமலிருக்குமோ என்று சந்தேகமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட அசௌகரியங்களை உண்டாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர தங்கும் அறைகள் அசுத்தமாக இருக்கின்றன. அங்கே "பெயிண்டு" முதலியவை கொண்டு புதுப்பிக்கப்படும்போதுகூட இதற்கு முன்னால் அழுக்குகளை நன்றாகத் தேய்த்து உப்புத்தாள் கொண்டு தேய்த்து எடுத்துவிட்டு பெயிண்டு அடிக்கப்படுகிறது என்று சொல்ல முடியவில்லை. அந்த அழுக்கோடு சேர்த்தே பெயிண்டு அடிப்பார்களோ என்று எனக்குத் தெரியவில்லை. நன்றாக வைத்துக்கொள்ளவில்லை. பெட்ஷீட் தலையணைகள் கிழிந்துபோயிருக்கின்றன. மேலே இருக்கக்கூடிய உறைகளை போடவில்லை என்றால் உள்ளே இருப்பது தெரியும். ஆபாசம் தெரிய இலவம் பஞ்சு சிதறிப்போய் அதைக் காப்பாற்றிக்கொண்டிருப்பது உறை. அது ஒரு தலையணைமாதிரி காட்சியளிக்கிறது. ஒவ்வொரு தடவை சட்ட மன்றங்கள் கூடும்போதும் உறைகள் புதிதாக வருகின்றன. அதைப் பார்க்கும்போதெல்லாம் சந்தோஷம் ஏற்படுவதில்லை. முன்னால் இருந்த உறைகள் என்ன ஆயிற்று? புதிய உறைகள் வருகின்றன. இதற்கு "ஸ்டாக்" வைப்பதில்லையா? கிழிந்துபோனாலும் உருப்படி எங்கே? எப்படி நிர்வாகம் இருக்கிறது. எப்படிப் பார்த்துக்கொள்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது கஷ்டமாக இருக்கிறது. எவ்வளவு பணம் இதற்குச் செலவாகிறது, பழையது என்ன ஆயிற்று என்ன நடக்கிறது கணக்காவது காட்டுகிறார்களா என்று கூடப் பார்க்க முடியவில்லை. இந்த மாதிரி நிலைமை இருக்கிறது. நாலு நாட்களாகச் சொல்லுகிறேன். "ஒரு பக்கெட் போதும் பித்தளை அண்டா கூட வேண்டாம் ஒரு பக்கெட்டும் செம்பும் கொடுங்கள்" என்று சொல்லுகிறேன். வரவில்லை. இந்த நிலைமை அந்த ஹாஸ்டலில். அந்த புதிய பல மாடி ஹாஸ்டலில் சில நாட்கள் இருந்தேன். தாழ்ப்பாள் போட முடியாமல் கட்டிலை கதவுக்கு முட்டாக வைத்துக்கொண்டு மூன்றும் நம்பர் ரூமிலே பஸ்ட் ப்ளோரிலே படுத்திருந்தேன். சர்வகலாசாலைக்கு முன்னால் நின்று பார்த்தால் காட்சி அளிக்கிற ஹாஸ்டலில் இந்த நிலைமை. கட்டிய கட்டிடத்தை பற்றிக் குறை சொல்லவில்லை. கட்டிய கட்டிடம் எப்படி நிர்வகிக்கப்படுகிறது, அது அங்கத்தினர்களுக்குப் பயன்படுகிறதா என்பதைத்தான் நான் சொல்கிறேனே தவிர, கட்டிய கட்டிடத்தைப் பற்றிச் சொல்லவில்லை. நன்றாக வைத்துக்கொள்ளவில்லை என்பதற்காகத்தான் இதை நான் சொல்கிறேன். புதிய இந்த ஆறு அடுக்கு மாடி உள்ள இந்த விடுதியில் சில சந்தர்ப்பங்களில் குளிக்கும் அறையிலிருந்து தங்கும் அறைக்குத் தண்ணீர் தாராளமாக வரும். தடங்கல் கிடையாது. இதைப் பற்றி



மூன்று நாட்களாக ஒரு பதிவு பெற்ற அதிகாரி இருக்கிறார். எனக்கு நன்றாகத் தெரியும் . அவரிடம் சொன்னேன். அவரும் அங்கு உள்ளவர்களைக் கூப்பிட்டிடுப் பார்த்துச் சொன்னார். சிப்பந்திகளைக் கூப்பிட்டு சொன்னார். அவர்கள் வரவில்லை. இவைகளைக் கவனிப்பதற்கு நிரந்தர அதிகாரிகள் யாரோ இருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆனால் இருக்கக் கூடிய அசௌகரியங்களைப் போக்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. வெய்யில் காலமாக இருந்தால், இப்படித் தண்ணீர் வருவதால் கஷ்டமில்லை. ஆனாலும் மழைக்காலத்தில் கஷ்டமாக இருக்கிறது. கம்மோடு மாதிரி வைத்திருக்கிறார்கள். எந்த ஒரு கம்மோடாவது புதிய ஹாஸ்டலில் இருக்க வேண்டிய தகுதியைப் பெற்றுச் சரியாக இருக்கிறதா என்று தயவு செய்து சுற்றிப் பார்த்தால் இந்த கம்மோடு இருக்கிற லக்ஷணத்தைத் தெரிந்துகொள்ள முடியும். அதைப் பார்க்கும்போதே, அதன் பேரில் பரிதாபம் ஏற்படுகிறது. சரியாக உபயோகப்படுத்தாமல் அதைப் பாழாக்கி வைத்திருக்கிறார்களே என்று தோன்றுகிறது. அந்த கம்மோடுகளுக்குப் பல சாதனங்களைப் பொருத்த வேண்டியிருக்கிறது. இந்த "கம்மோடு ஸிஸ்டம்" இருப்பதனாலே வண்டுகள் அவைகளில் தஞ்சம் அடைவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இந்த மாதிரிக் கஷ்டங்கள் இருக்கின்றன. கம்மோடுக்குப் பதில் தரையில் போட்டால் கஷ்டம் பெரும்பாலும் நீங்கும் என்று நினைக்கிறேன். வருகிறவர்கள் போகிறவர்கள் தங்குகிறவர்கள் அவர்களைப் பற்றி எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. எனக்கு நன்றாகத் தெரியும். அங்கு வேலை செய்யக்கூடிய சிறிய வேலையாட்கள் பேட்டரி லைட் வைத்துக்கொண்டு எந்த நேரமும் கதவைத்தட்டி அங்கத்தினர்கள் அல்லாது வேறு யாரும் இருக்கிறார்களா என்று அவர்களைத் திறக்கச் சொல்லிப் பார்த்துவிட்டுப் போவார்கள். இப்போதும் அந்த முறை இருக்கிறது. இப்போது பார்க்கிறார்களா என்று சொல்ல முடியவில்லை. அங்கத்தினர்கள் நிர்வாகம், இவர்கள் எல்லோருக்குமாகச் சேர்ந்து ஒரு கட்டுப்பாட்டோடு ஒரு வழி நியதியை வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். கௌரவமாக விடுதிகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற பழக்கம் இருக்க வேண்டும். ஒன்றுக்கொன்று சீராக அமையாமல் போனால் போகிறது. என்ன பண்ணுவது என்ற முறையிலே காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஹவுஸ் கமிட்டி இருந்தால் என்ன? அந்தக் கமிட்டியில் மெம்பராக என்னைப் போட்டு வைத்திருக்கிறார்கள். ஹவுஸ் கமிட்டி அங்கத்தினர் என்ற பதவி எனக்கு வேண்டாம். இந்தக் குறைகளைத் தீர்த்துவிட்டால் எனக்குப் போதும். சில ஆண்டுகளாக இந்தக் காரியங்களும் பழக்கங்களும் இருந்து வருகின்றன. இவைகளை மாற்ற முடியுமா என்ற கவலை இருக்கிறது. சரியான முறையில் நிர்வகித்துக்கொண்டு வருவதற்கான ஒரு முறையை அரசாங்கம் கவனித்து, இதற்கு ஆவன செய்து, இந்தக் குறையை நிவர்த்தி செய்து தர வேண்டும். பாரதத்தில் கர்ணனைப் பற்றிச் சொல்லுகிறபோது புறஞ்சுவர் கோலஞ்செய்வான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெளியே பட்டை நாமம் போடுவது உள்ளே போனால் அந்த வீட்டில் நட்டுவாக்கலி பாம்பு இருக்கும். அந்த மாதிரிச் சொல்வதற்கில்லாத நிலைமையில் இந்த விடுதிக் கட்டிடங்களை நல்ல முறையில் வைத்துக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் இந்த நிர்வாகத்தில் கண்டிப்பான சில நியதிகளை ஏற்படுத்தி நல்லபடியாக நிர்வகிப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, 1969–70-ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு மசோதாவின் பரிசீலனையினுடைய கடைசிக் கட்டத்தில் நான் நின்றுகொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு கிருஷ்ணசாமி நாயுடு சொன்ன குறைகள் எல்லாம் ரொம்ப உருக்கமானவை அவர்களெல்லாம் ஹவுஸ் கமிட்டியில் வந்திருக்கிறார்கள். அதனால் பொறுப்பைத் தட்டிக்கழிக்கிறதாக அவர் கருதிக்கொள்ளத்தேவையில்லை. உண்மையில் அவர் சொல்லுகிற குறைபாடுகள் இருக்கின்றன. அதை யாரும் ஒளிக்க வேண்டியதில்லை மறுக்க வேண்டியதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆற்றுகிற பணி

விலை மதிக்க முடியாத பணி மக்களுக்கு ஆற்றுகிற பணி. அப்படிப்பட்டவர்களுக்குச் சாதாரண சௌகரியங்களைக்கூட செய்ய முடியவில்லையென்றால் நம் எல்லோருக்கும் பெரிய அவமானமாகும். அறைகூவல் என்று பொருள். நம்முடைய பொதுப் பணித் துறை ரொம்பப் பெருமைபெற்றது. நல்ல பல காரியங்களை எல்லோரும் பாராட்டுகிற மாதிரிச் செய்கிறார்கள். எப்படித்தான் கட்டினார்களோ இந்தப் பெரிய விடுதியை என்று நாம் வியக்கத் தக்க அளவிற்கு இது இருக்கிறது. நடந்துபோனதைக் கவனிக்காமல் சௌகரியங்களை ஏற்படுத்துவதிலே முயற்சி எடுக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களிடத்திலே சொன்னேன். அவர்தான் இந்தத் துறைக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி போய் வந்தாலே பல காரியங்கள் சீராகப் போய்விடும். நம்முடைய கமிட்டியிலே அங்கத்தினர் வந்திருக்கிறார்கள். இந்தக் கமிட்டி சிரத்தை எடுத்துக்கொண்டு காரியங்களைச் செய்யும். மாண்புமிகு உறுப்பினர்கள் வெளியூர்களிலிருந்து வருகிறார்கள். அவர்கள் சௌகரியக் குறைவுகளுக்கிடையில் இந்தக் காரியங்களைக் கவனிக்கிறார்கள். அவர்களுக்குச் சௌகரியங்களைச் செய்து கொடுப்பதிலே கண்டிப்பாக நம்முடைய அரசுக்கு அக்கறை உண்டு. கண்டிப்பாக ஒரு முயற்சி செய்யும் என்று உறுப்பினர்களுக்கு உறுதியளித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னாலே ஒரு தீர்மானமே கொடுத்திருந்தார்கள். அது நல்ல கருத்துடைய ஒரு தீர்மானம். அதில் யாருக்கும் இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. பொதுவாக மனித சமுதாயத்தில், அனாதைகள், ஆதரவற்றவர்கள் போன்றவர்களைக் கவனிக்க வேண்டும், அப்படிப்பட்டவர்களின் அவல நிலையைப் போக்க வேண்டும் என்று அவர்களுக்கு இருக்கிற ஈடுபாடு வரவேற்கத் தகுந்தது. இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் இந்த அரசாங்கமும், இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கமும் முதியோர் பென்ஷன் என்ற திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். சாதாரணமாக 65 வயதிற்கு மேலே கவனிப்பாரற்ற அனாதைகளாக இருப்பார்களானால் ஆதரவற்ற முதியவர்களாக இருப்பார்களானால் அவர்களுக்கு மாதம் 20 ரூபாய் கொடுக்கலாம் என்று ஆரம்பித்தார்கள். இன்னும் கண் தெரியாதவர்கள் முடமாக இருக்கிறவர்கள் இப்படி உள்ள ஆண் பெண் இவர்களுக்கு வேலையில்லாமல் இருந்தால் அவர்களுக்கும் 60 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்குக் கொடுப்பதைப் போன்ற திட்டம் விஸ்தரிக்கப்பட்டது. இப்போதும் அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி இதையெல்லாம் கூர்ந்து படிக்கக்கூடியவர்கள், படித்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இந்த 20 ரூபாய் என்ற கணக்குப்படியே ஒரு கோடியே 25 லட்சம் ரூபாய் அளவிற்குப் பணம் செலவாகிறது. இந்த சர்க்காருக்கு ஒரு கோடியே இருபத்தைந்து லட்ச ரூபாய் செலவானாலும் கொடுக்கிற 20 ரூபாயைப் பெரிய தொகை என்று சொல்ல மாட்டேன். இதில் அவர்கள் எப்படி வாழ்க்கை நடத்த முடியும் என்பது கேள்விக் குறிதான். இருந்தாலும் அரசாங்கம் இவர்கள் மீது பரிவைக் காட்டுகிறது ஒரு அடையாளமாக இந்தக் காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அவருடைய நல்ல யோசனை நல்ல காலத்திற்கு ஒத்தி வைக்கப்படுகிறது. நல்ல காலம் வரட்டும், "ஃபார் பெட்டர் டைம்ஸ்" என்று சொல்வார்களே, அது வரட்டும் என்று சொல்லிக்கொள்வதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. இதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கிறேன். அவர் குறிப்பிட்டது இந்த 60, 65 வயதில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல என்று கருதுகிறேன். சாதாரணமாகச் சின்ன வயதில் இருக்கிறவர்கள் நிராதரவாக்கப்பட்டவர்கள் இப்படிப்பட்டவர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இதைக் கருத்தில் எடுத்துக்கொள்கிறேன் என்று கூறி இந்த நேரத்தில் எதுவும் செய்ய முடியாத நிலைமைக்காக ரொம்ப வருத்தப்பட்டு நல்ல காலும் ரொம்ப சீக்கிரம் சம்பவிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி :** தலைவர் அவர்களே, எலெக்‌ஷன் மேனிபெஸ்டோவில் இருக்கிறது.





**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** எலெக்‌ஷன் மேனிபெஸ்டோவில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், இந்தக் காரியத்தைச் செய்வதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்பு இருக்கும்போது கண்டிப்பாக செய்யும் என்று சொல்லிக்கொண்டு இந்தப் பரிந்துரையை இந்த மாமன்றம் ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

'That the Tamil Nadu Appropriation (No. 2) Bill 1970 (L.A.Bill No. 9 of 1970), as passed by the Assembly, be taken into consideration for making recommendations.'

The motion was put and carried and the Bill was taken up for making recommendations.

MR. CHAIRMAN : There are no recommendations to clause 2, the schedule, Clause 1, the Long Title and the Enacting Formula.

As there are no recommendations, the Bill will be returned to the Assembly without any recommendations.

The House will now adjourned and meet again at 4 p.m. tomorrow.

The House then adjourned.

## IV. PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### *A. Statutory Rules and Orders.*

178. Notification issued with G.O. No. 2576, Revenue, dated the 1st November 1969 making amendment to the Revenue Department Notification III No. 84 of 1963, dated the 14th December 1962, published at page 188 of Part III of the *Fort St. George Gazette*, dated 23rd January 1963. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959.]

179. Annual Financial Statement for 1970–71 and Supplementary Financial Statement for 1969–70 of the Tamil Nadu Electricity Board. [*Laid on the Table of the House under sub-section* (3) *of Section* 61 *of the Electricity* (*Supply*) *Act*, 1958 (*Central Act* 54 *of* 1948).]

### *B. Reports, Notifications, and other papers.*

79. Notification issued with G.O. Ps. No. 2803, Revenue, dated the 24th November 1969 making the amendment to the Central Sales Tax (Madras) Rules, 1957.

80. Report of the Committee on Public Accounts, 1969–70 on the Accounts of the State of Tamil Nadu for the year 1966–67.

[30th March 1970

## APPENDIX

[*Vide* Answer to starred question No. 244 on Page 705.]

ஆதாரப் பள்ளி ஆசிரியர்களுக்கான டி.எஸ்.எல்.சி. முதுநிலை தரத் தேர்வு.

| | தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை. | தேறியவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. பயிற்சி நிலையங்கள் மூலம் முறையாகத் தேர்வு எழுதியவர்கள். | 7,137 | 5,457 |
| 2. தேர்வில் தவறியவர்கள் பயிற்சி நிலையங்கள் மூலம் முறையாக அனுப்பப்பட்டு இருந்தால் அவர்களின் எண்ணிக்கை. | 1,425 | 660 |
| 3. தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதியவர்கள் (இளநிலையிலிருந்து முதுநிலைக்கு). | 4,496 | 859 |
| | 13,058 | 6,976 |

ஆதாரப் பள்ளி ஆசிரியர் அல்லாத பிற ஆசிரியர்களுக்கான டி.எஸ்.எல்.சி. இடைநிலைத் தேர்வு.

| | தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை. | தேறியவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. பயிற்சி நிலையங்கள் மூலம் முறையாகத் தேர்வு எழுதியவர்கள். | 1,449 | 1,006 |
| 2. தேர்வில் தவறியவர்கள் பயிற்சி நிலையங்கள் மூலம் முறையாக அனுப்பப்பட்டு இருந்தால் அவர்களின் எண்ணிக்கை. | 84 | 30 |
| 3. தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதிய உயர் துவக்கத் தரத்திலிருந்து இடை நிலைத் தரத்திற்கு. | 1,407 | 318 |
| 4. தனிப்பட்ட முறையில் தேர்வு எழுதியவர்கள் (இந்தி மொழி ஆசிரியர்கள்). | 911 | 601 |
| | 3,851 | 1,955 |

# Index to Tamil Nadu Legislative Council Debates

THIRTY-FIFTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

26TH AND 28TH FEBRUARY AND 2ND TO 7TH, 9TH, 25TH, 26TH, 28TH AND 30TH MARCH 1970.

*Volume LXXXIII (Nos. 1 to 13).*

PAGES

A.

ABDUL WAHAB, THIRU K. S.—
Budget for 1970-71, general discussion on ... ... 494, 496, 500
Supplementary statement of Expenditure for 1969-70 (Final), discussion on ... ... ... ... 619
ACCIDENT(S)—
Question *re*—
Bus accidents in 1967-68 and 1968-69, number of and number dead in ... ... ... ... 473
Bus—between Kumili and Lower Camp in Madurai district in June 1969, number dead in ... 598–599
ADITANAR, THE HON. THIRU Si. Pa.—
Bill—Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 ... ... ... ... 552–553, 555–556, 557–561, 562–563, 564–565
Budget for 1970-71, general discussion on ... ... 430–431
ADIVASI WORKERS—
Question *re* number of—employed in Coffee and Tea Plantations in Nilgiris District during 1968-69 ... [illegible]8

PAGES

A—*cont.*

ADJOURNMENT MOTION *re*—

Abolition of Upper House (Legislative Council), Statement of Chief Minister in Assembly *re* ... 611–613

Attack by the Police inside Congress office building at Cuddalore causing injuries to some persons ... 159–161

Hardship to peasants due to enhanced rate for power and agitation by peasants ... ... ... 584–587

AGE OF RETIREMENT—

Question *re*—

Reduction of—of teachers from 58 to 55 ... ... 416–417

Representation to fix—at 60 in case of teachers ... 417–418

AGRICULTURAL LABOURER FAIR WAGES RULES, 1969—

Making of—, notification laid on the table ... ... 565

AGRICULTURAL UNIVERSITY—

Question *re* starting of an ... ... ... ... 277

AHMED IBRAHIM, THIRU K. T. M.—

Obituary reference *re*—, former Member of the Council ... ... ... ... ... ... 263

AIYASWAMY, THIRU M.—

Budget for 1970–71, general discussion on ... ... 349–355, 382–386

ALAMELU APPADURAI, THIRUMATHI—

Budget for 1970-71, general discussion on ... 325–326 406

ANICUT—

Question *re* Palar—Scheme in Thethur Ammapatti, Marungapuri Panchayat Union, Tiruchirappalli district, stage of ... ... ... ... ... 602

ANIMAL HUSBANDRY—

Policy Note on Demand No. XVIII, laid on the table ... ... ... ... ... ... 590

ANNADURAI, THIRU C. N.—

Question *re* portrait of—, former Chief Minister, Madras, damage caused to—in Bammakottai village (Aruppukkottai taluk) ... ... ... ... 209

ANNA SAMADHI—

Question *re* amount spent for—in Marina ... 662



PAGES

A.—*cont.*

APPROPRIATION ACCOUNTS, 1968-69 OF GOVERNMENT—

Laid on the table ... ... ... ... ... 355

APPROPRIATION (No. 2) BILL, 1970—

*See* Bills.

APPROPRIATION (VOTE ON ACCOUNT) BILL, 1970—

*See* Bills.

ARISHTAMS—

Question *re* sale in Ayurvedic Pharmacies of—containing Chloral Hydrates, action against offenders ... ... ... ... ... 603–606

ARIVAZHAGAN, THIRU K.—

Bill—Madras University (Amendment) Bill, 1969 ... 669–672

Budget for 1970-71, general discussion on ... ... 489–492

AUTHIMOOLAM, THIRU D. S.—

Obituary reference *re*—, a sitting Member of the Asembly ... ... ... ... ... ... 1

AYYAN, PERUVALAI, PULLAMBADI CANALS—

Question *re* sedimentation in the head of—maintained by River Conservancy Wing of Public Works Department, Tiruchirappalli district ... 315–316

B.

BILLS—

(Appropration No. 2) Bill, 1970—

Considered and passed ... ... ... ... 718–723

Message from the Assembly *re* ... ... ... 718

Message from the Governor *re* ... ... 718

Appropriation (Vote on Account) Bill, 1970—

Message from the Assembly *re* ... ... 528

Message from the Governor *re* ... ... 528

Code of Criminal Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969—

Introduced ... ... ... ... ... 663

PAGES

B—*cont.*

BILLS—*cont.*

Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970—

Considered and passed ... ... ... ... 552–565, 569–572

Message from the Assembly *re* ... ... ... 528

Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1969—

Introduced ... ... ... ... ... 663

Madras University (Amendment) Bill, 1969—Considered and withdrawn ... ... ... 664–678

BILLS, AS PASSED BY THE ASSEMBLY, LAID ON THE TABLE—

Appropriation (Vote on Account) Bill, 1970 ... 565

Co-operative Land Development Banks (Amendment) Bill, 1970 ... ... ... ... ... 565

BOOKS AND PUBLICATIONS—

Question *re* Public Works Department Code, publication and revision of ... ... ... ... 610–611

B. PHARMACY COURSE—

Question *re*—

Recognition of—in Madras and Madurai Medical Colleges by Pharmacy Council of India ... 648–649

Representation from B. Pharmacy students of Madurai Medical College for separate College of Pharmacy at Madras and Madurai ... ... 649–651

BRIDGES—

Question *re*—

Overbridge across Thenar on Karaikudi-Devakottai Highway, construction of broad and strong ... 314

Overbridges at level crossings at Subramaniapuram and near Sri Meenakshi Mills in Madurai City, construction of ... ... ... ... ... 594–596



PAGES

B—*cont.*

BUDGET FOR 1970-71—

General discussion on ... ... ... ... 164–194, 216–255, 278–309, 318–355, 382–412, 427–451, 474–504, 530–552

Presentation of ... ... ... ... ... 18–21

BUILDINGS—

Question *re* construction of new—for City Civil Court, Madras, with provision for Chambers of lawyers and canteen facilities ... ... ... 606

BUILDINGS (LEASE AND RENT CONTROL) ACT, 1960—

Coming into force of—in Ganapathi Panchayat area in Coimbatore district, notification laid on the table ... ... ... ... ... ... 25

BUS ROUTES—

*See* Transport.

BUS STANDS—

Question *re* Central Bus-stand, Tiruchirappalli, construction of ... ... ... ... ... 317

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committees.

C

CALIBRATION FEES—

Question *re* revision of—for calibration of Petroleum Tank Lorries, by Weights and Measures Department during 1966–69 ... ... ... ... 527–528

CAPITAL OUTLAY ON SCHEMES OF GOVERNMENT TRADING—

Policy Note on Demand No. 46, laid on the table ... 590

CAUVERY DELTA—

Question *re* constitution of High Power Board or Corporation for development of ... ... ... 159

PAGES

C—*cont.*

CENTRAL BUS STAND, TIRUCHIRAPPALLI—
*See* Bus stands.

